வித்துவான்;

த. சிவப்பிரகாச தேசிகர

V. NATARAJAN.
East Street,
NADUKKAVERI-613101.
Thanjavur Dt.

பாகனேரி, த. வை. இ. தமிழ்ச்சங்க வெளியீடு-௨.

உ

திருச்சிற்றம்பலம்

சங்கமருவிய எட்டுத்தொகை நூல்களுள்

ஆறாவதாகிய

கலித்தொகை

மதுரையாசிரியர் பாரத்துவாசி

நச்சினார்க்கினியருரையுடன்

பாகனேரி

வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன்

செட்டியார்

அவர்களால்

வெளியிடப்பெற்றது

கிடைக்குமிடம் :

திருநெல்வேலி, தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்

:: திருநெல்வேலி &

சென்னை ::

வெகுதானிய - ஆவணி

தனவைசிய இளைஞர் தமிழ்ச்சங்க வெளியீடாகப்

பாகனேரித் தமிழ்ப்புரவலர்

திருவாளர்

வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார்,

அவர்கள் பொருளுதவியால்

வெளியிடப்பெற்றது.

இவ் வெளியீட்டினால் கிடைக்கப் பெறுகிற

சிறிய ஆதாயமும்

இச் சங்கத்தின் ஆதரவிலுள்ள

திருவள்ளுவர் நூல்நிலயத்திற்கு

உரிமையாக்கப் பெறும்.

August 1938

The Jupiter Press, Madras.



பாகனேரித் தமிழ்ப் புரவலர்

வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார்

பதிப்புரை

சங்கமருவிய தொகைநூல்கள் எட்டனுள் கற்றறிந்தாரேத்துங் கலி என்று போற்றப்படும் கலித்தொகை ஆறாவதாகும். தமிழ் நூல்களை மேற்கணக்கு, கீழ்க்கணக்கெனப் பிரிக்கும் முறைப்படி இந்நூல் மேற்கணக்கின்பாற் சேர்க்கப்படும் பெற்றித்தாம்.

" இறைவாழ்த்தொன் றேழைந்து பாலைநா லேழொன்
றிறைகுறிஞ்சி யின்மருத மேழைந்(து)-துறைமுல்லை
யீரெட்டொன் றநெய்த லெண்ணான்கொன் றைங்கலியாச்
சேரெண்ணே ழைவம்ப தே."

என்றபடி இந்நூல் மதுரையாசிரியர் நல்லந்துவனார் இயற்றப்பெற்ற கடவுள்வாழ்த்துச் செய்யு

ளொன்றும்;

சேரமான் பாலை பாடிய பெருங் கடுங்கோ என்பாரியற்றிய ௩௫ செய்யுட்களைக் கொண்ட பாலைக்கலியும், தொல்லாசிரியர் கபிலர் உ௯ செய்யுட்கள் கொண்ட தாக வியற்றிய குறிஞ்சிக்கலியும், மதுரை மருதனிளநாகனார் ௩௫ செய்யுட்கள் கொண்டதாயியற்றிய மருதக்கலியும், சோழன் நல் லுருத்திரன் இயற்றிய கஎ செய்யுட்கள்கொண்ட

முல்லைக்கலியும்,
கடவுள்வாழ்த்துச் செய்யு ளியற்றிய ஆசிரியர் நல்லந்துவனாரே ௩௩ செய்யுட்கள் கொண்டதாகப் பாடி முடித்த நெய்தற்கலியும் ஆகக் கலிப்பகுதிகள் ஐந்துங் கொண்டிலகுவதாகும்.

தமிழிலக்கணப் பெருநூல்களிற் கூறப்படும் அகப்பொருட் பகுதிக்கு இலக்கியமாய்த் திகழ்வது சிறந்த இத் தொகைநூலேயாம். பண்டைத் தமிழர் கண்ட ஐந்திணைப் பாகுபாட்டின் தனிச் சிறப்பும், மற்றன்னார்தம் மாண்புறு ஒழுக்கமும் உயர்வும் இந்நூலைக் கற்பார்க்குத் தெள்ளிதிற் புலனாம். கலிப்பா வகையுட்

சிறந்த ஒத்தாழிசையா லியன்ற
கடு0 பாக்களைக்கொண்ட இச்
செந்தமிழ்ப் பெருநூல் தேன்
செறிந்த மொழிகளானும்
தெள்ளிய உருவகங்க ளானும்
இயன்று கற்போருள்ளத்தைக்
கவருந் தகைமைத்தாம்.
மக்கள் தம் நல்வாழ்விற்கு
வேண்டிய நன்னெறிகள்
பலவற்றை இடையிடையே
தொகுத்தும் விரித்துஞ்
சுட்டிச் செல்வதும் இ

நூலின் சிறப்புக்களில் ஒன்றும்.

இவ்வாறெல்லாம் இந்நூல் சிறந்து

விளங்குவதனாலேயே,

" திருத்தகு மாமுனி சிந்தா மணிகம்பன்
விருத்தக் கவிவளமும் வேண்டேம்—திருக்குறளோ
கொங்குவேண் மாக்கதையோ கொள்ளேம் நனியார்வேம்
பொங்குகலி யின்பப் பொருள்."

என்று கற்றறிந்த பிற்றைநாட் புலவர்களால் இது போற்றி யேத்திப் புகழப்படுவதாயிற்று.

இந்நூலுக்கு உரையியற்றினார் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியரே. இப் பெரியார்தம் உரைத்திறம் தமிழ் நாட்டார் இதுகாலை நன்கறிந்த தொன்றேயாம். தலைசிறந்த இவருரையுடன் இந்நூலை முதற்கண் அச்சியற்றி வெளியிட்டவர் காலஞ்சென்ற தண்டமிழ்ப் பேராசிரியர் திரு. சி. வை. தாமோதரம் பிள்ளை

அவர்களேயாம்.

(அவர் புகழ் என்றும் பொன்றாது நின்று நிலவுவதாக!) அவர் பதிப்பினை யடுத்துச் சிறந்த ஆராய்ச்சிக் குறிப்புகள் பலவற்றோடும், கடலெனப் பரந்த மேற்கோட் குறிப்புகளோடும் மிகவுஞ் சிறந்த முறையில், காலஞ்சென்ற திரு. இ. வை. அனந்தராமையரவர்களால் ஒரு பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அண்மையில் திரு. தை. ஆ.

கனகசபாபதி என்பார்
பாலிக்கலிக்கு மட்டும்
புத்துரையொன் றியற்றி
வெளியிட்டுள்ளார்.

இனி, குறைந்த விலையில் சிறந்த நூல்கள் சிலவற்றையேனும் அச்சிட்டுத் தமிழ்நாட்டாரிடைப் பரப்புவது பாகனேரித் தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கத்தாரின் தலையாய நோக்கமாகும் என்பது இதற்கு முன் வெளிவந்த அச் சங்கவெளியீடாகிய திருவாசகத்தின் பதிப்புரையிற் குறிக்கப்பட்டது. அதற்கேற்ப, இந்நூல் இப் பொழுது இறைவன் றண்ணருளால் இனிது முடிந்து வெளிவருகிறது நச்சினார்க்கினிய ருரையிற் சிற்சில இடங்கள் தெளிவாக்கப்படுதல் இன்றியமையாததாகும் என்று தோற்றியமையால், ஏறக்குறைய 800 பக்கங் கொண்ட அளவில் ஓர் உரைவிளக்கம் எழுதப்பட்டு இந் நூலிறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளது. அஃது ஆராய்ச்சியாளர்க்கும்


கலித்தோகைப் பதிப்பாசிரியர்கள்



...ாமோதரம் பிள்ளை



இ. வை. அனந்தராமையர்



சி. வை.

௫

இந்நூலை
அச்சிடுங்கால் உடனிருந்து
பிழை திருத்தியும்
மேற்கோள்கள் குறித்துத்
தந்தும் உதவிய தருமையாதீன

வித்து

வான் திரு. காழி. சிவ. கண்ணுசாமி, பி.ஏ. அவர்கட்கும், உரை
விளக்கமும், கலித்தொகை மாட்சியும் எழுதி யுதவிய தமிழமலை இள
வழகனுர் அவர்கட்கும், இப்பதிப்பினை மிகவும் அழகிய முறையில் அச்

சிட்டு வெளிப்படுத்தி விற்பனை செய்துதர ஏற்றுக்கொண்ட திருநெல் வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாருக்கும் எனது நன்றி உரித்தாகும்.

இவ் வெளியீட்டின் விற்பனையிலிருந்து கிடைக்கப் பெறும் சிறிய ஆதாயமும் பாகனேரித் தனவைசிய

இளைஞர் தமிழ்ச்
சங்கத்தின் ஆதரவிலுள்ள
உரிமையாக்கப்பெறும்.

தமிழ் மெய்யன்பர்கள்
விரைவில் வரவிருக்கும் ஏனைய
ஊக்கமளிப்பார்களாக.

பாகனேரி,
வெகுதானிய ஆடி உசு
10—8—1938.

திருவள்ளுவர் நூல்நிலயத்திற்கு

இப்பதிப்பினையும் இதனை யடுத்து
நூல்களையும் வாங்கிப் போற்றி எற்கு

மு. காசிவிசுவநாதன்.

பொருளடக்கம்

கலித்தொகை மாட்சி

எ

நூலாசிரியர்கள்,

வரலாற்றுச் சுருக்கம்

மேற்கோள் நூற்பெயரகராதியும்

நூல்

உரைச்சிறப்புப் பாயிரம்

செய்யுண் முதற்குறிப்பகராதி

உரை விளக்கம்

௬

௭

௧௦௫

௧௯௫

௫௦௫

௫௭௫

௪௮௧

௪௮௫

•

௧

௫

௨௯

௫௪

௫. நெய்தற் கலி

௮௦

கலித்தொகை மாட்சி

க. இலக்கிய நலம்

கருத்துக்களைச் சுவைதோன்றச் சொல்லும் நூல்களையே பொதுவா யாரும் விரும்புவர். அல்லல் மிகுந்த இவ் வுலகவாழ்க்கையில் உடம்போம்பு முயற்சியினால் அவ்வப்போதும் நிலைதளர்ந்துபோகும் நினைவையும் அறிவை யும் உணர்வையும், மீண்டும் நற்கருத்துக்களைச் சுவைதோன்ற ஊட்டி எழுச்சியும் இன்பமும் பெறவைத்து அவற்றை மேன்மேல் வளர்ச்சிபெற செய்தற்குச் சிறந்த இலக்கிய நூல்கள் மிகவும் இன்றியமையாதனவாயிரு கின்றன. தனித்த நேரங்களிலும், கருத்தொருமித்த காதலர் நண்ப சான்றோர் முதலியவர்களோடு அளவளாவு நேரங்களிலும் உயர்ந்த உள்ள கிளர்ச்சியும் மகிழ்ச்சியுந் தருதற்கு இவ் விலக்கியநூற் பயிற்சிகள் பெரிது உதவியாயிருக்கும். கலித்தொகையில் வரும் சில உரையாடல்களின் அறி நுட்பங்களும் ஏனை அருமைகளும் அறிந்து இன்புறவல்ல தமிழ்த்திருவுடை யார்க்கு இவ்வுண்மை இனிது விளங்கக்கூடும். எடுத்துக்காட்டாகக் கலி ௱௭, கூ௱௭-ம் பாட்டுகளின் உரையாடல்கள் நினைவுகூரற்பாலன.

இனி, இலக்கிய நூல்கள் இங்ஙனமெல்லாஞ் சுவை மலிந்து தோன்றற்கு அவை மேற்கொள்ளும் அழகிய நூன்முறைகள் பல உண்டு. அவற்றுட் சி வருமாறு:

க. சுவைப் பதிதிகள் தேர்ந்தெடுத்தல்: உணர்வுக்கு இன்பந் த வல்ல அழகான பொருட்பகுதிகளும் உயிர்களின் நல்லியல்புகளும் உலகத்தி என்னென்ன உண்டோ அவற்றையே முதன்மையாகத் தெரிந்தெடுத் இலக்கிய ஆசிரியன்மார் எழுதுவர். இவ்விலக்கிய அழகியல்புகள் அப்படியே இறைவன் திருவுள்ளத்தின் தூய பிழிவேயாம்.* அருமையான படக்காட் கள் அமைக்க விரும்பும் நற்கலைஞர்கள் அவற்றிற்கு அமையவேண்டும் உ கியற் காட்சிகள் பலவற்றையுங் கனிந்த அழகுள்ளனவாகவே தேர்ந்தெடுத் நிழற்படங்கள் பிடிக்கக் காண்கின்றோம். காட்சிக்கினிய பூங்காக்க மலைப்படுகர்கள், கான்செறிவுகள், அழகு மாளிகைகள் முதலான நல் தோற்றங்களையே அவர்கள் தெரிந்தெடுக்கின்றனர். அங்ஙனந் தெரி

தெடுக்குமிடத்தும், அவற்றை எங்கெந்தப் பகுதிகளிலிருந்து ...

* Bridges: *The Testament of Beauty* iii 32.

அ கலித்தொகை

மாட்சி

முறையாகப் படமெடுத்தால் மக்கட்கு எழுச்சியும் இன்பமும் நல்குமே, அவ்வாறே மிக முயன்று எடுக்கவுங் காண்கின்றோம். அதுபோலவே இலக்கிய ஆசிரியர்களான நற்கலைஞர்களுந் தம் நூல்களிற் சுவையான பாகங்களையே முதன்மையாகத் தெரிந்தெடுத்துக் கோத்து நமதுணர்வுக்கு நன்மை

விளைப்பாராயிருக்கின்றனர்.

'முல்லைக்கலி'யில் அதன் ஆசிரியரான சோழன் நல்லுருத்திரன் என் ...னும் நல்லிசைப் புலவர் ஒரு தொழுவிலுள்ள எறுகளைப்பற்றிக் கூற நேரு... போது ஓரிடத்தில் (௱௩ : ௧௧ - ௨௧) மிகக் கவர்ச்சியான அழகிய எறுகளைப்...

முதன்மையாகத் தெரிந்தெடுத்துக் கோத்து நம்மை இன்புறுத்துகின்றா... ஒரு கரிய எருது என்றுமட்டுஞ் சொன்னால் அது கேட்பார்க்கு அவ்வள... இன்பம் பயவாதென்று கருதிக் கால்கள் வெண்ணிறமாயும் உடம்பு கருநி... மாயுந் திகழ்கின்ற அழகிய எற்றைத் தெரிந்தெடுத்துச் சுவைப்ப உரை... கின்றார். இங்ஙனங் கவர்ச்சி மிக்க இரு நிறங்கள் வாய்ந்த பளபளப்பா... எறு பார்ப்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாய் அழகின் எல்லையை... கடந்ததென்னும்படி அத்துணைப் பேரழகு தழைவதாயிருக்குமென ஆசி... யர் கருதினர்; கருதி அக்கருத்துத் தோன்ற அவரதனை,

"அணிவரம் பறுத்த வெண்காற் காரியும்"

என்று ஏற்ற அடைமொழிகள் புணர்த்தும் ஓதுவாராயினர். இங்ஙனே அந்திவானம்போற் சிவந்த உடம்பில், அவ் வானத்திற் பூத்து விளங்கு விண்மீன்கள்போல் வெண்ணிறப் புள்ளிகள் பரந்துள்ள அழகிய ஏறுக முதலானவற்றையும் ஆசிரியர் உரைத்துச் செல்வர். இங்ஙனம் பல.

இலக்கிய ஆசிரியன்மார் இவ்வாறெல்லாம் பெரும்பாலும் உலகத் துள்ள அழகுகளைத் தம் இலக்கியங்களுள் நிழற்பட மெடுத்தாற்போ ஒருங்கெடுத்து நிறுத்தி விளக்குதலால் அவ்வழகுகளைக் கண்டு மகிழ்தவி இயற்கையே உள்ளம் வீழ்ந்து நிற்கும் ஆண்பெண்பாலா ரனைவர்க்கும் இ விலக்கியங்கள் எவ்வளவு உதவியாயிருக்குமெனச் சொல்லவும் வேண்டுமோ ஒருவன் உலாப்போனால் இப் பரந்த உலகத்தில் ஏதானும் ஒரு பகு அழகையே, அதுவுஞ் சற்று மேற்போக்காகவே கண்டு மகிழக்கூடும். எல்ல இடங்கட்கும் எல்லாரும் போதலும் இயலாது. ஆனால் இலக்கியங்களிலே அவ்வழகுகளை இன்னும் ஆழமாகவுந் தெளிவாகவும் படக்காட்சிகளி போல உலகமெலாம் ஒருங்குகண்டு மகிழலாம்.

மேலும், உலகத்தின் படைப்பியற்கையைக் கூர்ந்து நோக்கும்போது அதன்கண் ஓர் அரிய மறைபொருள் பைய வெளிப்படுதலைக் காணலாம். உ கத்தில் இன்பத்துக்கு ஏதுவான அழகுகளும் துன்பத்துக்கு ஏதுவா

அருவருப்புகளுமென இவ் விரு

பகுதிகளும் தலைமயங்கியே
கிடக்கின்றன ஒவ்வொரு பொருளிலும்
இவ்விரண்டு மிருப்பது
இயற்கையாயிருக்கின்றது ஆயினும்,
எல்லா அருளும் ஒருங்குடைய
இறைவன் தனது படைப்பிலே
மேற்பரப்பில் இன்ப நினைவுக்கு
ஏதுவான அழகியல்புகளையே
விளங்
விரித்துவைத்து எனத் துன்பநினைவுக்கு ஏதுவான
அழுக்கியல்புகளை என இற்
புலனாகாவகையாய்
உண்மறைத்துவைத்திருக்கின்றான்.
அழகிய ஐந்நிற ஒளியைக்
கண்டவுடன் அதன்

மேற்கவர்ச்சியில் நாம் உடனே உள்ள தோய்ந்து எவ்வளவு இன்புறுகின்றோம்! ஆனால் அதன் அழுக்குப் பகு[illegible]கள் அதனுள் எவ்வளவு மறைவாய் எவ்வளவு வல்லமையாய் உண்மறைக்கப் பட்டிருக்கின்றன கருதுமின்கள்! அங்ஙனம் மறைக்கப்பட்டிராவிட்டா[illegible] உடனே நமது இன்ப நினைவு கலைந்து, உலக நிலையாமைகளும் இழி[illegible] வெறுப்புகளும் பற்றி, ஒரு கொடி நேரத்துக்குள் அடுக்கடுக்காய்ப் ப[illegible] துன்ப நினைவுகள் தோன்றி, நமது கிளர்ச்சியை அவித்துத் தளர்வு

தந்த நம் அகப் புற
முன்னேற்றங்களையெல்லாம்
ஒடுக்கி நம்மை எவ்வள
பாழாக்கிவிடும்! ஆகவே உலகத்தில்
எத்தனையோ துன்ப நிகழ்ச்சிகளால்
அலைக்கப்பட்டு உணர்வு கலங்கி
நிலை தளர்ந்து தள்ளாடும் மக்கள்
அப் பொ ாத ஆணவ
அழுக்குகளிலேயே
மாழ்கி மாய்ந்தொழியாதபடி
அவர்க எந்த நோத்தில் எங்கு எதை
நோக்கினும் ஒரே பேரொழுச்சியும்
பேரா றலும் ஊட்டத் தகுந்த இன்ப
நினைவே தோன்றுமாறு, எல்லாம்
வல் இறைவன் மிக்க

அருளோடு என்னென்ன வகையாகவோ இவ்வுலகம் முழுவதையும், ஆ! அழகு கனிந்து கனிந்து ஒழுகுமாறு மிக வல்லமையாய்ச் சித்திரித்திருக்கின்றான்.

காலையிற் கதிரவன் செங்கதிர் சொரிந்தால், மாலையில் மதியம் வெண்கதிர் பொழிகின்றது. பகலில் தாமரை மலர்ந்து விளங்கினால், இரவிற் குமுதம் அலர்ந்து வருகின்றது. மருத நிலத்து இரா இங்ஙனங் குமுதத்தால் நலம் பெற்றாற், கான் நிலத்து இரா முல்லையால்

மணம் பெறுகின்றது

ஓரிடத்தில் மான் ஓடிக் காட்டினல், மற்ருேரிடத்தில் அன்றில் கூடிக் காட்டு கின்றது. பிறிதோரிடத்தில் மயில் ஆடிக் காட்டினல், வேருேரிடத்திற் குயில் பாடிக் காட்டுகின்றது. இறைவன் இயற்கையில் உள்ளந் தோயும் அருட்டிருவுடையார்க்கு, ஆ! எங்கும் இன்பம் ! எங்கும் இன்பம்!! இன்ப நினைவுக்கு ஏதுவான இக் கடவுட் சித்திரங்களின் நிழற் படங்களே இலக்கியங்களாகும். இங்ஙனமாக இலக்கியங்கள் இன்ப நினைவுகட்கு ஏதுவான இவ் வழிகியல்புகளையே

தங்கட் கொண்டிருத்தலால், இத்
துன்பவுலகத்தி லிருந்துகொண்டு
இன்ப வாழ்க்கையை விரும்பும்
ஆண்பெண்பாலா ரெல் லார்க்கும்
அவை எவ்வளவு
உதவியாயிருக்குமென
எண்ணிப்பாருங்கள்!
வ்வொரில்லக் கிலும்
இசைக்கட்டுகள் போலவும்
படக்காட்சிகள்போலவும் க
கலைத்தமை [illegible]

இவ் விலக்கியக்..

கருவிகளும் நிறைந்து விளங்கி
இன்பம் பொழியும் நாளன்றோ மக்கள்

நல்வாழ்வில் வாழும் நாள்!

இலக்கிய மில்லாக்கால் நாட்டில் இன்பமேது? நாகரிகம் விரும்பும் நாடுகளெல்லாம் இதனாலன்றோ இலக்கியச் செழுமையையும் அதன் ஆசிரியர் நலங்களையும் விரும்பிப் போற்றுகின்றன.

நிலவொளியைப்பற்றி மக்கட்கு

நன்கு தெரியுமாயினும் அதன்கண் இன்ன அழகியல்பு உள்ளதென்று எல்லாரும் அறிந்துகொள்ளல் இயலாது. சிறந்த அருளறிவு படைத்தவர்கட்கே நுண்பொருளியல்புகள் விளங்கக்கூடும். அவர்கள் அவற்றைத் தம் இலக்கியங்களில் இனிப்ப வழங்குவர். அவ் விலக்கியங்களைப் பார்த்தால் எல்லாப்

பொருள்களின் அழகியல்புகளையும் எளிதின் அறிந்துகொள்ளலாம். நில வின் கதிர்களில் உணவுப் பொருள்களை விளைக்கும் மின்னாற்றல் உள தென்று அதன் அழகியல்பைக் கலித்தொகை (௩௧:௧௧) வெளியிடுகின்றது. இலக்கியங்கள் மக்கட்கு எவ்வளவு நலனுள்ளவையாயிருக்குமெனக் கருதிப் பார்மின்கள்!

இன்னும், இலக்கியங்கள் வாயிலாக அவற்றின் ஆசிரியர்கள் மக்களின் தளருணர்வை நொடிப்பொழுதில் மாற்றி வளருணர்வை எளிதின் எழுமாறு செய்து இன்ப நினைவில் இருத்துந் திறம் பெரிது படைத்தவர்களாதலின் அவர்கள் சேர்க்கை யார்க்கும் இன்றியமையாததொன்றாம். நாகரிகமில்லா நாடுகட்குங்கூட அவர்கள் சேர்க்கையின்றி இனிய இன்பங் காண வேறு வாயிலே இல்லை. நல்ல நாகரிகங்களும் அரசுமுறைகளும் சிறப்பப்படைத்த நாடுகட்கே இலக்கியப் புலவர்களும் அவர்கள் இன்சுவை இலக்கியங்களும் மிக இன்றியமையாதனவாயிருக்கின்றன.

"புலன்நாவிற் பிறந்தசொற் புதிதுண்ணும் பொழுது"

எனக் கலித்தொகையில் (௬௮ : ௧௮) இக் கருத்து எவ்வளவு சுவையோடு கூறப்படுகின்றது நோக்குமின்! புலவர்கள் வாய்மொழி இத்துணைச் சுவைத் திறம் படைத்தமையாலன்றோ பண்டுதொட்டே எல்லா அரசவைகட்கும் அவர்கள் சேர்க்கை இன்றியமையாததொன்றாய் இருந்துவருகின்றது! அரசனுள்ளத்தில் நாட்டின் அரசியல்நிகழ்ச்சிகளால் அடிக்கடி நிடுக்கிடத் தக்க கடு நினைவுகள் மாறிமாறித் தோன்றி அவனுணர்வைப் பெரிதும் நிலைகலக்கிவிடுமாதலின், அத்தகைய இடுக்கான நேரங்களிலெல்லாம் உட னுக்குடன் இனிமை நினைவுகளை அவன்பால் எழுப்பி, முன் துன்ப நினைவு களை ஒரு நொடிப்பொழுதில் அடியோடு மாற்றி, அவ்வுணர்வை எழுச்சி பெறச்செய்து வல்லமையாய் முன் நிலையினும் இன்பமாக நிலைநிறுத்தவல்ல பேராற்றல், ஆ! இலக்கியப் புலவர்கட்கேயல்லாமல் வேறு யார்க்கேனுங் கூடுமோ! இவ்வாற்றாற் புலவர்கள் சேர்க்கையும் அவர்கள் ...

கலித்தொகை மாட்சி

கீ

பொன்மொழி நுகர்வுகளும் நாட்டுக்கு எத்துணையோ இன்றியமையாதன வென்பது கூறாமலே விளங்கும்.

உ. சுவையில்லனவும் பயன்படுத்துதல்: இலக்கியங்கள் உலகத்துள்ள அழகுகளையே முதன்மையாகத் தேர்ந்துகொள்வதற்கேற்ப, உலகமும் அவ்வாறே தன் மேற்பரப்பில் அழகுவிளங்க அமைக்கப்பட்டிருக்கின்றதென்று முன் கண்டோம். ஆயினும் அருவருப்புக்குரிய பிற பகுதிகளும் உலகத்தில் உண்மையால், அவையும் மிகச் சிறுகவேனும் இலக்கியங்களில் இடம்பெறுதற் குரியனவாயிருக்கின்றன. சுவைப்போக்கையே முதன்மையாக விரும்பும் இலக்கிய ஆசிரியன்மார் இச் சுவையில்லனவற்றையுந் த இலக்கியங்களிற் சேர்த்துரைப்பதற்குச் சில ஏதுக்களிருக்கின்றன.

முதலாவது: உண்மையை மறையாமற் சொல்லவேண்டுமென்பது உண்மையை உள்ளவாறே சொல்லுதலுஞ் சுவை பெருக்கும் முறைகளுள் ஒன்றாதலின் * இக் காரணத்தையுஞ் சுவைத்திறத்திலேயே அடக்கி கொள்ளலாம்.

இரண்டாவது: இவ்வழகில்லனவற்றை இடையிடையே சேர்க்
மிடந் தெரிந்து சேர்த்தலால், ஏனை அழகுள்ளன முன்னையினும் மிக்
அழகுள்ளனவாகத் தோன்றுமென்பது. தலைவி சிறந்த அழகு வாய்ந்தவே
யாயினும் அவளத்தனை அழகில்லாதவர்களான தோழியர் சிலர் அவளருகே
யிருக்குங்கால் இன்னும் அவளழகு நன்றாய் எடுத்துக்காட்டுகின்றது. நல்
லைபம்பொன்னாற் செய்த அணிகலன் இயல்பாகவே அதன் வேலைப்பாட்
னால் அழகுள்ளதாயினும், எளிய நிலையிலுள்ள வேறோரணிகலனை அத
பக்கத்திற் சேரவைத்துப் பார்க்கும்போது அது முன்னையினும் மிக்

அழகு வாய்ந்ததாய்த் தெரிகின்றது. இலக்கியங்களிலும் அங்ஙனந்தான் கலித்தொகை உயர்ந்த இன்ப நிலைகளான நன்மக்கள் ஆற்றும் ஐந்திணை யொழுக்கங்களையே அங்கங்கும் பெருக எடுத்துரைக்குமாயினும், தாழ்ந்த இன்ப நிலைகளான வினை அடியோர் வினைவலரால் நிகழுங் கைக்கிளை, பெரு திணையொழுக்கங்களையும் அவ்வப்பகுதியின் இடையிடையே சிறுகச் சேர் துரைக்கின்றது. இதனால், உலகியலில் வழுவி நிகழும் இயற்கை நிகழ்ச் களையும் உள்ளவாறே சொல்லுதலென்னும் ஒருவகைச் சுவை பெறப்படு லோடு, இயல்பாகவே மிக்க இன்பந் தருவனவாயுள்ள ஐந்திணை யொழுக்க களின் சுவை பின்னும் மிகுந்து தோன்றுவதான மற்றொரு வகைச் சுவை யுங் கனிந்து நிற்கின்றது.

---

* *An Introduction to the study of Literature* by William Henry Hudson; 2nd Edn. P. 20.

மூன்ருவது: காளுர் தீம்பாலடிசிலே உண்பாற்கு அது மேலுந் தெவிட்
விடாமைப்பொருட்டு இடையிடையே தீம்புளிப் பாகரும் நுகர்விப்ப
ன்மை தரும். இதனுல் அப் பாலடிசிலின் பயனைப் பின்னும் பின்னு
துய்ப்பதற்கு வேட்கை யெழும். அதுபோலவே இலக்கியங்களிலும் இனி
அழகியல்புகளையே நெடுகச் சுவைத்துவருவார்க்கு அதன் சுவை முடிவாக
தெவிட்டிவிடாமல் மேன்மேலும் அதன் பயன்றுய்த்தலில் அவர்க்கு
தொடர்ந்த வேட்கை நிகழும்பொருட்டு இடையிடையே இவ்வழகில்லனவ
ர்து உணர்வை மாற்றி வைப்பதென்பது. இங்ஙனம் இவ் வேதுக்க
கொள்ளப்படும்.

௬. சுவையில்லனவற்றையுஞ் சுவைப்படுத்துதல்: இனி, இங்ஙன
சுவையில்லனவற்றை உரைக்கவும் வேண்டும்; ஆனுல் அவற்றைச் சுவை
போக்கிற்குத் தடையில்லாமலும், ஏன், ஆக்கமாகவுங்கூடப் பயன்படுத்தி
கொள்ளவும் வேண்டுமென்பது ஒரு பெரிய விரகுதானுயினும் எப்படியு
அச் சுவையில்லன, தம்மை நினைவுகூர்வார்க்கு ஒரு வெறித்த நினைவை
இடையிடையே ஊட்டி உணர்வை மயக்கச்செய்யாவோவெனின், அங்ங
ன்று; சிறந்த இலக்கிய ஆசிரியன்மார் அவ்வளவு விழிப்பில்லாதவரல்ல
இன்பமில்லாத இவ் வெறித்த பொருள்களை ஆசிரியர்கள் தம் இலக்கிய
ளுட் சேர்க்கு முன்னரே அவற்றை வேறு கருத்தினிமைகளாலும், இனி
உவமைகள் முதலியவற்ருலும், இருபொருள் பயப்பச் சொல்லுதல் கவர்ச்சி
யான சொன்முறைகள் புணர்த்தெழுதுதல் இன்னிசை பயப்பச் சொல்லுத
முதலிய எத்தனையோ வகையான பிற பல திறங்களாலுஞ் சுவைப்படுத்தி
கொள்கின்றனர்.*

இயல்பாகவே சுவையாப் பொருள்கள் தம்மைக் கற்பார்க்கு இடை
யிடையே ஒரு வெறித்த நினைவை நினைவுகூர்விக்குமாயினும், இங்க
ாட்டிய இச் சுவைத்திறங்களால் அந்நினைவு வெறும் நினைவளவாகவே
நிற்பதல்லது அதன்மேற் சென்று அவர் உணர்வைக் கவ்வி அதனை மயக்கு
ாறில்லை. அஃது எதுபோலவெனின், ஓர் அழகிய நாடகத்தில் கதைத்
லைவன், கதைத் தலைவி முதலான முதன்மையானவர்களின் நடிப்புக்கிடை
யில் வில்லியர், வேடர், அடியோர் முதலான எளியோர் சிலரின் நடிப்பும்
ிராய் வரும். அங்ஙனம் வருமிடத்து அவ்வடியோர் முதலியோரின் அழ
ின்மை, வறுமை, அறிவின்மை முதலிய சுவையா நிலைகள் காண்பார்க்கு
ரு வெறித்த நினைவைத் தோற்றுவிப்பனவேயாம். ஆயினும் அந் நினைவு

---

* *An Idealistic view of life*: The Hilbert Lectures for 1929
y S. Radhakrishnan P. 190

கலித்தொகை மாட்சி

கந

வெறும் நினைவளவாகவே
நிற்பதல்லது அதன்மேற்சென்று,
காண்பவரது கருத்தை ஈர்த்துத்
தன்வயமாக்கித் துன்பத்திற்

படுப்பிப்பதில்லை, ஏனென்றால், அவர்கள் மேற்கொள்ளுங் கோலம், பேச்சு, பேச்சின் கருத்துக்கள் நடிப்பு, நயங்கள் முதலிய பல சுவைத் திறங்களால் அந்தப் பாகம் இச் சுவைப்படுத்தப்படுகின்றது. பார்ப்பவருணர்வு இச் சுவைத் திறங்களாற் பெருகக் கவரப்படுதலாலன்றோ அக் கோலத்தாருடைய அழகின்மை வறுமை முதலிய எளிய நிலைகளில் அவ்வுணர்வு படியாமற் போகின்றது! வெறும் நினைவளவாய் நிகழ்கின்றது !

இனி, மற்றொன்றுங்

கருத்திருத்துவோம். நாம்

நாடோறும் இரா.

காலம் வரப் பார்க்கின்றோம். பகலெல்லாம் நமது கண்ணறிவை விளக்
நம் முயற்சிகட்கு இடஞ்செய்து இன்பந் தந்துவந்த கதிரவன் தன

கதிரொளிப் பாயலைச்

சுருட்டிக்கொண்டு மாலையில்

மேற்புலம் மறைந்து போக உடனே

காரிருள் இரா உலகைக்

கவிந்துகொண்டு நமது கண்ணை

அவித்து நம் முயற்சிகளையெல்லாம்

ஒடுக்கி நம்மை ஓரிடமாய் இருத்தி

விடுகின்றது. நாம் தனித்திருக்கும்

நேரமாயின் அவ் விரா வரவு நமக்கு

ஒரு வெறித்த நினைவை எழுப்பி

நமதுணர்வையும் ஈர்த்துத்

துன்பத்துட

கிடத்தக் காண்கின்ரும். ஆனல்,
ஒரு நாளன்று, நாமிருக்கும் இல்லம்
ஒ(திருமணம் நிகழும் இல்லமாயிருந்து
அன்றிராப்போதில் இசையரங்கு நாட
கம் ஊசல் முதலிய இனிய நிகழ்ச்சிகளெல்லாம் நிகழவிருப்பதாக நினை
கூர்வோம். அதற்காக அங்கங்கும் பூப்பந்தர் முத்துப்பந்தர்களும் பன்னி
மின் விளக்குகளும் பிற பல
கவர்ச்சியான அமைப்புக்களும்
அமைக்கப்பெறு கின்றன. மாலைநேரம்
நெருங்குகின்றது. நமதுணர்வை
இன்புறுத்து தமர்கள் ஆடவரும்
மகளிருமாக அழகிய
ஆடையணிகலன்களால் தம்மை
இனிதாகப் புனைந்துகொண்டு
மலர்ந்த முகங்களோடு குழாங்
குழாமாய் வந்துகொண்டிருக்கின்றனர்.

கதிரவன் மறைந்து இராப்போதும் பைய பைய வந்து இருள் சூழ்கின்றதெனக்கொள்வோம். இந்நேரத்தில் நமதுள்ள எவ்வாறிருக்கும் ? இராப்போது வந்தது என்று ஒரு நினைவு தோன்றுமேய லாமல் மற்று அதனால் உணர்வும் மயங்கித் துன்புறுவாமல்லமே! ஏனென்றால் நிகழ்ச்சிகள் பந்தர்கள் விளக்குகள் தமர்கள் முதலியவற்றால் அவ்விரா சுவைப்படுத்தப்பட்டிருத்தலின், மெதுணர்வு அவ் விராப்போதின் வரவா,

கவரப்படாமல், வெறும்
வினைவன்வாயிருந்து, மற்று அச்
சுவைகளிலே

பெரிதும் ஈடுபட்டு
இன்புற்றவண்ணமாயிருக்கின்றது.
நாடகத்தில் எளி

கோலத்தார் சுவைப்படுத்தப்படுதல்
போலவும் இங்கே இராப்போ

சுவைப்படுத்தப்பட்டாற் போலவுமே
இலக்கிய நூல்களிலும் இடையிடையே

வரும் சில வெறித்த பொருள்கள்
முற்கூறியவாறு வேறு
கருத்தினிமைக

முதலியவற்றால்
இன்சுவைப்படுத்தப்பட்டுக்

கற்பாருணர்வு அச் சுவைக் கூ

கலித்தொகை மாட்சி

னின்றும் வேறு பிறழ்ந்துவிடாதபடி நல்லாசிரியன்மாராற் பெரிதும் பாதுகாக்கப்படுகின்றது.

இதற்குக் கலித்தொகையிலிருந்து சில எடுத்துக்காட்டுகள் காட்டலாம். கலித்தொகையின் இறுதிப்பகுதியான செய்தற்கலி இரக்கவுணர்வையே பொருளாகக் கொண்டதாகலின் அது கற்பாருணர்வை மிகவுந் துன்பத்தில் ஆழ்த்துதற்குரியதுதான். ஆனல் மிகச் சிறந்த நல்லிசைப் புலவரான அதன் ஆசிரியர் நல்லந்துவனர் அதனை அங்கங்குஞ் சுவைப்படுத்தி நடத்திச் செல்லுந் திறம் பெரிதும் அறிந்து இன்புறுதற்குரியதாயிருக்கின்றது.

இத்தனை காலம் தன் அறிவு ஆண்மை வீரம் காதல் என்னும் அரிய நல்லியல்புகளை அள்ளிச் சொரிந்து தன்னை இன்புறுத்தி வந்த தலைவன் இப்போது பிரிந்து வினைமேற் சென்றான். தலைவி அவன் பிரிவாற்றாமையால் மிகவும் மெலிந்துபோனாள். வளையல்கள் கழன்றுபோகாதபடி அவற்றின்முன் வழக்கமாய் இறுகச் செறித்து வைத்திருக்கும் 'தொடி' என்னும் முன் வளையமும் அம் மெலிவினால் நெகிழ்ந்துவிட்டது. தன் இரு கண்களிலும் நீர் ததும்பத் தலைவி மனமுருகி வருந்துவாளாயினள். இப் பகுதியை ஆசிரியர் தமது செய்தலிற் கோத்துரைக்க நேர்ந்தது. செய்தலிற் கோத்துரைத்தலால் அவர் இதனை முதலில் செய்தற் பொருள் வரம்பு தோன்ற அமைத்துக்கொள்ளவேண்டும். 'தலைவன் பிரிந்தான்; தலைவி பிரிவாற்றாது வருந்தினள்' என்றுமட்டுங் கருத்துக் கூறினால் அது வெறும் பிரிவுப் பொருளையே கூறுவதாயிருக்கும்; அப்போது அது 'பாலை'யாம். அங்ஙனங் கூறாமல் தலைவி அவ் வருத்தத்தைப் பருவம் வருந்துணையும் ஆற்றியிருத்தலைப்பற்றிக் கூறுங்கால் அது பொறுத்திருத்தலாகிய இருத்தலொழுக்கத்தில் அடங்குதலின், 'முல்லை'யாம். அவ் வருத்தம் அதனினும் மீறிப் பொறுக்கவியலாததாய்த், தன்முன் எதிர்ப்படுவன அவை அஃறிணையாயினும் உயர்திணையாயினும் அவைமாட்டெலாந் தன் குறை தோன்ற வெளிப்படும்போது அஃது இரக்கவுணர்வாய் முடிதலின், அப்போது அது செய்தலாம்.

இனித், தலைவியின்பால் இங்ஙனம் பொறுக்கவியலாததாய் வெளிப்படும் இரக்கவுணர்வு இருவகைப்பட்டுத் தோன்றும். ஒன்று தனது ஆற்றாமை கருதி வெளிப்படுதல்; மற்றொன்று இப் பிரிவினால் தன் தலைவனுக்கு நேரும் இன்னல்கள் கருதி வெளிப்படுதலாம். இலக்கிய ஆசிரியர்கள் இவ்விரண்டிலொன்றையோ அல்லது இரண்டையுமோ எடுத்து செய்தற் பொருள்வரம்பாக ஆள்வர். இரண்டையும் எடுத்து ஆளுங்கால், தன் நலன் கருதி இரங்குதலைவிடத் தன் தலைவன் நலன் கருதி

கலித்தொகை மாட்சி

கரு

இரங்குதலே காதலன்பிற் சிறந்த நன்மகளிர்க்கு இயல்பாதலின் ஆசிரியர்கள் அதனையே முதன்மைகொள்ள வைத்து எனைத் தன்னலங் கருதி இரங்குதலை அதனுள் அடக்கி மிக அழகாகக் கூறுவர், ஆசிரியர் நல்லந்துவனார் இவ்வகையில் மிக்க திறம் வாய்ந்தவராயிருக்கின்றார்.

' தலைவன் வினைமேற் போகிய

கானம் மிக்க வெப்பமுள்ளது ; அவ் வெப்பத்தில் அவர் என்ன துன்புறுகின்றாரோ! ஏ, வானமே ! இது முது வேனிற் காலமாதலால் நீயோ வெண்மேகமா யிருக்கின்றனை. ஆ! என் தலைவன் செல்லும் வெங்கானத்தில் நீ நீர் பெய்யாது வறந்து என்ன காரியஞ் செய்கின்றனை !' என்று தலைவி தன் தலைவன் இன்னல் கருதி உளங் குழைந்து நொந்து அதனை ஆற்றமாட்டாது புறத்தே வானத்தை நோக்கிக் கூறி இரங்குகின்றாளாக ஆசிரியர், முன் கருத்தை இங்ஙனம் ஒழுங்குசெய்து கொள்கின்றார். ஈது எவ்வளவு இரக்கந் தருவதாயிருக் கின்றது பார்மின்கள்! இதனால் இப் பகுதி இப்போது செய்தற் பொருள் வரம்பு தோன்ற நின்றது. அது நிற்க :

நல்லந்துவனார்,

தமது செய்தலில் இடையே
கோத்துரைக்க நேர்ந்த கருத்து
இது. ஆனால் இக் கருத்தோ
தன்னைக் கற்பார்க்குத் துன்ப
நினைவை யெழுப்பி அவருணர்வை
அதன்கண் மயக்குதற் குரியதாயிருக்
கின்றது. அங்ஙனம்
மயக்கிவிடாதபடி அதனை வேறு
கருத்தினிமையினாற் சுவைப்படுத்தி
அச் சுவையில் அவருணர்வைப்
படிவித்துப் பாதுகாக்க

வேண்டிய பொறுப்பு இப்போது ஆசிரியர் நல்லந்துவனார்க்கு
கின்றது. அதற்காக அவர் ஓர் விரகு செய்கின்றார்:

முன்னிற்

நெய்தலிற் சேர்க்க நேர்ந்த முன் கருத்திற் கானமும் அதன்கண் வெப்பமுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன. அவ் வெங்கானத்தில் தலைவன் வருந்துதலும் உரைக்கப்பட்டது, வானமும் வருகின்றது, தலைவி கண்ணீர் ததும்ப வருந்துதலும் வந்திருக்கின்றது, இக் கருத்துக்களை எங்ஙனமேனுந் தமதறிவின் றிறத்தால் ஆசிரியர் சுவைப்படுத்தியேயாக

வேண்டும், அவரதனை எவ்வாறு இன்சுவைப்படுத்துகின்றார் பாருங்கள்! தலைவி வானத்தை நோக்கிக் கூறுகின்றாள்: 'ஏ, மேகமே; என் தலைவன் போகிய கானத்தில் வெப்பமோ மிகுதியாய் எரிக்கின்றது; அவன் அங்கே நைகின்றனன். இந்த நேரத்தில் நீ வறந்த வெண்மேகமாயிருந்து என்ன பயன்? ஒன்று செய்; தலைவன் பிரிவால் என் கண்களில் நீர் கடலேபோற் பெருகுகின்றது. நின்னோடு இன்னும் நின்னினத்து மேகங்களெல்லாமும் இக் கண்ணீர்க் கடலில் எவ்வளவு வேண்டுமானாலும் நீர் முகந்துகொள்ளலாம். நீர் தாராளமாயிருக்கின்றது. மேலும் வற்றாது பெருகிக்கொண்டேயிருக்கும். வெப்பம் மிகுதியாதலால்

தலைவன் கானத்திலும் நீர் மிகுதியாகத் தேவையாயிருக்கும். ஆதலால் அன்புகூர்ந்து நீ நின்னினத்தோடே கூடி என் கண்ணீர்க் கடலில் நீர் முகந்துகொண்டு கருமேகமாகி இவ் வான்வழியே விரைந்துசென்று என் தலைவன் செல்லும் வெங்கானம் நண்ணி அவன் செல்லுமிடமெல்லாம் செறிந்த நீர்த்துளிகள் வீசி அவ் வெப்பம் மிகாதபடி தணிவிப்பாயாயின் மிகவும் பயனுமிருக்கும். நீ அங்ஙனங் கனைதுளி வீசுவையோ?' என்பது. இங்ஙனமாக ஆசிரியர் இச் செய்தற் கருத்தை வேறு கருத்தினிமையினால் இன்சுவைப்படுத்துகின்றார்.

இஃது எவ்வளவு வியக்கத்தக்கதாயிருக்கின்றது! கற்பாருணர்வு இவ் வியப்பில் ஈடுபடாதிருக்குமோ கூறுமின்கள்! இங்ஙனம் இச் சுவையில் ஈடுபடுதலால் அவருணர்வு முற்கூறிய வெறித்தபொருளால் மேலும் மயங்கி வருந்துதற் கிடமில்லாமற் போகின்றதன்றோ? ஆசிரியர் நல்லந்துவனா ரறிவின் றிறம், ஆ! நம்மை எவ்வளவு இன்புறுத்துகின்றது காண்மின்கள்! இவ் வின் சுவைப் பகுதியை அவர் மேன்மேலுஞ் சொற்பொருட் சுவைப்பாகு தான இசைச்சுவை கலந்து அச் சுவைச்சாறு சொட்டச் சொட்ட இனிய இளம் பதத்திற் றிரட்டி யெடுத்தளிக்குந் தீந்தமிழ்க் குறுவெண்பாட்டு வருமாறு:

> "தாழ்பு, துறந்து தொடிநெகிழ்த்தான் போகிய கானம்
> இறந்தெரி நையாமற் பாஅய் முழங்கி
> வறந்தென்னை செய்தியோ வானம்! சிறந்தவென்
> கண்ணீர்க் கடலாற் கனைதுளி வீசாயோ
> கொண்மூக் குழீஇ முகந்து"

என்பது.

இவ் வருந்தமிழ்ப் பாட்டின் சொற்றொடரமைதி, 'கானம் எரி நையாமல் வானமே கனைதுளி வீசாயோ?' என்பதுவேயாம். இதனால் தலைவி தன் தலைவன் நலங் கருதி இரங்குதலையே ஆசிரியர் இதன்கண் முதன்மையாக எடுத்துக் கூறிய திறங் கண்டுகொள்ளப்படும். தலைவி தனது ஆற்றாமை கருதி இரங்குதலை ஆசிரியர் அம் முதன்மையான சொற்றொடரின் அடைமொழித் தொடர்களால் மிக அழகாக அடக்கி நிறுத்தினர். "தாழ்பு துறந்து தொடிநெகிழ்த்தான்", "கண்ணீர்க் கடல்" முதலியன இவ்வியல் பினை இனிது நினைவுகூர்வித்தல் கண்டுகொள்க.

இனி, இத்தகைய அரிய பொருட்சுவையை வெளிப்படுத்துதற்கு அதற்கேற்ற ஆற்றல் வாய்ந்த சிறந்த செஞ்சொற்களே இப் பாட்டிற் பொருந்த அமைந்திருத்தலும், அவற்றை ஆசிரியர் மேன்மேலும் வல்லவா

கலித்தொகை மாட்சி
கள

றெல்லாஞ் சுவைப்படுத்திருத்தலும் அறிந்து இன்புறுதல் வேண்டும். இப் பாட்டில் அவை அடிதோறுமிருப்பினும் இங்கே ஒன்றிரண்டேனுங் காட்டிச் செல்லுதல் நன்று.

தலைவன் பிரிந்தான்; அதனால் தலைவியின் உடல் மெலிந்தது. அதனை ஆசிரியர்; அங்ஙனமே உடல்

மெலிந்தது அல்லது இளைத்தது எனச் சொல்ல லாம்; ஆனால் அவர் அதனை அங்ஙனஞ் சொல்லவில்லை; 'தொடி நெகிழ்ந் தது' என்பதனால் தெரிவிக்கின்றார்; சும்மா மெலிந்தது எனின் எந்த அள வுக்கு என ஒரு பொருள்வரம்பு தோன்றாமற்போமன்றோ? ஆகவே 'தொடி நெகிழ்ந்தது' எனக் கூறித் தொடிநெகிழத்தகுந்த அந்த அளவுக்கு உடல் மெலிந்தது என ஆசிரியர் தெளிவாய்ப் பொருள்வரம்பு தோற்றுவித்தாரா யிற்று. மேலும், 'நெகிழ்தல்' என்னுஞ் சொல் இரங்கற் பொருளுக்கு எவ் வளவு

பொருத்தமான சொல் கருதுமின்கள் ! வன்மையா யிருப்பதொன்று வரவா மென்பதப்படுதலே அச் சொல் உணர்த்தும்; மெலிதல் இளைத்தல் முதலிய சொற்கள் அங்ஙனமல்ல. ஒரு பொருள் மெலிந்தால் அதன்கண் உள்ள பயன்படும் ஆற்றல் குறையும் ; வடிவும் சுருங்கும். ஒரு பொருள் நெகிழ்ந்தால், அதன்கண் உள்ள பயன்படும் ஆற்றல் மேன்மேலும் மிகும்; வடிவும் அகன்று காட்டும். இங்ஙனமெல்லாம் சொற்கள் தத்தம் பொருள் வரம்புகளிற் பலவாறாக .வேறுபடுமாதலின் அங்

நுணுக்கங்கள் தெரிந்து சொற்களைப் பயன்படுத்துதலே நல்லாசிரியன்மார் திறமாயிருக்கின்றது.

இனி 'வளை' முதலான வேறு சொற்கள் உளவேனும், 'தொடி' என்னுஞ் சொல் இங்கு மிகச் சிறந்ததாய் இசைந்து நிற்கின்றது. 'வளை' என்பது 'வளைந்திருப்பது' என்பது மட்டும் உணர்த்தும்; இறுக்கம் உணர்த்தாது. ஆனால் இங்கே குறிப்பிடப்படும் முன் வளையம், கையோடு இறுக்கமாய் அதனைத் தொட்டுக்கொண்டிருத்தலையுங் காட்டுதலின் அதற்

குத் 'தொடி' யென்னுஞ் சொல்லே மிக இசைவானதாயிருத்தல் காண்க. மேலும் இறுகி நிற்பதென்பது ஒரு வல்லென்ற நிகழ்ச்சியாதலின் அதற்கேற்பத் 'தொடி' யென்னுஞ் சொல்லும் வல்லோசைப்பட்டு நின்றது. 'இரங்குத' லென்பது மென்பதமுள்ளதாகலின் அதற்கேற்ப 'நெகிழ்த' லென்னுஞ் சொல்லும் எவ்வளவு மென்பதமுள்ள இன்னொலியாய்த் திகழ்கின்றது கருதுமின்கள்! அதுமட்டுமன்று: ஒரு பொருள் நெகிழ்வதற்குமுன் அதன் முன் நிலை இறுக்கமாயிருப்பதன்றோ இயல்பு; அங்ஙனமே இங்கே மென்பதமுணர்த்தும் மெல்லொலிச்சொல்லாகிய 'நெகிழ்தல்' என்பதற்கு முன், 'தொடி' என்பது வல்லொலிச் சொல்லாய் வன்பதமுற்று நிற்பது எவ்வளவு இயற்கையாயிருக்கின்றது! ஆகவே, இங்கே கருதப்பட்ட கருத்தை வெளிப்படுத்துவதற்குத் 'தொடி நெகிழ்த்தான்' என்னுஞ் சொற்கள் மிக

வும் பொருத்தம் வாய்ந்தனவாய்த் திகழ்கின்றனவென்பது நன்கு தெளிந்து கஅ

கலது'ம!தாகை மாடச

கொள்ளப்படும். இங்ஙனம் பொருட்கரு.நிரம்பிய இச் சொற்களை மாற்றி வேறு சொற்கள் பெய்துரைத்தால் இப் பகுதி இவ்வளவு சிறவாதன்றோ

தெய்வத் திருக்குறள் நூல் இச் நுணுக்கங்களாலேயே முற்றும் இயன்றதா யிருப்பதும் இங்கு நினைவுகூர்ந்து மகிழ்தல் வேண்டும்.

இனி, மேற் கவிப்பாட்டில், இங்ஙனம் பொருந்திய சொற்களே அமைந்து வருதலோடு, ஆசிரியர் அவற்றை மேன்மேலுஞ் சுவைப்படுத்தி வழங்குந் திறம் இன்னும் நமக்குப் பெருவியப்பும் மகிழ்ச்சியும் நல்குவனவா யிருக்கின்றது. ' தாழ்பு ' ' துறந்து' என இரு வினையெச்சங்கள் முதலடி

யின் முதலிலேயே வருகின்றன. அவற்றைத் 'தாழ்ந்து துறந்து' என ஒரு வாய்பாட்டாலேயுங் கூறலாம். ஆயினும் அங்ஙனங் கூறினால் அவை சுவைக்குமோ? ஓசை மாற்றி வேறுபடுத்துச் சொல்வது எவ்வளவு இனிக்கின்றது! இங்ஙனம் இனிக்குமாறு எழுதுந் திறங்கட்கு ஓர் அளவேயில்லை

இனி, இப் பாட்டின்கண் எதிர்ந்துள்ள மற்றொரு முதன்மையான பேரழகும் நமதுள்ளத்தைப் பெரிதுங் கவர்கின்றது. இரங்கற்பொருளுள்ள பாட்டாகலின், இதன்கண் உள்ள எல்லா வல்லெழுத்துக்களும் ஏனை எழுத்தொலிகளோடு ஒன்றித் தம் ஒலி வன்மை பெரிதுங் கரைந்து போய் மெல்லோசையாய் இனித்தொலிக்கின்றன. 'தாழ்பு' என்பதில் இரண்டு வல்லெழுத்துக்களிருந்தும் இடையே நின்ற ழகர வொலியின் தொடர்பால் தம் ஒலிவன்மை எவ்வளவு கரைந்துபோய் மென்பு முற்று நிற்கின்றது பாருங்கள்! இப் பாட்டிலுள்ள ஒரு வல்லினச் சொல்லேனுந் தனக்குரிய ஒலிவன்மையில் ஒலிக்கவில்லை. எல்லாம் மென்பதப் பட்டு நிற்கின்றன. ஈது எவ்வளவு வியத்தற் குரியதாயிருக்கின்றது இங்ஙனமே இப் பாட்டின்கண் ஒளிரும் ஏனையெல்லா அழகுகளையும் தெளிய விளக்குவதானால் இவ்வுரை வரம்பின்றி விரியும். அது நிற்க

இனி, மருதக் கலியில் ஒரு பகுதியை நினைவுகூர்வோம். ஓர் அரசனது அரண்மனையிற் குற்றேவல் செய்யுங் கூனியொருத்தியுங் குறளனொருவனும் இருந்தனர். இவர்கள் அவ்வரண்மனையின் புறத்தே ஓர் ஒதுக்கிடத்தில் தமக்குள் இன்பங் காண விரும்பினர்; குற்றேவன் மக்களாகலின் இவர்கள் நிகழ்த்தும் இன்பம் உயர்ந்த ஐந்திணை யொழுக்கமாகாதென்பது சொல்லாமலே விளங்கும். அது, தாழ்ந்த இன்பங்களுள் ஒன்றாகிய பெருந்திணை யொழுக்கமாகவே இங்கு வருகின்றது. இவ் வொழுக்கத்தில் இக் கூனியுங் குறளனும் நிகழ்த்தும் எளிய உரையாடல்களும் ஏனை நடக்கைகளும் பற்றி இம் மருதக் கலியின் ஆசிரியரான மருதனிளநாகனார் மிக்க உலகியற் பழக்கந் தோன்ற நேரே கண்ணெதிரிற் காண்பதுபோல் அத்தனை இயல்பு வழுவாமல் விளக்கியிருக்கின்றார்.

குறளன் ஓரிடத்தில் இருந்தான்; அவ்வழியே கூனி ஏதோ வேலை யாய்ச் செல்வாளைப்போல் வந்தாள். உடனே குறளன் அவளை நோக்கி,

என்னோற் றனைகொல்லோ
நீருள் நிழல்போல் நுடங்கிய
மென்சாயல்
ஈங்கு உருச் சுருங்கி
இயலுவாய் ! நின்னொடு
உசாவுவேன்; நின்றீத்தை

என்றான். 'நீரில் தெரியும்

நிழல்போல ஒளிர்ந்த சாயலோடு உருவங் குறுகிச் சுருங்கி நடக்கின்ற எ கூனீ ! நின்னோடு ஒன்று பேசவேண்டும், நில்! நான் இங்ஙனம் நின்னோடு பேசுவதற்கு நீ என்ன புண்ணியஞ் செய்தனையோ' என்பது இதன் கருத்து. தான் குறளனாயிருந்தும் அவன் இங்ஙனந் தன் உருவத்தையும் நிலையையும் இழித்துப் பேசியது கூனிக்கு ஒரு பெரும் வியப்பாயிருந்தது. பின்பு அவர்களுட் சிறிது பேச்சு நிகழ்ந் தது. முடிவிற் கூனி ஊடிக்கொண்டு, "குறுவட்டா ! நின்னின் இழிந்ததோ கூனின் பிறப்பு" என்று

சொல்லி நடக்கலானாள்.

குறளன் தானும் அவளைப் பின்பற்றி மெல்ல நடந்துகொண்டேபோய், அங்ஙனம் போகின்றவன் தன் நெஞ்சை நோக்கிக் கூறுவான்போல, 'ஏ, நெஞ்சமே! நாம் நமது விருப்பத்தைக் காட்டிக்கொண்டு அவளை இத்துணைப் பின்பற்றி வந்தும் அதற்கிசையாதாள்போல ஊடிக்கொண்டு எட்டி எட்டிப்போய் அக் கூனி குழையுங் குழைவுகாண்!' என்று அவள் கேட்குமாறு சொன்னான். அது கேட்ட கூனி, தானுந் தன் நெஞ்சை நோக்கிக்

கூறுவாள்போல இவன் நடந்து வரும் நடையை நோக்கி,

யாமை எடுத்து
நிறுத்தற்ருல் தோளிரண்டும் வீசி
யாம் வேண்டே மென்று
விலக்கவும் எம்வீழும்
காமர் நடக்கு நடைகாண்

என்று இவன் கேட்பக் கூறி எள்ளினுள். ' காமஞர் நடைபோல நடக்கும் இவன் நடையழகே அழகு '' என்று தன்னை அக் கூனி எள்ளி நகையாடுதல் தன் செவியிற்பட்டதுங் குறளன், ' ஏ கூனீ ! ஓ, நின் விருப்பந் தெரிந்தது; காமஞர் நடையை

இதோ பார் ' என்று சொல்லி, யாமையை எடுத்து நேரே நிற்கவைத்தால் அதன் தோற்றம் எப்படியிருக்குமோ அது போல நின்று தன் குட்டைக் கைகள் இரண்டையும் விலாவுக்குள் வீசி வீசிச் சிறிது நடந்து காட்டினன் என, இங்ஙனமெல்லாம் அப்பாட்டின் (கலி. கூச) பொருள் தொடர்ந்து செல்கின்றது.

இங்கே காட்டப்படுந் தலைவியுந் தலைவனுங் கூனியுங் குறளனுமாயிருப் பதும், அவர்கள் குற்றேவன் மக்களாய் உயர்ந்த வளமின்றி அழகின்றி யிருப்பதும், அவர்கள் பேச்சும் நடையும் நாணம் முதலிய உயர்ந்த நல்லியல்

௨௦ மாட்சி

கலித்தொகை

துகளின்றி நிகழ்வதுங் கற்போருள்ளத்துக்கு எத்தனையோ அருவருப்புந் துன்பமுந் தரும் வெறித்த பொருள்களாகத்தாம் இருக்கின்றன. எனினும் அவருணர்வு அந் நினைவிற் படிந்துவிடாதபடி, ஆசிரியர் இப் பகுதியை எவ்வளவோ சுவைத்திறங்களால் இனிமைப்படுத்தியிருக்கின்றார். கூனியொருத்திக்கு ஏற்றபடி குறளனொருவனை ஆசிரியர் இணைத்துவைத்ததே முதலிற் பெருஞ்சுவையாயிருக்கின்றது. அது மட்டுமன்று : இவர்கள் உரையாடல்களுள் மிக்க வியப்பைத் தரும் சிறந்த வேடிக்கைக் கருத்துகளையே தெரிந்து கோத்துக் கற்போருள்ளத்தை

வெவ்வேறு சுவைகளில் ஆசிரியர் ஈர்த்துச் செல்கின்றார். இன்னும் 'நீருள் நிழல்போல்' எனக் குறளானும், 'யானை எடுத்து நிறுத்தற்றால்' எனக் கூறியும் பயன் படுத்தியதாக ஆசிரியர் காட்டிய உவமங்கள் எவ்வளவு பொருத்தமாய் அமைந்திருக்கின்றன பாருங்கள்! உவமைச் சுவையால் ஆசிரியர் இவ் வெறித்த பகுதியைச் சுவைப்படுத்துந் திறம் எவ்வளவு கவர்ச்சியாயிருக்கின்றது! இங்ஙனம் இவ் விலக்கியச் சுவை முறைகள் பலவாம்.

உ. கலிச்சுவை

இனி, இலக்கியச் சுவையில் ஈடுபடுகின்ற புலவர் பெருமக்கட்கு
உலகத்தில் அங்கங்குர் நிகழ்கின்ற இனிமையியல்புகளிற் படிந்து நிற்றலே

இயற்கையாயிருத்தலின், உண்மையில் அவரெல்லாம் அருள்விளக்க முடைய
வரேயாவரென்பது துணியப்படும். ஏனென்றால், எங்கும் நீங்காது நிறைந்
திருக்கும் இறைவன் அருளியல்புகளே உலகமெங்கும் அங்ஙனம் இனிமை
யியல்புகளாகச் சுவைதோன்ற விரிந்து கிடக்கின்றன. அதனாலேதான்
புலவர்கள் பொருள்களையும் உயிர்களையும் உற்றுநோக்கி அவற்றின் வாயிலாக
விளங்கும் இறைவனியல்புக ளெல்லாமும் வெளிப்படுத்துவாராயிருக்
கின்றனர். இங்ஙனம் அவர்கள் இறைவன் அருள்விளக்கத்திலேயே
ஊன்றிப் படிந்து கிடத்தலின் அப்போது அவரது நிலை, உணர்விறந்ததோர்
உணர்வுநிலையாயிருக்கின்றது; அவரதுள்ளம் பளிங்குபோல் ஒளிவிளக்கமு
தூய்மையுமுள்ளதாய் அழுக்கற்றுத் திகழ்கின்றது. இத்தகைய உள்ளங்
களிலன்றோ இறைவன் திருநடம் நிகழும்! நிகழவே, அந்நிலையில் அங்கே
ஓர் இனிய ஓசை தோன்றும். சமயவுணர்வுடையோர் அதனை 'நாதம்
என்பர். முற்றறிவுள்ள பெரும் பொருளின் ஆற்றலால் இது வெளிப்
படுதலின் இவ்வோசை, இயற்கையே ஓர் ஒழுங்குள்ளதாய் நிகழ்கின்றது
பின், அது பலவாகப் பிரிந்து பற்பலவற்றை உருவாக்கும் ஏதுக்களாய்
நிற்குமிடத்தும் அவ்வோசை ஒழுங்குமிகுந்தே நிகழ்கின்றது. கூர்ந்
நோக்கினாற் புறத்தே பற்பல

கலித்தொகை மாட்சி

௨௪ ஒழுங்குமுறை மிக

முதன்மையான ஏதுவாய்ப் பயன்படுகின்றதென்பது நன்கு விளங்கும். இவ்வோசை யொழுங்குகள் பாவோசையாய்ச் (Rhy· thm) சொன்முறையில் வெளிப்படும்பொழுது இலக்கண ஆசிரியர்கள் இவற்றைச் 'சீர்' என்பர். இது மேன்மேல் தாளம் முதலியன கொண்டு நிகழும்பொழுது 'பண்' ஆம். சிறந்த அருட் புலவர்கள்பால் தம்மை மறந்த நிலையில் இங்ஙனம் பாட்டு உண்டாகின்றது.* இதனாற்றான் இங்ங னம் ஒழுங்கிற் சிறந்த நல்ல பாட்டுகளை யார் இயற்கையாகப் பாடவல்லவர்

களாயிருக்கின்றார்களோ அவர்களை அது காரணமாகவே தெய்வத்தன்மை யுள்ளவர்களாக மதிக்கும் வழக்கம் நமது நாட்டில் உண்டாயிற்று.

இனி இவ்வோசை யொழுங்குகளில் ஒரு வகையே 'துள்ளலோசை' யாம்; 'கலிச்சீ'ரோசை யென்பதும் இது. நின்ற சீர் நேரசை யிறுதியாக வுள்ள மூவசைச் சீராயிருந்து அதன் முன்னர், வருஞ்சீரின் முதலசை நிரை பசையாயிருப்பது 'துள்ளலோசை' யென்னுங் கலியோசைக்குச் சிறப் பென்பர் ஆசிரியன்மார். நேரசை

யிறுதியாகவுள்ள மூவசைச். சீரை வெண்சீர்' எனவுங்கூறுப. ஆகவே அவ் "வெண்சீர்ப் பின்னர் நிரைவந்து சட்டலே சிறந்த" †தென்றார் பேராசிரியர். இச்சிறப்பான கலியோசைக்கு அவ்வுரையாசிரியரே,

"அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்".

என்னுங் கலித்தொகை (கக) யடியைக் காட்டாகக் காட்டுவர். இதன்கண் 'அரிதாய' என்பது ஒரு சீர். இங்ஙனமே 'அறனெய்தி' என்பதும் பிறவும் ஒவ்வொரு சீராம்; ஒவ்வொரு சீரும் முதலில் நிரையசையிற்

றொடங்குகின் றது; பின் நேரசையிற்
சென்று முடிகின்றது. நிரையசை
இரண்டெழுத்துக் களாய்
இணைந்தொலிக்கின்றது. நேரசை
ஓரெழுத்தாய்த் தனித் தொலிக்
கின்றது. இதனால் நிரையசை தடித்த
ஓசையானதெனவும் நேரசை மெல்லிய
ஓசையானதெனவுந்
துணிந்துகொள்ளலாம். துணியவே,
ஒவ்வொரு சீரும் இவ்வாற்றால் முதலிற்
கனமான ஓசையில் எழுந்து
உரத்தொலித்துப் பின் வரவர
அவ்வொலி குறைந்து மெல்லிதாய்
முடிய, அம் முடியுந் தருவாயில்
வேறொரு சீர் துவங்கி அங்ஙனமே

முதலில் நிரையசையாய்க் கனத் தொலித்துப் பின் நேரசையாய் மெலிந்து நிற்ப, இவ்வாறே இக்கலியோசை தொடர்புற்றுச் செல்லும் முறைமை நன்கு விளங்காநிற்கும். ஓரோசை மெலியுந் தருவாயில் மற்றோரோசை இங்ஙனங் கிளர்ச்சியாய்க் கலித் தெழுந்து கனத்தொலித்துத் துள்ளிச் செல்வதனாற்றான், இக் கலிச் சீரோசை ' துள்ளலோசை ' யெனப்படுவதாயிற்று.

---

* A. C. Bradley : *A Miscellany* (1929) P. 226.

கலித்தொகை மாட்சி

இனி, இங்ஙனம் எழுச்சியாய்
இவ்வோசை துள்ளிச் செல்வதற்குரி
ஏதுவுஞ் சிறிது அறிதல் வேண்டும்.
மக்கள் ஒன்றை ஊன்றியறியும்போது
அதனியல்பில் அவருணர்வு முறுகி
நிற்கின்றது. அந்நிலையில் அவர்பா
ஓர் ஓசை தோன்றுமென்று
அறிந்திருக்கின்றோம். ஒருவன் மிக்க
மகிழ்ச்சியாயிருக்கும்போது அவனை
யறியாமலே அவன்பால் இசை

தோன்றுதலை காண்கின்றனமல்லமோ ? அங்ஙனமே துன்பம் மிகும்போதும், மிக முறுகி நிலையில், உடனே அவன் வாய்விட்டு அழுதுவிடுதலையும் நாம் பார். இன்றோம். இங்ஙனமே பொருளியல்புகளை ஊன்றியறிகின்ற அமை! யான அருள்நிலையில் உணர்வு முறுகி நிற்கும்போதும் சான்றோர்கள்பா,

பாட்டு எழுகின்றதென் றறிதல் வேண்டும். இங்ஙனம் எழுகின்ற இ
பாட்டொலி அவ்வந் நோத்தின் வெவ்வேறுணர்வு நிலைக்கேற்றவா
வெவ்வேறு ஓசை யொழுங்குகள் உடையதாயிருக்கின்றது. பொரு
களின் நல்லியல்புகளிற் படிந்து உணரும்போது அவ்வுணர்வு இன்
வுணர்வாய் வயங்கும். இன்பம் முறுகி நிற்கும்போது உணர்வு எழுச்
யுங் கிளர்ச்சியும் உள்ளதாயிருக்கின்றது. இனி அவ்வின்பம் மிக்
அமைந்த நிலையில் நிகழுமாயினும், அங்கும் அவ்வெழுச்சியுங் கிளர்ச்சியு
மிக்க அமைந்த நிலையிலேயே நுண்பொருளளவாய் நிகழாநிற்கும். உலக
தில் இன்ப வுணர்வில் வயமாயிருக்கும் மக்கள் நிகழ்ச்சிகளை உற்று நோக்
னால், அவர்கள் நிலையும் ஆரவார ஒலியும், எழுச்சியுந் துள்ளலுமாயிரு
கின்றன. ஆம், இன்பவெழுச்சிக்கு இயற்கையே இத் துள்ளலியற்கை
யிருக்கின்றது. ஆதலாற்றான், அவ்வின்ப நிகழ்ச்சியால் எழும் பாட்டோசை
யும் மேலே காட்டியவாறு துள்ளலோசைத்தாய் அவ் வொழுங்கு முறையி
நிகழ்கின்றதென்பது.* எனவே இன்பப் பொருள் பற்றிப் பாடுங்கால் அ
பாட்டு இத் துள்ளலோசையின் ஒழுக்கம் வாய்ந்த கலிப்பாட்டாய் வெளி
படுகின்றதென்பது நன்கு தெளிந்துகொள்ளப்படும்.

'கலி' யென்னுஞ் சொல்லும் இப்பொருட்டாம். களிப்பின் பெருக்கு
செருக்கு, ஆரவாரம் முதலிய எழுச்சி நிலைகளை அஃதுணர்த்தும். ஆகவே
துள்ளலோசைக்குக் 'கலியோசை' யென்பதுஞ் செய்யுள் முறையிற் பெ
ராயிற்றென்பது. இங்ஙனமெல்லாம் இன்பம் பொருளாக இயல்பின் எழுந்
பண்டுதொட்டே புலனெறிப்பட்டு வந்தமையாற்றான் ஆசிரியர் தெய்வ
தொல்காப்பியர், இன்பவொழுக்கம் என்னும் அகத்திணைபற்றிப் பாடுதற்
இக் கலிச் செய்யுளே மிகவும் உரியதெனத் தெரிந்து அதற்கே முதன்மை
தந்து அதனையே முன்வைத்து யாப்புறுத்து இலக்கணஞ் செய்வாராயின
(தொல். அகத்: ருகூ).

* *Encyclopædia Britanica* 11th Edn. Vol. 23. P. 277. Rhythm i
Verse.

இனி, இக் கலிச் செய்யுளின் அமைப்புமுறையும் மிக அருமைப் பாடுள்ளதாயிருக்கின்றது. ஆசிரியர் தொல்காப்பியர் இக் கலிச் செய்யுளை நான்கு வகையாகப் பாகுபடுத்தோதுகின்றார். அவற்றுள் 'ஒத்தாழிசைக் கலி' என்பது ஒன்று. ஆசிரியர் இவ் வொத்தாழிசைக் கலியையே கலிக்குச் சிறப்புடையதெனக் கொண்டு அதற்கே முதன்மை தந்து

முன்வைத் ?தாதுவர். உரையிலும் இவ்வுண்மை எடுத்துக் காட்டப்படுகின்றது, தொல். செய்: கரூய). இனி, இங்ஙனம் முதன்மைபெற்ற ஒத்தாழிசைக் ;லியையும் ஆசிரியர் மறித்தும் இருவகைப்படுத்தோதுவர். அவை, ' ஒத் ;ாழிசைக் கலி ' யெனவும், 'ஏனை ஒத்தாழிசைக் கலி' யெனவுங் கொள்ளப் ;டும். இவற்றுள்ளும் 'ஒத்தாழிசைக் கலி' யென்பதே 'இ;ன்பம்' என்னும் ;கப்பொருள் கூறுதற்குச் சிறந்ததாய் ' அகநிலை யொத்தாழிசை ' யெனப் ;ட்டு முதன்மையுற்றிருக்கின்றது. கலித்தொகையிலும் இவ் 'வொத்

ாழிசைக் கலிப்பாக்களே '
பெரும்பான்மையவாய் வருகின்றன.
இவ்வாற் றற், கலிப்பாக்களிலெல்லாம்,
'ஒத்தாழிசைக் கலி' யென்பதே சிறப்பு
மிக்க ாய்த் திகழ்கின்றதென்பது
இனிது தெளிந்துகொள்ளப்படும்.
இச் சிறப் புக்குரிய ஏதுக்களும் மிக்க
அருமையானவையா யிருக்கின்றன.
இப் பொருட் பரப்புகளெல்லாம் இங்கே
விரித்து விளக்குவதானல் இச்
சிற்றுரை பரம்பிகந்துபோம்.
தொல்காப்பியப் பொருளதிகார
இயல் ஒவ்வொன் றக்கும் இப்போது
யான் தனித்தனி ஆராய்ச்சி விளக்க
நூல், எழுதிவரு கின்ற முறையில் அதன்

செய்யுளியலுக்கும் ஒரு விளக்க நூல் எழுதிவரு ன்றேன். அதன்கண், தமிழ்ச் செய்யுட்களின் அமைப்பழகுகள், அவை ங்ஙனம் அமைதற்குரிய நுண்பொருளேதுக்கள், அவற்றால் உண்டாகும் யன்கள் முதலிய நுட்ப திட்பங்கள் கூடியவரையில் விளக்கியெழுதப் பெறுகின்றன. அத் தொகுதிகள் வெளிவருங்கால் இந் நுண்பொருட் கூறு ளெல்லாம் அவற்றிற் கண்டுகொள்வதற்கு இடமுண்டு. ஆயினும் இங்குஞ் சிறிது காட்டிச் செல்வது நல்லது.

'ஒத்தாழிசைக் கலி'க்கு ஆசிரியர் தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் நான்கு உறுப்புக்கள் கூறுவர். அகத்திணை யொழுக்கங்களில் ஒரு கருத்தை ஒருவருக்கொருவர் கட்டுரைத்துச் சொல்லுதலென்பது ஒரு முதன்மையான நிகழ்ச்சியாகும். இக் கருத்தைபற்றிச் "சொல்லிய சொல்லும் வியங்கொளக் கூறு" எனக் கலித்தொகையும் ஓரிடத்தில் (கஉ : கக) நுவலுவதாயிற்று. இங்ஙனம் பயன்படும்படி கட்டுரைக்கும் முறையில் இக் கலிச்செய்யு ளுறுப்புக்கள் நன்கமைந்திருக்கின்றன.

பொதுவாக, விளக்கத்துக்

கேதுவான எந்தக் கட்டுரையும்

'முகப்பு',

கருத்து','முடிப்பு' என மூன்று பகுதிகள் உள்ளனவாய் அமைவது இயல்பு.

DD

ம் கலித்தொகை

மாட்சி

ந கருத்தைப் பற்றிப் பேச விரும்புவோன், அக் கருத்தைக் கூறுமுன் தலில் அதற்கியைபான சிலவற்றைப் பேசித் தோற்றுவாய்செய்துகொள் ன்றான். அத் தோற்றுவாய்ப் பேச்சிலேயே, மேல் அவன் கூறவிருக்குங் ருத்து

இன்னதுதான் என்று ஓரளவில்
தெரிந்துகொள்ளும்படி, அக் ருத்தின்
குறிப்புக்கள் சில அமைந்திருக்கும்.
அப்படி அமையாவிட்டால், மேலே
சொல்லப்போகும் பகுதிக்கும் இதற்கும்
ஓர் இயைபில்லாமற் போய்,
றுப்பென்னும் பெயர்க்காரணமும்
பொருந்தாதாய்க், கேட்போனுணர் ஞ்
சொல்வோனுணர்வும் ஒருமுகப்படாது
வேறு வேறு முகமாய்த்
தொடர்பின்றிச் சென்று முடிவிற் பயன்
கெடும். ஆதலால் இத் தோற்று

ாய்ப் பகுதி மேற் கூறியவாறு, பின் வருங் கருத்தின் குறிப்புகளோடு
வற்றுக் கியைபான வேறு சிலவும் வாய்ந்து செவ்வையாய் அமைவது இன்
யமையாததாகும். இங்ஙனம் அமையும் இம் முதற் பகுதி 'முகப்பு' என்
ும் பகுதியில் அடங்கும். இது, முதலில் தாப்படுவதாதலின் செய்யுள்
லோர் இதனைத் 'தரவு' எனக் கூறினர்.

இதற்கு அடுத்தபடி 'கருத்துப்' பகுதி வெளிப்படும். பேசுவோன் தான் பேச விரும்பிய கருத்துக்களை இப் பகுதியிற் கேட்போன் மனங் கொள்ளுமாறு ஒரு முறைக்கு மும்முறை தெளிய விளக்கி மிகத் திறமாகக் கட்டுரைப்பது முறையாகும். கட்டுரையில் இப் பாகமே கருவெனத் தக்க அருமைப்பாடுள்ளது. கேட்போனுள்ளந் தான் கூறுங் கருத்தின் வயமாகி அதன்கண் தாழுமாறு கிளர்ந்திசைப்பதாகலின் இப் பகுதி 'தாழிசை' யெனப் பட்டது.* "வயமாகும்படி கலித்தொலிக்குந் துள்ள லோசை' யென்பது அதன் பொருள். ஒருவன் தான் சொல்லுங் கருத்தைக் கிளர்ச்சியோடு எதிரிருப்போனுக்குத் தெளிவாய்த் தெரியும்படி உரத்து ஒரு முறைப் படுத்து இனிப்பக் கூறும் பேச்சொலியே அவனை நன்கு வயப்படுத்தும். இங்ஙனம் எழுச்சியோடு இசைத்தலே 'துள்ள லிசை' யென முன்னும் வந்தது. ஆகவே இத்துள்ள லிசையாகிய கலியிசை இங்ஙனம் பிறரை வயப்படுத்தித் தன்கண் தாழவைக்கும் இசையாமாறு நன்கு தெரிந்துகொள்ளப்படும். இக் கருத்தாற் பேராசிரியரும், "தாழிசை யென்பது தானுடைய துள்ள லோசைத்தாம்'' (தொல். செய்: கூ௯-உரை) என்றார்.* எனவே இக் 'கருத்துப்' பகுதி 'தாழிசை' யென்னும் பெயராற் கூறப்படுவது எவ்வளவு பொருட் கரு வுள்ளதாயிருக்கின்றது கருதுமின்! மேலுங், கருத்துப் பகுதி யாகிய இத் தாழிசைப் பகுதி இக் கலிப்பாப் பகுதிகளிற் கருவெனத் தக்க

---

* 'தாழும்பட்ட ஓசை' யென்பதும், கேட்பாருள்ளத்தைத் தன் வயமாய்த் தாழ வைத்தற்குரிய அவ்வியல்பினதான ஓசை யென்னும் பொருட்டாம். எழுந்தெழுந்து தாழ்ந்து சீரலைபோற் சரிந்தியலும் இசை யென்ப சொல்...

கலித்தொகை மாட்சி.

உ

முதன்மையுடையதாகலின் இதன் பெயராலேயே இக் கலிப்பா 'ஒத்தாழிசைக் கலி' யெனப்பட்ட தென்பதும் நினைவுகூரற்பாலது. கருத்துக்களை ஒரு முறைக்கு மும்முறை தெளிய விளக்குதற்கு இத் தாழிசைகள் தம்மில் ஒத்து மூன்றாய் வருதலின் (செய். கசஉ) இவை 'ஒத்தாழிசை' யெனப்ப(மென்பது ஆசிரியர் கருத்து. 'ஒத்த தாழிசை' யென்பது ஒருசொற்றன்மை யாய் வழங்கும் வகையில் 'ஒத்தாழிசை' யென்று முடிந்ததெனக் கொள் வது நன்கு பொருந்தும்.

இனி, இக் கருத்து விளக்கம் ஆன பின், இதன் பிழிவாக இன்னது நடைபெறவேண்டும் என முடித்துக் காட்டுவது இறுதிப் பகுதியால 'முடிப்பு' ஆகும். முதலில் தோற்றுவாய் செய்த கருத்து இம் முடிப்புட் பகுதியில் வந்து சரிந்து முடியுந் தகவுடையதாகலின் இது 'சரிதகம் எனப் பெயர் பெற்றது.

இனி, நடுப்பகுதியான கருத்து விளக்கம் ஆனபின் அவ் விளக்கங் காரணமாகவே இவ் விறுதிப் பகுதியின் பயன் நிறைவேற வேண்டுமாகலின் அக் காரணந்

தோன்ற, அவ்விரண்டையும் இணைப்பது போன்றதொரு 'தனிச்சொல்'லும் இக் கலிப்பாக்களில் அமைவதாயிற்று. முதலில் தரவுப் பகுதியிற் குறிப்பாகத் தோன்றிப் பின் தாழிசைகளில் தெளிவாக விளக்கப்பட்ட கருத்துக்கள் இத் தனிச்சொல்லின் வழியாகச் சாறுபோற் பிழிந்திறுகி இறுதிப் பகுதியான சுரிதகத்திற் பயன்தோற்றி நின்ற இயல்பு இவ் வாற்றால் இனிது தெளியப்படும்.

ஆகவே, ஒரு செய்யுளின் அமைப்புமுறையே ஒரு

கட்டுரையின் அமைப்புமுறைபோல் இங்ஙனம் அமைந்து நிற்பதாயின், அதனருமை நமதுள்ளத்தை எவ்வளவு கவர்ந்து நிற்கின்றது கருதுமின்கள்!

சொற்சுவை, பொருட்சுவை, இசைச்சுவை, எனை இலக்கியச் சுவை முதலிய இத்தகைய நற்சுவைகளெல்லாம் ஒருங்கு வாய்ந்து திகழ்வதுதான் நூற்றைம்பது இன் கலிச் செய்யுட்களாலான, கற்றறிந்தாரேத்தும் இக் கலித் தொகையென்னும் பொன்னூச் செந்தமிழ் அமிழ்தம் என்க.

தமிழ் மக்கள் இத்தகைய அரிய பெரிய ஆரமுதத்தை

இனித நுகர்ந்து இன்புறுகவென்றுங் குழைந்த இரக்கத்தால் நமக்கு ஒரு நிரல்

படக் கோத்துதவிய பெரியார் ஆசிரியர் நல்லந்துவனாராவர். கலித்தொகை யின் ஐந்து பகுதிகளில் 'நெய்தற் கலி' யென்பதும் ஒன்று. அதனை இவ்

வாசிரியர் பெருமானே இயற்றிச் சேர்த்திருக்கின்றார். "கல்வி வலார் கண்ட கலி" யெனவும் போற்றப்படும் இச் சுவை மலிந்த நூலைத் தாங் கோத்து வழங்குதற்கு மேற்கொண்ட அருமை ஒன்றேயும் ஆசிரியர் நல் உகா

கலித்தொகை மாட்சி

லந்துவனாரின் பெருமையைப் புலப்படுத்தப் போதும். உரையாசிரியர்

நச்சி ஞர்க்கினியருந் தம் வாய்மொழியினலேயே இவ்வாசிரியர் பெருமானது பேரறிவின்றிறத்தை ஓரிடத்தில் (கலி. கசஉ) வெளிப்படுத்தி மகிழ்ந்தார். இவர் பெருமை, 'அந்துவஞர்' என்னும் அவர் இயற்பெயர்முன் அக்கால வழக்கப்படி ' நல் ' என்னும் நன்மைப்பட்டமுஞ் சேர்த்து முன்ஞேர் ' நல் லந்துவஞர் ' எனச் சிறப்ப வழங்கி வந்தமையாலுந் தெளிவாம். இயற் பெயரின் முதலெழுத்து உயிரெழுத்தாகவேனும் அல்லது அதனியல் போடிசைந்த மெல்லின இடையின

எழுத்தாகவேனுமிருந்தால், 'நல்' எனவும், அங்ஙனமன்றி அம் முதலெழுத்து வல்லின மெய்யாயிருந்தால் லகரவொற்றுக்கெட்டு 'ந' எனவும் இயைந்து வழங்குவது மரபாயிருந்தது.

சோழன் நல்லுருத்திரன், நல்லெழினியார், நல்லிறையனார், நல்லழிசியார், நல்லச்சுதனார், நன்னாகனார், நல்வழுதியார் எனவும், நக்கீரனார், நச்செள்ளையார், நத்தத்தனார், நப்பண்ணனார் எனவு மெல்லாம் வரும் பழம் பெயர்களால் இவ் வழக்குண்மை தெரிந்துகொள்ளப்படும். ஆகவே அத்துணைச் சிறப்புப் பெயர் பெற்றுத் தம் மாட்சிமை தோன்ற நிலவிய நல்லந்துவனாரே மக்கள் சுவைத்தின்புறுதல் கருதிக் குழைந்த அருளோடு இவ் வின்சுவைக் கலியைக் கோத்து வழங்கியிருத்தலின், அப் பேரருளாளர் எண்ணம் நிறைவெய்துமாறு, தமிழ்மக்கள் இக் கலித் தொகையை மேன்மேலும் நன்கு பயின்று நலம் பெறற்பாலார். சிறந்த ஆராய்ச்சி நூல்கள் சில எழுதுவித்தால் இக் கலி நூல் பலதுறைப் பொருட் குறிப்புக்களாலும் மேன்மேல் விளக்கம் மிக்குத் தமிழ்மக்கட்கும் பிறர்க்கும் நல்ல ஆக்கந் தரும்.

தமிழமலை,
திருவள்ளுவர் ஆண்டு
௧௯௬௯, ஆடி, ௫.
20-7-'38

இளவழகன்.

நூலாசிரியர்கள் வரலாற்றுச் சுருக்கம்

க. சேரமான்

பாலைபாடிய

பெருங்கடுங்கோ

கலித்தொகையின் முதற்பகுதியாகிய பாலைக்கலியிலுள்ள கூடு பாடல்களையும் பாடினர் பெருங்கடுங்கோ என்பார். இவர் சிறந்த இப் பாலைக்கலியைப் பாடியமையினாலேயே, பாலைபாடிய பெருங் கடுங்கோ என்று அடைகொடுத் தழைக்கப்பெற்றார். "சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோவைப் பேய்மகள் இளவெயினி பாடி யது" என்று புறநானூறு கக-ஆம் செய்யு ளடிக்குறிப்பிற் காணப் படுவதுகொண்டு இவர் சேரர்மரபினர் என்று ஊகிக்கப்படும். இவர் கொடையிலும், வீரத்திலும், தமிழ்ப் புலமையிலுஞ் சிறந்த வொரு செந்தமிழ்ப் புரவலர். நற்றிணையென்னுந் தொகைநூலுட் பத்தும், குறுந்தொகை யென்னும் மற்றொரு தொகையிற் பத்தும், அக நானூற்றுத் தொகையிற் பன்னிரண்டும் ஆக முப்பத்திரண்டு செய் யுள்கள் இவர் பாடியனவாகக் காணக் கிடக்கின்றன. அறநூல், மரநூல், விலங்குநூல் முதலிய பல நூற்றுறைகளிலும், இசை நுணுக்கம் ஓவியம் முதலிய நுண்கலைத்துறைகளிலும் வல்லார் இவர் என்பது இவர் பாடியுள்ள செய்யுட்களிலிருந்து இனிது பெறப்படும்.

உ.

கபிலர்

இரண்டாம் பகுதியாகிய குறிஞ்சிக்கலியிலுள்ள உகூ செய்யுட் களையு மியற்றினர், "வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க்" கபிலர். இவர் திருவாரூரிற் பிறந்தவரென்று ஒரு சாராரும், திருவாதவூரிற் பிறந்தவர் என்று மற்றொரு சாராரும் கூறுவர். இவர் புலனழுக்கற்ற அந்தணாளர். சொற்சுவையும் பொருட்சுவையும் செறிந்திசைய இவர் செய்யுட் செய்யுந் திறமை வாய்ந்திருந்தாராதலின் நல்லிசைக் கபிலர் என்றே அழைக்கப்பட்டுப் பொய்யில் புலவருட் சிறந்த புலவராய் விளங்கிவந்தார். இவர் பாடிய செய்யுட்கள் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் பத்துடனெட்டெனப் பயில்கீழ் கணக்குமா

முத்திற நூலினும்"

அமைந்துள்ளன. இவர் இயல் இசை நாடகம்

என்ற மூன்று தமிழ்ப் பெரும் பிரிவுகளிலும் வல்லார் என்பது "முத்தமிழ்க் கபிலர்" என்ற தொடரா லுய்த்துணரப்படும். இவர்

கடையெழு வள்ளல்களில் ஐவரைப் புகழ்ந்து பாடியுள்ளார். எனினும், அவருட் டலைசிறந்திருந்த வேள் பாரியின் உயிர்நண்பரும் அவைப் புலவருமாக இவர் விளங்கிவந்தார் என்பது செய்யுட் சான்று.

வேள் பாரி இறந்த பின்னர் அவன்மகளி ரிருவருக்கும் மண முடிக்க இவர் எடுத்துக்கொண்ட பெரு முயர்சி தனிப் பெருஞ் சிறப் புடைய தொன்றாகும். "கபில பரணர்" என்று வழங்கும் தொடர் கொண்டு இவர் பரணர் என்ற

மாபெரும் புலவருடன் பிரியா நட்பு வாய்ந்தவர் என்பதும் பெறப்படும். குறிஞ்சிப் பாட்டும், ஐங்குறு நூற்றில் குறிஞ்சிநூறும், பதிற்றுப் பத்தில் ஏழாம் பத்தும், இன்னா நாற்பதும் இவாருளிய பிற செய்யுட்களாம். இதுகாறும் கிடைத்த செய்யுட்களில் இவர் பாடியனவாகக் காணக் கிட ப்பன உஎஅ செய் யுட்களாம். உலகம் உள்ளளவும் இவ்வாசிரியர் பெயர் அழியாது நின்று நிலவும் என்பது உறுதி.

௫. மருதனிளநாகனார்

மூன்றும் பகுதியாகிய மருதக்கலியிலுள்ள ௩௫ பாடல்களையும் பாடினார் இளநாகனார் என்பார். நாகனென்ற பெயர்கொண்ட புலவர்கள் பலரும், இளநாகன் என்ற பெயர்கொண்ட புலவர்கள் வேறு சிலரும் இருந்தமையால் இவர் மருதனிளநாகன் என்றும், மதுரை மருதனிளநாகன் என்றும் அழைக்கப்பட்டனர்போலும்! மருதன் என்பது இவர் தந்தையாரைக் குறித்ததென்று ஒரு சாராரும், இவர் மருதக்கலியைப் பாடியதனால் அடையாகக் கொடுக்கப் பெற்றதென்று மற்றொரு சாராரும் கூறுவர். இவர் ஊர் மதுரை என்பதும், இவர் இறையனாரகப்பொருள் என்ற நூலுக்கு நல்லுரை யியற்றினருள் ஒருவர் என்பதும், இறையனாரகப் பொருள் முதற் சூத்திர உரையிலிருந்து பெறப்படும். நற்றிணையிற் ௧௨ செய்யுட்களும், குறுந்தொகையில் ௪-ம், புறநானூற்றில் ௫-ம், அகநானூற்றில் ௨௫-ம் இவர்பாடிய பிறசெய்யுட்களாம். இவர் பாடல்களிலிருந்து இவர் சைவ சமயப்பற்று மிகுந்தவரென்றும், அகத்திணை புறத்திணைக் கருத்துக்களை அழகுறப்புனைந்து பாடும் ஆற்றல் மிக்கவர் என்பதும் எளிதில் உய்த்துணரப்படும்; மேலும், இளம்பிள்ளைகளுக்கு ஊம்

படைத்தாலியேயன்றி ஆனேற்

றிலச்சினை யணிதல்,

உள்ளிவிழாவிற் கொங்கர் இடுப்பில்

மணிகள் கட்டிக்கொண்டு

தெருவினில் ஆடுதல், மதுரைமா

நகரத்தெருக்கள் நாடோறும்

அலகுகொண்டு தூற்றித்

துப்புரவு செய்யப்படுதல்போன்ற அரியபல செய்திகளும் இவர் பாடல்களால் காணக் கிடக்கின்றன. பாண்டியன் இலவந்திகைப்

பள்ளித் துஞ்சிய நன்

மாறனையும், பாண்டியன்

கூடகாரத்துத்

துஞ்சிய மாறன் வழுதியையும், நாஞ்சில் வள்ளுவனையும் இவர் பாடியுள்ளார். தாம் பாடியுள்ள அகநானூற்றுப் பாடல்களுளொன்றில் (அகம். ருகூ) கலித்தொகை நூலைத் தொகுத்தருளிய ஆசிரியர் நல்லந்துவனாரைத் "தண் பரங்குன்றத் தந்துவன் பாடிய" என்று குறிப்பிட்டு அவர்பால் தமக்கிருந்த நன்மதிப்பை இவர் புலப்படுத்தியுள்ளார்.

௪. சோழன் நல்லுருத்திரன்

நான்காம் பகுதியாகிய முல்லைக் கலியிலுள்ள கஎ பாடல்களையு

மியற்றினர் உருத்திரன் என்பார். புறநானூற்றின் ககூ0-ஆம் பாட்டின் அடிக்குறிப்பில், பாடினோர்பெயர் கூறுமிடத்து, "சோழன் நல்லுருத்திரன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளமையால், இவர் சோழர்குடியில் வந்தவர் என்பதும், புலமை சான்ற பெரியார் என்பதும் இனிதுணரப்படும். முல்லைநிலச் சிறப்பியல்புகளையும், பழக்க வழக்கங்களையும் இவர் எடுத்து விளக்கியுள்ள அளவுக்குப் பிறபுலவர்கள் எடுத்துக் கூறவில்லை யென்றே கூறலாம். சோழர் குடிவந்தும் இவர் பாண்டிநாட்டையே பலபடப் புகழ்ந்து பாடியுள்ளார். சாமுத்திரிகம், நிமித்தம் போன்ற நூற்றுறைகளிலும் இவருக்குப் பயிற்சியுண்டென்பது இவர்தம் செய்யுட்களால் விளங்கும்.

நல்லந்துவனார்

ஐந்தாம் பகுதியாகிய
நெய்தற்கலியின் ருரு
பாடல்களையும்
பாடிமுடித்தார் அந்துவனார் என்பார்.
மதுரையாசிரியர் நல்லந்துவனாரென்றும்
நல்லந்துவனார் என்றும்,
இவர் பெயர் குறிக்கப்
பட்டுள்ளதிலிருந்து இவர்
அக்காலத்தாரால் நன்கு
மதிக்கப்பட்டு வந்துள்ளார்
என்பது தெளியப்படும். (இவர்

பெயர் நல்லந்துவனு ரன்று,
நவ்வந்துவனுர்
என்று பதிப்பாசிரியர் இ. வை.
அனந்தராமைய ரவர்கள் வாதிப்பர்.)
இவர் பிறந்த ஊர் மதுரை.

மருதக்கலி பாடிய நூலாசிரியர்கள் வரலாற்றுச் சுருக்கம்

மருதனிளநாகனுர் அகநானூற்றுப் பாடல்களுளொன்றில் இவரைப் பெயர் குறித்துப் பாடியமை முன்னர்க் காட்டப்பட்டது. இவரே முதல்நான்கு கலிகளையும் ஒருங்கு தொகுத்து, ஐந்தாங்கலியாகிய நெய்தற்கலியையும், கடவுள்வாழ்த்துச் செய்யுளையும் பாடிச் சேர்த்துக் கலித்தொகை என்ற தொகைநூ லாக்கினர்.

"நாடும் பொருள்சான்ற நல்லந் துவனுசான்
சூடுபிறைச் சொக்கன் றுணைப்புலவோர்—தேடுவார்
கூட்டுணவே வாழ்த்தோடு தொங்காங் கலியினையே

கூட்டினன்

ஞாலத்தோர்க் கு"

என்பதனல் இது தெளியப்படும்.

இவர் இந்நூலைத் தொகுக்குங்காற்

பாலைமுதலா நெய்தலீரு

விப்பொழுது காணப்படும்

முறையிலேயே

இந்நூலைத் தொகுத்தாரென்பது,

" போக்கெல்லாம் பாலை

புணர்த லறுங்குறிஞ்சி

யாக்கமளி யூட

லணிமருத—நோக்கொன்றி

யில்லிருத்தன் முல்லை
யிரங்கியபோக் கேர்செய்தல்
புல்லுங் கலிமுறை
கோப்பு"

என்ற வெண்பாவால் அறியப்படும். செய்தனிலப் பழக்க வழக்கங் கள் பலவற்றையும், வைதிக வொழுக்கங்கள் சிலவற்றையும் இவர் தம் செய்தற்கலியுள் நன்கெடுத்து விளக்கியுள்ளார். உலக மாந்தர்க்கு நன்னெறி காட்டும் அறிவுற வுரைகள் இவர் பாடிய

காணப்படுகின்றமை இவர்தம் ஒழுக்கச் சிறப்பையும் கல்வியின் மேன்மையையும் புலப்படுத்துவதாகும். நற்றிணையில் ஒரு செய்யுளும், பரிபாடல் முதலிருபத்திரண்டு செய்யுட்களுள் நான்கும், அகநானூற்றில் ஒரு செய்யுளும் இவரியற்றிய பிற செய்யுட்களாம்.

"பெருங்கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி
மருதனிள நாகன் மருத—மருஞ்சோழ
னல்லுத் திரன்முல்லை நல்லந் துவனெய்தல்
கல்விவலார் கண்ட கலி"

உரையாசிரியர் வரலாற்றுச் சருக்கம்

நச்சினார்க்கினியர்

பல்லாற்ருனுஞ் சிறந்த
கலித்தொகைக்கு ஒப்பரிய
நல்லுரை கண்டார்,

" தண்டமிழ் தெரித்த
வண்புகழ் மறையோன்
வண்டிமிர் சோலை மதுரா
புரிதனில்
எண்டிசை விளங்க வந்த
வாசான்

பயின்ற கேள்விப் பாரத்
துவாசன்
நான்மறை துணிந்த
நற்பொரு ளாகிய
தூய ஞான நிறைந்த
சிவச்சுடர்
தானே யாகிய தன்மை
யாளன்
நவின்ற வாய்மை நச்சினார்க்
கினியன்"
என்பது இந்நூலின் உரைச்
சிறப்புப் பாயிரத்தால் நன்கு
விளங்கும். இதனால் உரையாசிரியர்
மதுரையம்பதியில்

பாரத்துவாசர்குடியில்
அந்தணர்மரபிற் பிறந்தவர்
என்பதும், தமிழ்மொழி
வடமொழி இரண்டிலும் நன்கு
பயின்று கல்வி கேள்வி முற்றிய
பேரறிவாளர் என்பதும்,
சைவசமயத்தவர் என்பதும்
போதரும். காலத்தால் இவர்
இளம்பூரணர், பேராசிரியர்,
சேனாவரையர், ஆளவந்தபிள்ளை
யாசிரியர், பரிமேலழகர் முதலிய
உரையாசிரியர்க்குப் பிற்பட்டவர்.

" பாரத்தொல் காப்பியமும்

பத்துப்பாட் டுங்கலியும்

ஆரக் குறுந்தொகையு

ளைஞ்ஞான்கும்—சாரத்

திருத்தகு மாமுனிசெய்

சிந்தா மணியும்

விருத்திநச்சி னார்க்கினிய

மே"

என்னும் செய்யுளால் இவர் தொல்காப்பியம், பத்துப் பாட்டு, கலித் தொகை, குறுந்தொகையில் இருபது செய்யுட்கள், சீவகசிந்தாமணி என்பனவற்றிற்குச் சிறந்த உரைகளியற்றியுள்ளார் என்பது தெரிய வரும். இவர் ஒரு

நூலுக்கு உரைகூறப் புகுமுன் அந்நூலின் காலம், நூலாசிரியர் சமயம், உள்ளப்பான்மை, நூற்போக்கு முதலியவற்றைப் பெரிதும் முயன்று உழைத்து அறிந்து தெளிந்த பின்னரே உரை யெழுதுவார்; தம்முரையிற் பழைய செய்யுட்களையோ உரைப்பகுதி

EE

௩௨. உரையாசிரியர் வரலாற்றுச் சுருக்கம்

களையோ அவ்வப்படியே

எடுத்தாளும் இயல்புடையர்;

எனினும்,

அம்மேற்கோள்களுக்குரிய நூற்பெயரையோ நூலாசிரியர் பெயரை யோ இவர் பெரும்பாலும் குறித்துச் செல்வதில்லை. கலித்தொகைக்கு இவர் வகுத்த உரையின் சிறப்பு,

"ஒலித்திரைத் தலத்தி
னுணர்ந்தோ ருரைக்கும்
கலித்தொகைக் கருத்தினைக்
காட்சியிற் கண்டதற்
குள்ளுறை யுவமமு மேனை
யுவமமும்
தெள்ளிதிற் றெரிந்து

திணைப்பொருட் கேற்ப
உள்ளுறை யுவமத்
தொளித்த பொருளைக்
கொள்பவர் கொள்ளக்
குறிப்பறிந் துணர்த்தி
இறைச்சிப் பொருளுக்
கெய்தும் வகையைத்
திறப்படத் தெரிந்து
சீர்பெறக் கொளீஇத்
துறைப்படு பொருளொடு
சொற்பொருள் விளக்கி
முறைப்பட வினையை
முடித்துக் காட்டிப்
பாட்டிடை மெய்ப்பாடு
பாங்குறத் தெரித்துப்

பாற்பட நூலின் யாப்புற

வுரைத்த

நாற்பெயர் பெயரா நடப்பக்

கிடத்திப்

போற்ற வின்னுரை

பொருள் பெற"

விளம்பியுள்ளார் என்று உரைச்சிறப்புப் பாயிரத்திற் கூறப்பட்டிருப்பது கொண்டு இனிது புலனாகும். இவ்வாறு பண்டைப் பனுவல்கள் பல இறவாது நிலவ உரை யெழுதியீந்து உலகோர்க்குப் பேருதவி புரிந்த பெருங்கொடையாளர் நச்சினார்க்கினியர்; அவர் புகழ் எப்போது இறவாதும் ஒளிர்வதாக!

மேற்கோள் நூற்பெயரகராதியும் சுருக்கமும்

(இறை., இறைய.)

4. இன்னா நாற்பது (இன்னா.) 24.

5. ஐங்குறுநூறு (ஐங்., ஐங்குறு.) 25.

6. ஐந்திணை யெழுபது (ஐந். எழு.) 26.

7. ஐந்திணையைம்பது (ஐந். ஐம்.) 27.

8. கல்லாடம் (கல்.) 28.

9. கலித்தொகை (கலி.)

10. களவழி நாற்பது (களவழி.) 29.

11. குறிஞ்சிப்பாட்டு (குறிஞ்சி.) 30.

12. குறுந்தொகை (குறுந்).

13. சிலப்பதிகாரம் (சிலப்.) 31.

14. சிறுபஞ்சமூலம் (சிறுபஞ்.) 32.

15. சீவகசிந்தாமணி (சீவக., சீவகசிந்.) 33.

16. சேந்தன் திவாகரம். 34.

17. திணைமாலை நூற்றைம்பது
(திணைமாலை.) 35.
18. திருக்குறள் (குறள்.)
36.
19. திருச்சிற்றம்பலக் கோவையார் 37.
(கோவையார்.)
38.
20. திருமுருகாற்றுப்படை 39.
(முருகு.) 40.
21. தொல்காப்பியம்: எழுத்ததி 41.
காரம் (தொல். எழுத்து.)

தொல்காப்பியம் : சொல்லதிகாரம் (தொல். சொல்.)
தொல்காப்பியம் : பொருளதிகாரம் (தொல். பொருள்.)
நற்றிணை (நற்)
நாலடியார் (நாலடி.)
நான்மணிக்கடிகை (நான்மணி.)
பட்டினப்பாலை (பட்.)
பதிற்றுப்பத்து (பதிற்., பதிற்று.)

பரிபாடல் (பரி.)
பழமொழி நானூறு (பழமொழி., பழ.)
புறநானூறு (புறம்.)
புறப்பொருள் வெண்பாமாலை (பு.வெ.மாலை., புறப்.வெண்.)
பெருங்கதை (பெருங்.)
பெரும்பாணாற்றுப்படை (பெரும்பாண்.)
பொருநராற்றுப்படை (பொருந.)

மணிமேகலை (மணி., மணிமே.)
மதுரைக்காஞ்சி (மதுரை.)

மலைபடுகடாம் (மலை., மலைபடு.)
முத்தொள்ளாயிரம்
முல்லைப்பாட்டு (முல்லை.)
யாப்பருங்கலக்காரிகை
(யா. கா.)

திருச்சிற்றம்பலம்

கலித்தொகை

நச்சினார்க்கினியருரை

கடவுள் வாழ்த்து

க.

ஆறறி யந்தணர்க் கருமறை பலபகர்ந்து

தேறுநீர் சடைக்கரந்து திரிபுரந் தீமடுத்துக்
கூறுமற் குறித்ததன்மேற் செல்லுங் கடுங்கூளி
மாறுப்போர் மணிமிடற்
றெண்கையாய் கேளினி ;

ரு. படுபறை பலவியம்பப்
பல்லுருவம் பெயர்த்துநீ
கொடுகொட்டி யாடுங்காற்
கோடுய ரகல்குறிக்[1]

கொடிபுரை நுசுப்பினாள்
கொண்டசீர் தருவாளோ ;
மண்டமர் பலகடந்து மதுகையா
னீறணிந்து
பண்டரங்க மாடுங்காற்
பணையெழி லணைமென்றோள்
வண்டரற்றுங் கூந்தலாள்
வளர்தூக்குத் தருவாளோ ;
கொலையுழுவைத்
தோலசைஇக் கொன்றைத்தார்
சுவற்புரளத்
தலையங்கை கொண்டுநீ
காபால மாடுங்கால்
முலையணிந்த முறுவலாள்

முற்பாணி தருவாளோ ;

எனவாங்கு, கரு.

பாணியுந் தூக்குஞ் சீரு

மென்றிவை

மாணிழை யரிவை காப்ப

வாணமில் பொருளெமக்

கமர்ந்தனை யாடி.

(பாடம்) 1. அகலல்குல்,

கலித்தொகை

என்பது, "வாழ்த்தியல் வகையே

நாற்பாற்கு[1] முரித்தே"* என்றதன்கள்

வகையென்றதனாற் கொண்ட

அறமுறை† வாழ்த்தன்றித் தனக்குப்

பய

படும்படி முன்னிலையாகக்

கடவுள வாழ்த்துதலிற்

கடவுள்வாழ்த்,

எனப் பெயர்பெற்றது.

(க—ஃ) ஆறறி . . . .

கேளினி:—

(இதன் பொருள்.) ஆறு அங்கத்தையும் அறியும் அந்தணர்க்கு அரிட வாகிய வேதங்கள் பலவற்றையும் அருளிச்செய்து, பகையென்று தெளிகின், கங்கையின் வேகத்தைச் சடையில் ஒரு கூற்றிலே அடக்கி, முப்புரத்திலே தீயைச் செலுத்தி, வாக்காற் கூறப்படாமல், மனத்தாற் குறித்த அட பொருட்கும் எட்டாமல் நிற்குங்

கடிதாகிய கூளியினது முதுகிடாதபோரினை யும் நீலமணிபோலுந் திருமிடற்றினையும் எட்டுக் கையினையும் உடையாய், இ கனங் கட்புலனாய் நின்று இப்பொழுது

யான் கூறுகின்ற தொன்மைக் கேள்

'பகர்ந்து' 'கரந்து' 'மடுத்து' என்னுஞ் செய்தெனெச்சங்கள் செல்லும் என்னும் பெயரெச்சத்தோடு முடிந்து, அஃது 'எண்கையாய்' என்னுங் குறிப்புப் பெயரோடு முடிந்தது.

இது திருமேனிகொண்டு நின்றாயினும் வாக்குக்கும் மனத்துக்கும் எட்டா யென்றது.

அவ்வேதந்தனைக் கொண்டே ஆறங்கங்களையும் அறிய வல்லாரென்பது தோன்ற 'ஆறறியந்தணர்' என்றார். அந்தத்தை அணவுவார் அந்தணர் என்றது, வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பாரென்றவாறு.

ஆறு என்னும் வரையறைப் பண்புப்பெயர் அப்பண்பினையுடைய அங்கத்தை[2] உணர்த்திநின்ற ஆகுபெயர். அது "களந்தவல்ல" ‡ என்பதனுட் கூறினும்.

ஆறங்கமாவன: உலகியற் சொல்லை ஒழித்து வைதிகச் சொல்லை ஆராயும் நிருத்தமும், அவ்விரண்டையும் உடனாராய்ந்த ஐந்திரத் தொடக்கத்து வியாகரணமும், போதாயனீயம் பாரத்துவாசம் பரமார்த்தம் பரமாத்திரையம் முதலிய கற்பங்களும், நாராயணீயம் வராகம் முதலிய கணிதமும், எழுத்தாராய்ச்சியாகிய பிரமமுஞ், செய்யுளிலக்கணமாகிய சந்தமுமாம்.

மறையாவன: தைத்திரியமும் பௌடியமுந்[3] தலவகாரமுஞ் சாமவேதமுமாம். இனி, வேதவியாதர் வரையறைப்படுத்திய காலத்து ஓதுகின்ற நான்கு வேதமுமாம்.

---

* தொல்காப்பியம், பொருள் - ககக. † முனிவரும், பார்ப்பாரும், ஆனிரையும், மழையும், முடியுடை வேந்தரும், உலகும் என்பனவற்றை வாழ்த்துதல்.

‡ தொல். சொல் - ககஎ.

(பாடம்) 1. நாற்பாக்கு. 2. வாதத்தை. 3. [illegible]

'இனி' யென்றது, 'இனி நினைந்து இரக்கமாகின்றே'* னென்றாற்போல இப்பொழுது என்னும் பொருள் தந்தது.

(ரு—எ) படுபறை . .
. . சீர் தருவாளோ:—

(இ - ள்.) நின்கையில் ஒலிக்கின்ற பறை பலவாச்சியங்களையும் ஒலியா நிற்கக், கட்புலனுய்ப் பல வடிவுகளையும் மீண்டு நின்னிடத்தே ஒடுக்கிக் கொண்டு, கொடிதாகிய கொட்டி†யென்னுங் கூத்தை நீ ஆடுகின்றகாலத்துப், பக்கம் உயர்ந்த அகன்ற குறியினையுடைய கொடியையொத்த இடையினை யுடையாளோ தாள முடிந்துவிடுங் காலத்தினைத் தன்னிடத்தே கொண்ட சீரைத் தருவாள்? ஆண்டுப் பிறரில்லையே.

கொடுங்கொட்டி, கொடுகொட்டி என

விகாரமாயிற்று. கொடுங்
கொட்டியென்றார் எல்லாவற்றையும்
அழித்துநின்று ஆடுதலின்.

"கொட்டி யாடற் கேற்ற
மொட்டிய - வுமையவ ளொருபா
லாக வொருபா - லிமையா நாட்டத்
திறைவ ஞகி - யமையா வுட்கும்
வியப்பும் விழைவும் - பொலிவும்
பொருந்த நோக்கிய தொக்க -
வவுண ரின்னுயி ரிழப்ப வக்களம் -
பொலிய வாடின னென்ப மற்றதன் -
விருத்தங் காத்தற்[1] பொருளொடு
கூடிப் - பொருத்த வருஉம்
பொருந்திய பாட - றிருத்தகு மரபிற்
றெய்வத் துதிப்பே." இதனுன்

உணர்க.

(அ—கO) மண்டமர் . . .
. தூக்குத்தருவாளோ :—

(இ - ள்.) மிக்குச்செல்கின்ற போர்களிற் பலவாகிய முப்புரங்களை வென்று, அந்த வலியாலே அவர்கள் வெந்து வீழ்ந்த நீற்றை[2] அணிகையினாலே 'பாண்டரங்க'‡மென்னும் பெயர்பெற்ற கூத்தை நீ ஆடுகின்றகாலத்து, மூங்கிலினது அழகையுடைத்தாகிய, அணைபோன்ற மெல்லியவாகிய தோள்களையுடைய வண்டுகள் ஒலிக்குங் கூந்தலையுடையாளோ

அதனிடை[3] நிகழுங் காலத்து அதனையுடைய[4] தூக்கைத்தருவாள்? ஆண்டுப்பிறரில்லையே.

பாண்டரங்கம், பண்டரங்கமென விகாரமாயிற்று.

"ஏறமர் கடவுண் மூவெயி லெய்வுழிக்' - கூறுகூ றாகக் கொடியொடும் படையொடும் - வேறுவே றுருவின் விண்மிசைப் பரத்தன[5] - ரவ்வழி யொளியொடு முருவொடுந் தோன்றித் - தேர்மு னின்று திசைதலை பனிப் பச் - சுவையுங் குறிப்பு மொழிவில தோன்றி - யவையவை யவ்வழி யாடின

---

* புறம்-உசரு. † சிலப்பதிகாரம் சு: சக. ‡ சிலப்பதிகாரம் சு; சரு.

(பாடம்) 1. விருத்தகாத்தல். 3. காளக்கினிடை.

விருத்திகாத்தல். 2. வெந்தவிந்த நீற்றை. 4. காலத்தினையுடைய. 5. பரங்கன.
சா கமைதுமாது॥
ரை

ஞட - மைந்தரு மகளிருக் தங்கிலே யழிய[1] - மெய்ப்படு சுவையொடு கைப் படை மறப்பக் - கடிய காலக் காற்றென வேற்றவன் - படிநிலை திரியாட் பாண்டரங் கம்மே." இதனுன் உணர்க.

(கக—கரு) கோலையுழவைத் . .
. . பாணிதருவானோ:—

(இ - ள்.)
கொலைத்தொழிலையுடைய புலியைக் கொன்று அதன் தோலை உடுத்துக் கொன்றைப்பூவாற் செய்த மாலை தோளிலே அசைய அயன் தலையை அகங்கையிலே ஏந்துகையினுலே காபாலமென்று பெயர்பெற்ற கூத்தை நீ ஆடுங்காலத்து,

முல்லையையொத்த எயிற்றினையுடையாளோ ஒரு தாளத்தின் முதல் எடுக்கும் காலத்தினையுடைய பாணியைத் தருவாள்? ஆண்டுப் பிறரில்லையே. முல்லை முலையென விகாரமாயிற்று. அணி, உவமவுருபு. ஓகாரம் மூன்றும் எதிர்மறை.

ஒருதாளத்திற்குப் பாணி தூக்குச் சீரென்னும் மூன்றும் உளவேனும் ஒவ்வொன்று ஒவ்வோராடற்கு மிகுதி ? வகையாற் சிறந்தமைபற்றி ஒரோ வொன்றையே கூறினார். தாழிசைகளிற் சீர் தூக்குப் பாணியென நின்றவ வேனும், அவை நிகழும் அடைவுபற்றிச்

சரிதகத்துப் பாணியுந் தூக்குஞ்
சீருமென அடைவு கூறினார்.
இவை மூன்றுந் தாழிசை.

(கச) எனவாங்கு :—

(இ - ள்.) என்று சொல்லும்படியாக.
ஆங்கு அசை; அவர் கூத்தாடுகின்ற காலங்களை யெனினுமாம்.
இது தனிச்சொல்.

(கரு—கள்) பாணியுந் . . . .
யாடி :—

(இ - ள்.) அழித்தற்றொழிலை நிகழ்த்துகின்ற காலங்களிலே, பாணியு தூக்குஞ் சீருமென்று சொல்லப்பட்ட இவையிற்றை மாட்சிமைப்பட்ட அணியினையுடைய உமாதேவி காப்ப ஆடிக், காத்தற்றொழிலை நிகழ்த்துகின் இக்காலத்தே ஒருவடிவைக்கொண்டு நேயம் இல்லாத பொருளாகிய எமக்கு பொருந்தினாய்; இதற்குக் காரணங் கூறுவாயாக.
இது சரிதகம்.

இப்பாட்டுப் பலமெய்ப்பாடுகளுந் தோற்றுவித்து நின்றதேனும் அவை உரைப்பிற் பெருகுமாதலின், முடிந்த பொருளாற் பிறந்த மெய்ப்பாடே கூறுதும்; அது தன்கட் டோன்றிய ஆக்கம்பற்றிய மருட்கையாம்.

(பாடம்) 1. தந்தநிலை பழிய. 2. ஓராடன் மிகுதி.

கடவுள் வாழ்த்து

ரு

இது நான்கு உறுப்பான் வந்ததேனுந், தேவபாணியான் வருதலின், முதனிலையொத்தாழிசை யாகாது. "ஏனையொன்றே, தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே"* என்பதனால், தேவர்ப் பராயிற்றேனும் வண்ணகமு மாகாது; எண்ணுஞ் சின்னமும் இழத்தலின்.

ஆகவின் இஃது எண்ணிடை யிட்டுச் சின்னங்குன்றிய கொச்சகவொருபோ காயிற்று.

சீர்வகைக் கலிக்கு "விராய தளையு மொருஉ நிலையின்றே"† என்பத னாற் தளை விரவிவரப்பெறும் என்றலிற் செல்லுமெனு நேரீற்றியற்சீர் வந்தது; "கலித்தளை யடிவயி னேரீற் றியற்சீர் நிலைக்குரித் தன்றே தெரியு மோர்க்கே"‡ என்ற விதி கட்டளைக்கலிக்காதலின்.

(க)

கடவுள் வாழ்த்து

முற்றும்.

* சொல் - பொருள் - தொடர் † சொல் பொருள் - களை ‡ சொல் பொருள் - குகள

தோற்றுவாய்

"நடுவ ணைந்திணை நடுவண தொழியப் - படுதிரை வையம் பாத்திய பண்பே"* என்றும், "மாயோன் மேய காடுறை யுலகமுஞ் - சேயோன் மேய மைவரை யுலகமும் - வேந்தன் மேய தீம்புன லுலகமும் - வருணன் மேய பெருமண லுலகமு -முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச் - சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"† என்றும், நிலம் நான்கேயாகக் கூறலிற் பாலைக்கு நிலம் இன்றெனின், அற்றன்று.

"புணர்தல் பிரித லிருத்த லிரங்க -

ஊட விவற்றி னிமித்த மென்றிவை -
தேருங் காலைத் திணைக்

குரிப் பொருளே'' ‡ என நால்வகை நிலத்தும் கொண்ட உரிப்பொருட் கிடையே பிரிதலும் உரிப்பொருளாக ஆசிரியர் கொண்டார், அப்பிரிவு நான்கு நிலத்திடையும் பொதுவாய் மயங்கிவருமென்று கருதி. ஆதலான் ஈண்டுப் பாலைத்திணையையுந் திணையாக ஆசிரியர் நல்லந்துவனர் கோத்தாரென்று கூறுக.

ஆயிற் "கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய் - முற்படக் கிளந்த வெழுதிணை யென்ப'' § என்றலிற் கைக்கிளையும் பெருந்திணையுங் கோத்தல் வேண்டுமெனின், அஃது "உரிப்பொரு ளல்லன மயங்கவும் பெறுமே'' ‖ என்பதனுல் அவை உரிப்பொருளன்மையின் நால்வகை நிலத்தினும் மயங்கிவரப் பெறுமென்ருர். ஆகலின், இத்தொகைக்கண்ணும் அவை மயங்கிவரக் கோத்தாரென்றுகூறி விடுக்க. அவை வரவரப் [1] பாட்டுக்கள் வந்துழி அவற்றுட் காட்டுதும்.

இனிச், "சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே'' $ என்றவழிச் சொல்லாத முறையாற் சொல்லவும்படுமென்று பொருள்கொண்டமை பற்றிப் பாலை குறிஞ்சி மருதம் முல்லை நெய்தலெனவுங் கோத்தார். ஐங்குறுநூற்றினும் பிறவற்றினும் வேறுபடக் கோத்தவாறுங் காண்க.

* தொல். பொருள் - உ.
‡ தொல். பொருள் - கசு.
|| தொல். பொருள் - கரு.
(பாடம்) 1. விரவிய.

† தொல். பொருள் - ரு.
§ தொல். பொருள் - க.
$ தொல். பொருள் - ரு.

கலித்

க.

தொகை

பாலைக்கலி
உ.

தொடங்கற்கட் டோன்றிய முதியவன் முதலாக
வடங்காதார் மிடல்சாய வமரர்வந் திரத்தலின்

மடங்கல்போற் சினைஇ

மாயஞ்செ யவுணரைக்

கடந்தடு முன்பொடு

முக்கண்ணான் மூவெயி லுடன்றக்கான் முகம்போல வொண்கதிர் தெறுதலிற்
சீறருங் கணிச்சியோன் சினவலி னவ்வெயி
லேறுபெற் றுதிர்வனபோல் வரைபிளந் தியங்குந
ராறுகெட விலங்கிய வழலவி ராரிடை

மறப்பருங் காத லிவளீண்

டொழிய

க0. விறப்பத் துணிந்தனிர்

கேண்மின்மற் றைஇய ;

தொலேவாகி

யிரந்தோர்க்கொன் றீயாமை

யிளிவென

மலேயிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ
நிலேஇய கற்பினு ணீநீப்பின் வாழாதாண்

முலேயாகம் பிரியாமை

பொருளாயி னல்லதை ;

கரு. இல்லென

விரந்தோர்க்கொன் றீயாமை

யிளிவெனக்

கல்லிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ
தொல்லியல் வழாஅமைத் துணையெனப் புணர்ந்தவள்

புல்லாகம் பிரியாமை

பொருளாயி னல்லதை ;

இடனின்றி

யிரந்தோர்க்கொன் றீயாமை

யிளிவெனக்

உ௦. கடனிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ
வடமீன்போ ரொருதேத்த வயங்கிய கற்பினை

டடமென்றோள் பிரியாமை

பொருளாயி னல்லதை ;

எனவிவள்,

புன்கண்கொண் டினையவும் பொருள்வயி னகற

உரு. லன்பன் றென்றியான்

கூற வன்புற்றுக்

அ
கலித்தொகை
கலி - உ

காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்குத்
தாழ்புநின்
றொல்கவின் றொலைத
லஞ்சியென்
சொல்வரைத் தங்கினர் காத
லோரே.

இது" ஒன்றாத்தமரினும் "* என்னுஞ்
சூத்திரத்து " நாளது சின்மையு மிளமைய
தருமையுந் - தாளாண் பக்கமுந்
தகுதிய தமைதியு - மின்மைய திளிவு

முடைமைய துயர்ச்சியு - மன்பின
தகலமு மகற்சிய தருமையு - மொன்ருட்
பொருள்வயி னூக்கிய பாலினும் ”
என்பதனுள் இன்மையது இளிவுகூற்

இல்வாழ்க்கைநெறி ஆற்றுதற்குப் பொருள்வயிற் பிரிவேனென்ற தலைமகற்
குத், தலைமகளது இயல்பு கூறி, இப்பெற்றியாளைப் பிரியாமையே பொரு

ளாவதெனச் சொல்லிச்
செலவழுங்குவித்தமை தோழி
தலைமகட்கு வந்து
சொல்லியது.

(க—க0) தொடங்கற்கட்

றைஇய:—

(இ - ள்.) இறைவன் உலகுகளைப் படைக்கக் கருதிய இடத்தே,

அப்படைத்தற்றொழிலைச் செய்தற்கு உரியனாய்த்தோன்றிய முதியவனாகிய அயன் முதலாகத் தேவர் வந்து இரக்கையினாலே, தம்மெல்லைகொள்ளாத அவுணருடைய வலியைக் கெடுத்தற்குச், சினத்துக் கூற்றனைப் போலும் வஞ்சனையைச்[1] செய்கின்ற அவுணரை, வஞ்சியாது எதிர்நின்று அடுகின்ற வலியுடனே, மூன்று கண்ணையுடைய இறைவன் மூன்றெயிலையுங் கோபிக்க, அவன்முகந் தெறுமாறு போல, ஒள்ளிய ஞாயிறு சுடுகையினாலே, வரைபிளந்து பிறராற் சேறுதற்கரிய மழுவையுடையோன் சினக்கையினாலே அந்த முப்புரம் அழித்தலைப்பெற்று உதிர்வனபோலப், போவார்க்கு வழியில்லையாக வீழ்ந்து குறுக்கிட்டுக் கிடந்த வெம்மை விளங்குந் தொலையாத வழியிடையே, நின்னை மறத்தலரிதாகிய வேட்கையையுடைய இவள் இவ்விடத்தே இறந்துபடும்படியாக, ஐயனே! பொருள்வயிற் பிரியத் துணிந்தீர்; அங்ஙனந் துணிந்த நீர் யான் கூறுகின்றதனைக் கேட்பீராக.

'கண்' காலத்தின்கண் வந்தது. 'கணிச்சியோன்' சுட்டுப்பெயராய் நின்றது.

அமரர் இரக்கையினாலே முக்கணன் மூவெயிலை உடல, அவன்முகந் தெறுமாறுபோலக் கதிர் தெறுகையினாலே வரைபிளந்து, அவன் சினக்கையினாலே அவ் எயில் எறுபெற்று உதிர்வனபோல உதிர்ந்து விலங்கிய ஆரிடையென்க.

'கேண்மின்' 'ஐய' என்றது ஒருமைப்பன்மை மயக்கம்.

---

* தொல். பொருள் - ௬௧.

(பாடம்) 1. கூற்றினைப்போலச் சினந்து வஞ்சனையைச்.

பாலைக்கலி

சு

கதிர் தெறுதலின் மலைவெம்பிய

சுரம் என்றதனன் நடுவுநிலைத்திணை; சூரிய நண்பகலும் வேனிலுங் குறிஞ்சியைச் சார்ந்து தோன்றினமை கூறினர். "சுரமென மொழிதலும் வரைநிலை யின்றே" * என்பதனல், வழு யருமை கூறினர். இவ்விதிகள் மேல்வருவனவற்றிற்குங் கொள்க.

இது தரவு.

(கக—கச) தொலைவாகி

னல்லதை:—

(இ - ள்.) முன்புண்டான

பொருள்களெல்லாங்
கொடுத்துத்தொலைந்த பின்பு
இல்லையாய், வந்து
இரந்தவர்களுக்குச் சிறிதுங்
கொடாதிருத்தல் இளிவா[1] மென்று
கூறி, மலையைக் கடந்துபோய்த்
தேடுதலைக் கருதின பொருள்†
நன்குமதிக்கும் பொருளாயினும், யான்
வருந்துணையும் ஆற்றியிருவென்று
ஆற்றுவித்த கூற்றிலே நிலைபெற்ற
கற்பனையை முடைய உடையவள் நீ
நீப்பின் இளமைச்செவ்வி முதிர்வினுலே
உயிர் வாழாதா ளாய் ளுள்; இனி
அவளுடைய, நிரம்பிய முயக்கத்தை
விரும்புகின்ற முலையினை யுடைய

மார்பைப் பிரியாதிருத்தல் நின் மனத்திற்குப் பொருளாயிருக்கு மாயின், அதுவே பொருளாவதல்லது பிரிகின்றது பொருளாகுமோ?

தொலைவு: முன்பு உண்டாய்ப் பின்பு இல்லையாதலாம்.

(கரு—கஅ) இல்லென

னல்லதை:—

(இ - ள்.) எக்காலமும், எமக்குப் பொருளில்லையென்று கூறிவந்த இரந்தவர்களுக்குச் சிறிதுங் கொடாதிருத்தல் இளிவாமென்று கூறி

மலையைக் கடந்துபோய்த் தேடுதலைக் கருதின பொருள் நன்குமதிக்குப் பொருளாயினும், நமக்குப் பழைய உழுவலன்பு வழுவாமை வருமென்

கூற்றை உட்கொண்டதனுலே நீ பிரியாயென்றே கூடினவளுடைய, தான் புல்லுதலேயே விரும்பின இளமைச் செவ்வியையுடைய மார்பைப் பிரியா திருத்தல் நின் மனத்திற்குப் பொருளாயிருக்குமாயின், அதுவே பொரு ளாவதல்லது பிரிகின்றது பொருளாகுமோ?

(கசு—உஉ) இடனின்றி

னல்லதை:—

(இ - ள்.) தம்முடைய இல்வாழ்க்கைக்கு வேண்டும்பொரு ளில்லை யென்று கூறிவந்து இரந்தவர்க்குச் சிறிதுங் கொடாதிருத்தல் இளிவு மென்று § கூறிக், காட்டைக் கடந்துபோய்த் தேடுதலைக் கருதின பொருள் நன்கு மதிக்கும் பொருளாயினும், அருந்ததி[2] போலே எல்லாரு தொழுது வாழ்த்தும்படி$ விளங்கிய

கற்பனையை முன்புடையவளுடைய

---

* தொல். பொருள். உகசு. †
கலி. கச : கo - கக. ‡ குறள் - கூகo §
புறம் - கஅo, உoச. $ சிலப்பதிகாரம்.
பதிகம் : ருசு.

(பாடம்) 1. இழிவா.
2
2. அருந்ததி.

கப
கலைதம/தா!மைக
L°°°° - ட

காமச் செவ்வியாற்
பெருமையையுடையவாய,

மெல்லியவாகிய தோள் களைப் பிரியாதிருத்தல் நின்மனத்திற்குப் பொருளா யிருக்குமாயின், அதுவே பொருள்ாவதல்லது பிரிகின்றது பொருளாகுமோ ?

பிரியாமை யென்றது பின்பு பிரிகின்றதனைத் தோற்றுவித்து நின்றது. கற்புக் கற்பனையாதல் கற்பியலான் உணர்க.

பழியொடு வருவன செய்யலாகாதெனத் தோழி விலக்கலின் அவை வென்றும் மெய்ப்பாடு தோன்றிற்று.

இவை மூன்றுந் தாழிசை.

(உரு—உக) எனவிவர் .

. . . காதலோரே:—

. . (இ - ள்.) என்று யான்

நினக்குக் கூறும்படியாக இவள்

பொலி

வழிவினைத் தன்னிடத்தே கொண்டு வருந்தவும், நீ பொருள்தேடப்பிரி கின்றது உனக்கு அன்பு அல்லவென்று யான் சொல்ல, அச்சொல்வரைத்

தங்காத காதலோர், பின்னர் நினது

இயற்கைநலர் தொலைதலைக் கூற,

அச்சொற்கு அஞ்சிப் பரிக்கோலாற்

குத்தவுந் தன்னெறியில் நில்லாத

செலவுகடிய களிற்றொருத்தல் மெல்லியயாழோசையின் எல்லையிலே தங்கினாற் போல, அன்புற்றுத் தாழ்ந்து, குற்றேவன் மகளாகிய என் கூற்றின் எல்லையிலே தங்கிப் போகாதொழிந்தார் காண்.

தோழி தான் செலவழுங்குவித்தமை கூறினாள். கூறவென்பதனைத் தொலைதலோடுங் கூட்டுக.

தங்கினர் என்பதனாற்

றங்காமையும் வந்தது.

தங்கினாற் போலவென்னும் தொழிலுவமத்திற்கு 'அன்பன்றென்' றதந் தொல்கவின் 'தொலைத' லென்றதும் பொருளாயினவாறு காண்க.

யாழ் தோழியும் அவள் கூறியது யாழிசையுமாகக் கொள்க.

எனவிவள், தனிச்சொல் ; எஞ்சியது சுரிதகம்.

இச்சுரிதகத்தாற் றலைவற்கு உண்டாகிய அருளென்னும் மெய்ப்பாட்டால், தலைவிக்குப் புணர்வென்னும் உவகை பிறந்தது.

செலவழுங்கலின் முல்லையாமெனின், ஆகாது ; "செலவிடையழுங்கல் செல்லாமை யன்றே - வன்புறை குறித்த றவிர்ச்சியாகும்"* என்றாராகலின். இவ்விதி மேற் செலவழுங்குவனவற்றிற் கெல்லாங் கொள்க.

"ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே - கொச்சக முறழொடு கலிநால் வகைத்தே." "ஒத்தா ழிசைக்கலி யிருவகைத் தாகும்." "இடைநிலைப் பாட்டுத் தரவுபோக் கடையென-நடைநவின்றொழுகு[1] மொன்றென மொழிப." "தரவே தானு நாலடி யிழிபா - யாறிரண் டுயர்பென் றறையவும்

* தொல். பொருள். ௧௪௫.

(பாடம்) 1. 'பயின்றொழுகு.'

பாலைக்கலி

௧௧ படுமே, " " இடைநிலைப்

பாட்டே, தரவகப் பட்ட மரபின

வென்ப. " "அடைநிலைக் கிளவி தாழிசைப் பின்னர் - நடைநவின் றொழுகு மாங்கென் கிளவி." "போக்கியல் வகையே வைப்பெனப் படுமே." "தரவிய லொத்து மதனகப் படுமே, புரைதீ ரிறுதி நிலையுரைத் தன்றே." * என்று அக நிலையாகிய கட்டளை யொத்தாழிசைக்குக் கூறிய இலக்கணஞ் சீர்வகை யொத்தாழிசைகட்கும்[1] ஒத்தலில் இவ்விலக்கணங்கொண்டு இத்தொகையில் ஒத்தாழிசை செய்தாரென் றுணர்க.

அவற்றுள், இது மிகத்துள்ளிவந்த பத்தடித்தரவும், "

ஒத்தாழிசையு மண்டில யாப்புங் - குட்டமு நேரடிக் கொட்டின வென்ப." † என்பதனால் ஒத்ததாழ்த்த ஓசைபெற்றுத், தரவகப்பட்ட மரபினவாய்[2] "ஒத்து மூன்றாகு மொத்தா ழிசையே." ‡ என்பதனான் ஒத்து மூன்றாய்வந்த தாழி சையும், நடைநவின்றொழுகுமென்றதனால் ' எனவிவள் ' என்று பொருள் பெற்றுவந்த அடைநிலைக் கிளவியும், இடைநிலைப்பாட்டின் பொருண்முடிவு காட்டித் தரவிற் சுருங்கிவந்த சுரிதகமும் பெற்றுத், தரவினுந் தாழிசையி னும் நேரீற்றியற் சீரும் பெற்றுத், தரவின்கண்

ஏறுபெற்றுதிரென நேர்பு
நேர்கிரையாகிய வஞ்சியுரிச்சீரும்
பெற்றுவந்த மூதனிலே
யொத்தாழிசைக் கலிப்பா.

"எழுசீ ரிறுதி யாசிரியங் கலியே."§ என்பதனுல் ஈற்றடி நாற்சீரும் அயலடி முச்சீருமாக எழுசீரான் இற்றது சுரிதகம். இவ்விதி மேல்வருவன வற்றிற்குங் கொள்க.

(க)

ரு.

அறனின்றி யயறாற்று

மம்பலே[3] நாணியும்
வறனீங்கி நீசெல்லு நீளிடை
நினைப்பவு
மிறைநில்லா வளையோட
விதழ்சோர்பு பனிமல்கப்
பொறைநில்லா நோயோடு
புல்லென்ற நுதலிவள் ரு. விறனல
னிழப்பவும் வினைவேட்டாய்
கேளினி ;
உடையிவ ளுயிர்வாழா
ணீநீப்பி னெனப்பல
விடைகொண்டியா மிரப்பவு
மெமகொள்ளா யாயினை
கடைஇய வாற்றிடை

நீர்நீத்த வறுஞ்சுனை

யடையொடு வாடிய

வணிமலர் தகைப்பன;

---

* தொல். பொருள் - சசஉ—சசக. † தொல். பொருள் - சஉஎ.

‡ தொல். பொருள் -சுரு௪.

§ தொல். பொருள் - கஅஅ.

(பாடம்) 1. ஒத்தாழிசைக்கும். 2.

டிரபினவாய். 3. அபற்றாற்றமம்பலர்.

கஉ

கலித்தொகை

[கலி - ரு கO. வல்லிநீ [1]

துறப்பாயேல் வகைவாடு மிவளென

வொல்லாங்கியா மிரப்பவு[2]

முணர்ந்தீயா யாயினை
செல்லுநீ ளாற்றிடைச்
சேர்ந்தெழுந்த மரம்வாடப்,[3]
புல்லுவிட் டிறைஞ்சிய
பூங்கொடி தகைப்பன ;

பிணிபுநீ விடல்சூழிற்
பிறழ்தரு[4] மிவளெனக் கடு.
பணிபுவந் திரப்பவும் பலசூழ்வா
யாயினை
துணிபுநீ செலக்கண்ட
வாற்றிடை யம்மரத்
தணிசெல வாடிய வந்தளிர்
தகைப்பன ;

எனவாங்கு,

யாநிற் கூறவு மெய்கொள்ளா
யாயினை

உ0. யானு திவள்போ லருள்வந்
தவைகாட்டி

மேனின்று மெய்கூறுங்
கேளிர்போ னீசெல்லுங்

கானந் தகைப்ப செலவு.

இது தலைமகனாற் பிரிவுணர்த்தப்பட்ட தோழி, தலைமகட்கு அஃது உரைத்து அவளது ஆற்றாமையின்வகை தலைமகற்கு உணர்த்தவும், பின்னும் பிரிவின் மேற் சென்ற உள்ளத்தனையினை, நீர்

செல்லுங் கானமே நும்மை இடிக்குங்
கேளிர் போல விலக்குமேன, அவன்
செலவழுங்கும்வகை அவள் கூறியது.

(கரு) அறனின்றி . .
. . கேளினி :—

(இ - ள்.) யான் நின்பிரிவை உணர்த்துகையினாலே முன்கையிற் கிடவாவாய் வளை கழலக், கண்ணீர் இமையினின்று முன்னர்ப் பெருக வீழ்ந்து, பின்னர்-இமை நிறையும்படி நிற்கப், பொறுக்கும் அளவில் நில்லாக் காமநோயாலே பொலிவழிந்த நுதலினையுடைய இவள் பின்பு அயலிலுள்ளார் தந் நெஞ்சில் அறமின்றாய் வெளியாகக்கூறும் அம்பலக்கூசுதலானும், நீ அரிதாகக் கடந்து செல்லும் நீண்ட வழியில் வற்கடமான காலத்தை நினைக்கையினாலும், தனது வெற்றியையுடைய நலத்தை இழவாநிற்கவும் வினைமேற் சேறலை விரும்பினவனே, இப்பொழுது யான் கூறுகின்றதனைக் கேள்!

இது தரவு.

(கூ—க) உடையிவள் . .
. . தகைப்பன :—

(இ - ள்.) நின்போக்கைத் தடுத்தல்கொண்டு நின்னை உயிராகவுடைய இவள் நீ பிரிவையாயின் உயிர்கொண்டிராளென்று பலவற்றைக்கூறி யாங்கள்

(பாடம்) 1. வல்லையிற். 2. உரைப்பவும். 3. வாய்வாடப். 4. பிறழாகும்.

பாலை-உ]

பாலைக்கலி

கங

இரந்துகொள்ளவும், எம்முடைய
வார்த்தைகளைக் காரியமென்று
கருத யாயினாய். இனி நின்னைப்
போகாமற் றடுப்பன நின் நெஞ்சைச்
செலுத்தின வழியிடத்து,
நீர்நீக்கப்பட்ட வறுவிய
சுனைகளிடத்து இலைகளோடே கூடி
வாடிய அழகிய மலர்கள்;

என்றதனான், இவளையன்றிச் சுற்றத்தாருங் கெடுவ ரென்றாள்.

" எங்கில மருங்கிற் பூவும் புள்ளு - மங்கிலம்
பொழுதொடு வாரா வாயினும் - வந்த
நிலத்தின் பயத்த வாகும் "*

என்பதனான் மருதத்துப்பூப் பாலைக்கண் வந்தது.

(கo—கரு) வல்லை நீ

துறைப்பன :—

(இ - ள்.) நீ கடுகத் துறப்பையாயின் இவள் வகுப்பையுடைய உறுப் புக்கள் கெடுமென்று நினைக்குப் பொருந்தும்

வழியாலே யாங்கள் இரந்த கொள்ளவும், இவள் வருத்தத்தை அறியாயாயினும்.' இனி நின்னைப் போக மற்றடுப்பன, நீ போம் நீண்டவழியிடத்து நமக்குப் பற்றுக்கோடென்று சேர்ந்து படரப்பட்ட மரம் வாட, அதனைச் சேருதலைக் கைவிட்டு வீழ்ந்து கிடந்த பூங்கொடிகள்;

மரந் தலைவியுங் கொடி சுற்றமுமாகக் கூறினாள். மரத்தினது நிழலின் நிற்றலிற் கொடி மரம்வாடும் அளவும் நின்றது.

(கசு—கஎ) பிணிபு நீ

தகைப்பன :—

(இ - ள்.) நீ சில நாட்

பிணித்துக்கொண்டு பின்னைக்

கைவிடுதலைச்

கருதுவாயாயின் இவள் இறந்து படுவளென்று தாழ்ந்துவந்து இரந்த
கொள்ளவும், வினைவயிற் செல்லுமாறு பலவற்றையுஞ் சூழ்வாயாயினுய்
இனி நின்னைத் தடுப்பன, நீ போதற்கு நெஞ்சாற் றுணிந்து கண்டுவைத்த
வழியிடத்தில், முற்கூறிய மரத்தின் அழகு போக, வாடிக்கிடந்த அழகிய
தளிர் ;

முற்படக் கூறிய நீரும் மலரும் மரமுங் கொடியும்போலப் பற்றுக்கோ
டாதலன்றி, இவளுஞ்சுற்றமும் முதலுஞ்சினையுமாய் இருப்பர் என்
தாயிற்று.[1]

இவை மூன்றுந் தாழிசை.

இத்தாழிசைகளிற் கூறிய இறைச்சிப் பொருள்கள் திணைப்பொருட்கு

உபகாரப்பட்டு நின்றவாறு காண்க.

* தொல். பொருள் - கஃ.

நசு கலைத்தொகை

(கஅ) ஏனவாங்கு

(இ - ள்.) என்று; ஆங்கு அசை.
இது தனிச்சொல்.

(கக—உஉ) யாநிற் கூறவும் . . .

. செலவு:—

(இ - ள்.) யாம் நினக்குக் காரியஞ் சொல்லவும், எம்முடைய கூற்றுக் களை நெஞ்சாற் கொள்ளாயாயினும். இனி இவளைப் போலே, கண்டார்க்கு அருள் வருதற்குக் காரணமானவையிற்றை மேன்மேலே காட்டி, உனக்கு மேலாய்நின்று உண்மை கூறிக் கழறுங் கேளிரைப்போல நின் போக்கைத் தடுப்பன நீ செல்லுங் காடு.

இது சரிதகம்.

'எம கொள்ளா யாயினை' யெனத்

தலைவற்கு நிகழ்ந்த விரைவு கண்டு
ீதாழிக்கு அச்சம் பிறந்தது. இதனாற்
றலைவற்கு இழிபு பிறந்தது.

'தகைப்ப' என்றது அன்சாரியை பெறுதுநின்ற அகரவீற்றுப் பலவறி
சொல்.

"தோழியுள் ளுறுத்த வாயில் புகுப்பினு - மாவயி னிகழு மென்மனார்
புலவர்"* என்பதனாற் றலைவி செலவழுங்குவித்தற்குப் போகவிட்டமையாற்
றன்னுடன் ஏனைவாயில்களுங் கூறினமைதோன்ற, 'யாம் நிற் கூறவு' மென்
றும் 'எமகொள்ளா யாயினே' யென்றுந் தாழிசைகளினும், 'யாம் இரப்பவும்
எமகொள்ளா யாயினே' யென்றும் 'யாம் உரைப்பவு' மென்றுங் கூறியவாறு
காண்க.

யானிற் கூறவு மென்னும் பாடம்.

இஃது ஐந்தடித்தரவும் நான்கடித்தாழிசையுந் தனிச்சொல்லுஞ் சுரிதக
மும் பெற்றுவந்த ஒத்தாழிசைக்கலி. (உ)

௬.

ஃஃவிமுன்பின் வல்லென்ற யாக்கைப் புலிநோக்கிற்
சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தைய
ரற்றம்பார்த் தல்குங் கடுங்கண் மறவர்தாங்
கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர்

ரு. துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வௌவலிற்
புள்ளும் வழங்காப் புலம்புகொ ளாரிடை
வெள்வேல் வலத்திர் பொருடரல் வேட்கையி
னுள்ளினி ரென்ப தறிந்தன ளென்றோழி ;

* தொல். பொருள் - கசஙு.

பாலை-கூ]

பாலைக்கலி

கரு

காழ்விரி வகையார [1] மீவரு மிளமுலை

கO. போழ்திடைப்

படாஅமன் முயங்கியு

மடையாரென்

றூழ்கதுப் பணிகுவர் காதலர்

மறறவா
சூழ்வதை[2]
யெவன்கொ. லறியே னென்னும்;

முள்ளுறழ் முளையெயிற்
றமிழ்தூறுந் தீநீரைக்
கள்ளினு மகிழ்செயு
மெனவுரைத்து மமையாரென் கடு.
ளொள்ளிழை திருத்துவர் காதலர்
மற்றவ
ருள்ளுவ தெவன்கொ
லறியே னென்னும்;

நுல்னொழின் மாமைச்
சுணங்கணி யாகந்தங்

கண்ணொடு தொடுத்தென

நோக்கியு மமையாரென்

ஞெண்ணுத னீவுவர் காதலர்

மற்றவ உ௦. ரெண்ணுவ[3]

தெவன்கொ லறியே னென்னும்;

எனவாங்கு,

கழிபெரு நல்கலொன் றுடைத்தென வென்றோழி
யழிவொடு கலங்கிய வெவ்வத்த ளொருநாணீர்

பொழுதிடைப் படநீப்பின்

வாழ்வாளோ

உரு. வொழிகினிப் பெருமகின்

பொருட்பிணிச் செலவே.

இது பொருள்வயிற் பிரிவேனென்ற தலைமகற்குத் தோழி, தலைவி செலவுக் குறிப்பு அறிந்தவாறும், அவளது ஆற்றாமையும் உணர்த்திச், செலவு ஒழிவா யாகவெனக் கூறியது.

(க—அ) வலிமுன்பின் என்றேழ்:—

(இ - ள்.) சுற்றுதல் அமைந்த வில்வினையும் உடையராய்க் கடை குழன்ற வளர்ந்த மயிரினையும்

உடையராய்ப் பிறர்க்குக் குற்றஞ்செய்தலைப் பார்த்திருக்கும் மெய்வலியுடைத்தாகிய வலியினையும் வற்கென்ற உடம்பினை யும் புலிபோலும் பார்வையினையும் உடைய தறுகண்மையையுடைய மறவர், தாம் வம்பலர்பக்கற் பெறுவதொரு பொருளினையுடையரல்லராயினுந் தங் கள் அம்புபட்டுப் பதைப்பாரைக்கண்டு மனம் மகிழ்வதற்குத் தொடர்ந்து சென்று உயிரைக்கொள்ளுகையிலே,* பறவைகளும் பறத்தலைச்செய்யாத வருத்தத்தைக்கொண்ட தொலையாத வழியை, வெள்ளிய வேலை வலக்

கையிலே ஏந்திப் பொருளைத் தேடிக்கொண்டு வருதலின்மேலுள்ள விருப்

---

* புறம் - கூ.; அகம் - க0௬, கஎரு.; திணைமாலை அ௬; நற்றிணை - கசுஅ.

(பாடம்) 1. கலையார. 2. சூழ்வகை. 3. மற்றவர் கண்ணுவ,

கசு

கலித்தொகை

[கலி - ௪

பத்தினாலே நினைந்தீரென்று தனக்கு வெளியாகச் சொல்லுகின்ற நும்

முடைய செயலை என் தோழி அறிந்தாள்;

இது பாலைநிலத்திற்கு உரிய செய்தி கூறிற்று.

ஆரிடையை உள்ளினி

ரென்க.

இது தரவு.

(கூ—கஉ) காழ்விரி . . . .

என்னும்:—

(இ - ள்.) காதலர்,

முத்துவடங்கள் விரிந்த கலத்தை[1]

அகத்திட்டுக் கிடக்கின்ற ஆரம் மீதே

கிடந்தசையும் இளைய முலையை ஒருபோதும் இடை யீடுபடாமற் றழுவியும் * அதனானும் வேட்கை தணியாராய், என்னுடைய கூட்டத்தாற் சூழ்ந்த மயிரைக் கோலஞ்செய்வர்; பின்னை, அவர் சூழ்கின்ற காரியம் எத்தன்மையதுகொல் ? அதனை யான் அறியேனென்று கூறுவிற்கும்

மேற் கலங்களுங் கீழ்ப் பல முத்துவடங்களுமாகிய ஆரம்.

(கரு—கசு) முள்ளுறழ் . . . . என்னும் † :—

(இ - ள்.) காதலர், முள்ளை

மாறுபடுகின்ற முனையினையுடைய நாணல் முளைபோலும் எயிற்றிடத்து விடாமல் ஊறும் அமிழ்துபோலும் இனிய நீரைக் கள்ளினுங்காட்டில் மகிழ்ச்சியைத் தருமென்று கூறியும் வேட்கை தணியாராகி என்னுடைய ஒள்ளிய பூண்கள் புணர்ச்சியால் நிலைகுலைந்; வற்றைப் பழைய நிலைகளிலே கிடக்கும்படி திருத்துவர்; பின்னை, அவ

நினைக்கின்ற காரியம் எத்தன்மையதுகொல்? அதனை யான் அறியேனென்று கூறுநிற்கும்;

அக்கள்ளென்று பாடமாயின், இங்ஙனம் மிகக்களிப்பிக்குங் கள்ளென்க திருநீரையும் பாடம்.

(கஎ—உ0) நுண்ணேழின் . . . .

என்னும்:—

(இ - ள்.) காதலர், கூரிய அழகினையும் மாமை நிறத்தினையுமுடை சுணங்குபரந்த மார்பங் தங்கண்ணோடு எதிராக வைத்துக் கட்டினதென் யாங் கூறும்படி இமையாமற் பார்த்தும் வேட்கை தணியாராய் என்னுடை ஒள்ளிய நுதலைப் புணர்ச்சியால் அரும்பிய வியரைத் துடைப்பர். பின்னை அவர் சூழ்கின்ற காரியம் எத்தன்மையதுகொல்? அதனை யான் அறி னென்று கூறுநிற்கும்;

தொடுத்தது தொடுத்தென விகாரமாயிற்று.
இவை மூன்றுந் தாழிசை.

* தொல். பொருள் : சூ - ௧அ௪. † ௧௧௫௨-ஆம் குறளுரை.

பாலை - ௪]

பாலைக்கலி

௧௭

இத்தாழிசைகளிற் றலைவிக்கு ஆராய்ச்சி பிறந்ததனைத் தோழி கூறினள்.

"பொழுது தலைவைத்த"*
என்னுஞ் சூத்திரத்து
நிகழுமென்றதனாற்
பெருந்திணைக்கேயன்றி ஏனைத்
திணைகளனைத்தும் வனப்புமிகுதி
கூறப்
பெறுமென்றலின் தாழிசைகளிற்
றலைவி வனப்புமிகுதி கூறினாள்.

(உக) எனவாங்கு:—

(இ - ள்.) என்று அவள்
கூறும்படியாக ; ஆங்கு, அசை.

இது தனிச்சொல்.

(உஉ-உரு) கழிபெரு
செலவே:—

(இ - ள்.) புணர்ச்சிப்பின்னர் நிகழ்த்தின மிக்க பெரிய தலையளி ஒரு பிரிவையுடைத்தென்று உட்கொண்டு என் தோழி நெஞ்சழிவாலே கலங் கிய வருத்தத்தையுடையள்; இத்தன்மையாள் ஒருநாள் ஒருபொழுதுகூட்டம்

இடையீடுபட நீர் பிரிவீராயின் உயிர் கொண்டு இருப்பாளோ? இராள். ஆதலாற் பெருமா! நின்னுடைய பொருளிடத்து நெஞ்சு பிணித்தலாற்

செல்லுஞ் செலவைத் தவிர்வாயாக.

இதனாற் றலைவற்கு இழிவு பிறந்தது.
இது "நிகழ்ந்தது நினைத்தற் கேதுவு மாகும்." † என்றதனாற் றலைவன்

கண் நிகழ்ந்த வஞ்சனந்[1] தலைவி

நினைந்து பிரிவனென்று கருதுதற்கு நிமித்த
மாயிற்று.
"செய்பொரு ளச்சமும் வினைவயிற்
பிரிவு - மெய்யுற வுணர்த்லுங்
கிழவி பாராட்டே"‡ என்பதனாற் றலைவன் தலைவியைப் பாராட்டியது அவட்
குச் செய்பொருள் அச்சமும் வினைவயிற் பிரிவும் உணர்த்தி நின்றவாறு
காண்க.
இது சுரிதகம்.
இஃது எட்டடித்தரவும்

நான்கடித்தாழிசையுந்
தனிச்சொல்லுஞ்
தரவின் பாகமாகிய சுரிதகமும்
நேரீற்றியற்சீரும் பெற்ற
ஒத்தாழிசைக்கலி.

ரு.

பாஅ லஞ்செவிப்
பணைத்தாள் மாநிரை
மாஅல் யானையொடு மறவர்
மயங்கித்
தூறதர் பட்ட வாறுமயங்
கருஞ்சுர

---

* தொல். பொருள்: உகசு. † தொல். பொருள்: சஎ.

‡ தொல். பொருள்: உகஉ.

(பாடம்) 1. வஞ்சக்.

கஅ
கலித்மா/து/லை/ய
L— ய

பிறந்த் நீர்செய்யும்
பொருளினும் யாழுமக்குச்[1]
ரு. சிறந்தன மாத லறிந்தனி ராயி
னீளிரு முந்நீர் வளிகலன்
வெளவலி
ளுள்வினைக் கழிந்தோர் போற
லல்லதைக்

கேள்பெருந் தகையோ டெவன்பல மொழிகுவ
நாளுங் கோண்மீன் றகைத்தலுந் தகைமே ;

௪0. கல்லெனக் கவின்பெற்ற
விழவாற்றுப் படுத்தபிற்
புல்லென்ற களம்போலப்
புலம்புகொண் டமைவாளோ ;
ஆள்பவர் கலக்குற வலைபெற்ற
நாடுபோற்
பாழ்பட்ட முகத்தோடு
பைதல்கொண் டமைவாளோ ;
ஓரிரா வைகலுட் டாமரைப் பொய்கையு
௪௫. ணீர்நீத்த மலர்போல
நீநீப்பின் வாழ்வாளோ ;

எனவாங்கு,

பொய்ந்நல்கல் புரிந்தனை[2] புறந்தரல் கைவிட்
டெந்நாளோ நெடுந்தகாய் நீசெல்வ

தந்நாள்கொண் டிறக்குமிவ

ளரும்பெற லுயிரே.

இது தலைமகன் பொருள்வயிற்பிரிவலெனக் கேட்ட தோழி தான் ஆற்றாளாய் நீ செய்யும் பொருளினும் யாம் உமக்குச் சிறந்தேமென்பது நும் உள்ளத் உளதெனின் நும்மை நாளும் புள்ளும் விலக்குமெனவும், இவள் பிரிந்திரு பார் இருக்குமாறு இருப்பாளல்லள், பிரிந்த அன்றே இறந்து படுவளெனவு சொல்லிச் செலவழுங்குவித்தது.

(க-கூ) பாஅலஞ்

தகைமே :—

(இ - ள்.) தத்தம் பகுதிகளையும் அழகிய செவிகளையும் பெருமையை யுடைத்தாகிய தாள்களையும் மதத்தாலுள்ள மயக்கத்தினையுமுடைய யானைத் திரள்களோடே ஒழிந்த விலங்கின் திரள்களும் மறவரும் மயங்குகையினாலே ஆறுகளெல்லாம் வழிப்பட்டுப் பழையவழிகள் மயங்கின அரியகாட்டைக் கடந்து நீர் தேடும்பொருளினுங்காட்டில் யாங்கள் உமக்குச் சிறந்தேமாதலை நீரே அறிந்தீராயின், இனி யாங்கள் நீண்ட பெரிதாகிய கடலிலே காற்றுக் கலத்தைச் சிதற அடித்து விடுகையினாலே தாம் எடுத்துக்கொண்ட முயற்சி நிமித்தமாக நெஞ்சழிந்தோரைப்போலே நெஞ்சழிந்திருக்குமதல்லது நின் னோடு எங்ஙனம் பலவார்த்தைகளைக் கூறுவோம்? யாம் அங்ஙனப்

(பாடம்) 1. யாதமக்கு, 2. புரிந்தவளை.

பாலை - ௬]

பாலைக்கலி

கக

இருக்கவும் நின்னை நாண்மீனும் மனத்தாற் குறித்துக்கொள்ளப்படும் புள்ளுந் தகைத்தலையுஞ் செய்யும்.

கொடுத்தகாய், இன்னும் யாங் கூறு கின்றதனைக் கேள்!

'மயங்கி'யென்னுஞ் செய்தெனெச்சம் " அம்முக்கிளவி " * என்னுஞ் சூத்திரத்தாற் பிறவினை கொள்ளுமெனக் கூறினும் ; அதனுன் உணர்க.

'தகைம்' என்றது "ஈற்றுமிசையுகரம் மெய்யொடுங் கெட்டு" † நின்றது.

குறித்துக் கொள்ளப்படுதலிற் கோளென்றது ஆகுபெயர்.

இதனுட் குறிஞ்சிக்குரிய

இறைச்சியாற் காட்டின் கொடுமை கூறிச்
செலவழுங்குவித்தலின் அது
திணைப்பொருட்கு உபகாரப்பட்டு
நின்றவாறு
உணர்க.

இனி "நாளுங் கொண்மின்
றகைத்தலுந் தகையேம்" என்ற
பாடத்திற்கு நாளையும்
இன்னநாளென்று குறியும்,
அப்பொழுதுந்
தகைத்தலையுஞ் செய்யேமென்க.

போறலல்லதையெனவே
தோழிக்கு இடுக்கண் பிறந்தது.

(௧0—௧௧) கல்லெனக்
. . . டமைவாளோ :—

(இ - ள்.)

கல்லென்னும் ஓசை உண்டாக
அழகுபெற்ற திருநாளை
வழிப்படுத்திவிட்ட பிற்றைநாட்
பொலிவழிந்த இடம்போலத் தனிமை
கொண்டு ஆற்றியிருப்பா
ளொருத்தியோ ?

(௧௨—௧௩) ஆள்பவர் . . .
. டமைவாளோ :—

(இ - ள்.) நாட்டை ஆளுகின்ற அரசர் தாம் பின்பு கலக்கமுறும்படி, அவரால் அலைத்தலைப்பெற்ற நாடு பாழ்பட்டாற்போல அழகு கெட்ட முகத் தோடே வருத்தத்தைக்கொண்டு ஆற்றியிருப்பா ளொருத்தியோ?

(கசு—கரு) ஓரிரா . . . . வாழ்வாளோ :—

(இ - ள்.) ஓர் இராப்பொழுதிடத்துத் தாமரையையுடைய பொய்கை யுள் நீரால் நீக்கப்பட்ட மலர் அவ்விராக்கால முழுவதும் வாடாமற்

கிடந் தாற்போல, நீ பிரிவையாயின் ஓர் இராப்பொழுதும் உயிர்கொண்டுவாழ்வா ளொருத்தியோ?

ஓகாரம் மூன்றும் எதிர்மறை.

களமும் நாடும் பூவும், பின்னும் விழவாலும் அரசனாலும் நீராலும் பழைய பொலிவு பெறும். அவைபோ லன்றி இவள் நீ நீத்தபொழுதே

---

* தொல். சொல் - உகக. † தொல். சொல் - உகஅ.

[கலி - க

இறந்துபடுவ
மென்றான்.

னொன்றலின், இதனாற்[1]

றலைவிக்குக் கையாறு கிகழு
இவை மூன்றுந் தாழிசை.

(கசு) எனவாங்கு :—

(இ - ள்.) என்று யாம் நினக்குச் சொல்லாநிற்க ;
ஆங்கு அசை ; அச்சுரத்தை யெனினுமாம்.
இது, தனிச்சொல்.

(கஎ—கக) போய்நல்கல்

. . . . . ஒயரே :*—

(இ - ள்.) நெடுந்தகாய்! பொய்யே இவளுக்கு அருளுதலை விரும்பிப் பாதுகாத்தலைக் கைவிட்டு நீ நயந்த அச்சுரத்திலே செல்வது எந்நாளிலோ,[2] அந்நாள் இவளுடைய பெறுதற்கரிய உயிரைக் கொண்டுபோம்;

புறப்படல் கைவிட்டு என்ற பாடத்திற்குக் கைவிட்டுப் புறப்படலென்க.

இதனாற் றலைவற்கு இழிவு பிறந்தது.

தாழிசையிற் கூறிய வினையுவமங்கள் திணைப்பொருட்கு உவமையாய் நின்றன.

"பிரியுங் காலை யெதிர்நின்று சாற்றிய - மரபுடை யெதிருமுளப்படப் பிறவும்"† என்றதனாற் புரிந்தனையென இறப்பும் இறக்குமென எதிரும் மரபிற் பிறழாமல் வந்தவா றுணர்க.

இது சுரிதகம்.

இஃது ஒன்பதடித்தரவுஞ் சிறுமைக்கு எல்லை கூறிய ஈரடித்தாழிசையும் பொருள்பெற்ற தனிச்சொல்லும் ஆசிரியத்திற்கு உரித்தென்ற மூவடிச் சிறுமையான் வந்த சுரிதகமும் பெற்று வந்த ஒத்தாழிசைக்கலி. (௬)

மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங் கருஞ்சுரத் தாரிடைச் செல்வோர்
சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்த
முண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரங்
கண்ணீர் நனைக்குங் கடுமைய காடென்று

* கலி. ௧௦: ௨௧; கலி. ௨௧: ௧௨ - ௧௩; குறள் ௧௧௫௧.
† தொல். பொருள் : ௧௫௦.
(பாடம்.) 1.

பாலை - ௫]

பாலைக்கலி

௭

என்னீ ரறியாதீர் போல
இவைகூறி[1]
னின்னீர வல்ல நெடுந்தகா
யெம்மையு

மன்பறச் சூழாதே
யாற்றிடை நும்மொடு கO.
துன்பந் துணையாக நாடி *
னதுவல்ல
இன்பமு முண்டோ வெமக்கு.

இது தலைவன்
செலவுக்குறிப்பறிந்து நீர் செல்லுங்
கடுஞ்சுரத்துத் துன்பத்திற்கு
துணையாக எம்மையும்
உடன்கொண்டு சென்மினெனத் தலைவி
கூறியது.

(இ - ள்.) காடு,
குற்றத்தையுடைய மறவர்தம்முடைய

மூட்டுவாயை யுடைய அம்புகள் மலைவளர்ந்து போதற்கரிய காட்டிடத்து அரிய வழியைட போவார்மேலே அழுந்துகையினாலே, உடலஞ் சுருங்கி உள்ளுண்டாகிய நீர் வற்றுகையினாலே உலர்ச்சியாலே வாடுகின்ற நாவிற்கு, மறையாமாலை; தின்னும்படியாக மாரி வறக்கையினாலே தண்ணீர் பெறாத மனத்தடுமா; றத்தையுடைய வருத்தத்தை அவருடைய கண்ணீர் வீழ்ந்து அந்நாவினை நனைத்துப் போக்குங் கடுமையையுடையவென்று நீர் உடன்சேறலை மறுத்துக் கூறினால், யான் உயிர்தாங்கியிருத்தலாற்றாது இறந்து படுதலை அறியாதிரு; நீர்போல

உடன்சேறலை மறுத்த
இம்மொழிகளைக் கூறுதலாற் பெற்
தென் ? நெடுந்தகாய் ! இக்கூற்று
நினக்கு உரிய நன்றாகிய நீர்மைகளை
உடைய அல்ல ! இனி நீ எம்மிடத்து
அன்பு நீங்கப் பிரிதலைக் கருதா
அவ்வாற்றிடைத் துன்பத்திற்கு
எம்மையுந் துணையாகக் கொண்டு
நும்மொ(போதலை ஆராயின்,
அதுவல்லது எமக்கு வேறோர்
இன்பமும் உண்டோ ?

இதனாற் றலைவிக்குக்
கைம்மிகலுந் தலைவற்கு இடுக்கணும்
பிறந்தன.

“ பெற்றமு மெருமையு மரையு
மாவே ” † என்றதனான் மரைய

வென்றார்.

இதன்கண்ணே, இவள் தன் பெண்டன்மையாற் கூறத்தகாதது கூறல் கேட்ட ‡ யாம், உலக ஒழுக்கத்தை அறிந்து, இவளை உடன்கொண்(செல்வேமாயின், இவள் தண்ணீர் பெறாத அருந்துயரம் நமக்கு மிக்க வருத்தத்தைத் தருமாகலின், இவடன்னை உடன்கொண்டு சேறல் எவ்வாற்றானு தகாதென்றும், யாம் அன்பு பெருகுமாறு சூழ்ந்த காரியத்தினை இவள் அன்பு அறும்படி[2] சூழ்ந்தேமாகக்கருதி இறக்குமாறு[3] கூறினளென்றுப் உட்கொண்டு, இனி

இவளை ஆற்றுவித்துப் பிரிவேமெனச் செலவழுங்கினமை தோன்ற நிற்றலின் வேறுமொரு பொருள் தோன்றிநின்றது.

---

* குறள்: ௧௨௯௯. † தொல். பொருள்: ௬௪௫.

‡ கலி. ௧௮: உரையிறுதி.

(பாடம்) 1. [illegible] 2. [illegible]
[illegible] 3. [illegible]

இஃது "ஒருபொரு ளுதலிய வெள்ளடி யியலாற் - றிரிவின்றி வருவது
லிவெண் பாட்டே"* என்பதனுற் பாட்டிற் பொருளோடே வேறும்
ருபொருள் தோன்றி நின்று பதினோடியான் வந்த கட்டளைக் கலிவெண்
ாட்டு. வேறும் ஒரு பொருள் தோன்றிநிற்றல் எனைப் பாக்கட்குஞ் சிறி
ளவேனும் பொருளாற் செய்யுள் வேறுபட்டுவரும் விதியின்மையின்
ண்டு அவை ஆராய்ச்சியின்ருயிற்று. இது வெண்பாவாய் வருதலிற்
றித்த பொருளை மறையாது செப்பிக் கூறவேண்டும். இது குறித்த
பொருளை மறைத்து வந்தமையானுந் தனக்கு உரிய வெண்டளையான் வந்த
மையானுங் கலிவெண்பாட்டாயிற்று. "நெடுவெண் பாட்டே முந்நா
டித்தே - குறுவெண் பாட்டி னளவெழு சீரே"† எனவே, நெடுவெண்

ாப் பன்னீரடியின் இகவாவென்றலின்
இதற்குப் பன்னீரடி பெருமை)யன்று
கொண்டார். இக்கலித்தொகையின்
இவ்விலக்கணம் பெற்றுவரும் ாட்டு
எட்டுள. அவை வந்தவழிக் கூறுதும்.
பன்னீரடியின் இகந்து வருங்
கலிவெண்பாட்டுக்களுக்கும் அவை
வந்துழி அவற்றவற்றிலக்கணங் கூறுதும்.

தலைவி உடன்
கொண்டுபோவெனக் கூறுதல்
"மரபுநிலை திரியா
மாட்சிய" ‡ என்னும் அகத்திணையியற் சூத்திரத்து அமைத்தாம்.
இதனைத் தோழி கூற்றாக்கிக் கூறிற் காடு கடுமையவென்று உடன்
சேறலை மறுத்துக் கூறினாற் றலைவி
இறந்துபடும், அவள் இறந்துபடுதலை
அறியாதிருந்தீர்போல இவை
கூறலென்னெனக் க.
(ரு)

எ

வேனி லுழந்த வறிதுயங்
கோய்களிறு
வானீங்கு வைப்பின்

வழங்காத்தோர் நீர்க்கவாஅங்
கானங் கடத்தி ரெனக்கேட்பின் யானென்
றுசாவுகோ வைய சிறிது ;

*

ரு. நீயே, செய்வினை மருங்கிற் செலவயர்ந் தியாழநின்
கைபுனை வல்வின் ஞாணுளர் தீயே[1]
இவட்கே, செய்வுறு மண்டில
மையாப் பதுபோன்[2]
மையில் வாண்முகம் பசப்பூ
ரும்மே ;

நீயே, வினைமாண் காழகம் வீங்கக் கட்டிப்
கo. புனைமாண் மரீஇய வம்பு தெரிதியே

* தொல். பொருள்: சசுரு. † தொல். பொருள்: சஎo.
‡ தொல். பொருள்: சரு.
(பாடம்) 1. ஞாணுர்தீயே. 2. மண்டலமையாப்பதுபோன்.

௨௫

இவட்கே, சுனைமா ணீலங்
காரெதிர் பவைபோ
லினைநோக் குண்கண் ணீர்நில்
லாவே ;
நீயே, புலம்பி லுள்ள[1]
மொடு பொருள்வயிற் செலீஇய[2]
வலம்படு திகிரி வாய்நீ
வுதியே
இவட்கே, அலங்கிதழ்க்
கோடல் வீயுகு பவைபோ
லிலங்கே ரெல்வளை யிறையூ

ரும்மே ;

எனநின்,
சென்னவை யரவத்து
பிணையவ ணீநீப்பிற்
றன்னலங் கடைகொளப்
படுதலின் மற்றிவ
ளின்னுயிர் தருதலு
மாற்றுமோ
முன்னிய தேஎத்து
முயன்றுசெய் பொருளே.

இது, பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைமகற்கு நீர் பிரிகின்றீரென்று

யான்கூறத்

தலைவி கேட்பின் அவட்கு அக்காலத்து நிகழ்வனவற்றை நும்மோடு ஆராய்வ

தடையேன்; நீர் செய்யும் பொருள் இவள் உயிரையுந் தருகிற்குமோ எனச்

செலவழுங்கக் கூறியது.

இஃது "உடன்சேறல் செய்கையோ டன்னவை பிறவு - மடம்பட வந்த தோழி கண்ணும்" * என்பதனுட் செய்கை கூறுகின்றது.

(க-ச) வேனி லுழந்த . . . . சிறிது :—

(இ - ள்.) முதுவேனிற் காலத்தாலே வருந்தின உடல் சிறிதாக வருந் தும் ஒய்ந்த களிறுகள் மழை நீங்குதற்குக் காரணமான கொடுமையையுடைய ஊர்களிலே தண்ணீருண்டற்கு ஊரப்படாத பேய்த்தேரைத் தண்ணீ ரென்று அவாவுங் காட்டை நீர் போவீரென்று யான் கூறுதலைக்கேட்பின் நீர் செல்லுங்காலத்து அவட்கு நிகழ்வதொன்றை யான் சிறிது

நும்மொடு உசாவு

வேனோ ?

இதனாற் றலைவற்குச்
இது தரவு.

(டு—சு) நீயே,
(இ - ள்.) ஐயனே,

குழ்ச்சி பிறந்தது.

செய்வினை . . . . நீயே :—
நீ செல்கின்ற[3] காரியத்திடத்தே செல்லுதலை
மனத்தான் நிகழ்த்துகையினாலே
நின்னுடைய கையாலே எழுதி
வழித்த வலிதாகிய வில்லினாணைத்
தடவாநின்றாய் ;

* தொல். பொருள்: கசசு.

(பாடம்) 1. பகப்பிடிவன்ன.
2. செகீமெயர். 3. செய்மென் ம. உது

கலித்தொகை

[கலி - எ

யாழ, அசை.
உளர்தியென்னும் முன்னிலைவினை விகாரத்தால் நீண்டது.

(எ—அ) இவட்கே, செய்வுறு

பசப்பூநம்மே :—

(இ - ள்.) இக்காலத்திவளுக்கு
மறுவறச் செய்தலுறுகின்றதொரு

மதியிடத்தே மேகம் பரக்கின்ற தன்மைபோல மறுவில்லாத ஒளியையுடைய முகத்தே பசப்புப் பரவாநிற்கும்;

செய்வுறுமண்டிலம், இல்பொருளுவமை.

(௯—௧௦) நீயே, வினைமாண் . . . . தேரீதியே:—

(இ - ள்.) நீ தொழில் மாட்சிமைப்பட்ட கைச்சாட்டை இறுகக்கட்டி . நீ மருவிப்போந்த புனை தன்மாட்சிமைப்பட்ட அம்புகளைத் தெரியாநின்றாய்;

(௧௧—௧௨) இவட்கே, சுனைமாஸ் . .

. . நீல்லாவே :—

· (இ - ள்.) இக்காலத்திவளுக்குச் சுனையிடத்து மாட்சிமைப்பட்ட நீலம் மழையை எதிர்கொள்ளுமவை நீர்சொரியுமாறுபோல வருந்தும் பார்வை யினையுடைய மையுண்கண் நீர் நில்லாவாய் வீழாநிற்கும்;

கண் நீர்விழுமென இடத்துநிகழ்பொருளின் தொழில் இடத்துமேல் நின்றது.

இணைநோக்கும் பாடம்.

(கரு—கச) நீயே, புலம்பில் .

. . . நீவுதியே :—

(இ - ள்.) நீ பிரிகின்றேமென்கின்ற தனிமையில்லாத நெஞ்சத்தோடே பொருளைத் தேடற்குப்போக வெற்றியுண்டாகின்ற சக்கரத்தினது வாயைத் துகள்போகத் துடையாநின்றாய் ;

(கரு—கசு) இவட்கே, அலங்கிதழ்க்

. . . . இறையூரும்மே :—

(இ - ள்.) இக்காலத்திவளுக்கு அசைகின்ற இதழினையுடைய கோடற்பூ ஊழ்த்து விழுகின்றவைபோல விளங்கும் அழகினையுடைய ஒளிபொருந்தின வளை இறையினின்றுங் கழலாநிற்கும் ;

இவை மூன்றுந் தாழிசை.

(கஎ—உக) எனநின், சேன்னவை . . . . போருளே :—

(இ - ள்.) நீ செல்கின்றது எமக்குக் குற்றத்தைச் செய்ய[1] நின்னுடைய ஆரவாரத்தும் இத்தன்மையளானவள், தன்னுடைய நலம் நீ நீ

(பாடம்) 1. செய்யு.

பாலை - எ]

பாலைக்கலி

உ(ூ

குலையாயின் இறந்துபடுங்

காலத்தாலே

கைக்கொள்ளப்படுகையினுலே, நின்னை ஒன்று வினவுகின்றேன்; நீ கருதின தேயத்துச்சென்று முயன்று தேடும் பொருள் இன்பந் தருதலேயன்றி இவள் இனிய உயிரைத் தருதலை செய்யுமோ ?

'என' ஆசை.

இதனுற் றலைவற்கு அசைவு பிறந்தது.

'எனநின்' தனிச்சொல்; எஞ்சியது, சுரிதகம்.

" தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்து - மைஞ்சீ ரடுக்கியு மாறு மெய் பெற்றும் - வெண்பா வியலான்

வெளிப்படத் தோன்றும் ''* என்
தனனகி 1, 'நீயே', 'இவட்கே'
என்னுஞ் சொற்கள்
இடைநிலைப்பாட்டோ(கூடி
ஐஞ்சீரடுக்கிவந்த
கலிவெண்பாட்டாயினும் அத்தரவு
வெண்பாவா ஒழிந்தன வெண்பா
அன்மையிற் கொச்சக மாயிற்று.

(சு

அ.

நடுவிகந் தொரீஇ
நயனில்லான் வினைவாங்கக்
கொடிதோர்த்த மன்னவன்
கோல்போல ஞாயிறு

கடுகுபு கதிர்மூட்டிக்
காய்சினந் தெறுதலி
னூற னூறு கமழ்கடாஅத்
தொல்கிய வெழில்வேழம்
ரு. வறனுழு நாஞ்சில்போன்
மருப்பூன்றி நிலஞ்சேர
விறன்மலை வெம்பிய
போக்கரு வெஞ்சுரஞ்
சொல்லா திறப்பத்
துணிந்தனிர்க் கொருபொருள்
சொல்லுவ துடையேன்
கேண்மின்மற் றைஇய ;
வீழுநர்க் கிறைச்சியாய்

விரல்கவர் பிசைக்குங்கோ ௧0.
லேழுந்தம் பயன்கெட
விடைநின்ற நரம்பறூஉம்
யாழினுந் நிலையிலாப்
பொருளையு நச்சுபவோ;

மரீஇத்தாங் கொண்டாரைக்
கொண்டக்காற் போலாது
பிரியுங்காற் பிறரெள்ளப்

பீடின்றிப் புறமாறுந்
திருவினுந் நிலையிலாப்
பொருளையு நச்சுபவோ;

௧௫. புரைதவப் பயனோக்கார்
தம்மாக்க முயல்வாரை

வரைவின்றிச்
செறும்பொழுதிற் கண்ணோடா
துயிர்வௌவு
மரைசினுங் நிலையிலாப்
பொருளையு நச்சுபவோ ;

---

* தொல், பொருள் - சுகூசு.

(பாடம்) 1. என்பதனாற் கூறுகி.

உகூ

கலித்தொகை

[கலி - அ

எனவாங்கு,

நச்சல் கூடாது பெரும
விச்செல உ௦.
வொழிதல் வேண்டுவல் சூழிற்
பழியின்று
மன்னவன் புறந்தர வருவிருந்
தோம்பித்
தன்னகர்[1] விழையக் கூடி

னின்னுறல் வியன்மார்ப
வதுமனும் பொருளே.

இது சொல்லாது பிரியலுற்ற தலைவன்

குறிப்பறிந்து தோழி பொருளாது நிலை யாமை கூறி அவளோடுகூடிச் செல்கின்ற இல்வாழ்க்கைச்செலவே பொரு ளென அவன் செலவழுங்கக் கூறியது.

(க—அ) நடுவிகந்து . . . . றைஇய:—

(இ - ள்.) நடுவுநிலையைக் கைவிட்டு நீங்கி அருளில்லாத அமைச்சன் தன் மனதிற்கிடந்த காரியத்தை மனத்தினின்றுந் தோற்றுவித்த அது கேட்டுக் கொடுந்தொழிலைச் சூழ்ந்த அரசனது கொடுங்கோல் சுடுமாறு போலப் பகலோன் கடுகிக்

காய்கின்ற கிரணங்களைச் செலுத்திச் சினத்தாற் சுடுகையினாலே முன்பு வண்டுகள் உறுதலையுடைத்தாய்* ஊறுகின்ற கமழும் மதத்தினையுடைத்தாய் இப்பொழுது கெட்ட அழகையுடைய யானைகள்[2] ஈரமற்ற நிலத்தை உழுகின்ற கலப்பைகள்போலக் கொம்புகளை ஊன்றிக் கையை நிமிர்த்து நிலத்தே கிடவாநிற்க† வெற்றியையுடைய மலைகள் வெம்பு

தலைச்செய்த போதற்றொழில் அரிய வெய்யகாட்டை, எங்களுக்குச்சொல்லாதே போகத்துணிந்த நமக்கு ஒரு காரியத்தினைக் கூறுந் தன்மையை

யுடையேன், அதனைக் கேட்பீராக !

இதனால் தோழிக்குச் சூழ்ச்சி பிறந்தது.

'வாங்க' என்றது ''விருத்திவாங்க'' என்றது போல் நின்றது; உறல், வாயிடத்தேவந்து உறுதலுமாம்.

பொருள், ஆகுபெயர் ; மற்று

அசை.

இது தரவு.

(கூ—கக) வீழுநர்க் . . .

நச்சுபவோ:—

(இ - ள்.) ஐயனே, விரும்புவார்க்கு நேயமாய் விரலாலே வாசிக்கப்பட்டு ஒலிக்கும் நரம்பு எழுந் தம்முடைய பயன் இன்றும்படி தானக்கோவின் அகப்பட்டு இடை நின்ற நரம்பு அற்றுப்போம் யாழினுங்காட்டில் நிலைபேறில்லாத பொருளையும் அறிவுடையோர்கள் நச்சுவர்களோ? நச்சார் காண்.

---

* அகம் - எஅ; புறம் - கூக. † புறம் - கசூ; களவழி - சo.
(பாடம்) 1. நன்னகர். 2. யானை.

பாலை - எ]

பாலைக்கலி

உள

(கஉ—கச) மரீஇ . .

நச்சுபவோ:—

(இ - ள்.) தாம் மருவி மனத்தாற் கொண்டவர்களைத் தம்மனங் கொண்ட காலம்போலாகாமற் பிரியுமிடத்துப் பிறர் இகழும்படி அவர்க்கொரு வலியின்றாக அவர்கள் அப்புறமாக[1] மனம் மாறுந் திருமகளினுங் காட்டில் நிலைபேறில்லாத பொருளையும் அறிவுடையோர்கள் நச்சுவர்களோ?

. . .

நசசரா காண.

'தாம்' பன்மையொருமை மயக்கம். தானும் பாடம்.

'கொண்டக்கா'வென்னும் பெயரெச்சத்திற் கால் ஈண்டுக் காலங் காட் டிற்று. 'கொண்டக்காற்

போலா'தென்றது தான்வருதற்கு முன்பு அவர் நின்ற நிலைமையுங்[2] கெடுத்துப்போமென்னும் நிலையிற்று.[3]

(கசு—கஎ) புரைதவ . . . . நச்சுபவோ:—

(இ - ள்.) தமக்கு உயர்ச்சி மிகும்படியாகத் தாம் பெறும் பயனைப் பாராதே அரசாக்கத்தை முயன்றும்,[4] அமைச்சரைக் கோபிக்கும்பொழுது நங்காரியத்தினை முயன்றவரென்று ஒரு வரையின்றிப் பழைமையையும் பாராதே பொருண் முதலியனவன்றி உயிரைக்கொள்ளும் அரசினுங் காட் டில் நிலைபே றில்லாத

பொருளையும் அறிவுடையோர்கள் நச்சுவார்களோ? நச்சார் காண்.

அத்தன்மையான அரசனும் உயிரை வெளவிய[5] அன்றே கெடுவ னென்றார்.

இவை மூன்றுந் தாழிசை.

(கஅ) எனவாங்கு :—

(இ - ள்.) என்று யான் சொல்லாநிற்க. ஆங்கு, அசை.

இது தனிச்சொல்.

. . பொருளே :—

(இ - ள்.) பெருமா! பொருளே நச்சுதல் நினக்குப் பொருந்தாதால், ஆராயிற் பழியின்றாக இச்செலவை நீ தவிர்தலை யான் விரும்புவேன்; அரசன் காக்க வருகின்ற விருந்தினரைப் பாதுகாத்துத் தன்மனைவி விரும்பும்படி அவளுடன் கூடியிருக்கில் இனிய முயக்கத்தையுடைத்தாகிய அகற்சியை யுடைய மார்பனே நிலைபெறும் பொருள் அதுகாண்.

நகர், ஆகுபெயர்.

(பாடம்) 1. புறமாக. 2.

நிலையையுங், 3. நிலைவிற்ற. 4. முயன்று போதும், 5. அத்தன்மையாலுயிரை வௌவிய அரசனும்,

௬அ

கலித்தொகை

[கலி - ௬

இதனாற் றலைவற்குக் கருதுதல்பிறந்தது; தோழிக்குச் சூழ்ச்சி பிறந்தது.

இது, 'பழியின்'றெனத் தாழிசைப் பொருள்களைக்கொண்டு, பின்பு 'மன்னவன் புறந்தர வருவிருந்து...பொருளே' யெனப் போக்கியற் பொருளை யுக்கொண்டு இற்ற சுரிதகமும் ஏனை உறுப்புக்களும் பெற்ற ஒத்தாழிசைக் கலி. "தரவிய லொத்தும்" * என்னுஞ் சூத்திரத்துப் புரைதீர் என்பதனாற் போக்கியற் பொருளுங் கொண்டு புடைபடாது வந்தது. (எ)

௬.

எறித்தரு கதிர்தாங்கி

யேந்திய குடைநீழ

உறித்தாழ்ந்த கரகமு முறைசான்ற முக்கோலு
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை யந்தணீர்
வெவ்விடைச் செலன்மாலை யொழுக்கத்தீ ரிவ்விடை
யென்மக ளொருத்தியும் பிறண்மக னொருவனுந்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சிய

ரன்னா ரிருவரைக் காணிரோ பெரும
காணே மல்லேங் கண்டனங் கடத்திடை
யாணெழி லண்ணலோ டருஞ்சுர முன்னிய
மாணிழை மடவர ருயிர்நீர் போறிர் ;

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினு மலைக்கவைதா மென்செய்யு
நினையுங்கா னும்மக ளுமக்குமாங் கனையளே ;

சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினு நீர்க்கவைதா மென்செய்யுந்
தேருங்கா னும்மக ளுமக்குமாங் கனையளே ;

ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யுஞ்
௨0. சூழுங்கா லும்மக ளுமக்குமாங் கனையளே ;

எனவாங்கு,

இறந்த கற்பினாட் கெவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றன
ளறந்தலை பிரியா வாறுமற் றதுவே.

* தொல். பொருள்: ௩௯௪.

பாலை - அ]

பாலைக்கலி

௨௯

இஃது உடன்போய தலைவிபின் சென்ற செவிலி இடைச்சுரத்து முக்கோற்

பகவரைக் கண்டு

இவ்வகைப்பட்டாரை ஆண்டுக்

காணீரோவென

வினவியாட்கு, அவரைக் கண்டு அஃதறமெனவே கருதிப்போந்தேம்[1] நீரும் அவர்திறத்து எவ்வம்பட வேண்டாவென எடுத்துக்காட்டி,[2] அவர்

தெருட்டியது.

(க—கக) எறித்தரு . . . . போறிர்:—

(இ - ள்.) பெருமா! அந்தணீர்! உறியிலே தங்கின கமண்டலத்தை யும், அரி அயன் அரனென்னும் மூவரும் ஒருவரென்று சொல்லுதல் தன்னிடத்தே அமைந்த முக்கோலையும் முறைமைபடத் தோளிலே வைத்து, எறித்தலைச்செய்கின்ற ஞாயிற்றின்

கதிர்களைத் தாங்குகையினாலே
எடுக்கப் பட்ட குடைநிழலிலே,
வெவ்விய காட்டிடத்தே போதலை
இயல்பாகவுடைய
ஒழுக்கத்தினையுடையீராதலான்*
உம்மை வினவுகின்றேன் ;
இக்காட்டிடத்து என்னுடைய
மகளொருத்தியும் வேறொருத்தி
மகனொருவனும் பிறரறியாமற்
றங்களிலே கூடின தாங்கள்
இப்பொழுது பிறர் அறிந்த
கூட்டத்தினை யுடையராயினார் ;
அத்தன்மையார் இருவரைக்
காணுதிருந்தீரோ ? இக்
காட்டிடைக் காணுதிருந்தேம்
அல்லேம்; கண்டு அஃதறமென்றே

கருதிப்

போக்தேம்; ஆண்மக்கட்குக் கூறும் அழகினையுடைய தலைவனோடே இவ்வரிய சுரத்தைப் போகக்கருதிப் போந்த மாட்சிமைப்பட்ட அணியினை யுடைய மடப்பத்தையுடையாளுக்குத் தாயாந்தன்மையை உடையீர்போலே இருந்தீர்;

அரியயன்ரனென்னும் மூவரையும் ஒருவனாகவல்லது வேறாக[3] நினையாத நெஞ்சத்தாலே ஐம்பொறியும் நமக்கு ஏவல் செய்தலை இயல்பாகவுடைய கோட்பாட்டையும் உமக்குரிய ஒழுக்கத்தையுமுடைய 'அந்தணீ'ரென்க, குறிப்பு, ஆகுபெயர்.

'பெரும'வென்றான் அவர்கள் ஆசிரியனாகிய பெரியோனை. அந்தணர் அவன் மாணாக்கர். அவர்களைப் 'பெருமா', 'அந்தணீ'ரென விளித்தான்;

பெயர்கள் ஒருவனை ஒருவன்
ஆற்றுப்படுத்த செய்யுளின்மையின்
முன்னிலை சுட்டிய ஒருமைக்கிளவி
பன்மையொடு முடிந்ததல்லாமை
யுணர்க.

காணிரோ? குறுகின்றது.
கண்டேமென்றுமற் 'காணேமல்லேங்

கண்டன' மென்றதனுல் அங்ஙனம் போகின்றவரை அறிந்து விலக்கல் அரி மன்மெறன்று போர்ந்தேமாகக்[4] கொள்க. போறிரென்ருர், தேடிவருவாள் செவிலி யென்பது உணர்ந்து.

இது தரவு.

---

* சிலப் உஉ : கசு - கக; குறுக். அருசு; முல்லை. கஎ - கஅ.

(பாடம்) 1. பேர்ந்தேம். 2. எதுக்காட்டி. 3. வெவ்வேருக.

4. பெயர்ந்தே மென்ருக

கலித்தொகை

[கலி - கூ

(கஉ—க௪) பலவுறு .

. . . கனையளே:—

(இ - ள்.) நறியனபலவுங் கூடும் நறிய சந்தனந் தங்கண்[1] மெய்ப்படுப் பார்க்குப் பயன்கொடுப்பதல்லது மலையிடத்தே பிறந்தனவாயினும் அச் சந்தனங்கடாம் அம்மலைக்கு என்ன பயனைக் கொடுக்கும்? ஆராயுங்காலத்து நம்முடையமகளும் பயன்படும் பருவத்து நமக்கும் பயன்படாள்;

(கரு—கஎ) சீர்கெழு . . . . . கனையளே:—

(இ - ள்.) தலைமை பொருந்திய வெள்ளிய முத்துக்கள் அணிவார்க்குப் பயன்படுவதல்லது கடலிடத்தே பிறந்தனவாயினும் அம்முத்தங்கடாம் அக் கடலுக்கு என்ன பயனைக் கொடுக்கும்?* ஆராயுங்காலத்து நம்முடைய மகளும் பயன்படும் பருவத்து நமக்கும் பயன்படாள்;

(கஅ—உ0) ஏழ்புணர் . . . . . கனையளே :—

(இ - ள்.) எழுநரம்பாற் கூட்டிய இனிய ஓசைகள் பாடுவார்க்குப் பயன்கொடுத்தலல்லது யாழிடத்தே பிறந்தனவாயினும் அவ்வோசைகடாம் அந்த யாழுக்கு என்னபயனைக் கொடுக்கும்? ஆராயுங் காலத்து நம்முடைய மகளும் பயன்படும் பருவத்து நமக்கும் பயன்படாள்;

இவை மூன்றுந் தாழிசை.

(உக) எனவாங்கு :—

அசை.

இது தனிச்சொல்.

(உஉ—உ௪) இறந்த . .

மற்றதுவே :—

(இ - ள்.) ஆதலான் மிக்க கற்பினையுடையாளுக்கு வருத்தமுறாதே கொள்ளுமின்! இருமுதுகுரவரிலுஞ் சிறந்த கணவனை வழிபட்டு அவன் பின்னே போனாள்; இம்மையில் இங்ஙனங் கற்புப் பூண்டு நிகழ்த்தும் இவ்வில்லறமே அறங்களிற் றலையான அறம்;† மறுமையில் இவ்விருவரும் நீங்காமற் சுவர்க்கத்திலே செல்லும் வழியும் அவ்வழிபாடே.

இது சுரிதகம்.

மற்று வினைமாற்றாய் மறுமையை உணர்த்திற்று. ஆறுமென்ற உம்மை சிறப்பு.

இதனாற் செவிலிக்குத் தன்மையென்னும் மெய்ப்பாடு பிறந்தது.

"நூலே கரக முக்கோல் மனையே - யாயுங் காலை யந்தணர்க் குரிய"* படான்மின் ஒருசொல், படர்மினென்பதன் மறையாதலின்.

அறத்திடத்து நின்று நீங்காதவாறென்று பொருள்கூறிற் றலைப்பிரியா வாறெனப் பகரவொற்றுப் பெறுதல்வேண்டும், "ஐகாரவிறுதிப் பெயர் நிலை முன்னர் - வேற்றுமை யாயின் வல்லெழுத்துமிகுமே"‡ என்றலின்.

* சீவகசிந். ருசுகூ. † குறள்: சகூ ‡ தொல். எழுத்து: உ௮௦.

(பாடம்) 1. சந்தன மரங்கள்.

என்பதனுற் கரகமும் முக்கோலுங் கூறினர்.

இது பதினேரடித்தாவும் மூன்றடித் தாழிசையும், அசைநிலையாகிய தனிச்சொல்லுஞ் சிறுமைக்கெல்லை கூருமையின் ஆசிரியத்திற்குக் கூறிய மூன்றடிச் சிறுமையும் பெற்ற சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (அ)

கO.

வறியவ னிளமைபோல் வாடிய சினையவாய்ச்

சிறியவன் செல்வம்போற்
சேர்ந்தார்க்கு நிழலின்றி
யார்கண்ணு மிகந்துசெய்
திசைகெட்டா னிறுதிபோல்
வேரொடு மரம்வெம்ப
விரிகதிர் தெறுதலி
ரு. னலவுற்றுக் குடிகூவ
வாறின்றிப் பொருள்வெஃகிக்
கொலையஞ்சா வினைவராற்
கோல்கோடி யவனிழ
லுலகுபோ லுலறிய வுயர்மர
வெஞ்சுரம்;
இடைகொண்டு பொருள்வயி
னிறத்திரீ யெனக்கேட்பி

னுடைபுநெஞ் சுகவாங்கே
யொளியோடற் பாண்மன்னோ ௧௦.
படையமை சேக்கையுட் பாயலி
னறியாய்நீ
புடைபெயர்வா யாயினும்
புலம்புகொண் டினைபவள் ;
முனிவின்றி முயல்பொருட்
கிறத்திநீ யெனக்கேட்பிற்
பனியகண் படலொல்லா
படர்கூர்கிற் பாண்மன்னோ
நனிகொண்ட சாயலா
ணயந்துநீ நகைபாகத்
௧௫. துனிசெய்து நீடினுந்
துறப்பஞ்சிக் கலுழ்பவள் ;

பொருளைக்கிப் பிரிந்தநீ
போகுதி யெனக்கேட்பின்
மருளைக்க மடிந்தாங்கே மயல்கூர்கிற்
பாண்மன்னே

விருளைக்க மிடையின்றி யீரத்தி னியன்றநின்
னருளைக்க மழியினு மவலங்கொண் டழிபவள் ;

௨0.

எனவாங்கு,
வினைவெஃகி நீசெலின்

விடும்இவ ளுயிரெனப்
புனையிழாய் நின்னிலை
யான்கூறப் பையென

* தொல். பொருள்: ௬௨௫.

கலித்தொகை

[கலி - ௪0

நிலவுவே னெடுந்தகை நீளிடைச்

செலவொழிர் தனளுற் செறிகநின் வளையே.

இது தலைமகளுற் பிரிவுணர்த்தப்பட்ட தோழி, இவ்வகைப்பட்ட சுரத்தைப்

பொருள் காரணமாகப்

பிரிகின்றீரெனக் கேட்பின்

இவ்வகையாகற்பால

ளெனச்சொல்லிச்

செலவழுங்குவித்தமை; தலைமகட்குச்

சொல்லியது.

(க—எ) வறியவள்

வெஞ்சுரம் :—

(இ - ள்.) பிரமசரியங் காத்தலான் இளமைப் பயன்கொள்ளாது வறியனானவன் இளமைச் செவ்வியின்றி இருக்குமாறுபோலத் * தளிர்கள் வாடின கொம்புகளையுடையவாய்க், கொடுத்தற்கு மனஞ் சிறியனானவ னுடைய செல்வந் தன்னைச்சேர்ந்தவர் தம்மைப் † பாதுகாவாதவாறுபோலத் தன்னைச் சேர்ந்தவர்களுக்கு நிழலின்றாய், யாவரிடத்தும் உலக ஒழுக்கத்தைக் கடந்து தீங்குசெய்து பின்பு புகழில்லையானவனுடைய

முடிவுகாலத்து அவன் கிளையென்றி அவனுங் கெடுமாறுபோல, மரஞ் சினையென்ற் வேரோடே நின்று வெம்பும்படியாக ஞாயிற்றினுடைய பரந்த கதிர்கள் சுடுகையினாலே வருத்தமுற்றுக், குடிமக்கள் கூப்பிடும்படி கொலைத் தொழிலுக்கு அஞ்சாத அமைச்சராலே நெறியன்றிப் பொருளை வாங்கிக் கொண்டு செங்கோல் வளைந்த அரசனுடைய குடைநிழலிற் றங்கிய உலகம்போலே உலறின உயர்ந்த மரங்களுடைய வெய்ய காட்டை[1]‡;

சினையவாய், நிழலின்றாய், வெம்பவென்க. மரமென்க.

தெறுகையினாலே உலறிய

இது தரவு.

(அ—கக) இடைகோணா . . டினைபவள் :—

(இ - ள்.) பதம்படுத்தல்[2] பொருந்திய படுக்கையிடத்தே து
லிடத்து நீ அவள் வருத்தம் அறியாயாய் அவள் முயங்கிய கையை விட்
நீங்குவாயாயினுந் தனிமைகொண்டு வருந்தும் அவள் கூட்டத்திற்கு
இடையே பிரிதலை மனத்தேகொண்டு வேற்றுநாட்டிடத்தே நிலைநில்லா
பொருளினிடத்தே நீ போவையென்று யான் கூறக்கேட்பின் நெஞ்சழிந்
கெட்டுப்போக மிகவும் ஒளிகெடுவாளோ? இறந்துபடுவாளே;

இனைபவள் ஒளியோடற்பாலளோ[3]வென்க. படையாவன, "சிறு
பூளை செம்பஞ்சு வெண்பஞ்சு சேண - முறுதூவி தாமிவையோ ரைந்து.'
என்பனவாம்.

---

* கலி. கஅ: கடு. † குறள் - அகஎ. ‡ கலி - அ.

(பாடம்) 1. காட்டிடை. 2. டலவும்படுத்தல். 3. பாளோ.

ஒளியோடற்பாள், முற்றுவினைத் திரிசொல். அறியாய், வினையெச்ச முற்று. ஓகாரம், எதிர்மறை.

(கஉ—கரு) முனிவின்றி கலுழ்பவள் :—

(இ - ள்.) மிகுதியைக்கொண்ட மென்மையையுடையவள் நீ ஓர் விளையாட்டை விரும்பி விளையாட்டாக ஒரு நீக்கத்தைச்செய்து அதிலே சிறிது பொழுது நீட்டிப்பினும் அத்துணை நீக்கத்துக்கு அஞ்சிக் கலங்குகின்றவள், யாம் இவளைப் பிரிகின்றேமென்னும் வெறுப்பின்றி முயன்று தேடும் பொருள்காரணமாக நீ போவையென்று யான் கூறக்கேட்பின், நீரையுடையனவாகிய கண்கள் மிகவும் உறக்கத்தைப் பொருந்தாவாய் நினைவு மிகுவாளோ? இறந்துபடுவாளே;

(கசு—கக) பொருளேக்கீ டழிபவள் :—

(இ - ள்.) மனத்திற்கு இருளைத் தருகின்ற பார்வை இடையின்றி அருளிடத்துச்[1] சென்றபார்வை நீங்கினும் வருத்தங்கொண்டு நெஞ்சழி பவள், நீ பொருளை நன்றென்று கருதித் தன்னைப்பிரிந்து அவ்விடத்தே போவையென்று யான் கூறக் கேட்பிற், கண்டார் மருளும் அழகுகெட்டு மிகவும் மயக்கம் மிகுவாளோ? இறந்துபடுவாளே;

இவை மூன்றுந் தாழிசை.

(உ0) எனவாங்கு :—

அசை.

இது தனிச் சொல்.

(உக—உச) வினைவெஃகி வளையே :—

(இ - ள்.) புனைந்த பூணினையுடையாய்! இவளுடைய உயிர் நீ பொருளைத்தேடுதலை விரும்பிப் போகின் தானும் போமென்று* நின் பிரிவாற்றுமையை யான் சொல்லப், புகழ்ச்சி நிலைபெறும் வேலினையுடைய நெடிய தகையினையுடையான் நீண்ட வழியிடத்துப் போக்கைப் பையெனத் தவிர்த்தனன்; இனி நின் வளை[2] கழலாதிருப்பனவாக!

ஆல், அசை.

இதனாற் றலைவிக்குப் புணர்வென்னும் உவகையுந் தலைவற்கு இழிவுந் தோழிக்கு அச்சமும் பிறந்தன.

இது சுரிதகம்.

---

* கலி. ரு: கஅ - கசு.

(பாடம்) 1. அவனிடத்து. 2. வளைகள்.

5 டசு

கலித்தொகை

[கலி - க.

இஃது எழுதித்தரவும் நான்கடித்தாழிசையும் அசைநிலையான அடைநிலைக்கிளவியும் நான்கடிச் சுரிதகமும் பெற்று வந்த ஒத்தாழிசைக்கலி; (க)

கக.

அரிதாய் வறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப்[1] பொருள்வயிற் சென்றநங்[2] காதலர்
வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி ;

அடிதாங்கு மளவின்றி யழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாஅய் காடென்றா ரக்காட்டுட்
டுடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே ;

இன்பத்தி னிகந்தொரீஇ யிலைதீந்த வுலவையாற்
றுன்புறூஉந் தகையவே காடென்றா ரக்காட்டு
ளன்புகொண் மடப்பெடை யசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே ;

கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலாற்
றுன்னரூஉந் தகையவே காடென்றா ரக்காட்டு
ளின்னிழ லின்மையான் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவு முரைத்தனரே ;

எனவாங்கு,

இனைநல முடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுந ரல்லர் மனைவயிற்
பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே.

இது தலைவி, மூன்றன்பகுதி தலைவன்கூறிப் பொருள்வயிற் பிரிகின்ற காலத்துக் காடு கடியவாயினும் இவ்வகைப்பட்டனவும் உளவென்று கூறினர், அவை காண்டலின் வருவரெனத்தோழிக்குக் கூறி அதற்கு நிமித்தமுங் கூறி ஆற்றுவித்தது.

---

1. பிரிவுள்ளிப். 2. பெயர்ந்தசுங்.

பாலை - கo]

பாலைக்கலி

௩௫

மூன்றன்பகுதி கூறுதலாவது, அறத்தினாற் பொருளாக்கி அப்பொருளாற் காமம் நுகர்வேனென்றலாம். உடைமையது உயர்ச்சி கூறிப் பிரிந்தானெனக் கிளவி

கூறிற் பொருள்வயிற் பிரிதலின்றும், அது பொருள்வயிற்பிரிவை விலக்கு மென்றலின்.

(க) அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும் :—

(இ - ள்.) தம்மை அருள்பண்ணிவந்த அந்தணர் தாபதர் முதலியோ ருக்குப் பெறுதற்கரிதாய அறஞ்செய்தலைப் பொருந்தி வேண்டுவன கொடுத்தலும்;

இஃது அருளென்னும் மெய்ப்பாடு.

(உ) பெரிதாய பகைவென்று பேறுரைத் தேறுதலும் :—

(இ - ள்.) பெரிதாய பகைகளை[1] யெல்லாம்வென்று * அச்செருக்கினுற் றம்மை வழிபடாதாரை அழித்தலும் ;

(ரு) காதலிற் புரிவமர் புணர்ச்சியுந் தருமெண :—

(இ - ள்.) முற்பிறப்பில் இருவர்க்கும் உண்டான காதலினாலே இப் பிறப்பில் மனம்பொருந்துதல் அமர்ந்த

கூட்டத்தினையுந் தருமென்று நமக்குக் கூறி;

"துன்புறு பொழுதினு மெல்லாங் கிழவன் - வன்புறுத் தல்லது சேறல் இல்லை"†

என்பதனாற் றலைவன் வற்புறுத்திச் செல்கின்றமை இதனாற் பெற்றாம்.

(ச-ரு) பிரிவேண்ணிப் கேள்வினி :—

(இ - ள்.) பொருள்வயிற்பிரிவை

நன்றென்றெண்ணிப் போன நம்
முடைய காதலர் வருவர்போலே
இருந்தது; விளங்குகின்ற பூணினை
யுடையாய்! யான் அவர் வரவினைத்
துணிவல்; இப்பொழுது அதற்குக்
காரணங் கேள்;

பொருள் அளித்தலுந்
தெறுதலும் புணர்ச்சியுந்
தருமென ‡
எண்ணிச் சென்ற காதலரென்க.
இதனாற் போந்த பொருள் அருளி
யோர்க்கு அளித்த
அறத்தாலே பேறுரை அழித்துப்
பொருளைத்தேடி அப்
பொருளாற் புணர்ச்சிபெறுவேனென

மூன்றன்பகுதி கூறிஞெய்பிற்று.

இது தரவு.

* குறள். எடுகூ; சீவகசிந். சகூஎ. † தொல். பொருள்: கஅசு.
‡ குறள். எகூ0; புறம். உஅ: கடு-ககூ; சீவகசிந். சகூஎ.

ஙடசு

கலித்தொகை

(கூ—க) அடிதாங்தும்

முரைத்தனரே :—

(இ - ள்.) பொன்னாற் செய்த கனவிய குழையினையுடையாய்! காடுகள் நெருப்புப்போன்ற வெம்மையாலே அடிபொறுக்கும் அளவின்றிக் கடியவா யிருக்குமென்று சொன்னர் ; சொல்லிய காட்டகத்தே களிறு, துடிபோலும் அடியையுடைய யானைக்கன்றுகள் இழிந்து தாயுந் தந்தையும் உண்ண வேண்டுமென்று கருதாது கலக்கிய சிறிய நீரை, முதற் பிடியை ஊட்டிப் பின்பு தானும் உண்ணுமென்றுஞ் சொன்னர்;

(கO—கரு) இன்பத்தின் . . . முரைத்தனரே :—

(இ - ள்.) காடுகள் இலை பசுமை இகந்து, தீந்த கொம்புகளாலே இன்பத்தினின்று நீங்கிச்சென்றாரைத் துன்பமுறுத்துந் தகைமையையுடைய வாயே இருக்குமென்று சொன்னர் ; சொல்லிய காட்டிடத்தே புறவுகள் தாம் அன்புகொண்ட மடப்பத்தையுடைய பெடைகள் வெம்மையால் இளைத்த வருத்தத்தைத் தஞ் சிறகை விரித்து அதன் நிழலாலே அவ்வெம் மையைத் தீர்க்குமென்றுஞ்* சொன்னர்.

(கச-கஎ) கனிமிசை . . . . முரைத்தனரோ :—

(இ - ள்.) காடுகள் ஞாயிற்றினுடைய செறிந்த கதிர்கள் மலையின்மே னின்ற மூங்கில்கள் வாடும்படி சுடுதலாலே செல்வார்க்குச் சேருதலரிய தகைமையினை யுடையவாயே† இருக்குமென்று சொன்னார்; சொல்லிய காட்டிடத்தே கலைமான் இனியநிழ லில்லாதபடியாலே வருந்திய மடப பத்தையுடைய தன் பிணைக்குத் தான் நின்று தன்நிழலைக் கொடுத்

உயிரை அளியா நிற்குமென்றுஞ் ‡
சொன்னார்;
இவை மூன்றுந் தாழிசை.

(கஅ) எனவாங்கு :—

அசை.
இது தனிச்சொல்.

(கக-உஉ) இனைநலம் . . . . லிடனே :—

(இ - ள்.) இங்ஙனம் அவர்க்கு அருள்வந்தவை காட்டுதலின் அவ
வருந்துதற்குக் காரணமான நன்மைகளுடைய காட்டைப்போனவர் நம
புனைந்த நலத்தைக் கெடுக்குமவரல்லர்காண்; அதற்குக் காரண

* சீவகசிந். கக௮எ.

‡ சீவகசிந். கக௮௮.

† புறம். கஎ0 : பதிற்றுப்பத்து. சரு : கஉ - கச.

பாலை - கக]

பாலைக்கலி

௩௬

என்னெனின், நம்மனையிடத்துப்

பல்லியும் நன்றாகிய இடத்தே அவ

வரவுக்குப் பொருந்திக் கூறின; *

நல்ல அழகையுடைய மையுண்கண்ணும்

இடந்துடியாநிற்கும்.

பல்லி இசைத்தது, பிறிதின்கட்
டோன்றிய ஆக்கம் பற்றிய வியப்பு
இடந்துடித்தது தன்கட் டோன்றிய
ஆக்கம் பற்றிய வியப்பு.

பல்லியுங்கண்ணுமென்னும்
உம்மைகள் எச்சவும்மை. இனைநல
மென்பதற்கு இனையநலமென்பது
விகாரப்பட்டதென்பாரும் உளர்.

இனையநலமென்றுபாடமாயின்
இத்தன்மையவாய நலமென்க.

இப்பாட்டுப்
"புணர்ந்துடன் போகிய
கிழவோண் மனையிருக் - கிடைச்
சுரத் திறைச்சியும் வினையுஞ் சுட்டி
- யன்புறு தக்க கிளத்த றானே - கிழ
வோன் செய்வினைக் கச்ச மாகும்"

† என்னுஞ் சூத்திரத்துப் புணர்ந்
துடன்போகாத தலைவி
மனைக்கணிருந்து தலைவன்
அன்புறுத்தத்தக்கன
கூறக் கேட்டுத் தலைவன் தன்மேல்
அன்புறுதற்குத் தக்க கருப்பொருளைக்
கூறித் தலைவன் செய்வினைமுடியாது
வருவனென்னும் அச்சம் பிறவாமல்
மீண்டுவருவனெனத் துணிந்தே
கூறுமென்றலிற், 'புனைநலம் வாட்டுந
ரல்லர்' என வரவு கருதிக் கூறினள்.
ஆற்றுவிக்குந்தோழி[1] 'வருவர்கொல்'
லென ஐயுற்றுக் கூறலாகாமையிற்
றோழிகூற்றன்மை உணர்க.
இது சரிதகம்.
இஃது ஐந்தடித்தரவும்

நாலடித்தாழிசையும் அசைநிலையாகிய அடை

நிலைக்கிளவியும்[2] நான்கடிச்சுரிதகமும் பெற்றுவந்த ஒத்தாழிசைக்கலி. (கo)

கஉ.

இடுமு ணெடுவேலி போலக்
கொலைவர்
கொடுமரந் தேய்த்தார்
பதுக்கை நிரைத்த
கடுநவை யாராற் றறுசுனை
முற்றி
யுடங்குநீர் வேட்ட
வுடம்புயங் கியானை
ரு. கடுந்தாம் பதிபாங்குக்

கைசெறப் பட்டு
வெறிநிரை வேறாகச் சாரச்
சாரலோடி[3]
நெறிமயக் குற்ற நிரம்பாநீ
டத்தஞ்
சிறுநனி நீதுஞ்சி யேற்பினு
மஞ்சு
நறுநுக
னீத்துப் பொருள்வயிற் செல்வோ
௧௦. யுரனுடை யுள்ளத்தை
செய்பொருண் முற்றிய
வளமையா னாகும் பொருளிது வென்பா

---

* நற்றிணை - ௨௪௬ ; சீவகசிந்.
௧௯௦௧. † தொல், பொருள் : ௧௪அ.
(பாடம்) 1. தொழில், 2.

இடைநிலைக்கிளவியும். 3. சார்ச்சாரலோடி.

௩அ

கலித்தொகை

யிளமையுங் காமமு நின்பாணி நில்லா

விடைமுலைக் கோதை குழைய முயங்கு

முறைநாள் கழித லுறுதியைக் கண்டை

கடு. கடைநா ளிதுவென் றறிந்தாரு மில்லைப்

போற்றாய் பெருமநீ காமம் புகர்பட

வேற்றுமைக் கொண்டு
பொருள்வயிற் போகுவாய்

கூற்றமு மூப்பு மறந்தாரோ
டோரா அங்கு[1]
மாற்றுமைக் கொண்ட வழி.

இது தலைமகனாற் பிரிவுணர்த்தப்பட்ட
தோழி காட்டது கடுமையுந் தலைவியத்
மென்மையும் " நாளது சின்மையும்
இளமைய தருமையுந் தாளாண்பக்கமு
தகுதியதமைதியும் அன்பினதகலமும்
அகற்சியதருமையும் " * கூறிச் செ
வழுங்குவித்தது.

(இ - ள்.) கட்டு முள்ளால்.

இடும் நெடிய வேலிபோலக் கொலை,

தொழிலையுடைய வேடர் வில்லாலே கொல்லப்பட்டவருடைய உடல மற்றையவிட்ட இலைக்குவை நிரைத்துக் கிடக்கின்ற கடிய குற்றம் நிறைந், வழியில் நீர் அறுங் கடுஞ்சுனையைச் சூழ்ந்து தண்ணீருண்டலை விரும்பி உடம்பு வருந்தின யானைகள் தாஞ் சேரப்பதிந்து அவ்விடத்துக் கைக சுடப்பட்டு ஒழுங்குபட்ட திரள்கள் வெவ்வேறும்படி மலைச்சாரல்தோறு ஓடுகையினாலே பழைய வழிகள் மயங்கப்பட்ட தொலையாத நீண்ட கா।

டைப், பண்டு துயில்கொள்ளுங்
காலத்தின் மிகச் சிறிது பொழுது
தாழ்
 துத் துயில்கொண் டெழுந்திருப்பினும்
இதுவும் ஒன்றுடைத்தென்று அ(
 சும் நறிய நுதலை யுடையாளைக்
கைவிட்டுப் பொருளிடத்தே
வேட்கை

நிகழ்ந்து போகின்றவனே! நீதான் வலியுடைத்தாகிய மனத்தையுடையை தேடும்பொருளைத் தேடிமுடித்த செல்வத்தாலே உண்டாகும் பொரு தான் இவ்வின்பமென்று கூறுகின்றவனே! நீ அப்பொருளைத் தேடிவா குறித்த காலத்தளவும் இளமையுங் காமமும் நின் கையிடத்து நில்லாவா நாடோறுங் கழியும்;† அதுவே அன்றி இறக்கும் நாள் இதுவென், உலகத்திலே அறிந்தவர்களும் இல்லை‡; காதலான்[2] மூலையிடையிற் கோை குழையும்படி முயங்கும் முறைமையினையுடைய நாள்கள் இன்னும் அப்ப ணின்றிப்[3] போதலுருமையை நெஞ்சாலே காண்பாய்; காமதன்மங் குற்ற படும்படி அதனோடு வேறுபாடுகொண்டு பொருளிடத்தே வேட்கை நிகழ்ந்து போகின்றவனே! பெருமா! நீ தமக்கு வருகின்ற கூற்றத்தையு

---

* தொல். பொருள் : சுக.

† கலி. கரு : உச-உகூ ; கஅ : எ - கஉ. ‡ சிலப். உஅ : கஅக - உ.
(பாடம்) 1. டோராஅங்கு. 2 ஆதலான். 3. இளமைப்பயனின்றிப்.

பாலைக்கலி

௫௯

ழப்பையும் மறந்திருக்கின்ற

அறிவில்லாதாருடனே ஒருபடிப்பட்ட
மாறு ாட்டினைக்கொண்ட நன்மக்கள்
நிற்கின்ற வழியினை நினக்கு
வழியாகப் பேணாய்.

முதுவேனிற் காலங்களெல்லாம்
நீர் அறுதலின் அறுசுனையென நிகழ்

ாலத்தாற் கூறினர். கடுமை ஈண்டு

வெம்மைமேற்று. இனிக், கடுந்தாக

ெமன வடமொழித் திரிபாக்கி

விகாரமாய் நின்றதென்பாரும் உளர்.

தாகத் தாலே பதியென்க.

'ஓடி' யென்னுஞ்

செய்தெனெச்சம் "அம்மூக் கிளவியும்

" * என்னுஞ் சூத்திர விதியாற்

பிறவினை கொண்டது.

'அஞ்சு'மென்றது பிரியுமாறு

நினைந்து முன்னர்த் துயிலின்றிப்

பின்னர்த் தாழ்க்கத் துயின்றனென்று

அஞ்சினளென்க.

காண் என்னும் முன்னிலைவினை

'காண்டை'யெனத் திரிந்தது.

மாற்றுமைக்கோடல் கூற்றமும்
மூப்பும் உண்டென்றிருத்தல்.

'கடைநா ளிதுவென்
றறிந்தாரு மில்லை' இது நாளது
சின்மை; இளமையுங் காமமு
நின்பாணி நில்லா' இஃது இளமைய
தருமை; 'உர னுடையுள்ளத்தை' இது
தாளாண்பக்கம்; 'செய்பொருண்
முற்றிய' இது தேடும் முறைமையிற்
றேடவேண்டுமென்றலிற்
றகுதியதமைதி; 'சிறுநனி
நீ...செல்வோய்' இஃது
அன்பினதகலம்;
'இடைமுலைக்...காண்டை' இஃது
அகற்சியதருமை; 'செய்பொருண்

முற்றி...என்பாய்' என்பது செல்வத்தாற் பிறந்த உவகை, வளமையானும் மனமகிழ்ச்சி இதுவென்றலின்.

“நிகழ்ந்தது கூறி நிலையலுந் திணையே”† என்பதனாற் றலைவன் முன் ஒருகாற் கூறியவற்றினைத் தோழி தலைவற்குக் கூறிச் செலவழுங்குவித்தாள்.

“சுரமென மொழிதலும் வரைநிலை யின்றே.”‡ என்பதனால் வழி பருமை கூறினள்.

இவள் கூறுகின்ற காலத்துத் தலைவற்கு மூப்பென்னும் மெய்ப்பாடு தோன்றிப் பின்னர் அசைவுபிறந்தது, தோழிக்கு நடுக்கம் பிறந்தது.

இது பன்னீரடியின் இகந்து ஒருபொருணுதலாது ஆசிரியத்தளை விரவிவந்த சீர்வகைக் கலிவெண்பா.

(௧௧)

செருமிகு சினவேந்தன்

சிவந்திறுத்த புல்ம்போல
வெரிவெந்த[1] கரிவறல்
வாய்புகுவ காணுவாய்ப்
பொரிமலர்ந் தன்ன பொறிய
மட்டமான்
திரிமருப் பேறொடு
தேரமேறர்க் கோட[2]

---

*தொல். சொல்: உருக. †தொல். பொருள்:சச. ‡தொல். பொருள்: உகஉ.

(பாடம்) 1. வெரிமேய்ந்த. 2. தேரறக்கோட.

ரு. மரல்சாய மலைவெம்ப மந்தி
யுயங்க
வரல்போ
லடிய வுடம்புயங் கியானை
யூறுநீ ரடங்கலி னுண்கயங்
காணாது
சேறு சுவைத்துத்தஞ்
செல்லுயிர் தாங்கும்
புயறுளி மாறிய போக்கரு
வெஞ்சுரம் ; க௦.
எல்வளை யெம்மொடு நீவரின்

யாழநின்

மெல்லியன் மேவந்த சீறடித்

தாமரை

யல்லிசே ராயித

ழரக்குத்தோய்ந் தவைபோலக்

கல்லுறி னவ்வடி கறுக்குந

வல்லவோ ;

நலம்பெறு சுடர்நுதா

லெம்மொடு நீவரின்

கரு. னிலங்குமா ஃவிர்தூவி யன்னமென் சேக்கையுட்
டுலங்குமான் மேலூர்தித் துயிலேற்பாய் மற்றுண்டை
விலங்குமான் குரல்கேட்பின் வெருவுவை யல்லையோ ;

கிளிபுரை கிளவியா யெம்மொடு நீவரிற்
றளிபொழி தளிரன்ன வெழின்மேனி கவின்வாட
முளியரிற் பொத்திய முழங்கழ லிடைபோழ்ந்த
வளியுறி னவ்வெழில் வாடுவை யல்லையோ ;

எனவாங்கு,

அனையவை காதலர் கூறலின் வினைவயிற்
பிரிகுவ ரெனப்பெரி தழியாதி திரிபுறீஇக்
கடுங்குரை யருமைய காடெனி னல்லது
கொடுங்குழாய் துறக்குந ரல்லர்
நடுங்குதல் காண்மார் நகைகுறித் தனரே.

இது தலைமகனாற் பிரிவுணர்த்தப்பட்டு ஆற்றாளாய தலைமகள், யான் நும்மோடு போதுவல் என்றாட்குத், தலைவன் அவளது மென்மையுங் காட்டின் கடுமையுங் கூறி உடம்படானாக, ஆற்றாளாய தலைவியைத் தோழி, அவர் நம்மோடு நகையாடிச் சொன்னார் பிரிவரல்லரென வற்புறுத்தியது.

(க—க) செருமிகு . . , . வெஞ்சுரம் :—

(இ - ள்.) போர்த்தொழிலிலே மிகுகின்ற சினத்தையுடைய அரசன் கோபித்துச் சென்று விட்ட பகைப்புலத்தை நெருப்புத் தின்றாற்போல, நெருப்புத்தின்ற கரியினையுடைய வறந்த நிலத்திடத்தனவாகிய பொரிமலர்க் தாற்போன்ற புள்ளிகளையுடையவாகிய மடப்பத்தையுடைய மான்கள்

பாலைக்கலி

௬௧

உணவுகளைக் காணுவாய்த் திரிந்த கொம்பினையுடைய ஏற்றோடே பேய்த் தேரை நீரென்று கருதி உண்டற்பொருட்டு ஓட*, மரல்வாடும்படி மலைகள் கொதிக்க, ஊணின்றி மந்திகள் வருந்த, உரல்போன்ற அடிகளையுடைய வாகிய உடம்புவருந்திய யானைகள், ஊறுகின்ற நீரூற்று அடங்கலின், நீர் உண்டற்கு வேறோர் நீர்நிலை காணமற் சேற்றில் ஈரத்தை நுகர்ந்து தம் போகின்ற உயிரைக் காக்கும் மேகங்

துளித்தலைத் தவிர்ந்த செலவரிய வெய்ய சுரத்தை;[1]

"பன்றி புல்வா யுழையே கவரி யென்றிவை நான்கு மேறெனற் குரிய."† இதனான் ஏறென்றார். வெந்தகரி, உண்ட எச்சில்போல நின்றது. ஏற்றொடு என்பது 'ஏறொடு' என விகாரமாயிற்று. சுரத்தென்னும் அத்து விகாரத்தாற் றொக்கது.

இது தரவு.

(௧௦–௧௫) எல்லவினை . . .

வல்லவோ :—

(இ - ள்.) ஒளியினையுடைத்தாகிய வளையினையுடையாய் ! நீ எம்மோடு வருவையாயின் நின்னுடைய மெல்லிதாகிய இயல்பினையுடைய அனிச்ச முதலியவற்றிலே பொருந்துதல்வந்த சிறிய அடிகள்‡ ஆண்டுள்ள கல்லைத் தீண்டும்; அவ்வடிகள் கல்லைத் தீண்டுமாயின் தாமரைப்பூவினது அல்லியைச் சேர்ந்த அழகிய இதழ்கள் இங்குலிகந் தோய்ந்தனபோலக் கறுப்பன வல்லவோ ?

(கசுகஎ) நலம்பெறு . . .

. . . யல்லையோ :—

(இ - ள்.) நன்மையைப்

பெறுகின்ற ஒளியினையுடைத்தாகிய நுதலினை யுடையாய் ! நீ எம்மோடு கூட வருவையாயிற் சிங்கக்கான்மேற் றைத்த தூங்குகட்டிலின் இலங்கும் மாட்சிமை விளங்கும் அன்னத்தூவியாற்செய்த மெல்லிய படுக்கையிடத்தே உறக்கத்தைப் பொருந்துகின்ற நீ பொய்யான சிங்கம் ஒழிய அக்காட்டிடத்தில் விலங்காகிய சிங்கத்தின் குரலைக் கேட்பின் அஞ்சுவையல்லையோ ?

மாட்சிமை விளங்குகின்ற தூவியையுடைய அன்னமென்பது முதற் கேற்ற அடையடுத்த ஆகுபெயர்.

இலங்கூர்தி : தூங்குகட்டில். மற்று, வினைமாற்று ; வெருவரத்தக்க

பொய்ம்மானல்லாத மெய்ம்மானின் குரல்கேட்பினெனப் பொருள் தந்து நின்றது.

---

* அகம். உக ; கசுரு. † தொல். பொருள்: ருகக.

‡ குறள். கக௨0 ; சிவகசிர். க௲க.

(பாடம்) 1. சுரத்தே.

6

.. (கஅ—உக) கிளிபுரை

யல்லலேயோ :—

(இ - ள்.)

கிளியையொக்கும் மொழியினையுடையாய்!

நீ எம்மோடே

வருவையாயின் முகில் துளியைச் சொரியப்பட்ட தளிரையொத்த அழகினையுடைய மேனி அழகு கெடும்படி உலர்ந்த சிறுதூற்றை மறைத்த முழங்குகின்ற அழலினது நடுவை ஊடறுத்து வந்த காற்றுத் தீண்டின் அந்த அழகு கெடுவையல்லலேயோ?

இவை மூன்றுந் தாழிசை.

(உஉ)

என்வாங்கு :—

(இ - ள்.) என்று ; 'ஆங்கு' : அசை.
இது தனிச்சொல்.

(உரு—உஎ) அனையவை

குறித்தனரே :—

(இ - ள்.) நினது அழகு கெடும் அச்சமாகிய அத்தன்மையவற்றை நின்னைக்காதலித்தவர் கூறுகையினாலே யாம் பிரியின் இவள் இறப்பளென்று பிரியார் ; ஆதலான் மனத்தைத் திரிவுறுத்தி வினையிடத்துப் பிரிகுவரென மிக நெஞ்சழியாதேகொள் ; வளைந்த மகரக்குழையையுடையாய் ! காடு கடிய அருமையவென்று சொல்லுவாராயின், நினது மெய்ந்நடுக்கத்தைக் காண்டற்கு ஒரு விளையாட்டைக் குறித்துக் கூறினாரென்பதல்லது துறப்ப ரென்று நாஞ்[1] சொல்லுமவரல்லர்.

காட்டின் கடுமை தாமே கூறினர், நாம் போதற்கு உடம்படே மென்பது தாமே உணர்வாராகலின்.

இது சுரிதகம்.

தாழிசைகள் தலைவன் உடன்போக்கு மறுத்துக்கூறியன. வினைவயிற் பிரிவரெனவே கற்பிற் கூறியதாயிற்று. காடுங் 'கடுங்குரை அருமைய' வெனத் தரவிற் பொருளையுஞ் சுரிதகத்து உடன் கொண்டு கூறினர், " தரவிய லொத்து மதனகப் படுமே. " * என்னுஞ் சூத்திரத்து இயலென்ற தனால்.

தலைவன் இளமை பொருளாகத் தலைவற்கு நகை[2] பிறந்தது. தலைவிக்கு அசைவு பிறந்தது.

இஃது ஒன்பதடித்தரவும் நான்கடித்தாழிசையுந் தனிச்சொல்லும் ஐயடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (கஉ)

கச.

அணைமரு ளின்றுயி லம்பணைத் தடமென்றோட்
டுணைமல ரெழினீலத் தேங்கெழின் மலருண்கண்

---

* தொல். பொருள்: சசக.
(பாடம்) 1. நான். 2. நகை.

பாலைக்கலி

சரு

மணமௌவல் முகையன்ன
மாவீழ்வா ணிரை[1] வெண்பல்
மணநாறு நறுநுதன்

மாரிவீ ழிருங்கூந்த

ரு. லலர்முலை யாகத் தகன்ற வல்குற்[2]
சிலநிரை வால்வளைச் செய்யா யோவெனப்

பலபல கட்டுரை பண்டையிற் பாராட்டி

யினிய சொல்லி யின்னுங்குப் பெயர்ப்ப
தினியறிந் தேனது துனியா குதலே;

௧0. பொருளல்லாற்

பொருளுமுண் டோவென

யாழநின்

மருளிகொண் மடநோக்க

மயக்கப்பட் டயர்த்தாயோ ;

காதலா ரவன்செய்ப

பொருளில்லா தார்க்கென

வேதிலார் கூறுஞ்சொற்

பொருளாக மதித்தாயோ ;

செம்மையி னிகந்தொரீஇப் பொருள்செய்வார்க் கப்பொரு
௧௫. ளிம்மையு மறுமையும் பகையாவ தறியாயோ ;

அதனால்,

எம்மையும் பொருளாக

மதித்தீத்தை நம்முணங்

தவுக்கை விடப்பெறும்

பெருட்டிறத்

தவுக்கை விடுத

லதுமனும் பொருளே.

இது தலைமகனுற் பிரிவுணர்த்தப்பட்ட தோழி, தலைமகற்கு, முன்னையிற் சிறப்ப
எம்மை இற்[3] பாராட்டியதெல்லாம் எம்வயிற்பிறந்த வேறுப்பென்பது இட்

பொழுதறிந்தேன், இவ்வகைப்பட்ட

போக்கு நினக்கு எவ்வகையான் வந்த

தென, அவன் செலவழுங்கச்

சொல்லியது.

(க—கூ) அணைமரு

நுதலே :—

(இ - ள்.) இனிய துயிலையுடைய அணையையொத்ததும், அழகிய மூங்கிலையொத்த பெருமையையுடையதுமான மெல்லிய தோளினையும், எழுச்சியையுடைய நீலத்தினுடைய உயர்ந்த அழகினையுடைய இரண்டாகிய மலர் போலும் அகன்ற மையுண் கண்ணினையும், மணத்தையுடைய மௌவன் முகையையொத்த வண்டுகள் விரும்பின நேரிதாகிய ஒழுங்கினையுடைய வெள்ளிய பல்லினையும், மணம் நாறுகின்ற நறியதாகிய நுதலினையும்,

மழை

விரும்பின் கரிதாகிய

மயிரினையும், ஆகத்திடத்தே

பெருத்த முலை

யினையும், அகன்ற

வல்குலினையுஞ்,[4] சிலவாகிய

நிரைத்த வாலிய

வளையினையுமுடைய

செய்யோளேயென்று பலபலவாகிய

புனைந்துரைகளாற்

பண்டையிற்காட்டிற் கொண்டாடி இங்ஙனம் இனிய மொழிகளைக்கூறி

(பாடம்) 1. மாவீழ்வார் நிரை, 2. தாரெழிற்றிதனிச், 3. எம்வயிற்.

4. நிரைத்த [illegible]

என்னை வருத்தத்தே

செலுத்துகின்ற தன்மை

எம்மிடத்து வெறுப்பாகுதலை

இப்பொழுதறிந்தேன் ;

'மருள்' : உவமவுருபு.

"நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியிற் - புகழ்தகை வரையார் கற்பி னுள்ளே." * என்பதனாற்

போக்கின்கண் தலைவன்

தலைவியைப் புகழ்ந்து கூறினன்.

இது தாவு.

(கO—கக) பொருளல்லாற் . . . . டயர்த்தாயோ :—

(இ - ள்.) மயக்கங்கொண்ட அறியாமையையுடைய நின்னறிவு பொருளல்லது நன்குமதிக்கும் பொருளும் வேறுண்டோவென்று† நின்னை மயக்கப் பட்டு அன்பை மறந்தாயோ ?

மருள், 'மருளி'யெனப் பகுதிப்பொருள் விகுதியாய் நின்றது.

'யாழ': அசை.

(கஉ—கங) காதலா . . . . மதித்தாயோ :—

(இ - ள்.) கையிற் பொருளில்லாதவர்கட்குத் தம்மாற் காதலிக்கப் பட்டார் என்ன காரியத்தைச் செய்வரென்று உறவுபோல இருந்து உறுதி யல்லன கூறுவார் கூறும் மொழிகளை நினக்குப் பொருளாக மதித்தாயோ?

(கச—கரு) செம்மைபி . . . . . தறியாயோ :—

(இ - ள்.) பொருள்தேடும் முறைமையினீங்கிப் பொருள்தேடுவார்க்கு அப்பொருள்தான் அவரை நீங்கி இம்மையிலும் மறுமையிலும் பகையா வதை[1] ‡ அறியாயோ?

இவளிறந்துபடப்[2] பொருடேடலிற் 'செம்மையினிகந்'தென்றாள். இவை மூன்றுந் தாழிசை.

(கசு—கக) அதனால் . .

. . பொருளே :—

(இ - ள்.) பொருளித்தன்மைத் தாகையினாலே அப்பொருளையன்றி எம்மையும் பொருளாக மதிப்பாய்; நம்முன் முயங்கின முயக்கத்தைக் கைவிட்டுப் போகையினாலே பெறுகின்ற பொருட்கூற்றிடத்து அவாவைக் கைவிடுவாயாக; அதுவே நிலைபெறும் பொருள்.

'மதித்தீத்தை,' மதியென்னும் முன்னிலையேவற் றிரிசொல்.

---

* தொல். பொருள்: ௨௨அ. † குறள். எ௫௧; சீவகசிந். க௬௨௨.

‡ குறள். கக௧; ௬௫௧; எ௫௫.

(பாடம்) 1. பகையாந் தன்மையை. 2. இவளிறந்துபடப்போய்ப்.

பாலைக்கலி
சுரு

அவவெனக் குறியதன் இறுதிச்
சினை கெட்டு நின்றது. 'கை விடுதல்'
"இற்றெனக்கிளத்தல்" * போல
நின்றது.

'அதனால்' தனிச்சொல்;
எஞ்சியது, சுரிதகம்.

இதனாற் றலைவற்கிழிவுந்
தோழிக்குச் சூழ்ச்சியும் பிறந்தன.

இஃது ஒன்பதடித்தாவுஞ்

சிறுமைக்கு எல்லை கூறிய ஈரடித்
தாழிசையும் பொருள்பெற்ற தனிச்
சொல்லும் மூன்றடிச் சுரிதகமும்
பெற்ற ஒத்தாழிசைக்கலி.

(கரு)

கரு.

அரிமா னிடித்தன்ன

வஞ்சிலை வல்விற்
புரிநாண் புடையிற்
புறங்காண்ட லல்லா
விணைப்படைத் தானை
யரசோ டிறினுங்
கணைத்தொடை நாணுங்
கடுந்துடி யார்ப்பி

ரு. னொருத்து வலிய
வெறுழ்நோக் கிரலை
மருப்பிற் றிரிந்து
மறிந்துவீழ் தாடி
யுருத்த கடுஞ்சினத் தோடா
மறவர்
பொருள்கொண்டு புண்செயி
னல்லதை யன்போ
டருள்புற மாறிய வாரிடை
யத்தம் ; கo.
புரிபுரீ புறமாறிப்
போக்கெண்ணிப் புதிதீண்டிப்
பெருகிய செல்வத்தாற்

பெயர்த்தர லொல்வதோ
செயலையந் தளிரேய்க்கு
மெழினல மந்நலம்
பசலையா[1] லுணப்பட்டுப்
பண்டைநீ ரொழிந்தக்கால்;
பொய்யற்ற கேள்வியாற்
புரையோரைப் படர்ந்துநீ ௧௫.
மையற்ற படிவத்தான் மறுத்தர
லொல்வதோ
தீங்கதிர் மதியேய்க்குந்
திருமுக மம்முகம்
பாம்புசேர் மதிபோலப்
பசப்பூர்ந்து தொலைந்தக்கால்;
பின்னிய தொடர்நீவிப்

பிறர்நாட்டுப் படர்ந்தநீ

மன்னிய புணர்ச்சியான்

மறுத்தர லொல்வதோ

உ௦. புரியவிழ் நறுநீலம் புரையுண்கண் கலுழ்பானத்
திரியுமிழ் நெய்யேபோற் றெண்பனி யுறைக்குங்கால்;

எனவாங்கு,

அணையவை போற்றி

நினை இயன நாடிக்காண்

வளமையோ வைகலுஞ்

செயலர்கு மற்றிவண்

---

* தொல். சொல் - கக.

(பாடம்) 1. பயலையா.

கலித்தொகை

[கலி- கரு உரு. முளைநிரை

முறுவலா ராயத்து ளெடுத்தாய்ந்த

விளைமையுந் தருவதோ

விறந்த பின்னே.

இது பிரிவுணர்த்திய தலைமகற்குத், தோழி, தலைமகளது ஆற்றாமையும் இளமையதருமையுங் கூறி, நீர் பிரிந்து செய்யக்கருதியவை எக்காலத்துஞ் செய்யலாம்; பொருளாற், கழிந்த இளமை மீட்கலாமோவெனக் கூறியது.

(க—கூ) அரிமா

யத்தம் :—

(இ - ள்.) வந்து கூடுதலை

யுடைத்தாகிய படையினையுடைய

படை

யோடே அரசர்கள் வந்து போர் செய்யினும், அழகினையுடைய சிலைமாத் தாற் செய்த வலிய வில்லினது முறுக்குதலையுடைய நாணிலெழுந்த, சிங்கம் இடித்தாற்போன்ற சிறுநாணொலியாலே அவ்வரசரை முதுகுகாண்டலன்றி அம்பை வில்லிலே தொடுத்தலை நாணும், கடிய துடியினது ஆரவாரத்தினை யும், வலியினை யுடைத்தாகிய பார்வையினையுடைய கழுத்துவலிய கலையி னது கொம்புபோலே நேர்போகாமற் றிருகி முறுக்குண்டு தாழ்ந்த தாடியினை யும், வெவ்விதான கடிய சினத்தினையுமுடைய கெடாத மறவர் வழிபோவா ருடைய பொருளைப் பறித்துக்கொண்டு அவர்க்குப் புண்ணைக் கொடுத்து விடுதலன்றி,* அன்போடே அருளும் அவ்விடத்தினின்றுங் கைவிட்டுப் போன அரிய இடத்தையுடைய காட்டிடத்தே;

நாணும் மறவரென்க.

இது தரவு.

அன்றியென்னும் வினையெச்ச வினைக்குறிப்பு, 'அல்லதை'யென வினைக் குறிப்பு முற்றாய்த் திரிந்தது. அருள் அன்பிற்குக் காரணமாய்† மனத்து நிகழ்வது.

(௧௦-௧௫) புரிபுநீ

ஒழிந்தக்கால்.:—

(இ - ள்.) நீ புறப்பொருளை விரும்பி அகப்பொருளைக் கைவிட்டு அதிலே போனதெண்ணி இவளுடைய அழகையுடைய நிறம், அசோகினது அழகையுடைய தளிரையொக்கும் அத்தன்மைத்தாகிய நிறம், பசலை நிறத்தாலே கைக்கொள்ளப்பட்டுப் பண்டை நீர்மை போனக்கால், நீ போக்கெண்ணுகையினலே, முன்பு உள்ளதன்றிப் புதிதாகத் திரண்டு பெருத்த செல்வத்திலே மீட்டல் பொருந்துமோ ?

'நீ புறம் புரிபு மாறி'யென்க.

'செல்வ'மென்றது துறவறத்திற் சேறற்குக் கற்ற கல்வியை; அது வானப்பிரத்தம்.

---

* சிலப். கஉ, † குறள். எடுஎ.

பாலை - கசு]

பாலைக்கலி

சுஎ

" உண்டற் குரிய வல்லாப்

பொருளை - யுண்டன போலக் கூறலும்

மரபே."* என்பதனான் 'உண்ணப்பட்'டென்றார். இதனாற் சொல்வழுவன்றிச் "செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்" கலும்† அமைத்தார்.

(கச—கஎ) பொய்யற்ற . . .

. . தொலைந்தக்கால் :—

(இ - ள்.) இவளுடைய திருமுகம் இனிய கிரணங்களுடைய திங்களை யொக்கும் ; அந்த முகம் பாம்பு சேர்ந்த திங்களைப்போலப் பசப்புப் பரந்து கெட்டக்கால், மெய்ப்பொருளுணர்ந்தோரை நினைந்து நீ சென்று அவரிடத்

துக் கற்ற பொய்யற்ற நூற்கேள்விகளாலே முன்பு மனத்திற் றங்கிய மாசற்ற விரதங்களாலே மீட்டல் பொருந்துமோ?

இல்லறத்தே நின்று முன்றுள்ள மாசறுத்து வானப்பிரத்தனு மென்றது. இஃது "அந்தரத் தெழுதிய வெழுத்தின் மான - வந்த குற்றம் வழி கெட வொழுக"‡ லாம்.

பாம்பு சேர்விடமும் பாடம்.

(கஅ—உக) பின்னிய

உறைக்குங்கால்:—

(இ - ள்.)

இவளுடைய முறுக்கு அவிழ்ந்த நறிய நீலத்தையொக்கும்

மையுண்கண்கள் அமையாவாய் அழுது, எரிகின்ற திரிகான்ற நெய்போலச் சுடும்படி தெள்ளிதாகிய நீரைத் துளிக்குங்கால், வேற்று நாட்டிடத்தே போய் நின்னைப் பிணித்த ஆசையாகிய சங்கிலியை அறுத்து நிலைபெற்ற தத்துவப் பொருள்களைக் கூடிய கூட்டத்தாலே மீட்டல் பொருந்துமோ ?

இது சன்னியாசம் வேண்டுமெனக் கொண்டமை கூறிற்று.

இது தலைவன் ஓதற்பிரிவாற் பெரும்பயன் கூறியவற்றை உணர்ந்த தோழி, அவற்றைக்கூறி அவை

எக்காலத்துஞ் செய்யலாம்,
இளமை மீட்டல் இவற்றால்
ஒல்லாதென்றாள்.

இவை மூன்றுந் தாழிசை.

(உஉ) எனவாங்கு :—

'ஆங்கு' அசை.

இது தனிச்சொல்.

(உரு—உசு) அனையவை . . . .

பின்னே :—

(இ - ள்.) அனையவை[1] செய்த நன்மைகளை நினைத்து அவை கெடா

மற் பாதுகாத்துப் பின்னர் நீ ஆராய்ந்து தேடுகின்றவற்றை ஆராய்ந்து பார்.

அக்கல்வியாலுண்டாம் வளப்பமோ இவ்விடத்தேயிருந்து நாடோறுஞ்

* தொல். பொருள் : உகரு. † தொல். பொருள்: ககூசா.

‡ தொல். பொருள் : கசுசா.

(பாடம்) 1. என்று யான் சொன்ன அனையவை.

"அ

கலித்தொகை

[கலி - கக

செய்துகொள்ளுஞ் செயலாயிருக்கும்; அக்கல்வி, முளையையொத்த நிரை
னையுடைய முறுவலையுடையாளுடைய[1] திரளுள்ளே உயர்த்தாராய்க்த
ுவளுடைய இளமை போனபின்பு அவ்விளமையுக் தருவதொன்றோ?

'அனையவை' யென்றது நிறத்தையும் முகத்தையுங் கண்ணையும்.

'வளமையோ' வென்னும் ஒகாரம் இழிவுசிறப்பு; 'இளமையு'மென்னும்
உம்மை சிறப்பு;

'தருவதோ'வென்னும் ஓகாரம்
எதிர்மறை.

"ஓதலுந் தூது முயர்ந்தோர்
மேன"* இதனானுணர்க.

இது சுரிதகம்.

இதனாற் றோழிக்கு இழிவு தோன்றிற்று ; தலைவற்கு அசைவு பிறந்தது.
இஃது ஒன்பதடித்தரவும் நான்கடித்தாழிசையுந் தனிச்சொல்லும் நான்

கடிச் சுரிதகமும் பெற்ற

ஒத்தாழிசைக்கலி.
(கசு)

கசா.

பாடின்றிப் பசந்தகண்
பைதல பனிமல்க
வாடுப் வனப்போடி
வணங்கிறை வளையூர
வாடெழி லழிவஞ்சா
தகன்றவர் திறத்தினி
நாடுங்கா னினைப்பதொன்
றுடையேன்மன் னதுவுந்தான்;
ரு. தொன்னலந்

தொலைபீங்கியாந் துயருழப்பத்
துறந்துள்ளார்
துன்னிநங் காதலர்
துறந்தேகு மாரிடைக்
கன்மிசை யுருப்பிறக்[2]
கனைதுளி சிதறென
விண்ணிசை யெழிலியை
யிரப்பவு மிசைவதோ ;
புனையிழா யீங்குநாம்
புலம்புறப் பொருள்வெஃகி
முனையென்னார் காதலர்
முன்னிய வாற்றிடைச்[3]
சினைவாடச் சிறக்குநின்
சினந்தணிந் தீகெனக்

கனைகதிர்க் கனலியைக்
காமுற லியைவதோ ;
ஒளியிழா யீங்குநாந்
துயர்கூரப் பொருள்வயி
னளியொரீஇக் காதல
ரகன்றேகு மாரிடை
கரு. முளிமுதன் மூழ்கிய
வெம்மைதீர்ந் துறுகென
வளிதருஞ் செல்வனை
வாழ்த்தவு மியைவதோ ;
எனவாங்கு,

செய்பொருட் சிறப்பெண்ணிச் செல்வர்[4] மாட் டினையன
தெய்வத்தாத் திறனோக்கித் தெருமர றேமொழி

* தொல். பொருள்: உசு.

(பாடம்) 1. முதலையுடையாருடைய. 2. யுருப்பறக். 3. வாரிடைச். 4. செல்வார்.

பாலைக்கலி

சஙு

உ0.

வறனோடின் வையகத்து வான்றருங் கற்பினு

ணிறனோடிப் பசப்பூர்த லுண்டெனா
வறனோடி விலங்கின்றவ ராள்வினைத் திறத்தே.

இது தலைமகன் பொருள்வயிற்பிரிந்த
இடத்து அவன் போகிய காட்டது கடுமை

நிவணந்து ஆற்ருளாகிய தலைமகள் அவர்பொருட்டாக நாம் இவ்வகைப்பட்ட தெய்வங்களைப் பரவுதல் நங்கற்புக்கு இயைவதோவெனக், கேட்ட தோழி அவ்வாற்ருனே மீண்டனர் நீ கவலவேண்டாவெனக் கூறியது.

(க—ரு) பாடின்றி ... னது வுந்தான் :—

(இ - ள்.) துயிலின்றிப் பசந்த கண்கள் வருத்தத்தையுடையவாய் நீர் மல்க நிறம்வாடி அழகு கெடுகையினுலே, வளைகள் வணங்கின முன்கையி னின்றுங் கழல வெற்றியையுடைய அழகழிவுக்கு

அஞ்சாதே பிரிந்தவர் கூற்றில் இப்பொழுது செய்வதாக நினைப்பதொரு காரியமுடையேன்; அத்தாற் பெற்றதென் ? அக்காரியந்தானும் ஆராயுங்கால் நங்கற்பிற்குப் பொருந்துவதன்றாய் இராநின்றது;

இது தரவு.

(ரு—அ) தோள்நலந்

மியைவதோ :—

(இ - ள்.) நங்காதலர் யாம் இயற்கைநலமுங் கெட்டு இவ்விடத்தே யிருந்து வருத்தத்திலே அழுந்தும்படி

நம்மைக் கைவிட்டுப் பின்னர் நினை

யாராய்ப் பொருள்மேல் அன்பு
நெருங்கி நம்மேல் அன்பைத்
துறந்து போம் அரிய வழியிடத்திற்
கல்லின்மேல் உண்டான வெப்பம்
நீங்கும்படி செறிந்த துளியைச்
சிதறுவாயாகவென்று பராய் இனிய
ஓசையையுடைய மேகத்திற்கு உரிய
ஞாயிற்றை இரத்தல்செய்யவும்
நங்கற்பிற்கு இயைவதொரு காரியமோ
? அல்லவே ;

(கூ—கஉ) புனையிழாய்

லியைவதோ :—

(இ - ள்.) புனைந்த பூணினை யுடையாய்! காதலர் இவ்விடத்தே யிருந்து நாந் தனிமையுறும்படி பொருளை விரும்பிப் பகைப்புலமென்று கருதாராய்ப் போதற்கு நினைந்த அரிய வழியிடத்தில்[1] மரக்கொம்புகள் வாடும் படியாகச் சிறக்கும் நின் சினந் தணிவதாகவென்று பரவிச் செறிந்த கதிரையுடைய ஞாயிற்றை நாம் வேண்டிக்கோடலும் நங்கற்பிற்கு இயைவ தொரு காரியமோ? அல்லவே;

நாமென்னும்

படர்க்கையுளப்பாடு இடவழுவமைதி.

' தணிந்தீக ': வியங்கோட் டிரிசொல் விகாரமாய் நின்றது.

(பாடம்) 1.
7
நினைந்து வழியிடத்தில்.

௫௦
கலித்தொகை
[கலி - ௧௬

(௧௫—௧௧) ஒளியிழா
மீனையவதோ :—

(இ - ள்.)
ஒளியினையுடைத்தாகிய
பூணினையுடையாய்! காதலர்
இவ்விடத்தேயிருந்து நாம்
வருத்தமிகும்படி நம்மிடத்து
அளித்தலை
நீங்கிப் பொருளிடத்தே வேட்கை
சென்று நம்மை அகன்றுபோம் அரிய
வழியிடத்து, உலர்ந்த
சிறுதூறுகளிலே தங்கிவந்த
வெப்பமாறி அவன்
மேலே சேர்வாயாகவென்று பரவிக்
காற்றைத் தருகின்ற ஞாயிற்றினை
வாழ்த்துதலைச் செய்யவும் நங்
கற்பிற்கு இயைவதொரு

காரியமோ ?

அல்லவே ;

மழையையுங் காற்றையுந் தருகின்ற ஞாயிறு பாலைக்குத் தெய்வமாயினமை, "மாயோன் மேய"* என்னுஞ் சூத்திரத்தானுணர்க.

இவை மூன்றுந் தாழிசை.

(கஎ)

எனவாங்கு :—

(இ - ள்.) என்று சொல்லி ;

ஆங்கு: அசை. இது

தனிச்சொல்.

(கஅ-உஉ) செய்பொருட்

. . . . . திறத்தே:—

(இ - ள்.) தேமொழீ!

இத்தன்மையராகிய[1] மற்றத்

தெய்வங்களி

னுடைய கூறுபாடுகளையும் மனத்தான் வேண்டிக்கொள்ளக் கருதித் தேடுகின்ற பொருளான் உண்டாஞ் சிறப்புக்களை நினைத்துப் போகின்றவ ரிடத்து மனஞ் சுழலாதேகொள்; வற்கடமான காலத்தாலே வையங் கெட்டதாகில் அவ்வையத்திடத்தே மழையைப் பெய்விக்குங் கற்பினை யுடையாளுடைய† நிறங்கெட்டுப் பசப்புப் பரத்தலுண்டாமென்று கருதி அவருடைய முயற்சியிடத்தே அறக்கடவுள் விரைந்து சென்று விலக்கிற்று; இனி வருந்தல்!

இது தங் குலதெய்வமன்றி எல்லார்க்கும் பொதுவாதலிற் 'கற்பிற்கு இயைவதோ'வென்றாள். அது "தெய்வமஞ்சல்"‡ என்பதனான் உணர்க. இது "செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே - வன்புறை குறித்த றவிர்ச்சி யாகும்"§ என்பதனாற் றலைவன் செலவழுங்கினமை கூறிற்று.

இது சுரிதகம்.

இதனாற் றலைவிக்குப் புணர்வென்னும் உவகையுந் தலைவற்கு அசைவும் பிறந்தன.

---

* தொல். பொருள்: ரு. † குறள். ருரு.; கலி. கூகூ; மணிமே. கரு: எஎ; உஉ: சரு-சகூ.; சிலப்; கரு: கசரு-கசஎ. ‡ தொல். பொருள்: உஎஉ.

§ தொல். பொருள்: கஅரு.

(பா. ம்) 1. இத்தன்மைய...

பாலைக்கலி

ருக

இது "தரவே தாஞ நாலடி யிழிபாய்"* எனச் சிறுமைக்கு எல்லை கூறிய நான்கடித் தரவிற்கு "இடைநிலைப்பாட்டே, தரவகப்பட்ட மரபின தென்ப"† என்றதன்கண் மரபினதென்ற இலேசால் நான்கடியாகிய இடை நிலைப்பாட்டும் பெற்றுத் தனிச்சொல்லும் பெற்றுத் "தரவியலொத்தும்"‡ என்ற உம்மையான் ஏறியும் வருமென்றலிற்

றாவின் மிக்க சுரிதகமும் பெற்று
வந்த ஒத்தாழிசைக் கலி.

(கஓ)

கள.

படைபண்ணிப் புனையவும்
பாமாண்ட பயிலணைப்[1]
புடைபெயர்ந் தொடுங்கவும்
புறஞ்சேர வுயிர்ப்பவு
முடையதை யெவன்கொலென்
றாறளந் தவர்வயி
னடைசெல்லா[2] நனியேங்கி

நடுங்கற்கா ணாறுறுதால் ;

ரு. தொல்லெழி ஞெற்லிவ
டியருழப்பத் துறந்துநீ

வல்வினை வயக்குதல் வலித்திமன் வலிப்பளவை
நீள்கதி ரவிர்மதி நிறைவுபோ னிலையாது
நாளினு நெகிழ்போடு நல்னுட னிலையுமோ ;
ஆற்றனே யடவில ளணிவாட வகன்றுநீ

கo. தோற்றஞ்சா ஞெருபொருண் முயறிமன் முயல்வளவை
நாற்றஞ்சா னளிபொய்கை யடைமுதிர் முகையிற்குக்
கூற்றம்போற்[3] குறைபடூஉம் வாழ்நாளு நிலையுமோ ;

வகையெழில் வனப்பெஞ்ச
வரைபோக வலித்துநீ

பகையறு பயவினை முயறிமன்
முயல்வளவைத் கறு. தகைவண்டு
புதிதுண்ணத் தாதவிழ்
தண்போதின்
முகைவாய்த்த தடம்போலு
மிளமையு நிலையுமோ;

எனவாங்கு,

பொருந்தியான்
றன்வேட்ட பொருள்வயி
னினைந்தசொற்
றிருந்திய யாக்கையுண்

மருத்துவ னூட்டிய உ0.
மருந்துபோன் மருந்தாகி
மனனுவப்பப்
பெரும்பெயர் மீளி
பெயர்ந்தனன் செலவே.

---

* தொல். பொருள்: ருசரு.
† தொல். பொருள்: சசகூ. ‡ தொல். பொருள்: ருசக.

(பாடம்) 1. பலவனைப். 2. செல்லாய். 3. கூற்றுழ்போற்.

ருஉ
கலித்தொகை
[கலி - கள

இது பகைவர் திறைதந்த நாடு காத்தற்கு (தலைவன்) பிரிகின்றமையுணர்ந்து தலைவி வேறுபட்டமை கண்டு தோழி அவனை எதிர்ப்பட்டு அவளது ஆற்றாமையும் இளமையதருமையுங் கூறிச் செலவழுங்குவித்தமை தலைமகட்குக் கூறியது.

(க—ச) படைபண்ணி . . . . . ணறுநுதால் :—

(இ - ள்.) நறுநுதால்! படைக்கலங்களைப் புதியவாகப் பண்ணிக் கைசெய்யவுங் காரியத்தின் நினைவாலே முயங்குதலைத் தவிர்ந்து யாத்தன்[1] மாட்சிமைப்பட்ட பலவாகிய அணையிடத்தே கிடக்கவும் அதுபெறுது[2] அவன் புறத்தே புல்லுதலாலே யாம் பிரிந்தால் இவள் எங்ஙனம் ஆற்றுவ ளென்று நெட்டுயிர்ப்புக்கொள்ளவும் இவன் மனத்திலுடைய காரியம் எத்தன்மையதுகொலென்று கருதிக் கூட்டத்திற்கு இடையூறு வருமென்று கருதியவர் நினைவிடத்தே நீ ஒழுகுதலைச் செய்யாயாய் மிகவும் ஏங்கி நடுங்காதேகொள்!

இது நிகழ்ந்தது நினைத்து வருந்தினள்.
இது தரவு.

(ரு—அ) தோல்லெழில் . . . . . னிலையுமோ :—

(இ - ள்.) இவள் இயற்கைநலங் கெட்டு வருத்தத்தே அழுந்த, நீ பிரிந்து வலிதாகிய காவலாலே பகைவர் தந்த நாட்டை விளக்குதலை மிகவுந் துணிவை; அங்ஙனந் துணியுமளவில், நீண்ட கதிரினையுடைய விளங்குகின்ற திங்களின் நிறைவு பின்னர் ஒழுகத் தேயுமாறுபோல நிலை நில்லாமல் நாடோறுந் தன்நிலைகுலைந்து கெடும் அழகு இவளுடன் நிலை பெறுமோ?

'நாளின்': இன் அசை; ஓகாரம் எதிர்மறை.

(கூ—கஉ) ஆற்றனேய் . . .

நிலையுமோ :—

(இ - ள்.) இவள் வலியையுடைய காமநோய் அடுகையினாலே அழகு கெடும்படி நீ பிரிந்து பகைவர் தந்த நாட்டைக் காத்துப் பெறும் விளக்கம் அமைந்த திரளும் பொருள்களைத் தேடுதற்கு மிகவும் முயல்வை ; அங்ஙனம் முயலுமளவில் நாற்றம் அமைந்த பெருமையையுடைய பொய்கை இலையை விட்டு முற்றின தாமரைமுகைக்குக் கூற்றமாகிய அலர்ச்சி அதன் குறைவிற்குக் காரணமாயினாற்போல இத்துணைக்காலம் இருவென விதித்த காலங் குறைபட்டு வருவதற்குக் காரணமான வாழுகின்ற நாள்களும் இவளுடன் நிலைபெறுமோ ?

தொகுபொருளாவன, அறமும் பொருளும் இன்பமுமாம்.

(பாடம்) 1. பரத்தன். 2. அதுபொருத.

பாலை - கஎ]

பாலைக்கலி

௫௩

(கரு—கசு) வகையெழில் .

நிலையுமோ ;—

(இ - ள்.) இவள் கூறுபாட்டையுடைய உறுப்பழகுந் தோற்றப் பொலிவுங் கெடும்படி மலையைப் போக நீ துணிந்து பகையறுதற்குக் காரணமான நாடாகிய பயனைத்தருங் காவற்பிரிவை மிகவும் முயல்வை; அங்ஙனம் முயலுமளவில், அழகையுடைய வண்டுகள் தன் புதுமையை நுகரும் படியாகத் தாதை அலர்ந்த குளிர்ந்த பூ, இனிய முகை யென்கின்றவை வாய்த்தற்குக் காரணமான நீர்நிறைந்த தடம், அந்நீர் நாடோறுங் குறையு மாறுபோல, நாடோறுங் குறையும் இளமையும் இவளுடன் நிலைபெறுமோ?

அளவு 'அளவை'யெனப் பெயர்த் திரிசொல்லாய் நின்றது.

இவை மூன்றுந் தாழிசை.

(கஎ) எனவாங்கு :—

அசை.

இது தனிச் சொல்.

(கஅ—உக) பொருந்தியான் சேலவே :—

(இ - ள்.) பெரிய புகழையுடைய மீளி, யான் தன்னைப் பொருந்தித் தான் விரும்பிய அறம்பொருளின்பமாகிய பொருளிடத்தே யான் அறன் உண்டாக நினைத்ததனாற் பிறந்த சொல், நல்வினையாற் றிருந்திய*யாக்கையின் கண்ணே மருத்துவன் நுகர்வித்த மருந்துபோலே நல்ல மருந்தாகித் தன் மனமகிழுகையினாலே போக்கைத் தவிர்ந்தான்.

இதனாற் றலைவிக்குப் புணர்வென்னும் உவகையுந் தலைவற்கு அசைவும் பிறந்தன.

இது முன்னர்ப் பாட்டிற் கூறியவாறே வந்து சுரிதகந் தரவோடொத்து வந்த ஒத்தாழிசைக்கலி. (கசு)

கஅ.

அரும்பொருள் வேட்கையி னுள்ளந் துரப்பப்
பிரிந்துறை சூழாதி யைய விரும்பிநீ
யென்றோ ளெழுதிய தொய்யிலும் யாழநின்
மைந்துடை மார்பிற் சுணங்கு நினைத்துக்காண்
௫. சென்றோர் முகப்பப் பொருளுங் கிடவா
தொழிந்தவ ரெல்லாரு முண்ணுதுஞ் செல்லா
ரிளமையுங் காமமு மோராங்குப் பெற்றார்

வளமை
விழைதக்க துண்டோ வுளநா

நிசா

கலித்தொகை
[கலி - கசு

ளொரோஒகை தம்முட் டழீஇ
யொரோஒகை கO, யொன்றன்கூ
றாடை யுடுப்பவரே யாயினு
மொன்றினர் வாழ்க்கையே

வாழ்க்கை யரிதரோ
சென்ற விளமை தாற்கு.

இஃது "ஒன்றாத் தமரினும்"* என்னுஞ் சூத்திரத்தில் "நாளது சின்மையு மிளமைய தருமையுந் - தாளாண் பக்கமுந் தகுதிய தமைதியு - மின்மைய திழிவு முடைமைய தயர்ச்சியு - மன்பின தகலமு மகற்சிய தருமையும்" எனக்கூறிய வெட்டிணையுந் தலைவன் கூறக்கேட்ட தோழி அவற்றை "நிகழ்ந்தது கூறி நிலையலுந் திணையே" † என்னும் விதியாற் றலைவற்குக் கூறிச் செலவழுங்குவித்தது.

(இ - ள்.) ஐய! அரிய பொருளிடத்துச் செல்கின்ற ஆசையினுல் உள்ளம் உளுற்றுகையினுலே பிரிந்துபோயிருத்தலை நினையாதேகொள்; நீ விரும்பித் தலைவி தோளில் எழுதிய தொய்யில் தருகின்ற அழகினையும் இவள் மார்பில் நின்னை வலியாகவுடைய சுணங்கின் அழகையுங் கைவிடல் ஒல்லுமாயின் நினைத்துப்பார்; நீ நன்குமதித்த பொருளுஞ் சென்றவர்கள் தத்தம் நிலைமைக்கேற்பக் காலம் நீட்டிப்ப நின்று தேடுவதன்றி இப் பொழுதே முகந்துகொள்ள ஓரிடத்தே கிடவாது; பொருள் தேடப் போகா திருந்தவர்கள் எல்லாரும் ஒருவாற்ருன் உண்ணுமையும் ஒழுகார்; இளமை யையும், இருதலையும் ஒத்த காமத்தையுஞ் சேரப் பெற்றவர்கள் செல்வத்தை விரும்பத்தக்க தொருதன்மை அச்செல்வத்திற்கில்லை; இல்வாழ்க்கையாவது தமக்குக் கற்பித்த நாளெல்லாம் உள்ளில் ஒரோவொரு கைகளாலே தம் முன்னே தழுவிக்கொண்டு புறத்தில் ஒரோவொரு கைகளாலே ஒன்றன் கூறுகிய[1] ஆடையை உடுத்திருப்பவரேயாயினும் பிரியாதிருப்பவர்களுடைய வாழ்க்கையே வாழ்க்கை; கழிந்த இளமை மீண்டு தருதற்கு அரிது.

'பிரிந்திறை சூழாதியைய' என்று பாடமாயின் பிரிந்து போவதனுல் இவள் இறந்துபடுஞ் செய்கையை நினையாதேகொள்ளெனக.

"தாயத்தி னடையா வீயச் செல்லா - வினைவயிற் றங்கா வீற்றுக் கொளப்படா - வெம்மென வருஉங் கிழமைத் தோற்ற - மல்லாவாயினும் புல்லுவ வுளவே."‡ இதனுற் றேழி தலைவிதோளை 'என் றேள்' என்றுள். 'மென்றேளும்' பாடம். இவள் முயக்கத்தாற் சுணங்கு பரத்தலின் நின்னை வலியாக உடைய சுணங்கென்றுன்.

---

* தொல். பொருள்: சக.

† தொல். பொருள்: சஅ.

‡ தொல். பொருள் - உஉக.

௫௫

'பொருளு'மென்ற உம்மை சிறப்பு; 'உண்ணாது'மென்னும் உம்மை ஐயம்; 'உண்டோ'வென்னும் ஓகாரம் எதிர்மறை; யாழவும் அரோவும் அசை.

இதனுள் 'உளநாள்' என்றது நாளது சின்மை; சென்ற இளமைதரற்கு அரிதென்றது இளமையதருமை; 'உள்ளந்துரப்ப' என்றது உள்ளம் உஞற்றுதலால் தாளாண்பக்கம்; 'சென்றோர் முகப்பப் பொருளுங் கிடவாது' என்றது தத்தம் நிலைமைக்கு ஏற்பப் பொருள் தேடவேண்டுதலின் அது

பாணிக்குமென்றலின் தகுதிய தமைதி ; 'ஒரோ ஒகை தம்முட்டழீஇ ஒரோ ஒகை ஒன்றன் கூறுடை உடுப்பவரேயாயினும்' என்றது இன்மையதிழிவு ; 'இளமையுங் காமமும் ஓராங்குப் பெற்றார் வளமை விழைதக்கது உண்டோ' என்றது உடைமைய துயர்ச்சி ; 'பிரிந்துறை சூழாதி யைய' என்றது அன்பின தகலம், பிரிந்துறைந்து அன்பு பெருக்கவேண்டா, 'ஒன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை'யென்றலின் ; 'தொய்யிலும் யாழ நின் மைந்துடை மார்பிற் சுணங் கும் நினைத்துக்காண்' என்பது அகற்சிய தருமை.

இதனாற் றோழிக்கு நலிதலுந் தலைவற்குக் கருதுதலும் பிறந்தன.

இது பன்னீரடியான் வந்து ஒருபொருணுதலிய கட்டளைக் கலி வெண்பா.

இது பெண்டன்மைக்கேலா நுண்பொருளினைத் தலைவ னெதிர்நின்று உணர்த்துவாள் செவ்வன் கூறாது, தலைவன் பண்டு கூறியன சிலவற்றை வாங்கிக்கொண்டு கூறுங் கூற்று. நீ மறந்தாயென்பது யாம் உணரக் கூறுகின்றாள் இவ ளென்பதுபட நின்றமையின் ஒருபொரு ணுதலிற்றாயிற்று. " மரையா மரல்கவர " * என்பதனுட் கூறிய

உரையில் வேண்டுவன இதற்குங் கூறிக்கொள்க.

(கள்)

கக.

செவ்விய தீவிய சொல்லி யவற்றொடு
பைய முயங்கிய வஞ்ஞான் றவையெல்லாம்
பொய்யாதல்
யான்யாங் கறிகோமற் றைய
வகனகர் கொள்ளா வலர்தலைத் தந்து
நீ. பகன்முனி வெஞ்சுர முள்ள

லறிந்தேன்
மகனல்லை மன்ற வினி;

செல்வினிச் சென்றுநீ
செய்யும் வினைமுற்றி
யன்பற மாறியா முள்ளத்
துறந்தவள்
பண்பு மறிதிரோ வென்று
வருவாரை
கo. யென்றிறம் யாதும் வினவல்
வினவிற்

---

* கலி. கூ.

ஶ்ரீ
கலித்தொகை
பக்கம் - கக

பகலின் விளங்குநின்
செம்மல் சிதையத்
தவலருஞ் செய்வினை முற்றம லாண்டோ
ரவலம் படுதலு முண்டு.

இது பிரிவுணர்த்தப்பட்ட தோழி
செலவு விலக்கவும் பிரிவின்மேற்
சென்ற
உள்ளத்தனையிவனை நீ பிரியின்

இவள் இறந்தபடுமெனச் சொல்லிய வாய்

பாட்டான் மறுத்தது.

(க—சு) செவ்விய

வினி:—

(இ - ள்.) ஐய! வஞ்சனையிலவாய இனியவாகிய சொற்களைப் பையச் சொல்லி அச்சொற்களாலே தழுவின அக்களவொழுக்கம் நிகழ்ந்த நாளிற் கூறியவையெல்லாம் பொய்யாயிருந்தவெ அறிவில்லாத

யான் எங்ஙனம்

அறிவேன்? அகன்ற

மனையிலுள்ளாரால்

அடக்கவொண்ணாத அலரை எம்

மிடத்தே தந்து

ஞாயிறு முனிந்த வெய்தாகிய

காட்டைப்போக நினைத்தலை

இப்பொழுது அறிந்தேன். நீ

அறுதியாக நல்லமகனுண

தன்மையையுடையை

யல்லை;

"சினனே பேதைமை நிம்பிரி நல்குர - வனைநால் வகையுஞ் சிறப் பொடு பெறுமே"* என்பதனாற் றன் காதலான் நின்னை உள்ளவாறு

அறிந்திலேனெனத்

தன் பேதைமையைக் காதலாற்

சிறப்பித்தலின் அமைந்தது. மற்றும்

ஓவும் அசை.

(எ—கரு) சேல்விளிச்

முண்டு :—

(இ - ள்.) இனி, நீ நினைத்த காரியத்தே போய் ஆண்டுச் செய்யுங் காரியத்தை முடித்தபின்னர் இவ்விடத்துநின்று வருவாரை எம்மை நினைத்து வருந்தும்படியாக அன்பு நீங்கும்படி மனம் வேறுபட்டு யாங் துறக்கப் பட்டவளுடைய செய்தியும் அறிவீரோவென்று என் திறத்துச் சிறிதும் வினவாதேகொள். வினவுவையாயின் அவள்[1] இறந்துபாடு கூறவுங் கூடும். அது கேட்டால் ஞாயிறுபோல விளங்குகின்ற நின் தலைமை கெடும்படியாகக் கெடுதற்கு அரிய நீ செய்யுங் காரியம் முடியாமல் அவ்விடத்தே ஓர் அவலம் பிறத்தலும் உண்டு.

"வருத்த மிகுதி சுட்டுங் காலையு - முரித்தென மொழிப வாழ்க்கையு ளிரக்கம்." † என்பதற்கு உய்த்துக்கொண்டுணர்தலென்னுந் தந்திரவுத்தி யால் வினைப் பிரிவான் நிகழும் வருத்த மிகுதியைக் குறித்த இடத்தும் உயிர்

* தொல். பொருள் : உசடு. † தொல். பொருள் : உ௨௬.

பாலைக்கலி

ருள்

பாழ்க்கையுள் இரக்கம்

உரித்தென்றதனுன் உயிர்வாழ்க்கையுள்

இரக்கங் டறினுன்.

உமமை: ஐயம.

இதனுற் றேழிக்கு அச்சமுந் தலைவற்கு அசைவும் பிறந்தன.

கொச்சகம் வெண்பாவாய் வருதலானுந், தாழிசையோடு தொடராது

வருதலானும் இவை தரவிணைக்

கொச்சகம். இரண்டும்

ஒருபொருணுதலி யிவ்வாறு வரினுங்

கொச்சகமேயாம். இது "பாநிலை வகையே" * என்னுஞ் சூத்திரவிதியாம்.

(கஅ)

உ0.

பல்வளம் பகர்பூட்டும்
பயனிலம் பைதறச்

செல்கதிர் ஞாயிறு
செயிர்சினஞ் சொரிதலிற்
றணிவில்வெங் கோடைக்குத்
தண்ணயந் தணிகொள்ளும்
பிணிதெற லுயக்கத்த

பெருங்களிற் றினந்தாங்கு
மணிதிகழ் விறன்மலை வெம்ப
மண்பகத்
துணிசயந் துகள்பட்ட
தூங்கழல் வெஞ்சுரம்;
கிளிபுரை கிளவியாய் நின்னடிக்
கெளியவோ
தளியுறு பறியாவே காடெனக்
கூறுவீர்
வளியினும் வரைநில்லா
வாழுநா ளும்மாகத்
தனியென
வுடையேன்யா னவலங்கொண்
டழிவலோ;
ஊறுநீ ரமிழ்தேய்க்கு

மெயிற்றாய்நீ யுணல்வேட்பி
ஞாறுநீ ரிலவென வறனேக்கிக்
கூறுவீர்
யாறுநீர் கழிந்தன்ன
விளமைநுந் நெஞ்சென்றுந்
தேறுநீ ருடையேன்யான்
றெருமந்தீங் கொழிவலோ;

கரு. மாணெழில் வேய்வென்ற
தோளாய்நீ வரிற்றாங்கு

மாணிழ விலவாண்டை மரமெனக் கூறுவீர்
நீணிழற் றளிர்போல நிறனாழ்த்த லறிவேனுந்
தாணிழல்கை விட்டியான்
றவிர்தலைச் சூழ்வலோ;

எனவாங்கு,

-0. அணையரும் வெம்மைய
காடெனக் கூறுவீர்
கணைகழி கல்லாத
கல்பிறங் காரிடைப்

---

* தொல். பொருள்: சுசுஎ.

உ

ருஅ

கலித்தொகை

[கலி - உ0

பணையெருத் தெழிலேற்றின்
பின்னர்ப்

பிணையுங் காணிரோ
பிரியுமோ வவையே.
இது பிரிவுணர்த்திய தலைவற்குத் தலைவி எம்மையும் உடன்கொண்டு சென்மி னென்றாட்கு அவன் கானின் கடுமையுந் தலைவிமென்மையுங் கூறுவது
சேட்ட தலைவி, நாளது சின்மையும் இளமையதருமையுங் கூறி, எம்மையும் உடன்கொண்டு சென்மினென்றது.

(க—சு) பல்வளம்

வேஞ்சுரம் :—

(இ - ள்.) பல உணவுகளையும் விளைந்து கொடுத்து எல்லாரையும் நுகர்விக்கும் பயனையுடைய நிலம் ஈரம் அறும்படி ஞாயிறு குற்றத்தைச் செய்யுஞ் சினத்தோடே தன்னிடத்தினின்றுஞ் செல்கின்ற கதிர்களைச் சொரிகையினாலே, மாறுதலில்லாத வெய்ய கோடைக்காலத்திற்கு அதனிடத்துள்ள குளிர்ச்சியை விரும்பித் திரட்சிகொள்ளும் பசிப்பிணியாற் சுடுதலையுடைய வருத்தத்தினையுடையவாகிய பெரிய களிற்றினுடைய திரளைத் தாங்கும் மணிகள் விளங்கும் வெற்றியையுடைய மலை வெம்ப மண்பிளக்கத் தெளிந்த நீர்நிலைகளுந் தகளுண்டான செறிந்த அழலையுடைய வெய்ய காடு ;

தாங்கும் விளங்கும் மலை ; அணிகொள்ளுங் களிற்றினம்.

அயத்தணி கொள்ளுமென்று பாடமாயின், நீர்நிலைகளிலே திரட்சி கொள்ளுமென்க.

இது தரவு.

(எ—கo) கிளிபுரை

டழிவலோ :—

(இ - ள்.) "கிளியினது மொழியையொக்கும் மொழியினையுடையாய்! தூங்கழல் வெஞ்சுரம் மழை பெய்தலைக் கண்டறியாவாதலால் அக்காடு நின் அடிக்குப் போதற்கு எளியவாயிருக்குமோ?" என்று கூறுகின்றவரே! யான், நம்முடைய ஆகத்திடத்து முயக்கத்தைக் கண்டார் காற்றினுங் காட்டில் ஓர் எல்லையில் அகப்பட்டு நில்லாதவளுடைய வாழ்நாளென்று கூறும்படியாக, அதனை வாழ்நாளாக உடையேனாதலால் அவலத்தைக் கொண்டு நெஞ்சழிவேனோ? இறந்துபடுவேனே;

(கக-கச) ஊறுநீர் . . . . கோழிவலோ:—

(இ - ள்.) "தன்னிடத்து ஊறுகின்ற நீர் அமிழ்தத்தை ஒத்தற்குக் காரணமாகின்ற எயிற்றையுடையாய்! வெஞ்சுரத்துவழித் தண்ணீருண்டலை விரும்பின் நீர்களில" என்று அறத்தைக் கருதிக் கூறுகின்றவரே! யான் உம் நெஞ்சென்று சொல்லப்படுந் தெளிவுநீர்...

தாற்போன்ற இளமையாக உடையேனாதலால் இவ்விடத்தே சுழன்று நெஞ்சழிவேனோ? இறந்துபடுவேனே;

கழிந்த நீர்போல இளமையும் மீளாதென்பது பொருள்.

(கரு—க்அ) மாணெழில்

சூழ்வலோ :—

(இ - ள்.) " மாட்சிமைப்பட்ட அழகினையுடைய மூங்கிலைவென்ற தோளினையுடையாய் ! நீ வெஞ்சுரத்தே வரில் அவ்விடத்தில் மரங்கள் நின் இளைப்பை ஆற்றும் மாட்சிமைப்பட்ட நிழலையுடையவல்ல " என்று கூறுகின்றவரே ! நீர் நீங்கினால் என் நலம் நீண்ட நிழலினின்ற தளிர்போலே வெளுத்தலை அறிந்திருப்பேனாதலால் யான் உம்முடைய திருவடியில் அருளைக்

கைவிட்டு இங்கே இருத்தலைச் சூழ்வேனோ? இறந்துபடுவேனோ;

'வென்ற': உவமவுருபு.

இவை மூன்றுந் தாழிசை.

(கக) எனவாங்கு :—

(இ - ள்.) என்று யான் கூறவும்;

'ஆங்கு': அசை.

இது தனிச்சொல்.

(உ0–உக) அணையாநும் . . . .

வவையே :—

(இ - ள்.) "அவ்விடத்துக் காடு நீ அணைய அரிய வெம்மையையுடைய" என்று பின்னுங் கூறுகின்றவரே! பெருக்குங் கல்லின் நெருக்கத்தால் எய்த அம்பு ஓடாத அரிய வழியிடத்துப் பெருமையையுடைய கழுத்தினையும் அழகையுமுடைய ஏற்றின்பின் நீங்காமற் றிரியும் பிணையையுங் காணாதிருக்கின்றீரோ? அவை நீர் அறியப் பிரியாவே; ஆதலால், எம்மையும் உடன்கொண்டே சென்மின்.

இது சுரிதகம்.

இதனுற் றலைவிக்கு இழிவுந் தலைவற்கு அசைவும் பிறந்தன.

இங்ஙனந் தலைவி கூறுதல் "மரபுநிலைதிரியா"* என்னுஞ் சூத்திரத்து அமைத்தது.

இஃது ஆறடித் தரவும் நான்கடித் தாழிசையுந் தனிச்சொல்லும் நான்கடிச் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலிப்பா.

(கக)

பான்மருண் மருப்பி
னூரல்புரை பாவடி
யீர்நறுங் கமழ்கடாஅத்
தினம்பிரி யொருத்த

சீ௦
கலித்தொகை
[கலி - உக

லாறுகடி கொள்ளும் வேறுபுலம்
படர்ந்து
பொருள்வயிற் பிரிதல் வேண்டு

மென்னு
மருளில் சொல்லு நீசொல் லினையே

நன்னர் நறுநுத லயந்தனை நீவி
நின்னிற் பிரியலெ னஞ்சலோம்
பென்னு
நன்னர் மொழியு நீமொழிந்
தனையே
அவற்றுள், யாவோ வாயின
மாஅன் மகனே
கிழவ ரின்னோ ரென்னாது
பொருடான்
பழவினை மருங்கிற்
பெயர்புபெயர் புறையு

மன்ன பொருள்வயிற்
பிரிவோய் நின்னின்
நிமைப்புவரை வாழாண் மடவோ
ளமைக்கவின் கொண்ட தோளிணை மறந்தே.

இது தலைமகனாற் பிரிவுணர்த்தப்பட்ட தோழி அவனை நெருங்கிக், களவுகாலத்

தொழுக்கம் எடுத்துக்காட்டலாற் றெளிவுபட மொழிந்ததூஉம் பொருளது நிலையின்மையும் அவளது ஆற்றாமையுங் கூறிச் செலவுமறுத்தது.

(இ - ள்.) பால்தான் மருளும் மருப்பினையும் உரலின் அடியையொக்கும் நிலத்தே பாவும் அடியினையும் ஈரத்தினையுடைய நறியவாகக் கமழும்

மதத்தினையுமுடைய இனத்தைப் பிரிந்த யானை வழியைக் காவல்கொண்டு நிற்கும் வேறுகிய நிலத்தைப் போய்ப் பொருள் தேடுகின்ற இடத்தே "இவளைப் பிரிந்திருத்தலை நெஞ்சு விரும்பு"மென்று சொல்லும் அருளில்லாத சொல்லையும் நீ சொன்னுய் ; எம்மை விரும்பி நன்மையையுடைய நறிய நுதலை நீவி, "நின்னிடத்தினின்றும் பிரியேன் நீ அஞ்சுதலைத் தவிர்வா" யென்று சொல்லும் நன்மையையுடைய சொல்லையும் நீ சொன்னுய் ; அவ்விரண்டினுள், மயக்கத்தினையுடைய மகனே! உண்மைபிடத்தன யாவைதான் அறிகின்றிலேன் ; நீ தேடுகின்ற பொருடான் இத்தன்மையோர் நமக்கு உரியவரென்று கருதாதே பிறரிடத்து நின்ற நல்வினையாலே மீண்டு மீண்டு சென்று தங்கும் ;* நின்னையின்றிக் கண்ணிமைத்தொழில் நிகழுங் காலத்தின் எல்லையும் உயிர் வாழாத மடவோளுடைய அமைபினுடைய அழகைத் தன்னிடத்தேகொண்ட தோளிரண்டினையும் மறந்து அத்தன்மைத்தாகிய பொருள் தேடுகின்ற இடத்தே இவளை விட்டுப் பிரிந்திருப்பாய்.

'அவற்று'எனை இரண்டனுள் ஒன்றை வகுத்தலின் யாதுவாயதெனை ஒருமையாற் கூறற்பாலதுவும், "அவ்விரண்டனுட் கூர்ங்கோட்ட காட்டுவல்"1 என்றதுபோலப் பன்மையொருமை மயங்கிற்று. பிரிவாயென்னும்

* குறள் - ௩௩௩.

(பாடம்) 1. சுடர்வேல்.

பாலை - உக]

பாலைக்கலி

௯௧

முன்னிலையேவலொருமைமுற்று "

ஆயெங்கிளவியு மவற்றொடு கொள்

ளும்''* என்றதனால் ஒவாய் நின்றது.

"உறுக ணோம்ப

றன்னியல் பாகலி - னூரிய தாகுந்

தோழிக

ணூரனே.''† என்பதனாற்

குற்றேவற் றோழி 'பொருடான்

பழவினை

...பிரிவோய்' என

அறிவுடையாளாகக் கூறினள்.

இதனாற் றோழிக்கு அச்சமுந்

தலைவற்கு அசைவும் பிறந்தன.

இஃது 'அவற்று' னென

ஐஞ்சீரடிவந்து தனிச்சொல்லு
மடக்கியலு
மின்றிச் சுரிதகம்பெற்று
அடிவிமிர்ந்தோடிய கொச்சகம்.
(உ0)

உண்கடன் வழிமொழிந்
திரக்குங்கான் முகனுங்காங்
கொண்டது
கொடுக்குங்கான் முகனும்வே
றுகுதல்
பண்டுமிவ் வுலகத்
தியற்கை யஃதின்றும்
புதுவ தன்றே புலனுடை

மாந்திர்

௫. தாயுயிர் பெய்த பாவை
போல
நலனுடை யார்மொழிக்கட்
டாவார்தாந் தந்நலந்
தாதுதேர் பறவையி
னருந்திறல் கொடுக்குங்கா
லேதிலார் கூறுவ
தெவனோநின் பொருள்வேட்கை;
நறுமுல்லை நேர்முகை
யொப்ப நிரைத்த

௧௦. செறிமுறை பாராட்டி
னையமற்றெம் பல்லின்

பறிமுறை பாராட்
டினையோ வைய ;
நெய்யிடை நீவி
மணியொளி விட்டன்ன
வைவகை பாராட்டி
ஞாய்மற்றெங் கூந்தற்
செய்வினை பாராட்
டினையோ வைய ;

கரு. குளனணி தாமரைப்
பாசரும் பேய்க்கு
மிளமுலை பாராட்டி
ஞாய்மற்றெம் மார்பிற்
றளர்முலை பாராட் டினையோ வைய

எனவாங்கு,

அடர்பொ னவிரேய்க்கு

மவ்வரி வாடச்

உ௦. சுடர்காய் சுரம்போகு நும்மையா மெங்கட்
படர்கூற நின்றது முண்டோ தொடர்கூரத்

துவ்வாமை வந்தக் கடை.

---

* தொல். சொல்; உ௬உ. † தொல்.

பொருள்: உ௫௯.

கலித்தொகை

[கலி - உஉ

இது பிரிவுணர்த்தப்பட்ட தோழி அதற்கு உடம்படாது தலைமகனை நெருங்கி

களவுகாலத் தொழுக்கம் எடுத்துக்காட்டி ஆற்றுவித்து உடம்பட்ட வாய்பாட்

டான் மறுத்தது.

(க-அ) உண்கடன் . . . . வேட்கை :—

(இ - ள்.) அறிவுடைய மாந்திர்! தாம் வாங்கியுண்ணுந் தனிசை வழ் பாடாகச்சொல்லி இரந்து வாங்கும்பொழுது முகமலர்ந்திருத்தலும், அங் ஙனம்

வாங்கின தனிசை மீண்டு கொடுக்கும்பொழுது முகங் கெட்டிருத்த லும் முன்பும் இவ்வுலகத்துள்ளார் இயல்பு ; அஃது இன்றும் புதியதொய் றன்று ; அஃது இயல்பாயவாறு என்னெனில், மகளிர்தம்முடைய நலத்தை அவர்களை இரந்துகொண்டு தாதைத் தேடி உண்ணும் வண்டுபோல * நுகர்ந்து அதனை அவர் வேண்டின காலத்து அவர்க்குக் கொடாது கேட் டினைக் கொடாநின்றீர்; அங்ஙனங் கேட்டினைக் கொடுக்குமிடத்து எதிலார் கூறுவதெவனோ? அதுவன்றியும் நன்மைக்குணமுடையார்,

சித்திரமெழுத் கின்றவன் உயிர்ப்புக்கொடுத்த பாவை தான் அழியுமளவும் அக்குறிப்பு கிற்ல மாறுபோலத், தாங் கூறிய மொழியிடத்து உயிராகிய உண்மைகெடார்; ம் அம்மொழியிடத்து நலந்தாவி நினக்கு நிகழ்கின்ற நின் பொருள்வேட்கை யிடத்து நினக்கு ஏதிலாராகிய யான் கூறுகின்ற காரியம் எத்தன்மைத்து ! பயன்படாதே.

"முன்னிலைப் புறமொழி யெல்லா வாயிற்கும் - பின்னிலை தோன்று மென்மனார் புலவர்." †

என்பதனுன் இது முன்னிலைப்புறமொழி யாகக் கூறினுன்.

'முகனும்' 'முகனு'மென்னும் உம்மைகளை 'வேறுகுத'லென்பதன் பின்னே கூட்டி எண்ணும்மையாக்குக. 'பண்டு'மென்ற உம்மை எதிரதுப் 'இன்று'மென்னும் உம்மை இறந்ததுந் தழீஇயின. 'மாந்திர்' அண்மைவிளி ஆர்ந்து 'அருந்'தென விகாரமாயிற்று. 'இறல்கொடுக்கு'மிடத்து, 'பொருள் வேட்கை'யிடத்து என்பன 'கூறுவதெவ'னென்பதனோடு முடிந்தன.

இது தரவு.

(கூ—கக) நறுமுல்லை . . . . வைய :—

(இ - ள்.) ஐய! எம் பல்லினுடைய விழுந்தெழுந்த முறைமையினை யுடைய இளமைப்பருவத்தை இதற்குமுன்பு பாராட்டிவிட்டாய்; அப்பருவம் ஒழிந்து நறிய முல்லையினது தன்னிலொத்த முகையையொக்கும்படி நிரைத்த செறிந்த முறைமையாகிய ‡ நுகர்ச்சிக்குரிய இளமைப்பருவமெல்லாம் முற்பாராட்டிவிட்டாயோ? அது செய்திலையே;

மற்று, வினைமாற்று; ஓகாரம் எதிர்மறை.

---

* கலி-௪௦: உ௪-உ௫. †

தொல். பொருள்: க௯௭. ‡

குறுந் - ௬௬௭.

பறிமுறை பாராட்டினுய் செறிமுறை

பாடத்தை மாறிப் பொருள்கூறுக. அன்றி ஒன்று.

(கஉ—கச) நெய்யிடை . . .

சாங

பாராட்டினையோ வெனப்
அங்ஙனம் பாடமோதலும்

வையா :—

(இ - ள்.) ஐய! நீலமணி ஒளிவிட்டாற்போன்ற எங்கூந்தலிற் புழுகு பூசித் தாயர் ஐந்து வகையாக முடித்த இளமைப்பருவத்தை இதற்குமுன்பு பாராட்டிவிட்டாய்; அப்பருவம் ஒழிந்து நீதான் அதனிடத்துச் செய்யுந் தொழில்களை முற்றச்செய்து பாராட்டிவிட்டாயோ? அது செய்திலையே;

தலைவன் செய்யுந் தொழிலாவன, ஐவகையாக முடியாமல் தான் வேண்டியவாறே கோலங்கள் செய்துமுடித்தலும் அக்கூந்தல் அணையிற்றுயிலுதன் முதலியனவுமாம்.

(கஅ-கஎ) துளண்ணி . . . .
வைய :—

(இ - ள்.) ஐய! குளம் அழகுபெறுதற்குக் காரணமான தாமரையினது பசிய அரும்பையொக்கும் எம்முடைய ஊற்றின்பம் மிகவுமில்லாத இளமுலையை இதற்குமுன்பு பாராட்டிவிட்டாய்; அப்பருவம் ஒழிந்து ஊற்றின்பத்தை மிகவுமுடைய நீக்கம் அறியாத எந்தின நிலைமை சிறிது சாய்ந்த முலையினையுடைய மிக்க இளமைப்பருவமெல்லாம் முற்றப் பாராட்டிவிட்டாயோ? அது செய்திலையே;

இவை மூன்றுந் தாழிசை.

இத்தாழிசையின்
பொருளொன்றுணர்க.
கருத்தான் முற்பட்டவற்றிற்கும்

யாங்கூறியதே

(கஅ) எனவுாங்து :—

அசை.

இது தனிச்சொல்.

(கக—உஉ) அடர் பொன்

கடை :—

(இ - ள்.) நம்முடன் இவட்குப் பிணிப்புமிகும்படி நல்வினை நிகழ்கின்ற[1] காலத்தே நம்மை நகராமையாகிய தீவினை வந்து புகுந்த இடத்துத், தகடாகிய பொன்னினது விளக்கத்தையொக்கும் அழகிய சுணங்கு கெடும்படி ஞாயிறுகாய்ந்த சுரத்தைப் போகும் நும்மை யாங்கள் எம்மிடத்து வருத்தத்தைச்சொல்லி விலக்க எம்மிடத்து நின்றதும் உண்டோ? இல்லையே, யாங் கூறுவதென்?

ஒரு நல்வினை

ஓகாரம் எதிர்மறை.

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை - யேமஞ் சான்ற மக்களொ டுவன்றி - யறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ் - சிறந்தது பயிற் விறந்ததன் பயனே." * என்னுஞ் சூத்திரத்திற் றலைவனுந் தலைவியும்

மூப் வருவதன்முன் துறப்பாரென்றலிற் பல்லு விழும் பருவத்தும் நரை வரு பருவத்தும் இல்லறஞ் செய்திருப்பாரெய்றல் † பொருந்தாமையுணர்க.

இது சுரிதகம்.

இதன்றற் ரோழிக்கு இழிவுந் தலைவற்கு அசைவும் பிறந்தன.

இஃது எட்டடித்தரவும் மூன்றடித்தாழிசையுந் தனிச்சொல்லு வெள்ளைச் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. "வெண்பா வியல

னும் பண்புற முடியும்"‡ என்பது விதி.
கொள்க.

இது மேல்வருவனவற்றிற்கு

(உ4

உ௬.

இலங்கொளி மருப்பிற் கைம்மா வுளம்புநர்
புலங்கடி கவணையிற் பூஞ்சினை யுதிர்க்கும்
விலங்குமலை வெம்பிய போக்கரு வெஞ்சுரந்
தனியே யிறப்ப யானெழிந் திருத்த
௫. னருதற் கொன்றிவ்[1] வழுங்க லூர்க்கே;

இனியான்,

உண்ணலு முண்ணேன்

வாழலும் வாழேன்;

தோணல முண்டு துறக்கப்
பட்டோர்
வேனி ருண்ட குடையோ ௪0.
ரன்னர்;
நல்குநர் புரிந்து
நலனுணப் பட்டோ
ரல்குநர் போகிய வூரோ
ரன்னர்;
கூடினர் புரிந்து குணனுணப்
பட்டோர்
சூடின ரிட்ட பூவோ ரன்னர்
;

எனவாங்கு,

கரு. யானு நின்னகத் தனையே னுது
கொலைவெங் கொள்கையொடு நாயகப் படுப்ப
வலைவர்க் கமர்ந்த மடமான் போல

* தொல், பொருள் : கசுல. † நாலடி - கக. ‡ தொல், பொருள் : ௧அகூ.

பாலை - உஉ]

பாலைக்கலி

கா(நின்ணுங்கு வருஉமென்

னெஞ்சினை

யென்னுங்கு வாரா

தோம்பினை கொண்மே.

இது பிரிவுணர்த்தப்பட்டு ஆற்ருளாய

தலைவி எம்மையும் உடன்கொண்டு

சென்.

றனென்றட்கு உடன்படாது அவன் பிரியலுறத் தனது இறந்துபாடு தோன்றக் கூறியது.

(கஎ) இலங்கோளி வாழேன் :—

(இ - ள்.) விளங்குகின்ற ஒளியினையுடையவாகிய கொம்பினையுடைய யானையை அலைப்பார் அங்கிலத்தினின்றும் அவ்வியானையை ஓட்டுங் கவணை யாலே பூக்களையுடைய கொம்பிற் பூக்களை உதிர்க்கும்* விளங்குகின்ற[1] மலை கள் வெம்பிய போதலரிய வெய்ய சுரத்தைத்

தனித்து நீ போக யான் நின்னைக் கைவிட்டிருத்தல் இந்த இரக்கத்தையுடைய ஊர்க்குச் சிரித்தற்கு, தக்க காரியம்; நீ இங்ஙனம் பிரியுமளவில் யான் உண்டற்கு உரியனவற்றை, உண்ணுதலுஞ்செய்யேன், உயிரை வாழ்தலுஞ் செய்யேன்;

'உண்ணேன்' 'வாழே' னென்பன முழுவதுங் காரியவாசகமாயே நிற்கு மென்பது, "வினையேசெய்வது"† என்னுஞ் சூத்திரத்தாற் கூறினும் உம்மைகள் எண்ணும்மை. 'உண்ணலும் உண்ணே'னென்பது பசியடநிற்றல் இது தரவு.

(அ—கூ) தோளல . . . :
ரன்னர் :—

(இ - ள்.) தோளின் நலத்தை நுகர்ந்து கணவராற் றுறக்கப்பட்ட மகளிர் தண்ணீர்வேட்கையாலே கோலித் தண்ணீர் குடிக்கப்பட்ட எச்சி லாற் பயன்படாத குடையோலையை ஒப்பர்; அந்நிலையை ஓர்ந்துபார்;

(கo—கக) நல்குநர் . . .
. . ரன்னர் :—

(இ - ள்.) மனம் விரும்பி யருளின கணவரால் நலத்தை நுகர்ந்து விடப்பட்ட மகளிர்

குடியிருப்பார் போகிய பாழூரை‡
ஒப்பர் ; அங்கிலேயை ஒர்ந்துபார்;

(கஉ—கரு) கூடினர் . .
. . ரன்னர் :—

(இ - ள்.) மனம் விரும்பிக் கூடின
கணவராற் றங்குணத்தை நுகர்ந்து
விடப்பட்ட மகளிர், முடிப்பார்
முடித்துப்போகட்ட பூவை ஒப்பர்;
அங் கிலேயை ஓர்ந்துபார் ;

---

* மணிபடு. உ0க - உ0கு ; அகம்.
உகஉ : ௸ - கக.

† தொல், சொல்: ககஉ. ‡ குறுக்

• சூக.

(பாடம்) 1. விலங்குகின்ற.

ர்கிர
கலெதுமதுாமாக
L.... உ..

இவை " உண்டற் குரிய வல்லாப் பொருளை "* என்னுஞ் சூத்திரத் ில் உய்த்துக்கொண் டுணர்தலென்பதனற் கொண்டாம்.

இவை மூன்றுந் தாழிசை.

(கச)

எனவாந்த :—

ஆசை.

இது தனிச்சொல்.

(கரு—கக) யானுநின்

கோண்மே :—

(இ - ள்.) நின்னிடத்து யானும்

பயன்படாத தன்மையையுடையேன்;

)ணிக் கொலைத்தொழிலிடத்துக் கடிய

கோட்பாட்டோடே நாய் அமை ாமற்

சென்று தனக்கு உரித்தென்று

அகப்படுத்திக்கொள்ள அதற்கு உரித்

ாகாது வலைவர்க்கு அமர்ந்துவிட்ட

மடமான்போலே எனக்கு உரித்தாக்

ான் அகப்படுப்பவும் என்றுங்கு
வாராமல் நின்றுங்குவரும் என்
னெஞ்சி எப் பாதுகாத்துக்கொள்.

இது சுரிதகம்.

இதனுற் றலைவிக்கு இழிவுந் தலைவற்கு அசைவும் பிறந்தன.
'நின்றுங்கு' 'என்றுங்கு' என்பன நின்னுடைய் கையிடத்து என்
றுடைய கையிடத்து எனச் சுட்டுப்பொருள் தந்தவா றுணர்க.

இஃது 'இனியான்' எனத் தனிச்சொல்லும் ஓரடியான் ஒன்றும் பெற்று
ந்த கொச்சகம். இது "பாநிலைவகை"† என்னுஞ் சூத்திரவிதி. (உஉ)

நெஞ்சு நடுக்குறக் கேட்டுங் கடுத்துந்தா
மஞ்சிய தாங்கே யணங்காகு மென்னுஞ்சொ
லின்றீங் கிளவியாய் வாய்மன்ற நின்கேள்

புதுவது பன்னாளும் பாராட்ட யானு
மிதுவொன் றுடைத்தென வெண்ணி யதுதேர
மாசில்வண் சேக்கை மணந்த புணர்ச்சியுட்
பாயல்கொண் டென்றோட் கனவுவா ராய்கோற்
றொடிநிரை முன்கையாள் கையாறு கொள்ளாள்
கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ
விடுமருப் பியானை யிலங்குதேர்க் கோடு
நெடுமலை வெஞ்சுரம் போகி நடுநின்று
செய்பொருண் முற்று மளவென்று ராயிழாய்

* தொல். பொருள்: ௨௧௧. † தொல். பொருள்: ௪௧௭.

பாலை - ௨௩]

பாலைக்கலி

கிஎ

தாமிட்டுக் கொண்ட ததுவாயிற் றம்மின்றி
யாமுயிர் வாழு மதுகை யிலேமாயிற்

கரு. றெய்யி றுறந்தா ரவரெனத் தம்வயி
னெய்யார் நுவலும் பழிநிற்பத் தம்மொடு
போயின்று சொல்லென் னுயிர்.

இது தலைமகன் குறிப்புக் கண்டு பிரிவனென ஐயுற்றுச்செல்கின்ற தலைவி அக்காலத்துத் தலைவன் கனவின் அரற்றினமை கேட்டுப் பொருள்வயிற் பிரிகின்றனெனத் துணிந்து ஆற்றளாய்த் தோழிக்குச் சொல்லியது.

இது "மேலோர் முறைமை நால்வர்க்கு முரித்தே" * என்பதனால் அந்தணன் அறங் கருதித் தூதிற்பிரிந்து அவ்வரசர் செய்த பூசனை வாங்கிக்கொண்டு வருதற்குப் பிரிகின்றதென்று கொள்க. இது "வேற்றுநாட் டகல்வயின் விழுமங்"† கூறுகின்றது.

(இ - ள்.) இன்றீங்கினவியை யுடையாய் ! நெஞ்சு

நடுக்குறும்படி

பலகாலுங் கேட்டுங், கேட்ட அதனை உண்டோ இல்லையோவென்று ஐயுற்றுந், தாம் அஞ்சியிருந்த பொருள் தாங் கேட்டபடியிலே மெய்யாய் வருத்தமாமெனும் பழமொழி அறுதியாக உண்மை ; அஃது எங்ஙனேயென்னில், நின்னுடைய உறவானவர், பலநாளும் புதியதொன்றாக என்னைப் பாராட்டு கையினாலே யானும் இப்பாராட்டுதல் ஒரு பிரிவையுடைத்தென்று கருதி அப்பிரிவை ஆராயாநிற்க, ஐந்து

வகையாகக்‡ கூட்டின மாசில்லாத

வண் மையையுடைய படுக்கையிற்

புணர்ந்த புணர்ச்சியிடத்தே

என்தோளிலே

துயில்கொண்டு களுக்காண்கின்றவர்,

"ஆராய்ந்த கோற்றொழிலையுடைய

செறிந்த தொடியணிந்த

முன்கையினையுடையாள்

கையாறுகொள்ளாளாய்க்,

குத்துங் கொம்பினையுடைய யானை நீர் வேட்கையினாலே விளங்குகின்ற பேய்த்தேரின் பொருட்டு ஓடும் நெடுமலையில் வெய்யசுரத்தைப் போய் இரு

பெருவேந்தரையுஞ்

சந்துசெய்வித்தற்கு நடுவாகநின்று

சந்துசெய்வித்தபின் னர் யாம்

பெறுதற்கு உரியவாய் அவர்

எமக்குச்செய்யும் பூசனையாகியபொருள்

அவர் தந்து முடியுமளவுந், தனக்கு வரைவினையுடைய இல்லறத்தையுங் காத்துச் செந்தீயையும் பாதுகாக்க வல்லனோ!''வென்று கூறினர் ; ஆய்ந்த இழையினையுடையாய் ! நங்காதலர் கூட்டத்திற்கு இடையீடாகக் கொண்ட காரியம் பொருள்வயிற்பிரிவாயின், யாந் தம்மைப் பிரிந்து உயிர்வாழும் வலியிலேமாயின், இனி, "அவள் மார்பிற் றொய்யிலை நீங்காதவர் இப்பொழுது துறந்தா''ரென்று தொய்ய மகளிர் கூறும்பழி தம்மிடத்தே நிற்ப, என்னுயிர் தம்மோடேகூடப் போயிற்றென்று

* தொல். பொருள்: உக.　　　† தொல். பொருள்: கசசு.

சூஅ
கலித்தொகை
[கலி - உ(

'நெஞ்சநடுக்குறக்' கேட்டது, "இவ் ஆலிலே பேயுண்"டென்று கேட டாற்போல்வது. 'இன்கிளவி,' பின்பு காரியத்தில் இனிய கிளவி; 'தீங்கிளவி, கேட்ட காலத்தில் இனிய கிளவி.

'கனவுவா'ரென்றது தொடங்கி

'என்று'றென்ற துணையுங் கனவெவ்ஞும் மெய்ப்பாடு. 'கையாறு,' உயிர்ப்பின்றி வினையொழிந்தயர்தல். தொய் யில் அவரெனக் கூட்டுக.

'போயின்'றென்ற குற்றுகரம் இன்பெற்று னகரந் திரியாமல் நின்றது தெளிவுபற்றி இறந்த காலத்தாற் கூறினன்.

இதனாற் றலைவிக்கு இழிவுந் தோழிக்கு அச்சமும் பிறந்தன.

இது சிருந் தளையுஞ் சிதையாமற் பன்னீரடியின் இகந்து ஒரு பொருணுதலாத சீர்வகைக் கலிவெண்பா.

(உசு

உரு.

வயக்குறு மண்டிலம்

வடமொழிப் பெயர்பெற்ற
முகத்தவன் மக்களுண் முதியவன் புணர்ப்பினு
லவரென் றுலகேத்து மரசர்க ளகத்தராக்
கைபுனை யரக்கில்லைக் கதழெரி சூழ்ந்தாங்குக்
களிதிகழ் கடாஅத்த கடுங்களி றகத்தவா
முளிகழை யுயர்மலை முற்றிய முழங்கழ
லொள்ளுரு வரக்கில்லை வளிமக னுடைத்துத்தன்
னுள்ளத்துக் கிளைகளோ டுயப்போகு வான்போல
வெழுவுறழ் தடக்கையி னினங்காக்கு மெழில்வேழ
மழுவஞ்சூழ் புகையழ லதர்பட மிதித்துத்தங்
குழுவொடு புணர்ந்துபோங் குன்றழல் வெஞ்சுர
மிறத்திரா லையமற் றிவணில்லை கேட்டீமின் ;

மணக்குங்கான் மலரன்ன தகையவாய்ச் சிறிதுநீ
தணக்குங்காற் கலும்பானுக் கண்ணெனவு முளவன்றே
சிறப்புச்செய் துழையராப் புகழ்பேற்றி மற்றவர்
புறக்கொடையே பழிதூற்றும் புல்லியார் தொடர்புபோல் ;
ஈங்குநீ ரளிக்குங்கா லிறைசிறந் தொருநாணீர்
நீங்குங்கா னெகிழ்போகும்[1] வளையெனவு முளவன்றே
செல்வத்துட் சேர்ந்தவர் வளனுண்டு மற்றவ
ரொல்கிடத் துலப்பிலா வுணர்விலார் தொடர்புபோல் ;

(பாடம்.) 1. நெகிழ்பேகும்.

பாலை - உச]

பாலைக்கலி

சுச

ஒருநாணீ ரளிக்குங்கா லொளிசிறந் தொருநாணீர்
பாராட்டாக் காற்பசக்கு நுதலெனவு முளவன்றே[1]
பொருந்திய கேண்மையின் மறையுணர்ந் தம்மறை
பிரிந்தக்காற் பிறர்க்குரைக்கும் பீடிலார் தொடர்புபோல் ;
எனவாங்கு,
யாநிற் கூறுவ தெவனுண் டெம்மினு
நீகற் கறிந்தனை நெடுந்தகை

வானக்
துளிமாறு பொழுதினிவ்
வுலகம் போலுநின்
னளிமாறு பொழுதினிவ்
வாயிழை கவினே.

இது பிரிவுணர்த்தப்பட்ட தோழி நீ பிரிந்தாற் பீடிலார் தொடர்புபோல நும்மை
அலர் தூற்றுவன
இவ்வகைப்பட்டன சிலவுளவெனத் தலைவி யாற்றாமை
கூறிச் செலவழுங்குவித்தது.

(க—கஉ) வியக்குறு . . . .
கேட்டைமின்:—

(இ - ள்.) வடமொழிப் பெயர் பெற்ற வயக்குறு மண்டிலம்போலும் முகத்தவனுடைய மக்களுள் மூத்த துரியோதனன் சூட்சியாலே, ஐவ ரென்று உலகத்தார் புகழுந் தன்மபுத்திரர் முதலியோர் உள்ளேயாகக், கையாலே புனையப்பட்ட அரக்குமாளிகையை விரைந்து நெருப்புச்சூழ்ந் தாற்போலக், களிப்பு விளங்குகின்ற மதத்தவாகிய கடிய களிறுகள் உள்ளே யாக, உலர்ந்த மூங்கிலையுடைய உயர்ந்த மலையைச் சூழ்ந்த முழங்குகின்ற அழலைக், கணையத்தை மாறுபடுகின்ற[2] தடக்கையினையுடைய தன் இனத்

தைக் காக்கும் அழகினையுடைய வேழம், புகையழலையுடைத்தாகிய ஒள்ளிய உருவத்தினையுடைய அவ்வரக்கில்லை அந்த வீமசேனன் அழித்துத் தன்

உளத்திற்குப் பொருந்தின சுற்றத்தோடே பிழைக்கப் போகின்றவனைப் போல, அதர்படும்படி மிதித்துத் தம்முடைய இரளோடே கூடிப் போதுங்

காட்டுப் பரப்புச் சூழ்ந்த குன்று அழலும் வெய்தாகிய சுரத்தை இறப்பீ ராயின், ஐயனே! பின்னை இவளுடைய நிலைமையைக் கேட்பீராக!

வடமொழிப்பெயர் பெற்ற வயக்குறு மண்டிலம் போலும் முகத்தவ னென்றது, ஆதித்தரிற் பகனென்னும் வடமொழிப்பெயரைப் பெற்ற

விளங்குதலுறும் ஆதித்தனைப் போலும் முகத்தையுடையவனென்பது; அவன் தான் குருடாயினமையிற் பிறரைக்காணுதவாறுபோல இவனும்

பிறரைக் காணாத முகத்தையுடையவனென்றவாறு; என்றது திருதராஷ்டிரனை. இனி, விளக்கமுற்ற கண்ணாடியின் பெயரை வடசொல்லாகிய பெயராற்பெற்ற முகத்தவன் என்றலுமாம்; அது தர்ப்பணனன் னென்னும்

(பாடம்) 1. உளதன்றே. 2. மாறுபடுக்கின்ற,

பயரை. அது பிறரைத் தான் காணாதவாறுபோல இவனும் பிறரைக் காணா னென்றதாம். இனி, விளக்கமுற்ற நாடெனநின்ற அச்சொல்லினைத் திருத ராஷ்ட்ரனென்னும் வடமொழிப் பெயராலே தமிழ்ச்சொலீருகத் திரித்த ;தராயனென்னும் பெயர் பெற்ற பாண்டுவுக்கு மூத்தவனென்றும் உரைப்ப.

முற்றிய முழங்கழலை,
இனங்காக்கும் வேழம்,
புகையழலையுடைய அவ் பரக்கில்லை
அவ்வளிமகன் உடைத்துக்
கிளைகளோடே போவான்போல,
புதர்படமிதித்துக் குழுவொடுபுணர்ந்து

போஞ்சுரமென்க. அழலைமிகுத்துப்
போமென முடிந்தது. அழுவஞ்சூழ்
குன்று அழல்சுரமென்க. இது சுரத்
திற்கு அடை.

'ஐய கேண்மி'னென்பது
ஒருமைப்பன்மை
மயக்கம். ஆயில், ஆலென விகாரமாயிற்று.

இது தரவு.

(கக—கசு) மணக்துங்கான்
தொடர்புபோல்:—

(இ - ள்.) தம்மிடத்தே இருந்தாராக அவர்களுக்குச் சிறப்புக்களைச் செய்து புகழ்ந்து வாழ்த்தி அவர் எழுந்த அளவிலே அவர்க்குள்ள பழிகளைப் பலர்க்குங் கூறும் புறங்கூறுவாருடைய உறவுபோல நீர் கூடியிருக்குங் காலத்

துச் செவ்வியைத் தோற்றுவித்து மலரையொத்த தகைமையினையுடைய வாய்ச் சிறிதுபொழுது நீர் பிரியுங்காலத்து தம் பழியைத் தூற்றி அழுத

லமையாத கண்ணெனவுஞ் சில பகை உளவன்றோ ?

அப்பகையைப் பேணுங் கண்ணெனவுமென்றது, "கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை"* எனப்பட்டும் பகையாமென்னுங்[1] குறிப்பிற்று.

(கஎ—உ௦) ஊங்குநீ

தோடர்புபோல் :—

(இ - ள்.) ஒருவர்க்குச் செல்வமுண்டான இடத்து நீங்காதிருந்து அவருடைய செல்வத்தை நுகர்ந்து பின்னை அவர் மிடித்தகாலத்து அவர்க்கு ஒன்றை உதவுதலில்லாத அறிவில்லாதாருடைய † உறவுபோலே நீர் இவ்விடத்தே கூடியிருந்து அருள்செய்யுங் காலத்து இவட்கு உண்டாகிய அழகைத் தானும் பெற்று இறையிலே சிறந்துகாட்டி ஒருநாள் நீர் பிரியுங் காலத்துத் தோள் மெலிகையினாலே தான் உதவி செய்யாது கழன்றுபோம் வளையெனவுஞ் சில பகை உளவன்றோ ?

அப்பகையைப் பேணும் வளையெனவுமென்றது சிறந்த அழகுதரு மாயினும் பகையாயிற்றென்னுங் குறிப்பிற்று.

---

* நான்மணி. ருசு. † அகம். எக.;

கஉகூக-ஆம் குறளுரை.

(பாடம்) 1. பகையா

யிருக்குமென்னுங்.

பால - உகு]

பாலைக்கலி

எச

(உக—உச) ஒருநாணீ

தொடர்புபோல்:—

(இ - ள்.) இருவர் மனமும் பொருந்திய நட்பாலே அவன் கூறிய

மறைப்பொருளை அறிந்து அம்மறைப்பொருளை அவன் நீங்கினுற் பிறர்க்கு இருந்து சொல்லும் பெருமையில்லாதார் உறவுபோலே, ஒரு நாள் நீர் அளி

செய்யுங் காலத்து நும் அளிக்குத் தானுங் கூடினாற்போன்று ஒளி மிக்கு,

ஒரு நாள் நீர் அளியாக்காலத்து நும்முடைய குணத்தைப் பிறர்க்கு அறிவித்துப் பசந்துகாட்டும் நுதலெனவும் ஒரு பகை உண்டன்றோ ?

அப்பகையைப் பேணும் நுதலெனவுமென்றது, சிறப்புறுப்பாய்

அழகு
கொடுத்தற்கு உரியது
பகையாயிற்றென்னுங் குறிப்பிற்று.
மெய்யெல்லாங்
கோலஞ்செய்தாலும் நுதற்குத்
திலகம் முதலியன இட்டாக்கால்
அவை
கோலமாய்த் தோன்றுந் தன்மை
நுதற்கு உளதாகலிற்
சிறப்புறுப்பாயிற்று. இவை
மூன்றுந் தாழிசை.

(உகு)

எனவாங்கு :—

(இ - ள்.) என்று; 'ஆங்கு' : அசை.

இது தனிச்சொல்.

(உகூ—உக) யாநிற்

. . . . கவினே :—

(இ - ள்.) யாம் நினக்குக் கூறுகின்ற வார்த்தையால் என்ன பயன் உண்டு ? எம்மினுங்காட்டில்

அப்பகையுண்மையை நீ நன்றாக அறிந்தாய்;

அதுவுமன்றி, நெடுந்தகாய்! இந்த ஆராய்ந்த இழையினையுடையாள் அழகு நீ

அளித்தலை நீங்குங் காலத்து இவ்விடத்து, வானந் துளிமாறுபொழுது இவ்வுலகங் கெடுமாறுபோலக் * கெடுங்காண்; அதனை உட்கொள்ளாய்.

இது சுரிதகம்.

இதனாற் றோழிக்கு இழிவுந் தலைவற்கு அசைவும் பிறந்தன.

இது பெருமைக்கெல்லை கூறிய பன்னீரடித் தரவும் நான்கடித் தாழிசை

யுந் தனிச்சொல்லும் நான்கடிச்

சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக் கலிப்பா.

(உச)

உகி.

ஒருகுழை யொருவன்போ
லிணர்சேர்ந்த மராஅமும்
பருதியஞ் செல்வன்போ
னனையூழ்த்த செருந்தியு
மீனேற்றுக்
கொடியோன்போன்

மிஞிமுர்க்குங் காஞ்சியு
மேமேனுன்போ
னிறங்கிளர்பு கஞலிய ஞாழலு

ரு. மாமேனுற்றுக்
கொடியோன்போ லெதிரிய
விலவமு மாங்க்த்[1]
தீதுதீர் சிறப்பி னேவர்க
ளினேபோலப்
போதவிழ் மரத்தோடு

பொருகரை கவின்பெற
நோதக வந்தன்று
விளவேனின் மேதக ;
பல்வரி யினவண்டு
புதிதுண்ணும் பருவத்துத்
தொல்கவின் றொலைந்தவென்
றடமென்றோ ளுள்ளுவா
ரொல்குபு நிழல்சேர்ந்தார்க்
குலையாது காத்தோம்பி
வெல்புக ழுலகேத்த
விருந்துநாட் டுறைபவர் ;
திசைதிசை தேனார்க்குந்
திருமருத முன்றுறை

வசைதீர்ந்த வென்னலம் வாடுவ தருளுவார்
கரு. நசைகொண்டு தங்நிழல்[2]
சேர்ந்தாரைத் தாங்கித்தம்
மிசைபரந் துலகேத்த வேதினுட்
டுறைபவர் ;
அறல்சாஅய்
பொழுதோடெம் மணிநுதல்
வேறாகித்
திறல்சான்ற பெருவனப்
பிழப்பதை யருளுவா
ரூறஞ்சி நிழல்சேர்தார்க்
குலையாது காத்தோம்பி உ0.
யாறின்றிப்
பொருள்வெஃகி யகன்றநாட்

டுறைபவர் ;

எனநீ,

தெருமரல் வாழி தோழிநங்

காதலர்

பொருமுரண் யானையர் போர்மலைந் தெழுந்தவர்
செருமேம் பட்ட வென்றியர்

உரு. வருமென வந்தன்றவர்

வாய்மொழித் தூதே.

இது "மேவிய சிறப்பி னேனோர்"* என்னுஞ் சூத்திரத்திற் பகைமேற்சென்ற அரசன் திறைபெற்ற நாடு காத்து அதன்கண் தன் நெறிமுறைமை அடிப் படுத்துவதற்குப்[3] பிரிவனென்றலின், பிரிவின்கண் தலைவன் இளவேனிற் காலத்துப்[4] பிரிய, அக்காலவரவின்கண் தலைவி ஆற்றாளாய் அவர் நமக்கு அருளுங்காலையில் அருளார்கா ணென்றாட்குத், தோழி, அவர் வரவிற்கு இக்காலந் தூதாயன்றே வந்தது, நீ ஆற்றுவாயாகவென வற்புறுத்தியது.

(க—அ) ஒருதுறை . . . . . மேதக :—

(இ - ள்.) நீர்பொருகின்ற கரையினிற்கும் ஒரு பூங்குழையையுடைய நம்பி மூத்தபிரானைப்போலப் பூங்கொத்துக்கள் பொருந்தின வெண்கடம்பும்

* தொல். பொருள் : உஅ.

(பாடம்) 1. ஆங்குத். 2. தக்கீழல். 3. படுத்துவருதற்குப். 4. காலக்

பருதியாகிய அழகிய் செல்வனைப்போல அரும்புகள் அலர்ந்த செருந்தியுஞ், சுறவையுடைத்தாகிய கொடியினையுடைய காமனைப்போல மிஞிறுகள் ஆரவாரித்தற்கிடமாகிய காஞ்சியும், அவன் தம்பி சாமனைப்போல நிறம் விளங்கிப் பூக்கள் நெருங்கின ஞாழலும்,

இடபத்தினையுடைய கொடியினை யுடைய இறைவனைப்போலப் பூக்கள் காலத்தை எதிர்கொண்ட இலவமும், தமக்குக் குற்றந் தீர்ந்த தலைமையினையுடைய ஐவர்களுடைய திறத்தின் றன்மைபோல, அக்கரையிடத்துப் பூக்கள் விரிந்த பிற மரங்களோடே அழகுபெறப், பிரிந்தார்க்கு நோவு பொருந்தக், கூடியிருந்தார்க்குப் பெருமை பொருந்த இளவேனில் வந்துற்றது ;

'மீனிலேறு,' 'ஆனிலேறு,' 'மிஞிறூர்க்குங் காஞ்சி': இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேலே

கின்றது. 'ஏனேன்': ஏனையோனின் விகாரம். 'ஆங்'கென்றது அக்கரையை. கரை மாராமுஞ் செருந்தியுங் காஞ்சியும் ஞாழலும் இலவமும் பிற மரங்களோடே கவின்பெறவென இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்துமேல் ஏற்றலுமொன்று.

இது தாவு.

(கூ—கஉ) பல்வரி

நுறைபவர்:—

(இ - ள்.) இயற்கைகலங் கெட்ட என்னுடைய பெருமையை புடைய மெல்லிய

தோளைப், பலவரியினையுடைய இனமாகிய வண்டுகள் புதிதாகிய தேனை நுகரும் இளவேனிற் காலத்தே, கூட விளைப்பார், முன்னர் அந்நாடு ஆள்பவர் கலக்கமுறுத்த அலைபெற்றுப், பின் தன்னை நிழலாக அடைந்த குடிமக்களுக்கு நெஞ்சு வருந்தாதபடி பகைவரைப் பேணிக் காத்து, முன்பு நாடாட்சிபெற்ற பகைவரை வென்ற புகழை உலகத்தார் புகழப் புதுமையையுடைய நாட்டிலே இருக்கின்றவர்* ;

என்றதனால், திறைபெற்ற நாட்டைத் திருத்தித் தன் நாடுபோல

செறிமுறைமை நடத்துவித்தலே பொருளென்று இருக்கின்றவர் நம்மை
யினையார்காணென்று நிகழ்ந்தது கூறினள். 'விருந்து' நாடெனவே பகை
வர் தோற்றுத் திறை கொடுத்தமை
தோன்றிற்று.

'உள்ளுவா'ரென முற்றுவினை
பெயர்கொண்டு நின்றது; காத்து
உறைபவரென்க.

(கரு—கசு) திசைதிசை . .
. . டுறைபவர் :—

(இ - ள்.) குற்றமற்ற என்
நலங்கெடுவதற்குத் திசைதோறுந்
திசைதோறுந் தேனினம் ஆரவாரிக்குந்
திருமருதந் துறைமுன்னே
அருளுதலைச் செய்வார்,
நம்மைக் காத்தற்குரியான்

இவனென்று நச்சுதல் கொண்டு நம்மை நிழலாக வந்தடைந்த குடிமக்களைத் தமக்குப் பாரமென்று

---

* புறப். வெண். வஞ்சி : எ.

எசு.

கலித்தொகை

[கலி - உஎ

பொறுத்துத் தம் புகழ் உலகெங்கும் பரக்கையினலே அவ்வுலகத்தார் புகழத் தமக்கயலாகிய நாட்டிலே இருக்கின்றவர் ;

"யாறுங் குளனுங் காவு மாடிப் - பதியிகந்து நுகர்தலு முரிய வென்ப"* என்பதனல், திருமருதந்துறையில் அருளுவாரென்றாள்.

(கஎ—உ0) அறல்சாஅய் . . . . டுறைபவர் :—

(இ - ள்.) எம்முடைய அழகினையுடைய நுதலும் பசந்து, நாமும் வலியமைந்த[1] பெரிய அழகை இழப்பதற்கு நீரற்று ஓடுதல் சுருங்கின இளவேனிற் காலத்தே அருளுதலைச் செய்வார், முன்பு நாடாட்சிபெற்ற அரசர்செய்த வருத்தத்திற்கு அஞ்சி நிழலாக வந்தடைந்தார்க்கு நெஞ்சு வருந்தாதபடி பகைவரைப் பேணிக் காத்து, நெறியன்றி அவ்வரசர் பொருளை விரும்புகையின்றிலே, அவரை

நீங்கின நாட்டிலே இருக்கின்றவர்;
இவை மூன்றுந் தாழிசை.

(உக—உரு) எனநீ

தூதே :—

(இ - ள்.) என்றுகூறி மனஞ்சுழலாதே கொள்; அதற்குக் காரணம் யாதெனில், நங் காதலர் பொருகின்ற மாறுபாட்டையுடைய யானையை யுடையவராய்ப் போர்செய்தற்கு மாறுபட்டு எதிர்வந்தவருடைய போரிடத்தே நீ கூறியவாறே மேலான நாடுகளைப் பெற்ற வெற்றியையுடையராகையினலே அவருடைய மெய்ம்மொழியாகிய தூது வருவரென்றுசொல்லி வந்ததுகாண்; இனித், தோழி! நீ

இனிது வாழ்வாயாக !
'மேம்பட்ட' சுண்டுப்
பெயராய் நின்றது.
வரவெனவந்தன்று என்ற

பாடமாயின், வெற்றியையுடையராகையினலே அவர் மெய்ம்மொழியாகிய அது வந்ததென்று சொல்லி வந்ததென்க.

'எனநீ' தனிச்சொல் ;
எஞ்சியது சுரிதகம்.

இதனற் றலைவிக்குப் புணர்வாகிய உவகை தோன்றிற்று.
இது தரவின்கண் ஐஞ்சீரடிவருதலிற் கொச்சகமாய்க் கலிவெண்பாட்டின் வேருயிற்று.

(உ௫

ஈதலிற் குறைகாட்டா தறனறிந் தொழுகிய
தீதிலான் செல்வம்போற் றீங்கரை மரநந்தப்
பேதுறு மடமொழிப் பிணையெழின் மானோக்கின்
மாதரார் முறுவல்போன் மணமௌவன் முகையூழ்ப்பக்

* தொல். பொருள் : ககூக.
(பாடம்) 1. வலிமையமைந்த.

பாலைக்கலி

எரு

ரு. காதலர்ப் புணர்ந்தவர் கதுப்புப்போற் கழல்குபு
தாதொடுந் தளிரொடுந் தண்ணற நகைபெறப்
பேதையோன் வினைவாங்கப்* பீடிலா வரசனுட்
டேதிலான் படைபோல விறுத்தந்த திளவேனில்;

நிலம்பூத்த மரமிசை நிமிர்பாலுங் குயிலெள்ள
க0. நலம்பூத்த நிறஞ்சாய நம்மையோ மறந்தைக்க
கலம்பூத்த வணியவர் காரிகை மகிழ்செய்யப்
புலம்பூத்துப் புகழ்பானக்
கூட்லு முள்ளார்கொல்;

கன்மிசை மயிலாலக் கறங்கியூ

ரலர் தூற்றத்

தொன்னல நனிசாய

நம்மையோ மறந்தைக்க

!

கரு. வொன்னுதார்க் கடந்தடூஉ முரவுநீர் மாகொன்ற
வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டும் விரும்பார்கொல்;

மையெழின் மலருண்கண் மருவூட்டி மகிழ்கொள்ளப்
பொய்யினாற் புரிவுண்ட நம்மையோ மறந்தைக்க

தைஇய மகளிர் தம்

மாயமோ டமர்ந்தாடும்

உ0. வையைவா ருயரெக்கர் நுகர்ச்சியு முள்ளார்கொல்;

எனவாங்கு,

கோய்மலி நெஞ்சமோ டினைய றேழி
நாமில்லாப் புலம்பாயி னடுக்கஞ்செய் பொழுதாயிற்
காமவேள் விழவாயிற்
கலங்குவள் பெரிதெனை

உரு. வேமுறு கடுந்திண்டேர்
கடவி

நாமமர் காதலர் துணைதந்தார் விரைந்தே.

இது தலைவன் குறித்துப் பிரிந்த
இளவேனில் வரவின்கண்ண
எம்மையோமறக்க,
இக்காலத்து இவ்வூரின்கட் டாம்

விளையாடும் விளையாட்டும் மறந்தாரோ
வெனச் சொல்லி ஆற்ருளாய
தலைவிக்குத் தோழி தலைவன்
வரவுணர்ந்து
கழியுவ்கையாற் கூறியது.

(க—அ) ஈதலிற்

தீளவேனில் :—

(இ - ள்.)
கொடுத்தற்ருெழிலிடத்துப்
பொருட்குறை காட்டாமற் கொடுத்து
இல்லறம் நிகழ்த்தும் முறைமையை
அறிந்து நிகழ்த்திய தீவினை
யில்லாதவனுடைய செல்வம்.

மிகுமாறுபோல, இனிதாகிய நீரையுடைய ஆற்றங்கரையில் மரங்கள் தழைக்கக், கேட்டோர் மயக்கம் உறுதற்குக்

---

* கலி. அ : க,

காரணமான மடமொழியினையும் மான்பிணையினது அழகையுடைய நோக்கு போலு நோக்கினையுமுடைய காதலையுடைய மகளிருடைய எயிறுபோ

மணத்தையுடைய மௌவலின் முகை

அலராத், தண்ணிதாகிய அறுதிமை
யுடைய மணல் கழன்று வீழ்ந்த
தாதாலுந் தளிராலுங் காதலரைக்
கூடினா ருடைய மயிர்போல
அழகுபெற, இளவேனிற்காலம்,
அறிவில்லாத அமைச்சன் காரியத்தைப்
புலப்படுத்தப் படைவலி இல்லாத
அரசனது நாட்டிலே பகையரசன் படை
வந்துவிடுமாறுபோலத்,
தங்குதலைச் செய்தது;
ஊழ்ப்பத் தகைபெற இளவேனில்
இறுத்தந்ததென்க. 'காட்டா
தென்பதற்குக் கொடுத்தென்றுங் '
கழல்குபு ' வென்பதற்கு வீழ்ந்தவெ
றும் வினை வருவிக்க.

இது தரவு.

(க—கஉ) நிலம் பூத்த . .

. . முள்ளார்கோல் :—

(இ - ள்.) நிலம் பொலிவு பெறுதற்கு ஏதுவாகிய மரத்தின்மேலே ிருந்து காலங்கண்டு ஏக்கழுத்தஞ்செய்து[1] ஆரவாரிக்கும் குயில்கள் ம்மை இகழும்படியாக, நன்மை பொலிவுபெற்ற நமது நிறங்கெடும்படியாகத் ாம் விரும்பாத நம்மையோ மறப்பாராக; தாம் அணிந்த கலன்கள் பொலிவுபெறுதற்குக் காரணமான அழகினையுடைய பரத்தையருடைய அழகு தம் மனத்தை மகிழ்ச்சியைச் செய்கையினாலே தம் அறிவு பொலிவு பெற்று அவரைப் புகழ்தல் அமையாத கூடலையும் நினையாரோ? நினைக்கின் வருவரன்றோ?

பெயரெச்சத்திற்குக் காரணம்வருதல் மறந்தைக்க,' வியங்கோட் டிரிசொல்.

கருவிக்கண் அடங்கும்.

(கரு—கசு) கன்மிசை . . .

• விரும்பார்கொல் ;—

(இ - ள்.) நஞ்சாயல் கெட்டமைகண்டு மலைமேலே மயில் ஆரவாரித்து ஆடும்படியாக, ஊரிலுள்ளார் ஆரவாரித்து அலர் தூற்றும்படியாக, நம்முடைய இயற்கைநலமும் மிகக் கெடும்படியாகத் தாம் விரும்பாத நம்மையோ மறப்பாராக; பகைவரை மாயஞ்செய்து கொல்லாது வென்றுகொல்லும் பரக்குங் கடலிடத்து எய்தாநின்ற மாமரத்தைத் தடிந்த வென்வேலையுடைய[2] முருகன் திருப்பரங்குன்றின்மேற் பரத்தை பருடன் விளையாடும் விளையாட்டையும் விரும்பாரோ? விரும்பில் வருவ ரன்றே?

"எந்நில மருங்கிற் பூவும் புள்ளும் - அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும் - வந்த நிலத்தின் பயத்த வாகும்."* என்ற விதிபற்றிக்

* தொல். பொருள்; கஅ.

(பாடம்) 1. எக்கழுத்தஞ் செய்து. 2. வெற்றி வேலையுடைய.

பாலை - உஎ]

பாலைக்கலி

எஎ

குறிஞ்சிக்குப் பயின்ற மயில்

பாலைக்கண் இளவேனிற்காலத்து

வருதலிற் பொழுதொடு புள்ளும்

மயங்கிற்று.

(கஎ—உ0) மையெழில் . . . .
முள்ளார்கோல் :—

(இ - ள்.) எம்மை மயலாக்கிக் கருமையுடைத்தாகிய அழகினையுடைய நீலமலர்போலும் மையுண்கண்ணை மகிழ்ச்சிகொள்ளும்படி தம்மோடே மருவுதலூட்டித் தாம் செய்த பொய்யாலே மனந் தம்மிடத்திலே புரிதலைச் செய்த தாம் விரும்பாத நம்மையோ மறப்பாராக ; கோலஞ் செய்தலை யுடைய பரத்தையர் தம்முடைய திரளோடே மனம் பொருந்தி விளையாடும்

வையையாற்றிடத்து நீண்ட
உயர்ந்த இடுமணலிடத்து
நுகர்ச்சியையும் நினையாரோ ?
நினைக்கில் வருவரன்றோ ?
மருவுதலூட்டி யென்றார்
அக்கண்ணிடத்து நாவாற் செய்யுந்
தொழிலை.
மருவூட்டிச் செய்தவென ஒரு சொல் வருவிக்க.
இவை மூன்றுந் தாழிசை.

(உக) எனவாங்கு :—

(இ - ள்.) என்றுகூறி; 'ஆங்கு': அசை.
இது தனிச்சொல்.

விரைந்தே :—

(இ - ள்.) சோய்மிக்க
நெஞ்சோடே வருந்தாதேகொள்;
தோழி! நாம் அமர்ந்த காதலர்
தனிமையாயின், நாமில்லாத
தனிமையாயிருந்தது; காலமாயிற்,
பிரிந்தார்க்கு நடுக்கஞ் செய்யும்
இளவேனிற் காலமாயிருந்தது;
ஊரிலுள்ளார் கொண்டாடும்
விழவாயிற், காமவேளுக்குச்
செய்யும் விழவா யிருந்தது; ஆதலாற்
பெரிதுங் கலங்குவளென்று கருதிப்
பகைவர் மயக்கம் உறுதற்குக்

காரணமான கடிய திண்ணிய
தேரை விரைந்து செலுத்தித் தாந்
துணையாந் தன்மையை நமக்குத்
தந்தார்காண் !

இது சுரிதகம்.

இதனாற் றலைவிக்குப் புணர்வாகிய
உவகை தோன்றிற்று.

இஃது எட்டடித்தரவும்
நான்கடித்தாழிசையுந்
தனிச்சொல்லும் ஐயடிச் சுரிதகமும்
பெற்ற ஒத்தாழிசைக் கலிப்பா.
(உக)

பாடல்சால் சிறப்பிற்
சினையவுஞ் சுனையவு
நாடினர் கொயல்வேண்டா
நயந்துதாங் கொடுப்பபோற்
றேடவிழ் கமழ்கண்ணி தையுபு புனைவார்கட்
டே, ரபிறக் காய்ந்த கறை
கறை கவின்பெறத் T அு

கலித்தொகை

[கலி-உஅ ரு. செய்யவ் ளணியகலத்
தாரமொ டணிகொள்பு
தொய்யகந் தாழ்ந்த
கதுப்புப்போற் றுவர்மணல்
வையைவா ரவிரற

விடைபோழும்
பொழுதினான் ; விரிந்தாறா
மலராயின் விளித்தாலுங்
குயிலாயிற்
பிரிந்துள்ளா ரவராயிற்
பேதுறூஉம் பொழுதாயி
னரும்பட ரவலநோ யாற்றுவ
ளென்னாது
வருந்தநோய் மிகுமாயின்
வணங்கிறை யளியென்னோ ;
புதலவை மல்ராயிற் பொங்கரின
வண்டாயி
னயலதை யலராயி

னகன்றுள்ளா ரவராயின்

மதலையி னெஞ்சொடு மதனில

ளென்னுது ரு. நுதலூரும்

பசப்பாயி னுணங்கிறை

யளியென்னோ;

தோயின வறலாயிற் சுரும்பார்க்குஞ் சினையாயின்
மாவின தளிராயின் மறந்துள்ளா ரவராயிற்
பூவெழி லிழந்தகண் புலம்புகொண் டமையாது
பாயனோய் மிகுமாயிற் பைந்தொடி யளியென்னோ;

20. எனவாங்கு,

ஆயிழா யாங்கன முரையாதி சேயார்க்கு
நாந்தூது மொழிந்தனம் விடல்வேண்டா நம்மினுந்
தாம்பிரிந் துறைத லாற்றலர்
பரிந்தெவன் செய்தி வருகுவர் விரைந்தே.

இஃது இளவேனில்வரவின்கண் ஆற்றுத தலைவி தூதுவிடக் கருதத், தோழி, அவர் பிரிந்திருத்தலை நம்மினுந் தாம் வல்லரல்லரெனச் சொல்லி வற்புறுத்தியது.

(௧—௭) பாடல்சால் . . . . . பொழுதினான் :—

(இ - ள்.) சுனையிடத்துப் பூக்களை ஆராய்ந்து பறித்தலும் வேண்டாவாகிப் பாடுதல் அமைந்த தலைமையினையுடைய பூக்களைக் கொம்புகள் தாங்கொடுக்க வேண்டுமென்று விரும்பியுங் கொடுப்பனபோல் இதழ் விரிகின்ற கமழுங் கண்ணியைக் கட்டிச் சூடும் அம்மகளிரிடத்தே திரட்சியுறத் தாழ்ந்து கொடுத்துத் துறைதொறுந் துறைதொறும் மரங்கள் அழகுபெறும்படி, சிவந்த தலைக்கோலந் தங்கின மயிர்போற் சிலவிடங்கள் சிவப்பையுடைத்தாகிய மணலையுடைய வையையாற்றில் ஒழுகுகின்ற விளக்கத்தையுடைய அறல்மணல் திருமகளுடைய அழகினையுடைய மார்பிடத்து முத்தாரத்தோடே ஒப்புக்கொண்டு நடுவே பிளந்தோடும் பொழுதின்கண்;

பாலை - உ௭]

பாலைக்கலி

கவின்பெற அறல் இடைபோழுமென்றது காரணகாரியமாம், பெருகியநீர் வற்றினகாலத்து அவை பூத்தலின்.

குறிஞ்சிநிலத்திற் சுனைப் பூக்களைத் தேடிப் பறியாதபடி இக்கரையில்[1] மரங்கள் வேண்டும் பூக்களைக் கொடுத்தனவென்றார்.

'சுனையவு' மென்னும் உம்மையைக் கொய்யலுமென மாறுக; உம்மை, எதிர்மறை. 'சினையவு'மென்னும் உம்மையை நயந்துமென மாறுக; உம்மை, சிறப்பு.

கல்விடத்துநீர்நிலைக்குச் சுனையென்னும் பெயரே ஆண்டுக்கூறுதலானும், யாற்றங்கரைக்கண் இன்மையானுஞ், சினை தாழ்ந்து கொடுத்தலன்றிச் சுனை தாழ்ந்து கொடுத்தல் இன்மையானும் இதுவே பொருளாம். 'தோடுறத் தாழ்ந்' தென்றதற்குத் திரட்சியுறத் தங்கியென்றுங், 'கவின்பெற' வென்றதற்குக் கவின்பெறுநிற்கவென்றும் பொருள்கூறிற், பெறுநிற்க 'இடைபோழ்' மென்றது பிறவினையாதலின் ஆற்றிற்குச் சிறப்புக் கூறிற்றன்றாய் வேறோர் வினையாமாறுமுணர்க.

இது தரவு.

(அ—கக) விரிந்தாறு

யளியென்றோ :—

(இ - ள்.) மலர்கள் அலர்ந்து அமையாவாயிற், குயில்கள் தம் பெடையை அழைத்துக் கூவுமாயின், நந்தலைவர் நம்மைப் பிரிந்து வினையாராயின், இளவேனிற்காலம் மயக்கம் உறுத்துமாயின், அரிய வினைவையுடைய அவலத்தைச் செய்யுங் காமநோய்க்கு இவள் ஆற்றுவளென்று கருதாது இவள் இறந்துபடுவளென்று நீ வருந்தும்படி எனக்குக் காமநோய் மிகுமாயின், வணங்கின இறையையுடையாய்! நம்மாட்டு அவர் செய்யும் அளி என்னபயன் தரும்?

(கஉ—கு) புதலவை . . . . . யளியென்றோ :—

(இ - ள்.) மலர்கள் சிறுதாற்றினவையாயின்,[2] வண்டுகள் சோலையிடத் தனவாயின், அலர் அயலாரிடத்ததாயின், நந்தலைவர் நம்மைப் பிரிந்து நினை யாராயிற், பசப்பு ஒரு பற்றில்லாத நெஞ்சுடனே தானும் வலியளல்ல ளென்று கருதாதே நுதலிடத்தே பரக்குமாயின், அசைகின்ற இறையினை யுடையாய்! நம்மாட்டு அவர் செய்யும் அளி என்னபயன் தரும்?

(கக—கக) நோயின . . . . . யளியேன்றோ :—

(இ - ள்.) அற்றுவருந்தலையுடைய நீர் மணலிடத்தே செறிந்தனவாயிற், கொம்பிற் பூக்களிலே சுரும்பு ஆரவாரிக்குமாயின், தளிர் மாவிடத்தனவா யின், நந்தலைவர் நம்மை மறந்து நினையாராயிற், பூவினது அழகை இழந்த கண்கள் உறக்கத்தைக்கொண்டு ஆற்றியிராமற் றனிமையால் உண்டான

(பாடம்) 1. இக்கரையின். 2. சிறுதாற்றிலவையாயின்.

நோய் மிகுமாயிற், பசிய
தொடியினையுடையாய்! நம்மாட்டு
அவர் செய்யு அளி என்னபயன் தரும்?

ஓகாரங்கள் எதிர்மறையாதலிற்
பயன் தாரதென நின்றது.

இவை மூன்றுந் தாழிசை.

(உ0)

எனவாங்கு :—

(இ - ள்.) என்று; 'ஆங்கு' அசை.

இது தனிச்சொல்.

(உக—உச) ஆயிழாய் . .

. . விரைந்தே :—

(இ - ள்.) ஆராய்ந்த இழையினை யுடையாய்! அங்ஙனம் பயனின்று டரையாதேகொள்; சேய்நாட்டில் உறைகின்றவர்க்கு நம் வருத்தத்தை றினமாய் நாக் துதபோக விடவேண்டா; நம்மினுந் தாம் இக்காலத்துட் பிரிந்திருத்தலை ஆற்றாராய் விரைந்து வருகுவராதலால் வருந்தி என்ன காரியஞ் செய்கின்றாய்?

இது சுரிதகம்.

இதனாற் றலைவிக்கு இழிவுந் தோழிக்கு அச்சமும் பிறந்தன.

இஃது எழடித்தரவும் நான்கடித்தாழிசையும் பொருள்பெற்ற தனிச்சொல்லும் நான்கடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக் கலிப்பா. (உஎ)

உகூ.

தொல்லெழில் வரைத்தன்றி வயவுநோய் நலிதலி
னல்லாந்தா ரலவுற வீன்றவள் கிடக்கைபோற்
பல்பய முதவிய பசுமைதீ ரகன்ஞாலம்
புல்லிய புனிறொரீஇப் புதுநல மேர்தர ;
வளையவர் வண்டல்போல் வார்மணல் வடுக்கொள
விளையவ ரைம்பால்போ லெக்கர்போழ்ந் தறல்வார
மாவீன்ற தளிர்மிசை மாயவ டிதலைபோ
லாயிதழ்ப் பன்மல ரையகொங் குறைத்தர
மேதக விளவேனி லிறுத்தந்த பொழுதின்கண் ;

சேயார்கட் சென்றவென் னெஞ்சினைச் சின்மொழி
நீகூறும் வரைத்தன்றி நிறுப்பென்மன் னிறைநீவி
வாய்விரிபு பனியேற்ற விரவுப்பன் மலர்தீண்டி
நோய்சேர்ந்த வைகலான் வாடைவந் தலைத்தரூஉம் ;

பாலைக்கலி

அ:

போழ்துள்ளார் துறந்தார்கட்
புரிவாடுங் கொள்கைச் கறி.
சூழ்பாங்கே சுடரிழாய்
கரப்பென்மற் கைநீவி

வீழ்கதிர் விடுத்தபூ
விருந்துண்ணு
மிருந்தும்பி

யாழ்கொண்ட விமிழிசை
யியன்மாலை யலைத்தருஉம்;

தொடிநிலை நெகிழ்த்தார்கட்

டோயுமென் றுருயிர்
வடுநீங்கு கிளவியாய்
வலிப்பென்மன் வலிப்பவு
உ0. நெடுநிலாத் திறந்துண்ண[1]

நிரையிதழ் வாய்விட்ட
கடிமலர் கமழ்நாற்றங்
கங்குல்வந் தலைத்தரூஉம்;

எனவாங்கு,
வருந்தினை வதிந்தநின்

வளைநீங்கச் சேய்நாட்டுப்
பிரிந்துசெய் பொருட்பிணி
பின்னோக்கா தேகினம்

உடு. மருந்துயர் களைஞர் வந்தனர்
திருந்தெயி றிலங்குநின்
றேமொழி படர்ந்தே.

இது பருவ வரவின்கண் ஆற்றுத தலைவியைத் தோழி வற்புறுப்ப, வன்புறை

யெதிரழிந்தாட்குத், தோழி, அவன் வரவுணர்ந்து கழியுவகையாற் கூறியது.

(க—கூ) தோல்லேழில் . . . . . பொழுதின்கண் :—

(இ - ள்.) கருப்பங் தங்கிய காலத்துப் பிறக்கும் வேட்கையாகிய நோய் இளமைக்காலத்து அழகைக் கெடுக்குமளவன்றி மிகவருத்துகைப்

ஞலே அதற்கு அலமந்த சுற்றத்தார், பின்னர், அவன் மெய்ந்நோக்காடு கண்டு வருத்தமுறும்படி புதல்வனை யீன்றவள், அப்புதல்வனைக்கொண்டு அக்குடியையெல்லாம் பாதுகாத்துக்கிடந்த கிடக்கைபோலத், தன்னிடத்துப் பயிரையுண்டாக்கின உழவர், தனக்கு இடையில் வந்த நோய்க்கு வருந்திய வருத்தம் நீங்கும்படி, தான் ஈன்ற உணவுகளைக்கொண்டு, குடிமக்களை யெல்லாம் பாதுகாத்த உலகம், அவள் தன்னைப் புல்லிய ஈன்றணுமை தீர்ந்து புதுநலம் பெற்றாற்போலத், தான் ஈன்ற பசுமை தீர்ந்து புதிய அழகுதோன்ற,

வளையினையுடைய இளையோர்
இழைத்த வண்டற் பாவையும் பூவுங்
கலந்துகிடந்தாற்போல வார்ந்த மணல்
பூக்கள் உதிர்ந்து கிடந்த வடுவைத்
தன்னிடத்தேகொள்ள,
இளையமகளிருடைய மயிர்போல
இடுமணலை ஊட்றுத்தலையுடைய நீர்
ஒழுக, மாமைநிறத்தையுடையவஃ
திதலைபோல மாவின்ற"சிறிது" முற்றின
தளிரின்மேலே அழகிய இதழை
யுடைய பலமலர்களினுடைய
வியக்கத்தக்க தாதுகள்
உதிர்தலைச்செய்யப்,*

பெருமை பொருந்த இளவேனிற்காலம் வந்துவிட்ட பொழுதின்கண்ணே

---

* கலி. ௩0 : ௧௧ - ௨0.

(பாடம்) 1. துறந்துன்ண.

அ௨

கலித்தொகை

[கலி - உ௬

'ஏர்தர' - எழுச்சிதர.

ஐயென்னும் உரிச்சொல் 'ஐய'வெனப்

பெய ரெச்சக்குறிப்பாய் நின்றது.

இது தரவு.

(௧0—௧௫) சேயார்கட்

தலைத்தருஉம் :—

(இ - ள்.) சிலவான சொல்லினையுடையாய் !* சேணிடைப் பிரிந்தோ ரிடத்தே சென்ற என் நெஞ்சினை ஆற்றுவித்துக் கொண்டிருத்தல் வேண்டுமென்று நீ சொல்லும் எல்லைத்தன்றாக மிகவும் ஆற்றி யிருப்பேன்; அதனாற் பெற்றதென்? யான் ஆற்றியிருத்தலைக் கைகடக்கும்படியாக வாடைக்காற்று வாய் விரிந்து பனியையேற்றுநின்ற விரவுதலையுடைய பல மலர்களை அளைந்துவந்து பிரிந்தோர்க்கு நோய் செய்தற்குக் காரணமான இளவேனில் நாளின்கண்ணே வருத்தத்தைத் தரும்

;

நீவவெனத் திரிக்க.

(கச—கஎ) போழ்துள்ளார்

யலைத்தருஉம் :—

(இ - ள்.) விளங்குகின்ற இழையினையுடையாய்! இளவேனிற் காலத்தை நினையாராய் நம்மை மறந்தாரிடத்தே மனம்புரிதலால் என்மேனி வாடுங் கோட்பாட்டினைப் பிறர் அறியலாகாதென்று சூழ்ந்து அப்பொழுதே மறைப்பேன்; அதனாற் பெற்றதென்? யான் மறைத்ததனைக் கைகடக்குடபடியாக வீழ்கின்ற ஞாயிற்றின் கதிர் அலர்த்தின பூவினது

தேனை உண்ணும் கரிய தும்பியினது யாழோசையை யொத்த முழங்குகின்ற ஓசை நடக்கு மாலைக்காலம் வந்து வருத்தத்தைத் தரும்;

'கொண்ட' : உவமவுருபு.

(கஅ-உக) தோடிநிலை

தலைத்தரு உம்:—

(இ - ள்.) குற்றம் நீங்குகின்ற வார்த்தையினையுடையாய்! தொடியை நிற்கின்ற நிலையினின்று நெகிழப்பண்ணின ரிடத்தே நின்று தோயு என்னுடைய அரிய உயிரை அவரிடத்துச் சென்று செறியாமற் காக்க துணிவேன்; அதனாற் பெற்றதென்? யான் அங்ஙனம் துணியவும் வண்டுகள் திறந்து [1] உண்ணும்படியாக நிரைத்த இதழ்கள் அலர்ந்த மணத்தினை யுடைய மலர்கள் கமழும் நாற்றம் நெடிய நிலாவையுடைய இராக்காலத்தே வந்து வருத்தத்தைத் தரும்.

இவை மூன்றுந் தாழிசை.

---

[1] சீவகசிந். கஉருஉ.

(பாடம்) 1. அநக்ஷ.

பாலை - உக] பாலைக்கலி

(உடி) எனவாங்கு

(இ - ள்.) எனச்சொல்லி;

'ஆங்கு': அசை.

இது தனிச்சொல்.

ஆங

(உரு—உசு) வருந்தினை

படர்ந்தே—:

(இ - ள்.) வருந்தித் தங்கின

நின் வளை கழலும்படியாகத் தலைவர்

பின் பாராதே அரிய நாட்டிலே பிரிந்திருந்து தேடும் பொருட்பிணியாலே போய்த், திருந்தின எயிறுகள் விளங்குதற்குக் காரணமான நின் தேன்

போலும் மொழியை நினைத்து, நம்

அரிய துயரைக் களைவாராய் வந்தார்;

இனி, நீ வருந்தாதேகொள்.

இது சுரிதகம்.

இதனாற் றலைவிக்குப் புணர்வாகிய

உவகை பிறந்தது. இது,

"நிலனொருங்கு மயங்குதலின்று"*
எனவே, காலம் மயங்கு மென்றலின்,
வேனிலும் வாடையும் மாலையும்
கங்குலும் வந்தன.

இஃது ஒன்பதடித்தரவும்
நான்கடித்தாழிசையும் தனிச்சொல்லும்
நான்கடிச் சுரிதகமும் பெற்ற
ஒத்தாழிசைக் கலிப்பா.

(உஅ)

௩௦.

அருந்தவ மாற்றியார்
நுகர்ச்சிபோ லணிகொள

விரிந்தானைச்
சினைதொறூஉம் வேண்டுந்தா
தமர்ந்தாடிப்
புரிந்தார்க்கும் வண்டொடு
புலம்புதீர்ந் தெவ்வாயு
மிருந்தும்பி யிறைகொள
வெதிரிய வேனிலான் ;

ரு. துயின்றி யாநீந்தத்
தொழுவையம் புனலாடி
மயிலியலார் மருவுண்டு
மறந்தமைகு வான்மன்னோ
வெயிலொளி யறியாத
விரிமலர்த் தண்காவிற்
குயிலாலும் பொழுதெனக்

கூறுந ருளராயின் ;

பாணாள்யாம் படர்கூரப்
பணையெழி லணைமென்றோண் ௧௦.
மானோக்கி னவரோடு மறந்தமைகு
வான் மன்னோ

வானச்சீர்க் கூட்டு ளரும்பவிழ் நறுமுல்லைத்
தேனார்க்கும் பொழுதெனத் தெளிக்குந ருளராயின் ?

உறலியா மொளியாட
வுயர்ந்தவன் விழவினுள்
விறலிழை யவரோடு விளையாடு
வான்மன்னோ

---

* தொல், பொருள் : ௧௨

பெறலரும் பொழுதோடு பிறங்கிணர்த் துருத்திசூழ்ந்
தறல்வாரும் வையையென் றறையுந ருளராயின் ;

எனவாங்கு,

தணியாநோ யுழந்தானைத்
தகையவ டகைபெற
வணிகிளர் நெடுந்திண்டே
ரயர்மதி பணிபுநின்
காமர் கழலடி சேரா
நாமஞ்சா றெவ்வரி
னெடுங்கினள் பெரிதே.

இது பருவவரலின்கண் ஆற்றாத தலைமகள் இறந்தது சிந்தித்து நம்மாட்டு அன் பிலராயினும் இக்காலத்து இவ்வூரின்கட் பண்டு தாம் விளையாடியவாறு நினைந்துவருவர் இக்காலவரவு சொல்லுவார் உளராயினெனக் கேட்ட பாணன் பாசறைக்கட் சென்று தலைவனைக் கண்டு கூறியது.

(க—ச) அருந்தவ . . . . . வேனிலான் :—

(இ - ள்.) செய்தற்கரிய தவங்களைச் செய்தவர்கள் குறைவற நுகரும் நுகர்ச்சிபோல * அழகுகொள்ள அரும்புகள் விரிந்தமையாத கொம்புக

டோறுந் தான் விரும்புந் தாதைப் பொருந்தியுண்டு விரும்பி ஆர்க்கும் வண்டோடே கருந்தும்பிகளும் வருத்தந் தீர்ந்து எவ்விடமுந் தங்குதல் கொள்ளும்படி மரங்கள் அவற்றை எதிர்கொண்ட இளவேனிற் கண்ணே; இது தரவு.

(ரு—அ) துயிலின்றி . . .
. நுளராயின் :—

(இ - ள்.) இக்காலம் வெயிலினது ஒளியைக் கண்டறியாத விரிந்த மலரையுடைய குளிர்ந்த பொழிலிலே குயில் கூவுங்காலமென்று அவற்குக் கூறுவார் சிலருளராயின், யாந் துயிலின்றி யாமக்கடலை நீந்தத், தான் மயில் போலும் இயலினையுடைய பரத்தையர் மருவுதலை நுகர்ந்து அவருடனே அழகிய புனலையுடைய மடுக்களையாடி நம்மை மறந்து அவரிடத்தே அமைந்திருப்பன்; அதனாற் பெற்றதென்? கூறுவார் இன்றே;

(கூ—கஉ) பானுள்யாம் . . . . . நுளராயின்:—

(இ - ள்.) இக்காலம் அமையாத புகழையுடைய மதுரையிடத்து அரும் புகள் அவிழ்ந்த நறிய முல்லையிலே தேனினம் ஆரவாரிக்குங் காலமென்று அவற்குத் தெளிவிப்பார் சிலருளராயின், நடுயாமத்தே யாம் வருத்தமிகத் தான் மூங்கிலின் அழகையுடைய அணைபோலும் மெல்லிய தோளையும் மானி னது நோக்கம்போலும் நோக்கினையுமுடைய பரத்தையருடனே கூடி

* பொரு ந. கூக - கஉஅ; குறள். உகூடு.

பாலை - உக]

பாலைக்கலி

அரு

நம்மை மறந்து அவரிடத்தே
அமைந்திருப்பன்; அதனாற்
பெற்றதென்? கூறுவார் இன்றே ;

(கூ—கக) உறலியா . .

. . நுளராயின்:—

(இ - ள்.) இக்காலம்

பெறுதற்கரிய , இளவேனிற்
காலத்துடனே பெருமையினையுடைய
பூங்கொத்துக்களையுடைத்தாகிய
யாற்றிடைக்குறை யைப் புடைசூழ்ந்து
வையை அறலுண்டாம்படி
ஒழுகுமென்று அவற்குச் சொல்லுவார்
உளராயின், தன்னை உறுதற்குரிய
யாம் ஒளிகெடும்படியாகக் காமனுக்கு
எடுத்த திருநாள் இக்காலத்து
வெற்றியையுடைய இழையினை யுடைய
பரத்தையருடனே விளையாடுவன் ; *
அதனாற் பெற்றதென் ? கூறு வார்

இன்றே ;

"சினனே பேதைமை நிம்பிரி நல்குர - வினைநால் வகையுஞ் சிறப் பொடு வருமே" † என்பதனாற் பரத்தையரோடு விளையாடுவானெனப் பொருமை

கூறியும் அவன் ஈண்டையானுகவெனக்

1 காதலைச் சிறப்பித்தலின் அமைந்தது.

இவை விளையாட்டிற் பிறந்த உவகை யென்னும் மெய்ப்பாடு;

இவை தன்கட் டோன்றிய பெயர்பற்றி வரும்,

இவை மூன்றுந் தாழிசை.

(கஎ) எனவாங்கு:—

(இ - ள்.) எனச்சொல்லி; 'ஆங்கு' : அசை. இது தனிச்சொல்.

பேரீதே:—

(இ - ள்.) மீளாத காமநோயிலே வருந்தியமையாத தகைமையையுடையவள் நின்னுடைய விருப்பத்தையுடைய கழல் அணிந்த அடியைப் பணிந்து சேராத அச்சம் அமைந்த பகைவரைப்போலே பெரிது நடுங்கினள்; அவள அழகைப் பெறும்படி அழகுவிளங்கின நெடிய திண்ணிய தேரைச் செலுத்துவாயாக.

இது சரிதகம்.

"பாசறைப் புலம்பலும்"‡ என்புழித் தூதுகண்டு தலைவன் புலம்புவனாதலின், தூதாய்ச்சென்ற பாணன் கூறினான்.

இது "திணைமயக் குறுதலும்"§ என்பதனாற் பாலைக்கண் மருதம் நிகழ்ந்தது.

இதனாற் றலைவிக்கு இழிவுந் தலைவற்கு அசைவும் பிறந்தன.

---

* கலி, கரு : கக - கச.

† தொல். பொருள்: உசரு.

‡ தொல். பொருள் : சக.

§ தொல். பொருள் : கஉ.

(பாடம்) 1. ஈண்டு

அடையாளுகவெனக்.

அசிர

கலித்தொகை

[கலு - ௲ஃ

இது "மரபினு" *

என்றதனுன் நான்கடித்தரவிற்கு

நான்கடித் தாழிசை வந்து

தனிச்சொற் பெற்று நான்கடிச்

சுரிதகத்தாலிற்ற ஒத்தா ழிசைக்

கலிப்பா.

(உக

கடும்புனல் கால்பட்டுக் கலுழ்தேறிக் கவின்பெற

நெடுங்கயத் தயலய லயிர்தோன்ற வம்மணல்
வடுத்தூர வரிப்பபோ லீங்கைவா டுதிர்புகப்

பிரிந்தவர் நுதல்போலப்
பீர்வீயக் காதலர்ப்

ரு. புணர்ந்தவர் முகம்போலப் பொய்கைபூப் புதிதீன
மெய்கூர்ந்த பனியொடு மேனின்ற வாடையாற்
கையாறு கடைக்கூட்டக் கலக்குறூஉம் பொழுதுமற்
பொய்யேயென் றுயிழாய் புணர்ந்தவ ருரைத்ததை ;

மயங்கமர் மாறட்டு மண்வெளவி வருபவர்
தயங்கிய களிற்றின்மேற் றகைகாண விடுவதோ
பயங்கெழு பல்கதிர் பால்போலும் பொழுதொடு
வயங்கிழை தண்ணென வந்தவிவ் வசைவாடை;

தாள்வலம் படவென்று தகைநன்மா மேல்கொண்டு
வாள்வென்று வருபவர் வனப்பார விடுவதோ
நீள்கழை நிவந்தபூ நிறம்வாடத் தூற்றுபு
தோளதிர் பகஞ்சேரத் துவற்றுமிச் சின்மழை;

பகைவென்று திறைகொண்ட பாய்திண்டேர் மிசையவர்
வகைகொண்ட செம்மனும் வனப்பார விடுவதோ
புகையெனப் புதல்சூழ்ந்து பூவங்கட் பொதிசெய்யா
முகைவெண்ப னுதிபோர முற்றிய கடும்பனி;

எனவாங்கு,

வாளாதி வயங்கிழாய் வருந்துவ ளிவளென
நாள்வரை நிறுத்துத்தாஞ் சொல்லிய பொய்யன்றி
மீளிவேற் றானையர் புகுதந்தார்
நீளுயர் கூட னெடுங்கொடி யெழவே.

* தொல். பொருள் : சசசு.

பாலைக்கலி

அஎ

இஃது இளவேனிற் காலத்து வருவல், அத்துணையும் ஆற்றியிருவென்று மன்

நகையால் வேந்தன் சென்றவழி, முன்பனிக்காலமும் பின்பனிக்காலமும் வந்து வருத்தலின் ஆற்றாத தலைவியைத் தோழி வருவரென வற்புறுப்பவும், வன்புறை எதிரழிந்தவழித் தலைவன் யாங்குறித்த பருவம் வருந்துணையும் ஆற்றியிராளெனப் பின்பனிக்காலத்து வருகின்ற வரவுணர்ந்து தோழி கழியுவகையாற் கூறியது.

(க—அ) கடும்புனல்

நுரைத்ததை :— (இ-ள்.) யாறு கூதிர்காலத்துப்[1] பெருகுதலிற் கடிதாகிய நீர்

வற்றிக் கால்களாக ஓடுதலுண்டாய்க் கலக்கந் தெளிந்து அழகுபெற, நெடிய குளங்களின் அயலே அயலே நுண்மணல் தோன்ற, அம்மணலின் அறல் மறையும்படி

கோலஞ்செய்வனபோல

ஈங்கையினது வாடற்பூக் காம்பு கழன்று அம்மணலிலே வீழக்,

கணவரைப் பிரிந்த மகளிர் நுதல் போல

முன்பு பூத்த பீர்க்கம்பூ

இப்பொழுது பூவின்றாகத், தாங் காதலித்த தலை

வரைக்கூடின மகளிர் முகம்போலப் பொய்கையிற் பூக்குந் தாமரையைப் பொய்க்கப் புதிதாகப் பூக்க, முன்பனிக்காலத்திற்கும் பின்பனிக்காலத்திற்

கும் மேலாய்நின்ற இளவேனிற்காலம்

ஆயிழாய்! நம்மைக் கூடினவர் தப்பாமல் வருவேமென்று கூறின காலம்; அதனாற்பெற்றதென்? அக்

காலம்
வருந்துணையும் ஆற்றியிராதபடி
முன்பனிக்காலத்து வாடையாலும்
மெய்
வளைதற்குக் காரணமான
பின்பனியாலும் உண்டாகிய வினை
ஒழிந்து அயர்
தல் இறந்துபாட்டை நமக்குக்
கூட்டுகையிருமலே நெஞ்சு
கலக்கமுறுநின்
றது ; யான் எங்ஙனம் ஆற்றுவேன்?
முன்னர்நின்ற
செயவெனச்சங்கள் 'மேனின்ற'
வென்னும். பெயரெச்
சத்தோடு முடிந்து, அது

'பொழு'தென்னும் பெயரோடு முடிந்தது.

கையாறும் ஒரு மெய்ப்பாடென் றுணர்க.

இது தரவு.

(கூ—கஉ) மயங்கிமர்

வரைவாடை :—

(இ - ள்.) உலகிற்கு உணவுகளை விளைத்தற்குக் காரணமாகிய மதியின் கதிர்கள்

பாலையொத்து விளங்கும் இராப்பொழுதோடே விளங்குகின்ற
அணி கள் குளிரும்படியாக வந்த இந்த
அசைதலையுடைய வாடைக்காற்று,
இரண்டு
படையுந் தம்முள் மயங்கின
போரிலே மாறுகிய அரசனைக்கொன்று
அவன்
நாட்டைக் கைக்கொண்டு
களிற்றின்மேலே வருமவருடைய
வீரத்தாற்
பிறந்த அழகை நாங் கண்டு
நுகரும்படியாக நம்
உயிரைக்கொள்ளாது விடுவ
தொன்றாய் இருந்ததோ ? அது
கொண்டேவிடும் ;
தயங்குதல் - அசைவு.

(பாடம்) 1. கூதிர்க்காலத்துப்.

புஅ

கலித்தொகை

[கலி = கூக

பால்போழுமென்று பாடமாயிற்
பாலை வருத்துமென்க.

இதனுள் வென்ற வீரத்தாற்
பிறந்த அழகை நுகர விரும்புதலிற்
லைவியும் அரசவருணமேயாயிற்று. இது
மேல்வருவனவற்றிற்கும் ஒக்கும்.)ஃது
"ஏவன்மரபின் " * என்னுஞ்
சூத்திரத்தா னுணர்க.

(கரு—கசு) தாள்வலம் . . . .
சின்மழை :—

(இ - ள்.) நீண்ட கரும்பில் ஓங்கின பூவை சிறங்கெடும்படி காற்ருற் ராற்றித் தோள்கள் குளிரால் நடுங்கி நம் ஆகத்தைச் சேரும்படி துவற்று . ன்ற இச்சிலவாகிய மழை, தமது தாள்களாலே வெற்றியுண்டாம்படி வென்று அழகினையுடைத்தாகிய நல்ல குதிரையை ஏறி வாளாலே வென்று ருமவருடைய வீரத்தாற் பிறந்த அழகை நாங் கண்டு நகரும்படியாக, நம் யிரைக்கொள்ளாது விடுவதொன்ருய் இருந்ததோ? அது கொண்டே ிடும் ;

இத்தாழிசைகள் இரண்டும்

முன்பனிப்பருவங் கழிகின்றன

கூறினவாகக் கொள்க.

(கஎ—உ௦) பகைவென்று

கடும்பனி :—

(இ - ள்.) புகையென்னும்படி சிறு தூறுகளைச் சூழ்ந்து பூவாய் அழகிய ள்ளைப் பொதிதலைச் செய்யாத முகைபோலும் வெள்ளிய பல்லின் நுனை ள் தம்மிற் பொரும்படி முதிர்ந்த கடிய பனி, பகையைவென்று திறையை வாங்கின பாய்ந்து செல்கின்ற திண்ணிய தேர்மிசை வருமவருடைய கூறு பாடுகொண்ட தலைமையினையுடைய வீரத்தாற் பிறந்த அழகை நாங் கண்டு நகரும்படியாக நம் உயிரைக் கொள்ளாது விடுவதொன்றாய் இருந்ததோ? அது கொண்டேவிடும்.

இது "பின்பனி தானு முரித்தென மொழிப" † என்றதனாற் பின் பனி வந்தது.

பரித்திண்டேர் எனவும் பாடம்.

இவை மூன்றுந் தாழிசை.

(உக) எனவாங்கு:—

(இ - ள்.) என்று; 'ஆங்கு':

அசை.

இது தனிச்சொல்.

(உஉ—உரு) வாளாடு

யேழுவே:—

(இ - ள்.) பயனிலகூறுவேகொள், விளங்கின இழையினையுடையாய்! பொய்யன்றித் தாஞ் சொல்லிய நாளெல்லை வருதற்கு இன்னுஞ் சிறிது நாட்

* கொல் ...

பாலை - நூக]

பாலைக்கலி

அக

செல்லுமென்று தூக்கி, அத்துணையும் ஆற்றாது இவள் வருந்துவளென்று கருதிக் கூற்றுவனையொத்த வேற்படையினையுடையவர் புகழ் வளர்கின்ற உயர்ந்த கூடலிலே நெடிய வெற்றிக்கொடிகளைக் கட்டும்படியாகப் புகுந்தார்காண்.

‘திருத்து’ என்றது, தூக்கியென்னும் பொருட்டு.

“கிழவி நிலையே வினையிடத் துரையார் - வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்” * என்பதனால் உருவுவெளிப்படுதலின் ‘இவள்’ என்றான்.

“நிலனொருங்கு மயங்குத லின்று” † எனவே, காலம் இரண்டும் மயங்குமென்றலின் முன்பனியும் பின்பனியும் மயங்கிற்று.

இது சுரிதகம்.

இதனாற் றலைவிக்குப் புணர்வாகிய உவகை பிறந்தது.

இஃது எட்டடித் தரவும் நான்கடித் தாழிசையுந் தனிச்சொல்லும் நான்கடிச் சுரிதகமும் பெற்றுவந்த ஒத்தாழிசைக்கலிப்பா.

௬உ.

எஃகிடை தொட்டகார்க்
கவின்பெற்ற வைம்பால்போன்
மையற விளங்கிய துவர்மணா
லதுவது வைதாக நெறித்தன்ன
வறலவிர் நீளம்பா

லணிநகை யிடையிட்ட
வீகையங் கண்ணிபோற்
ரு. பிணிநெகி ழலர்வேங்கை
விரிந்தபூ நெறிகொளத்[1]
துணிநீராற் றூய்மதி[2] நாளா

லணிபெற
வீன்றவ டிதலைபோ
லீர்பெய்யுந் தளிரொடு
மான்றவ ரடக்கம்போ
லலர்ச்செல்லாச்[3] சினையொடும்
வல்லவர் யாழ்போல
வண்டார்க்கும் புதலொடு
நல்லவர் நுடக்கம்போ
னயம்வந்த கொம்பொடு
முணர்ந்தவ ரீகைபோ
லிணரூழ்த்த மரத்தொடும்
புணர்ந்தவர் முயக்கம்போற்
புரிவுற்ற கொடியொடு
நயந்தார்க்கோ நல்லைம
னிளவேனி லெம்போல;

பசந்தவர் பைதனோய்

பகையெனத் தணித்துநம்

௧௫. மின்னுயிர் செய்யு

மருந்தாகிப் பின்னிய

காதல ரெயிறேய்க்குந்

தண்ணருவி நறுமுல்லைப்

போதாரக் கொள்ளுங்

கமழ்குரற் கென்னுந்

---

* தொல். பொருள்: ௧அ௬.   † தொல். பொருள்: ௧௨.

(பாடம்) 1. வெறிகொளத். 2. ஞாமதி. 3. லலர்செல்லா.

தூதுவந் தன்றே தோழி
துயரறு கிளவியோ டயர்ந்திசும்
விருந்தே.

இது காலவரவு கண்டு ஆற்ருளாயினவிடத்துத் தோழி காலத்தை நோக்கி அழகி தாகச் செய்தாய் வந்தெனச் சொல்லித், தலைவிக்கு நங் காதலர் வருகின்ருரெனச் சொல்லிவந்த தூதுகாண் இது, நாம் விருந்தயர்கமெனச் சொல்லியது.

(க—ரு) எஃகிடை

நெறிகொள :—

(இ - ள்.) கத்திரிகை இடையிலே தீண்டிய, மேகத்தின் கவினைப்

பெற்ற, ஐந்துபகுதியையுடைய* மயிர்போலப் புலர்ந்த மணல் மேகம் மழை பெய்யாமற் போகையினாலே கொய்தாகப் பிடித்துவிட்டாற்போன்ற அறுநி

விளங்கின நீண்ட ஐம்பாலிற் பல

ஒளிகளையுடைய அணிகளுக்கிடையே இட்டுவைத்த பொன்னாற்செய்த அழகிய கண்ணிபோலே அந்த மணலிலே பிணிநெகிழ்ந்த பல பூக்களும் வேங்கையினது விரிந்த பூக்களும் ஒழுங்கு கொள்ள;

(கத்திரிகை.........பெய்யாமற் போகையினாலே, 'விளங்கின' வென முற்றாக அறுக்க.)

பிற்கூறிய 'நீளம்பா' வென்றதனை முற்கூறிய ஐம்பாலைச்சுட்டில் சுட்டுப்பெயராகக் கொள்க.

மணல் ஐம்பால் போல விளங்கின

; அவ் ஐம்பாலிற் கிடந்த அணியு
பொன்மாலையும்போலே அந்த
மணலிலே பல நிறத்தையுடைய
பூக்களு
வேங்கைப் பூக்களும்
ஒழுங்குகொண்டனவென உணர்க.

(கூ—கரு) துணிநீரால் . . . .
லெம்போல :—

(இ - ள்.) தெளிந்த நீராலுந்,
தூய மதியையுடைய நாளாலும், புத
வினை சான்றவனுடைய துத்திபோலே
செய்ப்பினையுண்டாக்கும் மாந்தவ
ராலும், அறிவான் அமைந்தவர் தங்
காரியத்தை முடித்தற்கு அக்கால

வருந் துணையும்

அடங்கியிருக்குமாறுபோலக் † காலம் வருந் துணையும் மடை தவிற் செல்லாத அரும்புகளையுடைய கொம்புகளாலும், வாசிக்க வல்லவர ‡ யாழோசை போல வண்டுகள் ஆரவாரிக்குஞ் சிறு தூறுகளாலும், நல் மகளிருடைய கூத்துக் கண்டார்க்கு விருப்பஞ்செய்யுமாறுபோல விருப்ப வந்த கொம்பாலும், நிலையாமையை உணர்ந்தவருடைய கொடைபோலக் கொத்துக்கள் அலர்ந்து எல்லார்க்கும் பயன்படும் மரத்தாலும், அன்பா கூடினவருடைய புல்லுதலைப்போலப் பின்னுதலுற்ற கொடியாலும், பொழி கள் அழகைப் பெற, இளவேனிலே யாங்கள் எம்மை நயந்தார்க்கு நல்லே

---

* குழல், அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை.

† குறள். ௪௮௫ : ௪௯௦ ‡ புறம். ௧௮௯: எ-அ; நாலடி. ௨௯.

பாலை - ௯௨]

பாலைக்கலி

மாயினாற்போல, நீயும் நெறிகொள அணிபெற எப்பொழுதும் வருவை யென்று விரும்பியிருந்தார்க்கு மிகவும் நல்லையோ?

நெறிகொளக்

கொடியொடும் அணிபெறவெனக்

கூட்டுக.

ஈர்: ஈர்க்குமரம்.

இளவேனில் எம்போல

நயந்தார்க்கு நல்லையோவென மாறுக.

நீதான் வந்து அழகிதாகச் செய்தாயென இளவேனிலைநோக்கித தோழி கூறினாள். அதனைநோக்கிக் கூறியபின்னர்த் தலைவியை நோக்கிக் (கூறுகின்றாள்.)

(சுஅ—சுசு) பசந்தவர்

விருந்தே:—

(இ - ள்.) தோழி! இவ்விளவேனில் குளிர்ந்த அருவியின் அருகேநின்ற நறிய முல்லையின்து மகளிரெயிற்றை யொக்கும் பூக்களை நம்முடைய கமழ்கின்ற கொத்தாகிய மயிருக்கு நிறையக் கொய்துகொண்மினென்று கூறாநிற்கும்; அதுவேயுமன்றி உலகத்திற் பசந்தவருடைய வருத்தத்தையுடைய காமநோயையுந் தனக்குப் பகையென்று கருதிப் போக்கி விசேடித்து நம்முடைய இனிய உயிரை உண்டாக்கும் மருந்துமாய் ராம் துயர் அறுதற்குக் காரணமான வார்த்தையோடே நாம் முயங்கிய காதலருடைய தூதாய் வந்தது; ஆதலால் இனி அக்காலத்திற்கு விருந்தானவற்றை நாஞ் செய்வேம்.

பின்னிய காதலர் தூதென மாறுக. பசந்தவர் நோயைத் தணித்து என்பதனாலும், நம் இன்னுயிரைச் செய்யும் மருந்தாகி என்பதனாலுந் தலைவி காலங்கண்டு வருந்தினமை பெற்றாம். இளவேனிற்கண் வருவலெனக் கூறிப்பிரிந்தவர் தப்பாரென்பதுபற்றி அவர் வார்த்தையோடே தூதாய்

வந்ததென்றாள்.

'கொள்ளு 'மென்னும் உம்மீறு பன்மையுணர்த்தி முன்னிலையாய் நிற்றல் "இர்சர் மின்"* என்பதனுட் கூறினும்.

இதனாற் றலைவிக்குப் புணர்வாகிய உவகை பிறந்தது.

இது தனிச்சொல்லும் அடக்கியலுமின்றிச் சுரிதகம் பெற்று அடிமிமிர்ந் தோடிய கொச்சகக்கலிப்பா.

(௯௯)

௯௯.

வீறுசான் ஞாலத்து வியலணி காணிய

யாறுகண் விழித்தபோற்
கயநந்திக் கவின்பெற
மணிபுரை வயங்கலுட்
டெப்பெறிந் தலைபோலப்
பிணிவிடு முருக்கிதழ்
ணிகயத் துதிர்ந்துகத்
ரு. துணிகய நிழனோக்கித்
துதைபுடன் வண்டார்ப்ப

---

* தொல். சொல்; உஉச.

ஃ2

கலித்தொகை

[கலி - ௯௯.

மணிபோல வரும்பூழ்த்து
மரமெல்லா மலர்வேயக்

காதலர்ப் புணர்ந்தவர்
கவவுக்கை நெகிழாது
தாதவிழ் வேனிலோ வந்தன்று
வாரார்நம்
போதெழி லுண்கண் புலம்ப
நீத்தவர் ;
எரியுரு வுறழ விலவ மலரப்
பொரியுரு
வுறழப் புன்குபூ வுதிரப்
புதுமலர்க் கோங்கம்
பொன்னெனத் தாதூழ்ப்பத்

தமியார்ப் புறத்தெறிந் தெள்ளி
முனியவந்
தார்ப்பது போலும்
பொழுதெண்ணி யந்நலம்[1] ரு.
போர்ப்பது போலும் பசப்பு ;

நொந்து, நகுவனபோ னந்தின
கொம்பு ; நைந்துள்ளி
யுகுவது போலுமென்
னெஞ்சு ; எள்ளித்

தொகுபட ஞடுவ
போலுமயில் ; கையி
லுகுவன போலும் வளை ;
என்கண்போ

-0.

விருபறல் வாரும் பருவத்தும் வாரார்
மிகுவது போலுமிந் நோய்;

நரம்பின் றீங்குர லிறுக்குங்
குழல்போ
லிரங்கிசை மிஞிறொடு
தும்பிதா தூதத்

தூதவர் விடுதரார்[2] துறப்பார்கொ னோதக
-டு. விருங்குயி லாலு மரோ;

எனவாங்கு,

புரிந்துநீ எள்ளுங் குயிலேயு மவரையும் புலவாதி
நீலித முண்கணுய் நெறிகூந்தல் பிணிவிட
நாள்வரை நிறுத்துத்தாஞ் சொல்லிய பொய்யன்றி
௩௦. மாலேதாழ் வியன்மார்பர் துனேதந்தார்
காலுறழ் கடுந்திண்டேர்
கடவினர் விரைந்தே.

இது பருவவரலின்கண் வன்புறையெதிரழிந்து ஆற்ருளாயினுளைத் தோழி தலைவனது வரவுணர்ந்து கூறி ஆற்றுவித்தது.

(க—கூ) வீறுசான்
நீந்தவர் :—

(இ - ள்.) தான் விளைவித்தலின்* வேற்றுநாட்டிற்கு இல்லாத வீறமைந்த உலகிடத்து அகற்சியையுடைய அழகைத் தான் காணவேண்டி

* குறள், எ௩௨.
(பாடம்) 1. பொமடெேன் ...

யாறு கண்களை விழித்துப்

பார்த்தனபோலப் பக்கத்தினின்ற

குளங்கள் நீர்

நிறைந்து பூக்களால் அழகுபெறப், பளிங்குமணியை[1] யொக்கும் கண்ணாடிக்குள்ளே பவழம் அழுந்தப்பட்டவை தோன்றினாற்போல அரும்பவிழ்கின்ற முருக்கினுடைய இதழ்கள் அழகையுடைய குளங்களிலே காம்பினின்றுங் கழன்றுவீழத், தெளிந்த குளங்களின் நிழலிலே தம்மையுந் தாம் ஊதும் பூவையுங் கண்டு அவ்விடத்தே நெருங்கி வண்டுகள் சேர ஆரவாரிக்கும்படியாகக் கரையினின்ற மரங்களெல்லாம் அரும்புகள் அலர்ந்து பல மணிகளைச்

சூடினாற்போலப் பூக்களைச் சூட,

எம்மைப்போலாது காதலையுடைய கண

வரைக்கூடினவருடைய

அகத்திடுதலையுடைய கையை

நெகிழாதே தாதை வீழ்க்கும்[2]

இளவேனிலோ வந்தது; பூவினது

அழகையுடைய மையுண்கண்

வருந்த நம்மைக் கைவிட்டவர் வாராராயினூர் ;
ஓகாரம் பிரிநிலை.

இது தரவு.

(௧௦—௧௫) எரியுரு . . . .
: பசப்பு :—

(இ - ள்.) இவ்விளவேனிற்பொழுது நெருப்பின் உருவையொப்ப இலவம் பூப்பப், பொரியின் உருவை யொப்பப் புன்குகள் பூ உதிரப், புதிய மலர் களையுடைய கோங்கம் பொன்னென்னும்படி தாதை அலர, நாம் வெறுக்கும் படி வந்து தனித்திருப்பாரை அகத்திடாது புறத்தே தள்ளி இகழ்ந்து இவ்வூர் அலர்தூற்றுங் கொடுமையை யொக்கும்

; அது கண்டு பசப்பு எனது அழகையுடைய நலத்தை மறைப்பதுபோல இராநின்றது;

(கஅ—உக) நோந்து . . . .
நோய் :—

(இ - ள்.) பிரிந்த மகளிரை நகுதற்கு நங் காலம் வருகின்றதில்லையே யென்று நொந்திருந்து, அது வந்தபின்னர் நம் வருத்தங்கண்டு சிரிப்பன போலக் கொம்புகள் பூ மிக்கன; அதனைக் கண்டு என் நெஞ்சம் வருந்தித் தலைவரை நினைந்து அழிவதுபோலே இராநிற்கும்;

மயில்கள் நம்மை இகழ்ந்து காலமன்றியுஞ் சேரத் திரண்டு ஆடுவனபோலே இராநிற்கும்; நங் கையில் வளைகள் நாங் காப்பவுங் கழல்வனபோலே இராநிற்கும்; என் கண் போலே அறுதியையுடைய நீர் இற்று ஒழுகும் இளவேனிற்காலத்துந் தலைவர் வாரார்; ஆதலால், இந்நோய் இனி இந்நிலையினும் மிகுவதுபோல இராநிற்கும்;

(உஉ—உரு) நரம்பின் மரோ :—

(இ - ள்.) நரம்பின்[3] இனிய இசையைத் தானத்திலே நிறுத்தும்

வங்கியம்போல, ஒலிக்கும் ஓசையையுடைய மிஞிறோடே தும்பி தாதை

(பாடம்) 1. பனிக்குமணியை, 2. யவிழ்க்கும், 3. நரம்பினது, கூஉ

கலித்தொகை

[கலி - கூஅ

ஊதாநிற்க, நமக்கு நோவுதகும்படி[1] யாகக் கரிய குயில்கள் கூவாநிற்கும்; இவ்வளவிலுந் தலைவர் ஒரு தூதாயினும் வரவிடாராய் நம்மைத் துறப் பாரோ, துறவாரோ கூறாய்!

நம்மை இம்மைப்பிறப்பினுட் டுறப்பார்கொல்லென வாளாதே

ஐயஞ்
செய்தலின் இஃது ஐயஞ்செய்தல்.

'அரோ': அசை.

இவை தரவின் விகற்பமாகிய தாழிசை.

(உசு) எனவாங்கு :—

'ஆங்கு': அசை.

இது தனிச்சொல்.

(உள—ருக) புரிந்துநீ

விரைந்தே :—

(இ - ள்.) அது கேட்ட தோழி, என்று,[2] மனம் வேறுபட்டு நீலப்பூப் போலும் மையுண்கண்ணினையுடையாய்! நீ நம்மை இகழுங் குயிலையுந் தலை வரையும் புலவாதேகொள்; தாம் வரும் நாளெல்லையை நம் நெஞ்சிலே நிறுத்திச்சொல்லிய கூற்றுக்கள் பொய்யல்லவாக மாலை தங்கின அகற்சியை யுடைய மார்பினையுடையார் காற்றையொக்குங் கடிய திண்ணிய தேரை விரைந்து செலுத்தி நமது நெறித்த கூந்தலைப் பின்னின பின்னல் விடும்படி நாம்[3] விரைதலை நமக்குத் தந்தார்காண் என்றாள்;

நீலம், கடைக்குறைந்தது.

இது சுரிதகம்.

இதனாற் றலைவிக்குப் புணர்வாகிய உவகை தோன்றிற்று.

இதனுள், முச்சீரடியும் நாற்சீரடியுமாய் நின்றவாறுணர்தற்கு 'நகுவன' 'புகுவது' 'தொகுபுடன்' 'உகுவன' 'இருபுற' லெனத் தொடைச்சுவை கொடுத்துக் கூறவே, அவற்றிற்கு முன் நின்றன 'நொந்து' என ஒழியசையாகி யும், 'நைந்துள்ளி', 'எள்ளி', 'கையில்', 'என்கண்போல்' என வழியசை புணர்ந்தும் வந்த சொற்சீரடிகளுந், 'தொகுபுடனுடுவே போலு மயில்' என நாற்சீரடியுமாய் வந்தன.

இது தரவுந் தரவின் விகற்பமாகிய தாழிசையும் ஏனையுறுப்புக்களும் பெற்று வந்த கொச்சகக்கலிப்பா. தரவின் விகற்பமாகிய தாழிசையையுந் தரவின்பாற் படுத்து இதனை இடைநிலைப்பாட்டின்றி வந்த தரவிணைக் கொச்சகக்கலிப்பா என்பாரும் உளர்.

"இயற்சீர் வெள்ளடி யாசிரிய மருங்கி, னிலைக்குரி மரபி'னிற்கவும் பெறுமே"* என்னுஞ் சூத்திரத்துள் இங்ஙனம் வரும் வெள்ளைக் கொச்சகத்

* தொல், பொருள்: கஎச.

(பாடம்) 1. சேவகரும்படி

பாலைக்கலி

சூ(

துள் ஆசிரியவடி சிறிதுவருமென்றலிற் ‘பொரியுரு வுறழப் புன்குபூ வுதிர
என. ஆசிரியவடி வந்தது.
(௩௨

௩௪.

மன்னுயி ரேமுற மலர்ஞாலம் புரவின்று
பன்னீராற் கால்புனல்[1] பரந்தூட்டி யிறந்தபிற்
சின்னீரா னறல்வார வகல்யாறு கவின்பெற

முன்னொன்று தமக்காற்றி முயன்றவ ரிறுதிக்கட்
பின்னொன்று பெயர்த்தாற்றும் பீடுடை யாளர்போற்
பன்மலர் சினையுகச் சுரும்பிமிர்ந்து வண்டார்ப்ப
வின்னம ரிளவேனி லிறுத்தந்த பொழுதினான் ;

விரிகாஞ்சித் தாதாடி யிருங்குயில் விளிப்பவும்
பிரிவஞ்சா தவர்தீமை மறைப்பென்மன் மறைப்பவுங்
கரிபொய்த்தான் கீழிருந்த மரம்போலக் கவின்வாடி
யெரிபொத்தி யென்னெஞ்சஞ் சுடுமாயி னெவன்செய்கோ

பொறைதளர் கொம்பின்மேற் சிதரின மிறைகொள
நிறைதளரா தவர்தீமை மறைப்பென்மன் மறைப்பவு
முறைதளர்ந்த மன்னவன்கீழ்க் குடிபோலக் கலங்குபு
பொறைதளர்பு பனிவாருங் கண்ணாயி னெவன்செய்கோ ;

தளையவிழ்பூஞ் சினைச்சுரும் பியாழ்போல விசைப்பவுங்
கொளைதளரா தவர்தீமை மறைப்பென்மன் மறைப்பவுங்
கிளையழிய வாழ்பவ னாக்கம்போற் புல்லென்று
வளையானா நெகிழ்போடுந் தோளாயி னெவன்செய்கோ ;

எனவாங்கு,

நின்னுண்ணோய் நீயுரைத்
தலமர லெல்லாநா
மெண்ணிய நாள்வரை
யிறவாது காதலர்
பண்ணிய மாவினர்
புகுதந்தார்
கண்ணுறு பூசல் கைகளைந்
தாங்கே.

'து பருவங்கண்டு வன்புறையெதிரழிந்து ஆற்ருளாய தலைவிக்குத் தோழி அவன் வரவுணர்ந்து கழியுவகையாற் கூறியது.

(க—எ) மன்னுயி . . .

பொழுதினன் :—

(இ - ள்.) அகன்ற யாறுகள் அகன்ற உலகிடத்துப் பெருமையையுடைய யிர்களெல்லாம் உயிர்வாழும்படி பலவாகிய நீரோடுகால்களாலே தம்

(பாடம்) 1. பாய்புனல்.

கின்

கலித்தொகை

[கலி - நூல்

டத்தேவந்து பரக்கும் நீரைத் தாம் எங்கும் பரந்து ஊட்டிப் பாதுகாத்தலை ண்டாக்கி அந்நீர் வற்றியபின்பு சிலவாகிய நீரோடுகால்களாலே

அறல் ொழுக, அவ்வாறுகள்
அழகுபெறும்படியாகத்,
தமக்குமுன்னே ஓர் உதவி
யைச்செய்து அவ்வுதவியிலே முழுக்க
முயன்றவருடைய கேட்டிடத்தே
பின்பு ஓர் உதவியை மீண்டுசெய்யும் பெருமையையுடைய
தொழிலை ஆளுவாரைப்போலே,
சுரும்புகளும் ஒலிக்கப்பட்டு
வண்டுகளும் ஆர்க்கும்படியாக, அந்நீரை
உண்ட கொம்புகளினின்றும்
பலமலர்கள் ஆற்றிலே உகும்படி
இனிமை பொருந்தின இளவேனில்
வந்துவிட்ட பொழுதின்கண்ணே;

'பன்னீர்', 'சின்னீர்' ஆகுபெயர்.
இது "தகுதியும் வழக்கும்" * என்
னுஞ் சூத்திரத்திற் கூறிய மரூஉ.

" வல்லெழுத் தியற்கை யுறழத்
தோன் றும்"† என்றதனிற்
றோன்றுமென்றதனல் அகரங்கெட
லகரம் னகரமாய், வருமொழியில் நகரம்
" ல ன வெனவரூஉம் புள்ளி முன்னர்த்
- த ந வென வரிற் றனவா கும்மே" ‡
என்பதனன் னகரமாய் முடிந்தது.

இது தாவு.

(அ—கக) விரிகாஞ்சித் . . . .

னேவன்செய்கோ :—

(இ - ள்) அலர்ந்த
காஞ்சிப்பூவிற் றாதை அளைந்து
கரிய குயில்கள்

கூவாநிற்கவும், இக்காலத்தே பிரிந்துறைதற்கு அஞ்சாதவருடைய கொடுமையை யான் மறையாநிற்பேன்; அதனாற் பெற்றதென்? மறைப்பினுஞ் சான்று பொய்த்தவன் வந்து தன்கீழே இருக்கப்பட்ட மரம்போல யான் அழகு கெடும்படி என் நெஞ்சு காமத்தீக்கொளுந்தி என்னைச் சுடுமாயின் யான் அதற்கு என்செய்வேன்?

"புல்லு மானு மோரறி வினவே - பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே."§ இதனுட் பிற அறிவும் உளவென்று கூறினர்; அதனாற் பாவத்திற்கு அஞ்சி மரங் கவின்வாடிற்றென்றார்.

(கஉ—௧௫) பொறைதளர் . . . . னெவன்செய்கோ :—

(இ - ள்) பூவின் பாரத்தாற் றளர்ந்த கொம்பின்மேலே வண்டினுடைய திரள் தங்குதல்கொள்ளாநிற்கவும், நிறையெனுங் குணந் தளராதவருடைய கொடுமையை யான் மறையாநிற்பேன்; அதனாற் பெற்றதென்? மறைப்பினும் நாடாளும் முறைமை தளர்ந்த அரசன்கீழ் இருந்த குடிமக்களைப்போலக் கலங்காநின்று$ கண்கள் பொறுத்தலாற்றாமல் நீர் ஒழுகுமாயின் யான் அதற்கு என்செய்வேன்?

---

* தொல். சொல் : ௪எ. † தொல். எழுத்து : உ௪௫.
‡ தொல். எழுத்து : ௪௬௬. § தொல். பொருள் : ௫அ௬
$ கலி. ௫: ௪௨ - ௪௩.

பாலைக்கலி

கள

(கசு—கக) தளையவிழ்பூஞ்

னேவன்செய்கோ :—

(இ - ள்.) முறுக்கு அவிழ்ந்த பூக்களையுடைய சினையிடத்தே சுரும்பினம் யாழ்போலே ஒலியாநிற்கவுங், கொண்ட கோட்பாட்டினைக் குலையாத வருடைய நீமையை மறையாநிற்பேன் ; அதனாற் பெற்றதென்? மறைப்பி

னுஞ் சுற்றங் கெட வாழ்பவன் ஆக்கம் பொலிவழியுமாறுபோலப் பொலி வழிந்து தோள்கள் வளைகிடத்த லமையாவாய் நெகிழ்ந்து கழலுமாயின்

யான் அதற்கு என்செய்வேன் ?

கண் பணிவாருந், தோள் வளையோடுமெனச் சினைவினை முதன்மேல் நின்றது.

இவை மூன்றுந் தாழிசை.

(உ0) எனவாங்கு :—

(இ - ள்.) என்றுசொல்லி;

'ஆங்கு': அசை.

இது தனிச்சொல்.

(உக-உச) நின்னுண்ணேய் . . .

தாங்கே :—

(இ - ள்.) நின் நெஞ்சிறேய் கூறி நீ[1] சுழலாதேகொள். ஏடீ! நாம் வருவரென எண்ணி யிருந்த நாளெல்லை கடவாமற், கண் உறுகின்ற வருத் தத்தைக் கை நீக்கினாற்போலக் காதலர் சமைத்தமாவினையுடையராய் வந்தார் காண்;

இது சுரிதகம்.

இதனாற் றலைவிக்குப் புணர்வாகிய உவகை பிறந்தது.

இஃது எழுடித்தரவும்

நான்கடித்தாழிசையுந் தனிச்சொல்லும்
நான் கடிச் சுரிதகமும் பெற்று
வந்த ஒத்தாழிசைக்கலிப்பா.
(கூகூ)

௩௫.

மடியிலான் செல்வம்போன்
மரனந்த வச்செல்வம்
ப்டியுண்பார் நுகர்ச்சிபோற்
பல்சினை மிஞிறார்ப்ப
மாயவண் மேனிபோற்
றளிரீன வம்மேனித்
தாய சுணங்குபோற்
றளிர்மிசைத் தாதுக

ரு. மலர்தாய பொழினண்ணி
மணிநீர்க்[2] கயநிற்ப
வலர்தாய துறைநண்ணி
யயிர்வரித் தறல்வார
நனியெள்ளுங் குயிலேக்கி
யிணைபுகு நெஞ்சத்தாற்
றுறந்துள்ளா ரவரெனத்
துனிகொள்ள லெல்லாநீ ;

(பாடம்) 1. நின் நெஞ்சினேயை நீ கூறிச். 2. மணிநீர.

10

அ

கலித்தொகை

[கலி - நூடு

வண்ணவண் டிமிர்ந்தானா வையைவா ருயரெக்கர்த்
தண்ணருவி நறுமுல்லைத் தாதுண்ணும் பொழுதன்றோ
கண்ணிலா நீர்மல்கக் கவவிநாம் விடுத்தக்கா
லொண்ணுதா னமக்கவர் வருதுமென் றுரைத்ததை;
மல்கிய துருத்தியுண் மகிழ்துணைப் புணர்ந்தவர்

வில்லவன் விழவினுள்
விளையாடும் பொழுதன்றோ
வலனாக வினையென்று
வணங்கிநாம் விடுத்தக்கா
லொளியிழாய் நமக்கவர்
வருதுமென் றுரைத்ததை;

நிலனாவிற் றிரிதரூஉ நீண்மாடக் கூடலார்
புலனாவிற் பிறந்தசொற் புதிதுண்ணும் பொழுதன்றோ

பலநாடு நெஞ்சினேம்
பரிந்துநாம் விடுத்தக்காற்

௨0. சுடரிழாய் நமக்கவர்
வருதுமென் றுரைத்ததை ;

எனவாங்கு,

உள்ளுதொ றுடையுநின்
னுயவுநோய்க் குயிர்ப்பாகி
யெள்ளறு[1] காதல
ரியைதந்தார் புள்ளியற்
காமர் கடுந்திண்டேர்ப்
பொருப்பன்
௨௫. வாய்மை யன்ன
வைகலொடு* புணர்ந்தே.

இது வற்புறுத்துந் தோழிக்குத் தலைவி

இக்காலம் அல்லவோ அவர்

வருதுமென்ச்·

சொன்ன காலமென

வன்புறையெதிரழிந்தாவள, நீ

துனிகொள்ளல் அவர்

வந்தாரெனத் தலைவன் வரவுணர்ந்து

தோழி ஆற்றுவித்தது.

(க—அ) மடியிலான் . .

. . லெல்லாநீ :—

(இ - ள்.) எடீ ! நீ உள்ளம் மடித்திருத்தலில்லாதவன் செல்வம் பெருகுமாறுபோல† மரங்கள் பூப் பெருக்க, அங்ஙனம் முயன்றுபெற்ற செல்வத்தைத் தான் வருந்தாமற் படிபெற்று உண்பாரது நுகர்ச்சிபோல அம்மரங்களிற்

பலகொம்புகளிலே தேனையுண்டு மிஞிறுகள் ஆரவாரிப்பக், கரியநிறத்தை யுடையவள் மேனிபோலத் தளிரை ஈன், அந்நிறத்திற் பரந்த சுணங்குபோல அந்தத் தளிரின்மேலே தாது விழ, அந்த மலர்பரந்த சோலையை அணுகிப் பளிங்குபோலும் நீர்களையுடையவாகிய குளங்கள் வற்றுது நிற்பப், பூப்பரந்த துறைகளையணுகி நுண்மணலைக் கோலஞ்செய்து அறுநியையுடைய நீர் ஒழுக, இவற்றின்மேலே தான் மொழிக்குத் தோற்றிருந்த பகையாற் பிரிந்திருந்தாரை மிக இகழுங் குயிலைப் பார்த்து வருந்திக் கெடுகின்ற

* பதிற். ௨௧-௪. † குறள். ௫௯௪; ௬௧0; ௯௧௬; ௬௧௭.

(பாடம்) 1. வெள்ளை

நெஞ்சத்தோடே அவர் நம்மைத் துறந்து

வெறுப்புக்கொள்ளாதேகொள்;

இது தரவு.

(௯-௧௨) வண்ணவண் . . .

இனி நினையாரென்று கருதி

றுரைத்ததை :—

(இ - ள்.) ஒள்ளிய

நுதலினையுடையாய்! நாம்

திருத்தினவளவில் நில்லா

வாய்க் கண் நீர்மல்க முயங்கி விடுக்க,

அவர் நமக்கு வருவேமென்று உரைத்த

காலம், நிறத்தையுடைய

வண்டுகள் ஆரவாரித்து, இன்பம்

அமையாத

வையை யாற்றில் ஒழுங்குபட்ட உயர்ந்த இடமணலிடத்துக் குளிர்ந்த அருவி நீராலே வளர்ந்த நறிய முல்லைப்பூவிற் றாதையுண்ணும் இவ்விளவேனிற் காலமல்லவோ?

'விடுத்தக்கால்': காலீற்று வினையெச்சம்.

(கரு—கக) மல்கிய றுரைத்ததை :—

(இ - ள்.) ஒளியிழாய்! நீர் எடுத்துக்கொண்ட காரியம் வெற்றியுண்டாவதாகவென்று கூறித் தொழுது நாம் விடுக்க, அவர் நமக்கு வருவேமென்று உரைத்த காலம், பெருகியகாலத்து நீர் நிறைந்த ஆற்றிடைக்குறையிலே அவர் தம்மை மகிழும் பரத்தையரைக் கூடிக் காமனுக்கு நிகழ்த்துகின்ற விழாவிடத்தே

அவருடனே விளையாடும்
இவ்விளவேனிற்
காலமல்லவோ ?

(கஎ-உ௦) நீலனுவிற்
றுரைத்ததை :—

(இ - ள்.) விளங்குகின்ற இழையினையுடையாய்! இறந்துபடுவேமோ ஆற்றியிருப்பேமோவென்று பலவற்றையும் ஆராயும் நெஞ்சினையுடையேமாய் நாம் வருந்தி விடுக்க, அவர் நமக்கு வருவேமென்று உரைத்த காலம், நிலத்திலுள்ளார் நாவிலே வழங்கும் நீண்ட மாடங்களையுடைய மதுரையி

லுள்ளார் அறிவினையுடைய சான்றோர் நாவிற் பிறந்த யைக் கொண்டாடும் இவ்விளவேனிற் காலமல்லவோ?

கவிகளின் புதுமை

"வேந்துறு தொழிலே யாண்டின தகமே"* என்பதனுன் இது பின் பனியிற் பிரிந்து இளவேனிலுள் வருதல் குறித்தவின் இருதிங்க ளிடையிட்டது.

இவை மூன்றுந் தாழிசை.

(உக) என்வாங்கு :—

(இ - ள்.) எனச்சொல்லி ;

'ஆங்கு': அசை.

இது தனிச்சொல்.

* தொல். பொருள்: ௧அ௬.

(உஉ—உ௫) உள்ளுதோ . . . . புணர்ந்தே :—

(இ - ள்.) தம்மை

நினைக்கும்பொழுதெல்லாம் நெஞ்சழியும் நினது

வருத்தத்தையுடைய காமநோய்க்கு இளைப்பாறுதலாகிப் பறவையினது பறத்தற்றன்மையையுடைத்தாகிய விருப்பத்தையுடைய கடிய திண்ணிய

தேரையுடைய பொதியின்

மலையினையுடைய பாண்டியனுடைய

தப்பாத மொழியையொத்த குறித்த

எல்லைதப்பாத நாளோடே கூடி

நம்மை இகழ்ந்திருத்தல்[1] நீங்கின காதலர்
நம்மைக் கூடுதலைத் தந்தார் ;

இது சுரிதகம்.

இதனாற் றலைவிக்குப்
புணர்வாகிய உவகை பிறந்தது.

இஃது எட்டடித்தரவும்
நான்கடித்தாழிசையுந் தனிச்சொல்லும்
நான்கடிச்சுரிதகமும் பெற்ற
ஒத்தாழிசைக்கலிப்பா.

(கூஉ)

கூசா.

கொடுமிட ணஞ்சிலான்
றூர்போன் மராத்து

நெடுமிசைச் சூழு மயிலாலுஞ்
சீர
வடிநரம் பிசைப்பபோல்
வண்டொடு சுரும்பார்ப்பத்
தொடிமகண் முரற்சிபோற்
றும்பிவந் திமிர்தர வியனெழீஇ
யவைபோல வெவ்வாயு மிம்மெனக்
கயனணி பொதும்பருட்
கடிமலர்த் தேனாத
மலராய்ந்து வயின்வயின்
விளிப்பபோன் மரனாழ்ப்ப
விருங்குயி லாலப் பெருந்துறை
கவின்பெறக்
குழவி வேனில் விழவெதிர் கொள்ளுஞ்
சீரார் செவ்வியும் வந்தன்று

வாரார் தோழிநங் காத லோரே ;

பாஅய்ப் பாஅய்ப் பசந்தன்று நுதல்
சாஅய்ச் சாஅய் நெகிழ்ந்தன தோள் ;
நனியறல் வாரும் பொழுதென வெய்ய
கரு. பனியறல் வாருமென் கண் ;

மலையிடைப் போயினர் வரநசைஇ[2] நோயொடு
முலையிடைக் கனலுமென் னெஞ்சு ;
காதலிற் பிரிந்தார் கொல்லோ வறிதோர்
தூதொடு மறந்தார் கொல்லோ நோதகக்

(பாடம்) 1. இகழ்ந்திருக்க. 2. வாய்ளசைஇ.

பாலைக்கலி

உ௦. காதலர் காத்லுங் காண்பாங் கொல்லோ
துறந்தவ ராண்டாண் டுறைகுவர் கொல்லோ யாவது,
நீளிடைப் படுதலு மொல்லும் யாழநின்

வாளிடைப் படுத்த வயங்கீ
ரோதி
நாளணி சிதைத்தனு
முண்டென நயவந்து

உரு. கேள்வி யந்தணர் கடவும்
வேள்வி யாவியி னுயிர்க்குமென் னெஞ்சே.

இது காலங்கண்டு ஆற்றாத தலைவியது நிலைமைகண்டு, ஆற்றாத தோழி, தான் ஆற்றாளாய் அவட்குக் கூறியது.

(க—கக) கொடுமிட

லோரே :—

(இ - ள்.) தோழீ ! காமனுக்கு நிகழ்த்தும் விழவை எதிர்கொள்ளும் இளவேனிற் செவ்வியுங், கொடிய வலியினையுடைய கலப்பைப்படையினை யுடைய நம்பி * மூத்தபிரானுடைய துழாய்மாலைபோல வெண்கடம்பின் உயர்ந்த இடத்தே ஆரவாரிக்கும் மயில்களனைத்துந் தங்குஞ் சீர்மையுடைய வாய், அதிலே வண்டோடே சுரும்புகளும் வடித்த நரம்புகள் ஒலிப்பன போல ஆரவாரிப்பத், தொடியினையுடைய விறலியது[1] கானத்திற்போலே தும்பிகள் வந்து ஒலித்தலையுண்டாக்கத், தேனினங் கயங்கள் சூழ்ந்த இ

மரக்காவில் மணத்தையுடைய மலர்களை வாச்சியங்களை எழுப்பின ஒை

போல எவ்விடமும் இம்மென்னும்[2] ஓசை பிறக்கும்படியாகச் சத்திக்க,

மரங்கள் கூட உரியாரை ஆராய்ந்து நாற்றத்தாலே தம்மிடத்தே தம்ப
டத்தே அழைப்பனபோல மலர்கள் அலரக், க்ரிய குயில்கள் கூவப், பெரி

நீர்த்துறைகள் பூவால் அழகுபெற வந்தது ; இக்காலம் இங்ஙனம் முதிர்ந்,

அளவிலும் நங்காதலரோ வாரார் ;

(கஉ—கங) பாஅய்ப் பாஅய்ப் . . . . தோள் :—

(இ - ள்.) ஆதலால் எனது நுதல் பசப்பொழுகப் பரந்துபரந்து

வந்து

பின்னர் முழுக்கப் பசந்தேவிட்டது ; என் தோள்கள் ஒழுக மெலிந்து

மெலிந்து வந்து பின்னர் மிகவும் மெலிந்தேவிட்டன ;

(கச—கரு) நனியறல் .

. . . கண் :—

(இ - ள்.) என் கண்கள் இக்காலம் மிகவும் அறலொழுகுமென்று கரு[illegible] அதற்கெதிரே வெய்ய நீர் அறுதியுடைத்தாய் ஒழுகாநிற்கும் ;

---

* பரி. கக : கஉ - கக.

† கலி. கஉக : உ - ரு.
மிக்கென்னைக்:

கOஉ

கலித்தொகை

(கசு—கஎ) மலையிடைப் .

. . . . . நெஞ்சு :—

(இ - ள்.) என் நெஞ்சு மலையிடத்தே போனவருடைய வரத்தை[1] நச்சுகையினாலே தோன்றிய காமத்தீயாலே என்னுடைய முலையெல்லாங் காந்தாநிற்கும் ;

'நசைஇ' யென்னுஞ் செய்தெனெச்சங் காரணகாரியப் பொருட் டாய்நின்றது. தோன்றியவென வருவிக்க. அது நச்சின நோயெனப் பெயரெச்சமாகாது.

(கஅ—உகு) காதலிற் .

. . . நெஞ்சே :—

(இ - ள்.) "காதலர் நம்மிடத்துக் காதலின்று நீங்கினரோ? அன்றிக் காதலுண்டாயிருக்க ஒரு தூதொடு கூறி வரவிடும் வார்த்தையைச் சிறிது மறந்தாரோ? அவர் நம்மிடத்து நிகழ்த்துங் காதலையும் நாம் இறந்துபடாம லிருந்து காண்பேமோ? நம்மை இங்ஙனந் துறந்தவர் அவ்விடங்களிலே அவ்விடங்களிலே இருந்து [2] விடுவரோ? இவற்றுண் முடியுங் காரியம் எதுதா" னென்று தலைவி கூற, அதுகேட்ட தோழி, "புணர்ந்தவர் சேயிடத்தே பிரிந்திருத்தலும் உலகத்துக்குப் பொருந்தும்.* அவர் வருவதற்கு முன்பே, கத்திரிகை இடையிட்ட விளங்குகின்ற நெய்த்த ஒதியினையுடையாய்! என் நெஞ்சு அவர் குறித்தநாள் வந்து நின் அழகைக் கெடுத்தலுமுண்டென்று கருதி நூற் கேள்வியினையுடைய அந்தணர் விருப்பம் வந்து செலுத்தும் யாகத்திடத்துப் புகைபோலே நெட்டுயிர்ப்புக் கொள்ளாநிற்கும்; இதுகாண் யானுறுகின்ற வருத்த" மெனத் தானும் ஆற்றாளாய்க்கூறி ஆற்றுவித்தாள்;

இது தோழி கூற்றிற் "பிறவும்" † என்பதனாற் கொள்க.

இதனாற் றோழிக்குத் தலைவிக்குஞ் சூழ்ச்சி தோன்றிற்று.

இது தரவின்கண்ணே "செவ்வியும் வந்தன்று" என வழியசை புணர்த்த சொற்சீரடியும் 'பாஅய்ப் பாஅய்ப் பசந்தன்று நுதல் - சாஅய்ச் சாஅய் நெகிழ்ந்தன தோள்' என முட்டடியின்றிக் குறைவுசேர்த்தாகிய சொற்சீரடியும் வந்து கலிவெண்பாவின் வேறுபட்ட கொச்சகம். (கூ௫)

பாலைக்கலி முற்றும்.

* கலி. கசரு : கரு - கஎ. † தொல். பொருள் : கஙூ0.
1. வார்த்தை. 2. இருக்தே.

கலித்தொகை

உ.

குறிஞ்சிக்கலி.

கயமல் ருண்கண்ணாய்
காணு யொருவன்
வயமா னடித்தேர்வான்
போலத் தொடைமாண்ட

கண்ணியன் வில்லன் வருமென்னை நோக்குபு
முன்னத்திற் காட்டுத லல்லது, தானுற்ற
நோயுரைக் கல்லான் பெயருமற் பன்னாளும்
பாயல் பெறேஎன் படர்கூர்ந் தவன்வயிற்

சேயேன்மன் யானுந்
துயருழப்பே னாயிடைக்
கண்ணின்று கூறுத
லாற்று னவனாயிற்
பெண்ணன் றுரைத்த

ணமக்காயி னின்ன தூஉங்
௧௦. காணான் கழிதலு
முண்டென் றொருநாளென்
றோணெகிழ் புற்ற
துயராற் றுணிதந்தோர்
நாணின்மை செய்தே
னறுநுதா லேன
லினக்கிளி யாங்கடிந்
தோம்பும் புனத்தய
லூசலூர்ந் தாட
வொருஞான்று வந்தானை
௧௫. ஐய சிறிதென்னை யூக்கி
யெனக்கூறத்
தையா னன்றென்

றவனூக்கக் கைநெகிழ்பு
பொய்யாக வீழ்ந்தே
னவன்மார்பின் வாயாச்செத்
தொய்யென வாங்கே
யெடுத்தனன் கொண்டான்மேன்
மெய்யறியா தேன்போற்
கிடந்தேன்மன் ளுயிடை
௨௦. மெய்யறிந் தேற்றெழுவே
னயின்மற் றொய்யென
வொண்குழாய் செல்கெனக்
கூறி விடும்பண்பி
னங்க [1] னுடைய னவன்.

இது "நாற்றமுந் தோற்றமு

மொழக்கமு

முண்டியுஞ்-செய்விணை மறைப்பினுஞ்

செலவினும் பயில்வினும் -

புணர்ச்சி யெதிர்ப்பா டுள்ளுறுத்து

வருஉ -

(பாடம்) 1. வின்க.

கOச

கலித்தொகை

[கலி - கூள

முணர்ச்சி யேழினு முணர்ந்த பின்றை"த் தன்வை அவள் மறையாமை காரணமாக "மெய்யினும் பொய்யினும் வழிநிலைபிழையாது பல்வேறு கவர்பொரு ணட்டத்தாற்" * றலைமகட்குத் தோழிகூறியது.

(இ - ள்.) கயத்திடத்து நீலமலர்போலும் மையுண்கண்ணினையுடையாய்! யான் கூறுகின்றதனை நின் மனத்தான் ஆராய்ந்துபாராய்! தனக்கு ஒப்பில்லாதான் வலியையுடைய யானை முதலியவற்றின் அடியைத் தேடுவான்போலே கட்டுதன் மாட்சிமைப்பட்ட கண்ணியையுடையனாய், வில்லையுடையனாய் வரும்; அங்ஙனம் வந்து என்னைப் பார்த்துத் தான் உற்றநோயை மிகவுங் குறிப்பாலே யான் உணரக் காட்டுவதன்றிக் கூற்றாற் கூறானாய் † பலநாளும் மீண்டும்போம்; அதுகண்டு அவனேயன்றி அவனிடத்து மிகவும் உறவில்லாத யானும் அவன் என்செய்கின்றானென்னும் நினைவுமிக்குத் துயில் பெறேனாய் வருத்தத்திலே விழுந்து அழுந்துவேன்; அவ்விடத்து அவனாயிற் றன் குறையை நம்மெதிர்நின்று கூறுதலைச் செலுத்தான்; நமக்காயின் நின் வருத்தத்திற்கு யாமும் வருந்தினேமென்று கூறுதல் பெண்டன்மையன்று; இங்ஙனம் நின்ற இதனைச் சிறிது நெஞ்சால் ஆராயானாய் இறந்துபடுதலு முண்டாமென்று கருதி, இடையிலே ஒருநாளிலே என் தோள்கள் மெலிந்து யான் உற்ற வருத்தத்தாலே துணியாததொன்றைத் துணிதலைச்செய்து ஒரு நாணமில்லாமையைச் செய்தேன்; அஃதியாதெனின், நறிய நுதலினையுடையாய்! தினைப்புனங்களில் இனமாகிய கிளியை விழாமல் ஓட்டி யாம் பாதுகாக்கும் புனத்துக்கு அயலிலிட்ட ஊசலை ஏறி ஆடாநிற்க, ஒருநாள் வந்தவனை "ஐயனே! சிறிதுபொழுது என்னை ஊசலாட்டுவாயாக" வெனச் சொல்ல, அவனும் அதற்குடம்பட்டுத் "தையால்! நீ கூறியது நன்" றென்று ஊசலாட்டாநிற்க, அவன் மார்பின்கண்ணே கைநெகிழ்ந்து வீழ்ந்தேனாக அவன் கருதும்படி பொய்யுண்டாக வீழ்ந்தேன்; அதனை அவன் உண்மையாகக் கருதி, அப்பொழுதே விரைய என்னையெடுத்து அணைத்துக்கொண்டான்; அவ்விடத்தே என் மெய்வருத்தத்தை யான் அறிந்து மயக்கம் நீங்கி எழுந்திருப்பேனாயிற், பின்னைப் பிறர் அறிவரென்று கருதி விரைய, "ஒண்குழாய்! நீபோ" வென்று கூறிவிடுங் குணத்தாலே நம்மேலே ஒரு கண்ணோட்டமுடையனாயிருந்தான்; அதனாலே அவன்மேலே மெய்ம்மறந்தேன் போலே கிடந்தேன்; இதுகாண்;

'மே' லென்றது அவன் மார்பிலென்னும் பொருட்டு. 'தானுற்ற நோயுரைக் கல்லான் பெயருமற் பன்னாளும்' என்றது தலைவன் இளிவந் தொமகுகல் ...

டோன்றிய இளிவரல். அப்பொருளாக அவலச்சுவை பிறந்தது. "முன்

* தொல். பொருள்: ௧௧௪. † குறள். ௧௧௦௦

குறிஞ்சி - ௨]

குறிஞ்சிக்கலி

கருணத்திற் காட்டுத

லல்லது' என்றது

நிறையுடைமையென்னும் ஒப்புமை. 'பெண்ணன்றுரைத்த னமக்காயின்' என்பதும் அது.

இஃது "இயல்"* என்றதனாற் பன்னீரடியி னிகந்துந் 'தையானன்' றெனத் தளைவிரவியும் வந்த கலிவெண்பா.

இதுவும், வேறுபொருள் நுதலுமென்றலின், வேறுமொருபொருள் நுதலுமாறு கூறுதும்: "அறக்கழி வுடையன பொருட்பயம் படவரின்-வழக்கென வழங்கலும் பழித்தன் றென்ப"† என்னும் பொருளியற் சூத்திரத்தால் அறக்கழிவுடையனவாக அவன்மார்பில் வீழ்ந்து 'மெய்யறியாதேன்போற் கிடந்தே' னெனக்கூறினள். இது பொருட்பயன் தந்தவாறென்னையெனின், தலைவன் குறையுற்றுநின்றமையை முன்னர் மெய்யாக வழிநிலைபிழையாமற் கூறிப், பின்னர்ப் படைத்துமொழிந்து பொய்யே கூறுகின்றாள், வழிநிலை

பிழைப்பக் கூறினுள். அது பொருட்பயன் தருதற்கென்க. அஃதென்னை ? தலைவன் குறை புலப்படுத்தாது வருந்துகின்ற காலத்து அதனைத் தனக்குப் புலப்படுவித்துக்கொண்டே அவனை ஆற்றுவித்தற்பொருட்டு அறக்கழி வுடையனகூறித், தானுந் தலைவனும் இவ்வாறே செறிந்தமை உணர்த்தலின், மறைபுலப்படுத்துங் கருத்தினளாந் தலைவியென்னும் பொருட்பயன் தந்தே நின்றதாயிற்று. இதனான் இதுவும் "வழக்கென வழங்கலும் பழித்தன்று" என ஆசிரியரும் அமைத்தார். இங்ஙனம் பொருட்பயன் தருதல் " நெருந லெல்லை யேனற் றோன்றித் — திருமணி

யொளிர்வரும் ''‡ என்னும் அகப்பாட்டிற் "சிறுபுறங் கவையின ளுக...கை பிணிவிடா" என்ற பொருளானும் உணர்க.

இதனாற் றலைவிக்கு நாணம் பிறந்தது.

(க)

ங-அ.

இமையவில்[1] வாங்கிய
வீர்ஞ்சடை யந்தண
னுமையமர்ந் துயர்மலை
யிருந்தன னாக
வையிரு தலையி னரக்கர்
கோமான்

றொடிப்பொலி[2] தடக்கையிற்
கீழ்புகுத் தம்மலை
யெடுக்கல் செல்லா
துழப்பவன் போல

வுறுபுலி யுருவேய்ப்பப்
பூத்த வேங்கையைக்

கறுவுகொண் டதன்முதற் குத்திய மதயானை
நீடிரு விடரகஞ் சிலம்பக் கூய்த்தன்

கோடுபுய்க் கல்லா துழக்கு
நாடகேள் ;

௧௦. ஆரிடை யென்னுய்மீ யரவஞ்சாய் வந்தக்கா
னீரற்ற புலமேபோற் புல்லென்றாள் வைகறை

* தொல். பொருள் : சசுடு. †

தொல். பொருள்; உகஅ. ‡ அகம். ருஉ.

(பாடம்) 1. இம்யவில், 2.

ஒருடிபொலி.

14

0கா

கலித்தொகை

[கலி - ரு.

கார்பெற்ற புலமேபோற் கவின்பெறு மக்கவின்
தீராமற் காப்பதோர் திறனுண்டே லுரைத்தைக்காண் ;
இருளிடை யென்னுய்நீ யிரவஞ்சாய் வந்தக்காற்

ரு. பொருளில்லா ளிளமைபோற்
புல்லென்ருள் வைகறை
யருள்வல்லா ணாக்கம்போ
லணிபெறு மவ்வணி
தெருளாமற் காப்பதோர்
திறனுண்டே லுரைத்தைக்காண்;

மறந்திருந்தா ரென்னுய்நீ
மலையிடை வந்தக்கா
லறஞ்சாரான் மூப்பேபோ
லழிதக்காள் வைகறை உ0.

திறஞ்சேர்ந்தா ணுக்கம்போற்
றிருத்தகு மத்திருப்
புறங்கூற்றுத்தீர்ப்பதோர்
பொருளுண்டேலுரைத்தைக்காண்;
எனவாங்கு,

நின்னுறு விழுமங் கூறக்
கேட்டு

வருமே தோழி நன்மலை
நாடன்
வேங்கை விரிவிட நோக்கி

வீங்கிறைப் பணைத்தோள்

வரைந்தனன் கொளற்கே.

இஃது இரவுக்குறிவந்து நீங்குந் தலைவனை எதிர்ப்பட்டுத் தோழி தலைவியது

நிலைமைகூறி அவனை வரைவுகடாவ, அவன் வரையவருகின்றமை தோழி

தலைவிக்கு வரைவுமலிந்து கூறியது.

(க—கூ) இமையவில் . . . நாடகேள் :—

(இ - ள்.) இமயமலை யிடத்துப் பிறந்த மூங்கிலாகிய வில்லை வளைத்த, கங்கையான் ஈரத்தையுடைத்தாகிய

சடையினையுடைய இறைவன், இறைவி

யோடே பொருந்தி, உயர்ந்த கயிலைமலையிலே இருந்தானாக, அரக்கர்க்கரசனாகிய பத்துத்தலையையுடைய இராவணன் வரையெடுத்தற்குக் கையைக் கீழேசெருகித், தொடி பொலிவுபெற்ற அத்தடக்கையினாலே அம்மலையை எடுத்தலாற்றாது வருந்துகின்றவனைப்போல, மிகுதியையுடைய புலியினது வடிவையொப்பப் பூத்த* வேங்கைமரத்தைப் புலியெனக் கறுவுதல்கொண்டு, அதன் அடியிலே குத்திய மதத்தையுடைய யானை, நீண்ட பெரிய முழைஞ் சிடமெல்லாம் ஒலிக்கும்படி கூப்பிட்டுத் தன் கொம்பை வாங்கமாட்டாதே வருந்தும் நாடனே! யான் கூறுகின்றதனைக் கேள்;

கொடிதாகிய புலியின் உருவையொப்ப வேங்கை பூத்ததென்றதனைக் களவின்கட் பெறுகின்ற இன்பத்தை நீக்குதலிற் கொடியதுபோற்றோன்றிக் கற்பின்கண் இல்லறப் பயனோடுகூடிப் பேரின்பத்தைத் தருகின்ற வரை

* குறுந் - சஎ; அகம் - கஉ : கூ - கக; புறம் - உ0௨ : க௪ - உ0;

குறிஞ்சி - உ]

குறிஞ்சிக்கலி

க0எ

கடாய கூற்றாகவும், வேங்கையைப்

பகையாகக் கருதி அதனோடே பொரு

யானையை அக்கூற்றைத் தான்

நுகர்கின்ற இன்பத்திற்கு மாறாகக் கருதி அக்கூற்றுடனே மாறுபட்டு வருகின்ற தலைவனாகவும், விடரகஞ் சிலம்பச் கூவுதலை அத்தலைவன் அவ்வொழுக்கத்திற்கு இடையீடுபட்டு வருந்திச் கூறுகின்ற கூற்றாகவுங், கோடு புய்க்கல்லாது உழத்தலை அக்கூற்றைப் பசை யென்று கொண்ட மனத்தை அவள் கூற்றை நன்றென்று கருதி நீக்கமாட்

டாது வருந்துதலாகவும் உள்ளுறையுவமங் கொள்க. உழப்பவன்போல வென்ற வினையுவமம் பின் வருகின்ற வேங்கையைக் குத்திய யானை கோடு

புய்க்கல்லாதுழக்குமென்ற உள்ளுறையுவமத்தைத் தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்து அதுவும்

உள்ளுறையுவமம்போலத் திணை யுணர்த்தலைத் தள்ளாதுநின்றது. இது வினையுவமப்போலி. இஃது "உள்ளுறை யுவம மேனை யுவமமெனத் - தள்ளா தாகுந் திணையுணர் வகையே"* என்னும் அகத்திணையியற் சூத்திரத்தினும், "உடனுறை யுவமஞ் சுட்டுநகை சிறப்பெனக் - கெடலரு மரபி னுள்ளுறை யைந்தே"† என்னும் பொருளியற் சூத்திரத்தினும் யாங் கூறிய உரையான் உணர்ந்துகொள்க. மேலும், இத்தொகையுள், ஏனையுவமமும் வந்தும், ஏனையுவமப் உள்ளுறையுவமத்திற்குச்

சிறப்புக்கொடுத்துத் திணையுணர்தலைத்
தள்ளாது நிற்கும் பாட்டுக்கட்கெல்லாம்
இச்சூத்திரங்களே விதியாகக்
கொள்க.

"நன்றே" என்னுங் குறுந்தொகையும் ‡ அது.

இது தரவு.

(கo—கரு) ஆரிடை . . . ;

லுரைத்தைக்காண் :—

(இ - ள்.) நீரற்ற நிலத்திற்
பயிர்போல நின் அளிபெறுமற்
பொலி வழிந்தவள், நீ வருதற்கரிய
இடமென்று கருதாயாய் ஆண்டுள்ள
பாம்பை

அஞ்சாயாய் வர, விடியற்காலத்தே மழையைப் பெற்ற நிலத்திற் § பயிர் போல அழகு பெறும்; இனி, அங்ஙனம் பெற்ற அழகு இவளைவிட்டு நீங்காமல் நிலைபெற்று நிற்கும்படி காப்பதொரு கூறுபாடு உண்டாகில் அதனை எங்களுக்குக் கூறிக்காண்;

'வந்தக்கால்,' காலீற்று வினையெச்சம்; உரைத்துக்காணென்பது 'உரைத்தைக்கா'வென வினைத்திரிசொல்லாயிற்று.

(கச—கஎ) இருளிடை . . . . லுரைத்தைக்காண்:—

(இ - ள்.) கைப்பொருள் இல்லாதான் இளமைபோல ¶ நின் அளி பெறுமற் பொலிவழிந்தவள், நீ இருளிடத்தில் இராவென்று

கருதாயாய்

---

* தொல், பொருள்: ௪௬. † தொல், பொருள்: ௨௪௨.

‡ இம்முதலுள்ள பாட்டுக் குறுந்தொகையிற் காணப்படவில்லை.

§ சீவகசிந், ௨௯௭௨. ¶ கலி - ௧௦ ; ௧.

ஊண்டுவரும் ஏதத்திற்கு அஞ்சாயாய் வர, விடியற்காலத்தே அருளுதலை
வல்லவனுக்கு உண்டாய ஆக்கம்போல அழகுபெறும்; அங்ஙனம் பெற்ற

அழகு பிறரான் வந்த அழகென்று புறஞ்சொல்லுதலைப் போக்குவதொரு பொருளுண்டாகில் அதனை எங்களுக்குக் கூறிக்காண்;

(கஅ—உக) மறந்திருந்தா . . .
லுரைத்தைக்காண் :—

(இ - ள்.) தருமநெறியைப் பொருந்தாமல் வறிதே மூப்பினை எய்தி யவன் மறுமைச்செல்வத்திற் பொலிவிழந்தாற்போல நின் அளிபெறாமற் பொலிவழிந்தவள்[1], கொலைத்தொழிலிற் குறைவின்றித் திருந்திய கானவ ரென்று கருதாயாய் அம்மலைச்சாரலிலுண்டாகிய வழிக்கண் வந்த இடத்து அவ்வரவினாற் பெற்ற

முயக்கின்பத்தாலே, விடியற்காலங் கூறுபாடுடைய வ்னுடைய செல்வப்பொலிவுபோல அழகுபெறும்; அங்ஙனம் பெற்ற அழகால் அயலவர்கூறத்தக்க புறங்கூற்றுரையை மாற்றத்தக்கதொரு பொருளுண் டாகில் அதனை எங்களுக்குக் கூறிக்காண்;

'பொரு'ளென்றது ஆகுபெயர்.

இவை மூன்றும் தாழிசை.

(உஉ) எனவாங்கு :—

(இ - ள்.) என்று; 'ஆங்கு' அசை. இது தனிச்சொல்.

(உரு—உசு) நின்னுறு . .

. . கொளற்கே :—

(இ- ள்.) நின்னுடைய மிகுதலையுடைய வருத்தத்தை யான் கூறக் கேட்டு நல்ல மலைநாடன், தோழீ! வேங்கை அலர்கின்ற காலத்தைப் பார்த்துப் பெருத்த இறையினையுடைய பணைத்தோளை வரைந்துகோடற்கு வரும். இது சுரிதகம்.

இதனாற் றலைவிக்குச் செல்வமாகிய உவகை பிறந்தது.

இஃது 'ஐயிரு தலையி னரக்கர் கோமா' னென ஆசிரியத்தளையும் வந்து பதினேரெழுத்தான் வந்த அடிபெற்ற ஒன்பதடித்தரவும் நான்கடித் தாழிசையுந் தனிச்சொல்லும் இயலென்ற இலேசால் தரவின் உள்ளுறைப் பொருளையுங் கொண்டு நின்ற நான்கடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (உ)

ங.கூ.

காமர் கடும்புனல் கலந்தெம்மோ

டாடுவா

டாமரைக்கண் புதைத்தஞ்சித் தளர்ந்ததனோ டொழுகலா
னீணக நறுந்தண்டார் தயங்கப்பாய்ந் தருளினற்

(பாடம்) 1. பொலிவிழந்தவள்.

குறிஞ்சிக்கலி
௧௦௧

பூணாக முறத்தழீஇப்
போதந்தா னகனகலம் வருமுலை
புணர்ந்தன வென்பதனா
லென்றோழி
யருமறை
தரல்வேண்டிற் றருகிற்கும் பெருமையளே;

அவனுந்தான், ஏன விதணத் தகிற்புகை யுண்டியங்கும்
வானூர் மதியம் வரைசேரி னவ்வரைத்
தேனி னிறாலென வேணி யிழைத்திருக்குங்
கானக நாடன் மகன்;

சிறுகுடி யீரே சிறுகுடி யீரே

வள்ளிகீழ் வீழா வரைமிசைத்
தேன்றொடா
கொல்லை குரல்வாங்கி யீனா
மலைவாழ்ந
ரல்ல புரிந்தொழுக லான்;

கரு. காந்தள் கடிகமழுங் கண்வாங் கிருஞ்சிலம்பின்
வாங்கமை மென்றோட் குறவர் மடமகளிர்
தாம்பிழையார் கேள்வர்த் தொழுதெழலாற் றம்மையருந்
தாம்பிழையார் தாந்தொடுத்த கோல்;

எனவாங்கு,

உ0. அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
வென்னையர்க் குய்த்துரைத்தாள் யாய்;

அவருந், தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக் கண்சேந்
தொருபக லெல்லா முருத்தெழுந் தாறி
யிருவர்கட் குற்றமு மில்லையா லென்று
உரு. தெருமந்து சாய்த்தார் தலை ;

தெரியிழாய் நீயுநின் கேளும் புணர
வரையுறை தெய்வ முவப்ப வுவந்து
குரவை தழீஇயா மாடக் குரவையுட்
கொண்டு நிலைபாடிக் காண் ;

௩௦. நல்லாய்,

நன்னா டலைவரு மெல்லை நமர்மலைத்

தந்நாண்டாந் தாங்குவா
ரென்னேற் றனர்கொல் ;

புனவேங்கைத் தாதுறைக்கும்
பொன்னறை முன்றி னனவிற்
புணர்ச்சி நடக்குமா மன்றோ

ருரு. நனவிற் புணர்ச்சி நடக்கலு
மாங்கே
கனவிற் புணர்ச்சி கடிதுமா
மன்றோ ;
விண்டோய்கன் னாடனு

நீயும் வதுவையுட்

பண்டறியா தீர்போற்

படர்கிற்பீர் மற்கொலோ

பண்டறியா தீர்போற்

படர்ந்தீர் பழங்கேண்மை

௪0. கண்டறியா தேன்போற்

கரக்கிற்பென் மற்கொலோ ;

மைதவழ் வெற்பன்

மணவணி காணாமற்

கையாற் புதைபெறூஉங்

கண்களுங் கண்களோ ;

என்னைமன், நின்கண்ணாற்

காண்பென்மன் யான் ;

செய்த விதழுண்கண்,

நின்கண்ணு கென்கண்மன ; சரு.

எனவாங்கு,

நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇத் தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவ ரினமாக வேய்புரை மென்றோட் பசலையு மம்பலு

மாயப் புணர்ச்சியு மெல்லா முடனீங்கச்

ருo. சேயுயர் வெற்பனும் வந்தனன்

பூவெழி லுண்கணும் பொலிகமா வினியே.

இது "முன்னிலை யறனெனப் படுதலென் றிருவகைப் - புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்" * என்னும் விதிபற்றித் தமர் வரைவுமறுத்தழித் தோழி தாயர்க்கு அறத்தொடுநிற்ப, அவள் நற்றாய்க்கு அறத்தொடுநிற்ப, அவள் தன்னையர் முதலியோர்க்கு அறத்தொடுநிற்ப, அவரும் ஒருவாற்றான் உடன்பட்டமை தோழி தலைவிக்குக் கூறித் தானும் அவளும் வரைவு கடி தின் முடிதற்பொருட்டு வரையுறைதெய்வத்திற்குக் குரவையாட அவன் வரைய வருகின்றமை தோழி தலைவிக்கு உரைத்தது.

(க—சு) காமர் . . . . . பெருமையளே:—

(இ - ள்.) எம்மோடே கூடி விருப்பத்தையுடைய கடிய நீரையாடு கின்றவள் கால்தளர்ந்து அஞ்சித் தாமரைபோலுங் கண்ணைப் புதைத்து அந் நீரோடே போகையினாலே தனக்குச்சென்ற அருளினாலே நீண்ட சுர புன்னைப்பூவாற் கட்டின நறிய குளிர்ந்த மாலை அசையும்படி அந்நீரிலே குதித்துப் பூணினையுடைய இவள் மார்பைத் தன்மார்போடே உறும்படி அணைத்துக்கொண்டு கரையிலே போதவிட்டவனுடைய அகன்ற மார்பை இவளுடைய எழுகின்ற முலைகள் கூடினவென்று பிறர் கூறுகின்ற கூற்றாலே

* தொல். பொருள்: கக௯

குறிஞ்சி - ரு]

குறிஞ்சிக்கலி

கக௯

என்னுடைய தோழி நமக்கு

அரியமழையைப் பெய்விக்க நாம் விரும்பில் அதனை நமக்குத் தரவல்ல கற்பின் * பெருமையளாயினள் ;

(எ—கo) அவனுந்தான் மகன் :—

(இ - ள்.) இவளேயன்றி அவன்றானுந் தினைப்புனத்திலிட்ட பா ணிடத்து எரிந்த அகிலின் புகையாலுண்ணப்பட்டு ஒளிமழுங்கித் திரியும் மதியம் வானிடத்தே சென்று அம்மலைத்தலையிலே தங்கிற்றாயின், அதனை அந்த மலையில் வைத்த தேனினது இறாலென்று கருதி, அதனை அழித்தற்குக்† கண்ணேணி ‡ முதலியன சமைத்திருக்குங் காடு அகன்ற நாட்டையுடை யவன் மகன் ;

மிக்க ஒளியினையுடைய மதி புகையால் மாசுண்ட தன்மை பற்றித் தங்

கையகப்படுத்திப் பயன்கொள்ளக் கருதும் நாடனெனப் புகழ்மிக்க தலைவனும், புனலிடைத் தழுவிப் போதந்ததனாற் சிறிது புகழ்குறைந்தமை பற்றி பாழும் அவன் வரைந்துகொள்ளக் கருதுகின்றேமென உள்ளுறையுவமங் கொள்க.

இதனாற் றலைவன் தங்குலத்தினும்[1] உயர்ந்தானென்பது தோன்றக் கூறினாள். இது பிறப்பொப்புமை[2] கூறிற்று.

(கக—கச) சிறுகுடி . . . . லான்:—

(இ - ள்.) சிறுகுடியிலுள்ளீர்! சிறுகுடியிலுள்ளீர்! இம்மலையில் வாழ்வார் இங்ஙனம் உதவியார்க்குக் கொடுக்க நினையாது தொதுமலர்க்குக் கொடுக்க நினைந்து அறமல்லாதனவற்றை விரும்பி ஒழுகுகையினாலே இனி இவ்விடத்து வள்ளியுங் கிழங்கு வீழ்விழா; மலைமிசையில் தேனுந் தொடா; கொல்லையில் தினைகளுங் கதிர்பறிந்து ஈனுவாம்;

(கரு—கஅ) காந்தள் .

கோல் :—

(இ - ள்.) காந்தட்பூ மணநாறும், பார்த்தவர்கள் கண்ணைத் தன்னிடத்தே வாங்கிக்கொள்ளுங் கரிய மலையிடத்து வளர்ந்த மூங்கில்போலும் மெல்லிய தோளையுடைய குறவருடைய மடப்பத்தையுடைய மகளிர் தாந் தத்தங் கணவரைத் தப்பாராய் அவரே தெய்வமென்று வணங்கி எழுந் திருத்தலாலே § அவர்தம் ஐயன்மார்தாமுந் தாந்தொடுத்த அம்புகள் இலக்குத் தப்பாராயினர்; என்றது, விளைவின்றேல் வேட்டையாடியும் உணவுண்டாக்குது மென்று கருதில் அதுவுந் தப்புமென்றுளென்றவாறு.

* கலி. கசு : உ0. † மலைபடு. கஉடு - அ.; கலி. சஉ : உஉ - உகு.

‡ கணுக்களிலேயே அடிவைத்து ஏறியிறங்கும்படி அமைத்துள்ள மூங்கில்.

§ குறள். ருரு.

(பாடம்) 1. கங்குலத்தினும். 2. புறம்பெரப்புமை,...

(கக) எனவாங்கு :—

(இ - ள்.) என்று ; 'ஆங்கு': அசை.

(உ0—உக) அறத்தொடு . . .

[கலி - ௬க

யாய் :—

(இ - ள்.) தமர் வரைவுமறுத்துழி அறத்தொடுநின்ற என் கூற்றைத் தாய் நெஞ்சாற் கண்டு நற்றாய்க்குத் தான் அறத்தொடுநிற்குங் கூற்றிலே படக்

கூற அதுகேட்டு அவளும் என்றமையன்மார்க்கு வெகுட்சி[1] பிறவாமற் செலுத்திக் கூறினள் ;

(உஉ—உடு) அவருந் . . . . .

தலை :—

(இ - ள்.) அதுகேட்டு அவரும் ஒரு முகுர்த்த[2] மெல்லாம் நெஞ்சழன்று கண்சிவந்து தெரிந்த அம்புகளையும் பார்த்து வில்லையும் பார்த்து எழுந்து அலமந்து இருவரிடத்துங் குற்றமில்லையாயிருந்ததென்று சினம் ஆறித் தலைசாய்த்திருந்தார் ;

இஃது அறத்தொடுநிலை

வாய்த்தவாறு கூறியது.

(உகூ—உக) தெரியிழாய் .

. . . காண் :—

(இ - ள்.) தெரிந்த

இழையினையுடையாய் ! நீயும் நின்

கணவனுங் கூடும்படியாக

இவ்வரையுறை[3]

தெய்வம் மனமகிழும்படி யாம்

மகிழ்ந்து குர

வையைக் கைகோத்தாடுதற்கு

யுளை * நீ பாடிக்காண் ;

அக்குரவைக்கூத்திற்

கொண்டுநிலைச் செய்

யாமென்னும் படர்க்கையுளப்பாடு ஆயத்தை உளப்படுத்திற்று.

இது "நாமக் காலத் துண்டெனத் தோழி - யேமுறு கடவுளேத்" † திய து. ஒருவர்கூற்றினை ஒருவர் கொண்டுகூறுதலிற் கொண்டுநிலையாயிற்று.

(௯0—௯உ) நல்லாய் . . . . . றனர்கோல் :—

(இ - ள்.) அது கேட்ட தலைவி, நல்லாய்! நம்மை வரைந்துகொள்ளும் நல்லநாள் நம்மிடத்தே வருமளவில் நஞ் சுற்றத்தார் தம்மலையிடத்து நாணைத் தாங்குவார் தாம் என்ன நல்வினையைச் செய்தார்கொ லென்றாள்;

சுற்றத்தாரிடை வரைதலாற் [4] பிறந்த நாண் தாங்கலரிதென்றாள்.

(௯௩—௯௯) புனவேங்கைத் . . . . . மன்றே :—

(இ - ள்.) புனத்தினின்ற வேங்கைப்பூவிற் பொன்போன்ற தாது உதிரும் பாறையையுடைய முற்றத்தே வெளியிலே உண்டாங் கூட்டமும்

---

* சிலப். (உச.) † தொல். பொருள் : ௧௪௬.

(பாடம்) 1. என்னையன்மார்க்கு வெட்சியிற். 2. முகூர்த்த.

3. இவ்வலராயினை ...... 4. இடை வரைதலாற்

குறிஞ்சி - ௬]

குறிஞ்சிக்கலி

௧௧௬.

ஒப்பில் நடக்குமல்லவோ ? அங்ஙனவிற் புணர்ச்சி நடந்ததாக அப்பொழுதே கனவிடத்தே உண்டாய்ப்போதுங் கூட்டத்தைப் போக்கிவிடுவேமல்லவோ?

நனவிலும் புணர்ச்சி, கனவிலும் புணர்ச்சியென ஆமென்பனவற்றைக் கூட்டுக. 'நடக்கலு' மென்றது உம்மீற்று வினையெச்சம் ; விரைவுதோன்ற நின்றது.

"வரைவுதலைவரினும்" * என்பதனாற் றலைவி தன்வயி னுரிமையும் அவன்வயிற் பரத்தைமையுந்[1] தோன்றக் கூறினாள்.

(கூஎ—௬௦) விண்டோய்கன் மற்கோலோ :—

(இ - ள்.) அதுகேட்ட தோழி விசும்பைத் தீண்டுகின்ற மலைநாடனும் நீயும் அக்கலியாணத்தே பண்டு கண்டறியாதீர்போல மிகவும் நடப்பீரோ? பண்டு கண்டறியாதீர்போல நடந்தீருடைய பழைய உறவை யான் கண்டறியாதேன்போல மிகவும் மறைப்பேனோ? என்றாள்;

ஒகாரங்கள் ஐயம்.

(௬௧—௬௨) மைதவழ் . . . . க்கினகளோ:—

(இ - ள்.) மேகந் தவழும் மலையையுடையவனுடைய மணக்கோலங் காணுமற் கையாலே புதைத்தலைப்பெறுகின்ற கண்களுங் கண்களென்று கூறப்படுமோ?

(௬௫) என்னைமன் . . . .

யான் :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி யான் நின்கண்ணாலே மிகவுங் காண்பே னென்றாள்.

(௬௬) நெய்த . . . . மன :—

(இ - ள்.) அதுகேட்ட தோழி நெய்தலிதழ்போலும் மையுண்கண்

ணாகிய நின்கண் மிக
என்கண்ணவதாகவென்றாள் ;

இதுவுந் "தாயத்தி னடையா" †
என்னுஞ் சூத்திரத்தடக்கினும்.

(௨௫)

எனவாங்கு :—

(இ - ள்.) என்று நாஞ்சொன்ன
அக்காலத்தே ;

(௨௬—௩௧) நெறியறி
வினியே :—

(இ - ள்.) நூனெறியாலே
அறிந்த இருவருங்

கூடுதற்கேதுவாகிய முகூர்த்தம்

வேறுபட்டுத் தப்புதலை ஒருகாலத்தும்
அறியாத கணியை முன்னிட்டு,
அழகுமிகுகின்ற
தொகுத்துக்கூறுதலையும்
வகுத்துக்கூறுதலை

* தொல். பொருள் : கககூ. †
தொல். பொருள் : உ௨க,
(பாடம்) 1. பரத்தையுக்.

15

யும் அறியுஞ் சான்றவர் தனக்குச்
சுற்றமாக, மூங்கிலையொக்கும்
நம்முடைய மெத்தென்ற
தோளிற்.பசலையும் ஊரிற் கூறும்
அம்பலும் பொய்யாகிய கன விற்[1]
கூட்டமு மெல்லாஞ்சேர நீங்கும்படி
நீளிதாய் உயர்ந்த மலையினை
யுடையவனும் வந்தான்; நின்னுடைய
பூவினது அழகையுடைய கண்ணும்
பொலிவதாக என்றான்.
:
'கானகனுடன்மகன்' '
எனவாங்கறத் . . . . யராய்' எனத்
தோழி கூறிய விருபாற் குடிப்பொருளைச்
செவிலி கூறி அறத்தொடு
நின்றானெனத் தோழி

கொண்டெடுத்துமொழிந்தவாறு காண்க.

இதனாற் றலைவிக்குச் செல்வமாகிய உவகை பிறந்தது.

தெய்வமஞ்சலென்பது களவிற்கும் உரித்தாகலிற் றங் குலதெய்வமாகிய வரையுறைதெய்வத்திற்குக் குரவையாடுதல் தலைவிக்கும் உரித்தாகலிற் கொண்டுநிலைபாடினாள். இஃது அறத்தொடுநிலை எழுவகையினுள்* ஏத்தலும் எளித்தலும்[2] வந்தது.

இது தரவின்பின் 'அவனுந்தான் ஏனலிதணத்து' என்பது முதலிய

கொச்சகங்கள் வெண்பாவாய்ப், 'புனவேங்கை' முதலியன துள்ளலோசை விராய்த் தளைவகை ஒன்றிக் கொச்சகமாய், ஒழிந்தபாவும் மயங்கிச் சுரிதகம் முடுகிவருதலிற் கலிவெண்பாவுறுப்பின் வேறுபட்ட கொச்சகம். "ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினு - மூவகை யடியு முன்னுத லிலவே"† என்பதனுள் "முன்னுதலில" என்றதனால் நாற்சீரும் ஐஞ்சீரும் அறுசீருமாகிய மூன்றடியானும் வரும் முடுகியலோடு விராய்த் தொடர்ந்து ஒன்றாய்க் கலிக் குறுப்பாய் வரும் ஆசிரியமும் வெண்பாவும் உளவென்றுகொள்க ; என்றலின், 'நெறியறி . . . முந்துறீஇ' என அறுசீரடி முடுகியலுந் 'தகைமிகு . . . ரினமாக' என ஐஞ்சீரடி முடுகியலும் விராய்[3] ஆசிரியச்சுரிதகம் வந்தது. "முச்சீர் முரற்கையு ணிறையவு நிற்கும்"‡ என்பதனுன் 'நின்கண்ணுற் காண்பென்மன் யான்' என முச்சீரடியும் வந்தது. (ரு)

அகவினம் பாடுவாந் தோழி யமர்க்க

ணகைமொழி நல்லவர் நாணு நிலைபோற்
றகைகொண்ட வேனலுட் டாழ்குர லுரீஇ
முகைவளர் சாந்துரன் முத்தார் மருப்பின்
ரு. வகைசா லுலக்கை வயின்வயி னேச்சிப்

* தொல். பொருள் : உ0எ. † தொல். பொருள் : கஎக.
‡ தொல். பொருள் : கஅஉ.
(பாடம்) 1. களவிற். 2. எடுத்தலும். 3. விராய.

குறிஞ்சி - ச]

குறிஞ்சிக்கலி

ககரு

பகையினைய் செய்தான்
பயமலை யேத்தி
யகவினம் பாடுவா நாம் ;

ஆய்நுத லணிகூந்த

லம்பணைத் தடமென்றோட்
டேனாறு கதுப்பினாய்
யானுமொன் றேத்துகு
க0. வேய்நரல் விடரக நீயொன்று

பாடித்தை ;
கொடிச்சியர் கூப்பி
வரைதொழு கைபோ

லெடுத்த நறவின் குலையலங்[1]
காந்தட்
டொடுத்ததேன் சோரத்

தயங்குந்தன் னூற்று
ரிடுக்கண் டவிர்ப்பான் மலை ;

௧௫. கல்லாக் கடுவன் கணமலி
சுற்றத்து
மெல்விரன் மந்தி
குறைகூறுஞ் செம்மற்றே
தொல்லெழி றோய்ந்தார்
தொலையி னவரினு
மல்லற் படுவான் மலை ;

புரிவிரி புதைதுதை

பூத்ததைந்த தாழ்சினைத்
தளிரன்ன வெழின்மேனி
தகைவாட நோய்செய்தா
னருவரை யடுக்கம்
மழித்தொன்று பாடுவாம்;

விண்டோய் வரைப்பந்
தெறிந்த வயாவிடத்[2]
தண்டா முருவி யரமகளி
ராடுபவே
பெண்டிர் நலம்வெளவித்
தண்சாரற் றாதுண்ணும்
வண்டிற் றுறப்பான் மலை;

ஓடுங்கா வெழில்வேழம் வீழ்பிடிக் குற்ற
கடுஞ்சூல் வயாவிற் கமர்ந்து நெடுஞ்சினைத்
தீங்கட் கரும்பின்
கழைவாங்கு முற்றூரி
னீங்கல மென்பான் மலை ;

௩0.

எனநாம்,

தன்மலை பாட நயவந்து
கேட்டருளி
மெய்ம்மலி யுவகையன்
புகுதந்தான் புணர்ந்தரா

மென்முலை யாகங்
கவின்பெறச்

செம்மலை யாகிய மலைகிழ
வோனே.

(பாடம்) 1. குலையலங்கு. 2. வியர்விடத்.

கக்உ

கலித்தொகை

[கலி - ௪௨ இது தோழியுந்

தலைமகளுந் தலைமகனது மலையை

வாழ்த்திப் பாடுகின்ற

வள்ளைப்பாட்டில், தோழி

இயற்படமொழியத் தலைமகள்

இயற்பழித்தமை

தலைமகன் சிறைப்புறமாகக் கேட்டு வரையவருகின்றமை, தோழி தலைமகட்கு உரைத்தது.

(௧—எ) அகவினம் . . . .

நாம் :—

(இ - ள்.) தோழீ! நங் கருத்திற்கு வேண்டியவாறெல்லாம் அழைத்தேமாய்ப் பாடக்கடவேமெனத் தோழி கூற, அதுகேட்ட தலைவி அழகுகொண்ட தினைப்புனத்தில் முகத்திற்குப் பொருந்தின கண்ணினையும் மகிழ்ச்சியைத் தரும் மொழியினையுமுடைய நல்ல மகளிர், நாணி இறைஞ்சும் கிலைபோல முற்றித் தாழ்ந்த கதிரையுருவி அரும்பு வளர்ந்த சந்தனமரத்தாற் செய்த உரலிலேபெய்து, முத்துநிறைந்த யானைக்கொம்பால் வகுத்த நிறைந்த உலக்கையை என்னிடத்தும் நின்னிடத்தும் உயர்த்திக் குறுநின்று* மருந்தில்லாத நோயைச் செய்தவனுடைய பயன்றருகின்ற மலையை வாழ்த்தி நாம் நங் கருத்திற்கு வேண்டியவாறெல்லாம் அழைத்துப் பாடக்கடவேமென்று உடம்பட்டாள்;

அகவுதல் அகவல்போல நின்றது. தோழி கூற்றினைத் தலைவி விசேடித்துக் கூறினள்; இரட்டிப்பன்று.

மணம் நாறுகின்ற சந்தனத்தாற் செய்த உரலென்றதனாற் பயன் வரைந்துகோடற்பொருட்டுத் தலைவி இயற்பழித்ததாகவும், புலானாற்றத்தையும் முத்தையுமுடைய மருப்பாற் செய்த உலக்கையென்றதனாற் பயன் வரைந்துகோடற்பயனின்றிப் புகழ்ச்சி மாத்திரையேயாகத் தோழி இயற்பட மொழிந்ததாகவும், இறைச்சியிடத்தே பொருள் பிறந்தவாறு காண்க. இஃது "இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே - திறத்தியன் மருங்கிற் றெரியு மோர்க்கே" † என்னும் பொருளியற் சூத்திரத்தானுணர்க. புலால் நாறும் மருப்பென்றதனால் வரைந்துகோடல் பயவாமையின் இறைச்சியாயிற்று. நோய்செய்தான் மலையாயிருக்கவுந் தினைவிளைத்துப் பயன் தருகின்ற அதிசயத்தை எத்தியெனவே தலைவி இயற்பழித்தாளாயிற்று.

(அ—௯0) ஆய்நுதல் . . . . . பாடித்தை :—

(இ - ள்.) அழகிய நுதலினையும், அழகுபெறுத்துகின்ற குழலினையும், அழகிய மூங்கில்போலும் பெருமையினையுடைய மெல்லிய தோளினையுமுடைய பூமணம் நாறுங் கதுப்பினையுடையாய்! மூங்கில் ஒலிக்கின்ற முழைஞ்சையுடைய மலையை முன்புபோலன்றி நீ இயற்பட ஒன்று பாடு, பின்னர் யானும் இயற்பட ஒன்று பாடுவேனெனத் தோழி கூறினள்;

* சிலப். உ௯. † தொல். பொருள். உ௯0.

'பாடித்தை ':

முன்னிலைவினைத்திரிசொல். 'எத்தரு'

: தனித்தன்மை முற்று.

தலைவி இயற்படப் பாடாமையின் மேற்றோழி பாடுகின்றாள்.

(கக—கச) கொடிச்சியர் மலை :—

(இ - ள்.) தன்னைச் சேர்ந்தாருடைய வருத்தத்தைப் போக்குவ னுடைய மலை, கையிரண்டையுங் குவித்துக்

கொடிச்சியர் தங் குறைநீ. முருகன் உறையும் மலையைத்
தொழுகின்றகைகள்போல, உயர்ந்த, நறவினை யுடைய கொத்துக்கள் அசையுங் காந்தளிடத்து வைத்த தேன் ஒழுகும்படி யாக, அக்காந்தள் அசையாநிற்கும்;

மலை காந்தள் அசையுமெனஇடத்து நிகழ் பொருளின்றொழில் இடத்திற்கு ஏறிநின்றது.

இதனாற் றெய்வத்தைத் தொழுங் கருத்தில்லாத காந்தளுந் தெய்வத் தைத் தொழுவதுபோல

நில்லாநின்றது; நீயும் வரைந்துகோடற்குத் தெய்வமாகிய முருகனைத் தொழுவாயாகவென இயற்பட மொழிந்தாள் காந்தளிற் றேன் பயன்படாமற் சொரிகின்றாற்போல, நீயுந் தெய்வத்தைத் தொழாவிடின், நின் நலனும் பயன்படாமற் கழியுமென இஃது உள்ளுறை யுவமமாயிற்று.

(கரு—கஅ) கல்லாக் கலை:—

(இ - ள்.) தான்கூடின மகளிருடைய இயற்கைநலங் கெடின்

அ

ரினும் வருத்தமுறுகின்றவன்னது மலே,
கடுவன் களவொழுக்கம் ஒழிந்து
வரைந்துகொள்ளும் நிலைமையைக்
கற்றுத் திரட்சிமிக்க சுற்றத்திடத்தே,
சென்று மகட்பேசுவார்போல மெல்லிய
விரலையுடைய மந்தியை எனக்கு,
தரவேண்டுமென்று தன்குறையைச்
சொல்லுந் தலைமையினையுடைத்து;

நங்தெய்வவழிபாட்டாற்
களவொழுக்கம் ஒழிந்து நம்மை
வரைந்து கொள்ளத் துணிந்து
நஞ்சுற்றத்தாரிடத்தே சென்று தன்
குறைகூறுமென்று
உள்ளுறையுவமங்கொள்க.

(கக—உக) புரிவிரி

பாடுவாம் :—

(இ - ள்.) முறுக்குவிரிந்த கொம்பு மறைந்த நெருங்கின பூத்தாழ்ந்,
சினையிற் றதைந்த தளிரையொத்த அழகையுடைய மேனி அழகுகெடும்பட

நமக்கு நோயைச் செய்தவனுடைய
ஏறுதற்கரிய[1] உச்சிமலைகளையுடை
பக்கமலைகளை நாம் இனிப் பாடுங்கால்
இயற்படமொழிதலை அழித்து இய,
பழித்தலாகிய ஒன்றைப் பாடுவோம்;
பூத்தாழ்ந்த தளிரெனவே
சுணங்கும் மாமைத்திறமுங் கூறிற்றாம்.

(பாடம்) 1. பெறுதற்கரிய.

கக அ

கலித்தொகை

[கலி - சுO

(௨௨—௨௫) விண்டோய்
மலை :—

(இ - ள்.) பெண்டிருடைய நலத்தைை நுகர்ந்து, தண்ணிய மலைச்சாரலிடத்துத் தாதை உண்ணும் வண்டு அப்பூவைத் துறக்குமாறுபோல, அவரைத் துறக்கின்றவன் மலையாயிருந்தேயும், விண்ணைத் தீண்டும் மலையிடத்தே தெய்வமகளிர் பந்தடித்த இளைப்புப் போகத் தண்ணிய தாழ்ந்த அருவியிலே ஆடுவர் ;

இது தகாத தொன்றெனத்

தலைவி இயற்பழித்தாள்.

(உசு—உக) ஓடுங்கா . . . ;
மலை :—

(இ - ள்.) தன்னைச் சேர்ந்தாரிடத்துநின்றும் நீங்கேமென்றிருப்பா னுடைய மலை, மடிந்திராத அழகையுடைய யானை தான்விரும்பின பிடிக்கு உண்டான முற்பட்ட சூலான் உண்டான வயாநோய்க்கு மனம்பொருந்தி இனிய கண்ணிடத்தே தோன்றின நெடிய கிளைகளையுடைய கருப்பங்கோலை முறியாநிற்கும் ;

இது தோழி இயற்படமொழிந்தது. நம்மை

முயன்று வரைந்து கொண்டு நம் வயாவிற்குத் தன்மனம் பொருந்தி நாம் விரும்புவனவற்றைத் தந்து மனக்குறைதீர்ப்பானென உள்ளுறையுவமங் கொள்க.

(௬௦—௬௪) எனநாம் . . . வோனே :—

(இ - ள்.) என்று நாங் தன்னுடைய மலையைப் பாட, மலைகிழவோன்

விருப்பம்வந்து கேட்டு மெய்நிறைந்த உவகையனாய் அருளிக் கனவிற் புணர்ச்சியாதலின் முயங்கியமையாத மெல்லிய முலையினையுடைய ஆகம் அழகுபெறும்படி நீ தலைமையை யுடையையாகவேண்டி வரைவொடு புகுந்தான்.

நமக்குப் பேரின்பத்தைத் தருகின்ற இக்களவொழுக்கம் இவட்குத் துன்பத்தைச் செய்தலின் இங்ஙனம் இயற்பழித்தானென உட்கொண்டு வரைவொடு புகுந்தானுதலிற் றலைவி.இயற்ப்பழித்தலே வரைவிற்குக் காரண மாயிற்று.

"உயர்மொழிக் குரிய வுறழுங் கிளவி, யையக்கிளவி யாடூஉவிற் குரித்தே"* என்பதனாற் றோழி உறழ்ந்துகூறினாள்.

இதனாற் றலைவிக்குச் செல்வமாகிய உவகை பிறந்தது.

இது தரவுங் கொச்சகங்களுங் கொச்சகவெண்பாக்களுந் தனிச் சொல்லுஞ் சுரிதகமும் பெற்று வந்த கொச்சகக்கலி. (௪)

---

* தொல், பொருள் : உகூஅ.

குறிஞ்சி - ரு]

குறிஞ்சிக்கலி

க்க்கூ

, சக.

பாடுகம் வாவாழி தோழி

வயக்களிற் றுக்

கோடுலக்கை யாகநற் சேம்பி

னிலைசுளகா

வாடுகழை நெல்லை

யறையுர லுட் பெய்திருவாம்

பாடுகம் வாவாழி தோழிநற்

றோழிபா டுற்று ;

ரு. இடியுமிழ் பிரங்கிய

விரவுபெய[1] னடுநாட்

கொடிவிடு பிருளிய

மின்னுச்செய் விளக்கத் துப்

பிடியொடு மேயுஞ் செய்புன்

யானை

யடியொதுங் கியக்கங் கேட்ட கானவ
னெடுவரை யாசினிப் பணவை யேறிக்

கடுவிசைக் கவணையிற் கல்கை விடுதலி
னிறுவரை வேங்கையி னொள்வீ சிதறி
யாசினி மென்பழ மளிந்தவை[2] யுதிராத்
தேன்செ யிறாஅ றுளைபடப் போகி
நறுவடி மாவின் பைந்துண ருழக்கிக்
குலையுடை வாழைக் கொழுமடல் கிழியாப்
பலவின் பழத்துட் டங்கு[3] மலைகெழு வெற்பனைப்
பாடுகம் வாவாழி தோழிநற் றோழிபா டற்று ;

இலங்கு மருவித் திலங்கு மருவித்தே
வானி னிலங்கு மருவித்தே தானுற்ற

உ0. சூள்பேணுன்

பொய்த்தான் மலே ;

பொய்த்தற் குரியனே

பொய்த்தற் குரியனே

வஞ்சலோம் பென்றுரைப் பொய்த்தற் குரியனே
குன்றக னன்னுடன் வாய்மையிற் பொய்தோன்றிற்
றிங்களுட் டீத்தோன்றி யற்று ;

உரு. இளமழை யாடு மிளமழை
யாடு
மிளமழை வைகலு மாடுமென்
முன்கை
வளைநெகிழ
வாராதோன் குன்று ;

வாரா தமைவாரோ வாரா

தமைவாரோ

வாரா தமைகுவா னல்லன்

டீலநாட

(பாடம்) 1. விரவுப்பெய. 2. மழிர்தவை. 3. பழத்திற்றங்கு.

கஉ0

கலித்தொகை

[கலி - ௩௪

௩0. வீரத்து
வின்னவை தோன்றி
விழற்கயத்து

ணீருட் குவளைவெங் தற்று;

மணிபோலத் தோன்று
மணிபோலத் தோன்று
மண்ணு மணிபோலத்
தோன்றுமென் மேனியைத்
துன்னன் றுறந்தான் மலை;

௫௫. துறக்குவ னல்லன்
றுறக்குவ னல்லன்
றொடர்வரை வெற்பன்
றுறக்குவ னல்லன்
றொடர்பு வினையவை
தோன்றின் விசும்பிற்

சுடரு விருமீடான்றி யற்று;

எனவாங்கு,

௪0. நன்று நின்றுற் றேழிநம்
வள்ளையு
ளொன்றிநாம் பாட
மறைநின் று கேட்டருளி
மென்றோட் கிழவனும் வந்தன
னுந்தையு
மன்றல் வேங்கைக் கீழிருந்து
மணநயந் தனனம் மலைகிழ
வோற்கே;

இஃது இருவரும் இவ்வகையாற் பாடிய

வள்ளப்பாட்டுத் தலைவன் சிறைப்புற
மாகக் கேட்டு, வரைவுவேண்டி
விடத், தந்தையும் வரைவுடம்பட்டமை
தோழி தலைவிக்கு உரைத்தது.

(க—ச) பாடுகம் . . . . பாடுற்று
:—

(இ - ள்.) தோழீ! வாழ்வாயாக! நாம் பாடுவேமாக வா; எங்ஙனம் பாடுவேமென்னில், வாழ்வாயாக தோழி! இருவரும் அசைகின்ற மூங்கிலினது நெல்லைப் பாறையாகிய உரலிலே பெய்து, வலியினையுடைய யானைக் கொம்பு உலக்கையாகக் குற்று,

நல்ல சேம்பினது இலை சுளகாகப் புடைத் துப் பாடுவேமாக;

'வா'வென முன்கூறியதனைப் பின்னர் விசேடித்துக் கூறினாள். இதில், 'நற்றோழி'யென நின்ற சொல்லை 'மலைகெழு வெற்பனைப் பாடுகம் வா'வென மேல்வருகின்ற உறுப்போடுங் கூட்டுக.

செய்தெனெச்சங்கள்

எதிர்காலத்துப்பிறந்த

செயவெனெச்சங்களாம்.

உயர்ந்த மூங்கிலின் நெல்லுத் தானே உதிர்ந்ததனை எடுத்துக்கொண்டு உரலிற்பெய்தென்றதனால் உயர்ந்த தலைவனைத் தெய்வந் தானே கொண்டு வருதலின் அவனை நம்வயத்தனாக்கினேமென்றும், வள்ளைப்பாட்டிற்கு ஏதுவாகிய கோடு உலக்கையாக என்றதனாற் கோடு நெல்லைப் பயன்படுத் தினாற்போல நம் வரைவுகடாவலால் இத்தலைவனை இல்லறப்பயனை எய்து

குறிஞ்சி - ரு]

குறிஞ்சிக்கலி

கஉக விக்கின்றேமென்றுஞ், சேம்பிலே புடைத்தற் றொழிலே முற்றமுடித்து அரிசியை ஆக்காததன்மைபோல இக்களவொழுக்கத்தால் அவன் வரைந்து கோடலை முற்றமுடியாதிருக்கின்றேமென்றும் இறைச்சி[1] பொருட்புறத் தாய் நின்றவாறு காண்க.

(கு—கஎ) இடியுமிழ்

டூற்று :—

(இ - ள்) நற்றோழீ! இடிபடுதலுற்று நெருப்பையுமிழ்ந்து ஒலிக்கும் எங்குங் கலந்த பெயலாலே இருண்ட நடுநாளிலே ஒழுங்குவிட்டு மின்னுண் டாக்கின ஒளியிலே

பிடியுடனே வந்து புன்செய்யிலே மேயும் யானைகளி னுடைய அடிகள் நடக்கின்ற கடையின் ஓசையைக் கேட்ட கானவன் உயர்ந்த மலையில் ஆசினிப்பலாவின்மேல் இட்ட பரணிலே ஏறிக் கடிய விசையையுடைய கவணையிற் கல்லை எறிகையினாலே அக்கல்லு முறிந்த வரையிடத்துநின்ற வேங்கையினது ஒள்ளிய பூக்களைச் சிதறி, ஆசினிப்பலாவினது மெத்தென்ற பழம் நெகிழ்ந்தவற்றை உதிர்த்து, தேனினம் வைத்த இறாலைத் துளையுண்டாம்படி உருவி, நறிய வடுவையுடைய மாவினது

பசிய கொத்துக்களை உழக்கிக்,

குலையுடைத்தாகிய வாழையினுடைய கொழுவிய மடலைக் கிழித்துப், பலாவினது பழத்துக்குள்ளே தங்குஞ் சிறிய மலைகள் பொருந்தின பெரிய மலையினையுடையவனைப் * பாடுவேமாக வா ;

'பலவின் பழத்துட் . . . . . . தோழி' என்றது உறுபெயர் கேட்டலென்னும் மெய்ப்பாடு முன்புபிறந்தது.

இயக்கங்கேட்ட கானவன் கல் கைவிடுதலைத், தலைவன் மின் வழி காட்ட வந்து தலைவியோடு புணர்ந்த நிலைமை, அலர் கூறக்கேட்ட செவிலி தன்மனையிடத்தே வெளியாக இருந்து கடுஞ்சொற் சொல்லி இற்செறித்த

லாகவும், அக்கல்லு வேங்கையினது செவ்விப்பூவைச் சிதறினதன்மை, தலைவன் இன்பம் நுகர்கின்ற மனவெழுச்சியைக் கெடுத்ததாகவும், ஆசினிப் பழத்தைப் பயன்படாமல் உதிர்த்த தன்மை, அவன் நுகர்கின்ற இன்பத்தைக் கெடுத்ததாகவும், அஃது இருவிற் றேனைப் பயன்படாமை உகுத்த தன்மை, தலைவி நலந் தலைவற்குப் பயன்படாமற் கெட்டதாகவும், அது மரவின் குலையைச் சிதறுவித்த தன்மை, ஆயவெள்ளந் தலைவியோடு கூடி விளையாடாமல் நீங்கினதாகவும், அது வாழைமடலைக் கிழித்த தன்மை, தோழியை வருத்தினதாகவும், அது பலவின்பழத்துட் டங்கினதன்மை, அக்கடுஞ்சொற் றலைவி நெஞ்சத்தே தங்கினதாகவும் உள்ளுறையுவமங் கொள்க.

(கஅ—உ0) இலங்கு . . . . . மலை :—

(இ - ள்.) நற்றோழீ! நீ வாழ்வாயாக; தோழீ! தான் சூளுற்ற சூளுறவினைப் பாதுகாவானாய்ப் பொய்த்தவனுடைய மலையாயிருந்தும் வீழ்த

---

* அகம், உகூஉ ; அ - கரு.

(பாடம்) 1. இறைச்சிப்.

ஊற்று விளங்கும் அருவியையுடைத்து, விளங்கும் அருவியையுடைத்து, மழைபெய்தலால் விளங்கும் அருவியையுடைத்து ;

இஃது என்ன வியப்போவெனப் பொருட்புறத்தே இறைச்சி தோன்றிற்று.

இஃது "இறைச்சி தானே பொருட்புறத் ததுவே" * என்பதனாற் கொள்க. இருகால் 'அருவித்' தென்றது அருவிப்பன்மை

நோக்கி.

இது மெய்யைப் பொய்யாகக் கோடலிற் பொய்யாக் கோடலென்னும் மெய்ப்பாடு. அவைதாம் மழைபெய்து வந்த பின்னர் விசேடித்தாள். அதுகேட்ட தோழி, அருவியென்று அதனைப்

(உக—உச) பொய்த்தற் . . . . யற்று :—

(இ - ள்.) தன் சூளுறவினைப் பொய்யாக்குதற்கு உரியனோ ? பொய் யாக்குதற்கு உரியனோ? நீ அஞ்சுதலைப் பரிகரியென்று தான் சொல்லப் பட்ட † மகளிரைப்

பாதுகாவாது விடுதற்கு உரியனோ? மலை யகன்ற நன்னாட்டையுடையவன் கூறிய மெய்யிலே பொய்தோன்றுமாயின், திங்களிடத்தே தீத்தோன்றின தன்மைத்து ; அங்ஙனங் கூறாதேகொள்;

தேற்றுதற்கு இருகாற் கூறிப் பின்விசேடித்துக் கூறினாள்.

(உரு—உஎ) இளமழை . . . . . துன்று :—

(இ - ள்.) என் முன்கையில் வளை கழலும்படியாக என்னிடத்து வாராதவன் மலையாயிருந்தும் இளமழை

உலாவாநிற்கும்; இளமழை உலாவா நிற்கும்; அது தான் ஒரு காலத்து உலாவுதலன்றி நாடோறும் உலாவா நிற்கும்;

கருத்தங்கி வந்து சூன்முதிர்தற்கு மலையில் பெய்கின்ற[1] மழையென்பது தோன்ற 'இளமழை' யென்றாள்.

இஃதென்ன வியப்போவெனப் பொருட்புறத்தே இறைச்சி தோன்றிற்று. இது தலைவி கூறியது. மேல், தோழி கூறுகின்றாள்;

(உஅ-ஙக) வாரா . . . தற்று:—

(இ - ள்.) நின்னிடத்து வாராதே ஆற்றியிருப்பானோ? வாராதே ஆற்றியிருப்பானோ? இருக்குமதுவுமன்றி அம்மலைநாடனுடைய அருளிடத்தே இத்தன்மையவாகிய கொடியவை தோன்றுமாயின் நிழலையுடைய குளத்துள் நீரினின்ற குவளை வெந்த தன்மைத்து; நீ அங்ஙனங்[2] கூறாதே கொள்;

* தொல். பொருள்: உ௨௬.
(பாடம்) 1. மேய்கின்ற.

† கலி. ௨௬: எ - அ.
2. இங்஡னங்.

குறிஞ்சி - ௫]

குறிஞ்சிக்கலி

௧௨௫

'நீருட் குவளை வெந்தற்' றென்றது மருட்கையுவமம். கிழற்கயத்துள் வேவன இன்மையின் அற்புதமாயிற்று. இஃது உலக நடையிறந்ததோர் உவமை கூறி அதனோடு தலைவன் ஈரத்தினை ஒப்பித்தலிற் பெருமைபற்றி வந்தது. இனி, அதுகேட்ட தலைவி கூறுகின்றாள் :

(௯௨–௯௪) மணிபோலத் மலை :—

(இ - ள்.) என்மேனியைச் சோராதே துறந்தவனுடைய மலையாயிருந் தும் நீலமணிபோலத் தோன்றும்; நீலமணிபோலத் தோன்றும்; கழுவாத நீலமணிபோலத் தோன்றும் ;

இஃதென்ன வியப்போவெனப் பொருட்புறத்தே இறைச்சி தோன் றிற்று. கொண்ட வெப்பத்தான் உலராது மழைபெய்து

நிறம் பெறுதலின் மணிபோலத் தோன்றுமென்றான்.

(நரு-நஅ) துறக்குவ யற்று :—

(இ - ள்.) நம்மைக் கைவிடுவான் அல்லன்; கைவிடுவான் அல்லன்; ஒன்றோடொன்று தொடர்ந்த சிறு மலைகளையுடைய வெற்பையுடையான் கைவிடுவான் அல்லன்; அவனோடு கொண்ட உறவின்கண்ணே இத்தன்மையவாகிய கொடியவை தோன்றுமாயின் ஆகாயத்திற் றிரியும் ஞாயிற்றுள்ளே இருள்தோன்றிய தன்மைத்து; நீ அங்ஙனங் கூறாதே கொள்ளெனத் தோழி கூறினாள்;

இது மருட்கையுவமம்.

(நகூ) எனவாங்கு :—

அசை.

(சO—சச) நன்ற

வோற்கே :—

(இ - ள்.) தோழி! நம் வள்ளைப்பாட்டிடத்தே நாம் பொருந்திப்பாட நம்மென்றேட்கு உரிமையையுடையவனும் மறைந்து நின்று கேட்டு அருள் பண்ணி வரைவுவேண்டி வந்தனன்; உன்னுடைய தந்தை மணத்தை யுடைய வேங்கைக்கீழே இருந்து அம்மலைகிழவோனுக்கு மணஞ்செய்தலை விரும்பிக் கூறினன்; ஆதலால் நமக்கு நன்மை யுண்டாகாநின்றது; இனி நீ வருந்தாதேகொள்.

இதனற் றலைவிக்குச் செல்வமாகிய உவகை பிறந்தது. இதன் இடைப் பாட்டுக்கள் "வரைதல் வேண்டித் தோழி செப்பிய - புரைதீர் கிளவி புல்லிய வெதிரும்" *என்பதனன் இயற்பழிக்க இயற்பட மொழிந்தனள்.

---

* தொல். பொருள் ; கOஎ.

இது

தரவும் ஐஞ்சீரடிவந்த கொச்சகமுங்
கொச்சக வெண்பாக்களுந்
தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்று
வந்து கலிவெண்பாவின் வேறுபட்ட
கொச்சகக்கலி.

(ரு)

௬௨.

மறங்கொ ளிரும்புலித்
தொன்முரண் [1] டொலைத்த

முறஞ்செவி வாரண முன்குள
கருந்திக்
கறங்கு[2] வெள் ளருவி
யோலிற்[3] றுஞ்சும்
பிறங்கிருஞ் சோலை நன்மலை
நாடன் ரு.
மறந்தான் மறக்கினி யெல்லா
நமக்குச்
சிறந்தன நாநற் கறிந்தன மாயி
னவன்றிறங்
கொல்யானைக் கோட்டால்
வெதிர்நெற் குறுவாநாம்
வள்ளை யகவுவம் வா,
இருளைநாம்
வள்ளை யகவுவம் வா ;

கО. காணிய வாவாழி தோழி
வரைத்தாழ்பு
வாணிறங் கொண்ட
வருவித்தே நம்மருளா
நாணிலி நாட்டு மலை ;

ஆர்வுற்றார் நெஞ்ச மழிய
விடுவாளே
வோர்வுற் றொருதிற
மொல்காத நேர்கோ கரு. லறம்புரி
நெஞ்சத் தவன் ;

தண்ணறுங் கோங்க மலர்ந்த

வரையெல்லாம்
பொன்னணி யானைபோற்
றோன்றுமே நம்மருளாக்
கொன்றுள னாட்டு மலை;

கூருநோ யெய்ப்ப விடுவானோ
தன்மலை

உ௦. நீரினுஞ் சாய லுடைய னயந்தோர்க்குத்
தேரீயும் வண்கை யவன்;

வரைமிசை மேற்றொடுத்த
நெய்க்க ணிறாஅல்
மழைநுழை திங்கள்போற் றோன்று மிழைநெகிழ
வெவ்வ முறீஇயினான் குன்று;

(பாடம்) 1. தொல்முரண். 2.
கறங்கும். 3. யொலியிற்.

குறிஞ்சிக்கலி

கஉ௫

உ௫. எஞ்சா தெல்லா கொடுமை
நுவலாதி
யஞ்சுவ தஞ்சா வறனிலி
யல்லனென்
னெஞ்சம் பிணிக்கொண்
டவன் ;
என் றியாம் பாட

மறைநின்று கேட்டனன்
றாழிருங் கூந்தலென்
றோழியைக் கைகவியாச்
௩௦. சாயலின் மார்பன் சிறுபுறஞ்
சார்தர
ஞாயிற்று முன்ன
ரிருள்போல மாய்ந்ததென்
றுயிழை மேனிப் பசப்பு.

இது முன்பு பெற்றவழி மலிந்ததவனைப் பின்பு பிரிந்தவழிக் கலங்கிக் கூறியது. என்னை? தலைவன் அருமைசெய் தயர்த்தவழித் தோழி தலைவியை ஆற்றுவித்தற் பொருட்டுத் தலைவனை இயற்பழிப்பத் தலைவி இயற்படமொழிந்ததனைச் சிறைப்புறமாகக் கேட்டுத் தலைவன் முன்னொருகால் வந்து சிறு

புறஞ் சாரத் தான் ஆற்றினமை குறித்துப் பின்னொருகால் அவ்வாறு பாட அவன் சிறுபுறஞ் சாராமையிற் கலங்கி நெஞ்சோடு கூறியதாகலின்.

(க—கூ) மறங்கோ . . . . வா

:—

(இ - ள்.) மறத்தைத் தன்னிடத்தே கொண்ட பெரிதாகிய புலி யினது பழைய மாறுபாட்டைக் கெடுத்த, முறம்போலுஞ் செவியையுடைய யானை, தனக்கு முன் நின்ற குளகைத் தின்று ஒலிக்கின்ற வெள்ளிய அருவி நீரைப் பருகி, அஃது ஒலுறுத்துதலாற் றுயில்கொள்ளும் பெருக்கின்ற கரிய சோலையினையுடைய நல்ல மலைநாட்டையுடையவன் நாம் வருந்த நம்மை மறந்தான், இனி அவன் மறப்பானாக ; இகுளையே! ஆராய்ந்து பார்க்கின் நாம் நமக்கு அவன் சிறந்தபடியை மீளவும் அறிந்தேம்; இனிக் கொன்ற யானையின் கொம்பாலே மூங்கினெல்லைக் குறுதற்கு * நாம் அவன் செய்த கொடுமையின் கூற்றை வள்ளைப்பாட்டாகப் பாடுவேமாக வா வெனத் தோழி இயற்பழிக்க, அதுகேட்ட தலைவி தான் இயற்பட மொழிவாளாகக் கருதி ஏடி! நீ கூறியவாறன்றி அவன் திறத்தை நாம் வள்ளைப்பாட்டாகப் பாடுவே மாக வா வென்றாள்;

'மறக்க'[1] : வியங்கோள். 'மறந்தான் மறக்க'வென்றது அருளை செய்தயர்த்தலை. 'இகுளை,' 'ஆயின்' என்பனவற்றை முன்னேமாறிக் கூட்டுக. 'எல்லா' வென்பதனைப் பின்னே கூட்டுக.

"முறைப்பெயர் மருங்கிற் கெழுதகைப் பொதுச்சொ -னிலைக்குரி மரபி னிருவீற்று முரித்தே" † என்பதனான் 'எல்லா'வென்றாள் 'குறுவாம்,' : வினையெச்சமுற்று.

---

* கலி. ௪௧ : ௧௯.

† தொல். பொருள்: ௨௨௦

(பாடம்) 1. மறக்கு.

'நாட'னென்றதனுல் நாமும் அயலார் கூறும் பழைய அலரைக் கெடுத்துத் தன் மனத்து உளவாகிய நுகரும்பொருள்களை நுகர்ந்து தானுஞ் சுற்றமும் புகழ்ந்து கூறத் தன் இல்லின்கண் நாம் இருக்கும் நிலைமையை நிகழ்த்தாது நாம் வருந்த நம்மை மறந்தானென்று உள்ளுறையுவமங்கொள்க.

"இழவோட் குவம மீரிடத் தரித்தே"* என்னும் உவமவியற் சூத்திரத்துச் சிறுபான்மை குறிஞ்சி முதலியவற்றிற்கும் உவமப்போலி கொள்க என்றலிற் குறிஞ்சியில் உவமப்போலி கொண்டார். "தோழியுஞ் செவிலியும் பொருந்துவழி நோக்கிக் - கூறுதற் குரியர் கொள்வழி யான"† என்பதனாற் றேழி உவமப்போலி[1]

கூறினள். இது பயவுவமப் போலி. இந்நிலத்து முன் உள்ளுறை கூறியவற்றிற்கும் பின்னர் உள்ளுறை கூறுகின்றவற்றிற்கும் இதுவே விதியாகக் கொள்க.

(கO—கஉ) காணிய . . . . .

மலை :—

(இ - ள்.) வாழ்வாயாக தோழி ! நம்மை அருளாத கொடுமைக்கு நாணியிருக்கின்றவனுடைய காட்டின் மலையாயிருந்தும் பக்கமலையிலே

தாழ்ந்து ஒளியையுடைய நிறத்தைக்கொண்ட அருவியையுடைத்தாயிரா நின்றது; இதற்குக் காரணத்தை நம் மனத்தான் ஆராய்தற்கு வா! வெனத் தோழி இயற்பழித்தாள்;

(கரு—கரு) ஆர்வுற்றார் . . . . தவன்:—

(இ - ள்.) ஒரு கூற்றிற் சாயாத நாவிற்குங்[2], துலாக்கோல்போல ‡ ஓர்தலுற்று அறத்தையே விரும்பின நெஞ்சத்தையுடையவன் தன்னான் நகரப்பட்டார் நெஞ்சத்தை அழியும்படி விடுவனோ? விடான்காண்! எனத் தலைவி இயற்படமொழிந்தாள்.

(கரு—கஅ) தண்ணறுங் . . . . மலை:—

(இ - ள்.) நம்மை அருளி இல்லறப்பயனை ஆளாமற் பயனின்மையை ஆளுகின்றவன் நாட்டு மலையாயிருந்துந் தண்ணிய நறிய கோங்கு[3] பூத்த பக்கமலையெல்லாம் பொன்னாற் செய்த பல ஆரம் அணிந்த யானைகள்போலச் சிறந்து தோன்றும்; இதற்குக் காரணமென்? எனத் தோழி இயற்பழித்தாள்;

'அருளா'வென்பது செய்யாவென்னு மெச்சம்.

* தொல். பொருள் : ௩௦௪.

† தொல். பொருள்; ௩௦௬.

‡ குறள், ௧௧௮

(பாடம்) 1. உவமப்பொலிவு, 2.

நேர்நிற்குந், 3, கோங்கம்,

குறிஞ்சி - ௬]

குறிஞ்சிக்கலி
௧உ௭

(௧௧-௨௧) கூறுநோய்

யவன்:—

(இ - ள்.) தன்கொடையை விரும்பி வந்தோர்க்குத் தேரைக்

கொடுக் கும் வளவிய கையையுடையவன் நம்மாட்டுத் தன்மலையின் நீரினும் மென் மையையுடையவனாதலால்[1] வரையாமல் நமக்கு மிகுகின்ற நோய் நம்மைப் பொருந்த விடுவனோ? விடான்; வரைவனெனத் தலைவி இயற்படமொழிந் தாள்;

(உஉ—உச)

வரைமிசை . . . .
துன்று:—

(இ - ள்.) பூணெகிழ்ந்து விழும்படி நம்மை வருத்தமுறுத்தினோன் குன்றாயிருந்தும், பக்கமலைகளின்மேலே வைத்த தேனை

இடத்தேயுடைய

இருவல்* மழையிலே நுழைகின்ற மதியைப்போலத் தோன்றாநிற்கும்; இதற்குக் காரணம் என்? எனத் தோழி இயற்பழித்தாள்; இது தேன் பயன்படுதல் கூறினள். இதன்கட் டோழி இயற்பழித்தன எல்லாம் பொருட்புறத்திறைச்சி தோன்றியவாறு காண்க.

(உரு-உ௭) எஞ்சா . . . . டவன்:—

(இ - ள்.) இங்ஙனந் தோழி இயற்பழித்ததற்குப் பொருளாய், ஏடீ!

ஒழியாமல் அவன் கொடுமையைக் கூறுதேகொள், என் நெஞ்சைத்[2] தன் அன்பாற் பிணித்தல்கொண்டவன் பிறர் அஞ்சுங் கொடுந்தொழிற்கு அஞ் சாத அறன் இல்லாதவன்† அல்லனெனத் தலைவி இயற்படமொழிந்தாள்;

· (உஅ—கூஉ) என்றியாம் . . . . பசப்பு:—

(இ - ள்.) என்று தன் நெஞ்சுடனே முன் மொழிந்து பின்பு[3] யாங் கள் பாட மறைந்துநின்று கேட்டனளுய், மென்மையால் இனிய

மார்பினை யுடையான் தாழ்ந்த கரிய கூந்தலையுடைய என்றோழியை எனக்கு அவள்

வரவுகூறுமற் கையைக் கவித்து, என்[4] சிறியபுறத்தைச் சேர என்னுடைய ஆராய்ந்த இழையினையுடைய மேனியிற் பசப்பு ஞாயிற்றுமுன்னர் நின்ற இருள்போலக் கெட்டதென்று யாம் அவ்வாறு பாடவும், அவன் சிறுபுறஞ் சாராமையின் நம் மேனியிற் பசப்பு மாயாமல் நின்றதெனப் பிரிந்தவழிக்

கலங்கினாள்.

இது "சொல்லொடுங் குறிப்பொடு முடிவுகொ ளியற்கை புல்லிய கிளவி யெச்ச மாகும்"‡ என்பதனாற் கூற்றெச்சம்.

இதனால் உயிர்ப்பென்னும் மெய்ப்பாடு தலைவிக்குத் தோன்றிற்று.

---

* கலி. ௬௯: ௭-௧௦. † குறள்:

(பாடம்) 1. மென்மையுடையளுதலால். 2. நெஞ்சத்தைத். 3. என்று மூன்
மொழிந்து தன் நெஞ்சுடனே் மூன்பு. 4. இவன்.

கஉஅ
கலித்தொகை
[கலி - சா.

இஃது ஐஞ்சீரடியுஞ்
சொற்சீரடியும் வந்த தரவுவந்து

ஏனைய வெண் பாவாய் வந்த
கலிவெண்பா.

(ச)

சரு.

வேங்கை தொலைத்த
வெறிபொறி வாரணத்
தேந்து மருப்பி னினவண் டிமிர்பூதுஞ்
சாந்த மரத்தி னியன்ற வுலக்கையா

லைவன வெண்ணெ
லறையுரலுட் பெய்திருவா

௫. மையனை யேத்துவாம் போல
வணிபெற்ற
மைபடு சென்னிப் பயமலை
நாடனைத்
தையலாய் பாடுவா நாம்;

தகையவர் கைச்செறித்த
தாள்போலக் காந்தண்
முகையின்மேற் றும்பி
யிருக்கும் பகையெனிற் ௬௦. கூற்றம்
வரினுந் தொலையான்றன்
னட்டார்க்குத்
தோற்றலை நாணாதோன்

குன்று;

வெருள்புட ஞேக்கி வியலறை

யூக

மிருடேங் கிறுவரை யூர்பிழி

பாடும்

வருடைமான் குழவிய

வளமலை நாடனைத் . கரு.

தெருளத் தெரியிழாய் நீயொன்று

பாடித்தை;

நுண்பொறி மான்செவி போல வெதிர்முளைக்

கண்பொதி பாளை கழன்றுகும்

பண்பிற்றே

மாறுகொண் டாற்ரு ரெனினும் பிறர்குற்றங்
கூறுத ரேற்ருதோன் குன்று;.

உ௦. புணர்நிலை வளகின் குளகமர்ந்

துண்ட

புணர்மருப் பெழில்கொண்ட வரைபுரை செலவின்
வயங்கெழில் யானைப் பயமலை நாடனை

மணநாறு கதுப்பினுய்

மறுத்தொன்று பாடித்தை;

கடுங்க ணுழுவை யடிபோல வாழைக்
உரு. கொடுங்காய் குலைதொறூஉந் தூங்கு மிடும்பையா
லின்மை யுரைத்தார்க்[1] கதுநிறைக்க லாற்ருக்காற்
றன்மெய் துறப்பான் மலை;

எனவாங்கு,

(பாடம்) 1 யுரைத்தாற்,

குறிஞ்சிக்கலி
க்உக

கூடி யவர் திறம் பாடவென்
றோழிக்கு ௩௦.
வாடிய மென்றோளும் வீங்கின

வாடமை வெற்ப
னளித்தக்காற் போன்றே.

இது வரைவுநீட ஆற்றளாயினவிடத்துத்
தோழி தானுந் தலைவியும் வள்ளைப்
பாடலுள் முருகனைப் பாடுவார்போல
இருவர்க்கும் ஏற்பத் தலைவனைப்பாடத்
தலைவி ஆற்றினமை தோழி

தன்னுள்ளே கூறுவாளாய்த் தலைவன்
சிறைப்

புறமாகக் கூறியது.

(கஎ) வேங்கை . . . . நாம் :—

(இ - ள்.) தையலாய்! நாம் இருவேமும் ஐவனமாகிய வெண்ணெல்லைப் பாறையாகிய உரலிலே சொரிந்து, புலியைக் கொன்ற மதத்தான் மயங்கின புகரையுடைய யானையினது தலையேந்தின கொம்பாலும் இனமான

வண்டுகள் ஒலித்துத் தாதை ஊதுஞ் சந்தனமரத்தினுலும் பண்ணின உலக்கைகளாலே குற்று, முருகனைப் புகழ்வேம்போலே அழகுபெற்ற மேகம்

உண்டாகின்ற தலைமையினையுடைய பயனையுடைத்தாகிய மலைநாட்டை யுடையானைப் பாடுவேம் ;

பாடுவாமென்னும் பொருளே பயப்பச் செய்தலின் இறைச்சியிற் பிறந்த பொருள்காண்க. இஃது "இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே, திறத்தியன் மருங்கிற் றெரியு மோர்க்கே"* என்பதனுற் கொள்க. இஃது இரண்டு உலக்கையாலும் பயன்கொண்டாற்போல அவன் பெயர் பாடுதலாற் பயன் கொள்ளாமையில் உள்ளுறையுவமமன்மை உணர்க.

(அ—கக) தகையவர் .

. . . தன்று :—

(இ - ள்.) பகையென்று கூறிற் கூற்றுவன் எதிர்வரினுங் கெடானைத் † தன்னை உறவுகொண்டார்க்குத் தோற்றலை நாணுதவனுடைய மலை, தும்பி அழகினையுடைய மகளிர் கையிலிட்ட தாட்கூட்டாகிய நீலக் கடைச்செறிபோலக் காந்தளினது முகையின்மேலே அலீந்து அலருங் காலம் பார்த்திருக்கும் ;

என்பதனல், நஞ்சுற்றத்தார் மனநெகிழ்ந்து வரைவிற்கு உடம்படுங் காலம் பார்த்திருக்கின்றானென்றாளாக உள்ளுறையுவமங் கொள்க. இது பயவுவமப்போலி. போலவென்னும் வினையுவமம் இதற்குச் சிறப்புக் கொடுத்து நின்றது. தொலையாமையுந் ‡ தோற்றலை நாணுமையும் முருகனுக்கு உளவாகல் புராணங்களான் உணர்க.

---

* தொல். பொருள் : உகூ௦. † குறள் : எகூ௫.

‡ பரி. ரு : ருச - கூஉ.

கஙடப

கலித்தொகை

[கலி - சசு

(கஉ-கரு) வெருள்புட

பாடித்தை :—

(இ - ள்.) தெரிந்த
இழைபினையுடையாய் !
அகற்சியையுடைய பாறையிலிருந்த
கருங்குரங்கைச் சேர வெருண்டு
பார்த்து இருள் செறிந்த பக்கமலையிலே
ஏறி இறங்கி ஆடும் வருடைமானின்
குழவிகளையுடையன வாகிய
வனப்பத்தையுடைய மலைநாடனை

விளங்க நீ ஒன்று பாடுவா

யென்றான்;

'பாடித்தை': முன்னிலைவினைத்

திரிசொல். வருடைமான் குழவி தன்

இளமையான் வெருளத்தகாத யூகத்தை வெருண்டாற் போல, நீயுஞ் சுற்றத்தார் வரைவிற்கு உடம்படாரோ வெனக் கருதிச் சுற்றத்தாரை வெருளாநின்றாய்; அது தகாதெனக் கூறினளென உள்ளுறையுவமங் கொள்க. இது வினையுவமப்போலி. "தவலருஞ் சிறப்பினத் தன்மை நாடின் - வினையினும் பயத்தினு முறுப்பினு முருவினும் - பிறப்பினும் வரூஉந் திறத்த வென்ப"* என்னும் உவமவியற் சூத்திரத்தில் "திறத்த" வென்றதனாற் றலைவன் நாட்டிலுள்ளன கூறித் தலைவிக்கேற்ற உவமை தோன்றச் செய்தலுங் கொள்க.

(கசு—கக) நுண்போறி . . . . குன்று :—

(இ - ள்.) செல்வ முதலியவற்றோடு மாறுகொண்டு அவற்றைப் பொறுதிருப்பரென்று பலருங் கூறினும் பிறர் குற்றத்தைக் கூறுதலை அறியாதவன் குன்று நண்ணிய பொறியையுடைய மானினுடைய செவியைப்போல் மூங்கின் முளையினது கண்ணைப் பொதிந்த பாளை கழன்று விழும் பண்பினையுடைத்தெனத் தலைவி கூறினள்;

இதனால் அவன் வரையாமையின் நம்மேனியிற் றோன்றிய வருத்தமும் நீங்கி நம் மேனியும் இனிப் பொலிவுபெறுமெனக் கூறினளாக உள்ளுறையுவமங் கொள்க. இஃது உருவுவமப்போலி. குற்றங் கூறுதல் தேற்றாதானெனவே தாஞ் செய்த தீங்குகளையுங் காணானென்றாள். முருகனார் திருமேனிகொண்டு திரிதலின் அவற்குங் குற்றங் கூறாமை ஏற்றினள். மேல் தோழி கூறுகின்றாள் :

(உ0—உ௬) புணர்நிலை . . . . பாடித்தை :—

(இ - ள்.) பிடியோடு கூடிய நிலைமையினையுடைய, வளையென்னும் புதலினது தழையை மனம்பொருந்தித் தின்ற, இணைந்த கொம்புகள் அழகுகொண்ட வரைநடந்ததனையொக்குஞ் செலவினால் விளங்குகின்றஅழகினையுடைத்தாகிய யானைகளையுடைய பயனையுடைய மலைநாடனை மணம் நாறும் மயிரினையுடையாய்! முன் இயற்படமொழிந்ததனை மறுத்து இனி இயற்பழித்து ஒன்று பாடுவாயாக;

* தொல். பொருள் : ௯00.

நிலைமையையுடைய யானை,
நின்ற யானை,
அழகினையுடைத்தாகிய யானை என்க.

'மருப்பெழில்கொண்ட வரை':
இல்பொருளுவமை.

இதனால் விலங்குகளுந் தமக்கு
வேண்டுவனவற்றை நுகர்ந்து* வருத்த
மின்றி ஒழுகினாற்போல, நாமும் நமக்கு
வேண்டுவனவற்றை நுகர்ந்து இல்
லறத்தையும் நிகழ்த்தி வருத்தமின்றி
ஒழுகுமாறு வரைந்து கொள்வனென்
றானாக உள்ளுறையுவமங் கொள்க.
இது பயவுவமப்போலி. 'மறுத்

தொன்று பாடித்தை' என்றதன் பயன் இவன் களவொழுக்கங் கருதாமல் வரைந்துகோடலே கருதினனெனத் தலைவன் உட்கொண்டு கடிதின்வரை தலாம். அதுகேட்ட தலைவி கூறுகின்றாள்:

(உசு—உள) கடுங்க . . . . மலை:—

(இ - ள்.) மிடியாலே பொருளின்மையைச் சொன்னார்க்கு அப் பொருளை அவர்க்கு நிறைத்தலாற்றாதபொழுது தன் மெய்யைத் துறக்கு மவன் மலை† தறுகண்மையையுடைய புலியின்

அடியைப்போல வாழையினது வளைந்தகாய் குலைகடோறுந் தூங்கும்;

புலியடிபோல வாழைக்குலை தூங்குமென்றதனன், நம்மை வரையாமையிற் கொடியன்போற் றோன்றினன், அவன் இனி வரைந்துகொண்டு நமக்கு இனியனாவனென உள்ளுறையுவமங் கொள்க. இது வினையுவமப்போலி.

இனி முருகற்கு ஏற்றுங்காற் பிறவித் தடுமாற்றத்தான் வீடு பெறாத வின்மையை உரைத்தார்க்கு அவ்வீடு பெறுந்தன்மையைத் தான் நிறைவித்தலை அவர்கள் கொள்ளமாட்டாதகாலத்துத் தன்

திருமேனியைக் கைவிட்டு அவர்கண் மனத்தே தங்குகின்றவனெனக் கூறுக. "ஒருநீ யாகத் தோன்ற விழுமிய பெறலரும் பரிசினல்கும்" ‡ என்றார் முருகாற்றுப்படையில். "தன்னை யுன்னி யென்னை யாக்கிய போழ்தே யானவ னாயினேன்" § என்பதனானும் உணர்க.

(உ அ) எனவாங்கு:—

(இ - ள்.) என்று; 'ஆங்கு' : அசை.

(உக—ருக) கூடி . . . . போன்றே:—

(இ - ள்.) யானுந் தலைவியுங் கூடித் தலைவன் திறத்தையும் முருகன்

திறத்தையும் பாடினேமாக, என்னுடைய தோழிக்கு ஆகின்ற மூங்கிலை யுடைத்தாகிய வெற்பையுடையவன் அளித்தபொழுதுபோன்று முன் அளியாமையான் மெலிக்க மெல்லிய தோள்களுஞ் சிறந்தன.

---

* அகம். உ: க - ௪௦. † கலி. சுக: சக - கஉ. ‡ முருகு. உகச - உகரு.

§ ரமாநகு. ககசு - சகசு. அட் டிகளின் உரை மேற்கோள்.

எனத் தன்னுள்ளே கூறுவாளாய்த் தலைவன் சிறைப்புறமாகக் கூறி ஞள், அவன் கடிதாக வரைதற்கு.

இதனாற் றலைவற்குச் சூழ்ச்சி பிறந்தது.

இப்பாட்டு முழுதும் முருகற்குப் பயன்படாது தலைவற்குப் பயன்பட்டு நின்றவாறு உணர்க.

இது கொச்சகங்களும் விரவி வந்தமையிற் கலிவெண்பாவின் வேறு பட்டுவந்த கொச்சகம்.

(எ)

கூகூ.

கதிர்விரி கனைசுடர்க்
கவின்கொண்ட நனஞ்சார
லெதிரெதி ரோங்கிய
மால்வரை யடுக்கத்
ததிரிசை யருவிதன்
னஞ்சினை மிசைவீழ
முதிரிண ரூழ்கொண்ட
முழவுத்தா ளெரிவேங்கை
வரிநுத லெழில்வேழம் பூநீர்மேற் சொரிதரப்
புரிநெகிழ் தாமரை மலரங்கண் வீறெய்தித்
திருநயந் திருந்தன்ன தேங்கமழ் விறல்வெற்ப;
தன்னெவ்வங் கூரினு நீசெய்த வருளின்மை
யென்னையு மறைத்தாளென் றோழி யதுகேட்டு
நின்னையான் பிறர்முன்னர்ப் பழிகூற றுஞணி;

கூருநோய் சிறப்பவு நீசெய்த வருளின்மை
சேரியு மறைத்தாளென் றேழி யதுகேட்டாங்
கோருநீ நிலையிலை யெனக்கூற ருணி;

நோயட வருந்தியு நீசெய்த வருளின்மை
கரு. யாயமு மறைத்தாளென் றேழி யதுகேட்டு
மாய்நின் பண்பின்மை பிறர்கூற ருணி;

எனவாங்கு,

இனையன தீமை நினைவனள்

காத்தாங்
கனையரும் பண்பினு
னின்றீமை காத்தவ

உ0. ளருந்துய ராரஞர் தீர்க்கு
மருந்தாகிச் செல்கம் பெருமகாம் விரைந்தே.

இது வரையாது வந்து ஒழுகுந் தலைவனைத் தோழி, தலைவியது கற்புமிகுதியும் இவ்வொழுக்கம் அலராகின்றமையும் அவளது ஆற்றுமையுங் கூறி, வரைவு கடாயது.

(க—எ) கதிர்விரி . . . .

. . விறல்வெற்ப :—

(இ - ள்.) எதிரே எதிரே ஓங்கிய பெருமையையுடைய மலையினது அகற்சியையுடைய சாரலில் இளஞாயிற்றினுடைய விரிகின்ற செறிந்த கிரணங்களினுடைய அழகைத் தன்னிடத்தே கொண்ட மாணிக்கப் பாறையிலே நிற்கப்பட்டு

முழங்குகின்ற ஓசையையுடையவாய்
இரண்டு மலையினின்றும் வீழ்கின்ற
அருவி தனது அழகிய கொம்புகளின்
மேலே வீழ்தலாலே
முதிர்ந்த கொத்துக்கள் அலர்தல்
கொண்ட முழவுபோலுந்
தாளினையுடைய நெருப்புப்போலும்
வேங்கை, புகரினையுடைய மத்தகத்
தினையும் அழகினையுமுடைய்
யானைகள் பூவொடு கூடிய நீரை
மேலே சொரியாநிற்க எக்காலமும்
முறுக்கு நெகிழ்ந்த தாமரைமலரினது
அழகை யுடைய அல்லியிலே
வீறுபெற்றுத் திருமகள்
விரும்பியிருந்தா லொத்த *

தேனூறும். வெற்றியினையுடைய வெற்பனே!
சுடரின் கவினைக்கொண்ட அடுக்கமெனவே
மாணிக்கப்பாறை யென்

னும் பொருள் தந்தது. எதிர் எதிர்
ஓங்கிய வரைகளைத் தலைவன் சுற்றத்

தாருந் தலைவி சுற்றத்தாருமாகவும், அவற்றிடையடுக்கத்தைத் தலைவன் மனையாகவும், இரண்டருவியும் வீழ்கின்றதனை இருவகைச் சுற்றந்தாருஞ் செய்கின்ற சிறப்புக்களாகவும், இணர் ஊழ்கொண்டதனைப் புதல்வர்ப் பயத்தலாகவும், வேங்கையைத் தலைவியாகவும் உள்ளுறையுவமங் கொள்க.

இது பயவுவமப்போலி. இதனாற் கூறியது நின் நாட்டில் உறைகின்ற
வேங்கை சிறப்பெய்தினாற்போலத் தலைவியும் நின் இல்லின்கண் வந்து

சிறப்பெய்துமாறு கடிதின் வரைந்துகொள்க வென்றதாயிற்று. 'வரிநு லெழின்' முதலாகத் 'திருநயந்திருந்த' வென்ற வினையுவமம் முற்கூறிய உள்ளுறையுவமத்தைத் தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்த லும் உள்ளுறையுவமம் போலத் திணையுணர்தலைத் தள்ளாது நின்றது இதற்கு விதி முற்கூறினாம். †

(அ—௬0) தன்னைவவ்வங்

ஞணி :—

(இ - ள்.) என்னுடைய தோழி தன்னுடைய வருத்தமுறா நிற்கவும் ந
செய்த அருளில்லாமையை என்னையும் உட்பட மறைத்தாள்; அவள் இ
னம் மறைத்தது அவ்வருளின்மையைக் கேட்டு யான் நின்னைப் பிற
முன்னே பழிகூறுதலைத் தான் நாணிக்காண்;

யான் பழி கூறுவேனென்று தான் நாணியெனத் தலைவி குறியாத
தொன்றைக் கூறினமையின் இது குறியா கூறலாம்.

உம்மை, சிறப்பு.

※ சீவகசிந் - உருகந. †

இந்நூல் ௬0௪-ஆம் பக்கம் பார்க்க.

கநடசா

கலித்தொகை

[கலி - சா]

(கக—கரு) கூருநோய்

. . . . . ஞணி :—

(இ - ள்.) என்னுடைய தோழி மிகுகின்ற காமநோய் சிறவாகிற்கவு
நீ செய்த அருளில்லாமையைச் சேரியிலுள்ளாரும் அறியாதபடி மறைத்தாள்
அவள் இங்ஙனம் மறைத்தது அவ்வருளின்மையைக் கேட்கு மப்பொழுதே
நீ நிலைபேறுடையை யல்லையென்று யான் பிறர்க்குக் கூறுதலைத் தா
நாணிக்காண் ;

உம்மை, சிறப்பு. 'ஒரும்': அசை.

(கச—கரு) நோயட

. . . . . ஞணி :—

(இ - ள்.) என்னுடைய தோழி காமநோய் வருத்துகையினுே
வருந்தியும் நீ செய்த அருளில்லாமையை ஆயத்தையும் மறைத்தாள் ; அவ
இங்ஙனம் மறைத்தது அவ்வருளின்மையைக் கேட்டு மாயத்தை வல்
நினது பண்பில்லாமையைப் பிறர் கூறுதலைத் தான் நாணிக்காண் ;

ஆயத்திற்கும் வருத்தம் புலப்படாமை மறைத்தாளென்ற உம்ம
சிறப்பும்மை.

(கள) எனவாங்கு :—

அசை.

(கஅ-உக) இனையன

விரைந்தே :—

(இ - ள்.) நினது தீமையான் உண்டாகிய அருந்துயரத்தை அத்தன்மைத்தாகிய அரிய நற்குணத்தினேனே நீ பின்னர்க் காத்தாற்போல இத்தன்மையனவாகிய தீமைகளைப் பிறரறியாதபடி நினைத்தாளாய்க் காத்தவளுடைய ஆரஞரைத் தீர்க்கும் மருந்தாகிப் பெருமா! நாம் விரைந்து செல்வேம்;

'தீமையாயின, விட்டுப்பிரிவும் 2 அருமை செய்தயர்த்தலுமாம்.'

இதனுற் றலைவற்கு விரைவு[3] பிறந்தது.

இஃது ஏழடித்தரவும் மூன்றடித்தாழிசையுந் தனிச்சொல்லும் நான்கடிச் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக் கலிப்பா. (அ)

சுரு.

விடியல்வெங் கதிர்காயும் வேயம லகலறைக்
கடிசுனைக் கவினிய காந்தளங் குலையினை
யருமணி யவிருத்தி யரவுநீ ருணல்செத்துப்
பெருமலை மிளிர்ப்பன்ன சாற்றுடைக் கலைபெய

(பாடம்) 1. கேட்டு அப்பொழுதே. 2. இட்டுப் பிரிவும். 3. வரைவு.

குறிஞ்சி - க]

குறிஞ்சிக்கலி

கரு

(ரு.) உருமுக்கண் ணுறுதலி னுயர்குர லொலியோடி
நறுவீய நனஞ்சாரற் சிலம்பலிற் கதுமெனச்
சிறுகுடி துயிலெழூஉஞ் சேணுயர் விறல்வெற்ப ;

கால்பொர நுடங்கல [1] கறங்கிசை யருவிநின்
மால்வரை மலிசுனை மலரேய்க்கு மென்பதோ

கo. புல்லாராப் புணர்ச்சியாற் புலம்பிய வென்றோழி

பல்லிதழ் மலருண்கண்

பசப்பசீ சிதைத்ததை ;

புகர்முகக் களிறொடு
புலிபொரு தழக்குநின்
னகன்மலை யடுக்கத்த
வமையெய்க்கு மென்பதோ
கடையெனக் கலுழுநோய்
கைம்மிக வென்றோழி கரு.
தடையின திரண்டதோ
டகைவாடச் சிதைத்ததை ;

சுடருற வுறநீண்ட
சுரும்பிமி ரடுக்கத்த

விடர்வரை யெரிவேங்கை யிணரேய்க்கு மென்பதோ
யாமத்துந் துயிலல ளலமரு மென்றோழி

காமரு நல்லெழில்
கவின்வாடச் சிதைத்ததை ;

உ0. எனவாங்கு,

தன்றீமை பலகூறிக் கழறவி
னென்றோழி
மறையிற்றன் மருவுற
மணந்தநட் பருகலாற்
பிறைபுரை நுதலவர்ப் பேணிநம்
முறைவரைந் தனரவ
ருவக்கு நாளே.

இது வரைவிடையாற்றாத தலைவிக்குத்

தோழி தான் தலைவனை நெருங்கி வரைவு

கடாவ அதுகேட்ட தலைவன் வரைவுமுயற்சியான் வருதல் இடையிட்ட

தூஉந் தமர் வரைவெதிர்ந்ததூஉங் கூறி அவளை ஆற்றுவித்தது.

(க—எ) விடியல்வெங்

விறல்வெற்ப :—

(இ - ள்.) விடியற்காலத்து விரும்பிய ஞாயிற்றைக் கெடுக்கும் மூங் கில் நெருங்கின அகன்ற மாணிக்கப்பாறையிடத்து, மணத்தையுடைய சுனை யிடத்தே அழகுபெற்று வளர்ந்த காந்தளினது

அழகிய குலையினைப், பெறு தற்கரிய மணி விளங்குகின்ற பொறியினையுடைய பாம்பு நீரை உண்ட லாகக் கருதிப், பெரிய மலைகளைக் கீழ்மேலாக்குமாறுபோலே இருக்கின்ற காற்றினையுடைத்தாகிய செறிந்த மழையில் உருமேறு இடித்தலால் எழுந்த

(பாடம்) 1. றடங்கலிற்.

கங்கீ

கலித்தொகை

உயர்ந்த ஓசையாகிய ஓசை பரந்து நறிய பூக்களையுடைய சாரலிலே ஒலிக்கையிலுலே விரையச் சிறுகுடியினுள்ளார் உறக்கமுணரும் மிக உயர்ந்த வெற்றியினையுடைய வெற்பனே !

மாணிக்கப்பாறை தலைவி உறைகின்ற மனையாகவுஞ், சுனையிடத்துக் காந்தள் சுற்றத்தார் பேண அழகுபெற்ற தலைவியாகவும், மணத்தைத்தரும் அக்காந்தள் பாம்புபோற் றோன்றியது மேல் இல்லறத்தைத் தருகின்ற களவொழுக்கம் பிறர்க்குத் தீங்குபோற் றோன்றியதாகவும், உருமேறு இடித்தலால் எழுந்த ஓசை குறவர் சாரலெல்லாஞ் சிலம்பியது அங்ஙனந் தீதாகக் கருதின அயலார் கூற்றைக் கேட்ட தாய் கழறிய கூற்றுப் பரந்ததாகவுஞ், சிறுகுடி துயிலெழுந்தது காவன் மிகுதியாற் றலைவியுந் தானுங் களவு இடையீடுபட்டு வருந்தித் துயிலின்றியிருந்த தன்மையாகவும் உள்ளுறையுவமங் கொள்க. இது வினையுவமப்போலி.

(அ—கக) கால்போர . . . . சிதைத்ததை :—

(இ - ள்.) முயங்குதலமையாத கூட்டம்பெருமையால் வருந்தின என் தோழியுடைய பல இதழையுடைய மலர்போலும் உண்கண்கள் பசக்கும்படி நீ கெடுத்தது, காற்றடிக்கவுந் தன் பெருமையால் அசையாவாய் நின்று ஒலிக்கின்ற ஓசையினையுடைய அருவிகளையுடைய நினது பெருமையையுடைய வரையில் நீர்நிறைந்த சுனையின் மலரையொக்குமென்னும் பொருமையோ? அதுவன்றேல் அருளின்மையன்றோ ?

(கஉ—கரு) புகர்முகக் . . . . சிதைத்ததை :—

(இ - ள்.) உயிர்போம் பருவமென்று கூறும்படியாகக் கலங்குதற்கு ஏதுவாகிய காமநோயைக் கடக்கும்படியாக என் தோழியுடைய பெருத்தன வாகிய திரண்ட தோள்களை அழகு வாடும்படி நீ கெடுத்தது, புகரையுடைத் தாகிய முகத்தையுடைய களிற்றோடே புலி பொருது தகைத்துத்[1] திரியும் நின்னுடைய அகன்ற மலையில் அடுக்கத்தனவாகிய மூங்கிலையொக்குமென் னும் பொருமையோ? அதுவன்றேல் அருளின்மையன்றோ?

(கசு—கக) சுடருற . . . . . சிதைத்ததை :—

(இ - ள்.) நடுயாமத்துந் துயில்கொள்ளுத லிலளாய் மனந்தடுமாறும் என் தோழியுடைய விருப்பம் மருவிய நல்ல எழுச்சி அழகு வாடும்படியாக நீ கெடுத்தது, ஞாயிற்றைத் தீண்டும்படியாக மிகநீண்ட சுரும்புகள் ஒலிக் கின்ற முழைஞ்சுகளையுடைய மலையினது பக்கமலையிடத்தனவாகிய எரி போலும் வேங்கையினது பூங்கொத்தையொக்குமென்னும் பொருமையோ? அதுவன்றேல் அருளின்மையன்றோ?

(பாடம்) 1. பகைத்துத்.

குறிஞ்சி - கo]

குறிஞ்சிக்கலி

கருஎ

'காமரு' : விகாரம் ; மருவும் :

ஈற்றுமிசை உகரம் மெய்யொடுங் கெட்டு மகாரஞ் சந்தியாற் கெட்டது.

(உ௦)

எனவாங்கு :—

(இ - ள்.) என்று ; 'ஆங்கு': அசை.

(உக—உ௪) தன்றீமை

நாளே :—

(இ - ள்.) தன் பொல்லாங்குகள் பலவற்றையுஞ் சொல்லி யான் கழறுகையினாலே அவர் என் கூற்றினை இஃதுண்மையென்று தெளிந்து களவொழுக்கத்திலே தான்

நம்மோடு மருவுதலுறுங்கயினுலே கூடின உறவு பின்னர் வரைவுமுயற்சியான் அருகுகையினுலே, பிறையொத்த நுதலினை யுடையாய் ! இக் களவொழுக்கத்தில் வேட்கை நீங்கி நாம் அவரைப் பேணி அவரிடத்தே தங்குதலை அவர் விரும்பின நாளிலே நஞ் சுற்றத்தாரும் அவர்க்கே கொடுப்பதாக அறுதியிட்டுவிட்டார் ; இதுகாண் நமக்குண்டாகிய நன்மை.

'தன்,' 'தான்,' 'அவர்'

என்பது ஒருமைப்பன்மை மயக்கம். உறைதல் 'உறை' யென விகாரமாயிற்று.

இதனுற் றலைவிக்குச் செல்வமாகிய உவகை பிறந்தது.

இஃது எழுடித்தரவும் நான்கடித் தாழிசையுந் தனிச்சொல்லும் நான்க்டிச் சுரிதகமும் பெற்றுவந்த ஒத்தாழிசைக்கலி. (க)

வீயகம் புலம்ப வேட்டம் போகிய
மாஅ லஞ்சிறை மணிநிறத் தும்பி
வாயிழி கடாத்த வான்மருப் பொருத்தலோ

டாய்பொறி யுழுவை தாக்கிய பொழுதின்
ரு. வேங்கையஞ் சினையென விறற்புலி முற்றியும்
பூம்பொறி யானைப் புகர்முகங் குறுகியும்
வலிமிகு வெகுளியான் வாளுற்ற மன்னரை
நயனுடி நட்பாக்கும் வினைவர்போன் மறிதரு
மயமிழி யருவிய வணிமலை நன்னாட ;

க௦. ஏறிரங் கிருளிடை யிரவினிற் பதம்பெறூஅன்

மாறினெ னெனக்கூறி
மனங்கொள்ளுந் தானென்ப
கூடுதல் வேட்கையாற்
குறிபார்த்துக் குரனெச்சிப்

பாடோர்க்குஞ் செவியோடு
பைதலேன் யானைக;
18

கஅ
கலித்தொகை
[கலி-கூ

அருஞ்செல[1] வாரிடை
யருளிவந் தளிபெறுஅன் கரு.

வருந்தினெ
னெனப்பல வாய்விடூஉந்
தானென்ப
நிலையுயர் கடவுட்குக் கடம்பூண்டு
தன்மாட்டுப்
பலசூழ மனத்தோடு
பைதலேன் யானாக;

கனைபெய னடுநாள்யான்
கண்மாறக் குறிபெறாஅன்
புனையிழா யென்பழி
நினக்குரைக்குந் தானென்ப

௨௦. துளிநசை வேட்கையான்

மிசைபாடும் புள்ளிற் றன்
னளிநசைஇ யார்வுற்ற
வன்பினேன் யானக;
எனவாங்கு,
கலந்தநோய் கைம்மிகக்
கண்படா வென்வயிற்
புலந்தாயு நீயாயிற்
பொய்யானே வெல்குவை
உரு. யிலங்குதா ழருவியோ
டணிகொண்ட நின்மலைச்
சிலம்புபோற் கூறுவ கூறு
மிலங்கே ரெல்வளை
யிவ்ளுடை நோயே.

இஃது அல்லகுறிப்பட்டுத் தலைவன்
மீள அதனை என்பிழையாகக் கருது
னெனக் கவன்று ஆற்ருளாகித் "
தன்குறி தள்ளிய தெருளாக் காவல
வந்தனன் பெயர்ந்த வறுங்கள
நோக்கித் - தன்பிழைப் பாகத் தழீஇ
தேறிய"* தலைவியது நிலைமை
தோழி தலைவற்குக்கூறி இவ்விடையீ
நின்தோழியிருயிற்றெனை எனது
பிழைப்பாக்கி அவளை ஆற்றுவிப்பாய்,
உரைத்ததே உரையாம்
அவட்கென அவளது ஆற்ருமை கூறி
வரை
கடாயது.

(க—க) வீயகம் . . . .

நன்றாட் :—

(இ - ள்.) தான் நுகர்கின்ற பூத் தன்னையின்றித் தனித்து உறையத் தான் விரும்பிய பூவின்மேலே போன பெருமையினையும் அழகினையுமுடை தாகிய சிறகினையும் நீலமணிபோலும் நிறத்தினையுமுடைய தும்பி, வா டத்தே பெருகி வீழ்கின்ற மதத்தையும் வெள்ளிய மருப்பினையுமுடை யானைத் தலைவனோடே அழகினையுடைத்தாகிய வரியினையுடைய பு வந்து போர்செய்த காலத்தே, வேங்கையினது அழகையுடைய பூ கொம்பென்று கருதி விறலையுடைய புலியைச் சூழ்ந்தும் வேங்கைச்சிலை யென்று பொலிவுபெற்ற புள்ளிகளையுடைய யானையினது புகரினை யுடைய முகத்தை அணுகியும், வலிமிகுகின்ற கோபத்தாலே வாட போரைச் செய்யத் தொடங்கின மன்னரை நட்பாக்கும் உபாயத்தை

---

* தொல். பொருள்: கககஎ.
(பாடம்) 1. அருஞ்செலலாரிடை.

குறிஞ்சி - க0]

குறிஞ்சிக்கலி

கஙடு

ஆராய்ந்து நட்பாக்குஞ்
பள்ளத்தே குதிக்கின்ற

சந்துசெய்வாரைப்போலப்* பல்காலுந் திரியும், அருவிகளையுடைய திரண்ட மலைகளையுடைய

நன்னுடனே!

மறித்தரும் பயமிழி என்றும் பாடம்.

தும்பி வினைவர்போல முற்றியுங் குறுகியும் மறிதருமென்க. பூப்புலம்ப வேட்டம் போகிய தும்பி தலைவி தனித்திருக்க முன்வரைந்துகொண்ட மனைவியிடத்தே வேட்கைசென்று போன தலைவனுகவும், அத்தும்பி வருத்தத்தை நிகழ்த்துவனவாய்த் தம்மிற் பகைத்த புலியையும் யானையையுந் தனக்குத் தேனைத் தரும் வேங்கைப்பூவாகக் கருதிச் சுழல்கின்ற தன்மை நம்மேல்[1] அன்பின்றி இருக்கவுந் தனக்கு இன்பமுளதாகக் கருதிப் பகற்குறியும் இரவிற்குறியும்[2] பெறுதற்கு மறுகுகின்ற தன்மையாகவும் உள்ளுறையுவமங்கொள்க. இது வினையுவமப்போலி.

" பின்முறை யாக்கிய "† என்ற சூத்திரத்துத் "தொன்முறை மனைவி" என்றதனுல் தொன்முறை மனைவியுண்மையும் உணர்க.

'நயனுடி நட்பாக்கும் வினைவர்போல்' என்ற ஏனையுவமம் உள்ளுறையுவமத்தைத்தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத்துத் தானும் உள்ளுறையுவமம்போற் றிணையுணர்தலைத் தள்ளாதுநின்றது.

(சo—கரு) ஏறிரங் . . . . . யானுக:—

(இ - ள்.) யான் தன்னைக் கூடுதற்கணுளதாகிய வேட்கையினாலே யான் பகற்குறியைத் தள்ளின நிலைமையை என்பிழைப்பாக மனத்தான் நோக்கி இரவிற்குறி யேற்றுக்கோடற்கு யான் கொத்தினையுடைய நொச்சிப்பூ விழுகின்ற ஓசையை ‡ அவன் குறியோவென்று கருதுஞ் செவியோடே வருத்தத்தையுடையேனாகாநிற்கத் தான் உருமேறு இடிக்கின்ற இருளையுடைய நடுவாகிய இராப்பொழுதினது செவ்வியைப் பெறுனுய்ப் பகற்குறியையும் யான் மாறினேனென்று கூறி இனி மனத்தே கொள்ளா நிற்கும்;

மனத்தின் வினையைச் செவிமேல் ஏற்றினர், அதுகருவியாக உணர்தல் நோக்கி.

(கச—கஎ) அருஞ்சேல . . . யாறுக.—

(இ - ள்.) யான் நிற்கின்ற நிலைமை உயர்தற்குக் காரணமான கடவுளுக்கு வரைவு முடிந்தாற் செய்யுங் கடன்களை § மேற்கொண்டு தான்

---

* குறள் - கஅஎ. குறிஞ்சி - உஎ-உஅ.

† தொல். பொருள் : கஎஉ.

‡ குறுந் - கக௲.

§ ஐங்குறு.-உடுக.

[illegible] இரவக் குறியம்.

கசுo

கலித்தொகை

[கலி - சுகூ குறிபெருமையிற்

றன்மாட்டு நிகழும் வருத்தம்

பலவற்றையுஞ் சூழும் மனத்தோடே வருத்தத்தையுடையேனாகாநிற்கத் தான் அரிய செலவினை

யுடைய வழியிடத்தே நம்மை அருள்செய்து வந்து நம்முடைய அளியைப் பெறுனைப் பகற்குறியும் பெறாமல் வருந்தினனென இனிப் பலவார்த்தையுங் கூறாநிற்கும் ;

நிலையுயர்தல் : வரைந்துகொண்டாலுயர்தல்.

(கஅ—உக) கனைபெய . . . . யானைக:— :

(இ - ள்.) மழை தன்னைப் புரக்க நச்சுதன்மேலுள்ள வேட்கை

யினாலே வானத்தைப் பாடும் வானம்பாடிபோல* இருவகைக் குறியினுந் தான் அளிக்கின்ற அளியை நச்சுதலாலே தன்மேல் நிறைவுற்ற அன்பினை யுடையேனாகாநிற்கத் தான் நெருங்கின மழையையுடைத்தாகிய பாதிராளிலே யான் இடமாறப் பகற்குறியையும் பெருணப்ப் பூணப்பட்ட இழையினை யுடையாய்! என்னிடத்துண்டாகிய பழியை நினக்குச் சொல்லாநிற்கும்.

தான் யான் ஆக அருளாக்குமென்பன எதிர்காலத்து நிகழ்கின்ற நிகழ்வு. 'என்ப'வென மூன்றுதாழிசையிலும் வந்தன இசைநிறையாய் நின்றன.

(உஉ) எனவாங்கு:—

(இ - ள்.) என்றிவள்

கூறும்படியாக;

(உரு—உஎ) கலந்தநோய்

. . . . . நோயே:—

(இ - ள்.) இவளைக் கலந்த நோய் இவள் ஒழுக்கத்தை மிகுக்கையி னாலே அதுகண்டு கண் துயிலாத என்னிடத்தே நீ வெறுத்தாயுமாய், விளங்குகின்ற தாழ்ந்த அருவியாலே அழகுகொண்ட நின்மலையின் பக்கமலை கூறுவனவே கூறுமாறுபோல நீ கூறுவனவற்றையே கூறும் இலங்குகின்ற அழகினையுடைய எல்வளையையுடைய இவளுடைய நோயை இவள் ஆற்றும் படியாக ஒரு பொய்ம்மொழி கூறியாயினும் வெல்வாய் நீ உரைத்ததே இவட்கு உரையாம்.[1]

'எல்' : ஒளி.

அல்லகுறிப்பட்டு மீண்டதனை என்பிழைப்பாகக் கருதும் அவனெனக் கவன்று ஆற்றாளாமென்றதனானுக் "தன்குறிதள்ளிய.........தழீஇத்தேறலும்" † என்னுஞ் சூத்திரத்திற்குப் பகற்குறியென்றே பொருளாதலானும் இவ்வாறே பொருள் கூறவேண்டுமென் றுணர்க.

---

*. புறம். கசுஅ : உடு. † தொல். பொருள் : கசுக.

(பாடம்) 1.

குறிஞ்சிக்கலி

கசுச

தாழிசைகளிற் றோழி சொல்லெடுப்புதற்குத் தலைவி சிறுபான்மை கூறுதலைப் "புலத்தலு மூடலு மாகிய விடத்துஞ் - சொலத்தகு கிளவ் தோழிக் குரிய "* என்பதனாற் கொண்டவா றுணர்க.

இதனாற் றலைவர்க்கு

அசைவு பிறந்தது.

இஃது ஒன்பதடித்தரவும் நான்கடித்தாழிசையுந் தனிச்சொல்லும் ஐஃஅடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி.

(௧0

சஎ.

லி

ஒன்று,

இரப்பான்போ லெளிவந்துஞ்

சொல்லு முலகம்

புரப்பான் போல்வதோர்
மதுகையு முடையன்

வல்லாரை வழிபட் டொன்றறிந் தான்போ
னல்லார்கட் டோன்று மடக்கமு முடைய
ரு. னில்லோர் புன்க ணீகையிற் றணிக்க
வல்லான் போல்வதோர் வன்மையு[1] முடைய
னன்ன னொருவன்றன் னாண்டகை விட்டென்னைச்
சொல்லுஞ்சொற் கேட்டீ சுடரிழாய் பன்மாணும்;

நின்னின் றி யமையலேன்

யானென்னு மவனாயி கo.
னன்னான்சொ ணம்புண்டல்
யார்க்குமிங் கரிதாயி
னென்னுற்ற
பிறர்க்குமாங் குளகொல்லோ நறுந்தால்;

அறியாய்நீ வருந்துவல்
யானென்னு மவனுயிற்
றமியரோ துணிகிற்றல்
பெண்டிர்க்கு மரிதாயி
னளியரோ வெம்போல
வீங்கிவன் வலைப்பட்டார்;
கரு. வாழலேன் யானென்னு
நீநீப்பி னவனுயி
னேழைய ரெனப்பலர்
கூறுஞ்சொற் பழியாயிற்
சூழுங்கா னினைப்பதொன்
றறிகிலேன்[2] வருந்துவல்
சூழுங்கா னறுநுதா னம்முளே சூழ்குவம்;
அவனை,

உ0. நாணடப் பெயர்த்த

னமக்குமாங் கொல்லாது

பேணின ரெனப்படுதல்
பெண்மையு மன்றவன்
வௌவினன் முயங்கு
மாத்திரம் வாவெனக்

---

* தொல். பொருள் : களவு.

(பாடம்) 1. வண்மையு. 2. றறிகலேன், றறிஇலன்.

கூறுமென் போலக் காட்டி

மற்றவன் மேஎவழி

மேவாய் நெஞ்சே.

இது தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி அவன் தன்மையும் அவன் தனக்குக் கூறுவனவும் அக்கூற்றுத் தன்னாற் பொறுக்க வொண்ணாதவாறும் அவன் கருத்துந் தலைவிக்குக் கூறி அவன் குறை நயப்பத் தன்னுள்ளே சொல்லியது.

(க—அ) ஒன்றிரப்பான் . . . . பன்மாணும் :—

(இ - ள்.) விளங்குகின்ற இழையினையுடையாய்! என்னிடத்து ஒரு காரியத்தை இரந்துநிற்பான் போலே தன்னைப் பிறரால் இகழப்பட்டு எளியராந்தன்மை தோன்றவுஞ்[1] சிலமொழி கூறும்; அங்ஙனங் குறையிரந்து

நிற்பினும்
உலகத்தையெல்லாம் பாதுகாப்பான்போலே
இருப்பதொரு வலியு

முடையன், மெய்ப்பொருள் கூறும் நூல்களைக்கூற வல்லவர்களை வழிபட்டு நின்று அப்பொருளை அறிந்தான்போலே நன்மக்களைக் கண்டாற்றேன்றும்

மன அடக்கமுமுடையன், வறியோர் வறுமையைக் கொடையினாலே போக்க வல்லான்போலே இருப்பதொரு வலியுமுடையன், அத்தன்மையையுடையான் ஒருதலைவன் தனக்குரிய ஆளுந்தகைமையைக் கைவிட்டு என்னைநோக்கிக் கூறும் பலகாரியங்களும் மாட்சிமைப்படுஞ் சொல்லைக் கேட்பாயாக;

"மனைவி யுயர்வுங் கிழவோன் பணிவு, நினையுங் காலைப் புலவியு ளுரிய"*
என்பதனுள், "நினையுங்காலை" என்றதனாற்றோழியுயர்வுங் கிழவோன்பணிவுங்

கொள்கவென்றலாற் றோழி
இங்ஙனங் கூறினாள். "உயர்மொழிக்
கிளவியு

முரியவா லவட்கே"† என்பதனால்
'உலகம் புரப்பான் போல்வதோர்
மதுகையு முடையன்' என்றாள்.
உம்மைகளெல்லாம்
ஐயவும்மை.

'சொல்லு'மென்றது

பிறன்கட்டோன்றிய வருத்தம்பற்றி

இளிவரல்

பிறந்தது, அவன் இவ்வாறு ஒழுகல்

நமக்கு இளிவரலெனக் குறிப்பாற்

கூறிக்

குறைநயப்பித்தலின்.

(கூ - கக) நின்னின்றி . . . .

நறுநுதால்:—

(இ - ள்.) நறிய நுதலினை

யுடையாய்! அவன் நின்னையின்றி[2]

யான்

உயிர்வாழலேனென்று[3]

கூறாநிற்குமாயின்,

இங்ஙனம் இறந்துபடுந் தன்மையை

யுடையவன் கூற்றை நம்புதலைச்
செய்தல் இவ்விடத்து யாவர்க்கும்
அரிதா
யிருக்குமாயின், இந்நிலைமைக்கண்
என்னைச்சேர்ந்த வருத்தங்கள்
பிறர்க்கும்
உளவோ ? இல்லையன்றே!

---

* தொல். பொருள் : ௨௨எ.

† தொல். பொருள் : ௨௪0.

(பாடம்) 1. தோன்றியுஞ். 2. நின்னையன்றி. 3. வாமேனென்ற. தமிஞ்சி

- ௧௨]

குறிஞ்சிக்கலி

௧௫௩

(௧௨ - ௧௪) அறியாய்நீ .

. . வலைப்பட்டார்:—

(இ - ள்.) அவன் யான் வருந்துவல் நீ அதனை அறியாயோவென்று கூறிவிற்குமாயின், தமக்கு உயிர்போலச் சிறந்த தோழியரோடு உசாவித் துணியாமற் றமியராயிருந்தே துணிதல் மகளிர்க்கும் அரிதாயிருக்குமாயின், இந்நிலைமைக்கண் அவன்[1] வலையிலே அகப்பட்டார் சிலர் எம்மைப்போல

அளிக்கத் தக்காராயிருப்பாரோ? அளியாதிருப்பான்றே! [2]

(கரு - கஅ) வாழலேன் .

. . . சூழ்குவம்:—

(இ - ள்.) அவன் நீ அருளாதொழியின் யான் உயிர்வாழேனென்னு மாயிற், குடிப்பிறந்தார் பேதையராயிருப்பரென்று* நன்மக்கள் அவரைச் சிறப்பித்துச் சொல்லுஞ் சொல் நீ முதுக்குறைமை பூண்டிருத்தலின் நினக்குப் பழியாயிருக்குமாயின், இந்நிலைமைக்குச் செய்யலாவதொரு காரியத்தை ஆராயுங்கால் நினைப்பதொரு காரியத்தை அறியேனாய் வருந்தாநின்றேன்; இந்நிலைமை ஆராய்ந்து பார்க்குங்கால் நறிய நுதலினையுடையாய்! நம்முள்ளே ஆராய்ந்து பார்ப்பேம்;

(கக - உச) அவனை . . . . . நேர்ந்தே:—

(இ - ள்.) நம்மை நாண் வருத்துகையினாலே அவனைப் போக்குதல் நமக்கும் அவன் இறந்துபடுகின்ற நிலைமைக்கட் பொருந்தாது, அவன் இறந்துபடுகின்றவனைப் பேணினாரென்று நன்மக்கள் புகழ்ந்து கூறப்படுதல் நின் கருத்தாற் பெண்மையுமன்றாயிராநின்றது; இங்ஙனமாகவும், அவன் நின்னை முயங்குமளவைத் தன் நெஞ்சாலே கைக்கொண்டுவிட்டான்; அதற்கு நீ மேவுகின்றிலை, இதற்கு யான் இனிக் கூறுவதொன்றின்றெனத் தலைவிக்குக் கூறிப், பின்னைத் தோழி தன் நெஞ்சோடு முன்னிலைப்புறமொழியாகக் கூறுவாளாய்,[3] குறியிடத்தே வாவென்று கூறுவாள்போலே அவனுக்கு ஒரு பொய்க்குறியைக் காட்டி அவன் மேவின வழியிலே நெஞ்சே மேவுவாயாக என்றாள்;

இதனாற் றலைவிக்குச் சூழ்ச்சி பிறந்தது.

இஃது 'ஒன்'றெனச் சொற்சீரும் 'அவனை'யெனத் தனிச்சொல்லும் பெற்றுத் தாழிசையுள் ஏனைமூன்றடியாக ஒன்று நான்கடியாய் வந்தமையிற் கொச்சகக்கலியாயிற்று. (கக)

சஅ.

ஆமிழி யணிமலை யலர்வேங்கைத் தகைபோலத்
தேமூசு நனைகவுட் டிசைகாவல் கொளற்கொத்த

---

* இறைய. சூ. உக.
(பாட்ம்) 1. இவன். 2.

வலியராயிருப்பரன்றே? 3. கூறுவான்.

வாய்நில்லா வலிமுன்பின் வண்டூது புகர்முகப்
படுமழை யடுக்கத்த மாவிசும் போங்கிய
கடிமரத் தருத்திய கமழ்கடாந் திகழ்தரும்
பெருங்களிற் றினத்தொடு
வீங்கெருத் தெறுழ்முன்பி
னிரும்புலி மயக்குற்ற
விகன்மலை நன்னாட;

வீழ்பெயற் கங்குலின்[1]
விளியோர்த்த வொடுக்கத்தால்

வாழுநாட் சிறந்தவள்
வருந்துதோட் டவறுண்டோ
தாழ்செறி கடுங்காப்பிற் றாய்முன்னர் நின்சார
லாழுறு கோடல்போ லெல்வளை யுகுபவால்;
இனையிரு ளிதுவென
வேங்கிநின் வரனசைஇ
நினைதுய ருழப்பவள் பாடில்கட் பழியுண்டோ
வினையளென் றெடுத்தாற்று மயன்முன்னர் நின்சுனைக்
கனைபெய னீலம்போற் கண்பனி கலுழ்பவால்;
பன்னாளும் படரடப் பசலையா லுணப்பட்டாள்
பொன்னுரை மணியன்ன மாமைக்கட் பழியுண்டோ
வின்னுரைச் செதும்பரற் றுஞ் செவ்வியு ணின்சோலை
மின்னுகு தளிரன்ன மெலிவுவந் துரைப்பதால்;
எனவாங்கு,
பின்னீதல் வேண்டுநீ
பிரிந்தோணட் பெனநீவிப்

பூங்கண் படுதலு மஞ்சுவ றூங்கிய
வருந்துய ரவலந் தூக்கின்
மருங்கறி வாரா மலையினும்
பெரிதே.

இது வரையாது வந்து ஒழுகுந் தலைவற்குத் தோழி தலைவியாற்றாமையும் இவ்வொழுக்கம் புறத்தார் அறியப்படுகின்றமையுங் கூறி வரைவுகடாயது.

(௧ - ௭) ஆமிழி . . . .

நன்னாட:—

(இ - ள்.) எட்டுத்திசையுங் காத்தற்றொழிலை மேற்கோடற்குப் பொருந்தினவாய்ப், பகைத்தவை எதிர்நில்லாத மிக்க வலியினையும் விளக்கத்தைத் தருகின்ற கமழ்கின்ற மதத்தான் நனைந்த கவுளினையும் நீர் வீழ்கின்ற அழகினையுடைய மலையிடத்துத் தேனினம் மொய்க்கும் பூக்களையுடைய வேங்கையினது அழகுபோல வண்டுகள் ஊதுகின்ற புகரினையுடைத்தாகிய முகத்தினையுமுடைய சொரியும் மழையையுடைத்தாகிய பக்கமலை

(பாடம்) 1. கங்குலின்.

யிடத்தனவும், பெருமையையுடைய விசும்பிலே வளர்ந்த மிகுதியையுடை
தாகிய மரங்களையுடைய ஆற்றிடைக் குறையிடத்தனவுமாகிய, பெரி
யானைத்திரள்களோடே வீங்கின கழுத்தினையும் மிக்க வலியினையுமுடை
பெரிய புலி மாறுபாட்டாலே போர்செய்தலுற்ற மலையினையுடைய நல்
நாடனே!

'திசைகாவல் கொளற்கொத்த' என்றதனால் உலகைத் தாங்குதற்கு
உரியனென்றும், 'வலிமுன்பின்' என்றதனான் மிக்க வலியினையுடையனென்
றும், 'நனைகவுள்' என்றதனாற் செல்வச் செருக்குடையனென்றும், 'வண்டூ
புகர்முகம்' என்றதனாற் பலர்க்கும்[1] பயன்படுகின்றானென்றும் இருவகை
சுற்றத்திற்கும் ஏற்றுக. இருவகைச் சுற்றமாவன, தலைவியுடைய தந்
சுற்றமுந் தாய்சுற்றமுமாம். இருவகைய [2] வாகிய * களிற்றோடே 'புல
மயக்குற்ற' என்றதனான் இருவகைச் சுற்றத்தாருடனே ஊரிலுள்ளார் தலை
வியை அலர்கூறிப் பகைக்கின்றாரென உள்ளுறையுவமங் கொள்க. இத
வினையுவமப்போலி.

(அ - கக) வீழ்பெயற் . . . . யுதபவால்:—

(இ - ள்.) தாழிட்டு அடைத்தாற்போலுங் கடிய காவலையுடைய தாய் முன்னே, நின்னுடைய மலைச்சாரலிலே முறைமையையுற்ற கோடல் உரு மாறுபோலே ஒளியினையுடைய வளைகள் உகுவனவாய் இராநின்றன; இங் ஙனமாதற்கு, இடைவிடாது வீழ்கின்ற மழையையுடைய இராக்காலத்து நின்னுடைய குறியால் அழைக்கின்ற அழைப்பினைச் செவிகருவியாக ஓர்த் ததனாலுண்டான மனவொடுக்கத்தாலே உயிர்வாழ்கின்ற நாள் மிக்கவ ளுடைய வருந்துகின்ற தோளிடத்து அவை நினக்குச்செய்த தப்பு உண்டோ ? இல்லையே;

'உகுப' : அகரவீற்றுப் பலவறிசொல், படுத்தலோசையாற் பெயராய் நின்றது.

(கஉ - கடு) இனையிந் . . . . . கலுழ்பவால்:—

(இ - ள்.) இவ்வாறே ஒரு களவொழுக்கமுடையளென்று உயர்த்துக் கூப்பிடுகின்ற அயலார்முன்னே நின்னுடைய சுனையிடத்துச் செறிந்த மழையையேற்ற நீலம்போலே கண்கள் நீர் சொரிவனவா யிராநின்றன ; இங்ஙனமாதற்கு, இது யாம் வருந்துதற்கு ஏதுவாகிய இருளென்றேங்கி நின் வருதற்றொழிலை நச்சி நினைத்தலாலுண்டான வருத்தத்திலே வருந்து கின்றவளுடைய துயிலில்லாத கண்ணிடத்து அவை நினக்குச் செய்த பழிகளுண்டோ ; இல்லையே ;

---

* கிரிசரம், நதிசரம் என்ற இருவகை.

(பாடம்) 1. பரக்கும்.

2. இவ்வகையவாகிய,

கசுக

கலித்தொகை

[கலி - ௨௬

(கசு—கக) பன்ணும்

துரைப்பதால் :—

(இ - ள்.) நுரைகளையுடைய இனிய சின்னீர் வந்து ஆரவாரிக்கும் இளவேனிற்காலத்தே நின்னுடைய சோலையில் ஒளிகெட்ட தளிரையொத்த நிறக்கேடு வந்து பலர்க்குங் கூறுவதாயிராநின்றது ; இங்ஙனமாதற்குப் பல நாளும் நினைவு வருத்துகையினுலே பசலையாலே நுகரப்பட்டவளுடைய பொன்னையுரைத்ததொரு மணியுண்டாயின் அதனை யொத்த பசலை* பரந்த மாமை நிறத்தின்கண் அது செய்த பழிகளுண்டோ ? இல்லையே ;

(உ0) எனவாங்க :—

அசை.

(உக—உரு) பின்னீதல்

பெரிதே:—

(இ - ள்.) அவன் அங்ஙனமான இடத்து அவன் பூப்போலுங் கண் பாடின்மையை நீவிப் படுதற்கும் யான் அஞ்சுவேன்; அதற்குக் காரண மென்னெனில், அத்துயிலிடை நினைத்து வருந்தத் தக்க கனவாற் பின்னர்த் தாங்கிய அரிய வருத்தத்தால் உற்ற கேட்டைத் தூக்கிப் பார்க்கில் அஃது எல்லை யறியவொண்ணாத மலையினும் பெரிதாயிராநின்றது; இனி இவ் வருத்தம் உறாதபடி நீ வரையாமற் பிரியப்பட்டாளோடு கொண்ட உறவு பின்னுதலை நீ கொடுத்தல் வேண்டும்;

பின்னுதல் 'பின்'னென நின்றது. "பின்னி தொடர்"நிலை[1] என்றார் † பிறரும். துயில்கொள்ளாமையைத் துடைத்து என்க.

இதனாற் றலைவற்கு அசைவு பிறந்தது.

இது தரவுந் தாழிசையுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி.

(கஉ)

சுகூ.

கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு
நெடுவரை மருங்கிற் றுஞ்சும் யானை
நனவிற்றான் செய்தது மனத்த தாகலிற்
கனவிற் கண்டு கதுமென வெரீஇப்
ரு. புதுவ தாக மலர்ந்த வேங்கையை

யதுவென வுணர்ந்தத னணிநல முருக்கிப்
பேணா முன்பிற்றன் சினந்தணிந் தம்மரங்

---

* நற். ௧௦௪ : ௯.
(பாடம்) 1. பின்னியகொ... ‡ கலி. ௧௫ : ௧௮.

குறிஞ்சிக்கலி

௧௪௭

காணும் பொழுதி னோக்கல் செல்லாது
நாணி யிறைஞ்சு நன்மலை நன்னாட ;

போதெழின் மலருண்க ணிவண்மாட்டு நீயின்ன

காதலை யென்பதோ
வினிதுமற் றின்றே
பின்னேருங் கண்ணாக
விடியென்னுய் பெயலென்று
யின்னதோ ரரிடை
யீங்குநீ வருவதை ;

இன்புற வளித்தனை யிவண்மட்டு நீயின்ன
கடு. வன்பினை யென்பதோ வினிதுமற் றின்றே

மணங்கமழ் மார்பினை
மஞ்சிவ ரடுக்கம்போழ்ந்
தணங்குடை யாரிடை
யீங்குநீ வருவதை ;

இருளூற ழிருங்கூந்த லிவண்மாட்டு நீயின்ன
வருளினை யென்பதோ வினிதுமற் றின்றுதே
யொளிறுவேல் வலனேந்தி யொருவன்யா னென்றுது
களிறியங் காரிடை யீங்குநீ வருவதை;

அதனால்,

இரவின் வார லைய விரவுவீ
யகலறை வரிக்குஞ் சாரற்
பகலும் பெறுவையிவ டடமென் றோளே.

இது நீரிவ்வாறு வருகின்ற வரவு எமக்குத் துன்பத்திற்குக் காரணமாகாநின்ற தெனக் கூறி இரவுவருவானைத் தோழி பகல்வருகவென்றது.

(க - கூ) கோடுவரி . . . . நன்றுட :—

(இ - ள்.) வளைந்தவரியினையுடைய புலி வந்து போர்செய்கையினாலே அதனை வென்ற வருத்தத்தோடே நெடிய மலையிடத்தே துயில்கொள்ளும் யானை மெய்யான காலத்தே தான் பொருதுவென்றது மனத்திடத்தே கிடக்கையாலே, அதனைப் பொய்யான காலத்தே கண்டு கடுக வெருவி* எழுந்திருந்து புதிதாக மலர்ந்துநின்ற வேங்கைமரத்தைப் புலியென் றுணர்ந்து அம்மரத்தினுடைய அழகிய நலத்தைக் கெடுத்துத் தன் வலியினாற் பேணாத சினம் மாறி அவ்வேங்கையைக் காணுங்காலத்து அதனைப்பார்த்தலைச் செய்யாமல் நாணிக் கவிழ்ந்துபோன நன்றாகிய மலை நாடனே!

புலியினைவென்று துயிலும் யானை அயலார்கூறிய அலரைச் சுற்றத் தார்க்குப் பொய்யெனத் தேற்றி மனைக்கட் டுயில்கின்ற தலைவியாகவும்,

---

கசஅ

கலித்தொகை

[கலி - ௪௯

கனவிற்கண்டு வெருவின தன்மை

அத்தலைவி கனவில் தான் அங்ஙனஞ்
செய்ததெல்லாந் தன் மனத்ததாகலின்
அச்செயலைக் கனவினுங்கண்டு அவள்
வெருவின தன்மையாகவும், வேங்கையை
நலங்கெடுத்தமை தோழி அவனது

னவொழுக்கத்திற்கு உடம்பட்டுக் கொடுமைசெய்து ஒழுகுகின்றாளென்று
தலைவி தோழியை வருத்தியதாகவும், அது சினந்தணிந்த தன்மை தோழி
ருத்தறியாமல்[1] அவளைக் கொடுமை கூறினேமென்று தலைவி உட்கொண்ட
தன்மையாகவும், அஃது அதனை நோக்காது இறைஞ்சுகின்ற தன்மை

பாழும் இவள் வருந்த இங்ஙனங்
கூறினேமென்று எதிர்முகமாக
மகிழ்ந்து[2]

நோக்காது தலைவி நாணி இறைஞ்சியிருக்கின்ற
றையுவமங் கொள்க. இது வினையுவமப்போலி.
தன்மையாகவும் உள்

(கo–கரு) போதேழின்

. . . வருவதை :—

(இ - ள்.) அலரும் பருவத்ததாய் அழகினையுடைத்தாகிய மலர்போலும் மையுண்கண்ணினையுடைய இவளிடத்து நீ இன்றியமையாத காதலையுடையையென்று கூறுகின்ற வார்த்தையோ இனிது; இஃதொழிய வழியை ஆராய்ந்து பார்க்குங் கண் மின்னாக இடியென்று கருதாயாய் மழையென்று கருதாயாய் இப்பெற்றித்தானதோர் அரிய வழியிலே இவ்விடத்தேற நீ வருகின்ற நிலைமை எமக்கு இன்னாது;

(கச—கஎ) இன்புற . . . . வருவதை :—

(இ - ள்.) இவள் இன்புறும்படி அளித்தாயாகையினாலே இவளிடத்து நீ இன்றியமையாத அன்பினையுடையையென்று கூறுகின்ற வார்த்தையோ இனிது; அஃதொழிய மணம் நாறுகின்ற மார்பினையுடையையாய் மஞ்சு பரக்கின்ற பக்கமலையை ஊடறுத்துச் சூரரமகளிரையுடைய அரிய வழியிலே இவ்விடத்தேற நீ வருகின்ற நிலைமை எமக்கு இன்னாது;

(கஅ—உக) இருளுற . . . . வருவதை :—

(இ - ள்.) இருளோடே மாறுபடுகின்ற கரிய கூந்தலையுடைய இவளிடத்து நீ இன்றியமையாத அருளினையுடையையென்று கூறுகின்ற வார்த்தையோ இனிது; அஃதொழிய விளங்குகின்ற வேலை வலக்கையிலே எடுத்து யான் ஒருவனென்று கருதாதே யானை உலாவுகின்ற அரிய வழியிலே இவ்விடத்தேற நீ வருகின்ற நிலைமை எமக்கு இன்னாது;
ஒருவனென்றது இவ்வுலகத்துக்குத் தலைவனென்றது.

(உஉ) அதனால்:—

அசை ;

(பாடம்). 1. தோழிக்குத் தெரியாமல். 2. எதிர்முகமாகவும் இழிந்த.

குறிஞ்சி - கசு]

குறிஞ்சிக்கலி

கசுகூ

(உகூ - உகு) இரவின்

. . . , றேளே:—

(இ - ள்.) அவ்வின்னுமையால் எமக்குத் துன்பம் வருதலின், ஐய இனி இராக்காலத்து வாராதே கொள்; இவளுடைய பெருமையை யுடைய மெல்லிய தோள்களை விரவிய பூக்கள் அகன்ற பாறையிலே கோலஞ்செய்யும் மலைச்சாரலிடத்தே பகற்காலத்தும் பெறுவை.

இதனாற் றலைவற்குச் சூழ்ச்சி பிறந்தது.

இது தரவிற் குறைந்த

சுரிதகம்பெற்ற ஒத்தாழிசைக்கலி.

ரு0.

வாங்குகோ னெல்லொடு வாங்கி வருவைகன்
மூங்கின் மிசைந்த முழந்தா ளிரும்பிடி
தூங்கிலை வாழை நளிபுக்கு[1] ஞாங்கர்
வருடை மடமறி யூர்விடைத் துஞ்சு
மிருடூங்கு சோலை யிலங்குநீர் வெற்ப;

அரவின் பொறியு மணங்கும் புணர்ந்த
வுரவுவின் மேலசைத்த கையை யொராங்கு
நிரைவளை முன்கையென் றோழியை நோக்கிப்
படிகிளி பாயும் பசுங்குர[2] லேனல்
கடிதன் மறப்பித்தா யாயி னினிநீ
நெடிதுள்ள லோம்புதல் வேண்டு மிவளே
பல்கோட் பலவின் பயிர்ப்புறு தீங்கனி
யல்கறைக் கொண்டூ ணமலைச் சிறுகுடி
நல்கூர்ந்தார் செல்வ மகள்;

நீயே, வளியி னியன்மிகுந்[3] தேருங் களிறுந்
தளியிற் சிறந்தனை வந்த புலவர்க்[4]
களியொடு கைதூ வலை;

அதனாற்,

கடுமா கடவுறூஉங் கோல்போ லெனைத்துங் —
௨0. கொடுமையிலை யாவ தறிந்து மடுப்பல்

வழைவளர் சாரல்

வருடை நன்மான்[5]

குழவி வளர்ப்பவர் போலப் பாராட்டி

(பாடம்) 1. கனிபுக்கு. 2. பைங்குர. 3. இகன்மிகுக். 4, புலவற். 5. வரிவனை தன்மான்.

கரு0

கலித்தொகை

[கலி - ௫0

யுழையிற் பிரியிற் பிரியு

மிழையணி யல்குலென்

1 றேழியது கவினே. இது "புணர்ந்த பின் அவன்வயின் வணங்கற்கண்" * தோழி கூறியது. அது ! தோழியிற் கூட்டம் நிகழ்ந்தபின் முற்காலத்துப் பணிந்து பின்னின்றேனைத் தோழி தானே பணிந்தொழுகுதலாம்.

(க - ரு) வாங்குகோ . . . . வெற்ப:—

(இ - ள்.) தானே வளைகின்ற மூங்கிலின் கோலை செல்லுடனே வளைத்துத் தின்கின்ற முழந்தாளையுடைய கரிய பிடி அம்மலைக்கட் செறிந்த இலையினுடைய வாழை செறிந்த இடத்தேபுகுந்து,

ஆங்கண் வருடைமானி னது மடப்பத்தையுடைய மறி பார்த்துதிரிகின்ற இடத்தே, ஞாயிறு தோன்றுகின்ற விடியற்காலத்தே, துயில்கொள்ளும் இருள்செறியுஞ் சோலையினையும் விளங்குகின்ற நீரினையுமுடைய வெற்பனே!

மூங்கில் மிசைந்த பிடி தம்மிடத்துத் தாழ்ந்த அரிய தலைவனை அன்புடனே பெற்று நுகர்ந்த தலைவியாகவும், பின்னர் அது வாழைச்செறிவிலே புகுந்து அப்பழத்தை நுகர்ந்த தன்மை அவன் வரைந்து கொண்டபின் அவன்

மனைக்கண் நலிவற இருந்து அவனை நுகர்ந்ததாகவும், புலிமுதலியனவின்றி மறி ஊரிடத்துத் துயிலுதல் அலர் கூறுவாரின்றி அவன் சுற்றத்திடை இல்லறம் நிகழ்த்தித் தங்குந் தன்மையாகவும் உள்ளுறையுவமங் கொள்க. இது வினையுவமப்போலி.

(சு - கச) அரவின் . . . . மகள்:—

(இ - ள்.) பாம்பின் பொறிபோலும் பொறிகளும் பகைவரை வருத்தலுங் கூடின வலியினையுடைய வில்லின் மேலே வைத்த கையினையுடையையாய் நின்று நிரைத்த வளையணிந்த முன்கையையுடைய என் தோழியைக் காமக் குறிப்பு அவட்கு நிகழும்படி நோக்கிப், படிகின்ற கிளிகள் பரக்கும் பசிய கதிரையுடைய புனத்திற் கிளியைக் கடிதலை ஒருபடிப்பட மறப்பித்து, நின் வயத்தாளாக்கியே விட்டாயாயின், இனி நீ இடையீடாது நினைத்தலைப் பாதுகாத்தலை இவள் விரும்பும்; இவள் பல குலைகளையுடைய பலாவினது பிசினையுடைத்தாகிய இடத்தையுடைய இனிய பழம் வீழ்ந்து கிடந்த பாறையிடத்தே எடுத்துக்கொண்டு உண்ணும் ஊணினையும் பெருஞ் சோற்றுத்திரளையுமுடைய சிறிய குடியிலிருக்கும்[2] பிள்ளையான் மிடிப்பட்டாருடைய செல்வத்தையுடைய மகள்; † ஆதலான் நின்னைப் பிரிந்து வருந்துதலாற்றாள்;

---

* தொல். பொருள் : கக௪. † குறள் - சுஙு.

(பாடம்) 1. பாகத்தென். 2. குடிவிலிருக்கும்.

நற்ஞ்ச - கரு]

குறிஞ்சிக்கலி

கருக

'இவ' ளென்றது, படர்க்கையை முன்னிலையாகக் கூறியது. "ஊன் சோற் றமலை பாண்கடும் பருத் தும்" * என்ருர் பிறரும்.

(கரு-உ௪) நீயே . . . . கவினே :—

(இ - ள்.) நீ காற்றினுங் காட்டிற் போதற் ஞெழிலிலே மிக்குச் செல்லுந் தேரையுங் களிற்றையும் நின்பால் வந்த புலவர்க்குக்

கொடுத்தலாற் கையொழிந்திருத்த
லிலையாய் மழையினும்
அருள்சிறந்தாய்; ஆகையினாலே யானுஞ்
சுரபுன்னை வளர்ந்த மலைச்சாரலிற்
றிரியும் வருடையாகிய நல்ல மானின்
மறியை வளர்ப்பாரைப்போலே
முன்னர் நீங்காமற் பாராட்டி,
அவளிடத்துநின்றும் பிரிவையாயின்
மேகலை யணிந்த அல்குலை யுடைய
என்றோழியது கவினும் நீங்கும்;
அதற்காகக், கடிதாகிய மாவைப்
பின்னுங் கடிதாகச் செலுத்துந்
தாற்றுக்கோல்போலே சிறிதுங்
கொடுமையை யுடையையல்லையாந்
தன்மை அறிந்திருந்தும் அவளை

நின்னிடத்தே சேர்த்துவேன்;

இதனாற் றலைவற்குப்
புணர்ச்சியுவகை பிறந்தது.

இது தரவும்
வெண்பாட்டொன்றும் அதன்பின்னர்
ஐஞ்சீர் அடுக்கிய
குறுவெண்பாட்டொன்றுந்
தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்ற
கலிவெண் பாட்டு.

(கச)

௫க.

சுடர்த்தொடீஇ கேளாய்

தெருவினு மாடு

மணற்சிற்றில் காலிற்
சிதையா வடைச்சிய

கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி † மேலோர்நா

ரு. என்னையும் யானு
மிருந்தேமா வில்லிரே

யுண்ணுநீர் வேட்டே
னெனவந்தாற் கன்னை

யடர்பொற் சிரகத்தால்
வாக்கிச் சுடரிழா

யுண்ணுநீ ரூட்டிவா வென்றா ளெனயானுந்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
௧௦. வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
வன்னை யலறிப் படர்தரத்
தன்னையா
னுண்ணுநீர் விக்கினா
னென்றேனா வன்னையுந்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்

---

* புறம். ௧௧: ௧௪. † குறள். ௧௦௭௪.

௩௫. கடைக்கணாற் கொல்வான்போ
னோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்.

இது "புகாஅக் காலைப் புக்கெதிர்ப்
பட்டுழிப், பகாஅ விருந்தின் பகுதிக்கண்"
*

தலைவி தோழிக்குக் கூறியது.

(இ - ள்.) ஒளிபொருந்தின
வளையினையுடையாய்! ஈதொன்றைக்
கேளாய்! தெருவிடத்து நாம் உண்டிகளை

ஆடும் மணலாற் செய்த சிற்றிலைக் காலால் அழித்துக் கூந்தலிலே அடைவித்த கோதையை அறுத்து வரியினையுடைய பந்தை எடுத்துக்கொண்டு ஓடி நாம் நோவத்தக்க தொழில்களைச் செய்யுஞ் சிறியனாகிய காவலில்லாதவன், முன்னொரு நாளிலே, அன்னையும் யானுஞ் சேர இருந்த அளவிலே, "இல்லில் உறைகின்றவர்களே! உண்ணப்படுந் தண்ணீரை வேட்டேன்" எனச் சொல்லி வந்தவனுக்கு, அன்னை, "விளங்குகின்ற பூணினையுடையாய்! உண்ணு நீரைத் தகட்டுப் பொன்னாற் செய்த கரகத்தாலே வார்த்து

உண்ணப்பண்ணுவித்து வா"வென்று சொன்னாள்; என்று சொல்லுகையினாலே யானுஞ் சிறுபட்டியாயிருக்கின்ற தன்னை அறியாதே சென்றேன்; சென்ற பின்னை அவன் என்னுடைய வளையணிந்த முன் கையைப் பிடித்து என்னை நலிகையினாலே அலமந்து, "தாயே! இவ னொருவன் செய்ததோர் செயலைப் பாரா" யென்றேனாக, அத்தாயும் கூப்பிட்டு ஓடி வருதலைச் செய்ய, அதனை மறைத்து அங்ஙனஞ் செய்ததனை யான், "உண்ணுநீர் விக்கி வருந்தினான்கா"ணென்று ஓர் பொய்யைக் கூறினேனாக, அத்தாயுந் தன்னை முதுகைப் பலகால்

அழித்தழித்துத் தடவப், பின்னை என்னைத் தன் கடைக்கண்ணாலே கொல்வான்போலே பார்த்துத், தன் மனமகிழ்ச்சியைத் தருங் கூட்டத்தை அக்கள்வனாகிய மகன் செய்தான்! இதுகாண் நிகழ்ந்தது.

இதனைக் கேட்டுழித் தலைவி இருவகைக் குறியும் பிழைத்தலிற் "காணா வகையிற் பொழுதுநனி யிகப்பினுந், தானகம் புகாஅன் பெயர்த லின்மையிற், காட்சி யாசையிற் களம்புக்குக் கலங்கிக்" * கையற்றாற்போலத் தலைவனும் இருவகைக் குறியும் பிழைத்தலிற் றலைவியைக் காணாக் காட்சியாசையிற் கலங்கி வேட்கையின். மயங்கினானாதலின், நம் மனைக்கண்ணே

உண்டிக்காலத்தைக் கருதி வந்து தன்
ஆற்

ருமை மிகுதியான் இவளை முன்கைபற்றி நலித்தான்;[1] இவளும் அதனை மறைத்து விட்டாள்; இனி இவட்கும் அவனைக் கூடுதல் கருத்தாயிருந்தது; இனி, அவனைக் கூடுவளெனத் தோழி கருதுவளாதலின் வேறுமொரு பொருள் நுதலிவந்ததாயிற்று.

---

* தொல். பொருள்: கoஎ.

(பாடம்) 1. நலிக்தான்.

[illegible]

குறுஞ்சககல

கருக

'நோதக்க செய்யுஞ் சிறுபட்டி'

யென்றதனுன் ஒருவிலமாயிற்று, 'கடைக் கணூற் கொல்வான்போ ஞேக்கி' யென்றதன்கட் கண்ணிற்குக் கொலைத் தொழில் கூறிற்று. அது வினையுவமத்தின் வகை.

இதனுற் ருேழிக்கு நினைத்தல் பிறந்தது.

"ஒருபொரு ளுதலிய வெள்ளடியியலால்"*

என்பதனுள் "இய"வென்ற ,தனுற் பன்னீரடியின் இகந்து ஒருபொரு ளுதலிவருங் கலிவெண்பாட்டும் உளவென்று கோடலின், இது பன்னீரடியின் இகந்து ஒருபொருளுதலிவந்த

௫௨.

முறஞ்செவி மறைப்பாய்பு முரண்செய்த புலிசெற்று
மறந்தலைக் கொண்ட நூற்றுவர் தலைவனைக்
குறங்கறுத் திடுவான்போற் கூர்நுதி மடுத்தத
னிறஞ்சாடி முரண்டீர்ந்த நீண்மருப் பெழில்யானை
மல்லரை மறஞ்சாய்த்த மால்போற்றன் கிளைநாப்பட்
கல்லுயர் நனஞ்சாரற் கலந்தியலு நாடகேள் ;
தாமரைக் கண்ணியை தண்ணறுஞ் சாந்தினை

நேரிதழ்க் கோதையாள்
செய்குறி நீவரின்

மணங்கமழ் நாற்றத்த
மலைநின்று பலிபெறூஉ

மணங்கெனை வஞ்சுவர் சிறுகுடி
யோரே ;
ஈர்ந்த

ஞாடையை யெல்லி மாலையை
சோர்ந்துவீழ் கதுப்பிளுள்
செய்குறி நீவரி

ஞெளிதிகழ் ஞெகிழியர் கவணையர் வில்லர்
களிறெனை வார்ப்பவ ரேனல்கா வலரே ;

கரு. ஆர மார்பினை யண்ணலை
யளியை
யைதக லல்குலாள் செய்குறி
நீவரிற்
கறிவளர் சிலம்பில் வழங்க
லாளுப்[1] புலியென்

ரோர்க்குமிக் கலிகே 2 ழூரே ;

எனவரிகரு,

உ0. விலங்கோரார் மெய்யோர்ப்பி
னிவள்வா ழா னிவளன் றிப்

புலம்புக ஹொருவ யா னும் வாழேன்

* தொல். பொருள்: சகூ௫.

(பாடம்) 1. செறிதலாளுப். 2.
கலிகெ.

20

கரு௪

கலித்தொகை [கலி
- ௫உ

அதனற், பொ தியவிழ்[1]

வைகறை வந்துநீ குறைகூறி
வதுவை யயர்தல்
வேண்டுவ லாங்குப்
புதுவை போலுநின் வரவுமிவள்
வதுவைநா
ளெடுக்கமுங் காண்குவல் யானே.

இஃது இரவுக்குறிவந்த தலைவனை எதிர்ப்பட்டுத் தோழி இரவுக்குறியது ஏதமும் ஏதத்தால் வருந் துன்பமுந் தன் உள்ளத்து விழைவுங் கூறி வரைவு கடாயது.

(க—சு) முறஞ்செவி

நாடகேள் :—

(இ - ள்.) முறம்போலுஞ் செவியாகிய மறைப்பிடமாக வந்து பாய்ந்த மாறுபாடுசெய்த புலியைக் கோபித்து, மறத்தைத் தம்மிடத்தே கொண்ட

நூற்றுவர்க்குத் தலைவனாகிய துரியோதனனைக் குறங்கில் உயிரைப் போக்கு கின்ற பீமசேனனைப்போலே, தன்னுடைய நீண்ட கோட்டினுடைய[2] கூரிய முனையாலே குத்திப், புலியினது மருமத்தைத் திறந்து மாறுபாடு தீர்ந்த அழகினையுடைய யானை, மல்லரை மறத்தைக் கெடுத்த திருமால் போலே, கல்லுயர்ந்த அகற்சியையுடைய சாரலிற் றன் சுற்றத்திற்கு நடுவே கூடித்திரியும் நாடனே! யான் கூறுகின்றதனைக் கேட்பாயாக!

'முறஞ்செவி......செற்'றென்பது உறுப்பறைபற்றிய வெகுளி.

'மால்போ' லென்பது பெருமிதம்பற்றிய உவமம். செவிமறைப்பப் பாய்ந்த புலியைச் செற்ற தன்மை தமது களவொழுக்கமிடமாக அலர்கூறிய அயலாரைக் கோபித்ததாகவும், அதனைக் குத்தி மாறுபாடு தீர்ந்த யானை தலைவன் வரைந்துகொண்டால் அயலாரைத் தாம்வென்ற தன்மையாகவும், யானை கிளைகாப்பட் கலந்தியலுதல் இனித் தலைவன் சுற்றத்தாரிடைப் பொருந்தியிருந்து இல்லறம் நிகழ்த்துந் தன்மையாகவும் உள்ளுறையுவமங் கொள்க. இது வினையுவமப்போலி.

'குறங்கறுத்திடுவான்போல்', 'மால்போ' லென்பன வினையுவமம். அவையும் உள்ளுறையுவமத்திற்குச் சிறப்புக்கொடுத்து உள்ளுறை யுவமம்போலத் திணையுணர்தலைத் தள்ளாவாய் நின்றன.

(எ-கO) தாமரைக் . . . . யோரே :—

(இ - ள்.) தாமரைப் பூவாற் செய்த கண்ணியையுடையையாய்த், தண்ணிய நறிய சந்தனத்தையுடையையாய், ஒத்த இதழாற் கட்டின கோதையையுடையாள் செய்த குறியிடத்தே நீ வருவையாயின், மணம் நாறுகின்ற நாற்றத்தையுடையவாய மலைக்கண்ணே நின்று பலியைக் கொள்ளும் அணங்குகளிலே ஓர் அணங்கென்று கருதிச் சிறுகுடியிலுள்ளோர் அஞ்சுவர் ;

(பாடம்) 1. போதவிழ். 2. கோட்டினையுடைய.

குறிஞ்சி - கசு]

குறிஞ்சிக்கலி

கரு(ரு)

தாமரைப்பூக் குறிஞ்சிக்கண்

வந்தது.

(கக-கச) ஈர்ந்த . . . .

வலரே :—

(இ - ள்.) பகற்காலத்துத் தீர்த்தமாடுகின்ற நின் ஒழுக்கத்திற்கேற்ற ஈரத்தினுற் றண்ணிதாகிய ஆடையை யுடையையாய், இராக்காலத்துப் புணர்ச்சிக்கு உரியனவற்றை அணிகின்ற இயல்பினையுடையையாய், நீ வரைந்து கோடலைக் குலைந்து ஆயத்தார் விரும்புகின்ற மயிரினையுடையாள் செய்த குறியிலே வருவையாயின், நீ [1] கோடு முதலியவற்றைக் குறித்துச் செய்யுங் குறிகளாலே, ஒளி விளங்குகின்ற குறைக்கொள்ளியையுடையராய்க் கல்லெறியுங் கவணையுடையராய் வில்லினையுடையராய்க் களிறு வந்ததென்று கருதித் தினைப்புனத்தைக் காக்கின்றவர்கள் ஆரவாரிப்பார்கள்;

மாலை முதலியன பாரத்தாற் குலைந்து வீழ்கின்ற கதுப்புமாம்.

(கரு-கஅ) ஆர . . . . ழூரே :—

(இ - ள்.) ஆரம் அணிந்த மார்பினையுடையையாய்த், தலைமையையுடையையாய், அருளுடையையாய், மெல்லிதாயகன்ற வல்குலையுடையாள் செய்த குறியிலே நீ வருவையாயின், நின்னைக் கண்டு விலங்கு முதலியன வெருவி ஓடுகின்ற ஓசையாலே, மிளகு வளர்ந்த மலையிலே உலாவு தலை அமையாத புலியென்று இந்தச் செருக்குப் பொருந்தின ஊர் ஓா

நிற்கும் ;

(க்சு)

எனவாங்கு :—

அசை.

(உ௦-உ௫) விலங்கோரார்

. . . யானே :—

(இ - ள்.) யாவரும் அறிவைப் புகழப்படும் ஒப்பில்லாதவனே! அங்ஙனம் அவர் வேறாக ஓராராய், மெய்யாக ஓர்ப்பராயின் இக்களவொழுக்கம் அறிந்தாரென்று இவள் உயிர்கொண்டிராள் ; இவளையொழிந்து யான் உயிர் வாழேன் ; ஆகையினாலே நீ நின் காரியத்தினைப் பலர்க்குக் கூறி அவர் உடன்பட்ட பின்பு பூக்கள் அலர்கின்ற விடியற்காலத்திலே வந்து வரைந்து கொள்ளுதலை விரும்பாநின்றேன் ; அதற்குக் காரணம் என்னெனில், அப்பொழுது நீ புதியாய்போல வரும் நின் வரவையும், இவள் கலியாணத்திற் றோன்றிய நாணால் ஒடுங்கியிருக்கும் ஒடுக்கத்தையும் யான் காண்பேனாதலா லென்றாள்.

ஏகாரம் பிரிநிலை.

இவர்கள் முன்னர்க் களவொழுக்கம் ஒழுகியவாறும், அக்காலத்து அவன் புதியனாக நடித்தவாறும், இவள் ஒடுங்கியிருந்தவாறும் . பிறர் அறியா

(பா - ம்) 1. இக்.

ராதலின், இத்தாழிசைகள் "பொழுது மாறுங் காப்புமென் றிவற்றின்"* என்னும் பொருளியற் சூத்திரத்திற் கூறிய காப்பின் வழுவுணர்த்தியன, இதனாற் றலைவர்க்குச் சூழ்ச்சி பிறந்தது.

"ஏவன் மாபி னேரேரும்" † என்னுஞ் சூத்திரத்தில் நால்வகை வருணத்தாருங் களவொழுக்கத்திற்கு உரியரென்றலின் அந்தணன் கள

வொழுக்கங் கூறினர்.

இது தரவுந் தாழிசைக்குஞ் சிறிதுபொருந்திய இடைநிலைப் பாட்டுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி.

(கசு)

ருங.

வறனுற லறியாத வழையமை நறுஞ்சாரல்

விறன்மலை வியலறை வீழ்பிடி யுழையதா

மறமிகு வேழந்தன் மாறுகொண் மைந்தினாற்
புகர்நுதல் புண்செய்த புய்கோடு போல
வுயர்முகை நறுங்காந்த ணாடோறும் புதிதீன
வயனந்தி யணிபெற வருவியார்த் திழிதரும்
பயமழை தலைஇய பாடுசால் விறல்வெற்ப;

மறையினின் மணந்தாங்கே மருவறத் [1] துறந்தபி
னிறைவளை நெகிழ்போட வேற்பவு மொல்லும
னயலலர் தூற்றலி னாய்நல னிழந்தகண்
கயலுமிழ் நீர்போலக் கண்பனி கலுழாக்கால்;

இனியசெய் தகன்றுநீ யின்னாத துறத்தலிற்
பனியிவள் படரெனப் பரவாமை யொல்லும
னூரலர் தூற்றலி னொளியோடி நறுநுதல்
பீரல ரணிகொண்டு பிறைவனப் பிழவாக்கால்;

அஞ்சலென் றகன்றநீ யருளாது துறத்தலி
னெஞ்சழி துயரட நிறுப்பவு மியையும
னனவினா னலம்வாட நலிந்த நடுங்கஞர்
கனவினா லழிவுற்றுக் கங்குலு மாற்றாக்கால்;

எனவாங்கு,

---

* தொல். பொருள்: உ௪o. † தொல். பொருள்: உ௪.
(பாடம்) 1. மருவுறத்.

குறிஞ்சிக்கலி

கரு௭

விளியாநோ யுழந்தாநு
வென்றோழி நின்மலை
முளிவுற வருந்திய முளைமுதிர்
சிறுதினை
தளிபெறத் தகைபெற்
றாங்குநின்
னளிபெற நந்துமிவ
ளாய்நுதற் கவினே.

இஃது ஒருவழித்தணந்து வந்த
தலைவற்குத் தோழி தலைவியாற்றுமையும்

ஆற்று

வித்தலதருமையுஞ் சொல்லி

வரைவுகடாயது.

(க—எ) வறனுற . .

. . விறல்வெற்ப :—

(இ - ள்.) வற்கட முறுதலை அறியாத சுரபுன்னை நெருங்கின நறிய பக்கமலையினையும்

விறலினையுமுடைய மலையிடத்து அகற்சியையுடைய

பாறையிடத்தே உறையுந் தான் விரும்பின பிடி தன்னிடத்தேயாகையினாலே தனக்கு மாறாகிய யானையைத் தன் நெஞ்சிடத்துக்கொண்ட வலியினாலே அதன் புகரையுடைய தலைப் புண்ணாக்கின மறமிகுகின்ற வேழங் குத்திவாங்கின கொம்புபோல உயர்ந்த முகையினையுடைய நறிய காந்தள் நாடோறும் புதுமையையுண்டாக்கப் பள்ளங்களெல்லாம் நீர் நிறைந்து

அழகுபெறும்படி அருவிகள் ஆரவாரித்துக் குதித்தற்குக் காரணமான பயனைத்தரும் மழையையிடத்தேகொண்ட பெருமையமைந்த வெற்றியையுடைய வெற்பனே!

நறியகாந்தள், குத்திவாங்கின கொடிய கொம்புபோல, நாடோறும் அரும்பு ஈன என்றதற்கு, நற்குணமுடைய நீ வரையாதிருத்தலிற் கொடியையாய்த் தோன்றாநின்றாயென்றும்; அயல் நந்தி அணிபெறும்படி அருவியார்த்து இழிதற்குக் காரணமான மழைதழீஇய வெற்பென்றதற்கு, அயலாரிடத்தே நிலைபெறும்படி அலராகாநின்றது நீ இங்ஙனம் வந்து செய்கின்ற தலையளியென்றும் உள்ளுறையுவமங் கொள்க. இது பயவுவமப்போலி.

'கோடுபோல'வென்ற ஏனையுவமம் உள்ளுறையுவமத்திற்குச் சிறப்புக் கொடுத்து உள்ளுறையுவமம் போலத் திணையுணர்தலைத் தன்னாதாகி நின்றது.

(அ—கக) மறையினின்

கலுழாக்கால்:—

(இ - ள்.) அயலிலுள்ளார் அலர் தூற்றுகையினாலே கண்கள் ஆய்ந்த தம் நலத்தை இழந்தன, அவ்வளவிலே நில்லாதே பின்னர்க் கண்கள் கயல் காலுகின்ற நீர்போல நீர்விழாத காலத்துக் களவிடத்துக் கூடி அக்களவொழுக்கத்தை நிகழ்கின்றகாலத்தே மருவுதலறும்படி [1] நீ அருமைசெய்தயர்த்தபின்னர் இறையிற்கிடக்கின்ற வளைகள் நெகிழ்ந்து கழலாநிற்க அவ்வருத்தத்தை ஏற்றுக்கொண்டிருக்கவும் பொருந்தும்; அதனாற்பெற்றதென்? அக்கண்கள் அதற்கு இயைகின்றனவில்லையே;

(பாடம்) 1. மருவுதனுறும்படி.

'மன்': ஒழியிசை.

(௩௨—௩௫) இனியசெய்

. . . பிழவாக்கால் :—

(இ - ள்.) ஊரிலுள்ளார்
அலர் தூற்றுகையினாலே நறிய நுதல்
ஒளி கெட்டுப் பீர்க்கம்பூவினது
அழகைத் தான் கொண்டு
பிறையினது அழகை இழவாதகாலத்து
இயற்கைப்புணர்ச்சியிடத்துத்
தெளிவகப்படுத்து இட்டுப் பிரிதலையுஞ்

செய்து பின்னர் இன்றாம்படி நீ அருமைசெய்தயர்த்தபின்னர் இவள் வருத்தந் தெய்வத்தால் வந்ததோர் நடுக்கமென்று தெய்வத்திற்குப் பரவுக்கடன்பூணுமையும் பொருந்தும்; அதனாற் பெற்றதென்? அந்நறுநுதல் அதற்கு இயைகின்றதில்லையே;

அமர்ந்தென்பதும் பாடம்.

(கசு—கக) அஞ்சலேன்

மாற்றக்கால்:—

(இ - ள்.) பகலிடத்தே

அழகுகெடும்படி எம்மை நலிதலைத் தந்த நடுங்குதற்குக் காரணமான

வருத்தம் கங்குலிற்[1]

கனவின்கண்ணும் வந்து

வருத்தமுறுத்தி* இவளாற்றுதகாலத்து இயற்கைப்புணர்ச்சிக்கண் தெளிவகப்படுத்தி இட்டுப்பிரிதலைச்செய்து பின்னர் நீ அருளாதே அருமைசெய்தயர்த்தபின்னர் இவள்நெஞ்சழிவதற்குக் காரணமான வருத்தம் இறந்துபாடெய்துவியாநிற்கவும் உயிரைப் போகாமல் நிறுத்தவும் பொருந்தும்; அதனாற் பெற்றதென்? அக்கனவின் ஆற்றல் அதற்கு இயைகின்றதில்லையே;

(உo) எனவாங்கு :—

(இ - ள்.) என்று யான்

கூறும்படியாக;

'ஆங்கு' : அசை.

(உக—உ௲) விளியாநோ .

. . . கவினே :—

(இ - ள்.) கெடாதநோயாலே வருந்தி அமையாத என் தோழி மலே யிடத்து முளிதலுறும்படி வருந்திய முளைத்தல் மிக்க சிறியதினை மழை யைப்பெற அழகுபெற்ருற்போல இவள் ஆய்நுதற் கவின் நின் அளியைப் பெற அழகுபெறும்.

இட்டுப்பிரிவிரங்கலேயும் அருமைசெய்தயர்த்தலேயும் பின்பு நூல்செய் தோர் ஒருவழித்தணத்தலென்று பெயர்கூறியவாறு காண்க.

இதனுற் றலேவற்கு அசைவு பிறந்தது.

இது தரவுந் தாழிசையுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமும்பெற்ற ஒத் தாழிசைக்கலி. (கஎ)

---

* கலி. சக: க - ச.

குறிஞ்சி - கஅ]

குறிஞ்சிக்கலி

கரு௫

௫ச.

கொடியவுங் கோட்டவு நீரின்றி நிறம்பெறப்
பொடியழற் புறந்தந்த பூவாப்பூம் பொலன்கோதைத்
தொடிசெறி யாப்பமை

யரிமுன்கை யணைத்தோளா
யடியுறை யருளாமை
யொத்ததோ நினக்கென்ன
நரந்தநா றிருங்கூந்த
லெஞ்சாது நனிபற்றிப்
பொலம்புனை மகரவாய்
நுங்கிய சிகழிகை
நலம்பெறச் சுற்றிய
குரலமை யொருகாழ்
விரன்முறை சுற்றி
மோக்கலு மோந்தன

நறூஅ வவிழ்ந் தன்னவென்மெல் விரற்போது கொண்டு
செறூஅச் செங்கண் புதைய வைத்துப்

பருஅக் குருகி னுயிர்த்தலு
முயிர்த்தனன்

றெய்யி விளமுலை யினிய தைவந்து
தொய்யலந் தடக்கையின் வீழ்பிடி யளிக்கு
மையல் யானையின்
மருட்டலு மருட்டினன் ;

கரு. அதனால்,

அல்லல் களைந்தனன் றோழி நந்நக
ரருங்கடி நீவாமை கூறி னன்றென
நின்னொடு சூழ்வ றோழி, நயம்புரிந்
தின்னது செய்தா ளிவளென

உ0. மன்னா வுலகத்து மன்னுவது புரைமே.

இது கைப்பட்டுக்கலங்கிய வருத்தத்தைக் களைந்தேனென உரையெனத் தோழிக்கு உரைத்தற்கண் தலைவி கூறியது. அது நொதுமலர்வரைவிற்கு மணமுரசு

இயம்பியவழி

ஆண்டானும் பிறவாண்டானுந் தோழிக்கு
இன்னவாறு கூட்டம்

நிகழ்ந்ததெனக்கூறி, அதனை
நமர் அறியக் கூறல்வேண்டுமென்றுந்
தலை

வற்கு நம்வருத்தம் அறியக்
கூறல்வேண்டுமென்றுந் தலைவி
கூறுதற்கண்

நிகழ்வது.

(இ-ள்.) கொடியிலுள்ளனவுங் கோட்டிலுள்ளனவுமாகிய பூவாக நீரின்று யிருக்க நிறம்பெறும்படி பொடியினையுடைய நெருப்பாற்பண்ணப்பட்ட பொற்பூவாற்செய்த கோதையினையுந், தொடிசெறிந்த கட்டுவடங்கள் அமைந்த அழகினையுடைய முன்கையினையும், அணைபோலும் மெல்லிய தோளையுமுடையாய்! நின் அடியிலே யான் உறைதற்கு நீ அருளாதிருத்தல் நினக்குப் பொருந்தினதொன்றோவென்று கூறிப் பொன்னாற்செய்த மகர வாயாகச் சமைந்த தலைக்கோலம் விழுங்கிக் கிடந்த நரந்தம்பூ நாறுங் கரிய

கூந்தலின் முடியை ஒழியாமல் மிகப்பிடித்து அதிலே நன்மைபெறும்படி கட்டின பற்றமைந்த ஒருமாலையை விரலாலே முறையாகச் சுற்றி அதனை மோந்துபார்த்தலையுஞ் செய்தான்; அதுவேயன்றி நறவம்பூ அலர்ந்தாற் போன்ற என்னுடைய மெல்லிய விரலையுடைய கையைத் தாங்கிக்கொண்டு அருளையுடைய தன் சிவந்த கண் மறையும்படி வைத்துக் கொல்லன் உலை மூக்கு வெவ்விதாய்

உயிர்க்குமாறுபோல உயிர்த்தலையுஞ் செய்தான் அதுவேயன்றித் தொய்யில் எழுதின இளையமுலையை இனியவாகத் தடவி அத் தொய்யிலைக் கொண்டுவந்த தடக்கையினாலே, தான் விரும்பின பிடியை அருள்செய்யும் மயக்கத்தையுடைய யானைபோல, மெய்ம்முழுதினையுந் தடவு

தலையுஞ் செய்தான்; அச்செயலாலே யான் கைப்பட்டுக் கலங்கிய வருத்தத்தைத் தோழி! போக்கினேன்; இனித், தோழீ! நீயும் யான் விரும்பிய விருப்பத்தின் மனம்புரிந்து நின்மகள் நங்குடிக்கு வடுவாகாமற் கற்புக்கடம்பூண்டாளென்று நம்முடைய மனைக்கண் நிகழ்கின்ற அரிய மணம் அவனைவிட்டு நீங்காமல் யாய்க்கு அறத்தொடுநிலைவகையாற் கூறின் அது நமக்கு நல்லதொன்றென்று கருதி நின்னோடு உசாவுவேன்; நீ இங்ஙனங் கூறின் நிலைநில்லாத உலகத்திலே நிலைநிற்பதோர் புகழ் நமக்குப் பொருந்தும்;

இது தலைவி கைப்பட்டுக்கலங்கிப் புணர்ச்சிநிகழ்ந்தமை தோழிக்குக் கூறினள், அவள் அறத்தொடுநிற்றல் கருதி. இஃது "உண்மைசெப்ப" லென்னும் அறத்தொடுநிலையாம்.*

இதனாற் றலைவிக்குக் கைம்மிகல் பிறந்தது.

சுரிதகத்து இருகால் 'தோழி' யென்றல் நாணுத்தளையாக மறை கரந்தவாறு காத்த தோழிக்கு முகமனுக.

விரல்: ஆகுபெயர். பரூஅக்குருகு: பறவாக்குருகு; வெளிப்படை; விகாரம். புரையும் ஈற்றுமிசையுகரம் மெய்யொடுங் கெட்டது.

இஃது 'அதனு'லெனத் தனிச்சொற் பெற்றும் அடக்கியலில்லாச் சுரிதகத்தோடு அடிமிர்ந்தோடிய பாநிலைவகைக் கொச்சகக் கலிப்பா.(கஅ)

ருரு.

மின்னொளி ரவிரற லிடைபோழும் பெயலேபோற்
பொன்னகை தகைவகிர்[1] வகைநெறி வயங்கிட்டுப்
போழிடை[2] யிட்ட கமழ்நறும் பூங்கோதை
யின்னகை யிலங்கெயிற் றுத் தேமொழித் துவர்ச்செவ்வாய்
நன்னுதா னினக்கொன்று கூறுவாங் கேளினி;

* தொல். பொருள்: உ0எ.

(பாடம்) 1. பொன்னகைத் தைவகிர். 2. பொழிவிடை.

நில்லென நிறுத்தா னிறுத்தே வந்து
நுதலு முகனுந் தோளுங் கண்ணு

மியலுஞ் சொல்லு நோக்குபு நினைஇ
யைதேய்ந் தன்று பிறையு மன்று
மைதீர்ந் தன்று மதியு மன்று
வேயமன் றன்று மலையு மன்று
பூவமன் றன்று சுனையு மன்று
மெல்ல வியலு மயிலு மன்று
சொல்லத் தளருங் கிளியு மன்று;

எனவாங்கு,

அனையன பலபா ராட்டிப் பையென

வலியர்[1] போலச் சோர்புத
ஞெற்றியென்[2]

னெஞ்சு நெகிழ்ந்த செவ்வி
காணூஉப்[3]
புலையர் போலப் புன்க
ணோக்கித்
உ0. தொழுதுங் தொழுதான்
றொடலுங் தொட்டான்
காழ்வரை நில்லாக் கடுங்களி
றன்னோன்
றொழூஉங் தொடூஉமவன்
றன்மை
யேழைத் தன்மையோ
வில்லை தோழி.

இது "பொறியின் யாத்த புணர்ச்சி
நோக்கி, யொருமைக் கேண்மையி

னுறுக்குறை

தெளிந்தோ, ளருமை சான்ற நாலிரண்டு வகையிற், பெருமை சான்ற

வியல்பின்கண்"* தலைவி கூறியது. என்றது;
"ஒருமைக்கேண்மையின் உறு

குறை = தான் அவளென்னும் வேற்றுமையில்லாத நட்பினாலே தோழி

தனக்கு வந்து கூறிய குறையை; பொறியின் யாத்த புணர்ச்சி நோக்கித்

தெளிந்தோள் = முன்னர்த் தெய்வப் புணர்ச்சி நிகழ்ந்தமை நோக்கி அது

காரணத்தான் முடிப்பதாகத் தெளிந்த தலைவி; அருமைசான்ற நாலிரண்டு

வகையில் = தான் முன் அருமை
யமைந்துநின்ற நிலையாற் றலைவன் கண்
நிகழ்த்திய மெய்தொட்டுப்
பயிறல் முதலிய எட்டினுலே;
பெருமைசான்ற
இயல்பின் கண்ணும் = தனக்கு
உளதாம் பெருமைகூறுதற்கு
அமைந்ததோர் இயல்பின்
கண்ணும் : எ-று." இதனாற் போந்த
பொருள் தலைவன் இத்
துணை இளிவந்தன செய்யவும்
யான் நாணும் மடனும்
நீங்கிற்றிலேனென்று தன்
பெருமை தோழிக்குக் கூறுதலாயிற்று.

---

* தொல். பொருள் : கக௧,

(பாடம்) 1. வலைவர். 2. ஒற்றிப்.

3. (இவ்வரி விடுபட்டுள்ளது.)

கச்உ

கலித்தொகை

[கலி - ௬௫

(க—௫) மின்ஒளி . . .

. கேளினி ;—

(இ - ள்.) ஒளிர்கின்ற மின்னினது விளங்குகின்ற அறுதிகள் இடையே பிளந்தோடும் மேகங்கள்போலே பொன்னைக் கூறுபடுத்தின அழகினை

புடைய வகிர்களை

ஐந்துபகுதியையுடைய* நெறித்த

மயிரிடத்தே விளங்க

விட்டுப் பின்னல் தாழம்பூ வகிர்ந்தவற்றையும்[1] இடையிலேயிட்டு முடித்த மிகவும் நாறுகின்ற பூமாலையினையும் இனிய நகையினையும் இலங்குகின்ற எயிற்றினையும் இனிய மொழியினையும் இயல்பான சிவப்பாற் சிவந்த வாயினையு முடைய நன்றாகிய நுதலினையுடையாய் ! நினக்கு ஒரு வார்த்தை கூறுவேம்; அதனை இப்பொழுது கேள்!

'இட்டு'என்னுஞ் செய்தெனெச்சம் 'இட்ட'வென்னும் பெயரெச்சத் தோடு முடிந்து, அது 'நன்னுத'லென்னும் பெயரோடு முடிந்தது. 'கூறுவா' மென்றது உயர்த்துக் கூறல் ;† உளப்பாடன்று. வயங்க: விகாரம்.

(சு—உரு) நீல்லேன . . . . தோழி :—

(இ - ள்.) "நீ போகாதே நில்"லென்று என்னை நிறுத்தினன்; நிறுத்தி அணுகவந்து நுதலையும் முகத்தையுந் தோளையுங் கண்ணையுஞ் சாயலையுஞ் சொல்லையும் நோக்காநின்று உவமையைக் கூறநினைந்து, "நுதல் வியப்பையுடைத்தாய்த் தேய்ந்தது, ஆயினும் பிறையுமன்று; முகம் மறுவற்றது, ஆயினும் மதியுமன்று; தோள் வேயின்றன்மை நெருங்கிற்று, அது பிறக்கும் இடமன்று; கண் பூவின்றன்மை நெருங்கிற்று, அது பிறக்கும் இடமன்று; சாயலிருந்தபடி மெத்தென நடக்கும், மயிலுமன்று; சொல்லுச்சொல்லத் தளரும், ஆயினுங் கிளியுமன்று" என்று அவ்விடத்து அத்தன்மையனவாகிய உறுப்புக்கள் பலவற்றையும் பொய்பாராட்டி, வலையர் அம்மாக்களின் சோர்வைப் பார்க்குமாறுபோல என் நெஞ்சழிந்த செவ்வியைப் பார்த்துப், புலையர் நோக்குமாறுபோல வருத்தமுண்டாக நோக்கித் தொழுதலைச் செய்தான்; தீண்டுதலையுஞ் செய்தான்; மதத்தான் அறிவிழந்து பரிக்கோலெல்லையில் நில்லாத கடிய களிற்றை‡ யொப்பான் பலகாலுந் தொழுவதுஞ் செய்யும்; தீண்டுவதுஞ் செய்யும்; ஆதலால், தோழீ! அவன் குணத்தில் அறியாமையாகிய குணமோ இல்லை;.

இவன் இங்ஙனமாகவும், யான் நாணும் மடனும் நீங்காமை நின்றேனெனத் தலைவி தன் பெருமைசான்ற இயல்பு கூறினள்.

இதனுட் 'பாராட்டி'யெனப் பொய் பாராட்டலுஞ், 'சோர்பதனொற்றி' யென நெஞ்சு நெகிழ்ந்த செவ்வி கூறினமையிற் கூடுதலுறுதலும், 'புலையர்

---

* சுருள், குரல், அளகம், தஞ்சுகுழல், கொண்டை.

† தொல். சொல்; உஎ. ‡ கலி. உ; உசு

(பாடம்) 1. உதிர்ந்தவற்றையும்.

குறிஞ்சி - உ0]

குறிஞ்சிக்கலி

போல...நோக்கி' யென நீடு
நினைந்திரங்கலுந், 'தொழலுந்
தொழுதா'ளென
இடம்பெற்றுத் தழாலுந்,
'தொடலுந் தொட்டா'ளென
மெய்தொட்டுப்
பயிறலுங், களிறுபோல
அறிவினெல்லையி னில்லாதவனெனத்
தீராத்
தோற்றமும் ஒருவாற்றாற் கூறியவாறு
காண்க.

இதனாற் றோழிக்கு
நினைத்தல் பிறந்தது.

"உயர்ந்ததன் மேற்றே

யுள்ளுங் காலை" * என்னுஞ்
சூத்திரத்து
"உள்ளுங்காலை" யென்றதனாற்,
'பிறையுமன்று', 'மதியுமன்று',
'மயிலு
மன்று', 'கிளியுமன்' றென்பன
மறுத்தனவென்று கொண்ட வுவமம்.
"முத
லுஞ் சினையுமென் றாயிரு பொருட்கு,
நுதலிய மரபி னுரியவை யுரிய" † என்
னுஞ் சூத்திரத்தில் "நுதலிய மரபி"
னென்றதனான் 'மலையுமன்று' 'சுனையு
மன்'றென்பன மலையோடுஞ்
சுனையோடும் உவமைகருதாது
மலையுள்

வேயெழும் இடத்தையுஞ் சுனையுட்
பூவெழும் இடத்தையும் நோக்கி
வேயையும் பூவையும்
மறுத்துநிற்றலின்,
தோளையுங் கண்ணையும் உணர்த்தி
நின்ற வென்று கொண்ட உவமம்.

இது தனிச்சொல்லும் ஆசிரியச்
சுரிதகமும் பெற்றுப் "பாநிலைவகை
யே"‡ என்பதனால்
அகப்பொருளின்கண்வந்த தரவிணைக்
கொச்சகம். (கக)

ருசா.

ஊர்க்கா னிவந்த

பொதும்பரு ணீர்க்காற்

கொழுநிழன் ஞாழன்
முதிரிணர் கொண்டு

கழும முடித்துக் கண்கூடு
கூழை
சுவன்மிசைத் தாதொடு
தாழ வகன்மதி
(ரு). தீங்கதிர் விட்டது போல
முகனமர்ந்
தீங்கே வருவா
ளிவள்யார்கொ
லாங்கேயோர்

வல்லவன் றைஇய
பாவைகொ ணல்லா
ருறுப்பெலாங்
கொண்டியற் றி யாள்கொல்
வெறுப்பினால்
வேண்டுருவங் கொண்டதோர்
கூற்றங்கொ லாண்டார்
௧௦. கடிதிவளைக் காவார் விடுதல்
கொடியியற்
பல்கலைச் சில்பூங் கலிங்கத்த
ளீங்கிதோர்[1]
நல்கூர்ந்தார் செல்வ மகள்;

இவளைச், சொல்லாடிக்

காண்பேன் றகைத்து ;

---

* தொல். பொருள் : உஎஅ.

† தொல். பொருள் ; உஅக. ‡

தொல். பொருள் : சகஎ,

(பாடம்) 1. விங்கேதோர்.

கசுச

கலித்தொகை

[கலி - இ

நல்லாய் கேள்,

கரு. ஆய்தூவி யனமென

வணிமயிற் பெடையெனத்
தூதுணம் புறவெனத்
துதைந்தநின் னெழினலை

மாதர்கொண் மானோக்கின் மடநல்லாய் நிற்கண்டார்ப்
பேதுறூஉ மென்பதை யறிதியோ வறியாயோ;

நுணங்கமைத் திரளென நுண்ணிழை யணையென
முழங்குநீர்ப் புணையென வமைந்தநின் றடமென்றோள்
வணங்கிறை வாலெயிற் றந்நல்லாய் நிற்கண்டார்க்
கணங்காகு மென்பதை யறிதியோ வறியாயோ;

முதிர்கோங்கின் முகையென முகஞ்செய்த குரும்பை
பெயறுளி முகிழெனப் பெருத்தநின் னிளமுலை [யெனப்
மயிர்வார்ந்த வரிமுன்கை மடநல்லாய் நிற்கண்டா
ருயிர்வாங்கு மென்பதை யுணர்தியோ வுணராயோ;

எனவாங்கு,

பேதுற்றாய் போலப் பிறரெவ்வ நீயறியா
யாதொன்றும் வாய்வாளா திறந்தீவாய் கேளினி

௯௦. நீயுந் தவறிலை நின்னைப் புறங்கடைப்
போதர விட்ட நுமருந் தவறிலர்
நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்
பறையறைந் தல்லது செல்லற்க வென்னா
விறையே தவறுடை யான்.

இது "காமஞ் சாலா விளமை யோள்வயி, னேமஞ் சாலா விடும்பை யெய்தி, நன்மையுந் தீமையு மென்றிரு திறத்தாற், றன்னொடு மவளொடுந் தருக்கிய புணர்த்துச், சொல்லெதிர் பெருஅன் சொல்லி யின்புறல், புல்லித் தோன்றுங் கைக்கிளைக் குறிப்பே"* என்பதனாற் றருக்கிச்சொல்லிச் சொல்லெதிர்பெருஅன் இன்புற்றது.

(௧—௧௨) ஊர்க்கா . . . . மகள்:—

(இ - ள்.) ஊரிடத்தே வளர்ந்த இளமரக்காவினுள்[1] நீர் ஓடுகின்ற காவிடத்தே நின்ற கொழுவிய நிழலையுடைய ஞாழலினது முதிர்ந்த தொத்துக்களைப் பறித்துக்கொண்டு, பூவும் மயிருந் தம்முண் மயங்கும்படி முடித்த

* தொல். பொருள் : ௫௦.
(பாடம்) 1. இணர்க்காவினுள்.

குறிஞ்சிக்கலி
௧௬௫

வாரி முடிக்கும்படி தலைகூடினமயிர்
தோட்கட்டிலே தாதோடே சிறிது
குலைந்து வீழ, நிறைந்த மதி இனிய
கதிர்களை விட்டாற்போல முகம்
ஒளி
பொருந்தி,* யான் நிற்கின்ற இவ்விடத்தே வருவாளாகிய இவள் யார்தான்?
கொல்லி மலையிலே வல்லவனாலே பண்ணப்பட்ட ஒப்பில்லாத பாவையோ?†
அன்றி அயனாலே நல்லமகளிருடைய
உறுப்புக்களெல்லாவற்றையும்‡
ஒருங்கு கொண்டு ஒருவடிவாகப்
பண்ணப்பட்டாளொருத்தியோ?
அன்றி ஆடவர் மேலுள்ள
வெறுப்பாலே தன்னைக் கூற்றமென்று

அறியாதபடி மறைத்துப்

பெண்வடிவுகொண்டு வந்ததோர்

கூற்றமோ?§ இந்நிலையை

ஓர்ந்துபாராய்!

கொடிபோன்ற நடக்கத்தினையும் எண்கோவையாகிய மேகலையையுஞ் சில பூத்தொழிலையுடைய கலிங்கத்தையு முடையளாயிருந்தாளாதலால் இவ் வூரிடத்துப் பிள்ளையால் மிடிப்பட்டாருடைய செல்வத்தையுடைய மகன் காண்! இவளைக் காத்துப்போந்தவர்கள் இப்பொழுது காவாராய்ப் புறப்பட விடுதல் கொடிது;

(கரு—கச) இவளைச்

நல்லாய்கேள்:—

(இ - ள்.) இனி இவளை "நல்லாய்! யான் கூறுகின்றதனைக் கேள்!" என்று போகாமற் றடுத்து வார்த்தைசொல்லிப் பார்ப்பேன்;

இஃது ஐயுற்றுத் துணிந்து நெஞ்சொடு கூறியது. மேகலையானுங் கலிங்கத்தானும் ஐயம் நீங்கி மகளென்று துணிந்தான், மனைக்கிழத்தியாக யான் கோடல்வேண்டுமெனக் கருதி. "மருந்து பிறிதில்லாப் பெருந்துயர்" எய்தினுறுதலின் இங்ஙனம் ஐயமும் நிகழ்ந்தது. இவ்வகை உவமைகள், "வேறுபட வந்த உவமத் தோற்றங், கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்" $ என்பதனாற்கொண்டாம். "அவ்வ மாக்களும் விலங்கு மன்றிப், பிறவவண் வரினுந் திறவதினுடித், தத்த மியலின் மரபொடு முடியி, னத் திறந் தானே துறையெனப் படுமே"|| என்பதனான் ஞாழல் முடித்தானென நெய்தற் றிலவிபோலவும், 'ஊர்க்கானிவந்த பொதும்ப' ரென்றதனான் மருதத்துக்கண்டான்போலவுங் கூறிக் குறிஞ்சிப் பொருளாகிய புணர்தனிமித்தம் பொருளாக முடித்தான். இவ்வாறு மயங்கினுங் குறிஞ்சித்துறைப்பாற் பட்ட துறையுறுப்பான் வந்ததென்க.

(கரு—கஅ) ஆய்தூவி வரியாயோ:—

(இ - ள்.) கண்டார் காதல்கோடற்குக் காரணமாகிய மான்போலும் நோக்கத்தினையும் மடப்பத்தினையுமுடைய நல்லாளே! சூட்டுமயிரினை

---

* குறள் - ககஅ. † கற் - ககஉ : அ - கக.

‡ தொல், உவமவியல் ; சூ. உ௯-இளம்பூரணர் உரை-மேற்கோள்.

§ குறள், ௬0அக ; சீவகசிந்-உ௯௫௧ ; சிலப் - ௫; உகஅ-உஉக,

$ தொல். பொருள் ; ௯0எ, || தொல். பொருள்: ௫உக,

யுடைய அன்னமென்ன,
அழகினையுடைத்தாகிய
பெடையினையுடைய[1] மயி லென்ன,
கல்லையுண்கின்ற அழகிய புறவென்ன,
நடையுஞ் சாயலும் மடப் பமுமாகிய
நலம் நெருங்கின நின்னுடைய
இவ்வெழில் நின்னைக் கண்டவர் களை
மயக்கமுறுத்துமென்னும் நிலைமையை
நீதான் அறிவையோ? அறியா யோ?

இது நிலம்வரையாது வந்த கைக்கிளை. மயிலும் பிறவுஞ் சினையொடு சினையுவமம்.

(கக—உஉ) நுணங்கமைத் . . . . வறியாயோ:—

(இ - ள்.) வளைந்த முன்கையினையும் வெள்ளிய எயிற்றினையுமுடைய அழகிய நல்லானே! நிறத்தாலுந் திரட்சியாலும் புகரினது தன்மையை யுடைய மூங்கிலென்ன, மென்மையால் நுண்ணிய

துகிலினையுடைய அணை யென்ன,
காமக் கடலை நீந்துதற்குத்
தெப்பமாதலான்* முழங்கும் நீரைக்
கடக்கும் வேழங்கோலாற்செய்த தெப்பமென்ன, பொருந்தின நின்னுடைய பெருமையையுடைய மெல்லிய தோள்கள் நின்னைக் கண்டவர்
களுக்கு வருத்தமாமென்னும்
யோ?
நிலைமையை நீதான்
அறிவையோ? அறியா

(உரு—உசு) முதிர்கோங்கின். . .
. வுணராயோ :—

(இ - ள்.) மயிர் நேரிதான வரிகளையுடைய முன்கையினையும் மடப்பத்தினையுமுடைய நல்லாளே! முற்றின கோங்கமரத்தினது இளையமுகை யென்ன, அடிவரைந்து[2] கட்புலனுன குரும்பையென்ன, பெய்தற்றொழிலை யுடைய மேகத்தின் றுளியாலுண்டான மொக்குளென்ன, பெருத்த நின்னுடைய இளையமுலைகள் நின்னைக் கண்டவர்களுடைய உயிரை வாங்கிக்கொள்ளுமென்னும் நிலைமையை நீதான் அறிவையோ? அறியாயோ?

(உள) எனவாங்கு :—

(இ - ள்.) என்று யான் கூறுகிற்க ; ' ஆங்கு ' : அசை.

(உ அ—கூச) பேதுற்றாய்

. . . . . யான் :—

(இ - ள்.) நீ மயக்கமுற்றாய்போலே பிறருடைய வருத்தத்தை நீ அறியாயாய்க் கேட்டார்க்கு யாதொன்றுஞ் சொல்லாயாய்க் கழிந்துபோகின்ற வளே! இப்பொழுது யான் கூறுகின்றதனைக் கேள்! நீயுங் குற்றமுடையை யல்லை; நின்னை இற்புறத்தே புறப்படவிட்ட நம்முடைய சுற்றத்தாருங்

* சீவகசிந் : உஅ0ச.

(பாடம்) 1. ...

குறிஞ்சி - உக]

குறிஞ்சிக்கலி

கக்ள

குற்றமுடையரல்லர்; குற்றமுடையான் யாவனென்னில், நிறையழிந்த * கொல்கின்ற யானையை நீர்க்குவிட்டாற் பறைசாற்றிச் செல்லுமாறு போலப் பறைசாற்றிச் செல்வதல்லது பறைசாற்றாமற் செல்லாதொழிக வென்று சொல்லாத இறைவனே யென்க.

இதனாற் றலைவற்கு அசைவென்னும் அழுகை பிறந்தது.

இது புணர்தனிமித்தமாதலிற் குறிஞ்சியுட் கோத்தார். இது தான் உயிர் கொடுத்தானாகத் தனது நன்மைகூறி அவள் நீங்குங் கூறினன்.

இது முன் ஒரு நெடுவெண்பாட்டும் ஓர் அம்போதரங்கமுந் தனிச்சொல்லுந் தாழிசையும் பின்னும் ஒரு தனிச்சொல்லும் வெள்ளைச் சுரிதகமும் பெற்று வந்த கொச்சகக்கலிப்பா. (உ0)

ருஎ.

வேயெனத் திரண்டதோள் வெறிகமழ் வணரைம்பான்
மாவென்ற[1] மடநோக்கின் மயிலியற் றளர்பொல்கி
யாய்சிலம் பரியார்ப்ப வவிரொளி யிழையிமைப்பக்
கொடியென மின்னென வணங்கென யாதொன்றுந்
தெரிகல்லா விடையின்கட் கண்கவர் பொருங்கோட
வளமைசா லுயர்சிறப்பி னுந்தைதொல் வியனக
ரிளமையா னெறிபந்தோ டிகத்தந்தாய் கேளினி ;

பூந்தண்டார்ப் புலர்சாந்திற் றென்னவ னுயர்கூடற்
றேம்பாய வவிழ்நீலத் தலர்வென்ற வமருண்கண் [விற்
ணேந்துகோட் டெழில்யானை யொன்னுதார்க் கவன்வே
சேர்ந்துநீ யினையையா லொத்ததோ[2] சின்மொழி ;

பொழிபெயல் வண்மையா னசோகந்தண் காவினுட்
கழிகவி னிளமாவின் றளிரன்ன யதன்றலைப்

பனையமை பாய்மான்றே ரவன்செற்றார் நிறம்பாய்ந்த
கணையினு நோய்செய்தல் கடப்பன்றோ கனங்குழாய்;

வகையமை தண்டாரான் கோடுயர் பொருப்பின்மேற்
றகையிணர் இளவேங்கை மலரன்ன சுணங்கினாய்
மதவலி மிகுகடாஅத் தவன்யானை மருப்பினுங்
கதவவாற் றக்கதோ காழ்கொண்ட விளமுலை;
எனவாங்கு,

---

* பெருங். (௧) ௧அ : ௧௩அ - ௧௨௧ ; மணி. ௬ : ௧௫- ௬௬ ; ௧ ௬ ௨0-௨௧.
(பாடம்) 1. மான்வென்ற. 2. வினையையா பொக்கதோ.

சா அ

கலித்தொகை [கலி

- ருஎ

இனையன கூற விறைஞ்சுபு

நிலநோக்கி

நினையுபு நெடிதொன்று நினைப்பாள்போன் மற்றுங்கே
துணையமை தோழியர்க் கமர்த்த கண்ணள்

மனையாங்குப் பெயர்ந்தாளென்

னறிவகப் படுத்தே.

இதுவும் அது.

(க—எ) வேயெனத்

கேளினி :—

(இ - ள்.) மூங்கிலென்னும்படி
திரண்டதோளினையும், மணம் நாறு
கின்ற கடைகுழன்ற ஐம்பாலினையும்,
மானோக்கினைவென்ற மடப்பத்தை
யுடைய நோக்கினையும், மயில் போன்ற

சாயலினையுமுடையையாய், அழகிய சிலம்பு உள்ளிடுமணி ஆரவாரிப்ப, விளங்குகின்ற ஒளியினையுடைய கலங்கள் விளங்க, நடக்கத்தாற் கொடியென்ன விளக்கத்தான் மின்னென்னக் கட்

புலனாகாமையின் வருத்தமென்ன யாதொன்றுந் தெரியாத இடையிடத்தே நண்கள் விரும்பிச் சேர ஓட, நின்னுடைய இளமைப்பருவத்தாலே செல்வம் அமைந்த உயர்ந்த தலைமையினையுடைய நுந்தையுடைய பழமையுடைத்தாகிய அகற்சியையுடைய மனையினின்றும் அடிக்கின்ற பந்தோடே தளர்ந்து

ஒதுங்கிப் புறப்படுதலைச் செய்தவனே! இப்பொழுது யான் கூறுகின்ற தனைக் கேள்!

(அ—கக) பூந்தண்டார்ப்

சின்மொழி.—

(இ - ள்.) சிலவான மொழியினையுடையாய்! பூவினையுடைய குளிர்ந்த மாலையினையும் புலர்ந்த சந்தனத்தினையுமுடைய பாண்டியனது உயர்ந்த மதுரையிடத்துத் தேன்பரக்கும்படி அவிழ்ந்த நீலத்தினது அலரைவென்ற போரையுடைய கண்கள் தலையேந்தின கோட்டையும் அழகினையுமுடைய யானையினையுடைய பகைவர்க்கு அப் பாண்டியன் வேல் மனம் வருத்துமாறு போலச்[1] சிவந்து வருத்தஞ்செய்து நீ இத்தன்மையையா யிராநின்றாய், இது நின் இளமைக்குத் தக்கதோ?

கண் சேந்தினையை யென்றது சினைவினை முதலொடு முடிந்தது.

(கஉ-கரு) பொழிபெயல்

கனங்குழாய் :—

(இ - ள்.) பொன்னாற் செய்த குழையினையுடையாய்! பொழிகின்ற பெயல்போலுங் கொடையினையுடைய பாண்டியனது அசோகமரத்தினை யுடைய குளிர்ந்த பொழிலிடத்துநின்ற மிக்க அழகினையுடைய இளையமாவி னது தளிரையொத்த நிறத்தினையுடையையாய் அங்ஙனம் வருத்துதற்கு[2] மேலே பக்தியிலே நிற்றலமைந்த பாய்ந்துசெல்லுங் குதிரைபூண்ட தேரை யுடைய பாண்டியனாற் செறப்பட்டவர்கள் மருமத்தே தைத்த அம்பினுங்

(பாடம்.) 1. வருத்துமாறு போல நம்மைச். 2. வருந்துதற்கு.

காட்டில் நோவைச் செய்தல்
உலகிற் கொடுமைகளின் மிக்க
கொடுமை யன்றோ ?

(கசு—கக) வகையமை
விளமுலை :—
(இ - ள்.) வகுப்பமைந்த
குளிர்ந்த தாரினையுடைய
பாண்டியனது

சொரங்களுயர்ந்த பொதியின்மலையிடத்து அழகினையுடைய கொத்துக்களை யுடைய இளைய வேங்கைப் பூவையொத்த சுணங்கினையுடையாய்! முத்து வடத்தைத் தன்னிடத்தேகொண்ட நின்னுடைய இளைய முலைகள் இப் பருவத்திலும் அப் பாண்டியனுடைய மிகுதியையுடைய வலியினையும் மிகுகின்ற கடாத்தினையுமுடைய யானையினுடைய கொம்புகளிலுங் கோபத்தினையுடையவா யிராநின்றன ; இக்கொடுமை இப்பருவத்திற்குத் தக்கதோ ?

(உ0) எனவாங்கு :—

(இ - ள்.) என்று ;

'ஆங்கு' : அசை.

(உக—உச) இனையன படுத்தே :—

(இ - ள்.) இத்தன்மையனவற்றை யான் நெடிதொன்று நினையாநின்று கூற, அதற்கு ஒன்று கூறாதே கவிழ்ந்து நிலத்தைப்பார்த்துப் பின்னை அவ்விடத்தே தோழியரை நினைப்பாள்போலே துணையாய் அமைந்த தோழியர்க்குப் பொருந்தின கண்ணையுடையளாய் என் அறிவைத் தன்னிடத்தே அகப்படுத்திக்கொண்டு தன் மனையிடத்தே மீண்டுபோனாள்.

இஃது "ஏமஞ்சாலா விடும்பை யெய்தி*"க் கூறினது.

நெடிதொன்று நினையாநின்றென்றது தான் சிறிதுகாட் சென்றால் வரைந்துகோடலை நினையாநின் றென்றதாகக் கொள்க. 'நினைப்பாள்போ' லென்றதனால் அவன்கூற்றினையும் இதுவுமொன்றெனச் சிறிது கொண்ட

மையுந் தோன்றிற்று.

இதனாற் றலைவற்கு அசைவென்னும் உவகை பிறந்தது.

இஃது எழடித்தரவும் நான்கடித் தாழிசையுந் தனிச்சொல்லும் நான்கடிச் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. (உக)

ருஅ.

வாருறு வணரைம்பால் வணங்கிறை நெடுமென்றோட்
பேரெழின் மலருண்கட் பிணையெழின் மானோக்கிற்
காரெதிர் தளிர்மேனிக் கவின்பெறு சுடர்நுதற்
கூரெயிற்று முகைவெண்பற் கொடிப்புரையு நுசுப்பினாய்

---

* தொல். பொருள் : ருo.

ரு. நேர்சிலம் பரியார்ப்ப
நிரைதொடிக்கை[1] வீசினை
யாருயிர் வௌவிக்கொண்

டறிந்தீயா திறப்பாய்கேள் ;

உளனுவென் னுயிரையுண் டெயவுநோய் கைம்மிக
விளமையா னுணராதாய் நின்றவ றில்லானுங்

களைநரி ஞெய்செய்யுங்
கவினறிந் தணிந்துதம்
௧௦. வளமையாற் போத்தந்த
நுமர்தவ றில்லென்பாய் ;
நடைமெலிந் தயர்வுறீஇ
நாளுமென் னலியுநோய்
மடமையா னுணராதாய்
நின்றவ றில்லானு
மிடைநில்லா தெய்த்துநின்
னுருவறிந் தணிந்துதம்
முடைமையாற் போத்தந்த

றுமர்தவ றில்லெனபாய் ; கரு.
அல்லல்கூர்ந் தழிவுற வணங்காகி
யடருநோய்
சொல்லினு மறியாதாய்
நின்றவ றில்லானு
மொல்லையே யுயிர்வெளவு
முருவறிந் தணிந்துதஞ்
செல்வத்தாற் போத்தந்த
றுமர்தவ றில்லெனபாய் ;
எனவாங்கு,

உ0. ஒறுப்பின்யா னொறுப்பது
றுமரையான் மற்றிந்நோய்

பொறுக்கலாம் வரைத்தன்றிப் பெரிதாயிற் பொலங்குழாய்
மறுத்திவ்வூர் மன்றத்து மடலேறி

நிறுக்குவென் போல்வல்யா

னீபடு பழியே.

இதுவும் அது.

(க - சு) வாநறு . . .

. . திறப்பாய்கேள் :—

(இ - ள்.) கோதுதலுற்ற கடைகுழன்ற ஐம்பாலினையும், வளைந்த இறையினையுடைய நெடிய மெல்லிய தோளினையும், பெரிய அழகினையுடைய மலர்போலுங் கண்ணினையும், மான்பிணையினது அழகினையுடைய வெருவின நோக்குப்போலும் நோக்கினையும், மழையைப்பெற்ற தளிர்போலும் நிறத்தினையும், அழகுபெறுகின்ற பிறைபோன்ற நுதலினையும், விழுந்தெழுந்த கூரிய எயிற்றினையும், விழுந்தெழாத முகைபோலும் வெள்ளிய பல்லினையுமுடைய கொடியை யொக்கும் இடையினையுடையாய்! காலுக்குப் பொருந்தின சிலம்பின் உள்ளிடுமணி ஆரவாரிப்ப நிரைத்த தொடிவ்யயுடைய கையை வீசினையாய்ப் பெறுதற்கரிய என் உயிரைக்கொண்டு இளமையாற் கைக்கொண்டதனை அறியாதே போகின்றவளே! யான் கூறுகின்றதனைக் கேள்!

(பாடம்) 1. நிரைதொடி.

(எ - கo) உளனாவேன் . . . நில்லென்பாய் :—

(இ - ள்.) வருத்தத்தினையுடைய காமநோய் கைம்மிகும்படியாக யான் சிறிது உயிருடனே இருக்கும்படி என் உயிரை வாங்கிக்கொண்டு நின் இளமைப்பருவத்தாலே அறியாமற் போகின்றவளே! நின்னிடத்துத் தப்பில்லையாயினும் நின்னை யொழியப் போக்குவார் பிறர் இல்லாத நோயைச்* செய்யும் அழகையறிந்துவைத்தும் அதன்மேலே ஒப்பித்துத்† தஞ் செல்வச் செருக்காலே புறப்படவிட்ட

நம்முடைய சுற்றத்தாரைத்
தவறுடையர் அல்லரென்று கூறலாமாகிற்
கூறு! அஃது அரிது;

(கக—கஅ) நடைமெலிந் . .

. . றில்லேன்பாய் :—

(இ - ள்.) அறிவு நிறைவு ஓர்ப்புக் கடைப்பிடி என்னும் ஒழுக்கம் தேய்ந்து மறத்தலே எனக்கு உறுத்தி நாடோறும் என்னை நலிதற்குக்

காரணமான நீ செய்த *நோயை

நினது மடப்பத்தாலே அறியாமற்

போகின்றவளே! நின்னிடத்துத் தப்பில்லையாயினும் நிற்கமாட்டாதே இளைக்கும் இடையையுடைய நின் வடிவை அறிந்துவைத்தும் அதன்மேலே ஒப்பித்துத்‡ தஞ் செல்வச்செருக்காலே புறப்படவிட்ட நம்முடைய சுற்றத்தாரைத் தவறுடையர் அல்லரென்று கூறலாமாகிற் கூறு! அஃது அரிது;

(கடு—கஅ) அல்லல்கூர்ந் திலேன்பாய் :—

(இ - ள்.) நெஞ்சழிந்து வருத்தமிக்குக் கெடும்படி வருத்தமாகி மேன்மேலும் அடர்ந்துவருகின்ற காமநோயைக் குறிப்பான் அறிதலன்றிச் சொல்லிக் காட்டினும் அறியாதவளே ! நின்னிடத்துத் தப்பில்லையாயி னும் ஒழுக உயிரை வாங்காது விரைய உயிரைவாங்கும் நின் வடிவை அறிந்துவைத்தும் அதற்குமேலே ஒப்பித்துவைத்துத் தஞ்செல்வச் செருக் காலே புறப்படவிட்ட நும்முடைய சுற்றத்தாரைத் தவறுடையர் அல்ல ரென்று கூறலாமாகிற் கூறு ! அஃது அரிது ;

ஆயினும், 'ஆனு'மெனக் குறைந்து நின்றது. அழிபுகவென்றும் பாடம்.

(கக) எனவாங்கு :—

அசை.

(உ0—உரு) ஒறுப்பினியா . . . . பழியே :—

(இ - ள்.) யான் ஒறுத்துக்கூறில் ஒறுப்பது பொறுத்துப் போகவிட்ட நும்முடைய சுற்றத்தாரை ; நின்னையன்று ; பின்னை இக் காமநோய் பொறுக்கலாம் அளவையுடைத்தன்றி மிகுமாயிற்

பொன்னாற்செய்த குழை

* குறள் ௧௪௦௨. † ஒப்பனை செய்த.

‡ குறள். ௧௦௮௬: பரிமேலழகர் உரை.

௧௭௨

கலித்தொகை

[கலி - ௫௬

வினையுடையாய்! யான் இங்ஙனம்
வருந்துகின்ற நிலைமையைப் போக்கி
இவ்வூரின் மன்றத்தின் கண்ணே
மடலேயேறி நீ எய்துவதொரு
பழியை யான் உனக்கு
நிறுத்துவேன்போலே இராநின்றேன்;
நீ அதனை அறி!

இது "சொல்லெதிர்பெறாஅன் சொல்லி" யின்புற்றது.*

அவனுந் தமருந் தீங்குசெய்தாராக அவனொடு தீங்கைப் புணர்த்துந், தான் ஏதஞ் செய்யாது உயிர்கொடுத்தானாகத் தன்னொடு நன்மையைப் புணர்த்துங் கூறியவாறு காண்க.

அவன் இங்ஙனம் மிகுதி கூறுவான் மடலேறுவேன்போல்வலென ஐயுற்றுக் கூறினன்.

இதனாற் றலைவற்கு அசைவென்னும் உவகை பிறந்தது.

இஃது ஆறடித்தரவும் நான்கடித் தாழிசையும் பொருள்பெறாத தனிச் சொல்லும் நான்கடிச் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி.

(உஉ)

ருக.

தளைநெகிழ் பிணிநிவந்த

பாசடைத் தாமரை

முளைநிமிர்ந் தவைபோலு முத்துக்கோ லவிர்தொடி
யடுக்கநா றலர்காந்த ளுண்ணேர்தண் ணேருருவிற்
றுடுப்பெனப் புரையுநின் றிரண்டநே ரரிமுன்கைச்
ரு. சுடர்விரி வினைவாய்ந்த[1] தூதையும் பாவையும்
விளையாட வரிப்பெய்த வழகமை புனைவினை

யாய்சிலம் பெழுந்தார்ப்ப

வஞ்சில வியனுநின்
பின்னுவிட் டிருளிய
வைம்பால்கண் டென்பால
வென்னைவிட் டகத்தர
விறந்தீவாய் சேளினி ;

௧௦. மருளியான் மருளுற விவனுற்ற தெவனென்னு
மருளிலை யிவட்கென வயலார்நிற் பழிக்குங்கால்
வையெயிற் றவர்நாப்பண் வகையணிப் பொலிந்துநீ
தையினீ ராடிய தவந்தலைப் படுவாயோ ;

உருளிழா யொளிவாட விவனுண்ணே யாதென்னு
௧௫. மருளிலை யிவட்கென வயலார்நிற் பழிக்குங்காற்
பொய்தல மகளையாய்ப் பிறர்மனைப் பாடிநீ
யெய்திய பலர்க்கீத்த பயம்பயக் கிற்பதோ ;

---

* தொல். பொருள்: ௯௦.
[illegible] குறிஞ்சி - ௨௫]

குறிஞ்சிக்கலி

ஆய்தொடி யைதுயிர்த் திவனுண்ணே யாதென்னு
நோயிலை யிவட்கென நொதுமலர் பழிக்குங்காற்

உ0. சிறுமுத்த னைப்பேணிச் சிறுசோறு மடுத்துநீ
நறுநுத லவரொடு நக்கதுநன் கியைவதோ;

எனவாங்கு,

அனையவை யுளையவும் யானினக் குரைத்ததை
யினையநீ செய்தது வாயாயிற் சேயிழாய்

உரு. செய்ததன் பயம்பற்று விடாது
நயம்பற்று விடினில்லை நசைஇயோர் திறத்தே.

இஃது இரந்துகுறையுற்றுப் பின்னின்ற தலைவன் ஆற்றுனைத் தலைவியை நோக்கி இங்ஙனம் வருத்தவையாயின் நீ செய் தவம் இன்றுமெனக் கூறியது.

(க—கூ) தளேநெகிழ்

. . . தேளினி ,—

(இ - ள்.) முறுக்கு அவிழ்ந்ததும், அரும்புகள் நீருக்குமேலே ஓங்கின பசிய இலையினையுடையதுமான தாமரையினது வளையம் வளர்ந்தவையிற்றை யொக்கும் முத்தை அழுத்திச்செய்த திரட்சியையுடைய விளங்குகின்ற தொடியினையுடைய, அடுக்கமெல்லாம் நாறுகின்ற கூரிய அழகினையுடைத் தாகிய அலர்களையுடைய காந்தளினது குளிர்ந்த எழுச்சியையுடைத்தாகிய வடிவினையுடைய துடுப்பென்று கூறும்படியாக ஒக்குந் திரண்ட தம்மில் இணையொத்த மெல்லிய முன்கையினுலே இங்குலிகம் எழுதின ஒளி விரிந்த தொழில்களையுடையவாகிய வாய்களையுடைய மரத்தாற் செய்த சிறு பானையாலும் பாவையாலும் விளையாடுதற்கு, உள்ளிடுமணியிட்ட அழகமைந்த புனைந்த தொழில்களையுடைய அழகிய சிலம்புகள் மிக ஆரவாரிப்ப அழகினையுடைய சில அடியிடா நடக்கும் நின்னுடைய இளமை நீங்குதலாற் பின்னுதல் விட்டு இருண்ட ஐம்பாலைக் கண்டு என்னிடத் துண்டாகிய அறிவு முதலியன என்னைவிட்டுப் போம்படியாகப் போகின்ற வளே ! யான் கூறுகின்றதனை இப்பொழுது கேள் !

தளை நெகிழ் தாமரை, பிணி நிவந்த பாசடைத்தாமரை, என்க.

(கo—கரு) மருளியான் . . . . . படுவாயோ :—

(இ - ள்.) யான் மயக்கமுறுகையினாலே அதுகண்டு தானும் மருண்டு இவனுற்ற நோய் யாதுதானென்று கேட்கும் அருள் இவட்கு இல்லை யென்று யான் கூற, அது கேட்டு அயலார் நின்னைப் பழிக்குமளவிற் கூரிய எயிற்றினையுடைய இளையமகளிர்க்கு நடுவே வகுப்புடைய கோல

கஎசு

கலித்தொகை

[கலி - ருக

காலே பொலிவுபெற்று நீ தைத்திங்களில் நீராடிய* நோன்பின் பயனைப் † பெறுவையோ? பெறுய்காண்!

(கசு—கஎ) உருளிழாய் . . . . கிற்பதோ :—

(இ - ள்.) தலையிற் கிடந்து அசையுந் தலைப்பாளையையுடையவளே! ஒளிகெடும்படி இவன் மனத்தில் உண்டாகிய நோய் யாதென்று கேட்கும் அருள் இவட்கு இல்லையென்று யான் கூற அது கேட்டு அயலார் நின்னைப் பழிக்கும் அளவில் நோன்பாகிய விளையாட்டினையுடைய மகளார்தன்மையை யுடையையாய்ப் பிறர் மனையின்கண்ணே ஐயமேற்றுப் பாடி நீ ஆண்டுப் பெற்றவைவயிற்றைப் பிறர்க்குக் கொடுத்ததனுலுள்ள பயன் நினக்குப் பயன் தருவதொன்றோ? தாராதுகாண்!

'பொய்தல': அகரஞ் செய்யுள் விகாரம்.

(கஅ—உக) ஆய்தொடி

கிளையவதோ :—

(இ - ள்.) ஆராய்ந்திட்ட தொடியினையுடையாய்! நீதான் ஐதாக உயிர்த்து இவன் மனத்திலுண்டாகிய நோய் யாதென்று கேட்கும் நோய் இவட்கு இல்லையென்று யான் கூற அதுகேட்டு அயலார் நின்னைப்பழிக்கு மளவிற் /சிறிய குழமகனைப் பேணி வளர்த்து அவனுக்கு வேறொருத்தி யுடையபெண்மகனைக்[1] கோடற்குச்சிறுசோற்றைச் சமைத்து ஆயத்திற்கு இட்டு நீ நறிய நுதலையுடைய மகளிரோடே மகிழ்ந்த நோன்பின் பயன் நினக்கு வந்துபொருந்துமோ? பொருந்தாதுகாண்!

(உஉ) எனவாங்கு :—

(இ - ள்.) என்று ;

'ஆங்கு' : அசை.

(உரு—உசு) அனையவை . . . . திறத்தே:—

(இ - ள்.) நீ நெஞ்சுளையவும் யான் நினக்குக் கூறியது, சேயிழாய்! நின்னை நச்சினோர் திறத்தே வருந்தும்படி நீ செய்த கொடுமைக்கு நீ ஓர் உதவிசெய்யாயாயின் நீ செய்த அத்தீங்கினாலுள்ள பயன் நின்னைப் பற்று தல்விடாது,‡ அதுவேயுமன்றி நீ அருளைப் பற்றுவிடுவையாயின் நினக்கு அனையவை பயன் தருதலில்லை.

நச்சினோனெனத் தன்னைப் பிறர்போற் கூறினான். நயம்: அருள். 'அனையவை' யென்றது, தைந்நீராடன் முதலியவற்றை.

---

* பரி. கக; கூக; ஐங்குறு. அச. † பயன்: சிறந்த கணவற் பெறுதல்.
‡ நாலடி - க0கூ.
(பாடம்) 1. பெண்மலை...

குறிஞ்சி - உச]

குறிஞ்சிக்கலி

களரு

இதனாற் றலைவற்கு இழிவுபிறந்தது; தலைவிக்குச் சூழ்ச்சி

பிறந்தது.

இஃது ஒன்பதடித் தாவும் நான்கடித்தாழிசையும் தனிச்சொல்லும் நான்கடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி.

(உரு)

கo.

சுணங்கணி வனமுலைச்
சுடர்கொண்ட நறுநுதன்
மணங்கமழ்
நறுங்கோதை மாரிவீ ழிருங்கூந்த

ஞுணங்கெழி லொண்டித்தி
நுழைநொசி மடமருங்குல்
வணங்கிறை வரிமுன்கை
வரியார்ந்த வல்குலாய்;

ரு. கண்ணார்ந்த நலத்தாரைக்
கதுமெனக் கண்டவர்க்

குண்ணின்ற நோய்மிக வுயிரெஞ்சு துயர்செய்தல்
பெண்ணன்று புனையிழா யெனக்கூறித் தொழூஉந் தொழுதே

கண்ணுநீ ராக நடுங்கின
னின்னகா
யென்செய்தான் கொல்லோ
விஃதொத்தன் றன்கட் ௬௦.
பொருகளி றன்ன தகைசாம்பி
யுள்ளுரு

ஞருகுவான் போலு
முடைந்து ;

தெருவின்கண், காரண மின்றிக் கலங்குவார்க் கண்டுநீ
வாரண வாசிப் பதம்பெயர்த்த[1] லேதில
நீநின்மேற் கொள்வ தெவன்;

கரு. அலர்முலை யாயிழை நல்லாய் கதுமெனப்

பேரம ருண்கணின் றோழி
யுறீஇய

வாரஞ ரெவ்வ முயிர்வாங்கு

மற்றிந்நோய் தீரு
மருந்தருளா யொண்டொடீ;

நின்முகங் காணு மருந்தினே னென்னுமா
உ0. னின்முகந் தான்பெறி னல்லது கொன்னே
மருந்து பிறிதியாது மில்லேற் றிருந்திழா
யென்செய்வாங் கொல்லினி நாம் ;

பொன்செய்வாம்,

ஆறு விலங்கித் தெருவின்க ணின்றொருவன்
உடு. கூறுஞ்சொல் வாயெனக் கொண்டதன் பண்புணராந்

(பாடம்) 1. பெயர்த்த.

களசு
கலித்தொகை
[கலி - சுo

தேற லெளிதென்பா நாம்;

ஒருவன், சாமா
றெளிதென்பா மற்று;

சிறிதாங்கே, மாணூ ரம்ப
லலரி னலர்கென

நாணு நிறையு நயப்பில்
பிறப்பிலி
ந௦. பூணுக நோக்கி யிமையா
னயந்துநங்
கேண்மை விருப்புற் றவனை
யெதிர்நின்று
நாணடப் பெயர்த்த நயவர
வின்றே.
இது தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி
தலைமகளோடு உறழ்ந்து அவனது
குறை.
நயப்பக் கூறியது.

(க—ச) சுணங்கணி

வல்துலாய்:—

(இ - ள்.) சுணங்கு அணிந்த

அழகிய முலையினையும், பிறையின் றன்

மையைக்கொண்ட நறிய

நுதலினையும், நறிய

மாலையினையுடைய மணம்

நாறுகின்ற மழை விரும்புங் கரிய

கூந்தலினையுங், கூர்மைய்யுடைய

அழ

கினையும், நோக்கினோர் கண் சென்று

நுழைந்துபார்க்கும் நுண்மையாலே*

அவர்க்கு அறியாமையைக் கொடுக்கும் மருங்குலையும், வணங்குகின்ற. இறை

யினையுடைய வளையணிந்த முன்கையினையு முடைய ஒள்ளிய தித்தியாகிய

வரி நிறைந்த வல்குலையுடையவளோ;

(ரு—கக) கண்ணூர்ந்த

முடைந்து:—

(இ - ள்.) இனிய நகையினையுடையாய்! நின்னைநோக்கித் தொழுஉம்; தொழுதபின், புனையிழாய்! என்னைநோக்கி, உலகத்திற் கண்ணுக்கு

நிறைந்த

நலத்தினையுடைய மகளிரைக்

கண்டவர்களுக்கு உண்ணின்ற காம

நோய் மிகும்படி கடுக உயிர்போந்

துயரைச்செய்தல் அவர்க்குப் பெண்

டன்மையன்றெனக் கூறிக்

கண்ணும் உருகநின்று† நடுங்கினன்;

நடுங்கி இவ

னொருத்தன் தன்னிடத்துப்

பொருகின்ற களிற்றையொத்த

தன்மைகெட்டு

மனமுடைந்து உள்ளேயுள்ளே

உருகுவான்போலே இராநின்றான்;

இவன்

ஈண்டு வந்து என்ன காரியஞ்செய்தான்கொலென்றாள்;

ஒருத்தனென்பது இடைக்குறைந்துநின்றது.

—

(கஉ—கச) தெருவின்கண்

. . . . தேவன் :—

(இ - ள்.) அதுகேட்ட

தலைவி நீ நம்மாற் றமக்கு

நிகழ்ந்ததோர்

காரணமின்றியிலே தெருவின்கட்

கலங்குவார் சிலரைக் கண்டு நினக்கு

ஏதில

வாயிருப்பனவற்றை நீ நின்மேல் ஏறட்டுக்கொள்கின்றதன்மை வாரணவாசியிலுள்ளார் பெறும் அருளுடைமையாகிய பதத்தை நீ நின்னிட்டத்தே ஏறட்டுக் கோடல்காண்; இது நமக்கு என்னாய் விளையும் ?

* பொருக †

பிறர்வருத்தந் தம்வருத்தமாகக்

கொண்டு ஒழுகுவதனை வாரணவாசி

யென்னும் ஊரிலுள்ளார் பதமென்றான்.

இது ''கூறியவாயில் கொள்ளாக்

காலை'' த் *தலைவி கூறியது.

(௧௫-௨௨) அலர்முலை . . . .

நாம் :—

(இ - ள்.) அதுகேட்ட தோழி அடிபரந்த முலையினையும் ஆராய்ந்த பூணினையுமுடைய நல்லாய்! பெரிய அமர்த்த உண்கண்ணினையுடைய நின்[1] தோழி உறுத்தின பொறுத்தற்கரிய மனக்கவற்சியைச் செய்யும் வருத்தங் கதுமென உயிரைவாங்கும்; அஃது உயிரைவாங்காதபடி ஒண்டொடீ! பின்னை இந்நோய் தீர்தற்குக் காரணமான மருந்தை அருளாய்; அம்மருந்துதான் மிகவும் அரிதன்று; நின்முகங்காண்டல்காரணமாக அதன்காரியமாகப் பிறந்த அருளை மருந்தாதற்றன்மையாக[2] உடையேனென்று கூறாநின்றான்; ஆதலால் அவன்றான் நின்முகத்தை இக்காலத்தே பெறின் அது மருந்தாவதல்லது வேறு சிறிதும் மருந்தில்லையாயிருக்குமாயின், திருந்திழாய்! இனி நாம் என் செய்யக்கடவேமென்றாள்;

'நின்முகங் காணு மருந்தினே' னென்றது தலைவியைக் கருதி. 'மற்று' வினைமாற்று. 'கொன்' : காலமுணர்த்திற்று. 'கொல்' : ஐயம்.

(உரு) போன் செய்வாம்:—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி 'பொன் செய்வாம்' என நகைக் குறிப்புக் கூறினள்.

அஃது "இசைதிரிந் திசைப்பினும்"† என்னும் பொருளியற் சூத்திரத்துக் கூறினும்.

(உச—உசு) ஆறு . . . . நாம் :—

(இ - ள்.) அவள் நகைக்குறிப்புக் கூறிப் பின்னரும்[3] உலகவொழுக்கத்தைத் தப்பி ஒருவன் தெருவின்கண்ணே நின்று கூறுங் கூற்றை உண்மையென்று கொண்டு அதன் உண்மையை உணராமாய் நாம் அதனைத் தெளிதல் எளிதென்று சொல்லக்கடவேமென்றாள்;

'நாம்' என்றது உயர்த்துக்கூறியது ; உளப்பாடுமாம்.

(உஎ) ஒருவன் . . . மற்று :—

(இ - ள்.) அதுகேட்ட தோழி பிள்ளை நின்கருத்து இதுவாயின் ஒருவன் சார்தன்மை எளிதென்று

கூறக்கடவேமென்றாள்;

'என்பாம்': உளப்பாடு.

---

* தொல். பொருள்: கககை. † தொல். பொருள்: கககு.

(பாடம்) 1. என். 2. மருந்தாகற்றன்மையாக. 3 பின்றும்,

23

கஎஅ

கலித்தொகை

[கலி - கூக

(உஅ–கூஉ) சிறிதாங்கே

வின்றே:—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி மாட்சிமைப்படாத இவ்வூரில் அம்பலினி ஆலரினாலே அலர்வதாக வென்று கருதி நாணையும் நிறையையும் விரும்புதலில்லாத, குடிப்பிறப்பிற்கு உரிய ஒழுக்கநெஞ்சு[1] இல்லாதவனுக்கு அவன் இறந்துபடுமென்று கூறுகின்ற அத்தன்மையே மிக இன்று காணென்றாள். அதுகேட்ட தோழி, நின் பூணாகத்திற் புணர்ச்சியை மனத்தாற் கருதி இரவுந் துயில்கொள்ளாயாய் நங் கேண்மையை நயந்து நம்மை விருப்புற்றவனை நான் அடுகையினாலே எதிர்நின்று மீட்ட நயப்பாடு

வருதலின்று

அதற்குத்தக்கது அறிவாயென்றான்.

"சினனே பேதைமை கிம்பிரி கல்குர, வினைநால் வகையுஞ் சிறப்பொடு

வருமே,"* என்பதனான், 'நாணு

நிறையு நயப்பில் பிறப்பிலி' எனச்

சினப் பற்றி வரினும் அஃது அவன்

காதலைச் சிறப்பித்துவருதலின்

அமைந்தது 'பிறப்பிலி'

பெயர்மாத்திரையாய்

இல்லாதவென்னும்

பெயரெச்சமறைக்கு முடிவாய்நின்றது.

பிறப்பிலிக்கு ஆங்கே சிறிதென

மாறிப் பொரு

ளுரைக்க.

'ஆங்கே' யென்ற ஏகாரந் தேற்றம்.

"உயர்மொழிக் குரிய வுறழுங் கிளவி"† என்றதனாற் றலைவி உறழ்ந்து கூறினாள்.

இதனாற் றலைவிக்கு விருப்பமுற்று நினைத்தல் பிறந்தது.

இது தரவுந் தனிச்சொல்லும் ஐஞ்சீரடியும் வந்த நெடுவெண்பாட்டும் ஐஞ்சீ அடுக்கிய குறுவெண்பாட்டும் இடையே முச்சீரடிவந்த கொச்சகமு

வெண்பாவுந் தனிச்சொல்லுங் குறுவெண்பாட்டும் ஓரடியானென்று ஐஞ்சீரடி வந்த போக்கிலக்கணமில்லா நிலைமண்டில வாசிரியச் சுரிதகமு பெற்றுவந்த உறழ்கலி. "மண்டிலங் குட்ட மென்றிவை யிரண்டுஞ் செந்தூக் கியல வென்மனார் புலவர்"‡ என்பதனான் மண்டிலங்கொள்க.(உச

காக.

எல்லா விஃதொத்த னென்பெறுன் கேட்டைக்காண்
செல்வங் கடைகொளச் சாஅய்ச் சான்றவ
ரல்லல் களைதக்க கேளி ருழைச்சென்று
சொல்லுத லுற்றுரைக் கல்லா தவர்போலப்
பல்லூழ் பெயர்ந்தென்னை நோக்குமற் றியானேக்கின்
மெல்ல விறைஞ்சுந் தலை;

* தொல். பொருள் : உசரு. † தொல். பொருள் : உக.அ.
‡ தொல். பொருள் : சஉகூ.
(பாடம்) 1. ஒழுக்கம் செஞ்சில்.

குறிஞ்சி - உரு]

குறிஞ்சிக்கலி

கஎகூ

எல்லாநீ, முன்னத்தானென்று குறித்தாய்போற் காட்டினை
நின்னின் விடாஅ நிழற்போற் றிரிதருவா
யென்னீ பெறாத தீதென்;[1]
சொல்லின், மறுதீவாண் மன்னோ விவள்;

செறுஅது, ஈத லிரந்தார்க்கொன் றூற்றுது வாழ்தலிற்
சாதலுங் கூடுமோ மற்று;
இவடந்தை, காதலின் யார்க்குங் கொடுக்கும் விழுப்பொருள்
யாதுநீ வேண்டி யது;

கரு. பேதாய், பொருள்வேண்டும் புன்கண்மை யீண்டில்லை யாழ
மருளி மடநோக்கி னின்றோழி யென்னை
யருளீயல்[2] வேண்டுவல் யான்;
அன்னையோ, மண்டம ரட்ட களிறன்னுன் றன்னையொரு
பெண்டி ரருளக் கிடந்த தெவன்கொலோ;

உ0. ஒண்டொடீ, நாணிலன் மன்ற விவன்;
ஆயின் ஏஎ,
பல்லார்நக் கெள்ளப் படுமடன் மாவேறி

மல்லலூ ரங்கட்
படுமே நறுநுத

னல்காள்கண்
மாறி விடினெனச் செல்வானு

உரு. மெள்ளி நகினும்

வரூஉ மிடைமிடைக்

கள்வர்போ லேனக்கிவு
நோக்குங் குறித்தது
கொள்ளாது போகாக்
குணனுடைய னெந்தைதன்
னுள்ளங் குறைபடா வாறு.

இது தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி அவனோடு உறழ்ந்து சொல்லி அவனத
நீக்கத்தக்கண் அவன் குறைமறுமைக்கு ஏற்பன சொல்லித் தலைமகளைக்

குறைநயப்பித்தது.

(க—சு) எல்லா . . . . தலை :—

(இ - ள்.) எடீ! இவனொருத்தன் என்குறைபெறுதவன்? இவன் கேட்

டைப் பாராய்; அறிவுடையோர் தம்முடைய செல்வம் முடிவை அடைவை
யினாலே மிடித்துத் தம்முடைய வருத்தத்தைக் களைதல்தக்க உறவானவ
ரிடத்தே சென்று தங்குறையை அவர்க்கு வாய்விட்டுச் சொல்லத்தொடங்
கிப் பின்னை அதனை முடியச் சொல்லமாட்டாதிருப்பாரைப்போலத் தான்

(பாடம்) 1. பெருந்தேன்.

2. யருளியல்.

5அ/0

கலித்தொகை

[கலி - க்4

றக் கருதியதனைக் கைவிட்டு

என்னைப் பலமுறையாகப் பார்க்கும்;
பின்னை யான் தன்னைப்பார்க்கின் தான்
மெத்தெனத் தலையிறைஞ்சி நிற்கும்;
இது தலைவன் தம்மிடத்து
வருகின்றமைகண்டு தலைவிக்குக்
கூறிப், பின்னர் அவனெதிர்சென்று
அவனை நோக்கிக் கூறுகின்றாள்.

(எ—க) எல்லாநீ
தீதேன் :—

(இ - ள்.)ஏடா! நீ குறிப்பாலே எம்மோடு ஓர் நட்புச் செய்யக் கருதினாய்போல எமக்கு அறிவித்தாயாய், நின்னைவிட்டு நீங்காத நிழற் போல* என்னைவிட்டு நீங்காமற் றிரிதருகின்றவனே![1] நீ பெறாத குறை யாது? அதனை இதுவென்று கூறு;

இது குறையுறவுணர்தல்.

(௧0) சொல்லின் . . . . . விவள்

:—

(இ - ள்.) யான் என் குறையைச் சொல்லின் இவள் மிகவும் மறுதிருப்பாளோ?

இது தலைவன் தன் நெஞ்சோடு சொயினது. "ஐயக்கிளவி யாடூஉவிற் குரித்தே" †என்பதனான் ஐயக்கிளவி தலைவற்குரித்தாய் வந்தது.

"மறுதிவாள்" வினைத்திரிசொல். ஓகாரம், வினா.

(௧௧—௧௨.) சேறஅது

மற்று —

(இ - ள்.) அங்ஙனம் உசாவித் தம்பால் இரந்தவர்களுக்கு யாதானு மொன்றை முகமாறாது [2] ஈதலை நடத்தாது உயிர்வாழலிற் பின்னைச் சாதலுங் கூடுமென்றான் ;

(கரு—கச) இவடந்தை

யது :—

(இ - ள்.) அதுகேட்ட தோழி இவள் தந்தை இரப்பார்மேலுள்ள காதலினால் இரவலர் யார்க்குஞ் சீரிய வேண்டிய பொருள் யாதுதானென்றாள் ;

பொருள்கள் கொடுக்கும்; நீ

இஃது "உயர்மொழிக் குரிய வுறழுங் கிளவி, யையக் கிளவி யாடூஉவிற் குரித்தே"† என்பதனாற் றோழி உறழ்ந்து கூறினள்.

(கரு—கஎ) பேதாய்

யானே:—

(இ - ள்.) அதுகேட்ட தலைவன், கூற்றின் குறிப்பறியாதவளே! என்னிடத்துப் பொருளை இரக்கும் மிடியில்லை. மருண்டு மடப்பத்தை

* குறள். உ0அ. † தொல், பொருள்:உக அ.
(பாடம்) 1. திரிகின்றவளே. 2. முகமறுத.

குறிஞ்சி - உரு]

குறிஞ்சிக்கலி

கஅக

யுடைத்தாகிய நோக்கினையுடைய நின் தலைவி என்னை அருளுதலை * யான் இரப்பேனென்றான்;

(கஅ) அன்னையோ:—

(இ - ள்.) அத்தன்மையையோ?

இஃது அதுகேட்ட தோழி இவனிடத்துக் களவொழுக்கம் அறியாள் போன்று கூறியது.

(கஅ-கக) மண்டம . . . .
தேவன்கோலோ:—

(இ - ள்.) மிக்குச் செல்கின்ற போரிலே பகைவரைக் கொன்ற

களிறுபோல்வான்றன்னை ஒரு மகளாயிருக்கின்றவள் அருளும்படியாகக்† கிடந்த குறை எத்தன்மையதோதான்?

இது தோழி தலைவன் நீங்கியபின்னர்த் தலைவியோ டுசொலியது.

(உ0–உஅ) ஒண்டொடி

. . . . . . வாறு:—

(இ - ள்.) ஒண்டொடீ! இவன் எந்தைதன் உள்ளங் குறைபடாதபடி வேண்டுவன கொடுத்துத் தான்

குறித்தமொன்று கைப்பற்ருமற் போகாக்
குணத்தையுடையன் ; அதனல் நீ அருளினுந் தாழ்வில்லே ; அவன்ருன்
குறையுற்று நிற்கின்ற காலத்து யான் தன்னை இகழ்ந்து சிரித்தாலும்
பலகாலும் வரும் ; அக்குறையுறவுக்கு நடுவேநடுவே கள்வர் தாங்குறித்த
பொருளை நோக்காது நோக்குமாறுபோல நின்னை மனநோக்காது
நோக்கும் ; அதனன் இவனுயின் அறுதியாக எள ! நாணமிலன்; நாண
மின்மையால் இவன் போகின்ற

போக்குப் பலருஞ் சிரித்து
இகழப்படு
மடன்மா‡ யான் ஏறும்படி நறிய
நுதலினையுடையாள் அருளாளாய்
அருளை
மாறியேவிடின் அவளோடு
என்னிடை நிகழ்ந்தது ஊரிடத்தே
அலராமே
யெனக் கருதிச்
செல்வான்போலேயிருந்தது.

இஃது உசாவியபின், தோழி அவளை நோக்கி, மேல் இதற்குத் தக்கது நீ அறிந்து செய்யெனக் குறைநயப்பித்தது.

'எள்ளிநகினும்வரு' மென்றது தன்கண் நிகழ்ந்த எள்ளல் பொருளாக நகை பிறந்தது. 'ஏறி' : ஏற. 'எந்தை' என்றது தலைவி தந்தையை.

'நோக்கினு'மென்றது நோக்கு அல் நோக்கம். 'எஎ': இகழ்ச்சிக் குறிப்பு.

"முறைப்பெயர்
மருங்கிற் கெழுதகைப் பொதுச்சொ,
னிலைக்குரி மரபி
னிருவீற்று முரித்தே" §.
என்பதனான் 'எல்லா விஃதொத்தன்' 'எல்லா
வெண இருபாற்குமாய் நின்றது.

---

* கலி. கசரு: கக - கச. † மணி. கஅ : கசரு-கசக.

‡. குறள். கஎ. § தொல். பொருள் : உஉ0.

இதனாற் றலைவிக்கு நினைத்தல் பிறந்தது.

இது கைகோள் இரண்டினுங் கூறத் தகாதனவாகப், 'பொருள் யாது நீ வேண்டிய' தென்றும், 'அருளியல் வேண்டுவல் யா' னென்றுங் கூறலிற் "காமஞ்சான்ற விளமையோ"* ளாக நிகழ்ந்த கைக்கிளையாம்.

இது தளைவிரவின நெடுவெண்பாட்டும் ஐஞ்சீரடுக்கிய குறுவெண் பாட்டும் ஓரடியானொன்றும் ஐஞ்சீரடுக்கிய குறுவெண்பாட்டு மூன்றுங் கொச்சகமும் ஓரடியானொன்றுந் தனிச்சொல்லும் வெள்ளைச் சுரிதகமும் பெற்ற கொச்சகக்கலி.

சா உ.

ஏஎ யிஃதொத்த ஞுணிலன் றன்ஞெடு
மேமேமென் பாரையும் மேவினன் கைப்பற்று

மேவினு மேவாக் கடையு

மஃதெல்லா

நீயறிதி யானஃ தறிகல்லேன் பூவமன்ற
ரு. மெல்லிணர் செல்லாக் கொடியன்னுய் நின்னையான்
புல்லினி தாகலிற் புல்லினெ னெல்லா

தமக்கினி தென்று வலிதிற் பிறர்க்கின்னு
செய்வது நன்றுமோ மற்று;

சுடர்த்தொடீ, போற்றுய் களைநின் முதுக்குறைமை போற்
௧௦. வேட்டார்க் கினிதாயி னல்லது நீர்க்கினிதென் [றிக்கேள்
றுண்பவோ நீருண் பவர்;

செய்வ தறிகல்லேன் யாதுசெய் வேன்கொலோ

வைவா யரவி னிடைப்பட்டு

நைவாரா

மையின் மதியின் விளங்கு முகத்தாரை
கடு. வெளவிக் கொளலு மறனெனக் கண்டன்று ;

அறனு மதுகண்டற் றாயிற் றிறனின்றிக்
கூறுஞ்சொற் கேளா னலிதரும் பண்டுநாம்
வேறல்ல மென்பதொன் றுண்டா லவனொடு
மாறுண்டோ நெஞ்சே நமக்கு.

இஃது "ஏறிய மடற்றிறம்" † என்னுஞ் சூத்திரத்து "மிக்க காமத்து மிட" லென் றதனாற் றலைவனுந் தலைவியும் உறழ்ந்தகூறித் தலைவி கூடக் கருதிய பெருந் திணை.

---

*. தொல். பொருள் : ூ0. + தொல். பொருள் : ...

குறிஞ்சி - உசு]

குறிஞ்சிக்கலி

கஅரு

(க—அ) ஏள

மற்று :—

(இ - ள்.) இவனொருத்தன் தன்னோடு புணர்ச்சிக் குறிப்பின்றி நிற்பாரையுந் தான் புணர்ச்சிக் குறிப்புடையனாய்க் கையாலே வலிதிற் பிடித்துக்கொள்ளும், ஆதலால் ஏஎ நாணிலனாயிருந்தானெனத் தலைவி கூறினாள்; அதுகேட்ட தலைவன் அப்புணர்ச்சிக் குறிப்பினது பகுதியாகிய மெய்ப்பாடெல்லாம் நின்னிடத்துப் பொருந்துதலைச் செய்யினும் பொருந்தாத இடத்திலுமுள்ள நன்று தீது நீ அறியக் கட்வை; யான் புணர்ச்சிக் குறிப்பை அறிதலைச் செய்யேன்; பூ நெருங்கின மெல்லிய கொத்து நீங்காத கொடியையொப்பாய்! நின் மேனி புல்லுதற்கு இனிதாயிருக்கையினாலே நின்னை யான் புல்லினேனென்றான்; அதுகேட்ட தலைவி எடா! தமக்கு இனிதாயிருக்குமென்று கருதிப் பிறர்க்கு இன்னாதனவற்றை வலிதிற் செய்வது * இன்பத்தைத் தருமோவென்றாள்

'ஏஎ': இகழ்ச்சிக் குறிப்பு.

இது "வேட்கை மறுத்துக் கிளந்தாங் குரைத்தன், மரீஇய மருங்கி னுரித்தென மொழிப"† என்பதனான் அடியோன் தலைவனுயவழித் தலைவி வேட்கைமறுத்து உரைத்தது.

(௬௫) சுடர்த்தொடீ

கண்டன்று :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவன் சுடர்த்தொடீ! நின் முதுமைக்கண் உறைகின்ற நிலைமை ஈண்டுப் போற்றாது கைவிடு! யான் கூறுகின்றதனைப் பேணிக்கேள்! நீர் உண்பார் சிலர் தண்ணீரை விரும்பினர்க்கு அஃது இனிதாயின் உண்ணுமதல்லது அந் நீர்க்கு இனிதாயிருக்குமென்று கருதி உண்பரோ? உண்ணார்காணென்றான்; என்று பின்னும் ஐந்துவாயினை யுடைய பாம்பினது பார்வையிலே அகப்பட்டு வருத்தம்வந்து மேற்செய்யும் காரியம் அறிகல்லேன்; இனி யாது செய்வேன் கொல்லென நெஞ்சொடு கிளந்து, மறுவில்லாத மதிபோல விளங்கும் முகத்தினையுடைய ‡ மகளிரை வலிதிற் புணர்தலும் ஒரு மணமென§ நூல்கண்டதெனத் துணிந்து கூறினான்;

'ஐவாயர' வென்றது தலைவியை.

(கக-கக) அறனு

நமக்கீது :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி நூல் உயர்ந்த மணத்தைக் கூறப்பட்ட உலக ஒழுக்கமும் அத் தன்மைத்தாயிருக்குமாயின், அவனும் யான் மறுத்து கூறுஞ் சொல்லைக் கொள்ளாது திறனன்றி நலியுமாயின், அவையேயன்றி அவன் மனத்து முற்பிறப்பில் யானும் அவனும் வேறல்லமென்பதொன்று

* குறள், கககூ. † தொல், பொருள், உகக. ‡ குறள், கககஎ.

§ ...

அவனிடத்துண்டாயிருக்குமாயின், நெஞ்சே அவனோடு நமக்கு இனி மாறு பாடுண்டோவெனப் புணர்ச்சிக்கு உட்பட்டுக் கூறினாள்.

'அ்றனுமதுகண்டற்' றென்பது ஆங்கு நெஞ்சழிதல். தான்மறுத் துரைப்பவுந் தன்மேல் அவன் விருப்பஞ்செய்தமை கண்டு 'பண்டு நாம் வேறல்லமென்பதொன்றாு' அவனிடத் துண்டாலென்றாள். இது நீதாமாத லான் அடியோர் தலைவராக வந்த பெருந்திணை.

இதனால் இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது தளைவிரவின நெடுவெண்பாட்டும் ஐஞ்சீரடுக்கிய குறுவெண் பாட்டுங் கொச்சகமும் வெள்ளைச்சுரிதகமும் பெற்று வந்த கொச்சகக்கலி.

நோக்குங்கா லேக்கித் தொழூஉம் பிறர்காண்பார்[1]

தூக்கிலி தூற்றும் பழியெனக்
கைகவித்துப்
போக்குங்காற் போக்கு
நினைந்திருக்கு மற்றுநாங்
காக்கு மிடமன் றினி;

௫. எல்லா வெவன் செய்வாம்;
பூக்குழாய் செல்ல லவனுழைக்
கூஉய்க்கூஉய்
விரும்பியான் விட்டேனும்
போல்வலென் றோண்மேற்
கரும்பெழுது
தொய்யிற்குச் செல்வலீங் காக
விருந்தாயோ வென்றாங் கிற;

௧௦. அவனின், திருந்தடி
மேல்வீழ்ந் திரக்குநோய் தீர்க்கு
மருந்துநீ யாகுக லான்;

இன்னும், கடம்பூண்
டொருகானீ வந்தை யுடம்பட்டா
ளென்னுமை யென்மெய்
தொடு;

இஃதோ வடங்கக்கேள்;
௧௫. நின்னொடு சூழ்ங்கா னீயு
நிலங்கிளையா

வென்னொடு நிற்ற

வெளிதன்றோ மற்றவன்
றன்னொடு நின்று விடு.

இது தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி அவனிலைமை தலைமகட்குக் கூறி அவளுரைத்த மாற்றத்தால் அவள் குறிப்பறிந்து இவ்வகையான தலைவற்குக் கூறென அவளுடன் நகையாடிக் கூட்டமுண்மை தான் அறிந்தமை தோற்றுவித்தது.

(பாடம்) 1. காண்பான்.

குறிஞ்சி - உள]

குறிஞ்சிக்கலி

கஅரு (க—ரு)

நோக்குங்கா . . . .

வேலன்செய்வாம்:—

(இ - ள்.) தான்
தொழுகின்ற தன்மையைப் பிறர்

காண்பாராக மனத்தாற் றூக்குதல் இல்லாதவன் நாம் பார்க்குங்கால் நம்மைநோக்கித்

தொழாநிற்கும்; இங்ஙனந் தொழுது நமக்குப் பழியைத்தூற்றுமென்று

கருதித் தொழுதலை விலக்கிப் போகவிடுங் காலத்து அப்போக்குத் தனக்குச்

செய்யும் வருத்தத்தை நினைத்துப் போகாதிருக்கும்; ஆதலால் இனி நாம்

அவனை நம்பால் வாராமற் காக்குங் காலமன்று, பின்னை ஏடீ! இங்ஙனங் காத்

தற்கு அரிதான நிலைமைகண்டு மேல்

என்செய்யக்கடவேங் கூறாய்!

அதுகேட்ட தலைவி அதற்கு மறுமொழிகொடாது உடம்பட்டமை குறிப்பான் உணர்ந்தமையிற் பின்னுந் தோழி கூறுகின்றாள்.

(சு—கக) பூக்குழாய்

லான் :—

(இ - ள்.) பூங்குழையினை யுடையாய் ! வருத்தத்தையுடைய அவ ளிடத்து நீ கூடுங்கூட்டத்தை யான் விரும்பி நின்னைப் பலகாலும் அழைத் தழைத்துக் கொண்டுபோய்

விட்டேன்போலேயுமிருப்பேன்;
அவற்கு அது

தோன்றுதபடி யான் அவனிடத்தே நீ என் தோண்மேற் கரும்பாக* எழு
துங் குழம்பிற்கென்று செல்வன்; நீ ஆண்டு வந்து இவ்விடமே நினக்கு
இருப்பிடமாகக் கருதி இருந்தாயோவென்று என்னைத் தேடிவந்தாயாகக்
கூறி அவ்விடத்தினின்று குறியிடமே போ! அப்பொழுது அவன் நோய்தீர்க்

கும் மருந்து நீயாகையினலே
நின்னுடைய நன்றாகிய அடிமேலே
வீழ்ந்து†
நின்னை இரந்துகொள்ளும்;

(கஉ—கரு) இன்னும் . . . .
தொடு :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி,

நீ வாராய்! இன்னமும் ஒருகால் அவ ளிடத்தே சென்று உன்குறைமுடித்தலைத் தனக்குக் கடனாக அவள் ஏறட் டுக்கொண்டு கூட்டத்திற்கு உடம்பட்டாளென்று அவற்குக் கூறுமைக்கு என்மெய்யைத் தொட்டுச் சூளுறுவாயாகவென்றாள்;

வாவென்றது 'வந்தை' யெனத் திரிந்தது.

(கச—கஎ) இஃதோ . . . விடு:—

(இ - ள்.) அதுகேட்ட தோழி யான் கூறிய குற்றம் இதுவோ? இனி

இது செய்யும்படியைச் சுருங்கக்கேள்! நின்னொடு யான் இதனை ஆராயுங் காலத்து நீயும் நாணத்தால். நிலத்தைக் கீறி‡ என்னுடனே. வேறுபட்டு

நின்றநிலை செய்தற்கு எளிதன்றோ? இந்நிலையைப் பின்னை அவன் தன்னுடனே நின்று பார்த்து நின்றுற்செய்தலரிதன்றோ? என்றாள்.

---

* கலி. கூஅ : கக. † சீவகசிந். உ0கூஉ. ‡ அகம். கசு : கரு - கசு.

௧௮.

கஅசு

கலித்தொகை

[கலி - கூஅ

'இஃதோ' வென்றாள் 'உடம்பட்டா ளென்னுமை என் மெய்தொடு' என்றதனே. ஒகாரம் இது குற்றமன்றெ(ன) மறையுணர்த்திற்று.

இதனுற் றலைவிக்குப் புணர்ச்சியுவகை தோன்றிற்று.

இஃது 'எல்லா வெவன்செய்வா'மெனவும், 'இஃதோ வடங்கக்கே' ளெனவும் வழியசைபுணர்த்த சொற்சீரடிகள் வந்து ஐஞ்சீரடுக்கிய வெண்பாக்களும் வந்த வெண்கலிப்பாட்டு. (உஎ)

கூச.

அணிமுக மதியேய்ப்ப வம்மதியை நனியேய்க்கு
மணிமுக மாமழைநின் பின்னொப்பப் பின்னின்கண்

விரி நுண்ணூல் சுற்றிய வீரித
ழலரி
யரவுக்கண் ணணியுற
ழாரன்மீன் றகையொப்ப ரு.
வரும்படர் கண்டாரைச் செய்தாங்
கியலும்

ஷிரிங்தொலி கூந்தால்[1]
கண்டை யெமக்குப்

பெரும்பொன் படுகுவை பண்டு ;

எஎ ! எல்லா, மொழிவது கண்டை யிஃதொத்தன்
றொய்யி
லெழுதி
யிறுத்த பெரும்பொன் படுக
முழுவ துடையமோ யாம்
;

உழுதாய்,

சுரும்பிமிர் பூங்கோதை
யந்நல்லா யானின்

திருந்திழை

மென்றோ ளிழைத்தமற் றிஃதோ

கரும்பெல்லா நின்னுழ வன்றோ வொருங்கே
கரு. துகளறு வாண்முக மொப்ப மலர்ந்த

குவளையு நின்னுழ வன்றோ

விகலி

முகைமாறு கொள்ளு மெயிற்று யிவையல்ல
வென்னுழுவாய் நீமற் றினி ;

எல்லா, நற்றோ ளிழைத்த கரும்புக்கு நீகூறு
முற்றெழி னீல மலரென வுற்ற
விரும்பீர் வடியன்ன வுண்கட்கு மெல்லாம்
பெரும்பொன் னுண் டென்பா யினி;

நல்லா யிகுளைகேள்;

(பாடம்) 1. கூந்தலாய்.

குறிஞ்சிக்கலி

க௮எ

ஈங்கே
தலைப்படுவ னுண்டான் றலைப்பெயின்
வேந்துகொண் டன்ன பல;

ஆங்காக,

வத்திற

மல்லாக்கால் வேங்கைவீ

முற்றெழில் கொண்ட சுணங்கணி பூணாகம்
பொய்த்தொருகா லெம்மை முயங்கினை சென்றீமோ

௩௦. முத்தேர் முறுவலாய்

நீபடும் பொன்னெல்லா

முத்தி யெறிந்து விடற்கு.

இஃது அருமைசெய்தயர்த்த தலைவன்

வந்தழித் தலைவி எள்ளின இடத்துத்

தலைவன் அவளோடு உறழ்ந்து கூறி நகையாடிக் கூட்டத்திற்கு உடம்படு வித்தது. இதற்கு விதி " உயர்மொழிக் குரிய வுறழுங் கிளவி "*என்பதனுட் டலைவன் உயர்மொழிக்குத் தலைவி உறழ்ந்து கூறுமென்றும்.

(௧—௭) அணிமுக

பண்டு :—

(இ - ள்.) நினது

அழகினையுடைய முகம்

மதியையொப்ப, மணிகள்

விளங்கும் நின் பின்னின் மயிர் அம் முகத்துக்கொப்பாகிய மதியை மிகவும் பொருந்துங் கருமையையுடைய மழையையொப்ப, அப்பின்னின் மயிர்க் கண்ணே கிடந்து அலர்ந்த நுண்ணிய நூலாற் கட்டின தேனூல் ஈரமான இதழையுடைய பூக்கள் பின்னுக்கொப்பாகிய கரும்பாம்பிடத்தே கிடந்து

அதன் கரிய நிறத்தோடே

மாறுபடுகின்ற கார்த்திகையென்னும்

மீனினது அழகையொப்ப, மனத்தான்

ஒப்புக்கண்டவர்களை அவ்விடத்தே

அரிய வருத்தத்தைச் செய்து

போகின்ற பரந்து தழைத்த

கூந்தலையுடையாய் ! நீ என்னை

எள்ளும் நிலைமையைக்

கைவிட்டு 'யான் கூறுகின்றதனை
மனத்தான் ஆராய்ந்துபார் ! நீ பண்டு
எம்பொருட்டுப்
பெரிய பொன்னுண்டாவை ;

இது முன் நீ இடைவிடாமற் கூடிய கூட்டத்தால், தோற்றப் பொலிவு எய்தினையெனக் கூறி, ஈண்டு நிகழ்ந்த அருமைசெய்தயர்த்ததனாற் பிறந்த வருத்தத்தை நீக்கிற்றும். அஃது எமக்கு நீ பெரிய பொன்கடவை யென்பதோர் நகைப்பொருளுந் தோன்ற நின்றது.

'அலரி' பூவென்னு மாத்திரையாய் நின்றது. 'ஒப்ப'வென்னுஞ் செயவெனெச்ச உவமவுருபுகள் 'கண்டா'ரென்னுந் தொழிற்பெயரிற் றொழிலொடு முடிந்தன.

(அ—௪0) ஏஎ எல்லா . . . . . யாம் :—

(இ - ள்.) இவனொருத்தன் தன்னாற் றோற்றப் பொலிவு எய்தினே மெனக் கூறுகின்ற கூற்றைப் பாராயென நெஞ்சொடு கூறி, நீ என் தோண்

* தொல். பொருள்; உ௧௮.

மேற் றொய்யிலெழுதிக் கனவுபோல ஒரொருகாற் றங்கின நிலையாலுண்டான தோற்றப் பொலிவு உண்டாவேம்; அதுவன்றி எம்முலையால் நின் மார்பிடத்து இடைவிடாது உழுத நல்வினையை உடையேமோ? அஃதின்றே;

'என': இகழ்ச்சிக் குறிப்பு.

இது,[1] தொய்யிலெழுதி முடித்ததனால் உண்டான பொன்கடவேம், அதுவன்றி நின்கீழ் உழுத நிலைமையையுடையேமோவென ஒரு நகைக் குறிப்புத் தோன்றநின்றது.

(கக—கஅ) உழுதாய்.

. . . . ற்ினி :—

(இ - ள்.) சுரும்புகள் ஒலிக்கின்ற பூவாற் செய்த கோதையினையுடைய அழகினையுடைய நல்லாய்! நீ உழுதாய்; * பின்னை இக்களவொழுக்கத்திலும் இந்தத் திருந்தின இழையையுடைய மென் றோளிலே யான் எழுதின கரும்பின் தோற்றப் பொலிவெல்லாம் நின் முலைகள் இடைவிடாமற் புணர்ந்ததனாலுண்டான பயனல்லவோ? அதனோடேகூடப் பழுதறுகின்ற ஒளியினையுடைய முகமானது குவளையோடு இகலிப் புணர்ச்சிதோறும் பொலிவு பெறும்படி பூத்தகண்களின் தோற்றப்பொலிவு நீ

இடைவிடாமற் பயனல்லவோ ? புணர்ந்தகனுவுள்ள முல்லைமுகையோடு மாறுபாடு கொள்

ளும் எயிற்றினையுடையாய்! இத்தோற்றப் பொலிவுகளன்றி வேறே தோற்றப் பொலிவுண்டாக நீ புணர்வாயென்றான் ;

என்றதனுல், நின் கருத்து இடைவிடாது முயங்குதலேயாயின் இனி நீ இடைவிடாமல் முயங்கினைகா ணென்றான். அதன் பயன் இனி வரைவே னென்றதாம். இது[2] நீ என்கீழ் உழுதாயென நகைக்குறிப்புத்தோன்ற நின்றது. 'மற்று' வினைமாற்று. 'குவளை' யென்றது கண்ணை.

இதனுல் அருமைசெய்தயர்த்தது மில்லையென்றான். இதனுல் நீ கரும்புங் குவளையுமன்றி வேறு என்னுழுவாயென ஒரு நகைக்குறிப்புத் தோன்றிற்று.

(கக—உஉ) எல்லா . . . . யினி :—

(இ - ள்.) அது கேட்ட தலைவி ஏடா ! என் அவயவங்களிற் றோற்றப் பொலிவு உண்டாகக் கூறாமல் என்தோள்களில் நீ எழுதப்பட்ட கரும்பிற் குத் தோற்றப்பொலிவுண்டென்று நீ கூறு ; அதற்கு இயைந்தேன் ; இனி அலர்ந்த செவ்வி குலைந்து முற்றின அழகையுடைய நீலமலரென்று பிறர் கூறும்படியாக வருத்தமுற்ற இரும்பு ஈர்வடியன்ன உண்கட்கும் மற்று முள்ள எல்லா உறுப்புக்கட்கும் பெரிய பசப்புண்டென்று சொல்லுவாயாக!

இதனுல் அவன் அருமைசெய் தயர்த்திலே னென்றதற்கு அக்காலமெல் லாம் யான் வருத்தமுற்றேனென்று ளாயிற்று. கரும்பு அவயவமன்றி எழுதப்

*. சீவகசிந். கஉஅக.

(பாடம்). 1. இதனுற். 2. இதனுல்.

குறிஞ்சிக்கலி

கஅகூ

பட்டதாகலிற் ளேற்றப்பொலிவு
உண்டென்றான். கூட்டத்தாற்
பொலிவு
பெறாது இளமைப்பருவத்தும் இரும்பு
ஈர்ந்த வடுவகிரையொத் திருத்தலுள
தாகலின், 'இரும்பீர்
வடியன்ன வுண்கட்கு' மென்றான்.
இது கண்ணென்னும்
பெயர்மாத்திரையாய் நின்றது.

இதனால் அவன்
அருமைசெய்தயர்த்திலே
னென்று நன்றாகக் கூறிய
பொன்னிறத்தைப் பசப்பாக்கி
அக்காலமெல்லாந்
தான் வருந்தும்படி தன் நலத்தை
அவன்கொண்டமை கூறினாளாயிற்று.

(உகூ—உடு) நல்லாய் . . . . பல :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவன், நல்லாய்! இகுளையே! யான் கூறுகின்றதனைக்கேள்! அரசனைச் சேர்ந்து அவன் செல்வத்தை நுகர்ந்தானொருவன் அவன்வயத்தனாய்நின்று காரியத்தாற் றலைமைப்பாடு எய்துவனாயின், அவ்வேந்தன் அவனாலுள்ள பயனைக்கொண்டாற் போன்ற பலபயனையும் யான் இவ்விடத்தே எய்துவேனென்றான்;

என்றது கூட்டத்தாற் செயற்கை நலம்பெற்ற நின்னை வரைந்துகொண்டு நின்னாற் பெறும் பயனெல்லாங் கொள்வேனென்றதாம். இனி அரசனுடைய பொருளை நுகர்ந்தவன் எதிர்ப்படில் அவ்வரசன் அவனிடத்து வருத்தமுறுத்திக் கொண்டாற்போன்ற பல பயன்களையும் யானும் இங்கே கொள்வேனென ஒரு நகைக்குறிப்புத் தோன்றிநின்றது.

(உசு). ஆங்காக :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி நீ அருமைசெய்தயர்த்ததனைப் பொய் யாக்கி அன்பின்றிநின்ற தன்மை நீங்கி எம்மிடத்து அன்புடையையான காலத்து நீ கூறியவாறே ஆவதாகவென உடம்பட்டுக் கூறினாள்;

(உஎ—கூக) அத்திற . . . . விடற்கு :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவன் நீ இங்ஙனம் வெறுத்துக் கூறிய கூறுபாடு நீங்கியகாலத்து,

முத்தையொக்கும்

முறுவலேயுடையாய்! நீ முன்பு உற்ற பசப்பெல்லாம் இனி ஒருகாலமும் உறாதபடி கழித்துவிடுதற்கு வேங்கைப்பூவினது முற்றின அழகைக்கொண்ட சுணங்கணிந்த பூணினை யுடைய ஆகத்தாலே பொய்த்தாகிலும் ஒருகால் முயங்கினையாய்ச் செல்வா யென்முன்.

'பொன்னெல்லா

முத்தியெறிந்துவிட' வென்றதனால் வரைவேனென் முன். இதனால் நீ கடவ பொன்னெல்லாம் பெற்றேனென்று கழித்துவிடுவே

னென ஒரு நகைக்குறிப்புத் தோன்றிநின்றது.

இதனால் இருவர்க்கும் புணர்ச்சியுவகை தோன்றிற்று.

இது தரவும் ஐஞ்சீரடுக்கித்
தளைவிரவின குறுவெண்பாட்டுந்
தனிச்
சொல்லும் நெடுவெண்பாட்டும் ஐஞ்சீரடுக்கிய
நெடுவெண்பாட்டும் வழியசை கசுO

கலித்தொகை

[கலி - சுட புணர்த்த
சொற்சீரடியுங்
குறுவெண்பாட்டும் வெள்ளைச்சுரிதகமும்
பெற்று

வந்த கலிவெண்பாட்டு. இதனுள் நிரையீற் றியற்சீர்ப் பின்னர் நிரைமுதல்
வெண்சீரும் நேர்முதல் வெண்சீரும் வருதலின் 'அணிமுக மதியேய்ப்ப

வம்மதியை நனியேய்க்கு' மென்பது
கட்டளையன் றாயிற்று. " நிரை முதல்
வெண்சீர் வந்து நிரைதட்பினும்,

வரைநிலை யின்றே யவ்வடிக் கென்ப"
* என்பதனால் உணர்க.
(உஅ

சா௫.

திருந்திழாய் கேளாய்நம்
மூர்க்கெல்லாஞ் சாலும்
பெருநகை யல்க னிகழ்ந்த
தொருநிலையே
மன்பதை யெல்லா மடிந்த
விருங்கங்கு
லந்துகிற்

போர்வை யணிபெறத் தைஇநம்

ரு. மின்சாயன் மார்பன்
குறிநின்றேன் யானாகத்
தீரத் தறைந்த தலையுந்தன்
கம்ப லுங்
காரக் குறைந்து கறைப்பட்டு
வந்துநஞ்
சேரியிற் போகா முடமுதிர்
பார்ப்பானைத்
தோழிநீ போற்றுதி யென்றி
யவனங்கே

௧0. பாராக் குறழாப் பணியாப் பொழுதன்றி
யாரிவ னின்றீ ரெனக்கூறிப்[1] பையென
வைகாண் முதுபகட்டிற்

தையா றம்பலந் தின்றியோ வென்றுதன்
பக்கழித்துக்[2] கொண்டீ யெனத்தரூஉம் யாதொன்றும்
வாய்வாளே னிற்பக் கடிதகன்று கைமாறிக்
கைப்படுக்கப் பட்டாய் சிறுமிநீ மற்றியா
னேனைப் பிசாசரு ளென்னை நலிதரி
னிவ்வூர்ப் பலிநீ பெறூஉமற்கொள் வேனெனப்
பலவுந் தாங்காது வாய்பாடி நிற்ப
முதுபார்ப்பா னஞ்சின னாத லறிந்தியா
னெஞ்சா தொருகை மணற்கொண்டு மேற்றூவக்
கண்டே கடிதரற்றிப் பூசறொடங்கின னங்கே
யொடுங்கா வயத்திற் கொடுங்கேழ்க் கடுங்க
ணிரும்புலி கொண்மார் நிறுத்த வலையுளோ

* தொல். பொருள்; கஎஉ.

(பாடம்) 1. னின்றியெனக் கூறிப், 2. பைக்கழித்துக்.

குறிஞ்சிக்கலி
கக்க

உடு. நேதில் குறுநரி பட்டற்றுற் காதலன்
காட்சி யழுங்க நம்மூர்க் கெலாஅ
மாகுல மாகி விளைந்ததை யென்றுந்தன்

வாழ்க்கை யதுவாகக் கொண்ட முதுபார்ப்பான்
வீழ்க்கைப் பெருங்கருங் கூத்து.

இஃது இரவுக்குறி அலராமென்றஞ்சித் தலைவனை நீக்கி நிறுத்தக் கருதிய தோழி "அல்லகுறிப் படுதலு மவள்வயி னுரித்தே, யவன்குறி மயங்கிய வமைவொடு வரினே"* என்னுஞ் சூத்திரத்தான் அல்லகுறிப்படுதல் தனக்கும் உரித்தாகலின், அவன்செய்த குறியறிதற்குப் [1]புறத்துச் சென்றவழி, ஆண்டுப் பிறந்ததோர் செய்தியாக ஒரு பொய்யை நாடகவழக்கும் உலகியல்வழக்குமாகப் புணர்த்துரைவகையாற் படைத்துக்கொண்டு, பிற்றைஞான்று தலைவன் சிறைப்புறமாகத் தலைவிக்குக் கூறியது. இதனை "இரந்து குறையுற்ற கிழவனைத் தோழி, நிரம்ப நீக்கி நிறுத்த லன்றியும், வாய்மை கூறலும் பொய்தலைப் பெய்தலும், நல்வகை யுடைய நலத்திற் கூறியும், பல்வகையானும் படைக்கவும் பெறுமே"† எனப்பொருளியற் சூத்திரத்துப் பொய்தலைப் பெய்தலையும் படைக்கவும் பெறுமென வழுவமைத்தவற்றுற் கொள்க.

(இ-ள்.) திருந்தின இழையினையுடையாய்! தன்னுடைய மயிர்நீங்குதலாற் றட்டையான தலையினையும் படாத்தினையு முடையனுய்க் கருங்குட்டத்தாலே காலுங் கையுங் குறைந்து கடமைத்துறைப்பட்டு வந்து நந்தெருவினின்றும் போகாமல் ஒளித்துத்திரியும் முடமாகிய முதிர்ந்த பார்ப்பானைத் தோழி நீ பேணுவாயாகவென்று பலகாலுங் கூறுவை; அதனைப்

பேணுதே உயிர்ப்பன்மைகளெல்லாஞ் சோத் துயில்கொண்ட கங்குலிலே அழகிய துகிலாற் போர்த்த போர்வையை வாங்கி அழகுபெற உடுத்து நம்முடைய மென்மையினிய மார்பையுடையவன் செய்யுங் குறியை உற்றுநின்றேனுக, அப்பார்ப்பானுலே இராக்காலத்தே பெரிய நகை நிகழ்ந்தது; அந்நகை ஊர்க்கெல்லாங் கொண்டாடுதற்கு அமைந்திருக்கும்; அது நிகழ்ந்த படியைக் கேளாய்! அவன் அவ்விடத்தே குனிந்துபார்த்து "மகளிர் நிற்குங்

காலம் அன்ருக இவ்விடத்து நின்ற நீர் யா"ரென்று முற்படக்கூறி, "சிறியவளே! நீ என்னுலே அகப்படுத்திக்கொள்ளப்பட்டா" யென்று கூறிப் பையெனப் பணிந்து, வைக்கோலைக் கண்ட முதிய எருதுபோலே,

என்பக்கத்தினின்றும் போகாதே நின்று, "தையால்! தம்பலந் தின்பா" யென்று தன் பாக்கிடும் பையைக் குலைத்து, "நீ எடுத்துக்கொள்" என்று தந்த அளவிலே யான் அங்கு ஒரு வார்த்தையும் வாய் திறந்து சொல்லேனுய் நிற்கையினுலே, தான் அஞ்சி முன்புகொண்டுநின்ற

* தொல், பொருள்; கக.க, † தொல். பொருள்; கக.ச.

(பாடம்) 1. குறிப்பறிதற்குப்.

கஃஉ

கலித்தொகை

[கலி - கூ௫

ஒழுக்கத்தைக் கைவிட்டுக் கடிதாக நீங்கிப், பின்னை, "யான் பெண்பாற் பசாசாகிய நின்னையொழிந்த ஆண்பாற் பசாசு; எனக்கு அருள் ! அங்ஙனம் அருளாது என்னை வருத்துதலைச் செய்வையாயின், இவ்வூரில் நீ பெறும் பலியை* நீ பெறாமல் யான் எடுத்துக்கொள்வே" னென்று பல வார்த்தைகளையும் பேணாமல் வாயாற் சொல்லிநிற்க, மூஇய பார்ப்பான் என்னைப்

பெண்பசாசென்று கருதி அஞ்சினானதனை யான் அறிந்து ஒருகையாலே மணலை அள்ளிக்கொண்டு ஒழியாது அவன்மேலே தூவக்கண்டு, அவ்விடத்தே

நின்று கடிதாகக் கதறி ஊர்க்கெல்லாங் கேட்பக் கூப்பிடத் தொடங்கினான்; எந்நாளுந் தன் தொழில் அவ்வாறு

தனிநிற்கும் மகளிரைக்கண்டால் தன் காமவேட்கையாலே மேல் விழுதலாகக்கொண்ட முதிய பார்ப்பானுடைய விரும்புதலேயுடைய பெரிய தண்ணிய நாடகம் நங் காதலர் நம்மைக் குறியிடத்து வந்து காணுங் காட்சி கெடும்படியாக நமக்கு வருத்த மாய் விளைந்தது; இது விளைந்தபடி, ஒன்றற்குங் கெடாத வலியினையும் வளைந்த வரியினையுந் தறுகண்மையினையுமுடைய புலியாலுள்ள பயனைக் கொள்ளுதற்கு நிறுத்தின வலையிலே அதன் தொழிற்கு வேறாகியதோர் குறு நரி அகப்பட்ட தன்மைத்தாயிற்று; ஆதலால் இனி இரவிற் குறிநிகழ்ச்சி யின்றுபோலு

மென்றாள்.

'வீழ்க்கை' வாழ்க்கைபோல்

சாரியை. குறழாப் பாரவென்க.

னின்றது. 'காரக்குறைந்து':

அக்குச்

'வைகாண் முதுபக'. டெனவே காம இன்பம் நுகர்தலாற்றுமை காட்டி நின்றது. 'ஏனைப்பிசா' செனவே அவள் பெண்பாற்பசாசுந் தான் ஆண்பாற் பசாசுமென்பது உணர்த்திற்று. 'அருள்' எனப் பிரிக்க. ஆங்கே கடி தாற்றி நம்மூர்க்கெலாம் பூசறெடங்கினனென மாறுக. 'தம்பலம்': தாம்பூல மெனும் வடமொழித்திரிவு. 'தின்றியோ': ஒகாரம் அசை.

இதனாற் றலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது ஒருபொருணுதலாது அடியிகந்து தளைவிரவி வந்த கலிவெண் பாட்டு. (உக)

.. திருப்பு

பு •

முற்றும்

---

* மணி. எ; அக - அரு.

கலித்தொ

ரு. மருதக்கலி.

சாசா.

௯ க

வீங்குநீ ரவிழ்நீலம்[1]
பகர்பவர் வயற்கொண்ட
ஞாங்கர் மலர்சூழ்தந் தூர்புகுந்த வரிவண்
டோங்குய ரெழில்யானைக் கனைகடாங் கமழ்நாற்ற
மாங்கவை விருந்தாற்றப்
பகலல்கிக் கங்குலான்

ரு. வீங்கிறை வடுக்கொள வீழுநர்ப் புணர்ந்தவர்
தேங்கமழ் கதுப்பினு ளரும்பவிழ் நறுமுல்லைப்

பாய்ந்தூதிப் படர்தீர்ந்து
பண்டுதா மரீஇய
பூம்பொய்கை மறந்துள்ளாப்
புனலணி நல்லூர;

அணைமென்றோள் யாம்வாட வமர்துணைப் புணர்ந்துநீ
மணமனையா யெனவந்த மல்லலின் மாண்பன்றோ
பொதுக்கொண்ட
கவ்வையிற்[2] பூவணிப்
பொலிந்தநின்
வதுவையங் கமழ்நாற்றம்
வைகறைப் பெற்றதை;

கனலுமிழ்நாய்த் தலையுநீ
கனங்குழை யவரொடு

புனலுளா யெனவந்த பூசலிற் பெரிதன்றோ
கரு. தார்கொண்டா டலைக்கோதை தடுமாறிப் பூண்டநின்
வீரணி சிதையாதெம்
மில்வந்து நின்றதை;

தணந்ததன் றலையுநீ தளரிய
லவரொடு
துணங்கையா யெனவந்த
கவ்வையிற் கடப்பன்றோ
வொளிபூத்த நுதலாரோ
டோரணிப் பொலிந்தநின் உ௦.

களிதட்ப வந்தவிக் கவின்காண
வியைந்ததை;

எனவாங்கு,

அளிபெற்றே மெம்மைநீ
யருளினை விளியாது
வேட்டோர் திறத்து
விரும்பியநின் பாகனு
நீட்டித்தா யென்று
கடாஅங்கடுந் திண்டேர்

உரு. பூட்டு விடாஅ நிறுத்து.

(பாடம்) 1. சீர்விழ்சீலம். 2. கவ்வையுட்.

25

இது பரத்தையிற் பிரிந்துவந்த தலைவன் தனது ஆற்றாமையே வாயிலாகத் தலைவியுழைச் சென்றுற்று, அவன் முன்பு வதுவையயர்ந்ததூஉம் அப்பொழுது புனலாடியதூஉம் இப்பொழுது தணங்கையாடியதூஉங் கூறிப் புலந்தாள் தலைவி, அவள் புலந்தவாறுகண்டு சென்று சார்ந்த தலைமகனுடன் ஊடல் தீர்கின்றாள் கூறியது.

(க—அ) வீங்குநீ . . . . நல்லூர :—

(இ - ள்.) பெருகுகின்ற நீரிலவிழ்ந்த[1] கருங்குவளையைக் கொண்டுவந்து விற்பார் வயலிடத்தே பறித்துக்கொண்டவை சுமத்தலிற் றலையிடத்தனவாகிய மலரைச் சூழ்தலைச்செய்து ஊரிடத்தே புகுந்த பாட்டினையுடைய வண்டுக்கு, உத்தம விலக்கணங்கள்[2] ஒங்குஞ் சிறந்த அழகினையுடைத்தாகிய யானையினுடைய நாறுகின்ற நாற்றத்தையுடைய செறிந்த மதத்தை அம்மதத்தில் முன் படிந்திருந்த வண்டுகள் விருந்துசெய்ய*, அப்பூவொடு வந்த வண்டுகள் பகற்பொழுதெல்லாந் தங்கிக் கங்குலிடத்து வீங்கின இறையிற்கிடந்த தொடியாலே தங் கணவர் மேனி வடுக்கொள்ளும்படியாகத் தாம் விரும்பின் கணவரைக் கூடின மகளிருடைய தேன் நாறுகின்ற மயிரினுள்ளே கிடந்து அரும்பாந்தன்மை முற்றி விரிந்த நறிதாகிய முல்லைகளைப் பாய்ந்து நுகர்ந்து வேறுசில பூக்களை நுகரவேண்டுமென்னும் நினைவின்றிப் பண்டு தாம் விரும்பின பூக்களையுடைய பொய்கையை மறந்து அதனை ஒருகாலத்தும் நினையாத புனல் அணிந்த நல்ல ஊரனே!

'கடாம்': மதம்படு துளை; ஆகுபெயர். 'வீங்கிறை': பிரிந்து வருந்தாமையின் மெலியாவிறை.

வீங்குநீர் பரத்தையர் சேரியாகவும், அதன்க ணவிழ்ந்த நீலங் காமச் செவ்வி நிகழ்ந்த பரத்தையராகவும், பகர்பவர் பரத்தையரைத் தேரேற்றிக் கொண்டுவரும் பாணர்முதலிய வாயில்களாகவும், அம்மலரைச் சூழ்ந்த வண்டு தலைவனாகவும், யானையின் கடாத்தை ஆண்டுறைந்த வண்டுகள் வந்த வண்டிற்கு விருந்தாற்றுதல் பகற்பொழுது புணர்கின்ற சேரிப் பரத்தையர் தமது நலத்தை அத் தலைவனை நுகர்வித்தலாகவும், கங்குலில் வண்டு முல்லையை ஊதுதல் இப்பரத்தையருடன் இரவு துயிலுதலாகவும், பண்டு மருவிய பொய்கையை மறத்தல் தலைவியை மறத்தலாகவும் பொருள் தந்து ஆண்டுப் புலப்படக்கூறிய கருப்பொருள்கள் புலப்படக்கூறாத மருதத்திணைப் பொருட்கு உள்ளுறையுவம மாயவாறு காண்க. இது "கிழவோட்குவம மீரிடத்துரித்தே" † என்பதனான் மருதத்துக்கண் உவமப்போலி கூறியது.

---

* சீவகசிந் - சஅ.

† தொல். பொருள். ௩0௪.

(பாடம்) 1. நீரில் வீழ்ந்த. 2. தம் உடலிலக்கணங்கள்.

மருதம் - ௫

மருதக்கலி

௬௬

இது சீர்வகைக்கலியாகலின் 'வரிவண் டோங்குய' ரென வேர்றியர் சீரும் வந்தது.

(கூ—கஉ) அணைமென்றேள்

. . . . பெற்றதை :—

(இ - ள்.) ஆரவாரத்தாற்

பொலிவுபெற்ற

சிறப்பில்லாமையைக்

கொண்ட பரத்தையரைப் பூப்பேசிக்

கொள்கின்ற கலியாணத்திலுண்டான

நின்னுடைய அழகினையுடைய

நாறுகின்ற மணத்தினை

விடியற்காலத்தே

யாங்கள் பெற்றது, யாம் அணைபோலும் மெல்லியதோள் மெலியும்படியாக நின் நெஞ்சிற்கு அமர்ந்த பரத்தையரைக் கூடி மணமனையிடத்தாயென்று

பிறர்சொல்ல நினக்கு

தோன்றன்றோ ?

உண்டான வளப்பத்திலும் மாட்சிமையுடைய

கவ்வையிற் பொலிந்த
பொதுக்கொண்ட பூவணி
வதுவையென மாறுக.

மருந்தத்திற்குச் சிறுபொழுது
'வைகறைப் பெற்றதை' என்றாள்.
வைகறையென்பது* தோன்ற

(கரு—கசு) கனலுநோய்த்
நின்றதை :—

(இ - ள்.) நின் மார்பின் மாலையை வாங்கிக்கொண்டவளுடைய நெற்றிக்கட்டை வைகறையிலே வருதலின்† மனந்தடுமாறிப் பூண்ட இரண்டு அணியுங் கெடாமல் எம் இல்லிடத்தே வந்து நின்றது எம் மேனி கனலுதற்குக் காரணமான காமநோய்க்கு மேலேயும் நீ பொன்னுற் செய்த மகரக்

குழையையுடைய பரத்தையருடனே புனலிடத்தே விளையாடுகின்றாயென்று பிறர்சொல்ல நினக்கு உண்டான ஆரவாரத்திலும் பெரியதொன்றன்றோ ?

ஆடவர் கோலமும் மகளிர் கோலமுங் கொண்டு வந்து நிற்றலின் இரண்டணியென்றாள்.

(கஎ—உ0) துணந்ததன் . . . . . . வியைந்ததை :—

(இ - ள்.) ஒளி பொலிவுபெற்ற நுதலினையுடையாரோடே கூடுதலானுண்டான பூணின் வடுக்கிடத்தலின் அவர்க்கும் நினக்கும் ஓரணியாகப் பொலிவுபெற்ற நின் செருக்குப் பிறர்பாற் செல்லாமல் அமைதி பிறப்பித்துத் தடுக்கையினாலே வந்த இவ்வழகை யாங்கள் காணும்படி பொருந்தினது, நீ எங்களைப் பிரிந்த இதற்குமேலேயும் நின்னைப் பெறாது தளர்ந்த இயல்பினை யுடையாரோடே துணங்கைக்‡ கூத்தாடினாயென்று பிறர்சொல்ல நினக்கு உண்டான ஆரவாரத்திலும் மிகுதியானதொன்றன்றோ?

*தொல். பொருள் : அ. † பரி. கூ ; சுகூ (உரை).

‡ துணங்கை: "பழுப்புடை யிருகை முடக்கி யடிக்கத் துடக்கிய நடையது" மகளிராடுந் துணங்கைக் கூத்து; சிங்கிக் கூத்தென்றும் இஃதழைக்கப்படும்.

க்கக்சு

கலித்தொகை

[கலி - கூ

எனவாங்கு:—

(இ - ள்.) என்று யாங்கள் காணும்படியாக;

'ஆங்கு': அசை.

(உஉ—உ௫) அளிபெற்றே . . . நிறுத்து:—

(இ - ள்.) நீ ஈண்டு வருதலாலே நினது அளியைப் பெற்றேம்; நீயு

எம்மை அருளினை; இதுவே அமையும்; இனி நீ விரும்பியோர்திறத்தே செல்லுதலை விரும்பிய நின்பாகனும் பூட்டுதலைவிடாத கடிய திண்ணி

தேரை நீ இவ்விடத்தே தாழ்த்தாயென்று கருதி அது நிற்கும்

நிலையிடேச் செலுத்தும்; அதற்கு முன்னே சென்று அப்பரத்தையர் அன்பு கெடாமல் அவ்வன்பை நிறுத்துவாயாக.

விளியாது நிறுத்து எனக் கூட்டுக.

இதனால் இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது வெள்ளைச்சுரிதகத்தாலிற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. (4

௬௭.

கார்முற்றி யிணரூழ்த்த
கமழ்தோட்ட மலர்வேய்ந்து

சீர்முற்றிப் புலவர்வாய்ச்
சிறப்பெய்தி யிருநிலந்
தார்முற்றி யதுபோலத்
தகைபூத்த வையைதன்
னீர்முற்றி மதில்பொரூஉம்
பகையல்லா னேராதார்
ரு. போர்முற்றொன் றறியாத
புரிசைசூழ் புனலூரன் ;

நலத்தகை யெழிலுண்க
ணல்லார்தங் கோதையா
லலைத்தபுண் வடுக்காட்டி
யன்பின்றி வரினெல்லா

புலப்பேன்யா னென்பேன்ம னங்கிலையே யவற்காணிற்
கலப்பே னென்னுமிக் கையறு நெஞ்சே ;*

௪0. கோடெழி ல்கலல்குற் கொடியன்னூர் முலைமூழ்கிப்
பாடழி சாந்தினன் பண்பின்றி வரினெல்லா
வூடுவே னென்பேன்ம னங்கிலையே யவற்காணிற்
கூடுவே னென்னுமிக் கொள்கையி னெஞ்சே ;

இனிப்புணர்ந்த வெழினல்லா ரிலங்கெயி றுற்ற அலி
௪௫. னனிச்சிவந்த வடுக்காட்டி நாணின்றி வரினெல்லா

மருதகலி

௧௯௬

துனிப்பேன்யா னென்பேன்ம னங்கிலையே யவற்காணிற்
றனித்தே தாழுமித் தனியி[1] நெஞ்சே ;

எனவாங்கு,

பிறைப்புரை யேர்நுதா

ருமெண்ணி யவையெல்லாந்

௨௦. துறைபோத

லொல்லுமோ தூவாகா தாங்கே

யறைபோகு நெஞ்சுடை யார்க்கு.

இது வாயின்மறுத்த தலைமகள் ஆற்றாமைவாயிலாகப் புக்குக்கூடிய தலைமகனை நீக்கத்தக்கட் புக்க தோழிக்குக் கூறியது.

(க—ரு) கார்முற்றி

புனலூரன் :—

(இ - ள்.) கார்காலம் முதிர்கையினாலே பூங்கொத்துக்கள் அலர்ந்த கமழ்கின்ற இதழ்களையுடையனவாகிய மலர்களைச் சூடித் தலைமைமுதிர்ந்து புலவர்வாயிற் கவிகளைத் தான்பெற்று, ஊரைச் சூழ்ந்து வருதலிற் பெரிய நிலமடந்தைதான் ஒரு பூமாலையைச் சூழ்ந்துகொண்டிருந்த தன்மைபோல, அழகு பொலிவுபெற்ற வையையாற்றினது நீர் சூழ்ந்து மதிலைப் பொரும் பகையன்றிப் பகைவர் போரால் விளைத்தலைச் சிறிதும் அறியாத புரிசை சூழ்ந்த புனலையுடைத்தாகிய மதுரையை யுடையவன் ;

'புனலூர' னென்றது பாண்டியனையாதலிற் பாட்டுடைத்தலைவனே கிளவித்தலைவனாகக் கூறிய அகப்புறமாயிற்று. இதற்கு விதி "காமப் பகுதி கடவுளும் வரையா, ரேனோர் பாங்கினு மென்மனார் புலவர்"* என்பதனுள் 'ஏனோர்பாங்கினும்' என்பதனாற் கூறினம்.

(சு—க) நலத்தகை . . . . நெஞ்சே:—

(இ - ள்.) ஏடீ! எழிலையுடையவாகிய மையுண்கண்ணினையுடைய பரத்தையர்தங் கோதைகளாலே அடித்த † நலத்தினையுடைய அழகினையும், நகத்தாலும் எயிற்றாலும் அலைத்த புண்களையும், பூண்கள் பொறித்த வடுக்களையுங் காட்டி என்னிடத்து அன்பின்றி வருவானாயின் யான் புலப்பேனென்றிருப்பேன்; அதனாற் பெற்றதென்? இச்செயலற்ற நெஞ்சு அவனைக் காணில் அத்தவறுகளோடு கூடிய அந்நிலைதன்னிலே யான் கூடுவேனென்று கூறாநிற்கும்;

(கO—கரு) கோடேழ் . . . . னெஞ்சே:—

(இ - ள்.) ஏடீ! பக்கமுயர்ந்த எழுச்சியையுடைய அகன்ற அல்குலையுடைய கொடியையொக்கும் பரத்தையர் முலைகள் அழுந்திப் பூசின

* தொல். பொருள்: அக. † பரி. கூ: கசு-உO.
(பாடம்) 1. தனி நெஞ்சே.

கஅ அ

மைபதமாதா மாக L

- அ பாடழிந்த

சந்தனத்தையுடையனுய்,
நன்மக்கள்குணமின்றி வருவனுயின்
ஊடியிருப்பேனென்று கூறுவேன்;
அதனுற் பெற்றதென்? யான் கூறிய
தனைக் கொள்ளுதலில்லாத இந்நெஞ்சு
அவனைக் காணில் அத்தவறுகளோடு
கூடிய அந்நிலைதன்னிலே
யான்கூடுவேனென்று கூறுநிற்கும்;
(கச—கஎ) இனிப்புணர்ந்த

. . . . நெஞ்சே:—

(இ - ள்.) எடீ! இப்பொழுது
புதிதாகக் கூடிய அழகினையுடைய
பரத்தையருடைய விளங்குகின்ற
எயிறுகள் அழுந்துகையினுலே

மிகுதியை

யுடைத்தாய்ச் சிவந்த வடுக்களைக் காட்டி நாணமின்றியே வரிற் றனித்திருப்பேன் யான் என்று கூறுவேன்; அதனாற் பெற்றதென்? இத்தனிமையான மனத்தைத் தனக்கு உரித்தாக்குதலில்லாத நெஞ்சு அவனைக்காணில் அத்தவறுகளோடு கூடிய அந்நிலைதன்னிலே என்னை நீக்கித் தான் அவனிடத்தே தாழும்;

'உறூஅல்': விகாரம்.

இத்தாழிசை மூன்றும் மறுத்துரைப்பதுபோல் உவகைபற்றிக் கூறியன. "உடம்பு முயிரும் வாடியக் காலு, மென்னுற் றனகொ லிவையெனி னல்லது, கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை"* என்பதனால் இந்நெஞ்சிற்குத் தன்றன்மை யென்பதொன்றன்றியது என்னென்றவாறு காண்க.

(கஅ) எனவாங்கு :—

(இ - ள்.) என்று; 'ஆங்கு': அசை.

(கக—உக) பிறைபுரை யார்க்கு :—

(இ - ள்.) பிறையையொத்த அழகிய நுதலினையுடையாய்! தமக்கு வலியாகாதே அவனிடத்தே நீழ் அற்றுச் செல்லும் நெஞ்சினையுடைய மகளிர்க்குத் தாம் நினைத்தவையெல்லாம் முடிவுபோதல் பொருந்துமோ? பொருந்ாதன்றே! என்றாள்.

இதனாற் றலைவிக்கு இளிவு பிறந்தது.
இது வெள்ளைச்சுரிதகத்தால் இற்ற ஒத்தாழிசைக்கலி.

(உ)

சாஅ.

பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளுஞ் செல்வர்க்கு
மதிமொழி யிடன்மாலை வினைவர்போல் வல்லவர்
செதுமொழி சீத்த செவிசெறு வாக
முதுமொழி நீராப் புலனா வுழவர்
ரு. புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர ;

* தொல். பொருள்: உ0௬.

மருதம - ௬]

மருதக்கலி

ஊரன்மன் னூரனல்ல
னமக்கென்ன வுடன்வாளா[1]
தோரூர்தொக் கிருந்தநின்
பெண்டிரு ணேராகிக்
களையாநின் குறிவந்தெங்
கதவஞ்சேர்ந் தசைத்தகை

வளையின்வாய் விடன்மாலை
மகளிரை நோவேமோ ௧0. கேளல
னமக்கவன் குறுகன்மி
னெனமற்றெந்
..தோளொடு பகைபட்டு

நினைவாடு நெஞ்சத்தேம் ;

ஊடியார் நலந்தேம்ப
வொடியெறிந் தவர்வயின்
மாறீர்க்கு மவன்மார்பென்
றெழுந்தசொன் னோவேமோ ;
முகைவாய்த்த முலைபாயக்
குழைந்தநின் றாரெள்ள
கறு. வகைவரிச் செப்பினுள்
வைகிய கோதையேம் ; *
சேரியாற் சென்றுநீ
சேர்ந்தவில் வினையினன்
றேரொடு திரிதரும்
பாகனைப் பழிப்பேமோ

வொலிகொண்ட
சும்மையான் மணமனை
குறித்தெம்மிற்

பொலிகெனப் புகுந்தநின் புலையனைக் கண்டயாம் ;

௨௦. எனவாங்கு,

நனவினான் வேறாகும்
வேளா முயக்க
மனைவரிற் பெற்றுவந்து
மற்றெந்தோள் வாட

வினைய ரெனவுணர்ந்தா ரென்றேக்கற் ருங்குக்
கனவினு னெய்திய செல்வத் தனையதே
உரு. யைய வெமக்குநின் மார்பு.

இது பரத்தையர் சேரியினின்றும் வந்த தலைவனோடு ஊடிய காமக்கிழத்தி தன் காதன்மிகுதி கூறி ஊடியவாறு கண்டு சென்று சார்ந்த தலைமகனுடன்

ஊடல் தீர்கின்றாள் கூறியது.

(க—ரு) பொதுமொழி

புனலூர:—

(இ - ள்.) பிறர்க்கும் இம் மண்ணுலகம் பொதுவென்னும் மொழி † இன்றாக மண்ணுலகம் முழுதையும் ஆளுஞ் சக்கரவர்த்திகளுக்கு அறிவாகிய சொல்லைச் சொல்லுதலை இயல்பாகவுடைய அமைச்சரைப்போல, நூல் வல்லஆசிரியராலே பொல்லாவாகிய சொற்கள் இடையிற் புகுதாமற் போக்கப்

பட்ட தஞ் செவிகள் செய்யாக,

முன்னுள்ள சான்றோர் கூறிய

செய்யுட்கள்

* மணி - ௪ : ௯௫ - ௯௭ ;   குறள் - ௯.

† புறம் - அ : ௧ - ௫ ; குறள் - ௪௯௨.
(பாடம்) 1. வுடன்வாரா.

தஞ்சொல்லை வ்ளர்க்கும் நீராக,
அறிவினையுடைய நாவாகிய ஏராலே
உழுது உண்ணும் புலவருடைய
புதிய கவிகளைக் கொள்ளைகொண்டு
உண்
ணும் மதில் சூழ்ந்த
புனலையுடைத்தாகிய

மதுரையையுடையவனே!

இதுவும்

பாட்டுடைத்தலைவனைக் கிளவித்தலைவனாகக் கூறியது.

(கூ—கக) ஊரன்மன்

நெஞ்சத்தேம் :—

(இ-ள்.) நமக்கு ஊரன் மிகவும் பற்றுக்கோடல்லனெனச் சொல்லிப் பின்னர் ஒருவர்கூறியது

ஒருவர்கூறாதே ஓரூர்

குடியேற்றவேண்டுவாராய்த்

திரண்டிருந்த நின்

சேரிப்பரத்தையருடனே யாங்களும்

ஒப்பாகி, நமக்கு

அவன் உறவல்லன் அவனை முயங்காதேகொள்ளுங்கோளெனச் சொல்லி, முயங்கக் கருதின எங் தோள்களுடனே மாறுபட்டுப் பின்னை முயங்கக் கருதின நினைவு கெடுகின்ற நெஞ்சத்தினையுடைய யாங்கள் நின் பெண்டிருள் நோராகி ஊரன் உரனல்லனென்ற வார்த்தையைக் களைந்து நின்குறியிடத்தே வந்து ஆண்டுக் காணுமையின் எம்மிடத்தேவந்தாயென்று கருதி எங் கதவத்தைச் சேர்ந்து தட்டின கையின் வளையினுலே தம் வரவினைச் சொல்லுதலை இயல்பாகவுடைய அப்பரத்தையரை நோவேமோ? அதற்கு யாங்கள் உரியே மல்லேமே ;

இது "வண்ணம் பசந்து புலம்புறு காலை, யுணர்ந்த போல வுறுப்பினைக் கிழவி, புணர்ந்த வகையிற் புணர்க்கவும் பெறுமே" * என்பதனுன் உறுப்பினை உணர்வுடையதுபோற் கூறிற்று.

(கஉ—கடு) ஊடியார் . . . . கோதையேம் :—

(இ - ள்.) முகையின்றன்மை வாய்த்த முலைகள் முயங்குகையினுலே செவ்வி குலைந்த நினது மாலை எம்மை இகழ்ந்துகூறக், கூறுபாட்டினை யுடைத்தாகிய வரியினையுடைய பூச்செப்பிலே பயன்படாது தங்கிய மாலைத் தன்மையையுடைய யாங்கள் இற்பரத்தையர் ஊடின மகளிர் ஊடலைத்தீர்த்து முயங்காதே அவர்கள் நலங்கெடும்படி அவரை இடையன்கொன்ற மரமாக்கி † வைத்து அச்சேரிப் பரத்தையரிடத்து வேட்கையைத் தீர்க்குமவனுடைய மார்பென்று ஊரிற்பிறந்த சொல்லை நோவேமோ ; அதற்கு யாங்கள் உரியே மல்லேமே ;

ஒடியவெறிந்தென்பது, 'ஒடியெறிந்' தென விகாரமாயிற்று.

(கசு - கக) சேரியார் :

கண்டயாம் :—

(இ - ள்.) ஆரவாரத்தை மாறுமற் றன்னிடத்தேகொண்ட ஆரவாரத் தாலே நீ மணஞ்செய்கின்ற மனையாகக் கருதி எம்முடைய மனையிலே

* தொல். பொருள் ; ௨0௨. † பழமொழி ௯௧௪, சேவகசிர், ௧௯௪, (பாடம்) 1. நமக்கிவன்.

மருதககலி

௨0

பொலிக பொலிகவென்று கூறிப் புகுந்த நின்னுடைய புலைத்தொழிலை யுடைய பாணனைக் கண்ட யாங்கள் சேரிதோறுஞ் சென்று, நீ சேர்ந்த இல்லை வினயினைத் தேரோடே கூடத் திரிதலைச்செய்யும் பாகனைக் குறைகூறுவேமோ? அதற்கு யாங்கள் உரியேமல்லேமே;

'சேரியான்' என்றது "ஊரான் ஓர் தேவகுலம்" என்றாற்போல் நின்றது. 'சும்மை'யை 'ஒலி' விசேடித்து நின்றது. 'புலையன்': செறற் சொல்.

(௨0) எனவாங்கு :—

அசை.

(உக—உ௫)

நனவினன் . . . . . மார்பு

:—

(இ - ள்.) எம்மனேக்கண்ணே நீ ஒருகாலத்தே வந்தாயாயின், நின்னைப் பெற்று மகிழ்ந்து நீ நீங்கியபின் எக் தோள் மெலிகையினலே அதனை உணர்ந்தவர்கள், இக்காலத்து இவளும் இவரும் இத்தன்மையராயினரென்று புறங்கூறுதலின் அக்கூற்றை யாம் எற்றுக்கொண்டு பழைய நிலையைப் பெறுதற்கு எக்கற்று முயங்குமாறுபோலே வியக்கத்தக்க நின் மார்பினிடத்தே முயங்கினும் உண்மையிடத்து வேருயிருக்கும் நீ விரும்பாத முயக்கம் எமக்குக் கனவின்கண் வரப்பெற்ற செல்வத்தையொப்பதொன்ருய் இருக்கும்.

இதனற் பயனின்றென ஊடினள். 'கனவினன்' 'கனவின' னென்பன இடப்பொருள. 'கனவு': உண்மை ; 'கனவு' : பொய்.

ஐயென்னும் உரிச்சொல், 'ஐய'வென ஈறுதிரிந்தது.

இது மெய்யன்றிப் பொய்யாகக்கோடலிற் பொய்யாக்கோடலென்னும் மெய்ப்பாடு.

இஃது ஈரடிமிக்க தாழிசையும்

வருதலிற் கொச்சகம்.

(௬)

௫௯.

போதவிழ் பனிப்பொய்கைப்

புதுவது தளிவிட்ட
தாதுசூழ் தாமரைத்
தனிமலர்ப் புறஞ்சேர்பு
காதல்கொள் வதுவைநாட்
கலிங்கத்து ளொடுங்கிய
மாதர்கொண் மாணேக்கின்

மடந்தைதன் றுணையாக
ஞ. வோதுடை[2] யந்தண
னெரிவலஞ் செய்வான்போ
லாய்தூவி யன்னந்தன்
னணிநடைப் பெடையொடு
மேதகத் திரிதரூஉ மிகுபுன
லல்லூர ;
தெள்ளரிச் சிலம்பார்ப்பத்
தெருவின்கட் டாக்கிநின்
னுள்ளங்கொண் டொழித்தாளைக் குறைகூறிக் கொளநின்றாய்

(பாடம்) 1. செற்றச். 2. வோக்கடை.

௧0. துணிந்தது பிறிதாகத் துணிவில'ளிவளெனப்
பணிந்தாய்போல் வந்தீண்டுப் பயனில மொழிவாயோ ;

பட்டுழி யறியாது பாகனைத் தேரொடும்
விட்டவள் வரனோக்கி விருந்தேற்றுக் கொளநின்றாய்
நெஞ்சத்த பிறவாக நிறையில ளிவளென

௧௫. வஞ்சத்தான் வந்தீங்கு
வலியலைத் தீவாயோ ;

இணர்ததை தண்காவி
னியன்றநின் குறிவந்தாள்

புணர்வினிற்
புகன்றாங்கே புனலாடப் பண்ணியாய்

தருக்கிய பிறவாகத் தன்னில

ளிவளெனச்

செருக்கினல் வந்தீங்குச்
சொல்லுகுத் தீவாயோ ; உ0.

எனவாங்கு,

தருக்கேம் பெருமநின் னல்கல்
விருப்புற்றுத்
தாழ்ந்தாய்போல் வந்து
தகவில செய்யாது
சூழ்ந்தவை செய்துமற்
றெம்மையு முள்ளுவாய்
வீழ்ந்தார் விருப்பற்றக் கால்.

இதவும் அது.

(க—எ) போதவிழ் . .

. . னல்லூர,:—

(இ - ள்.) உத்தரீயத்துள்ளே

நாணால் ஒடுங்கிநோக்குகின்ற * காதல் கொண்ட மான்போலும்

நோக்கினையுடைய மடந்தை தனக்கு இம்மை மறுமைக்குத் துணையாகக் † காதலித்தலைக்கொள்கின்ற

கலியாணநாளிலே

ஒத்தினையுடைய அந்தணன் அங்கியங்கடவுளை வலஞ்செய்வான்போலே, மெல்லிதாகிய சூட்டுமயிரினையுடைய அன்னந் தன்னுடைய அழகிய நடையினையுடைய பேட்டோடே கூடிப் பூக்கள் அலர்ந்த குளிர்ச்சியினையுடைய பொய்கையிடத்தே நின்ற தாமரையினது புதிதாக முறுக்கு நெகிழ்ந்த தாது சூழ்ந்த தனித்த மலரைப் புறத்தே சேர்ந்து பெருமை தகும்படி திரிதரும் பரந்த புனலையுடைய நல்ல ஊரினையுடையவனே!

வலஞ்செய்வான்போ லென்ற வினையுவமம் பயவுவமமின்றி வினையுவம மாத்திரையை மேல்வருகின்ற கருப்பொருட்குக் கொடுத்து அதனைச் சிறப்பித்துநின்றது, அன்னத்திற்கு அங்கியங்கடவுள் அதிகரியாக மந்திரவிதியாற் சூழுங் கருத்தின்றித் தாமரையைச் சூழவருகின்ற தொழின்மாத்திரையே கோடலின். அந்தணன் எரிவலஞ் செய்வான்போல அக் கருத்தில்லாத அன்னம் பெடையோடே தனிமலரைச் சூழத் திரியும் ஊரவென்றதனான் நீயும்

* சீவகசிந். ௨௪௯௧; கலி. ௯௨: ௨௩-௨௫. † குறள். ௪௯.

மருதம் - ௬]

மருதக்கலி

௨௦௩

அக்கருத்தின்றிக் குலமகளிரைத்
நீவலஞ்செய்து
வரைந்துகொண்டு. பாது காவாது
ஒழுகுகின்ற நினக்கு எம்மைப்
பாதுகாத்தலுளதாமோவெனக்
காமக்கிழத்தியும் உள்ளுறையுவமங்

கூறினளாக வுரைக்க. இதனை "ஏனோர்க் கெல்லா மிடம்வரை யின்றே" * என்று உவமப்போலியிற் கூறிய விதி யாற்கொள்க.

(அ–கக) தெள்ளரிச் . . . . . மொழிவாயோ :—

(இ - ள்.) தெளிந்த உள்ளிடுமணியையுடைய சிலம்பு ஆரவாரிப்ப வந்து தெருவிடத்தே தாக்கணங்குபோலத் † தாக்கி நின் னெஞ்சை அகப் படுத்திக்கொண்டு பின்னர்க்கைவிட்டவளை நின் வருத்தத்தைச் சொல்லி

அழைத்துக்கொள்ளக் கருதிநின்ற நீ அறுதியிட்டு வந்த காரியம் வேறொன்றாயிருக்க இவள் தனக்கென ஓர் அறுதியுடையளல்லளென்று கருதி இவ்விடத்தே தாழ்ந்தாயைப்போல வந்து பயனில்லாத சொற்களைச் சொல்லக் கடவையோ ? அது நின்னை வருத்தாதோ ?

(கஉ—கரு) பட்டுழி
தீவாயோ :—

(இ - ள்.) நீ செல்லாதே[1] அகப்பட்ட பாத்தையரது நெஞ்சு வலிதென்று அறியாது பாகனைத்

தேரொடும் போகவிட்டு அவள் உன்னை விருந் தாக எதிர்கொள்ள அவள் வரவினைக் கருதிநின்ற நீ அவள் வரக்காணாமையி னாலே நின்னெஞ்சத்திடத்தன வேறுசிலவாயிருக்க இவள் நிறை யென்கின்ற நுணமுடையளல்லளென்று கருதிப் பொய்வன்மையாலே இவ்விடத்தே வந்து உன் ஊராண்மையாலே அலைக்கக்கடவையோ ? அது நின்னை வருத் தாதோ ?

'நெஞ்சத்த' வென்ற பன்மை தன்வயத்த ளாக்கிக்கொள்ளக் கருதிய

தொழில்களை.

(கசு—கக) இணர்துதை . . . . தீவாயோ :—

(இ - ள்.) பூங்கொத்து

நெருங்கின குளிர்ந்த பொழிலிலே நீ செய்த குறியிடத்தே வந்தவளைப் புணர்ச்சியிடத்தே கொண்டாடி அப்பொழுதே கூடப் புனலாடும்படி பண்ணின நீ நின் நெஞ்சின் மிக்குநடக்கின்றவை வேறொன்றாயிருக்க இவள் தனக்கென ஒரு நெஞ்சுடையளல்லளென்று கருதி மனச் செருக்காலே இவ்விடத்தே வந்து பரத்தையர்க்குக் கூறும்

பயன்படு சொற்களைப் பாழே
போக்கக்கடவையோ? அது நின்னை
வருத் தாதோ?

* தொல். பொருள் : கூ0உ.
† குறள். ௪0அஉ (உரை.)

உ0௪

"வாயிற் கிளவி வெளிப்படக்
கிளத்த, ருவின் றுரிய தத்தங்
கூற்றே"* என்பதனுல், 'துணிவிலன்,'
' நிறையில'னென ஆற்ருமை

வாயிலாகத் தலைவன் வந்துழி வெளிப்படக் கூறினாள்.

(உ0) எனவாங்கு :—
அசை.

(உக—உச) தருக்கேம் . . . . . கால் :—

(இ - ள்.) பெருமா ! நின் அருளால் யாங்கள் மனஞ்செருக்கேம் ; எம்மிடத்தே விருப்பமுற்றுக் குறைந் தாய்போலே வந்துநின்று நினக்குத் தகுதிப்பாடில்லா தவற்றைச்

செய்யாதே நீ விரும்பினாரிடத்து

நுகரக் கருதியவற்றைச்

செய்துமுடித்து ஆண்டுள்ள

விருப்பமற்ற இடத்துப்

பின்பு எம்மையும் நினைப்பாயென ஊடல் தீர்கின்றாள் கூறினாள். இதனால் இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது வெள்ளைச் சுரிதகத்தாலிற்ற ஒத்தாழிசைக்கலி.

(௪)

எ0.

மணிநிற மலர்ப்பொய்கை

மகிழ்ந்தாடு மன்னந்தன்

னணிமிகு சேவலை யகலடை

மறைத்தெனக்

கதுமெனக் காணாது கலங்கியம் மடப்பெடை
மதிநிழ னீருட்கண் டதுவென வுவந்தோடித்
துன்னத்தன் னெதிர்வரூஉந் துணைகண்டு மிகநாணிப்
பன்மல ரிடைப்புகூஉம் பழனஞ்சே ரூரகேள்;

நலநீப்பத் துறந்தெம்மை நல்காய்நீ விடுதலிற்
பலநாளும் படாதகண் பாயல்கொண் டியைபவாற்
றுணைமலர்க் கோதையார் வைகலும் பாராட்ட
மணமனைத் ததும்புநின் மணமுழவந் தெடுப்புமே;

அகலநீ துறத்தலி னழுதோவா வுண்கணெம்
புதல்வனை மெய்தீண்டப் பொருந்துத லியைபவா
னினக்கொத்த நல்லாரை நெடுநகர்த் தந்துநின்
றமர்பாடுந் துணங்கையு ளரவம்வந் தெடுப்புமே;

வாராய்நீ துறத்தலின் வருந்திய வெமக்காங்கே
நீரிதழ் புலராக்கண் ணிமைகூம்ப வியைபவா
னேரிழை நல்லாரை நெடுநகர்த் தந்துநின்
றேர்பூண்ட நெடுநன்மான் றெண்மணிவந் தெடுப்புமே;

* தொல். பொருள்: உசக.

மருதம் - ரு]

உ0ரு

எனவாங்கு,

உ0.
மெல்லியான் செவிமுதன் மேல்வந்தான்
காலேபோ
லெல்லாந் துயிலோ வெடுப்புக
நின்பெண்டி
ரில்லி னெழீஇய
யாழ்தழீஇக் கல்லாவாய்ப்
பாணன் புகுதராக் கால்.

இது பரத்தையிற் பிரிந்துவந்த தலைவன்

தோழியை வாயில்வேண்ட அவள் வாயி
னேர்வாள் நெருங்கிக் கூறியது.

(க-கூ) மணிநிற . .

. . நரகேள் :—

(இ - ள்.) பலமணிகள்போலும் நிறங்களையுடையவாகிய மலர்களை யுடைய பொய்கையிலே சேவலோடு மகிழ்ந்து விளையாடும் அன்னப்பெடை தனது அழகுமிக்க சேவலன்னத்தை அகன்ற தாமரையிலை மறைத்ததாக அதனைக்காணுமற் கதுமெனக் கலங்கி அந்த அறியாமையையுடைய பெடை

மதியினுடைய நிழலை நீருக்குள்ளே கண்டு அச்சேவலென்று உவந்து ஓடிச் சென்று தன்னைச் சேருதற்கு எதிரே வருகின்ற சேவலைக்கண்டு மிகவும் நாணிப் பல்பூக்களின் செறிவுக்குட் புக்கு ஒளித்திருக்கும் பழனங்கிலஞ்சூழ்ந்த ஊரனே ! யான் கூறுகின்றதனைக் கேள்.

பரத்தையர்சேரியிலே இருந்து நின்னோடே புணர்ந்து விளையாடு கின்ற பரத்தை வேறொரு பரத்தை களவொழுக்கத்தாலே மறைத்துக் கொண்டுபோனாளாக நின்னைக் காணாது கதுமெனக் கலங்கி அந்தப் பரத் தையை வேறோர் தலைவன்

வருதலைவையயர்கின்றதனை நீ வருதலைவையயர்கின்று யென்று கருதி உவந்து சென்று தன்னைக் கூடுதற்கு எதிரே வருகின்ற நின்னைக் கண்டு இவன் தானே வருகின்றதனை அறியாது நாந் தேடி வந்தோமே யென்று அதற்கு நாணித் தன் சுற்றத்திடத்தே யிருந்து நின்னை வருத்துகின்றானென்று உள்ளுறையுவமங்கூறித் தலைவனைத் தோழி நெருங்கி னாள்.

(எ—சுo) நலநீப்பத் தேடுப்புமே —

(இ-ள்.) நீ எம்மை நலம்போம்படியாக நீங்கிப் பின்னர் ஒருகாலத்தும் அருளாயாய்க் கைவிடுகையினாலே பலநாளுந் துயிலாத கண்கள் வருத்த மிகுதியால் யாங்கள் இருத்தலாற்றாது ஒருநாட் படுக்கையையும் இடமாகக் கொள்கையினாலே இமைபொருந்துதலுங் கூடும்; அதனை, இணைந்த மலராற்செய்த கோதையினையுடைய கலைகளெல்லாம்*முற்றக்கற்று முதிர்ந்த பாத்தையர் நன்றென்று கொண்டாடும்படி நாடோறும் மணஞ்செய்யும்

---

* சிலப், உஉ: கக அ-கக௧. மணி, உ; க அ-௧௧.

உ0சீர்

கலித்தொகை

[கலி - எ0 மனைகளிடத்தே நின்று முழங்கும் நின் மணத்தை எமக்கு உணர்த்தும் முழவோசை வந்து போக்கும்; அதுவே குறை;

'இயைப,': அகரவீற்றுத் தொழிற்பெயர். 'ஆல்': ஐயப்பொருட்டு.

(௧௧—௧௪) அகலநீ . .

. . தேடுப்புமே :—

(இ-ள்.) நீ எம்மை நீங்கத் தாந்துயிலைத் துறக்கையினாலே அழுது மாறாத மையுண்கண் எம்மெய் புதல்வனைத் தீண்டுகையினாலே பொருந்துதலும் கூடும்; அதனை, நின் இளமைப்பருவச் செவ்விக்கொத்த பரத்தையரை அவர்க்கென்று சமைத்த நெடிய மனையிலே கொண்டுவந்து நின் சுற்றமாகிய பரத்தையர் நின்று பாடுந் துணங்கைக்கூத்தில்* எழுந்த ஆரவாரம் வந்து போக்கும்; அதுவே குறை;

(கரு—கஅ) வாராய்நீ . .

. . தேடுப்புமே :—

(இ-ள்.) நீ ஈண்டு வாராயாய் யாந் துயிலைத் துறக்கையினாலே வருந்திய எமக்கு நீர் வீழ்கின்ற இதழ்போல் நீர் மாறாத கண்கள் பாயலிலே இமை பொருந்துதலுங் கூடும்; அதனை, ஒத்த இழையினையுடைய பரத்தையரைத் தமக்குச் சமைத்த நெடிய இல்லிலே கொண்டுவருகையினாலே பிறந்த நின் தேரிலே பூண்ட உயர்ந்த நல்ல குதிரையிற் கட்டின தெளிந்த மணியோசை வந்து போக்கும்; அதுவே குறை;

(கக) எனவாங்கு :—

அசை.

(உ0—உரு)

மெல்லியான் . . . .

கால் :—

(இ-ள்.) நாற்படையாற் குறைந்த அகத்துழிஞையான்† செவியிடத்தே மேலே வந்துவிட்ட புறத்துழிஞையானுடைய† பள்ளியெழுச்சிமுரசு போல முற்கூறியவெல்லாம் அரிதிற்பெற்ற துயிலையோ போக்குக, பரத்தையர் இல்லிலே வாசித்த யாழைத் தழுவிக்கொண்டு வாயிலாய்த் திரிகின்றதொழியப் பாட்டைத் திருந்தக் கல்லாத வாயினையுடைய பாணன் நம் இல்லின்கண் வாராதவிடத்து; அவன் வரவேகாண் எமக்கு வருத்த மென நெருங்கிக் கூறினாள்,

இதனால் இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

"வாயிற்கிளவி வெளிப்படக் கிளத்த, றாவின் றுரிய தத்தங் கூற்றே"‡ என்பதனாற் றோழி தாழிசைகளில் வெளிப்படக் கூறினான்.

இது வெள்ளைச் சுரிதகத்தாலிற்ற ஒத்தாழிசைக்கலி. (௫)

---

* இந்நூல், ௧௬௫-ஆம் பக்க அடிக்குறிப்புப் பார்க்க.

† தொல், பொருள்; ௬௪-௬௮. ‡ தொல், பொருள்; ௨௪௧.

மருதம் - ௬)

மருதக்கலி

௨௦௭

௭௧.

விரிகதிர் மண்டிலம் வியல்விசும்

பூர்தரப்

புரிதலை தளையவிழ்ந்த

பூவங்கட் புணர்ந்தாடி

வரிவண்டு வாய்சூழும் வளங்கெழு பொய்கையுட்

டுனிசிறந் திழிதருங்

கண்ணினீ ரறல்வார

ரு. வினிதமர் காதல

னிறைஞ்சித்தன் னடிசேர்பு

நனிவிரைந் தளித்தலி னகுபவண்

முகம்போலப்

பனியொரு திறம்வாரப்

பாசடைத் தாமரைத்

தனிமலர் தளைவிடூஉந்

தண்டுறை நல்லூர;

ஒருநீ பிறரில்லை யவன்பெண்டி ரெனவுரைத்துத்
தேரொடுந் தேற்றிய பாகன்வந் தீயான்கொ

லோரிற்றான்
கொணர்ந்துய்த்தார் புலவியுட்
பொறித்தபுண்
பாரித்துப் புணர்ந்தநின்
பரத்தைமை காணிய;

மடுத்தவன் புகுவழி மறையேனென் றியாழொடு
மெடுத்துச்சூழ் பலவுற்ற பாணன்வந் தீயான்கொ
லடுத்துத்தன் பொய்யுண்டார்ப் புணர்ந்தநின் னெருத்தின்க
ணெடுத்துக்கொள் வதுபோலுந் தொடிவடுக் காணிய;

தணந்தனை யெனக்கேட்டுத்

தவறோரா தெமக்குநின்

குணங்களைப் பாராட்டுந் தோழன்வந் தியான்சொல்
கணங்குழை நல்லவர் கதுப்பற லணைத்தஞ்சி

உ௦. யணங்குபோற் கமழுநின்
னலர்மார்பு காணிய;

என்றுநின்,

தீரா முயக்கம் பெறுநர்ப் புலப்பவர்
யார்நீ வருநாட்போ. லமைகுவம்யாம் புக்கீமோ
மாரிக் கவாவுற்றுப் பீள்வாடு நெல்லிற்காங்
உரு. காராத் தவலை யளித்தது போலுநீ
யோர்யாட்.டொருகால் வரவு.

இது பரத்தையிற் பிரிந்துவந்த தலைவனது வரவுகண்டு ஊடிய காமக்கிழத்தி ஊடியவாறுகண்டு சென்று சார்ந்த தலைவனுடன் அவள் ஊடல் தீர்கின்

றன் கூறியது

௨௦௮

கலித்தொகை

[illegible]

(௧—௮) விரிகதிர் . . . .

நல்லூர :—

(இ - ள்.) மேல்விரியுங் கதிரையுடைய இளஞாயிறு அகற்சியையுடைய விசும்பிலே பரவாநிற்க விடியற்காலத்தே இதழ்கள் முறுக்குண்ட தலைகள் அம்முறுக்கு நெகிழ்ந்த

செவ்விப்பூவிடத்து அழகிய தேனை
வரியினையுடைய வண்டுகள் அனைத்துங்
கூடி நுகர்ந்து அதனானும் அமையாது
பின்னும் நுகர் தற்கு அவ்விடத்தைச்
சூழ்ந்து திரியுஞ் செல்வம் மிக்க
பொய்கையிடத்தே துனிமிகுதலாலே
பெருக்கு மாறாது வீழ்கின்ற
கண்ணினுடைய நீர் காமத்
தீயாற் சுவறி அறுதலையுடைத்தாய்
ஒழுக அவ்வருத்தத்தைக்கண்டு
இனிதாக அமர்ந்த கணவன் தன்
அடியைச் சேர்ந்து இறைஞ்சி
மிகவிரைந்து அளித்த லாலே சிறிது
மகிழ்பவள் முகம்போலப் பசிய
இலைக்குள்ளே நின்ற தாமரை யினது

தனித்த மலர் தனக்கு வருத்தத்தைச் செய்யும் பனி ஒருகூற்றிலே வடியாநிற்கத் தான் மிகச் செவ்வியின்றி அலருங் குளிர்ந்த துறையினை யுடைய நல்ல வூரனே !

இதனால் வைகறைக்காலத்து மனைவயிற் செல்லாது இளைய செவ்வியை

யுடைய பரத்தையரைப் புணர்ந்து விளையாடி அதனினும் அமையாது பின்னும் அவரைப் புணர்தற்குச் சூழ்ந்துதிரிகின்ற இவ்வூரிடத்தே நின்னைப் பெறாது சுற்றத்திடத்தேயிருந்து கண்ணீர் வாராநிற்க, நீ ஒருகாலத்து அளித்தலிற் சிறிது செவ்வி பெற்றாளாயிருக்கும்படி தலைவியை வைத்தாய்; என்னை வருத்துதல் கூறவேண்டுமோவெனக் காமக்கிழத்தி உள்ளுறை யுவமங் கூறினாள்.

'முகம்போல' வென்ற ஏனையுவமந் தாமரைமலர் பனிவாரத் தளைவிடு மென்ற உள்ளுறையுவமத்தைத் தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்துநின்றது. இஃது உவமப்போலி. "இனிதுறு கிளவியுந் துனியுறு கிளவியு, முவம மருங்கிற் றோன்று மென்ப" * என்பதனான் இரண்டுந் தோன்றநின்றது.

(கூ—கஉ) ஒருநீ . . . .

காஸரிய :—

(இ - ள்.) அவன் பெண்டிர் நின்னையொழியப் பிறர் இல்லை ; அதனை ஓர்ந்துபாரெனக் கூறித் தனக்குத் தெய்வமாகிய தேரைத் தொட்டுச் சூளுற்ற பாகன் கண்டு வாராளே, தான் கொண்டுவந்த பரத்தையரெல்லாரும் வருதற்குச் சமைத்ததோர் இல்லிலே விட்ட பரத்தையர் புலவியாலே அழுந்தின வடுக்கள் நாணமின்மையின் இவை கிடக்கவேண்டுமென்று பரப்பி இட்டுவைக்கையினாலே அவை மறையாமற் கூடிக்கிடந்த நின் பரத்தைமையைக் காண்டற்கு?

* சொல் பொருள்: ...

...ருமையவை

...டபுல

உம்மை : சிறப்பு. 'வந்தீயான்': சொல் உகரம்பெற்று வந்தது.

வினைத்திரிசொல். ஓர் என்னுஞ்

(கரு—கசு) மடுத்தவன் . . . .

காணிய :—

(இ - ள்.) அப்பரத்தையர் உடன்பாடின்றித் தானே செல்லுமிடத்து நின்னை மறையேனென்று கூறி யாழாகிய தெய்வத்தோடும் பல தெய்வங்களையுங் கூட்டிப் பல சூளுஞ் சூளுற்ற பாணன் வாரானோ, இவன் செய்தி பொய்யென்று அறிந்துவைத்தும் மருண்டு அப்பொய்யைப் பலகாலும் அனுபவித்தவர்களைக் கூடின நின் கழுத்தின்கண்ணே அள்ளிக்கொள்ளலாவதொன்றுபோலும் மறையாமற் கிடக்கின்ற தொடித்தழும்பைக் காண்டற்கு?

(கஎ—உ௦) தணந்தனை . . . . காணிய :—

(இ - ள்.) நின் தீயகுணங்களை உணர்ந்திருக்கின்ற எமக்கு நீ எங்களை நீங்கினையென்று பிறர்கூறக் கேட்டிருந்து நின் தவறுகளை ஓராதே நினக்கு நற்குணங்கள் உளவாகக் கொண்டாடுந் தோழன் வாரானோ? திரட்சியுடைத்தாகிய குழையினையுடைய மகளிருடைய புணர்ச்சியாற் குலைந்து வீழ்ந்த அறலையுடைய கதுப்பாகிய அணையிலே துஞ்சுகையினாலே தெய்வம்போல மணக்கும் நின் அலர்ந்த மார்பைக் காண்டற்கு.

இது நாற்றச்செவ்வி குலையாமல் வந்தமைகூறலின் மருதத்து விடியற்காலங் கூறிற்றாம்.

(உக—உசு) என்றுநின்

. . . . . வரவு :—

(இ - ள்.) இங்ஙனம் நின் அன்புநீங்காத முயக்கத்தை என்றும் பெறுகின்ற பரத்தையரை வெறுப்பார் யார்? நீ ஓர் யாண்டிடத்து ஒருகால் வருகின்ற வரவு, எமக்கு மழைக்கு அவாவுற்றுத் தோன்றின கதிர் உலரும் நெல்லிற்கு அப்பருவத்தே நிறையப்பெய்யாதே ஆராத சிறுதுவலையைப் பெய்த தன்மைபோல மிக்க வருத்தத்தைத் தரும்; ஆதலான் நீ வருநாட்போல யாம் ஆற்றியிருப்பேம்; நீ அவர் வருந்தாமல் அவர் மனைக்கட் செல்வாயாக.

இதனால் இருவர்க்கும் புணர்ச்சியுவகை தோன்றிற்று.

இது வெள்ளைச்சுரிதகத்தாலிற்ற ஒத்தாழிசைக்கலி. (சு)

எஉ.

இணைபட நிவந்த நீலமென் சேக்கையுட்
டுணைபுண ரன்னத்தின் றூவிமெல் லணையசைஇச்
சேடியல் வள்ளத்துப் பெய்தபால் சிலகாட்டி
யூட்டுமென் சிறுகிளி யுணர்ப்பவன் முகம்போலப்

27

ரு. புதூர[1]

புதலொற்றப் புணர்திரைப் பிதிர்மல்க
மதிநோக்கி யலர்வீத்த[2]
வாட்பல்வான் மலர்நண்ணிக்
கடிகயத் தாமரைக் கமழ்முகை
கரைமாவின்
வடிதீண்ட வாய்விடூஉம்
வயலணி நல்லூர ;
கண்ணிநீ கடிகொண்டார்க்

கனைதொறும் யாமழப்
பண்ணினாற் களிப்பிக்கும்
பாணன்காட் டென்றானோ

பேணானென் றுடன்றவ ருகிர்செய்த வடுவினான்
மேனாணின் றோள்சேர்ந்தார் நகைசேர்ந்த விதழினை ;

நாடிநின் றூதாடித் துறைச்செல்லா ளூரவ
ராடைகொண் டொலிக்குநின்
புலைத்திகாட் டென்றாளோ[3]
கூடியார் புனலாடப் புணையாய
மார்பினை
ஊடியா ரெறிதர
வொளிவிட்ட வரக்கினை ;
வெறிதுநின் புகழ்களை
வேண்டாரி லெடுத்தேத்து

மறிவுடை யந்தண னவளைக்காட் டென்றானோ
களிபட்டார் கமழ்கோதை கயம்பட்ட வுருவின்மேற்
குறிபெற்றார் குரற்கூந்தற் கோடுளர்ந்த துகளினை ;

எனவாங்கு,

செறிவுற்றே மெய்ம்மைநீ செறிய வறிவுற்
றழிந்துகு நெஞ்சத்தே மல்ல லுழப்பக்
கழிந்தவை யுள்ளாது கண்ட விடத்தே
யழிந்துநிற் பேணிக் கொளலி னிழிந்ததோ
வின்னா யுழத்த லெமக்கு.

இதுவும் அது.

(க—அ) இணைபட . . . . நல்லூர :—

(இ - ள்.) ஐந்துவகைப்படப் படுத்தலால் உயர்ந்த நீலப்பட்டாற் செய்த மெல்லிய படுக்கையிடத்துக் கிடந்த துணையோடே கூடிய அன்னத்தின் தூவியாற் செய்த மெல்லிய அணையைச் சார்ந்திருந்து பெருமையியன்ற வெள்ளிவட்டிலிலே வார்த்த பாலைச் சிறிதுகாட்டி அப்பாலை உண்ணாது வெறுத்திருந்த கிளி அதனை உண்டற்கு வேண்டும் மொழிகளைக் கூறி உண்ணப்பண்ணுவித்து அவ்வுணவினான் மகிழ்ந்து முத்தங்கொள்பவள் முகம்போல, மிகுதியுடைய கயத்திடத்து நின்ற புதிய நீரிடத்

(பாடம்) 1. புதுநீர்ப். 2. மலர்வித்த. 3. புலக்கொட்.

மருதக்கலி

௨௧௪

தனவாகிய பசிய
தூறுகளின்மேலே இடைவிடாது
வருகின்ற திரைகள் மோதுகையினாலே
அதன் துவலை மிகாநிற்க இடைநின்ற
தாமரையினது கமழாநின்ற முகை
தனக்குரிய வண்டு நுகர அலராமல்
நின்று கரையில் நின்ற மாவினது வடு
மதியைநோக்கி அலர்ந்த ஆம்பலினது
வெள்ளிதாகிய
மலரை முதற் றீண்டிப் பின்னர்த் தன்னைத்தீண்ட அலரும்
நல்ல ஊரனே!

வயலணிர்த

'முகம்போல'வென்ற ஏனையுவமம் மேல்வருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்துநின்றது. "சிறுபூளை செம்பஞ்சு வெண்பஞ்சு சேண, முறுதாவி தாமிவையோ ரைந்து." துணையைப் புணர்ந்த காலத்து மெய் யுருகி உதிர்ந்த தூவிதானும் மிக மெல்லிதாயிருக்குமென்பது உணர்தற்குத் 'துணைபுணரன்ன'மென்றார். பாலைச் சிறிதென்றது 'சில'வென்றல் மரூஉ.

தாமரை வண்டு நுகர்வதற்குப் பயன்கொடாது வடுத்தீண்ட அலரு மென்பதனுல் நின் தலைவி நீ நுகர்ந்த செவ்விபெருமற் சேக்கை[1] யிடத்தே இருந்து பால் உண்ணுத புதல்வன் பால் உணப் பெற்றதற்கு அவனை மூத் தங் கொண்டு மகிழ்ந்திருக்குமாறுபோல ஆற்றியிருக்குந் தன்மை எமக்கின்றெனக் காமக்கிழத்தி உள்ளுறையுவமங் கூறினுள்.

(கூ-கஉ) கண்ணிநீ . . . . விதழினை :—

(இ - ள்.) நம்மைப் பேணுகின்றிலனென்று கோபித்தவர் தம்மைப் பேணுதற்காக உகிராற்செய்த

வடுக்காரணமாக அவர்க்குப் பின்னுள்ள நாளிலே நின் தோளைச் சேர்ந்த பரத்தையருடைய எயிறு அழுந்தின இதழைத் தங் கூட்டத்திற் பிறந்த இன்பத்தைக் கருதி நீ காவல்கொண்ட

பரத்தையரைச் செறியுந்தோறும் யாம் அழும்படி நின்னைப் பண்ணாலே களிப்பிக்கும் பாணன் எனக்குக் காட்டென்று சொன்னானே?

'மேனாள்' என்றது பின்னாள். 'யாம் அழப்பண்ணினாற் களிப்பிக்கும்' என்றது, இல்லறம் நிகழ்த்துவதற்கு உரியனவற்றைப் பாடிக் காட்டி யாம் வருந்தாதபடி பண்ணாது பரத்தையரிடத்தே ஒழுகுதற்கு வேண்டுவனவற்றைப் பாடிக் காட்டிக் களிப்பிப்பனென்றவாறு.*

(கரு—ககூ) நாடிநின் . . . .

வரக்கினை :—

(இ - ள்.) கூடினமகளிர் புனலாடுதற்குத் தெப்பமாகிய மார்பிலே அப்புனலாட்டுப் பெறாது ஊடியமகளிர் சாதிலிங்கம் இருந்த செப்போடே அதனை எறிதலைச் செய்கையினாலே† விளக்கம் மிக்க சாதிலிங்கத்தை

நினக்குக் கூடலாம் பரத்தையரைத் தேடித் தூதாய்த் திரிந்து துறையிற்

---

* கலி. ருக. † பரி. உக : ககூ-சரு.

(பாடம்) 1. செங்கை.

செல்லான் ஊரிலுள்ளாருடைய ஆடைகளை இடுவித்துக்கொண்டு ஒலியாமற் றிரியும் நின்னுடைய புலைத்தி[1] எனக்குக் காட்டென்று சொன்னனோ ?

'ஒலிக்கும்': இகழ்ச்சிக் குறிப்பு. ஒளிக்குமென்றும் பாடம். "புலைத்தி" செறற் சொல்[2].

(கஎ–உ0) வேறிதுநின் .

. . . துகளினே :—

(இ - ள்.) கூட்டத்தாற் களித்தல்

பிறந்தவருடைய கமழ்கின்ற மாலை

முயக்கத்தான் மென்மைபடுதற்குக் காரணமான வடிவின்மேலே அதற்குப் பின்பு நின்னுற் குறியிடம் பெற்றருடைய பற்றத்தினையுடைத்தாகிய* மயிரினுடைய முடியை நீ வகிர்ந்து கைசெய்து முடிக்கையினுலே வீழ்ந்துகிடந்த பூந்துகளை நின் புகழ்களைக் கேட்க வேண்டாத எங்கள்

இல்லிலே ஒருபயனின்றி

யிருந்துக்கொண்டாடும் அறிவில்லாத

அந்தணன்

அவளைக் காணப்பண்ணென்று சொன்னுனே ?

'கயம்': மென்மை; ஈண்டுத் துவட்சியை உணர்த்திற்று. 'அறிவுடையந்தணன்': இகழ்ச்சி. அவட்கு என உருபுமயக்கமுமாம்.

(உக) எனவாங்கு :—

அசை.

(உஉ—உக) சேறிவுற்றே .

. . . லேமக்கு :—

(இ - ள்.) முன்பு எம்மை நீ செறிகையினாலே யாமும் நின்னோடு செறிதலை யுற்றேம்; இக்காலத்து நீ செய்யுங் குறைகளை அறியலுற்று அதனானே அழிந்து கெடுகின்ற நெஞ்சத்தினை யுடையேம்; அதன்மேலே வருத்தத்திலே தங்கும்படியாக நீ செய்து கழிந்த இக்குறைகளைக் குறை யென்று நினையாதே நின்னைக் கண்ட இடத்தே நெஞ்சழிந்து நின்னைப் பேணிக்கொள்ளுதலின் இக் காமநோயிலே தங்குதல் எமக்குத் தாழ்ந்த தொரு தொழிலோ? இஃது இழிந்ததன்றுகாண்!

இதனால், இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது வெள்ளைச் சுரிதகத்தாலிற்ற ஒத்தாழிசைக்கலி. (எ)

எங.

அகன்றுறை யணிபெறப் புதலொடு தாழ்ந்த
பகன்றைப்பூ வுறநீண்ட பாசடைத் தாமரை
கண்பொர வொளிவிட்ட வெள்ளிய வள்ளத்தாற்
றண்கமழ் நறுந்தேற லுண்பவன் முகம்போல
வண்பிணி தளைவிடூஉம் வயலணி நல்லூர;

* பற்றம்-கொத்து.

(பாடம்) 1. புலத்தி. 2. செற்றச் சொல்,

நோதக்கா யெனநின்னை
நொந்தீவா ரில்வழித்
தீதிலேன் யானெனத்
தேற்றிய வருதிமன்
ஞெகிழ்தொடி யிளையவ
ரிடைமுலைத் தாதுசோர்ந்
திதழ்வனப்
பிழந்தநின் கண்ணிவந்

துரையாக்கால் ; கo. கனற்றிநீ
செய்வது கடிந்தீவா ரில்வழி

மனத்திற்றீ திலனென
மயக்கிய வருதிம
னலமர லுண்கண்ணு

ராய்கோதை குழைத்தநின்
மலர் மார்பின் மறுப்பட்ட
சாந்தம்வந் துரையாக்கால்;

என்னைநீ செய்யினு
முரைத்தீவா ரில்வழி
கஞ. முன்னடிப்
பணிந்தெம்மை யுணர்த்திய
வருதிமன்
னிரைதொடி நல்லவர்
துணங்கையுட் டலைக்கொள்ளக்
கரையிடைக் கிழிந்தநின்
காழகம்வந் துரையாக்கால்;

எனவாங்கு,

மண்டுநீ ராரா மலிகடல்
போலுநின்
உ0. றண்டாப் பரத்தை
தலைக்கொள்ள நாளும்
புலத்தகைப் பெண்டிரைத்
தேற்றிமற் றியாமெனிற் [1]
றோலாமோ நின்பொய்
மருண்டு.

இது "தங்கிய வொழுக்கத்துக்
கிழவனை வணங்கி, யெங்கையர்க்
குரையென
விரத்தற்கண்" * தலைவி கூறியது.

(க—ம) அகன்றுறை .
. . . . நல்லூர :—

(இ - ள்.) அகன்ற நீருண்ணுந்துறை அழகு பெறும்படி சிறு தூரோடே வந்து தாழ்ந்து கிடந்த பகன்றையினது பூவைச் சேரும்படி வளர்ந்த பசிய இலையினையுடைய தாமரைமுகை கண் வெறிகொள்ளும்படி ஒளிவிட்ட வெள்ளி வள்ளத்தாலே குளிர்ந்த நறிய கள்ளை உண்பவன் முகம்போல வளவிய முறுக்கு நெகிழும் வயலணிந்த நல்ல ஊரனே!

'வெள்ளிய வள்ளம்' என்பது, "மென்மைய மிடைமையும் வருஉங்

காலே, யின்மை வேண்டு மென்மனார் புலவர் "† என்பதனால், அம்முச்சாரியையின் மகரங் கெட்டு அகரம் யகரவுடம்படுமெய் பெற்றுநின்றது.

அகன்ற துறை பரத்தையர் சேரியாகவும், அழகுபெறும்படி புதலொடு வந்து தாழ்ந்த மணமில்லாத பகன்றைப்பூப் பாணர் முதலிய வாயில்க ளோடே வந்து தங்கின அன்பில்லாத பரத்தையராகவும், அதனை உற

* தொல். பொருள்; கசஎ. † தொல். எழுத்து: கக௦.

(பாடம்) 1. தீயாமேற்.

உக்ச

கலித்தொகை

[கலி - எ

நீண்ட தாமரை அப்பரத்தையரிடத்தே சேர்ந்த தலைவனாகவும், அத்தாமரை கள்ளைத் தீதென்று உணர்ந்துவைத்தும் அதனை உண்டு களிக்கின்றவை முகம்போலத் தளைவிடுதல் அன்பில்லாத மகளிரிடத்துப் பெறுகின்ற இன்ப நுகர்ச்சி தீதென்று உணர்ந்துவைத்தும் அதனை நுகர்ந்து மகிழ்கின்ற தலைவனாகவும் உள்ளுறை யுவமங் கொள்க. 'முகம்போல' வென்னும் வினையுவமங் கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்துநின்றது.

(கு—கூ) நோதக்கா . . . . துரையாக்கால் :—

(இ - ள்.) நீ நீங்குதலான் நெகிழ்ந்த தொடியினையுடைய பரத்தையருடைய முலையிடையிலே தாதுகள் உதிர்ந்து இதழ்கள் அழகிழந்த நின் கண்ணி நினக்கு உட்பகையாய்வந்து நின் பரத்தைமையை எமக்கு உரையாதபொழுது நீ யாங்கள் வெறுக்கத் தக்க பரத்தைமையை யென்று ஒரு காலத்தும் நின்னை வெறுப்பார் இல்லாத இடத்தே யான் தீதிலேனென்று தேற்றுதற்கு வருவாய்; அதனாற் பெற்றதென் ?

(௧0—௧௬) களைற்றிநீ . . . . துரையாக்கால் :—

(இ - ள்.) தம்வயத்தராதற்கு உரியாரைத் தேடிச் சுழல்கின்ற மையுண் கண்ணினையுடைய பரத்தையருடைய அழகிய மாலைகள் முயக்கத்தாற் குழைவித்த நின் மலர்ந்த மார்பிற் பூசின பாடழிந்த சந்தனம் நினக்கு உட்பகையாய் வந்து நின் பரத்தைமையை எமக்கு உரையாதபொழுது நெஞ்சைக் கனலப் பண்ணி நீ ஒழுகுகின்ற பரத்தைமையை வெறுப்பார் இல்லாத இடத்தே யான் தீதுடையேன் அல்லேனென்று எங்கள் மனத்திடத்தே ஊடலுணர்த்துதற்கு வருவாய்; அதனாற் பெற்றதென்?

(கச—கஎ) என்னைநீ . . . . துரையாக்கால்:—

(இ - ள்.) நிரைத்த தொடியினையுடைய பரத்தையர் ஆடுந் துணங்கைக்கூத்திடத்தே நீ சென்று தலைக்கைகொடுத்தற்றொழிலை நின்னிடத்தே கொள்கையினாலே அவர் சிலம்பு தொடக்கிக் கரையிடத்தே கிழிந்த நின்னுடைய நீல ஆடை நினக்கு உட்பகையாய் வந்து நின் பரத்தைமையை எமக்கு உரையாதபொழுது எப்படிப் பெரிய குறைகளை நீ செய்யினும் இக் குறைகளைச் செய்யாநின்றாயென்று கூறுவார் இல்லாத இடத்தே அடிமுன்னே பணிந்து எம்மை ஊடலுணர்த்துதற்கு வருவாய்; அதனாற் பெற்றதென்?

"பயங்கெழு துணையணை புல்லிய புல்லா, துயங்குவள் கிடந்த கிழத்தியைக் குறுகிப் புல்கென முன்னிய நிறையழி பொழுதின், மெல்லென் சீறடி புல்லிய விரவினும்"* என்பதனான் 'முன்னடிப் பணிந்து' என்றார்.

* தொல். பொருள்: கசகூ,

மருதம் - க]

மருதக்கலி

(கஅ)

என்வாங்கு :—

அசை.

(கக—உஉ) மண்டு நீ

உக௫

மருண்டு :—

(இ - ள்.) யாற்றினின்று மிக்குச் சென்று வீழ்கின்ற நீரால் நிறையாத மிகுகடல்போலும் நின் அமையாத பரத்தைமை மேவிடுகையினுலே நாடோறும் நின்னெடு புலக்குந் தகுதியையுடைய பெண்டிரைத் தெளிவிப்பாய்; பின்னை யாமாயின் நின் பொய்யை மெய்யாக நினைந்து நினக்குத் தோலாதிருப்பேமோ? தோற்பேமன்றோ? என்று எங்கையர்க்கு உரையென்றாள்.

இதனாற் றலைவிக்கு முனிவு பிறந்தது.

இது வெள்ளைச் சுரிதகத்தாலிற்ற ஒத்தாழிசைக் கலி.
(அ)

எச.

பொய்கைப்பூப் புதிதுண்ட
வரிவண்டு கழிப்பூத்த
நெய்தற்று தமர்ந்தாடிப்
பாசடைச் சேப்பினுட்[1]
செய்தியற்றி யதுபோல
வயற்பூத்த தாமரை

மைதபு கிளர்கொட்டை
மாண்பதிப் படர்தரூஉங்
ரு. கொய்குழை யகைகாஞ்சித்
துறையணி நல்லூர ;
அன்பில னறனில
னெனப்படா னெனவேத்தி

நின்புகழ் பல்பாடும்
பாணனு மேமுற்றான் ;
நஞ்சுயிர் செகுத்தலு
மறிந்துண்டாங் களியின்மை
கண்டுநின் மொழிதேறும்
பெண்டிரு மேமுற்றார் ; க0.

முன்பகற் றலைக்கூடி நன்பக

லவணீத்துப்

பின்பகற் பிறர்த்தேரு

நெஞ்சமு மேமுற்றுய் ;

எனவாஙகு,

கிண்கிணி மணித்தாரோ

டொலித்தார்ப்ப வொண்டொடிப்

பேரமர்க் கண்ணூர்க்கும்

படுவலை யிதுவென

கரு. ஆரவ ருடனகத் திரிதருந்
தேரே முற்றன்று நின்னினும் பெரிதே.

இது பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனோடு ஊடிய கர்மக்கிழத்தியை அவன்
இவ்வகையன கூற நீ ஏமுற்றாயோ வென்றாற்கு அவள் கூறியது..

[illegible]

(க—ரு) பொய்கைப்பூ

. . . . நல்லூர :—

(இ - ள்.) பொய்கையிடத்துப்

பூவினுடைய தேனையுண்ட வரியினை

யுடைய வண்டு கழியிடத்துப் பூத்த நெய்தற்பூவிற் றாதை மனம் பொருந்தி நுகர்ந்து வயலிடத்துப் பசிய இலையினையுடைய தாள்றேன்றுங் கிழங்கிடத்தைக் கைசெய்து பண்ணினதுபோலப் பூத்த, கரிய இதழ் பொதிந்த, நீங்குகின்ற தாமரைப்பூவினது விளங்குகின்ற கொட்டையாகிய மாட்சிமையையுடைய பதியிடத்தே மீண்டுவரும் மகளிர் கொய்யுந் தழை தளிர்க்கின்ற காஞ்சி மரத்தினையுடைய துறையணிந்த நல்ல ஊரனே!

மைதபு தாமரை யெனக் கூட்டுக. தேரேற்றிக்கொண்டுவந்த பரத்தையரை முற்பட நுகர்ந்து பின்னர்ச் சேரிப்பரத்தையரை நுகர்ந்து விடியற்காலத்துத் தலைவி மனைவயிற் செல்கின்ற ஊரனென்று காமக்கிழத்தி புலந்து கூறினாள்.

(கூ—எ) அன்பில . . .

. . மேழற்றன் :—

(இ - ள்.) அவன் அன்புடையனல்லனென்றும் அறனுடையனல்லனென்றும் நீ சொல்லப்படானென்று நின்னைப் புகழ்ந்து நின் புகழ் பலவற்றையும் பாடிக்காட்டும் பாணனும் பித்தேறினன் ;

(அ—க) நஞ்சுயிர் . . . . மேழற்றர் :—

(இ - ள்.) நஞ்சு தன்னை நுகர்ந்தார் உயிரைப் போக்குதலையும் அறிந்துவைத்து உண்டாற்போல நின் மனக்கருத்து அருளின்றி வருத்துதலைக் கண்டுவைத்தும் பின்னும் நின் பொய்மொழியை மெய்யாகத் தெளியும் பரத்தையரும் பித்தேறினர் ;

'செகுத்தலு'மென்ற உம்மை சிறப்பு.

(௧௦—௧௧) மூன்பகற் . . . . மேழற்றய் :—

(இ - ள்.) நாட்கால மெல்லாம் ஒருத்தியிடத்தே கூடியிருந்து உச்சிக் காலமெல்லாம் அவளைக் கைவிட்டுப் பலரிடத்தே சென்று அந்திக் காலத்திற் கூடுதற்கு வேறு சிலரை ஆராயும் நின் நெஞ்சமும் பித்தேறினுய் ;

அவளை யென்னும் இரண்டாவது "ஒழியாது வருதலும்" * என்றதனுற் சிறுபான்மை ஒழிந்துநின்றது. 'நெஞ்சமு மேழற்றாய்' எனச் சினைவினை முதலொடு முடிந்தது. உம்மைகள் ; எண்ணும்மை.

(௧௨) எனவாங்கு :—

அசை.

*தொல். எழுத்து : கடுஎ.

மருதக்கலி

உக்எ

(கரு—கசு) கிண்கிணி . . .

. பேரிதே :—

(இ - ள்.) சதங்கை தண்டை சிறுமணிகள் கோத்த தாருடனே ஒலி யெழுந்து ஆரவாரிப்ப ஒள்ளிதாகிய தொடியினையுடைய பெருத்த அமர்த்த கண்ணினையுடைய பரத்தையர்க்கும் அவர்கள் அகப்படுத்தற்குக் காரணமான வலை இதுவென்று சொல்லி ஊரிலுள்ளார் சேரச் சிரிக்கும்படி திரிதருந் தேர் நின்னினும் பெரிதாகப் பித்தேறிற்று ; யான் பித்தேறிலேன் என்று ஊடினள்.

'தேர்' என்றது ஆகுபெயராய்ப் பாகனை யுணர்த்திற்று.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சி யுவகை பிறந்தது.

இது சிறுமைக் கெல்லை கூறிய ஈரடித்தாழிசையான் வந்த ஒத்தாழிசைக்கலி. (க)

எரு.

நீரார் செறுவி னெய்தலொடு நீடிய
நேரித ழாம்ப லிரையிதழ் கொண்மார்
சீரார் சேயிழை யொலிப்ப
வோடு
மோரை மகளி ரோதை
வெரீஇயெழுந்[1]
ரு. தார லார்கை யஞ்சிறைத்
தொழுதி
யுயர்ந்த பொங்க ருயர்மர

மேதி
யமர்க்கண் மகளி ரலப்பிய[2]
வந்நோய்
தமர்க்குரைப் பனபோற்
பல்குரல் பயிற்று
முயர்ந்த போரி னொலிநல்
லூரன்
புதுவோர்ப் புணர்தல் வெய்ய
னாயின்
வதுவை நாளால் வைகலு
மஃதியா
னோவேன் றோழி நோவாய்
நீயென
வெற்பார்த் துறுவோய்

கேளினித் தெற்றென ;

எல்வினை வருதி யெவன்குறித்

தனையெனச்

கரு, சொல்லா திருப்பே னுயி னெல்லென
விரியுளைக் கலிமான் றேரொடு வந்த

விருந்தெதிர் கோடலின்

மறப்ப லென்றும் ;

வாடிய பூவொடு வாரலெம்

மனையென

(பாடம்) 1. வெரீஇ. 2. ரலைப்பிய.

28

உக அ கலித்தொகை

உ0. தச்சா ருக வுணரிய வருபவன்
பொய்ச்சூ ளஞ்சிப் புலவே ஞகுவல் ;

பகலாண் டல்கினை பரத்த வென்றியா
னிகலி யிருப்பே ஞயிற் றூன்றன்
முதல்வன் பெரும்பெயர் முறையுளிப்[1]

1 [கலி - எடு

பெற்ற

௨௫. புதல்வற் புல்லிப்
பொய்த்துயி றுஞ்சும் ;
ஆங்க,

விருந்தெதிர் கொள்ளவும் பொய்ச்சூ ளஞ்சவு
மரும்பெறற் புதல்வனை முயங்கக் காணவு
மாங்கவிந் தொழியுமென்

புலவி தாங்கா
௩0: தவ்வவ்[2] விடத்தா

னவையவை காணப்

பூங்கண் மகளிர் புனைநலஞ் சிதைக்கு
மாய மகிழ்நன் பரத்தைமை
நோவேன் றோழி கடனமக்

கெனவே.

இது தலைவன் நாடோறும் வதுவையயர்ந்து வந்தால் யான் அதற்குப் பொறேனாக நீ ஊடலின்றி அவன் வந்தபொழுதே எதிர்கொள்ளுதியென்ற தோழிக்குத் தலைமகள் அதற்குக் காரணங் கூறியது.

(க—கரு) நீரார் . . . .

தேற்றேன :—

(இ - ள்.) நீர் நிறைந்த செய்யில் வளர்ந்த ஒத்த இதழையுடைய நெய்தற் பூவோடே ஆம்பலினது நிரைத்த[3] இதழையுடைய பூக்களைப் பறித்துக் கோடற்குத் தலைமை நிறைந்த சிவந்த சிலம்பு முதலியன ஒலிப்ப ஓடுகின்ற விளையாட்டினையுடைய மகளிருடைய ஆரவாரத்திற்கு வெருவி யெழுந்து ஆரல்மீனை உண்டலையுடைய அழகிய சிறகினையுடைய பறவைத் திரள் உயர்ந்த மரத்தில் உயர்ந்த கொம்பிலே ஏறியிருந்து போரைச் செய்யுங் கண்ணினையுடைய மகளிர் தம்மை அலைத்த[4] அந்த நோயை அம் மகளிருடைய சுற்றத்தார்க்குக் கூறுவனபோலப் பலகுரலாலே பலகாலுஞ் சொல்லும் உயர்ந்த போர்களால் உண்டாகிய ஆரவாரத்தினையுடைய நல்ல ஊரினையுடையவன் புதிய பரத்தையரை மணஞ்செய்தலை எக்காலமும் விரும்புவனாயின், அதற்கேற்ப நாள்களும், வதுவைக்கு உரிய நாளாயிருக்கு மாயின், அவ்வொழுக்கத்திற்குத் தோழீ! யான் வருந்துவேன்; நீ அதற்கு ஒருகாலமும் வருந்தாயெனச் சொல்லி என்னைப் பார்த்து வருத்தமுறு கின்றவளே! இனி அவன் செய்தியை நின் நெஞ்சு தெளியும்படியாகக் கேள்!

(பாடம்) 1. முறையுளி. 2. தவ்வ. 3. நிரைந்த. 4. அலைக்க.

மருதம் - கஎ

மருதக்கலி

உக

உயர்ந்தாரோடு

இழிர்தாரையும் தத்தம்

மனைகளினின்றுங் கொண்

போந்து வருந்தவிடுதற்கு விறலிமுதலிய வாயிலோர் செல்கின்ற ஆரவார
தைக் கேட்டு வெருவி அவனை அரிதிற் பெற்றுழி நுகர்ந்து வருந்தி யிரு
கின்ற சேரிப்பரத்தையர் பின்பு அவன் செலுத்துகின்ற வாயில்கட்
எய்தாத இடங்களிலே புலந்திருந்து அவன் வாயில்கள்[1] தம்மை வருத்தி
நோவை அவர் சுற்றத்தார்க்குப் பலகாலும் முறைப்பட்டுக் கூறு
ஊரனென உள்ளுறை யுவமங் கொள்க.

(கச—கஎ) எல்லினை . . . . லென்றும் :—

(இ - ள்.) வதுவை அயர்ந்தபின்பு விளக்கத்தினையுடையையா
வாராநின்றாய், எம்மை எத்தன்மையாகக் கருதினையெனப் புலந்து கூறி
பின்னர் ஒருமொழியைக் கூறுதிருப்பேனாயின், அது நீங்கப் பரந்தகழுத்தின்
மயிரினையும் மனச் செருக்கினையுமுடைய குதிரை பூண்ட தேரிலே ஆ
வாரிப்பக் கொண்டுவந்த விருந்தினரை எதிர்கொள்ளுகையினாலே
எந்நாளும் புலவியை மறப்பேன் ;

(கஅ—உக) வாடிய . . . . ஊதுவல் :—

(இ - ள்.) முயக்கத்தால் வாடிய பூவோடே எம்மனையிடத்து
வாராதே கொள்ளென்று கூறி யான் ஊடியிருப்பேனாயின், நீடியாமல் தன்
பொய்ச்சூளுக்கு * நாம் அஞ்சும் அச்சமே தான் ஊடலுணர்த்தும் வழியாக
ஊடலுணர்த்துதற்கு வருபவனுடைய பொய்யாகிய சூளுக்கு அஞ்சிப்
புலவேனாயிருப்பேன் ;

" அஞ்சியச் சுறுத்தலும் " † என்றாற்போல அச்சம் 'அச்சு' என விகாரமாய் நின்றது.

(உஉ—உ௫) பகலாண்

...றுஞ்சும் :—

(இ - ள்.) பரத்தைமையை யுடையவனே! பகற்பொழுதெல்லாம் பரத்தையர் மனையிலே தங்கினையென்று கூறி யான் அவனுடனே மாறுபட்டிருப்பேனாயின், தான் தன்னுடைய தந்தையுடைய பெரிய பெயரைப் பெறுமுறையாற் ‡ பெற்ற புதல்வனைத் தழுவிப் பொய்யாகிய துயிலைக் கொண்டு வருந்தும்;

துஞ்சுதல்: இறந்துபடுதல். 'பகலாண்டல்கினை' எனவே உண்டிக் காலத்தும் வந்திலை யென்றாள்.

(உசு) ஆங்க:—

அசை.

---

* பரி. அ: சுரு - எக. † தொல். பொருள் : ககச. ‡ கலி. அச : ௩௫.
(பாடம்) 1. வாயில்களைத்.

கலித்தொகை

[கலி - எக

(உஎ—கக) விருந்தேதிர்

கேனவே:—

(இ - ள்.) தோழீ! பூப்போலுங் கண்ணையுடைய மகளிருடைய கை செய்த கலத்தைக் கெடுக்கும் பொய்யை வல்ல மகிழ்நன்து பரத்தைமை யாலே வதுவையயர்ந்துவந்த மனைதோறும் அவர் புலவியாற் செய்த வடுக்களைக் கண்டிருக்க நமக்கு முறைமையாயிற்றென்று கருதி யான் நொந் திருப்பேன்;* ஆயின் யான் இங்ஙனமாகவும் விருந்தினரை எதிர்கொள்ளு தலைச் செய்கையினாலும், அவன் பொய்யாகிய சூளால் நமக்கு வருத்தம் வரு மென்று அஞ்சுகையினாலும் பெறுதற்கரிய புதல்வனை முயங்கிக் கொண்டு வருந்தக் காண்கையினாலும் என் நெஞ்சு புலவியை முழுக்கத் தாங்காது; தாங்காதபடியாலே அவ்விடத்துப் புலவி கெட்டுப் போகாநிற்கும்; இது காண் யான் உறுகின்ற துன்பமென்றான்.

இதனால், பிறர் இகழ்ந்தமைபற்றித் தலைவிக்கு என்னல் பிறந்தது.

இது "தரவே தானு நாலடி யிழிபா, யாறி ரண்டுயர் பேறவும் படுமே"† என்றதனில் "ஏறவு"மென்ற உம்மையாற் சிறுபான்மை பதின் மூன்றடியும் வருமென்றவிற் பதின்மூன்றடியான் வந்த தரவும், தாழம்பட்ட ஓசையின்றித் தரவகப்பட்ட இடைநிலைப்பாட்டும், 'ஆங்க' வென்னுந் தனிச் சொல்லும், எழடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (எ0)

எனா.

புனையிழை நோக்கியும்
புனலாடப் புறஞ்சூழ்ந்து

மணிவரி தைஇயுநம் மில்வந்து
வணங்கியு
நினையுபு வருந்துமிந்
நெடுந்தகை திறத்திவ்வூ

ரினையனென் றெடுத்தோதற்
கனையையோ நீயென
௫. வினவுதி யாயின்
விளங்கிழாய் கேளினி ;

செவ்விரல் சிவப்பூரச் சேட்சென்று மென்றவன்
பௌவநீர்ச் சாய்க்கொழுதிப் பாவைதந் தனைத்தற்கோ

கௌவைநோ யுற்றவர் காணாது
கடுத்தசொல்
லொவ்வாவென் றுணராய்நீ
யொருநிலையே யுரைத்தனை ;

கம. ஒடுங்கியாம் புகலொல்லேம்
பெயர்தர வவன்கண்டு
நெடுங்கய
மலர்வாங்கி நெறித்துத்தந்
தனைத்தற்கோ
விடுந்தவர் விரகின்றி
யெடுத்தசொற் பொய்யாகக்

கடிந்தது மிலையாய்நீ கழறிய
வந்ததை ;

* பெருங். (ச) சே : கூஅ - கூகூ.   † தொல். பொருள் ; சசரு.

வரிதேற்றாய் நீயென
வணங்கிறை யவன்புற்றித்

கரு. தெரிவேய்த்தோட்
கரும்பெழுதித் தொய்யில்செய்
தனைத்
புரிபுநம் மாயத்தார்
பொய்யாக வெடுத்தசொல்

[தற்கோ
ழுரிதென[1] வுணரர்ய்நீ
யுலமந்தாய் போன்றதை ;

எனவாங்கு,

அரிதினி யாயிழா
யதுதேற்றல் புரிபொருங்

உ0. கன்றுகம்

வதுவையு ணமர்செய்வ
தின்றீங்கே
தானயங் திருந்த திவ்வூ

ராயி னெவன்கொலோ

நாஞ்செயற் பால தினி.

இஃது "அச்ச நீடினும்"* என்றதனற் கூட்டமுண்மை உணர்ந்த தோழிக்கு

உண்மை கூறுதற்கு அஞ்சிய அச்சம் நீட்டித்துத் தலைவி கூறியது. இது

"தினைமயக் குறுதலுங் கடிநிலை யிலவே"† என்னுஞ் சூத்திரவிதியான் மருதத்துக் குறிஞ்சி வந்தது.

(க—கு) புனையிழை . . . . கேளினி :—

(இ - ள்.) கைசெய்த பூண்களைக் கிடக்கும் முறைமையிலே கிடக்கத் திருத்தியும், நாம் நீரிலே விளையாட நமக்கோர் ஏதம் வாராமற் புறத்தே சூழ்ந்து திரிந்தும், அழகிய தொய்யிலெழுதியும், நம்முடைய சிற்றிலிலே வந்து எவற்றொழிலைச் செய்துங், கூட்டத்தை நினைந்து வருந்துகின்ற இந்தப் பெரிய தகுதிப்பாட்டையுடையவனிடத்தே கூட்டத்தையுடைய னென்று

இவ்வூரிலுள்ளார் பலகாலுங் கூறுதற்கு நீ அங்ஙனம் ஒரு கூட்டத்தையுடையையோவென்று கேட்கின்றாயாயின் விளங்குகின்ற இழை யிணையுடையாய்! இப்பொழுது யான் கூறுகின்றதனைக் கேள்!

(கூ—க) சேவீரல் உரைத்ததை:—

(இ - ள்.) அலர் தூற்றுத லில்லாதபொழுது வருத்தமுற்றிருந்த மகளிர் இது தகாதென்று ஆராயாதே ஐயுற்றுக் கூறிய சொல் இவட்குப்

பொருந்தாவென்று அறியாயாய் நீயும் அவர்கள் சொன்ன நிலையிலே சொன்னது, சிவந்தவிரல் மிகச் சிவப்புப் பரக்கும்படியாக‡ நெடும்பொழுது நின்று வாங்கிகுயென்று சொல்லி அவன் கடல்நீர் வந்து எறின கழியிடத்துத் தண்டான் கோரையைப் பறித்துக் கிழித்துப் பாவையாக்கித் § தந்த அச்செற்றுபகாரத்திற்கோ?

* தொல். பொருள் : ௧௧. † தொல். பொருள்: ௬௨.

‡ பரிற். ௬௮ : ௬௭-௬௯. § கல். ௧௫ : ௨௭.

'நீர்': ஆகுபெயர் "ஒன்றே வேறே"* என்பதனால் வேற்றுநில மாயிற்று, மருதத்துத் தலைவி நெய்தலில் நேர்பட்டமையின்.

(௧௦—௧௬) ஒடுங்கியாம் வந்ததை :—

(இ - ள்.) தீயரென்று எல்லாருங் கைவிடப்பட்ட மகளிர் அங்ஙனங் கூறுதல் தீதென்று உணரவல்ல விரகின்றிப் பல்காற் கூறிய சொல் பொய் யாகக் கெடும்படி

தவிர்ந்ததுவுமில்லையாய் நீ என்னைக்
கோபித்தற்கு வந்தது, கூசி யாம்
உட்புகுதலைப் பொருந்தேமாய் மீள
அவன் அதனைக் கண்டு நெடிய
கயத்தின் மலரைப் பறித்துப்
புறவிதழை ஒடித்துத் தந்த
அச்சிற்றுபகாரத்திற்கோ ?

'தந்த,' 'விடுத்த': இவை
விகாரம்.

(கசு—கள) வரிதேற்றய்
போன்றதை :—

(இ - ள்.) காவல் புரிந்து
காக்கின்ற நம் ஆயத்தார் காவல்

பொய் யாய்ப் போம்படி இவ்வூரார்
பலகாற் கூறிய கூற்றை நீ
பொய்யென்றுண
ராயாய் இவட்கு உரித்தென்று கருதி
அலமந்தாரைப் போலே இருந்தது,
நீ தொய்யிலெழுத அறியாயென்று
கூறி வளைந்த முன்கையை அவன்
பிடித்துத் தெரிந்த வேய்போலுந்
தோளிலே கரும்பை எழுதித்
தொய்யிற்
குழம்பான் மற்றும் எழுதுதற்கு
உரியனவற்றை எழுதின
அச்சிற்றுபகாரத்
திற்கோ?

'செய்த', 'உரித்து' : இவை

விகாரம்.

(கஅ) என்வாங்கு :—

(இ - ள்.) என்றியான் நினக்குக் கூறும்படியாக;

'ஆங்கு': அசை.

(கக—உஉ) அரிதினி தினி :—

(இ - ள்.) நின் நெஞ்சிடத்து நிகழ்ந்த இக்காரியம் ஆயிழாய்! இனித் தெளிவித்தலரிது. இனி நம்முடைய வதுவையிடத்தே நஞ்சுற்றத்தார் சோ விரும்பி அன்று செய்யுங் காரியத்தை இன்று இவ்விடத்தே இவ்வூர் விரும்பி இருந்ததாயின் அதற்கு நாஞ் செய்தற் பகுதியையுடைய காரியம் எக் காரியம்?

இது தலைவி தோழிக்குக் கூறியது.

" பன்னூறு வகையினுந் தன்வயின் வரூஉ, நன்னய மருங்கி னாட்டம் வேண்டலிற், றுணைச்சுட்டுக் கிளவி கிழவிய தாகுந், துணையோர் கரும மாக

* தொல். பொருள்; கக.

மருதம் - கஉ]

மருதக்கலி

உஉரு

லான "* என்பதனான்,

'வினவுதியாயி' னென நாட்டம்

நிகழ்ந்தவாறுஞ்

சுரிதகத்துக் கூட்டங்கூறித்

துணைச்சுட்டுக் கிளவி

கிழவியதாயவாறுங்

காண்க.

இதனாற் றலைவிக்கு
அச்சம் நிகழ்ந்தது. இதனைத் தோழி கூற்றாக்கி
உரைப்பாரும் உளர்.

இஃது ஆசிரியத்தளையுங் கலித்தளையும் விரவி ஐஞ்சீரடி வந்த
வெள்ளைச் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. "வெண்பா வியலினும்
பண்புற முடியும்" † என்பதனல் வெள்ளைச் சுரிதகத்தாலிற்றது. இது
"வெண்டளை விரவிய மாசிரியம்

விரவியு, மைஞ்சீ ரடியு முளவென
மொழிப" ‡ என்பதனான்
ஐஞ்சீரடியும் வந்தது.
(கக)

எஎ.

இணையிரண்
டிணைந்தொத்த முகைநாப்பட்
பிறிதியாதுந்
துணையின்றித் தளைவிட்ட
தாமரைத் தனிமலர்

திருமுக மிறைஞ்சினள்
வீழ்பவற் கிளைபவ

ளரிமதர் மழைக்கண்ணீ
ரலர்முலைமேற் றெறிப்பபோற்
று. றகைமலர்ப் பழனத்த
புள்ளொற்ற வொசிந்தொல்கி

மிகநனி சேர்ந்தவம்
முகைமிசை யம்மல்

ரகவிதழ்த் தண்பனி யுறைத்தரு
மூரகேள் ;

தண்டளிர்த் தகைபூத்த தாதெழி னலஞ்செலக்
கொண்டுநீ மாறிய
கவின்பெறல் வேண்டேன்மன்

௧௦. னுண்டாதல்
சாலாவென் னுயிர்சாத லுணர்ந்துநின்
பெண்டெனப் பிறர்கூறும் பழிமாறப் பெறுகற்பின்;
பொன்னெனப்
பசந்தகண்
போதெழி னலஞ்செலத்
தொன்னல மிழந்தகண்
டுயில்பெறல் வேண்டேன்மன்

னின்னணங் குற்றவர்
நீசெய்யுங் கொடுமைக
கரு. ளென் னுழை வந்துநொந்
துரையாமற் பெறுகற்பின்;

மாசற

மண்ணுற்ற மணியேசு மிருங்கூந்தல்

விசேர்ந்து
வண்டார்க்குங்
கவின்பெறல் வேண்டேன்ம
ஞேய்சேர்ந்த
திறம்பண்ணி நின்பாண

ளைம்மனே

நீசேர்ந்த வில்லிஞய்
வாராமற் பெறுகற்பின்;

---

* தொல், பொருள் : ௧௨௩,
† தொல், பொருள் ; ௯௮௯,
‡ தொல், பொருள் : ௧௭௫,

௨௭௪

கலித்தொகை

[கலி - எள்

கடைஇய நின்மார்பு தோயல மென்னு
மிடையு நிறையு மெளிதோநிற் காணிற்
கடவுபு கைத்தங்கா நெஞ்சென்னுந் தம்மோ
டுடன்வாழ் பகையுடை யார்க்கு.

இது பரத்தையர் சேரியிற் சென்று வந்த தலைவனோடு ஊடிய தலைவி ஊடறீர்கின்றாள் கூறியது.

(க—எ) இணையிரண்

டூரகேள் :—

(இ - ள்.) தாமரையிற் றனித்த மலர்கள் இரண்டு தம்மிற் சேர்ந்து ஒப்பொத்த முகைகளுக்கு நடுவே நின்று வேறொரு பூச்[1] சிறிதுந் தம் அருகு சேர்தலின்றி முறுக்கு அவிழ்ந்தன ; தான் விரும்பப்பட்டவனுக்கு அழகினையுடைய முகங் கவிழ்ந்து அழுகின்றவளுடைய செவ்வரியினையுஞ் செருக்கினையுங் குளிர்ச்சியினையுமுடைய கண்ணின் நீர் அடிக்கொண்ட முலைமேல் வீழ்வனபோல, அப்பூக்கள் அழகினையுடைத்தாகிய மலர்களையுடைய பழனத்திடத்தனவாகிய பறவைகள் வந்து தாக்க மிகவுஞ் சாய்ந்து வளைந்து மிகவும் இணைந்த அந்த முகைகளின்மேலே தம்முடைய உள்ளிதழினின்ற

நீரைத் துளித்தலைத் தருகின்ற ஊரனே ! கேள்.

அம்மலர் புள்ளொற்ற ஒல்கி அம்முகைகளின்மேலே 'தண்பனி யுறைத் தரும் ஊர' என்றதனாற் சேரிப்பரத்தையர் நின்மனைவியரை இகழ்ந்து வந்து அவர்மனைதோறும் நின்னைத் தேடுகையினாலே அவர் வருந்தி அழுகின்ற ஊரவெனத் தலைவி புலந்து கூறினாள்.

அவிழ்ந்தன: என வினைமுற்றாக உரைக்க.

(அ—கக) தண்டளிர்த் . . . . பெறுகற்பின் :—

(இ-ள்.) உண்டென்று கூறுதல் அமையாத என்னுயிர் அந்நிலையினும் நில்லாமற் சாதலை

உணர்ந்துவைத்தும் நின்
பெண்டென்று பிறர்
கூறும் பழி போகப்பெறின்,
குளிர்ந்த தளிரிடத்தே வீழ்ந்து
அழகு
பொலிவுபெற்ற தாதுபோலும்
எழிலையுடைய மாமையுஞ் சுணங்கும்
எம்
மிடத்தினின்றும் போம்படியாக
வாங்கிக்கொண்டு நீ பின்பு
ஒருகாலுந்
தாராதுவிட்ட
அழகை யான் பெறுதலை விரும்பேன்;
அதனாற் பெற்றதென்?
பெண்டென்னும் பெயர்

போகாதாயிற்றே!

'பெறுகற்பின்' :

வினைத்திரிசொல். 'மன்' : கழிவு.

'சாதலுணர்ந்து' மென்பது

நெடுங்காலங் கைவிட்டமை

தோன்ற

நின்றது.

(பாடம்) 1. பூக்கள்.

மருதம் = கஉ]

மருதக்கலி

உஉ௫

(கஉ—க௫) பொன்னேனப்

பெறுகற்பின் :—

(இ - ள்.) கண்கள் பூவினது அழகையுடைய நலம்போம்படியாகப் பொன்போலப் பசந்தன; நின்னால் வருத்தமுற்ற பரத்தையர் நீ செய்யுங் கொடுமைகளை என்னிடத்தே வந்து வெறுத்துச்சொல்லாமையை யான் பெறின், இயற்கைநலத்தையும் இழந்த அக்கண் துயில்பெறுதலை விரும்பேன்; அதனாற் பெற்றதென்? அங்ஙனம் என்னை இகழ்ந்து கூறுதல் தவிராரே!

பசந்தனவென முற்றுக்க. இயற்கைநலத்தையும் இழந்த அக்கண்ணெனச் சுட்டாக்கி உரைக்க.

(கசு—கக) மாசற

பெறுகற்பின்:—

(இ - ள்.) நின்னுடைய பாணன் கோவுசேர்ந்த திறப்பண்ணைப் பண்ணி எம்முடைய மனையிடத்தே நீ சென்று சேர்ந்த பரத்தையர் மனையை என்னைக் கேட்டு வாராதிருத்தலை யான் பெறின், மாசறக் கழுவுத அற்ற நீலமணியை நீ எனக்கு ஒவ்வாயென்று ஏசுங் கரியகூந்தல் பூவணிந்து வண்டுகள் ஆரவாரிக்கும் அழகைப்பெறுதலை யான் விரும்பேன்; அதனாற் பெற்றதென்? அவன் வினவுதலைத் தவிரானே!

'எம்மனை,' 'வேண்டே'னென்ப ஒருமைப்பன்மை மயக்கம்.

(உ0) ஆங்க :—

(உக—உச) கடைட்டுய . . . யார்க்து :—

(இ - ள்.) "தம்முறு விழுமம் பரத்தையர் கூறினு, மெய்ம்மையாக வவர்வயி னுணர்ந்து, தலைத்தாட் கழறறம் மெதிர்பொழு தின்றே, மலிதலு மூடலு மவையலங் கடையே."* என்பதனாற் பரத்தையர் முன்னரான் மையின் மலிதலும் ஊடலும் நிகழ்த்துதலைக் கழறினள். நின்னைக் காணில் என்னை உன்னிடத்தே செலுத்தித் தானும் நின்னிடத்தே தங்கி வருந்துநெஞ்சென்று சொல்லப்படுந் தம்மோடு ஒன்றாய் வாழப்படுகின்ற உட்பகையை யுடையார்க்கு முன்னர் எம்மை நின்மேல் வீழ்வித்த நின் மார்பைக் கூடக் கடவேமல்லே மென்று கருதும் நிறையென்னுங் குணத் தையும் பெறுதலெளிதோ? அஃது அரிதன்றோ? என ஊடறீர்ந்தாள்;

இடையும் நெஞ்சென்க. 'நிறையு'மென்னும் உம்மை சிறப்பு.

இதனாற் றலைவிக்குப் புணர்ச்சியுவகை பிறந்தது.

"அருண்மூந் துறுத்த வன்புபொதி கிளவி, பொருள்பட மொழிதல் கிழவோட்கு முரித்தே."† என்பதனால், 'வாராமற் பெறுகற்பின்' என்ற

* தொல். பொருள்: உகடு. † தொல். பொருள்: கசுக.

29

தலைவி "நிற்காணிற் கடவுபு கைத்தங்கா
நெஞ்சு" என அவனாற்றாமை கண்டு
அருளி நெஞ்சு ஏவல் செய்ததென
வேறோர் பொருள்பயப்பத் தன்
அன்பினைக் கரந்தவாறு காண்க.

இது வெள்ளைச் சுரிதகத்தாலிற்ற
ஒத்தாழிசைக்கலி. (கஉ)

எஅ.

பன்மலர்ப் பழனத்த
பாசடைத் தாமரை
யின்மல ரிமிர்பூதுந் துணைபுண
ரிருந்தும்பி

யுண்டுறை யுடைந்தபூப்
புனல்சாய்ப்பப் புலந்தூடிப்
பண்புடை நன்னாட்டுப்
பகைதலை வந்தென

ரு. வதுகைவிட் டகன்றோரீஇக் காக்கிற்பான் குடைநீழற்
பதிபடர்ந் திறைகொள்ளுங் குடிபோலப் பிறிதுமொரு

பொய்கைதேர்ந் தலமரும்
பொழுதினான் மொய்தப
விறைபகை தணிப்பவக்
குடிபதிப் பெயர்ந்தாங்கு
நிறைபுன னீங்கவந் தத்தும்பி
யஃமலர்ப் ௧0.
பறைதவிர் பசைவிடூஉம் பாய்புன
னல்லூர ;

நீங்குங்கா னிறஞ்சாய்ந்து புணருங்காற் புகழ்பூத்து
நாங்கொண்ட குறிப்பிவ ணலமென்னுந் தகையோதா

னெரியிதழ் சோர்ந்துக
வேதிலார்ப் புணர்ந்தமை
கரிகூறுங் கண்ணியை
யீங்கெம்மில் வருவதை ;

கரு. சுடர்நோக்கி மலர்ந்தாங்கே படிற்கூம்பு மலர்போலென்
றொடர்நீப்பிற் றொருமிவ ணலமென்னுந் தகையோதா
னலர்நாணிக் கரந்தநோய் கைம்மிகப் பிறர்கூந்தன்
மலர்நாறு மார்பினை யீங்கெம்மில் வருவதை ;

பெயினந்தி வறப்பிற்சாம் புலத்திற்குப் பெயல்போல்யான்
உo. செலினந்திச் செறிற்சாம்பு மிவளென்னுந் தகையோதான்
முடியுற்ற கோதைபோல் யாம்வாட வேதிலார்
தொடியுற்ற வடுக்காட்டி யீங்கெம்மில் வருவதை ;

ஆங்க,

ஐய வமைந்தன் றனைத்தாகப் புக்கீமோ
உ௫. வெய்யாரும் வீழ்வாரும் வேறாகக் கையின்
முகைமலர்ந் தன்ன முயக்கிற் றகையின்றே
தண்பனி வைக லெமக்கு.

மருதம் - க௬]

மருதக்கலி

உஉஎ

இது பரத்தையர் சேரியிற் சென்றுவந்த தலைவனோடு ஊடிய காமக்கிழத்தி ஊடறீர்கின்றாள் கூறியது.

(க—க௦) பன்மலர்ப்

. . . . னல்லூர :—
(இ - ள்.)

பலமலர்களையுடைத்தாகிய

மருதநிலத்திடத்தனவாகிய பசிய

இலைகளையுடைய தாமரையினது

கட்கினிய மலரை ஆரவாரித்துச்

சென்று

ஊதுந் துணையைப் புணர்ந்த கரிய தும்பி, பலரும் நீர் உண்ணுந் துறையில் அலர்ந்த பூவைப் பெருகிவந்த நீர் சாயப்பண்ணுகையினாலே அப்பூவிலிருத்தலை வெறுத்து அப்புனலுடனே ஊடி நற்குணங்களையுடைய நல்ல நாட்டிற்கு உரிய பகை தம்மிடத்தே வந்ததாக அந்நாட்டை இருப்பல்லவென்று கைவிட்டு நீங்கிப் போய்த் தன்னாட்டைக் காக்கின்றவனுடைய குடை நிழலிலூர்களை இருப்பாக நினைத்துத் தங்குதல் கொள்ளுங் குடிமக்களைப் போல வேறுமொரு பொய்கையைத் தனக்கு இருப்பாக ஆராய்ந்திருந்து பழைய பொய்கையை நினைத்துச் சுழல்கின்ற காலத்தே அவ்விறைவன் வந்த பகையின் வலிகெடும்படியாக அப்பகையைப் போக்க அக்குடிமக்கள் பதியிடத்தே மீண்டு சென்றாற்போல அந்நிலத்துள்ளார் போக்க அப்பெரும் புனல் நீங்குகையினாலே மீண்டுவந்து அத்தும்பி அந்தத் தாமரைப்பூவிலே பறத்தலைத் தவிர்ந்து இளைப்பாறும் பரந்த புனலையுடைய நல்ல ஊரனே!

பகை தலைவந்தென

இறைகொள்ளுங் குடிபோலத்

தும்பி ஊடித்

தேர்ந்து அலமரும் பொழுதிலே அவ்விறை பகைதணிப்ப அக்குடி பதிப்பெயர்ந்தாற்போலே புனனீங்க மீண்டுவந்து அத்தும்பி அம்மலரிலே

அசைவிடும் ஊர என்றதனூற் பல
பரத்தையரையுடைய பரத்தையர்
சேரி
யிலே பிறந்தாள் 1 ஒரு
பரத்தையை ஆரவாரத்துடனே நீ
வதுவையயர
அவளை நின் காதற்பரத்தை வந்து
கோபித்துத் தீங்கு கூறுகையினூலே
வதுவையயர்ந்தவளிடத்துக்
கூட்டத்தையும் வெறுத்துக்
காதற்பரத்தை
யொடும் ஊடி வேறோர்
பரத்தையர் சேரியிலே சென்றிருந்து
நீ வதுவை யயர்ந்தவளை நினைத்து
வருந்துகின்ற காலத்தே அவள்

சுற்றத்தார் காதற்
பரத்தை கோபத்தை நீக்க
மீண்டுசென்று அவளிடத்தே
தங்குகின்று
யெனக் காமக்கிழத்தி
புலந்து கூறினள்.
இது வினையுவமப்போலி. எனை
யுவமமும் வினையுவமம்.

(கக—கச) நீங்குங்கா . . . .
வர்வதை :—

(இ - ள்.) எரிபோலும்
நிறத்தையுடைய இதழ்கள் வாடி
உதிரப் பரத்தையரைப்
புணர்ந்தபடியைச் சான்றாய்

எமக்குக் கூறுங் கண்ணியை யுடையையாய் எம்முடைய இல்லில் யாம் இருக்கின்ற இடத்தே வருகின்ற நிலைமை, இவளுடைய நலம் யாம் பிரியுங்காலத்து நிறங்கெட்டுப் புணருங்

(பாடம்) 1. [illegible]

உஉஅ

[illegible]

[illegible] காலத்துப் பிறர் புகழ்தல் பொலிவுபெற்று நாம் மனத்திற் கொண்ட கருத்தா யிருக்குமென்று நீ குறித்திருக்குந் தகைமைப்பாடோதான்?

(கடு—கஅ) சுடர்நோக்கி

. . . வருவதை :—

(இ - ள்.) பிறர் கூறும் அலருக்கு நாணி மறைத்த காமநோய் ஒழுக்கத்தெல்லையைக் கடவாநிற்கப் பிறர் கூந்தலின் மணம் நாறுகின்ற மார்பினையுடையையாய்* எம்முடைய இல்லிலே யாம் இருக்கின்ற இடத்தே வருகின்ற நிலைமை, இவள் நலம் ஆதித்தனைக் கண்டு அலர்ந்த தாமரைப்பூ அந்த ஆதித்தன் அடங்குமளவிற் குவிந்தாற்போல எனது[1] தொடர்ச்சி நீங்கின் வறிதுபட்டிருக்குமென்னுந் தகைமைப்பாடோதான்?

(கக-உஉ) பெயினந்தி . . . . வருவதை :—

(இ - ள்.) முடியிலே பொருந்தும் மாலைபோல யாம் வாட நின்

பரத்தையரது தொடியினுலுற்ற வடுவினைக் காட்டி இவ்விடத்து எம் இல்லிலே யாம் இருக்கின்ற இடத்தே வருகின்ற நிலைமை, இவள் மழை பெய்யிற் செருக்கி அது பெய்யாதொழியிற் புலர்கின்ற நிலத்திற்கு அப்பெயல்கள் பெய்து விளைவித்தும் பெய்யாது கெடுத்தும் போமாறு போல யான் சென்றேனயிற் செருக்கிச் செல்லாமல் வருத்திற் கெடுமென்று நீ குறித்திருக்குந் தகைமைப்பாடோதான்;

(உக) ஆங்க :—

அசை.

. . லெமக்கு :—

(இ - ள்.) நம் பரத்தைமையாற் பலரும் வியக்கத்தக்கன எல்லாம் நமக்குப் பொருந்திற்று; நம்மை விரும்புவாரும் நீர்தாம் விரும்புவாருமாகிய பரத்தையரும் உமக்கு வேறுபடும்படியாக ஈண்டு நில்லாதே அவர் மனைக்கண்ணே செல்வீராக; தன் செவ்வியான் அலராது கையினாலே வலிய அலர்த்துதலின் முகையலர்ந்தாற்போல இனிதல்லாத முயக்கத்தில் எமக்குக் குளிர்ந்த பனிக்காலம் அப்படிக் கொடிதாயிருக்க நம்மையின்றித் தங்குதல் தகைமையில்லையோ அது தகைமையுண்டோவென ஊடல் தீர்கின்றாள் கூறினாள்.

தண்பனி அனைத்தாகவென்க.

இது கைம்மிகலும் இழிவுமென்னும் மெய்ப்பாடுகள் உணர்த்திற்று.

இது தரவுந் தாழிசையும் அசைநிலையாகிய அடைநிலைக் கிளவியும் வெள்ளைச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (கசு)

*ஐங். உசாㅇ.

(பாடம்) 1. நினைத.

மருதம் - கசு]

மருதக்கலி

எகூ.

புள்ளிமி
ழகல்வய லொலிசெங்கெ விடைப்பூத்த
முள்ளரைத்
தாமரை முழுமுதல் சாய்த்ததன்

வள்ளித ழுறநீடி வயங்கிய
வொருகதி
ரவைபுக ழரங்கின்மே
லாடுவா ளணிநுதல்

ரு. வகைபெறச் செரீஇய வயந்தகம்போற் றோன்றுந்
தகைபெறு கழனியக் தண்டுறை யூரகேள் ;

அணியொடு வந்தீங்கெம்
புதல்வனைக் கொள்ளாதி

மணிபுரை செவ்வாய்நின்
மார்பகல நனைப்பதாற் [1]
றோய்ந்தாரை யறிகுவேன் யானெனக்
கமழுநின் க0.
சாந்திறாற் குறிகொண்டாள் சாய்குவ ளல்லளோ ;

புல்லலெம் புதல்வனைப்
புகலக னின்மார்பிற்

பல்காழ்முத் தணியாரம் பற்றினன் பரிவானன்

மாணிழை மடநல்லார் முயக்கத்தை நின்மார்பிற்
பூணினாற் குறிகொண்டாள் புலக்குவ ளல்லளோ;

கரு. கண்டேயெம் புதல்வனைக்
கொள்ளாதி நின்சென்னி

வண்டிமிர் வகையிணர்
வாங்கினன் பரிவாரு
ணண்ணியார்க் காட்டுவ
திதுவெனக் கமழுநின்

கண்ணியாற் குறிகொண்டாள் காய்குவ ளல்லளோ;

எனவாங்கு,

உ0. பூங்கட் புதல்வனைப்
பொய்பல பாராட்டி
நீங்கா யிகவாய் நெடுங்கடை
நில்லாதி
யாங்கே யவர்வயிற் சென்றீ
யணிசிதைப்பா
னீங்கெம் புதல்வனைத்
தந்து.

இது செல்லாக் காவலச் செல்கெனக்
கூறி விடுத்தது. அது தலைவன் இனிச்
செல்லானென்பது இடமுங்
காலமும்பற்றி அறிந்த காலத்து
ஊடலுள்ளத்
தாற் கூடப் பெறாதாள்
செல்கெனக்கூறி விடுத்தாற்றுதலாம்.

(க—ஃ) புள்ளிமி

யூரகேள் :—

(இ - ள்.) பறவைகள் ஒலிக்கின்ற அகன்ற வயலிடத்து ஒலிக்கின்ற செங்கெலிடையிலே பூத்த முள்ளை அரையிலேயுடைய தாமரையை ஒன்று

(பாடம்) 1. நினைப்பவாற்.

கிய செந்நெல் முதல் சாய்க்கையினாலே அதனுடைய வள்ளிய இதழையுறும் படி வளர்ந்து அப்பூவிலே கிடந்து விளங்கின ஒரு கதிர் அவையினுள்ளார் புகழப்பட்ட அரங்கின்மேலே ஆடுகின்றவளுடைய தலைக்கோலத்தினின்று நுதலிலே தாழும்படி ஒரு வடமாகச் செருகிவைத்த வயந்தகமென்னும்* அணிபோலத் தோன்றும் அழகு பெறுகின்ற கழனியையுடைத்தாகிய அழகினையுடைய குளிர்ந்த துறையினையுடைய ஊரனே! கேள்.

சாய்த்துவயங்கியவென முடிக்க.

'அணி' : தலைக்கோலம். பரத்தையர் சேரியிற் பரத்தையரிடத்தே பொலிவுபெற்ற நின்னை அவர்கள் தம்வசமாகக் கொள்கையினாலே அவர்களில்

ஒருத்தி நின்னிடத்தே விடாமற்றங்கி நினக்கு அணியாய்த் தோன்றாநின்றாளென உள்ளுறையுவமங் கொள்க.

(எ—கo) அணியோடு . . . . எல்லேனோ :—

(இ - ள்.) பரத்தையரிடத்து அணிந்த அணியுடனே இவ்விடத்தே வந்து எம்புதல்வனை எடாதேகொள்; அவனுடைய மணியை ஒக்கின்ற சிவந்த வாயின் நீர் நின் மார்பினுடைய பரப்பையெல்லாம் நனைக்கப்படுவ

தொன்றாய் இராநின்றது ; அஃது அங்ஙனம் நினைத்தால் யான் நின் மார்பின்

முயங்கினுரை அறிவேனெனச் சொல்லிக் கமழ்கின்ற நின்னுடைய சந்தனத்தாலே பிறர் முயக்கத்தைத் தான் கருதுதலை மனத்தாற் கொண்டவள் வருந்துவளல்லளோ?

(கக—கச) புல்லலேம் . . . . எல்லளோ :—

(இ - ள்.) எம் புதல்வனை நீ தழுவாதேகொள் ; பாத்தையர் கொண்டாடுதலையுடைத்தாகிய நின்னுடைய அகன்ற மார்பிற் கிடக்கின்ற பல வடங்களையுடைத்தாகிய முத்து அணிந்த ஆரத்தைப் பிடித்து அறுப்பானொருவனாய் இராநின்றான் ; அவன் அறுத்தால் மாட்சிமைப்பட்ட இழையினையும் மடப்பத்தினையுமுடைய மகளிர் முயங்கின முயக்கத்தை நின் மார்பிற் கிடக்கின்ற பூணாலே கருதுதலை மனத்தாற்கொண்டவள் புலப்பாளல்லளோ?

(கரு—கஅ) கண்டேயெம் . . . . எல்லளோ :—

(இ - ள்.) எம் புதல்வனைத்தேடி எடுத்துக்கொள்ளாமல் அவன் தானே வரக் கண்டு எடாதேகொள்; நின்னுடைய தலையில் வண்டுகள் ஒலிக்கின்ற கூறுபாட்டையுடைய பூங்கொத்திற் பூக்களை வாங்கி அம்மாலையை அறுப்பா னொருவனாய் இராநின்றான்; அவன் அறுத்தால் நின்னை முயங்கினவர்களை அறிவிப்பது இக்கண்ணியென்று கூறி மணக்கின்ற நின் கண்ணியாலே பிறர் முயக்கத்தைத் தான் கருதுதலை மனத்தாற்கொண்டவள் கோபிப்பளல்லளோ?

* இணைமாலை - ...

மருதம் - கடு]

மருதக்கலி.

(கக) எனவாங்கு:—

அசை.

(உ0—உரு) பூங்கட்

(இ - ள்.)

பூப்போலுங் கண்ணினையுடைய

உங்க

தந்து :—

புதல்வனைப் பல பொய்

களைச் சொல்லிப் பாராட்டிப்

புதல்வனை விட்டுப் போகாயாய்ப்

பரத்தையர் குறிக்கொண்ட

நிலைமையைக் கடவாயாய்ப் பெரிய

வாயிலில் நில்லாதே

கொள்; நின்றால் அவன் அணியைச்

சிதைப்பாளொருவனாய் இருப்பான்;
ஆதலால் எம்புதல்வனை இங்கே
தந்து அப்பரத்தையர்சேரியிலே
அங்ஙனங்
குறிக்கொண்ட பரத்தையரிடத்தே
செல்வாயாக.

'ஈங்கெம் புதல்வனைத் தந்து
' என்றது தலைவனிடத்தினின்றும்
புதல்வனைச் சிறைத்தது.

இதனாற் றலைவற்குக்
கைம்மிகலுந் தலைவிக்கு இளிவரலும்
பிறந்தது.

இது தரவுந் தாழிசையும்
அசைநிலைத்

தனிச்சொல்லுங் கட்டளையாகிய
வெள்ளைச்சுரிதகமும் பெற்ற
ஒத்தாழிசைக்கலி.

(கச

௮௰.

நயந்தலை மாறுவார் மாறுக
மாறாக்
கயந்தலை மின்னுங் கதிர்விடு
முக்காழ்ப்
பயந்தவெங் கண்ணா ரியாங்காண நல்கித்
திகழொளி முத்தங்
கரும்பாகத் தைஇப்

௯. பவழம் புணர்ந்த[1] பருதி
சுமப்பக்
கவழ மறியாநின் கைபுனை
வேழம்
புரிபுனை பூங்கயிற்றிற்
பைபய வாங்கி
யரிபுனை புட்டிலி
னுங்கணீர்த் தீங்கே
வருகவெம் பாக மகன் ;

௧௦. கிளர்மணி யார்ப்பார்ப்பச்
சாஅய்ச்சாஅய்ச் செல்லுந்
தளர்நடை காண்ட

லினிதுமற் றின்னுதே
யுளமென்னு நுந்தைமாட்
டெவ்வ முழப்பார்

வளைநெகிழ் பியாங்கா ணுங்
கால்;

ஐய, காமரு நோக்கினை யத்தத்தா வென்னுநின்
கரு. தேமொழி கேட்ட லினிதுமற் றின்னுதே
யுய்வின்றி நுந்தை
நலனுணச் சாஅய்ச்சாஅய்மா

ரெவ்வநோ யாங்கா ணுங்
கால்;

(பாடம்) 1. புனைந்த.

ஐய, திங்கட் குழவி வருகென யானின்னை
யம்புலி காட்ட லினிதுமற்
றின்னாதே ௨0.
நல்காது நுந்தை புறமாறப்
பட்டவ
ரல்குல்வரி யாங்காணுங் கால்;

ஐயஎங்!, காதிற் கனங்குழை
வாங்கிப் பெயர்தொறும்

போதில் வறுங்கூந்தற்
கொள்வதை நின்னையா
னேதிலார் கண்சாய நுந்தை
வியன்மார்பிற் உரு. ரூதுசேர்
வண்டின் கிளைபாடத் தைஇய
கோதை பரிபாடக் காண்கும்.

இது பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன்
சிறைப்புறத்தானுகத் தலைவி மகனுக்கு
உரைத்தது.
(க—ஃ) நயந்தலை . . . .
மகன் :—

(இ - ள்.) நின்னிடத்து அன்பு

ஒழிவார் ஒழிந்தேபோக; நின்னைப் பெற்ற எம்முடைய கண்ணிறைய அன்பு மாறாத யான் நின் வரவைக்

காணும்படி அருளி மென்மையையுடைய தலையிடத்தே கிடந்து மின்னும் ஒளிவிடுகின்ற மூன்று வடத்தையுடைய பாகனாகிய மகன்! விளிம்பிடத்தே

விளங்குகின்ற ஒளியையுடைய முத்தை அரும்பாக அழுத்திப் பவழத்தாற் செய்த வட்டப்பலகை சுமந்துநிற்ப நின்ற கவழத்தைக் கொள்ளுதலறியாத கையாற் புனைந்த வேழத்தை நின்னுடைய காலிற் கட்டின உள்ளிடுமணி

யாற் புனைந்த கெச்சையாலே யாரவாரிப்ப நீ வளைத்து முப்புரியாக முறுக்கின கயிற்றாலே பையப் பைய ஈர்த்து இங்கே வருவாயாக;

'கயந்தலை': வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றியது.

'மகன்' என்றது இயல்புவிளி.

(கo—கரு) கிளர்மணி

கால் :—

(இ - ள்.) விளங்கின மணிகள் ஆரவாரிப்ப ஆரவாரிப்ப அசைந்தசைந்து நடக்குந் தளர்ந்த நடையைக் கண்டு மகிழ்ந்திருத்தல் எமக்கு இனிது; அஃதொழிந்து நுந்தையிடத்து எங்கள் உள்ளமென்று கூறி வளைநெகிழாநின்று வருத்தத்திலே தங்கும் மகளிரை யாங் காணுமிடத்து அக்காட்சி இன்னாது;

'மற்று' வினைமாற்று. இது நின் தந்தையாலுற்ற வருத்தம் நீங்குதற்கு நின்னைக்கொண்டு பொழுதுபோக்குவேமென்பது போதாநின்றது. மேல்வருவனவும் அன்ன.

(கசு—கஎ) ஐய

. . . கால்:—

(இ - ள்.) ஐயனே! விருப்பம் மருவுகின்ற அழகினையுடையையாய் அத்தா அத்தாவென்று * கூறும் நினது இனிய மொழியைக் கேட்டு மகிழ்ந்திருத்தல் இனிது; அஃதொழிந்து நந்தை மகளிர் நலஞ் சாய்தற்கு அவர் நலத்தை உண்மையினாலே உய்வின்றிச் சாய்ந்துற்ற எவ்வத்தைத் தருங் கோயை யாங் காணுமிடத்து அக்காட்சி இன்னாது;

காமர் கடைக்குறைந்து நின்றது. மருவும்: ஈற்றுமிசை உகரம் மெய் யொடுங்கெட்டு

மவ்வீறு சந்தியாற் கெட்டது. அத்தா: கடைக்குறைந்து நின் றது. 'சாய்மார்': மாரீற்று முற்று எதிர்கால முணர்த்திற்று. அது 'நலனுண வென்னும் வினையோடு முடிந்தது.

இஃது ஒப்புவழியுவத்தல்,

காமருநோக்கு இனிதென்றலின்.

(கஅ-உக) ஐய . . . . காலீ :—

(இ - ள்.) ஐயனே! திங்களாகிய குழவீ! நீ இவனுடனே விளையாடும் படி வருவாயாகவென்று

கூறி அவ்வம்புலிக்கு யான் நின்னைக் காட்டி மகிழ் தல் எமக்கினிது. அஃதொழிந்து நந்தை அருளாதே தனக்குப் புறஞ்சொல் உண்டாக அருளைக் கைவிடப்பட்ட மகளிருடைய அல்குலிற் பசட் பொழுங்கை யாங் காணுமிடத்து அக்காட்சி இன்னாது.

உயர்திணை மருங்கின்†

ஒழிந்துஞ் சிறுபான்மை வருமென்றலின் எவ்வ முழப்பார் நலனுணப் பட்டாரென இரண்டாவது விரியாது நின்றது.

(உஉ—உக) ஐயளங் .

. . . காண்டும் :—

(இ - ள்.) ஐயனே !

எம்முடைய காதிற்

பொன்னாற்செய்த மகர

குழையை வாங்கிக்கொண்டுபோய் எம்மிடத்தே மீண்டுவருந்தோறும் எ
முடைய பூ இல்லாத வறுவிய கூந்தலிலே நின்னை யாங்கள் வைத்துக்கொ
வது, நுந்தை அகற்சியையுடைய மார்பிற் றுதைத் தேடும் வண்டின் சுற்ற
விழும்படி கட்டின கோதையை அறுத்து நீ விளையாடுதற்கு ; நீ அங்ஙன

விளையாடினால், யாமும் எமக்குப்

பகையாயவரிடத்து அவன்

வைத்த அன்ட தேயக் காண்போம் ;

இனி, ஏதிலார் இடஞ்சாயக்

காண்போ மென்றுமாம்.

இதனாற்[1] றலைவிக்கு இழிவுங்

தலைவற்குக் கைம்மிகலும் பிறந்தது.

இது தரவு வெண்பாவாய் ஏனைவெண்பாக்கள் ஐயவென்பதனோடுங் கூடி ஐஞ்சீரடுக்கிவருதலிற் கலிவெண்பாட்டு. "தாவும்போக்கும்"‡ எனப் போக்கினைத் தரவோடு கூறியவதனால் தரவிறுதி போல இது 'காண்கும்' எனத் தேமாவாலிற்றது. (கடு)

* கலி. அக: கரு. † தொல். எழுத்து: கடுஎ. ‡ தொல். பொருள்: சகுசு (பாடம்) 1. இது.

30

உகச

கலித்தொகை

[கலி - அக

மையற விளங்கிய மணிமரு ளவ்வாய்தன்
மெய்பெறா மழலையின் விளங்குபூ ணனைத்தரப்
பொலம்பிறை யுட்டாழ்ந்த புனைவினை யுருள்கல
னலம்பெறு கமழ்சென்னி நகையொடு துயல்வர
வுருவெஞ்சா திடைகாட்டு முடைகழ லந்துகி
லரிபொலி கிண்கிணி யார்ப்போவா வடிதட்பப்
பாலோ டலர்ந்த முலைமறந்து முற்றத்துக்
கால்வறேர் கையி னியக்கி நடைபயிற்றா
வாலமர் செல்வ னணிசால் பெருவிறல்
போல வருமென் னுயிர் ;

பெரும, விருந்தொடு கைதூவா வெம்மையு முள்ளாய்
பெருந்தெருவிற் கொண்டாடி ஞாயர் பயிற்றத்
திருந்துபு நீகற்ற சொற்கள்யாங் கேட்ப
மருந்தோவா நெஞ்சிற் கமிழ்த மயின்றற்றாப்
பெருந்தகாய் கூறு சில ;

எல்லிழாய், சேய்நின்று நாங்கொணர்ந்த பாணன் சிதைந்[தாங்கே
வாயோடி யேனாதிப் பாடிய மென்றற்றா
நோய்நாந் தணிக்கு மருந்தெனப் பாராட்ட
வோவா தடுத்தடுத்தத் தத்தாவென் பான்மாண
வேய்மென்றோள் வேய்த்திறஞ் சேர்த்தலு மற்றிவன்
வாயுள்ளிற்[1] போகா னரோ ;

உள்ளி யுழையே யொருங்கு படைவிடக்
கள்ளர்[2] படர்தந் ததுபோலத் தாமெம்மை
யெள்ளுமார் வந்தாரே யீங்கு ;

உடு. ஏதப்பா டெண்ணிப் புரிசை வியலுள்ளோர்
கள்வரைக் காணுது கண்டேமென் பார்போலச்
சேய்நின் று செய்யாத சொல்லிச் சினவனின்
ஞணை கடக்கிற்பார் யார் ;

(பாடம்) 1. யுள்ளிப். 2. கள்வர்.

மருதக்கலி

உநு

அதிர்வில் படிறெருக்கி

வந்தென் மகன்மேன்

௩0. முதிர்பூண் முலைபொருத வேதிலாண் முச்சி
யுதிர்துக ளுக்கநின் னாடை யொலிப்ப
வெதிர்வளி நின்றாய்நீ

செல் ;

இனியெல்லா யாம், தீதிலே மென்று தெளிப்பவுங் கைந்நீவி
யாதொன்று மெங்கண் மறுத்தர வில்லாயின்
நடு. மேதக்க வெந்தை பெயரனை யாங்கொள்வேந்
தாவா விருப்பொடு கன்றியாத் துழிச்செல்லு
மாபோற் படர்தக நாம்.

இது தலைவன் பரத்தையிற் பிரிந்து வந்துழித் தலைவி தன் மகனைத் தழீஇ விளையாடுகின்ற விளையாட்டின்கண் தன் வரவு அறியாமைச் சென்று நின்ற தலைவன் அவள் ஊடலுணர்வளவும் உறழ்ந்து சொல்லி மகன்வாயிலாக ஊடறீர்ந்தது.

(க—க0) வையறு

னுயிர் :—

(இ - ள்.) மாசற விளங்கிய மணியை ஒக்கின்ற அழகினையுடைய வாய் தன்னுடைய எழுத்துவடிவு பெறாத மழலைச்சொல்லைக் கூறுதலாற் பிறந்த நீராலே விளங்குகின்ற பூணை நனைத்தலைச் செய்யாநிற்க, நன்மை பெறுகின்ற கமழுந் தலையிற்கிடந்த பொன்னாற்செய்த பிறையுட் சேர்த்த முத்துவடத்தோடே நெற்றியிலே ஞான்ற புனைந்த வினையினையுடைய உருண்ட சுட்டி விளக்கத்தோடே அசைய, நிறத்தை ஒழியாமல் தன் நடுவே தோற்றுவிக்கும் உடுத்துதல் கழன்ற அழகினையுடைய துகில்* உள்ளிடு மணியாற் பொலிந்த சதங்கை யொலிக்கும் ஒலிமாறாத அடியைத் தடுக்கப், பாலாலே விம்மின† முலையை மறந்து முற்றத்தே உருளையோடுதல் வல்ல தேரைக் கையாலே செலுத்தி நடத்தலைக் கற்று ஆலின்கீழ் அமர்ந்த இறைவனுடைய அழகமைந்த முருகனைப்போலே வரும் என்னுயிரே! ‡

'கால்வறேர்' வினைத்தொகையாதலின் "மருவின் பாத்திய" § வாய் நின்றது. நனைத்தாத் துயல்வரத் தட்ப மறந்து இயக்கிப் பயிற்றுப் பெருவிறல்போல வரும் என் உயிரே! பெருமா! பெருந்தகாய்! யாங் கேட்பச் சில கூறெனை மேலுறப்போடு முடிக்க.

(கசு—கரு) பெரும . . . . . . சில :—

(இ - ள்.) பெருமா! பெருந்தகாய்! நினது மழலைச் சொல்லைக் கேட்டு அவ்வினிமை மாறாத மனத்திற்கு, அமுதத்தை உண்டாற்போல

---

* துகில்: ஆடைவகையுட் சிறந்ததொன்று. † கலி, அஉ : உ-ங.
‡ மணி, ரு :கஙரு-கசரு. § தொல். எழுத்து: சஅஉ.

உருசுஈ

கலித்தொகை

[கலி - அக

இன்னும் இனிதாக, விருந்தினர் வருதலாற் கையொழியாத் எம்மையும் கிளையாயாய்த் தாய்மார் பெரிய தெருவிலே கின்னைக் கொண்டாடிக் கற்பிக்கக் கற்பிக்க நீ அவர்பால் திருந்திக் கற்ற சொற்களை யாங் கேட்கும் படி அதிலே சிலவற்றைக் கூறு ;

இது புதல்வனை நோக்கிக் கூறியது. மேல் தோழியை நோக்கிச் செய்தி கூறுகின்றாள்.

(கசு)

எல்லிழாய் :—

(இ - ள்.) ஒளியுடைத்தாகிய பூணினையுடையாய் !

(கசு—உக) சேய்நின்று . . . . னரோ :—

(இ - ள்.) நாம்
பழக்கங்கொண்டு போந்த பாணன், நீ
இப்பொழுது
எவ்விடத்தாயென்று வினவப்,
பரத்தையர் கூற்றிலே மனந் தங்கி
நமக்குச்
சேயனாய் நின்று வாயிற்கூறும்
மொழி சிதைந்து
ஏனோதிப்பாடியிடத்தே
மென்ற தன்மைத்தாக, நம்முடைய
நோயைத் தணித்தற்குக்
காரணமாகிய
மருந்தென்று கருதி நாம்
பாராட்டாநிற்க, மாறாமல்
அடுத்தடுத்து அத்தா

அத்தாவென்று கூறுகின்றவனை
அவன் தவறு பாராது நம்முடைய
வேய் போலும் மெல்லிய
தோள்களிலே மாட்சிமைப்பட
ஏறட்டுக்கொள்ளுங்
கூற்றிலே ஏறட்டுக்கொண்ட
அளவிலும், பின்னையும் இவனுடைய
வாயிடத்தி
னின்றும் போகாதுயிராநின்றான் ;
இதற்குக் காரணமென்? என்றான் ;
வாய்சிதைந்தென்க.
ஏறுதிப்பாடி : ஏறுதிப்பட்டங்
கட்டினனொரு
வன் ஏற்றிய பாத்தையர் சேரி.
தான் இல்லறமே பூண்டு

புதல்வனைக்

கொண்டு விளையாடுதலே

இனிதென்று இருந்தமை தோன்ற

நோய்

தணித்தற்குப் பிள்ளையை

மருந்தென்றாள். “சிறந்த செய்கை

யவ்வழித்

தோன்றி, யறம்புரி யுள்ளமொடு தன்வர வறியாமைப், புறஞ்செய்து பெயர்த்தல் வேண்டிடத் தானும்”* என்பதனாற் றலைவன் இவள் புதல்வனோடு விளையாடுகின்ற மனையறத்தினைக் காணவேண்டி மறைந்து இவள் பின்னே நிற்ப, எதிராக நின்ற தலைவனைக் கண்டு பிள்ளை அத்தா அத்தாவெனவும், எதிர்நின்ற தோழி முதலியோர் தன்னைக் கண்டு ஆசாரஞ்† செய்தாற் றலைவி அறிவளென்று அவர்களை ஆசாரஞ் செய்யாமற் கைகவித்தலிற் றோழி ஆசாரஞ் செய்யாதிருத்தலின், தலைவி அவன் பின்னின்றமை[1] உணராமற் றோழியை வினவினாள்.

(உஉ-உச) உள்ளி . . . . . யீங்கு :—

(இ - ள்.) அங்ஙனம் வினவின தலைவி தோழி குறிப்பானும் புதல்வன் அத்தா அத்தாவென்றதனானுந் தலைவன் வந்தவாறு கண்டு பனைவரை

---

* தொல். பொருள் : கசஎ. † இருக்கை விட்டெழுதல், வணங்குதல் முதலியன.

மருதக்கலி

உஙஎ

நினைத்து அவரிடத்தே படைக்கலங்களைச் சேர விடுதற்குக் கள்வர் வருதலைச் செய்தல்போல இவ்விடத்தே தாம் எம்மை இகழ்தற்கே வந்தார் ; நம்மேல் அன்பாக வந்தாரல்லரெனத் தலைவன் கேட்பத் தோழியை நோக்கிக் கூறினள் ;

தலைவி துனி போக்குதற்குத் தலைவன் இங்ஙனம் வந்தான்.

(உரு–உஅ) ஏதப்பா

யார் :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவன் மதிலையுடைய ஊரிற் காவலாளர் கள்வரைக் கண்ணுற் காணுதிருக்கவும் அவரால் வருங் குற்றத்தைக் கருதி இங்கே கள்வரைக் கண்டேமென்று கூறுவாரைப் போலே முன் நில்லாது ஒருசிறைப்போய் நின்று, யான் செய்யாத குறைகளைக்கூறிச் சினவாதே கொள் ; நின் ஆணைவழி ஒழுகுதலன்றி ஈண்டு நின் ஆணையைத் தப்புவார் யார்? என்றான் ;

'செய்நின்று செய்யாத சொல்லிச் சினவல்' என்றது புலவி பொருளாக அச்சம் பிறந்தது. அது "நின்றுநனி பிரிவி னஞ்சிய பையுளும்" * என்னும் விதியான் உணர்க.

(௨௧-௬௨) அதிர்வில் . . . . சேல் :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி நடுக்கமில்லாத வஞ்சனையாலே வருத்தி என் மகன்மேல் வேட்கை நிகழ நினையாயாய் வந்து, பூணினையுடைய முதிர்ந்த முலைகளால் நின் மார்பொடு பொருத பரத்தைமுடியினின்றும் உதிர்ந்த துகள் சிந்திக்கிடந்த நின்னுடையது துகளை விளக்கக் காற்றின் எதிரே நின்றாய்; இங்ஙனம் நில்லாதே போ! என்றாள்;

'படிறெருக்கி': வஞ்சனையைப் போக்கி யென்றுமாம். ஆடை யெதிர்ப்பவும் பாடம்.

(௬௩-௬௭) இனியேல்லாயாம் . . . . நாம் :—

(இ - ள்.) அது கேட்ட தலைவன், எடீ! யாந் தீங்குடையேமல்லே மென்று சூளுறவும், அச்சூளுறவைக் கைகடந்து எம்மிடத்துச் சிறிதுந் தனித்த நிலைமை மீட்சியில்லையாயின், தன் கன்றைக் கட்டின இடத்தே கெடாத விருப்பத்தோடே செல்லும் பசுப்போல நாம் இனி நம்பாற் படர்தல் தகும்படி, மேம்பாடு தக்க எந்தை பெயரனை யாம் எடுத்துக் கொள்ளுவேம்.

'நாம்' என்றது இடவழுவமைதி.† தாமென்றும் பாடம். "முறைப் பெயர் மருங்கிற் கெழுதகைப் பொதுச்சொ, னிலைக்குரி மரபி னிருவீற்று முரித்தே"‡ என்பதனால் 'எல்லா' வென்றான். புதல்வனை வாங்கவே

* தொல். பொருள் : கசசு. † தலைவியைக் குறித்ததாகலின்.
‡ தொல். பொருள், ௨௨௦.

௨௩௮
கலித்தொகை
[கலி - ௮௨

துனிதீர்ந்தாளாயிற்று.

'மறுத்தரவில்லாயி' னெனவே

இறந்துபடுவனென்று துனிதீர்ந்தாள்;

" காரணத்தி னமைந்து " *

என்னுஞ் சூத்திரத்திற், " சென்றுகை

யிகந்துபெயர்த் துள்ளிய வழியும் "

என்பதனுன் உணர்க.

இதனுற் றலைவிக்கு எள்ளலுந்

தலைவற்கு அசைவும் பிறந்தது.

இது " வெளிப்பட " †

என்றதனுல் இயற்சீர்கிரை ஒன்றிப்

பாவேறு

பட்ட தரவும் போக்கும் ஐஞ்சீரடுக்கிவந்த பாட்டும் வந்த கலிவெண்பா. (கக)

ஞாலம் வறந்தீரப் பெய்யக் குணக்கேர்பு
காலத்திற் றோன்றிய கொண்மூப்போ லெம்முலை
பாலொடு வீங்கத் தவநெடி தாயினே

புத்தேளிர் கோட்டம் வலஞ்செய் திவளொடு
ரு. புக்க வழியெல்லாங் கூறு;

கூறுவேன், மேயாயே போல வினவி வழிமுறைக்
காயாமை வேண்டுவல் யான்;

காமேயம்,

மடக்குறு மாக்களோ டோரை யயரு
மடக்கமில் போழ்தின்கட் டந்தைகா முற்ற
தொடக்கத்துத் தாயுழைப் புக்காற் கவளும்
மருப்புப்பூண் கையுறை யாக வணிந்து
பெருமா னகைமுகங் காட்டென்பாள் கண்ணீர்
சொரிமுத்தங் காழ்சோர்வ போன்றன மற்றும்
வழிமுறைத் தாயுழைப் புக்காற் கவளு
மயங்குநோய் தாங்கி மகனெதிர் வந்து
முயங்கினண் முத்தின ளோக்கி நினைந்தே
நினக்கியாம் யாரே மாகுது மென்று
வனப்புறக் கொள்வன நாடி யணிந்தன
ளாங்கே, யரிமத ருண்கண் பசப்பநோய் செய்யும்
பெருமான் பரத்தைமை யொவ்வாதி யென்று
ளவட்கினி தாகி விடுத்தனன் போகித்
தலைக்கொண்டு நம்மொடு காயுமற் றீதோர்
புலத்தகைப் புத்தேளில் புக்கா னிலைக்கொரு

* தொல். பொருள்; ௧௪௬. † தொல். பொருள்: ௬௯௯.

மருதம் - கள]

மருதக்கலி

உங்கு

உரு. கோறு நினக்கவள் யாராகு மெல்லா
வருந்தியா நோய்கூர நுந்தையை யென்றும்
பருந்தெறிந் தற்றுகக் கொள்ளுங்கொண் டாங்கே
தொடியு முகிரும் படையாக நுந்தை
கடியுடை மார்பிற் சிறுகண்ணு முட்காள்
௩௦. வடுவுங் குறித்தாங்கே செய்யும் விடுவினி
யன்ன பிறவும் பெருமா னவள்வயிற்

றுன்னுத லோம்பித்
திறவதின் [1] முன்னிநீ

யையமில் லாதவ
ரில்லொழிய வெம்போலக்

கையா றுடையவ

ரில்லல்லாற் செல்ல

நடு. லமைந்த

தினிநின் றெழில்.

இது புத்தேளிர் கோட்டம் வலஞ்செய்வித்துக்கொண்டு வருதற்குச் சேடியருடன் மகற் போக்கிய தலைமகள் அவன் நீட்டித்து வந்தவழித் "தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை, மாயப் பரத்தை யுள்ளிய வழி"* சிறைப்புறத்தானாகச் சொல்லியது.

யால் தலைமகன்

(க—ரு) ஞாலம் . . . .

கூறு :—

(இ - ள்.) உலகம் வற்கடம் நீங்கும்படி பெய்தற்குக் கிழக்கே எழுந்து கூதிர்க்காலத்தே தோன்றிய மேகம்போல எம்முடைய மூலை பாலாலே விம்

ழும்படி நீ போன காலம் மிகவும்
நீட்டித்ததெனக் கூறும் நிலையிலே
யாயினை; ஆதலால்,[2] தேவர்கோயில்
வலம்வந்து† பின்னர் இவனோடே
நீ சென்ற இடங்களையெல்லாம்
எமக்குச் சொல்லென்றான்;

(கூ—எ)

கூறுவேன் . . . . .

யான்:—

(இ - ள்.) அது கேட்ட தோழி, யான் கூறுவேன்; கூறுகின்றதனை மேவினையேபோலக் கேட்டு அதன் பின்னாகக் கோபியாதிருத்தலை யான்

நின்னிடத்தே பெற

வேண்டுவேனென்றாள்;

(அ) காயேம் :— . . .

(இ - ள்.) அதுகேட்ட தலைவி யான் நின்னைக் கோபியேன்; நீ கூறு கின்றவற்றை யெல்லாங் கூறென்றாள்;

(கூ—சுடு)மடக்குறு . . . .

றேழில் :— (இ - ள்.) அது கேட்ட சேடி, மடப்பத்தையுடைய சிறிய அறிவில் லாத மகளிரோடே

ஓரைப்பாவையைக் ‡ கொண்டு விளையாடும், வேண்டிய

* தொல். பொருள்: கசஎ. † கலி. அச: கூ-கூ. ‡ ஓரை: மகளிர் விளையாட்டு.

வாறு ஒழுகும் பொழுதிலே இவன் தந்தை விரும்பின பரத்தைமை தொடங்குகின்ற காலத்துளளாகிய தாயிடத்தே * சென்றவனுக்கு அவளும் இடப இலேச்சினையைக் கைக்காணியாக† இட்டுப், பெரியோனே! நினது சிரிப்பினையுடைய முகத்தை யான் முத்தங்கோடற்குக் காட்டென்று கூறுகின்றவளுடைய சொரிகின்ற கண்ணீர்கள் [1] முத்துவடங்கள் முத்தங் கழன்று விழுவனபோலே இருந்தன; பின்னை அவட்குப்பின்னர்வந்த தாயிடத்தே சென்றவனுக்கு அவளும் மனம் மயங்குதற்குக் காரணமான காமநோயைப்

பொறுத்துத் தன் மகனெதிர்வந்து தழுவிக்கொண்டு பின்னர் முத்தங் கொண்டு இவனைப் பார்த்துத் தலைவன் தன்னைக் கைவிட்ட தன்மையை நினைந்து நினக்கு யாங்கள் தாயாகின்ற முறைமை எம்மிடத்தின் நீங்கின மையின் இனி எம்முறையேமாவேமென்று [2] கூறி இவனுக்கு அழகு மிகும்படி இவன் வடிவு தாங்கும்படியான பிள்ளைப்பணிகளை ஆராய்ந்து அணிந்த பொழுதே, மகளிருடைய செவ்வரியினையுஞ் செருக்கினையுமுடைய மையுண்கண்கள் பசக்கும்படி அவர்க்கு நோவைக் கொடுக்கும் நின் தந்தையுடைய பரத்தைமைக்குணமொன்றையும், ஒவ்வாதே கொள்ளென்றாள்; அங்ஙனங் கூறினவளுக்கு இனிதாயிருக்கும்படி சில மறுமொழிகளைக் கூறிப் போய்ப் பின்னை நம்மோடு ஒப்பாளாகத் தலைமைப்பாடுகொண்டு நம்மைக் காய்ந்திருக்கும் இந்தப் புலக்குந் தகைமையினையுடைய புதியவள் இல்லிலே சென்றானென்றாள்; அது கேட்ட தலைவி, ஏடா! யான் வருந்தி நோய் மிக உன் தந்தையை எந்நாளுந் தான் குறித்ததொன்றை நினைவறப் பருந் தெடுத்துக்கொண்ட தன்மைத்தாக நினைவறக் கைக்கொண்டுபோம்; கைக் கொண்ட அப்பொழுதே தொடியும் உகிரும் அவைபோல்வன பிறவுந் தனக் குப் படைக்கலமாகக் கொண்டு உகிராலே நந்தையுடைய புதுமையை யுடைய மார்பின் கண்ணும் அனையவற்றாலே ஒழிந்த சிறிய இடங்களிலுந் தான் குறித்தபடியிலே வடுக்களையும் அஞ்சாளாய் நிகழ்த்தும்; ஆதலால் நினக்கு அவள் என்ன உறவுடையள்? இவனை அடித்தற்கு ஒரு கோல் தருவாயாக வென்றாள்; அதற்கு அஞ்சி அவன் அழுதமைகண்டு, இனி அழுகையை விடுவாயாக வென்று கூறி, நின் தந்தையுடைய காதற் பரத்தையிடத்து நீ சேர்தலைப் பாதுகாத்து நீ செல்லுதற்குத் திறவதாகிய[3] இல்லிலும் மனத்தாற் கருதி அவன் நீங்குவனோ நீங்கானோவென்று ஐயப்படாமல் ஒருதலையாக நீங்கானென்று துணிந்த பரத்தையர் இல்லிலும் நின் செலவொழிந்துகிடக்க எம்மைப்போலே கையாற்றையுடையவர் இல்லிற் சேறலன்றி வேறோர் இல்லில் நீ செல்லாதேகொள்; இனி நின்னுடைய புறத்துப் போந் தொழில்தான் முடிந்ததெனக் கூறினான்;

---

* தொல். கற்பியல் சூ. ௧0 இளம்பூரணருரை நோக்குக. † காணிக்கையாக,

(பாடம்) 1. கன. 2. ...

மருதக்கலி

உசக

'தொடக்கத்துத் தா'யென்றமையான் அவள் முதிர்ந்தமையும், 'வழி முறைத் தா' யென்றமையான் அவள் இடைநிலைப் பருவத்தாளானமையும், 'புத்தே'ளென்றமையான் அவள் இளமைப் பருவத்தாளானமையுங் கூறினன். ' நகைமுகங் காட்டென்பாள் கண்ணீர்' வீழ்ந்தது, இப்புதல்வனுள்ள பயனை நுகர்ந்து இனிமையுறாது பயனில்லாப் புறத்தொழுக்கம் நிகழ்த்துகின்றமை கருதி.

இது பாத்தையரில்லிற் புதல்வன் செல்லாமற் சிறைத்தது.
இதனாற் றலைவிக்கு இளிவுந் தலைவற்கு அசைவும் பிறந்தது.

இஃது ஐஞ்சீரடுக்கித்
தனிச்சொற்பெற்று வந்த கலிவெண்பா.
(கள)

அங.

பெருந்திரு நிலைஇய வீங்குசோற் றகன்மனைப்

பொருந்துநோன்
கதவொற்றிப் புலம்பியா முலமர

விளையவர்
தழுஉவாடு மெக்கர்வாய்
வியன்றெருவின்
விளையாட்டிக் கொண்டு
வரற்கெனச் சென்று
ரு. யுளைவிலை, பூட்டலென்
றீம்பால் பெருகு மளவெல்லா

நீட்டித்த காரண மென்;

கேட்டை,
பெருமடற் பெண்ணைப்
பிணர்த்தோட்டுப்
பைங்குரும்பைக்
குடவாய்க் கொடிப்பின்னல் வாங்கித்

தளரும் கO.
பெருமணித்
திண்டேர்க் குற்றுமக்க ளைப்ப

ணைகளைகர் மீடருவா ளுகப்
புரிஞெகிழ்பு
நீல நிரைப்போ தூறுகாற்
குலைவனபோற்
சாலகத் தொல்கிய கண்ண
ருயர்சீர்த்தி
யாலமர் செல்வ னணிசான் மகன்விழாக்
கடு. கால்கோளென் றூக்கிக் கதுமென நோக்கித்

திருந்தடி தூ புரமார்ப்ப

வியலி விருப்பிஞற்
கண்ணு நுதலுங் கவுளுங்
கவலியார்க்
கொண்மை யெதிரிய
வங்கையுந் தண்ணெனச்

செய்வன சிறப்பிற்
சிறப்புச்செய் திவ்விரா
௨0. வெம்மொடு
சேர்ந்துசென் றீவாயாற் செம்மா

லைம்புதி தண்டுள்ளா
நாணிலி செய்த

புலம்பெலாந் தீர்க்குவே
மன்னென் றிரங்குபு
வேற்றுறுத் தாய
ரெதிர்கொள்ள மாற்றாத

உ-சா-உ

கலித்தொகை

[கலி - அரு

கள்வனுற் றங்கிய தல்லாற்
கதியாதி உரு.
யொள்ளிழா யான்றீ திலேன்;[1]

எள்ளலான், அம்மென்
பணைத்தோ ளுமர்வேய்ந்த
கண்ணியோ
டெம்மில் வருதியோ
வெல்லாநீ தன்மெய்க்க
ணந்தீஞ்சொ னல்லா ரணிந்த
கலங்காட்டி
முந்தை யிருந்து மகன்செய்த
நோய்த்தலை
௩0. வெந்தபுண் வேலெறிந்
தற்றால் வடுவொடு
தந்தையும் வந்து நிலை.
இது விளையாட்டிக் கொண்டு வரற்குச்
சேடியரோடு மகற்போக்கிய தலைவி

அவன்

நீட்டித்து வந்தவழித், "தாயர்
கண்ணிய நல்லணிப் புதல்வனை,
மாயப்

பரத்தை யுள்ளிய வழிச்"
*சிறைப்புறமாகக் கேட்டு
வந்த தலைவனைக் கண்டு

அவள் தன்னுள்ளே புலந்தது.

(க—கூ) பெருந்திரு . . . .
மேன் :—

(இ - ள்.) பெரிய செல்வம்
நிலைபெற்ற, மிகுகின்ற

சோற்றையுடைய அகன்ற மனையிடத்து இரட்டையாய் வந்து சேரும் பலகைகள் தம்மிற் பொருந்தின கதவைத் தீண்டிநின்று பிள்ளையைக் கைவிட்டுத் தனித்து யாம் வருந்தப், பிள்ளைகள் தம்மிற் கூடி விளையாடும் இடுமணலை இடத்தே யுடைய அகற்சியையுடைய தெருவிலே பிள்ளையை விளையாடுவித்துக் கொண்டு வருதற்கென்று போன நீ, இனிய பாலை யான் பிள்ளைக்கு ஊட்டாமல் அப்பால் பெருகச்சுரக்கும் அளவெல்லாம் பிள்ளை பால் உண்ணு திருத்தற்கு நின்மனத்தில் வருத்தமிலையாய்த் தாழ்த்த காரணம் யாது?

அதனைக் கூறு ;

(எ—உ௫) கேட்டீ . .

. . தீலேன் :—

(இ - ள்.) அதனைக் கேட்பாய்; பெரிய மடலையுடைத்தாகிய பனையி னுடைய. குடம்போலத் திரண்ட இடத்தையுடைத்தாகிய சர்ச்சரையை யுடைய முகிழையுடைய பசிய குரும்பையைக் கொடியாற் கட்டிப் பின்னின பின்னலை இழுத்து அதனால் இளக்குஞ் சிறிய பிள்ளைகளுக்கு நடுவே பெரிய மணியழுத்தின திண்ணிய தேரிலேயிருந்து அகன்ற மனையை நோக்கி மீளுதலைச் செய்வானாகாநிற்க, நீலத்தினுடைய முறுக்கு நெகிழ்ந்த நிரைத்த பூக்கள் மிக்க காற்றுக்கு அசைவனபோலே சாளரங்களிலே ஒதுங் கிப் பார்த்த கண்ணினையுடையார் பரந்த மிக்க புகழையுடைய ஆலின்கீ இருந்த இறைவனுடைய மகனாகிய பிள்ளையார் திருநாளுக்கு அடிக்கொள்ள

* தொல். பொருள்: கசஎ.

மருதம் - கூ]

மருதக்கலி

உ௬௯

ின்ற நாளென்று கருதி, வரவிலே[1] முயன்று கடுகிவந்து பார்த்து; இவனுக
மாற் றிருந்தின அடியிற் சிலம்பொலிப்ப அணுகி, நின் கண்ணுலும்
நுதலாலுங் கதுப்பாலும் நின்னைத் தழுவிய தாயர்க்கு விளக்கத்தைக்
கொடுத்தலே ஏற்றுக்கொண்டிருக்கின்ற அழகிய கையினுலும் நின்
தந்தைக்குத் தண்ணென நீ செய்யுஞ் சிறப்புக்கள்போலே எமக்குஞ்
சிறப்புக்கள் செய்து இவ்விராக்காலத்து எம்மோடே தங்கிப்போதலைச்
செய்யவேண்டும்; (சிறப்பாலே) தலைவா! எங்கள் நலத்தின் புதுமையை
நுகர்ந்து பின்னர் எம்மை நினையாத நாணில்லாதவன் தந்த தனிமையெல்
லாம் மிகவும் போக்குவேமென்று கூறி, இவனிடத்து விருப்பத்தாலே

அமையாத வேற்றுத்தாயர்
எதிர்கொள்ள, அதனை மாற்றாத
இக்கள்வனுலே ஆண்டுத் தாழ்க்க
நின்றதன்றி, யான் வேறோர்
தீதுடையேனல்லேன்; ஒள்ளிழாய் !
என்னைக் கோபியாதேகொள்
ளென்றாள் சேடி ;

(உசு—௩௧) எள்ளலான்

. . . . நீலே :—

(இ - ள்.) அதுகேட்டுப் புதல்வனே நோக்கி, ஏடா! அழகையுடைய
மெத்தென்ற மூங்கில்போலும் தோளினையுடைய நம்முடைய தாய்மார்
நடின கண்ணியோடே எம்முடைய
இல்லிலே நீ வருவையோ வாராயோ?
ான வெறுத்துக்கூறித், தலைவன்
வந்தமைகண்டு, முன்னேயிருந்து
மகன் ரமக்குச் செய்த
நோய்க்குமேலே, எம்மை மனத்தால்
இகழ்ந்திருந்த ாலே தம்
மெய்யிடத்துக் கிடந்த அழகிய
இனிய சொல்லேயுடைய நல்ல ரகளிர்
அணிந்த கலங்களில் வடுவைக்காட்டி
ஏனே வடுக்களோடே தந்தை மும் வந்து
நிற்றல், வெந்ததொரு புண்ணிலே

வேலால் எறிந்த தன்மைத்தா
ிருந்தமெதன அவளோடு புலந்து
கூறினள்.

இதனாற் றலைவிக்கு இளிவுந்
தலைவற்குக் கைமிகலும் பிறந்தது.

இது தளைவிரவி ஐஞ்சீரடியும்
வந்த வெள்ளைத்தாவுந் தனிச்சொல்லுந்
ளைவிரவின வெண்பாவும்
ஐஞ்சீரடுக்கிய வெள்ளைச்சுரிதகமும்
பெற்ற விவெண்பா.

(கஅ)

அசு.

உறுவளி தூக்கு முயர்சினை மாவி
ன்றுவடி யாரிற் றவைபோ லழியக்

கரந்தியா னரக்கவுங் [2]
கைநில்லா வீங்கிச்

சுரந்தவென் மென்முலைப்
பால்பழு தாகநீ ௫.
நல்வாயிற் போத்தந்த பொழுதினா
னெல்லா
கடவுட் கடிநகர் தோறு
மிவனை

(பாடம்) 1. வாயிலிலே: 2. கரந்தியான் காக்கவுங்,

வலங்கொளீஇ வாவெனச்
சென்றாய் விலங்கினை

யீர மிலாத விவன்றந்தை
பெண்டிருள்
யாரிற் றவிர்ந்தனை கூறு;

௧0. நீருள்,
அடைமறை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட
குடைநிழற் றோன்றுநின்
செம்மலைக் காணூஉ
விவன்மன்ற யானேவ
வுள்ளங்கொண் டுள்ளா

மகனல்லான் பெற்ற மகனென்
றகனகர்

வாயில் வரையிறந்து

போத்தந்து தாயர் கடு. தெருவிற்
றவிர்ப்பத் தவிர்ந்தனன் மற்றவர்

தத்தங் கலங்களுட் கையுறை

யென்றிவற்

கொத்தவை யாராய்ந் தணிந்தார் பிறன்பெண்டி
ரீத்தவை கொள்வானு மிஃதொத்தன் சீத்தை

செறுதக்கான் மன்ற பெரிது;

உ0. சிறுபட்டி, ஏதிலார் கையெம்மை யெள்ளுபு நீதொட்ட
மோதிரம் யாவோயாங் காண்கு;

அவற்றுள், நறுவிதழ் கண்டன்ன செவ்விரற் கேற்பச்
சுறுமேவ றெழுதிய மோதிரந் தொட்டாள்

குதியறிந்தேன் காமன் கொடியெழுதி யென்றுஞ்
செறியாப் பரத்தை யிவன்றந்தை மார்பிற்
பொறியொற்றிக் கொண்டாள்வ லென்பது தன்னை
யறீஇய செய்த வினை ;

அன்னையோ இஃதொன்று,

முந்தைய கண்டு மெழுகல்லா தென்முன்னர்
வெந்தபுண் வேலெறிந் தற்றா விஃதொன்று
தந்தை யிறைத்தொடி மற்றிவன் றன்கைக்கட்
டந்தாரியா ரெல்லாஅ விது ;

இஃதொன்று, என்னொத்துக் காண்க பிறரு மிவற்கென்னுந்
தன்னலம் பாடுவி தந்தாளா நின்னை
யிதுதொடு கென்றவர் யார் ;

அஞ்சாதி, நீயுந் தவறிலை நின்கை யிதுதந்த
பூவெழி லுண்க ணவளுந் தவறிலள்
வேனிற் புனலன்ன நுந்தையை நோவார்யார்

மருதம் - கக]

மருதக்கலி

உசரு

மேனின்று மென்னி
யிதுவிவன் கைத்தந்தா
௪0. டான்யாரோ வென்று
வினவிய நோய்ப்பாலேன்
யானே தவறுடையேன். இது
கடவுட்
கடிநகர்தோறும் வலங்கொளீஇ வரற்குச்
சேடியரோடு மகற்போக்கிய
தலைவி அவன்
நீட்டித்து வந்தழித், "தாயர் கண்ணிய
நல்லணிப் புதல்

வனை, மாயப் பரத்தை யுள்ளிய வழி"*யின்கண், தந்தை தொடி மகன்கைக் கண்டு புலந்தாள் தன்னுளே அழிந்து கூறியது.

(க—க) உறுவளி

கூறு :—

(இ - ள்.) எடீ ! நீ நல்வாயிலினின்றும் போதலைச்செய்த காலத்தின் கண்ணே தெய்வங்களையுடையதாகிய மிகுதிகளையுடைய கோயில்க டோறும் இவனை வலஞ்செய்வித்து வாவென்று யான் கூறச் சென்ற நீ யான் கூறிய கூற்றினைத் தப்பினாய்; இனி மாவினுடைய உயர்ந்த கொம்பு களினின்ற மிக்க காற்றால் அசைக்கும் நறிய வடுக்கள் காம்பு முறிந்தன போலே பால் மிகக் குதிக்கையினாலே அதனை மறைத்து யான் அங்கையால் அழுக்கித் தேய்க்கவும் அந்தக் கையினெல்லையில் நில்லாவாய் விம்மிச்சுரந்த என்னுடைய மெல்லிய முலையிற் பால் பிள்ளை உண்ணுமற் பாழே போம் படி அருளில்லாத இவன் தந்தையுடைய பரத்தையர்களுள் யாருடைய இல்லிலே தங்கினாய்? சொல் லென்றாள் ;

(கO—கக) நீருள்

பெரிது :—

(இ - ள்.)

நீரிடத்தே இலையின்கீழே

மறைந்துநின்ற அழகிய இதழை யுடைய

தாமரைப்பூப்போலே எடுத்த

பச்சைக்குடையின் நிழலிலே தோன்று

கின்ற நின் பிள்ளையைக்கண்டு

தாய்மார் யான் சோம்படி மனத்தைக்

கைக் கொண்டு பின்னர் என்னை

நினையாத நன்குமதிக்கும்

மகனல்லாதவன் பெற்ற மகன்

அறுதியாக இவனென்று கருதி

அகன்ற மனையினுடைய

வாயிலினெல்லையைக் கைவிட்டுப்

புறப்பட்டுத் தெருவிலேவந்து

தடுப்ப அவரிடத்தே தங்கினான்;

அதனாலே பின்னை அவர்கள் தம்முடைய தம்முடைய அணிகளில் இவன்வடிவிற்கு ஒத்தவையிற்றை ஆராய்ந்து கைக் காணியென்று அணிந்தாரென்றாள் சேடி; அதுகேட்ட தலைவி, தனக்கு அயலாயிருக்கின்ற தந்தையுடைய பாத்தையர் கொடுத்தவையிற்றை இவனொருவன் வாங்குவானும், இனி இவன் கைவிடப்படு மவன் அறுதியாக மிகவும் நம்மாற் கோபித்தல் தக்கானென நெஞ்சொடுகூறினாள்;

'அடைமறை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட, குடைநிழற்றோன்று நின் செம்மல்' என்றது இலையும் பூவுங் குடைக்கும்

புதல்வற்கும் உவமை யாய் விரவிகின்றது. இது சினைக்கு முதல் வந்தது.

---

*தொல். பொருள். கசஎ.

உசகா

கலித்தொகை

[கலி - அச

(உ0)

சிறுபட்டி:—

(இ - ள்.) காவலின்றி வேண்டியவா றொழுகுவாய்;

(உ0-உக) ஏதிலார்

. . . காண்தா :—

(இ - ள்.) நீ எம்மை இகழ்ந்து இட்ட பரத்தையர் கையின் மோதிரங்கள் யாவை? யாம் அவற்றைக் காண்பேன்;

'யாங் காண்கு' பன்மையொருமை மயக்கம். யானும் பாடம்.

(உஉ-உஎ) அவற்றுள்

. . . . வினை :—

(இ - ள்.) அம்மோதிரங்களுள் நறும்பூவைக் கண்டாற்போன்ற சிவந்த விரலுக்குப் பொருந்தச் சுறவிலேற்றைக் குழித்த மோதிரத்தை இட்டவளுடைய கருத்தை அறிந்தேன்; காமன் கொடியாகிய மகரத்தை மோதிரத்தே குழித்தாற் போல வேறொன்றிலே அழுத்தி அதனை எங் நாளும் அடங்காத பரத்தைமைக் குணத்தையுடைய இவன் தந்தை மார்பிலே பொறியாக ஒற்றி அடிமைக்கொண்டு ஆண்டு போதுவேனென்று சொல்கின்ற வார்த்தைதன்னை எனக்கு அறிவித்தற்குச் செய்ததொரு தொழிலெனப் புலந்து அவனொடு கூறினாள்;

"கடல்வாழ் சுறவு மேறெனப் படுமே" * என்றதனாற் 'சுறவே'றென்றார். பரத்தைமை 'பரத்தை'யென நின்றது, "தன்வயினுரிமையு மவன்வயிற் பரத்தையும்" † என்றார் ஆசிரியராகலின்.

(உஅ) அன்னையோ :—

(இ - ள்.) நீயும்

அத்தன்மையையோ ?

புதல்வனாகிய நீயும் எம்மை இகழுந் தன்மையையோ என்றதாம். புதல்வனை நோக்கிக்கூறியது.

இது

(உஅ) இஃதோன்று :—

(இ - ள்.) இவ்விகழ்ச்சியும் நாமே நெஞ்சொடு கூறினன் ;

செய்துகொண்ட தொன்றென்

. . . . விது :—

(இ - ள்.) பின்னே, என்றுமற்பட்டனவற்றைக் கண்டுந் தலையெடுக்க மாட்டாத என்முன்னே வெந்தோர் புண்ணிலே வேலாலே எறிந்த தன்மைத்தாக இஃதொன்று இவன் தந்தையுடைய முன்கையிற் றொடியை இவன் கையிடத்தே இட்டவர் யார்தான்? கூறு என்றான்;

* தொல். பொருள்; ருகரு. † தொல். பொருள் : ...

மருதக்கலி

உசஎ

(கூகூ-கூரு)

இஃதோன்று . . . .

யார் :—

(இ - ள்.) அவன் கூறுமையின், ஏடா! இத்தொடி என்னை ஒழிந்தவர்களும் இத்தலைவற்கு என்னையொழித்த வனப்பை வழிபடும்படியைக் காண்பார்களாகவென்று கூறுந் தன் நலத்தை மிகுத்துப் புகழ்கின்றவளாயிருக்குந் தந்தவள். இவ்விகழ்ச்சியும் நாமே செய்துகொண்டதொன்றென நெஞ்சொடு கூறினாள்; கூறிப் புதல்வனை நோக்கி, நின்னை இத்தொடியை இடுகவென்று சொன்னவர் யார்தா? னென்று கூறினாள்;

(கூகூ—௲௪) அஞ்சாதி , ... யேன் :—

(இ - ள்.) அவன் அதற்கு அஞ்சினமை கண்டு, அஞ்சாதே கொள், இதனைத் தொட்டுவந்த நீயுந் தவறுடையையல்லை ; நின்கையிலே இத்தொடி யையிட்ட பூவினது அழகையுடைய மையுண்கண்ணையுடைய பரத்தையுந் தவறுடையளல்லள் ; வேனிற்காலத்துப்

புதுப்புனல்போல எல்லார்க்கும் பயன்படுகின்ற நுந்தையை ஈண்டு

நோவாரில்லை ; நமக்கு

மேலாய்நின்றூர்

நன்னலம் பாடிப் பின்னரும் நம்மை இகழ்ந்து இத்தொடியை இவன் கையி விட்டவள் யாரோவென்றுகேட்ட இந்நோயின் கூற்றேனுகிய யானே அன்றோ தவறுடையேன்! எனத் தன்னுள்ளே அழிந்து கூறினுள்.

இது பரத்தை தன் சிறப்பு உணர்த்தி அணிந்தமை கூறிற்று.

'மேனின்று மெள்ளி' என்றதற்கு முற்காலத் தென்றுமாம்.

தொடங்கி இகழ்ந்

இதனுற் றலைவிக்கு எள்ளல் தோன்றிற்று. இது

தளைவிரவி ஐஞ்சீரடுக்கிவந்த

கலிவெண்பா. (கக)

அரு.

காலவை, சுடுபொன்
வளைஇய வீரமை சுற்றொடு
பொடியழற் புறந்தந்த
செய்வுறு கிண்கிணி;

உடுத்தவை, கைவினைப்
பொலிந்த காசமை
பொலங்காழ்மேன்
மையில் செந்துகிர்க் கோவை
யவற்றின்மேற்
ரு. றைஇய பூந்துகி லைதுகழ

லொருதிரை ;
கையதை, அலவன் கண்பெற
வடங்கச் சுற்றிய
பலவுறு கண்ணுட்
சிலகோ லவிர்தொடி ;
பூண்டவை, எறியா வாளு
மெற்று மழுவுஞ்
செறியக் கட்டி யீரிடைத்
தாழ்ந்த
பெய்புல மூதாய்ப் புகர்நிறத்
துகிரின்

சூடின; இருங்கடன் முத்தமும் பன்மணி பிறவுமாங்
கொருங்குடன் கோத்த உருளமை முக்காழ்மேற்
சுரும்பார் கண்ணிக்குச் சூழ்றா லாக

கரு. வரும்பவிழ் நீலத் தாயிதழ் நாணச்
சுரும்பாற்றுப் படுத்த மணிமருண் மாலை;

ஆங்க, அவ்வும் பிறவு

மணிக்கணி யாகநின்

செல்வுறு[1] திண்டேர்க் கொடுஞ்சினை கைப்பற்றிப்
பையயத் தூங்குநின் மெல்விரற் சீறடி
நோதலு முண்டீங் கென்கை வந்தீ
செம்மானின் பாலுண் ணிய ;

பொய்போர்த்துப், பாண்டலையிட்ட பலவல் புலையனைத்
தூண்டிலா விட்டுத் துடக்கித்தான் வேண்டியார்
நெஞ்சம் பிணித்த றொழிலாத் திரிதரு
நுந்தைபா லுண்டி சில ;

நுந்தைவாய், மாயச்சூ டேறி மயங்குநோய் கைமிகப்
பூவெழி லுண்கண் பனிபரப்பக் கண்படா
ஞாயர்பா லுண்டி சில ;

அன்னையோ, யாமெம் மகனைப்பா ராட்டக் கதுமெனத்
தாம்வந்தார் தம்பா லவரொடு தம்மை
வருகென்றார் யார்கொலோ வீங்கு ;

என்பாலல், பாராட் டுவங்தோய் குடியுண் டீத்தையென்
பாராட்டைப் பாலோ சில ;
செருக்குறித் தாரை யுவகைக் கூத்தாட்டும்
௧௫. வரிசைப் பெரும்பாட்டொ டெல்லாம் பருகித்தை
தண்டுவென் ஞாயர்மாட்டைப் பால்.

இது தலைவி தன் மகனைப் பாராட்டிப் பால் கூறிட்டு ஊட்டுகின்றவழிச் சிறை
புறமாகக் கேட்டுப் புக்க தலைவனைக் கண்டு தன்னுள்ளே புலந்து புல
யோடு பின்னும் பாராட்டியது.

(௧—௨) காலவை . . . . . கிண்கிணி :—

(இ - ள்.) செம்மால் ! நின்காலிற் கிடக்கின்றவை, சுடும்பொன்னுலே
வளைத்த இரண்டாய் அமைந்த காற்சரியோடே பண்ணுதலைத் தா
உறுகின்ற பொடி மூடுதழலாலே[2] நிறம் உண்டாகப்பட்ட சதங்கை ;

(பாடம்) 1. செய்வுழ. 2. மூடுகனலாலே

மருதம்-௨௦]

மருதக்கலி

௨௪௯

'சுடுபொன்': எக்காலமும் பொன்னென மூக்காலத்திற்கும் உரிய பொன்னின் இயல்பு கூறிற்று; சுடுபொன்னென வினைத்தொகையாகாமை உணர்க.

(கூ—கு) உடுத்தவை . . . . . லோருதிரை :—

(இ - ள்.) அல்குலிற்கு உடுத்தவை, கைத்தொழிலாலே பொலிவு பெற்ற மணிகள் இடையிடை அமைந்த பொன்மணிகளையுடைய வடம்; அதின்மேலே அழுக்கில்லாத சிவந்த பவளவடம்; அவற்றின்மேலே உடுத்தின ஐதாய்க் கழல்கின்ற ஒன்றாகிய திரைத்த பூந்துகில்;

வடங்கள் தோன்றத் திரைத்தாரென்றார்.

(கூ - எ) கையதை . . . . . லவிர்தோடி :—

(இ - ள்.) கையிடத்தது, ஞெண்டின்கண் தன்மைபெற நெருங்கப் பல அருப்புத்தொழில் [1]. சூழப்பட்ட சில கோற்றொழில் அவிர்கின்ற இரண்டாய்ச் சேருந் தொடி;

'கண்ணுன்' : தொழில்.

(அ—கக) பூண்டவை . . . . . றவிர்பூண் :—

(இ - ள்.) பூணப்பட்டவை, வெட்டாத வாளும் வெட்டாத மழுவும் நெருங்கக் கட்டி இரண்டு புறத்தினுந் தங்கின மழைபெய்த புலத்து ஈயன் மூதாயினது* புகரையுடைத்தாகிய நிறத்தையுடைய பவளத்தாற் செய்த அழுக்கற விளங்கிய இடபத்தையுடைய விளங்குகின்ற பூண்;

(கஉ—கசு) சூடின . . . . . மாலை :—

(இ - ள்.) சூடப்பட்டன, கரிய கடலின் முத்தும் அதனுடனே பல மணிகள் பிறவுஞ் சேரக்கோத்த உருட்சி அமைந்த மூன்று வடம்; அதின் மேலே கிடக்கும் நூலாற் சூழ்ந்த சுரும்புகள் ஆருங் கண்ணிக்குப் பொருந்தும்படியாக நடுவே கிடக்க அரும்புகள் அலர்ந்த சில நீலத்தினது ஆய்ந்த இதழ் நாணும்படியாக நீலமணியாற் போக்கின கண்டார் மருளும் மாலை ;

(கஎ) ஆங்க :—

உரையசை.

(கஎ-உக) அவ்வும் . . .

(இ - ள்.) யான் கூறியவையும் பிறவும் பண்ணின சுரும்புகளைப்

ணரிய :—

நின் அழகிற்குமேலே ஓர்
அழகாகச் செறியும் நின்னுடைய
மெல்லிய விரல்களையுடைய சிறிய
அடிகள் இங்ஙனந் திரிந்ததற்கு
நோதலுமுண்டு; அதனைத் தவிர்ந்து
நின்னுடைய

உருட்டுதலுறுகின்ற திண்ணிய தேரில் வளைந்த தாமரை முகையினைக்

* ஈயன்மூதாய்-ஈயற்பூச்சியின்
மூதாய்; தம்பலப் பூச்சியுமாம்.

(பாடம்) 1. அரும்புத் தொழில்.

உ௫0
கலித்தொகை
[கல - அரு

கையாலே பிடித்து மெத்தென
மெத்தென ஆசையாநின்று
இவ்விடத்து என் கையிடத்தே
வருவாய், நினக்கென்று வைத்த
பாலையுண்டற்கு ;

அணியாகத் தாங்கும்
நின்னென்க. தேர்க்குத் தாமரை
சினையாதலின் அதனைச் சினையென்றார்.

(உஉ—உ௫)

பொய்போர்த்துப் . . . .
சில :—

(இ - ள்.) தலைமேல் ஏறட்டுக்கொண்ட பாண்மையாலே வஞ்சனையை மறைத்து வசீகரித்தற்றொழில் பலவும் வல்ல பாணனைத் தூண்டிலாகப் போகட்டுப் பரத்தையரை அகப்படுத்தித் தான் விரும்பின பரத்தையருடைய நெஞ்சந் தன்வசமாக்குதல் தனக்குத் தொழிலாகக் கொண்டு திரியும் நுந்தைக்குப்பட்ட சில கூற்றை உண்பாய் ;

(உசு—உஅ) நுந்தைவாய் .

. . . . சில :—

(இ - ள்.) நுந்தை வாயிற்

பொய்ச்சூளை மெய்யாகத்

தெளிந்து பூவினது அழகையுடைய

உண்கண் நீர்

பரக்கும்படியாக மயங்குகின்ற நோய்

கைகடத்தலாலே அக்கண்கள்

துயிலாத நின் தாய்மார்க்குப்பட்ட

சில கூற்றை உண்பாய்;

(உகூ—நூக) அன்னையோ

. . . . வீங்கு :

(இ - ள்.) வாராத தலைவன்

வந்தமை கருதி, யாம் எம்முடைய

மகனைப் பாராட்டாநிற்கத் தம்
பகுதியிலுள்ள பாணன்
முதலியோருடனே தாங் கடுகவந்தார்;
அம்மையோ! தம்மை இவ்விடத்து
வருகவென்று கூறினர் யார்தான் ?

. . . .

'அன்னையோ' வென்றது,
அம்மையோவென ஒரு வியப்பு.

இது தன் னெஞ்சொடு கூறியது. மேற் பிள்ளையை நோக்கிக் கூறுகின்றாள்.

(௩௨—௩௩) என்பாலல்
. . . . சில :—

(இ - ள்.) என்னுடைய குடியின் பகுதியிடத்தனவல்லவாகிய பாராட்டுக் கேட்டு மகிழ்ந்தவனே ! எனக்குப்பட்ட கூற்றை யுண்பாய் ; அப்பால் தான் சிறிது காணென்றாள் ;

(௩௩—௩௫) சேருக்குறித் . . . . பால் :—

(இ - ள்.) அவன் அதனை உண்ணுமற் போகலிற் கோபிக்கக் கருதின அன்னை தன் பிள்ளையாட்டால் மனமகிழ்ச்சி செய்த அவனை நோக்கிக், கோபிக்கக் கருதினவர்களை உவகையாகிய கூத்தாட்டுவிக்கும் உன்னுடைய தாகத்தாலே இனி யான் பாராட்டும் பெரிய பாட்டுக்களோடு நின் தாய்மாருக் குப்பட்ட கூற்றையுடைய பாலைப் பருகு; இத்தையெல்லாம் நின்னை ஊட்டல் அமைவே னென்று கூறி

மருதம - உக]

மருதககல்

உருக

தண்டுதல் அமைதலென்னும் பொருடருதல் தண்டாமையென்னும் அதன் மறையால் உணர்க; "தண்டாக்காற் றளரியல்", "தண்டாவிருப் பினள்" எனவரும். 'ஞாய'ரெனத் தன்னைப் பிறள்போற் கூறினள்.

இதனல், தலைவிக்குத் தலைவனைக்கண்டு புதுமைபற்றி வியப்புத் தோன்றிற்று ; தலைவற்கு நினைத்தல் பிறந்தது. புதல்வனூற் றலைவிக்குச் செல்வமாகிய உவகை பிறந்தது, புதல்வனுஞ் செல்வமாதலின்.*

இது " தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்தும் " † என இடை நிலைப்பாட்டினை ஈற்றின் வைத்தமையால், தரவும் போக்குமின்றி இடை நிலைப்பாட்டுக்களே ஐஞ்சீரடுக்கிவந்து கலிவெண்பாவிற் கூறிய உறுப் பொத்து யாப்புவேறுபட்டு வந்த கொச்சகம்.

(உ0)

அகா.

மைபடு சென்னி மழகளிற்
றோடைபோற்
கைபுனை முக்காழ் கயந்தலைத்
தாழப்
பொலஞ்செய் மழுவொடு
வாளணி கொண்ட
நலங்கிளர் ஒண்பூ
ணனைத்தரு மவ்வாய்
ரு. கலந்துகண் ணோக்காரக்
காண்பின்[1] றுகிர்மேற்
பொலம்புனை செம்பாகம்
போர்கொண் டிமைப்பக்

கடியரணம் பாயாகில் கைபுனை வேழந்
தொடியோர் மணலி னுழக்கி யடியார்ந்த
தேன்ரைவாய்க் கிண்கிணி
யார்ப்ப வியலுமென்
௬0. போர்யானை வந்தீக வீங்கு;

செம்மால், வனப்பெலா நுந்தையை யொப்பினு நுந்தை
நிலைப்பாலு ளொத்த குறியென்வாய்க் கேட்டொத்தி
கன்றிய தெவ்வர்க் கடந்து
களங்கொள்ளும்
வென்றிமாட் டொத்தி
பெருமமற் றுெவ்வாதி கரு.
யொன்றினேம் யாமென்
றுணர்ந்தாரை நுந்தைபோன்
மென்றோ ணெகிழ விடல்;

பால்கொள லின்றிப்

பகல்போன் முறைக்கொல்கா[2]

கோல்செம்மை யொத்தி

பெருமமற் றெவ்வாதி

கால்பொரு பூவிற்

கவின்வாட றுந்தைபோற்

உ0. சால்பாய்ந்தார் சாய விடல்;

---

* குறள். சுஙு. † தொல்.

பொருள் : சுகூகூ.

(பாடம்) 1. காண்மின். 2. முறைகோடாக்.

வீத லறியா விழுப்பொரு ணச்சியார்க்
கீதன்மாட் டொத்தி பெருமமற் றெவ்வாதி
மாதர்மென் ளுேக்கின் மகளிரை நந்தைபோ
னேய்கூர நோக்காய் விடல் ;

உ௫. ஆங்க,
திறனல்ல யாங்கழற யாரை நகுமிம்
மகனல்லான் பெற்ற மகன் ;

மறைநின்று, தாமன்ற
வந்தீத் தனர் ;

ஆயிழாய், தாவாத வெற்குத் தவறுண்டோ காவாதீங்
௯0. ஈத்தை யிவனையாங் கோடற்குச் சீத்தையாம்

கன்றி யதனைக் கடியவுங்
கைநீவிக்

குன்ற விறுவரைக் கோண்மா
விவர்ந்தாங்குத்

தந்தை வியன்மார்பிற்
பாய்ந்தா னறனில்லா

வன்பிலி பெற்ற மகன்.

இது "தந்தைய ரொப்பர் மக்களென்
பதனால், லந்தமில் சிறப்பின்

மகப்பழித்த

நெருங்கலும்''* என்பதனன் மகவனத்

தலைவனை ஒக்கலாங் குணனும் ஒக்க

லாகாக்குணனுந் தலைவி கூறுகின்றுழி மறைந்தபுக்க தலைவன் அவள் ஊட லுணர்வன சொல்ல மகன் வாயிலாக ஊடறீர்வாள் தன்னுள்ளே கூறியது.

(க—கo) மைபடு . . . . .

வீங்க :—

(இ - ள்.) பட்டத்தையுடைய இளைய களிற்றினது கருமையுண்டா கின்ற தலையில் நாலுகின்ற மூன்று வடம்போலே கையாற் புனைந்த மூன்று வடம் மென்மையையுடைய தலையிடத்தே தாழப், பொன்னாற் செய்த மழு

வோடே வாளம்
அணிதலைக்கொண்ட நன்றே
விளங்குகின்ற ஒள்ளிய

பூணை நனைத்தலைச் செய்யும் அழகிய
வாயைக் கண் கலந்த நினை வேட்கை

நுகரக் காட்சி[1] இனிய பவளப்
பலகைமேலே செம்பாதி வடிவு
வேறோர்

யானையை இறக் குத்துகின்ற
போர்த்தொழிலைத் தன்னிடத்தே
கொண்(

விளங்கும்படியாகப் பொன்னாற்
செய்த, காவலையுடைய
அரணங்களை

குத்தாத கையாற் புனைந்த நின்

வேழத்தோடே, நின் அடியில்
நிறைந்;

தேரையின் வாய்போலும் வாயையுடைய சதங்கை ஆரவாரிப்பத், தொடி
ளையுடைய மகளிர் இழைத்த வண்டலின்கண்ணே உழக்கி நடக்கும் எல்

னுடைய போர்த்தொழிலையுடைய
யானை, இவ்விடத்தே வருக;
பொலம்புனைவேழமென்க ;
உழக்கியியலுமென்க.

---

* தொல், பொருள் : கசஎ.

(பாடம்) 1 கரைபு

மருதம் - உக]

மருதக்கலி

(கக—கசு) செம்மால்

விடல்:—

(இ - ள்.) தலைவா! பெருமா! நந்தையை அழகெல்லாம் ஒத்திருப்பினும் நந்தை நிற்கின்ற நிலைகளின் கூற்றில் உனக்கொத்த குறிக்கப்படுங் குணங்களை யான் கூறக்கேட்டு ஒப்பாய்;
அவற்றுள் மாறுபாட்டிற்பட்ட பகைவரை வென்று களத்தைக்கொள்ளும்

வெற்றிக்குணத்திடத்து அவனை
ஒப்பாய்; மற்றுள்ள குணங்களிலே
யாம் இவனோடு ஒருமனமாயினே
மென்று உணர்ந்திருந்த மகளிரை
நுந்தை மென்றோள் மெலிய விடுமாறு
போல நீயும் அவர் மெல்லிய தோள்
மெலியும்படி விடுதலாகிய பரத்தை
மையை ஒவ்வாதேகொள்;

(கஎ—உ0) பால்கோள
. , . . விடல்:—

(இ - ள்.) பெருமா! நுகத்துப்
பகலாணிபோல் * ஒருபக்கத்தைக்
கொள்ளுதலின்றி முறைமைசெய்தற்குச்
சாயாத கோல் செவ்விதாக நிகழ்த்து

கலில் அவனை ஒப்பாய்; மற்றுள்ள குணங்களிற் றன்னுடைய அமைதித் தணத்தாலே இவன் நம்மைத் தப்பானென்று ஆராய்ந்த மகளிரைக் காற்றுப் பொருகின்ற பூப்போலே அழகுகெடும்படி நுந்தை சாயவிடுமாறு போலச் சாயவிடுதலாகிய பரத்தைமையை ஒவ்வாதேகொள்;

(உக—உச) வீத . . . . விடல்:—

(இ - ள்.) பெருமா! தன்னையுடையார் கெடுதலன்றித் தானே கெடுதல் அறியாத சீரிய

பொருளை . நச்சினவர்களுக்குக்
கொடுத்த பிடத்து அவனை ஒப்பாய் ;
மற்றைக் குணங்களிற் காதலையுடைய
மெல் பிய நோக்கினையுடைய
மகளிரை நாந்தை நோய்கூராநிற்க
நோக்காது பிடுமாறுபோல நீயும்
அவர்களை நோய்மிகாநிற்கப் பாராது
விடுதலாகிய ரத்தைமையை
ஒவ்வாதேகொள் ;

(உரு) ஆங்க :—

அசை.

(உக—உள) திறனல்ல .

. . . மகன் :—

(இ - ள்.) பின்வந்துநின்ற

தலைவனைக் கண்டு நக்க புதல்வனை

நோக்கி,

ந்த நன்குமதிக்கும் மகனல்லாதவன் பெற்ற மகன் நற்குணங்களல்லாத
ற்றை நீ ஒவ்வாதேகொள்ளென்று யாம் கோபிக்க யாரைநோக்கி நகும் ?

என்று கருதிப் பார்த்துப்

பின்னின்ற தலைவனைக் கண்டான்.

---

* பட். உ0சு-உ0எ.

(உஅ) மறைநின்று

தனர் :—

(இ - ள்.) கண்டு, வாராத தாம் பின்னே மறையநின்ற பின்னர் நாந் தெளியும்படி முன்னேவந்தா ரென்றாள்;

(உகூ—கூச) ஆயிழாய் . . . . மகன் :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவன் இங்ஙனங் கொடுமைகூறுகின்றா யாயின் அழகிய இழையினையுடையாய்! நின்னிடத்துச் செய்வதோர் வருத்தம் இல்லாத எனக்கும் ஒரு தப்புண்டோ? இவனை யாம் எடுத்துக் கொள்ளுதற்கு நின்னிடத்தே காத்துக்கொள்ளாதே என்னிடத்தே தருவா யென்றான்; அதுகேட்ட புதல்வன் அவன்மேலே வீழ்ந்தவனைத் தலைவி நோக்கிக், கைவிடப்பட்டவனாகிய அன்பிலி பெற்ற பிள்ளை யாம் அவன் மேலே வீழ்தலை மனங்கன்றி விலக்கவும் நம்மைக் கைகடந்து மலையிடத்து உறுகின்ற அடிவரையிலே சிங்கம் பாய்ந்தாற்போல அறனில்லாத தந்தை

யுடைய அகன்ற மார்பிலே பாய்ந்தானென்றாள்.

இது மகப்பழித்து நெருங்கியது. 'அன்பிலி பெற்ற மக'னென அவன் வயிற் பிரிந்தவாறுங் காண்க. 'அறனில்லா' வென்றது ஆங்கு நெஞ்சழிதல்.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இஃது 'ஆங்க' வெனத் தனிச்சொற்பெற்று ஐஞ்சீரடுக்கிவந்த கலிவெண்பா. (௨௯)

அ௭.

ஒரூஉ நீயெங் கூந்தல்
கொள்ளல்யா நின்னை
வெரூஉதுங் காணுங் கடை;
தெரியிழாய், செய்தவ
றில்வழி யாங்குச் சினவுவாய்
மெய்பிரிந் தன்னவர்
மாட்டு;
ரு. ஏடா, நினக்குத்

தவறுண்டோ நீவீடு பெற்று

யிமைப்பி னிதழ்மறை

பாங்கே கெடுதி

நிலைப்பா லறியினு

நின்னொந்து நின்னைப்

புலப்பா ருடையர் தவறு;

அணைத்தோளாய், தீயாரைப் போலக்

கo. காயுந் தவறிலேன் யான்;

மானேக்கி நீயழ நீத்தவ னானு

நாணில னாயி னலிதந் தவன்வயி

னூடுக லென்னோ வினி:

திறனின் றூடற் றுனி

மருதக்கலி

உ௫௫ இனி யாதுமீக்

கூற்றம் யாமில மென்னுந்[1]

௧௫. தகையது காண்டைப்பாய் நெஞ்சே பனியானுப் பாடில்கண் பாயல் கொள.

இது பரத்தையர்சேரிச் சென்றமை

அறிந்திலளெனத் தலைவிமாட்டுச்

சென்றவ

ளேடு அவள்[2] ஊடி
நெஞ்சொடு கூறியது.

உறழ்ந்துகூறித் தோழிவாயிலாக ஊடறீர்வாள் தன்

(க—உ) ஒருஉநீயெங்

கடை :—

(இ - ள்.) யாம் நின்னைக் காணுமிடத்து வெருவுவேம்; எங் கூந்தலைத் தீண்டாதேகொள்; நீ நீங்கென்றாள் தலைவி; ஆதலால்

வெருவவேண்டாப் பொருட்கட் கூடித்திற் பிறந்ததோர் வெறியாதலின், இது வெருவுத * லென்னும் மெய்ப்பாடு.

(கூ—ச) தெரியிழாய்

மாட்டு :—

(இ - ள்.) அது கேட்ட
தலைவன், தெரிந்த
இழையினையுடையாய்!
அத்தன்மையாகிய பரத்தையர்மாட்டு
உண்மையாகப் பிரிந்து யான் செய்த
தவறில்லாத இடத்து நீ எங்ஙனஞ்
சினப்பாய்? என்றான்;

'அன்னவ' ரென்றது நீ புலக்குந்
தன்மையுடையவரென்றது.

இஃது ஊடல்பற்றிய
வெகுளியென்னும் மெய்ப்பாடு.

இனி ஒருபிராயிருக்க

உடம்பிரண்டா யிருப்பாயென்றாற்
றன்னைப் பிறன்போற் கூறிற்றாகாது,
பன்மையாய் நிற்றலின்.

(கு—அ) ஏடா . . . . தவறு
:—

(இ - ள்.) ஏடா ; நின் கண்ணை
மறைத்த இமைக்குள்ளே மறைந்த
பொழுதே தோன்றாமற் போதி;
ஆதலால் நீ கைவிடுதலைப் பெற்றாய் ;
அந்நிலைமைப் பகுதியை
அறிந்திருப்பினும்
அறியாதாரைப்போல நின்னை நொந்து
நின்னைப் புலக்கின்றவர்
தவறுடையர்; நினக்கு ஒரு

தவறு உண்டோ? என்றாள்;

(கூ—கo) அணைத்தோளாய்

யான்:—

(இ - ள்.) அதுகேட்ட

தலைவன், அணைபோலுந்
தோளிணையுடை யாய்! தீய மக்களை
உடற்றுமாறுபோல ஒரு தீய
திறனின்றாகவும் உடற்றா நின்றாய்;
யான் நீ காய்கைக்குக்
காரணமானதோர்
தவறுடையேனல்லே னென்றான்;

---

* "அச்சம்போல நீடு நில்லாது
கதுமெனத் தோன்றி மாய்வதொரு

குறிப்பு"

(பாடம்) 1. மன்ற. 2. இவள்.

உ(ரு)கா

கலி தம/ தா மாை

(கக—கரு) மானேக்கீ

வினி :—

(இ – ள்.) அதுகேட்ட தோழி, மான்போலும் நோக்கினையுடையாய் நீ அழும்படி நின்னைக் கைவிட்டவன் பரத்தைமையில் அமையாமல் நாணமற்றிருப்பனாயின், மேல் அவனிடத்தே நலிதலைக்கொடுத்து ஊடுகின்ற தன்மை என்னபயன் தருமோ? என்றாள்;

இஃது "உறுதகை யில்லாப் புலவியுண் மூழ்கிய, கிழவோள் பாங் நின்று கெடுத்தற்கண்" தோழி கூறியது.

(கச—கக) இனி . . . . கோள :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி, நெஞ்சே! நீர்விழுதல் அமையாத துயிலுதலில்லாத கண் துயில்கொள்ளும்படியாக நாம் இனிச் சிறிது

மேலாகக் கூறுங் கூற்றையுடையேமல்லே மென்று இவள்கூறுந் தகைமை யினையுடைய கூற்றினைக் காரியமென்று நினைத்துப் பார்ப்பாயென நெ

சொடு கூறி ஊடறீர்ந்தாள்.

இதனாற் றலைவற்குந் தலைவிக்கும்

புணர்வென்னும் உவகை பிறந்தத்

இது நரவும்போக்குமின்றி

ஐஞ்சீரடுக்கி வந்த உறழ்கலி.

(உஉ

அஅ.

ஒரூஉக், கொடியிய னல்லார்

க்குரானுற்றத் துற்ற முடியுதிர்

பூந்தாது மொய்ம்பின வாகத்

தொடிய வெமக்குநீ யாரை

பெரியார்க்

கடியரோ வாற்று ,தவர் ;

ரு. கடியர் தமக், இயார்சொல்லத்

தக்கார் மாற்று ;

வினைக்கெட்டு, வாயல்லா வெண்மை யுரையாது கூறுநின்[1]
மாய மருள்வா ரகத்து ;

ஆயிழாய், நின்கண் பெறினல்லா லின்னுயிர் வாழ்கல்லா
வென்க ணெவனோ தவறு ;

௧0. இஃதொத்தன், புள்ளிக் களவன் புனல்சேர் பொதுக்கம்போ
வள்ளுகிர் போழ்ந்தனவும் வாளெயி றுற்றனவு
மொள்ளிதழ் சோர்ந்தநின் கண்ணியு நல்லார்
சிறுபு சீறச் சிவந்தநின் மார்புந்
தவறுதல் சாலாவோ கூறு ;

(பாடம்) 1. சென்றீநின்.

மருதக்கலி

கரு· அதுதக்கது, வேற்றுமை யென்கண்ணோ வோராதி தீதின்பை
தேற்றக்கண் டயாய் தெளிக்கு;

இனித் தேற்றேம்யாம்,

தேர்மயங்கி வந்த
தெரிகோதை யந்நல்லார்

தார்மயங்கி வந்த தவறஞ்சிப்
போர்மயங்கி உ0.
நீயுறும் பொய்ச்சூ ளணங்காகின்
மற்றினி
யார்மேல் விளியுமோ கூறு.

இஃது அவ்வாற்றாற் புக்க தலைவனுடன் ஊடியும் உறழ்ந்துஞ் சொல்லிப் போய்ச் சூளஞ்சி ஊடறீர்ந்தது.

(கூ—௪) ஒருஉக் . . . தவர் :—

(இ - ள்.) கொடியின் இயல்லையுடைய பரத்தையருடைய புழுகு முதலியவற்றிலே அளைந்த மயிர்முடியினின்றும் உதிர்ந்த பூந்தாதுகள் நின் தோட்கட்டிலே கிடவாநிற்க, எம்மை நீ தீண்டுதற்கு எமக்கு நீ யாராந் தன்மையையுடையை ? எம்மைவிட்டு நீ நீங்குவாயாக ;

பிரிவாற்ருதவர் பிரியவல்ல
பெரியோர்க்கு அடியரோ ? அன்றே
யென்ருன் ;

' குரல் ': மயிர். ' நாற்றம் ':
ஆகுபெயர்.

இது " சினனே பேதைமை
நிம்பிரி நல்குர, வனைநால் வகையுஞ்
சிறப் பொடு வருமே "* என்பதனல், '
தொடிய வெமக்கு நீ யாரை ' எனச்
சினம் பற்றி வரினும் அது தன் காதலேச்
சிறப்பித்தலின் அமைந்தது.

(ஞ) கடியர்தமக் . . . .
மாற்று :—

(இ - ள்,) அதுகேட்டுக்,
கடியராயிருப்பார் தமக்கு

மாற்றஞ்சொல்லத் தக்கவர் யாவரென்றான் ;

(கூ—எ) வினைக்கெட்டு

. . . . ரகத்து :

(இ - ள்.) அதுகேட்டு, நீ போகின்ற தொழிலைத் தவிர்த்துநின்று உண்மையல்லாத வெண்மைகளைச் சொல்லாதே, நின் பொய்ம்மைகளை மெய்யென்று மயங்குவாரிடத்தே சொல்லென்றான் ;

'வினைக்கேட்டு' பாடமாயின் வினைக்கேடாகிய வாயல்லாவென்க. உரையாதியும் பாடம். 'வெண்மை' : பண்புப்பெயர்.

(அ—க) ஆயிழாய்

தவறு :—

அதுகேட்ட தலைவன், ஆராய்ந்த இழையினையுடையாய்! நின்னுடைய கண்ணினில் அருளோக்கினைப் பெறிலன்றி இனிய உயிர் வாழமாட்டாத என்னிடத்துத் தப்புயாதுதானென்றான்;

---

* தொல். பொருள்: உசரு.

"காமக் கடப்பினுட் பணிந்த கிளவி, காணுங் காலைக் கிழவோ
குரித்தே" * என்பதனாற் றலைவன் பணிந்து கூறினான்.

(கூ—கச) இஃதொத்தன்

கூறு :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி, இவனொருத்தனென நெஞ்சொ
வியந்து கூறிப், பின்னர்ப் புள்ளியையுடைய நண்டுகளின் நடையாலுண்

டான வடு நீரருகைச் சேர்ந்து

கிடந்தாற்போலப் பெரிய உகிராற்

பிளந்

வடுக்களும் ஒளியையுடைய எயிறு அழுந்தின வடுக்களும் ஒள்ளிய இதழ்க
வாடின நின் கண்ணியும் பரத்தையர் நின்னோடு வேறுகிக் கோபித்
அடிக்கச் சிவந்த நின்னுடைய மார்புந் தப்பாதலுக்கு அமையாவோ ? அமைய
வாயிற் கூறென்றாள்.

'சேர்பு' என்னும் எச்சத்திற்கு வினை வருவித்து முடிக்க. 'ஒதுக்க மென்னுந் தொழிற்பெயர் ஆகுபெயர். "சிரறுசே லாடிய நீர்வாய்ப் பதத்த" என்றாற்போலச் சிரறுதல் சிதறுதன்மேல் நின்றது. "வேட்கை மறுத்துக் கிளந்தாங் குரைத்தன், மரீஇய மருங்கி னுரித்தென மொழிப" என்பதனுன், "ஒன்றெனை முடித்தலென்பதனுன் மரீஇயவாறு வினை வற்றிற்குங் கொள்க" என்றலின், இழிந்தோர் கூற்றை உயர்ந்தோர் கூறுவனவும் அமைத்தாம். அதனுன், 'வள்ளுகிர் போழ்ந்தன' முதலிய கொள்க.

(கரு—கசு) அதுதக்கது

. . . . தெளிக்கு :—

(இ-ள்.) நீ கூறுகின்ற மெய்வேறுபாட்டையோ என்னிடத் துண்டாக ஓராதேகொள்; அங்ஙனம் ஓராதிருத்தல் நினக்குத் தக்கது; அதற்குக் காரணமென்னெனில் அத்தீது என்கண் இல்லாமையை யாம் நினக்குத் தெளிவிக்க நீ காணுய்; யான் இனித் தெளிவிப்பேனென்றான்;

(கள) இனித் தேற்றேம்யாம் :—

(இ-ள்.) இக் கற்புக்காலத்து நீ சூளுறுகின்றதனைக்கொண்டு யாம் எந் நெஞ்சைத் தெளிவியேம்; அதற்குக் காரணங்கேள்;

(கஅ—உக)

தேர்மயங்கி . . . . கூறு :—

(இ - ள்.) தேரேறி வருகின்ற சிறப்பிலே மயங்கி நின் தீங்கை
கருதாது வந்த தெரிந்த கோதையையுடைய அழகிய பரத்தையருடை
தாரை நின் தாராக நினைத்து அணிந்துவந்த தப்பிற்கு அஞ்சி யாம் ஊடி
பொருத போரிலே கலங்கி இக் கற்புக்காலத்து நீ சூளுறும் மிகப் பொ

* தொல். பொருள்: கசுO. † தொல். பொருள்: . . .

மருதம் - உசு]

மருதக்கலி

உருசுக

யாகிய சூளுறவு*

வருத்தத்தைச் செய்யுமாயின், பின்னை

அதுதான் எங்கண்

மேலன்றி யார்மேல் வரும்? அங்ஙனம் வாராமற் களவுகாலத்துச் சூளுறவு போற் கெடுமோ? நீதானே கூறுவாயாகவென வூடறீர்ந்து கூறினாள்.

யார்மேல் வருமென ஒருசொல் வருவிக்க. இனி நீயுறுமென்க.

இஃது, "இன்னாத் தொல்சூ ளெடுத்தற் கண்ணும்" † என்பதனாற் கூறிற்று; என்றது, இன்னாங்குப் பயக்குஞ் சூளுறவினைத் தலைவன் சூளுறுவலெனக் கூறுமிடத்துமென்றவாறு. தலைவன், "வந்த குற்றம் வழிகெட வொழுகிக்" ‡ களவிற் சூளுறவான் வந்த ஏதம் நீக்கி, இக் கற்புக் காலத்துக் கடவுளரையுங் குரவரையும் புதல்வனையுஞ் சூளுறுதலின் இன்னாத சூளென்றாள். இது களவுபோலச் சூளுறுதலின், 'தொல்சூள்' ஆயிற்று. இதனுள் இரத்தலுந் தெளித்தலும்

வந்தவாறுணர்க.

இதனாற் றலைவிக்கு அணங்கால் அச்சம் பிறந்தது; தலைவற்குப் புணர்வாகிய உவகை பிறந்தது.

இஃது 'ஒரூஉ'வென ஒழியசையாகிய சொற்சீரடி வந்து ஐஞ் சீரடுக்கியும் ஆறு மெய்பெற்றும் வந்த கலிவெண்பா. "தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்தும்"§ எனப் பாப் போக்கின்பின் வைத்ததனாற் 'கடியர் தமக் கியார்சொல்லத் தக்கார் மாற்று' எனப் போக்குட்போல் நாற்சீரான் இறும் பாட்டும் வந்தது.

(உ௩)

அசு.

யாரிவ னெங்கூந்தல்
கொள்வா னிதுவுமோ
ரூராண்மைக் கொத்த
படிறுடைத் தெம்மனை
வாரனீ வந்தாங்கே மாறு ;

என்னிவை,[1] ஒருயிர்ப் புள்ளி
னிருதலை யுள்ளொன்று ரு.
போரெதிர்ந் தற்றாப் புலவனீ
கூறினென்[2]
ருருயிர் நிற்குமா றியாது ;

ஏஎ, தெளிந்தேம்யாங்

காயாதி யெல்லாம்வல் லெல்லா

பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய்நொடித் தாங்கு

வருந்தனின் வஞ்ச முரைத்து

;

௰. மருந்தின்று,

மன்னவன் சீறிற் றவறுண்டோ

நீநயந்த

வின்னகை தீதோ விலேன்

;

---

* பரி - கஉ : சாக - சாரு. † தொல். பொருள் : கசஎ.

‡ தொல். பொருள் : கசசா. §

தொல். பொருள்: அகஅ.
(பாடம்) 1. எனஇவை. 2. கூறியென். உ௲0

கலித்தொகை

[கலி - அகூ

மாண மறந்துள்ளா நாணிலிக் கிப்போர்
புறஞ்சாய்ந்து காண்டைப்பாய்[1] நெஞ்சே யுறழ்ந்திவனைப்
பொய்ப்ப விடேஎ மெனநெருங்கிற் றப்பினே
கரு. னென்றடி சேர்தலு முண்டு.

இது தலைவன் "காமத்தின் வலியும்"* என்றதனுல் ஆற்றுமை வாயிலாக வலிந்துபுக்கு நெருங்கிக் கூடுமிடத்து அவனுடன் தலைவி ஊடிச் சில சொல்லி, அவன் ஆற்றுமை கூறுவது கேட்டு ஊடறீர்ந்தது.

(க—௬) யாரிவ . . . . மாறு
:—

(இ - ள்.) இவன் யார்? எங் கூந்தலைத் தொடுதற்கு இவன் என்ன தொடர்புடையனென நெஞ்சொடு கூறிப், பின்னர் இவ்வனங் கூந்தலைப் பிடிக்கின்ற இதுவும் நீ பாதுகாத்தலின்றிப் பாதுகாப்பாரைப்போலே பண்ணிக்கொண்டு ஊரையாளுந் தன்மைக்குப் பொருந்தினதொரு கொடுமையையுடைத்து; இதனை ஓர்ந்துபார்; இனி நீ எம் மனையிடத்தே

வாராதேகொள்;† வந்தாற்போலே

மீண்டுபோவென்றாள்;

இது வலிந்து புக்கது கூறிற்று.

'வான்': வினையெச்சம்.

(ருசு) என்னிவை .

. . . றியாது:—

(இ - ள்.) அதுகேட்ட

தலைவன், உடலும் உயிரும்

ஒன்றாய்த் தலை

இரண்டாகிய புள்ளினுடைய

அவ்விரண்டு தலையில் ஒருதலை

மற்றத் தலை

யோடே போர்செய்தலை
மேற்கொண்ட தன்மைத்தாக நீ இக் கொடுமை
களைக் கூறிப் புலந்தாற் பயனென்? அதனைக் கைவிட்டு, இனி என்
னுடைய அரிய உயிர் நிற்கும்வழி யாது? அதனைக் கூறுவாயென்றான்; இஃது ஆற்றாமை கூறிற்று.
'புலவல்': புலத்தலெனப் படுத்தலோசை
யாற் பெயராய் நின்றது. இவை கூறிப் புலவலென்னெனக். கூறு என வரு
விக்க.

(எ) ஏஎ :—

இகழ்ச்சிக்குறிப்பு.

நீங்கின காலமெல்லாம் மறந்து
ஈண்டு வந்தால் இறந்துபடுவேனெனக்
கூறலின், அதனை 'ஏஎ'
யென இழித்து நெஞ்சொடுகூறினன்.

(எ—க) தெளிந்தேம்யாங்
. . . முரைத்து :—

(இ - ள்.) ஏடா! எல்லாம் உணர்ந்திருக்கும் பெரிய காட்டிடத்திற்
கொற்றவைக்கு அவள் அறியாதன சில உண்டாகப் பேய் கொடிசொன்ன

* தொல். பொருள்: கசசு. † கலி. அஎ : க-உ.

(பாடம்) 1. கண்டைப்பாய்.

[illegible]

போல* நின் பொய்களை எனக்குச் சொல்லி வருந்தாதேகொள்; யாம் முன்பே நின் வஞ்சனைகளைத் தெளிந்துவிட்டேமென்றாள்;

(கo—கக) மருந்தின்று . . . . . விலேன் :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவன், என்னைப் பேயென்று காயாதே கொள்; எனக்குத் தவறுகள் ஏற்றுதற்கு அலமராதேகொள்; எனக் கூறிப் பின்னும், இனிய நகையினையுடையாய்! நீ என்மேல்

எற்றிச்சொல்ல விரும்பிய தீதோ யான் உடையேனல்லேன் ; அரசன் கோபிக்கப் படுகின்றவன்மேல் ஒரு தவறு உண்டோ? தவறில்லையாயினுங் கோபிப்பனன்றே ? அங்ஙனம் கோபிக்குமிடத்து அதற்கொரு பரிகாரமில்லை யென்றான் ;

(கஉ—கரு) மாணமறந் . . . . மூண்டு :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி, நெஞ்சே! இவனைப் பொய்சொல்ல விடேமென்று மாறுபட்டுக் கோபிக்கின், தப்பினேனென்று

வணக்கஞ்செய் தலும் இவனுக்குப் பரிகாரமுண்டு; ஆதலான் நம்மை மறந்து ஒரு காலமும் நாம் மாட்சிமைப்பட்டிருக்க நினையாத நாணமில்லாதவனுக்கு இவ்வூடற் போரைத் தோற்று அதனாலுள்ள பயனைக் காண்பாயென்று ஊடறீர்ந்தாள்.

இதனாற் றலைவிக்குச் சூழ்ச்சியுந் தலைவற்குப் புணர்வாகிய உவகையும் பிறந்தன.

"ஒருசிறை நெஞ்சமொ டுசாவுங் காலை, யுரிய தாகலு முண்டென மொழிப" †

என்பதனுல், இவன் ஆற்ருனென 1
நெஞ்சுடன் உசாவினுள்.

இஃது ஐஞ்சீரடுக்கிவந்த
கலிவெண்பா.

(உச)

கூ0.

கண்டேனின் மாயங்
களவாதல் பொய்ந்கா
மண்டாத[2] சொல்லித்
தொடாஅ ஞெமஇயநின்
பெண்டி
ருளர்மன்னே வீங்கு ;

ஒண்டொடிநீ, கண்ட
தெவனோ தவறு;

ரு. கண்டது, நோயும்[3] வடுவுங்
கரந்து மகிழ்செருக்கிப்
பாடு பெயனின்ற பாணு
னிரவிற்
றொடிபொலி தோளு
முலேயுங் கதுப்பும்

வடிவார் குழையு மிழையும் பொறையா
வொடிவது போலு நுசுப்போ டடிதளரா

௧0. வாராக் கவவி னொருத்திவந் தல்கற்றன்

---

* பெரும்பாண். ௬௫௧. †

தொல். பொருள் : ௨0௪.

(பாடம்) 1. ஆற்றுலென. 2. வண்டாத. 3. கொடியும். உசுஉ

கலித்தொகை

[கலி - கூ0

சீரார் ஞெகிழஞ் சிலம்பச் சிவந்துநின்
போரார் கதவ மிதித்த தமையுமோ
வாயிழை யார்க்கு மொலிகேளா வவ்வெதிர்
தாழா தெழுந்துநீ சென்ற தமையுமோ
கரு. மாறுள் சினைஇ யவளாங்கே நின்மார்பி
ஞறிணர்ப் பைந்தார் பரிந்த தமையுமோ
தேறிநீ தீயே னலேனென்று மற்றவள்
சீறடி தோயா விறுத்த

தமையுமோ

கூறினிக் காயேமோ யாம்;

உ0. தேறிற், பிறவுந் தவறிலேன் யான்
அல்கற், கனவுக்கொ[1] ளீகண் டது;
கனைபெயற், றண்டுளி வீசும்
பொழுதிற் குறிவந்தாட்
கண்ட கனவெனக் காணுது
மாறுற்றுப்
பண்டைய வல்லநின்
பொய்ச்சூ ளினக்கெல்லா
உரு. நின்ருய்நின் புக்கில் பல;

மென்றோளாய், நல்குநின்

னல்லெழி லுண்கு ;

ஏடா, குறையுற் று நீயெம்

முரையனின் றீமை

பொறையாற்றே மென்றல்

பெறுதுமோ யாழ

நிறையாற் று நெஞ்சுடை யேம்.

இது " புல்லுதன் மயக்கும் புலவிக் கண்ணும்"* என்பதனல் தலைவன் புலட்

படப் பரத்தையரிடத்து ஒழுகாது காமக்கிழத்தி ஊடிச்சொல்லித்

மறைந்தொழுகி வந்து நின்றவனுடன் தலைமகன் ஆற்றாமைகண்டு தன் ஆற்றாமையுஞ் சொல்லி ஊடறீர்ந்தது.

(க—ரு) கண்டேனின் . . . . வீங்கு :—

(இ - ள்.) நின் பரத்தைமை இக்காலத்துக் களவொழுக்கத்தே யாதலைக் கண்டேன்; ஆதலாற் பொய்யாகவே நக்கு யான் விரும்பாதவ

வற்றைக் கூறி என்னைத் தீண்டாதேகொள்; நீ தீண்டுதற்கு இவ்விடத்தி னைக்குப் பெண்டிராயிருப்பார் உளரோ? இல்லையே என்றான்;
'மன்'னும், 'ஒ'வும், அசை.

* தொல். பொருள்: கடுக.

(பாடம்) 1. கனவுகொ.

யருறைமைய
உகாங

(௪) ஒண்டொடி நீ

. . . . தவறு :— (இ-
ள்.) அதுகேட்ட தலைவன்,
ஒள்ளிய தொடியினையுடையாய்! நீ
என்னுடைய தவறாகக் கண்டது
எவனென்றான் ;

(ரு—கக) கண்டது

. . . யாம் :—

(இ - ள்.) யான் கண்டது, ஒருத்தி தான் உற்ற காமநோயையும் அதனாற் பிறந்த அலரையும் பிறர் அறியாமல் மறைத்து மகிழ்ச்சியின்றி யிருக்கவும் மகிழ்ச்சியுண்டாக்கிச் செருக்கிச் சொரிகின்ற மழை மாறுமல் நின்ற ஒருநாளிற் பாதியாகிய இராப்பொழுதிலே தொடி பொலிவு பெற்ற தோளும் முலையுங் கூந்தலும் மகரத்தின் வடிவு நிறைந்த குழையும் ஏனை அணிகலங்களுந் தனக்குச் சுமையாக முறிவதொரு வஞ்சிக் கொம்பு போலும் இடையைத் தாங்கிக்கொண்டு அமைதி பிறவாத மயக்கத்தாலே அடிதளர்ந்து வந்து

தங்குதலையுடைய தன்
தலைமைநிறைந்த சிலம் பொலிப்பக்,
கோபித்து நின்னுடைய
பலகைபொருந் நிறைந்த கதவத்தைப்
பாய்ந்தது; அது தவறுதற்கு
அமையுமோ ? அந்த ஆராய்ந்த
இழையினை யுடையவள் ஆரவாரிக்கும்
ஆரவாரத்தைக் கேட்டு
அவ்வாரவாரத்திற் கெதிரே நீ
நீட்டியாது எழுந்திருந்து போனது;
அது தவறுதற்கு அமை யுமோ ?
அவள் மாறுனாய்ச் சினந்து
அவ்விடத்தே நின்மார்பிற் கிடந்த
நாறுகின்ற இதழையுடைய
செவ்விமாலையை அறுத்தது; அது

தவறுதற்கு அமையுமோ ? பின்னை அவளுடைய சிறிய அடியைச் செறிந்து யான் தீமையையுண்டயேனல்லேன் : அதனை நீ தெளியென்று கூறி அவளிடத்தே தங்கினது ; அது தவறுதற்கு அமையுமோ ? இனிச் சொல்லு ; யாம் நின்னைக் கோபியேமோ ? என்றான் ;

'பாடுபெயல்': பாடெனா விகாரம். காளிற்பால் 'பாளுள்' என மருஉ. 'நுசுப்போ'டெனா உருபுமயக்கம். கண்டது மிதித்தது ; அது அமையுமோ ? கண்டது சென்றது ; அது

அமையுமோ? கண்டது பரிந்தது; அது அமையுமோ? கண்டது இறுத்தது; அது அமை யுமோ? என முடிக்க.

(உ0-உக) தேறிற்

கண்டது:—

(இ - ள்.) அதுகேட்ட தலைவன், யான் தேற்றத் தெளிவையாயின் இக்கேட்பதோர் தவறு யான் உடையேனல்லேன்; இராக்காலத்து நீ கண்டதுதான் கனவுபோல இருந்ததென்றான்;

(உஉ—உரு) கனபெயற்

. . . . பல :—

(இ - ள்.) அதுகேட்ட

தலைவி, செறிந்த மழையாகிய

தண்ணிய துளியைப் பெய்கின்ற

இராக்காலத்தே ஒருவன் செய்த

குறியிடத்தே உகாச

கலிதம்(ம)தாகை

[கலி - க்க் வந்தாளொருத்தியை நீ

கண்டதனுல் உனக்கு நிகழ்ந்த கனவு

இதுவெனச்

சொல்லி, நீ செய்ததனை நினையாதே அச் செய்தியை மாறுதலுற்று நின்றாய்; அங்ஙனம் நின்ற பின்னர் நீ சூளுற்ற நின்னுடைய பொய்யாகிய சூளுறவு யாம் நுண்மையாகக் கண்டமையின்[1] நினக்குப் பண்டுபோற் பயன்றருந் தன்மையை யுடையவல்ல; ஆதலால், ஏடா! நினக்குப் புகும் இல்லுப் பலவால், ஆண்டே செல்லென்றாள்;

'கண்ட கனவு' உண்ட

எச்சில்போல நின்றது.

(உகூ) மென்றே .

. . . லுண்டு :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவன், மெல்லிய தோளினையுடையாய்! இனி யான் செய்த குறையைக் கைவிட்டு நின்னுடைய நன்றாகிய அழகை எனக்கு அருள்; அதனை யான் நுகர்வேனென்றான்;

(உஎ—உக) ஏடா . . . . யேம் :—

(இ - ள்.) எம் வயத்ததாக நிறுத்தமாட்டாத நெஞ்சையுடைய யாம் நினது தீமையைப் பொறுத்தலை நடத்தமாட்டேமென்று கருதுதலைப் பெறுவேமோ? பெறேம்; ஆதலால், நீ இக்காரியத்திலே உற்று எமக்குச் சில குறை கூறுதே கொள்ளென்று ஊடறீர்ந்தாள்.

"பிறவும்"* என்றதனாற் சேரிப்பரத்தையாற் புலந்து கூறினாள்.

இதனாற் றலைவிக்குந் தலைவற்கும் புணர்வாகிய உவகை பிறந்தது.

இஃது 'ஒண்டொடி நீ' யெனவுந் 'தேறி'னெனவும் 'அல்க'லெனவும் ஒழியசையும், 'பிறவுந் தவறிலேன்யா'னெனவுங் 'கனவுக்கொனீ கண்ட' தெனவும் வழியசையும் புணர்த்துக், 'கண்டதெவனோதவ'றென முற்றடி[2] யின்றிக் குறைவு சேர்த்தாகிய சொற்சீரடியும் பெற்றுக், கலிவெண்பாவின் வேறுபட்டுப் "பாநிலை வகையே கொச்சகக் கலியென, நூனவில் புலவர் நுவன்றறைந் தனரே"† என்னும் விதியாற் கொச்சகக்கலியாயிற்று. (௨௫)

கூக.

அரிநீ ரவிழ்நீல மல்லி யனிச்சம்

புரிநெகிழ் முல்லை நறவோ டமைந்த
தெரிமலர்க் கண்ணியுந் தாரு நயந்தார்
பொருமுரண் சீறச் சிதைந்து நெருநையி
ரு. னின்றுநன் றென்னை யணி;

---

* தொல். பொருள்: கஙக. † தொல். பொருள்: சகூஎ.

(பாடம்) 1. கொண்டமையின் 2. ...

மருதக்கலி

உசுரு

அணைமென்றோளாய், செய்யாத சொல்லிச் சினவுவ தீங்கெவ
னையத்தா லென்னைக் கதியாதி தீதின்மை
தெய்வத்தாற் கண்டீ தெளிக்கு ;

மற்றது, அறிவல்யா னின்சூ ளனைத்தாக நல்லார்
௧0. செறிதொடி யுற்ற வடுவுங் குறிபொய்த்தார்
கூருகிர் சாடிய மார்புங்
குழைந்தநின்
றாருந் ததர்பட்ட சாந்தமுஞ்
சேரி
யரிமதர் உண்கண்ணா ராராக்
கவிற்

பரிசழிந் தியாழநின்

மேனிகண் டியா னுஞ்

சரு. செருவொழிந்தேன் சென்றீ

யினி ;

தெரியிழாய், தேற்றாய் சிவந்தனை காண்பாய்நீ தீதின்மை யாற்றி னிறுப்பல் பணிந்து ;

அன்னதே லாற்றல்காண்1

வேறுபட் டாங்கே கலுழ்தி

யகப்படின்

உ௦. மாறுபட் டாங்கே மயங்குதி

யாதொன் றுங்

கூறி யுணர்த்தலும்

வேண்டாது மற்றுநீ
மாணா செயினு மறுத்தாங்கே
நின்வயிற் காணி னெகிழுமென்
னெஞ்சாயி னென்னுற்றாய்
பேணாய்நீ பெட்பச் செயல்.*

இதுவும் அது.

(க—ரு) அரிநீ . . . . யணி

:—

(இ - ள்.) நறும்பூவோடே
அழகிய நீரில் அலர்ந்த[2]
அல்லியையுடைய நீலப்பூ அனிச்சப்பூ
முறுக்கு நெகிழ்ந்த முல்லைப்பூப்
பொருந்தின மார்பின் மாலையும்,
ஆராய்ந்த நறிய மலராற் செய்த

கண்ணியும் விரும்பின பரத்தை யர்
ஊடுகின்ற மாறுபாட்டாலே
கோபித்துப் பற்ற நிறங்கெட்டு
என்னை யுடைய ஒப்பனை நேற்றையில்
இன்று நன்றாயிருந்ததென்றான்;

'கண்ணி' : வகைமாலை,

"அன்னை யென்னை யென்றலு
முளவே, தொன்னெறி முறைமை
சொல்லினு மெழுத்தினுந், தோன்றா
மரபின வென்மனார் புலவர்"† என்ப
தனாற் றலைவனை 'என்னை' யென்றாள்.

---

* குறள். ௧௩௧௮; ௧௨௮௯. † தொல். பொருள் : ௨௪௯.

(பாடம்) 1. யாற்றல்காண். 2.

அவிழ்ந்த.

34

உ௬௬

கலித்தொகை

[கலி - கூ

(கூ—அ) அணைமென்றோளாய் . . . . தெளிக்கு :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவன், அணைபோலு மெல்லிதாய தோளினை யுடையாய்! இவன் நீங்கிற் பரத்தையரிடத்தல்லது நீங்கானென்று உ கொண்டு அவ்வையத்தாலே யான் செய்யாத காரியங்களைச் சொல் இவ்விடத்தே சினக்கின்ற குறை யாதுதான்? என்னிடத்துத் தீதில்லாமை யைத் தெய்வத்தாலே நினக்குத் தெளிவிப்பேன்; அதனைக் காண்பாய் இனி என்னைக் கோபியாதேகொள்ளென்றான்;

(கூ—கடு) மற்றது . . . . யினி :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி, யான் நீ நீங்கிய பின்னர் நீ செய் காரியமும் அறிவேன்; நின் சூளுறவு பொய்யாதலும் அறிவேன்; புதி பரத்தையருடைய செறிந்த தொடியழுந்தின வடுவையும் அவர் முயக்க தாற் குழைந்த நின் தாரையும் நீ குறியாற் பொய்க்கப்பட்ட பரத்தைய கோபித்துக் கூரிய உகிரால் தாம் விரும்பியாங்கு வடுச்செய்த மார்பையு சேரியிலிருந்த செவ்வரியினையுஞ் செருக்கையுமுடைய மையுண்கண்ணிை யுடையாருடைய நிறையாத முயக்கத்தாலே பூசின பாடழிந்த சிதறுத பட்ட சந்தனத்தையுமுடைய நின்வடிவைக் கண்டு இதற்குரிய யானு நின்னோடு ஊடுதலைத் தவிர்ந்தேன்; இனி அப்பரத்தையரிடத்தே செல்வ யென்றாள்;

(கசு—கஎ) தேரிழாய் . . . . பணிந்து :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவன் தெரிந்த இழையினையுடையாய் யான் தெளிவித்ததனைக் கொண்டு நின் நெஞ்சைத் தெளிவியாயாய் கோபித்தாய்; யான் தீயேனல்லாமையை நின்னைத் தாழ்ந்து நெறியாலே நின் நெஞ்சிடத்தே நிறுத்துவேன்; அதனைக் காண்பாயாகவென்றான்;

(கஅ—உச) அன்னதே . . . . சேயல் :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி, இவன்கருத்து இன்னுந் தீதின்மையே யென்பது நெஞ்சிடத்தே நிறுத்துதலேயாயின், இவன் வலியை நெஞ்சே காண்பாயாகவென நெஞ்சொடு கூறி, அவனை நோக்கி, யான் நின்னோடு வேறுபட்ட அப்பொழுதே நெஞ்சு கலங்குவை; யான் வேறுபடாமல் நின் கையிலே அகப்படுவேனாயின் அக்கலக்கத்தை மாறுபட்டபொழுதே என்னை இகழ்ந்து பரத்தையர்பாற் சேறற்கு மனம் மயங்குவை; ஆதலால் யாதொரு வார்த்தையையுஞ் சொல்லி என்னை ஊடலுணர்த்துதலும் உனக்கு வேண்டாததொரு காரியம்; இக்குறையையொழிய நீ வேறு மாட்சி மைப்படாத குறைகளைச் செய்யினும் அவற்றைத் தள்ளி, நின்னைக் காணின், அப்பொழுதே என் நெஞ்சு நின்னிடத்தே நெகிழ்ந்துவருமாயின், என்

யருதகைமை
உளை

நெஞ்சின் றன்மையை உட்கொள்ளாயாய் நீ யான் விரும்பும்படி என் நெஞ் சைத் தெளிவிக்குஞ் செயல்களை என்ன காரியத்திற்குச் செய்தாயென வூடறீர்ந்தாள்.

இதனுல், இருவர்க்கும் புணர்ச்சியாகிய உவகை பிறந்தது. இஃது ஐஞ்சீரடுக்கியும் ஆறுமெய் பெற்றும் வந்து போக்கின்றி உற்ற உறழ்கலி. "கூற்று மாற்றமு மிடையிடை மிடைந்தும்,

போக்கின்ருக லூறழ்கலிக் கியல்பே" *
என்பது விதி.
(உகு)

கூ௨.

புனவளர் பூங்கொடி யன்னுய்
கழியக்
கனவெனப் பட்டதோர்
காரிகை நீர்த்தே
முயங்கிய நல்லார் முலையிடை
மூழ்கி
மயங்கிமற் ருண்டாண்டுச்
சேறலுஞ் செல்லா ரு. தயங்கி

யிருந்தார்க் குயர்ந்த பொருளு

மரிதி னறஞ்செய்யா வான்றோ
ருலகு
முரிதி னொருதலை பெய்தலும்
வீழ்வார்ப்
பிரிதலு மாங்கே புணர்தலுந்
தம்மிற்
றருத நகையாதான் மற்று;

கo. நனவினாற் போலு நறுநுதா
லல்கற்
கனவினாற் சென்றேன்
கலிகெழு கூடல்

வரையுறழ் நீண்மதில்
வாய்சூழ்ந்த வையைக்
கரையணி காவி னகத்து;

உரையினி, தண்டாத்தீஞ்
சாய னெடுந்தகா யவ்வழிக்
கரு. கண்ட தெவன்மற்று நீ;

கண்டது, உடனம ராயமொ
டவ்விசும் பாயு
மடநடை மாயின மந்தி
யமையத்

திடன்விட் டியங்கா
விமையத் தொருபா
விறைகொண் டிருந்தன்ன
நல்லாரைக் கண்டேன்.
௨0. றுறைகொண் டுயர்மணன்
மேல்; ஒன்றி நிறைவளை
ஓர்த்த திசைக்கும்
பறைபோனின் னெஞ்சத்து
வேட்டதே கண்டாய் களு;

---

* தொல். பொருள்: ௪௬௮.

கேட்டை, விரையணீ மற்று
வெகுள்வா யுரையாண்
டிதுவாகு மின்னகை நல்லாய்
பொதுவாகத் ௨௫. தாங்கொடி
யன்ன தகையா ரெழுந்ததோர்
பூங்கொடி வாங்கி
யிணர்கொய்ய வாங்கே
சினையலர் வேம்பின்
பொருப்பன் பொருத
முனையரண் போல
வுடைந்தன்றக் காவிற்
றுனைவரி வண்டி னினம் ;

மற்றாங்கே, நேரிணர் மூசிய
வண்டெல்லா மவ்வழிக்
காரிகை நல்லார் நலங்கவர்ந்
துண்டபோ லோராங்குமூச[1]
அவருள்,
ஒருத்தி, செயலமை கோதை
நகை
ஒருத்தி, யியலார்[2] செருவிற்
றொடியொடு தட்ப
ஒருத்தி, தெரிமுத்தஞ் சேர்ந்த
திலகம்[3]
ஒருத்தி, யரிமா ணவிர்குழை
யாய்காது வாங்க
ஒருத்தி, வரியா ரகலல்குற்[4]

காமுகம்

ஒருத்தி, யரியார் நெகிழத்

தணிசுருத் தட்ப

ஒருத்தி, புலவியாற் புல்லா திருந்தா ளலவுற்று
௪0. வண்டின மார்ப்ப விடைவிட்டுக் காதலன்
றண்டா ரகலம் புகும்;

ஒருத்தி, யடிதாழ் கலிங்கந் தழீஇ யொருகை
முடிதா ழிருங்கூந்தல் பற்றிப்பூ வேய்ந்த
கடிகயம் பாயு மலந்து;

௪௫. ஒருத்தி, கணங்கொண் டவைமூசக் கையாற்றாள் பூண்ட
மணங்கமழ் கோதை பரிபு[5]கொண் டோச்சி
வணங்குகாழ் வங்கம் புகும்;

ஒருத்தி, யிறந்த களியா னிதழ்மறைந்த கண்ணள்
பறந்தவை மூசக் கடிவாள் கடியு
ருO. மிடந்தேற்றாள் சோர்ந்தனள் கை;
ஆங்க, கடிகாவிற் காலொற்ற வொல்கி யொசியாக்
கொடிகொடி தம்மிற் பிணங்கி யவைபோற்

(பாடம்) 1. லோராங் காங்கமூச. 2. யிகலார். 3. திலதம். 4. ரைசெறி. 5. பகில

மருதம் - உஎ]

மருதக்கலி

உகூச

றெரியிழை யார்ப்ப மயங்கி யிரிவுற்றார் வண்டிற்கு
வண்டலவர்[1] கண்டேன் யான்;

ருரு. நின்னைநின் பெண்டிர்
புலந்தனவு நீயவர்
முன்னடி யொல்கி

யுணர்த்தினவும் பன்மாண்
கனவின் றலையிட் டுரையல்
சினைஇயான்
செய்வதி லென்பதோ கூறு;

பொய்கூறேன், அன்ன
வகையால்யான் கண்ட கனவுதா
னன்வாயாக்[2] காண்டை
நறுநுதால் பன்மாணுங்
கூடிப் புணர்ந்தீர் பிரியன்மி
னீடிப்
பிரிந்தீர் புணர்தம்மி
னென்பன போல

வரும்பனிப் பூஞ்சினை தோறு

மிருங்குயி
லாறு தகவும் பொழுதினன்

மேவர கூரு.

நான்மாடக் கூடன் மகளிரு

மைந்தருந்
தேனிமிர் காவிற்

புணர்ந்திருந் தாடுமா
ராறு விருப்போ

டணியயர்ப[3] காமற்கு
வேனில் விருந்தெதிர்

கொண்டு.

இது பரத்தையிற்பிரிந்து வந்த தலைவன்

வாயில்பெறாது ஆற்றாமைவாயிலாகட்
புக்குத், தலைவியை நயப்பித்தல்
காரணமாகத் தெய்வமகளிர்
பொய்தலயர்வ
தோர்[4] கனாக்கண்டேன்; அது
நன்வாயாப்[5] பருவம் வந்து இறுத்தது
பாரா யென ஊடறீர்வது பயனாகத்
தலைவிக்குக் கூறியது.

(க—கூ) புனவளர்

மற்று :—

(இ - ள்.) புனத்திடத்து
வளர்ந்த பூவையுடைய கொடியை
யொப்பாய்! பொருள்வயிற்சென்று
முயலாதே வருந்திருந்தவர்களுக்கு

அவர்கள் இருந்த இடங்களிலே இடங்களிலே மிக்க பொருளுந் தானே செல்லுதலும் அரிதாயிருத்தலாலே உலகந் தமக்கு உரித்தாக அறத்தைச்

செய்யாது இப்படி இருக்கவும் அறஞ்செய்தற்கு அமைந்தோர் அறுதியாக அவ்வறத்தைச் செய்தலுங் கனவிடத்தின்றாய்ப்போகத் தாம் முயங்கிய

மகளிருடைய முலையினிடையிலே அழுந்திய இன்பத்தே மயங்கி விரும்பு நின்ற கணவரை மகளிர் ஊடலாற் பிரிதலும் அப்பொழுதே ஊடறீர்ந்து புணர்தலுமாகிய தம்மின் மாறுன இன்பத்தைக்* கனவிடத்தே தருதலை

---

* குறள். ககஅ0.

(பாடம்) 1. வண்டல்வரக். 2. னவாகக். 3. டணியயர்பு. 4. பொய்தலாடுவதோர். 5. கனவாய்ப்.

டள0

பிலக்காதாம்; இனி மிகுத்த காதலாற் கனவென்று சொல்லப்பட்டது ஓர் அழகினையுடைத்தாகிய நீர்மையையுடைத்தாயிருந்த தென்றான்;

என்றது, "இன்பமும் பொருளும் அறனு"* மென்று ஆசிரியர் கூறிய இலக்கணம்பற்றிச் சிறந்த இன்பத்தையே தந்து, ஏனை அறனும் பொருளுந் தாராமற்போயிற்று, இக்கனவு; ஆதலால் அதனை 'ஓர் காரிகைநீர்த்' தென்றான்.

'பொருளு' மென்ற உம்மை சிறப்பு.

'மற்று' : அசை.

(க0-கரு) நனவினும்

. . . னாகத்து :—

(இ - ள்.) நறிய

நுதலினையுடையாய் !

ஆரவாரம்பொருந்தின மதுரை யினுடைய வரையை மாறுபடுகின்ற நீண்ட மதிலிடத்தைச் சூழ்ந்த வையையாற்றங்கரையை அழகுபெறுத்தின பொழிலினிடத்தே நன விடத்தே சென்றாற்போல இராப்பொழுதிலே கனவிடத்தே சென்றேனென்றான் ;

(கஅ—கரு) உரையினி . . . . நீ :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி, அமையாத இனிய மென்மையினை

யுடைய நெடுந்தகாய்! பின்னை நீ அவ்விடத்துக் கண்டது எத்தன்மைத்து? அதனை இனிச்சொல்லென்றாள்;

(கசு—உ0) கண்டது . . . . நிறைவதை :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவன், யான்கண்டது கேள்; அன்னங்கள் தன்னிடத்தைவிட்டுப் போகாத இமயமலையில் ஒருபக்கத்தே அழகிய விசும்பிலே இரைகவர்ந்த இளைப்பால் ஓய்ந்து பறக்கும் மடப்பத்தை யுடைத்தாகிய நடையினையுடைய அன்னத்திரள்

அந்திக்காலத்தே தங்குதல் கொண்டிருந்த தன்மையவாகத், துறை தன்னிடத்தேகொண்டு உயர்ந்த

மணற்குன்றிலே நல்லார், தம்முடனே அமர்ந்த ஆயத்தாருடனே பொருந்தி நிறைந்திருக்கின்றதனைக் கண்டேனென்றான் ;

மாலினம் 'மாயின'மென மருஉவான் யகர உடம்படுமெய் பெற்றது. அன்னவாக வெனவிரிக்க.

(உக—உஉ) ஓர்த்த . . . .

கஅ :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி,

கொட்டுகின்றவன் தன்மனத்தில்
ஓர்த்த ஓசையைத் தானும் ஒலிக்கும்
பறைபோல நின்னுடைய நெஞ்சத்து
விரும்பின இன்பத்தையே கனவாகக் கண்டாயென்றான் ;

மருதம் - உஎ]

மருதக்கலி

உஎக

(உரு—உசு) கேட்டை . . . .
னினம் :—

(இ - ள்.) அதுகேட்ட
தலைவன், நீ விரையாதே கொள் ;
பின்னைக்
கோபிப்பாயென்றான் ; அதுகேட்ட

தலைவி, மேல் உரை யென்றாள். அது
கேட்ட தலைவன், இனிய
நகையினையுடைய நல்லாய்! ஆண்டுப்
பிறந்தது
இதுவாயிருக்கும்; அதனைக் கேள்;
கொடியையொத்த அழகினையுடையார்
தாம் அக் காவிடத்து எழுந்து
நின்றதோர் பூங்கொடியை
எல்லார்க்கும்
பொதுவாகக்கொண்டு வளைத்து
அதிற் கொத்துக்களைப் பறிக்க
விரைந்த[1]
வரியினையுடைய வண்டின் திரள்
கொம்புகள் அலர்ந்த வேப்பந்தாரினை.
யுடைய பொதியிலையுடையவன்[2]

பொருத பகைப்புலத்து அரண்போல
அவ்
விடத்தே உடைந்தது ;

'உடைந்தன்'றென்பது றகரம்
ஊர்ந்த குன்றிய லுகரவீற்று முற்றுச்
சொல், வந்தன்றென்பது போல.

(கூ0—௯௧) மற்றங்கே . . . . புதும் :—

(இ - ள்.) பின்னை அப்படியே உலுடைந்த, தம்மிலொத்த இணர்களிலே மொய்த்த வண்டுகளெல்லாம் அவ்விடத்து நின்ற அழகினையுடைய மகளிர் நலத்தைக் கைக்கொண்டு

நுகர்வனபோல ஒருபடிப்பட 3
மொய்க்கை யினாலே அவ் வண்டின்
போரிலே அவர்களில் ஒருத்தியுடைய
பூமாலையும் பண்ணுதல் அமைந்த
முத்தமாலையும் வேறொருத்தியுடைய
அசைதலார்ந்த தொடியோடே
தடுத்துக்கொள்ளாநிற்க ;
ஒருத்தியுடைய நெற்றியிற்
றிலகத்தைச் சேர்ந்த
தலையிற்கிடந்த தெரிந்த
முத்துவடத்தை வேறொருத்தியுடைய
அழகினையுடைய காதிற்கிடந்த அழகு
மாட்சிமைப் பட்ட விளங்குகின்ற
மகரக்குழை தடக்கிக்கொள்ளாநிற்க;
ஒருத்தியுடைய

திதலை நிறைந்த அகன்ற அல்குலிற் றுகிலை வேறொருத்தியுடைய உள்ளிடு மணியமைந்த சிலம்பிடத்திற்கிடந்த சுரூவடிவாகிய மூட்டுவாயிரும்புகள்

தளைத்துக்கொள்ளாநிற்க; ஒருத்தி புலவியாலே கணவனைப் புல்லாதிருந்தவள்

வண்டினம் மொய்த்து ஆரவாரிக்கையினாலே வருத்தமுற்று அப்புலவியை நடுவே கைவிட்டுக் கணவன் வணங்குகையினாலே அவனுடைய குளிர்ந்த

மாலையையுடைய மார்பிடத்தே முயங்கும்;

செயவெனெச்சங்கள் புகுமென்னும் பிறவினை கொண்டன.

(௪௨—௪௪) ஒருத்தி மலந்து :—

(இ - ள்.) ஒருத்தி, அடியிலே தாழ்ந்த துகிலை ஒரு கையாலே தழுவிக் கொண்டு மற்றைக் கையாலே முடித்த முடி குலைந்த கரிதாகிய கூந்தலைப் பிடித்துக்கொண்டு அலவுற்று மிகுதியையுடைய பூவேய்ந்த குளத்திலே பாயாநிற்கும்;

(பாடம்) 1. இரைந்து. 2. பொதியிலையுடையவன். 3. ஒருபடிப்படி.

[கலி - கூஉ

(சரு–சஎ) ஒருத்தி . . .

புதம் :—

(இ - ள்.) ஒருத்தி, திரட்சிகொண்டு வண்டுகள் மொய்க்கையினாலே கையாற் கடியமாட்டாளாய் மணம் நாறுகின்ற மாலையை அறுத்துக் கொண்டு ஒட்டி, அதற்கு அவை போகாமை கண்டு வளர்ந்த தண்டுகள் தனக்கு உள்வலியாக உள்ளே பூண்ட ஒடத்தே பாயும் ;

காழ்பூண்ட வென்க. 'பரிபு' : செய்பெனெச்சம்.

(சஅ–ரு0) ஒருத்தி . . . . கை :—

(இ - ள்.) ஒருத்தி, அறிவுபோதற்குக் காரணமான கள்ளின் களிப்பால் இமை கூடுகையினாலே பார்வை[1] மறைந்த கண்ணையுடையளாய்ப் பறந்த வண்டுகள் மொய்க்க ஒட்டுகின்றவள் தன் களிப்பாலே அவற்றை ஒட்டும் இடம் அறியாளாய்க் கைசோர்ந்தாள்.

கைசோர்ந்தனள் : வினைவினை, முதலொடு முடிந்தது.

(௯க) ஆங்க :—

உரையசை ;

அங்ஙனே யென நின்றது.

(௯க—௯௪) கடிகாவிற் . . .

. . . வியான் :—

(இ - ள்.) விளையாட்டையுடைய மகளிர், மிகுதியையுடைய பொழிலிலே காற்றடிக்க ஒதுங்கி வளைந்த கொடியுங் கொடியுந் தம்மிற் பிணங்கியவை போலத் தெரிந்த அணிகள் ஆரவாரிப்பத் தம்மிலே மயங்கி அவ்வண்டுகளுக்குக் கெடுதலுற்றார் ; யான் கனவைக் கண்டேனென்றான் ;

(௯டு—௯அ) நின்னைநின் . . . . கூறு :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி, நின்னை நின்னுடைய பெண்டிர் புலந்தனவற்றையும் நீ அவருடைய அடிமுன்னே வணங்கிப் புலவிதீர்த்தனவற்றையும் பலபடியாகக் கனவின் மேலிட்டுக் கூறுதல் யான் சினந்து[2] செய்வதொரு படியின்றென்பதனை உட்கொண்டோ ? சொல்லென்றாள் ;

'உரையல்' : படுத்தலோசையாற் றொழிற்பெயராயிற்று.

(௧௧–௬௮) பொய்கூறேன் . . . . கொண்டு:—

(இ - ள்.) அதுகேட்ட தலைவன், யான் பொய் சொல்லேன் ; நறிய நுதலினையுடையாய் ! பல மாட்சிமையும் உண்டாய்ப் புணர்ந்தீர் ! பிரியாதே கொள்ளும் ; புணர்ச்சி நீட்டித்து இடையே பிரிந்தீர் ! கூடுதலைத் தருமி னென்று கூறுவனபோலக், * கரியவாகிய குயில்கள் அரும்பு அவிழ்ந்த பூக்களை

* நற். ௨௨௪ ; ௨௪௧.

(பாடம்) 1. பாவை. 2. னெத்துச்.

மருதய - அ]

மருதக்கலி

உடைய யுடைய கொம்புகடோறும்

இருந்து அமையாமற் பெடையை அழைக்கும் இளவேனிற் பொழுதின்கண்ணே காமற்கு விருந்திடுதலை மேவுதல்வர எதிர்கொண்டு கூடலின் மகளிரும் அவர் கணவருந் தேனினம் ஒலிக்குங்

காவிலே கூடியிருந்து விளையாட வேண்டி அமையாத விருப்பத்தோடே அணிகளை அணிவார் ; ஆதலாற் பிரிதலும் புணர்தலுமாகிய கூற்றாலே யான் கண்ட கனவு நன்றாகிய உண்மையாம்படி நெஞ்சாலே கருதுவா யென்றான்;

'கனவு' : செய்யுண் முடிவு. * நான்கு மாடங் கூடலின், 'நான்மாடக் கூட' லென்றாயிற்று; அவை : திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை,

திருநடுவூர். இனிக், கன்னி கரியமால் காளி ஆலவாய் என்றுமாம். 'புணர் தம்மின்' : "நல்லெயிலுழந்த செல்வர்த் தம்மின்" † என்றாற் போலத் திரி

சொல்.

இஃது "உறலருங் குண்மையி ஞூடன் மிகுத்தோளைப் பிறபிற பெண்டிரிற் பெயர்த்தற் கண்ணும்" ‡ என்பதனுற் பிறபிற பெண்பால் காட்டி ஊடறீர்த்தது. புல்லாதிருந்தாளென்றதனுன் ஊடன்மிகுதி கூறி, மகளிரும் மைந்தரும் விருந்தெதிர்கொண்டு அணியயர்வர்; நாமும் அது

செய்யவேண்டும் என்றவாறு காண்க.

இதனுற் றலைவற்குக் கனவு முதற்றேன்றிப் பின்னர் விரைவு தோன்றிற்று. இது "யாறுங் குளனுங் காவுமாடி" § என்னும் சூத்திரத்தாற் காவிற் புணர்ந்திருந்தாட நீயுங் கருதெனத் தலைவிக்குக் கூறியது.

இஃது ஐஞ்சீரடுக்கியும் ஆறுமெய்பெற்றும் வந்த கலிவெண்பா;

ஆசிரியத்தளையும் வந்தது.

(உள

கூங.

வண்டூது சாந்தம்

வடுக்கொள நீவிய

தண்டாத்தீஞ் சாயற்
பரத்தை வியன்மார்ப
பண்டின்னை யல்லைமன்
னீங்கெல்லி வந்தீயக்
கண்ட தெவன்மற் றுரை ;

ரு. நன்றும், தடைஇய
மென்றோளாய் கேட்டீவா யாயி
னுடனுறை வாழ்க்கைக்
குதவி யுறையுங்
கடவுளர் கட்டங்கி னேன் ;

சோலை, மலர்வேய்ந்த

மான்பிணை யன்னார் பலர்நீ

கடவுண்மை கொண்டொழுகு வார்
௧௦. அவருள், எக்கடவுண் மற்றக் கடவுளைச் செப்பீமன் ;

---

* தொல். எழுத்து : ௨௩௪.

‡ தொல். பொருள் : ௧௫௬.

† மதுரை. ௭௩௧.

§ தொல்: பொருள். ௧௯௧.

உ௭௪

கலித்தொகை

[கலி - ௯௩

முத்தேர் முறுவலாய் நாமணம்

புக்கக்கா லிப்போழ்து போழ்தென்[1]

றதுவாய்ப்பக் கூறிய வக்கடவுண்
மற்றக் கடவுள்; அதுவொக்கும்;

நாவு ளழுந்து தலைசாய்த்து
நீகூறு
கரு. மாயமோ கைப்படுக்கப்
பட்டாய்நீ கண்டாரை
வாயாக யாங்கூற வேட்டீவாய்
கேளினி;

பெறனசை வேட்கையி
னின்குறி வாய்ப்பப்
பறிமுறை நேர்ந்த நகாராகக்[2]
கண்டார்க்

இருமுறை செய்யு முருவொடு
நும்மிற் உ0.
செறிமுறை வந்த கடவுளைக்
கண்டாயோ ;
நறுந்தண் டகரமு நானமு
நாறு

நெறிந்த குரற்கூந்த ளணிக்
கொப்ப,
நோக்கிற்
பிணிகொள்ளுங் கண்ணொடு மேனுணீ
,
பூப்பலி விட்ட
கடவுளைக் கண்டாயோ ; உரு.

ஈரணிக் கேற்ற வொடியாப்
படிவத்துச்
சூர்கொன்ற செவ்வேலாற்
பாடிப் பலநாளு
மாராக் கனைகாமங் குன்றத்து நின்னொடு
மாரி யிறுத்த கடவுளைக் கண்டாயோ ;
கண்ட கடவுளர் தம்முளு
நின்னை
வெறிகொள் வியன்மார்பு வேறுகச் செய்து
குறிகொளச் செய்தார்யார் செப்புமற் றியாருஞ்
சிறுவரைத் தங்கின் வெகுள்வர் செறுதக்காய்
தேறினேன் சென்றீநீ செல்லா விடுவாயே[3]
னற்று ரகலத்துக் கோர்சார[4] மேவிய
நெட்டிருங் கூந்தற் கடவுள ரெல்லார்க்கு
முட்டுப்பா டாகலு முண்டு.

இது "காவற்பாங்கி ஞங்கோர் பக்கமும்"* என்புழி, ஆங்கோர் பக்கமான கடவுளரைக் கண்டு தங்கினேனென்ற தலைவற்கு, நீ கண்ட கடவுளர் இவரெனக் கூறிப் புலந்தது.

* தொல். பொருள் : சுக.

(பாடம்) 1. விப்பொழுது பொழுதேன். 2. நகையாரர்க்.
3. விடுவாயேக் ...

மருதம் - உஅ]

மருதக்கலி

உஎரு

(க—ச) வண்டூது . . . .

றுரை :—

(இ - ள்.) அமையாத இனிய மென்மையினையும் பாத்தைமைக் குணத் தையுமுடைய, வண்டுகள்

ஊதுஞ் சந்தனத்தைக் கை
வடுக்கொளப் பூசின அகற்சியையுடைய
மார்பனே ! முன்பு இத்தன்மையை
யுடையை யல்லை ; அத்தன்மை
போயிற்று ; இவ்விடத்து
இராக்காலத்தேவர நீ புறத்துப்
போய்க் கண்ட விநோதம்
எத்தன்மைத்து ? பின்னை அதனைக்
கூறென்றாள் ;

. . . . .

(ரு—எ) நன்றும் . . . .
னேன் :—

(இ - ள்.) அதுகேட்ட
தலைவன், பெரிதும் பெருத்த
மெல்லிய தோளினையுடையாய் ! யான்

கூறுகின்றதனைக் கேட்பாயாயிற்[1] கேள்; யாம் இருவரும் போய் உடனே துறவகத்திருக்கும்[2] வாழ்க்கைக்கு உதவியா

யிருக்குங் கடவுளரைக் கண்டு அவரிடத்தே தங்கினேனென்றான்;

இல்லறம் நிகழ்த்தி வானப்பிரத்தம் நிகழ்த்துங்கால் உடனுறைதலின், ' உடனுறை வாழ்க்கை ' யென்றான். நூல்களான் உணர்த்துதலை ' உதவி ' யென்றான். அது, " காமஞ்சான்ற " * என்னுஞ் சூத்திரத்திற், " சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே " என்பதனானுணர்க.

(அ—௬௦) சோலை . . . .

மன் :— .

(இ - ள்.) அதுகேட்ட தலைவி, கட்வுட்டன்மை உண்மையாகக் கொண்டு நடத்துவார், சோலையில் மலரைச் சூடின மான்பிணைபோலும் நோக்கினையுடைய பரத்தையர் பலருளர் ; அப்பரத்தையருள் நீ கூறிவந்த கடவுள் எந்தக் கடவுள்? அக்கடவுளைச் சொல்லுவாயென்றாள் ;

'மற்று' : வினைமாற்று.

(கக—கரு) முத்தேர் .

கடவுள் :—

(இ - ள்.) பின்னை அந்தக் கடவுள், மூத்தை யொக்கும் முறுவலை யுடையாய்! நாம் மணத்தைச் செய்ய இப்பொழுது முகுத்தமென்று[3]

அம்முகுத்தம் வாய்ப்பச் சொன்ன அந்தக் கடவுள் காண் என்றான்;

'புக்கக்கால்': காலீற்று வினையெச்சம். முற்கூறிய கடவுடன்னையே இவன் அறியுமாற்றான் மீட்டுங் கூறினான், அவற்கு எல்லாக் கண்களும் உளவாகலின்.

(கச)

அதுவோக்கும்:—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி, நீ கூறியது எனக்கும் ஒக்குமெனத் தனதொவ்வாமை கூறினாள்;

(௧௪—௧௫) நாவு . . . . . கேளினி :—

(இ - ள்.) உள்ளே அழுந்து நாவுடனே தலையைச் சாய்த்து நீ கூறுங் கூற்றோ பொய்; ஆகையினாலே நீ எம்மால் அகப்படுக்கப்பட்டாய்; நீ கண்ட கடவுளரை உண்மையாக

* தொல், பொருள், ௧௯௨.

யாங்கள் சொல்லக் கேட்க விரும்பிய வனே! இனி யாங்கள் கூறக் கேளென்றாள்;

(கஎ—உ0) பெறனசை . .

. . கண்டாயோ :—

(இ - ள்.) நின்னைப் பெறுதலை நச்சின ஆசையாலே நீ செய்த குறியிடத்தே தப்பாமல் வந்த கடவுள்; கண்டவர்களுக்கு இறந்துபடும் நிலைமையைச் செய்யும் வடிவோடே விழுந்தெழுந்த முறைமை சேர்ந்த எயிற்றினை யுடையராய் நும் மனையிடத்தே சேரும் முறைமையோடே வந்த கடவுளரை நீ

கண்டாயோ வென்றான் ;

'நகார்' : ஆகுபெயர்.

பொருள்தனைப் பெறுதல்நச்சின ஆசையாலே நின்மனத்திற் கருதிய கருத்துக்களெல்லாம் வாய்ப்பப் பறிந்துபோம் முறைமையைச் சேர்ந்த கடவுள் ; மன வேட்கையை அடக்கும் முறைமையை இகழாராய்த் தம்மைக் கண்டவர்களுக்குத் தீவினை இறும் முறைமையைக் கொடுக்கும் வடிவுடனே நும் இவ்விடத்தே வந்த கடவுளரைக் கண்டாயோ வென்று வேறுமொரு பொருள் தோன்றியவாறு

காண்க.

'வாய்ப்பப் பறிமுறை' யென்றார், வேரோடே பறிதலின். செறிதல்: அடக்கம். நகை: எள்ளல்.

(உக—உச) நறுந்தண் . . . . கண்டாயோ:—

(இ - ள்.) பார்வையாலே பிணித்தலைக் கொள்ளுங் கண் வருத்துத லாலே நறிய(தென) குளிர்ந்த மயிர்ச்சாந்தமும் புழுகும் நாறும் அறல்பட்ட பற்றத்தை யுடைத்தாகிய மயிர்க்கு நாட்காலத்து அணியும் அணிக்குப் பொருந்த நீ முதனுட் பூவைப் பலியாகப் போகவிட்ட கடவுளரைக் கண்டாயோ வென்றான்;

ஒடு: ஆலாக்குக. மேற் 'கடவு' ளென்றதற்கேற்பப் 'பலி' யென்றார். அருளுக்கினுற் பிணியை வாங்கிக்கொள்ளுங் கண்ணின ராகையாலே கூந்தலையுடையாள் நாட்காலத்து அணிதற்கேற்பப் பூப்பலியைக் கைவிட்டு அர்ச்சித்த கடவுளரென்பதும் ஒன்று. 'கூந்தல்': ஆகுபெயர், பராசத்தி யைப் பூவால் அர்ச்சித்த கடவுளரென்றுணர்க. நீ கண்டாயோ வென்க.

(உரு—உஅ) ஈரணிக் . . . . . கண்டாயோ:—

(இ - ள்.) கெடாத வீரத்தாலே முகங் குதிரைமுகமும் உடல் மக்களுடலுமாகிய இரண்டு அழகுக்குப் பொருந்திய சூரபன்மாவைக்

மருதக்கலி

உஎஎ

கொன்ற சிவந்த வேலையுடைய முருகனைப் புகழ்ந்து நிறையாத செறிந்த காமவேட்கையாலே திருப்பரங்குன்றினிடத்தே நின்னோடே மாரிக் காலத்தே பலநாளுந் தங்கின கடவுளரைக் கண்டாயோ வென்றான் ;*

இனிப், பெண்ணும் ஆணும் ஆகிய இரண்டு அழகினுக்கும்

பொருந்திய செவ்விதாகிய எழுச்சியையுடைய இறைவனை யமையாத செறிந்த வீடு பேற்றில் ஆசையாலே பலநாளும் புகழ்ந்து கொடுந்தொழில்களைக் கொன்ற கெடாத விரதத்தோடே மலைகளிலே மாரிக்காலத்திலே நின்னோடு உறவு கொண்டிருந்த தவஞ்செய்த கடவுளரைக் கண்டாயோ வென்பதும் ஒன்று தோன்றிற்று. சத்தியும் சிவனும் ஒன்றாகிய வடிவைப் பாடி என்க. நின்னொடென்ற ஒடுவிற்கு உறவுகொண்டிருந்தவென ஒரு வினை வருவிக்க.

(உக—ருக) கண்ட . . . .
மூண்டு.—

(இ - ள்.) நீ கண்ட கடவுளர் தங்களுள்ளும் நின் மணத்தைத் தன்னிடத்தே கொண்ட அகலத்தையுடைய மார்பைப் பழைய தன்மை குலைந்துபோம்படி பண்ணிப் பிறர் முயங்காதபடி அடையாளமாக வடுப் படுத்துதலைச் செய்தார் யார் சொல்லு ; பின்னை அப்பரத்தையர் யாவருஞ்

சிறிதாகிய காலத்தளவு இங்கே தங்குவையாயின் கோபிப்பார் ; ஆகையினாலே எம்மாற் செறுக்கத்தக்கவனே ! நின் பொய்ம்மை யெல்லாம் உள்ளபடி யான்

அறிந்து தெளிந்தேன் ; இனி

அவர்பாற் செல்லா தொழிவையாயின்

நினது நல்ல தாரையுடைய

மார்பத்துக்கு ஒரு முட்டுப்பாடு

உண்டாமது

நீ சாரும்படி நின்னை முயங்கிய நெடிய கரிய கூந்தலையுடைய பரத்தைய ரெல்லார்க்கும் முட்டுப்பாடு உண்டாதலும் உண்டு; ஆதலால் ஆண்டே

செல்லெனப் புலந்து கூறினாள் ;

'தம்முனு' மென்ற உம்மை சிறப்பும்மை.

இனிக் கடவுளர் தம்முனும் வியன்மார்பையுடைய நின்னை மனம் வேறாகப் பண்ணி வானப்பிரத்தத்தைக் குறித்தல் கொள்ளும்படி பண்ணின இருடிகள் யார்தான் சொல்லு; யாவரும் வெகுள்வர்; அவர்பாற் செல்லா தொழிவாயேல், நல்ல ஒழுங்கினை யுடைத்தாகிய கடாவின் புறத்தே தோன் றும் விடைகளையுடைய, நீரைப் பலகாலும் சாருதலாலே ஈரம் பொருந்திய நெடிய கரிய சடையினையுடைய † இருடிகளெல்லார்க்கும் முட்டுப்பாடு பிறத்தலும் உண்டென்பதும் ஒன்று தோன்றநின்றது. அவர்க்கு முட்டுப் பாடு நினக்குக் கூடும் பொருள்கள் கூடாமையாலுள்ள முட்டுப்பாடு.

'தார்' : ஒழுங்கு, 'அகல' மென்றது பரசமயத்தார் கூறுங் கடாவிற்கு விடையாகக் கூறும் விகற்பங்களை. "தன்னான் மருங்கினும் பிறனான் மருங்கினும், துன்னிய கடாவின் புறந்தோன்றும் விகற்பம், பன்னிய

---

* முருகு. ருள - சுக. † பு.

வெ, மாலை. வாகை : கசு : புறம், உருக.

உஎஅ

கல்தம்தாகை
[கலி - கூசு

வ கல மென்மஞர் புலவர் ”
“தெள்ளிது ”* என்றதஞன் கின்னே
மார்பை வேருகச் செய்தென்ரூர்.

இதனுற் றலைவிக்கு இழிவுந்,
தலைவற்கு அசைவும் பிறந்தது.

“மரபுநிலை திரியா மாட்சிய ” †
என்னும் சூத்திரத்தில் தலைவி கடவு
ளரைப் பரத்தையராகக் கூறுமென்பது
கூறினும்.

இஃது ஐஞ்சீரடுக்கி வெண்பாவாய் வந்து இடைநிலைப் பாட்டுப் பெற்று வருதலிற் கலிவெண்பாவுறுப்பு ஒத்துப் பாவேறுபட்டு வந்த கொச்சகம்.

(உஅ)

கூச.

என்னோற் றனைகொல்லோ
நீரு ணிழற்போ னுடங்கிய
மென்சாய
லீங்குருச்[1] சுருங்கி
யியலுவாய் நின்னோ டுசாவுவே
னின்றீத்தை ;

அன்னையோ, காண்டகை
யில்லாக் குறளூழிப் போழ்தினா
னாண்டலைக் கீன்ற பறழ்மகனே
நீயெம்மை
வேண்டுவ லென்று விலக்கினை
நின்போல்வார்
தீண்டப் பெறுபவோ மற்று;
மாண்ட,[2] எறித்த
படைபோன் முடங்கி மடங்கி
நெறித்துவிட் டன்ன
நிறையேரா லென்னைப்
பொறுக்கல்லா நோய்

செய்தாய் பொறீஇ நிறுக்கல்லே
னீநல்கி னுண்டென் னுயிர் ;

குறிப்புக்காண், வல்லுப் பலகை யெடுத்து நிறுத்தன்ன
கல்லாக் குறள கடும்பகல் வந்தெம்மை
கரு. யில்லத்து வாவென மெய்கொளீஇ யெல்லாநின்
பெண்டி ருளர்மன்னோ கூறு ;

நல்லாய்கேள், உக்கத்து மேலு நடுவுயர்ந்து வாள்வாய
கொக்குரித் தன்ன கொடுமடாய் நின்னையான்
புக்ககலம் புல்லினெஞ் சூன்றும் புறம்புல்லி
உ0. னக்குளுத்துப் புல்லலு மாற்றே னருளீமோ
பக்கத்துப் புல்லச் [3] சிறிது ;

* தொல். சொல் : அஅ. † தொல். பொருள் : சரு.
(பாடம்) 1. லீங்குச் 2. மாண்டை. 3. புல்லல்.

போசித்தை, மக்கண் முரியேஎ மாநினித் தொக்க
மரக்கோட்டஞ் சேர்ந்தெழுந்த பூங்கொடி போல
நிரப்பமில் யாக்கை தழீஇயின[1] ரெம்மைப்
௨௫. புரப்பேமென் பாரும் பலராற் பரத்தையென்
பக்கத்துப் புல்லீயா யென்னுமாற் றொக்க
வுழுந்தினுந் துவ்வாக் குறுவட்டா நின்னி
னிழிந்ததோ கூனின் பிறப்புக் கழிந்தாங்கே
யாம்வீழ்து மென்றுதன் பின்செலவு முறநீயாக்
௩௦. கூனிகுழை யுங்குழைவு காண் ;

யாமை யெடுத்து நிறுத்தற்றாற் றோளிரண்டும் வீசி
யாம்வேண்டே மென்று விலக்கவு மெம்வீழுங்

காமர் நடக்கு நடைகாண்

கவர்கணைச்

சாமனார் தம்முன் செலவு

காண்க ;

௩௫. ஓஓகாண், நம்மு ணகுதற் றொடீஇயர் நம்முணு
முசாவுவந்[2] கோன்டிதொட் டேன் ;

ஆங்காக, சாயலின் மார்ப
வடங்கினேன் என
பேயும் பேயுந் துள்ள
லுறுமெனக்
கோயிலுட் கண்டார் நகாமை
வேண்டுவ
௪௰. றண்டாத்[3] தகடுருவ
வேறுகக் காவின்கீழ்ப்
போத ரகடாரப் புல்லி
முயங்கும்வேந்
துகடபு[4] காட்சி யவையத்தா
ரோலை
முகடுகாப் பியாத்துவிட் டாங்கு.

இஃது " அடியோர் பாங்கினும் வினைவலர்
தென்மனர் புலவர் "* என்பதனால்
உறழ்ந்துகூறிக் கூடியது.[5]

(க—ச) என்றாேற் . . .

பாங்கினுங், கடிவரை யிலபுறத்
அடியோராகிய கூனுங் குறளும்

. . .

னின்றீத்தை :—

(இ - ள்.) கரையில்
நின்றதொன்றின் நிழல் நீருக்குள்ளே

நடங்கி னாற்போல நடங்கிய மெல்லிய மென்மையோடே இவ்விடத்து உடலிலே கூன்புறப்பட்டு நடக்கின்றவளே ! நின்னோடு ஒருகாரியத்தை உசாவுவேன் ;

---

* தொல். பொருள் : உக.

(பாடம்) 1. தழீஇய. 2. மூசாஅக். 3. கண்டாய். 4. தகைமுர்பு. 5. கூடிக் கூறியது.

உ௮௦
கலித்தொகை
[கலி - கூ

அங்ஙனம் உசாவுதற்கு நீ என்ன நல்வினையைச் செய்தாய் காண்?
இங்ஙனே
நிற்பாயாக வென்றான் குறளன்;

'இயலுவாய்': வினைத்திரி சொல்.

(௫-அ) அன்னையோ . . . .
மற்று:—

(இ - ள்.) அதுகேட்ட கூனி, அம்மையோவென இகழ்ந்து தன் நெஞ்சிற் கூறிக், கண்ணாற் பார்க்குந் தன்மை யில்லாத குறளாய்ப்

பிறத்தற்கு ஏதுவாகிய நாழிகையின்
முகூர்த்தத்தே ஆண்டலைப் புள்ளுக்குத்
தன் பெடை ஈன்ற பறழாய
மகனே ! நீ எம்மை
விரும்புவேனென்று
போகாமற் றடுத்தாய் ;
நின்னைப்போற் குறளாயிருப்பார்
பிள்ளை என்னைத்
தீண்டப் பெறுவார்களோ வென்றாள்
;
"பறழெனப் படினு முறழாண்
டில்லை"* என்பதனாற் பறழ் பறவைக்
காகா தாயினும், இவனை 'யாமை
யெடுத்து நிறுத்தற்றால்' என ஊர்
வனவாகக் கூறலிற் 'பற' ழென்றார்.
தலை, ஆண்டலையாயிருத்தல் பற்றி

ஆண்டலைக்கு ஈன்ற மகனென்றான்.

(கூ—கஉ) மாண்ட

. . . . . ணுயிர் :—

(இ-ள்.) அதுகேட்ட குறளன்,

மாட்சிமைப்பட்ட கலப்பையிற் றைக்கும்

படைவாள்† போலே ஓரிடங் கூனுய்ப் புறப்பட்டு ஓரிடம் முன்னே வளைந்து வலிய முறித்து விட்டாற்போன்ற நிறைந்த அழகாலே என்னைப் பொறுக்கல்லாத காமநோயைச் செய்தாய்; யான் ஆற்றி நிறுக்கமாட்டேன்; நீ அருளுவாயாயின் என்னுயிருண்டு; இனி நின் நினைவைக் கூறென்றான்; பொறியும் பாடம்.

(கூ—கசு) குறிப்புக்காண் . . . . கூறு :—

(இ - ள்.) அதுகேட்ட கூனி, இவன் மனக் குறிப்பைப் பாராயென, நெஞ்சொடு கூறி, நெத்தப் பலகையை எடுத்து நிறுத்தினாற்போன்ற, மகளிரைக் கூடும் முறையைக் கல்லாத குறளனே! மக்கள் இயங்காத உச்சியம்பொழுதிலே வந்து எம்மைக் கையைப்பிடித்து நின்னில்லத்தே வாவென்று சொல்லுதற்கு ஏடா! மிகவும் நின்னுடைய பெண்டிரா யிருப்பார் சிலருளரோ? சொல்லாயென்றாள்;

(கஎ—உக) நல்லாய்கேள் . . . . சிறிது :—

(இ - ள்.) அதுகேட்ட குறளன், நல்லாளே! தலைக்கு மேலும் நடு வில்லையாய் வாள்போன்ற வாயையுடைய கொக்கை உரித்தாற்போன்ற வளைந்த மடுப்பையுடையாய்! யான் கூறுகின்றதனைக் கேள்; நின்னை யான்

* தொல். பொருள்: ருசுஉ. † கோமா: கா வ

மருதம் - உ௬]

மருதக்கலி

உ௮௬

மார்பிடத்தே சென்று புல்லுவேனாயின் என்னுடைய நெஞ்சிலே அக்கூன் ஊன்றும்; முதுகிலே புல்லுவேனாயின் முதுகிற் கூன் அக்குளுக்காட்டு தலை* உடைத்து; ஆதலாற், கூடுதலே யன்றி முயங்குதலையுஞ் செய்யமாட் டேன்; இனிப் பக்கத்தே சிறிது முயங்கும்படியாக வருவாயாக

வென்றான் ;

நடுவுயர்ந்தென்றது "கோன்புயர்ந்தது" என்றாற்போல நின்றது.

(உஉ)

போதீத்தை :—

(இ - ள்.) அதுகேட்ட கூனி, சீ! கெட்ட தன்மையையுடையவனே! நீ எம்மிடத்தினின்றும் போவென்றாள் ;

(உஉ—உஅ) மக்கண் . . . .

பிறப்பு :—

(இ - ள்.) அதுகேட்டு அவுன் அணுகுதலின்,[1] மக்களிற் பாதியான வனே !, இனி நீ இந்நிலையைக் கைவிடென்று கூறிப், பின்னர்த் திரண்ட மரத்தின் வளைவான இடத்தை விட்டு நீங்காமற் பற்றி வளர்ந்த பூங்கொடி போலே எம்முடைய கூறல் வடிவொத்தலில்லாத யாக்கையை முயங்கி எம்மைப் பாதுகாப்பேமென்று கூறுவாரும் பலராயிருக்கும்; இப்பாரத்தை மையை யுடையவன் பக்கத்தைப் புல்லுதலைத்

தாராயென்று கூறாநிற்குமால்; இங்ஙனங்
கூற நமக்கு உண்டாகிய குறை
யாதுதானென அவன் கேட்பத்
தன் நெஞ்சொடு கூறிக், குறிய
வட்டின்றன்மையையுடையாய்!
பலவுங்கூடின
உழுத்தம் பணியாரத்தினுங்காட்டில்,
துய்க்கப்பட்டிருக்கின்ற கூன்சாதியி
னுடைய பிறப்பு நின்னிற்
றாழ்ந்ததோ வென்றாள்;
(உஅ—௬0) கழிந்தாங்கே
. . . . . காண்:—
(இ - ள்.) அதுகேட்ட
குறளன்,- யாம் நின்னை
விரும்புவேமென்று கூறித் தன்

பின்னே செல்லுதல் செய்தேயும் அதற்கு மனம் பொருந்தாத கூனி நம் அருகுநின்றும் அவ்விடத்தே போய் நுடங்கும் நுடக்கத்தை நெஞ்சே பாராயென அவள் கேட்பக் கூறினன்;

'உற்றீயா' : பெயரெச்சமறைத்திரிசொல்.

(௩௧—௩௪) யாமை யெடுத்து . . . . காண்க :—

(இ - ள்.) அதுகேட்ட கூனி, ஊருகின்ற யாமையை எடுத்து நேரே நிறுத்தினாற்போல நெடியனாய்த் தோளிரண்டையும் விலாவுக்குள்ளே

வீசி, யாம் நின்னை விரும்பேமென்று
விலக்காநிற்கவு மெம்மை விரும்பி
வருகின்ற காமனார் நடக்கும்
நடையை நெஞ்சே காணென்றாள்;
அது

கேட்ட குறளன், ஒருவரையொருவர் முயங்குதற்குக் காரணமான கணை

---

* அக்குளுக்காட்டுதல் :
அக்குளுப்பாய்ச்சுதல், கிச்சுக்கிச்சு
மூட்டுதல்.

(பாடம்) 1. தலைவன் உகுதலின்,

௧௨

வினையுடைய சாமனார் தமையனாகிய காமனார்
நடந்து காட்டினான்;

(கூ௫—கூச) ஒளகாண் . . .

[கவி - கூ௪

நடையை நீ காணுயென

. .

. டேன் :—

(இ - ள்.) அதுகேட்ட கூனி, ஓஒ! இவன் நடையைப் பாராயென நெஞ்சொடு கூறினள்; அதுகேட்ட குறளன், நம்முள்ளே நாங் கூடி மகிழ்தற்கு யான் நின் மெய்யைத் தீண்டுதற்குக் குறியிடம் இன்ன இன்ன இடமாமென்று நம்முள்ளே நாம் உசாவக்கடவேம்; இனி நின்னை இகழ்ந்து கூறுமைக்கு அரசன் அடியைத் தொட்டுச் சூளுற்றேனென்றான்;

'ஓஒ': இகழ்ச்சிக் குறிப்பு.

(கூஎ—௪கூ) ஆங்காக .

. . . டாங்கு :—

(இ - ள்.) அதுகேட்ட கூனி, அப்படியேயாகுக ; யானும், மென்மை
யால் இனிய மார்பனே! இகழ்ந்து கூறுதலைத் தவிர்ந்தேன்; இனி இ
கோயிலுட் கண்டவர்கள் நம்மை எளியென இகழ்ந்து பேயும் பேயு
தம்மிலே துள்ளுதலை இக் கூனுங் குறளும் உருநிற்குமெனக் கூறி நகை

திருத்தலை விரும்புவேன் ; ஆதலால், அமையாத பொற்றகடுபோலும் உருவத்தினையுடையாய் ! கோயிலுக்கு நீங்கலாகக் காவின் கீழே போதரு வாயாக ; துகள் அறுகின்ற[1] அறிவினையுடைய அவையிலுள்ளார் திரட்! பொருந்தின ஓலையின் தலையைக் கட்டி அதன் தலையிலே அரக்கிலச்சினை இட்டுவிட்டாற்போல திரம்பாத உடலி னுள்வாய் மயக்கம் பெற்று நிறை

யும்படி இறுகப் புல்லிக் கூடக்கடவேமென்றாள்.

'ஆங்கு': அசை. போதரு 'போத'ரென விகாரமாயிற்று. "தோடே மடலே"* என்னுஞ் சூத்திரத்தால் 'ஓலை' யென்றார்.

இதனால், இருவர்க்கும் முன்னர் நகை பிறந்தது; பின்னர்ப் புணர்ச்சி யுவகை பிறந்தது.

இதனுட், 'கோனடிதொட்டேன்' எனவுங் 'கோயிலுட் கண்டாா நகாமை வேண்டுவல்' எனவுங்

கூறலின், அடியோரென்பது

பெறுதும்

'கொக்குரித்தன்ன' எனத் தோல்

திரைந்தமை கூறலின், இளமைதி

திறமாகிய பெருந்திணையாயிற்று.

இது "வேட்கைமறுத்து" † என்னு

பொருளியற் சூத்திரத்தால்

வேட்கைமறுத்துக் கூறிய

பெருந்திணை

இஃது ஊடற் பகுதியாகலின்

மருதத்துக் கோத்தார்.

இஃது 'என்னோற்றனை கொல்லோ' எனவும் 'ஈங்குருச் சுருங்
எனவும் முற்றடியின்றிக்[2] குறைவுசீர்த்தாகிய சொற்சீரடியும் வந்

* தொல், பொருள், ௬௪௧. † தொல், பொருள், ௨௧௧.

மருதக்கலி
உஅரு

இரண்டடியான் இற்றதோர்
கொச்சகமும் ஐஞ்சீரடுக்கி வந்த
வெண்பா
ஐந்தும் ஐஞ்சீரடியான் வந்த
கொச்சகம் ஒன்றும் இரண்டடிக்
கொச்
கம் ஒன்றும் ஆசிரியத்தளை விரவின
கொச்சக வெண்பாவும் பெற்று வெண்
கலிப்பாவின் வேறுபட்டு வந்த கொச்சகக்கலிப்பா.

(உகூ)

கூரு.

நில்லாங்கு நில்லாங்
கிவர்தர லெல்லாநீ
நாறிருங் கூந்தலா
ரிற்செல்வா யிவ்வழி
யாறு மயங்கினை போறிநீ
வந்தாங்கே
மாறினி நின்றாங்கே
நின்மேசு வடிசிவப்பச்
ரு. செறிந்தொளிர்
வெண்பல்லா யாம்வே றியைந்த
குறும்பூழ்ப்போர் கண்டே
மனைத்தல்ல தியாது
மறிந்ததோ வில்லைநீ

வேரோர்ப் பது ;

குறும்பூழ்ப்போர்

கண்டமை கேட்டே[1] னீயென் றும்

புதுவன வீகை

வளம்பாடிக் காலிற்

௧0. பிரியாக் கவிகைப்

புலையன்றன் யாழி

னிருக்த செவிசாய்த்

தினியினிப்[2] பட்டன

வீகைப்போர் கண்டாயும்

போற்றிமெய் யெண்ணிற்

றபுத்த புலர்வில புண் ;

ஊரவர் கவ்வை யுளைந்தீயா

யல்கனின்

ரூரின்வாய்க் கொண்டு
முயங்கிப் பிடிமாண்டு
போர்வாய்ப்பக் காணினும்
போகாது கொண்டோடும்
பார்வைப்போர்
கண்டாயும் போதினின்
றேண்மேலா
மீரமாய் விட்டன புண்;
கொடிற்றுப்புண்
செய்யாது மெய்ம்முழுதுங் கையிற்
றுடைத்துநீ வேண்டினும்
வெல்லாது கொண்டோடு
மொட்டியபோர்
கண்டாயும் போதி முகந்தானே

கொட்டிக் கொடுக்குங்

குறிப்பு ;

ஆயி, ஞாயிழா யன்னவை

யானுங் கறியாமை

போற்றிய நின்மெய்

தொடுகு ;

உரு. அன்னையோ,

மெய்யைப்பொய் யென்று மயங்கிய

கையொன்

றறிகல்லாய் போறிகா ணீ

;

(பாடம்) 1. கேட்டன. 2.

திணியிளிப்.

நல்லாய், பொய்யெல்லா மேற்றித் தவறு தலைப்பெய்து
கையொடு கண்டாய் பிழைத்தே னருளினி ;

அருளுகம் யாம்யாரே மெல்லா தெருள
௩0. வளித்துநீ பண்ணிய பூழெல்லா மின்னும்
விளித்துநின் பாணனோ டாடி யளித்தி

விடலைநீ நீத்தவி ஞெய்பெரி தேய்க்கு
நடலைப்பட் டெல்லாநின் பூழ்.

இது " கொடியோர் கொடுமை சுடுமென வொடியாது, நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப், பகுதியி னீங்கிய தகுதிக்கண் "* தலைவி பரத்தையரைப் பூழாக்கிக் கூறியது.

(க—ச) நில்லாங்கு . . . . சிவப்ப :—

(இ - ள்.) வடா! நீ நாறுகின்ற கரிய கூந்தலையுடைய பரத்தையர் இல்லின்கட் செல்கின்றாயாய் இவ்விடத்துப் போகின்ற வழி தப்பி வந்தாய் போலே இருந்தாய்! நீ இவ்விடத்துப் பாந்து பாராதேகொள்; அவ்விடத்தே நில், அவ்விடத்தே நில்; இனி நின்னுடைய பரத்தையர் மனைக்கண்ணே நின் சிவந்த அடி மிகச் சிவக்கும்படி வந்தாற்போலப் போ வென்றாள்;

(ரு—எ) செறிந்தொளிர்

. . . . பது :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவன், செறிந்து விளங்குகின்ற வெள்ளிய பல்லினையுடையாய்! யாம் புதிதாக வந்து பொருந்தின குறும்பூழ்ப்போர் கண்டேம்; அவ்வளவல்லது நீ எனக்குத் தீங்காகக் கருதும் ஒழுக்கஞ் சிறிதும் யான் அறிந்ததோ இல்லையென்றான்;

ஓகாரம் ஐயம்.

(அ—கரு)

குறும்பூழ்ப்போர் . . . .

புன் :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி, நீ எந்நாளுங் குறும்பூழினது போரைக் கண்டபடியை யான் கேட்டேன்; அது கூறக் கேள்; ஒருநாட் கொடுத்தாற்போலன்றிப் புதியவாயிருக்கின்ற கொடையினது பெருமையைப் பாடி நின்னிடத்தினின்று நீங்காத, யாழ்வாசித்தலாற் கவிழ்ந்த கையினை யுடைய பாணன் தன்னுடைய யாழோசையாலே முன்பு தாழ்க்கப்பட்ட செவிகளை அவன் கூறுகின்றவற்றைக் கேட்டற்கு அவர் சாய்க்கையினுலே இப்பொழுது அக்கூற்றாலே புதிதாக அகப்பட்டனவாகிய பூழினுடைய புதிய போர்களைக் கண்டாயும்போலே இருந்தாய்; அதனை உண்மையாக

* தொல். பொருள் : கசஎ.

மருதம் - கூ0]

மருதக்கலி

உ அரு

எண்ணிற் புலர்ச்சியிலவாகிய புண்கள் உன்னைக் கொன்றன : இதனை ஆற்றியவா றென்னென்றாள் ;

இனி, நின் மெய்யிற் புலர்வில்லாப் புண்கள் எண்ணிப்பார்க்கில் அவ் வெண்ணைக் கெடுத்தனவென்றுமாம். இனி, என்றும் புதியனவாகிய

பூழினது வளப்பத்தை யாழோசைபோலே பாடி அப்பூழ் பொருத்துமிடத்த விட்டுநீங்காத புலையனென்று புலையனுக்கு அடைகூறினன். யாழோசை

கேட்டாரை அகப்படுக்குமாறுபோல இவன் பாட்டும் அகப்படுத்தலின்

யாழிற்பாடியென்றான். பூழைத் தடவிக் கவிழ்ந்த கையினையுடைய புலையன் பூழ்பொருத்துமவன்; புலையன்றன்னுடைய இப்பொழுதிப்பொழுது அகப் பட்டனவாகிய பூழ், தத்தஞ் செவிகளைச் சாய்த்து இவன் கூறும் மந்திர முதலியன* கேட்கையினாலே அவன் தன்வசமாகத் தாழ்க்கப்பட்ட பூழ்; அப் பூழின் போரைக் கண்டாயும்போறியெனப் பூழிற்கும் ஏற்பதோர் பொருளு தோன்ற நின்றது. இனி, 'யாழின் இருத்த செவி'க்கு யாழைப்போலும்

மந்திரத்தாற் றாழ்ந்த

செவியென்பாருமுளர்.

(கசு—கஅ) ஊரவர்

புண் :—

(இ - ள்.) ஊரிலுள்ளார் கூறும் அலருக்கு வருந்தாயாய்த் தங்குதலை யுடைய நின் மார்பிற் றூரிடத்தே கையாலே அணைத்துக்கொண்டு தழுவி அகப்படுத்துதலாலே மாட்சிமைப்பட்டு வேறுஞ் சிலரை அகப்படுத்திக் கொண்டு வருதற்குப் பார்வையாகப் போகவிட்ட மகளிராலே உண்டான

ஊடற்போரை வாய்ப்பக்கண்டாராகிலும் அதற்கு ஊடிப்போகாதே உன்னைக் கைக்கொண்டு நகருங் கலவிப்போரைக் கண்டாயும்போலே இருந்தாய்

நின் தோளிற் புண்களெல்லாம் புலராமல் ஈரமாயே கிடந்தனவென்றான்;

இனி, ஊரிலுள்ளார் எக்காலமும் பூழ் பொருத்தித் திரிவையென்று கூறும் ஆரவாரத்திற்கு வருந்தாயாய் மார்பிலே அணைத்துக்கொண்டு முயங்கித் தசை கரையும்படி கையாற் பிடித்தலாலே மாட்சிமைப்பட்ட தனக்கு மாறாகிய பூழின் போரை வாய்ப்பக் காணினும் அதற்கு அஞ்சிப் போகாதே போர்செய்தலைத் தன்னிடத்தேகொண்டு பின்னும் போர்செய்யும் பார்வையாகிய பூழின் போரைக் கண்டாயும்போதியென வேறுமோர் பொருள் தோன்றி நின்றவாறு காண்க.

(கக—உஉ) கோடிற்றுப்புண்

குறிப்பு :—

(இ - ள்.) இவட்கு வருத்தமாகவுங் கூடுமென்று கருதிப் புணர்ச்சிக் காலத்துக் கவுளிடத்துச் செய்யும் வடுக்களையுஞ் செய்யாமல் மெய் முழுதையுங் கையாலே எப்பொழுதுந் தடவி நீ விரும்பினும் நீ தன்னை

---

* பு. வெ. மாலை. பெருந்திணை : வென்றிப் : கூ.

(பாடம்). 1. திரிவரென்று.

[கலி - கரு

வெல்லாமற் கொண்டு புணரும் ஒட்டுதலையுடையாளது கலவிப்போரைக் கண்டாயும் போலே இருந்தாய்; நின் மனக்குறிப்பை நின் முகந்தானே காட்டிக்[1] கொடாநிற்கு மென்றாள்;

தான் விரும்பிய நீர்விளையாட்டு முதலியவற்றிலே யுடையாள்.

உன்னை ஒட்டுதலை

இனி மருந்திடுதற்குச் செவியின் மயிரைப் பறிக்குங்காற் புண்ணைப் பறியாதே மெத்தெனப் பறித்து மெய்யை முழுக்கப் பலகாற் றுடைத்து நீ இவ்வாறு கொண்டாடினும் தான் எதிர்ந்த பூழினை வெல்லாமல் அப் பூழினைக்கொண்டு போர்செய்யும் இயக்கனுகிய* பூழின் போரைக் கண்டாயும் போறியென வேறுமொருபொருள் தோன்றி நின்றவாறு காண்க.

(உரு—உச) ஆயின்

. . தொடுத :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவன், அப்படியாயின் ஆயிழாய்! நீ கூறுகின்ற அத்தன்மையவான குறிகளை யான் அவ்விடங்களிற் செய்தறியாமையை நின் னெஞ்சிடத்தே போற்றுதற்கு நின் மெய்யைத் தொட்டுச் சூளுறுவேனென்றான்;

தொடுமென்றும் பாடம்.

(உரு) அன்னையோ :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி, அம்மையோவென இகழ்ந்து கூறினாள்;

(உரு—உசு) மெய்யைப்

. . . . ணீ :—

(இ - ள்.) அதுகேட்ட தலைமகன், யான்கூறுகின்ற மெய்யைப் பொய்யென்று மயங்கிய நீ உலகவொழுக்க மொன்றும் அறியாய்போலே இருக்தாய்கா ணென்றான்;

(உஎ—உஅ) நல்லாய் . . . . . னருளினி :—

(இ - ள்.) பின்னும் நல்லாளே! யான் செய்த தவறுகளை என் தலையிலேயிட்டு என் பொய்களையெல்லாம் எனக்கு எறத் தெளிவித்து என் களவைக் கையோடே பிடித்துக்கொண்டாய்; யானும் நின்னைத் தப்பினேன்; இனி எனக்கு அருளென்றான்;

(உக—கூ) அருளுகம் . . . . . . பூழ் :—

(இ - ள்.) அதுகேட்டு அவள், எடா! யாம் நீ கூறியவாறே அருளுவேம்;[2] அங்ஙனம் அருளுதற்கு யாம் யாராந்தன்மையை யுடை

* இயக்கன் - இயக்குபவன்.

(பாடம்) 1. கொட்டிக். 2. அருளுகம்.

மருதம்-கூக]

மருதக்கலி

உஅஎ

யேம்? விடலாய்! நின் பூழெல்லாம் நின் முன்னர் அளித்துப் பின்னர்க் கைவிடுதலின் கின்னடிப்பிலே[1]

அகப்பட்டு . நோயைப் பெரிதாகப் பொருந்தும்; அவை வருந்தாதபடி நீ - உனக்கு ஆம்படி பண்ணின பூழெல்லாவற்றையும் இன்னும் நின் பாணனாலே அழைத்துவிட்டு அவற்றின் மனந்தெளியும்படி அளித்து ஆடுவாயாக வென்றாள்.

எனவே, பரத்தையர்க்கும் பூழிற்கும் ஏற்ப நின்றது.

இதனால் இருவர்க்கும் புணர்வாகிய உவகை பிறந்தது.

"கொடுமை யொழுக்கங் கோடல் வேண்டி, யடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக், காத லெங்கையர் காணி னன்றென, மாதர்

சான்ற வகையின் கண்ணும்"*

என்றதனான் 'அருளினி'யென

அடிமேல் வீழ்ந்த

வாறும், 'அருளுகம் யாம் யாரே'மெனக் காதலமைந்தவாறும், 'அளித்தி' யெனப் பணிவை நின் பெண்டிர் கொள்வரென்றவாறுங் காண்க.

இது பல கொச்சகங்களும் வருதலிற் கலிவெண்பா உறுப்பின் வேறு பட்டு வந்த கொச்சகக்கலி.

(௯0)

௧௬௫.

ஏந்தெழின் மார்ப

வெதிரல்ல நின்வாய்ச்சொற்

பாய்ந்தாய்ந்த தானைப்

பரிந்தானா மைந்தினை

சாந்தழி வேரை

சுவற்றூழ்ந்த கண்ணியை

யாங்குச்சென் றீங்குவந் தீத்தந்தாய்; கேளினி

ரு. எந்தி, எதிரிதழ் நீலம் பிணைந்தன்ன கண்ணாய்

குதிரை வழங்கிவரு வல்;

அறிந்தேன் குதிரைதான்

பால்பிரியா ஐங்கூந்தற்

பன்மயிர்க் கொய்சுவல்

மேல்விரித் தியாத்த

சிகழிகைச் செவ்வுளை

௧0. நீல மணிக்கடிகை வல்லிகை

யாப்பின்கீழ்

ஞாலியன் மென்காதிற்
புல்லிகைச் சாமரை
மத்திகைக் கண்ணுறை
யாகக் கவின்பெற்ற
வுத்தி யொருகாழ் நூ
லுத்தரியத் திண்பிடி
நேர்மணி நேர்முக்காழ்ப்
பல்பல கண்டிகைத்
கரு. தார்மணி பூண்ட தமனிய மேகலை
நூபுரப் புட்டி லடியொ டமைத்தியாத்த
வார்பொலங் கிண்கிணி
யார்ப்ப வியற்றிநீ[2]

---

* தொல். பொருள்: கசஎ.

(பா. ம்) 1 வக்கரைப்பிலே

2. பயிற்றிநீ.

காதலித் தூர்ந்தநின் காமக்
குதிரையை
யாய்சுதை மாடத்
தணிநிலா முற்றத்து
உ0. ளாதிக் கொளீஇய
வசையினை யாகுவை

வாதுவன் வாழிய நீ;

சேகா, கதிர்விரி வைகவிற்
கைவாரூஉக் கொண்ட
மதுரைப் பெருமுற்றம்
போலநின் மெய்க்கட்
குதிரையோ வீறி யது;

உரு. கூருகிர் மாண்ட குளம்பி
னதுநன்றே[1]
கோரமே வாழிகுதி ரை;

வெதிருழக்கு நாழியாற் சேதிகைக் குத்திக்
குதிரை யுடலணி போலநின் மெய்க்கட்
குதிரையோ கவ்வி யது;

சித்தை, பயமின் றியீங்குக் கடித்தது நன்றே
வியமமே வாழிகுதி ரை ;

மிகநன், றினியறிந்தே னின்றுநீ யூர்ந்த குதிரை
பெருமணம் பண்ணி யறத்தினிற் கொண்ட

பருமக் குதிரையோ வன்று பெருமநின்
னேதில் பெரும்பாணன் றாதாட வாங்கேயோர்
வாதத்தான் வந்த வளிக்குதிரை யாதி
யுருவழிக்கு மக்குதிரை யூரனீ யூரிற் பரத்தை
பரியாக வாதுவனு யென்றுமற் றச்சார்த்
திரிகுதிரை யேறிய செல்.

இது " கோடியோர் கொடுமை சுடுமென * * * பகுதியி னீங்கிய தகுதிக்கண்" தலைவி பரத்தையரைக் குதிரையாக்கிக் கூறியது.

(க—ச) ஏந்தெழின் . . . . தீத்தந்தாய் ,—

(இ - ள்.) உயர்ந்த அழகினையுடைய மார்பனே ! நின் வாயிற்சொ நினக்கு மாறல்ல ; நின் தன்மைகண்டு வினவுகின்றேன் ; நீ மடிவிரித்து க யற்று முசிந்த புடைவையையுடைய அமையாத வலியினையுடையை; ச தனம் அழிதற்குக் காரணமான வேர்வையையுடையை; தோட்கட்டிே கிடந்து நிறங்குறைந்த கண்ணியையுடையை ; ஆகையினலே எவ்விடத்ே சென்று இவ்விடத்தே வந்தாயென்றாள் ;

* தொல். பொருள் : கசஎ.

(பாடம்) 1

மருதக்கலி

உஅகூ

(சு—கூ) கேளினி

. . . . வல் :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவன், யான் கூறுகின்றதனை இப்பொழுது கேள்; உயர்ந்து தன்னில் இணையொத்த நீலப்பூவைத் தொடுத்தாலொத்த கண்ணினையுடையாய்! குதிரையேறி வருவேனென்றான்;

(எ—உக) அறிந்தேன் . . . .

நீ :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி, நீ ஏறின குதிரைதான் யானறிந்தேன்; அதனைக்கேள்; ஐம்பாற் பகுதி நீங்காத ஐந்துவகையினையுடைய கூந்தலாகிய பலமயிர்களைப் பலகாலுங் கத்திரிகையிடுங் கேசாரியின்*1 மயிரினையும், மயிர் முடியின்மேலே விரித்து நிலைபெறுத்தின துஞ்சாகிய 2 சிவந்த தலையாட்டத்தினையும், நீலமணியைத் தோலிலேவைத்துத் தைத்துச்செய்த, கட்டுவடமாகிய கழுத்திற் கட்டுதலையுடைய வல்லிகையினையும், மெல்லிய காதிற் கிடக்கும் புல்லிகை† யென்னும் பூணாகிய கீழே நாலும் இயல்பையுடைய கன்னசாமரையினையுந், தெய்வவுத்தியென்னும் பூணினருகே துவக்கி ஒரு வடமாய் நாலுஞ் சுட்டியாகிய, குதிரை கண்ணுற்கண்டு அஞ்சும்படியாக விட்டுவைத்த அழகுபெற்ற சம்மட்டியினையும்,‡ நூலாற்செய்யப்பட்ட உத்தரியமாகிய திண்ணிய குசையினையும்,§ இனமொத்த மணிகளாற் செய்த தன்னிலொத்த முக்கண்டன் கட்டுவடமாகிய பலபல நிறத்தையுடைய கண்டிகையினையும், பொன்னாற்செய்த மேகலையாகிய கழுத்திலேகட்டின சதங்கைத்தண்டையினையும், அடியிடத்தே சமைத்துக்கட்டின ஒழுகின பொன்னாற் செய்த சதங்கையும் அடியிடத்தே சமைத்துக்கட்டின சிலம்பாகிய கெச்சையும் ஆரவாரிப்பச் செலுத்தி நீ காதலித்து ஏறின விருப்பத்தையுமுடைய குதிரையைச் செண்டுவெளியிலன்றி அழகினையுடைய சாந்து வாரின மாடத்தில் அழகினையுடைய நிலாமுற்றத்தே ஆதியென்னும் நெடுஞ்செலவை அதற்குக் கொளுத்தி இளைத்தாய்; ஆகையினாலே நீ மேல் நல்ல அரசவாரியனாகுவை; நீ வாழ்வாயாக! வென்றாள்;

ஆதி மாதிரு யென்பனவற்றுள், 'ஆதி' நெடுஞ்செலவு. நீ காதலித்

தூர்ந்த, மயிர்முதலியவற்றையுடைய,

ஆதிக்கொளீஇ அசையினையென்க.

காமக்குதிரையை ஆர்ப்ப இயற்றி

'சுவல்' : ஆகுபெயர். ஒடு
உருபுமயக்கம்.
சிகழிகைமேல் விரித்தியாத்த
செவ்வுளையென மாறுக. நீலமணிக்
:டிகை யாப்பின்வல்லிகை யென்க. மென்காதிற் புல்லிகைக்கீழ் ஞாலியல்

---

* கேசரி - பிடரிமயிர். † புல்லிகை - கன்னப்பூ, வாளி, குடைக்கடுக்கன்.
‡ சம்மட்டி - சவட்டை, சாட்டை
§ குசை - கடிவாளம், குதிரைக்கயிறு.
$ மாதி - வட்டமாயோடல்,

(பாடம்) 1. கேதாரியின். 2.
குஞ்சியாகிய.
97

கலித்தொகை

[கலி - கூ

சாமரை யெனவும், உத்தி ஒருகாழ் கண்ணுறையாகக் கவின்பெற்ற மத்திகை எனவுங் கூட்டுக. தமனிய மேகலை பூண்ட மணித்தார் எனமாறுக.

'கண்டிகை' : தோலிலே மூன்று நிரையாகப் பலநிறத்து மணியை வைத்துத் தைத்துக் கழுத்திற் கட்டுவது.

'அடியொடமைத்தியாத்த' என்பதனை 'நூபுரப் புட்டில்' இரண்டற்குங் கொள்க. 'வார்பொலங் கிண்கிணி'

சதங்கை பரத்தைக்குங் குதிரைக்கும் ஒக்கும்.

'நீ காதலித் தூர்ந்தநின் காமக்குதிரை' என்பதற்கு, நீ காதலித்துப் புணர்ந்த நின்னுடைய காமத்தையுடைய பரத்தையெனினுமாம்.

(உஉ—உச) சேகா

யது :—

(இ - ள்.) ஞாயிற்றின் கதிர் விரிகின்ற விடியற்காலத்தே கையிற் பிடித்த அலகாலே தூரா லே* வாருதல் கொண்ட மதுரையிற் பெரிய முற்றம் போல நின் மெய்க்கட் சீறியது குதிரையோ?

சேவகா 'சேகா' எனத் திரிந்து நின்றது; விகாரமெனினுமாம். வாருதலென அலகும் பெற்றது. வீறுதல் - சீறுதல்.

(உடு—உக) கூருகிர் . . . . . ரை :—

(இ - ள்.) அக்குதிரை கூரிய உகிராலே மாட்சிமைப்பட்ட குரத்தினை யுடையது; ஆதலின் மிகவுங் கொடிதே; அதனை ஏறுகின்ற நீ தப்பின்றி வாழ்வாயாக!

(உள—உக) வேதிருழக்கு

. . . . யது :—

(இ - ள்.) மூங்கிலுழக்காலும் நாழியாலுஞ் சேதிகையென்னும் பெயரையுடைய தொழில்களாக வண்ணங்களைத் தோய்த்துக் குத்தின குதிரையுடலிற் பக்கரைபோல † நின்மெய்க்கட் கவ்வியது குதிரையோ? கூறுயென்றான்;

(௩௦—௩க) சீத்தை . . . .

ரை :—

(இ - ள்.) ஓ! கெட்டது! தனக்கொரு பயனின்றியிருக்க வடுப்படுதற்கு உரித்தல்லாத இடத்தே வடுப்படுத்திற்று; ஆதலால் இக்குதிரை பெரிதும் வியப்பே[1]; இக்குதிரையை ஏறின நீ தீங்கின்றி வாழ்வாயாக!

வியவென்னும் உரிச்சொல் முதனிலையாகப் பிறந்து வியமமெனப் பெயர்பட நின்றது. அம் அசை. உரிச்சொல் முதனிலையாக எல்லா நிலை

* தாரல் - செற்றை குப்பை. † பக்கரை - சேணம்.
(பாடம்) 1. வியமமே.

மருதக்கலி

௨௬௯

களும் பிறக்குமாறுணர்க. இனி விஷமமென்னும் வடமொழியென்பாரும் உளர். அது ஷ டகரம் பெற்றே வருமென உணர்க.

" வேட்கை மறுத்துக் கிளந்தாங் குரைத்தன், மரீஇய

மருங்கி னுரித்
தென மொழிப "* என்பதனுள்
ஒன்றென முடித்தலான், மரீஇயவாறு
ஏனையவற்றிற்குங்
கொள்கவென்றதனன் இழிந்தோர்
கூற்றை உயர்ந்தோர்
கூறுவன அமைத்தாம். அவை,
வீறுதலுங் கவ்வுதலும்.

(௩௨—௩௧) மிகநன்
. . . . . செலீ :—
(இ - ள்.) இன்று நீ ஏறிய
குதிரை மிகவும் நன்றாயிருந்தது ;
அதனை
இப்பொழுதறிந்தேன் ; அதுதான்
அறநூல் கூறிய வழியாற் பெரிய

மணஞ்
செய்துகொண்ட
மேகலையையுடைய †
காமக்கிழத்தியாகிய குதிரையோ
அன்று ; பெருமா! பாண்டொழிற்கு[1]
எதிலனாகிய பெரிய பாணன் தூதாய்ச்
செல்ல, அவ்விடத்துப்
பரத்தையருடனே
உண்டான மாறுபாட்டாலே வந்த
காற்றுப்போற் கடிய குதிரை ;
அதுதான் நினது பழைய உருவை
மூற்கூறிய
வாறே கெடுக்கும்; ஆதலால்
அக்குதிரையை இனி ஏறுதேகொள்;
அன்றி
அப்பரத்தை குதிரையாக நீ

அரசவாரியனாய் எக்காலும் ஏறில் மேல் சுண்டு

வாராக்கூற்றிலே திரி ; இனி சுண்டுத் தாழ்க்ககில்லாதே அக்குதிரையை

ஏறுதற்குப் போவெனத் தலைவி புலந்து கூறினாள்.

இதனுட் 'பாணன்றாதாடவந்த' என்றதனான் அவன் கூட்டிய புதிய பரத்தையரென்பதூஉம், 'அறத்தினிற் கொண்ட குதிரையோவன்று'

என்பதனாற் காமக்கிழத்தியன்றென்பதூஉம், அவன்[2] பகுதியினீங்கியதூஉம்,

மேனியில் வடுக்கள் செஞ்சினைச்

சுடுகின்றதூஉம், பரத்தையரைக் குதிரை யாகக் கூறித் தான் அதற்குத் தக்குநின்றதூஉங் கூறியவாறுணர்க. "மரபு நிலை திரியா மாட்சிய" ‡ என்பதனுல் தலைவி அங்ஙனங் கூறும் வழு அமைத் தாம். இதனுள் மடன் அழிந்த வழுவமைதி, "தன்வயிற் கரத்தலு மவன் வயின் வேட்டலு, மன்னவிடங்க ளல்வழி யெல்லா, மடனொடு நிற்றல் கடனென மொழிப" § என்பதனுள் அமைத்தாம்.

இதனுல், இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது சொற்சீரடி பெற்று

௬௭.

அன்னை கடுஞ்சொ

லறியாதாய் போலநீ

யென்னைப் புலப்ப

தொறுக்குவேன் மன்யான்

---

* தொல். பொருள். உ௧௧.

† பரும்ம் - சேணம்; மேகலையுள் பருமமென்பதுமொன்று.

‡ தொல். பொருள்: ௬௫ § தொல் - பொருள்: உ0௫.

(பாடம்) 1. ஆண்டொழிற்கு. 2. மனை.

சிறுகாலை யிற்கடை வந்து
குறிசெய்த

வல்வழி யென்றும்யான்
காணேன் றிரிதர

ரு. வெவ்வழிப் பட்டாய்
சமனாக விவ்வெள்ளல் ;

முத்தேர் முறுவலாய்

நம்வலைப் பட்டதோர்

புத்தியானை வந்தது

காண்பான்யான் றங்கினேன் ;

ஒக்கும் ;

அவ்வியானை வனப்புடைத் தாகலுங் கேட்டேன்,
அவ்வியானைதான் சுண்ணநீ ருடி நறுநரு நீருண்
டொண்ணுதல் யாத்த திலக வவிரோடைத்
தொய்யில் பொறித்த வனமுலை வான்கோட்டுத்
தொய்யகத் தோட்டிக் குழைதாழ் வடிமணி
யுத்தி பொறித்த புனைபூண் பருமத்து
முத்தேய்க்கும்வெண் பன்னகை[1] திறந்து
நன்னகர் வாயிற் கதவ வெளில் சார்ந்து[2]

தன்னலங் காட்டித் தகையினாற் காறட்டி வீழ்க்குந்
தொடர்தொட ராக வலந்து படர்செய்யு
மென்றோட் டடக்கையின் வாங்கித்தற் கண்டார்
நலங்கவளங் கொள்ளு நகைமுக வேழத்தை
யின்றுகண் டாய்போ லெவனெம்மைப் பொய்ப்பதுநீ ;

எல்லா, கெழீஇத் தொடிசெறித்த தோளிணை தத்தித்[3]
தழீஇக்கொண் டூர்ந்தாயு நீ ;

குழீஇ, அவாவினாற் றேம்புவா ரிற்கடை யாறு
வுவாவணி யூர்ந்தாயு நீ ;

மிகாஅது, சீர்ப்பட வுண்ட சிறுகளி யேருண்க
ணீர்க்குவிட் டூர்ந்தாயு நீ ;

சார்ச்சார்,[4] நெறிதா ழிருங்கூந்த லின்பெண்டி ரெல்லாஞ்
சிறுபர்க ராகச் சிறற்றூது மெல்லல[5]
விடாஅது நீயெம்மில் வந்தாயவ் வியானை
கடாஅம் படுமிடத் தோம்பு.

(பாடம்) 1. முத்தேய்க்கும் வெண்ப லளைை. 2. சாய்த்துத். 3. தாங்கித். 4. சாஅர்ச்சாஅர். 5. மெல்லச

மருதம் - ௯௨]

மருதக்கலி
உசுஙு

இது "கொடியோர் கொடுமை சுடுமென * * * பகுதியி னீங்கிய தலைவி பரத்தையரை யானையாகக் கூறிப் புலந்தது.

தகுதிக்கண்";

(க—ங) அன்னை . . . .

விவ்வெள்ளல் :—

(இ - ள்.) நீ தலைநின்று ஒழுகுகின்ற பரத்தை, யான் புணர்தற்கு நீ குறித்தல் செய்த அவ்விடத்து எந்நாளும் உன்னைக் காணேனாய்ப் பலகாலுந் திரிதலைச் செய்ய, நீ எவ்விடத்தே போனாயென்று நாட்காலத்தே எம் முடைய மனையின் வாசலிலே வந்து கடுஞ்சொற் சொல்லி உன்னைப்

புலக்
கின்ற தொழிலை நீ
அறியாதாய்போல இப்பொழுது
நடுவாக நின்று இங்
ஙனம் எம்மை இகழ்கின்ற
இகழ்ச்சியிடத்து யான் என்னை மிகவும்
ஒறுத்துக்
கொள்வேன்; நீ எந்நாளும்
அத்தன்மையையென்றாள் தலைவி.

(கூ—எ) முத்தேர் . . . .
றங்கினேன் :—

(இ - ள்.) அது கேட்ட
தலைவன், முத்தையொக்கும்

முறுவலையுடை
யாய் ! நம் வலையிலே
அகப்பட்டுவந்த தொரு புத்தியானை
ஈண்டு வந்தது;
அதனை ஏறிக் காண்பதாக யான்
தங்கினேனென்றான்;

(அ-உக) ஒக்கும் . . .
. . பொய்ப்பதுநீ:—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி,
நீ கூறியது ஒக்குமென நெஞ்சொடு
கூறிப், பின்னர் அவன் கேட்ப
அந்தப் புத்தியானை, ஒள்ளிய
நெற்றியிலே விலைபெறுத்தின
திலகமாகிய விளங்கிய பட்டத்தினையுங்,

தொய்யில் எழுதின அழகினையுடைய முலையாகிய வெண்மையையுடைய கோட்டினையுந், தொய் யகமென்னுந் தலைக்கோலமாகிய தோட்டியினையுந், தாழ்ந்த மகரக்குழை யாகிய வடித்த மணிகளையுந், திருவைப் பொறித்துவைத்த புனைந்த தலைப் பணியாகிய கழுத்துமெத்தையினையும் உடைத்து ; ஆகையினாலே அழகுடைத்தாகலும் பிறர்கூறக் கேட்டேன் ; அந்த யானை தான் சுண்ணமாகிய நீற்றை அணிந்து நறிய கள்ளாகிய நீரை உண்டு நல்ல மனைவாசலிற் கதவ மாகிய கம்பத்தைச் சேர்ந்து அதனோடே துவக்குண்டதே தனக்குச்

சங்கிலியாகக் கட்டுண்டு தன்னழகைக் காட்டி அவ்வழகாலே ஒருவரும் போகாதபடி காலைத்தடுத்து வீழ்க்கும்; அதுவேயுமன்றிப் பிறர்க்கு வருத் தத்தைச் செய்யும் மெல்லிய தோளாகிய தடக்கையாலே வாங்கிக்கொண்டு தன்னைக் கண்டாருடைய நலமாகிய கவளத்தை முத்தையொக்கும் நகை யினையுடைய வெண்பல்லைத் திறந்து கொள்ளும்; அந்தச் சிரிப்பை முகத் தேயுடைய வேழத்தை இன்று கண்டாய்போலே நீ எம்மைப் பொய்யாக்குவது என்னபயனையுடைத்தென்றாள்;

---

* தொல். பொருள். கசஎ.

“ பருமப் பணையெருத்திற் பல்யானை புண்கூர்ந்து ”* என்றார் பிறரும். ஆடியென்பது முதலிய செய்தெனெச்சங்கள் ‘ வீழ்க்கு ’ மென்னும் முற்றுச் சொல்லோடு முடிந்தன. அதுவேயுமன்றிக் கவளமுங் கொள்ளுமெனப் பின்னும் முற்றாக முடிக்க. ‘ நகைமுகவேழ ’ மென்றது சுட்டாய் நின்றது.

(௨௨—௨௩) எல்லா . . . . . நீ :—

(இ - ள்.) எடா! தொடியைச் செறித்த தோளாகிய மருமத்தே கெழுமித் தழுவிக்கொண்டு பின்னர்த் தத்தி ஏறினும் நீ ;

இது முயக்கமும் புணர்ச்சியுங் கூறிற்று. யானையாதலின், தத்தி யூர்ந்தா யென்றாள்.

(௨௪—௨௫) சூழ்இ . . . . . நீ :—

(இ - ள்.) நின்மேல் வேட்கையால் எதிர்கொண்டு வந்து கூடிப் பின்னர் வருந்துகின்ற பரத்தையருடைய மனையின் வாயிலே வழியாகக் கொண்டுபோய் அவ்வியானையை அழகுண்டாக ஏறினும் நீ ;

‘ உவா ’வென்றதனை இளையமகளிராகவும் யானையாகவுங் கூறுக. அது யுகம் உகமாயினாற்போல் நின்றது.

(௨௬—௨௭) மிகாஅது . . . . . நீ :—

(இ - ள்.) நின்னை மிகாமற் சேர்ந்தமைப்பட நுகர்ந்த சிறிய களிப்பினை யுடைய அழகினையுடையவாகிய மையுண்கண் அழும்படி சிலநாள் விட்டுப் பின்னர்க் கூடினும் நீ ;

நின்னைக் கைகடவாமல் ஓர் அளவிற்பட மதம் பிறத்தற்கு வேண்டுவனவற்றை உண்ட, சிறிய களிப்பையுடைய, மக்க ளழகை உண்டற்குக் காரணமான கண்ணையுடைய யானையை நீர்க்குவிட்டு † எறிஞய் நீ என்றும் ஒரு பொருள் தோன்ற நின்றது. அழகையுண்டல் அவரைக் கொல்லுதல். 'கண்': ஆகுபெயர்.

(உஅ—கக) சார்ச்சார் . . . . . தோம்பு:—

(இ - ள்.) சார்ந்த சார்ந்த இடங்களிலுள்ள அறல் தங்கின கரிய கூந்தலையுடைய நின் பெண்டிரெல்லாரும் நின்னைக் கோபியாதபடி எம்முடைய இல்லிலே வந்தாய்; அதற்கு அப்புத்தியானை நீ ஏறமாட்டாத பாகனும்படியாக நின்னைக் கைகடந்து மதம்படும்; அவ்விடத்து விடாதே அதனை மெல்லெனப் பரிகரித்துக் கொள்ளெனப் புலந்து கூறினள்;

புதிய பரத்தையரைப் புணர்தற்கு ஏனைப் பரத்தையர் கோபியாதபடி அதற்குப் பரிகாரமாக ஈண்டு வந்து என்பால் அடைந்தாய்; தலைவி மனைக்கண் தங்கினனென்று அவர் கருதுவாராக நினைத்தாயென்றாள்.

* களவழி. கஅ. † கலி - ருக : கஉ - கக.

மருதம் - ௬௬]

மருதக்கலி

உகரு

இதனல், இருவர்க்கும்

புணர்ச்சியுவகை பிறந்தது.

இது தரவுகொச்சகங்களுஞ் சொற்சீரடிகளும் வெண்பாக்களும் விரவி வந்த கொச்சகக்கலி.

(௬௨)

௬௮.

யாரைநீ யெம்மில் புகுதர்வா யோரும்

புதுவ மலர்தேரும் வண்டேபோல் யாழ

வதுவை விழவணி வைகலுங் காட்டினையாய்

மாட்டுமோட் டோடி மகளிர்த்

தரத்தரப்

௯. பூட்டுமோன் றிண்டேர் புடைத்த மறுகெல்லாம்
பாட்டாதல் சான்றநின் மாயப் பரத்தைமை

காட்டிய வந்தமை

கைப்படுத்தேன் பண்டெலாங்

கேட்டு மறிவேன்மன் யான்;

தெரிகோதை யந்நல்லாய்

தேறீயல் வேண்டும்

௧0. பொருகரை வாய்சூழ்ந்த பூமலி வையை
வருபுன லாடத் தவிர்ந்தேன் பெரிதென்னைச்

செய்யா மொழிவ தெவன்;

ஓஓ, புனலாடி ஞாயெனவுங்
கேட்டேன் புனலாங்கே
நீணீர் நெறிகதுப்பு வாரு
மறலாக
கரு. மாணெழி லுண்கண் பிறழுங்
கயலாகக்
கார்மலர் வேய்ந்த கமழ்பூம் பரப்பாக
நாணுச் சிறையழித்து நன்பகல் வந்தவவ்
வியாணர்ப் புதுப்புன
லாடினாய் முன்மாலைப்
பாணன் புணையாகப் புக்கு ;

உ0. ஆனாது, அளித்தமர் காதலோ டப்புன லாடி
வெளிப்படு கவ்வையை யானறித லஞ்சிக்
குளித்தொழுகி னாயெனவுங் கேட்டேன் குளித்தாங்கே
போர்த்த சினத்தாற் புருவத் திரையிடா

வார்க்கு ஞெகிழ்த்தா னன்னீர் நடைதட்பச்
உடு. சிர்த்தக வந்த புதுப்புன னின்னைக்கொண்
டீர்த்துய்ப்பக் கண்டா ருளர்;

ஈர்த்தது, உரைசால்
சிறப்பினின் னீருள்ளம் வாங்கப்

புரைதீர் புதுப்புனல்
வெள்ளத்தி னின்னுங்
கரைகண் டதூஉ மிலை;

உக்சி
கலித்தொகை
[கலி - சுஃ

சு0. நிரைதொடீஇ, பொய்யாவாட்

டானைப் புனைகழற்காற் றென்
வையைப் புதுப்புன லாடத்
தவிர்ந்தனைத் [னவல்
தெய்வத்திற் றேற்றித்
தெளிப்பேன் பெரிதென்னைச்
செய்யா மொழிவ தெவன்;

மெய்யதை, மல்கு
மலர்வேய்ந்த மாயப் புதுப்புனல்
௩௫. பல்கா லு மாடிய செல்வழி
யொல்கிக்
களைஞரு மில்வழிக் காலாழ்ந்து
தேரோ
டிளமண லுட்பட லோம்பு

முனேர்

முறுவலார்க் கோர்நகை

செய்து.

இது பரத்தையிற்பிரிந்துவந்த தலைவன் ஆற்ருமையே வாயிலாகச் சென்றுபு

அவனைக் கண்டு நீ தாழ்த்த காரணமென்னெனப், புதுப்புனலாடித் தாழ்த்;

தென்னத், தலைவி இன்ன புதப்புனலே ஆடியதென நெருங்கிக் கூறியத

(க—அ) யாரைநீ . . . .

யான் :—

(இ - ள்.) புதியனவாகிய மலர்களை ஆராய்ந்து மூசுகும் வண்டு போலே நீ புதிய பரத்தையரை நுகர்தற்கு விரும்புதலின் அவரைக் கொண்டு வருதற்கு அவரிருக்கின்ற இடந்தோறும் இடந்தோறும் ஓடிச் சென்று அப்பரத்தையரைக் கொண்டு வருகையினாலே எப்பொழுதும் பூட்டப்படும் குதிரையையுடைய திண்ணியதேர் ஆரவாரித்த தெருவுகளெல்லாம் நின் பரத்தைமை கூறிய பாட்டு உண்டாதற்குப் பொருந்தின நின் பொய்யாகிய பரத்தைமைக் குணத்தை யான்

முற்காலமெல்லாம் மிகவுங் கேட்டும் அறி திருப்பேன் ; அதுவேயன்றி நாடோறும் வரைந்து கொள்ளுங் கல்யாண மாகிய விழாவாலுண்டாகிய ஒப்பனையை என்னை ஒழிந்தவர்களுக்கு காட்டுதற்கு நீ வந்து இப்படி வருவையென நெஞ்சிலே தெளிந்து விட்டேன் ; எம்முடைய இல்லிலே புகுதலைச் செய்வாயாகிய நீ எமக்கு ஆராந்தன்மையையுடையை யென்றாள் ;

'ஓரும்' : அசை. 'கேட்டு' மென்னும் உம்மை, எச்சம். 'யாழ்': அசை

'கைப்படுத் 'துதல் ஈண்டுத் தெளிதலை

உணர்த்திநின்றது. புகுதருவா

யென்பது 'புகுதர்வா'யெனத் திரிந்து

நின்றது; உகரம் விகாரத்தாற்றொக்

கதெனினுமாம்.

(கூ—கஉ) தெரிகோதை . . . . தேவன்:—

(இ - ள்.) அதுகேட்ட தலைவன், தெரிந்த மாலையினையும் அழகினையு முடைய நல்லாய்!

யான் செய்யாதனவற்றைப் பெரிதாக என்னைச் சொல்வது என்னபயனையுடைத்து ? தன்னிடத்தேசூழ்ந்த பூக்கள்மிக்க நீர்பொருகின் [illegible]

கரையையுடைய வையையாற்றில் *
வருகின்ற நீரை யாடுதற்குத்
தங்கினேன்; அதனை நின் னெஞ்சாற்
றெளிதல் வேண்டுமென்றான்;

(கரு)

ஒரு:—

எனக், கூறிய பொய்யை வியந்து
நெஞ்சோடு கூறினாள்.

(கரு—கக) புனலாடி

புக்கு :—

(இ - ள்.) அவ்விடத்தே

புனலாடினுயென்றுங் கேட்டேன்; நீ ஆடிய புனல்தான் ஒழுகும் அறல் நீண்ட தன்மையையுடைய நெறித்த மயிராக, ஆண்டுப் பிறழுங் கயல்கள் மாட்சிமைப்பட்ட அழகினையுடைய உண்கண்ணாகக், கருமை மலர்தல் பொருந்தின கமழ்கின்ற பூக்களையுடைய சோலை யிடத்தே நாணுகிய அணையை முறித்துப் பலருங் காணும்படி பகற்பொழுதிலே வந்த அந்தப் புதுவருவாயையுடைய புதுப்புனலைப் பாணன் வாயிலாக ஊடறீர்த்து[1] மாலைக்காலத்திற்கு முன்னே சென்று ஆடினுயென்றாள்;

மலர்தல், பரத்தற்பொருட்டு.

(உ0—உக) ஆறது . . . .

நளர் :—

(இ - ள்.) மேன்மேலே தலையளிசெய்து அமர்ந்த காதலோடே

அப்புனலை ஆடுதலால் வெளிப்படுகின்ற அலரை யான் அறிதலை அஞ்சி மறைந்து நடந்தாயென்று பிறர் சொல்லவுங் கேட்டேன்; அது பொருமல்

மெய்யை மறைத்த சினத்தோடே புருவமாகிய திரையையிட்டு நல்ல நீர்மையையுடைய நின் ஒழுக்கத்தைத் தடுக்கும்படி கனம்பட வந்த சிலம் பொலியாலே ஆரவாரிக்கும் புதிய புனல் நீ குளித்த அவ்விடத்தே நின்னைக் கைக்கொண்டு இழுத்துச் செலுத்தக் கண்டாரும் உளரென்றாள்;

குளித்த கடைக்குறைந்தது. குளித்தொழுக வென்று நீரிற் பிறக்குந் தொழிலுந் தோன்றநின்றது. கோபத்தாற் பல்காலும் புருவம் எறி முரிவதனைத் 'திரையிடா' என்றாள். 'ஒழுகினுயெனவு' மென்ற உம்மை எச்சவும்மை, பாணன் புணையாக ஆடியதேயன்றியென நிற்றலின்.

(உஎ—உக) ஈர்த்தது . . . . மிலே :—

(இ - ள்.) அங்ஙனம் இழுத்த நீர் புகழமைந்த தலைமையினையுடைய நினது நீர்மையையுடைய நெஞ்சை வாங்கிக்கொள்கையினாலே குற்றமற்ற அப் புதுப் புனலினுடைய பெருக்கினின்றுங் கரையேறுதற்கு இன்னுங் கரைகண்டதுதானும் இல்லையென்றாள் ;

' இன்னு'மென்ற உம்மை சிறப்பு. கண்டதுமென்ற உம்மை காணுமையேயன்றிக் கண்டது மில்லையென எதிர்மறை.

---

* சிலப். கக : ளஎ0 - ளஎச.

(பாடம்) 1. ஊடறீர்ந்து.

38

உகஅ
கலந்தநாகை
பு. லைவ - கக

(கூ0—கூகூ) நிரைதொடீஇ

. . . . . தேவன் :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவன்,

நிரைதொடியினையுடையாய் !

தப்பாத வாட்டானையினையும்*

புனைந்த கழற்காலினையுமுடைய பாண்டிய

னது வையையாற்றின் வந்த

புதிய புனலை ஆடுதற்குத் தங்கினபடியை

வார்த்தையாற் றெளிவித்துப்,

பின்னர்த் தெய்வத்தாற்

றெளிவிப்பேன் ;†

நினக்கு யான் செய்யாதனவற்றை
என்னைப் பெரிதாகச்
சொல்லுகின்றது
என்ன பயன்தரு மென்றான்;
இந்நிலத்திற்கு உரியதெய்வம்
இந்திரன்.

(ருசா—ருஅ) மெய்யதை
. . . . செய்து :—
(இ - ள்.) பெருகிய மலரைச்
சூடின பொய்யையுடைய புதிய
புனலைப்
பலகாலும் ஆடல்வேண்டித்
தேரோடே செல்லுமிடத்து

முளையொத்த
முறுவலையுடையார்க்கு ஒரு சிரிப்பை உண்டாக்கி நின்னைப் பிடித்துக் கரை
யேற விடுவாரில்லாத காலத்தே இளமணலினுள்ளே கால்[1] நிலை தளர்ந்து
கழுமி அகப்படுதலைப் பாதுகாப்பாயாகெனத்[2] தலைவி நெருங்கிக் கூறினாள்;
இதனால், இருவருக்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.
இது தரவும் போக்கும் ஐஞ்சீரடுக்கிய பாட்டும் இடையிடைந்த கலி
வெண்பா.

கூகூ.

நறவினை

வரைந்தார்க்கும் வரையார்க்கு மவையெடுத்

தறவினை யின்புறாஉ மந்தண ரிருவருந்
திறம்வேறு செய்தியி னூனெறி பிழையாது
குழவியைப் பார்த்துறூஉந் தாய்போ லுலகத்து
மழைசுரந் தளித்தோம்பு நல்லூழி யாவர்க்கும்
பிழையாது வருதனின் செம்மையிற் றரவாய்ந்த
விழையணி கொடித்திண்டே ரினமணி யானையாய் ;

அறளிழ லெனக்கொண்டா யாய்குடை யக்குடைப்
புறநிழற்கீழ்ப் பட்டாளோ விவளிவட் காண்டிகா
பிறைநுதல் பசப்பூரப் பெருவிதுப் புற்றாளே ;

பொய்யாமை நுவலுநின் செங்கோலச்[3] செங்கோலின்
செய்தொழிற்கீழ்ப் பட்டாளோ விவளிவட் காண்டிகா
காமநோய் கடைக்கூட்ட வாழுநாண் முனிந்தாளே ;

---

* வாட்டானை-வாட்படை. † கலி. கூக : கூ-அ.

(பாடம்) 1 தான். 2. பாதுகாப்பார் யா

மருதக்கலி

உ௬௪

ஏமமென் றிரங்குநின் னெறிமுரச மம்முரசி
கரு. னேமத் திகந்தாளோ விவளிவட் காண்டிகா

வேய்நல மிழந்ததோள்

கவின்வாட வுழப்பாளை;[1]

ஆங்கு,

நெடிதுநே ணிகந்தவை காணினுந் தானுற்ற
வடுக்காட்டக் கண்காணா தற்றாக வென்றோழி
உ0. தொடிகொட்ப நீத்த கொடுமையைக்
கடிதென வுணராமை கடிந்ததோ நினக்கே.

இஃது அரசன் தலைவனுயவன் தலைவியை நீங்கி இருந்ததற்குத் தலைவி புலவி நீட்டித்து ஆற்றுளாயவழி அவட்கு நிகழ்ந்த காமத்துமிகுதிறத்தை அவ்வரசனை நோக்கிச் சான்றோர் கூறியது. இது பெருந்திணை.

(க—எ) நறவினை

யானையாய் : —

(இ - ள்.) கள்ளை உண்ணல் ஆகாதென்று நீக்கின தேவர்க்கும் அதனை உண்டலை நீக்காத அசுரர்க்கும் வரைதலும் வரையாமையுமாகிய அவ்விரண்டினையுங் கைக்கொண்டு அறத்தொழிலாக இன்பமுறுத்தும் வியாழமும் வெள்ளியுமாகிய குரு இருவருஞ் செய்த வழி வேறுகிய தொழில்களையுடைய அரசியலைக் கூறும் நூல்வழியைத்* தப்பாமல், குழவியைப் பார்த்து இன்புறாஉந் தாய் அதற்கு முலைசுரந்து கொடுக்குமாறு போல, மழையானது† தன்னை வேண்டின காலத்தே பெய்து உலகை அளித்துப் பாதுகாக்கும் நல்ல முறைமையை எல்லார்க்குந் தப்பாது வருதலை நினைந்து நடுவுநிலைமையாலே உலகத்திற்குத்

தரும்படியாக வாய்த்த இழையணிந்த கொடியினை யுடைத்தாகிய திண்ணிய தேரினையும் மணி கட்டின‡ இனமாகிய யானையினையுமுடையாய்!

ஊழ் 'ஊழி'யெனத் திரிந்தது.

(அ—௪0) அறனிழ

புற்றளை :—

(இ - ள்,) நின் அழகிய குடையினது நிழல் அறத்தைச் செய்யுமென்று எடுத்தாய்; அந்தக் குடையினது நிழலின் புறத்தே இவளகப்பட்டாளோ? அதிற் பட்டவளல்லள்; இங்ஙனம்

பிறைபோலும் நுதல் பசப்புப் பரப்பப்
பெரிய நடுக்கமுற்ற இவளை
இவ்விடத்தே அருளிப்பாராய்;

---

* வியாழமும்

வெள்ளியுமியற்றிய ஆசிய னூல்கள்
முறையே பாருகற்பத்திய சூத்திரமும்
சுக்கிரநீதியுமாம்.

† புறம். ௩௫ : ௩௫-௧௬ ; பதிற். ௧௮ : ௯-௧௦. ‡ இன்னா. ௧௭.

(பாடம்) 1. விழப்பானை.

'காண்டி' யென்னும் முன்னிலைவினையோடு பிடைச்சொல் கின்றது.

[கலி - கக்

'கா'வென்னும் அசைநிலை

முனிந்தாளோ :—

(இ - ள்.) நினது செங்கோலினுடைய 1 உயர்ந்த நடுவுநிலைமை தப்பாமையை உலகம் புகழ்ந்து கூறாநிற்கும்; அந்தச் செங்கோலினுடைய இனிய செய்தொழிலுக்குக் கீழாகிய

கொடுந்தொழிலின்கண்ணே இவள் அகப்பட்டாளோ ? அதிற்பட்டவளல்லள் ; இங்ஙனங் காமநோய் இறந்து பாட்டைச் சேர்த்துகையினாலே தான் உயிர்வாழும் நாளை வெறுத்த இவளை இவ்விடத்தே அருளிப்பாராய் ;

(கச—கரு) ஏமமென் . . . . வுழப்பாளை :—

(இ - ள்.) நின்னுடைய எறிகின்ற முரசம் இவ்வுலகத்திற்குக் காவலென்று கூறும்படியாக ஒலியாநிற்கும் ; அந்த

முரசினது காவலினின் றும் இவள்
நீங்கினளோ ? நீங்கினவளல்லள் ;
இங்஢னம் மூங்கில் தன் நல
னிழத்தற்குக் காரணமான தோள் பழைய அழகு
இவளை இவ்விடத்தே அருளிப்பாராய் ;

ஓகாரங்கள் எதிர்மறை.

(கஎ) ஆங்க,

அசை.

(கஅ—உக) நெடிது . . . .

கெடும்படி வருந்துகின்ற

நினக்கே :—

(இ - ள்.) கண் [2] சேணெடிதாக நீங்கின பொருள்களைக் காணினும் தான் தன்னிடத்தே உற்ற வடுவைப் பிறர் காட்டவுங் காணாத தன்மைத் தாக என்னுடைய தோழியினது தொடிகள் சுழன்று கழலும்படியாக நீ கைவிட்ட கொடுமையை நீ கடிதென்று உணராதிருத்தல் நினக்குச் சான்றோராற் கடியப்பட்டவற்றில்* ஒன்றோ! அஃதின்றே யென்றான்;

இதனைக் கைக்கிளை யென்பார்க்குச் சுட்டி ஒருவர் பெயர் கொள்ளாத நிற்றலிற் கைக்கிளை யாகாதெனவும், இதனைக் குறுங்கலியென்பார்க்கு அகத்தியனாருந் தொல்காப்பியனாருங் கூறாமையின் அப்பெயர் பொருந்தா தெனவுங் கூறி மறுக்க.

இஃது எழடித்தரவும் மூன்றடித்தாழிசையுந் தனிச்சொல்லும் நால் கடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக் கலிப்பா. (௩௪

* குறள். ௬௬௮.

(பாடம்) 1. கெக்கேசலி...

மருதம - ௩௩]

மருதககலி

௩௦௪

௧௦௦.

ஈண்டுநீர் மிசைத்தோன்றி

யிருள்சீக்குஞ் சுடரேபோல்
வேண்டாதார் நெஞ்சுட்க
வெருவந்த கொடுமையு
நீண்டுதோன் றுயர்குடை
நிழலெனச் சேர்ந்தார்க்குக்
காண்டகு மதியென்னக்
கதிர்விடு தண்மையு
நு. மாண்டநின்
னொழுக்கத்தான் மறுவின்றி
வியன்ஞாலத்
தியாண்டோருந்
தொழுதேத்து மிரங்கிசை
முரசினுய் ;

ஐயந்தீர்ந் தியார்கண்ணு
மருந்தவ முதல்வன்போற்
பொய்கூறா யெனநின்னைப்
புகழ்வது கெடாதோதா
னல்கிநீ தெளித்தசொ
னசையெனத் தேறியாள்
௧௦. பல்விதழ் மலருண்கண்
பனிமல்கக் காணுங்கால்;
சுரந்தவான் பொழிந்தற்றாச்[1]
சூழநின் றியாவர்க்கு
மிரந்தது நசைவாட்டா
யென்பது கெடாதோதான்
கலங்கஞ ருற்றுநின்

கமழ்மார்பு நசைஇயா
ளிலங்குகோ லவிர்தொடி
யிறையூரக் காணுங்கால் ;
கரு. உறைவரை நிறுத்தகோ
லுயிர்திறம் பெயர்ப்பான்போன்[2]
முறைசெய்தி யெனநின்னை
மொழிவது கெடாதோதா
னழிபடர் வருத்தநின்
னளிவேண்டிக் கலங்கியாள்
பழிதபு
வாண்முகம் பசப்பூரக்
காணுங்கால் ;

ஆங்கு,

உ0. தொன்னலமிழந்தோணீ
துணையெனப் புணர்ந்தவ
ளின்னுறல் வியன்மார்ப
வினையையாற் கொடிதென
நின்னையான் கழறுதல்
வேண்டுமோ
வென்றோர்களிடும்பையுங்
களைந்தீவாய் நினக்கே.
இதுவுமது.

(க—சு) ஈண்டுநீர்

மூரசிறுய் :—

(இ - ள்.) குற்றமற்று[3]
மாட்சிமைப்பட்ட நின் ஒழுக்கத்தாலே

கட லின்மீதே தோன்றி இருளைக்
கெடுக்கும் ஞாயிறுபோல*
இவ்வுலகத்தி லுள்ள பகைவர் நெஞ்சம்
அஞ்சும்படி வெருவுதல்வந்த
கொடுந்தொழிலை

* புறம், ௫௫ : ௧௧ - ௧௬; ௫௬ : ௬ - ௭; பரி, ௪ : ௨௫ - ௨௬.
(பாடம்) 1. பொழிந்தற்றுற்,.. 2. பொய்ப்பான்போன்,
[illegible]

கலித்தொகை

[கலி - ௪00 யும், நெடிதாய்த்
தோன்றுகின்ற வினையவற்றின்
உயர்ந்த குடையைத்* தமக்கு
நிழலென்று கருதிச் சேர்ந்தவர்கட்குக்

யும் மதியையொத்த† குளிர்ச்சியினையும், அகற்சியையுடைய உலகில் எவ்விடத்துள்ளோரும் வணங்கிப் புகழும் இரங்குகின்ற ஓசையினையுடைய முரசினையுமுடையாய்!

'ஈண்டு' : இவ்வுலகம். 'ஏத்து' மென்னும் பெயரெச்சம் முரசின்மேலன்றி அதனையுடைய மன்னவனென்னும் பெயரோடு முடிந்தது.

(எ—கO) ஐயந்தீர்ந் . . . . காணுங்கால் :—

(இ - ள்.) அன்புற்று நீ நின்னிற் பிரியேனென்று தெளிவித்த சொல்லை இது தான் நச்சப்படும் வார்த்தையென்று கருதித் தெளிந்தவளுடைய பல இதழையுடைய மலர்போலும் உண்கண் நீர்நிறைய நீ காணுமிடத்து அரிய தவத்தையுடைய அறம் வளர்த்த நாயனாரைப்போல‡ யாவரிடத்தும் பொய்கூறு மென ஐயமற்று உலகம் நின்னைப் புகழ்கின்ற தன்மை நினக்குக் கெடாதோ தான்?

(கக—கஅ) சுரந்தவான்

. . , காணுங்கால் :—

(இ - ள்.) மனங்கலங்குகின்ற வருத்தத்தையுற்று நின்னுடைய கமழ்கின்ற மார்பை நச்சினவளுடைய விளங்குகின்ற கோற்றொழில் விளங்குந் தொடி இறையினின்றுங் கழல நீ காணுமிடத்து நீரைச் சுரந்த மேகம் அந்நீரைப் பொழிந்ததன்மைத்தாக நின்னைச் சூழநின்று இரந்த பொருளை நச்சுதலையாவர் சிலர்க்குங் கொடாயென்று உலகங் கூறும் வார்த்தை நினக்குக் கொடாதோதான்?

(கரு—கஅ) உறைவரை . . . . காணுங்கால்:—

(இ - ள்.) நெஞ்சழிகின்ற நினைவு வருத்துகையினாலே நினதருளை[1] விரும்பிக் கலங்கினவளுடைய பழித்தலறும் ஒளியினையுடைய முகம் பசப்புப் பரப்ப நீ காணுமிடத்து உயிரை உடம்பிடத்தே நின்றும் பேர்க்குங்[2] கூற்றுவனைப்போல யாவரையும் உலகத்துறையும் எல்லைதனிலே நிறுத்தின கோலாலே முறைமைசெய்வையென்று உலகம் நின்னைக் கூறும் வார்த்தை நினக்குக் கொடாதோதான்?

(கசு) ஆங்கு:—

அசை.

* புறம். கக : க - ச. † லெப். க : க - ௬. ‡ அன்றுலின் கீழிருந்து அறமுரைத்த தட்சிணாமூர்த்தியாகிய சிவபெருமானென்பர்.

(பாடம்) 1. நின்கருணை. 2. போக்கும்.

மருதக்கலி

௩0௩

(உ0–உக) தோன்னல . . .
. நினக்கே :—

(இ - ள்.)
எத்தன்மையுடையோர்களுடைய வருத்தமுங் களைகின்ற அதனால் இனிய முயக்கத்தையுடைய வியன்மார்பனே! நீ புணருந் துணையென்று கருதிப் புணர்ந்தவள் தனது இயற்கைநலத்தையும்

இழந்தான்; நீ இத்தன்மையையாய் இராநின்றாய்; இது நினக்குக் கொடிதென்று நின்னை யான் கோபித்தல்வேண்டுமோ? நீயே அளிப்பாயாகவென்றான்.

'இழந்தோன்' : ஆ ஓவாய் நின்றது.

இதனாற் றலைவற்கு அசைவுபிறந்தது.

இஃது ஆறடித்தரவும் நான்கடித்தாழிசையுந் தனிச்சொல்லும் நான் கடியாசிரியச் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி.

([illegible])

•

மருதக்கலி முற்றும்.

கலித்தொகை

ச. முல்லைக்கலி

க0க.

தளிபெறு தண்புலத்துத் தலைப்பெயற்

கருப்பின்று

முளிமுதற் பொதுளிய முட்புறப் பிடவமுங்
களிபட்டா னிலையேபோற் றடவுபு துடிப்பின்று
ஞெலிபுட னிரைத்த
ஞெகிழிதழ்க் கோடலு

மணிபுரை யுருவின காயாவும் பிறவு
மணிகொள மலைந்த கண்ணியர் தொகுபுடன்
மாறெதிர் கொண்டதம் மைந்துட னிறுமார்
சீறரு முன்பினோன் கணிச்சிபோற் * கோடுசீஇ[1]
யேறுதொழூஉப் புகுத்தன ரியைபுட னொருங்கு;
அவ்வழி, முழக்கென விடியென முன்சமத் தார்ப்ப
வழக்குமாறு கொண்டு வருபுவரு பீண்டி
நறையொடு துகளெழ நல்லவ ரணிநிற்பத்
துறையு மாலமுந் தொல்வலி மராஅமு
முறையுளி பராஅய்ப்

பாய்ந்தனர் தொழூஉ ;

கரு. மேற்பாட் டெலண்டி னிறனைக்கும் புன்குருக்க
ணேக்கஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாக்குத்திக்
கோட்டிடைக் கொண்டு குலைப்பதன் றோற்றங்கா
ணஞ்சீ ரசையியல் கூந்தற்கை நீட்டியா
னெஞ்சம் பிளந்திட்டு நோரார் நடுவட்டன்
உ0. வஞ்சினம் வாய்த்தானும் போன்ம் ;

சுடர்விரிந் தன்ன

சுரிநெற் றிக் காரி

விடரியங் கண்ணிப்
பொதுவனைச் சாடிக்

---

* கணிச்சி - மழுவின் வேறுபதொரு
படை,

(பாடம்) 1. கோடேசி.

39.

௫0௬

கலித்தொகை

[கலி - ௬0

குடர்சொரியக் குத்திக் குலைப்பதன் றோற்றங்காண்
படரணி யந்திப் பசுங்கட் கடவு

உரு ளிடரிய வேற்றெருமை

நெஞ்சிடந் திட்டுக்

குடர்கூளிக் கார்த்துவான்

போன்ம் ;

செவிமறை நேர்மின்னு நுண்பொறி வெள்ளைக்
கதனஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாடி

நுதிநுனைக் கோட்டாற்

குலைப்பதன் றோற்றங்கா

௩0. ணரிரு ளென்ன னருங்கங்குல் வந்துதன்
றுளிற் கடந்தட்டுத் தந்தையைக் கொன்றானைத்
தோளிற் றிருகுவான் போன்ம் ;

எனவாங்கு,

அணிமாலைக் கேள்வற் றரூஉமா ராயர்[1]
௩௫. மணிமாலை யூதுங் குழல் ;

கடாஅக் களிற்றினுங் கண்ணஞ்சா வேற்றை

விடாஅதுநீ கொள்குவை யாயிற் படாஅகை
யீன்றன வாயமக டோள்;
பகலிடக் கண்ணியன் பைதற் குழலன்
சுவன்மிசைக் கோலசைத்த கைய னயலது
கொல்லேறு சாட விருந்தார்க்கெம் பல்லிருங்
கூந்த லணிகொடுப்பேம் யாம்;
கோளாள ரென்னொப்பா ரில்லென நம்மானுட்
டாளாண்மை கூறும் பொதுவ னமக்கொருநாட்
கோளாள னாகாமை யில்லை யவற்கண்டு
வேளாண்மை செய்தன கண்;
ஆங்கு, ஏறும் வருந்தின வாயரும் புண்கூர்ந்தார்
நாறிருங் கூந்தற் பொதுமகளி ரெல்லாரு
முல்லையந் தண்பொழில் புக்கார் பொதுவரோ
டெல்லாம் புணர்குறிக் கொண்டு.

இஃது "ஆயர் வேட்டுவ ராடூஉத் திணைப்பெய, ராவயின் வருஉங் கிழவரு முளரே"* என்னுஞ் சூத்திரத்தில் "திணைநிலைப் பெயராகிய கிழவருங் கிழத்தியரு உளர்" என்னும் விதியாற்கொண்ட அத்தலைவிக்கு அவள் தோழி ஆய

* தொல். பொருள்: உக.
(பாடம்) 1 [illegible]

முல்லைக்கலி

ஏறுதழுவுகின்றமை காட்டி அவள் அது கண்டு வருந்தாமல் ஆண்டுப் பெற்

நன்னிமித்தங் கூறித் தெளிவித்து, அதனை அவ்விதியாற் கொண்ட தவ வற்குங் கூறி, மீட்டும் அத்தலைவிக்குத் தந் சுற்றத்தார் கூறியிருக்குங் கூ றினையுங் கூறித், தலைவனும் இன்னும் ஒருநான்று ஏறுதழுவி நம்மை வரைந்து கொள்வனென்று ஆற்றுவித்தது.

(௧—௬) தளிபேறு

ஞெருங்த :—

(இ - ள்.) மழையைப் பெறுகின்ற குளிர்ந்த நிலத்தே நின்ற கா காலத்து முற்பட்ட மழைக்கு அரும்பீனுகின்று முன்பு உலர்ந்த முத விடத்தே தழைத்த முள்ளைப் புறத்தேயுடைய பிடவம்பூவும்,* கள்ளுண் களித்தலுற்றவன் நிலைமைபோல அசைந்து † வளைந்து [1] துடுப்புப்போலும் முகையை முன்னர் ஈன்று, பின்னர்த் தீயைக் கடைந்து, அதிற் பிறந்

நெருப்பைச் சேர நிரைத்தாற்போன்ற அலர்ந்த இதழினையுடைய செங்காந்தட்பூவும், நீலமணியை யொக்கும் நிறத்தினையுடையவாகிய காயாம் பூக்களும், பிறவும் அழகு கொள்ளும்படி சூடிய கண்ணியையுடையவர் சேரத் தொக்கு ஏறுதழுவுவாரோடே மாறுபடுதலை ஏறட்டுக்கொண்ட தம் மைத்தினைச் சேரநிறுத்துதற்கு மகட்கொண்ட நேர்ந்த ஆயர் சேரக்கூடிப் பிறரால் சிறுதற்கரிய வலியினையுடைய இறைவனுடைய குந்தாலிப் படைபோலே கூரிதாகக் கொம்புகளைச் சீவி, ஏறுகளைச் சேரத் தொழுவிடத்தே புகுதவிட்டார்;

தண்புலத்து நின்ற பிடவுங் காந்தளுங் காயாவும் பிறவுமென்க. இவை முதற்பொருட்கேற்ற அடையடுத்துநின்ற ஆகுபெயர். 'ஈன்' றென்பது நிகழ்காலமுணர்த்துஞ் செய்தெனெச்சம். ஞெகிழியுட னென்றது 'ஞெலிபுட'னென எச்சமாகக் கூறுதலின் இவ்வாறு பொருள் கூறினும். "ஞெலிகோற் கொண்ட பெருவிறன் ஞெகிழி" § என்பதனானும் இது வினைச்சொல்லாம்.

(௧0-௧௪) அவ்வழி . . . . . தொழூஉ :—

(இ - ள்.) அவ்விடத்து ஏறுகளைத் தழுவிப் போக்கும்படியை உட்கொண்டு வந்து வந்து திரண்டு மழை முழக்கென்ன இடியென்ன நடுவான நிலத்தின்[2] முன்னே ஆரவாரமெழப் புகையொடு துகள் எழ ஏறுதழுவினர்க்குக் கொடுத்தற்கு நல்ல மகளிர் திரண்டுநிற்ப நீர்த்துறையிலும் ஆலமரத்தின் கீழும் பழைய வலியினையுடைய மராமரத்தின் கீழும் உறையுந் தெய்வங்கட்குச் செய்யும் முறைமைகளைப் பரவித் தொழுவிலே பாய்ந்தார்;

---

* பிடாவென்பது முட்காலையுடைய தொருபுதல்; நீண்ட காம்போடு கூடிய வெண்ணிறப்பூக் குலையாகப் பூப்பது. † பெரும்பாண். ௧௪௧-௧௪௬; மணி. ௭: ௭௧-௭௨. ‡ மலை. ௫௫௯. § பெரும்பாண். ௧௭௮.

(பாடம்) 1. விளர்ந்த. 2. நடுவாணிலத்தின்.

ங௦அ

கலித்தொகை

[கலி - கருக

“வளிவழக் கறுத்த வங்கம்” *
என்றாற்போல வழக்குப் போக்குதன்
மேல் நின்றது. ‘இடி’ : எற்றின்
இடிப்பிற்கு உவமம். அவர் பாய்ந்த
அளவிலே தோழி தலைவியை
அழைத்துக் காட்டுகின்றாளாக
மேற்கூறுக.

(கரு—உ௦) மேற்பாட்
போன்ம் :—

(இ - ள்.) உயர்ந்த

கொம்பிடத்தே வைத்த உலண்டினது

† நிறத்தை யொக்கும் புல்லிய

நிறத்தைத் தன்னிடத்தேயுடைய

எருத்தினது நோக்கை அஞ்சானாய்

அதின்மேலே பாய்ந்த இடையனைச்

சாவக்குத்திக் கொம் பிடத்தே

எடுத்துக்கொண்டு உடலைக்

குலைக்கின்றதனுடைய தோற்றரவைக்

காணாய்; •அழகிய

தலைமையினையுடைய மணமசைந்த

இயல்பினையுடைய

ளாகிய துரோபதையது தூய்ய

கூந்தலிலே கையை நீட்டிய

துச்சாசன
னுடைய நெஞ்சைப்
பிளந்துபோகட்டுப் பகைவர் நடுவே
தான் சொன்ன
வஞ்சினத்தை வாய்க்கச்செய்த
வீமசேனனைப் போலும்;

போலும் 'போன்' மெனத்
திரிந்தது. "னகாரை முன்னர்
மகாரங்
குறுகும்" ‡ என்பதனான் மகரங்
கான்மாத்திரையாய் நின்றது.
'புன்குருக் கண்': ஆகுபெயர்.
'சாவக்குத்தி' யென்பது "சாவ

வென்னுஞ் செயவெ
னெச்சத், திறுதி வகரங்
கெடுதலு முரித்தே" §
என்பதனால் வகரங்
கெட்டது.

(உக—உசு) சுடர்விரிந்
. . . . போன்ம் :—

(இ - ள்.) மதிவிரிந்தாற் போன்ற சுட்டியை நெற்றியிலேயுடைய கரிய எருது முழைஞ்சிலேயுடைய மலேயிற்பூவாற் செய்த அழகையுடைய கண்ணியையுடைய பொதுவனைத் துகைத்துக் குட்டர்சரியும்படி குத்திக் கோட்டிடைக் கொண்டு குலேப்பதனுடைய தோற்றாவைக் காணாய் ; பல்லுயிரும் வருத்தத்தை அணிகின்ற ஊழிமுடிவிலே பசிய நிறத்தைத் § தன் பாகத்தேயுடைய உருத்திரன் வருத்தத்தைச் செய்த எருகிய எருமையை யேறுகின்ற கூற்றுவனுடைய நெஞ்சைப் பிளந்துபோகட்டு அவன் குடரைக் கூளிக்கிட்டு அவற்றின் வயிற்றை நிறைவிக்கின்றவனைப் போலும்;
'எருமை' ஆகுபெயராய்க் கூற்றுவனே உணர்த்திற்று.

(உஎ—கூஉ) செவிமறை . . . . போன்ம் :—

(இ - ள்.) செவிமறுவாயிருக்கின்ற விளங்கும் நுண்ணிய சிவந்த பொறிகளையுடைய ஆயர் நேர்ந்துவிட்ட வெள்ளை எருத்தினது கோபத்தை அஞ்சாளுய் அதன்மேலே பாய்ந்த பொதுவனை நுதியைத் துகைத்து முனை

* புறம். ௩௬அ : ௯.
† உலண்டு - பட்டுப்பூச்சியென்பர்.
‡ தொல். எழுத்து : ௫௨.
§ தொல். எழுத்து : ௨0௬.
$ பசியநிறம், உமையை யுணர்த்திற்று.

வினையுடைய கோட்டாலெடுத்துக் குலைப்பதனுடைய தோற்றரவைக் காணாய்; வருதற்கரிய கங்குலிலே அரிய இருளென்று கருதாளுய் வந்து துரோணாசாரியனைக் கொன்ற சிகண்டியைத் * தன் முயற்சியாலேவென்று

கொன்று தன் தோளால், தலையைத் திருகும் அச்சுவத்தாமாவைப் போலும்;

நேர்வெள்ளை யென்க.

நுதியென்றது முனை; எனவே, தலையென்பது தோன்றிற்று, "நுதிக்கோலஞ்செய்து" † என்றாற்போல.

(௯௯)

எனவாங்கு :—

அசை.

இங்ஙனந் தோழி காட்டக் கண்டு நங்கணவற்கும் இங்ஙனமாகுமோவென்று அஞ்சின தலைவியது அச்சத்தை ஆண்டுப்பெற்ற நன்னிமித்தங் கண்டு தோழி போக்குவாளாக

மேற்கூறுகின்றாள்.

(கூச-கூ௫)

அணிமாலை . . . . குழல்

:—

(இ - ள்.) ஆயர் ஊண்டு ஊதுகின்ற குழல்‡ நீலமணிபோலுங் காயாம்

பூவாற்செய்த மாலையினை அணியும் இயல்பினையுடைய .கேள்வனை நமக்குத்

தருதற்கு நன்னிமித்தமாக இசைத்தது காண் ; நீ அஞ்சாதே கொள்ளென்

றாள்;

அது மங்கலமான பண்ணைத் தருதலின் நிமித்தமாயிற்று.

(௩௯—௩௮) கடாஅக்
டோள் :—

(இ - ள்) தோழி தலைவனிடத்தே சென்று ஆண்டுச்செய்த நிமித்தத் ...தை ஆராய்ந்துபார்க்கில் மதத்தையுடைய களிற்றினுங்காட்டிற் றறுகண்மை யையுடைய ஏற்றை நீ கைநெகிழவிடாது கொள்வை ;

இப்பொழுது இவ்

வாயமகள் தோள், ஏனை[1] மகளிர் தோள்களிற்காட்டில் வெற்றிக்கொடியை உண்டாக்கினவா மென்றான்;

(௧௧-௪௨) பகலிடக்

யாம் :—

(இ - ள்.) பின்னர்த்

தலைவியிடத்தே வந்து எம்முடைய

பலவான

கரிய கூந்தலினையுடையவளை யாங் கூடுதற்குக் கொடுப்பேம்; தொல்லேற்றைச் சாடுதற்குச் சமைந்திருந்தவர்களுக்கென்று நமர் கூறி,[2] கூற்றுந்

தலைவனையொழிந்த

பகற்பொழுதிலே அலர்ந்த

கண்ணியையுடையவன்

வருத்தத்தையுடைத்தாகிய

குழலினையுடையவன் சுவலின்மேலே

கோலே

வைத்த* கையையுடையவனாகிய

வினைவலபாங்கினோர்க்கு அயலதா

யிருக் குங்கா ணென்றான்;

* துரோணனைக் கொன்றவன் திட்டத்தும்மனும், வீடுமனைக் கொன்றவன் சிகண்டியுமென்பது பாரதம். † கோவையார் - உகூ0. ‡ குறள் - ௪உஉஅ.

(பாடம்) 1. வீர. 2. கூடிக்கூடி.

ந௯ப

கலித்தொகை

[கலி - ௯0உ

'அயல' தென்றது எறுதழுவுதற் கரிதென்னும்பொருட்டு. இம்மூன்று பெயரும் எறுதழுவினவர்களை நோக்கிக் கூறிற்று.

(௬௩—௬௪) கோளாள

. . . . கன் :—

(இ - ள்.) யான் முற்கூறிய நிமித்தமேயன்றித் தலைவனைக் கண்டு என் கண்கள் உபகாரத்தைச் செய்கையினாலே ஏறுகொள்ளவல்லார் என்னையொப் பார் பிறரில்லையென்று நம்முடைய பசுத்திரளிலே நின்று தனது தாளாண் மையைக் கூறுந் தலைவன் பின்பு ஒருநாளிலேயாயினும் ஏறுதழுவி நம்மைத் தனக்குக் கேளாக ஆளுந் தன்மையை யுடையனாகாமை இல்லையென்றாள்;

'தாளாண்மை': முயற்சி; ஆண்டுப் பொதுவன்தன்மை. 'நமக்கு': உருபுமயக்கம். கண் வேளாண்மை செய்தலாவது, இடக்கண் துடித்தல். வலக்கண் துடிக்கலாதிருத்தலும்[1] நன்னிமித்தமாதலிற் செய்தனவெனப் பன்மையாற் கூறினான்.[2]

(சஎ—ஙo) ஆங்கு . . . . கொண்டு :—

(இ - ள்.) அவ்விடத்தில் ஏறுகளும் வருந்தின; இடையரும் புண்மிக் காரென்று எல்லாம் விலக்குகையினாலே தம்மைக் கொள்ளுதற்கு நின்ற பொதுவரோடே தாம் புணர்தற்கு வேண்டும் நிமித்தங்களைப் பெற்று நாறு கின்ற கரிய கூந்தலையுடைய பொதுமகளிரெல்லாரும் முல்லையையுடைய குளிர்ந்த பொழிலிடத்தே விளையாடுதற்குப் புக்கார்; நாமும் பொழி லிடத்தே விளையாடுதற்குப் போதுவாயாக வென்றாள்.

அச்சூத்திரத்துட் பொதுவனென்னும் பெயர்முதலியனவும் அச்சாதி யிற் றலைவற்கு வருதலுங் கொண்டவாறுணர்க. "புறத்திணை மருங்கிற் பொருந்தி னல்ல, தகத்திணை மருங்கி னளவுத லிலவே"* என்னுஞ் சூத்தி ரத்திற் கைக்கிளை பெருந்திணைக்குந் தலைவருந் தலைவியரும் பலராய் வருவ ரென்றலின், இதன்கணிதகத்துத் தலைவருந் தலைவியரும் பலராகக் கூறினார். இது சிறப்பில்லா ஆசுரமாகிய கைக்கிளை.

இதனாற் றலைவிக்கு நினைதல்[3] பிறந்தது.

இது கொச்சகம் இரண்டும் வந்தமையிற் கலிவெண்பாவின் வேறு பட்டு வந்த கொச்சகக்கலி.

(ச)

கoஉ.

கண்ணக னிருவிசும்பிற் கதழ்பெயல் கலந்தேற்ற
தண்ணறும் பிடவமுந் தவழ்கொடித் தளவமும்
வண்ணவண் டோன்றியும் வயங்கிணர்க் கொன்றையு

* தொல். பொருள் : ருகு.
(பாடம்). 1. துடிந்தலாயிருத்தலும். 2. கூறினர். 3. கிளைக்கல்.

முல்லை - உ]

முல்லைக்கலி

௩௧௧

மன்னவை பிறவும் பன்மலர்

துதையத்

ரு. தழையுங் கோதையு மிழையு

மென்றிவை

தைஇனர் மகிழ்ந்து திளைஇ

விளையாடு

மடமொழி யாயத் தவரு

ளிவள்யா

ருடம்போ டென்னுயிர்

புக்கவ ளின்று ;

ஓஒ இவள், பொருபுக னல்லேறு கொள்பவ ரல்லாற்
௧௦. திருமாமெய் தீண்டல ரென்று கருமமா
வெல்லாருங் கேட்ப வறைந்தறைந் தெப்பொழுதுஞ்
சொல்லாற் றரப்பட் டவள் ;

சொல்லுக, பாணியே மென்றா ரறைகென்றார் பாரித்தார்
மாணிழை யாறாகச் சாறு ;

௧௫. சாற்றுள், பெடையன்னார் கண்பூத்து நோக்கும்வா யெல்லா
மிடைபெறி னேராத் தகைத்து ;

தகைவகை மிசைமிசைப்

பாயிய [1] ரார்த்துட

வெதிரெதிர்

சென்றார் பலர்;

கொலைமலி சிலைசெறி செயிரயர் சினஞ்சிறந்[2]
உ0. துருத்தெழுந் தோடின்று மேல்;

எழுந்தது துக
ளேற்றனர் மார்பு
கவிழ்ந்தன் மருப்புக்
கலங்கினர் பலர்;

உரு. அவருள், மலர்மலி புகலெழ வலர்மலிர் மணிபுரை நிமிர்தோள்
யெருத்தோ டிமிலிடைத் தோன்றினன் றோன்றி [பிணை இ
வருத்தினன் மன்றவவ் வேறு;

ஏறெவ்வங்[3] காணு வெழுந்தா ரெவன்கொலோ
வேறுடை நல்லார் பகை;

கூ0. மடவரே நல்லாயர் மக்க ளொருங்
லடலேற் றெருத்திருந்தார்க் கண்டுமற் றின்று
முடலேறு கோட்சாற்று வார் ;

(பாடம்) 1. பாயப்பா, 2. செயிர்செஞ்செதிர், 3. எற்றெவ்வம்.

ஆங்கினித்,
தண்ணுமைப் பாணி
தளரா தெழூஉக
கூரு. பண்ணமை யின்சீர்க்
குரவையுட் டெண்கலன்ணித்
திண்டோட் டிறலொளி
மாயப்போர் மாமேனி
யந்துவ ராடைப்

பொதுவனொ டாய்ந்த
முறுவலாண் மென்றோள்பா
ராட்டிச் சிறுகுடி
மன்றம் பரந்த துரை.

இஃது ஆயன் தலைவனும் ஏறுதழுவினமை சுற்றத்தார் கண்டுநின்று கூறியது.

(க—அ) கண்ணக

வின்று :—

(இ - ள்.) இடமகன்ற பெரியவிசும்பிலே விரைந்து வருகின்ற மழை தன்னிடத்தே கலக்கையினாலே அதனை ஏற்றுநின்ற தண்ணிய நறிய பிடவ

மும் படர்கின்ற கொடியினையுடைய

முல்லையும் நிறத்தினையுடைய

வளவிய

தோன்றியும் விளங்குகின்ற கொத்தினையுடைய கொன்றையும் இவைபோல் வனபிறவும் பூத்த பலமலர்கள் செருங்கும்படி தழையுங் கோதையும் இழையு மென்று சொல்லுகின்ற இவற்றைக் கட்டினராய் அணிந்து மகிழ்ந்து திளைத்து விளையாடும், மடப்பத்தையுடைத்தாகிய[1] மொழியினையுடைய, ஆயத்தாருள்ளே இன்று உடம்போடே என் உயிர்க்குள்ளே புக்கவளாகிய இவள் யார்தானென்றான் தலைவன்;

'இழை' : பூண்வடிவாகக் கட்டினது.

(கூ—கஉ) ஓஓ இவள்

டவள் :—

(இ - ள்.) அதுகேட்ட பாங்கன், ஓஒவென வியந்து, இவள் பொரு கின்ற புகற்சியையுடைய[2] நல்ல ஏற்றைத் தழுவுமவரல்லது அழகினையுடைய மாந்தளிர்போலும் நிறத்தையுடைய மெய்யைச் சேரரென்று * எல்லாருங் கேட்டிருப்ப இது காரியமாகப் பலகாலுஞ் சாற்றிச் சாற்றி எப்பொழுதுஞ் சொல்லிய சொல்லாலே அடிப்படக் கொண்டுவரப்பட்டவ ளென்றான்;

(கரு) சோல்லுக :—

(இ - ள்.) அது கேட்ட தலைவன், அச்சுற்றத்தை நோக்கி இவன் ஏறுதழுவி இவளைக் கொள்வனென்று அவர்க்குக் கூறுகவென்றான்;

(கக-கச) பாணியே . . . . . சாறு :—

(இ - ள்.) அவரும் ஆண்டுச்சென்று தழுவுதற்கு யாங்கள் தாழ்த்திரே மென்றார் ; அதுகேட்டு அவள் சுற்றத்தார் மாட்சிமைப்பட்ட இறைமினை

* கலி. க0௧ : சுஉ - சுக.

(பாடம்) 1. வடிவத்தையுடைத்தாகிய. 2. புகழ்ச்சியையுடைய.

முல்லை - உ]

முல்லைக்கலி

௬௧௬

யுடையான் வழியாக நிகழ்த்தும் ஏறுவிடுகின்ற விழவைப் பரக்கச் செலுத்தி இவனையன்றி மற்றும் ஏறு தழுவுவார் உளராயினும் வருக வென்று பறையறைக வென்றார் ;

(கடு-கசு) சாற்றுள் . . . . . தகைத்து :—

(இ - ள்.) இந்த விழவினைப் பெடையை யொப்பார் தங் கண்கள்

பொலிவுபெற்று இவ்வழகைப் பார்க்குமிடமெல்லாம் நின்று பார்க்கும் பரணைப் பெறுவார்களாகில் அது தன்கமையை யுடைத்தென்றார் ;

இதற்குமுன் உள்ளனவும் மேல் வருகின்றனவுங் கண்ட சுற்றத்தார் கூறியதாகப் பொருளுரைக்க.

(கஎ—கஅ) தகைவகை . . . . . பலர் :—

(இ - ள்.) அழகினையுடைத்தாகிய வகுப்பையுடைய அவ்வேறுகளின் மேலே பாய்கைக்குச் சேர ஆர்ப்பரித்து எறுகளி னெதிரேயெதிரே பலருஞ் சென்றூர் ;

(கக—உ0) கோலைமலி. . . . . மேல் :—

(இ - ள்.) அப்பொழுது அவ் வேறுகள் கொலைத் தொழின்மிக்க[1] சிலைசெறிந்த குற்றத்தைச் செய்யுஞ் சினமிக்கு வெவ்விதா யெழுந்து அவர் மேலே ஒடிற்று ;

(உக) எழுந்தது துகள் :—

(இ - ள்.) அப்பொழுது துகள் எழுந்தது ;

(உஉ—உச) ஏற்றனர் . . . . பலர் :—

(இ - ள்.) அவர்களும் மார்புகளை எதிரே கொடுத்தார் ; அவற்றின் கொம்புகளுங் கவிழ்ந்து குத்தின ; அதனுல், தழுவினவர்கள் பலருங் கலங்கிப்போனுர் ;

முன்னர்ப் பலரும் வருகவென்று சாற்றுதலிற் பல ஏறுகளும் விடப் பலருந் தழுவித் தோற்றாரென்றார்.

(உரு—உஎ) அவருள் . . . . வேறு :—

(இ - ள்.) அங்ஙனம் ஏறுதழுவ வந்தவர்களுட் பரத்தல்[2] மிக்க விருப்பம் எழுதலாலே பூமலிந்த நீல மணியை யொக்கும் நிறத்தையுடைய நெடிய தோள்களாலே ஏற்றின் கழுத்தை இறுகத் தழுவிக் கழுத்தோடே கூடக் கிடக்கின்ற குட்டேற்றிடத்தே* தோன்றினான்; அங்ஙனந் தோன்றிப் பின்னர் அறுதியாக அவ் வேற்றை வருத்தினானென்றார்;

---

* குட்டேறு - இமில்,

(பாடம்) 1. கொலைத் தொழின்மிசை. 2. பார்த்தல்,

ரு.கசு

கலித்தொகை

[கலி - க0உ

(உஅ—உக) ஏறேவ்வம் பகை:—

(இ - ள்.) ஏற்றையுடைய நல்லவர்கள் தங்கள் ஏற்றுடைய

வருத் தத்தைக் கண்டு எழுந்திருந்தார் ; அவன் தழுவினவாற்றிற்கு மகிழ்வ தன்றிப் பகையாதல் என்ன பயன் தருமென்றூர் ;

'கொல்'லும், 'ஓ'வும் அசை.

(கூ0—கூஉ) மடவரே . . . . வார் :—

(இ - ள்.) முன்னைநாளிலே கொல்லுதலையுடைய ஏற்றின் கழுத்திலே தங்கினவர்களைக் கண்டுவைத்தும் இன்றும் உடலுகின்ற ஏற்றைத் தழுவச்[2]

சாற்றுவாராகிய நல்ல ஆயர்[3] மக்கள் அறியாதவர்களே யென்றார்;

(கூகூ—கூகூ) ஆங்கினித்

துறை :—

(இ - ள்.) இப்பொழுது அவ்விடத்துச் சிறுகுடியின் மன்றத்தில் ஆடுகின்ற பண்ணமைந்த இனிய தாளத்தையுடைய குரவைக் கூத்தினுள்ளே விளங்கிய கண்ணியையுந் திண்ணிய தோளினையுந் திறலினது விளக்கத்தினையும் மாயத்தையுடைய போர்த் தொழிலினையுங் கரியமேனியினையும்

அழகிய துவர் ஊட்டின

ஆடையினையுமுடைய பொதுவன்

தோளையும்

ஆராய்ந்த முறுவலாளுடைய மென்றோளையுங் கொண்டாடி ஏறுதழுவின புகழ் பரந்தது; இனி[4] மணஞ் செய்தற்குத் தண்ணுமையில் தாளந் தவறாமல் எழுப்புவார்களாக வெனக் கண்ட சுற்றத்தார் கூறினர்;

பொதுவன் தோளிற்கு அவள் தோள் நிகர் ஒக்குமென்று பாராட்டி.

இனிப் பொதுவனோடே

மென்றோளையுடைய முறுவலாளையும்

பாராட்டி

யென்றலும் ஒன்று. இதுவுஞ் சிறப்பில்லா ஆசுரமாகிய கைக்கிளை. "பாங்கனிமித்தம் பன்னிரண் டென்ப"* என்றதனுள் ஆசுரத்திற்கும் பாங்கி நிமித்தமாயினுள்.

இதனால், இருவருக்கும் நினைதல்[5] பிறந்தது.

இஃது "ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினு, மூவகை யடியு முன்னுத லிலவே"† என்னுஞ் சூத்திரத்திற் கொண்ட நாற்சீரடி முடுகியலோடு தொடர்ந்த 'தகைவகை மிசைமிசை,' 'கொலைமலி சிலைசெறி' என்னும் வெண்பாக்களும், "மலர்மலி புகலெழ வலர்மலிர் மணிபுரை நிமிர்தோள் பிணைஇ" என அறுசீரடி முடுகியலோடு தொடர்ந்த வெண்பாவும், இருசீர்ச் சின்னமும் பெற்றுக் கலிவெண்பா வுறுப்பில் வேறுபட்டு வந்த கொச்சகக்கலி. (உ.)

---

* தொல். பொருள்: ௧௦௪. † தொல். பொருள்: ௩௭௧.

(பாடம்) 1. மீண்டும், 2. தழுவிச். 3. நல்லவர்யாம், 4. இனிய,

௧௦௫.

மெல்லிணர்க் கொன்றையு மென்மலர்க் காயாவும்
புல்லிலை வெட்சியும் பிடவுந் தளவுங்
குல்லையுங் குருந்துங் கோடலும் பாங்கரும்
கல்லவுங் கடத்தவுங் கமழ்கண்ணி மலைந்தனர்
பல்லான் பொதுவர்
கதழ்விடை கோட்காண்மார்
முல்லை முகையு முருந்து
நிரைத்தன்ன
பல்லர் பெருமழைக் கண்ணர்
மடஞ்சேர்ந்த
சொல்லர் சுடருங் கனங்குழைக் காதினர்
நல்லவர் கொண்டார் மிடை ;
அவர்மிடைகொள,
மணிவரை

மருங்கி னருவி போல
வணிவரம் பறுத்த வெண்காற்
காரியு
மீன்பூத் தவிர்வரு மந்திவான் விசும்புபோல்
வான்பொறி பரந்த புள்ளி வெள்ளையுங்

கரு. கொலைவன் சூடிய குழவித்
திங்கள்போல்
வளையுபு[1] மலிந்த கோடணி
சேயும்
பொருமுரண் முன்பிற்
புகலேறு பலபெய்

தரிமாவும் பரிமாவுங் களிறுங்

கராமும்
பெருமலை விடரகத்
தொருங்குடன் குழீஇப்
௨௦. படுமழை யாடும் வரையகம்
போலுங்
கொடிநறை சூழ்ந்த தொழூஉ
;
தொழுவினுள், புரிபு புரிபு புக்க பொதுவரைத்
தெரிபு தெரிபு குத்தின வேறு;
ஏற்றின், அரிபரி பறுப்பன
சுற்றி ௨௫.
யெரிதிகழ் கணிச்சியோன் சூடிய
பிறைக்க
ணுருவ மாலை போலக்

குருதிக் கோட்டொடு குடர்
வலந்தன ;

கோட்டொடு[2] சுற்றிக் குடர்வலந்த வேற்றின்முன்
னடிநின் றக்குடர் வாங்குவான் பீடுகாண்

௩க௬

கலித்தொகை

[கலி - க(

௩௦. செந்நூற் கழியொருவன்
கைப்பற்ற வந்நூலை
முந்நூலாக் கொள்வானும்
போன்ம் ;

இகுளை யிஃதொன்று கண்டை யிஃதொத்தன்
கோட்டினத் தாயர்[1] மகனன்றே மீட்டொரான்[2]
போர்புக லேற்றுப்
பிணரெருத்திற் றத்துபு
௩௫. தார்போற் றழீஇ யவன்;

இகுளை யிஃதொன்று கண்டை
யிஃதொத்தன் கோவினத்
தாயர்[3] மகனன்றே யோவான்
மறையேற்றின் மேலிருந் தாடித்
துறையம்பி யூர்வான்போற்
றோன்று மவன்;

௪௦. தொழீஇஇ,[4] காற்றுப்போல்

வந்த கதழ்விடைக் காரியை
      யூற்றுக் களத்தே
யடங்கக்கொண் டட்டதன்

      மேற்றோன்றி நின்ற
பொதுவன் றகைகண்டை
      யேற்றெருமை நெஞ்சம்
வடிம்பி னிடந்திட்டுச்
      சீற்றமோ டாருயிர்
கொண்டனான் றின்னன்கொல்
சரு. கூற்றென வுட்கிற்றென்
னெஞ்சு;
      இருளை யிஃதொன்று கண்டை
யிஃதொத்தன்

புல்வினத் தாயர் மகனன்றே
புள்ளி
வெறுத்த வயவெள்ளேற்
றம்புடைத் திங்கண்
மறுப்போற் பொருந்தி
யவன் ;

ரு0. ஓவா வேகமோ டுருத்துத்தன்
மேற்சென்ற
சேஎச் செவிமுதற் கொண்டு
பெயர்த்தொற் றுங்
காயாம் பூங்கண்ணிப்
பொதுவன் றகைகண்டை
மேவார் விடுத்தந்த கூந்தற்
குதிரையை

வாய்பகுத் திட்டுப்
புடைத்தஞான் றின்னன்கொன்
மாயோனென் றுட்கிற்றென்
னெஞ்சு ;

ஆங்கு, இரும்புலித் தொழுதியும் பெருங்களிற் றினமு
மாறுமா றுழக்கியாங் குழக்கிப் பொதுவரு
மேறுகொண் டொருங்குதொழூஉ விட்டனர் விட்டாங்கே
மயிலெருத் துறழணி மணிநிலத்துப் பிறழப்
பயிலிதழ் மலருண்கண்

(பாடம்) 1. தாய. 2. விட்டோரான். 3. தாய. 4. தொழீஇ.

மாதர் மகளிரு மைந்தரு மைந்துற்றுத்
தாதெரு மன்றத் தயர்வர் தழூஉ;
கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே யாய மகள்;

அஞ்சார் கொலையேறு
கொள்பவ ரல்லதை
நெஞ்சிலார் தோய்தற் கரிய
வுயிர்துறந்து
நைவாரா வாயமக டோள்;

வளியா வறியா வுயிர்காவல் கொண்டு
நளிவாய் மருப்பஞ்சு நெஞ்சினர் தோய்தற்
கெளியவோ வாயமக டோள்;
விலைவேண்டா ரெம்மினத் தாயர் மகளிர்
கொலையேற்றுக் கோட்டிடைத்

தாம்வீழ்வார் மார்பின்
முயிைடைப் போலப் புகின்

;

ஆகுக,

எகு. குரவை தழீஇயா மரபுளி
பாடித்

தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுது
மாசில்வான் முந்நீர்ப் பரந்த தொன்னில

மாளுங் கிழமையொடு புணர்ந்த
வெங்கோ வாழியரிம் மலர்தலை யுலகே.

இஃது ஆயர் ஏறுதழுவிநின்றமையைத் தோழி தலைவிக்குத் தனித்தனியே காட்டிப் பின்னர் அவர் ஏறுதழுவிவிட்டுக் குரவையாடுகின்றமையுங் கூறி ஆண்டு யாமுஞ் சென்று நின்னை ஏறுதழுவிக் கோடற்கு நிற்கின்ற தலைவன் கேட்டு ஏறுதழுவிக்கொள்ளுமாறு நமக்குச் சுற்றத்தார் கூறிக்கிடக்கின்ற முறைமை

யைப் பாட்டிலே தோன்றப் பாடிக் குரவைபாடி வழுதிவாழ்கவென்று தெய்வம் பராவுதும்; நீயும் அங்ஙனம் பாடுதற்குப் போதுவாயாகவெனக் கூறியது.

(க—க) மெல்லிணர்க் கொன்றையும் ...

மீடை :—

(இ-ள்.) பலபசுவையுடைய பொதுவர் கல்லிடத்தனவுங் காட்டிடத்தனவுமாகிய மெல்லிய கொத்தினையுடைய கொன்றைப்பூவாலும் மெல்லிய மலரையுடைய காயாம்பூவாலும் புல்லிய இலையையுடைய வெட்சிப்பூவாலும் பிடவம்பூவாலும் முல்லைப்பூவாலுங் கஞ்சங்குல்லைப்பூவாலுங் குருந்தம்பூவாலுங் கோடற்பூவாலும் பாங்கர்ப்பூவாலுஞ் செய்த கமழுங்கண்ணியைச்

பீலிமுருந்தும்* நிரைத்தாலொத்த பல்லினையுடையராய்ப் பெரிய குளிர்ச்
மையுடைத்தாகிய கண்ணிணையுடையராய் மடப்பம் பொருந்தின சொல்லினை
யுடையராய் விளக்கும் பொன்னாற்செய்த மகரக்குழையையணிந்த காதிக
ராய் ஆயர்மகளிர் வந்து பரணைக் கைக்கொண்டார் ;

'மிடை' : பரண்.

(கo—உக)

அவர்மிடைகோள . . . .

தொழூஉ :—

(இ-ள்.) அவர் தத்தம் மிடையைக் கைக்கொள்ள ஆயர் மணிகளை
யுடைய மலைபிடத்தினின்றும் வீழ்கின்ற அருவிகள்போல அழகினது எல்லை
யைப் போக்கின வெள்ளிய கால்களையுடைய காரியாகிய ஏற்றினையும் மீ

பொலிவுபெற்று விளங்குதல்வரும் அந்திக்காலத்து மேகத்தையுடைய சிவந்
ஆகாயம்போலே அழகிய ஒளிபரந்த புள்ளிகள் வெள்ளையாயிருக்கின்
சிவந்த ஏற்றையுங் கொலைத்தொழிலையுடைய இறைவன் சூடிய இளை
தாகிய திங்களைப்போல வளைந்து நிறைந்த கொம்பை அணிந்த சிவந்

ஏற்றையும் பொருகின்ற மாறுபாட்டினையும் வலியினையுமுடைய கொல் டாடுகின்ற பிற ஏறுகள் பலவற்றையுந் தொழுவினுள்ளே விடுகையினாலே ஒழுங்குபட்ட புகைசூழ்ந்த அத்தொழு, சிங்கமாகிய மாவுங் குதிரையாகி மாவுங் களிறுகளும் முதலையிலொரு சாதியாகிய கராமும்† பெரிய மலையி முழையிடத்திலே சேரத் திரளப்பட்டுப் பெய்கின்ற மழை ஒருங்குதிரியு மலையிடத்தையொக்கும்;

(உஉ—உரு) தொழுவினுள்

. . . . வேறு :—

(இ - ள்.) அத்தொழுவினுள்ளே அவ்வேறுகளைத் தழுவுதற்கு விரும் விரும்பிக் குதித்த பொதுவரைத் தெரிந்து தெரிந்து அவ்வேறுகள் குத்தி

(உசு—உஎ) ஏற்றின் .

. . . வலந்தன :—

(இ - ள்.) அவை குத்தினபொழுது, எரி சுற்றிவிளங்குகின்ற கணிச்சிப்படையையுடைய இறைவன் சூடிய பிறையிடத்துக்கிடந்த சிவந்த நிறத்தையுடைய மாலைபோலப் பகையான ஏறுகளை விரும்பிப்போக்குவவாகிய ஏற்றினங்களின் குருதிதோய்ந்த கொம்புகளுடனே குடர்கள் சுற்றிப் பிணித்தன;

(உஅ—நக) கோட்டோடு போஒம் :—

(இ - ள்.) அங்ஙனம் கொம்புகளோடே சுற்றிக் குடர்கள் பிணித்

எற்றின் முன்னே .நின்று ஆடி

அக்குடரை இரண்டுகையாலும்

வாங் வயிற்றிலே இடுகின்றவன்,

சிவந்த நூற்கழியை ஒருவன் இரண்டு

கையிலு

முல்லை - ௩]

முல்லைக்கலி

௩க்௯

கோத்துப் பிடித்திருக்க அந்நூலை

மூன்று நூலாகக்

கொள்கின்றவனையும்

ஒக்கும் ; இவனுடைய

பெருமையைப் பாராயென்று தோழி

தலைவிக்குக் காட்டினள் ;

(கூஉ—கூடு) இதனை . . . . யவன் :—

(இ - ள்.) போரைக் கொண்டாடுகின்ற எற்றினது சர்ச்சரையை யுடைய கழுத்திலே பாய்ந்து அதற்கு இட்ட மாலைபோலே அதனைத் தழுவினவன் எருமைத் திரளையுடைய ஆயர்மகனல்லவோ ? ஆதலான் இனி அதன் வலியை மீளப்பண்ணி அதனை நீங்கான் ;

இளையோளே !

இஃதொரு வலியைப் பாராய்;

இவனொருத்தன்காணென்று

காட்டினாள் ;

இவனொருத்தனென்றது,

வியந்தது.

(௩௧—௩௧) இதுளை

மவன் :—

(இ - ள்.) மறுவினையுடைய

ஏற்றின் மேலேயிருந்து

ஆடிவிட்டுப் பின்னர்

நீர்த்துறையிடத்துத்

தெப்பத்தின்மேற் கிடந்து அதனைத்

தன்னு கின்றவனைப்போலே தோன்றுகின்றவன் பசுத்திரளையுடைய ஆயர்மக னல்லவோ ? ஆதலால் இவன் இங்ஙனம் செலுத்துந் தொழிலை ஒழியான் ; இளையோளே ! இஃதொரு வலியைப் பாராய், இவனொருத்தன் காணென்று காட்டினுள் ;

(௬0) தோழீஇ :—

(இ - ள்.) காண்டற்றொழிலை யுடையவளே !

இஃது " அளபெடைமிகூஉம் இகரவிறுபெயர் ".*

(சo—சரு) காற்றுப்போல்

. . . . . னேஞ்சு :— .

(இ - ள்.) வருகிய
எருமையை யேறுகின்ற
கூற்றுவனுடைய
நெஞ்சை வடிம்பாலே †
பிளந்துபோகட்டுச் சினத்தோடே
அரிய உயிரை
வாங்கின அஞ்ஞான்றை,
இறைவன் இத்தன்மையை
உடையவன்கொ
லென்று கூறும்படியாகக் காற்றின்
விசைபோல ஓடிவந்த விரைந்த
வருகிய
காரியதனைப் பலரும் வந்து

சேர் தலையுடைய களத்தே வலியடங்கத் தழுவி வருத்தி அதன்மேலே தோன்றிநின்ற பொதுவனது அழகைப் பாராய்; அதனைக் கண்டு என் நெஞ்சு உட்கிற்றுக்கா ணென்றாள்;

(சசு—சஃ) இதனை . . . . யவன் :—

(இ - ள்.) மற்றைப் புள்ளிகள் செறிந்த வலியையுடைய வெள்ளேற்றினது அழகையுடைய பக்கத்தே திங்களிற் கிடக்கின்ற மறுப்போலே பொருந்திக் கிடந்தவன் ஆட்டினத்தையுடைய ஆயர்

* தொல். சொல் : ௭௨ங. † வடிம்பு-கால் விளிம்பு.

௩௨௦

கலித்தொகை

[கலி - ௧0௩

ஆதலால் இவனொருத்தன் காண் ; இளையோனே !
பாராயெனக் காட்டினன் ;

இஃதொரு வலியைப்

(௫௦—௫௫) ஓவா . .

. . னெஞ்சு :—

(இ - ள்.) கஞ்சன் முதலியோர் வரவிட்ட கழுத்தின் மயிரினையுடைய குதிரையை வாயைப் பிளந்துபோகட்டுக் கையால் அடித்த அஞ்ஞான்றைக் கண்ணன் இத்தன்மையன்கொல்லென்று கூறும்படியாக ஒழியாத கோபத்தோடே வெவ்விதாய்த் தன்மேலே சென்ற சிவந்த ஏற்றைச் செவியடியிற் கொம்புகளைப் பிடித்துக்கொண்டு அதன் வலியை மீட்டுத் தழுவுங் காயாம்பூவாற் செய்த கண்ணியையுடைய பொதுவன் அழகைப் பாராய் ; அவனைக் கண்டு என் நெஞ்சு உட்கிற்றுக்கா ணென்றாள் ;

(கூ—எக) ஆங்த . . . . . யுலகே :—

(இ - ள்.) அவ்விடத்தே அப்படிக்காட்டி மயிலினது கழுத்தை மாறு படுகின்ற அணியப்பட்ட காயாம்பூவாற் செய்த கண்ணிகள் பவளம் போலும் நிறத்தையுடைய சிவந்த நிலத்தே மாறுபட்டுக் கிடக்கும் பொது வரும் பெரிய புலித்திரளும் பெரிய களிற்றுத் திரளுந் தம்முண் மாறு மாறுய்ப் பொருதாற்போலப் பொருது ஏற்றைத் தழுவிக்கொண்டு சோரத் தொழுவைவிட்டுப் போனர்; அவர் போன அப்பொழுதே நெருங்கிய இதழ்களையுடைய மலர்போலும் உண்கண்ணினையுடைய காதலையுடைய மகளிரும் அவர் கணவரும் வலியுற்றுத் தாதாகிய எருவையுடைய மன்றத் திலே குரவைக் கூத்தை ஆடுவார்கள்; ஆண்டு யாமுஞ் சென்று அக்குரவைக் கூத்தின் கண்ணே கூடிக் கொல்லுகின்ற ஏற்றினுடைய கோட்டிற்கு அஞ்சும் பொதுவனை மறுபிறப்பினும் ஆயர்மகள் தழுவாளென்றும், ஆயர் மகள் தோள், அஞ்சாராய் உயிரைத் துறந்து கொலைத் தொழிலையுடைய ஏற்றைக் கொள்பவர் செறியுமவையல்லது வருந்துதல்வந்து தழுவுதற்கு நெஞ்சில்லாதவர்கள் செறிதற்கரியவென்றும், உயிராவது ஒரு காற்றாக உணராதே அதனைக் காவல்கொண்டு அதனுடனே ஒரு செறிவாய் ஏற்றின் மருப்பினை அஞ்சும் நெஞ்சினையுடையார் செறிதற்கு ஆயர்மகளிருடைய தோள் எளியவாயிருக்குமோ வென்றுங், கொலைத் தொழிலையுடைய ஏற்றினது கொம்பினிடையிலே தாம் விரும்பும் மகளிருடைய மார்பின் முலையிடையிலே விழுமாறுபோல வீழில், எம்முடைய இனத்தில் ஆயர் தத்தம் மகளிர்க்கு முலைவிலை வேண்டாரென்றும், யாம் சுற்றத்தார் கூறும் முறைமையைப் பாடிக் குரவைக் கூத்தாடி அவ்விடத்துக் குற்றமில்லாத அழகையுடைய கடலிடத்தே பரந்துகிடக்கின்ற பழைய நிலத்தையாளும் உரிமையோடே பொருந்தின எம்முடைய பாண்டியன் இந்த அகன்ற இடத்தையுடைய உலகின்கண்ணே வாழ்வானாகவென்று அவ்விடத்துக்

கெடாத சீரிய புகழையுடைய தெய்வத்தைப் பரவுவேம்; நீயும் அங்ஙனம் பாடுதற்குப் போதுவாயாக வென்றாள்.

"மரபு நிலைதிரியா"* என்னுஞ் சூத்திரத்து "விரவும் பொருளும் விரவும்" என்றதனாற் குரவையாடல் ஏறுகோட்டிகைக்கிளையுள் விராய்வரு மென்றுந் தெய்வத்தையன்றி அரசரை வாழ்த்திய வாழ்த்தும் விராய்வரு மென்றுங் கூறலின் இங்ஙனங் கூறினர். இவ்விதி இவ்வாறே மேல்வருவன வற்றிற்குங் கொள்க.

இதனாற் றலைவிக்கு நினைதல்[1] பிறந்தது

இது "குட்ட மெருத்தடி யுடைத்து மாகும்"† என்பதனாற் குட்டம்பட்ட தரவும், 'புரிபு புரிபு . . . . வேறு' என இரண்டடி முடுகியலும், 'அரிபரி பறுப்பன சுற்றி' எனவும் 'உருவமாலைபோல' எனவும் முச்சீரான் வந்த சொற்சீரடி பெற்ற கொச்சகமும், ஓரடியான் வந்த அம்போதரங்கங்களும், 'பயிலிதழ் மலருண்கண்' எனச் சொற்சீரடி பெற்ற கொச்சகமும் வந்து கலிவெண்பாவுறுப்பின் வேறுபட்டு வந்த கொச்சகக் கலி. "முச்சீர் முரற்கையு ணிறையவு நிற்கும்"‡ என்பதனான் முச்சீரடியும் வந்தன.

(கூ)

க0ச.

மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்

மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்
றொல்லிசை நட்ட குடியொடு தோன்றிய
நல்லினத் தாய ரொருங்குதொக் கெல்லாரும்
வானுற வோங்கிய வயங்கொளிர் பனைக்கொடிப்
பானிற வண்ணன்போற் பழிதீர்ந்த வெள்ளையும்
பொருமுரண் மேம்பட்ட பொலம்புனை புகழ்நேமித்
திருமறு மார்பன்போற் றிறல்சான்ற காரியு
மிக்கொளிர் தாழ்சடை மேவரும் பிறைநுதன்
முக்கண்ணா னுருவேபோன் முரண்மிகு குராலு
மாகடல் கலக்குற மாகொன்ற மடங்காப்போர்
வேல்வல்லா னிறனேபோல் வெருவந்த சேயு மாங்கப்
பொருவரும் பண்பி னவ்வையும் பிறவு

* தொல். பொருள்: சரு. † தொல். பொருள்: சஉஅ. ‡ தொல். பொருள்: கஅஉ.
(பாடம்) 1. நினைத்தல்.

முருவப்பல் கொண்மூக்
குழீஇயவை போலப்
புரிபு புரிபு புகுத்தனர்
தொழூஉ;
அவ்வழி, முள்ளெயிற் றேஎ
ரிவளைப் பெறுமிதோர்
வெள்ளேற் றெருத்தடங்கு
வான்; ௨௦.
ஒள்ளிழை, வாருறு கூந்தற்
றுயில்பெறும் வைமருப்பிற்

காரி கதனஞ்சான் கொள்பவ
னீரரி
வெரூஉப்பிணை மானோக்கி
னல்லாட் பெறாஉமிக்
குரூஉக்கட் கொலீயேறு
கொள்வான் வரிக்குழை
வேயுறழ் மென்றோட்
டுயில்பெறும் வெந்துப்பிற் உறு.
சேஎய் சினனஞ்சான் சார்பவ
னென்றூங்
கறைவனர் நல்லாரை யாயர் முறையின
ணுண்மீன்வாய் சூழ்ந்த
மதிபோன் மிடைமிசைப்
பேணி நிறுத்தா ரணி;

அவ்வழிப், பறையெழுந் திசைப்பப் பல்லவ ரார்ப்பக்
குறையா மைந்தர் கோளெதி ரெடுத்த
நறைவலஞ் செயவிடா
விறுத்தன வேறு;
அவ்வேற்றின்,

மேனிலை மிகலிகலின் மிடைகழி பிழிபு மேற்சென்று
வேனுதி புரைவிறற் றிறனுதி மருப்பின் மாறஞ்சான்
பானிற வெள்ளை யெருத்தத்துப் பாய்ந்தானை
நோனாது[1] குத்து மிளங்காரித் தோற்றங்காண்
பான்மதி சேர்ந்த வரவினைக் கோள்விடுக்கு
நீனிற வண்ணனும் போன்ம்;
இரிபெழு பதிர்பதிர் பிகந்துடன் பலர்நீங்க
வரிபரி பிறுபிறுபு குடர்சோரக் குத்தித்தன்
கோடழியக் கொண்டானை யாட்டித் திரிபுழக்கும்
வாடில் வெகுளி யெழிலேறு கண்டை யிஃதொன்று
வெருவரு தூம மெடுப்ப வெகுண்டு
திரிதருங் கொல்களிறும் போன்ம்;

தாளெழு துணிபிணி யிசைதவிர் பின்றித் தலைச்சென்று
தோள்வலி துணிபிணி துறந்திறந் தெய்தி மெய்சாய்ந்து

(பாடம்) 1. கோதை

முல்லை - ௪]

முல்லைக்கலி

௩௨௩

கோள்வழுக்கித் தன்முன்னர்
வீழ்ந்தான்மேற் செல்லாது
மீளும் புகரேற்றுத் தோற்றங்காண் மண்டமருள்
வாளகப் பட்டானை யொவ்வா னெனப்பெயரு
மீளி மறவனும் போன்ம் ;

ஆங்க, செறுத்தறுத்
துழக்கி யேற்றெதிர் நிற்ப

மறுத்து மறுத்து மைந்தர்
சாரத்
தடிகுறை யிறுபிறுபு
தாயின விடப்ப
விடியுற ழிசையி
னியமெழுந் தார்ப்பப்
ருரு. பாடேற்றுக் கொள்பவர்
பாய்ந்துமே லூர்பவர்
கோடிடை[1]
நுழைபவர் கோட்சாற்று
பவரொடு
புரிபுமேற் சென்ற
நூற்றுவர் மடங்க
வரிபுனை வல்வி லைவ ரட்ட

பொருகளம்

போலுங் தொழூஉ;

௬0. தொழுவினுள், கொண்டவே றெல்லாம் புலம்புகத் தண்டாச்சீர்
வாங்கெழி னல்லாரு மைந்தரு மல்லலூ
ராங்க ணயர்வர் தழூஉ;

பாடுகம் வம்மின்

பொதுவன் கொலையேற்றுக்

கோடு குறிசெய்த மார்பு;

௬௫. நெற்றிச் சிவலை

நிறையழித்தா னீண்மார்பிற்

செற்றார்கண் சாயயான்
சாரா தமைகல்லேன்
பெற்றத்தார் கவ்வை
யெடுப்ப வதுபெரி
தாற்றீயா ளாயர் மகள் ;

தொழீஇ இஇ,[2] ஒருக்குநா
மாடுங் குரவையு ணம்மை எ௦.
யருக்கினன் போஒக்கி
யல்லினோய் செய்தல்
குருஉக்கட் கொலையேறு
கொண்டேன்யா னென்னுங்
தருக்கன்றோ வாயர் மகன் ;

சேரிழாய், கோளரி தாக
நிறுத்த கொலையேற்றுக்
காரி கதனஞ்சான் பாய்ந்த
பொதுவற்கே
எரு. யார்வுற் றெமர்கொடை
சேர்ந்தா ரலரெடுத்த
ஆராரை யுச்சி மிதித்து ;

(பாடம்) 1. கோட்டிடை 2.
கொடிநீ ... உடீஇ
கலிதமிழ் தாகை
[illegible]

ஆஙகுத,
தொல்கதிர்த் திகிரியாற் பரவுது மொல்கா

வுருமுறழ் முரசிற் றென்னவற்
௨௦. கொருமொழி கொள்கவிவ் வுலகுட னெனவே.

இது "நாடகவழக்கினும்"* என்னுஞ் சூத்திரத்துப் "பாடலு ளமையாத" என்றதனல் ஏறுதழுவியவாற்றைத் தோழி தலைவிக்குக் காட்டிக்கூறி, இக் குரவையுள் அவனைப் பாடுகம் வாவென்றூட்டு, அவள் உடம்பாட்டினுள் தான் அலரச்சம் நீங்கினமையும் அவன் தன்வண வருத்தினமையுங் கூறிப் பாடிப், பின்னர்த் தோழி நமர் அவற்கு நின்வனக் கொடைநேர்ந்தாரெனக் கூறியது.

(க—கஎ) மலிதிரை . . . .
தொழூஉ :—

(இ - ள்.) தன் காட்டைக் கடலினுடைய மிக்க திரையேறிக் கைக் கொண்டுவிடுகையினலே† தனக்கு நாடு இடமுண்டாம்படியாக மனத்தின் இளைப்பின்றுய்ப் பகைவரைத் தன் வலியினலே தாழ்க்கவேண்டி அவர் மேலே சென்று அவருடைய புலிப்பொறியையும் விற்பொறியையும் அவர் காட்டினின்றும் போக்கி விளங்குகின்ற கயலை அவ்விடத்தே பொறித்த

புகழையுடைய கெடாத தலைமையினையுடைய பாண்டியனுடைய பழைய புகழை நிலைபெறுத்தின குடியோடு ஒக்கத் தோன்றின பசுவினத்தில் ஆயரெல்லாருஞ் சேரத் திரண்டு விளங்குகின்ற வானிலேயுறும்படி ஓங்கிய ஒளிபெருகுகின்ற பனைக்கொடியினையுடைய‡ பாலினது நிறத்தையுடைத்

தாகிய

நிறத்தினையுடையவனைப்போலே

பழித்தலற்ற வெள்ளை ஏற்றை

யும் பொருகின்ற மாறுபாட்டினாலே

ஏனையவற்றின் மேலான பொன்னாற்

புனைந்த புகழையுடைத்தாகிய

சக்கரப் படையையுடைய

திருவாகிய

மறுவையுடைத்தாகிய

மார்பனைப்போலே அமைந்த கரிய

ஏற்றையும் மிக்கு

விளங்குகின்ற தாழ்ந்த சடையினையும்

ஒரு பாகத்திலே மேவுதல்வரும் பிறை

போன்ற
நுதலினையுடையாளையுமுடைய
மூன்று கண்ணையுடையானு
டைய நிறம்போலே மாறுபாடு
மிக்க சூராலேற்றையும் §
பெருமையை
யுடைய கடல் கலக்கமுறும்படி
உள்ளே சென்று
மாமரத்தைவெட்டின
மீளாத போரையுடைய வேலை
ஏந்திய முருகனது ¶ நிறம்போல
அச்சம்
வந்த சிவந்த ஏற்றையும் அவ்
வொப்புவருங்
குணத்தினையுடையவற்றையும்

ஒப்பில்லாத பிறவற்றையும்
வடிவையுடையவாகிய பல மேகங்கள் திரண்
டவைபோல முழங்கும்படி விரும்பி விரும்பித் தொழிலே
புகுதவிட்டார்;

---

* தொல். பொருள் : ருக.
† சிலப். கக : கஎ - உஉ.
‡ புறந். ருசு.: ௬; பனைக்கொடியோன் - பலராமன்.
§ குரால் - கபிலநிற எருது.
¶ முருகு. ௬ரு - ௬சு.

முல்லை - ௬]

(கஅ—கக) அவ்வழி . . . .
. வான் :—

(இ - ள்.) அவ்விடத்து இந்த ஒப்பில்லாத வெள்ளிய ஏற்றின் கழுத்திலே கிடக்குமவன் கூரிய எயிற்றினையும் அழகினையுமுடைய இவளைக் கூடும்.

(உ0—உக) ஒள்ளிழை .
. . . கொள்பவன் :—
(இ - ள்.) கூரிய
கொம்பையுடைய கரிய ஏற்றினது
கோபத்தை அஞ்
சாது அதனைத் தழுவுமவன் இந்த
ஒள்ளிய இழையினையுடையாளுடைய

வாருதலுற்ற கூந்தலிலே துயிலுதலைப்
* பெறும்;

(உக—உரு) ஈரரி
கோள்வான் :—

(இ-ள்.) குரால் நிறத்தவாகிய கண்ணினையுடைய கொலைத்தொழிலை யுடைய ஏற்றைத் தழுவுமவன், வெருவுதலையுடைய பிணையாகிய மானேக்குப்போலும் நோக்கினையுடைய இரண்டாகியகண்களையுடைய இந்த நல்லாளைக் கூடும்;

'அரி': ஆகுபெயர்.†

(உரு—உடு) வரிக்குழை . . . . சார்பவன் :—

(இ - ள்.) வெய்ய வலியினையுடைய சிவந்த ஏற்றினது சினத்தை அஞ்சாளுய் அதனைத் தழுவுமவன், வரியினையுடைத்தாகிய குழையினையுடை பாளுடைய மூங்கிலையொக்கும் மெல்லிய தோளிலே துயிலுதலைப்பெறும்; ‡

'வரி': அருப்புத்தொழில்.

(உடு—உஅ) என்றுங் . . . . ரணி :—

(இ - ள்.) என்று நல்லாயர்

தமக்குரிய முறைமையாலே சுற்றுவன யாகிய[1] நாளாகிய மீன்கள் தன்னிடத்தைச் சூழப்பட்ட மதிபோலே அவ்விடத்திலிட்ட பாண்களின்மேலே தத்தம் மகளிரைத் திரளாக ஒப்பித்து நிறுத்தினர்;

மீனும் மதியும் ஆயத்திற்கும் மகளிர்க்கும் உவமை.

(உகூ—ருக) அவ்வழிப்

வேறு :—

(இ - ள்.) அவ்விடத்துப் புகை வலம்வர விடப்பட்டு நிறுத்தப்பட்டன வாகிய ஏறுகள், பறை

மிக்கொலிக்கையினாலும் பலரும் ஆரவாரிக்கையினாலும் வலிகுறையாத ஆயர்கோடற்றொழிற்கு எதிரே என்றன ;

---

* பதிற். ௫௦ : ௧௮ - ௧௧. † செவ்வரி, கருவரியோடு கூடிய கண்கள் என ஆகின்றமையின். ‡ குறள். ௧௧௦௧.

(௩௨—௩௮) அவ்வேற்றின் . . .

. போனீம் :—

(இ - ள்.) அந்த ஏறுகளின்மேலே நிலைபெறும் மிகுதலையுடைத்தாகிய மாறுபாட்டினாலே மிடைமிசையினின்றும் இழிந்து அதனைவிட்டுச் சென்று வேலினது முனையையொக்கும் முனையையுடைய கொம்பினது விறலாகிய திறத்தினையுடைய மாறுபாட்டிற்கு அஞ்சானாகிப் பானிறம்போலும் வெள்ளிய ஏற்றினது கழுத்திலே பாய்ந்தானைப் பொறாதே மேற்சென்று குத்தும் இளைய கரிய ஏற்றினது தோற்றரவு, பால்போலும் மதியைச் சேர்ந்து மறைத்த பாம்பினை அது மறைத்த தன்மையை விடுவிக்கும் நீலநிறம் போலும் நிறத்தையுடையவனையும் ஒக்கும் ; அதனைப் பாராயென்றாள் ;

'வண்ணன்': மாயோன்.

(௩௧—௪௪) இரிபெழ . .

. . போனீம் :—

(இ - ள்.) பலரும் எழுந்திருந்து சென்று அதிர்ந்து அதிர்ந்து கெட்டு அவ்விடத்தைக் கடந்து சேரநீங்கும்படியாக எலும்புமுறிந்து குடர்களற்றுக் கவிழும்படி குத்திவிட்ட பின்பு தன் கொம்பின் வலியழியத் தழுவினவனை அலைத்துக்கொண்டு திரிந்து தகைக்குங் குறையாத கோபத்தினையுடைய அழகினையுடைய ஏறு, வெருவுதல் வருதற்குக் காரணமான மருந்தினாற் புகைக்க அதற்கு வெகுண்டு திரிதருங் கொல்கின்ற களிற்றையும் ஒக்கும் ; இஃதொன்றைப் பாராயென்றான் ;

(௪௫—௫௦) தாளெழ .

. . . போனீம் :—

(இ - ள்.) தோள்வலியாலே
துணிந்த ஏறு தழுவுதல் எக்காலமும்
மனத்தைச் செலுத்துதலின்
அம்மனம் பிணித்த முயற்சியாலே
எழுந்து துணிந்த இசை
தவிர்தலன்றி அதனிடத்தே சென்று
மற்றுள்ளார் தழுவ மாற்றைக் கடந்து
சேர்ந்து மெய்யைத் தழுவித்
தான்கொள்ளும் நிலையைத்
தப்பித் தன்முன்னே
வீழ்ந்தவன்மேலே செல்லாமல்
மீளுகின்ற புகர்
நிறத்தையுடைய ஏற்றினது
தோற்றரவு மிக்குச்செல்லும்
போருள் தன்

கையில் வாளோடே அகப்பட்டவனை
எனக்கு ஒவ்வாதென்று வெட்டாமல்
மீளுங், கூற்றுவனையொத்த
மறவனையும் ஒக்கும்; இதனைப்
பாராயென்

றான்;

(ருக—ருகூ) ஆங்க . . . .
தோழஉ :—

(இ - ள்.) அங்ஙனங் கொம்பு
மார்பிற் படுதலை மார்புகொடுத்து
எற்றுக்கொள்பவரோடும் மேலே பாய்ந்து ஏறுபவரோடுங்
கோட்டிடையிலே சென்று
புகுவாரோடும் ஏறுகொள்ள

வல்லேனென்று சாற்றுவாரோடும்
ஏறுகள் பொருது பின்பு
பொருவாரை அறுத்துச் செறுத்து
எதிரேகிற்க அதனைப் பொறாமல்
மைந்கர் விலக்குமவரை
மறுக்குமறுக்கச் சென்று முலை -

சு]

முல்லைக்கலி

ஙு உள்

தழுவுகையிலுலே என்புகள்
முறிந்து முறிந்து தசைகளற்றுப்
பரந்தனவாய்க் கிடக்க இடியோடே
மாறுபடுகின்ற எற்றினது
முழக்கோடே வாச்சியங்கள்
மிக்கு ஆரவாரிக்க அத்தொழு,

போரைவிரும்பி மேலேசென்ற
துரியோத
ஞாதிகள் படும்படி வரிந்து புனைந்த
வலிய வில்லையுடைய தருமன்
முதலி
யோர் கொன்ற பொருகின்ற
களத்தையொக்கும்;
(௬௦—௬௨)
தொழுவினுள் . . . . தழூஉ
:—
(இ - ள்.)
அத்தொழுவிடத்துத்
தழுவிக்கொண்ட ஏறுகளெல்லாம்
மேயும் நிலத்தேபோக அமையாத
சிரினையும், நோக்கினர் கண்ணை

வாங்கிக்
கொள்ளும் அழகினையுமுடைய
ஆய்ச்சியரும் ஆயரும்
வளப்பத்தையுடைய
ஊரிடத்தே குரவையாடுவரெனத்
தோழி தலைவிக்குக் காட்டிக் கூறினாள்
;
(சுங-சுச) பாடுகம் . : . .
மார்பு :— .
(இ - ள்.) கூறிப்
பொதுவனுடைய
கொலைத்தொழிலையுடைய ஏற்றி
னுடைய கொம்புகள்
குறியிட்டுவிட்ட மார்பைப்
பாடுவேமாக வாருங்கோ

ளனத் தலைவியையும் ஆயத்தையும்
நோக்கிக் கூறினுன் ;

(கரு—கஅ) நெற்றிச்

. . . . மகள் :—

(இ - ள்.) அதுகேட்ட

தலைவி, நெற்றியிலே சிவந்த

சுட்டியினை

யுடைய எற்றை விரவி நிறைதலைக்

கெடுத்தவனுடைய நீண்ட மார்பிலே

பகைத்து அலர்கூறுகின்ற மகளிர்

நம்மை இகழ்ந்து பார்க்குங்

கண்கள்

இகழ்ந்துபாராதிருக்கும்படியாக

யான் சாராமல் அமைந்திரேன் ;

இனிப்

பசுவையுடைய ஆய்ச்சியர் அலர்கூறுவதற்குப் பெரிதும் வருத்தமுறேற்ன் யானென்றாள்;

'ஆயர்மக' வென்று தன்னைப் பிறர்போற் கூறினள்.

(கக) தொழீஇ :—

(இ - ள்.) தொழில் செய்கின்றவளே!

(கக—எஉ) ஒருக்குநா . . . .

மகளீர் :—

(இ - ள்.) ஆயர்மகன் ஆயத்தோடே நாம் ஆடுங் குரவைக் கூத்திலே

நம்மை அருமைசெய்தான்போலே நோக்கி நமக்கு வருத்தத்தைத் தரும் நோயைச்செய்தல் நிறத்தையுடைய கண்ணையுடைய கொலையேற்றை யான் கொண்டேனென்னும் மனச்செருக்கன்றோ ? அது வேறொன்றல்லவே என்றாள் ;

(எஉ—எக) நேரிழாய் . . . . மிதித்து :—

(இ - ள்.) அதுகேட்ட தோழி, ஒத்த இழையினையுடையாய்! கொள்

ளுதலரிதாக ரஞ்சுற்றத்தார்

கிறுத்தின கொலைத்தொழிலையுடைய

ஏனாகிய உட அ

யலதுமுறுபய

காரியினது கோபத்திற்கு

அஞ்சாணுய்த் தழுவின

பொதுவனுக்கே எம்முடைய

சுற்றத்தார் மகிழ்ச்சிநிறைதலுற்று

அவனை மிகக் கூறிய ஊரிலுள்

ளாரைத் தலையிலே மிதித்துக்*

கொடுத்தலைப்பொருந்தினர்; இனி

வருந் தாதேகொள் ளென்றாள்;

'எமர்' என்றாள் "

தாயத்தினடையா "† என்னுஞ்
சூத்திர விதியால். அவர் அலர் கூறிய
அவற்கே கொடுத்தலின், அவர்
உச்சியிலே மிதித்த தன்
மைத்தென்றான்.

(எஎ—அ0) ஆங்குத்

. . . னனவே :—

(இ - ள்.) கெடாத
உருமேற்றை மாறுபடுகின்ற
முரசினையுடைய
அவ்விடத்திற் பாண்டியனுக்கு
இவ்வுலகுசேர அவனுடைய
ஒருமொழி

யைக் கேட்பதாகவென்று கூறிப்
பழைதாகிய கதிரையுடைய
சக்கரப்
படையையுடையானை வாழ்த்துதும்;
அதற்கு நீயும் வருகவென்றான்;
'ஒருமொழி' : ஆணை.
தென்னவற்கென்னும் நான்காவது
இவ்வுலகம்
நடப்பதாகவென்று போந்த
பொருளொடு முடியும்.
இதனாற் றலைவிக்குப்
புணர்ச்சியுவகை பிறந்தது.
" ஆயர் வேட்டுவர் " ‡
என்னுஞ் சூத்திரத்தில் ஆயரிலுங்

கிழவருங்
கிழத்தியரும்
உளரென்றாராதலான் இவர்க்குங்
களவொழுக்கம் நிகழுமென்ப
தாம். " நாடகவழக்கினும் " §
என்னுஞ் சூத்திரத்திற் பாடலுள்
அமையா
தனவாய்க் களவொழுக்கம் நிகழ்ந்து
ஏறுதழுவி வரைவுடன்பட்டாராகக் கூறினார். மேலும், இங்ஙனங் களவுநிகழ்ந்து ஏறுதழுவி வரைகின்றதாகக் கூறும் பாட்டுக்களுக்கெல்லாம் இதுவே விதியாகக் கொள்க.

இது தரவும் ஐஞ்சீரடிப்பெற்ற குறுவெண்பாட்டும் ஐஞ்சீரடிப்பெற்ற நெடுவெண்பாட்டும் ஐஞ்சீரடிப்பெற்ற கொச்சகமும் வழியசைபுணர்த்த சொற்சீரடியும் முடுகியலோடு தொடர்ந்த கொச்சகவெண்பாவும் நாற்சீரடி முடுகியலோடு தொடர்ந்து ஐஞ்சீரடியும் வந்த கொச்சகவெண்பாவிரண்டும் ஐஞ்சீரடியும் ஆசிரியத்தளையும் விரவி ஈறு வேறோர் சீரான் இற்ற கொச்சக வெண்பாவும் ஐஞ்சீரடுக்கியவற்றிற் குறுவெண்பாட்டும் ஐஞ்சீரடுக்கிய நெடு வெண்பாட்டிரண்டுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்றுவந்த கலிவெண் பாவின் வேறுபட்ட கொச்சகம். " வெண்டளை விரவியு மாசிரியம் விரவியு, மைஞ்சீ ரடியு முளவென மொழிப " ¶ என்பதனுன் மூவகைப் பாவிற்கும் ஐஞ்சீரடி வருதல் பெற்றாம். (௪)

* தலையிலே மிதித்தல்—இழிவு படுத்துதல்; நாலடி. ௬௪.
† தொல். பொருள்: ௨௨௪. ‡ தொல். பொருள்: ௨௪.
§ தொல். பொருள்: ௫௩. ¶ தொல். பொருள்: ௬௭௫.

முல்லை - ௫]

முல்லைக்கலி

௩௨௬

௧0௫.

அரைசுபடக் கடந்தட்
டாற்றிற் றந்த

முரைசுகெழு முதுகுடி முரண்மிகு செல்வற்குச்
சீர்மிகு சிறப்பினோன்

றுல்குடிக் குரித்தெனப்

பார்வளர் முத்தமொடு
படுகடல் பயந்த
ரு. வார்கலி யுவகைய[1]
ரொருங்குடன் கூடித்
தீதின்று பொலிகெனத்
தெய்வக் கடியயர்மார்
வீவில் குடிப்பி விருங்குடி
யாயருந்
தாவி லுள்ளமொடு
துவன்றி யாய்புடன்

வள்ளுரு ணேமியான்

வாய்வைத்த வளைபோலத்

கூ. தெள்ளிதின் விளங்குஞ்

சுரிநெற்றிக் காரியு

மொருகுழை யவன்மார்பி

லொண்டார்போ லொளிமிகப்

பொருவறப் பொருந்திய

செம்மறு வெள்ளையும்

பெரும்பெயர்க் கணிச்சியோன் மணிமிடற் றணிபோல
விரும்பிணர் நெருத்தி னேந்திமிற் குராலு

கரு. மணங்கமழ் வச்சிரத்தோ

னாயிரங் கண்ணேய்க்கும்

கணங்கொள்

பல்பொறிக் கடுஞ்சினப் புகரும்

வேல்வலா னுடைத்தாழ்ந்த
விளங்குவெண் டுகிலேய்ப்ப
வாலிது கிளர்ந்த
வெண்காற் சேயுங்
கால முன்பிற் பிறவுஞ்
சால

உ௦. மடங்கலுங் கணிச்சியுங் காலனுங் கூற்றுந்
தொடர்ந்துசெல் லமையத்துத் துவன்றுயி ருணீஇய

வுடங்குகொட் பனபோற்
புகுத்தனர் தொழூஉ;
அவ்வழி,

காரெதிர் சலியொலி

கடியிடி யுருமி
னியங்கறங்க

உடு. ஆர்பெழு கிளர்புளர் புயன்மங்குலி[2] னறைபொங்க
நேரிதழ் நிரைநிரை நெறிவெறிக் கோதைய ரணிநிற்பச்

சீர்கெழு சிலைநிலைச்
செயிரிகன் மிகுதியிற்
சினப்பொதுவர்
ஆர்பெழு துதைபுதை
துகள்விசும் புறவெய்த
வார்புடன் பாய்ந்தா

ரசுத்து ;
௩0. மருப்பிற் கொண்டு
யார்புறத் தழீஇயு

மொருத்திடை யடங்கியு
மிமிலிறப் புல்லியுங்

(பாடம்) 1. யுவகையா. 2. புயர் மங்குலி.

42

௩௩0
கலித்தொகை டையை

லெகு தோளிடைப் புகுதந்துங்
துதைந்துபா டேற்று

நிரைபுமேற் சென்றாரை
நீண்மருப் புறச்சாடிக்
கொளவிடங் கொளவிடா
நிறுத்தன வேறு;
கடு. கொள்வாரைக் கொள்வாரைக்
கோட்டுவாய்ச் சாக்குத்திக்
கொள்வார்ப் பெறாஅக்
குரூஉச்செகில்[1] காணிகா
செயிரிற் குறைநாளாற்
பின்சென்று சாடி
யுயிருண் ணுங் கூற்றமும்
போன்ம்;

பாடேற் றவரைப்

படக்குத்திச் செங்காரிக்

. ௪0. கோடெழுந் தாடுங் கணமணி

காணிகா

நகைசா[2]லவிழ்பத நோக்கி

நறவின்

முகைசூழுந் தும்பியும்

போன்ம் ;

இடைப்பாய்ந் தெருத்தத்துக்

கொண்டானோ டெய்தி

யிடைப்பாயும் வெள்ளேறு

கண்டைகா ௪௫.

வாள்பொரு வானத் தரவின்வாய்க்

கோட்பட்டுப்

போதரும் பான்மதியும்
போன்ம் ;
ஆங்க, ஏறும் பொதுவரு
மாறுற் று மாறு
விருபெரு வேந்தரு
மிகலிக்கண் ணுற்ற
பொருகளம் போலுந்
தொழூஉ ;

ருo. வெல்புக ழுயர்நிலைத்
தொல்லியற் றுதைபுதை
துளங்கிமி
னல்லேறு கொண்ட
பொதுவன் முகநோக்கிப்

பாடில வாயமகள் கண்;

நறுநுதா லென்கொலைங் கூந்த

லுளரச்

சிறுமுல்லை நாறிய தற்குக் குறுமறுகி[3]
ருரு. யொல்லா[4] துடன்றெமர் செய்தா ரவன்கொண்ட

கொல்லேறு போலுங் கதம்;

நெட்டிருங் கூந்தலாய்

கண்டை யிஃதோர்சொல்;

கோட்டினத் தாயர் மகனொடியாம் பாட்டதற்
கெங்க ணமரோ பொறுப்பர் போருநார்

கூ0. தங்கண் பொடிவ தெவன்;

(பாடம்) 1. குருஉச்சேகில். 2. தலைசா.
3. குறுமறுகு. 4. பொல்லா.

முல்லைக்கலி

௩௩க'

ஒண்ணுதால்,

இன்ன வுவகை பிறிதியா தி
யாயென்னைக்
கண்ணுடைக் கோல
ளலைத்ததற் கென்னை
மலரணி கண்ணிப்
பொதுவனை டெண்ணி
கூறு: யலர்செய்து விட்டதிவ்

ஊர்;

ஒன்றிப் புகரினத் தாயமகற்
கொள்ளிழா
யின்றெவ னென்னை
யெமர்கொடுப்ப தன்றவன்
மிக்குத்தன் மேற்சென்ற
செங்காரிக் கோட்டிடைப்
புக்கக்காற் புக்கதென்
னெஞ்சு;

எ0. என,

பாடிமிழ் பரப்பகத் தரவணை
யசைஇய

வாடுகோ ணேமியாற் பரவுது நாடுகொண்
டின்னிசை முரசிற் பொருப்பன் மன்னி

யமைவர லருவி யார்க்கு
எரு. மிமையத்
தும்பரும் விளங்குக வெனவே.

இஃது ஏறுதழுவியவாற்றைத் தோழி தலைவிக்குக் காட்டிக் கூறி, அவள் ஏறு தழுவிய தலைவனை விருப்போடு நோக்கியவற்றைத் தன்னுள்ளே கூறி, முன்னர்க் களவின்கட் தமர் கோபித்ததனையும் அயலார் பொருதிருந்த தன்மையினையுந் தலைவிக்குக் கூற, அவளும் அவர் அலர்கூறியது நன்றென்று கூறி, அன்றே[1] என் நெஞ்சு கலந்தவிட்டது; இனி அவர் கொடுப்பதாகக் கூறிய நாளிற் செய்வதென்னென மகிழ்ந்து கூற, அது கேட்ட தோழி, யாம் அங்ஙனங் கூடி இனிதிருக்குமாறு காக்கின்ற பாண்டியன் நீடுவாழுமாறு தெய்வத்தைப் பரவுகம் வாவெனக் கூறியது.

(க—உஉ) அரைசுபடக் . . . . தொழூஉ :—

(இ - ள்.) அரசுகள் [2] படும்படியாக வென்று கொன்று நெறியாலே கொண்டுவந்த தலைமை மிகுகின்ற சிறப்புக்களையுடையோனுடைய பழைதாகிய குடிக்குரித்தென்று * கூறிய, பாண்டிமண்டலம் பயந்த விளைவுகளும் ஒலிக்குங்கடலில் வளர்ந்த [3] முத்தத்தோடே மற்றும் பயந்த பொருள்களும் மூன்று முரசமுங் கெழுமும் முதிய குடியிற்பிறந்த மாறுபாடு மிகுகின்ற அச் செல்வனுக்குத் தீதின்றிப் பொலிவனவாகவென்று உட்கொண்டு, தெய்வத்திற்குச் சிறப்புக்களைச் செய்தற்கு அவனுடைய கேடில்லாத குடியின்பின்பு தோன்றிய பெரிய குடியிற் பிறந்த ஆயரும்,

* புறம். ருஅ : சo - சரு.

(பாடம்) 1. இன்றே. 2. அரசுகளும். 3. விளக்க

௬௬௨

கலித்தொகை

[கலி - ௧0௫]

ஒருங்குநிறைந்த செருக்கினையுடைய

உவகையராய்ச் சேரக்கூடி, ஏறு

தழுவுங்காற் பிறர்க்குத் துன்பம்

நிகழுமென்னும் வருத்தமில்லாத

உள்ளத்தோடே நிறைந்த ஏறுகளை

ஆராய்ந்து, வள்ளிய உருண்ட

நேமிப் படையவன் ஊதிய
சங்குபோலத் தெள்ளிதாக
விளங்குஞ் சுட்டியை யுடைத்தாகிய
நெற்றியையுடைய கரிய
ஏற்றையும், நம்பிமூத்தபிரா
னுடைய* திருமார்பில் ஒள்ளிய
சிவந்த மாலைபோல
ஒளிமிகும்படியாக ஒப்புமிக நீண்டு
பொருந்திய சிவந்த மறுவினையுடைய
வெள்ளிய ஏற்றை யும், பெரிய
பெயரையுடைய கணிச்சிப் படையினை
யுடையவனுடைய நீல மணிபோலுந்
திருமிடற்றில் அழகுபோலக் கரிய
சர்ச்சரையையுடைய கழுத்தினையும்
ஏந்தின குட்டேற்றினையுமுடைய

குரால் நிறத்தினையுடைய ஏற்றையும்,
வருத்தமுடைய வச்சிரப்படையை
யுடையோனுடைய ஆயிரங்
கண்களையொக்குந் திரட்சிகொண்ட
பலவாகிய புள்ளிகளையுங் கடிய
சினத்தையுமுடைய நிறத்தையுடைய
ஏற்றையும், முருகனுடைய உடை
யாய்த் தாழ்ந்த விளங்குகின்ற
வெள்ளிய துகிலையொப்ப நன்றாய்
உயர்ந்த வெள்ளிய கால்களையுடைய
சிவந்த ஏற்றையுங், காலனது
வலிபோலும் வலியையுடைய பிற
ஏறுகளையுஞ், சால நிறைகின்ற
பல்லுயிர்களை உண்ணவேண்டி
ஊழித்தீயுங் கணிச்சியுங் காலனுங்

கூற்றுவனும் அவ் வுயிர்களை விடாமற்

செல்கின்ற ஊழிமுடிவாகிய

காலத்தே அவை சோச்

சுழன்று திரியுமாறுபோலச் சுழன்று திரியும்படி

புகுதவிட்டார்;

தொழுவிடத்தே சேரப்

பார்பயந்தன கடல்பயந்தனவென

இரண்டிற்கும் பயந்தன என்னுந்

தொழிற்பெயரைக் கூட்டுக. இனிப்

பார்நிலத்தில் வளர்ந்த முத்தென்று

மாம். உடன்புகுத்தனரென்க.

முருகன் தனக்கு உரித்தல்லாத†

வெண்டுகில்

† உடுத்தாற்போலக் கால் வெளுத்த எருது. முன் இறைவன் கையதாய் ஊழிமுடிவில்கண் அவன் ஏவலால் உயிர்த்திறமேற் றிரியுங் கணிச்சி. 'காலன்': கூற்றுவனேவலாளன்.

(உகூ)

அவ்வழி:—

(இ - ள்.) அங்ஙனம் அவர்

புகுதவிட்ட இடத்து;

(உச-உக) காரெதிர்

ரகந்து:—

(இ - ள்.) கார்காலத்துத் தம்மில் எதிர்ந்த கலிப்பினையுடைய உருமினது கடிய இடியொலிபோல வாச்சியங்கள் ஒலியாநிற்கப் பரந்து உயர்ந்து எழுகின்ற அசைதலையுடைய மேகம்போலத் திசைகளிலே புகை மூச்செழாநிற்கப், புறவிதழ் ஒடிந்த மணத்தையுடைய ஒத்தவிதழாற்

* பலராமன் யமுனையால் அளிக்கப்பட்ட சிறந்த குண்டலமொன்றை அணிந்தவனென்ப. † முருகனுக்குரியது செந்துகில்; பரி. கக ; கஎ.

ட்டின மாலையையுடைய மகளிர் நிரைநிரையாக அணியாகிற்கக், குற்றத்
ஈதச் செய்த மாறுபாட்டின் மிகுதியாலே தலைமை பொருந்தின சிலைக்
ின்ற நிலைமையினையுடைய சினத்தையுடைய பொதுவர் எழுகின்ற
நெருங்கின கண்கள் மறைத்தற்குக் காரணமான துகளாலே விசும்பு
ார்ந்துமிகும்படி [1] அத்துகள் சென்று சேரும்படியாக ஆர்த்து அத்
தொழுவினுள்ளே சேரப் பாய்ந்தார் ;

(௩௦-௩௮) மருப்பிற் . . . . போன்ம் :—

(இ - ள்.) அங்ஙனம் பாய்ந்து கொம்பிடத்தே பிடித்துக்கொண்டும்
மார்பிலே உறும்படி தழுவிக்கொண்டுங் கழுத்திடத்திலே அடங்கிக்
கிடந்துங் குட்டேறு முறியும்படி தழுவியுந் தோளுக்கு நடுவே கழுத்தைப்
புகுதவிட்டுப் பிடித்தும் நெருங்கிக் கொம்புகள் தம்மேலே படுதலை ஏற்றுக்
கொண்டும் நிரைத்துத் தம்மேலே சென்ற ஆயரைப் பின்னர்க் கீழே
வீழ்த்து நீண்ட மருப்புத் தைக்கும்படி குத்தி அவர்கள் தழுவுகின்ற கழுத்
திடத்தைத் தழுவக்கொடாதே ஏறுகள் அவரை நீக்கி நிறுத்தின ; அங்
ஙனம் நிறுத்தினபின்புஞ் சென்று தழுவுவாரைத் தழுவுவாரைக் கோட்
டிடத்தே சாம்படி குத்திப் பின்பு சென்று தழுவுவாரைப் பெறாமல் நின்ற
நிறத்தையுடைய சிவந்த ஏறு உயிர்குறைகின்ற நாளிடத்தே அவர் பின்னே
சென்று குற்றத்தைச் செய்து தொகைத்த உயிரையுண்ணுங் கூற்றுவனையும்
போலும் ; இதனைப்பாரா யென்றான் ;

(௩௯-௪௨) பாடேற் .

. . . போன்ம் :—

(இ - ள்.) சிவந்த கரிய ஏற்றினுடைய கொம்புகள் படுதலை மார்பிலே ஏற்றவர்களைக் கொம்புகளாலே படும்படி குத்தி மேனோக்குதலாலே வீழ்ந்த குருதியால் நனைந்து அசையும் பலவாகத் திரண்ட திரட்சியையுடைய சிறிய மணிகள் ஒளியமைந்த நறும்பூவினது மூவகயவிழுஞ் செவ்வியை நோக்கி அதனைச் சூழ்ந்து திரியுந் தும்பியையும் போலும்; அதனைப்பாரா யென்றான்;

"நறுவிதழ் கண்டன்ன செவ்விரற் [2] கேற்ப" * என உவமை கூறலின் நறும்பூவை ஈண்டு மணிக்கு உவமை கூறவே சிறிய மணிகள் கோத்துக் கட்டினமையுங், 'கோடெழுக்'கென்றதனால் அக்கோடு எழுந்தகாலத்து வீழ்ந்த குருதியால் அவை சிவந்தமையும் பெற்றாம்.

(சஙு—சகூ) இடைப்பாய்ந் . . . . போன்ம் :—

(இ - ள்.) நடுவே பாய்ந்தெய்திக் கழுத்திடத்தே தழுவிக்கொண்டு கிடந்தவனோடே பரணின்மேலே தாவிப்பாயும் வெள்ளிய ஏறு பாம்பின்

---

* கலி. அச : உஉ.
(பாடம்) 1. தூர்ந்து போம்படி, 2, மெல்விரற்.

ருஙுசு

கலித்தொகை

[கலி - க0௫

வாயாற் சிறிதிடம் விழுங்கப்பட்டு,

அப்பாம்புடனே ஒளியைத் தருகின்ற
விசும்பிலே போதலைச் செய்கின்ற,
பால்போலும் மதியையும் போலும்;
இதனைக்காணு யென்றான்;

இகா முன்னிலையசை. அது 'கா'வெனத் திரிந்தது.

(சஎ—சக) ஆங்க . . . . தொழூஉ :—

(இ - ள்.) அங்ஙனே ஏறுகளும் இடையருந் தம்மின் மாறுபடுகையி லுலே அத்தொழு
இருவராகிய பெரிய வேந்தர்

மாறுபட்டு எதிர்ப்பட்ட போர்மாறாத

பொருகளத்தை யொக்கும் என்றான்;

இத்துணையுந் தோழி

தலைவிக்குக்காட்டிக் கூறியது.

(௫௦-௫௨) வெல்புக

கண் :—

(இ - ள்.) நெருங்கின

கழுத்தையெல்லாம்

மறைத்தலையுடைய அசை

கின்ற குட்டேற்றினையுடைய நல்ல ஏற்றைத்தழுவின, வெல்கின்ற புகழ்
உயர்கின்ற நிலைமையையுடைய, பழைதாகிய குலத்தியல்பினையுடைய,

பொதுவன் முகத்தை நோக்கி

ஆய்ச்சாதியிற்பிறந்த மகளுடைய

கண்

இமைத்தலையிலவா யிருந்தன ;

இது, தோழி தன் நெஞ்சொடே அவள் விரும்பக் கூறியது.

(௫௩—௫௬) நறுநுதா கதம் :—

(இ - ள்.) நறிய நுதலினையுடையாய்! ஐவகைப்பட்ட கூந்தலை ஆற்ற அது வெண்ணெயின் நாற்றம்* நீங்கிச் சிறிய முல்லைப்பூவின் நாற்றம் மேவி மிகநாறியதற்கு[1] எம்முடைய சுற்றத்தார் பொருந்தாதே அண்ணிதாக மனஞ்சுழன்று மாறுபட்டு அவன் தழுவின கொல்லுகின்ற ஏறுபோலுங் கோபத்தினைச் செய்தார் ;

அன்று அவர் இங்ஙனங் கோபித்தது என்ன பயனை யுடைத்தாயிற்றென்றான்;

இது தலைவியை நோக்கிக் கூறியது.

(கஎ-சுo) நெட்டிருங் . . . . தேவன்:—

(இ - ள்.) நெடிய கரிய கூந்தலையுடையாய்! இன்னும் யான் கூறு கின்ற ஈதொரு சொல்லையும் நெஞ்சால் ஆராய்ந்துபாராய்; கொம்பை யுடையவாகிய எருமையினத்தையுடைய ஆயர்மகனேடே யாங்கூடியதற்கு எம்முடைய சுற்றத்தாரோ இன்னும் பொறுப்பர்; அது பொறாத அயலார் தம்முடைய கண்கள் எங்கண்களை

நோக்கித் தீய்ந்து போவது[2] என்ன பயனையுடைத்தென்றான் ;

* பாலையும் வெண்ணெயையும் நெய்யையும் தலையிற் றடவிக் கொள்ளுதல் ஆய்ச்சாதியர்க் கியல்பு.

(முல்லை - கு)

முல்லைக்கலி

௨௨௫

(கூக—கூரு)

ஒண்ணுதால் . . . . ஊர் :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி, ஒள்ளிய நுதலினையுடையாய் ! யாய் தன் கண்களுடையவாகிய கோலையுடையளாய்

என்னைவருத்தியதற்கு* இவ் வூர் என்னை மலர் அணிந்த கண்ணியையுடைய பொதுவனோடே கூட்ட மென்றெண்ணி அலரையுண்டாக்கிவிட்டது ; இத்தன்மைத்தாகிய உவகை† நமக்கு வேறியாதுதானென மகிழ்ந்து கூறினாள் ;

அலைக்குங்கோலின் காரியத்தைக் கண்கள் செய்தமைபற்றிக் கண்களுடையவாகிய கோலென்றாள்.[1]

(சுசு—சுக) ஒன்றிப் . . . . னேஞ்சு :—

(இ - ள்.) அங்ஙனங்

கூறியபின்னரும்
ஒள்ளிய இழையினையுடையாய்!
தன்மேல் மிக்குச் சென்ற சிவந்த
கரிய எற்றினுடைய
கோட்டிடையிலே இற்றைநாள் அவன்
செல்ல[2] என் நெஞ்சும் உடன்
சென்றது; இனி நஞ்சுற்
றத்தாரெல்லாரும் பொருந்திப்
புகன்ரயுடைய பசுத்திரளையுடைய
ஆய்ச்சாதி யிற் பிறந்த மகனுக்கு
என்னைக் கொடுப்பதாக அறுதியிட்ட
அற்றைநாளிற் கொடுக்கின்றது என்ன
பயனையுடைத்தென்று தலைவி
மகிழ்ந்து கூறினள்;

(எo—எடு) என, பாடிமிழ்

. . . . வேனவே :—

(இ - ள்.) அதுகேட்ட தோழி,

யாம் இல்லறம் நிகழ்த்தி இனிதிருக்கு

மாறு காத்தற்குப்

பிறநாடுகளைக்கொண்டு இனிய

ஓசையையுடைத்தாகிய

முரசினையுடைய பாண்டியன்

அமைந்துவருதலையுடைய அருவி

ஆரவாரிக்கும் இமயத்திற்கு

வடதிசையிலேயும் மன்னி

விளங்குகவென்று உட்கொண்டு

முறிதலையுடைத்தாகிய முழங்குகின்ற

கடலிடத்துப் பாம்பணையிலே பள்ளி

கொண்ட வெற்றிகொண்ட

சக்கரத்தினையுடையோனை

வாழ்த்துவேமென் றூள்.

இதனற் றலைவிக்குப்
புணர்வாகிய உவகை பிறந்தது.
இது தாவுந் தனிச்சொல்லும்
ஐஞ்சீரடி பலவும் விராய்
முடுகுவண்ணம் அடியிறந்தோடிய
கொச்சகவெண்பாவுங் கொச்சகமும்
இரண்டு நெடுவெண் பாட்டும் "
வெண்பாட் டீற்றடி முச்சீர்த்தாகும்
" ‡ என்றதனுன் இடை யீற்று
முச்சீரடிவந்த நெடுவெண்பாட்டும்
ஐஞ்சீரடி பெற்ற குறுவெண்
பாட்டும் ஐஞ்சீரடி முடுகியலோடு தொடர்ந்த கொச்சகவெண்பாவும் நெடு
வெண்பாட்டும் ஓரடியாஞென்றுங் குறுவெண்பாட்டுந் தனிச்சொல்லும்
இரண்டு நெடுவெண்பாட்டுந்

தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்று வந்த கொச்சகம்.

(௫)

* குறள், ௭௧௦. † குறள், ௧௧௪௫. ‡ தொல், பொருள்: ௧௮௪

(பாடம்) 1. கோவென்றார். 2. இவன் செல்ல,

௩௩௪ா
கலித்தொகை
[கலி. ௧0௬

௧0௪.

கழுவொடு சுடுபடை சுருக்கிய தோற்கண்
ணிமிழிசை மண்டை யுறியொடு தூக்கி
யொழுகிய கொன்றைத் தீங்குழன் முரற்சியர்
வழூஉச்சொற் கோவலர் தத்த மினநிரை
பொழுதொடு தோன்றிய கார்நனி வியன்புலத்தார்[1] ;

அவ்வழி,

நீறெடுப்பவை
நிலஞ்சாடுபவை
மாறேற்றுச் சிலைப்பவை
மண்டிப்பாய் பவையாய்த்
துளங்கிமி னல்லேற் றினம்பல

களம்புகு கo,

மள்ளர் வனப்பொத் தன ;

தாக்குபு

தம்முட் பெயர்த்தொற்றி

யெவ்வாயும் வைவாய்

மருப்பினுன் மாறு து குத்தலின்

மெய்வார் குருதிய வேறெல்லாம் பெய்காலைக்

கொண்ட னிரைபொத்

தன ;

கரு. அவ்வேற்றை,

பிரிவுகொண்
டிடைப்போக்கி
யினத்தோடு புனத்தேற்றி
யிருதிறனு நீக்கும் பொதுவ
ருருகெழு மாநில
மியற்றுவான்

விரிதிரை நீக்குவான்
வியன்குறிப் பொத்தனர்;
உ௦. அவரைக், கழல வுழக்கி
யெதிர்சென்று சாடி
யழல்வாய் மருப்பினாற்
குத்தி யுழலை

மரத்தைப்போற்
றொட்டன வேறு ;

தொட்டதம், புண்வார் குருதியாற் கையிசைந்து மெய்திமிர்ந்
தங்கார் பொதுவர் கடலுட் பரதவ

௨௫. ரம்பியூர்ந் தாங்கூர்ந்தா
ரேறு ;

ஏறுதங், கோலஞ்செய் மருப்பினாற் றோண்டிய வரிக்குடர்
ஞாலக்கொண் டெழூஉம் பருந்தின் வாய்வழீஇ
யாலுங் கடம்பு மணிமார் விலங்கிட்ட
மாலைபோற் றூங்குஞ் சினை ;

(பா-ம்) 1

௧௦. ஆங்கு,
தம்புல வேறு பரத்தர வுய்த்தத
மன்புறு காதலர் கையிணைந் தாய்ச்சிய
ரின்புற் றயர்வர் தழூஉ ;

ங்கள

முயங்கிப் பொதிவே

முயங்கிப் பொதிவே

கரு. முலைவேதி ஞெற்றி

முயங்கிப் பொதிவேங்

கொலையேறு சாடிய

புண்ணையெங் கேளே;
பல்லூழ் தயிர்கடையத்
தாஅய புள்ளிமேற்
கொல்லேறு கொண்டான் குருதி மயக்குறப்
புல்லலெங் தோளிற்
கனியோவெங் கேளே;
௪0. ஆங்கு, போரேற் றருந்தலை
யஞ்சலு மாய்ச்சியர்
காரிகைத் தோள்கா
முறுதலு மிவ்விரண்டு

மோராங்குச் சேற
லிலவோவெங் கேளே;
கொல்லேறு
கொண்டா னிவள்கேள்வ னென்றாரார்

சொல்லுஞ்சொற் கேளா
வளைமாறி யாம்வருஞ்
சரு. செல்வமெங் கேள்வன்
றருமோவெங் கேளே;
ஆங்க,

அருந்தலை யேற்றொடு
காதலர்ப் பேணிச்
சுரும்பிமிர் கானநாம்
பாடினம் பரவுது

மேற்றவர் புலங்கெடத்
திறைகொண்டு
ருO. மாற்றாரைக் கடக்கவெம்
மறங்கெழு கோவே.

இது தத்தம் இனந் தத்தம்புலத்துப் பிரிப்பான்புக்கவர் ஏறுகோண்டவாறுகண்டு ஆய்ச்சியர் தங்காதன்மிகுதியாற் றங்காதலரைக் கைபிணைந்து குரவை

யாடித் தென்னன்வாழ்கெனக்

கானம்பாடியது!

(க–ரு) கழுவோடு

, வியன்புலத்தார் :—

(இ - ள்.) பால்பற்றறச்

சீவுதலைச்செய்த கறவைக்கலங்கள்

வைத்த உறி

யோடே தோற்பையிடத்தே

கழுவோடே சூட்டுக்கோல்களையும்

இட்டுச்

சுருக்கிய் பைகளையுந் தூக்கி

நீளவளர்ந்த கொன்றைக்காயைத்

திறந்து

சமைத்த இனிய குழலில் உண்டான
ஓசையாய் வழுவின சொல்லையுடைய
கோவலர் தம்முடைய தம்முடைய
இனமாகிய பசுக்கள் கார்காலத்தோடே
தோன்றின அப்பொழுதுவரும்
மழையாலே நனைந்த
அகற்சியையுடைய
நிலத்திடத்தாராயினர் ;
பழிசை
பாடமாயின் பழித்தலையுடையதென்க.
பழித்தலையுடையது
பழிசை. 'மூரற்சியர்' என்னும்
எச்சம் உடையவென்னும்

போடு முடிந்தது. 'கழு'வாவது கறத்தற்கரிய பசுக்களைக் கறத்தற்கு இரண்டு தலையுஞ் சீவி மாலையாகக் கட்டிக் கழுத்தில் இடுவது.

(௯-௧0) அவ்வழி , . . .
தன :—

(இ - ள்.) அவ்விடத்துத் துளங்குகின்ற குட்டேற்றினையுடைய நல்ல ஏற்றினங்கள் பலவும் முன்பு

காலாலே வெட்டி நீற்றை எழுப்புமவை இப் பொழுது மழைபெய்தமையிற் கோட்டுமண் கொள்ளுமவை * ஒன்றோ டொன்று மாறுபடுதலை மேற்கொண்டு முழங்குமவை மிக்குப் பாயுமவை யாய்ப் போர்க்களத்தே செல்லும் வீரர் அழகையொத்தன;

(கக—கச) தாக்குபு . . . . . தன:—

(இ - ள்.) ஒன்றோடொன்று தாக்கி மீண்டு அடிப்பறித்துச்சேர்த்து கூரிய இடத்தையுடைய கொம்பாலே மாறாமல் எவ்விடத்துங் குத்துகையி

னாலே மெய்யினின்றும் வடிகின்ற குருதியையுடைய ஏறுகளெல்லாம்[1] காட் காலைப் பெய்யும் மேகநிரையையொத்தன;

நாட்காலமேகஞ்

சிவந்திருத்தலின் உவமையாயிற்று.

பெய்யும் மேகம் அதற்கு அடைகூறிற்று.

(கரு—கக) அவ்வேற்றை

. . . . போத்தனர் :—

(இ - ள்.) அவ்வேறுகள் போர்செய்யாமற் பிரிதலைத் தாம் உட்கொண்டு அவை இரண்டுகூறாக நீங்கும்படி நடுவே சில ஏறுகளைச்செலுத்தி விலக்கிப் பின்னர்ப் பசுத்திரளோடே மேயும் புலத்திலே ஏற்றித் தத்தம் இனங்களைப் பிரிக்கும் இடையர் பழைய வடிவுகளெல்லாங் கெழுமும்படி பெரிய நிலத்தைப் படைத்தற்கு ஆகற்சியையுடைய கருத்தினையுடைய, அந் நிலத்தை மறைத்துக்கிடந்த கடலைப் போக்கும் நான்முகனையொத்தார்;

'ஏற்றை' யென்றது ஏற்றிற்கு ஐகாரவீற்றதோர் பெயர், "ஆற்றலொடு புணர்ந்த வாண்பாற் கெல்லா, மேற்றைக் கிளவி யுரித்தென மொழிப" †என்றலின்.

(உ0—உஉ) அவரைக் . . . . வேறு :—

(இ - ள்.) அங்ஙனம் நீக்குகின்றவர்களை 2 அவ்வேறுகள் ஓடும்படி மிதித்து ஓடாமல் நின்றவர்களை எதிர்சென்று அழலுகின்ற இடத்தையுடைய கொம்பாலே குத்திச் சாடி உழலை‡ கோத்த மரத்தைப்போலத் துளைத்தன;

* அகம். கூசு: எ-கஎ. † தொல். பொருள்: சுOச.

‡ உழலை: மாட்டுத் தொழுவம் முதலியவற்றுள் மாடுகள் புகாமற்றடுப்பதற்கு வாயிலின்கண் இருபக்கத்தும் உழலையை (கழிகளை) இழுத்துப் போடும்படி துளை விட்டு நிறுத்தியுள்ள மரம்.

(பாடம்) 1. ஏறெல்லாம். 2. நீங்குகின்றவர்களை.

முல்லை - சு]

முல்லைக்கலி

௬௩௯

(உரு-உ௫) தோட்டதும்

. . . . ரேறு :—

(இ - ள்.) பொதுவர் அங்ஙனந் துளைத்த தம்முடைய புண்களி னின்றுஞ் சோருகின்ற குருதி வழுக்குதலாலே மணலை அள்ளிக் கையைப் பிசைந்து உடம்பையும்1 திமிர்ந்து* தாழ்க்கமில்லாராய்க் கடலுக்குள்ளே பரதவர் சிறியதெப்பத்தை ஏறினாற்போல† ஏற்றைத் தழுவினர்;

(உசு-உக) ஏறுதங்

. . . சினை :—

(இ - ள்.) அவ்வேறுகள் தம்முடைய அழகு செய்கின்ற கொம்பாலே
?தாண்டிய வரிகளையுடைய குடர்கள் நான்று விழும்படி எடுத்துக்கொண்டு
டயர்ந்துபோம் பருந்தின் வாயினின்றுந் தப்பி ஆலமரத்தையுங் கடப்ப[2]
ரத்தையும் ஆண்டு உறையுந் தெய்வங்கட்கு மகிழ்ச்சி யுண்டாகவேண்டி
வுணிதலைச் செய்தற்கு விலங்க இட்டுவைத்த மாலைகள்போலே கொம்புக
டோறுந் தூங்காநிற்கும் ;

(சுo—சுசு) ஆங்கு . . . . .
.

தழூஉ :—

(இ - ள்.) அப்பொழுது
ஆய்ச்சியர் தாம் மேயும் புலத்திலே
எறு ...ரத்தலைச் செய்யும்படி
செலுத்தின தம்முடைய அன்புமிக்க
காதலருடைய கையைக் கோத்து
இன்பமுற்றுக் குரவையாடுவர் ;

(௬௯—௬௧) முயங்கிப்

. . . கேளே :—

(இ - ள்.) எம்முடைய தோழீ! கொலைத் தொழிலையுடைய ஏறுகள் சாடின புண்களைத் தழுவிக்கொண்டு பொதிர்துவிடக் கடவேம்; எங்ஙனந் தழுவுவதென்று கேட்பாயாயின்[3] முலையின் வெம்மையாலே ஆறும்படி ஒற்றித் தழுவிக்கொண்டு பொதிர்துவிடக் கடவேம்;

(௬௭—௬௧) பல்லூழ்

. . . கேளே :—

(இ - ள்.) எம்முடைய தோழீ! பலமுறையாகத்[4] தயிரைக் கடைகையினாலே பாய்ந்த புள்ளிகளின்மேலே கொல்லுகின்ற ஏற்றைத் தழுவினவனுடைய குருதி மயக்கமுறும்படி தழுவுதல் எம்முடைய தோளிற்கு அழகுமாத்திரையோ? அதிலுஞ் சிறந்ததொன்றன்றோ?

(௭௦—௭௨) ஆங்கு

. . . கேளே :—

(இ - ள்.) எம்முடைய தோழீ! ஆயர் பொருகின்ற ஏற்றினது சேருதற்கரிய தலையை[5] அஞ்சுதலும் ஆய்ச்சியர் ஏறுதழுவாதவருடைய

---

* திமிர்த்து - பூசி. † கலி. ௧௦௩: ௩அ - ௩௩.

(பாடம்) 1. உடம்புர். 2. கடம்ப. 3. கேட்பாயின்.
4. பலமுறைமையாகத். 5. தலை.

காரிகைத் தோளை விரும்புதலுமாகிய இவ்விரண்டு நிலையும் இக்குடிப் பிறந்தவர்களுக்கு ஒன்றாகச் செல்லுதல் ஈண்டு இல்லையோ ?

'காரிகைத்தோ'ளென்றது இகழ்ச்சி, வடுப்படாத தோளாதலின்.

(௪௩—௪௫) கோல்லேறு . . . . கேளோ: —

(இ - ள்.) எம்முடைய தோழீ ! இவளுடைய கணவன் கொல்லுகின்ற ஏற்றைத் தழுவினனென்று ஊரார் புகழ்ந்து சொல்லுகின்ற அச்

சொல்லைக் கேட்டு மோரைவிற்று
யாம் வருஞ் செல்வத்தை
எங்கணவன் தருமோ ?

ஓகாரம் தெரிநிலை. என்றது, அவன் புறத்துப்போய் இப் புகழ் கேட்க என்னை விட்டானென அவன் தன்மேலுள்ள விருப்பங் கூறிற்று இவை குரவைப்பாட்டு.

(௪௬—௫௦) ஆங்க்
கோவே :—

(இ - ள்.) எற்றையும்[1]
நங்காதலரையும் பாதுகாத்துச்
சுரும்பினம்
ஒலிக்கின்ற கானத்தை நாம்

பாடினமாய்த் திருமாலைப் பரவுவேம்;

அ

பயனுலே எம்முடைய மறம்

பொருந்திய பாண்டியன் பகைவர் நிலமென்னு

பெயர் கெட்டுத் தன்னிலமென்னும்

பெயர்பெறும்படி அவர் நாட்டை;

திறைகொண்டு பகைவரை வெல்வானுக என்றூர்;

இந்நிலப்பண் பிருந்தவாறென்னென்று கண்டோர்கூறிற்ருகக் கொள்க

இது, கண்டார்க்குப் புதுமையாகிய மருட்கை பிறந்தது.

இது முன் ஒரு கொச்சகமுந் தனிச்சொல்லும் முட்டடியின்றி

குறைவு சீர்த்தாகிய சொற்

சீரடிபெற்ற கொச்சக வெண்பாவும்

கெ

வெண்பாட்டுந் தனிச்சொல்லுஞ்

சொற் சீரடிவந்த கொச்சகமு

ஐஞ்சீரடுக்கிய குறுவெண்பாட் டிரண்டும் ஐஞ்சீரடுக்கிய நெடுவெண் பாட்டுந் தனிச்சொல்லுங் குறுவெண்பாட்டும் நான்கு தாழிசையுந் தனி

சொல்லுஞ் சுரிதகமும் பெற்ற

கொச்சகம்.

(௧

௧0௭.

எல்லா விஃதொன் றுகூறு[2] குறும்பிவர்
புல்லினத் தார்க்குங் குடஞ்சுட் டவர்க்குமெங்
கொல்லேறு கோடல் குறையெனக் கோவினத்தார்
பல்லேறு பெய்தார் தொழூஉ ;

(பாடம்) 1. அங்ஙனே பாடாநின்ற ஆய்ச்சியர் அரிய தலைமையையுடை

நடசுவு

ரு. தொழுவத்து,

சில்லைச், செவிமறைக் கொண்டவன் சென்னிக் குவிமுல்லைக்
கோட்டங்காழ்[1] கோட்டி னெடுத்துக்கொண் டாட்டிய

வேழை யிரும்புகர் பொங்கவப் பூவந்தென்
கூழையுள் வீழ்ந்தன் றுமன் ;

௧0. அதனைக், கெடுத்தது பெற்றார்போற் கொண்டியான் முடித்தது
கேட்டன ளென்பவோ யாய் ;

இஃதொன்று கூறு ;
கேட்டா லெவன்செய்ய வேண்டுமோ

மற்றிகா

வவன்கண்ணி யன்றோ

வது ;

௧௫. பெய்போ தறியாத்தன்

கூழையு ளேதிலான்

கைபுனை கண்ணி முடித்தாளென்
செய்வதி லாகுமோ மற்று;
எல்லாத் தவறு மறும்;
ஓஒஅஃ்தறு மாறு;
உ௦. ஆயர் மகனாயி னாயமக ளீயாயி
நியாய்கேட்பிற்

னின்வெய்ய
னாயி னவன்வெய்யை நீயாயி
னின்னைநோ[2] தக்கதோ

வில்லைம னின்னெஞ்ச
மன்னைநெஞ்சு சாகப்
பெறின்;
அன்னையோ,

௨௫. ஆயர் மகளையுங் காதலை
கைம்மிக
ஞாயையு மஞ்சுதி யாயி
னரிதரோ
நீயுற்ற நோய்க்கு மருந்து;

மருந்தின் றியானுற்ற

துயராயி னெல்லா

வருந்துவே னல்லனே

யான் ;

௩௦. வருந்தாதி ;

மண்ணிமா சற்றநின்

கூழையு ளேறவன்

கண்ணிதந் திட்ட

தெனக்கேட்டுத்

திண்ணிதாத்

தெய்வமால் காட்டிற்

றிவட்கென நின்னையப்

(பாடம்) 1, கோட்டாங்சாழ். 2. என்னைகோ, 3. மென்னைநெஞ்.

கலித்தொகை

[கலி - ௧0௭

பொய்யில் பொதுவற் கடைசூழ்ந்தார்[1] தந்தையோ
டூடு. டையன்மா ரெல்லா மொருங்கு.

இது தலைவி தோழிக்கு அறத்தொடுநிற்பத் தமர் வரைவுடன்பட்டமை அவட்கு அவள் சொல்லியது.

(க—௪) எல்லா

தோழீ :—

(இ - ள்.) எடீ! குறும்பிடத்தே பரந்திருக்கின்ற ஆட்டிடையர்க்கும் இப்பசு இன்னதனைக் குடம்பால் போதுமென்று சுட்டுதலையுடைய பசு விடையர்க்குமாகக் கோவினத்தையுடைய சுஞ்சுற்றத்தார் எம்முடைய கொல்லுகின்ற ஏற்றைத் தழுவுதலே காரியமென்று தொழுவிலே ஏறுகளைப் புகுதவிட்டார்;

(௯-௰) தொழுவத்து . . . . மன் :—

(இ - ள்.) அத்தொழுவிடத்துச் சிலுவைக் குணத்தையுடைய செவி மறையாயிருக்கின்ற ஏற்றைத் தழுவினவனுடைய சென்னியிற் கிடந்த குவிந்த முல்லைப்பூவாற் கட்டின வளைவினையுடைய கண்ணியைக் கொம் பிலே எடுத்துக்கொண்டு அலைத்த ஏழையாகிய பெரிய புகரேறு தன்னுடை யினாலே அப்பூ வந்து என்மயிருக்குள்ளே மிகவும் வீழ்ந்தது ;

'ஏழை' யென்றான் களவொழுக்கம் வெளிப்படுதல் இறவாமற் கோட் டால் அலைத்தமைபற்றி.

(௧௦-௧௨) அதனைக் . . . . கூறு :—

(இ - ள்.) அக்கண்ணியைக், கெடுத்ததொன்று மீண்டு பெற்றாரைப் போல எடுத்துக்கொண்டு யான் முடித்ததன்மையை யாய் கேட்டானென்று சொல்லுவர்களோ ? ஈதொரு வார்த்தையை எனக்கு விளங்கக் கூறுவா யென்றான் ;

'இஃதொன்று கூறு' என்னுஞ்சொல்லை பின்னே கூட்டிப் பொருள் கூறுக.

என்பவோ என்பதன்

(கரு—கச)   கேட்டா

வது:—

(இ - ள்.) மேல், தோழி! அக்கண்ணி வரைந்துகோடல் தாழாத அவனுடைய கண்ணியன்றோ? அதனாற் பின்னை யாய் கேட்டால் என்ன பரிகாரம் யாஞ் செய்யவேண்டும்? அதற்கு ஒன்றும் வேண்டாவென்றான்;
'ஓ': அசை.

(பாடம்) 1. ...

முல்லை - எ]

முல்லைக்கலி

ரு.சரு

(கடு—கள)   பெய்போ

மற்று:—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி, முடிக்கும் பூ* இதுவென்றறியாத தன்னுடைய மயிரில் எதிலான் கையாலே புனைந்தகண்ணியை முடித்தானென்று தாய்கேட்கில் அதற்குப் பின்னை அவள் வெகுளாமற்செய்வதொரு பரிகாரமில்லையாயிருக்குமோ? என்றாள்;

மயிருக்கு மணந்தரும் பூ முடித்தல்வேண்டுமென் றறியாதவள்.

(கஅ) எல்லாத் தவறு மறும்:—

(இ - ள்.) அது கேட்ட

குங்கா ணென்றாள்;

தோழி, இனி எல்லாத் தவறுகளும் நீங்

அவன் வரைவுணர்ந்தமையின்.

(கக) ஒஒஅஃதறு மாறு:—

(இ - ள்.) அது கேட்ட தலைவி, ஒஒ! என வியந்து அத்தவறு அறுமாறென்னையென வினவினள்;

(உ0—உக) ஆயர் . .

பெறின் :—

(இ - ள்.) அது கேட்ட தோழி, அவன் ஆயருடைய மகனாயிருப்பா னாயின், நீ ஆய்ச்சாதியிற் பிறந்த மகளாயிருப்பையாயின், அவன் உன்னை விரும்பியிருப்பானாயின், நீ அவனை விரும்பியிருப்பையாயின்,† தாய் மிகவும் நோவத்தக்கதொரு காரியம் இல்லைகா ணென்றாள்; அது கேட்ட தலைவி, அன்னையுடைய நெஞ்சு நின்னுடைய நெஞ்சாகப் பெறின் அவன் நோவத் தக்கதோ இல்லை யென்றாள்;

(உசு)

அன்னையோ :—

(இ - ள்.) அதுகேட்ட தோழி

இன்னும் அத்தன்மையையோ?

என்றாள்;

என்றது, யான் இத்துணையெல்லாங்

கையையோ? என்றவாறு.

கூறவுங் கொள்ளாத தன்மை

(௨௫—௨௭) ஆயர் . .

. . மருந்து :—

(இ - ள்.) கைம்மிக ஆயர்மகளையுங் காதலித்தலையுடையையாய்க் கைம்மிக யானையையும் அஞ்சியிராநின்றாயாயின், இனி நீயுற்ற காமநோய்க்கு மருந்து அரிதென்றாள் ;

'அரோ' : அசை.

* முடிக்கும்பூ - எருக்கு, முருக்கு முதலிய சூடாப்பூவொழிந்த சூடும் பூக்கள். † குறள். ௧௧௯௯.

(௨௮—௨௧) மருந்தின்றி

. . . . . யான் :—

(இ - ள்.) அது கேட்ட தலைவி, எடீ! யானுற்ற வருத்தத்திற்கு மருந்தில்லையாயின், இனி வருந்தியே விடுவேனல்லனோ? என்றாள்;

(கo-கடு) வருந்தாதீ . . . . மோரங்த :—

(இ - ள்.) அது கேட்ட தோழி, இனி வருந்தாதேகொள்; கழுவி அழுக்கற்ற நின்னுடைய மயிரிடத்தே ஏற அவன் கண்ணியைத் தந்த தென்று பிறர் சொல்லக் கேட்டுத், தந்தையோடே தமையன்மாரெல்லாருஞ் சேரக் கூடியிருந்து, தெய்வமாகிய மால் இவளுக்கு இவனைத் திண்ணிதாக கொண்டுவந்து காட்டிற்றென மகிழ்ந்து, நின்னை . அந்தக் களவொழு கத்தைப் பிறர் அறியாமல் ஒழுகவல்ல பொதுவனுக்கு அடுத்தலைச்[1] சூழ் தார்கா ணென்றாள்;

இதனாற் றலைவிக்குப் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது கொச்சகவெண்பாவுந் தனிச்சொல்லும் ஐஞ்சீரடுக்கிய கொச்சக வெண்பாவும் ஐஞ்சீரடுக்கிய குறுவெண்பாட்டுஞ் சொற்சீரடியும் ஈரடிய னென்றுங் கொச்சகவெண்பாவும் முச்சீரடியானென்றும் இருசீரடிய னென்றும் நெடுவெண்பாட்டுந் தனிச்சொல்லுங் குறுவெண்பாட்டு கொச்சகவெண்பாவுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்ற கொச்சக கலி, (எ

இகல்வேந்தன் சேனை
யிறுத்தவாய் போல
வகலல்குறேள்
கண்ணென மூவழிப் பெருகி
நுதலடி நுசுப்பென
மூவழிச் சிறுகிக்
கவலையாற் காமனும்
படைவிடு[2] வனப்பினோ
௫. டகலாங்க ணளைமாறி
யலமந்து பெயருங்கா
ணகைவல்லேன்
யானென்றென் னுயிரோடு
படைதொட்ட விகலாட்டி
நின்னை யென்பிழைத்தே

னெல்லாயான் ;
அஃதவல மன்று மன ;
ஆய ரெமராணு
லாய்த் தியேம் யாமிகக்
௧0. காயாம்பூங் கண்ணிக்
கருந் துவ ராடையை
மேயு நிரைமுன்னர்க்
கோ லூன்றி நின்றாயோ
ராயனை யல்லை பிறவோ
வமரருண்
ஞாயிற் றுப் புத்தேண்
மகன் ;

(பாடம்) 1. கொடுத்தலைச். 2. படைவிடு.

முல்லைக்கலி

௩௨௫

அதனுன் வாய்வாளேன் ;

கரு. முல்லை முகையு முருந்து நிரைத்தன்ன
பல்லும் பணைத்தோளும் பேரம ருண்கண்ணு

நல்லேன்யா னென்று

நலத்தகை நம்பிய

சொல்லாட்டி நின்னொடு

சொல்லாற்று [1] நிற்பார்யார் !

சொல்லாதி ;

நின்னைத் தகைத்தனை

னல்லல்காண் மன்;

மண்டாத கூறி மழகுழக் காகின்றே[2]
கண்ட பொழுதே கடவரைப் போலநீ

பண்டம் வினைய படிற்றூற்

றொடீஇயநிற்

கொண்ட தெவனெல்லா

யான்;

உரு. கொண்டது,
அளைமாறிப் பெயர்தருவா யறிதியோ வஞ்ஞான்று
தளவமலர் ததைந்ததோர் கானச்சிற் றூற்றய
விளமாங்காய் போழ்ந்தன்ன கண்ணினா லென்னெஞ்சங்
களமாக்கொண்[3] டாண்டாயோர் கள்வியை யல்லையோ;

௩0. நின்னெஞ்சங்,
களமாக்கொண் டியாமாள
லெமக்கெவ

னெளிதாகும் ;

புனத்துளா னெந்தைக்குப் புகாவுய்த்துக் கொடுப்பதோ
இனத்துளா னென்னைக்குக் கலத்தொடு செல்வதோ
தினைக்காலுள் யாய்விட்ட கன்றுமேய்க் கிற்பதோ ;

அனைத்தாக,

௩௫. வெண்ணெய்த் தெழிகேட்கு மண்மையாற் சேய்த்தன்றி
யண்ணணித் தூராயி னன்பகற் போழ்தாயிற்
கண்ணேக் கொழிக்குங் கவின்பெறு பெண்ணீர்மை
மயிலெருத்து வண்ணத்து மாயோய்மற் றின்ன
வெயிலொ டெவன்விரைந்து சேறி யுதுக்காண்
௪0. பிடிதுஞ்சு வன்ன வறைமேல நுங்கின்

றடிகண் புரையுங் குறுஞ்சுனை

யாடிப்

(பாடம்) 1. சொல்லாற்ற. 2. காஇன்றேன். 3. களமாகக்கொண்.

44

௬௪௲

கலித்தொகை

[கலி - ௧0௪

தனிக்காயாந்

தண்பொழி லெம்மொடு வைகிப்

பனிப்படச் செல்வாய்நும்

மூர்க்கு ; ௪௫.

இனிச்செல்வேம்யாம் ;

மாமருண் டன்ன
மழைக்கட்சிற் றூய்த்தியர்
நீமருட்டுஞ் சொற்கண்
மருள்வார்க் குரையவை
யாமுனியா வேறுபோல்
வைகற் பதின்மரைக்
காமுற்றுச் செல்வாயோர்
கட்குத்திக் கள்வனை ருo.
நீயெவன் செய்தி பிறர்க்கு ;
யாமெவன் செய்து நினக்கு ;

கொலையுண்கட் கூரெயிற்றுக் கொய்தளிர் மேனி
யிணைவனப்பின் மாயோய் நின்னிற் சிறந்தார்

நிலவுலகத் தின்மை தெளிநீ
வருதி ௫௫. மலையொடு
மார்பமைந்த செல்வ னடியைத்
தலையினாற் றொட்டேற்றேன்
சூள் ;

ஆங்குணரார் நேர்ப[1]
வதுபொய்ப்பாய் நீயாயிற்
றேங்கொள் பொருப்பன்
சிறுகுடி யெம்மாயர்
வேந்தூட் டரவத்து
நின்பெண்டிர் காணாமற் ௬0.
காஞ்சித்தா துக்கன்ன தாதெரு

மன்றத்துத்
தூங்குங் குரவையு
ணின்பெண்டிர் கேளாமை
யாம்பற் குழலாற் பயிர்பயி
ரெம்படப்பைக்
காஞ்சிக்கீழ்ச் செய்தேங் குறி.

இஃது "அடியோர் பாங்கினும் வினைவல பாங்கினுங், கடிவரை யிலபுற தென்மனார் புலவர்"* என்பதனாற் பிறர் ஏவிய தொழிலைச் செய்தல்வல்

அகப்புறத் தலைவனுந் தலைவியும் முன்னொருகாற் கூடிப் பின்னர் அ னெதிர்ப்பட்டுழி அவன்வயிற் பரத்தைமையால் ஊடிக் குறிநேர்ந்தது.

(க—எ) இகல்வேந்தன்

. . . . யான் :—

(இ-ள்.) அகன்றவல்குல்தோள் கண் என்றுசொன்ன மூன்றிடமும் பெ
த்து, நுதல் அடி இடை என்று சொன்ன மூன்றிடமுஞ் சிறுத்துக், காமனு
பிறர்க்கு மனக்கவலை செய்தலோடே தன் அம்பை விடுதற்குக் காரணமா
அழகோடே வரிடத்தே அலமந்து, மோரை விற்று நீ மீளுங்காலத்தே,

* தொல். பொருள் : உக.

யான் நகுதலைவல்லேனென்று நக்குப்,
பின்னர் இகலிடத்தே சென்றுவிட்ட
பாண்டியன் சேனை உயிரோடு
போம்படி படை தொடுமாறுபோல
என்

ஞயிரோடு போம்படி படையைத் தொட்ட மாறுபாட்டையுடையவனே
எடி! யான் நின்னை எப்படித் தப்பினேன் கூறென்றான்;

இகல்வாயிறுத்த
வேந்தன்சேனைபோல என மாறுக.

(அ) அலைதவல மன்று மன:—

(இ - ள்.) அது கேட்ட
தலைவி, அனைமாறித் திரிகின்றது
மிகவும் எங்குலத்திற்குத் தீதன்று;

(கூ—கரு) ஆய . .
. . மகனே:—

(இ - ள்.) எஞ்சுற்றத்தார்[1]
ஆயாராதல், யாங்கள் மிகவும் ஆய்த்
தியரோம்; அது கிடக்க, நீதான்

காயாம்பூவாற் செய்த கண்ணியையுந் துவரூட்டின கரிய ஆடையையு முடையாய் ; * மேய்கின்ற நிரைகளுக்கு முன்னே ஒரு கோலை யூன்றி அந்நிரை மேய்த்து நின்ற நீ இடையனுந் தன்மையை உடையையல்லை ; வேறாகத் தேவர்களுந் ஞாயிறாகிய தெய்வத் தின் மகனோ? கூறென்றான் ;

'மகன்' : கன்னன் ; இஃது இகழ்ச்சி. ஆய்த்தியேம் யாமாயின் என்றும் பாடம்.

(கஎ—கஅ) அதனுன் .

கிற்பார்யார் :—

(இ - ள்.) அதுகேட்டு அவன், நீ இங்ஙனம் இகழ்ந்து[2] கூறுதலால் நின்னோடு ஒன்றுங் கூறேன்; முல்லையினது முகையையும் மயிலிறகின் முருந்தையும் நிரைத்தாலொத்த பல்லும் † பணைபோலுந் தோளும் பெரிய அமர்செய்யும் உண்கண்ணும் யான் நல்லவென்று, நின்னுடைய தகுதியைப் பிறர் நச்சுதலன்றி நீதானே நச்சியிருக்கின்ற சொல்லையுடையவளே![3] நின்னோடு மறுமாற்றஞ் சொல்லுதலை யார் நிகழ்த்துவார் என்றான்;

முல்லை முதலியன சினைவினை முதலொடு முடிந்தது. 'ஆற்றுகிற்

யார்' : வினைத்திரிசொல்.

(கக) சொல்லாதி :—

(இ - ள்.) அதுகேட்டு அவள், அங்ஙனமாயின் ஒன்றுஞ் சொல்லாதே கொள் என்றாள்;

(உ0) நின்னைத் தகைத்தனென் :—

(இ - ள்.) அதுகேட்டு அவன், நின்னைப் போகாமல் விலக்கினேனென்றான்;

* கலி. ௪0உ : கஎ. † கலி. ௪0க : கூஎ.

(பாடம்) 1. நெஞ்சுறழ்தத்தார். 2.

மகிழ்க. 3. சொல்லுமுடையவளே,
௯௫அ
கலித்தொகை
[கலி - ௬0அ

(௨0)
அல்லல் காண்மன் :—
(இ - ள்.) அதுகேட்டு
அவன், இவன் நம்மிடத்து
நிகழ்த்துகின்றதோர் வருத்தத்தைப்
பாராயென நெஞ்சொடு கூறினன்;

(௨௧-௨௪) மண்டாத
யான் :—
(இ - ள்.) கூறிப், பின்னும்

மனம் மயங்குதலையுடைய குழவிப்பருவத்

துக்கு ஆகின்று[1]; என்மனம் மிக்கு விரும்பிச் செல்லாத[2] சொற்களைச் சொல்லி என்னைக் கண்ட பொழுதே தனிசு * கடவாரிடத்துக் கொடுத்த

வர்கள் அவரவர்களுக்குள்ள

பண்டங்களை உசாவுமாறுபோல நீயும்

என் னிடத்துள்ள பண்டங்களை

இவை யாவை என்று வினவின

வஞ்சனையாலே

எனது வட்டியைப் பிடித்தற்கு ஏடா!

நின்னிடத்து யாம் வாங்கிக்கொண்ட

பொருள் எப்பொருள்? என்றாள்;

'குழக்கு': தரங்கக்கு

வண்ணகக்கு† என்றாற்போல்

நின்றது..

(உடு) கொண்டது :—

(இ - ள்.) அதுகேட்டு அவன்,
நீ என்னிடத்து வாங்கிக்கொண்ட
பொருள் கூறக்கேள் ;

(உகூ—ருரு) அளைமாறிப்

. . . . கிற்பதோ :—

(இ - ள்.) அங்காளிலே
மோர்விற்று மீள்கின்ற நீ
செம்முல்லை
நெருங்கினதோர் கானத்திடத்துச்
சிற்றூற்றின்[3] அயலிடத்தே இளம்மாவ(
வைப் பிளந்தாலொத்த கண்ணாலே
எனக்கு உரித்தாகிய என் நெஞ்சை
நினக்கு இருப்பிடமாக

வாங்கிக்கொண்டு அடிமைத்தொழில் கொண்டாய்

ஒரு கள்வியையல்லையோ ? அது நீயறியாயோ ? என்றான் ; அது கேட்(அவள், நின் நெஞ்சை எனக்கு இருப்பிடமாக வாங்கிக்கொண்டு யாட அடிமைத் தொழில் கொள்ளுதல் எமக்கு எங்ஙனம் எளிதாயிருக்கும் ? நின்

நெஞ்சு புனத்திடத்தானாகிய என் தமையனுக்கு உணவைக்கொண்(சென்று கொடுக்குமதொன்றோ ? பசுத்திரளிடத்தானாகிய என் தந்தைக்கு(கறவைக்கலங் கொண்டு செல்லுமிதின்றோ ? நினை அரிந்த தாளிடத்(யாய் மேயவிட்ட கன்று மேய்க்குமதொன்றோ ? அன்றே! ஆதலா(அரிதேகாண் என்றாள் ;

(கூஉ) அனைத்தாக :—

(இ - ள்.) அது கேட்டு அவன், இனி நீ ஏவின தொழில்களை எ
நெஞ்சு செய்வதொன்றாக என்றான்;

---

* தனிசு - கடன். † யா. கா. ஒழி : எ.

(பாடம்) 1. ஆகாநின்றேன். 2. மனம் மிக்கு விரும்பிச் சொல்லாத.
3. சிறிய யாற்றின்.

முல்லை - அ]

முல்லைக்கலி

கூசக

(கூகு—சஉ)

வெண்ணெய்த் . . . . . மூர்க்கு

:—

(இ - ள்.), என்று, பின்னர்க் கடைந்த மோரைக் கையால் அலைக்கு
ஓசை கேட்கும் அணுமையினாலே தூரம் அன்றாய் ஊர் மிகவும் அணித்தா
யின், பொழுது உச்சியம் பொழுதாயின், கண் வேறொரு வடிவை நோக்
தலைத் தவிர்க்கும் அழகைப் பெறுகின்ற பெண்டன்மையினையும் மயில்

னுடைய கழுத்தினுடைய நிறத்தையுமுடைய மாயோளே! இப்படி வெய் தாகிய பொழுதோடே விரைந்து செல்லாநின்ருய்; இதனுல் மற்றுப் பெறும் பயனென்? காயாம்பூவையுடைய குளிர்ந்த பொழிலே அவ்விடத்தே பாராய்; அவ்விடத்திற் பிடி துஞ்சுவனவற்றையொத்த பாறையிடத்தன வாகிய *¹ நுங்கினது வெட்டின கண்ணேயொக்கும் நீர்நிறைந்த அண்ணிய சுனைகளிலே ஆடிக் குளிர்ச்சியை யுடைத்தாகிய பூக்களையுடைய செம் முல்லைமலரோடே முல்லைமலரையும் பறித்துத் தனியே அப்பொழிலிடத்தே எம்முடனே தங்கிப் பொழுது குளிர்ச்சியுண்டாக நம் ஊர்க்குச் செல்வா யென்ருன்;

(சஐ) இனிச்செல்வேம்யாம்:—

(இ - ள்.) அதுகேட்டு அவள், நீ போகவேண்டா என்கின்ருயாதலின் யாம் போவேமென ஊடல்தோன்றக் கூறினுள்;

(சசு—ருக) மாமருண்

நீனக்த் :—

(இ - ள்.) கூறிப், பின்னும் மான் மருண்டு நோக்கினுலொத்த குளிர்ச்சியையுடைய கண்ணையுடைய சிறிய ஆய்த்தியராய் நீ மயக்கிக் கூறுஞ் சொல்லிடத்தே மயங்குவார்க்கு அம்மொழிகளைக் கூறு ; யான் அதற்கு மருளேன் ; நீதான் பல பசுக்களையுந் தெவிட்டாமற் கூடும் ஏறுபோல நாடோறும் பதின்மரை ஒருவரைப்போலே விருப்பமுற்று அவர்மேற் செல்வாய் ; ஒரு கட்குத்தியாகிய கள்வன்; ஆதலால் நீ பிறர்க்கு என்ன நன்மை செய்வாய்? இத்தன்மையையுடைய நினக்கு யாம் என்ன நன்மை செய்வேமென்றாள் ;

'கட்குத்திக்கள்வன்' என்றது, "விழித்திருக்க மிண்டையைக் கொள்வான்" என்னும் பழமொழி. 'ஓ' :அசை. நீ அம்மகளிரையும் அவர் கருத்துமுற்ற நுகராது அவர் வருந்த நீங்குவையென்பது தோன்ற 'நீ யெவன் செய்தி' என்றாள். 'யாமெவன் செய்து'மென்றது எம்மிடத்து நீங்காத அன்புடைமையல்லை என்பது தோன்ற நின்றது.

(௰௨–௰௬) கோலையுண்கட் . . . . . சூள்:—

(இ - ள்.) அதுகேட்டு அவன், கொலைத்தொழிலையுடைய கண்ணினையுங் கூரிய எயிற்றினையுங் கொய்யப்படுந் தளிர்போலும் நிறத்தினையுங் கண்டார்

* ஐங்குறு. ௨௯௧.

டூ௦

கலித்தொகை

[கலி - ௧௦௬

ருந்தும் அழகினையுமுடைய மாயோனே! யான் விரும்புதற்கு உரியாராய் ன்னிற்காட்டிற் சிறந்த மகளிர் மண்ணுலகத்தில் இல்லாமையை நீதானே தெளிவாய்; இனி நீ நினைத்த தவறுகளின்றென்று யான் தெளிவித்தற்கு நீ அணுக வருவாய்; மார்பு மலையோடு ஒப்பமைந்த திருமாலடியைத் தலை யினாலே வணங்கிக் கையினால் தொட்டுச் சூளுற்றேன் என்றான்;

(௭—௬௯) ஆங்குணரார் . . . . . குறி:—

(இ - ள்.) அதுகேட்டு அவள், அப்படியை மெய்யென்று உணரும் அறியாமகளிர் கூட்டத்திற்கு உடன்படுவார்; அச்சூளுறவு பொய்க்குமவன் நீ; நின்வருத்தத்தை ஆராய்ந்து பார்க்கில் அதற்கு உடன்படுதலே வேண்டு தலின் எம்முடைய புழைக்கடையிற் காஞ்சிமரத்தின் கீழே குறியிடஞ் செய் தேம்; ஆண்டு வருங்கால், தேனைத் தன்னிடத்தே கொண்ட பொதியின் மலையை யுடையவனுடைய சிறுகுடியில் வாழும் எம் ஆயர் அவ்வேந்தன் இனிதிருந்து வாழ்வதற்கு அந்நிலத்திற் றெய்வத்திற்கு மடைகொடுக்கும் ஆரவாரத்தாலே வந்த நின்னுடைய பெண்டிர் நின்னைக் காணமற், காஞ்சிப் பூவின்தாது உதிர்ந்தாற்போன்ற தாதாகிய எருவையுடைய மன்றத்திடத்து ஆடுங் குரவைக்கூத்திடத்து வந்த நின்னுடைய பெண்டிர் கேளாமல், நீ செய்யுங் குறியை ஆம்பலென்னும் பண்ணையுடைய குழலாலே குறிசெய்து வருவாயாக என்றாள்.

இதனால், இருவருக்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இதனுள், தலைவன் வினைவலபாங்கினனாயவாறு காண்க. இது

கைக்கிளை.

இது தரவுஞ் சொற்சீரடியும் நெடுவெண்பாட்டுஞ் சொற்சீரடியுங் கொச்சகமுந் தனிச்சொல்லுஞ் சொற்சீரடியும் நெடுவெண்பாட்டுந் தனிச்சொல்லும் ஒருதாழிசையும் ஐஞ்சீரடியானொன்றுங் கொச்சகமுந் தனிச்சொல்லும் நெடுவெண்பாட்டுஞ் சொற்சீரடியும் நெடுவெண்பாட்டும் மூச்சீரானொன்றும் நெடுவெண்பாட்டும் வெள்ளைச் சுரிதகமும் பெற்று வந்த கொச்சகக்கலி. (அ)

௧௱௯.

காராரப் பெய்த கடிகொள்
வியன்புலத்துப்
பேராது சென்று
பெரும்பதவப் புன்மாந்தி
நீரார் நிழல குடஞ்சுட்
டினத்துள்ளும்
போராரா வேற்றின் பொருநா
கிளம்பாண்டிற் றேரூரச்
செம்மாந் ததுபோன் மதைஇனள்

முல்லைக்கலி

ஙருக

மோரோடு வந்தா டகைகண்டை யாரோடுஞ்

சொல்லியா ளன்றே வனப்பு;
பண்ணித் தமர்தந்
தொருபுறந் தைஇய
கண்ணி யெடுக்கல்லாக்
கோடேந் தகல்குல்
புண்ணில்லார் புண்ணாக
நோக்கு முழுமெய்யுந்

கண்ணளோ வாய மகள் ;
இவடான், திருத்தாச்
சுமட்டினளேனைத்தோள் வீசி
வரிக்கூழ[1] வட்டி
தழீஇ யரிக்குழை
கரு. யாடற் றகையள் கழுத்திலும்
வாலி து
நுண்ணிதாத்[2] தோன்று
நுசுப்பு ;
இடைதெரியா வேள ரிருவருந் தத்த
முடைவனப்[3] பெல்லா மிவட்கீத்தார் கொல்லோ
படையிடுவான் மற்கண்டீர்
காமன் மடையடும் உ௦.
பாலொடு கோட்டம் புகின் ;

இவடான், வருந்தநோய்

செய்திறப்பி னல்லான்

மருந்தல்லள்

யார்க்கு மணங்காதல்

சான்றுளென் றூர்ப்பெண்டிர்

மாங்காய் நறுங்காடி

கூட்டுவேம் யாங்கு

மெழுநின் கிளையொடு

போகென்று[4] தத்தங்

உரு. கொழுநரைப் போகாமற்

காத்து முழுநாளும்

வாயில டைப்ப வரும்.

இது வினைவலபாங்கிற் றலைவியைக் கண்ட வினைவலபாங்கிற் றலைவன் "காமஞ் சாலா விளமை யோள்வயி, னேமஞ் சாலா விடும்பை யெய்தி"க்* கூறியது.

(க—அ) காராரப் . .

. . வணப்பு :—

(இ - ள்.) மழை

நிறையப்பெய்த விளக்கங் கொண்ட

அகற்சியை புடைய நிலத்தே

சென்றுநின்று . அவ்விடத்தே நின்ற

பெரிய அறுகாகிய † புல்லை

நிறையத்தின்று நீர்நிறைந்த

நிழலிடத்தனவாய இன்னதனைக் குடம்

பால் போதுமென்று கருதப்படும் பசுத்திரளில் வைத்துக்கொண்டும் வினை பவற்றிற்கு ஒப்புச் சொல்லப்படும் காகு போர்த்தொழில் அமையாத எற்றி றுக்கின்ற இளைய எருது கொல்லர்வண்டியை ‡ ஊராநிற்க இளமையால் இறுமாக்குமாறு போலத் தலையில் மோர்ப்பானையுடனே அழகாலும் இளமை

* தொல். பொருள் : ௫0. † பெரிய அறுகு - யானை அறுகு.

‡ இது கொல்லாப்பண்டி எனவும்

வழங்கும்.

(பாடம்) . 1. வரிக்கூழை. 2.

முண்ணிதாய்த். 3. முடையவனைப்.

4. போவென்று.

௱௫௨

கலித்தொகை

[கலி - ௬0௧

ாலும் மிகுதியையுடையளாய்ப் பெரிய ஊர்களையுஞ் சிறிய ஊர்களையும் ஆரவாரத்தை உண்டாக்குவாள்போலே மோரோடே வந்தவளழகை நெஞ்சே காண்பாயாக; இவள் தான் மிக்க வனப்புடைய மகளிரெல்லாரொடுந் தன் அழகு ஒவ்வாமை சொல்லப்பட்டவள்;

இது சினைவினை முதலொடு முடிந்தது.

(௧-௧௨) பண்ணித் மகள் :—

(இ - ள்.) சுற்றத்தார் கட்டிக்கொண்டு வந்து, மயிர்முடியில் ஒரு புறத்தே செருகி வைத்த கண்ணியைச் சுமக்கமாட்டாத பக்கம் ஏந்தின அகன்ற வல்குலேயுடைய இவ்வாயர் மகள், மனத்திற் காமவேட்கையில்லாத இருடிகளும்*1 புண்பட்டு நெஞ்சு வருந்தும்படி பார்க்கும்; அதுவேயன்றி

மெய் முழுதுங் கண்ணேயுடையவளோ ?

என்பது, கண்கள் செய்கின்ற வருத்தம்போல † மெய்ம் முழுதும் வருத்துதலின் மெய்ம் முழுதுங் கண்ணளோ என்றதாயிற்று ;

(கரு—கக) இவடான் . . . . நுசுப்பு :—

(இ - ள்.) இவள்தான் பல நிறத்தையுடைய செல்லேயுடையவாகிய வட்டியை‡ ஒரு கையால் அணைத்து மற்றைத்தோளை இளமைச் செருக்குத் தோன்ற வீசித் தன் அழகிற்குத் திருந்தியிராத சுமையினையுடையளாய் மெய்க்கட் பூண்டனவன்றிக் கழுத்திடத்திலும் அழகையுடைய மகரகுழையாடுதலுண்டான அழகையுடையவள் ; அதுவேயன்றி அல்குலுக் தோளுஞ் சுமந்து இளைத்த நுசுப்புக் கண்ணியெடுக்கலா மென்மைக்கேற்ப நுண்ணிதாய் கன்றுய்த் தோன்றுகிற்கும் ;

(கஎ—உ௦) இடைதேரியா . . . . . புகின் :—

(இ - ள்.) தம்மில் வேறு பெயர் விளங்கி அழகையுடையராகிய உருப் பசியுந் திலோத்தமையுந் தம்முடைய தம்முடைய அழகையெல்லாம் இவட்குக் கொடுத்தார் கொல்லோ ? அது தெரிந்ததில்லை ; இவள்[2] தெய்வத்திற்குப் பலியாகச் சமைக்கும் பாலோடே§ காமன் கோயிலிலே செல்லில் அக்காம

னும் நெஞ்சழிந்து தங்கையிற் படையை மிகவும் போகடுவன்[3];

காமன் மாயோன்மகனாதலின் அவனும் அந்நிலத்திற்குத் தெய்வமாதல் "ஆவ்வகை பிறவும்"§ என்றவழி "வகை" என்றதனாற் கொள்ளப்பட்டது. 'தெரியா' என்பது செய்தெனெச்சம். 'இருவர்'; திருமகளும் பூமகளு மெனினுமாம். 'கண்டீர்'; வினவொடு சிவணிநின்ற அசை.

---

* முருகு. ௧௩௪-௧௩௭ : சிலப். ௧௪: ௩௯-௪௨. † குறள், ௧௦௬௧. ‡ வட்டு-கடகப்பெட்டி. § சிலப். ௧௫ : ௧௭௭-௧௭௮. $ தொல். பொருள் : ௧௮.

(பாடம்) 1. இருடிகளுக்கும். 2. அவன். 3. போடுவன்.

முன்னை - ௯)

மூலமலககலை

௩௫௩

(உக) இவடான் :—

(இ - ள்.) இவடான் என்று

நெஞ்சொடு வினையினன்.

(உக—உ௪)

வருந்தநோய் . . . . வரும் :—

(இ - ள்.) அதுவேயுமன்றித்
தன்னை நோக்கினரெல்லார்க்கும்
வருத்த மாதல் அமைந்தவளென்று
கருதி இவ்வூர்களிற்

பெண்டிரெல்லாரும் மோருக்கு மாறாக மாங்காயை நறிய ஊறுகாயாகக் கூட்டி நுகராக்கடவேம் ; நீ எவ்விடத்தும் போய் மோர்முதலியன விற்றுத்திரியும் நின் சுற்றத் தாருடனே போவாயாக என்று கூறித் தம்முடைய கணவரைப் புறத்துப் போகாமற் காத்துக்கொண்டு இவள் வருங்காலமேயன்றி ஒருநாள் முழுதும் வாயிலே இடையிட்டுக்கொண்டு நிற்கும்படியாக வாராநிற்கும் ; இவள் தான் மனம் வருந்தும்படி நோயைச் செய்து போவதன்றி அந்நோய்தீர்க் கும் மருந்தல்லள், எனச்

சொல்லெதிர் பெறாஅன் சொல்லி யின்புற்றான்.

சுற்றத்தொடு போவென்றார், அவரோடு இவன் போங்காலத்து, தங் கணவற்குப் பின் சேறல் இயையாதென்பது பற்றி.

இதனால், இவனுக்கு அசைவு பிறந்தது.

இது "காமஞ் சாலா விளமையோ" ளென்னும் சூத்திரத்து* வினைவல பாங்கினோரும் இங்ஙனங் கூறலா மென்றமைத்தாம்.

'மருந்தல்ல' என்றது, "காமஞ் சாலா விளமையோ" ளென்றது.

மோர்வீற்கின்றமை கூற
வினைவலபாங்கினளாயிற்று.

இஃது 'இவடா' னென
ஐஞ்சீர் அடுக்கிய சுரிதகத்தான்
இற்ற கலி
வெண்பாட்டு.

(க)

கக0.

கடிகொ.ளிருங்காப்பிற்
புல்லினத் தாயர்
குடிதொறு நல்லாரை
வேண்டுதி யெல்லா
விடுதேன் மருந்தோநின்
வேட்கை தொடுதரத்

துன்னித்தந் தாங்கே நகைகுறித் தெம்மைத்
௫. திளைத்தற் கெளியமாக் கண்டை யளைக்கெளியாள்
வெண்ணெய்க்கு மன்ன ளெனக்கொண்டா யொண்ணுதா
லாங்குநீ கூறி னனைத்தாக நீங்குக ;

அச்சத்தான் மாறி
யசைவினாற் போத்தந்து
நிச்சந் தடுமாறு மெல்லிய
லாய்மகன்

௰. மத்தம் பிணித்த கயிறுபோ னின்னலஞ்
சுற்றிச் சுழலுமென் னெஞ்சு ;

* தொல். பொருள் : ௫௦.

விடிந்த பொழுதினு
மில்வயிற் போகாது
கொடுந்தொழுவி னுட்பட்ட
கன்றிற்குச் சூழுங்
கடுஞ்சூலா நாகுபோ
னிற்கண்டு நாளு
கரு. நடுங்கஞ ருற்றதென்
னெஞ்சு ;
எவ்வ மிகுதர வெந்திறத்
தெஞ்ஞான்று நெய்கடை
பாலிற் பயன்யாது மின்றாகிக்

கைதோயன் மாத்திரை
யல்லது செய்தி
யறியா தளித்தென் னுயிர்;
உ0. அன்னையோ,
மன்றத்துக் கண்டாங்கே சான்றார்
மகளிரை
யின்றி யமையேனென்
றின்னவுஞ் சொல்லுவாய்
நின்றாய்நீ சென்றீ[1]
யெமர்காண்பர் நாளையுங்[2]

கன்றொடு சேறும் புலத்து.

இத். விணவலபாங்கிறல் வெண்ணெய்

நொடைக்குச் * சென்ற தலைவியைக்

கண்டு வினைவலபாங்கிற்

றலைவன் மெய்தீண்டித் தனது

ஆற்ருமையை

அறிவித்தழி, அவள் ஈண்டுப்

பிறர் அறிவர், நாணக் கன்ருெடு

சேறுமென

இடங்கூறியது.

(க—எ) கடிகோ . . . .

நீங்குக :—

(இ - ள்.) எடா! வரைவு

கொண்ட பெரிய குறும்பிடத்தே

இரு

கின்ற ஆட்டிடையருடைய

குடிதோறுமுள்ள மகளிரை

விரும்பாநின்றாய்

நினது காம வேட்கை எறிந்த

தேனுக்குக் கடுப்பற அப்பொழுதே

இட்டு,

தீர்க்கும் மருந்துபோல வேட்கை

தோன்றியபொழுதே கூடத் தீர்க்

வேண்டுவதொன்றோ? அல்லவே!

நின்னோடு ஓர்நகை செய்தலைக் குறித்

நீ என் மெய்யைத் தீண்டுதற்கு

யாம் நின்னை அணைந்து மெய்யைத்

தந்,

அப்பொழுதே, எம்மைப்

புணர்ச்சிக்கும் எளியேமாக[3] நீ
மனத்தாலே கல்

டாய்; அங்ஙனங் கண்டது, மோரை வேண்டினார்க்குச் சிறிது மோரை
வார்த்து எளியளானவளொருத்தி வெண்ணெயை வேண்டினார்க்கு வெண்

ணெயை இட்டு
எளியளாயிருப்பள் என்று
நெஞ்சாலே கருதினாற்போலே
இருந்ததென்றாள்; அதுகேட்ட
தலைவன், ஒள்ளிய
நுதலினையுடையாய்
அங்ஙனம் நீ கூட்டத்தை
மறுத்துக் கூறுவையாயின்,
அக்கூட்டம் இல்லை
யாவதாக இனி நின்னை விட்டு
நீங்குக என்றான்:

---

* நொடை - விற்பனை.

(பாடம்) 1. சென்றி. 2. நாலேயெக். 3 எனிபோமசக்

[illegible]

(அ—கக) அச்சத்தானீனைஞ்சு ;—

(இ - ள்.) மெல்லிய இயல்பினையுடைய ஆய்ச்சாதியிற் பிறந்த மகள்! மத்தைச் சுற்றிய கயிறுபோல * நின்னுடைய நலத்தைச் சூழ்ந்துகொண்டு சுழன்று திரிகின்ற என்னுடைய நெஞ்சு நீ

கூறிய கூற்றினால் தனக்கு உண்டாகிய அச்சத்தினாலே நின்னிடத்துநின்று மீண்டு தான் நிலைபெற மாட்டாது பின்னரும் அசைகின்ற அசைவாலே என்னிடத்தினின்றும் புறப் பட்டு நாடோறும் மீனத் தடுமாறுநிற்கும் என்றான்;

(கஉ—கரு) விடிந்த . . . . னோஞ்சு :—

(இ - ள்.) என்று, பின்னும் மூதற்குல் கொண்ட பசு, இல்விடத்தி னின்றுந் தூரிய இடத்தில் இடப்படாத வளைந்த

தொழுவினுள்ளே கட்டி வைத்த தன் கன்றிற்குப் பொழுது விடிந்த காலத்திலும் மேயப்போகாது சூழ்ந்து திரியும்;† அந்நாகுபோலே நின்னைக் கண்டு என் நெஞ்சு நாடோறும் நடுங்குகின்ற வருத்தத்தை உற்றதுகாண் என்றான்;

'நாகு' : ஈண்டு இளமை.

(கசு—கக) எவ்வ . . . .

ணுயிர் :—

(இ - ள்.) என்று பின்னரும் என்னிடத்து எக்காலும் வருத்தம் மிகுகையினாலே அளித்தக்க

என்னுடைய உயிர் மருந்தையிட்டு நெய்யைக் கடைந்து வாங்கின பாலிடத்து நுகர்வார்க்குச் சிறிதும் பயன்படுதலில்லையாய் அவர் கைசென்று தோய்ந்து விடுகின்ற அளவாய்விட்டது ; அதுவும் ஒழிய மேல் தான் செய்வதோர் செயலையும் அறியாதென்றான் ;

என்றதனால், நீ என் உயிரிடத்துள்ள நன்மையை ஒருவழியாலே வாங்கிக்கொண்டு விட்டாயென்றும், அது பின்னர் நீ பயன்கொள்ளுங் காலத்து நினக்கு ஓர் இன்பந் தருதல் ஆற்றாதென்றுங்

கூறினுனிற்று.

(உ0—உக) அன்னையோ . . . . புலத்து :—

(இ - ள்.) அதுகேட்டு அவள், நீ அத்தன்மையையுடையையோ என அருள்செய்து, பலருந் திரிகின்ற மன்றத்திலே எதிர்ப்பட்ட அப்பொழுதே நின்னைப்போலன்றி அமைதியையுடையோர் மகளிரை இவ்விடத்துப் புணர்ச்சியின்றாயின் உயிர்வாழேனென்று நின்றாய்; இவ்விடத்து நின்றால் எம்முடைய சுற்றத்தார் காண்பர்; இனி இன்றேயன்றி நாளையும் புலத்திலே

கன்று மேய்த்தற்குப் போவேம்; ஆண்டு வந்து இத்தன்மையன உற்றவை மேற் சொல்லுவாய்; நீதான் இனி ஈண்டு நில்லாமற்போ என இடங் கூறினாள்.

---

* சேககிர்: சஉக. † சேககிர். ககடுக.

௩௫௬௯

கலித்தொகை

[கலி - ௬௪

இதனால், இருவர்க்கும் புணர்ச்சிவேட்கை பிறந்தது.

இது நெடுவெண்பாட்டும் பின்னர் மூன்று வெண்பாட்டுந் தனி சொல்லுஞ் சுரிதகமும் பெற்ற அகப்புறக் கலிவெண்பாட்டு.
(கூ(

கககக.

தீம்பால் கறந்த கலமாற்றிக் கன்றெல்லாந்
தாம்பிற் பிணித்து மனைநிறீஇ யாய்தந்த
பூங்கரை நீலம் புடைதாழ மெய்யசைஇப் பாங்கரு
முல்லையுந் தாய பாட்டங்காற்

ரேழிகம்

ரு. புல்லினத் தாயர் மகளிரோ

டெல்லா

மொருங்கு விளையாட

வவ்வழி வந்த

குருந்தம்பூங் கண்ணிப்

பொதுவன்மற் றென்னை

முற்றிழை யேஎர்

மடநல்லாய் நீயாடுஞ்

சிற்றில் புனைகோ

சிறிதென்று னெல்லா நீ

௬0. பெற்றேம்யா மென்று பிறர்செய்த வில்லிருப்பாய்
கற்ற திலைமன்ற காணென்றேன் முற்றிழாய்[1]

தாதுசூழ் கூந்தற்[2] றகைபெறத் தைஇய
கோதை புனைகோ நினக்கென்றா னெல்லாநீ
யேதிலார் தந்தபூக் கொள்வாய் நனிமிகப்
பேதையை மன்ற பெரிதென்றேன் மாதரா[3]
யைய பிதிர்ந்த சுணங்கணி மென்முலைமேற்
றொய்யி லெழுதுகோ மற்றென்றான் யாம்பிறர்
செய்புற நோக்கி யிருத்துமோ நீபெரிது
மையலை மாதோ விடுகென்றேன் றையலாய்
சொல்லிய வாறெல்லா மாறுமா றியான்பெயர்ப்ப
வல்லாந்தான் போலப் பெயர்ந்தா னவனைநீ
யாயர் மகளி ரியல்புரைத் தெந்தையும்
யாயு மறிய வுரைத்தீயின் யானுற்ற
நோயுங் களைகுவை மன்.

இது தலைவி ஆயத்திடைத் தலைவனைக் கண்டவாறும் அவனைக் கூறியனவுங் கூறித், தோழியைத் தலைவனை வரைவுகடாவி யாய்க்கு அறத்தொடுநிற் வேண்டுமென்றது.

(பாடம்) 1. முற்றிய. 2. கூந்த. 3. பெரிதென்றேனையிழா.

முல்லைக்கலி

கூரு

(இ - ள்.) தோழீ ! இனிய பாலைக் கறந்த கலங்களை அவ்விடத்து நின்றும் எடுத்துவைத்துக் கன்றுகளையெல்லாந் தாம்பாற் கட்டி மனைக் கண்ணே நிறுத்தித் தாய் தந்த பூத்தொழிலினையுங் கரையினையுமுடைய நீலத்தையுடைய ஆடை பக்கத்தே தாழாநிற்க மெய்யை அசைத்துப் பாட கர்க்கொடியும் முல்லைக்கொடியும்

பரந்த முற்றாட்டாகிய தோட்ட
இடத்தே நம்முடைய
ஆட்டினத்தையுடைய
ஆயர்மகளிரோடே மற்ை
இருகூற்றில் * ஆயர்மகளிரெல்லாருஞ்
சேர விளையாடாநிற்ப அவ்விடத்தே
வந்த குருந்தம்பூவாற் செய்த
கண்ணியையுடைய
பொதுவன் பின்னை என்னை நோக்கிச்
சூழ்ந்த அணிகலங்களையும்
அழகினையும் மடப்பத்தைய முடைய
நல்லாய் ! நீ இழைத்து விளையாடுஞ்
சிற்றிலை யானுஞ் சிறிது புனை வேனோ?
என்றான் ; யான் அதற்கு எடா !
வரைந்துகொண்டு எமக்கு ஒரில்லை

அமைத்தலறியாயாய்த் தன்
சுற்றத்தார் எடுத்த இல்லிலே இவ
இருக்க யாம் பெற்றேமென்று
நினைத்திருக்குமவன் நீ ; ஆதலால்,
உறுதியாக நீ உலகியலிற்
கற்றதொன்றும்
இல்லைக்காணென்றேன் ; அதன்
பின்ட மற்றிழாய்! கட்டின மாலையை
நினக்குத் தாதுசூழ்ந்த கூந்தலிலே
அழகுபெறப் புனைவேனோ? என்றான் ;
யான் அதற்கு எடா !. நீ வரைந்து
கொண்டு, விடாமற் கோதை புனைதல்
அறியாயாய், எஞ் சுற்றத்தார் மிக
கொண்டு வந்து சூட்டின பூவை
மிகப் பூவென்றுகொள்ளுமவன் நீ

ஆதலால், உலகில் உறுதியாகப் பெரிதும் பேதைத் தன்மையையுடையை என்றேன் ; அதன் பின்பு மாதராய் ![1] வியக்கத்தக்க சிதறின் சுணங்கு அணிந்த மெல்லிய முலைமேலே தொய்யில் எழுதுங் குழம்பால் எழுதவேனோ? என்றான் ; யான் அதற்கு நீ வரைந்துகொண்டு வெளியாக எழுதநல் நின் மனத்து இல்லை, யாம் எப்பொழுதும் என் சுற்றத்தார் கோலஞ் செய்து எழுதுங் காலம் பார்த்திருப்பேமோ ? இனி இங்ஙனம் இருத்த ‌லாற்றேம், இங்ஙனங் கூறுதலின் நீ பெரிதும்

மயக்கத்தையுடையை, இங் னம்
அன்புள்ளார்போலக் கூறுகின்றாய்,
அவற்றைத் தவிர் என்று கூறினேன்;
தையலாய்! அவற்றின் பின்னர்
அவன் சொன்ன நெறிக
ளெல்லாவற்றையும் இங்ஙனம் மாறாய்
மாறாய் யான் மறுக்க, இனிக் களவெ
ாழிகழாதென்று அல்யர் தான்போலே
மீண்டு போயினான்; அவனை நீ
ஆயர்மகளிரை வரைந்துகொள்ளும்
இலக்கணத்தை அறிவித்துப், பின்னர்
என்னுடைய தந்தையும் யாயும்
இக்களவொழுக்கம் அறியும்படி
அறத்தொடு நிலைவகையால்
உரைப்பையாயின், அவன் உற்ற

நோயன்றி யான் உற்ற
நோயையும் மிகப் போக்குவை ;
இதனைக் குறிக்கொள் என்றாள்.

இதனாற் றலைவிக்கு அசைவு பிறந்தது.

---

* இருகூறு : பசுவினம், எருமையினம்.

௯௫௮

கலித்தொகை

[கலி - ௧௧

இது பன்னீரடியின் இகந்து
தளையும் விரவி ஐஞ்சீரடியும் வந்து
ஒட
பொருணுதலாது வந்த கலிவெண்பாட்டு.

(கக

கக௨.

யாரிவ னென்னை விலக்குவா னீருளர்
பூந்தா மரைப்போது தந்த
விரவுத்தார்க்
கல்லாப் பொதுவனை நீமாறு
நின்னொடு
சொல்லலோம் பென்று
ரெமர்;

௫. எல்லா, கடாஅய கண்ணும்
கலைஇய நோய்செய்யு
நடாஅக் கரும்பமன்ற
தோளாரைக் காணின்
விடாஅலோம் பென்று
ரெமர் ;
கடாஅயார், நல்லாரைக்
காணின் விலக்கி நயந்தவர்
பல்லித ழுண்கண்ணுந்
தோளும் புகழ்பாட
௧௦. நல்லது கற்பித்தார் மன்ற
நுமர்பெரிதும்
வல்ல ரெமர்கட் செயல் ;
ஓஒ, வழங்காப் பொழுதுநீ

கன்றுமேய்ப் பாய்போல்
வழங்க லறிவா ருரையாரே
லெம்மை[1]
யிகழ்ந்தாரே யன்றோ
வெமர்;
௧௫. ஒக்கும், அறிவல்யா னெல்லா
விடு ;
விடேன்யா, னென்னீ
குறித்த திருங்கூந்தா
னின்னையென் முன்னின்று
சொல்லலோம் பென்றமை
யன்றி யவனை நீ
புல்லலோம் பென்ற
துடையரோ மெல்ல

௨௰. முயங்குநின் முள்ளெயி
றுண்கு[2] மெவன்கொலோ
மாயப் பொதுவ னுரைத்த
வுரையெல்லாம்
வாயாவ தாயிற்
றலைப்பட்டாம் பொய்யாயிற்
சாயலின் மார்பிற் கமழ்தார் குழைத்தநின்
ணையித ழுண்கண் பசப்பத் தடமென்றோள்
௨௫. சாயினு மேஎ ருடைத்து.

இது வினைவலபாங்கிற் றலைவியை ஆற்றிடைக் கண்டு வினைவலபாங்கிற் ற
வன் விலக்கி நகையாடி இருவருஞ் சிலமொழி கூறியவழி அவள் கூட்ட
திற்கு உடம்பட்டது. இது கைக்கிளை.

பாடம்) 1. லென்னை. 2. றுண்டு.

முல்லை - ௧௨]

முல்லைக்கலி

(க—ச) யாரிவ . .

, , ரேமர் .—

(இ - ள்.) என்னை விலக்குவானாகிய இவன் எமக்கு என்ன உற வுடையனென முன்னிலைப் புறமொழியாகப் புலந்துகூறிப், பின்னர் அவனை நோக்கி நீரிலே அசைகின்ற பொலிவையுடைய தாமரையினது பூவை எமக்கு விளையாடத் தந்த, பல்மலர் * விரவுதலையுடைத்தாகிய தாரினை யுடைய, நினது

சாதித்தன்மை கல்லாதபடி இயல்பாகப்பட்ட இடையனுந் தன்மையையுடையை; 1

இவ்வொழுக்கம் அறிந்தாரைப்போல எம்முடைய சுற்றத்தார் நின்னோடு சிலசொல்லுதலைப் பாதுகாத்துக்கொள் என்றார்; ஆதலால் நீ ஈண்டு நில்லாது போ என்றான்;

" எங்கில மருங்கிற் பூவும் "† என்பதனால் 'தாமரை' கூறினர்.

(கு—எ) எல்லா . . . .

ரேமர் :—

(இ - ள்.) அதுகேட்டு அவன்,

ஏடீ ! வேட்கைசெலுத்தின கண்ணாலே மனத்தைக் கலக்கின காமநோயை உண்டாக்கும் எழுதுகரும்பு நெருங்கின தோளிணையுடைய மகளிரைக் கண்டாயாயிற் போகவிடாதே கொள்; அவர் செய்த நோயை அவரைக் கொண்டே பரிகரித்துக்கொள்ளென்று கூறினர் எம்முடைய சுற்றத்தார் என்றான்;

(அ—கக) கடாஅயார் . . . .
செயல் :—

(இ - ள்.) அதுகேட்டு அவள், அங்ஙனம் பரிகரித்துக்கொள்ளென்று கூறினவர்கள் அதுவேயன்றி நல்ல மகளிரைக் கண்டாயாயிற் போகாமல் தடுத்து விரும்பி அவருடைய பல பூக்களையும் போலுங் கண்ணையும் புகழப் படுந் தோளையும் பாடும்படியாக நல்லதொரு தொழில் கற்பித்தார் ; அவர்

தாம் அறுதியாக ; எம்முடைய சுற்றத்தாரிடத்து அவர் வரைவுநேர்தற்குச்

செய்யுஞ் செயலை நும்முடைய சுற்றத்தார் பெரிதும் வல்லராயிருந்தாரென்

ரூல் ;

இஃது இகழ்ச்சி.

(கஉ—கச) ஒஒ.

வெமர் :—

(இ - ள்.) அதுகேட்டு அவன், தன் மனத்தே ஒஒ ! என வியந்து பின்னர் வெயில் வெம்மையால் ஒருவரும் வழங்காத உச்சிக்காலத்தே நீ கன்று மேய்ப்பாய்போலப் பிறர்க்கு நோயைச் செய்து திரிகின்ற தன்மையை அறிர் திருக்கின்றவர்கள் இப்படித்

றிகின்றாளென்று எனக்கு உரையாதிருப்ப, ராயில் எம்முடைய சுற்றத்தார் எம்மை இகழ்ந்தாரேயல்லவோ என்றான் ;

* கலி, ௧௦௯ : ௧ - ௪. † தொல், பொருள்: ௧௯.

(பாடம்) 1. கல்லாத வடிவு.

(௧௫) ஒக்கும் . . . . . விடு

:—

(இ - ள்.) அதுகேட்டு அவன், நீ கூறியது ஒக்கும் ; ஏடா! இது பொய்யென்று யான் அறியவேண்டா

; இக்கூற்றைக் கைவிடென்றான் ;

(கக—உரு) விடேனியா .

. . . நுடைத்து :—

(இ - ள்.) அதுகேட்டு அவன், யான் நின்னை விடேன், கரிய கூந்தலை யுடையாய்! யான் கூறிய கூற்றை நீ பொய்யாகக் குறித்ததென்? யான் பொய்கூறிற்றிலேன்; அது நிற்க, நின் சுற்றத்தார் நின்னை என்முன்னே நின்று சில சொல்லுதலைப் பாதுகாத்துக்கொள்ளெனச் சொன்னமையன்றி அவனை நீ புல்லுதலைப்

பாதுகாத்துக்கொள்ளென்ற வார்த்தையை அவர் உடையரோ? இல்லையன்றே! ஆதலால் நீ மெத்தென முயங்குவாய், அப்பொழுது யான் நின் கூரிய எயிற்றை* உண்பேனென்றான்; அது கேட்டு அவள்; இவன் கூறியது எத்தன்மைத்தோவென நெஞ்சொடு உசாவிப், பின்னுந் தன் நெஞ்சைநோக்கிப் பொய்யை வல்ல பொதுவன் கூறிய கூற்றெல்லாம் மெய்யாயிருப்பதோர் வார்த்தையாயில் அவனிடத்து மனைவாழ்க்கையிலே பட்டேமாகின்றேம்; அன்றி அது

பொய்யாயிற்றேல்

மென்மை இனிதாகிய மார்பிற் கமழ்கின்ற மாலையை[1] வருத்தின நின்னுடைய அழகிய இதழ்போலுங் கண்கள் பசலைநிறங் கொள்ளப் பெருமையை

யுடைய மெல்லிய தோள் பின்னர் மெலியினும் நின் மேனி இப்பொழுது பெறுகின்ற அழகையுடைத்துக்காண் எனக் கூட்டத்திற்கு உடம்பட்டு கூறினள்.

'குழைத்த' என்னும் பெயரெச்சம் 'நின்' என்னும் பெயரொடு முடிந்தது. கன்று மேய்ப்பாய்போலென்பதனால் வினைவலபாங்காயிற்று. "கோட

மின்பழும்"† என்னுஞ் சூத்திரத்து "உறுப்புடை யதுபோ லுணர்வுடை யதுபோன், மறுத்துரைப் பதுபோ னெஞ்சொடு புணர்த்தும்" என்பதனுள் உறுப்புடைத்தாகக் கூறினுள்.

இதனுல் இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது முச்சீரடியும் இருசீரடியும் இடையேவந்த கொச்சகக்கலி. (கஉ

கக௬.

நலமிக நந்திய நயவரு

தடமென்றோ

ஒலமர லமருண்க

ணாங்நல்லாய் ங்யுறீ இ

யுலமர லுயவுரோய்க் குய்யுமா றுரைத்துச்செல்;

* குறள். உகஎ; கலி-ச : கக-கச; குறள்-கஉகக.

† தொல். பொருள் : கருசு.

[illegible]

முல்லை - கரு]

முல்லைக்கலி

ரு.சிக

பேரேமுற்

றூர்போல முன்னின்று விலக்குவா

ரு. யாரெல்லா நின்னை

யறிந்தாடை யில்வழி ;
தளரியா லென்னறிதல்
வேண்டிற் பகையஞ்சாப்
புல்லினத் தாயர் மகனேன்
மற்றியான் ;

ஒக்குமன் ;

புல்லினத் தாயனை நீ யாயிற்
குடஞ்சுட்டு , ௪௦.
நல்லினத் தாய ரெமர் ;

எல்லா,

நின்னொடு சொல்லி னேதமோ

வில்லைமன் ;

ஏதமன் றெல்லை[1] வருவான் விடு ;

விடேன்,

கரு. உடம்பட்டு

நீப்பார் கிளவி மடம்பட்டு

மெல்லிய வாத லறியினு

மெல்லியா

னின்மொழிகொண் டியானே

விடுவேன்மற் றென்மொழி

டென்னெஞ்ச மேவல்

செயின் ;

[கொண்

நெஞ்சேவல் செய்யா
தெனநின்றாய்க் கெஞ்சிய
உ0. காதல்கொள் காமங் கலக்குற
வேதிலார்
பொய்ம்மொழி தேறுவ
தென் ;

தெளிந்தேன் றெரியிழா[2] யான் ;

பல்கால்யாங் கான்யாற்
றவிர்மணற் றண்பொழி
லல்க லகலறை யாயமொ
டாடி

உரு. முல்லை குருந்தொடு
முச்சிவேய்ந் தெல்லை
யிரவுற்ற தின்னங் கழிப்பி
யரவுற்றுருமி னதிருங்
குரல்போற் பொருமுர

ணல்லேறு நாகுட னின்றன

பல்லா னினநிரை நாமுடன்
செலற்கே.

இது விணவலபாங்கிற் றலைவியை
ஆற்றிடைக் கண்டு அவவள
விணவலபாங்
கிற் றலைவன் விலக்கி அவளோடு
சிறிது கூறியவழி அவள் கூடலூறகின்

ருள்[3] கூறியது. இது கைக்கிளை.

(பாடம்) 1. றென்னை. •2.

றெரியிழாய். 3. உடம்பட்டளாக

அவன். டசாஉ
கல்ல தம/தா லைக்
டலைய • ககரு

(க–ரு) நலமிக . . .

• றுரைத்துச்சேல்:—

(இ - ள்.) நன்மை மிகப் பெருகிய விருப்பம் வருகின்ற பெருமையை யுடைய மெல்லிய தோளினையுஞ் சுழலுதலுடைய முகத்தோடு பொருந் தின கண்ணினையும் அழகினையு

முடைய நல்லாளே ! நீ உற்றதனுல் உழத் நலேயுடைய வருந்துநோய்க்கு உய்யும் நெறியைக் கூறிப் பின்பு போ என விலக்கினுன்;

(ச—ரு) பேரேமுற் . .
. . மில்வழி :—

(இ - ள்.) அதுகேட்டு அவள், ஏடா ! நின்னை முன்பு கண்டறிந் ததுஉமில்லாத என்னிடத்தே பெரிய பித்தேறினுரைப் போல முன்னே நின்று விலக்குகின்ற நீ யார்தான் ? என்றுள் ;

(சு—எ) தளரியால். . .
. . மற்றியான் :—

(இ - ள்.) அதுகேட்டு அவன்,

என்னை நீ அறிதலை விரும்பின் மனங் களர்கின்ற இயல்பினையுடையாய் ! யான் பகைக்கு அஞ்சாத ஆட்டினத்தை புடைய ஆயரானவர்க்கு ஒரு மகளுதலுளேனென்று தன் செல்வக் குடிப் பிறப்பு உணர்த்தினன்.

(அ—கo) ஒக்குமன்

ரேமர் :—

(இ - ள்.) அதுகேட்டு அவள், அது மிகவும் ஒக்குமென அதற்கு உடம்பட்டுப், பின்னர், நீ ஆட்டினத்தையுடைய ஆயனுந் தன்மையை புடையையாயின்,

எம்முடைய சுற்றத்தார் நும்
இனத்திற் சிறந்த இன்ன தனைக்
குடம் பால் போதுமென்று
கருதப்படும் பசுவினத்தையுடைய
இடையரெனத் தன்
செல்வக்குடிப்பிறப்பு உணர்த்தினள்;

(கக—கஉ) எல்லா . .

வில்லைமன் :—

(இ - ள்.) அதுகேட்டு அவன், எடீ! இங்ஙனஞ் சிறந்த நின்னோடே சில மொழி கூறின் மிகக் குற்றமோ இல்லை என்றான்;

(கங) ஏதமன் . . . . விடு :—

(இ - ள்.) அதுகேட்டு அவள், இருவரும் ஒத்த குடியாயிற் பின்னைச் சில கூறிற் [1] குற்றமென்? யான் நாளை வருதற்கு இப்பொழுது போகவிடு என்றாள்;

(கச—கஅ) விடேன் . . . . செயின் :—

(இ - ள்.) அது கேட்டு அவன், யான் விடேனென்று கூறிப், பின்னரும் என்னுடைய வார்த்தையைக் கேட்டு என் நெஞ்சம் அறியாமையிலே

(பாடம்) 1. கூறிக்.

முல்லை - கரு]

முல்லைக்கலி

நூகள நூ

புகுந்து எனக்கு ஏவலைச்

செய்யுமாயின், உலகத்தில் ஒரு

காரியக்கூற்றுச்

உடன்பட்டு மனத்தால் உடன்படாதார் * கூற்றுச் செவிக்கு மெத்தென்றிரு
தலை அறிந்திருந்தேனாயினும் மெல்லிய இயல்பினையுடையாய்! நின்னுடை
வஞ்சமான மொழியை உண்மையாகக் கொண்டு யானோ போக விடுவேன்
அதனாற் பெற்றதென்? அஃது ஏவல் செய்யாதாயிற்றே என்றான்;

(கக—உக) நெஞ்சேவல்

தேன் :—

(இ - ள்.) நின்னைக் கைகடந்து நின்ற காதலைக் கொண்ட காமங் | கலக்குதலுறுகையினாலே என் நெஞ்சு எனக்கு ஏவலைச் செய்யாதென; சொல்லிநின்ற உனக்கு ஏதிலார் கூறிய பொய்யாகிய வார்த்தையை; தெளியுந்தன்மை எங்ஙனே உண்டாயிற்று என்றாள்;

'ஏதிலா'ரென்றது, தான் ஏதிலேனல்லேனென்னும் பொருண்மை குறிப்பாய்த் தோன்றக் கூறியது.

'பொய்ம்மொழி'யென்றது தான்

உண்மை கூறவும் பொய்யாகக் கொண்டானென்பது தோன்றக் கூறியது.

(உஉ) தெளிந்தேன்.

யான் :—

(இ - ள்.) அதுகேட்டு அவன், தெரிந்த இழையினையுடையாய்! இப்பொழுது கூறிய கூற்றால் நீ முன்னர் 'வருவான் வீடு' என்றது உண்மையென்று யான் தெளிந்தேன் என்றான்;

(உரு—உக) பல்காலியாங்

. . . . . சேலற்கே :—

(இ - ள்.) என்று பின்னர்,
யாம் முல்லைப்பூவைக்
குருந்தம்பூவோடே முடியிலே சூடிப்
பலகாலுங் காட்டாற்றில்
விளங்குகின்ற மணலையுடைய குளிர்ந்த
பொழிலிடத்து யாம் முன்பு தங்கும்
அகன்ற பாறையிலே ஆயத்தோடே
விளையாடுகையினாலே பகற்பொழுது
போய் இராப்பொழுது வந்து
தோன்றிற்று; அது
வருவதற்குமுன்னர்ப் போகாமல்
தாழ்க்கின் நம்மை கோபிப்பார்கள்;
அதனை உணராது நீ இன்னங்

காலங்கழியாநின்ருய்; பல
பசுவினத்தினுடைய திரளுக்குள்ளே,
பாம்பு சேர்க்கையினுலே அதிரும் உருமி
னுடைய குரல்போல அதிரும்
பொருகின்ற மாறுபாட்டினையுடைய
நல்ல

ஏறு, நாகுடனே தம்மிற் கூடி நின்றன; அவைபோல நாமுங் கூடிச் சேரப் போதற்குக் கூட்டத்திற்கு உடம்படுவாயாக என்ருன்.

"ஓங்குசினைத் தொடுத்த வூசல்
பாம்பெண, முழுமுத றுமிய வுருமெறி
தன்றே." ‡ என்ருர் பிறரும்.

யாங் கூட ஆயத்தோடு
ஆடியெனத் தானுங் கூட
ஆடினனென்றதனுேம், பொழுது
வைகிப்போதற்குத் தாங்

தமக்குரியரல்லரென் றமையானும்

* குறள். அஉடு. † பரி., க; கச. ‡ அகம்., கூஅ : கூஎ.

௲௪

கலித்தொகை

[கலி - கக௪

றும் நாகுங் கூடப் போமாறுபோல
நாமுங் கூடப் போக என்றமையானும்
வலபாங்கினராயிற்று.
அரவுறவெனத் திரிக்க.

இதனுல், இருவர்க்கும் புணர்ச்சி
வேட்கை பிறந்தது.

இது தரவும் இரண்டடியான்
இரண்டு கொச்சகமுந்
தனிச்சொல்லுஞ் 5றுவெண்பாட்டுந்

தனிச்சொல்லும் ஓரடியான் இரண்டுந்
தனிச்சொல்லும் நெடுவெண்பாட்டுங்
குறுவெண்பாட்டுஞ்
சிந்தடியோரடியானென்றும்
சொற்சீரடியும் ஐஞ்சீரும்
வந்து போக்கிலக்கணமில்லாத ஆசிரியச்சுரிதகமும்
பெற்ற உறழ்கலி.
(கரு)

ககச.

வாரி நெறிப்பட்
டிரும்புறந் தாஅழ்ந்த
வோரிப் புதல்வ னழுதன
னென்பவோ [1]
புதுவ மலர்தைஇ யெமரென்

பெயரால்
வதுவை யயர்வாரைக் கண்டு [2]
மதியறியா
ரு. வேழையை யென்றகல
நக்குவந் தியாய்நீ
தோழி யவனுழைச் சென்று;
சென்றியா னறிவேன் கூறுக
மற்றினி; [3]
சொல்லறியாப் பேதை
மடவைமற் றெல்லா
நினக்கொரூஉ மற்றென்
றகலகலு[4] நீடின்று
௬0. நினக்கு வருவதாக் காண்பா
யனைத்தாகச்

சொல்லிய சொல்லும்
வியங்கொளக் கூறு ;
தருமனற் ருழப்பெய்
தில்பூவ லூட்டி
யெருமைப் பெடையோ டெமரீங் கயரும்
பெருமண மெல்லாந் தனித்தே யொழிய

கரு. வரிமணன் முன்றுறைச்
சிற்றில் புனைந்த
திருநுத லாயத்தார் தம்முட்
புணர்ந்த
வொருமணந் தானறியு மாயி
னெனைத்துந்
தெருமரல் கைவிட் டிருக்கோ

வலர்ந்த

விரிநீ ருடுக்கை யுலகம்

பெறினு

உ0. மருநெறி யாயர் மகளிர்க்

கிருமணங் கூடுத லில்லியல்

பன்றே.

இஃது "ஆங்கதன் புறத்துப் புரைபடவந்த மறுத்தலொடு தொகைஇ* என்பது, அவன் வரைவுவேண்டின இடத்து அவ்வரைவு புறத்ததாகிய வழித் தலைவி

* தொல். பொருள்; களவு.

முல்லை - கசு]

முல்லைக்கலி

கூகரு

தன்னுயர்வு உண்டாகத்

தோன்றிய மறுத்தலோடே
முற்கூறியவற்றைத்
தொகுத்து" என்று பொருள் கூறி,
" அதன் புறமெனவே அதற்கு அயலாகிய
நொதுமலர்வரைவாயிற்று "*
என்றும் ; உயர்வு குடிப்பிறப்புங் கற்பும் ;
அதற்
கேற்பப் பிறர்வரைவு மறுத்துத்
தலைவன் வரையுமாறு நீ கூறெனத்
தோழிக்
குக் கூறியது.

(க—ச) வாரி . . . ,
சென்று :—

(இ - ள்.) தோழீ !

புதியனவாகிய மலர்களைச் சூடி எம்முடைய சுற்றத்தார் என் பெயரைச் சொல்லிப் பெண்பிள்ளைக்கலியாணஞ் செய்கின்றவர்களைக் கண்டு வைத்துங் கோதி நெறித்தற்றொழிலிலே பட்டுப் பெரிய முதுகிலே தாழ்ந்துகிடக்கின்ற மயிரினையுடைய புதல்வன் அழுதனனென்பவோ? அங்ஙனங் கூறுவார்களாயின் நீ அவனிடத்தே சென்று இவ்வதுவை நின்னை விட்டு அகலாநிற்க அது நின்னிடத்தே ஆம்படி வரைந்துகொள்ளும் மதியை அறியாத ஏழைத்

தன்மையையுடையை யென்று சிரித்துவாரா யென்றான் ;

கோதி நெறித்து முதுகிலே கிடக்கின்ற மயிரினையுடைய புதல்வ னென்றதனாற் பயன், மயிர்முடி கூடி இளமை முதிர்ந்து காமச்செவ்வி அறிந்து களவொழுக்கத்திற்கு உரியனாயுந் தான் வரைந்துகொள்ளுந் தன்மை அறியாமல் இருமுதுகுரவர்கீழே நிற்கின்ற பிள்ளையாயிருக்கின்றவ னென்பது உணர்த்திற்று.

'　அழுதனனென்பவோ　'
என்றது　நொதுமலர்வரைவு
வந்துழியுந் தான் வரைவின்முயலாது
வருந்தினனென்று
ஊரிலுள்ளார்　கூறுவார்களோ
என்றவாறு.　இஃது
அழுகையென்னும்　மெய்ப்பாடு.
'பெயரா　' லென்பது　உருபுமயக்கம்.

(எ)　சென்றியா . .
. . மற்றினி :—
(இ - ள்.)　அதுகேட்ட　தோழி
ஆண்டுச்சென்று　அவனிலையை　அறி
வேன்　;　பின்னை　அவற்குக்

கூறுவனவற்றை இனிக் கூறுவாயாக என்றான் ;

(அ—கக) சொல்லறியாப் . . . . கூறு :—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி, மடவாய் ! நீ அவனிடத்தே சென்று,

எடா ! நின் குரவரை நோக்கி இவ்வதுவை என்னிடத்தே யாகவேண்டு மென்று சொல்லுஞ் சொல்லை அறியாத பேதை ; ஆகையினாலே இவ்வதுவை நினக்குரித்தன்றி அகலும் ; அவ்வகற்சிதான் நீட்டித்தலில்லை ; அது கொது மலர்க்கின்றி நினக்குவருவதாக நெஞ்சாலே காண்பாய் ; அங்ஙனங் காணு யாயின் அது நின்னை ஒருவுமென்று நீங்கு ; அங்ஙனம் நீங்கும்பொழுது

இவ்வதுவை தனக்குரித்தாக முயலும்படி நீ சொல்லிய சொற்றானும் முன்பு வரைவுகடாயவுஞ் சொல்லாத அவன் வினையாமல் நின் ஏவலை அவன் மனக் காரியமென்றே கொள்ளும்படி கூறுவாயாக* என்றாள்.

மடவாயென்றான் ஆண்டுக் கூறுவனவற்றைத் தான் அறியான்போலத் தன்னை வினையினமைபற்றி.

(கஉ—உக) தருமணற்

பன்றே :—

(இ - ள்.) என்று பின்னுக்

தோழியை நோக்கி,
ஆராய்ந்துபார்க்கில்,
அறலினையுடைத்தாகிய
மணலினையுடைய
துறையின்முன்னே சிற்றி லிழைத்து
விளையாடிய அழகிய நுதலினையுடைய
ஆயத்தார் தம்முன்னே நின்று யான்
தனியே நீங்கினேனாக அவன்
புணர்ந்த ஒரு மணத்தை நம்
முடைய நெஞ்சுதான் அறியும்;
அங்ஙனம் அறிந்திராநிற்கவுங்,
கொண்டு
வந்து குவித்த மணலைத் தங்கப்
பரப்பி இல்லைச் செம்மண்ணைப்பூசித்
தெய்வமாக வைத்த எருமையாகிய

பேட்டின் கொம்போடே எம்முடைய சுற்றத்தார் இவ்விடத்து நடத்தும் பெண்பிள்ளைக் கல்யாணமெல்லாம் அவனையின்றி வேறு சிலரிடத்தே தங்குகையினாலே இருமணம் உண்டாகா நின்றது; இவ்விருமணம் பரந்த திரை விரிகின்ற கடலை உடுக்கையாக வுடைய உலகத்தைப் பெறினும் † அரிய நெறியையுடைய ஆயர்மகளிர்க்கு உண்டாதல் குடிப்பிறப்பிற்கு இயல்பன்றென்று யான் தெருமருதலைச் சிறிது கைவிட்டிருக்கவோ ?

கைவிட்டிருக்கின், குடிப்பழுதுமாய்க் கற்பும் நீங்கு மன்றோ? என்றாள்.

இனி, இருமணங்கூடுதல் இயல்பன்றாயிருக்க ஒருமணந்தான் அறிமாயிற் பெருமணமெல்லாந் தனித்தே ஒழியச்செய்தே 'தெருமரல் கைவிட்டிருக்கோ' என்றாற் பொருண்முடியாமை காண்க.

இதனாற் றலைவிக்குத் தம்மிறையால்[1] அச்சமே தோன்றிற்று.

எருமைப்பெடையென்றது "பேடையும் பெடையும்" ‡ என்னுஞ் சூத்திரத்து "நாடி" னென்றதனால்

அமைத்தாம்.

இது வெள்ளைக்கொச்சகமும் ஓரடியாறென்றுங் கொச்சகமும் போக்
கிலக்கணமில்லா ஆசிரியச்சுரிதகமும் பெற்ற உறழ்கலி. (கச

கக௫.

தோழிநாங், காணமை யுண்ட
கடுங்கள்ளை மெய்கூர
நாணது சென்று நடுங்க வுரைத்தாங்குக்
கரந்ததூஉங் கையொடு கோட்பட்டாங் கண்டாய்நம்

* குறள், ௬௪௮. † புறம். ௪௮௨: ௫ - ௬. ‡ தொல், பொருள்: ௬0௬
(பாடம்) 1. மறையால்.

முல்லைக்கலி

நகீள்

புல்வினத்

தாய மகன்கூடி வந்ததோர்
ரு. முல்லை யொருகாழுங்
கண்ணியு மெல்லியால்

கூந்தலுட் பெய்து
முடித்தேன்மற் றேழியாய்

வெண்ணெ யுரைஇ விரித்த
கதுப்போடே
யன்னையு மத்தனு மில்லரா
யாய்நாண
வன்னைமுன் வீழ்ந்தன்றப் பூ

அதனை, வினவலுஞ்
செய்யாள் சினவலுஞ் செய்யா
ணெருப்புக்கை தொட்டவர்
போல விதிர்த்திட்டு
நீங்கிப் புறங்கடைப்
போயினாள் யானுமென்
சாந்துளர் கூழை முடியா
நிலந்தாழ்ந்த
பூங்கரை நீலந் தழீஇத்
தளர்பொல்கிப்
பாங்கருங் கானத் தொளித்தே
னதற்கெல்லா

வீங்கெவ னஞ்சு வது ;

அஞ்சல், அவன்கண்ணி

நீபுனைந்தா யாயி னமரு
மவன்க ணடைசூழ்ந்தார்
நின்னை யகன்கண்
வரைப்பின் மணற்றூழப்
பெய்து திரைப்பில் உ0, வதுவையு
மீங்கே யயர்ப வதுவேயா [1]

மல்கலுஞ் சூழ்ந்த வினை.

இது தலைவி களவு
வெளிப்பட்டதென்று அஞ்சித்
தோழிக்குச் சொல்ல, நமர் [2]

நின்னை அவற்கே[3] கொடுக்கச் சூழ்ந்தாரெனச் சொல்லி அச்சம் நீக்கியது.

(கசு) தோழீநாங் . . . . பூ :—

(இ - ள்.) மெல்லிய இயல்பினையுடையாய் ! நம்யாட்டினத்தையுடைய ஆயர்மகன் சூடிவந்ததொரு முல்லைத்தொடையினையும் அதனாற்செய்ததோர் கண்ணியையுங் கூந்தலிலேயிட்டு மிகவும் முடித்தேன் ; தோழீ ! அப் பூச்செவிலித்தாய் வெண்ணெய்தேய்க்க* விரித்த

மயிரோடே நற்றாயுந் தந்தை முதலியோரும் இல்லிடத்தேயிராநிற்க நற்றாயுங் கெட்டுநாணும்படி யாகச் செவிலிமுன்னே வீழ்ந்தது ; ஆகையினாலே தோழீ ! பிறர் காணாமை யுண்ட கள்ளின்களிப்பு† மெய்யிடத்தே தோன்றி மிகுகையினாலே பின்னை நாணமற்சென்று‡ பிறர் நடுங்கும்படி அக்கடுங்கள்ளைத் தாமுண்டபடியை உரைத்தாற்போல நாங் கரந்த களவொழுக்கமுங் கையோடே பிடித்துக் கொள்ளப்பட்டேங்கா ணென்றாள் ;

---

* கலி-௪௦௫ : ௫௧-௫௪. † சீவக.

உருகை; ‡ குறள். கஉசா.

(பாடம்) 1. யயர்வ ர்கவேயா. 2. எமர். 3. அவர்க்கே.

நசா அ
கலித்தொகை
[கலி - கக்க

(கo—கக) அதனை . . . .
வது :—

(இ - ள்.) பின்னரும் அப்பூவை வந்தபடி என்னென்று கேட்டலுஞ் செய்யானாய்ச் சினத்தலுஞ் செய்யானாய் செருப்பைக் கையாலே நீண்டின

வர்கள் அக்கையைப்[1]
பிதிர்க்குமாறுபோலக் கையைப்
பிதிர்த்து நீங்கிப் புறமாகிய புறத்தே
போனன் ; அவன் போனபின்பு

யானும் என்னுடைய மயிர்ச்சந்தனம் பூசி உலர்த்தின மயிரை முடித்து திலத்தே தாழ்ந்த பூத் தொழிலையுடைத்தாகிய கரையினையுடைய நீல ஆடையைக் கையாலே சிறி தேறத் தழுவிக்கொண்டு அச்சத்தால் தளர்ந்து நடந்து பக்கத்திலுண்டான செல்லுதற்கரிய கானத்திலே சென்று ஒளித்தேனென்றாள்; அதுகேட்ட தோழி, எடீ! அப்பூ வீழ்ந்ததற்கு நீ அவ்விடத்தே அஞ்சுவது என்ன காரியத் திற்கென்றாள்;

(எ—உக) அஞ்சல் .

. . . . வினை :—

(இ - ள்.) என்று, பின்னும் நின் தலைவன் தன்னிலையை* நீ கூடிலை யாயின் அதற்கேற்ப நம்முடைய சுற்றத்தாரும் நின்னை அவனிடத்தே அடுத் தலைச் சூழ்ந்தார்; அதுவேயன்றி அகன்ற இடத்தையுடைய முற்றத்தே மணலைத் தங்கப் பெய்து திரையிட்டுக் கல்யாணமும் இப்பொழுதே செய் வார்கள்; பகலேயன்றிப் போன இரவிலும் ஆராய்ந்த காரியம் அக்காரியமே யாம்; நீ அஞ்சாதேகொள் ளென்றான்.

இதனாற் றலைவிக்குப் புணர்ச்சியுவகை பிறந்தது.

இஃது ஐஞ்சீரடுக்கி வந்த தரவும் பாட்டுஞ் சுரிதகமும் பெற்ற கலி

வெண்பா.
(௧௫

௧௧௪.

பாங்கரும் பாட்டங்காற்
கன்றொடு செல்வேமெந்
தாம்பி னொருதலை பற்றினை
யீங்கெம்மை
முன்னைநின் றாங்கே விலக்கிய
வெல்லாநீ
யென்னையே முற்றாய்² விடு ;
ரு. விடேஎன், தொடீஇய

செல்வார்த் தமித்தெதிர்
மண்டுங்
கடுவய நாகுபோ ேனக்கித்
தொடுவாயி[3]
னீங்கிச் சினவுவாய் மற்று ;
நீநீங்கு, கன் றுசேர்ந் தார்கட்
கதவீற்றூச்[4] சென்றுங்கு
வன்கண்ண ளாய்வர லோம்பு
;

* கலி. ௧0௭ : ௧0-௧௪.

'பாடம்) 1. தங்கையைப்.
2. யென்னே முற்றூஅய்.
3. ...

முல்லைக்கலி

௩௧௪௫

௧0. யாய்வருக வொன்றோ பிறர்வருக
மற் றுநின்
கோவரினு மிங்கே வருக
தளரேன்யா

நீயருளி நல்கப் பெறின் ;

நின்னையான்[1] சொல்லினவும் பேணாய் நினைஇக்
கனைபெய லேற்றிற் றலைசாய்த் தெனையதூஉ

கரு. மாறெதிர் கூறி மயக்குப் படுகுவாய்
கலத்தொடியாஞ் செல்வுழி நாடிப் புலத்தும்
வருவையா ணுணிலி நீ.

இது விணவலபாங்கிற் றவலவிவை
ஆற்றிடைக்கண்டு
விலக்கிய தலைவனோடு
அவள் சில மொழிகூறிக் குறியிடங்
கூறியது.

(க—ச) பாங்கரும்

வீடு :—

(இ - ள்.) மனைப்பக்கத்திற்,
பிறர் சேருதற்கரிய, நாம்

பயிர்செய்யுந் தோட்டத்திடத்தே கன்றோடு போகாநின்றேம்; அங்ஙனம் போகின்ற எம்

முடைய கையில் தாம்பின் ஒரு தலையைப் பிடித்தனையாய் எம்மை இவ் விடத்தே முன்பேயும் ஒருநா நின்று விலக்கினாற்போல [2] விலக்குதற்கு,

ஏடா! நீ என்ன பித்தேறினாய்?* நீ என்னைப் போகவிடு என்றாள்;

(ரு-எ) வீடேன் .

மற்று :—

(இ - ள்.) அதுகேட்டு அவன், யான் நின்னைப் போகவிடேன்; தன்னைத் தீண்டுதற்குச் செல்லுமவர்களை இடையே விலக்கி எதிரே மிக்குச் செல்லுங் கடிய

வலியினையுடைய நாகுபோலே
செறுத்து நோக்கித் தொழு வின்
வாயிலினின்றும் போந்து நின்று
பின்னைச் சினப்பாயென்றான்;

(அ-கு) நீநீங்கு . .
. . லோம்பு :—

(இ - ள்.) அதுகேட்டு அவள்,
நீ இவ்விடத்து நின்றும் போ ; அது
வென்னெனில், தன்னுடைய
கன்றைச் சேர்ந்தார்மேலே
கோபத்தை யுடைய புனிற்றாச்
சென்றாற்போல நீ என்மேலே
வந்து காணில் யாய்
தறுகண்மையையுடையனாய் வந்து

சீறுதலுமுண்டுகாண் ; அவ்வரவை நீ பேணிக் கொள்வா யென்றாள் ;

(கழ—கஉ) யாய்வருக பெறின் :—

(இ - ள்.) அதுகேட்டு அவன், நீ அருள்செய்து என்னைக் கூடப் பெறின், அவ்விடத்தே ஒன்று தாய் வருக ; ஒன்று அயலார் வருக ; அவர்

---

* கலி, ககக : ச - ரு.

(பாடம்) 1. நினைஇயான், 2. ஒருத்தர் விலக்கினரைப் போலே,

களையன்றிப் பின்னை

நின் தந்தைதான் வரினும்

வருக; அதற்கு யான்

வருந்தேனென்றான்;

(௧௩—௧௭)

நின்னையான் . . . . நீ:—

(இ - ள்.) அதுகேட்ட தலைவி,

கின்னே யான் எத்தன்மையவாகவுஞ் சொன்ன வார்த்தைகளைப் பரிகரியாயாய்க் கூட்டத்தையே நினைத்து செறிந்த மழையிடத்து ஏறுபோலே தலையைச் சாய்த்து யான் கூறியவற் றிற்கு எதிராகச் சில சொற்களைக் கூறி இங்ஙனம் மயக்கமுறுகின்றவனே! நாணமில்லாதவனே ! நீ கறவைக்கலத்தோடே யாஞ் செல்லும் பசுமேய்க் கின்ற இடத்தையும் நாடி என் தமையன்மார் நிற்கும் புலத்திலும் வருவை யாயிருந்தாய் ; ஆண்டுக் கூடுதுமெனக் குறியிடங் கூறினன்.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இஃது ஐஞ்சீரடுக்கி வந்த கலிவெண்பாட்டு.

(கக

ககஎ.

மாரா வுருக்கிய நன்பொன் மணியுறீஇப்
பேணித் துடைத்தன்ன மேனியாய் தோங்கின்
முதிரா விளமுகை யொப்ப வெதிரிய
தொய்யில் பொறித்த

வனமுலையாய் மற்றுநின் கைய
தெவன்மற் றுரை ;

கையதை, சேரிக் கிழவன்
மகளேன்யான் மற்றிஃதோர்
மாதர்ப் புலைத்தி விலையாகச்
செய்ததோர் போழிற் புனைந்த
வரிப்புட்டில் புட்டிலு ளென்னுள
காண்டக்கா யெற்காட்டிக் காண் ;

காணினி, தோட்டார் கதுப்பினென் றோழி யவரொடு
காட்டுச்சார்க் கொய்த சிறுமுல்லை மற்றிவை
முல்லை யிவையாயின் முற்றிய கூழையா
யெல்லிற்றுப்[1] போழ்தாயி னீதோளிக்[2] கண்டேனாற்
செல்லென்று நின்னை விடுவேன்யான் மற்றெனக்கு
மெல்லிய தோரா வறிவு.

இஃது ஆற்றிடைத் தலைவன்

தலைவியைக் கையது விழுய்ச் சேர்ந்தது.

(பாடம்) 1. பெல்லீற்றுப். 2. வித்தொளிக்.

முல்லை - கள]

முல்லைக்கலி

கூஎக

(க-ஞ) மாண . . . . றுரை

:—

(இ - ள்.) மாட்சிமைப்பட உருக்கி ஓடவைத்த நல்ல பொன்னிலே நீலமணியை அழுத்திப் பேணி ஒப்பமிட்டாற்போன்ற கரிய திறத்தையுடை யாய் ! முதிராத

கோங்கினது இளைய முகையையொப்பத் தோன்றின தொய்யிலெழுதின வனமுலையையுடையாய் ! பின்னை நின் கையிடத்தது யாதுதான் உரையென்றான் ;

(சு—கூ) கையதை . . . .

காண் :—

(இ - ள்.) அதுகேட்டு அவள், என்கையிடத்தது, இச்சேரிக்குரிய இடையர் மகளாயிருப்பேன் யான், பின்னை என் கையில் இருக்கின்ற இது

காதலையுடைய புலத்தி விற்கப்படுவதொன்றாக முடைந்ததொரு புட்டில் ; அதுதான் பின்பு பனங்குருத்தின் வகிராற் பொத்தின தொழிலையுடைய புட்டிலென்றான். அதுகேட்டு அவன், காட்சிதக்கவனே ! இப்புட்டிலுள் என்ன பண்டங்களுள ? அவற்றை எனக்குக் காட்டிக்காணென்றான் ;

(௪௦—௪௫) காணினி . . . . வறிவு :—

(இ - ள்.) அதுகேட்டு அவன்,

இனிக் காண்பாயாக ; பின்னை இவை இதழாலே நிறையப்பட்ட மயிரினையுடைய என் தோழி ஆயத்தாருடனே காட்டிடத்தே பறித்த சிறுமுல்லையென்றாள் ; அதுகேட்டு அவன், முடி கூடின மயிரினையுடையாய் ! யான் தனியே இவ்விடத்தே கண்டேனல் ; இருந்த இவை முல்லைப்பூவாயின், இவை தொடுத்துமுடித்து நாங் கூடு தற்குப் பொழுதாயின், ஒளி இத்தன்மைத்தாயிராநின்றது ; நின் நினைவு போக்கிலேயாகில் யான் போவென்று விடுவதுஞ் செய்வேன் ;* பின்னை எனக்கு

நின்னைப் போகவிடுதலை ஒராது இவண் என் அறிவு இளைத்திராநின்றது; இனி இக்கூட்டத்திற்கு உடம்பட நில்லென்றான்.

இது இதோளி 'ஈதோளி' யெனச் சுட்டு நீண்டு நின்றது; இது சுட்டு முதலாகிய இகரவீற்று வல்லெழுத்து மிகுகின்றது.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது. இது கொச்சகக்கலி.

(கஎ)

முல்லைக்கலி முற்றும்

* கலி, கக௫: கள-கஅ.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

கலி
த்தொகை

ரு.

வெல்புகழ் மன்னவன்

நெய்தற்கலி

கக அ.

விளங்கிய வொழுக்கத்தா
னல்லாற்றி னுயிர்காத்து
நடுக்கறத் தான்செய்த
தொல்வினைப்
பயன்றுய்ப்பத் துறக்கம்வேட்

டெழுந்தாற்போற்

பல்கதிர் ஞாயிறு பகலாற்றி மலைசேர
வானாது கலுழ்கொண்ட வுலகத்து மற்றவ
னேனையா னளிப்பான்போ லிகலிருண் மதிசேர்ப்பக்

குடைநிழ லாண்டார்க்கு மாளிய வருவார்க்கு
மிடைநின்ற காலம்போ லிறுத்தந்த மருண்மாலை ;

மாலைநீ, தூவறத்[1] துறந்தாரை நினைத்தலிற் கயம்பூத்த
போதுபோற் குவிந்தவென் னெழினல மௌ்ளுவா
யாய்சிறை வண்டார்ப்பச் சினைப்பூப்போற் றளைவிட்ட
காதலர்ப் புணர்ந்தவர் காரிகை கடிகல்லாய் ;

மாலைநீ, தையெனக் கோவலர் தனிக்குழ லிசைகேட்டுப்
பையென்ற நெஞ்சத்தேம் பக்கம்பா ராட்டுவாய்
செவ்வழியாழ் நரம்பன்ன கிளவியார் பாராட்டும்
பொய்தீர்ந்த புணர்ச்சியுட் புதுநலங் கடிகல்லாய் ;

மாலைநீ, தகைமிக்க தாழ்சினைப் பதிசேர்ந்து புள்ளார்ப்பப்
பகைமிக்க நெஞ்சத்தேம் புன்மைபா ராட்டுவாய்
தகைமிக்க புணர்ச்சியார் தாழ்கொடி நறுமுல்லை
முகைமுகந் திறந்தன்ன முறுவலுங் கடிகல்லாய் ;

எனவாங்கு,

மாலையு மலரு நோனு தெம்வயி

னெஞ்சமு மெஞ்சுமற் றில்ல வெஞ்சி

(பாடம்) 1. தாவறத்.

கலித்தொகை

உயுள்ளா தமைந்தோ ருள்ளு

உரு. முள்ளி லுள்ள முள்ளு னுவந்தே.

இது பிரிவிடையாற்றாத தலைவி மாலைப்பொழுது கண்டு அதனோடு புலம்பித் தோழி கேட்ப அதனோடு புலந்தது.

(க - அ) வேல்புகழ் . . . . . மருண்மாலை :—

(இ - ள்.) பகைவரிடத்துப் போர்த்தொழில் நிகழ்த்தவல்ல விளங்கிய ஒழுக்கத்தாலே வெல்கின்ற புகழையுடைய அரசன் நல்ல தருமநூனெறியாலே பல்லுயிர்களையும் பாதுகாத்துத் தீவினையால் உளதான நடுக்கம்

மனத்திலில்லையாம்படி தான்செய்த பழவினையின் பயனை நுகர்தற்குச் சுவர்க்கத்தை விரும்பி* போனாற்போலப் பலகதிரையுடைய ஞாயிறு தனக்குப் பகையாகிய இருளைக் கெடுத்து உலகத்திற்குப் பகற்பொழுதை முறைமையாற் செலுத்தி மலையிலே சென்று சேராநிற்க, அமையாதே கலங் கொண்ட உலகத்தினிடத்தே பின்னை அவ்வரசனுக்குப்பகைவனாகிய அரசன் வந்து அவ்வுலகைச்[1] சிறிதே அளிப்பான்போலத், தனக்கு மாறுபாட்டையுடைய இருளை மதி போக்காநிற்க, அந்தக்குடையால் நிழல் செய்து ஆண்ட அரசனுக்கும் அவ்வுலகை ஆளவரும் அரசனுக்கும் நடுவு நின்ற வருத்தந்தருகின்ற காலம்போல வந்துவிட்ட மாலாய்! நீ மருட்சியை யுடைய மாலையாய் இருந்தாயென்றாள்.

(கூ—கஉ) மாலைநீ

கடிகல்லாய்:—

(இ - ள்.) அதற்குக் காரணம்

என்னெனில் நமக்கு வலியில்லையாம்

படி நம்மைத் துறந்தவரை நினைக்கையினாலே† கயங்கள் பூத்த போது போலே‡ நின்னைக்கண்டு மனங்குவிந்த என்னுடைய அழகினையுடைய நலத்தை இகழ்கின்ற நீ அழகிய சிறகினையுடைய வண்டுகள் ஆரவாரிக்கும் படி முறுக்கு நெகிழ்ந்த கோட்டுப்பூப்போலே மனநெகிழ்ந்த[2] காதலரைக் கூடியிருக்கின்ற மகளிருடைய அழகைப் போக்கமாட்டாயென்று அதன் மருட்சி கூறினாள்;

இதனால், நீ வருந்தினவர்களை வருத்தியே விடுவையென்றும் மகிழ்ந்தவர்களை மகிழப்பண்ணியே விடுவையென்றும்§ அதன் அருளின்மை

நோக்கி மருட்சியையுடைய

மாலையாய் இருந்தாயென்றான்.

இறுத்தந்தமாலாய்! நீ மருண்மாலையாய் இருந்தாயென மேல்வரும் 'மாலைநீ' 'மாலைநீ' என்பனவற்றையும் இங்ஙனங் கூட்டிப் பொருள்கூறிக் கொள்க.

---

* பரி. கக : க0-கக.

† குறள். சருரு.

‡ நாலடி. உகரு ; குறள். சஉரு.

§ சிலப். ச : கசு-உ0.

(பாடம்) 1. அவ்வுலகத்தைச். 2. மனநெகிழ்ந்து.

மாயதல - க]

மநயதறகலி

கூஎரு

(கரு—கசு) மாலைநீ .

. . . கடிகல்லாய் :—

(இ - ள்.) கோவலருடைய

தனித்த குழலோசை

தையென்னும்

ஓசைப்பட ஒலிப்ப அதுகேட்டுக்

குறைந்த நெஞ்சத்தையுடையேம்

பக்

கத்தே நின்று

உயிரைக்கொள்ளாதே

விஞேதித்துப் பாராட்டுகின்ற நீ

தங்கணவர் பிரிந்தகாலத்துச் செவ்வழியென்னும் பண்ணையுடைய யாழினது நரம்போசை போல வருந்திக்கூறும் மொழியினையுடைய மகளிர் அக்கணவர் வருந்தின எம்போற் கனவிற் புணர்ச்சி * யின்றிப் பாராட்டப்படும் கனவிற்புணர்ச்சியிற் பெற்ற புதியநலத்தைக் கடியமாட்டாய்.

(கஎ—௨௦) மாலைநீ . . . . கடிகல்லாய் :—

(இ - ள்.) அழகு மிக்க

தாழ்ந்த சினைகளில்

தமக்கிருப்பிடத்தே

பேடுஞ் சேவலுமாகச் சேர்ந்து பறவைகள் ஆரவாரியாநிற்க, மற்றுள்ள பகைகளாலும் வருத்தமிக்க நெஞ்சத்தினையுடையேம் புன்மையை, யாங்கள் இறந்துபடாதபடி பண்ணி வினோதித்துப் பாராட்டுகின்ற நீ அழகு மிக்க கூட்டத்தையுடைய, மகளிரது தாழ்ந்த கொடியினையுடைய நறிய முல்லையினுடைய முகையின் முகத்தை வண்டுகள் திறந்தாற்போல ஆடவரால்

திறக்கப்படும் முறுவலையுங் கடியமாட்டாய்;

(உக) எனவாங்கு :—

அசை.

(உஉ - உரு) மாலையு

ளுவந்தே :—

(இ - ள்.) நம்மைப்பிரிந்து உள்ளில்லாத உள்ளத்தாலே நம்மை நினை

யாமல் அமைந்திருந்தோரை

உள்ளே உள்ளே உவந்து உள்ளும்

நம்முடைய

/ நெஞ்சமும் இம்மாலையையும் ஊரார் கூறும் அலரையும் பொருதே நம்மை விட்டுப் போகாநின்றது; இனி என்செய்வேமென வருந்திக்கூறினாள்.

இதனாற் றலைவிக்கு இழிவு பிறந்தது.

இது "நடை நவின்றொழுகு மாங்கென் கிளவி" † என்ற இலக்கணஞ் சிதைய இடையிடை சொற்சீரடி வருதலின் ஒத்தாழிசையாகாது எண்ணிடையிட்டுச் சின்னங்குன்றிய கொச்சகமாயிற்று.

இது முதலிய மூன்றுபாட்டும் மாலைக்காலத்தைக் கூறினமையின் "காருமாலையு முல்லை" ‡ என்னும் பொதுவிதிபற்றி முல்லையுட் கோத்தல் வேண்டுமெனின், அது பெரும்பான்மைபற்றிக் கூறியது; மாலை எற்பாட்டின் பின் நிகழுங் காலமாதலின் அதற்கியைபுபட்டு செய்தற்கும் உரித்தாயிற்று. அது "திணைமயங் குறுதலும்" § என்னுஞ் சூத்திரத்து "நில

னொருங்குமயங்குதலின்று"
என்றதனாற் காலமொருங்கு
மயங்குமென்றது

---

* கலி, கக: கரு-௩௬. † தொல், பொருள்: சசஎ; ‡ தொல், பொருள்; ௬.
§ தொல். பொருள்; கஉ,

கொண்டு சான்றோர் பலருஞ்
செய்யுள் செய்தார். "கானன் மாலைக்
கழிப்பூக் கூம்ப"* என்னும் அகப்
பாட்டும் நெய்தற்கண் மாலை

வந்தது. "தொல் லூழி தடுமாறி" †
என்னும் செய்தற்கலியுட் கங்குலும்
மாலையும் முன் பனியும் வந்தவாறு
காண்க. இந்நிலத்து மாலைவந்த
பாட்டுக்கள் பலவு முள. பிற
சான்றோர்செய்யுட்களுட் காலம்
மயங்குமாறு பலவுங் கண்டு
கொள்க.

(க)

அகன்ஞாலம் விளக்குந்தன் பல்கதிர் வாயாகப்,
பகனுங்கி யதுபோலப் படுசுடர் கல்சேர
விகன்மிகு நேமியா னிறம்போல விருளிவர[1]
நிலவுக்காண் பதுபோல வணிமதி யேர்தரக்[2]
கண்பாயல் பெற்றபோற் கணைக்கால மலர்கூம்பத்[3]
தம்புகழ் கேட்டார்போற் றலைசாய்த்து மரந்துஞ்ச
முறுவல்கொள் பவைபோல முகையவிழ்பு புதனந்தச்
சிறுவெதிர்ங் குழல்போலச் சுரும்பிமிர்ந் திம்மெனப்
பறவைதம் பார்ப்புள்ளக் கறவைதம் பதிவயிற்
கன்றமர் விருப்பொடு மன்றுநிறை புகுதர
மாவதி சேர மாலை வாள்கொள[4]
வந்தி யந்தண ரெதிர்கொள வயர்ந்து
செந்தீச் செவ்வழ றொடங்க வந்தை
வாலிழை மகளி ருயிர்பொதி யவிழ்க்குங்
காலை ‡ யாவ தறியார்
மாலை யென்மனுர் மயங்கி யோரே.

இது பிரிவிடை மாலைப்பொழுதுகண்டு ஆற்றாத தலைவி தோழிக்கு உரைத்தது.

(இ - ள்.) அகன்ற உலகத்தை எவ்வுயிர்க்குந் தோற்றுவிக்குந் தன்

னுடைய பலகிரணங்களைத் தனக்கு வாயாகக்கொண்டு கான்ற பகற்காலத்தை மீண்டும் அவ்வாயாலே விழுங்கினாற்போல அவற்றைச் சுருக்கிக்கொண்டு படுகின்ற சுடர் அத்தகிரியைச்சேர்கையினாலே போரின்கண் மிகுகின்ற சக்க

ரப் படையையுடைய மாயோனிறம்போல இயல்பாகவுள்ள இருள் பரந்து வாராநிற்க, அதனைப் பொறாதே தன் நிலவாலே ஓட்டிப் புறங்காண்பாரைப் போலே அழகினையுடைய மதிதோன்றக், கணவரைக் கூடித் துயிலைப்

---

* அகம் - ௪0. † கலி. ௧உகூ. ‡ குறள் - ௧உஉ௧. உரை. மாலையே

(பாடம்) 1. விருள்வர. 2 போதரச். 3. கணைக்கா லலர்கூம்பத். 4. வான்கொள.

[illegible]

நெய்தற்கலி

கள

பெற்ற கண்கள் போலே திரண்ட தண்டுகளையுடையவாகிய தாமரை முதலியன குவியத், தம் புகழ்களைக் கேட்ட சான்றோரைப் போலே தலையைச் சாய்த்து * மரங்கள் துயிலச், சிறுதூறுகள் பிரிந்த மகளிரை இகழ்ந்து சிரிப்பனவைபோலே முகைகள் அவிழ்ந்து விளங்கச், சிறிய மூங்கிலாகிய குழல்போலச் சுரும்புகள் ஆர்ப்பரவஞ் செய்து பாடப், புட்கள் தம் பார்ப்புக்களை நினைத்துக் குடம்பையைச் சேரப், பசுக்கள் தாந் தங்கும் ஊர்களிடத்திற் கன்றின்மேல் அமர்ந்த விருப்பத்தோடே மன்றுகணிறையப் புகுதலைச் செய்ய, மாக்கள் தாந் தங்குமிடத்தே சென்று தங்க, அந்தணர் தாஞ் செய்யுந் தொழில்களைச் செய்து அந்திக்காலத்தை எதிர்கொள்ள, மகளிர் செந்தீயால் உண்டான விளக்கை எற்றத் தொடங்க, மாலை விளக்கங் கொள்ள வந்ததனை அறிவு கெட்டோர் வாலிய இழையினையுடைய மகளிருயிரை அதனைப் பொதிந்துநின்ற உடலினின்றும் போக்குங் காலத்தினது இயல்பாவதறியாராய் மாலைக்காலம் என்று அதுவும் ஒரு காலமாகக் கூறுநிற்பரென ஆற்றுளாய்த் தோழிக்குக் கூறினாள் ;

கல்சேர்கையினாலே இருள் இவராநிற்க[1] அது பொழுது மதிதோன்ற என ஒருவினையாக முடிக்க. "பகல்கான் றெழுதரும் பல்கதிர்ப் பருதி" † என்றார் பிறரும்.

'மதியேர்தர' என்பது முதலிய செயவெனெச்சங்களெல்லாம் நிகழ்காலமுணர்த்திநின்று 'மாலைவாள் கொளா' என்னுஞ் செய்யாவெனெச்சத்தோடு முடிந்தன. அது பின் 'வந்ததை' என்னுந் தொழிற்பெயர்த் திரிசொல்லோடு முடிந்தது.

மயங்கியோர் என்றது தோழியைக் கருதி. "திணைமயங் குறுதலும்" ‡ என்றதனாற் கருப்பொருண்மயங்குதலும் அமைத்தாம்.

இனி மாலைவாழ்கொளவென்று பாடமாயின் அப்பாடத்திற்கு, மாலை தான் வாழ்தல்கொள்ள வந்ததனை என்க.

ரு அளறுடங்க என்பதும் பாடம்.

இதனாற் றலைவிக்கு இழிவு பிறந்தது.

இஃது அடக்கியலின்றி அடி நிமிர்ந்தோடிய கொச்சகவொருபோகின் பகுதியாய்த் தனிச்சொல்லும் அடக்கியலுமின்றிச் சுரிதகம் பெற்று அடி நிமிர்ந்தோடிய அகநிலைக்கொச்சகம். (உ)

கஉ0.

அருடீர்ந்த காட்சியா னறனோக்கா னயஞ்செய்யான்
வெருவுற வுய்த்தவ னெஞ்சம்போற் பையய

* குறுந். உகூஉ : புறம். உஅரு : கந - கச. † பெரும்பாண். உ.
‡ தொல். பொருள் : கஉ.

(பாடம்) 1. இருள்வாரா நிற்க.

விருடேர்பு புலம்பூரக் கனைசுடர் கல்சேர
வுரவுத்தகை மழுங்கித்தன் னிடும்பையா லொருவனை
ரு. யிரப்பவ னெஞ்சம்போற் புல்லென்று புறமாறிக்
கரப்பவ னெஞ்சம்போன் மரமெல்லா மிலைகூம்பத்
தோற்றஞ்சால் செக்கருட் பிறைநுதி யெயிறாக
நாற்றிசையு நடுக்குறூஉ மடங்கற் காலைக் / ?
கூற்றுநக் கதுபோலு முட்குவரு கடுமாலை; [கண்

கo. மாலைநீ, உள்ளங்கொண் டகன்றவர் துணைதாராப் பொழுதின்
வெள்ளமா னிறநோக்கிக் கணைதொடுக்குங் கொடியான்போ
லல்லற்பட் டிருந்தாரை யயர்ப்பிய வந்தாயோ;

மாலைநீ, ஈரமில் காதல ரிகந்தருளா விடனோக்கிப்
போர்தொலைந் திருந்தாரைப் பாடெள்ளி நகுவார்போ தோல்வ்

கறு. லாரஞ ருற்றாரை யணங்கிய வந்தாயோ;

மாலைநீ, கந்தாதல் சான்றவர் கலைதாராப் பொழுதின்கண்
வெந்ததோர் புண்ணின்கண் வேல்கொண்டு நுழைப்பான்போற்

காய்ந்தனோ யுழப்பாரைக் கலக்கிய வந்தாயோ ;

எனவாங்கு,

௨0. இடனின் றலைத்தரு மின்னுசெய் மாலை
துனிகொ டுயர்தீரக் காதலர் துனைதர
மெல்லியான் பருவத்து மேனின்ற கடும்பகை
யொல்லென நீக்கி யொருவாது காத்தோம்பு

நல்லிறை தோன்றக்
கெட்டாங்

௨௫. கில்லா கின்று விருளகத்
தொளித்தே.

இது பிரிவிடையாற்றாத தலைவி மாலைப்பொழுதுகண்டு கழிய ஆற்றளாயின இடத்துத் தலைவன்வரவும் அவளது அகமலர்ச்சியுங் கண்டார் கூறியது.

(க—சு) அருமீர்ந்த

கடுமாலை :—

(இ - ள்.) அருள் ஒருகாலத்தும் இல்லையான அறிவாலே, அறஞ் செய்தல்* இருமைக்கும் பயன்றரும் என்று கருதானாய்ப், பண்புஞ்செய்யானாய், எல்லாரும் வெருவுதலுறும்படி தனக்குள்ள நாளைப் பயன்படாமற் செலுத்தினவனுடைய நெஞ்சின் மருட்கிபோலே, மெத்தென மெத்தெ

* சிறுபஞ்ச-கூ.

நெய்தல் - கூ]

நெய்தற்கலி

கூஎகூ

இருளாலே உலகம் நிறைந்து கணவரைப் பிரிந்தோர்க்குத் தனிமை மேலிடும்படி செறிந்த சுடரையுடைய ஞாயிறு அத்தகிரியைச் சேர, மிடி

யாலே இரத்தற்கஞ்சினவன் வலியின்

றகைமை கெட்டுச்சென்று ஒருவனை

வேண்டுகின்றவனுடைய

நெஞ்சுபோலே, மரமெல்லாம் முதற்

பொலி

வழிந்து, பின்பு அம் மரமெல்லாம், இரப்பாரைக் கண்டு இருந்தவிடத்தினின்றும் எழுந்திருந்து போய் மறைகின்றவனெஞ்சு கண்ணோடாது குவியுமாறு

போல, இலைகள் எல்லாங் குவிய,
வருகின்ற மாலாய்! நீதான் நாலு
திக்குஞ்

சேர நடுக்கமுறும்
ஊழிமுடிவாகிய காலத்திலே
கூற்றுவன் விளக்கம் அமைந்த
செக்கர்வானிடத்துத் தோன்றின
நுதியையுடைய பிறை\ தனக்கு

எயிறாகக்கொண்டு*
பல்லுயிரையுஞ் சேரக்கோட்கு
நக்காற்போலும்

உட்குதலையுடைய கடியமாலையாய் இருந்தாய்;

முன்னர் நின்ற மாலை உட்குதலையுடைய மாலையெனப் பின்னர் வந்த மாலை[1] விசேடித்து நின்றது.

(கo—கஉ) மாலைநீ . . . . . வந்தாயோ :—

(இ - ள்.) இங்ஙனங் கடிய நீ என்னெஞ்த்தைத் தம்மிடத்தே கொண்டு நீங்கினவர் எனக்குத் துணையார்தன்மையைத் தாராத காலத்திலே வெள்ளத்திலே அகப்பட்டுக் கரையேறமாட்டாத மானினது மருமத்தைப் பார்த்து அம்பைத் தொடுக்குங் கொடியவனைப்போல அல்லலிலே அழுந்தி யிருந்த என்னைக் கையறவெய்துவிக்க வந்தாயோ?

'மாலை நீ' என வருகின்றவற்றையுந் தரவோடு கூட்டி முற்கூறிய வாறே பொருளுரைக்க.

(௧௫—௧௫) மாலைநீ வந்தாயோ:—

(இ - ள்.) இங்ஙனங் கடிய நீ அருளில்லாத காதலர் விட்டுநீங்கி அருளாதிருந்த காலத்தைப் பார்த்துப் போரிலே தோற்றிருந்தவர்களை அவர்கள் பட்ட தோல்வியை இகழ்ந்து சிரிப்பாரைப்போலே பொறுத்தற் கரிய வருத்தமுற்ற என்னை வருத்துவிக்க வந்தாயோ?

'போர்தொலைந் திருந்தார்', தொழிலின்றொழில் தொழிலுடையதன் மேல் நின்றது:

(௧௬—௧௮) மாலைநீ.

வந்தாயோ :—

(இ - ள்.) இங்ஙனங் கடிய நீ எனக்குப் பற்றுக்கோடாதலை அமைந்த வர் என் வருத்தத்தைப் போக்குதலைச் செய்யாத காலத்தே முன்பே வெந்ததொரு புண்ணிலே பின்பு ஒரு வேலைக்கொண்டு சொருகுவாரைப்

* சிவக, கசுசு0.

(பாடம்) 1. மாலையை. 2. என் நெஞ்சைத் ௬௮/0

கலித்தொகை

[கலி - கஉக

போலே* மெய்வெதும்புதற்குக் காரணமான காமநோயிலே அழுந்துகின்ற என்னை யுள்ளி உள்ள அறிவையுங் கலங்குவிக்க வந்தாயோ ?

(கக) எனவாங்கு :—

(இ - ள்.) என்று

அவள் கூறும்படியாக;

'ஆங்கு': அசை.

(உ௦-உ௫) இடனின்

தோளித்தே :—

(இ - ள்.) ஆற்றுதற்கோரிட

மின்றாக அலைத்தலைச் செய்யும் பொல்

லாங்கே செய்யும் மாலைக்காலத்தாலே

வெறுப்புக்கொண்ட வருத்தந் தீரும்

படி காதலர் விரைந்து

வருகையினாலே, அம்மாலை †

இராக்காலத்திடத்தே சென்றொளித்து,

நாற்படையாலே இளைத்த அரசன்
இளைத்த பருவத்தே அவனுக்கு
மேலாய்வந்த கடிய பகையானது
அந்தப் பகைமையை விரையப்
போக்கி நீங்காமல் நின்று காத்து
நடத்தும் நல்ல இறைவன் வந்து
தோன்றக்
கெட்டுப்போனாற்போலே,
இல்லையாகாநின்றதெனக்
கண்டோர் கூறினார்.

பகை கெட்டாங்கு மாலை
ஒளித்து இல்லாகின்றதென்க.

இதனாற் கண்டோர்க்கு
ஆக்கம்பற்றிய மருட்கை பிறந்தது.

இஃது இடையிடை

சொற்சீரடிவந்து எண்ணிடையிட்டுச்

சின்னங் குன்றிய கொச்சகம்.

(ரு)

கஉக.

ஒண்சுடர் கல்சேர வுலகூருந்

தகையது

தெண்கட லழுவத்துத் திரைநீக்கா வெழுதரூஉந்
தண்கதிர் மதியத் தணிநிலா நிறைத்தரப்

புள்ளின மிரைமாந்திப்

புகல்சேர வொலியொன்று

ரு. வள்ளிதழ் கூம்பிய மணிமரு ளிருங்கழி
பள்ளிபுக் கதுபோலும் பரப்புநீர்த் தண்சேர்ப்ப ;

தாங்கருங் காமத்தைத் தணந்துநீ புறமாறத்
தாங்குநீ ரிமிழ்திரை துணையாகி யொலிக்குமே
யுறையொடு வைகிய போதுபோ லொய்யென
நிறையான் றிழிதரூஉ நீர்நீந்து கண்ணட்கு ;
வாராய்நீ புறமாற வருந்திய மேனியாட்
காரிருட் டுணையாகி யசைவளி யலைக்குமே

* பெருங். (க) ரு.ரு : கூச-கூரு.   ‡ கலி. கஉகூ : ௯-எ

நெய்தல் - ௯

நெய்தற்கலி

ரு அக

கமழ்தண்டா துதிர்ந்துக வூழுற்ற கோடல்வீ
யிதழ்சோருங் குலைபோல விறைநீவு வளையாட்கு ;

௧௫. இன்றுணை நீப்ப விரவினுட் டுணையாகித்
தன்றுணைப் பிரிந்தியாஅந் தனிக்குரு குசவுமே
யொண்சுடர் ஞாயிற்று விளக்கத்தா னொளிசாம்பு
நண்பகன் மதியம்போ னலஞ்சாய்ந்த வணியாட்கு;

எனவாங்கு,

௨0. எதிதிரை தந்திட விழிந்தமீ னின்றுறை
மதிதிரை வருந்தாமற் கொண்டாங்கு நெறிதாழ்ந்து
சாயினள் வருந்தியா
ளிடும்பை
பாய்பரிக் கடுந்திண்டேர்
களைமினோ விடனே.

இது தலைவன் ஒருவழித்
தணந்தவிடத்துத் தலைவி

யாற்ருமைகூறி வரையக்

கருதினுயாயின் இஃதிடமெனச்

சொல்லியது.

(க—௬) ஒண்சுடர் . .

. . தண்சேர்ப்ப :—

(இ - ள்.) ஒள்ளிய ஞாயிறு அத்தகிரியைச் சேர்தலானும் உலகெல் லாந் தன் ஒளி பரக்குந் தன்மையதாகித் தெளிந்த கடற்பரப்பிற் றிரையை நீக்கித் தோன்றுந் தண்ணியதாகிய கதிரையுடைய மதியத் தினது அழகையுடைய நிலா மிகுதலைச் செய்கையினுலும் பறவைகள் இரையை நிறையத் தின்று தாங்

தங்கும் புகல்களைச் சேர்கையினாலே தன்னிடத்து ஆரவாரம் அடங்கப்பட்டு வளவிய இதழ்களுங் குவிந்த நீலமணி யென்று மருளும் பெரிய கழி துயில்கொண்ட தன்மையை யொக்குங் கடலையுடைய குளிர்ந்த சேர்ப்பனே!

தகையதாகி எழுதரும் மதி. ஞாயிறு படுதலும் மதியந்தோன்றுதலும் பறவைகள் புகல்சேர்தற்குக் காரணமென்று கொள்க.

அவை சேர்கையினாலே ஒலியவிந்து போயதைப்[1] பள்ளிபுக்காற் போலே இருந்ததென்றது தன்குறிப்பை

அதன்மேலேற்றிக் கூறியதோர் உவமவிசேடம். இஃது "ஒரீஇக் கூறலு மரீஇய பண்பே" * என்னும் உவமவியற் சூத்திரத்தில் அடக்கினும். இதழ் கூம்புதலுந் துயிற்கு அடையாய் நின்றது.

ஞாயிறு கல்சேர்ந்ததனைத் தலைவன் இட்டுப்பிரிந்து தன்மனையிலே சேர்ந்திருத்தலிற் களவு புலப்படாத தன்மையாகவும் மதியத்தின் நிலாப் பரந்ததனை அவ்விடத்துக் காவலின் விளக்கமாகவும் பறவைகளின் ஆரவாரங்

---

* தொல், பொருள்: உ0அ.

கூஅஉ
கலித்தொகை

கெட்டதனை இவ்விரண்டினாலும் அலர்தூற்றுகின்ற மகளிரொலி அவிந்து இவ்வூர் துயில்கின்றாற்போலிருந்த தன்மையாகவும் உள்ளுறை யுவமங் கூறுக.

(எ—கO) தாங்கருங்
கண்ணோட்டு :—

(இ - ள்.) நீ இட்டு வைத்துப் பிரிந்து[1] நின்னூரிடத்தே உறைந்து முன்பு நின் நெஞ்சில் தாங்குதற்கரிதாய்ப் போந்த காமத்தை நின்னிடத்தி னின்றுங் கைவிடுகையினாலே துளியோடே தங்கின பூப்போலே நிறுக்கு மளவில் அமையாதே விரைய விழும் நீரிலே கிடந்து நீந்துகின்ற கண்ணை யுடையவட்கு* அசைகின்ற கடலிலே எழுந்து முழங்குகின்ற திரைதான் துணையாகி நின்று ஆரவாரியாநிற்கும்;

வருத்துகின்ற திரை தான் துணையாக ஒலிக்குமென்று அஃது இறந்துபடுத்தாது † நின்றமைபற்றிக் கூறினாள்.

(கக—கச) வாராய்நீ . . . . . வளையாட்கு :—

(இ - ள்.) நீ ஈண்டு வாராயாய் நின்மனையிடத்தே இருந்து வருந்திய மேனியையுடையவட்கு நீ வைத்த வேட்கை நின்னிடத்தினின்றுங் கைவிடு கையினாலே கமழ்கின்ற தண்ணியதாது உதிர்ந்து சிந்தும்படி முறைமையுற்ற இதழ்கள் வீழுங் குலையினையுடைய கோடல்வீபோல இறையினின்றுங் கழலும் வளையினையுடையாட்கு நிறைந்த இராக்காலத்தே அசைந்துவரு கின்ற காற்றுத் தான் துணையாகிநின்று வருத்தாநிற்கும்;

இனி மேனியாட்கு வருந்திய நீ வாராயாய்ப் புறமாற என்றுமாம்.

(கடு—கஅ) இன்றுணை . , . . வணியாட்கு :—

(இ - ள்.) இனிய துணையாகிய நீ கைவிட்டு உன்மனையிடத்தே இருக்கையினாலே ஒள்ளிய சுடரையுடைய ஞாயிற்றினது மிக்க ஒளியாலே தன் ஒளி கெடுகின்ற உச்சிக்காலத்து மதிபோலே நன்மைகெட்ட முகத் தினை யுடையாட்கு இராக்காலத்திடத்தே தன் சேவலைப் பிரிந்து வருந்தும் தனிக்குருகு ‡ தான் துணையாகி உசாவாநிற்கும்;

(கக) எனவாங்கு :—

அசை.

(உ0–உரு) எறிதிரை

விடனே :—

(இ - ள்.) இனிய துறையிடத்தே எறிகின்ற திரை எறக் கொண்(
வந்து போகடுகையினால்[2] எக்கரிலே கிடந்த மீனை மீள்கின்ற அத்திரை

* குறள் - ககள0. †

இறந்துபடுத்தல் - இறந்துபடச்செய்தல்.

‡ குருகு - வெள்ளாங் குருகு ;

அன்றிலும் நாரையுமாம்.

(பாடம்) 1. பிரிந்த. 2.

போடுகையினால்.

நெய்தல் - ரு]

நெய்தற்கலி

ரு அங் வருந்தாதபடி

கைக்கொண்டுபோன தன்மைபோலே நீ முன்பு

நடத்தின செறிதாழ்கையினாலே மெலிந்தனளாய் வருந்தினவளுடைய வருத்தத்தைப் பாய்ந்துசெல்லும் பரிபூண்ட கடிய திண்ணிய தேர் வெளியாக வரைவோடே வந்து களையுமாயின் நல்லகாலமென வரைவுகடாயினள்.

இதனாற் றலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது ஒத்தாழிசைக்கலி

(௪)

கஉஉ.

கோதை யாயமு மன்னையு மறிவுறப்

போதெழி லுண்கண்
புகழ்நல னிழப்பக்

காதல்செய் தருளாது
துறந்தார்மாட் டேதின்றிச்
சிறிய துனித்தனை
துன்னுசெய் தமர்ந்தனை
நி. பலவுநா றடுக்கினை
யினைபேங்கி யழுதனை
யலவலை யுடையை யென்றி[1]
தோழீ;

கேளினி;
மாணெழின் மாதர்
மகளிரோ டமைந்தவன்

காணும்பண் பிலனைத
லறிவேன்மன் னறியினும்
௧௦. பேணி யவன்சிறி தளிக்கக்
காலென்
ணாணி னெஞ்ச நெகிழ்தலுங்
காண்பல் ;
இருளுற ழிருங்கூந்தன்
மகளிரோ டமைந்தவன்
றெருளும்பண் பிலனைத
லறிவேன்மன் னறியினு
மருளி யவன்சிறி தளிக்கக்
காலென்
௧௫. மருளி னெஞ்ச மகிழ்தலுங்
காண்பல் ;

ஒள்ளிழை மாதர் மகளிரோ
டமைந்தவ
னுள்ளும்பண் பிலனாத
லறிவேன்மன் னறியினும்

புல்லி யவன்சிறி தளித்தக்
காலென்

னல்லெனஞ்ச மடங்கலுங்
காண்பல் ;

உ0. அதனால்,

யாம நடுநாட்
டுயில்கொண் டொளித்த

காம நோயிற்[2] கழீஇய
நெஞ்சந்

தானவர்[3] பாற்பட்ட தாயி

ஞமுயிர் வாழ்தலோ நகைகனி யுடைத்தே.

(பாடம்) 1. யென்றீ. 2.

.கோயிறக். 3. தாமவர்.

ட அ௪

கலித்தொகை

[கலி - கடல்

ெது காமாஞ்சாலா இளமையோள்வயிற்

பின் களவொழுக்கம் ஒழுகிய தலைவன்

இடையிட்டுப் பிரிந்து தோன்முறை

மனைவியரோடு புணர்ச்சியெய்தி இருந்

தானக, அதனையறிந்து ஆற்றளாய

தலைவி ஆற்ருமையைக்கண்டு[1] விருய்
தோழிக்கு அத்தலைவி
அவனெழுகுகின்றவாறுந் தன்னெஞ்சு
அவன்
வயத்ததாயவாறுங் கூறியது. "
மறையின் வந்த மனையோள்
செய்வினை,
பொறையின்று பெருகிய பருவரற்
கண்ணும்"* என்பதனுனும் "
பின்முறை
யாக்கிய பெரும்பொருள் வதுவை"†
என்னுஞ் சூத்திரத்தானும் உணர்க.

(க—எ) கோதை
கேளினி :—

(இ - ள்.) கோதைபோல ஒழுங்குவிட்டு விளையாடும் ஆயத்தாருந் தாயும் அறிதலுறும்படி பூவினது அழகையுடைய கண்கள் புகழ்ந்த நலத்தை இழக்கும்படி முன்னர் நம்மிடத்தே மிக்க காதலை நிகழ்த்திப் பின்னர் நமக்கு அருளாதே ஒரு காரணமின்றி நம்மைத் துறந்தாரிடத்தே முன்னர்ச் சிறியவாக வெறுத்தனை ; பின்னர் அவர் நமக்குப் பொருந்தாக் குறைகளைச் செய்கையினாலே அக்குறைகள் பல நூறுமாக அடுக்கிக்கூறி அதிலே அமர்ந் தனை ; அதுவேயுமன்றி வருந்தி ஏங்கி அழுவதுஞ் செய்தாய் ;

ஆக்லான் நீ அலமருதலையுடையையாய் இருந்தாயென்று சொல்லாநின்றாய்; தோழீ! இனி அலமரலைக் கேளென்றாள்.

'எது' : வடமொழி திரிந்து விகாரமாய் நின்றது.

(அ—கக) மாணெழின் . . . . காண்பல்:—

(இ - ள்.) மாட்சிமையையுடைய அழகினையுங் காதலையுமுடைய மனைவியரோடே அவன் பொருந்தி நம் வருத்தத்தைப் பார்க்குங் குணமிலனாயிருத்தலை மிகவும் அறிவேன்; அறிந்திருப்பினும் அவன் வந்து

என்னைப் பேணிச் சிறிதாக அளிக்க என்னுடைய நாணமில்லாத நெஞ்சம் என் வயத்ததன்றி[2] அவனிடத்தே நெகிழ்ந்து செல்லுதலையுங் கண்டிருப்பேன்;

(கஉ—கரு) இருளற . . . . காண்பல்:—

(இ - ள்.) இருளோடே மாறுபடுகின்ற கரிய கூந்தலையுடைய தொன் முறை மனைவியரோடே அவன் பொருந்தி நம் வருத்தத்தைத் தெளியுங் குணமிலனாயிருத்தலை மிகவும் அறிவேன்;

அறிந்திருப்பினும் ஒருகால்

அருள்பண்ணி அவன் சிறிதாக அளிக்க என்னுடைய நெஞ்சம் அதற்கு மகிழ்தலையுங் கண்டிருப்பேன்;

மருளியாகிய

---

* தொல். பொருள். கஙக.

† தொல். பொருள்: களஉ. (பாடம்) 1. ஆற்றாமைகண்டு.

2. என்வயத்தன்றி.

நெய்தல் - சு]

நெய்தற்கலி

ஙஅரு

(கசு—ககூ) ஒள்ளிழை . . . . . காண்பல் :—

(இ - ள்.) ஒள்ளிய இழையினையுங் காதலையுமுடைய தொன்முறை மனைவியரோடே அவன் பொருந்தி நம்மை நினைக்குங் குணமில்லாதலை மிகவும் அறிவேன்; அறிந்திருப்பினும் அவன் சிறிதாகப் புல்லி அளிக்க என்னுடைய வருத்தத்தையுடைய் நெஞ்சம் வருத்தம் மீளுதலுங் கண்டிருப்பேன்;

(உ0—உச) அதனால் . . . யுடைத்தே :—

(இ - ள்.) ஆகையினாலே காமநோயாலே மிக்க நெஞ்சந்தான் நடு நாள்யாமத்தில் நாங்கொள்ளுந் துயிலை வாங்கிக்கொண்டு ஒளித்த அவர் பகுதியிலே பட்டுவிட்டதாயின், இனி நாம் இருந்து உயிர்வாழ்கையோ மிகப் பிறர் சிரித்தலையுடைத்தென்று தோழி வரைவுகடாவுதற்குக் கூறினாள்.

இதனால், “ தன்வயி னுரிமையும் அவன்வயிற் பரத்தையும் ”* கூறினாள்.

இதனுற் றலைவிக்கு இழிவு பிறந்தது.
இது 'கேளினி' எனச் சொற்சீரடி வந்தமையிற் கொச்சகம்.

கஉரு.

(ரு)

கருங்கோட்டு நறும்புன்னை மலர்சினை மிசைதொறுஞ்
சுரும்பார்க்குங் குரலினோ டிருந்தும்பி யியைபூத
வொருங்குட னிம்மென விமிர்தலிற் பாடலோ
டரும்பொருண் மரபின்மால் யாழ்கேளாக் கிடந்தான்போற்
ரு. பெருங்கட றுயில்கொள்ளும் வண்டிமிர் நறுங்கானல்;

காணுமை யிருள்பரப்பிக் கையற்ற கங்குலான்
மாணுநோய் செய்தான்கட் சென்றுய்மற் றவனைநீ
காணவும் பெற்றுயோ காணுயோ மடநெஞ்சே;

கொல்லேற்றுச் சுறவினங் கடிகொண்ட மருண்மாலை
யல்லனோய் செய்தான்கட் சென்றாய்மற் றவனைநீ
புல்லவும் பெற்றாயோ புல்லாயோ மடநெஞ்சே ;

வெறிகொண்ட [1] புள்ளினம் வதிசேரும் பொழுதினாற்
செறிவளை நெகிழ்த்தான்கட் சென்றாய்மற் றவனைநீ
யறியவும் பெற்றாயோ வறியாயோ மடநெஞ்சே ;

---

* தொல். பொருள் ; ௧௧௧.

(பாடம்) 1. பொறிகொண்ட.

ந அச

கலித்தொகை

௧௫.

எனவாங்கு,

எல்லையு மிரவுந் துயிறுறந்து
பல்லூ
ழுரும்பட ரவலநோய் செய்தான்கட் பெறனசைஇ
யிருங்கழி யோதம்போற் றடுமாறி
வருந்தினை யளியவென் மடங்கெழு நெஞ்சே.

இது காப்புமிகுதிக்கண் ஆற்றாத தலைவி தலைவன்பாற் சென்ற நெஞ்சினை நோக்கி அழிந்து கூறியது.

(க—கு) கருங்கோட்டு

நறுங்கானல் :—

(இ - ள்.) கரியகொம்பினையுடைய புன்னையின் சிறிய சினையில் நறியதாகிய மலர்தோறும் மலருஞ்செவ்வி பார்த்து நுகருதற்குச் சுரும்பினம் ஆரவாரிக்கும் ஓசையோடே கரிய[1] தும்பிகளும் ஒருங்கியைந்து ஊத எழுந்த குரலுஞ் சேர இம்மெனும் ஓசைபட ஒலிக்கையினாலே அவற்றைக் கேட்டு யாவராலும் பெறுதற்கரிய பொருளாகிய முறைமையினையுடைய திருமால் பாட்டோடே யாழையுங்கேட்டுப் பள்ளிகொண்டவனைப் போலப் பெரிதாகிய கடலும் ஒலியவிந்து உறக்கத்தைக் கொள்ளும் வண்டு ஒலிக்கின்ற கானலின் கண்ணே ;

நெஞ்சே சென்றாய் என மேலே கூட்டுக.

ஓதம் வடிந்த காலத்து மிக்க ஒலியின்மைபற்றிக் கூறிற்று.

புன்னை மலருஞ் செவ்விபார்த்து அவற்றை நுகர்தற்குரியன நுகர்கின்றமையுங் கண்டு யாமுங் காமச்செவ்வி அறிந்து நந் தலைவர் நுகரப் பெற்றிலேமே யென்று வருந்தியும், பாட்டையும் யாழையும்போலும் ஓசை கேட்டுக் கடலுட்படத் துயில்கின்ற காலத்தே யாமும் அவற்றைக் கேட்டுத் தலைவனிடத்தே துயிலப்

பெறுகின்றிலேமே யென்று வருந்தியும், நெஞ்சு சென்றதெனை மேலே வருகின்ற இரங்கற்பொருட்கு முன்னின்ற கருப் பொருள் இறைச்சிப் பொருளாய் நின்று உபகாரப்பட்டு நின்றது. இஃது "இறைச்சி தானே பொருட்புறத் ததுவே" * என்பதனான் உணர்க.

(கூ-அ) காணமை

மடநெஞ்சே :—

(இ - ள்.) அறியாமையுடைய நெஞ்சே! கானலின்கண்ணே பொருள்களைக் கண்கள் காணதபடி இருளைத் தான் பரப்பி உயிர்களெல்லாஞ் செய

லறுதற்குக் காரணமான
கங்குலிடத்தே ஒரு மருந்தாலும் மாட்சிமைப்படாத
காமநோயைச் செய்தவனிடத்தே
போனாய்; போன நீ பின்னை அவனைக்

* தொல். பொருள்: ௨௨௯.

(பாடம்) 1. கரிகாய.

நெய்தல் - ௬]

நெய்தற்கலி

௩௮௭

கண்ணுற்காண என்கின்ற அவ்வளவுதானும் பெற்ருயோ, அவனைக் காணு திருந்தாயோ கூறென்ருள்;

உம்மை இழிவுசிறப்பு. இனிக் காணப்பெற்ருயோ இல்லையோ என் ஒகாரத்தை ஐயமாக்கி உரைத்தது நிற்க, நீ அவனைக் காணப்பட்டாயெனக் கூறி ஒகாரத்தினை இரக்கமாக்கிக்[1] கூறலுமாம்.

இது நடுயாமத்துச் சென்றமை கூறினள்.

(கூ—கக) கோல்லேற்றுச்

மடநெஞ்சே:—

(இ - ள்.) மடநெஞ்சே! கானவின்கண்ணே கொல்கின்ற ஏருகிய சுறவினுடைய திரள் போவாரைப் போகாமற் காத்தலைக்கொண்ட மயக்

கத்தையுடைய மாலைக்காலத்தே வருத்தத்தையுடைய காமநோயைச் செய்

தவனிடத்தே போனாய்; போன நீ அவனைப் புல்ல என்கின்ற அவ்வளவு தானும் பெற்றாயோ, புல்லாதிருந்தாயோ கூறென்றான்;

இனிப் புல்லப்பெற்றாயோ இல்லையோ என ஓகாரத்தை ஐயமாக்கி உரைத்தது நிற்க, நீ அவனைப் புல்லப்பட்டாயெனக் கூறி ஓகாரத்தினை இரக்க மாக்கிக் கூறலுமாம்.

(கஉ—கச) வெறிகொண்ட . . . . மடநெஞ்சே :—

(இ - ள்.) மடநெஞ்சே! அக்கானலின்கண்ணே ஒழுங்குகொண்ட பறவைத்திரள் தாந் தங்கும் இடத்தே சென்றுசேரும் மாலைக்காலத்தே

முன்பு செறிந்த வளை கழலப்பண்ணினானிடத்தே போனாய்; போன நீ பின்னை அவனை மனத்தினை அறிய என்கின்ற அவ்வளவுதானும் பெற்றாயோ, அதுதானும் அறியாதிருந்தாயோ கூறென்றான்;

இனி அறியப் பெற்றாயோ இல்லையோ என ஓகாரத்தை ஐயமாக்கி உரைத்தது நிற்க, நீதான்

அவனாலறியப்பட்டாயென உரைத்து ஒகாரத்தை இரக்கமாக்கலுமாம்.

(கரு) என்வாங்கு :—

அசை.

(கசு—கஎ) எல்லையு . . .

. நெஞ்சே :—

(இ - ள்.) அது கூறுமையிற், பின்னும் அறியாமை பொருந்திய அளிக்கத்தக்க என் நெஞ்சே ! பொறுத்தற்கரிய வருத்தத்தையுடைய காம நோயைச் செய்தவனிடத்தே

பகலுமிரவுந் துயிலைக் கைவிட்டுக் கரியகழியில் ஓதம்போவது வருவதாய்த் தடுமாறுந்தன்மைபோல நீயும் பலமுறையாகச் சென்றும் வந்துந் தடுமாறி அவனைப் பெறுதல் நச்சி முடிவில் வருந்திவிட்

டாய் ; ஈதன்றோ நீ பெற்றதென நெஞ்சினை நோக்கி அழிந்து கூறினன்.

(பாடம்) 1. நெக்கமாகக்

நஅஅ

கலித்தொகை

[கலி - கடல

இஃது "உறுப்புடை யதுபோ லுணர்வுடை யதுபோன், மறுத்துரைப் பதுபோ னெஞ்சொடு புணர்த்தும்"* என்பதனாற் கூறியது.

இதனாற் றலைவிக்கு இழிவு தோன்றிற்று.

இஃது ஒத்தாழிசைக்கலி. (௬)

கஉச.

ஞாலமூன் றடித்தாய
முதல்வற்கு முதுமுறைப்
பாலன்ன மேனியா னணிபெறத்
தைஇய
நீலநீ ருடைபோலத்
தகைபெற்ற வெண்டிரை
வாலெக்கர் வாய்சூழும்
வயங்குநீர்த் தண்சேர்ப்ப ;

ஊரல ரெடுத்தரற்ற
வுள்ளாய்நீ துறத்தலிற்
கூருந்தன் னெவ்வநோ
யென்னையு மறைத்தாண்மற்

காரிகை பெற்றதன் கவின்வாடக் கலுழ்பாங்கே
பீரல ரணிகொண்ட பிறைநுத லல்லாக்கால் ;

இணைபிவ்வூ ரலர்தூற்ற வெய்யாய்நீ துறத்தலிற்
புணையில்லா வெவ்வநோ யென்னையு மறைத்தாண்மற்
றுணையாருட் டகைபெற்ற[1] தொன்னல மிழந்தினி
யணிவனப் பிழந்ததன்[2] னணைமென்றோ ளல்லாக்கால் ;

இன்றிவ்வூ ரலர்தூற்ற வெய்யாய்நீ துறத்தலி
னின்றதன் னெவ்வநோ யென்னையு மறைத்தாண்மன்
வென்றவே லுதியேய்க்கும் விறனல னிழந்தினி
நின்றுநீ[3] ருகக்கலுழு நெடும்பெருங்க ணல்லாக்கால் ;

அதனால்,

பிரிவில்லாய் போலநீ தெய்வத்திற் றெளித்தக்கா
லரிதென்னு டுணிந்தவ ளாய்நலம் பெயர்தரப்
புரியுளைக் கலிமான்றேர் கடவுபு
விரிதண்டார் வியன்மார்ப விரைகநின் செலவே.

இது "வெளிப்பட வரைதல் படாமை வரைதலென், றுயிரண் டென்ப வரைத லாறே"† என்பதனுற் களவு வெளிப்பட்டபின் வரையாது பொருள்வயிற் பிரிந்துவந்தானைத் தோழி எதிர்ப்பட்டுநின்று தலைவியது ஆற்றுமை கூறி வரைவுகடாயது.

---

* தொல். பொருள்: கக௬.   † தொல். பொருள்: க௪0.

(பாடம்) 1. டுகைபெறத். 2. பிமங்க [illegible] 3. [illegible]

நெய்தல் - எ]

நெய்தற்கலி

ந அக

(க—௪) ஞாலமூன்

தண்சேர்ப்ப :—

(இ - ள்.) உலகமூன்றையும் தன் திருவடியாலே அளந்த * எப்பொருட்கும் அடியாயிருக்கின்றவனுக்கு மூத்த முறைமையினையுடைய நம்பி மூத்தபிரான் அழகுபெற உடுத்த நீலத்தினது நீர்மையையுடைய ஆடையை ஒக்கும்படி அழகைப்பெற்ற வெண்டிரையினையுடைய கடல் வெண்மையையுடைய இடுமணலிடத்தே வந்து சூழ்ந்து விளங்குகின்ற நீரையுடைய[1] தண்ணிய சேர்ப்பனே;

வெண்மை திரைக்கு அடையாய்த் திரை ஆகுபெயராய் நின்றது, நீலவுடைக்கு வெண்மை ஒப்பன்மையின்.

கடல் தன் கரையை இகவாமை நிற்கின்ற சேர்ப்பனென்றதனால், நீயுங் குடிப்பிறந்தார்க்கு வரைந்துகொண்டு இல்லற நிகழ்த்த வேண்டுமென்று கூறிய[2] கரையைக் கடவாமல் வரைந்துகோடல் வேண்டுமென்று[3] உள்ளுறையுவமங் கொள்க.

(ரு—அ) ஊரல்லலாக்கால் :—

(இ - ள்.) காரிகைபெற்ற தன் அழகு கெடும்படி மனங்கலங்குதலாலே அப்பொழுதே பீர்க்கினது பூவினது அழகைத் தன்னிடத்தேகொண்ட பிறைபோலும் நுதலல்லாத இடத்து, இவ்வூரிலுள்ளார் அலரை உயர்த்துக் கூப்பிடும்படி நீ இவளைக் கைவிடுகையினாலே மிகுகின்ற தன்னுடைய வருத் தத்தையுடைய காமநோயை என்னையும் உட்பட மறைத்தாள்; அதனாற் பெற்றதென்? நுதல் புலப்படுத்தாநின்றதே;

. . .

'காரிகைபெற்ற தன் கவின்': பிறர் இவளழகைப் பெறுதற்குக்

காரணமான தன் அழகு; என்றது பிறர்[4] மகளுக்கு ஒப்புக் கூறுமிடத்து இவள் உவமையாய் நிற்பளென்பதாம்.

(கூ-கஉ) இணைபிவ்வூ எல்லாக்கால் :—

(இ - ள்.)

தோழியர்தோள்களில் அழகுபெற்ற இயற்கை[5] நலத்தை யும்

இப்பொழுது இழந்து, நீ அணிதலாற் பெற்ற செயற்கை நலத்தையும்

இழந்த தன்னுடைய அணைபோன்ற மெல்லியதோ ளெல்லாத இடத்துத், தம்மிற் கூடி இவ்வூரிலுள்ளார் அலர் தூற்றும்படி இவள் வருத்தத்தை நீ அறியாயாய்† நீ துறக்கையினலே உண்டான தனக்கு உவமை கூறவொண்ணுத வருத்தத்தையுடைய காமநோயை என்னையும் உட்பட மறைத்தாள்; அதனுற் பெற்றதென்? தோள் புலப்படுத்தாநின்றதே;

---

* சிலப் - கஎ. † எய்யாய் -

அறியாயாய்; தொல். சொல்: ௧௪௨.

(பாடம்) 1. நிரையையுடைய.

2. வேண்டுமென்று கூறிக்.

3. வேண்டுமென்ற 4. பிஉ. 5.

அவ்வியம்கை. ௩௧௦

கலித்தொகை

[கலி - ௩௨௫

(௧௩—௧௫) இன்றிவ்வூ . . .

. . . ணல்லாக்கால் :—

(இ - ள்.) வென்றவேலினது

முனையை ஒக்கும் வெற்றியினையுடைய

கலத்தைத இப்பொழுது இழந்து நீர்

நின்று உகும்படியாக அழுத நெடிய

பெரிய கண்ணல்லாத இடத்து, இன்று

இவ்வூரிலுள்ளார் அலர் தூற்றும்படி இவள் வருத்தத்தை அறியாயாய் நீ துறக்கையினாலே தன்னிடத்தே நின்ற எவ்வநோயை என்னையும் உட்பட மறைத்தாள்; அதனாற் பெற்றதென்? கண் புலப்படுத்தாநின்றதே; *

(கஎ—உக) அதனால் . . . . . . செல்வே:—

(இ - ள்.) அலர்ந்த குளிர்ந்த மாலையினையுடைய அகற்சியையுடைய மார்பனே ! அவ்வருத்தத்தாலே பிரிவில்லாதாரைப்போலே நீ இயற்கைப் புணர்ச்சிப்பின்னர்த் தெய்வத்தாலே பிரியேனென்று தெளிவிக்க அப்பிரி

வின்மை அரிதென்று கருதாளாய் அதனை உண்மை என்று துணிந்தவளுடைய கெட்ட நலம் பண்டுபோலே நன்றாம்படி † நின்னெஞ்சிலே புரிந்த உளையினையுடைய கலிமாப் பூண்ட
தேரைச்செலுத்தாநின்று
எம்மனையிடத்
துச் செல்லும் நின்செலவை விரைவாயாகவென வரைவுகடாயினாள்.

அதனால் விரைகவென்க.

'ஆய்நலம்' : நுணுகிய நலம்.

இதனாற் றலைவற்குப் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது நான்கடியே நான்கடித்

தாவிற்கு மரபென்றதனுற் கொண்ட நான்கடித்தாழிசையும் நடைநவிலாது பொருள்பெற்ற தனிச்சொல்லுந் தாவியலொத்து இறுதிநிலையுரைத்த சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி.

கஉ௫.

கண்டவ ரில்லென வுலகத்து ளுணராதார்
தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளு
ணெஞ்சறிந்த கொடியவை மறைப்பினு மறிபவர்
நெஞ்சத்துக் குறுகிய கரியில்லை யாகலின்
௫. வண்பரி நவின்ற வயமான் செல்வ

நன்கதை யறியினு நயனில்லா

நாட்டத்தா
லன்பிலை யெனவந்து

கழறுவ லையகேள் ;

மகிழ்செய் தேமொழித் தொய்யில்சூ ழிளமுலை
முகிழ்செய முள்கிய [1] தொடர்பவ ளுண்க

* குறள். ௧௨௭௧. † பதிற். அ௪ : ௧௪-௧௨.
(பாடம்) 1. மூழ்கிய.

நெய்தற்கலி

௱௪௧

௧௦. ணவிழ்பனி யுறைப்பவு
நல்காது விடுவா
யிமிழ்திரைக் கொண்க
கொடியை காணீ ;
இலங்கே ரெல்வளை

யோர்தழை தைஇ
நலஞ்செல நல்கிய
தொடர்பவள் சாஅய்ப்
புலந்தழப் புல்லாது விடுவா
௧௫. யிலங்குநீர்ச் சேர்ப்ப
கொடியை காணீ ;

இன்மணிச் சிலம்பிற்
சின்மொழி யைம்பாற்
பின்னெடு கெழீஇய
தடவரவல்கு
னுண்வரி வாட வாராது
விடுவாய்

தண்ணந் துறைவ தகாஅய்
காணீ ; உ0.
. எனவாங்கு,
அணையவென் றளிமதி
பெரும நின்னின்
றிறைவரை நில்லா வளைய
ளிவட்கினிப்
பிறையேர் சுடர்நுதற் பசலை
மறையச் செல்லுநீ
மணந்தனை விடினே.

இது வரைவுநீட ஆற்ருத

தலைவிநிலைமை தலைவற்குத் தோழி

கூறி அவனை

நெருங்கி வரைவு கடாயது.

(க—எ) கண்டவ . . .

. . லையகேள் :—

(இ - ள்.) அறியாதவர்கள் தம் மனம் இது செய்யலாகாதென்று மீளாதே வேறு விலக்குவாரும் இன்றி உலகத்திற் கண்டவர்களும்

இல்லை யென்று கருதித் தாஞ்
செய்யுந் தீவினைகளுள் தாம்
நெஞ்சறியவே செய்த கொடிய
தீவினைகளைப் பின்பு பிறர் அறியாமல்
மறைத்தார்களாயினும் தாஞ்
செய்தமையை
அறிந்திருக்கின்றவர்கள் தம்முடைய
நெஞ்சத்திற்காட்டில் அணுகிய சான்று
வேறில்லை யாகையினாலே*
வளவிய பரியிலே பயின்ற வலி
யினையுடைத்தாகிய
குதிரையையுடைய செல்வனே!
நின்னை யான் கழற வேண்டுவதில்லை.
அக்கழறவேண்டாமையை நன்றாக
அறிந்தேனாயினும்

நின்னோடு யான் கொண்ட நலம்பாடில்லாத ஆராய்ச்சியாலே நீ அன்புடையை யல்லையென்று சொல்லிவந்து நின்னைக் கழறுவேன்; ஐயனே! நீ அதனைக்கேள்;

'நயன்' : உறவு.

---

* [illegible]

௧௨

கலித்தொகை

[கலி - ௧௨௫

(அ—௧௧) மகிழ்செய்

காணீ :—

(இ - ள்.) மகிழ்ச்சியைச்செய்கின்ற இனிமையுடைத்தாகிய[1] மொழி யினையுடையாளுடைய தொய்யில் எழுதின இளையமுலை தோன்றுதலைச் செய்யாகின்ற இளமைப் பருவத்தே நீ கூடிய* தொடர்ச்சியை, அவள்கண்[2] தோற்றுவித்த நீர் துளியாக விழவும் அதுகண்டும் நல்காது விடுகின்றவனே! ஒலிக்கின்ற திரையையுடைய கொண்கனே! நீ மிகக்கொடியை காண்;

(கஉ—கரு) இலங்கே . . . . . காணீ :—

(இ - ள்.) எல்வளையினையுடையாளது அழகையுடைய தழையை உடுத்து இலங்குகின்ற இளமைப் பருவத்து எழுச்சியினுடைய, நலம் மேன் மேல் வளர்ந்து செல்லும்படி நீ நல்கிய தொடர்ச்சியை, அவள்மேனி சாய்ந்து நின்னைவெறுத்து அழாநிற்க அதுகண்டும் பொருந்தாதே கைவிடு கின்றவனே! இலங்குகின்ற நீரையுடைய சேர்ப்பனே! நீ மிகக் கொடியை காண்;

(கசு—கக) இன்மணிச் . . . . காணீ :—

(இ - ள்.) இனிதாகிய உள்ளிடு மணியையுடைத்தாகிய சிலம்பினை யுடைய சிலவாகிய மொழியினையுடையாளுடைய மயிரைப் பின்னிமுடிக் கின்ற இளமைப் பருவத்தே வந்து பொருந்தின உறவின்பெருமை இடை யறுது வாராநிற்க, அவளல்குலின் துண்ணிய வரி வாடும்படி அவள்பால் வாராமல் அவளைக் கைவிடுகின்றவனே! தண்ணந்துறைவனே! நீ இனித் தகுதிப்பா டுண்டாகாய்காண்;

எனவாங்து :—

அசை.

(உக—உச) அனையனென்

. . . விடினே :—

(இ - ள்.) பெருமா! அவளை யான் கூறிய அத்தன்மையையுடைய ளென்று உட்கொண்டு அளிப்பாய்! அளித்து வரைந்து தோள்மணந்தனை யாய்விடின் நின்னையின்றி இறையினெல்லை நில்லாமற் கழன்ற வளையினை யுடைய இவட்கு இனிப் பிறையை ஒக்குந் திருநுதலிற் றோன்றிய பசலை ஒரு காலமும் வாராமல் மறையும்படியாகப் போமென வரைவுகடாயினள்.

இதனாற் றலைவற்குப் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது "பரத்தை மறுத்தல் வேண்டியும்" † என்னுஞ் சூத்திரத் தாற் கைகோளிரண்டற்கும் பொதுவாகப் பொருள்கூறவும் பெறும்.

* முன்குதல் - கூடுதல்; சீவகசிந். சஉ0. † தொல். பொருள் : கருஅ.

(பாடம்) 1. இனிமையையுடைத்தாகிய. 2. இவள்கண்.

நெய்தல் - கூ]

நெய்தற்கலி

ருகூரு

இது தாழிசையல்லா இடைநிலைப்பாட்டுப் பெற்றுப், 'புல்லாது விடுவா' யெனக் குறைந்துவருதலின் யாப்பின் வேறுபட்ட கொச்சகம். (அ

கஉசா.

பொன்மலை சுடர்சேரப்
புலம்பிய விடனோக்கித்
தன்மலைந் துலகேத்தத்
தகைமதி யேர்தரச்
செக்கர்கொள் பொழுதினா
னொலிநீவி யினநாரை

முக்கோல்கொ ளந்தணர் முதுமொழி நினைவார்போ
௫. லெக்கர்மேம் லிறைகொள்ளு மிலங்குநீர்த் தண்சேர்ப்ப;

அணிச்சிறை யினக்குரு
கொலிக்குங்கா னின்றிண்டேர்

மணிக்குர லெனவிவண் மதிக்குமன் மதித்தாங்கே
யுள்ளான்ற வொலியவா யிருப்பக்கண் டவைகானற்

புள்ளென வுணர்ந்துபிற்

புலம்புகொண் டினையுமே;

௪0. நீர்நீவிக் கஞன்றபூக் கமழுங்கா னின்மார்பிற்
றூர்நாற்ற மெனவிவண் மதிக்குமன் மதித்தாங்கே
யலர்பதத் தசைவளி
வந்தொல்கக் கழிப்பூத்த
மலரென வுணர்ந்துபின்
மடீமர்கொண் டினையுமே;

நீணகர் நிறையாற்று
ணிரீனயுநள் வதிந்தக்காற் கநி.
றோண்மேலா யெனநின்னை
மதிக்குமன் மதித்தாங்கே
நனவெனப் புல்லுங்காற்

காஞ்ஞளாய்க் கண்டது
கனவென வுணர்ந்துபிற்
கையற் றுக் கலங்குமே ;

என்வாங்கு,

பலநினைந் தினையும்
பைத னெஞ்சி
உ0. னலமர ஞெயு
ஞுழக்குமென் ஞெழி
மதிமருள் வாண்முகம்
விளங்கப்
புதுநல மேர்தரப்
பூண்கநின் றேரே.

இது தோழி தலைவியது ஆற்ருமை கூறித் தலைவனை வரைவுகடாயது.

(க—ரு) பொன்மலை . .

. .. தண்சேர்ப்ப :—

(இ - ள்.) பொன்னையுடைய அத்தகிரியிலே ஞாயிறு சென்றுசேர, அஞ்ஞாயிறு உடனேபட, ஞாயிறின்றி வருந்தின உலகை நோக்கி உலகந்

50

கொண்டாடும்படியாகத்
தகைமையினையுடைய மதி
எழாநிற்கச், செக்கர் வானத்தைக்
கொண்ட அந்திக்காலத்தின்கண்ணே,
முக்கோலைக் கையிலே கொண்ட
அந்தணர் முதியமொழியை
நினைக்கின்றவர்களைப்போலே,
இனமான நாரைகள்
ஆரவாரத்தைக் கைவிட்டு
இடுமணன்மேலே இறுத்தலைச்[1]
செய்யும் இலங்குகின்ற நீரையுடைய
சேர்ப்பனே ;

'அந்தணர்': காஷாயம் போர்த்த குழாங்கள். 'முதுமொழி': பிரணவம்.

பெரியநாரை சிறகு
சிவந்திருத்தலானும் மூக்குத்
தரையிலே சென்று குத்துதலானும்
அதனை முக்கோலை ஊன்றியிருந்த
அந்தணரோடு ஒப் புரைத்தார்.

நாரை பகற்பொழுதெல்லாம்
பல்லுயிர்க்கு வருத்தஞ்செய்து
இரை
கவர்ந்து அந்திக்காலத்து ஓர்
ஆரவாரமின்றித்
தீங்குசெய்யாதாரைப்போலே
குவிந்திருக்குஞ் சேர்ப்பன்
என்றதனால், நின்னுட்டின்[2] மகளிர்
பிரிந்திருந்

தார் உயிர்போதற்கு வேண்டுந்
தீங்குகளைப் பகற்பொழுதெல்லாங்
கூறி
அந்திக்காலத்து ஆரவாரத்தைத்
தவிர்ந்து நல்ல மகளிரைப் போலே
ஒடுங்கி
உறைகின்றார் என உள்ளுறை
யுவமங் கூறியவாறு உணர்க.

(கூ—க) அணிச்சிறை
டினையுமே :—

(இ - ள்.)
அழகினையுடைத்தாகிய
சிறகினையுடைய குருகுகள் இராக்

காலத்து ஒருகால் ஒலிக்குமிடத்து
நின்னுடைய திண்ணிய தேரின்
மணி யினேசையென்று இவள் மிகவுந்
துணியாநிற்கும் ; துணிந்த
அப்பொழுதே அப் பறவைகள்
உள்ளடங்கிய ஒலியையுடையவாய்
ஆரவாரியாநிருக்க, அதனைத் தன்
மனத்தாலே
தேர்மணியொலியல்லவென்று கண்டு,
பின்னர் அவ்வொலியைக்
கானவிடத்துப்
பறவைகளொலியென்று* உணர்ந்து,
பின்பு தனிமைகொண்டு
வருந்தாநிற்கும் ;

(க௦—கரு) நீர்நீவிக் . . . .
டினையுமே :—

(இ - ள்.) நீரைக் கைவிட்டு மேலாய் நெருங்கின பூ அலர்ந்து நாறு மிடத்து நின்மார்பிற் கிடந்த மாலையினது நாற்றமென்று இவள் மிகவுந் துணியாநிற்கும் ; துணிந்த அப்பொழுதே அப் பூக்கள் அலருஞ் செவ்வி யிடத்து அவற்றை அசைத்த காற்றுவந்து தன்மேற்பட, அதனைக் கழியிற் பூத்த மலரினது மணமென்று உணர்ந்து, பின்பு மயக்கங்கொண்டு வருந்தாநிற்கும் ;

---

* ஐங்-ஐம் : ௫0; ஐங். எழு: ௫௧.

(பாடம்) 1. இருத்தலைச். 2. இக்காட்டின்.

செய்தல் - ௧0]

நெய்தற்கலி

௬௧௫

(௧௪-௧எ) நீவாகர் . . . . கலந்துமே :—

(இ - ள்.) உயர்ந்த மனையிலே மனத்தை நிறுத்துதலை மாட்டாளாய்

நின்னை நினைத்து அவசத்தாற் சிறிது துயின்றவிடத்துத்* தன் தோண் மேற் கிடந்தாயாக நின்னை மிகவுந் துணியும் ; துணிந்த அப்பொழுதே மெய்யென்று கருதித் தழுவுமிடத்து உன்வடிவைக் காணாளாய்த்† தான் கண்டது கனவாயிருந்ததென்று அறிந்து பின்பு செயலற்றுக் கலங்காநிற்கும் ;

(கஅ)

எனவாங்கு :— (இ - ள்.) என்று ;

ஆங்கு : அசை.

(கக—உஉ) பலநினைந்

. . . . நேரே :—

(இ - ள்.) பலவற்றையும்

நினைத்து வருந்தும்

நோயையுடைய நெஞ்

சாலே சுழலுதலையுடைய காமநோயிலே அழுந்தும் என் தோழியுடைய மதி யென்று மருளும் ஒளியினையுடைய முகம் விளங்கும்படி புதிய நலம் எழு

தலைச் செய்ய நின் தேர் குதிரையைப்

பூண்பதாகவென வரைவுகடாயினள்.

இதனாற் றலைவற்குப் புணர்ச்சி

உவகை பிறந்தது.

இஃது ஒத்தாழிசைக்கலி.

(கூ)

கஉஎ.

தெரியிணர் ஞாழலுந்

தேங்கமழ் புன்னையும்
புரியவிழ் பூவின[1]
கைதையுஞ் செருந்தியும்

வரிஞிமி றிமிர்ந்தார்ப்ப விருந்தும்பி யியைபூதச்
செருமிகு நேமியான் றார்போலப் பெருங்கடல்

ரு. வரிமணல் வாய்சூழும்
வயங்குநீர்த் தண்சேர்ப்ப ;

கொடுங்கழி
வளைஇய குன்றுபோல் வாலெக்கர்

நடுங்குநோய் தீரநின் குறிவாய்த்தா ளென்பதோ
கடும்பனி யறலிகு கயலேர்கண் பனிமல்க
விடும்பையோ டினைபேங்க

விவளீ துறந்தனை ;

கo. குறியின்றிப் பன்னாளின்
கடுந்திண்டேர் வருபதங்கண்
டெறிதிரை யிமிழ்கான
லெதிர்கொண்டா னென்பதோ
வறிவஞ ருழந்தேங்கி
யாய்நலம் வறிதாகச்
செறிவளை தோளூர
விவளீ துறந்தனை ;

---

* குறள். கஉகஅ. † குறள்.

கஉகள,

காண்வர வியன்றலிக்
கலின்பெறு பனித்துறை நாடு,
யாமத்து வந்துநின் குறிவாய்த்தா
ளென்பதோ
வேய்நல மிழந்ததோள்
விளங்கிழை பொறையாற்றாள்
வாளுதல் பசப்பூர விவளைநீ
துறந்ததை ;

அதனால்,

இறைவளை நெகிழ்ந்த
வெவ்வநோ யிவடர 20.

வரவுக்கதிர் தெறுமென
வோங்குதிரை விரைபுதன்
கரையமலடும்பளித் தாஅங்
குரவுநீர்ச் சேர்ப்ப வருளினை
யளியே.

இதுவுமது.

(க—ரு) தெரியினர்

தண்சேர்ப்ப :—

(இ - ள்.) போரின்கண்
மிகுகின்ற சக்கரத்தையுடைய
திருமால் திருத்தோளிற் சேர்ந்த
மாலைபோலே பெரிதாகிய
கடற்கரையில் அறலை யுடைய

மணவிடத்தே
விளங்குகின்ற கொத்தினையுடைய
ஞாழற்பூவுந் தேன் நாறுகின்ற
புன்னைப்பூவுந் தளையவிழ்ந்த
பூக்களை யுடையனவாகிய தாழம் பூவுந்
தளையவிழ்ந்த பூக்களை
யுடையனவாகிய செருந்திப்பூவும்
வரியினை யுடைய மிஞிறு சிறிதே
ஒலித்து மிக ஆரவாரிப்பக் கரிய[1]
தும்பிகள் தம்மில் இயைந்து
தேனையூதச் சூழ்ந்துகிடக்கும்
விளங்குகின்ற நீரையுடைய
சேர்ப்பனே!
கடலினது புலால்நாற்றமாகிய
தீங்கினைப் பூக்களின்
மணம் போக்கின வதனை அக்கடல்

அறியாதிருக்கின்ற சேர்ப்பன் என்றதனுன், நின் வருத்தத்தைத் தீர்க்கவேண்டுமென்று கருதி அவள் நின்னிடத்தே வந்து

தீர்த்த நிலையை நீ யறிந்திலையென மேல்வருகின்ற தாழிசைப் பொருளை யுள்ளுறுத்து உள்ளுறையுவமந் தந்தவாறு காண்க.

(கூ—க) கோடுங்கழி

துறந்ததை :—

(இ - ள்.) முன்னர்க் கடியதாகிய நீர் பின்னர்ச் சுவறுதலின்

அறுதியையுடைத்தாய் விழுகின்ற, கயலையொத்த கண், நீரற்று மல்குகின்ற

அளவாய் நிற்க, வருத்தத்தோடே

கெட்டு அழும்படி இவளை நீ
துறந்தது,
நின் மனம் நடுங்குதற்குக்
காரணமாகிய காமநோய்
தீரும்படியாகச்* சுறவு
முதலியனவற்றையுடைமையாற்
கொடிய[2] கழிகள் சூழ்ந்த
மலைபோல்

---

*. கலி. ககஉ : கரு-கஅ

(பாடம்) 1. கரியதாகிய. 2. கொடியதாகிய.

உயர்ந்த வெண்மணையுடைய இடுமணலிடத்து நீ செய்த குறியிடத்தே

தப்பாமல் வந்தான் என்பதோ?

'என்பதோ' என்றது, என்று சொல்லப்படுவதோ வென்னும் பொருடந்துநில்லாது, 'வாய்த்தா' னென்னுஞ் சொல்லுணர்த்திய செய்தன்றியைத் தானும் உணர்த்திப் பிரிவிலசைநிலையாய் நின்றது. இஃது "ஆக வாக லென்ப தென்னு, மாவயின் மூன்றும் பிரிவி லசைநிலை"* என்னுஞ் சூத்திரத்து "என்பது" என்றதற்கு உதாரணமாகக் காட்டினும்; அதனானுணர்க. வினையவும் இவ்வாறே கொள்க.

(௧௦-௧௫) குறியின்றி . . . . துறந்ததை :—

(இ - ள்.) தன்னறிவு வருத்தத்தே அழுந்தி அழுது ஆராய்ந்த நலஞ் சிறிதாகையினாலே முன்பு செறிந்த வளை தோளினின்றுங் கழன்றுவிழும்படி இவளை நீ துறந்தது, எறிகின்ற திரை யொலிக்கின்ற கடற்கரையிலே நின்னுடைய கடியதாகிய தேர் இன்ன காலத்தே வரும் என்னுங் குறிப்பின்றிப் பலநாளும் வருங்காலத்தை மனத்தாலே நோக்கி எதிர்கொண்டாள் என்பதோ?

திரையொலியால், தேரொலி கேட்டற்கு அரிதாகவும் அவ்வொலி கேட்டு, 'எதிர்கொண்டா'ளென்றாள்.

(கச—கஎ) காண்வர . . . . . துறந்ததை :—

(இ - ள்.) மூங்கில் தன்னலன் இழத்தற்குக் காரணமான தோள்களிற் கிடந்து விளங்குகின்ற பூண்களை அத்தோள் பொறுத்தலைச் செய்யாமல் மெலிந்து வாணுதல் பசப்புப் பரக்கும்படி இவளை நீ துறந்தது, நோக்கி ஞர்க்குக் காட்சி வரும்படியாகப் பண்ணினதோர் அழகைத் தான்பெறு கின்ற இப் பனித்துறையிலே நடுயாமத்தே நீ வந்து செய்த நின் வரவு உணர்த்திய குறியிலே தப்பாமல் வந்தாள் என்பதோ ?

தன்மெலிவு தோள்பொறுமைக்குக் காரணமாய் நின்றது. ஆற்ருளா யென்னும், முதல்வினை, 'நுதல்பசப்பூர'வென்னுஞ் சினைவினையோடு முடிந்தது. 'இவளை'யென்றது இங்ஙனம் நன்மை செய்தவளையென்றும் 'நீ'யென்றது அங்ஙனங் குறைந்துநின்ற நீயென்றும் பொருள் தந்தன.

தாழிசை மூன்றும் பொச்சாப்பென்னும் மெய்ப்பாடு பயந்தன.

(கஅ—உஉ) அதனல் . . . . . யளியே :—

(இ - ள்.) வலியினை யுடைத்தாகிய நீரையுடைய சேர்ப்பனே நினக்குச் செய்ந்நன்றிக்கேடு உண்டாம், ஆகையினலே அதநீர வலியினை யுடைய ஞாயிறு சுடுமென்று கருதி ஓங்குகின்ற திரை தன் கரையி

---

*தொல். சொல்; உஅ௦.

கூகூஅ

கலித்தொகை

[கலி - கஉஅ நெருங்கின அடும்பை

விரைந்தளித்தாற்போல இவளுடைய இறையில் வளை கழன்ற வருத்தத்தையுடைய நோய் தீரும்படி அருளினையாய் வரைந்து கொள்ளென வரைவுகடாயினன்.

வளைகழலுதல்* வெளியாக வருத்தத்தை விளக்குதல்பற்றிச் சரிதகத்து வளைநெகிழ்தலைக் கூறினன்.

இதனுற் றலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது ஒத்தாழிசைக்கலி.

கஉஅ.

தோடுறந் தருளா தவர்போ னின்று
வாடை தூக்க வணங்கிய தாழை
யாடுகோட் டிருந்த வசைநடை நாரை
நரையிருங் கங்கு னந்துய ரறியா

௫. தளியின்று பிணியின்று
விளியாது நரலுங்
கானலஞ் சேர்ப்பனைக்
கண்டாய் போலப்

புதுவது கனிளை யென்றி
யாயி
னனவின் வாரா நயனி
லாளனைக்
கனவிற் கண்டியான்
செய்தது கேளினி ;

௪0. அலந்தாங்

கமையலெ னென்றுனைப்
பற்றியென்
னலந்தாரா யோவெனத்
தொடுப்பேன் போல்வுங்
கலந்தாங் கேயென் கவின்பெற
முயங்கிப்

புலம்ப லோம்பென
வளிப்பான் போலவும்;

முலையிடைத் துயிலு
மறந்தீத் தோயென
கரு. நிலையழி நெஞ்சத்தே
னழுவேன் போலவும்
வலையுறு மயிலின் வருந்தினை
பெரிதெனத்
தலையுற முன்னடிப் பணிவான்
போலவும்;

கோதை கோலா விறைஞ்சி
நின்ற
ஊதையஞ் சேர்ப்பனை

யலைப்பேன் போலவும்
௨0. யாதென் பிழைப்பென
நடுங்கி யாங்கே
பேதையை பெரிதெனத்
தெளிப்பான் போலவும் ;

ஆங்கு,

கனவிற் கண்டேன் றோழி காண்டகக்

நெய்தல் - ௧௧]

நெய்தற்கலி

௲௯௯

கனவின் வந்த கானலஞ்
சேர்ப்ப

னவின் வருதலு

முண்டென

வனைவரை நின்றசெ,தன்

னரும்பெற லுயிரே.

இது வரைவிடையாற்றுளாய்ச் செல்கின்ற தலைவியது கவின்கண்டு தோழிக்கு அவள் தான்கண்ட கனவுநிலை யுரைத்தது.

விளுய

(க—கூ) தோடுறந்

கேளினி :—

(இ - ள்.) வாடைக்காற்று அசைக்கையினாலே வளைந்த தாழையின் அசைகின்ற கொம்பிலே இருந்த அசைந்த நடையினையுடைய நாரை நம் தோளைத் துறந்து நமக்கு அருளாதவரைப்போலே நின்று பெருமையை யுடைய கங்குலிடத்து நந் துயரை அறியாமல் நம்மேலளித்தலின்றாய்த்* தனக்குக் காமநோயாலே வருத்தமின்றாய் மாறாமற் கூப்பிடுங் கானலே

யுடைய அழகிய சேர்ப்பினையுடையவனைக் கண்டு கூடினாய்போலே புதிதாக ஓர் அழகினையுடையையானாயென்று கூறுகின்றாயாயின் வெளியாக வாராத உறவில்லாதவனைக் கனவிடத்தே கண்டு யான் செய்த காரியத்தை இப் பொழுது கேள்!

(கo—கரு) அலந்தாங் . . . . போலவும்:—

(இ - ள்.) நின்னைப் பிரிந்து இடர்ப்பட்டு வருந்தி உயிர்வாழேனென்று† கூறினவனைப் பிடித்துக்கொண்டு நீகொண்ட என் நலத்தை இனித் தாராயென்று வளைத்துக்கொள்வேன்போலேயும், அவ்விடத்தே என் னுடைய கழிந்த அழகை யான் பெறும்படி புல்லிக் கூடி இனி வருந்தாதே கொள்ளென்று கூறி என்னையும் அளிப்பான்போலேயும்;

(கச—கஎ) முலையிடைத் . . . . போலவும்:—

(இ - ள்.) என்னை மறத்தலேயன்றிப் பின்னர் அவசத்தான் முலை யிடையிற்றுயிலுந் துயிலையும் ‡மறந்தாயென்று கூறிப் பழைய தன்மைகெட்ட நெஞ்சத்தையுடையேன் அழுவேன் போலேயும், அதுகண்டு வலையிலே அகப்பட்ட மயில்போலே காவலிலே அகப்பட்டுப் பெரிதும் வருந்தினையே யென்று கூறி அடிமுன்னே தன் தலையுறும்படி§வணங்குவான் போலேயும்;

(கஅ—உக) கோதை . . . . போலவும்:—

(இ - ள்.)

அங்ஙனம் வணங்குகின்ற[1] ஊதைக்

காற்றையுடைய சேர்ப்

பனை மாலேயே கோலாகக்கொண்டு அடிப்பேன்போலேயும், அவ்விடத்தே

* சீவக செ·ருo. †. கலி. சஎ : கூ. ‡ அகம். உசo : கூ-சஉ.

§ கலி. எரு: கரு.

(பாடம்) 1. வணங்கினற.

யான் செய்த தப்பு யாதென்று கூறி

நடுங்கி நீ பெரிதும் அறியாமையை

யுடையையென்று தெளிவிப்பான் போலேயும் ;

இத்தாழிசைகளுள் நெஞ்சினை உறுப்பும் உணர்வும் மறுத்தலுமுடைய தாகக்கூறி, எதிர்பெய்துகொண்ட தலைவனுருவும் அம் மூன்றுமுடையதாய்ச் செய்யாமரபின செய்தனவாகக் கூறி உயர்திணையாகக்* கூறியவாறும் பிறவும்

உணாக.

"கனவு முரித்தா லவ்விடத் தான"† என்பதனாற் கனவுகொள்க.

'முன்னடிப் பணிவான் போலவும்', 'அலைப்பேன்போலவும்' என்றாள், முன்னே தன்மனத்தின் அது நிகழ்தலுடைமையின். இதுவும், "மனைவி யுயர்வுங் கிழவோன் பணிவு, நினையுங் காலைப் புலவியு ளுரிய"‡ என்பதனாற் கொள்க.

(உஉ) ஆங்கு :—

அசை.

(உ௩—உ௪) கனவினும் லுயிரே :—

(இ - ள்.) தோழீ! கனவிடத்தே கண்டேன்; அதனாலே என்னுடைய பெறுதற்கரிய உயிர் எனக்குக் காட்சி தரும்படி[1] கனவிலே வந்த கானலையுடைய அழகிய சேர்ப்பன் வெளியிலே வந்து கூடுதலும் உண்டென்று கருதி அவன் அருளும் எல்லைக்கண்ணே அது நசையாக நின்றது

காணெனக் கனவில் நிகழ்ந்தது கூறினாள்.

இதனாற் கனவொடு
மயங்கலென்னும் மெய்ப்பாடு
தலைவிக்குத் தோன்றிற்று.

இஃது "இடைநிலைப்பாட்டு"¶
என்றதனால், தாழம்பட்ட ஓசையின்றி
வந்த இடைநிலைப்பாட்டுப்
பெற்றுவந்த ஒத்தாழிசைக்கலிப்பா.
(கக)

கஉகூ.

தொல்லூழி தடுமாறித்
தொகல்வேண்டும் பருவத்தாற்
பல்வயி னுயிரெல்லாம்
படைத்தான்கட் பெயர்ப்பான்போ

லெல்லுறு தெறுகதிர்
மடங்கித்தன் கதிர்மாய
நல்லற நெறிநிறீஇ
யுலகாண்ட வரசன்பி
ரு. னல்லது படலைந்திருந்
தறநெறி நிறுக்கல்லா

---

* தொல். பொருள் : கசூசு. †
தொல். பொருள் ; கசூஎ.

‡ தொல். பொருள் : உஉஎ. §
குறள். சஉகக; கஉகசு.

¶ தொல். பொருள் ; சுசுசு.

(பாடம்) 1. எனக்குத் தரும்படி.

மெல்லியான் பருவம்போன்
மயங்கிரு டலைவர ;
வெல்லைக்கு வரம்பாய விடும்பைகூர் மருண்மாலை ;

பாய்திரை பாடோவாப் பரப்புநீர்ப் பனிக்கட

றூஉவறத் துறந்தனன்
றுறைவனென் றவன்றிற

௧0. நோய்தெற வுழப்பார்க ணிமிழ்தியோ வெம்போலக்
காதல்செய் தகன்றாரை யுடையையோ நீ ;

மன்றிரும் பெண்ணை
மடல்சேர் அன்றில்

னன்றறை கொன்றனர்
ரவரெனக் கலங்கிய
வென்றாய் ரறிந்தனை
நரறியோ வெம்போல
கரு. வின்றுணைப் பிரிந்தாரை
யுடையையோ நீ ;

பனியிருள் சூழ்தரப்

பைதலஞ் சிறுகுழ்
லினிவரி னுயருமற்
பழியெனக் கலங்கிய

தனியவ ரிடும்பைகண்
டினைதியோ வெம்போல
வினியசெய் தகன்றுரை
யுடையையோ நீ;

௨0. எனவாங்கு,

அழிந்தய லறிந்த வெவ்வ
மேற்படப்
பெரும்பே துறுதல்

கலைமதி பெரும
வருந்திய செல்ல றீர்த்த
திறனறி யொருவன்
மருந்தறை கோடலிற்
கொடிதே யாழநின்
உடு. னருந்தியோர் நெஞ்ச
மழிந்துக விடினே.

இது " தன்னுட் கையா றெய்திடு கிளவி
"* யால் தலைவி ஆற்றளாயினவாறு
தோழி தலைவற்குக் கூறியது.

(க—எ) தோல்லூழி

மருண்மாலை :—

(இ - ள்.) பல உலகங்களில் உயிர்களெல்லாம் பழைதாகிய ஊழிக் காலத்தே பிறந்திறந்து தடுமாறித் திரியும்படி† அயனுய்நின்று படைத்த முதல்வன் ஆனுய் அவ்வுயிரெல்லாந் தன்னிடத்தே வந்து தொகுதலைத் தான் விரும்பும் ஊழி முடிந்த

காலத்திலே தன்னிடத்தே மீட்டு ஒடுக்கிக் கொள்கின்றவனைப்போலே ஞாயிறு பகற்பொழுது வந்துசேர்தற்குக் காரணமான தன்னுடைய தெறுகின்ற கிரணங்களைத் தன்னிடத்தே மீட்டுக் கொண்டு மறைதகையினுலே நல்ல நீதிநூல் வழியாலே,உலகை

நெறியிலே

* இறை. சூ. கூ0.

† பரி. உ : க - கரு.

போ௨
கலித்தொகை
[கலி - கஉக

நிறுத்தி* அவ்வுலகை ஆண்ட அரசன்போயபின்னர்[1] நீதியல்லதனை ஏறட்டுக்கொண்டிருந்து அறநெறியை உலகத்து நிறுத்தமாட்டாத குறுநிலமன்னன் காலம்போலே மயங்கின இருள் உலகிடத்தே வரும்படி பகற்பொழுதிற்கு ஓரெல்லையாகிய, வருத்தம்மிகுதற்குக் காரணமான, மயக்கத்தையுடைய

மாலைக்கண்ணே ;

மடக்கி, 'மடங்கி'யென

விகாரமாயிற்று.

'மெல்லியான்': படை

முதலியன இன்றி இளைத்தவன்.

'எல்லை', மரணகாலமுமாம்.†

(அ—கக) பாய்திரை

. . . . நீ:—

(இ - ள்.) பரக்கின்ற திரை ஒலித்தல் மாறாத பரத்தலையுடைத்தாகிய நீரையுடைய பனிக்கடலே! துறைவன் எமக்கு வலியில்லையாம்படி துறந்தானென்று அவன் கூற்றாலே உண்டான காமநோய் சுட அதன்கண் அழுந்துவாரிடத்தே நின்று வருத்தவேண்டி முழங்குகின்றாயோ? அன்றியே முன்னர்க் காதல்செய்து பின்பு நீங்கினாரை எம்மைப்போலே நீயும் உடையையாய் வருந்துகின்றாயோ?

(கஉ—கரு)

மன்றிரும் . . . . . நீ:—

(இ - ள்.) மன்றிலே நின்ற கரியதாகிய பனையின்மடலைச் சேர்ந்திருக்கும் அன்றிலே!‡ நந்தலைவர் தாஞ்செய்த நன்றுகளை யான் இருந்து சொல்லு தலைக் கெடுத்துவிட்டாரென்று கலங்கிய என் வருத்தத்தை அறிந்தனையாய் மிகவும்வருத்தவேண்டி ஆரவாரிக்கின்றாயோ? அன்றியே முன்பு இனிய துணையாய்ப் பின்பு பிரிந்தாரை எம்மைப்போலே நீயும் உடையையாய் வருந்துகின்றாயோ ?

'நன்றறை கொன்றனர்' என்றதனால் தீங்கே செய்தமை கூறினள். இனி மிகவும் மறைந்துநின்ற களவை வெளிப்படுத்தினரும் என்பாரும் உளர்.

(கசு—கசு) பனியிருள் . . . . நீ :—

(இ - ள்.) வருத்தத்தினையுடைய அழகினையுடைய சிறியதாகிய குழலே! இக்காலத்தே வருவாராயின், தாஞ்செய்த பழி மிகவும்போமென்று கருதிப் பனியோடுகூடிய இருள்சூழ்ந்து வருகையினாலே கலங்கின தனித்த

வருடைய வருத்தத்தைக் கண்டு நீயும் வருந்துகின்றாயோ? அன்றியே முன்பு இனியனவற்றைச் செய்து பின்பு நீங்கினாரை எம்மைப்போலே நீயும்

உடையையாய் வருந்துகின்றாயோ?

---

* புறம். ௧௮௪; ௧௮௫. †கலி. ௧௪௫; ௨௬ - ௩.௧.

‡ குறள். ௧௭௭; ௧ற். ௯௦௯; ௪-௫.

(பாடம்) 1 போய்ப் பின்னர்

நெய்தல் - ௯௩]

நெய்தற்கலி

௪௦௯

உயர்தல், "நோன்புயர்தல்"போல நீக்கத்தின்க ணின்றது.

கடலும் அன்றிலுங் குழலும் உற்ற பிணியைத் தம் பிணிக்கு வருந்தின வாகச்சேர்த்தி உயர்திணையாக்கி உவமவாயிற்படுத்தவாறு காண்க. இஃது

"அவரவ ருறுபிணி தமபோ"ற் சேர்த்தியது.*

(உo)

என்வாங்கு :—

(இ - ள்.) என்று சொல்லி;

'ஆங்கு' : அசை.

(உக—உரு) அழிந்தய

விடினே :—

(இ - ள்.) நெஞ்சழிந்து, அலவிலுவளார் அறிந்தவருத்தம் மேலிட்டு வருகையினாலே பெரியதாகிய பித்தேறுதலைப் பெரும! வரைந்துகொண்டு போக்குவாய்; அங்ஙனம் போக்குங்கால் நின்னை நுகர்ந்தோருடைய நெஞ்சம் அழிந்து கெட்டுப்போம்படியாக அவரைக் கைவிடுவையாயின், அதுவருந்திய வருத்தத்தைப் போக்கும் மருந்தின்றிறத்தை அறிந்த ஒருவன் அம்மருந்தை அறியேன் என்று வஞ்சித்து அம்மருந்தின் காரியத்தைக் கெடுக்குமதிலுங் கொடிதுகாணெனவ அவன் ஆற்றுமையைத் தோழி கூறி வரைவுகடாயினள்.

இது "காமஞ்சிறப்பினும்"† என்பதனாற் கொள்க.

இதனாற் றலைவற்குச் சூழ்ச்சி பிறந்தது.

இதுவுங் காலம் மயங்கிற்று. செல்லநீரத்

திறனறியொருவன் என்

பதும் பாடம்.

இது நீ நீ நீ என ஓரசைச்சீர் வந்து ஐஞ்சீரடிவந்த மண்டில வாசிரியத்தானிற்று யாப்பின்வேறுபட்ட கொச்சகம். (கஉ)

கஙo.

நயனும் வாய்மையு நன்னர்

நடுவு

மிவணிற் றோன்றிய

விவையென விரங்கப்

புரைதவ நாடிப் பொய்தபுத் தினிதாண்ட
வரைசனோ டுடன்மாய்ந்த[1] நல்லூழிச் செல்வம்போ
னிரைகதிர்க் கனலி பாடொடு பகல்செலக்
கல்லாது முதிர்ந்தவன் கண்ணில்லா நெஞ்சம்போற்
புல்லிருள் பரத்தரூஉம் புலம்புகொண் மருண்மாலை;

இம்மாலை,

ஐய ரவிரழ லெடுப்ப வரோவென்
கையறு நெஞ்சங் கனன்றுதீ மடுக்கும் ;

---

* தொல். பொருள் ; கஉகூ. †

தொல். பொருள் ; ககக.

ஃ௰ச

இம்மாலை,
இருங்கழி மாமலர் கூம்ப வரோவென்
னரும்படர் நெஞ்ச மழிவொடு கூம்பும் ;

இம்மாலை,

கோவலர் தீங்குழ லினைய வரோவென்
பூவெழி லுண்கண் புலம்புகொண் டினையும் ;

எனவாங்கு,
படுசுடர் மாலையொடு பைதனு முழப்பாளைக்
குடிபுறங் காத்தோம்புஞ் செங்கோலான் வியன்றானை
விடுவழி விடுவழிச் சென்றாங்கவர்
தொடுவழித் தொடுவழி நீங்கின்றாற் பசப்பே.

இது பிரிவிடையாற்றாத தலைவியது ஆற்றாமை தலைவன் நீங்கினமை கண்டு வாயில்கள் தம்முள்ளே கூறியது.

வந்துசார்தலின்

(க—எ) நயனும்

மருண்மாலை :—

(இ - ள்.) இவனாலே விளங்கின கலந்த உறவும் உண்மைகூறலும் நன்மையையுடைய நடுவுநிலைமையுமாகிய இவை, இனி விளக்கமின்றிப் போயினவென்று தனக்குப்பின்பு உலகத்தார் இரங்கும்படியாக அவற்றிற்கு உயர்ச்சிமிகும்படி ஆராய்ந்து* பொய்யைக்கெடுத்து நன்றாக ஆண்ட அரசனோடே சேரக்கெட்ட நல்ல ஊழால் உண்டாகிய செல்வம்போலே நிரைத்த கதிரையுடைய ஞாயிறு படுதலோடே பகற்காலமும் போகப் பின்பு வருத்தங்கோடற்குக் காரணமாகிய மருட்சியையுடைய[1] மாலைக்காலம் ஒன்றையுங் கல்லாமல் மூத்தவனுடைய ஞானக்கண்ணில்லாத நெஞ்சுபோலே புற்கென்ற இருள் உலகிலே பரத்தலைத் தாராநிற்கும்.

ஊழ், 'ஊழி' எனத் திரிந்தது.

"நயனு நண்பு நாணுநன் குடைமையும், பயனும் பண்பும் பாடறிந் தொழுகலும்," † என்றாராகலின், நயன் பண்பன்மை உணர்க. இரங்கப் புரைதவ நாடியென்க. அச்செல்வம் அரசனோடு போனாற்போலப் பகற் காலமும் ஞாயிற்றோடே போயிற்றென்றுணர்க.

(அ—கo) இம்மாலை . . . . மடுக்கும் :—

(இ - ள்.) இம்மாலைக்கண்ணே, இருடிகள் விளங்குகின்ற

அழலை

ஆவுதிபண்ணி எழுப்ப ‡ என்

செயலறு நெஞ்சந் தானுங்

கொதித்து

எனக்குங் காமத்தீயைக் கொளுத்தும்;

* மதுரை, கக - உக. † நற். கசூO: க-உ. ‡ கலி. கககூ: கஉ-கசு.

நெய்தல் - கரு]

நெய்தற்கலி

சOரு

(கக—கரு) இம்மாலை . . . . கூம்பும் :—

(இ - ள்.) இம்மாலைக்கண்ணே, கரிய கழிகளிற் பெருமையையுடைய மலர்கள் குவிய, என் நெஞ்சம் அவனை உள்ளுதலால்[1] அழிதலோடே தான் நினைவின்றிக் குவியும் * ;

(கசு-கரு) இம்மாலை . . . . டினையும் :—

(இ - ள்.) இம்மாலைக்கண்ணே, கோவலருடைய இனியதாகிய குழலாலே செஞ்சவருந்த,† எனது பூவினதழலைக்யுடைய உண்கண்

தனிமையைக்கொண்டு வருந்தும்;

இஃது, இன்பத்தை வெறுத்தல்.

'அரோ': அசை.

(கள) எனவாங்கு :—

(இ - ள்.) எனச் சொல்லி ;

'ஆங்கு': அசை.

(கஅ—உக) படுசுடர்

பசப்பே :—

(இ - ள்.) படுகின்ற சுடரையுடைய மாலேயாலே வருத்தத்தையுடைய காமநோயிலே அழுந்துகின்றவளேக் குடிமக்களேப் பாதுகாத்துப் பின்னர்த் தன்னேப் பாதுகாக்கும் ‡ பாண்டியனுடைய அகற்சியையுடைய படை விட விடப் பகைவர் நீங்கினுற்போலப், பிரிந்தவர்வந்து நீண்டத்தீண்டப் பசப்பு நீங்கிற்று; ஈதிருந்தவாறு என்னென வாயில்கள் தம்முட் டம்முட் கூறினர்.

"வாயி லுசாவே தம்மு ளுரிய" § என்பது விதி. உழப்பாளேத் தொடுவழியென்க. 'விடுவழி', 'தொடுவழி' என்பன செயவெனச்சக் குறிப்புச்சொல்லாகிய வழி என்னும் வினையெச்சம்.

இதனுல் வாயில்கட்குப் பெருமிதம் என்னும் மெய்ப்பாடு பிறந்தது.

இஃது இடையிடை சொற்சீரடி வந்த கொச்சகம். (கங)

கஙக.

பெருங்கடற் றெய்வநீர் நோக்கித் தெளித்தென்
றிருந்திழை மென்றோண் மணந்தவன் செய்த
வருந்துயர் நீக்குவேன் போன்மற் பொருந்துபு
பூக்கவின் கொண்ட புகழ்சா லெழிலுண்க
ஞெக்குங்கா ஞெக்கி னணங்காக்குஞ் சாயலாய் தாக்கி .

* சலி, கசஅ: சு-எ. † கலி, க0க: கூச-கூரு.
‡ குறள் - ருசக. § தொல், பொருள்: ருகஉ.
(பாடம்) 1. உள்ளி.

யினமீ னிகன்மாற வென்ற
சினமீ
னெறிசுறா வான்மருப்புக்
கோத்து நெறிசெய்த
நெய்த னெடுநார்ப்
பிணித்தியாத்துக் கையுளர்வின்
யாழிசை கொண்ட வினவண் டிமிர்ந்தார்ப்பத்
க0. தாழா துறைக்குந் தடமலர்த் தண்டாழை
வீழூச றூங்கப் பெறின் ;

மாழை, மடமான்
பிணையியல் வென்றாய் நின் னூசல்

கடைஇயா னிருப்பநீ
டுங்காய் தடமென்றோ
ணீத்தான் றிறங்கள்
பகர்ந்து[1]

கரு. நாணினகொ ளோழி
நாணினகொ ளோழி
யிரவெலா நற்றோழி நாணின
வென்பவை
வாணிலா வேய்க்கும்
வயங்கொளி யெக்கர்மே
லாணுப் பரிய வலவ
னளைபுகூஉங்
கானற் கமழ்ஞாழல்

வியெய்ப்பத் தோழியென் உ0.
மேனி சிதைத்தான் றுறை;

மாரிவீ ழிருங்கூந்தன்
மதைஇயநோக் கெழிலுண்கட்
டாழ்நீர முத்தின் றகையெய்க்கு முறுவலாய்
தேயாநோய் செய்தான் றிறங்கிளந்து நாம்பாடுஞ்

சேயுய ரூசற்சீர் நீயொன்று
பாடித்தை;

உரு. பார்த்துற் றனதோழி பார்த்துற் றனதோழி
யிரவெலா நற்றேழி பார்த்துற்றன வென்பவை
தன்றுணை யில்லாள் வருந்திருள் கொல்லென
வின்றுணை யன்றி லிரவி னகவாவே

யன்றுதா னீர்த்த கரும்பணி வாடவென்
மென்றோண் ஞெகிழ்த்தான் றுறை;

கரைகவர் கொடுங்கழிக் கண்கவர் புள்ளினந்
திரையுறப் பொன்றிய புலவுமீ னல்லதை
யிரையுயிர் செகுத்துண்ணாத் துறைவனை யாம்பாடு
மசைவர லூசற்சீ ரழித்தொன்று பாடித்தை;

அருளினகொ றோழி யருளினகொ றோழி
யிரவெலாந் தோழி யருளின வென்பவை

கனாங்கொ ளிடுமணற் காவி வருந்தப்
பிணங்கிரு மோட்ட திரைவந் தளிக்கு
மணங்கம ழைம்பாலா ரூடலை யாங்கே
வணங்கி யுணர்ப்பான் றுறை;
எனநாம்,
பாட மறைநின்று கேட்டன னீடிய

வானீர்க் கிடக்கை
வயங்குநீர்ச் சேர்ப்பனை
யானென வுணர்ந்து நீநனி
மருளத்
சுறி. தேனிமிர் புன்னை
பொருந்தித்
தாணாக் கினைவ் வூசலை
வந்தே.

இது வரைவு நீட ஆற்ருளாய தலைவியைத் தோழி அவன் முன் அருமைசெய்து அயர்த்தகாலத்து அவன் வரைவினை[1] யானறிந்து ஊசலாட நின்னைக் கொண்டுபோய் ஆடுகின்ற காலத்து யான் இயற்பழிக்க நீ இயற்படமொழி வது கேட்டு வந்து ஊசலை ஊக்கியவன் இக்காலத்து வருந்தவிடாது வருத்தமறிந்து வரைந்துகொள்வனென ஆற்றுவித்தது.

(க—கக) பெருங்கடற் . . . . பெறின் :—

(இ - ள்.) நோக்குங் காலத்து அப்பார்வையாலே பிறர்க்கு வருத்த முண்டாக்கும்,* 2 தன்னில் இணையொத்துப் பூவினதழகைத் தன்னிடத்தே கொண்ட புகழ்ச்சியமைந்த அழகினையுடைய[3] கண்ணினையுடையாய்![4] சாய லாய்! இனமான மீன்களது மாறுபாடுகெடத் தாக்கிவென்ற சினத்தை யுடைய மீனாகிய எறியுஞ் சுறாவினது மருப்பாற் செய்த பலகையைக் கோத்துப் புறவிதழொடித்த நெய்தற் பூவை நெடியநாரிலே தொடுத்து அழகு பெறக் கட்டிக் கையாலே

வாசித்தலையுடைய யாழினது
ஓசையைத் தம் மிடத்தே கொண்ட
இனமான வண்டுகள் ஆர்ப்பரவஞ்[5]
செய்து பாடத் தாழாமல்
தேன்றுளிக்கும்
வளைவையுடைத்தாகிய[6] மலரையுடைய
தாழையினது விழுதாற்றிரித்து இட்ட
ஊசலை நீ போர்த்து ஆடப் பெறின்,
நீரை யுடைய பெரிதாகிய கடலாகிய
தெய்வத்தை நோக்கி நின்னிற்
பிரியேன் என்று தெளிவித்து,†
உன்னுடைய திருந்தின
இழையையுடைய மென் றோளைக்
கூடினவன் அருமைசெய்தயர்த்ததால்
நினக்குண்டாகிய அரிய வருத்தத்தை
யான் அவனை எதிர்ப்பட்டு மிகவுங்

தீர்க்குவேன்போலே இரா
நின்றதென்றாள்;

---

* குறள். ௧0௮உ. † கலி. ௧௨௪: ௧௮; அகம். ௬௨0 : ௧௬ - ௧௪.

(பாடம்) 1. வரவினை. 2. வருத்தமுண்டாக்குவதும். 3. அழகினையுடையதுமான. 4. கண்ணினையுடைய. 5. ஆளாபக். 6. அளவையுடைத்தாகிய.

௪0௮
மையதுமாதுமாக் டகவை
- ௧௬௪.

'சாயல்' : ஈண்டுத் தலைவிக்கோர் பெயர்த்தன்மையாய் நின்றது. பெறின், தீர்க்குவேன்போலுமென்க.

போலும் என்னும் முற்றுச்சொல் ஈற்றுமிசை உகரம் மெய்யொழித்துக் கெட்டு நின்றது. 'கோத்து', 'யாத்து' என்னுஞ் செய்தெனெச்சம் இட்ட என்னும் பெயரெச்சத்தோடு முடிந்தது.

"தாயத்தினடையா"*

என்னும் பொருளியற்

சூத்திரத்தால் என்தோளென்றாள்.

இது மேல் வருவனவற்றிற்குங்

கொள்க.

(கஉ—கஅ) மாழை

. . . . பகர்ந்து:—

(இ - ள்.) அதுகேட்டு

ஊசலிடத்தே சென்ற தலைவியை

நோக்கி இளமையையுடைய

மடமான்பிணையினது நோக்கின்

இயல்பை யென் றவளே! நின் தடமென்றோளைக் கைவிட்டவனுடைய கொடுமையினது கூறுகளைச் சொல்லிப் பாடி நீ ஏறின ஊசலை யான் உயரச் செலுத்தித் தாழ்த்து ஆட்ட நெடும்பொழுது ஆடாய் என்றாள்;

'நீள்' : காலத்தின் நீட்சியை உணர்த்திற்று.

(௧௫–௨௦) நாணினகோ . . . . றுறை :—

(இ - ள்.) தலைவி அங்ஙனம் பாடாமையிற் றோழி தான், தோழீ! கானவிடத்துக் கமழ்கின்ற ஞாழற்பூவின் நிறத்தையொப்ப † நின்மேனி பசப்பித்தவனுடைய திறையிடத்து ஒளியையுடைய நிலாவையொக்கும் விளங்குகின்ற ஒளியினையுடைய இடுமணலின்மேலே ஓடும் அமையாத செலவுகளையுடைய ஞெண்டுகளென்று சொல்லப்படுமவை இப்பொழுது நம்மைக்

கண்டு தம் அளையிலே[1] புகாநின்றன; அங்ஙனம் புகுகையினாலே அத்துறைவன் நம்பாற் செய்த கொடுமையை நினைத்துத் தோழீ! நம்முன் தாம் நிற்றற்கு நாணினவோ? தோழீ! நம்முன் தாம் நிற்றற்கு நாணினவோ? எங்ஙனம் நாணினவாயின், தோழீ! இராக்காலமெல்லாம் நாணிக்கிடந்தனவாய் இருக்குமென இயற்பழித்தாள்;

துறையிடத்து அலவனென்பவை என்க. 'என்பவை': தொழிற்பெயர்.

(உக—உச) மாரிவீ

பாடித்தை :—

(இ - ள்.) அது கேட்ட[2] தலைவி பாடாமையிற் பின்னுந் தோழி, மழை விரும்புகின்ற பெரிய கூந்தலையும் மதர்த்த நோக்கினது அழகையுடைய கண்ணினையுந் தாழ்ந்த கடலிற் பிறந்த முத்தினது அழகை ஒக்கும் முறுவலினையுமுடையாய்! மாயாத நோயைச் செய்தவனுடைய கொடுமை

* தொல். பொருள்; உஉக. † நற். கஎக: க - இ.

(பாடம்) 1. அலையிலே. 2. அது கேட்டுந்.

பின் கூற்றினைச் சொல்லி நாம் பாடும்
மிக உயர்ந்த வசைப்பாட்டை நீ ஒன்று
பாடுவாய் என்றாள்;

'சீர்' என்றது, தாள
அறுதியையுடைய வசைப்பாட்டை.

(உரு–கூ0) பார்த்துற் . . . .
றுறை :—

(இ - ள்.) அது கேட்ட தலைவி,
பின்னும் பாடாமையின் தோழி, நம்
மேல் அன்புற்றுப் புணர்ந்த அன்று
தானெழுதிய கரும்பினது அழகு கெடும்
படி மென்றோளை
மெலிவித்தவனுடைய துறையிடத்து

இனிய துணையோடு கூடிய அன்றிலென்று சொல்லப்படுமவை, தன் துணையானவனை நீங்கினவள் வருந்தினளோ என்று கருதி இராக்காலத்தும் அழைத்தன வில்லை; ஆகையினாலே தோழீ! அவை நம்வருத்தத்தைப் பார்த்துத் தாமும் வருத்தமுற்றனபோலே இருந்தன; ஆதலால் நற்றோழீ! இரவெல்லாம் நம் வருத்தத்தைப் பார்த்துத் தாம் வருத்தமுற்றன என்றாள்;

பாத்துற்றன பாடமாயிற் பிரிவுற்றனவென்க.

(ருக—ருச) கரைக்கவர் . .

. . பாடித்தை :—

(இ - ள்.) அது கேட்ட தலைவி, கரையையிடித்துத் தனக்காக்கிக் கொள்ளுகின்ற கொடுங்கழியிடத்து நோக்கினர் கண்ணை வாங்கிக் கொள்ளும் அழகையுடைய பறவைத்திரள் திரைமோதுகையினலே இறந்த புலாலுற்றத்தையுடைய மீனை இரையாகத் தின்னுமதல்லது தாம் ஒன்றன் உயிரைப்போக்கி இரையாக அதனை உண்ணுத அருட்டுறைவனை நாம் பாடும் அசைந்துவருதலையுடைய ஊசற்பாட்டை, நீ இயற்பழித்ததனை

அழித்து, இயற்பட ஒன்று பாடுவாய் என்றாள்;

(௬௫-௭0) அருளினகோ

. . . . . றுறை :—

(இ - ள்.) அது கேட்ட தோழி அங்ஙனம் பாடாமையின் தலைவி, மணம் நாறுகின்ற கூந்தலையுடையாரிடத்து உண்டாகிய ஊடலை அதுகண்ட

பொழுதே விளக்கு தீர்க்குமவன் துறையிடத்துத், திரட்சிகொண்ட இடை மணலாலே காவியென்று சொல்லப்படுமவை வருந்த, அவற்றைத் தம்மிற் பிணங்கிவருகின்ற கருமை தங்கிய பெருமையையுடையனவாகிய திரைகள் வந்து அம்மணலைக் கரைத்து அருள்பண்ணுநிற்கும்; ஆகையினாலே அத் திரைகள் தோழீ! அருளினவோ? தோழீ! அருளினவோ? தோழீ! எங் ஙனம் அருளினவாயின், தோழீ! இரவெல்லாம் அருளினவாயிருக்குமென இயற்படமொழிந்தாள்;

களவுகாலத்துத் தலைவி "தன்வயி னுரிமையு மவன்வயிற் பரத்தையுங்"* கூறுதற்கு உரியளென்றலின், அவன்வயிற் பரத்தைமை கூறிய காலத்து

* தொல், பொருள் : ககக,

52

சஅ0.
கலித்தொகை
[கலி - கங2

அதனை வணங்கித் திர்த்தமை கருதி
னாடலை 'வணங்கி உணர்ப்பா'ரென்

றான.

காற்றுத் தூற்றிய மணலிடத்து
அறல்வருத்தின காவியைத் திரை
வந்து அளித்தாற் போல

அலர்தூற்றுதலால் வருந்திய வருத்தத்தை நீக்கி நம்மை அளித்து வரைவனென உள்ளுறையுவமங் கொள்க.

(சக—சசு) என நாம் வந்தே:—

(இ - ள்.) என்று அங்ஙனம் இயற்பழித்தும் இயற்படமொழிந்தும் யானும் நீயும் பாடச், சேர்ப்பன், பாட்டை மறைய நின்று கேட்டனனாய்

நீடிய வெண்மையையுடைத்தாகிய நீர்க்கிடக்கை விளங்குகின்ற நீர்மையை

யுடைய சேர்ப்பனை யான் ஊசல் ஊக்கென்றேனென்றும் உணர்ந்து, பின்பு யானென நம்மில் நீ மிகவும் மருளும்படி அவன் தேனினம் ஒலிக்கும் புன்னை

யைப்பொருந்திநின்று, பின்பு வந்து அவ்வூசலைத் தான் ஊக்கினான்; [அற வருத்தம் அறிந்து வியவாநின்று] நம்வருத்தம் அறிந்து வரைந்துகொள்வ னென் ஆற்றுவித்தான்.

'கிடக்கை': கடல்; 'நீர்': கழி.

இதனாற் றலைவற்கு ஆராய்ச்சி பிறந்தது.

இனி "உணர்ப்புவயின் வாரா

ஊடற் "*கண் தோழி களவுகாலத்து
நிகழ்ந்தமை கூறித் தலைவியை
ஊடறீர்த்ததென்று கிளவிகூறி
அதற்கேற்ப
உரைப்பாருமுளர்.

இஃது ஐஞ்சீரடி வந்த
நெடுவெண்பாட்டாகிய தரவும்
ஐஞ்சீரடுக்கிய

குறுவெண்பாட்டும் நெடுவெண்பாட்டுங் கொச்சகமுந் தளைவிரவின கொச்சகவெண்பாவுங் கொச்சகமும் நெடுவெண்பாட்டுந் தனிச்சொல்லுஞ் சுரிதக

மும் வந்த கொச்சகம்.

(கஅ)

உரவுநீர்த் திரைபொர
வோங்கிய வெக்கர்மேல்
விரவுப்பல் லுருவின[1]
வீழ்பெடை துணையாக
விரைதேர்ந்துண் டசாவிடூஉம்
புள்ளின மிறைகொள

முரைசுமூன் றாள்பவர் முரணியோர் முரண்டப
நிரைகளி றிடைபட நெறியாத்த[2] விருக்கைபோற்
சிதைவின்றிச் சென்றுழிச் சிறப்பெய்தி வினைவாய்த்துத்
துறையகலம் வாய்சூழுந் துணிகடற்[3] றண்சேர்ப்ப ;

---

* தொல். பொருள் : ௧௫௦.
(பாடம்) 1. பல்லுருவின். 2. நெறீஇயாத்த. 3. தனிகடற்.

நெய்தல் - ௧௫]

நெய்தற்கலி

௬௧

புன்னைய நறும்பொழிற்
புணர்ந்தனை யிருந்தக்கா

என்னுதா லஞ்சலோம் பென்றதன் பயனன்றே
பாயின பசலையாற் பகற்கொண்ட சுடர்போன்றான்
மாவின தளிர்போலு மாணல மிழந்தை ;

பன்மலர் நறும்பொழிற்
பழியின்றிப் புணர்ந்தக்காற்
சின்மொழி
தெளியெனத் தேற்றிய சிறப்பன்றே

வாடுபு வனப்போடி
வயக்குறு மணிபோன்று கடு.
ணீடிறை நெடுமென்றோ

ணிரைவளை நெகிழ்ந்ததை;

அடும்பிவ ரணியெக்க ராடிநீ
மணந்தக்காற்
கொடுங்குழாய் தெளியெனக்
கொண்டதன் கொளையன்றோ
பொறையாற்று நுசுப்பினாற்
பூவீந்த கொடிபோன்றாண்
மறைபிற ரறியாமை
மாணுநோ யுழந்ததை[1];
உ0. எனவாங்கு,

வழிபட்ட தெய்வந்தான்
வலியெனச் சார்ந்தார்கட்

கழியுநோய் கைம்மிக

வணங்காகி யதுபோலப்

பழிபரந் தலர்தூற்ற

வென்றோழி

யழிபட

ரலைப்ப வகறலோ கொடிதே.

இது வரைவு

நீட்டித்தழிப் பகற்குறிவந்து நீங்குந்

தலைவனை எதிர்ப்பட்டுத் தோழி

அவனை நாணு நெஞ்சலைப்ப

வரைவுகடாயது.

(௪—எ) உரவுநீர்த் . . . .

றண்சேர்ப்ப:—

(இ - ள்.) முரசு மூன்றை*
ஆள்கின்ற பாண்டியர் தம்மொடு மாறு
பட்டோருடைய மாறுபாடு கெடும்படி
நிரைத்த களிறுகள் வினைப்படைக்கு
நடுவே நிற்கும்படி நெறியுண்டாகக்
கம்பத்தோடே கட்டின இருக்கை
போலே விரவுதலையுடைய
பலவடிவினையுடையவாய இரையைத்
தேடி,

தின்று இளைப்பாறும் புள்ளினங்கள், தாம் விரும்பின பேடுகள் தமக்கு,
துணையாக வலியினையுடைய கடலின்து திரை. வந்துபொரும்படி உயர்ந்,

இடுமணலின்மேலே
தங்குதல்கொள்ளத், தாஞ்சென்ற
இடத்துத் தம: கொரு கேடின்றித்

தாம்போன காரியம் வாய்த்துவந்து தலைமைபெற்று; துறையிடத்தனவாகிய மரக்கலங்கள் இடத்தைச் சூழ்ந்திருக்குந் தெளிந்; கடலையுடைய சேர்ப்பனே !

---

* புறம். ருஅ : கஉ - கங.

(பாடம்) 1. யுழப்பதை.

சாகஉ
கலித்தொகை
[கலி - ககஉ

முரசு மூன்றாவன: வீரமுரசு, தியாகமுரசு, நியாயமுரசென்பன. தன்முரசுஞ், சேரன்முரசுஞ், சோழன்முரசுமென மூன்றென்றலுமாம்.

பாசறைபோலே என்ற வினையுவமம் மேல் வருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்து நின்றது. பறவைகள் வினைப்படைக்கும், மரக்கலங்கள் இடைநின்ற யானைக்கும் உவமை.

கரைக்குச் சிறந்தனவாகிய இரைகவர்ந்து

துணைபுணர்ந்த பறவை

களும் வினைவாய்த்து நின்ற மரக்கலங்களும் பகைவர்க்கு வருத்தஞ் செய்யும் பாசறைபோலத் தோன்றும் என்றதனால், இல்லறம் நிகழ்த்தித் துணையொடு புணர்ந்தவர்களும் வினைவாய்த்துச் செல்வச் செருக்குடையவர்களுந் தமக்கு வருத்தத்தைத் தருகின்றாரென உள்ளுறை தந்தவாறு காண்க;

அவரைப்போல யாமுந் துணை புணர்ந்து இல்லற நிகழ்த்திச்

செல்வம் உண்

டாயிருக்கப் பெற்றிலேம எனனும் வருத்தத்தை அவர் கொடுத்தலின்.

(அ—கக) புன்னைய . . . . மிழந்ததை :—

(இ - ள்.) பரந்த பசலைநிறத்தாலே பகற்பொழுது எடுத்த விளக்குப்

போல் ஒளிகெட்டவள் மாவின்கண்ணவாகிய தளிரை ஒக்கும் மாட்சிமையை யுடைய நலத்தை இழந்தது, புன்னையையுடையவாகிய நறிதாகிய பொழி

லிலே இவளைப் புணர்ந்திருக்க,

நன்னுதால்! நீ யான் பிரிவேனென்று அஞ்சு
தலைப் பாதுகாத்துக்கொள் என்று தெளிவித்ததனால்
உள்ள பயனல்லவோ ?

(கஉ-கரு) பன்மலர் . . . . நெகிழ்ந்ததை :—

(இ - ள்.) அழகு வாடிக் கெட்டு நெடுங்காலம்
விளக்கமுறுத்தாத
மணியை ஒத்தவளுடைய திரண்ட நெடிய மென்றோளின் நிரைத்த வளை
கழன்றது, பல மலர்களையுடைய

நறும்பொழிலிலே குற்றமின்றாக அவளைப்
புணர்ந்திருக்கச் சிலவான மொழியினையுடையாய்! நின்னை யான்பிரியேன்,
இதனைத் தெளிவாயாக என்று தெளிவித்ததனால் உள்ள சிறப்பன்றோ?

(கசு—கக) அடும்பிவ . : . . யுழந்ததை :—

(இ - ள்.) தன் மென்மையால் அணிகளைப் பொறுத்தலாற்றா இடையாலே அணிகலங்கள்

அணியாமற் பூமாறின
கொடியையொத்தவச் பிறர்
இக்களவொழுக்கத்தை யறியாமல்
மறைந்த மருந்தால் மாட்சிமைப்
படாத காமநோயிலே அழுந்தியது,
அடும்பங்கொடி பரந்த இடுமணலிலே
கூடவிளையாடி நீ புணர,
கொடுங்குழாய் ! நின்னை
யான்பிரியேன் இதனை; தெளிவாயாக
என்று கூற, அதனை மெய்யென்று
உட்கொண்டதனுடைய
கோட்பாடன்றோ?

(உ0) எனவாங்கு :—

நெய்தல் - கசு]

நெய்தற்கலி

சுகா

(உக—உச) வழிபட்ட . .

. . . . கொடிதே :—

(இ - ள்.) தனக்கு வலியைத் தரும் என்று கருதித் தான் வழிபட்ட
தெய்வந் தன்னைச் சேர்ந்தவர்கட்கு நெஞ்சழியும் நோய் கைமிகும்ப
வருத்தமாகிய தன்மைபோல நின்னைத் தனக்கு வலியென்று வழிபட்ட எ
ளுழிலை நீ செய்த பழி எங்கும் பரந்து அலர் தூற்றுகையினாலே உன்
டான மிக்க நினைவு வருத்த[1], நீங்குதல் கொடிதுகாண் எனத்தோழி வரை
கடாயினள்.

இதனுற் றலைவிக்கு அசைவு பிறந்தது.

இஃது ஒத்தாழிசைக்கலி.

(கரு

கருரு.

மாமலர் முண்டகந் தில்லையோ

டொருங்குடன்
கான லணிந்த வுயர்மண
லெக்கர்மேற்
சீர்மிகு சிறப்பினேன்
மரமுதற் கைசேர்த்த
நீர்மலி கரகம்போற்
பழந்தூங்கு முடத்தாழைப்
ரு. பூமலர்ந் தவைபோலப்
புள்ளல்குந் துறைவகேள் ;

ஆற்றுத லென்பதொன் றலந்தவர்க் குதவுதல்
போற்றுத லென்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுத
லன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
௧௦. யறிவெனப் படுவது பேதையார் சொன்னோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை
முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்
௧௫. ஆங்கதை யறிந்தனி ராயினென் றோழி

நன்னுத னலனுண்டு
துறத்தல் கொண்க
தீம்பா லுண்பவர்[2]
கொள்கலம் வரைத[3]
லின்றலை வருந்தியா டுயரஞ்
சென்றனை களைமோ
பூண்கநின் றேரே.

இது "வரைவுடம் பட்டோர்க் கடாவல்

வேண்டினும்"* என்பதனால் தலைவன்

தெருளாதவனைத் தெருட்டி வரைவுகடாயது.

* தொல். பொருள் : கசுசு.

(பாடம்) 1. வருத்தம். 2. னுண்டவர், 3. வரைதலி.

சுகசு

கலித்தொகை

[கலி - கருரு

(க—ரு) மாமலர் . . . . . துறைவகேள்:—

(இ - ள்.) கருமையையுடைத்தாகிய மலரையுடைய கழிமுள்ளி தில்லையோடே சேரச் சூழ்ந்த[1] கானலிடத்துத் திரையிட்ட மணல்மேலே காற்றுலுயர்ந்த மணலிலே உடனின்ற, புகழ்மிகுகின்ற தலைமையினையுடைய தக்கணமூர்த்தி தேவர் தாமிருந்த ஆலமரத்தே தாமிருப்பதற்கு முன்னே தூக்கிவைத்த நீர்நிறைந்த குண்டிகை போலப் பழந்தூங்கும் முடத்தை யுடைய தாழைப்பூ அலர்ந்தவைபோலக் குருகினம் அத்தாழைமேலே தங்குந்

துறைவனே! யான் கூறுகின்றதனைக் கேள்!

முள்ளுடைய முண்டகமுங் கொடிய தில்லையுமே சூழ்ந்த கானலைக் கொடிதாக அலர்கூறுகின்ற மகளிர் சூழ்ந்திருக்கின்றதாகவும் உயிர்க்கொலை சூழுங் குருகுகள் நன்றாகிய தாழைமலர்போற் றோன்றுகின்றதனை எம் முயிர்க்கு வருத்தஞ்செய்கின்ற தலைவன் நன்மகனைப்போற் பிறர்க்குத் தோன்றுகின்ற தன்மையாகவும் உள்ளுறையுவமங்கொள்க.

(கூ—கச) ஆற்றுதல்

பொறுத்தல்:—

(இ - ள்.) இல்வாழ்க்கை நடத்துதல் என்று சொல்லுவது* மிடித்தவர்க்கு யாதானும் ஒன்றை உதவுதலை; ஒன்றைப் பாதுகாத்தல் என்று சொல்லுவது கூடினரைப் பிரியாதிருத்தலை; மக்கட்பண்பு என்று சொல்லப் படுவது உலகவொழுக்கம்

அறிந்தொழுகுதலே; அன்பு என்று சொல்லப்படு வது† தன் சுற்றத்தைக் கெடாதிருத்தலே; அறிவு என்று சொல்லப்படுவது‡

அறியாதார் தன்னைப் பார்த்துச் சொல்லுஞ் சொல்லைப் பொறுத்தலே; ஒருவரோடு ஒருவர்க்கு உறவு என்று கூறப்படுவது கூறியதொன்றைத் தாம்

மறாதிருத்தலே; நிறை என்று சொல்லப்படுவது மறைந்தது ஒரு காரியம்

பிறர் அறியாமல் ஒழுகுதலே; முறை என்று சொல்லப்படுவது நமரென்று கண்ணோட்டஞ் செய்யாது§ அவர் செய்த குறைக்கேற்ப அவர் உயிரைக் கொள்ளுதலே; பொறை என்று சொல்லப்படுவது¶ பகைவரைக் காலம் வரு

மளவும் பொறுத்திருத்தலே;

(கரு—கக) ஆங்கதை

. . . . நேரே:—

(இ - ள்.) அப்படியே

அக்குணத்தை

நீரே அறிந்தொழுகினீராயின்

ஆவ்வொழுக்கத்திற்கு ஏற்பது ஒன்று

கூறுவேன்; கொண்க! என் தோழி

யது நன்னுதலின் நலத்தை

நுகர்ந்து அவளைத் துறத்தல்,

இனியதாகிய

---

* குறள். கக. † பழ. கசு;

புறம். ௧௫௭ ; ௧.

‡ பழ. ௧௯௫; குறள். ௧௫௩; அறநெறி. ௧௦௧.

§ புறம். ௫௫ : ௧௧. $ குறள். ௪௮௫ ; ௪௯௦.

நெய்தல் - ௧௭]

நெய்தற்கலி

௪௧௫

பாலையுண் ணுமவர்கள் பாலையுண்டு அதனைக் கொண்டிருக்குங் கலத்தைக் கவிழ்த்துவிடுதல் போல்வதொன்று;

ஆகையினாலே, நின்னிடத்து வருந்தின
வள் துயரத்தை வரைந்து
சென்றனையாய்க் களைவாய்; அங்ஙனங்
களைதற்கு
நின் தேர் புரவியைப் பூண்பதாக எனத் தெருட்டி வரைவுகடாயினாள்.
இதனாற் றலைவற்கு அசைவு பிறந்தது.

இது தனிச்சொல்லின்றி ஆசிரியச்
சுரிதகம் பெற்ற தரவிணைக் கொச்
சகம்.

(கரு)

கஙச.

மல்லரை மறஞ்சாய்த்த
மலர்த்தண்டா ரகலத்தோ

ஞெல்லாதா ருடன்றூட வுருத்துட னெறிதலிற்
கொல்யானை யணிறுத லழுத்திய வாழிபோற்

கல்சேர்பு ஞாயிறு
கதிர்வாங்கி மறைதலி
ஞ். னிருங்கட லொலித்தாங்கே
யிரவுக்காண் பதுபோலப்
பெருங்கட லோதநீர்
வீங்குபு கரைசேரப்
போழைய வண்டிஞற்
புல்லென்ற துறையவாய்ப்

பாயல்கொள் பவைபோலக்
கயமலர் வாய்கூம்ப
வொருநிலையே நடுக்குற்றிவ்

வுலகெலா மச்சுற க0.
விருநிலம் பெயர்ப்பன்ன
வெவ்வங்கூர் மருண்மாலே;

தவவிஞேய் செய்தவர்க்
காணமை நினைத்தவி
ணிகலிடும் பனிதின
வெவ்வத்து ளாழ்ந்தாங்கே

கவலேகொ ணெஞ்சினேன்
கலுழ்தரக் கடனேக்கி

யவலமெய்க் கொண்டது

போலுமஃ தெவன்கொலோ ;

௧௫. நடுங்குநோய் செய்தவர்
நல்காமை நினைத்தலிற்

கடும்பனி கைமிகக் கையாற்று
ளாழ்ந்தாங்கே
நடுங்குநோ யுழந்தவெண்
ணலனழிய மணனோக்கி

யிடும்பைநோய்க் கிகுவன
போலுமஃ தெவன்கொலோ;
வையினர் நலனுண்டார்
வாராமை நினைத்தலிற்
௨௰. கையறு நெஞ்சினேன்

கலக்கத்து ளாழ்ந்தாங்கே
மையல்கொ ணெஞ்சொடு
மயக்கத்தான்
மரனோக்கி
வெவ்வத்தா லியன்றபோ
லிலைகூம்ப லென்கொலோ ;

எனவாங்கு,

கரைகாணப் பௌவத்துக்
கலஞ்சிதைந் தாழ்பவன்
றிரைதரப் புணைபெற்றுத்
தீதின்றி யுய்ந்தாங்கு சுகசா
[illegible]
விரைவனர்

காதலர் புகுதர
நிரைதொடி துயர
நீங்கின்றால் விரைந்தே.

இது பிரிவிடை மாலைப்பொழுது கண்டு ஆற்றாத தலைவி இவ்வகைப்பட்டனவும்

நமதிடுக்கண்கண்டு எவ்வங்கொண்டன போன்ற; அவரும் நமக்கருளுவார்கொல்லோ, எனச்சொல்லிய நேரத்தக்கண் தலைவன் புக, அவ்வளவில் அவள் அவலம் நீங்கினமை.கண்டு, வாயில்கள் தம்முள்ளே கூறியது.

(க—கO) மலைல்லை
மருண்மாலை :—

(இ - ள்.) பலைகயாய் வந்த மல்லலை * மறத்தைக் கெடுத்த, அலர்ந்த தண்ணிய தாரை அணிந்த

திருமார்பையுடைய மாயவன், தன் பகைவர் எல்லாருஞ் சேரவந்து உருத்துத் தன்னை எறிகையின்மேலே, அவரை உடன்று அவர் ஓடும்படியாக அவர் எறின கொல்யானையினது அழகினையுடைய மத்தகத்திலே அழுத்தின சக்கரம்போலே, ஞாயிறு தான் பரப்பிய கதிர்களைத் தன்னிடத்தே குவித்துக்கொண்டு அத்தகிரியைச் சேர்ந்து மறைகையினாலே பெரிதாகிய கடலில் ஓதம் ஏறுகின்ற நீர்மிக்குக் கரையைச் சேராநிற்கக் கழியிடத்துப் பூக்களினின்றும் போன வண்டுகளாலே பொலிவழிந்த துறை

யிடத்தனவாய்த்
துயில்கொள்வனபோலே,
அக்கயத்தின் மலர்களெல்லாப்
வாய்குவியாநிற்க, அக்காலத்தே
இருங்கடல் ஒலித்து இவ்வுலகெல்லாம்
ஒட படிப்பட நடுக்கமுற்று
அச்சமுறும்படி தான் தோற்றுவித்த
இருளைத்தை;
தான் மீண்டு தன்னிடத்தே
ஒடுக்கிக்கொள்ளுந்
தன்மையையொத்த இரா காலத்தைத்
தான்படைப்பதுபோல,
அதற்குமுன்னே தோன்றுகின்ற
பிரிந்தோர்க்கு வருத்தம் மிகுதற்குக்
காரணமான, மருண்மாலைக் கண்ணே

இருங்கடல் ஒலித்தெழுந்து உலகைக் கோப்பது போன்ற இரா காலத்தைத் தான்படைப்பதுபோற் றோன்றுகின்ற மாலை என்க. மறை; • லின் ஆங்கே தோன்றுகின்ற மாலையென்க.

(கக—கச) தவலினேய் . . . . தேவன்கொலோ :—

(இ - ள்.) எனக்குக் கேடில்லாத காமநோயைச் செய்தவரை கண்ணாற் காணாமல் என் நெஞ்சு நினைக்கையினாலே, அது

தனக்கிடமாக
கொண்டு மாறுபாடுகளைக் கொடுக்கும்
பனிக்காலம் அறிவைத் தின்றுவிட
அப்பொழுதே வருத்தத்திலே
அழுந்திப் பலநினைவு கொண்ட
நெஞ்சினையுடைய யான் கலக்கத்தைத்
தாக், கடல் அதனை நோக்கி
என்னுடைய இந்
அவலத்தைத் தன்னுடைய
மெய்யிலே கொண்டதுபோலே
கூப்பிட
நின்றதற்குக் காரணமென்னோதான் ?

* கஞ்சனேவலால் தன்னைக் கொல்ல வந்த மல்லர்.

நெய்தற்கலி

சுக்ஸ

(கரு—கஅ) நடுங்குநோ . .

. . தேவன்கோலோ :—

(இ - ள்.) எனக்கு நடுங்குகின்ற காமநோயைச் செய்தவர் எம்மை அருளாதபடியாலே என் நெஞ்சு அவரை நினைக்கையினுலே, அதுகண்டு கடிய பனிக்காலங் கைம்மிக்கு வர, அதுகண்டு அப்பொழுதே செயலறவிலே யான் அழுந்த, மணற்குன்று அதனை நோக்கி நடுங்குகின்ற நோயிலே உழந்து என்னலத்தை இருந்திழந்தேனது இடும்பையைத் தரும் நோய்க்குத் தான் கரைந்து தாழ்வனபோல இராநின்றதற்குக் காரணமென்னோதான்?

திரையால் மணற்குன்று கரைந்து வீழ்கின்றதனைக் கண்டு கூறினள். 'ஆழ்ந்து,' ஆழவென்க.

(கக—உஉ) வையினர் . .

. . லேவன்கோலோ :—

(இ - ள்.) இறந்துபட்டு வருத்தந்தீராமல் என்னைவைத்து, என் நலத்தை உண்டவர் ஈண்டு வாராதபடியாலே என்னெஞ்சு அவரை நினைக்கையினாலே, அதுகண்டு பனிக்காலம் வருத்த, அதுகண்டு அப்பொழுதே மயக்கத்தாலே செயலற்ற நெஞ்சினேனாய்க் கலக்கத்திலே அழுந்த, மரம் அதனை நோக்கி வருத்தத்தாற் செய்தவைபோலே மயக்கங்கொண்ட நெஞ் சோடே இலைகள் குவிதற்குக் காரணம் என்னோதான்?

எனவாங்கு :—

(இ - ள்.) என் இவள்
சொல்லாநிற்க ;
'ஆங்கு' : அசை.

(உ௪—உ௭) கரைகாணுப்
விரைந்தே:—

(இ - ள்.) கரைகாணாத நடுக்கடலிலே மரக்கலங் கெட்டு அழுந்துகின்றவன் திரை கொண்டுவந்துதர ஒரு தெப்பத்தைப் பெற்றுப் பின்பு தீதில்லையாய்ப் பிழைத்தாற்போல இவள்காதலர் விரைந்து புகுத இடும்பை யாவதும் விரைந்துபோயிற்று; அதனைக்காணீரென வாயில்கள் தம்முள்ளே கூறினர்.

எனப்புகுதர வென்க. 'ஆல்' :
அசை.
இதனாற் றலைவிக்குப்

புணர்ச்சியுவகை பிறந்தது.

இஃது ஒத்தாழிசைக்கலி.

(கஎ

கஙரு.

துணைபுணர்ந் தெழுதருந் தூநிற
வலம்புரி
யிணைதிரள் மருப்பாக வெறிவளி
பாகனா
வயிறிணி நெடுங்கத

வமைத்தடைத் தணிகொண்ட

சுக்அ

கலித்தொகை

[கலி - கருடு

வெயிலிடு[1] களிறேபோ
விடுமண னெடுங்கோட்டைப்
ரு. பயிறிரை நடுநன்றுட்
பாய்ந்துறாஉக் துறைவகேள்;
கடிமலர்ப் புன்னைக்கீழ்க் காரிகை
தோற்றாளைத்
தொடிநெகிழ்ந்த தோளளாத்
துறப்பாயான் மற்றுநின்

குடிமைக்கட்[2] பெரியதோர்
குற்றமாய்க் கிடவாதோ;
ஆய்மலர்ப் புன்னைக்கீழ்
பூணிநலந் தோற்றாளை ௪0.
நோய்மலி நிலையளாத்
துறப்பாயான் மற்றுநின்
வாய்மைக்கட் பெரியதோர்
வஞ்சமாய்க் கிடவாதோ;

திகழ்மலர்ப் புன்னைக்கீழ்த் திருநலந் தோற்றாளை
இகழ்மலர்க் கண்ணளாத் துறப்பாயான் மற்றுநின்
புகழ்மைக்கட் பெரியதோர்
புகராகிக் கிடவாதோ;

கரு. எனவாங்கு,

சொல்லக் கேட்டனை யாயின்
வல்லே
யணிகிளர் நெடுவரை
யலைக்குநின் னகலத்து
மணிகிள ராரந் தாரொடு
துயல்வர
வுயங்கின ளுயிர்க்குமென்
றோழிக் ௨௦. கியங்கொலி
நெடுந்திண்டேர் கடவுமதி
விரைந்தே. இது வரையாது வந்தொழுகுந்
தலைவனைத் தோழி நெருங்கி
வரைவுகடாயது,

(௧—௫) துணைபுணர்ந் . .
. . துறைவகேள்:—

(இ - ள்.) வேல்தைத்துச் செறிந்த நெடிய கதவாகச் சமைத்து அத னால் அடைத்து அழகுகொண்ட எயிலைக் குத்துங் களிறுபோலே இடுமண லினது நெடிய சிகரத்தைப் பயின்ற திரை, அலைக்கின்ற காற்றுப் பாகனாகத் துணையைக் கூடி எழுகின்ற தூய நிறத்தையுடைய வலம்புரிகள் இணைந்த திரண்ட கொம்புகளாக, நடுநாட்கண்ணே குத்தி அவ்வியானைபோலே முழங் குந் துறைவனே! யான் கூறுகின்றதனைக் கேள்;

"அயிற்கதவம் பாய்ந்துழக்கி" *என்றார் பிறரும். தன்னாற்[3] பாதுகாக் கப்படுகின்ற மணற்குன்றைத் தானே கரைத்தாற்போல நின்னாற் பாதுகாக் கப்படுந் தலைவியை நீ தானே வருத்தாநின்றாய் என உள்ளுறையுவமங் கொள்க. 'களிறே போல்' என்ற வினையுவமங் கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்து நின்றது.

---

* முத்தொள்ளாயிரம்.

(பாடம்) 1. வெயிலடு. 2. குடிமைக்கீழ்ப். 3. தான்.

(சு-அ) கடிமலர்ப் . . . கிடவாதோ :—

(இ - ள்.)

மணத்தையுடைத்தாகிய

மலரினையுடைய புன்னைக்கீழ்

நின்னைப் புணர்ந்ததனால் தன்னழகு

தோற்றவளைத் தொடியுட்பட*

நெகிழ் கின்ற தோளளாம்படி

கைவிடுவாயாயிராநின்றாய்; அங்ஙனங்

கைவிடுகின்றது பின்னை நின்

குடிமையிடத்துப் பெரியதொரு

குற்றமாய்த் தங்காதோ ?

'குடிமை': ஒழுக்கம்.

(கூ—கக) ஆய்மலர்ப்

கீடவாதோ:—

(இ - ள்.) நன்றென்று ஆய்ந்த மலரையுடைய புன்னைக்கீழ் நின்னைப் புணர்ந்ததனால் தன் அழகையுடையநலந் தோற்றவளைக் காமநோய் மிகுகின்ற நிலைமையளாகக் கைவிடுவாயா[1] யிராநின்றாய்; அங்ஙனங் கைவிடுகின்றது பின்னை நின் மெய்கூறுதற்கட் பெரியதோர் பொய்யாய்த் தங்காதோ?

மெய்† நின்னிற்பிரியேனெனத் தெளிவித்தது.

(கடு—கச) திகழ்மலர்ப் . . . . கிடவாதோ:—

(இ - ள்.) விளங்குகின்ற மலரையுடைய புன்னைக்கீழ் நின்னைப் புணர்ந்ததனால் திருவின் நலம்போன்ற நலத்தைத் தோற்றவளை முன்பு தோற்ற மலர்கள்‡ தாம் இகழ்கின்ற கண்ணையுடையளாம்படி கைவிடுவாயா யிராநின்றாய்; அங்ஙனங் கைவிடுகின்றது பின்னை நின்னைப் புகழ்ந்து கூறுந் தன்மையிடத்துப் பெரியதோர் குற்றமாய்த் தங்காதோ?

(கரு) எனவாங்கு:—

(இ - ள்.) என்று யான் சொல்ல;
'ஆங்கு' : அசை.

(கசு—உ0) சொல்லக்

. . . . . விரைந்தே:—

(இ - ள்.) வல்லே சொல்லக் கேட்டாயாயின், அழகு விளங்குகின்ற நெடிய மலையை வருத்தும் நின் மார்பிடத்தே மாணிக்கம் விளங்குகின்ற முத்துவடம் பூமாலையோடு அசைதலுண்டாக அணிந்து வருந்தினனாய் நெட்டுயிர்ப்புக்கொள்ளும் என்றோழிபொருட்டு ஓடுகின்ற ஒலியினையுடைய நெடிதாகிய[2] தேரை விரைந்து செலுத்துவாயென வரைவுகடாயினள்.

" களனும் பொழுதும்
வரைநிலை விலக்கிக், காதன் மிகுதி
யுளப்
படப் பிறவு, நாடு மூரு மில்லுங்
குடியும், பிறப்புஞ் சிறப்பு மிறப்ப
நோக்கி, யவன்வயிற் றோன்றிய
கிளவியொடு தொகைஇ, யனைநிலை
வகையான் வரை

---

* சீவகசிந். ௪௬௯. † கலி. ௨௧ : ௭-௮. ‡ குறள்-௧௨௬௧ (உரை).

(பாடம்) 1, கைவிடுவையா. 2, நெடியதாகிய,

தல் வேண்டினும்"* என்பதனிற்
"சிறப்பு" என்பதனால் ஒழுக்கமும்
வாய்மையும் புகழும் பிறப்புங் கூறி
வரைவுகடாயினான்.

இதனாற் றலைவற்கு அசைவு
தோன்றிற்று.

இஃது ஒத்தாழிசைக்கலி.
(கஅ)

கருசு.

இவர்திமி லெறிதிரை
யீண்டிவந் தலைத்தக்கா

ஓவநுநீ ருயரெக்க ரலவனு
டளாவரித்

தவஸிறன் கழகத்துத்
தவிராது வட்டிப்பக்

கவறுற்ற வடுவேய்க்குங்
காமர்பூங் கடற்சேர்ப்ப ;

ரு. முத்துறழ் டணலெக்க
ரளித்தக்கான் முன்னுயம்

பத்துருவம் பெற்றவன்
மனம்போல நந்தியா

ளத்திறத்து நீநீங்க
வணிவாடி யவ்வாயம்

வித்தத்தாற்
றோற்றான்போல் வெய்துய
ருழப்பவோ ;

முடத்தாழை முடுக்கரு
ளளித்தக்கால் வித்தாய
மிடைத்தங்கக் கண்டவன்
மனம்போல நந்தியாள்
கொடைத்தக்காய் நீயாயி
னெறியல்லாக் கதியோடி
யுடைப்பொதி
யிழந்தான்போ லுறுதுய
ருழப்பவோ ;

நறுவீதாழ் புன்னைக்கீழ்

நயந்துநீ யளித்தக்கான்
மறுவித்த மிட்டவன்
மனம்போல நந்தியா

கரு. ளறிவித்து நீநீங்கக்
கருதியாய்க் கப்பொருள்

சிறுவித்த
மிட்டான்போற் செறிதுய

ருழப்பவோ ; ஆங்கு,
கொண்டுபலர் தூற்றுங்
கௌவை யஞ்சாய்
தீண்டற் கருளித்
திறனறிந் தெழீஇப்

உ௦. பாண்டியஞ் செய்வான்
பொருளினு
மீண்டுக விவணல மேறுக
தேரே.

இது வரைவிடை வைத்துப் பிரியக்
கருதிய தலைவனைத் தோழி தலைவி
யாற்றாமை கூறிச் செலவுவிலக்கி
வரைவுகடாயது.

---

* தொல். பொருள்: ககஎ

நெய்தல் - ககூ]

நெய்தற்கலி

௪௨௧

(௧—௪) இவர்திமி . . . .
கடற்சேர்ப்ப:—

(இ - ள்.) பரக்கின்ற,
மீன்பிடிக்குந் திமிலையுடைய,
எறியுந்திரைகள்
திரண்டு வந்து அலைக்க,
ஊறுகின்ற நீரையுடைய உயர்ந்த
இடுமணலிடத்து

அளையினின்றும் போந்து விளையாடித்திரியும் புள்ளிகளையுடைய அலவன்
மனவேட்கை கெடுத்தலில்லாத* தண்ணிதென்று நீக்கின சூது பொருகின்ற

இடத்தே வடுவுற்ற கவற்றினை
வேட்கை தவிராதே உருட்ட

அக்கவற்றை
ஒக்கும் விருப்பம் மருவின
பொலிவினையுடைய கடற்சேர்ப்பனே
;
'அளை' : முழை ; 'வரி':
புள்ளி. "புள்ளிக்களவன்"† என்றார்
பிறரும்.
'தண்கழகம்', கண்டுக்
குளிர்ச்சியை உணர்த்தாது
"தண்பொன்"
என்றாற்போல இழிவை
உணர்த்திநின்றது.
அத்துறைக்கு உரியவாய்
இயல்பாகச் . சிறப்பு நிகழும்படி
ஆடித்

திரியும் புள்ளியையுடைய
அலவன் கண்களையுடைய உருண்ட
கவற்றை
உருட்ட அக்கவற்றை ஒக்கும்
என்றதனால் உலகியல்வழக்காகிப்
பின்பு
இல்லறம் நிகழுங் களவொழுக்கம்
இவ்வூரிலுள்ளார்க்கு இழிந்த
தொழிலு
மாய்த் தோன்றாநின்றதெனை
உள்ளுறையுவமங்கொள்க. "பலகை
செம்
பொனகப் பளிங்கு காயாப்
பரப்பி, யலவ னுடும் வகைபோ
லரும்பொற்

கவறங் குருளக், குலவும் பவழ
வுழக்கிற் கோதை புரளப் பாடி,
யிலவம்
போதேர் செவ்வா, யிளையோர்
பொருவார்க் காண்மின்" என்னுஞ்
சிந்தா
மணியாலும் ‡ இதுவே
பொருளாதல் உணர்க.

(ஒ—அ) மூத்துறழ் . . . .
நுழப்பவோ :—

(இ - ள்.) முத்தையொக்கும்
எக்கராகிய மணலிலே நீ கூட,
முற்பட இடுகின்ற தாயம் முன்னை[1]

மனைகட்டலாம்படி கவற்றாலே ஈரைந்தைப் பெற்றவனுடைய மனம்போலே ஆக்கம் பெருகினவள், அங்ஙனம் அளிக்குங் கூற்றினின்று நீ நீங்குகையினாலே அப்பெருந் தாயமின்றி ஈரிரண்டு இரு மூன்று என்னுஞ் சிறு தாயம் இடுதலாற் தோற்றவனைப் போலே அழகு கெட்டு வெய்தாகிய வருத்தத்திலே அழுந்தவோ?

'உருவம்', என்றது கவற்றை.

(க–கஉ) முடத்தாழை நுழைப்பவோ :—

(இ - ள்.) முடத்தையுடைய

தாழைமுடக்குக்குள்ளே நீ கூடப் போ ரிடையிலே சிறுதாயம் இடவேண்டின அளவிலே சிறுதாயந் தங்கக்கண்டவ

னுடைய மனம்போலே ஆக்கம்பெருகினவள், சுற்றத்தார்க்குப் பொருளைக்

கொடுத்து வரைந்துகோடற்குத் தக்கவனே! நீ முன்பே பொருளைத்

---

* குறள், கூசுO. † கலி, அஅ: சுO. ‡ சீவகசிங், கூஉஎ.

(பா ம்) 1 ...வன்னே

- கரு௱

தேடாதே இப்பொழுது பொருள்வயிற் பிரிவை ஆராய்ந்து பார்ப்பாயாயிற் சிறுதாயஞ் சிறுக இடவேண்டுமனவில் இடாமற் பெருக இட்டு வெல்லும் நெறியல்லாத நெறியிலே சூதுபொருகையிஞலே அதற்கென்று கட்டிவைத்த தன்னுடைய பொருளை இழந்தவனைப் போலே மிக்க துயரிலே அழுந்தவோ?

(கரு—கசு) நறுவீதாழ் . . . .

நழப்பவோ :—

(இ - ள்.) நறியதாகிய பூத்தங்கின புன்னைக்கீழே நீ விரும்பிக் கூட

இருகாற் சிறுதாயம் இடவேண்டின அளவிலே ஒருகாலன்றியே இருகாலாவதுஞ் சிறுதாயம் இட்டவன் மனம்போலே ஆக்கம் பெருகினவள், நீ பிரிந்து வந்து வரைவேனென்று எமக்கறிவித்துப்[1] பிரியக் கருதின நின்பொருட்டு அக்கவறு இருகாற் சிறுதாயம் இட வேண்டின அளவிலே ஒருகாற் சிறு

தாயம் இடப்பட்டவனைப்போலே செறிந்த துயரிலே அழுந்தவோ?

இது தகவாகாது காணெனக் கூறிப் பின்னும்;

(கஎ) ஆங்கு :—

அசை.

(கஅ—உக) கொண்டு பலர்

தேரே :—

(இ - ள்.) நீ பலரும் மேற்கொண்டு தூற்றும் அலருக்கு அஞ்சாய்; இதனைக் கைவிட்டு இவளை வரைந்துகொண்டு கூடுதற்கு அருள்பண்ணி அதற்கார் திறத்தை அறிந்து எழுந்திருந்து தேரை ஏறுவாயாக ; அங்ஙனம், வரைந்தால் இவள் நலம் உழவாடியாகியிருப்பாளிடத்துப் பெரும் பொருளி

னும்[2] ஈண்டுவதாக என

வரைவுகடாயினாள்.

இதனாற் றலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது ஒத்தாழிசைக்கலி.

(கக)

கரு.எ.

அரிதே தோழிநா ணிறுப்பா

மென்றுணர்தல்
பெரிதே காமமென்
னுயிர்தவச் சிறிதே

பலவே யாமம் பையுளு முடைய
சிலவே நம்மோ டுசாவு மன்றி

ரு. லழலவிர் வயங்கிழை யொலிப்ப
வுலமந்
தெழிலெஞ்சு மயிலி னடுங்கிச்
சேக்கையி
னழலா கின்றவர் நக்கதன்[3]
பயனே ;

(பாடம்) 1. வரைவேனென்றே

பிக்கறிவித்துப். 2. இவள் நலமும்
வாடில ளாகியிருப்பாள்; இருவரிடத்தும்
பெறும் பொருள் இன்னும். 3.
இன்றவனக்கதன். நெய்தல் - உ0]

நெய்தற்கலி

சூஉ/ரு

மெல்லிய நெஞ்சு பையுள்
கூரத்தஞ்

சொல்லினு னெய்தனை யல்ல
தவர்நம்மை க0.
வல்லவன் றைஇய வாக்கமை
கடுவிசை

வில்வினு னெய்தலோ விலர்ம
ஞயினை
வில்வி னுங் கடிதவர்[1]
சொல்வி னுட் பிறந்தநோய்;

நகைமுத லாக நட்பி னு
ளெழுந்த
தகைமையி னலித லல்ல
தவர்நம்மை
கரு. வகைமையி னெழுந்த[2]
தொன்முரண் முதலாகப்
பகைமையி னலிதலோ
விலர்ம ஞயினை
பகைமையிற் கடிதவர்
தகைமையி னலியுநோய்;

நீயலே னென்றென்னை
யன்பினாற் பிணித்துத்தஞ்
சாயலிற் சுடுதலல்ல
தவர்நம்மைப்

உ0. பாயிரு ளறநீக்கு நோய்தபு நெடுஞ்சுடர்த்
தீயினாற் சுடுதலோ விலர்ம ணுயிழை

தீயினுங் கடிதவர் சாயலிற்
கனலுநோய்;

ஆங்கு,
அன்னர் காதல ராக
வவர்நமக்

உரு. கின்னுயிர் போத்தரு
மருத்துவராயின்

யாங்கா வதுகொ ேேழி யெனையதூஉந்
தாங்குதல் வலித்தன் ருயி
னீங்கரி துற்றன்றவ ருறீஇய நோயே.

இது வரைவுநீட ஆற்ருள்ாயின

இடத்துத் தலைவி ஆற்ருமையை

அவடன்ருனே

தலைவற்கு அறிவிக்கலுற்ற தோழி, தலைவன்

சிறைப்புறத்தாளுகத் தலைவினை

வற்புறுக்க, அவள் வன்புறை

எதிரழிந்து கூறியது.

(க — எ) அரிதே . . . . .
பயனே :—

(இ - ள்.) தோழீ! நம்முடைய நாணை நம்மிடத்தே நிறுத்துதலை
செய்வாமென்று உணர்ந்திருத்தல் அரிது; அதற்குக் காரண மென்னெனி

வேட்கை பெரிதாயிராநின்றது;

அதனால்* தேய்ந்த உயிர் மிகச்
சிறிதாயிர

நின்றது; நமக்கு வருத்தத்தைத்
தருதலையுடைய யாமங்களும்
பலவாயிர

நின்றன; அவ்வியாமங்களிற் றுயிலாதபடி துணையைப் பிரிந்த வருந்

* குறுந் - கஅ.

(பாடம்) 1. கொடிதவர்.

2. வகைமையுளெழுந்தி.

நம்மோடு உசாவும் அன்றில்களுஞ் சில
உளவாயிராநின்றன; ஆதலான் அவ்
வுயிர் தாங்குதல் அரிது; முடிவில்

அவர் நம்மோடு கூடியதனாற் பெற்றபயன் பீலிஉதிர்ந்த மயில்போலே பொலிவழிந்த காரணத்தால் நாம் நடுங்கச் சேக் கையிலே கிடந்து உடம்பு நெருப்பிலே ஓடவைத்த பொன்னாற்செய்த சிலம்பு முதலியன ஒலிக்கும்படி உலமர நமக்குக் காமத்தீ உண்டாகாநின்ற தொன்றுமே; உலமர நடுங்க எனத் திரிக்க.

(அ - கஉ) மேல்லிய . . . . பிறந்தநோய்:—

(இ - ள்.) அவர் நெஞ்சுபோல் வலியுடைத்தன்றி நம்முடைய வலியில்லாத நெஞ்சு வருத்தம் மிகும்படி தாம் நின்னிற் பிரியேனென்று தெளி

வித்த சொல்லால்
வருத்தினமையல்லாது அவர்
நம்மைப், பண்ணவல்லவனாலே
பண்ணப்பட்ட வடிவமைந்த கடிய
விசையையுடைய வில்லினால்,
எய்தற்றொழிலைச் செய்தலோ
உடையரல்லர் ; ஆயினும் ஆயிழாய்!
அவர் தெளிவித்தசொல்லாற்
பிறந்தநோய் மிகவும் வில்லினுங்
கடிதாயிராநின்றது;

(கரு - கஎ) நகைமுத . .
. . ளவியுநோய் :—
(இ - ள்) சுருாயமறைத்தல் *
என்னும் மெய்ப்பாடு காரணமாக நாங்

கொண்ட நட்பிலே தோன்றிய தமது தகுதிப்பாடுகளாலே வருத்துத லொழிய அவர் நம்மைப் பொருள்களின் கூறுபாட்டாலே தோன்றிய பழை தாகிய மாறுபாடு காரணமாக வந்த பகையாலே வருத்துதலேர் உடைய ரல்லர்; ஆயினும் ஆயிழாய்! அவர் தமது தகுதிப்பாடுகளாலே வருத்துத லொழிய அவர் நம்மை வருத்துநோய் பகைமையினுங் கடிதாயிராநின்றது;

'முதல்': காரணம். பொருள்கள் ஈண்டு மனப்பொருள் முதலியன.

(கஅ — உஉ) நீயலே . . . . களவுநோய்:—

(இ - ள்.) நின்னிற் பிரியேனென்று சொல்லி, என்னைத் தனக்குண்டாகிய அன்பினாலே வயக்கப்படுத்தித் தமது மென்மையாலே சுடுதலொழிய அவர் நம்மைப் பரந்த இருளை அவ்விடத்தினின்றும் போம்படி நீக்கும் நெடியதாகிய கொழுந்தினையுடைய நெருப்பாற் சுடுதற்றொழிலோ உடையரல்லர்; ஆயினும் ஆயிழாய்! அவர் ஆண்டுச் செய்த காமநோய் கெடுதற்கு[1] காரணமான மென்மையால் நின்று எரியுங் காமநோய் தீயினுங் கடிதாயிராநின்றது;

நோய் தபு சாயல் என்க.

அசை.

(உரு) ஆங்கு :—

---

* தொல். பொருள் : உகக.

(பாடம்) 1. கெடுத்தற்கு.

செய்தல் - உக]

நெய்தற்கலி

(உச — உஅ) அன்னர்
நோயே :—

(இ-ள்) தோழீ ! நெஞ்சு அத்தன்மையவர் நம்மிடத்துக் காதலை யுடையவராகக் கருதி முன்பு நம்மை நீங்குதலருமையுற்ற அவ்வியற்கைப் புணர்ச்சியினன்று அவர் நம்மையுறுத்தின நோயைத் தான் பொறுத்தலைத் துணிந்த துணிவை ஆராய்ந்துபார்க்கில் அத்துணிவு எப்படியும் நம் இனிய உயிரைப்போக்கும்; அவர் நமக்கு

உயிரைப் போகாமல்மீட்கும் மருத்துவ ராய் இருப்பாராயின், அந்நிலை எக்காலத்து அவர்க்கு உண்டாவதுகொல் லென வன்புறை எதிரழிந்து கூறினள்.

'வலித்தன்று' என்பது வலித்ததன்றென்னும் மறைப்பொருள் தாராமை உணர்க.

இதனாற் றலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது "இடைநிலைப்பாட்டு"* என்றதனால் தாழம்பட்ட ஓசையின்றி ஐந்தடியான் இடைநிலைப்பாட்டு வந்த ஒத்தாழிசைக்கலி. (௨௦)

கரு அ.

எழின்மருப் பெழில்வேழ
மிகுதரு கடாத்தாற்
றெழின்மாறித் தலைவைத்த
தோட்டிகை நிமிர்ந்தாங்
கறிவுநம் மறிவாய்ந்த
வடக்கமு நாணொடு
வறிதாகப் பிறரென்னை
நகுபவு நகுபுடன்
ரு. மின்னவிர் நுடக்கமுங்
கனவும்போன் மெய்காட்டி
யென்னெஞ்ச மென்னோடு
நில்லாமை நனிவெளவித்
தன்னலங் கரந்தாளைத்
தலைப்படுமா றெவன்கொலோ

மணிப்பீலி சூட்டிய
நூலொடு மற்றை
யணிப்பூளை யாவிரை
யெருக்கொடு பிணித்தியாத்து
மல்லலூர் மறுகின்க
ணிவட்பாடு மிஃதொத்த
னெல்லீருங் கேட்டமி
னென்று;

படரும் பனையீன்ற மாவுஞ்
சுடரிழை
நல்கியா ளல்கி யவை;

பொறையென் வரைத்தன்றிப் பூநுத லீத்த
கரு. நிறையழி காமநோய் நீந்தி யறையுற்ற

வுப்பியல் பாவை யுறையுற்
றதுபோல
வுக்கு விடுமென் னுயிர் ;

---

* தொல். பொருள்; சசசு.

சஉக

கலித்தொகை

பூவிரி பொலமல ரவிரை
வேய்வென்ற
தோளா ளெமக்கீத்த பூ ;
உ௦. உரிதென்[1] வரைத்தன்றி

யொள்ளிழை பரிசழி

பைதனெய் மூழ்கி யெரிபரந்த

நெய்யுண் மெழுகி

னிலையாது பையயத்

தேயு மளித்தென் னுயிர் ;

இளையாரு மேதி லவரு

முளையயா உரு. னுற்ற துசாவுந்

துணை ;

என்றியான் பாடக் கேட்டு

[கலி - கஙஅ

தந்த

அன்புறு கிளவியா ளருளிவந்
தளித்தலிற்
றன்பத்திற் றுணையாய
மடலினி யிவட்பெற
வின்பத்து ளிடம்படலென்
றிரங்கின ளன்புற் றடங்கருந்
தோற்றத் தருந்தவ
முயன்றோர்தம்
முடம்பொழித் துயருல
கினிதுபெற் றாங்கே.

இது மடலூர்ந்து தலைவியை எய்திய
தலைவன் தான் மடலூர்ந்தவாறும்
அவளை

எய்தியவாறுந் தனக்குப் பாங்காயினர்க்குக் கூறியது.

(க—கக) எழின்மருப் . . . . னென்று :—

(இ - ள்.) மின் விளங்குகின்ற நுடக்கமுங் களவினது தோற்றமும் போலே தன் வடிவைக் காட்டி * என்னுடனே முற்படக் கூடிப் பின்னர் பிறர் என்னை இகழ்ந்து சிரிப்பனவற்றையும் † எனக்குக் காட்டி எனக்குரிய நெஞ்சம் என்னோடு கூடிநில்லாமல் அழகினையுடையமருப்பினையும் அழகினையு முடைய வேழஞ் சொரிதலைச் செய்யும் மதத்தாலே பாகனுக்குச் செய்யு தொழில்களைத் தவிர்ந்து தான் வேண்டியவாறொழுகாதபடி தன்னை விலக் குந் தோட்டியையுங் கைகடந்தாற்போலத் தன்மேற் சென்ற வேட்கையி னாலே என் ஏவலைச் செய்தலைத் தவிர்ந்து தான் வேண்டியவாறொழுகாதப தனக்குக் காவலாகிய அறிவும் ‡ நம்மறிவாலே ஆராய்ந்த அடக்கமும் § இய பாகத் தோன்றிய நாணுடனே வருவிதாக அவற்றைக் கைகடக்கும்படி $ மி வும் என்னெஞ்சைக் கைக்கொண்டு தன் நலத்தை யான் காணாமல் மறை தவளைக்கூடும்வழி எவ்வழிதானென்று ஆராய்ந்து இனிமடலேறுதலே கூடு வழியென்று கருதி மடன்மாவிலே சூட்டவேண்டி ¶ நூலாலே நீலமணிபே

* கலி. கக௬ : ரு-கக. † கலி. சுக : உஉ. ‡ குறள், ௪உஉ.
§ பழ. உ௪க. $ குறள், ககஉ. ¶ சிலப். உக : எ௦-எக.
(பாடம்) 1. உரித்தென.

நெய்தற்கலி

சஉஎ லும் நிறத்தையுடைய

பீலியையும் மற்றை அழகையுடைய
பூளைப்பூவையும் ஆவிரம்பூவையும்
எருக்கம்பூவோடே தொடுத்து
அம்மடன்மாவிலே கட்டி
வளப்பத்தையுடைய ஊரின்
மறுகின்கண்ணே இவனொருத்தன்
இவளைப் பாடும் ; பாட்டை
எல்லீருங் கேட்பீராக என்று
சொல்லிப் பாடத் தொடங்கி ;

சகுவனவற்றையுங்காட்டி
என்றான், மடலேறுதல்

வரைபாய்தலாகிய இரண்டினையுந் தான் பின்புகருதுதலின். இவனொருத்தன் எனத் தன்னைப் பிறர்போற் கூறினான். அஃது உலகத்தார் பாடும் பாட்டன்மையுந் தோற்றுவித்து நின்றது.

இவனென்று சுட்டிற்று, கையில் எழுதிப்பிடித்த கிழியிலவனை.

(கஉ—கங) படரும் . . . . யவை :—

(இ - ள்.) விளங்குகின்ற இழையினையுடைய, என்னாலே காமிக்கப் பட்டவள் எனக்குக்

காதலித்துத் தந்தவை*. வருத்தமும் வருத்தத்தால் உண்டான பனையீன்ற மடலாற் செய்த குதிரையும்;

(கஅ-கஎ) பொறையெண் . . . . ணுயிர் :—

(இ - ள்.) என்னுடைய உயிர்தான் பொறுத்தல் என் எல்லைத் தன்றாகப் பொலிவுபெற்ற நுதலினையுடையாள் தந்த, நிறை என்னுங் குணம் அழிதற்குக் காரணமான காமநோயை நீந்தி உப்புப் பாத்தியிலே கிடந்த உப்பால் இயன்ற பாவை † மழைத்துளியை உற்ற தன்மைபோலக்

கலரந்துவிடாநின்றது;

(கஅ—கக) பூளை

. . . பூ:—

(இ - ள்.) வேயை வென்ற தோளையுடையாள் எனக்குத் தந்த பூக்கள் பூளைப்பூவும் பொன்போன்ற பூவையுடைய ஆவிரம்பூவும்;

எனவே, தான் கொடுத்தன நல்லபூ என்றான். 'பொலமல' ரென்னும் முடிவு "தொடரியலான"‡ என்னும் இலேசான் முடித்தாம்.

(உ0—உக) உரிதேன்

. . . ஞுயிர்:—

(இ - ள்.) ஒள்ளிய

இழையிழையுடையாள் என்றாற் பொறுக்குமெல் லைத்தன்றாக எனக்குரித்தாகத் தந்த, என்னியல்புகள் அழிதற்குக் காரண மான, வருத்தத்தையுடைய காமநோயிலே என்னுயிர் அழுந்தி, நெருப்புப் பரந்த நெய்யுள்ளே கிடந்த மெழுகு மெத்தென உருகித் தேயுமாறுபோல நிலையில்லாதே மெத்தென மெத்தெனத் தேயாநின்றது ; இஃது எல்லா ராலும் அளிக்குந் தன்மையுடைத்து ;

---

* குறள் - ௧௧௯௫. † அகம் - ௨௦அ : ௧அ-௨௧. ‡ தொல் - எழுத் : ௩௫௯.

- கநு

(உச—உரு) இளையாரு .

. . . துணை :—

(இ - ள்.) யானுற்ற காமநோய்க்கு யான் உளையும்படி உசாவுத் துணை இளையபிள்ளைகளும் இக் காமநோய்க்கு அயலாருமே ; பிறரில்லை ;

(உக—கக) என்றியான்

. . . . றங்கே :—

(இ - ள்.) இப்படி இப்படி

யான் பாட அன்புறு இனவியான்
அதனைக் கேட்டு அருள்பண்ணி
அதன்மேலே அன்புற்று வந்து
என்னை அளிக்கையாலே,
மனவேட்கை அடங்கின அரிய
விளக்கத்தையுடைய செய்தற்கரிய
தவத்தை முயன்றோர் தம்முடம்பை
இவ்வுலகிலே போகட்டுச் சுவர்க்கத்தை
இனிதாகப் பெற்றாற்போலத்,
துன்பத்திற்குத் துணையாய்நின்ற
மடம் இனி இவளைப் பெறும்படியாக
இன்பத்துக்கு
இடம்படக்கடவாளென்று
இரங்கினு னென்றான்.
இது 'பூளையாவிரை' எனத்

தளைவிரவின, பாட்டிடைமிடைந்த
ஐஞ்சீரடுக்கியும் ஆறுமெய்பெற்றும்
வாராத தரவும் போக்கும் வந்த கலி
வெண்பாட்டு.
(உக

கஙுகூ.

சான்றவிர் வாழியோ
சான்றவி ரென்றும்
பிறர்நோயுந் தந்நோய்போற்
போற்றி யறனறிதல்
சான்றவர்க் கெல்லாங் கடனனு லிவ்விருந்த

சான்றீ ருடீக்கொன்

றறிவுறுப்பேன் மான்ற
ரு.   துளியிடை மின்னுப்போற்
றோன்றி யொருத்தி
யொளியோ டுருவென்னைக் காட்டி
யளியளென்
        னெஞ்சாறு கொண்டா
ளதற்கொண்டுந் துஞ்சே
னணியலங் காவிரைப் பூவோ
டெருக்கின்
        பிணையலங் கண்ணி மிலைந்து
மணியார்ப்ப
  ௧0.   வோங்கிரும் பெண்ணை
மடலூர்ந்தென் னெவ்வநோய்
தாங்குத றேற்றா விடும்பைக்

குயிர்ப்பாக

விங்கிழை மாதர் திறத்தொன்று நீங்காது
பாடுவேன் பாய்மா நிறுத்து;
யாமத்து மெல்லியு மெவ்வத்
திரையலைப்ப

கரு. மாமேலே னென்று மடல்புணையா நீந்துவேன்
றேமொழி மாத ருறாஅ துழீஇய

காமக் கடலகப் பட்டு;

மாறுயாதுயலைய
சட்டை

உய்யா வருநோய்க் குயலாகு[1]மைய
வுறீஇயா வீத்தவிம் மா;

உ0. காணுந ரெள்ளக் கலங்கித்
தலைவந்தெ

ஞெணழின் முற்றி யுடைத்துள் ளழித்தரு
மாணிழை மாதரா ளேனரெனக் காமன

தானையால் வந்த படை;
காமக் கடும்பகையிற்

றோன்றினேற் கேம
௨௫. மெழினுத லீத்தவிம் மா ;

அகைமெரி யானுதென்
னுருயி ரெஞ்சும்

வகையினு லுள்ளஞ் சுடுதரு
மன்னே
முகையே ரிலங்கெயிற் றின்னகை
மாதர்
தகையாற் றலைக்கொண்ட
நெஞ்சு ;
௩௦. அழன்மன்ற காம வருநோய்

நிழன்மன்ற நேரிழை
யீத்தவிம் மா;
ஆங்கதை,
அறிந்தனி ராயிற்
சான்றவிர் தான்றவ
மொரீஇத் துறக்கத்தின்
வழீஇ யான்றோ
ரு. ருள்ளிடப் பட்ட வரசனைப்
பெயர்த்தவ
ருயர்நிலை யுலக முறீஇ
யாங்கென்
றுயர்நிலை தீர்த்த னுந்தலைக்
கடனே.

இது மடலேறுகின்ற தலைவன் சான்றோர்க்குக் கூறியது.

(க—கரு) சான்றவிர் . . . . . நிறுத்து :—
(இ - ள்.)

நற்குணங்கள் எல்லாம் அமைந்தீர் ! நற்குணங்களெல்லாம் அமைந்தீர் ! நீர் வாழ்வீராக ! பிறருடைய நோயுந் தம்முடைய நோய் போலே எங்களும் பேணி* அதனாற்பெறும் அறனை அறிந்து போதுதல் உலகத்திலுள்ள சான்றவர்க்கெல்லாம் முறைமையானால், நமக்கும் அது

முறைமையென்று கருதி நமக்கொரு
காரியத்தினைக் கூறுவேன் ; அஃதி
யாதெனின், ஒருத்தி
மயங்கினமழைக்கு நடுவில்
மின்போலேவந்து தோன் றித்
தன்னொளியோடே தன்னுருவையும்
என்னைக் காணப்பண்ணி என்னை
அளிக்குந்தன்மையளாய் அளித்துப்
பின்னர் என் நெஞ்சைத்
தான்வரும்

---

* குறள். கசு௩.

(பாடம்) 1. குயவாகு.

வழியாகக்கொண்டுவிட்டாள்; அதனை
முதலாகக்கொண்டு துயில் கொள்
ளேனாய் அசைகின்ற அழகினையுடைய
ஆவிரையினது பூவோடே எருக்கி
னது கட்டுதலையுடைய
அழகினையுடைய கண்ணியையுஞ்
சூடி வளரும் ரிய பனைமடலாற்
செய்த குதிரையை மணிகள்
ஆரவாரிப்ப ஏறி அப்பாய் மாலை
மனத்தே நிறுத்தி யான்
நீங்காமனின்று வருத்தத்தைத்
தருகின்ற என் காமநோயைத்
தாங்கமாட்டாமையால் உண்டான

மனவருத்தத்திற்கு ஓழிப்பாறுதலாக
இறங்கின பூணியினையுடைய மாதர்
என்னை வருத்தின கூற்றிலே ஒரு
கூற்றினைப் பாடுவேன்; அதனை
இவ்விடத்திருக்க சான்றீர்!
கேளுமென்றான்;

பலராதலிற் சான்றீர் சான்றீரென்றான்.
ஈர் என்று விளியேலாது குறுகி நின்றது.
'ஓ': அசை. பின்பு சான்றீர்
என்றது தான் பின்பு கூறுகின்றதற்கு
எதிர்முகமாக. 'கொண்டும்' என்னும்
உம்மை இசைநிறை. "ஒருத்தி
யொளியோடொரு...துஞ்சேன்" *
என்றது தன்கட்டோன்றிய
அசைவுபற்றி அவலம் பிறந்தது.

(கச — கள) யாமத்து

. . . . . பட்டு :—

(இ - ள்.) தேன்போலும்
மொழியினையுடைய மாதர் தான்[1]
காமுறாதே என்னைக் காமுறுத்தின
காமமாகிய கடலிலே அகப்பட்டு
உசாத் துணை இல்லாத
நடுவியாமத்தும் உசாத்துணையுள்ள
பகலிடத்தும் மன வருத்தமாகிய
திரைகள் வந்து அலைக்கையினாலே
மாவின்மேல் இருக்கின் றேன்
இருக்கின்றேன் என்று மனத்தாற்
கருதியிருந்து அம்மடன்மா ஒரு
தெப்பமாக அக்கடலை நீந்துவேன்;
அஃது என்றிலை யென்றான்;

(கஅ — கக) உய்யா . . . .
மா :—
(இ - ள்.) என்னை
மயக்கமுறுத்தினவள் அதற்கு
மருந்தாகத் தந்த இம்மடன்மா யான்
பிழையாமைக்குக் காரணமான
அரிய காம நோய்க்குப்
பிழைக்கும்படிக்குச் செய்வதொன்றாய்
இராநின்றதென்றான்;
(உo — உரு) காறுந . . .
. . . படை :—
(இ - ள்.) மாட்சிமைப்பட்ட
இழையினையுடைய மாதரா ளரால்
வந்த வருத்தமென்று யான்
கூறும்படியாகக் காமனுடைய

எவ்வாலே வந்த
காமநோயாகிய படை என்னைக்
கண்டார் இகழும்படி யான்கலங்க
என்
னிடத்தே வந்து என்னுடைய
ஆண்டன்மையின்† அழகாகிய மதிலைச்
சூழ விட்டிருந்து புறத்தை
யெல்லாமுடைத்துப் பின்னர்
உள்வாயை அழியா
நிற்குமென்றான்;
'கலங்கி' கலங்க என்க.

* தொல். பொருள்: சூ. உருக—பேராசிரியருரை, (பாடம்) 1, தாக்,

† குறள். ககஙச, நெய்தல் - உரு]

நெய்தற்கலி

சஙடக்

(உச—உரு) காமக்

. . . . மா :—

(இ - ள்.) காமமாகிய கடியபகை ஆண்மையை உள்ளும் புறம்பும் அழித்தலாலே இங்ஙனம் வடிவுகொண்டு தோன்றின எனக்கு அழகை யுடைத்தாகிய நுதலினையுடையாள் தந்த இம்மடன்மா, பரிகாரமாயிற் றென்றான் ;*

(உசு—உக) அகையெரி . . . . நெஞ்சு :—

(இ - ள்.) முல்லைமுகையை ஒக்கும் இலங்குகின்ற எயிற்றையும் இனியதாகிய மகிழ்ச்சியையுமுடைய மாதருடைய அழகாலே அவளிடத் தைப் பற்றிக்கொண்ட என்னுடைய நெஞ்சிடத்து உள்ளத்தைச் சுடப்பட்டு எரிகின்ற காமத்தீ என் அரிய உயிர்போங் கூற்றாலே அமையாதே நின்று சுடுதலைச் செய்யும் ; ஐயோ ! யான் எங்ஙனம் ஆற்றுவேனென்றான் ;

உறப்புடையதுபோலே † நெஞ்சுக்கு உள்ளமுண்டென்றான்.

(கு௦—ருக) அழன்மன்ற . . . . மா :—

(இ - ள்.) காமமாகிய பொறுத்தற்கரிய நோய் அறுதியாக நெருப்பு; ஒத்த இழையினையுடையாள் அதற்குப் பரிகாரமாகத் தந்த இம்மடன்மா அறுதியாக அதற்கொரு நிழலாய் இருந்ததென்றான்;

(கூ௨—கூ௭) ஆங்கதை . . . . . கடனே :—

(இ - ள்.) என்றுகூறி என்னிடத்துச் செல்கின்ற வருத்தத்தை நீர் அறிந்தீராயிற் சான்றீராயுள்ளீர்! அமைந்த சான்றோர் இவன் தவஞ்செய்தற்கு உரியனென்று தவத்துள்ளே கூட்டிக்கொள்ளப்பட்ட அரசனை,‡ அவன்றான் தவஞ்செய்தலினீங்கித் துறக்கத்திற் சேறலை வழுவுகையினாலே, அவ்வழுவுதலை அவர் மீட்டுத், தவஞ் செய்வித்து, உயர்ந்த நிலைமையையுடைய சுவர்க்கத்தே போகவிட்டுத் துயர் தீர்த்தாற்போல, என் துயரினது தன்மையைப் போக்குதலும் நும்மிடத்து முறைமை; எனச் சான்றோரை நோக்கிக் கூறினான்.

இது தன்கட் டோன்றிய அசைவுபற்றி அவலம் பிறந்தது.

இது தரவும் போக்கும்

பாட்டிடைமிடைந்த கலிவெண்பாட்டு.

(௨௨)

கசஂ௦.

கண்டவி ரெல்லாங் கதுமென வந்தாங்கே

பண்டறியா தீர்போல நோக்குவீர் கொண்டது
மாவென் றுணர்மின் மடலன்று மற்றிவை

பூவல்ல பூளை யுழிஞையோ டியாத்த

* குறள், ககூக. † தொல், பொருள்; ககூகூ. ‡ யயாதி அரசனைக் குறிக்கும்,

சஙஉ

கலித்தொகை

[கலி - கசு0

ரு. புனவரை யிட்ட

வயங்குதார்ப்[1] பீலி
பிடியமை நூலொடு
பெய்ம்மணி கட்டி

யடர்பொன் னவிரேய்க்கு மாவிரங் கண்ணி
நெடியோன் மகனயந்து

தந்தாங் கனைய
வடிய வடிந்த வனப்பினென்
னெஞ்ச
௪௦. மிடிய விடைக்கொள்ளுஞ்
சாய லொருத்திக்
கடியுறை காட்டிய
செல்வேன் மடியன்மி
னன்னே னொருவனேன் யான்
;
என்னுனும், பாடெனிற்
பாடவும் வல்லேன் சிறிதாங்கே
யாடெனி லாடலு
மாற்றுவேன் பாடுவேோ
௪௫. வென்னு ளிடும்பை ,தணிக்கு

மருந்தாக
நன்னுத லீத்தவிம் மா ;
திங்க ளரவுறிற் றீர்க்கலா
ராயினுந்
தங்காதல் காட்டுவர் சான்றவ
ரின்சாய
லொண்டொடி நோய்நோக்கிற்
பட்டவென் னெஞ்சநோய் ௨0.
கண்டுங்கண் ணோடா திவ் வூர் ;
தாங்காச் சினத்தொடு
காட்டி யுயிர்செருக்கும்
பாம்பு மவைப்படி னுய்யுமாம்
பூங்கண்

வணர்ந்தொலி யைம்பாலாள்
செய்தவிக் காம
முணர்ந்து முணராதிவ் வூர்;

உரு. வெஞ்சுழிப் பட்ட மகற்குக்
கரைநின்று
றஞ்சலென் றாலு
முயிர்ப்புண்டா மஞ்சிர்ச்[2]
செறிந்தேர் முறுவலாள்
செய்தவிக் காம
மறிந்து மறியாதிவ் வூர்;

ஆங்க,

கூo. என்க ணிடும்பை
யறீஇயினெ[3] னுங்கட்
டெருளுற நோக்கித்

தெரியுங்கா லின்ன

மருளுறு நோயொடு மம்ம

ரகல

லிருளுறு கூந்தலா ளென்னை

யருளுறச் செயினுமக்

கறனுமா ரதுவே.

இது மடலேறுவேனென்ற தலைவன் கண்டார்க்குக் கூறியது.

(பாடம்) 1. மயக்குதார்ப். 2. மென்சீர். 3. யுரை இயினே.

நெய்தல் - உரு]

நெய்தற்கலி

. (க—கஉ) கண்டவி .

. . . யான் :—

(இ - ள்.) என்னைக் கண்ட[1]

நீங்களெல்லாங் கடுகவந்து

அவ்வூரிடத்து என்னைப் பண்டு

அறியாதீர்போலப் பாராநின்றீர் ;

காப்பெய்த மணியைக் கழுத்திலே

கட்டிக் கையாற் பிடித்தலமைந்த

வாய்க்கயிற்றோடே யான்

கையிற்கொண்டது மடன்மாவன்று,[2]

ஏறுவார் ஏறப்படுங் குதிரையென்

றும், பின்னைத் தலையினும்

மார்பினுங் கிடக்கின்ற இவை

தகடாகிய பொன்னினது விளக்கத்தை

ஒக்கும் ஆவிரம் பூவாற் செய்த
கண்ணியும் உழிஞைப் பூவாடே
பூளைப்பூவும் புனத்தையுடைய
மலையிலே மயிலுதிர்த்த பீலியும்
விளங்குகின்ற தனமல்ல, என்
மனத்தாலே நன்றென்று கருதி பான்
கட்டின பூக்தாரென்றும் உணர்வீராக
; திருமால் மகனாகிய காமன் என்
தலைமையை அழித்தலை விரும்பிக்
கொடுக்கப்பட்டுத் தன் மெய் பிடத்தே
அத்தன்மையவாகிய நன்மைகளெல்லாங்
தோன்றிய வனப்பாலுஞ் சாயலாலும்
வடுவகிரின் தன்மையையுடைய
கண்களாலும் என் நெஞ்சாகிய அரண்
இடிந்து போம்படி நடுவே வந்து
என்னைக் கைக்கொள்ளும்

ஒப்பிலாதவளுக்கு யான் வழிபட்டு
உறைதலை உலகத்தார்க்குக் காட்ட
வேண்டிச் செல்லாநின்றேன்;
இதனைக்கண்டு நீர் மனத்தே
வெறுத்துக் குவிந்திராதேகொள்ளும்;
யான் அத்தன்மையையுடையேன்
ஒருவனென் றான்;
'அன்னே'யென்றது தான்
இவ்வாறாதற்கு முன்செய்த
தீவினையை. 'நூல்': ஆகுபெயர். '
தந்' தென்பது "செலவினும்
வரவினும்"* என்னுஞ் சூத்திரப்
பொதுவிதியான் ஈண்டுக் கொடுத்தலை
உணர்த்திற்று. 'ஆனைய' என்றது
நெஞ்சறி சுட்டாய் நின்றது. '
வடிய' என்றது வடு வகிரின்

தன்மையையுடைய கண்களை
உணர்த்திற்று. அடியிலே யுறைதல்
வழிபாடென்னும் பொருடந்து
நிற்றலின் அதனோடே 'ஒருத்திக்கு'
என்னும் சான்கனுருபு முடிந்தது.

(கரு - கசு) என்றனும்

! . . . மா :—

(இ - ள்) நீ ஒன்றுபாடென்று
கூறுவீராயில் எப்படியால் எப்படியா
யினும் சிறிது பாடவும் வல்லேன்;
அம்மடன்மா மேலே இருந்து அஃது
இட வாய் வலவாய் பெயரும்படி நின்
மெய்யை அசைப்பாயென்பீராயின்
அத் தொழிலை யான் ஆளுதலையும்

வல்லேன்; இப்பொழுது
என்னெஞ்சிடத்துக் காமநோயை யான்
ஆற்றும் மருந்தாக நன்னுதல் தந்த
இக்குதிரையினைப் பாடுவேனோ
என்றான்;

அவர் பாடென்றமையின் மேல்
தன்னை வருத்தினமையைக் கூறுகின்
றான்.

---

* தொல். சொல் : உஅ.

(பாடம்) 1. கண்டு.

௯௯

2. மடலன்று, மாவென்று.

௪௩௪
கலித்தொகை

(கஎ - உ0) திங்க . . . .
லூர் :— .

(இ - ள்.) சான்றோர்
திங்களைப் பாம்பு சென்று மறைக்குங்கால் அதனை

வருத்தத்தைத் தீர்க்கமாட்டாராயினும் அதன்மேல் தமக்குள்ள காதலைக்
காட்டித் துன்புறுவர்; அதுபோல இனியமென்மையினையுடைய ஒண்டொ
டியது நோய்செய்யும்* நோக்கிலே அகப்பட்ட என்னுடைய நெஞ்சிடத்துக்
காமநோயைக் கண்ணுற் கண்டுவைத்தும் இவ்வூரிலுள்ளார் அதனைத் தீர்க்க

மாட்டாராயினுங்
கண்ணோட்டமாயினுஞ்† செய்தலிலர் ;

(உக — உச) தாங்காச்
. . . . லூர் :—

(இ - ள்.) பிறராற்
றாங்கவொண்ணாத சினத்தோடே

தன்வடிவைக் காட்டி அவருயிரைப்
போக்கும் பாம்பும் பலரிடைப்
பட்டாற் சாவாதென் ஹும்‡
உலகவழக்கிற்கேற்பச் சான்றோர்
அவைப்படிற் பிழைக்கவுங்கூடும்
அத்தன்மையேனல்லாத எனக்குப்
பூப்போலுங் கண்ணையுங்
கடைகுழன்
தழைக்கின்ற ஐம்பாலினையுமுடையாள் செய்த
இக்காமநோயின் வருத்தத்தை
அறிந்துவைத்தும் இவ்வூரிலுள்ளார்
தீர்ப்பதோர் உபாயம் அறிகின்றிலர்;

(உகு–உஅ) வெஞ்சுழிப்
. . . . . வூர் ·—

(இ - ள்.) கடிய நீர்ச்சுழியிலே அகப்பட்டானொருமகனுக்குக் கரையில் நின்றோர் சென்றெடாமல் அஞ்சாதேகொள்ளென்று கரையிலே நின்று கூறினாலும் அவனுக்கு வருத்தந் தீருதலுளதாம் ; அதுபோல, அழகிய சிலை யுடைய செறிந்த அழகினையுடைத்தாகிய முறுவலையுடையாள் செய்த இக் காமநோயை அறிந்துவைத்தும் இவ்வூரிலுள்ளார் அதனைத் தீர்த்தலாற்றாராயினும் ஒரு தண்ணளி செய்தலையும் அறிகின்றிலர் ;

(உக) ஆங்க :—

அசை.

(௯0—௯௪) என்க ! .

. . . ரதுவே :—

(இ - ள்.) என்னிடத்து நிகழ்கின்ற வருத்தத்தை யான் அறிவி தேன்; இனி இதனை நும்மிடத்தே தெளிதலுறப் பார்த்து ஆராயுங்காலத், இத்தன்மைத்தாகிய மயக்கமுறுங் காமநோயாலுண்டாகிய என்மயக்க நீங்கும்படி இருட்சியுறுகின்ற கூந்தலையுடையாள் என்னை அருளுதலுறும்ப பண்ணுவீராயின், அது நமக்கு அறனும் புகழுமாமென்றான்.

இது தன்கட் டோன்றிய ஆசைவுபற்றி அவலம் பிறந்தது.

இது 'பாடெனில்', 'ஆடெனில்' என எதுகை யியைந்த அடி 'என்ஞ ஹும்' என வேறுநின்ற சீரோடுங் கூடி ஐஞ்சீ ரடுக்கிவந்த கலிவெண் பாட்டு.

(உ

---

* குறள். ௬0௬௯. † குறள், ௫௭௯-௫௭௭; ‡ பழ, ௲௧௧.

நெய்தல் - உச]

நெய்தற்கலி

சஙரு

அரிதினிற் றோன்றிய
யாக்கை புரிபுதாம்
வேட்டவை செய்தாங்குக்
காட்டிமற் றாங்கே[1]
யறம்பொரு[2]
ளின்பமென் றம்மூன்றி னொன்றன்
றிறஞ்சேரார் செய்யுந்
தொழில்க ளறைந்தன்
ரு. றணிநிலைப் பெண்ணை
மடலூர்ந் தொருத்தி
யணிநலம் பாடி வரற்கு ;

ஓரொருகா லுள்வழிய ளாகி
நிறைமதி
நீரு ணிழற்போற்
கொளற்கரியள் போரு
ளடன்மாமே லாற்றுவே
னென்னை மடன்மாமேன் ௧௦.
மன்றம் படர்வித் தவள்; வாழி
சான்றீர் ;

பொய்தீ ருலகமெடுத்த
கொடிமிசை
மையறு மண்டிலம்
வேட்டனள் வையம்
புரவூக்கு முள்ளத்தே

னென்னை யிரவுக்கு
மின்னு விடும்பைசெய் தாள்
; அம்ம சான்றீர் ; கரு.

கரந்தாங்கே யின்னுநோய்
செய்யுமற் றிஃதோ
பரந்த சுணங்கிற்
பணைத்தோளாள் பண்பு ;
இடியுமிழ் வானத் திரவிருள்
போழுங்
கொடிமின்னுக்
கொள்வேனென் றன்னள்
வடிநாவின்
வல்லார்முற்
சொல்வல்லே னென்னைப்

பிறர்முன்னர்க் உ௦.
கல்லாமை காட்டி யவள் ; வாழி
சான்றீர் ;
என்றாங்கே,

வருந்தமா வூர்ந்து
மறுகின்கட் பாடத்

திருந்திழைக் கொத்த
கிளவிகேட் டாங்கே
பொருந்தாதார் போர்வல்
வழுதிக் கருந்திறை உரு. போலக்
கொடுத்தார் தமர்.
இஃது இரந்துபின்னின்ற தலைவன்

மடலேறியவழி அவள் தமர் அஞ்சித்
தலைவியைக் கொண்டுவந்து
கொடுத்தலைக் கண்டோர் கூறியது.

(க—சு) அரிதினிற் . . . . வாற்கு :—

(இ - ள்.) பெறுதற்கரிதாகத்* தோன்றிய மக்கள்யாக்கை மூற் பிறப்பில் தாம் மனம் வேறுபட்டு விரும்பின தீவினைகளைச் செய்து அறம்

---

* சீவகசிர், உளசுகூ.

(பாடம்) 1. ஈங்க. 2. வறம்போரு.

சாங்கா

கலித்தொகை

[கலி - ௧௨௧

பொருள் இன்பம் என்று சொல்லப்பட்ட அம்மூன்றில் அறமாகிய ஒன்றன் கூற்றைச் சாராதவர்கள் இப்பிறப்பிற் செய்து திரியுந் தொழில்களில் ஒன்றாகிய அழகினையுடைத்தாகிய நிலைமையினையுடைய பனைமடலை ஏறி அவ்வூரிடத்தே எல்லார்க்குங் காட்டி ஒருத்தியுடைய அழகினையுடைய நலத்தைப் பாடி வருவதற்கு நூல்கள் சாற்றிற்று; ஆதலால், யானும் அதுவே துணிந்து மடலேறிப் பாடுவேனென்றான் ;

யாக்கை மடலூர்ந்து காட்டிப் பாடி வருவதற்குச் சாற்றிற்றென்க. 'மற்று' அசை. 'ஆங்கு', என்றது முற்பிறப்பை.

(எ—௧௦) ஓரோருகா . . . . சான்றீர் :—

(இ - ள்.) சான்றீர் ! வாழ்வீராக ; போரிடத்து வெற்றியினையுடைய குதிரையின்மேலே இருந்து போர்த்தொழிலை* நடத்துவேனாகிய என்னை அம்மாவல்லாத மடன்மாவிலே† ஏறி அக்களத்தே யன்றி[1] மன்றின்கண்ணே தன்னை உள்ளுவித்தவள், ஒருகால் என் மனத்துள்ளே உளளாயிருந்து பின்னை நீருட்டோன்றிய நிறைமதியினுடைய நிழல் வாங்கிக்கோடற்கு அரியவாறுபோல வாங்கிக்கோடற்கு அரியளாய் இராநின்றாளென்றான் ;

'ஆற்றுவேனென்னை.....படர்வித்தவ' ளென்றது தறுகண்மை யென்னும் மெய்ப்பாடு. 'வாழிசான்றீ'ரென்றது ஒருமைப்பன்மை மயக்கம்.

(௧௧—௧௪) பொய்தீ . . . . சான்றீர் :—

(இ - ள்.) கேளீர் சான்றீர்! உலகத்தை எல்லாம் பாதுகாத்தலே‡ முயலும் உள்ளத்தை யுடையேனாகிய என்னை ஒருவர்பால் ஒன்றை இரத்தலை முயலும் இன்னாதாகிய வருத்தத்தைச் செய்தவன் கீழைத் திசை யிடத்துத் தோன்றின, பொய்யற்ற நன்மக்கள் உயர்த்துப் புகழ்ந்த, மாசற்ற ஞாயிற்றின் மண்டிலத்தை யான் வாங்கிக்கோடற்கு விரும்பின அத்தன்மை யனாய் இராநின்றானென்றான்;

என்றது கோடை என்னும் மெய்ப்பாடு.

(கரு—கசா) காந்தாங்கே . . . . பண்பு:—

(இ - ள்.) பரந்த சுணங்கினையுடைய பனைபோலுந் தோளினையுடை யான் தான் மறைந்தபொழுதே பொறுத்தற்கரிய நோயைச் செய்யா நிற்கும்; அவன் குணம் எக்காலமும் இத்தன்மைத்தோ கூறின் என்றான்;

(கஎ—உ0) இடியுமிழ் . . . . சான்றீர்:—

(இ - ள்.) பின்னும் வாழ்வீராக! சான்றீர்! வழுவின சொற்கள் சொல்லாதபடி தெள்ளிய நாவினாலே வார்த்தைசொல்ல வல்லார்முன்னே

* குறள். கoஅஅ. † குறள். ககஙக. ‡. கலி. சஎ: க-உ.

(பாடம்) 1. அக்களத்தே தோன்றி.

மகயதல - உரு]

மநயதறகலி

சாகூ6

சொல்லுதல் வல்லேனாகிய என்னைப்

பிறர்முன்னே ஒன்றையுங் கல்லாத் தன்மையனுகக் காட்டியவன் இராக்காலத்து இடியை உமிழ்கின்ற மேகத்தி விருளைப் போழும் ஒழுங்கினையுடைய மின்னே வாங்கிக்கொள்வேனென்று ஒருவன் கருதிய தன்மையனாய் இராநின்றானென்றான்;

'வல்லார்முற் சொல்...காட்டியவ' னென்றது கல்விபற்றிய பெருமிதம் என்னையுங் கல்லாமை காட்டினான் என்றவின். 'வாழி சான்றீர்' என்று அதனை முடிப்பாராகக் கருதி வாழ்த்தினான்.

(உக—உ௫)

என்றங்கே . . . . தமர் :—

(இ - ள்.) என்று
சொல்லி அவ்வூரிடத்து
மறுகின்கண்ணே கண்டார்,
வருந்த மடன்மாவை ஏறிப்
பாடத், திருந்தின
இழையினையுடையாளை ;
தான் பெறுதற்குப் பொருந்தின
வார்த்தைகளைத் தான் கூறக்கேட்டுப்
பகைவர் போர்த்தொழிலை வல்ல
பாண்டியனுக்கு அஞ்சி அரிய திறை
கொடுக்குமாறுபோலத், தமர்
குடிப்பழுதாமென்று அஞ்சி அவளை

அவ்

விடத்தே கொடுத்தார்; ஈந்தோர்

மகட்கொடை

இருந்தவாறென்னெனக்

கண்டார் வியந்து கூறினர்.

இது கண்டார்க்குக்

கொடைபற்றிய பெருமிதம் பிறந்தது.

இது "தரவும் போக்கு "*

மென்பதனுட் பாட்டினைப்

போக்கின்பின்

வைத்ததனுற் போக்குப்பெற்ற,

பண்பு என நாற்சீரான் இயன்ற,

பாட்(

வந்தது.

'வாழிசான்றீர்', 'அம்மசான்றீர்' என ஈற்றுக்கண் வந்த சீர்களை.

முதல் அடிக்கு

ஆண்டபொருண்முடிவுள் மாறுகூட்டி அடுக்க அறுசீராய்

ஆறு

மெய்பெற்றமையிற் கலிவெண்பா.

(௨௪

கசு௨.

புரிவுண்ட புணர்ச்சியுட் புல்லாரா மாத்திரை யருகுவித் தொருவரை

யகற்றலிற் றெரிவார்கட் .
செயநின்ற[1] பண்ணினுட்
செவிசுவை கொள்ளாது
நயநின்ற[2] பொருள்கெடப்
புரியறு நரம்பினும்
ரு. பயனின்று மன்றம்ம காம
மிவண்மன்னு
மொண்ணுத லாயத்தா
ரோராங்குத் திளைப்பினு
முண்ணுனை தோன்றமை
முறுவல்கொண் டடக்கித்தன்
கண்ணினு முகத்தினு
நகுபவள் பெண்ணின்றி
யாவருந் தண்குரல் கேட்ப
நிரைவெண்பன்

* தொல். பொருள்; சுகசு.

(பாடம்) 1. செயனின்ற. 2.

நயனின்ற, உ௬அ
கலித்தொகை [கலி
• ச௯உ

௯O. மீயுயர் தோன்ற நகாஅ
நக்காங்கே
பூவுயிர்த் தன்ன புகழ்சா
லெழி லுண்க
ணையிதழ் மல்க வழூஉம்;
ஒஒ! அழிதகப் பாராதே யல்லல் குறுகினங்

காண்பாங் கனங்குழை பண்பு
; ரறி. என்று,

எல்லீரு மென்செய்தீ ரென்னை
நகுதிரோ
நல்ல நகாஅலிர் மற்கொலோ
யானுற்ற
வல்ல றுதீஇயான் மாய
மலர்மார்பு
புல்லிப் புணரப் பெறின் ;
எல்லாநீ, உற்ற தெவனோமற்
றென்றீரோ லெற்சிதை ௨௦.
செய்தா னிவனென வுற்ற
திதுவென
வெய்த வுரைக்கு முனகத்
துண்டாயிற்
பைதல வாகிப் பசக்குவ

மன்னேவென்
னெய்தன் மலரன்ன கண்;
கோடுவாய் கூடாப்
பிறையைப் பிறிதொன்று
உடு நாடுவேன் கண்டனென்
சிற்றிலுட் கண்டாங்கே
யாடையான் மூஉ
யகப்படுப்பேன் சூடிய
காணுன் றிரிதருங் கொல்லோ
மணிமிடற்று
மாண்மலர்க் கொன்றை யவன்
;
தெள்ளியே மென்றுரைத்துத்
தேரா தொருநிலையே ௩௦.

வள்ளியை யாமென நெஞ்சை
வலியுறீஇ
யுள்ளி வருகுவர் கொல்லோ
வுளைந்தியா
னெள்ளி
யிருக்குவேன். மற்கொலோ
நள்ளிருண்[1]
மாந்தர் கடிகொண்ட கங்குற்
கனவின்ற்
றோன்றினை கைத்
தொடுத்தேன்மன் யான்றன்னைப்[2]
நடுங். பையெனக் காண்கு
விழிப்பயான் பற்றிய
கைபுனை மாய்ந்தான் கரந்து ;

கதிர்பகா ஞாயிறே கல்சேர் தி
யாயி
னவரை நினைத்து
நிறுத்தென்கை நீட்டித்
தருகுவை யாயிற்
றவிருமென் னெஞ்சத்
௪௦. துயிர்திரியா மாட்டிய தீ;

(பாடம்) 1. கல்விறுண். 2. யான்றலை இப்,

நெய்தல் - ௨௫]

நெய்தற்கலி

சங்க

மையில் சுடரே மலைசேர்தி நீ

யாயிற்

பௌவநீர்த் தோன்றிப் பகல்செய்யு மாத்திரை
கைவிளக் காகக் கதிர்சில தாராயென்

றொய்யில் சிதைத்தானைத்

தேர்கு ;

௫. சிதைத்தானைச் செய்வ

தெவன்கொலோ வெம்மை

நயந்து நலஞ்சிதைத் தான் ;

மன்றப் பனைமேன்[1] மலைமாந்

தளிரே நீ

தொன்றிவ் வுலகத்துக் கேட்டு

மறிதியோ
    மென்றோண் ஞெகிழ்த்தான்
றகையல்லால் யான்காணே
னன்றுதீ தென்று பிற;
    நோயெரி யாகச் சுடினுஞ்
சுழற்றியென்
    ஞையித முள்ளே காப்பன்
கரந்தாங்கே
    நோயுறு வெங்நீர் தெளிப்பிற்
றலைக்கொண்டு
    வேவ தளித்திவ் வுலகு;
மெலியப் பொறுத்தேன்
களைந்தீமின் சான்றீர்

நலிதருங் காமமுங் கௌவையு
மென்றிவ்
வலிதி னுயிர்காவாத்
தூங்கியாங் கென்னை

நலியும் விழும மிரண்டு;

எனப்பாடி,

.O. இனைந்துநொந் தழுதன
ணினைந்துநீ டுயிர்த்தன
ளெல்லையு மிரவுங்
கழிந்தனவென் றெண்ணி
யெல்லிரா
நல்கிய கேள்வ னிவன்மன்ற

மெல்ல

மணியுட் பரந்த நீர்போலத்

துணிபாங்[2]

கலஞ்சிதை யில்லத்துக்

காழ்கொண்டு தேற்றக்

ஙி. கலங்கிய நீர்போற் றெளிந்து

நலம்பெற்று

னல்லெழின் மார்பனைச்

சார்ந்து.

ஆ "பொழுது

தலைவைத்த கையறு காலை, யிறந்த போலக்

கிளக்குங் கிளவி,

மடனே வருத்த மருட்கை மிகுதியோ, டவைநாற் பொருட்க ணிகழு
மென்ப"* இச்சூத்திரம் "பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே"†

என்ற சிறப்புடைப்

பெருந்திவணையன்றிப் பெருந்திவணைக் குறிப்பாகக்

---

* தொல். பொருள்; உகரு. † தொல். பொருள்: ௧0௫.

(பாடம்) 1. பணிமேன். 2. துணிவாங்.

௬௪௦
கலித்தொகை [கலி - ௧௪௨

கந்தருவத்துட்பட்டு வழிவரும் "ஏறிய மடற்றிறம்"* முதலிய நான்கனுள் ஒன்ருய் முன்னர் நிகழ்ந்த கந்தருவம் பின்னர் வழிவந்த "

தேறுத
லொழிந்த காமத்து மிகுதிறம்"†
ஆகிய பெருந்திணை
வழுவமைக்கின்றது.
ஓதலுந் தூதும் ஒழிந்த
பகைவயிற் பிரிவாகிய
வாளாணைதிரும் பிரிவும்
முடியுடை வேந்தர்க்கும் அவர்
ஏவலிற் பிரியும் அரசர்க்கும்
இன்றியமை
யாமையின் அப்பிரிவிற்
பிரிகின்றான், " வன்புறை குறித்த
றலிர்ச்சி
: யாதும்" ‡
த்வணயும்
என்பதனுற் சற்புப்போல நீ

ஆற்றியிருவென ஆற்றுவித்தப்
இவ்வாறொழுகி யான் வருந்
பிரிதல் இலக்கணமன்மை
யின் வாளாபிரியுமன்றே ?
அங்ஙனம் பிரிந்தழி அவன் கூறிய
கூற்றினையே
கொண்டு ஆற்றுவிக்குந்
தோழிக்கும் ஆற்றுவித்த லரிதாகலின்
அவட்கு
அன்பின்றி நீங்கினானென்று
ஆற்றாமை மிக்கு ஆண்டுப்
பெருந்திணைப்பகுதி
நிகழுமென்று உணர்க. (இ -
ள்.) பொழுது - அந்திக்காலத்தே;
கையறு
காலை - ' புறஞ்செயச்சிதைத்தல்

' § என்னுஞ் சூத்திரத்தில் ' அதனினூங் கின்று ' எனக் கூறிய ' கையறவுரைத்த ' லென்னும் மெய்ப்பாடு எய்திய காலத்தே; தலைவைத்த - அந்த ஆருமறுதியின்[1] இசந்தனவாக முடிவிலே வைக்கப்பட்ட மெய்ப்பாடுகள் ; மிகுதியொடு மடனே வருத்தம் மருட்கை நாற்பொருட்கண் நிகழும் - தன் வனப்புமிகுதியுடனே மடப்பமும் ஆற்றாமை யும் வியப்புமாகிய நான்கு பொருட்கண்ணனே நடக்கும்; அவை இறந்த

போலக் கிளக்குங் கிளவி என்ப
- அங்ஙனம் அவை நடக்கின்ற நான்கு
பொருளுங் கூற்று நிகழுங்காற்
றன்வணக் கைகடந்தனபோலக் கூறுங்
கூற்ருய் நிகழுமென்று கூறுவர்
புலவர். (எ - று.) " தலைவைத்த
மெய்ப்
பாடாவன : ஆறும்
அறுதியினும்[3] ஒப்பத்
தோன்றுதற்குரிய மெய்ப்
பாடுகளாய் மன்றத்திருந்த
சான்ருேரறியத் தன் தலைவன்
பெயரும்
பெற்றியும் அவனுெடு
புணர்ந்தமையுந் தோன்றக்கூறியும்

அழுதம் அரற்றி
யும் பொழுதோடு புலம்பியும்
ஞாயிறு முதலியவற்றோடு
கூறத்தகாதன
கூறுதலும் பிறவுமாம்"
என்னும் விதிபற்றி வரைவிடைப்
பிரிந்து
நீட்டித்தழித் தலைவி
பிரிவாற்றகில்லாது நாணு
வரையிறந்து கலங்கி
மொழிந்து அறிவழிந்தழி
அவன்வந்து சாரத் தெளிந்தமை
கண்டார் கூறிற்
றென்று கூறியது.

(இ - ள்.) கேட்பீராக ; இவள்

தன்னுடனே பொருந்தி விளையாடும்
ஒள்ளிய நுதலினையுடைய ஆயத்தார்
எல்லாரும் ஓராங்குக்[3] கூடி
விளையாடும் அளவிலும் முற்போலக்
கூரிய § தன் பல்லினுனி
தோன்றாமல் முறுவலித் தலைக்
கொண்டு, அதனை உள்ளடக்கி,
அந்நகுதற்குறிப்புப் பிறரறியாமல்
தன் கண்ணானும் முகத்தானும்
நகுபவள்; இப்பொழுது
பெண்டன்மையின் றிப் பிறர்
கேளாமல் மொழியும் மெல்லிய
மொழியினை எல்லாருங் கேட்கும்

---

* தொல். பொருள் : ௫௧. † தொல். பொருள் : ௫௧.

‡ தொல். பொருள் : ௧௮௫. §

தொல். பொருள்: உசுகசு, $ குறள் - கஉளச

[illegible]

நெய்தல் - உ௫]

நெய்தற்கலி

ச்சச்௪

படி கூறி, நிரைத்த வெள்ளிய பல்லின் மேலெயிறு தோன்றப் பெருகச் சிரித்துச், சிரித்த அப்பொழுதே பூவெடித்த தன்மையை ஒத்த புகழ்ச்சி அமைந்த அழகினையுடைய

கண்கள் அழகினையுடைய இமை
நீர்மல்கும்படி அழாநிற்கும் இவள்
இங்ஙனம் அழுமாறு காமவின்பத்தை
ஊழானது ஒருவர் மனம் ஒருவ ரிடத்தே
புரிதலுண்ட கூட்டத்திற்
புல்லுதனிறையாத அளவிலே இருவரிற்
ஒருவரை அரியராம்படி பண்ணி
நீக்குகையினாலே இங்ஙிலையாமையை
ஆராய்ந்து பார்ப்பாரிடத்து
அஃதறுதியாக நரம்பை வீக்குதலைச்
செய்ய அதனிடத்தே நின்ற
பண்ணினாற் றோன்றிய
இனிமையைக் கேட்போர்
செவிகொண்டு இன்புறுவதற்கு
முன்னே விருப்பம் நின்ற
இனிமையாகிய பொருள் கெட

முறுக்கு அறும் நரம்பிலுங்காட்டிற்*
பயனின்றாயிருந்தது; ஓஒ !
இக்கனங்குழையது[1] அல்லலையுடைய
குணத்தை நம்மை வருத்தும் என்று
பாராதே நம் நெஞ்சழியும்படியாக
வந்து குறுகினேம்; குறுகிய யாம் இதனை
முடிவுபோகக் காண்பேம் என்று
கருதிவந்து எல்லீரும் என்ன காரியஞ்
செய்தீர் ? இங்ஙனம் வந்த நீர்தாம்
என்னை இகழ்கின்றீரோ !
இகழ்கின்றீராயின், யானுற்ற
வருத்தத்தினை
எனக்குறுத்தினவனுடைய மாயத்தைச்
செய்த மலர்ந்த மார்பை
யான்முயங்கி அவனைக் கூடப்பெறினும்
அஃதிகழ்ச்சியன்றாம் ; இங்ஙனம்

என்னைச் சிதைத்தலைச் செய்தான் இவனென்று யான் முற்கூறியதனைக் கேட்ட நீர் பின்னை அவனுற்றது தான் எத்தன்மைத்தோ என்று கேட்பீராயின், யானுற்றதிதுவென எழு வகையாகிய அறத்தொடுநிலைகளின்† ஒன்றை நும்மனத்திற்குப் பொருந்தக் கூறும் என்னறிவு என் உள்ளத்துண்டாயின் யான் இங்ஙனம் வருந்துவனோ! வருந்தேன்; அவ்வறிவு கெட்டமையால் யானுற்ற வருத்தம் இத்துணைய வருத்தமென யான் உமக்குக் கூறுவன், அதனைக் கூறக்கேண்மின்; சான்றீர்! என்று சான்றோரை நோக்கிக் கூறுகின்றான்; என்னுடைய

சிற்றிலுள்ளே கூடவிழைத்து‡ அவனைக் கூடுவேனோ என்று ஆராய்கின்ற யான் அக்கூடலில்[1] ஒரு பாகத்தை இழைத்த அளவிலே அவ்வாராய்ச்சிக்குப்[2] பிறிதொன்றாகிய வளைவு தன்னிடத்தின் முழுதுங் கூடாத இளம்பிறையைக் கண்டேன்; கண்டு அஃது அவ்விசும்பிடத்தே பின்பு நிறைமதியாய் வருத்துமெனக் கருதி யான் உடுத்த துகிற்றலையாலே மூடி அகப்படுத்திக் கொள்கின்ற யான் அதனை அகப்படுத்தினால் நீலமணிபோலுந் திருமிடற்றையுடைய மாட்சிமை யுடைத்தாகிய மல்ரையுடைய கொன்றைமாலையையுடையவன்

அதனோடே கூடுதற்குக் காணையைத் தேடித் திரியுமோ என்று கொண்டு, நெஞ்சே! இது பின் வருத்துதலைத் தோராதே இதனை அவர்க்குக் கொடுத்து ஒருபடிப்பட

---

* கலி. அ; கூ-கக. † தொல். பொருள்: உ0எ.
‡ சீவகசிந். கOகூஎ: § சீவகசிந். கOகஅ.
(பாடம்.) 1. இக்களங்குழைக்கு. 2. அவர் ஆராய்ச்சிக்குப்.

கலித்தொகை

[கலி - ௧௪௨

உபகாரியாவாய்; யாந் தெள்ளியேங்காணென்று கூறிநெஞ்சை வலியுறுத்தி அதனைக் கைவிட்டுப், பின்னரும் அவர் வருவாரோ? வந்தால் யான் உடம்படாது அவரை மிகவும் இகழ்ந்திருப்பேனோ? என்று உள்ளி வளர்ந்திருந்த நள்ளிருளையுடைய ஊர்காவலர் காத்தலைக்கொண்ட கங்குலிடத்துக் கனவிலே யான் உள்ளியவாறே வந்து தோன்றினானாக யான் அவனை வளைந்து பிடித்துக் கொண்டேன்; அதனாற் பெற்றதென்? அங்ஙனம் பிடித்துக் காண்பேனாகப் பையென விழிக்க யான் பிடித்த கையுள்ளே மறைந்து தோன்றானாயினான்; இனி யான் ஞாயிற்றைக் கொண்டே அவனைக் காண்பேன் என்று கருதி இருந்து மற்றைநாள் அந்தியிலே ஞாயிற்றை நோக்கிக் கிரணங்களைப் பிறர்க்குப் பகுத்துக் கொடாத ஞாயிறே! அக்கதிர்களோடே நீ அத்தகிரியை அடைகின்றாயாயின் அவரை நினைத்துத் தேடிப் பிடித்துக் கொண்டு என்முன்னே நிறுத்தி என்கையிலே உன்கையை நீட்டித் தப்பாமற் றருவையாயின் உயிர் திரியாக என்னெஞ்சாகிய அகலிலே கொளுத்திய காமத்தீ அவியும் என்றேன்; அதற்கு மறுமொழி தாராது அத்தகிரியே போகலின் அதனை நோக்கி, மறுவில்லாத சுடரே! அத்தகிரியைச் சேர்கின்றாயாயின் நீ கடலினீரிடத்தே மீண்டு வந்து தோன்றிப் பகற்பொழுதை உண்டாக்குமளவுந் தானெழுதுந் தொய்யிலை எழுதாமற்கெடுத்தவனை யான் தேடுவன்; யான் தேடும்படி எனக்குக் கைவிளக்காகச் சில கிரணங்களைப் பகுத்துத் தாராய் என்று கூறினேன்; அச்சுடரும் யாம் அதனைக்கொடுத்தால் அவனைக் கண்டு துனித்து வருந்துவேன் என்று உட்கொண்டு அதனைத்தாராது போயவாறுணர்ந்து அவன் எம்மை முன்னர் விரும்பிப் பின்னர் நலத்தைச் சிதைத்தானாயினான்; இங்ஙனஞ் சிதைத்தவனை எதிர்ப்பட்டால் யான் கூடாமல் வேறு

... செய்வது எவனெகொல் என்று கருதி அத்தகிரியிலே வீழ்கின்ற காலத்து மன்றத்தின் பனைமேலே தோன்றும் மலையிடத்து மாந்தளிர் போலும் நிறத்தையுடைய வெயிலே! என்மென்றோளை மெலிவித்தானது வடிவழகின் தன்மை யான் விரும்பிக் காண்பதல்லது அவன் செய்தன்று தீதென்று கூறுகின்ற பிறவற்றைக் காணேன்; என்னை யொழியப் பழைதாக இவ்வுலகத்துமகளிருந் தத்தங்கணவரைக், கண்டாற் கூடுவதன்றித் துனிந்திருந்தார் என்று கேட்டும் அறிவையோ என்று கூறினேன்; அங்ஙனங் கூறிக், காமநோய் என் மனத்தைச் சுழலப் பண்ணி நெருப்பாக நின்று சுட்டதாயினுந் தோன்றாமல் மனத்துள்ளே மறைப்பேன்; அதனை மறைத்தாற்போலே அழகிய இதழ்போலுங் கண் தன்னிடத்தே கொண்டு நின்ற காமநோயை உறுகின்ற வெவ்விய நீரையும் மறைப்பேன்; அதற்குக் காரணம் அந்நீரைத் தெளிப்பின் அளிக்கத்தக்க இவ்வுலகு வேவதொன்றாய் இருத்தலின் என்று யான் ஆற்றிய அருமையுங் கூறினேன்; இதுகாறும் யானுற்ற வருத்தம் இதுதானென்று நின்ற சான்றோரை நோக்கிக் கூறிப்.

மரயதல - கூறு]

மநயதறகல
சசங

பின்னருஞ் சான்றீர்! நலியுங் காமமுங்
கௌவையும்* என்று சொல்லப்படும்
இரண்டு விழுமம் உயிர் காவாக†
இரண்டு புறத்துந் தூங்கி என்னை

கவியும்; இதனை இங்ஙனம்
உயிர்மெலியுமளவும் வலிதிற்
பொறுத்தேன்; இனி
இறந்துபடுவதற்குமுன்னே இதனைக்
களைவீராக என்று கூறினன் ; என்று
சொல்லிப் பகலும் இரவுங்
கூட்டமின்றிக் கழிந்தன என்று
எண்ணி வருந்தி அழுதனள் ; அழுது
நீடுநினைந்து நொந்து உயிர்த்தனள் ;
அதன் பின்னர் விளக்கத்தையுடைய
இராக்காலத்தே வந்து
வரைந்துகொண்ட கேள்வன் இவன்
நல்ல அழகினையுடைய மார்பனைப்
புணர்ந்து, தேய்க்குங் காலத்தே
சிதைக்கின்ற தேற்றாவினுடைய ‡
விதையைக்கொண்டு கலத்தே மெல்லத்

தேற்றக் கலங்கிய நீரிற் சிதைவு தெளியுமாறுபோலத் தன்சிதைவு தெளிந்து பழைய நலத்தைப் பெற்றான்; ஆதலான், யாமும் இவர்களை அறுதியாக மணியும் அதனிற் பிறந்த நீரும் போலே வேறல்லரென்று துணியக் கடவாமென்று கண்டார் கூறிற்றாகப் பொருளுரைக்க.

'ஓஒ': இரக்கக் குறிப்பு. 'நகுதிரோ' என்னும் ஓகாரம் ஐயம். 'நல்ல நகாலி' என்றது மிகவும் நல்ல சிரிப்பினையுடையீராவீர், நல்வீர்கொல்லோ? அது நல்ல சிரிப்பாகாதே என நின்றது. 'எற்சிதை செய்தான் இவனென'

என்றது முன் 'யானுற்ற அல்லனுநீ இயான்' என்றதனையேயாகக்கொள்க. 'உரன்': அறிவு, "உரவோ ரெண்ணினும்" § என்றார் பிறரும். என்னுடைய நெய்தன்மலரன்ன கண்கள் இங்ஙனம் வருந்தி[1] மிகப்பசப்பனவோ பசவாவே என ஓகாரம் எதிர்மறை.

"சொல்லொடுங் குறிப்பொடு முடிவுகொ ளியற்கை, புல்லிய கிளவி யெச்ச மாகும்" § என்பதனாற் சொல்லெச்சமுங் குறிப்பெச்சமுமாகத் தம் பேரறிவுதோன்ற ஆசிரியர் நல்லந்துவனார்[2] செய்யுட் செய்தார்.

எல்லிர கல்கியவென்றும் பாடம்.

மென்றே னெகிழ்த்தான் றிறமல்லால் என்பதும் பாடம்.

இதனுன் அந்திக்காலத்தே கையறவெய்திப் பின்னர்ச் சான்றோரை நோக்கிக் கூறுகின்றவள் 'புல்லாரா மாத்திரை' என்று அவனேடு புணர்ச்சி நிகழ்ந்தமையுங் கூறி யாவருங் கேட்ப நக்கழுது அல்லலுறீ இயானெனப் பெயரும் பெற்றியுங் கூறிப் புல்லிப் புணரப்பெறின் இகழ்ச்சியன்றுமெனக் கூறத்தகாதன கூறலின் மடந்தன்னை இறந்தவாறுந் 'தெள்ளியேம்' என்றதனுனும் 'எள்ளி யிருக்குவேன்' என்றதனுனும் வருத்தமிறந்தவாறுங் '

கோடுவாய் கூடா * * *
கொன்றையவன் † என்றதனால்,
தான் செய்

* குறள், ௧௧௪௮. † காவுதடி
அல்லது தண்டு. குறள், ௧௧௬௩; ௧௧௬௫.
‡ மணி ௨௯: ௪௨-௪௩; பெருங்.
(௧) ௬௫: ௨௧௫-௨௧௮.
§ பதிற். ௭௩-௧. $
தொல், பொருள்: ௫௧௮.
(பாடம்.) 1. வருத்தத்தை
யுடையனவாகி. 2. கவ்வர்தலைஞர்.

ஈ௯௩௪
ஸைபஜைஜா ஸாய
[illegible]

தனை லியவாமையின் மருட்கை
யிறந்தவாறும் 'நெய்தன் மலரன்ன
கண்' ணைனத் தன்வனப்பு மிகுதி
கூறலின் மிகுதியிறந்தவாறுங்
காண்க.

இதனுறுப்புக்களுட்
தலைவிக்குக் கலக்கமென்னும்
மெய்ப்பாடு பிறந்தது.

'எல்விரா நல்கிய கேள்வனிவ'
னெனவே கந்தருவத்தின் வழுவிப்
பெருந்திணை நிகழ்ந்தவாறும் பின்னர்
வரைவு நிகழ்ந்தவாறுங் காண்க. புது
'புல்லாரா மாத்திரை'
என்றதனுமுணர்க.

இது 'புரிவுண்ட புணர்ச்சி'
எனக் கலித்தளை வந்தும், '
புல்லாரா ாத்திரை யருகுவித்
தொருவரை யகற்றலின்' எனவும்
'இனைந்துகொக் கழுதன ணிணைந்தநீ
டுயிர்த்தனன்' எனவும் இயற்சீர்
நிரை ஒன்றியும் ாவேறுபட்டு[1] '
எல்லையு மிரவுங் கழிந்தன
வென்றெண்ணி யெல்லிரா' என
ஐஞ்சீரடி வந்த வெள்ளைச்
சுரிதகம்பெற்ற கலிவெண்பாட்டு.
(உரு)

கசுரு.

அகலாங்க ணிருணீங்கி
யணிநிலாத் திகழ்ந்தபிற்
பகலாங்கட் பையென்ற
மதியம்போ னகலின்று
நன்னுத னீத்த திலகத்தண்
மின்னி
மணிபொரு
பசும்பொன்கொள் மாவீன்ற
தளிரின்மேற் றி. கணிகாரங்
கொட்குங்கொ லென்றுங்
கணிசெல
மேனி மறைத்த பசலைய
ளானாது
நெஞ்சம் வெறியா நினையா

நிலனோக்கா

வஞ்சா வழாஅ வாற்று விஃதொத்தி
யென்செய்தாள் கொல்லென்பீர் கேட்டீமின்
[றேதேன் ;
பொன்செய்

௫0. மறையிற்றன் யாழ்கேட்ட
மானை யருளா
தறைகொன்று மற்றத
னுருயி ரெஞ்சப்
பறையறைந் தாங்கொருவ
னீத்தா னவனை
யறைநவ நாட்டினீர்

கொண்டுதரின் யானு

நிறையுடையே னுருவேன்

ட்ன்ற டைறையினென்

௩டு. மென்றே னெகிழ்த்தானை மேஎ யவனுங்கட்
சென்றுசேட் பட்டதென் னெஞ்சு ;

ஒன்றி, முயங்குமென்[2] றென்பின் வருதிர்மற் றுங்கே
யுயங்கினு ளென்றுங் குசாதிர்மற் றந்தோ
மயங்கினு ளென்று மருடிர் கலங்கஞ்மி

(பாடம்.) 1. [illegible] 2. [illegible]

நெய்தற்கலி

௪௪(உ௦. னின்னுயி ரன்னாற்

கெனைத்தொன்றுந் தீதின்மை

யென்னுயிர் காட்டாதோ

மற்று ;

பழிதபு ஞாயிறே பாடறியா
தார்கட்
கழியக் கதழ்வை
யெனக்கேட்டு நின்னை
வழிபட் டிரக்குவென்
வந்தேனென் னெஞ்ச
மழியத் துறந்தானைச்
சிறுங்கா லென்னை
யொழிய விடாதீமோ
வென்று ;

அழிதக,

மாஅந் தளிர்கொண்ட
போழ்தினு[1] ளிவ்வூரார்
காஅந் தளிர்சூடிக் தங்கலம்
பாடுப
வாஅந் தளிர்க்கு
மிடைச்சென்றார் மீடரின்
௫௦. யாஅந் தளிர்க்குவே மன்;

நெய்த னெறிக்கவும் வல்ல
னெடுமென்றோட்
பெய்கரும் பீர்க்கவும் வல்ல
னிளமுலைமேற்
றொய்யி லெழுதவும்
வல்லன்றன் கையிற்
சிலைவல்லான் போலுஞ்

செறிவினு னல்ல
பலவல்லன் றோளாள் பவன் ;

நினையுமென் னுள்ளம்போ
னெடுங்கழி மலர்கூம்ப
வினையுமென் னெஞ்சம்போ
லினங்காப்பார் குழறோன்றச்
சாயலென் னொளிபோற்
செவ்வழியா ழிசைநிற்பப்
போயவென் னொளியேபோ
லொருநிலையே பகன்மாயக்
காலன்போல் வந்த கலக்கத்தோ
டென்றலை

மாலேயும் வந்தன் றினி;

இருளொடியா னீங்குழப்ப
வென்னின்றிப் பட்டா
யருளிலே வாழி சுடர்;

ஈண்டுநீர் ஞாலத்து
ளெங்கேள்வ ரில்லாயின் சுரு.
டாண்ட மனப்பெற்றூர் மாசி
றுறக்கத்து
வேண்டிய வேண்டியாங்
கெய்துதல் வாயெனின்
யாண்டு முடையே னிசை;

ஊரலர் தூற்றுமிவ் வுய்யா
விழுமத்துப்
பீரலர் போலப் பெரிய
பசந்தன

—————————————

சூன்

கலித்தொகை
[கலி - கசாடு

10. நீரலர் நீல மெனவவர்க்
கஞ்ஞான்று
பேரஞர் செய்தவென் கண்;
தன்னுயிர் போலத் தழீஇ

யுலகத்து

மன்னுயிர் காக்குமிம்
மன்னனு மென்கொலோ
வின்னுயி ரன்னனைக் காட்டி
யெனைத்தொன் றாஇ.
மென்னுயிர் காவா ததது;

எனவாங்கு,

ரன்னிய நோயொடு
மருள்கொண்ட மனத்தவள்
பன்மலை யிறந்தவன்
பணிந்துவந் தடிசேரத்
தென்னவற் றெளிந்த
தேஎம்போல ௩௦. வின்னகை

யெய்தின ளிழந்ததன் னலனே.

இதுவுமது. இதற்கும் முற்கூறிய உரைகளைக்* கூறிக்கொண்டு பொருளுரைக்க.

(க—க) அகலாங்க . . . . பொன்செய்தேன் :—

(இ - ள்.) அகன்ற ஊரிடத்தேயிருந்து கனவின்கண் அவனோடு கூடி இன்புற்ற காலத்து இராக்காலத்து இருணீங்க விளங்கின அணிநிலாவை யுடைய மதியம்போலே விளக்கம் அமைந்து அவன் நீங்கின பின்பு பகற்பொழு திடத்து ஒளி பாழ்பட்ட மதிபோலே ஒளிகெட்டு கன்றாகிய நுதலினின்றும் போன திலகத்தையுடையளாய்[1] நீலமணியைத் தானொளிவிட்டு மாறுபடும் பசிய பொன்னொளிகொல்லோ! மாவீன்ற பசிய கொழுந்தின்மேலே[2] கோங் கம்பூவிற்றாது பரந்த ஒளிகொல்லோ! † என்று பிறர்கூறுந் தன்னணி தன் னிடத்தினின்றும் போம்படி தன்மேனியை மறைத்த பசலையளாய் அமை யாமை தன்னெஞ்சம் இன்பத்தைத் தரும் பொருள்களோடே வெருவி அவ் வின்பங் கழிந்தபடியை நினைத்து நாணாற் பிறரெதிர்முகநோக்காது நிலத்தை நோக்கி அந்நாண் மேற்போகின்றதற்கு அஞ்சி அழுது அழாதே பலவுஞ் சொல்லித் தன்குறை கூறி இவளொருத்தி என்ன வருத்தமுற்றாள்கொல்லோ என்று கூறுகின்றவர்களே! யான் பொன்செய்தேன்; யானுற்றதனைக்கேட்

பிராக என்று கூறினன்;

(௬௦—௬௬) மறையிற்றன்

. . . . நெஞ்சு:—

(இ-ள்.) அங்ஙனங் கூறுகின்றவள் வஞ்சனையாலே தான் வாசித்த யாழிசையைக் கேட்ட அசுணமாவை இவ்வின்பமுற்றதென்று அருள் பண்ணுதே முன்பு செய்த வஞ்சனையைக் கெடுத்துப் பின்னை அதன் அரிய உயிர் போம்படி பறையைத் தட்டினாற் போலே ஒருவன் முன்னர் வஞ்சித்து இம்

* ௪௩௯-௪௪௦, ஆம் பக்கம் பார்க்க. † கலி, ௨௯. ௭-அ:

மநயதறகலு

சசஎ

பத்தை உண்டாக்கிப் பின்னர்
அவ்வின்பம் போம்படி என்னைக்
கைவிட் டான்;
அக்களவொழுக்கத்தாலே என்
மெல்லிய தோளை மெலிவித்தவனை

நெஞ்சு பொருந்தி அவனுறைகின்ற இடத்தே சென்று வருதற்கு நெடுங் காலத்தவாயிற்று என்று கூறினன் *;

(கஎ—கூ0) ஒன்றி . . . . னலனே :—

(இ - ள்.) அங்ஙனங் கூறியவன் அந்து கொண்டுவருதலுங் கூடும்; அத னோடே நீருங் கூடி நவகண்டம்† எனக் கூறுபடுத்தின உலகத்தின்கண்ணே அவனை ஆராய்ந்து நீர் பிடித்துக்கொண்டு எனக்குத் தரப்பெறில் யானும் பிறமகளிரைப் போல அறுதியாக நிறை என்னுங்

குணமுடையேனுவேன் என்றுங் கூறினுள்; அதுகேட்டவர்கள் அதற்கு மறுமொழிகொடாமற் பின்னே வந்தமையின், இவள் ஒரு நாளிலேயாயினும் அவனைப் பொருந்தி முயங்கும் என்று கருதி என் பின்னே வாராநின்றீர்; பின்னை இவள் அப் பொழுதே முன்புபோலன்றி மிகவும் வருந்தினுள் என்று கருதி அவ்விடத்தே நின்று அவனுக்கு ஓர் தீங்கு நிகழ்ந்ததோ என்று உசாவாநின்றீர்; அவ்வருத் தமே யன்றி ஐயோ இவள் கையறவு எய்தினுள் என்று மருளாநின்றீர்; இங் ஙனம் உண்மை யுணராமற்

கலங்காதேகொள்ளும் ; பின்னை என்
இனிய உயிரை ஒப்பானுக்கு
யாதொன்றுந் தீதின்றி
அவனுளனுயிருக்கின்றமையை
அவனுயிரோடு ஒன்றாகிய என்னுயிர்
ஈண்டுக் காட்டா தொழியுமோ?‡
அது தான் இறந்துபடாது
அவனிருந்தமை காட்டிற்றில்லையோ
என்றாள் ; அது கேட்டவர்கள்
தனக்கோ ரேதமின்றி நின்று
நின்னை இங்ஙனம்

வருத்தினவனை நடுவாக நோக்கி நின்ற ஞாயிறு தான் வருத்துங்காண்
என்றார் ; அது கேட்டு நடுவுநிலைசெய்யாமல் உண்டாம் பழிநீக்கும்[1]

ஞாயிறே ! உலகியல்
அறியாதாரிடத்துக் கழியச்சீறுதற்கு
விரைந்து செல்லையென்று இவர்கள்

கூறக் கேட்டு நின்னை வழிபட்டு நீ
அவரை மிகச் சீருதபடி
இரந்துகொள்வேனாக வந்தேன்; நீ
என்னெஞ்சங் கெடும் படி என்னைக்
கைவிட்டவனைக் கண்டு சீறுமிடத்து
என்னை நீங்கவிடாதே கொள்! அஃது
என்னெனில் நீ அக்காலத்து அவனை
மிகச் சீறில் நான் இறக்கும்படி
நேரும் என்றுங் கூறினான்;
அங்ஙனங் கூறின அளவிலே ஞாயிறு
படுகின்றமையைக் கண்டு
பிரிந்தார்க்கு வருத்தந் தரும்படியாக
மாந்தளிர்போலும்

வீறத்தைக்கொண்ட மாலேக்கு

முன்னாகிய இக்காலத்தே இவ்வூரின்

மகளிர் தாம் தளிர்விரவின

மாலேகளைச் சூடி ஆடவர்மேல் தாம்

வைத்த நலத்தைப் பாடி

இன்புறுவார்கள்; அவர்களைப்போல

ஆச்சாமரர்

தளிர்க்குங் காட்டிடைச் சென்றவர் மீண்டுவரின் யாம் மனமகிழுவேம்,

* இப்பகுதியிலுள்ள அவவண......மன்ற (கஉ-கச] என்ற அடிகளுக்கு உரை

பின்வரும் கஎ-கூO அடிகளின்

உரைப்பகுதியிற் காணப்படும்.

† சேந்தன் திவாகரம் பார்க்க.

‡ சீவகசிர். கள0அ. சசஅ

கலித்தொகை

[கலி - கசரு

அதனாற் பெற்றதென்? அவர் வரக் கண்டிலேம் என்றுங் கூறினான்; கூறி, யாம் தவிர்க்குமாறு எங்ஙனே என்பீராயின் என்தோளைத் தொழில் கொள்கின்ற அவன் நெய்தற் பூவைப் புறவிதழொடித்து மாலை கட்டிச் சூடவும் வல்லன்; நெடிதாகிய மென்றோளிலே காமன் சிலையாகிய எழுதுகரும்பை எழுதவும் வல்லன்; இளமுலைமேற் தொய்யிற்குழம்பாற் கொடி எழுதவும் வல்லன்; இவை யொழித்து நீங்கியிருந்து மனம் வேட்கை யடக்கி யிருக்கு மிடத்துத் தன்கையில் வில்லைத் தொழில்கொள்ள வல்ல காமனை ஒக்கும்; அதுவன்றி, வேட்கை நிகழ்ந்து கூடுங்காலத்து ஆண்டு நிகழ்த்தும் நல்ல தொழில்கள் பலவற்றையும் வல்லன்;

இவ்வாற்றான் என் மனந்தளிர்க்கும் என்று கூறினான் ; அங்ஙனங் கூறின அளவிலே மாலைக்காலம் வருகின்றதனைக் கண்டு, அவனை வினையும் என் உள்ளங் குவியுமாறுபோல நெடிய கழியின் மலர்கள் குவிய, இரங்கும் என்னெஞ்சுபோலே கோவலர் குழலோசை தோன்ற, அலைவுபெற்ற என் மொழிகள்போல வண்டுகளின் செவ்வழிப்பாட்டு அடங்கக், கெட்டுப்போன என் அழகுபோலப் பகற்காலத்தின் ஒளி மழுங்கக், கலக்கத்தோடே வந்த காலனைப்போல என்மேலே மாலைக்காலமும் வந்தது; இனி எங்ஙனம் ஆற்றுவேன் என்று கூறினான் ; கூறி

அம்மாலையை வரவிட்ட ஞாயிற்றை நோக்கிச் சுடரே! யான் என்பதொரு தன்மையின்றி யான் இவ் விடத்தே இராக்காலத்தாலே வருந்தும்படி நீ போனாய்; அருளுடையை யல்லையாயிருந்தாய்; இத்தன்மையால் நீ வாழ்வாயாக என்று கூறினள்; கூறி, இவ்விரவால் இறந்துபட்டேனாயினும் நீங்கின்றாய் இருந்தது என்று கருதி, மிகுகின்ற நீரையுடைய உலகத்துள் உறைகின்ற கேள்வருள ரல்லாராயின், தங் கணவர்மேலுள்ள வேட்கையோடே இறந்துபடும் மாட்சிமைப்பட்ட மனத்தைப் பெற்றவர்கள் குற்றமில்லாத சுவர்க்கத்தே[1] சென்று அவர்கள் நுகர விரும்பியவற்றைத் தாம்

விரும்பியபடியே பெறுதல் மெய்யென்று நூல்கள் கூறியவென்னின் யானும் அங்ஙனம் அவன்மேல் விருப்பத்தோடே உயிர் போய் அவனைப் பெற்று எவ்விடத்தும் புகழுடையேனுவேன்; இனி வருத்தமின்று, என்றுங் கூறினுள்; கூறி "முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு பிற்பகற் கண்டு விடும்" என்று கூறிய பழமொழி உளதாகலின் அவ்வாறே நீரில் அலர்ந்த நீலமென்று அவர் புகழ அவர்க்கு அந்நாளிற் பெரிய வருத்தத்தைச் செய்த என் கண்கள் இப்பொழுது பீரலர்போலப். பெரியவாகப் பசந்தன; அதனையும் என் வருத்தத்தையுங்

கண்டும் அரு ளின்மையின் அவனை எனக்குக் காட்டாமல் இவ்வூர் நின்று அலர் தூற்றா நிற்கும்; இனி இவ்வுய்யா விடும்பையிடத்து உயிர்களைக் காத்தற்கு யான் அரசனே என்று கருதித் தன்னுயிரைப் பாதுகாக்குமாறு போல உலகத்துப் பெரிய உயிர்களை எல்லாந் தழீஇப் பாதுகாக்கும் இம் மன்னனும் எனக்

(பாடம்.) 1. சுவர்க்கத்தைச். 2. வருத்தம் என்னென்றுங்.

சாஅசீ

இனிய உயிரை ஒப்பானைக் காட்டி
என்னுயிரைச் சிறிதொன்றுங் காவா
திருக்கின்ற தன்மை என்ன பயனைக் கருதியோ என்றுங் கூறினளென்று
கூறும்படியாக நிலைபெற்ற காமநோயாலே அங்ஙனம் மயக்கங்கொண்ட
மனத்தையுடையவன் பல மலைகளைக்
கடந்துபோனவன் வரைவொடுவந்து
பணிந்து தன்னடியைச்
சேர்கையினாலே பாண்டியனை
உறவாக அவன் மனத்தைத்
தெளிவித்த தேயத்திலுள்ளவர்
இன்பமுற்று வாழுமாறுபோல அவனால்
இழந்த நலத்தை இனிய
அகமகிழ்ச்சியோடு எய்தினள்; இஃ
தென்ன வியப்போ எனக் கண்டார்

கொண்டு கூறிற்றாக உரைக்க.

'சென்று சேட்பட்டதென்னெஞ்சு' என்னுந் துணையுங் கூறத்தகா தன கூறலின் மடனிறந்தவாறும், 'நெடுமென்றோள்' 'நீரலர் நீலம்' 'இனமுலை' என்பனவற்றான் மிகுதிபிறந்தவாறும், 'வழிபட் டிரக்குவேன் வந்தேன்' என வருத்தமிறந்தவாறும், 'யாண்டுமுடையே னிசை' என்பதனால் வியவாமையின் மருட்கை யிறந்தவாறும் உணர்க.

இது கண்டார்க்கு அவளாக்கம்[1] கண்டு மருட்கை பிறந்தது.

நெய்தனெறித்தல் முதலியன திருவினாற் காமக்குறிப்புப் பிறந்த ஒப்பு, இவை குடிப்பிறப்பினை அறிவித்துக் காமக் குறிப்பினை நிகழ்த்தலின்.

இஃது ஐஞ்சீரடுக்கிவந்த கலிவெண்பாட்டு. (உச)

கசச.

நன் ஹுதால் காண்டை நினையா
நெடித்துயிரா

வென் ஹுற்ருள் சொல்லோ
விஃதொத்தி பன்மா

ணருதருந் தன்ஞனுக் கைவிட் டிருதருங்
கண்ணீர் துடையாக் கவிழ்ந்து நிலனேக்கி

ரு. யன்ன விடும்பை பலசெய்து
தன்னை

வினவுவார்க் கேதில
சொல்லிக் கனவுபோற்

றெருளு மருளு மயங்கி
வருபவள்

கூறுப கேளாமோ சென்று;

எல்லாநீ, என்னணங்

குற்றனே யார்நின் னிதுசெய்தார்

௪0. நின்னுற்ற வல்ல லுரையெனா

வென்னை

வினவுவீர் தெற்றெனக் கேண்மி னொருவன்

குரற்கூந்தா லென்னுற்ற வெவ்வ நினக்கியா

னுரைப்பனைத் தங்கிற்றெ னின்னுயி ரென்று

மருளூட்டி மாறி யதற்கொண் டெனக்கு

௪ரு. மருவுழிப் பட்டதென் னெஞ்சு ;

(பாடம்.) 1. அவராக்கல்.

எங்குந் தெரிந்தது கொள்கவே
னவனுள் வழி;

பொங்கிரு முந்நீ ரகமெல்லா
நோக்கினை
திங்களுட் டோன்றி யிருந்த குறுமுயா
லெங்கே யிதனகத் துள்வழிக் காட்டீமோ

௨0. காட்டீயா யாயிற் கதநாய்
கொளுவுவேன்
வேட்டுவ ருள்வழிச் செப்புவே னாட்டி
மதியொடு பாம்பு மடுப்பேன் மதிதிரிந்த

வென்னல்ல றீரா யெனின்;

என்றுங்கே, உண்ணின்ற

வெவ்வ முரைப்ப மதியொடு உரு:

வெண்மழை யோடிப் புகுதி

சிறிதென்னைக்

கண்ணோடி யைப்போதி நீ;

நீடிலைத் தாழைத் துவர்மணற் கானலு
ளோடுவே ளோடி யொளிப்பேன். பொழிறொறு

நாடுவேன் கள்வன்

கரந்திருக்கற் பாலன்கொ ௯௦.

லாய்பூ வடும்பி னலர்கொண்

டு துச்சாணைங்

.கோதை புனைந்த வழி;

உதுக்கான், சாஅய்
மலர்காட்டிச் சால்பிலான்
யாமாடும்
பாவைகொண் டோடி யுழி;

உதுக்காணங், தொய்யில்
பொறித்த வழி;
௬௫. உதுக்காண், தையா
றேறெனத் தேற்றி யறனில்லான்
பைய முயங்கி யுழி;

அளியவென் னுள்ளத்
துயவுத்தே ரூர்ந்து

விளியாநோய் செய்திறந்த
வன்பி லவனைத்
தெளிய விசும்பினு ஞாலத்
தகத்தும்
௪௰. வளியே யெதிர்போம்
பலகதிர் ஞாயிற்
றொளியுள் வழியெல்லாஞ்
சென்று முனியெம்மை
யுண்மை நலனுண் டொளித்தானைக் காட்டுமோ
காட்டாயேல், மண்ணக மெல்லா மொருங்கு சுடுவேனென்
கண்ணீ ரழலாற் றெளித்து ;

௪௫. பேணான், துறந்தானை நாடு
மிடம்விடா யாயிற்
பிறங்கிரு முந்நீர் வெறுமண

லாகப்

நெய்தற்கலி

சருக

புறங்காலிற் போக

விறைப்பேன் முயலி

னறம்புணை யாகலு முண்டு;

துறந்தானை, நாடித்

தருகிற்பா யாயி னினக்கொன் று

௫௦. பாடுவே னென்ளே

யுரைத்து;

புல்லிய கேளிர் புணரும் பொழுதுணரே
னெல்லியா கெல்லையென் றுங்கே பகன்முனிவ
னெல்லிய காலை யிராமுனிவன் யானுற்ற
வல்லல் களைவா ரிலேன்;

ரு. ஓஒகடலே, தெற்றெனக் கண்ணுள்ளே தோன்ற விமையெடுத்
பற்றுவே னென்றியான் விழிக்குங்கான் மற்றுமென் [துப்
னெஞ்சத்து ளோடி யொளித்தாங்கே துஞ்சாநோய்
செய்யு மறனில் லவன்;

ஓஒகடலே, ஊர்தலைக் கொண்டு கனலுங் கடுந்தீயு
சுo. ணீர்பெய்தக் காலே சினந்தணியு மற்றிஃதோ
வீரமில் கேள்வ னுறீஇய
காமத்தீ

நீருட் புகினுஞ் சுடும்;

ஓஒகடலே, எற்றமி லாட்டியென் னேமுற்று ளென்றிங்கோ
யுற்றறியா தாரோ நகுக நயந்தாங்கே
சுரு. யிற்று வறியின் முயங்கலேன்

மற்றென்னை
யற்றத்திட் டாற்றறுத்தான்
மார்பு ;

ஆங்கு,

கடலொடு புலம்புவோள்
கலங்கஞர் தீரக்
கெடலருங் காதலர் துனைதரப்
பிணிநீங்கி
௨0. யறனறிந் தொழுகு மங்க ணாளனைத்
திறனிலா ரெடுத்த தீமொழி யெல்லா
நல்லவை யுட்படக் கெட்டாங்
கில்லா கின்றவ ளாய்நுதற்
பசப்பே.

இதுவுமது. இதற்கும் அவ்வுரை

கூறிக்கொள்க.*

(க—அ) நன்னுதால் .

. . . சென்று :—

(இ - ள்.) நன்றாகிய நுதலினையுடையாய்! இவளொருத்தி தனக்குரிய
ணினைக் கைவிட்டுத் தன் மனத்தே ஒன்றை நினைத்து நெட்டுயிர்ப்புக்

* சாகூ-சச௦. ஆம் பக்கம் பார்க்க,

கொண்டு வீழ்கின்ற கண்ணீரைத் துடைத்துப் பிறரை நோக்காது நில
தைக் கவிழ்த்து நோக்கித் தன்னை நீ உற்றது என்னென்பார்க்குக் கனவி
கண் வாய்வெருவிக் கூறுவாரைப்போலே உத்தரமல்லாதன சில சொல்லி
பலகாலும் நகுதலைச் செய்யும் ; இங்ஙனந் தெளிவும் மயக்கமுமாய் மயங்
வேறும் அத்தன்மையவாகிய இடும்பைகள் பலவற்றையுந் தன்னிடத்தே
உண்டாகக் கொண்டு வருகின்றவள் என்ன துன்பமுற்றாளோதான் ? இ
ளைக் காண்பாயாக ; யாஞ் சென்று இவள் கூறும் வார்த்தைகளைக் கேட
டலைச் செய்யாமோ என்று ரென்றுகூறினான் ;

(கூ—கக) எல்லாநீ . . . . . வழி :—

(இ - ள்.) அங்ஙனங் கூறியவள், கேட்கக் கடவேமென்று நம்மிடே கூறி வந்து, எடீ! நீ என்ன வருத்தமுற்ருய்? யார்தான் நினக்கு இவ்வரு தஞ் செய்தார்? நினக்கு உற்ற வருத்தத்தை எங்கட்கு உரையென்று சொல்லி என்னைக் கேட்கின்றவர்களே! அது வந்தவாற்றை என் பக்கலிலே தெளியக் கேண்மின்; ஒருவன் கொத்தான கூந்தலையுடையாய்! எனக்கு உற்ற வருத்தத்தை யான் நினக்கு வந்து உரைக்குமளவும் என் இன்னுயிர் போகாமற் றங்கிற்றுக்காண் என்று இங்ஙனந் தன்னோடு யான் மருவுதலை உறுத்தி, அம்மருவுதலை அவன் மாறிப் போன அக்காலந்தொடங்கி என் நெஞ்சு எனக்கு அவன் மருவின இடத்தே அகப்பட்டு நின்றுவிட்டது; இனி அவனுள்ள இடமெங்கும் தேடித் தெரிந்து என்னெஞ்சினைக் கூட்டிக் கொள்வேன் என்று கூறினள்;

'உரைப்பனை': திசைச்சொல்.

(கஎ—உக) போங்கிரு . . . . நீ :—

(இ - ள்.) அங்ஙனங் கூறி, அந்திக்காலத்தே கையறவெய்தி உரைத்தவள் இனி இக்காலத்துத் தன்னாற் றேடுதல் அரிதென்று கருதித், திங்களைக் கண்டு இதனோடு செறிந்த முயல் தேடித் தருமெனக் கருதி, மிக்கு எழுகின்ற கரிதாகிய கடல்சூழ்ந்த உலகமெல்லாம் பார்த்துத் திங்களினுள்ளே விளங்கி இருந்த குறிய முயலே! அறிவு வேறுபட்ட என்னுடைய நெஞ்சை யான் தேடிக் கூட்டிக்கொள்ளக் கருதின வருத்தத்தை நீ அதனைக் கூட்டித் தீராயாயின் யான் வாங்கிக் கொள்ளும்படி இவ்வுலகத்தில் எங்கேள்வன் இருக்கின்ற இடத்தைக் காட்டுவாய்; அவனிருக்கின்ற இடத்தைக் காட்டாயாயின், நினக்குப் பகையாகிய கோபத்தையுடைய நாயை நின்னிடத்தே கொளுத்துவேன்; அதுவன்றி வேட்டுவருள்ள இடத்தே சென்று ஒருமுயல் உண்டென்று கூறுவேன்; அதுவேயன்றி நீ அரணாக உறைகின்ற திங்களோடே நின்னை அலைத்துவிழுங்கும்படி மதிக்குப் பகையாகிய பாம்பைச் செலுத்துவேனென்று அவ்வந்திக்காலஞ் செல்கின்ற காலத்தே தன்

மநயதறகல
சுருங

நெஞ்சினின்ற வருத்தத்தைச்
சொல்ல, அது வெண்மேகத்தே
மறைந்த
தனைக்கண்டு, நீ மதியோடே
வெண்மேகத்தே ஓடிச் சென்று
புகாநின்றாய், ஆகையினாலே
சிறிதென்னைக் கண்ணோட்டஞ்
செய்து நீ என்னைத் தேடிப்
போகின்றாய்போலே இராநின்றாய்
.
என்று கூறினான்;
(உள—கக) நீடிலைத் . . . .

மார்பு :—

(இ - ள்.) அங்ஙனங் கூறி, அது கரிய மேகத்தே மறைந்து விடுதலின் அதனை நோக்கித் தேடுமாறு அதற்குக் கூறக் கருதி, அக்கள்வனானவன் மறைந்திருக்கக் கடவனோ என்று காட்டும்படி, யான் நீண்ட இலையினை யுடைய தாழை கிற்கின்ற சிவந்த மணலையுடைய கானலிற் பொழில்க டோறும் ஓடிச் சென்று பார்ப்பேன் ; அங்ஙனஞ் சென்று பார்த்துக்

காணாமையின், ஓடிச் சென்று அவனை ஒளித்திருந்து காணக் கடவேனென்று கருதி ஒளித்திருப்பேன் ; நீயும் இங்ஙனம் ஒளித்திருந்தே தேடென்று கூறி
னான்; அங்ஙனங் கூறிப் பின்பு அவனிருக்கும் இடங்களுங் கூறக் கருதிப், பூவினையுடைய அடும்பின் மலரைக் கொண்டு எமக்குத் தருங் கோதை
யைக் கட்டின இடத்தை உவ்விடத்தே பாராய்; அமைதியில்லா தான்
யாங் கொண்டு விளையாடுஞ் சாய்ப்பாவையையும்* மலர்களையுங் கொண்டு

வந்து நமக்குக் காட்டி யான் தன்பின்னே செல்லும்படி அவற்றைக் கொண்

டோடிய இடத்தை உவ்விடத்தே பாராய்; எமக்குத் தானெழுதுந் தொய்யிலே எழுதிய அவ்விடத்தை உவ்விடத்தே பாராய்; மனத்தில்

அறனில்லாதவன், ...யால் ! நின்னைப் பிரியேன்; நீ தெளியென்று தெளி

வித்துப் பின்னர் மெல்லமுயங்கிய அவ்விடத்தை உவ்விடத்தே பாராயென்று

கூறினன் ; அங்ஙனங் கூறின அளவிலே அம்முயல் கருமேகத்து

மறைந்தே
போதலின் அதனைக் கைவிட்டு
இடையே தன்மேல் வந்துற்ற
வளியை
நோக்கி, வளியாகிய தெய்வமே !
திங்களின் ஒளிபோலன்றி
விசும்பிடத்
தும் ஞாலத்திடத்தும் பரக்கும் பல
கதிர்களையுடைய ஞாயிற்றின்
ஒளியுன்ன
இடமெல்லாஞ் சென்று
நாடுதற்குரிய நீ, உயவுத்தேரை
ஊர்ந்து வந்து
தன்னல் அளிக்கத்தக்க
என்னுள்ளத்திடத்தே கெடாத
காமநோயைச்

செய்து என்னைக்
கைவிட்டுப்போன அன்பிலாதவனை
அந்நோய் நீங்கி
என்மனர் தெளியும்படியாக
எதிர்ப்படுவாய்; அங்ஙனம்
எதிர்ப்பட்டு
வேட்கை மிகுதியான் எம்முடைய
இயற்கைநலத்தை நுகர்ந்து பின்பு
எம்மை ஒரு காரணமின்றி
வெறுத்து
அவ்வியற்கைநலத்தைக்கொண்டு
இம்மண்ணகத்தே ஒளித்தவனைக்
கொண்டுவந்து காட்டுவாய் ;
காட்டா
யாகில் என் கண்ணீரைத்

தெளித்து அதன்கண் எழுகின்ற அழலாலே
நின் மேனியெல்லாஞ் சேரச் சுடுவேன் என்றுங் கூறினான்; அங்ஙனங் கூறி
அதனைப் பின்னர்க்காணுமையின், தான் அவனைத் தேடக் கருதிக், கடலை

---

* கோளைப்பும் பாவை,

நோக்கி மிக்கு வருகின்ற கரிய கடற் றெய்வமே! என்னைப் பாதுகாவாளுய்த் துறந்தவனை யான் தேடிக் காணுமிடத்தை நீ விட்டுப் போகாமல் ஏறுவாயாயின் நின்னிடமெல்லாம் வெறுமணலாம்படி என் காற்புறத்தாலே நின் னுடைய நீரெல்லாம் போம்படி இறைப்பேன்; அது முடியுமோவெனின், அவ் வனம்முயலின் அதற்கு அறக் கடவுள் உதவியாதலும் உண்டாயிருக்கும் என் றுங்கூறினுள் ; அங்ஙனங் கூறி, ஓதம் வடிந்ததனைக் கண்டு என்னைக் கை விட்டுப்போனவனை நீ தேடிக்கொண்டு வந்து

தருவையாயின் அதற்குக் கைம்மாருக என்னேயைச்சொல்லி நினக்கு ஒரு பாட்டினைப் பாடுவேனென் றுங்கூறினன்; அங்ஙனங் கூறிப் பாடுகின்றவன் என்னைக்கூடின கேளிர் வந்து கூடுங் காலம் இரவோ பகலோ என்றறியேன்; ஆதலால் என்னை வருத்தும் பகற்பொழுதுபோய் இராப்பொழுதாவதாக என்று கருதிப் பகற் பொழுதை வெறுப்பேன்; அதுபோய் இராவான காலத்திடத்து அவ்விராக்காலத்தை அப்பொழுதே வெறுப்பேன்; அப்படியே ஓஓ! யான் உற்ற வருத்தத்தைக் கடலே! நின்னை ஒழியப் போக்குவாரை வேறுடையேனல்லேன் என்றுங்

கூறினன்; அங்ஙனங் கூறிப் பின்னுங் கடலே ! அறனில்லாதவன் தெளிய என்கண்ணுள்ளேவந்து
தோன்றுகையினலே கூடின இமையை விழித்துப் பிடித்துக் கொள்வேனென்று கருதி யான்விழிக்கப்* பின்னையும் ஓடிப்போய்
என் னெஞ்சத்துள்ளே
மறைந்துநின்று அப்பொழுதே யான் துயிலாத
காமநோயைத் தாராநிற்கும் ;
கடலே! ஊரையெல்லாந்
தனக்குள்ளாக்கிக்
கொண்டு கார்துங் கடியநெருப்புத் தன்னை அவிக்குநீரைச் சொரியச் சின

மாறும்; அதுபோலன்றி அருளில்லாத என் கேள்வன் என்னை உறுத்திய
இந்தக் காமமாகிய நெருப்புத் தனக்குப் பகையாகிய நீருள்ளே புகினுமோ
வேமாறு சுடாநிற்கும் ;† கடலே ! தன் மனத்து ஒரு துணிவில்லாதான்
என்ன பித்தேறினென்று கூறி, இக்காமநோயுற்றறியாதவர்களோ என்னை
இகழ்ந்து சிரிக்க ; இக்காமநோய்க்குத் துணையாவதோர் ஆளாறுதிபிலே
பின்னை என்னை யிட்டுவைத்து என் வலியை அறுத்தவன் மார்பினை யான்
விரும்பின அக்காலத்தே பின்பு

இத்தன்மைத்தாக
வருத்துமென்றறியின்
முயங்கேன்; அக்காலத்து
அறிகலேன்கா ணென்றுங்கூறினான்;
'ஓஓ' : வருத்தக்குறிப்பு.
ஓகாரம், பிரிநிலை. ஆற்றல் 'ஆற்'
றென
விகாரமாயிற்று.

(கூஎ)

ஆங்கு :—
அசை.

(கூஅ—எரு) கடலொடு
. . . . பசப்பே :—
(இ - ள்.) அங்ஙனங்
கடலோடே வருந்திக்

கூறினவளுடைய மனங்
கலங்கும் வருத்தந்தீரும்படி அவள்
காதலர் விரைந்து வரக் கெடுதலரிய

* கலி. கசஉ ; கக-கசு ; குறள். கஉகஅ. † காலடி. கூo.

நெய்தற்கலி

சஙு

காமநோய் நீங்கி, இவளுடைய அழகிய
நுதலிற் பசப்பு, அறநெறியறிந்து
நடக்குங் கண்ணோட்டமுடையவனை
அத்திறமில்லாதார் உண்டாக்கிச்
சொன்ன தீயமொழிகளெல்லாம்
நன்மக்கள் இருக்கின்ற
அவைக்குள்ளே ஆராய்ச்சிப்பட

அவைகெட்டாற் போல, இல்லையாகாநின்றது; என்ன வியப்போ எனக் கண்டார்கொண்டு கூறிற்றாக உரைக்க.

இது கண்டார்க்கு அவராக்கங் கண்டு மருட்கை பிறந்தது.

'மருவழிப்[1] பட்டதென் னெஞ்சு' என்னுந் துணையுங் கூறத்தகாதன கூறலின் மடனிறந்தவாறும், 'அறம்புணை யாகலு முண்டு' எனத் தன் னுடம்பும் உயிரும் வருந்திய நிலைதோன்றக் கூறுதலாற் கலக்க மெய்திய வாறுங் காண்க.

இஃது 'எங்குந் தெரிந்தது கொள்வே னவனுள் வழி' என ஐஞ்

சீரான் ஒன்றும், ' உதுக்காணந்
தொய்யில் பொறித்த வழி ' என
ஓரடியான் ஒன்றும் வருதலிற்
கொச்சகம்.

கலிவெண்பாவின் வேறுபட்ட
பாநிலைவகைக்
(உஎ)

கசரு.

துனையுநர் விழைதக்க
சிறப்புப்போற் கண்டார்க்கு
நனவினு ளுதவாது
நள்ளிருள் வேறாகுங்
கனவி னிலையின்றாற் காம

மொருத்தி
யுயிர்க்கு முசாஅ முலம்வரு
மோவாள் . . ரு. கயல்புரை
யுண்க ணரிப்ப வரிவாரப் .
பெயல்சேர் மதிபோல வாண்முகந் தோன்றப் .
பலவொலி கூந்தலாள் பண்பெல்லாந் துய்த்துத்
. . .
துறந்தானை யுள்ளி யழூஉ
மவனை
மறந்தாள்போ லாலி நகூஉ
மருளுஞ்
கo. சிறந்ததன் ஞெஞறு நலனு
நினையாது
காம முனை இயா
ளலந்தாளென் றெனைக்காண

நகாண்மின் கூறுமேவன்
மாக்காள் மிகாஅது
மகளிர், தோள்சேர்ந்த
மாந்தர் துயர்கூர நீத்தலு
நீள்சுரம் போகியார் வல்லைவந்
தளித்தலு
கரு. மூழ்செய் திரவும்
பகலும்போல் வேறாகி

வீழ்வார்கட் டோன்றுந்
தடுமாற்ற ஞாலத்துள்
வாழ்வார்கட் கெல்லாம் வரும்
;

(பாடம்.) 1. அருவழிப். 2.

லநலி எகடஉ,

பறுரன
மைபதுமாதுாமை   (ைய
• கசழு

தாழ்பு, துறந்து
தொடிநெகிழ்த்தான் போகிய
கான
பிறந்தெரி னையாம்ற் பாஅய்
முழங்கி   .0.
வறந்தென்னை செய்தியோ
வானஞ் சிறந்தவென்
கண்ணீர்க் கடலாற் கனைதுளி
வீசாயோ

கொண்மூக் குழீஇ முகந்து ;

நுமக்கெவன் போலுமோ வூரீ
ரெமக்குமெங்[1]
கண்பாயல் கொண்டுள்ளாக்
காத லவன்செய்த
டு. பண்பு தரவந்த வென்றொடர்
நோய்வேது
கொள்வது போலுங்
கடும்பகன் ஞாயிறே
யெல்லாக் கதிரும் பரப்பிப்
பகலொடு
செல்லாது நின்றீயல்
வேண்டுவ னீசெல்விற்

புல்லென் மருண்மாலைப்
போழ்தின்று வந்தென்னைக்
கொல்லாது போத லரிதா
லதனொடியான்
செல்லாது நிற்ற லிலேன்;

ஒல்லையெங், காதலர்க் கொண்டு
கடலூர்ந்து காலைநாட் போதரிற்[2]
காண்குவேன் மன்னோ பனியொடு
மாலைப் பகைதாங்கி யான்;

இனியனென், றேம்படுப்பன்
ஞாயி றினி;
ஒள்வளை யோடத் துறந்து

துயர்செய்த
கள்வன்பாற் பட்டன்
றொளித்தென்னை யுள்ளிப்
பெருங்கடல் புல்லெனக் கானல்
புலம்ப
விருங்கழி நெய்த
லிதழ்பொதிந்து தோன்ற
விரிந்திலங்கு வெண்ணிலா வீசும் பொழுதினான்
யான்வேண் டொருவனென் னல்ல லுழீஇயான்

றான்வேண்டு பவரோடு
அஞ்சுங்கொ றஞ்சாது
வானு நிலனுந் திசையுந்

துழாவுமென்
ஞனைப் படர்மிக்க நெஞ்சு ;

சரு. ஊரவர்க் கெல்லாம் பெருநகை
யாகியென்
ஞருயி ரெஞ்சும னங்குநீ
சென்றீ
நிலைமிழ் வான்றிங்கா
ளாய்தொடி கொட்ப

வெளிபுற மாதி யருளான் றுறந்தவக்

(பாடம்.) 1. ரேமக்கெ. 2. போதலிற்.

செய்தல் - உஅ]
நெய்தற்கலி
சருள

காதலன் செய்த
கலக்குறுநோய்க் கேதிலா. ௫௦.
ரெல்லாருந் தேற்றார் மருந்து ;

வினைக்கொண்டென்
காமநோய் நீக்கிய னூரீ

ரனைத்தானு மெள்ளினு
மெள்ளலன் கேள்வ
னினைப்பினுங் கண்ணுள்ளே
தோன்று மனைத்தற்கே
யேமரா தேமரா வாறு ;

௫௫. கனையிருள் வானங்
கடன்முகந் தென்மே

துறையொடு நின்றீயல்
வேண்டு மொருங்கே
நிறைவளை கொட்பித்தான்
செய்த துயரா
விறையிறை பொத்திற்றுத்
தீ ;

எனப்பாடி,

கூ0. நோயுடை நெஞ்சத் தெறியா
வினைபேங்கி
யாவிரு மெங்கேள்வர்க்
காணீரோ வென்பவட்
கார்வுற்ற பூசற் கறம்போல
வெய்தந்தார்
பாயல்கொண் டுள்ளா தவரை
வரக்கண்டு

மாயவன் மார்பிற்
றிருப்போல் பவள்சேர
கூறு. ஞாயிற் றுமுன்ன
ரிருள்போல மாய்ந்ததென்
ளையிழை யுற்ற துயர்.

இஃதுமது. இதற்கும் முன்னர்க் கூறிய* உரையைக் கூறிக் கொள்க.

(க—கள) துணையுநர் . . . . வரும் :—

(இ - ள்.) மக்கள் விரைந்தனராய் விரும்புதல் தக்கதொரு தலைமை போலே இருக்கின்ற காமமானது நள்ளிருட்கண்ணே கண்டவர்களுக்கு நனவின்கண் உதவாதே. வேறுபட்டுப்

போங் கனவினும் நிலைபெறுதல்
இன்றாயிருந்தது; எவ்வாறெனிற்
பலவாய்த் தழைகின்ற கூந்தலையுடை
யாளாகிய ஒருத்தி தன் குணங்களை
எல்லாம் நுகர்ந்து தன்னைக் கைவிட்
டவனை நினைத்து நெட்டுயிர்ப்புக்
கொள்ளும்; அவனோடு
கூடுமாற்றினைச் சிலரோடுசாவும்;
நெஞ்சு சுழலும்;[1]
பெய்கின்ற-மழையைச் சேர்ந்த மதி
போலே தன்முகந்
தோன்றும்படியாகக் கயலையொக்குந்
தன் கண்களினின்றும் அரித்து[2]
விழுகின்ற நீர் முகத்தே வடியும்படி
ஒழியாளாய் அழாநிற்கும்; அவனை

மறந்தாளைப்போலே ஆரவாரித்து
இடையே ஈகுவதுஞ் செய்யும்;
ஆகையினாலே தனக்குச் சிறந்த† தன்
நாணையும் மற்றுமுள்ள நன்மைக்குணங்
களையும் நிலைபெற நினையாதே காமம்
ஒன்றையுமே நினைத்து அவன் அலமந்தா

* ௨௧௯-௨௨0-ஆம் பக்கம் பார்க்க. † கலி. ௧௨௭ : அ-௯.

(பாடம்) 1. உழலும்.

2. மறித்து.

௨௫௮

[illegible]

[illegible]

வென்று இங்ஙனம் இகழ்ந்து கூறி,*

எல்லாருங் காண என்னைச் சிரியாதே

கொள்ளும் ;

ஐயறிவினையுடையவர்களே ! சுருங்க

யான் அதன் தன்மை கூறுவேன்;

கேண்மினென்று கூறுகின்றவன்,

மகளிர் தோளைச் சேர்ந்த ஆடவர்

அவர்கள் வருத்தம் மிகும்படி

பிரிதலும் பின்னர் நீண்ட சுரத்தைப்

போனவர்கள் விரைய வந்து

அருள்செய்தலுமாகிய இரண்டும்

இரவும் பகலும் போலே† முறைமை

செய்து வேறாய் ஒருவரை ஒருவர்

விரும்புவா ரிடத்துத் தோன்றும் ;

இன்பம் நிலையில்லாமையான

தடுமாற்றமாய் இருக்கு மது

தனக்கேயன்றி உலகத்துக் கூடியிருந்து வாழ்வார்களுக்கெல்லாம் வருவதுஞ் செய்யும் என்று அதன்றன்மை கூறினன் ;

(கஅ—உஉ) தாழ்பு . . . . முகந்து—

(இ - ள்.) அங்ஙனங் கூறி அவர் நக்கதனல் யாம் இங்ஙனமாயினேம் என்று கருதி அழுகின்றவள் ஆண்டெழுந்த வெண்மேகத்தை நோக்கி, வானமே ! நீ பெய்யாதே வறந்து என்னைகாரியஞ் செய்கின்ருய் ? நின்

இனத்தோடே கூடி என்
கண்ணீரால் சிறந்த கடலிலே
மூழ்கி பாய்ந்து முழங்கி முன்னர்
என்னிடத்தே தாழ்ந்து பின்னர்
என்னைத் துறந்து செருக்கு[1]
தொடியை உட்பட நெகிழ்த்தவன்
போகிய கானத்தினை நெருப்பு
மிக்குச் சுடாமற் செறிந்த
துளியை வீசாயோ ? வென்று
மழையை நோக்கிக் கூறினாள் ;

(உ௬—௬௫)

நுமக்கேவன் . . . . றினி

(இ - ள்.)
ஊரிலுள்ளீர் !

அங்ஙனங் கூறி, மீண்டும் அவ்வூரிலுள்ளாரை நோக்கி இக் கடும்பகல் எமக்கு எங்கண்ணுறக்கத்தைக் கைக்கொண்டு எம்மை நினையாத காதலையுடையவன் என்னிடத்துச் செய்த குணங்கள் தருகையினாலே வந்த என்னுடைய இடையறாத நோயான் வருங்குளிரை வேதுகொள்வதுபோலே இராநின்றது ; இது நமக்கு என்போலே இருக்கின்றது கூறுமின் என்றாள் ;

அங்ஙனங் கூறி இங்ஙனம் வேது கொண்டு என்னைக் காக்குங் கடும்பகல் ஞாயிறே ! நீ எல்லாக் கதிர்களையும் பரப்பி இப்பகற்பொழுதோடே போகாது நிற்றலை விரும்பாநின்றேன் ; அதற்குக் காரணம் என்னெனில், நீ போகிற்புற்கென்ற;

மயக்கத்தைத் தரும்

மாலைக்காலம் இன்று வந்து என்னைக் கொல்லாமற்போதல் அரிது; அதனோடே யான் உயிர் போகாநிற்குந் தன்மையையுடையேனல்லேன்; ஆதலாற் காணென்றான்; என்று பின்னும் ஞாயிறே! நீ எங்காதலரை விரையக் கொண்டு கடன்மேலே வந்து நாட்காலையிலே இவ்வுலகிலே போதுவாயாயின், யான் என்னோபின் நடுக்கத்தோடே மாலையாகிய பகையையும்

* குறள், ௧௧௪௦. † அகம், ௯௨௭ : ௧-௪. ‡ குறள், ௧௨௨௨.

நெய்தல் - ௨௮]

நெய்தற்கலி

௪௫௯

...பொறுத்து நின்னிடத்து அவன் இனியன், அவனை நீ துனித்திராதே ...தாள்ளென நெஞ்சினைப் பாதுகாப்பதுஞ் செய்வேன்; அங்ஙனம் பாது...த்துப் பின்னர் அவனைக் காண்பேன்கொல்லோ; என்று கூறினான்;

உம்மை இசைநிறை. 'நின்றீயல்': தொழிற்பெயர்த்திரிசொல்.

(௬௬—௭௪) ஒள்வளை .

. . . நெஞ்சு :—

(இ - ள்.) அங்ஙனம் ஞாயிற்றை நோக்கிக் கூறின அளவிலே மாலைக் காலமுந் திங்களும் வந்தன; அவற்றான் வருத்தம் மிக்கு, என்னுடைய அமையாத வருத்தமிக்க நெஞ்சு முன்பே ஒள்ளிய வளை கழலும்படி என்னைக் கைவிட்டுப் பின்பு வருத்தஞ்செய்த கள்வனை உள்ளி என்னை ஒளித்துப்போய் அவன்பாற் பட்டது; அது தான் மீண்டுவந்து பெருங் கடல் தன்னிறந் தோன்றாமல் புற்கெனக் கானல் பறவைகள் முதலியன இன்றித் தனிப்பக் கழியின்நெய்தல் இதழ்குவிந்து தோன்ற வந்த மாலைப் பின்னர் விளங்குகின்ற வெண்ணிலாப் பரக்கும் பொழுதின்கண்ணே விசும்பையும் நிலத்தையுந் திசைகளையும் அவனைத் தேடித் திழர்வாநிற்கும்; இங்ஙனம் என்னை அல்லலுறஇயினவன், தான் விரும்பாமல் யான் விரும்பப் பட்டான் ஒருவன்; அவன் தன்னை விரும்புகின்ற என்னோடே துயிலாது தனியே துயில்கொள்ளுமோ கொள்ளானோ, என்று கூறினாள்;

'வேண்டுபவர்' என்றாள், தன்னைப் பிறர்போல.

(௬௫–௭0) ஊரவர்க்கெல்லாம் . . . . மருந்து:—

(இ - ள்.) அங்ஙனங் கூறி, எழுந்த திங்களை நோக்கி, நிலவைக் கான்ற திங்களே! தோள் மெலிந்தகாலத்துச் செருகலாமென்று ஆராய்ந்த தொடி உட்படச்சுழலும்படி அளித்தலை என்னிடத்து மாறிப், பின்னர் என்னை அருள் செய்யாதே கைவிட்ட அக்காதலன் செய்த, மனக்கலக்கம் உறுகின்ற காமநோய்க்கு நின்னை ஒழிய அயலிலுள்ளார் எல்லாரும் அதற்கு ஒரு மருந்தைத் தெளிவித்துக் கூறார்; ஆதலால் ஊரவர்க்கெல்லாம் பெரியதோர் நிகழ்ச்சி உண்டாம்படி என் அரிய உயிர் போகாநிற்கும்; இதனை நோக்கித் திங்களாய புத்தேளே! நீ அவன்பாற் சென்று என் குறை முடிப்பாயாக என்று கூறினாள்;

'ஆகி'; ஆக.

(ருக—ருச)

வினைக்கொண்டேன் . . . .

வாறு :—

(இ - ள்.) அங்ஙனங் கூறிய திங்கள் போகாதிற்றலின் அதனைக் கை விட்டு இன்னும் நம் வருத்தம் உணர்ந்து வினவிய ஊரிலுள்ளாரே [1]

(பாடம்) 1. ஊரிலுள்ளாரே! அவனே நம் வருத்தந் தீர்த்தற்குரியானென்று கருதினீர்; நீர்,

'சுO

கலித்தொகை

[கலி - கசுரு

ம் வருத்தந் தீர்த்தற்குரியரென்று கருதி, ஊரீர்! நீர் என்னை இகழ்ர் ிருக்கினும் என்கேள்வன் சிறிதும் என்னை இகழ்கிரான்; அதற்குக் ாரணமென்னெனில்

மெய்யுற்றுப்புணர்ந்து யான்
பரிகாரப்படாததொரு நெறியிலே நின்று
நெஞ்சால் நினைப்பிடத்துத்
தோன்றுதலினுங்காட்டிற்
கண்ணிடத்தே தோன்றும்;
அவ்வளவு அருள்செய்தற்கு என்னெஞ்சுதான்
பரிகாரப்படுகின்றதில்லை ; இதனை
நம்முடையதோர் தொழிலாக
ஏறட்டுக்கொண்டு[1] எனது காமநோயை
நீக்குதற்கு நல்ல காலமென்று
கூறினான்;

(௫௫-௫௮) கனையிருள் . . . .
நீ:—

(இ - ள்.) அங்ஙனங் கூறி,

அவனைத் தந்து இவர்[2] இந்நோயை
நீக்கு ளவுஞ் செறிந்த
இருளையுடைய மேகமே! நிறைந்த
வளை சுழலப்[3] ண்ணினவன் செய்த
வருத்தத்தாலே எனக்குச்
சந்துதொறுஞ் சந்து தொறுங் காமத்தீ
மூண்டது; இதன் வெம்மை ஆறும்படி
கடலிலே முகந்து
ன்மேலே சோர இடைவிடாமற் பெய்யுந் துளியோடே நிற்றலைச் செய்தல்
வேண்டும்,' என்று கூறினள்;

(நக—கக) எனப்பாடி

. . . . துயர்:—
(இ - ள்.) என்று அங்கு

அங்ஙனஞ்

சொல்லிக் காமநோயையுடைய
நெஞ்சிலே அடித்துக்கொண்டு வருந்தி
அழுது, நீங்கள் எல்லீரும் தேடிச்
சென்றும் எங்கணவரைக் காணப்
பெற்றிலீரோ என்று
கூறுகின்றவட்கு உற்ற வருத்தமானது,
தன் துயிலை வாங்கிக்கொண்டு
தன்னை நினையாத வரைத்
தன்னிடத்தே வரக்கண்டு அவர்
மார்பிடத்தே மாயவன் மார்பில்
திருச்சேர்ந்தாற்போலே அவள் சேர ஞாயிற்றின்முன் இருள் கெடுமாறு
போலக் கெட்டது. ஆதலால் இவ்வாயிழை பசப்புற்ற வருத்தத்தி
கடவுள் உதவித் தீர்த்தாற்போல
அவரும் உதவித் தீர்த்தார் என்று
கண்டார் வியந்து தம்மிற்
கொண்டுகூறிற்றாக உரைக்க.

இது கண்டார்க்கு அவராக்கங் கண்டு மருட்கை பிறந்தது.

'நோய்வேது கொள்வதுபோலுங் கடும்பகல்' என்னுந் துணையுங் கூறத்தகாதனகூறலின் மடனிறந்தவாறும், 'பனியொடு மாலைப் பகைதாங்கி யான்' எனத் தன் வருத்தந் தோன்றுமற் கூறலின் வருத்தமிறந்தவாறுங் 'கண்ணீர்க் கடலால்' என்றதனையும், 'வானு நிலனுந் திசையுந் துழாஅ* மென்......னெஞ்சு' என்றதனையுந் தான் வியவாமையின் மருட்கையிறந் வாறும், 'எங்கண் பாயல்கொண்டு' என்றும் 'ஒள்வளை யோட' என்று வனப்புமிகுதி கூறலின் மிகுதியிறந்தவாறுங் காண்க.

---

* கலி ௪௨ : ௧௧-௧௨.

(பாடம்) 1. எறட்டுக் கொண்டேன்; அது. 2. அவன். 3. மழலப்.

நெய்தற்கலி

சாசுக

இஃது ஐஞ்சீரடிவந்த தாவும் ஐஞ்சீரடுக்கிய குறுவெண்பாட்டும் ஓரடி யானொன்றும் பெற்றுக் கலிவெண்பாவின் வேறுபட்ட பாநிலைவகைக் கொச்சகம். (உ-அ)

கசசுா.

உரைசெல வுயர்ந்தோங்கிச் சேர்ந்தாரை யொருநிலையே
வரைநில்லா விழுமமுறீஇ நடுக்குரைத்துத் தெறன்மாலை

யரைசினு மன்பின்றுங்
காமம் புரைதீர

வன்னமென் சேக்கையு
ளாரா தளித்தவன்

று.

றுன்னி யகலத்[1] துறந்த வணியளாய்
நாணு நிறையு முணர்கல்லா டோண்ணெகிழ்பு

பேரம ருண்க ணிறைமல்க வந்நீர்தன்
கூரெயி றூடிக் குவிமுலைமேல் வார்தரத்
தேர்வழி நின்று தெருமரு
மாயிழை

௧0. கூறுப கேளாமோ சென்று;

எல்விழாய், எற்றி

வரைந்தானை நாணு மறந்தானென்
றுற்றனிர் போல வினவுதிர்
மற்றிது

கேட்டீமி னெல்லீரும்

வந்து ;

வறந்தெற லாற்றிய வானமும் போலு
நிறைந்தென்னை மாய்ப்பதோர் வெள்ளமும் போலுஞ்
சிறந்தவன் றாவற நீப்பப் பிறங்கிவர்
தென்மே னிலைஇய நோய் ;

நக்கு நலனு மிழந்தா ளிவளென்னுந்
தக்கவிர் போலு மிழந்திலேன் மன்னோ
மிக்கவென் னாணு நலனுமென் னுள்ளமு
மக்கா லவனுழை யாங்கே யொழிந்தன
வுக்கா ணிஃதோ வுடம்புயிர்க் கூற்றாகச்
செக்கரம் புள்ளித் திகிரி யலவனொடியா
னக்கது பன்மா ணினைந்து ;

கரைகாணு நோயு ளழுந்தா தவனைப்
புரைதவக் கூறிக் கொடுமை நவல்வீர்

(பா-ம்) 1. மன்னிய காலர்.

வரைபவ னென்னி னகலா
னவனைத்
திரைதரு முந்நீர் வளாஅக
மெல்லா
நிரைகதிர் ஞாயிற்றை
நாடென்றேன் யானு ௩௦.
முரைகேட் புழியெல்லாஞ்
செல்வேன் புரைதீர்ந்தான்
யாண்டொளிப்
பான்கொல்லோ மற்று;

மருள்கூர் பிணைபோன்

மயங்கவெங் கோய்செய்யு
மாலையும் வந்து மயங்கி
யெரிநுதி
யாமங் தலைவந்தன் றூயி
னதற்கென்னோய்
நடு. பாடுவேன் பல்லாருட்
சென்று;

யானுற்ற வெவ்வ முரைப்பிற்
பலர்த்துயிற் றும் யாமநீ துஞ்சலை
மன்;

எதிர்கொள்ளுடை ஞாலந்
துயிலாரா தாங்கண்
முதிர்பெண்மேன் முற்றிய

வெங்கோ யுரைப்பிற் கதிர்கண்
மழுங்கி மதியு மதிர்வதுபோ
லோடிச் சுழல்வது மன் ;

பேரூர் மருகிற் பெருந்துயிற்
சான்றீரே
நீரைச் செறுத்து நிறைவுற
வோம்புமின்
கார்தலைக் கொண்டு
பொழியினுந் தீர்வது
போலாதென் மெய்க்கனலு
நோய் ;

இருப்பினு நெஞ்சங் கனலுஞ்
செலினே
வருத்துறும் யாக்கை

வருந்துத லாற்றே

னருப்ப முடைத்தென் னு ளெவ்வம் பொருத்திப்
பொறிசெய் புனைபாவை போல வறிதுயங்கிச்
ருo. செல்வேன் விழும முழந்து;

எனவாங்குப் பாட வருளுற்று;

வறங்கூர் வானத்து வள்ளுறைக் கலமரும்
புள்ளிற் கதுபொழிந் தாங்கு மற்றுத்தன்
னல்லெழின் மார்பன் முயங்கலி
ருரு. னல்ல றீர்ந்தன் றாயிழை பண்பே.

இதவுமது. இதற்கும் முன்னங்* கூறிய உரையைக் கூறிக்கொள்க.

---

* சகசு-சசo-ஆம் பக்கம் பார்க்க.

. நெய்தல் - உக]

நெய்தற்கலி

சசாரு

(க-கஎ) உரைசேல .

. . . நோய் :—

(இ - ள்.) அரசன் தனக்குப் புகழ் உயர்ந்து நடக்கும்படியாகத் தம் மறிவான் மிக்குச் சேர்ந்த அமைச்சரை முன்னர் நடுக்கமான மொழிகளைக் கூறிப் பின்னர் ஒருபடியிலே எல்லையில்லாத இடும்பைகளை உறுவித்துக் கொல்லுதலை இயல்பாகவுடைய கொடுங்கோல் அரசனிலுங்காட்டிற், கண வர்க்கு மகளிர்க்குண்டாகிய காமத்தாலும் அவர்மேல் நிகழும் அன்பில்லை யாமாயிருந்தது; எங்ஙனேயென்னில் அவ்வாயிழை தன்றலைவன் அன்னத் தூவியாற் செய்த மெல்லிதாகிய சேக்கையிலே அளித்து இராக்காலத்தே வந்து தன்னிக் கூரிய எயிற்றினீரை நுகர்ந்து குற்றந் தீரத் தலையளி செய்து நீங்குகையினாலே அத்தலையளியால் ஆராமல் தன்னை நீங்கின அணி களையுடையனாய்த் தனக்கியல்பாகிய நாணையும் நிறையென்னுங் குணத்தை யுந் தாங்குதல் வேண்டுமென்று அறியாளாய்த் தன்தோள் மெலிந்து பெரிய அமர்த்த உண்கண் நீர் நிறைகையினாலே அந்நீர் தன் குவிந்த முலைமேலே வடியாநிற்க அவனைத் தேடுவதோர் கூற்றிலே நின்று மனஞ் சுழலாநிற்கும்; இனி யாம் இவளிடத்தே சென்று இவள் கூறுவனவற்றைக் கேளாது இருப்பேமோ? கேட்கக்கடவேமென்று நம்மிலே கூறி என்னிடத்தே வந்து எல்லிழாயென்று என்னை விளித்துப், பிரியேன் என்று பிரிதலை வரைந்தவனைப் பிரியானெனத் துணிந்து அவன் பிரிதலின் நாணையும் மறந்

தான் என்று கூறி எனக்கு அன்புற்றீர்போல நீ என்னுற்றனை என்று வினவுகின்றவர்களே! பின்னை இவ்வருத்தத்தை எல்லீருங் கேட்பீராக என்று கூறுகின்றவள், எனக்குச் சிறந்தவன் என்வலியறும்படி என்னைக் கைவிடுகையினாலே பெருகிவந்து என்மேல் நிலைபெற்ற இக் காமநோய், கோடை* உலகத்தைச் சுடும்படியாகப் பெய்யாமற் போன மேகம் வருத்துமாற்றையும்போலும்; பெருகி என்னுயிரைப் போக்குவதோர் நீர் வெள்ளம் வருத்துமாற்றையும் போலும்; என்று கூறினாள்;

(கஅ–உச) நக்து . .
. . ணினைந்து:—

(இ - ள்.) அங்ஙனங் கூறி, அவன் அன்பிலனாதலை அறியாதே அவனோடே புணர்ந்து தன் அழகினையும் நாணினையும் உள்ளத்தினையும் இவன் இழந்தான் என்னுந் தகுதிப்பாட்டினையுடையீர்போலே இருந்தீர்; அவன் அன்பிலனல்லன்; அஃதென்னையெனில், அவன் இந்த உடம்பினின்று போகின்ற உயிர்க்கு உறுதியாம்படி, சிவந்த நிறத்தினையும் புள்ளிகளையுமுடைய தேருருள் போன்ற ஆண்பால் அலவன் பெண்பால் அலவனோடே நிகழ்த்துகின்ற பல மாட்சிமைகளையும் யான் நின்னிடத்தே நிகழ்த்தும்படி நின்னெஞ்சாலே நினைந்து அவை நிகழ்த்துகின்றவற்றையும் அவ்விடத்தே

* குறள், கக; கலி, உரு; உஎ-உக.

ராராய் என்றான் ; அதனால் அவன் அன்புடைமை அறிந்தே யான் அவனோடு க்கது ;* அக்காலத்தே என்நாணும் என்னலமும் என்னுள்ளமும் புணர்ச்சி ரான் மிகுதியைப் பெற்றன ; அவை அவன் நீங்கிய அப்பொழுதே அவ ரிடத்தே நின்றுவிட்டன ; ஆதலாற்றான் நோயும் மிகவுறும் ; அவற்றை)கந்த தன்மையுடையேனல்லேன், என்று கூறினான் ;

(உ௫-கக) கரைகாறு . . .

மற்று :—

(இ - ள்.) அங்ஙனங் கூறி என்னைப்போல ஓர் எல்லைகாணாத காம நோயிலே மூழ்காதவனை உயர்ச்சி கெடும்படி அவன் பிரிந்து நாண்முதலிய ற்றைத் தாராத கொடுமையை நாடி அவன் வந்த காலத்தன்றே நீ இவை பெறுவது என்று கூறுகின்றவர்களே! யான் நிரைத்த கதிர்களையுடைய ஞாயிற்றை நோக்கித் திரையைத் தருகின்ற கடல்சூழ்ந்த உலகமெல்லாந் தேடி அவனைக் கொண்டு வா என்றுஞ் சொல்லிவிட்டேன்; அதுவேயன்றி ரானும் அவன் இவ்விடத்தான் என்னும் வார்த்தை கேட்கலாம்

இடமெல் லாஞ் சென்று தேடுவேன்; இங்ஙனந் தேடுமளவின் உயர்ச்சிதீர்ந்தவன் பின்னை எவ்விடத்தே ஒளித்திருப்பான்? அவனை அகப்படுத்திக் கொண்டு ஐந்நாண் முதலியன வாங்கியே விடுவேன்; என்னை நெஞ்சாலே வரைந்திருக் கின்றவன் என்னிடத்தினின்று நீங்கான்; என்றாள் கூறினாள்;

'கொல்'லும் 'ஓ'வும், அசை.

(கஉ-கஎ) மருள்கூர் . . . . மன் :—

(இ - ள்.) அங்ஙனங் கூறிய அளவிலே மாலையும் இரவும் வருகின்

றதனை உணர்ந்து, மயக்கமிக்க மான்பிணைபோல யான் மயங்கும்படி வெவ்விய காமநோயை உண்டாக்கும் மாலைக் காலமும் வந்து, அதனோடே மயங்கி எரியின் கொழுந்துபோற் கொடிய இராக்காலமும் அவ்விடத்தே வந்ததாயின், அதனிடத்தே யான் பட்ட வருத்தத்தை என்னைப்போல வருந்தும் பலமகளிருக்குள்ளே சென்று கூறுவேன் ; நினக்கு முறைப் பட்டுக் கூறிற், பலரையுந் துயிலப்பண்ணும் இராக்காலமே! நீ தானும் மிகவும் வருந்தித் துயில்கொள்ளாய்; ஆதலால் என்னோயை நினக்குச் சொல்லேனென்றே னென்றுங் கொடுமை நுவல்கின்றவர்களை[1] நோக்கிச்

கூறினன் ;

(கூஅ—சக) எதிர்கோள்ளுஉ

. . . . மன் :—

(இ . ன்) அங்ஙனங்

கூறியபின்னர்த் திங்கள் வருத்தும்

என்

றுணர்ந்து ஞாலத்திலுள்ளாரால் அவ்விசும்பிடத்தே பிறையான பருவத்தே

* நக்கது-புணர்ந்தது.

(பாடம்) 1. நுகர்கின்றவர்களே.

முகையதல் - உகு]

நெய்தற்கலி

சகூ௫

பருவத்தே* எதிர்கொள்ளப்பட்டுப்

பின்பு முதிர்ந்து யான் துயிலாரமல்

என்மேல் வந்து வளைத்த மதியும் யானுற்ற வெவ்வியநோயை முறைப்பட்டுக் கூறின் தன்கதிர்கள் ஒளிமழுங்கி நடுங்குவதுபோலே ஓடி மிகவுஞ் சுழன்று திரியும்; ஆதலான் நமக்கன்றி அதற்கும் என்னோயைக் கூறே னென்றுங் கூறினன்;

(சஉ—சரு) பேரூர் . . .
நோய்:—

(இ - ள்.) அங்ஙனங் கூறிப் பெரிய ஊரில் தெருவிலே யான் உறுகின்ற வருத்தத்திற்குப் பரிகாரஞ் செய்யாமற் பெரிய உறக்கத்தைக் கொள்ளக் கருதிய சான்றீரே! என் மெய்க்கண் நின்று எரியுங் காமநோய் மழையெல்லாம் என்னிடத்தே நின்று பெய்யினும்† ஆறுவதுபோல இருக்கின்றதில்லை; இது தணியும்படி உலகத்துள்ள நீரை‡ என்னிடத்தே நிறையும்படி அடைத்துவைத்து என்னுயிரைப் பாதுகாப்பீராக என்றுங் கூறினன்;

(சக—ருo) இருப்பினு
. . . . முழந்து:—
(இ - ள்.) அங்ஙனங் கூறிப்
பின்னர்த் தன் நோயின் செய்தி
கூறு கின்றவள் அவன்

என்னெஞ்சிடத்தே

விடாமலிருப்பினும் அதனால் ஆமை

யாது தான் காந்தாநிற்கும்; அவன் ஒருகாற்போகின் தான் அதற்கு வருத்த முறாநிற்கும்; அங்ஙனம் என்னெஞ்சு வருந்துதலை ஆற்றேனாய்ப் பலவுறுப்

புக்களையுங் கூட்டி § இயங்குவதோர்

பொறியாகச் செய்த புனைந்த பாவை

போல இடும்பையிலே அழுந்தி

மயங்கிய யாக்கையோடே சிறிது

செல்

வேன்; அதனால் தணியாத என்னிடத்து உண்டாகிய எவ்வமானது பிறரால் அழித்தற்கு அரிய அரணின் தன்மையையுடைத்து; இவ்வரணை

அழிக்கலாவதோர் உபாயம் நாடுவீராக

; என்றுங் கூறினான்.

(௫௧—௫௫) எனவாங்குப் . . . .

. பண்பே :—

(இ - ள்.) என்று அவ்விடத்தே சொல்லாநிற்கக், கோடைக்கால மிக்க வானத்திடத்தே மேகத்தினது வளவிய துளியைப் பெறுதற்குச் சுழன்றுதிரியும் வானம்பாடிக்கு அம்மேகம் பெய்தாற்போலத் தன்னுடைய நல்ல அழகையுடைய மார்பன் அருளுதலுற்று வந்து முயங்குகையினாலே ஆயிழையுடைய அல்லலாகியகுணம் போயிற்று; என்று கண்டார் வியந்து தம்மிற் கொண்டுகூறிற்றாக உரைக்க.

இது கண்டார்க்கு அவராக்கங் கண்டு மருட்கை பிறந்தது.

'என்மே னிலேஇய நோய்'

என்னுந் துணையுங் கூறத் தகாதன

கூற

வின் மடனிறந்தவாறும், 'இழந்திலேன்மன்னே' என வருத்தந் தோன்றுமற்

* அகம். ௨௧௧ : கூ-௪0 ; புறம், ௪ : கூ-௪0.

† கலி. ௧௪௫ : ௫௫-௫௮.

௪0

‡ நாலடி. ௨௨௨. § சீவக. ௨௬௫.

ாகினை

கலித்தொகை

[கலி - கதள்

•

டறலின் வருத்தமிறந்தவாறும், 'ஞாயிற்றை காடென்றேன்' என்றதனைத் ரான்வியவாமையின் மருட்கையிறந்தவாறும், 'என்னுறு நலனு' மென்றும் ான்பிணைபோன்ற யான் இப்பொழுது 'மருள்கூர் பிணைபோன் மயங்க' ான்றும் வனப்புமிகுதி கூறலின் மிகுதியிறந்தவாறுங் காண்க.

இஃது ஐஞ்சீரடிவந்ததரவும் ஐஞ்சீரடுக்கிய இடைநிலைப்பாட்டும் எனவாக்குப் பாட வருளுற்று' என முச்சீரான் வந்த சொற்சீரடியும் வந்து ஆசிரியச்சுரிதகத்தால் இற்ற கலிவெண்பாட்டு. (உக)

கசஎ.

ஆறல்ல மொழிதோற்றி யறவினை கலக்கிய
தேறுக ணறவுண்டார் மயக்கம்போற் காமம்
வேறொருபாற் றானது கொல்லோ சிறடிச்
சிலம்பார்ப்ப வியலியா ளிவண்மன்னோ வினிமன்னும்
புலம்பூரப் புல்லென்ற வனப்பினாள் விலங்காக
வேணுதி யுறநோக்கி வெயிலுற வுருகுந்தன்
றோணல முண்டானைக் கெடுத்தாள்போற் றெருவிற்பட்
டூண்யாது மிலளாகி யுயிரினுஞ் சிறந்ததன்
னாண்யாது மிலளாகி நகுதலு நகூஉ மாங்கே
பெண்மையு மிலளாகி யழுதலு மழூஉந் தோழியோ
ரொண்ணுத லுற்ற துழைச்சென்று கேளாமோ ;

இவர்யாவ ரேமுற்றூர்
கண்டீரே யோஒ
வையயுந் தவறிலீர்
மற்கொலோ நகையின்
மிக்கதன் காமமு
மொன்றென்ப வம்மா
கரு. புதுநலம் பூவாடி யற்றுத்தாம்
வீழ்வார்
மதிமருள நீத்தக் கடை;

என்னையே முசிக் கதுமென
நோக்கன்மின் வந்து;

கலிஇய கண்புருவக்
தோணுசுப் பேளர்[1]

சிலமழைபோ ருழ்ந்திருண்ட
கூந்த லவற்றை உ0. ஷிலைவள மாற
வறியா தொருவன்
வலையகப் பட்டதென்
னெஞ்சு ;

வாழிய கேளிர் ;[2]

செய்தல் - ௬0]
நெய்தற்கலி
சாசவெ..

பலவுஞ்சூ டேற்றித் தெளித்தவ னென்னை
முலையிடை வாங்கி முயங்கின னீத்த
உ.ரு கொலைவனைக் காணேன்கொல் யான் ;

காணினு மென்னை யறிதிர் கதிர்பற்றி
யாங்கெதிர் நோக்குவன் ஞாயிறே யெங்கேள்வன்
யாங்குள னாயினுங் காட்டுமோ காட்டாயேல்
வானத் தெவன்செய்தி நீ ;

௩௦. ஆரிரு ணீக்கும் விசும்பின் மதிபோல
நீருள்ளுந் தோன்றுதி ஞாயிறே யவ்வழித்
தேரை தினப்பட லோம்பு ;

நல்கா வொருவனை நாடியான் கொள்வனைப்
பல்கதிர் சாம்பிப் பகலொழியப் பட்டிமோ
செல்கதிர் ஞாயிறே நீ ;

அறாஅ[1] லின்றரி முன்கைக் கொட்கும்
பறாஅப் பருந்தின்கட் பற்றிப் புணர்ந்தான்
கறாஅ வெருமைய காடிறந்தான் கொல்லோ
வுறாஅத் தகைசெய்திவ் வூருள்ளான் கொல்லோ
செறாஅ துளனாயிற் கொள்வே னவனைப்
பெறாஅதியா னேவே னவனையெற் காட்டி
சுறாஅக் கொடியான் கொடுமையை நீயு
முறாஅ வரைசநின் னோலைக்கட் கொண்டீ
மறாஅ வரைசநின் மாலையும் வந்தன்
றறாஅ தணிகவிந் நோய் ;

தன்னெஞ் சொருவற் கினைவித்தல் யாவர்க்கு

மன்னவோ காமநின் னம்பு ;

கையாறு செய்தானைக்
காணிற் கலுழ்கண்ணாற்

பையென நோக்குவேன் றூழ்தானை பற்றுவே
ருo. னையங்கொண் டென்னை யறியான் விடுவனே[2]
லொய்யெனப் பூச
விடுவேன்மன் யானவனை
மெய்யாகக் கள்வனோ
வென்று;

(பாடம்) 1. உருஅ. 2. விடுவானே,

உகஅ
கலித்தொகை
[கலி - கஉள

வினவன்மி னூரவி[1]
ரென்னையெஞ் ஞான்று
மடாஅ நறவுண்டார் போல
மருள
நிரு. விடாஅ துயிரொடு
கூடிற்றென் னுண்கண்
படாஅமை செய்தான்
றொடர்பு ;

கனவினாற் காணிய கண்படா
வாயி
னனவினன் ஞாயிறே
காட்டாய்நீ யாயிற்

பனையீன்ற மாவூர்ந் தவன்வரக் காமன்
கூ0. கணையிரப்பேன் கால்புல்லிக் கொண்டு;

எனவாங்கு,
கண்ணிணைபு கலுழ்பேங்கின

டோண்ணெகிழ்பு
வளைநெகிழ்ந்தன

என்னையோ வெல்லீருங்
காண்மின் மடவரன்
கூரு. மென்னடைப் பேடை
துணைதரத் தற்சேர்ந்த
வன்னவான் சேவற்
புணர்ச்சிபோ லொண்ணுதல்
காதலன் மன்ற வவனை
வரக்கண்டாங்

காழ்துயர மெல்லா
மறந்தனள் பேதை

நகையொழிந்து நாணுமெய்
நிற்ப விறைஞ்சித் எ௦.
தகையாகத்[2] தையலாள் சேர்ந்தா
ணகையாக
நல்லெழின் மார்ப னகத்து.

இதுவும் அது. இதற்கும் முன்னங்* கூறிய உரையைக் கூறிக்கொள்க.

(க—கஎ) ஆறல்ல . . . .
வந்து :— _

(இ - ள்.) தோழீ !

அறநெறியல்லாத தீமொழிகளைத் தம்மிடத்தே தோற்றுவித்து அறமாகிய தொழில்களைத் தம்மிடத்துத் தோன்றாமற் கலக்கவேண்டித் தெளியுங் கள்ளையும் நறவையும் உண்டவர்களுடைய† உலகியல் கெட்ட மயக்கம்போல நன்மக்கள் ஆற்றுகின்ற காமம் உலகியல் தப்பி வேறோர் பகுதியாய் விட்டதோ? அதற்குக் காரணமென்னெனில் இப்பொழுது மிகவுந் தன் கணவனில்லாத தனிமை பரக்கையினாலே பொலிவழிந்த அழகினையுடையளாகிய இவள் வேனுதி செய்யுங் கொடுமையை

யுறும்படி எதிரேநோக்காதே விலங்குதல் உண்டாக நோக்குகையினாலே நெஞ்சுருகுங் கணவனைக் கெடுத்தாள்போலே தெருவிலே புறப்பட்டு வெயில் தன்மேலே உறும்படி தன் சிறிய அடியிற் சிலம்பு ஒலிப்ப எங்கும்

---

* ௪௧௧ - ௪௪0 - ஆம் பக்கம் பார்க்க. † குறள். ௯௨௫.

(பாடம்.) 1. ணரீ உ

கையாகக்

நெய்தல் - ௯0]

நெய்தற்கலி ௪௧௧

திரிதரும் நிலைமையளாயினள் ; அதுவேயன்றி ஊண் சிறிதுமிலளாய்

மேனி மெலிந்து உயிரினுஞ் சிறந்த நாணுஞ்* சிறிதுமிலளாய் நகுதலையுஞ் செய்யா நிற்கும் ; அப்பொழுதே பெண்டன்மையுமிலளாய் அழுதலையுஞ் செய்யா நிற்கும்; இதனை நெஞ்சாலே ஓர்ந்துபார் ; அங்ஙனம் ஓர்ந்து பார்த்து இவ ளுற்ற வருத்தத்தை யாம் இவ்விடத்தே சென்று கேளாமோ ? கேட்போம் என்று கூறி மொய்த்துக் கடுகவந்து என்னைப் பாராதே கொள்ளுங்கோள்; நமக்கு முன்னே வந்து என்னைச் சூழ்ந்துநின்ற இவரைக் கண்டீரே ; ஓஓ! இவரே சூழ்ந்துநிற்க அமையும் ; நீர்தாம் இதற்கு முன்பு மிகவும் யானுற்ற

தவறுடையீரல்லீர்போலேயிருந்தது,
நமக்கும் ஒருகாலத்தே உண்டாம் ;
இனி யான் கூறுவதனைக் கேட்பீராக ;
தேறுதல் ஒழிந்த காமத்து மிகு
திறமும் ஒருகாமம் என்று† நூல்களிலே
கூறுவர்கள் ; ஆதலால் அதனையுற்று
நின்ற என்னை இகழாதே
கொள்ளுங்கோள் ; கண்டு
எமூற்றூரியார் யா! நீதேமுற்றதென்று
தாம் விரும்பப்பட்ட ஆடவர்
தம்மதி மயங்கும்படி

கைவிட்ட விடத்து அவர்பெற்ற நலங் கெடுகின்ற தன்மை பூ வண்டு
நுகர்ந்து தன் புதிய நலஞ் சிறிது கெட்ட நிலைமைத்து, காணுங்கோள் ;

என்று கூறினான் ;

' நறவு ' : தேனாம்

சமைத்தமைத்தது.

ஆற்றுதல் - நடத்துதல்.

'நோக்கி' என்ற எச்சங் காரணகாரியப்பொருட்டு. தோள் கலத்தைப் புணர்ந்தவன், ஒருபெயர் மாத்திரையாய் நின்றது. இவளை என்னும் இரண்டாவது "ஒழியாது வருதலும்"‡ என்பதனுன் ஒழிந்து நின்றது. 'ஓஒ' இரக்கக்குறிப்பு.

(சஅ—ருடு) கலைஇய . . . .
நீ :—

(இ - ள்.) அங்ஙனங் கூறி, அவனோடே கலந்தகண் புருவம் தோள் நுசுப்புச் சில மழைபோலே நீண்டிருண்ட கூந்தல் என்கின்றவற்றின் அழகைப்பெறும் விலையின் வனப்பத்தை அறிந்து

கொடுத்தவனிடத்து உள்ளவற்றைக் கொள்ளுதல் அறியாதே ஒருவன் கூறிய பொய்யாகிய வலை யிலே என் நெஞ்சு அகப்பட்டுவிட்டது ; என்று கூறிப், பின்னுங் கேளீர் | வாழ்வீராக ! என அவர்க்கு முகமன்கூறி அவன் இயற்கைப் புணர்ச்சியிலும்

பல சூளுறவாலும் என்மனத்தைத் தேற்றிப் பின்னர் தெளிவித்தவன் என்னை அணைத்து முலையிடத்தே முயங்கினான்; அங்ஙனம் முயங்கிப் பின்

னர்த் தெளிவு பொய்யாம்படி கைவிட்ட கொலைத்தொழிலை வல்லவனை யான் தேடிக் காணேனோ? அவன் என்னைக் கண்டானாயினும் அவனால் யான் பெறும் பொலிவை அறியமாட்டீர்; என அவரை நோக்கிக் கூறி, அவர் மற

* நற். ௧௭ : ௮. †
தொல். பொருள் : ௫௧.
‡ தொல். எழுத்து : ௧௫௭. §
ஐங். ௨௮௧.

மொழி கொடாமையின், ஞாயிற்றை நோக்கி, ஞாயிறே! போக்கற்கு அரிய இருளைப்போக்கும் விசும்பிடத்து மதி தோன்றுமாறுபோல நீயும் நீருள்ளே யுந் தோன்றுவை; அங்ஙனந் தோன்றினவிடத்து ஆண்டு வாழ்ந் தோரை இரை என்று தின்னப்படுதலைப் பரிகரித்துக்கொள்; என அதற்கு முகமன் கூறி, ஞாயிற்றை வானிடத்தே இருந்து எவ்விடமுங் காண்கின்ற நீ எனக்கு என்ன காரியஞ்செய்வை? ஒன்றுஞ் செய்யாயாயினும் இப்பொழுது என்கேள்வன் யாதோரிடத்தே இருந்தானாயினும் எனக்குக் கொண்டுவந்து காட்டுவாய்; நீ காட்டாயாயின், யான் நின் கதிர்களைப் பிடித்துக்கொண்டு அவ்விசும்பிலே ஏறி அவனைப் பார்ப்பேன்; அதற்கு நீ செய்யுங்காரியம் எனக்கு அருளாத ஒப்பிலாதானை நாடி யான் பிடித்துக் கொள்ளுமளவும் ஞாயிறே! நீ குவிந்துசெல்லும் பலகதிர் பகற்காலத்தோடே இவ்விடத்தே நிற்கச் சிலகதிரோடே படுவாயாக; என்று கூறினாள்;

'அறிதிர்' என்றது அறியமாட்டீர் என்ற இகழ்ச்சிக்குறிப்பு.

(௧௧—௪௭) அறஅ . . . . னம்பு:—

(இ - ள்.) உலகத்தார் வேண்டிக்கொண்ட காரியங்களை மறுத ஞாயிறே! என் கையினின்று நீங்குதலின்றாய் ஐதாகிய மயிரினையுடைய என் முன்கையிலே கிடந்து சுழலும் வளையிடத்தைப் பிடித்துத் தெளிவித்துக் கூடினவன், பாற்பயன் கோடற்குச் சிலகாட்டிக் கறக்கப்படாத காட்டெருமைகளையுடையவாகிய காட்டைக் கடந்துபோயினனோ? அன்றியே என்னோடு அன்புறாததோர் தகைமையை எனக்குச் செய்து இவ்வூரிடத்தே இருந்தானோ? இரண்டும் அறிகின்றிலேன்; அவனைக் கூடப்பெறாதே நோவாநின்றேன்; அதற்குமேலே நீ உண்டாக்கும் மாலைக்காலமும் வந்தது; இனி இந்நோய் என்னிடத்தினின்று நீங்காது; அவன் இவ்விடத்தானாயின் அவனை எனக்குக் காட்டுவாய்; காட்டினால் அவனைக் கோபியாதே மனத்தாலே கைக்கொள்வேன் என்றான்; அது காட்டாமற்படுதலின் அதனைக் கைவிட்டு நடுவுநிலைமை செய்தலன்றி ஒருபாலுறாத கூற்றமே! சுறாக்கொடியையுடைய இக்காமன் செய்கின்ற கொடுமைகளை நீயும் நின் ஓலையிடத்தே எழுதிவைத்துக்கொண்டு தண்டிப்பை; அவன் நமக்கு வழிபடு தெய்வமாதலின்* அவனைத் தண்டியாமற் றணிவாயாக என்று கூறினள்; அங்ஙனங் கூறிக், காமனை எதிர்பெய்துகொண்டு, காமா! நின்னுடைய அம்புகள் தனக்கு உரியவாகிய நெஞ்சினைத் தன்மேல் அன்பிலாதான் ஒருவன்பொருட்டு வருத்துவித்தல் சிலர்க்கேயன்றி எல்லார்க்குமாந் தன்மையையுடையவோ அல்லவோ? என்றுங் கூறினள்;

ஓகாரம் எதிர்மறை. 'பருப்பருந்து' சுண்டுக் குருகு† என்பதனை உணர்த்திநின்றது. 'மறுவரைசன்' வரோதயன் என்னும்பொருட்டு.

---

* சிலப். ௯ : ௬௦-௬௧. † குருகு - வளையல்.

நெய்தல் - ௬௦]

நெய்தற்கலி

௬௪௫

(சஅ—ருஉ) கையாறு . . . . வேன்று :—

(இ - ள்.) அங்ஙனங் கூறி, இனி வருகின்ற இராக்காலத்து நின் அம்பு
ால் இறந்துபடுவியாமல் யான் உயிர்கொண்டு இருக்கும்படி அருளுமாயின்,
அவசத்தாற் சிறிது துயிலேற்றுக் கலங்கின கண்ணாலே எனக்குக் கையாற்
றைச் செய்தவனைக் கனவிலே கண்டேனாயின், அக்கண்ணைக் கடுக விழித்
துப் பாராதே மெத்தெனப் பார்ப்பேன்; பார்த்தபின் தப்பிப்போகாதபடி
தாழ்ந்து கிடந்த துகிலைப்* பிடித்துக்கொள்வேன்; பிடித்துக்கொண்டு என்
மேனி வேறுபாட்டினைக் கண்டு இவள் நந்தலைவியோ அல்லளோ என்று
ஐயத்தை நெஞ்சிடத்தே கொண்டு† என்னை அறியாதே கைவிடுவனாயின்
என் நாண்முதலிய குணங்களையும் மேனி நலத்தினையும் மெய்யாகக் கைக்
கொண்டு போன கள்வனென்று எல்லாருங் கேட்கும்படி விரையக் கூப்
பிடுவேன் என்று காமனை நோக்கிக் கூறினள்;

'ஓ' : அசை.

(ருங—ருசு) வினவன்மி . . . . றேடர்பு :—

(இ - ள்.) அங்ஙனங் கூறி, ஊரிலுள்ளீர்! எங்களை நோக்கிக் கூறுகின்ற நீர் ஞாயிற்றையுங் காமனையும் நோக்கிக் கூறியதற்கு அவை என்செய்யுமென்று என்னைக் கேளன்மின்: எந்நாளும் என்கண் துயிலாமையைச் செய்தவன் தந்த நட்பின் உண்டான நோய் மடாநறவை யுண்டாரைப்போல மயங்கும்படி விடாதே உயிரைப்பொருந்தக் தன்மையோடே கூடிவிட்டது; இனி இவ்வுயிரைக் காக்கும்வழி உண்டாயிற் காப்பீராக என்றுங் கூறினள்;

(௩எ—௪௦) கனவினுற் . . . . கொண்டு:—

(இ - ள்.) அதற்கு அவர் மறுமொழி கொடாதுநிற்றலின், முற்கூறிய ஞாயிற்றையுங் காமனையுமே பின்னும் நினைந்து, வருகின்ற இராக்காலத்துக் கனவின்கண்ணே‡ அவனைக் கண்டு ஆற்றுதற்குக் காமன்கணை செய்கின்ற கொடுமையாலே கண் துயிலாவாயின், ஞாயிறே! எப்பொருளையுங் காட்டுகின்ற நீ நனவின்கண் வந்தாகிலும் அவனைக் காட்டாயாயில், இவ்வாறே வருத்தமுற்றுப் பனையீன்ற குதிரையையேறி அவன் என்பால் தானே வரும்படியாக அக்காமன்காலைக் கட்டிக்கொண்டு நின் அம்புகளை எனக்குத் தர வேண்டும் என்று காமனை இன்னும் இரந்துகொள்வேன்; என்றுங் கூறினள்

(௪௧) எனவாங்கு:—

(இ - ள்.) எனச் சொல்லி;
'ஆங்கு'; அசை.

---

* அகம். ௨௭௬: அ - ௯. † நற். ௫௬: ௫-௧௦
‡ குறள். ௧௨௧௩, ௧௨௧௬.

(கஉ—எக) கன்னிவேபு
. . . . . ளகத்து :—
. (இ - ள்.) இவ்வொண்ணுதல் அன்னேயோ !! என்று இனேந்து கண் கலங்கி
அழுதாள் ; தோண்மெலிந்து வளேநெகிழ்ந்தாள் ; இப்பேதை, மடப்பம் வருதலினேயும் மெல்லிய நடையினேயுமுடைய அன்னப்பெடை
விரைந்து செல்ல, அதனேச் சேர்ந்த அன்னச் சேவலின் கூட்டம்போலே, பின் தன் காதலன்வர அங்கே அவனேக்கண்டு தான் அழுந்தின துயரமெல்
லாம் அறுதியாக மறந்தாள் ; மறந்து இத்தையலாள் பின்னர் ஊரிலுள்ளார் நகைத்த நகையையும் போக்கிப்,

போனகாணமூர் தன் மெய்யிடத்தே வந்து நிற்கையாலே தலையிறைஞ்சித், தன் மெய்யிடத்தே அழகுண்டாக மனத் திடத்தே நகையுண்டாக அக்கல்லெழின் மார்பனிடத்தே சேர்ந்தான்; இம் மகிழ்ச்சியையும் எல்லீருங் காண்பீராக எனக் கண்டார் வியந்து தம்மிற் கொண்டு கூறிற்றாக உரைக்க.

இது கண்டார்க்கு அவராக்கல் கண்டு மருட்கை பிறந்தது.

'கொலைவனைக் காணேன்கொல் யான்' என்றார்துணையுங் கூறத் தகா தன கூறலின் மடனிறந்தவாறுஞ், 'செறாஅ துளனாயிற் கொள்வேன்' என் றதனுல் தன் வருத்தந் தோன்றுமற்

கூறலின் வருத்தமிறந்தவாறுங், ' காமன் கணையிரப்பேன் ' என்றதனால் அவனை வருத்துவேன் என்று அவனை வியவாமையின் மருட்கைபிறந்தவாறுங், ' க்லேஇய கண்புருவம் ' என்று உறப்பான் வனப்புமிகுதி கூறலின் மிகுதிபிறந்தவாறுங் காண்க.

இஃது ஐஞ்சீரடி வந்த தரவும் நெடுவெண்பாட்டும் ஐஞ்சீரான் வந்த ஓரடியானென்றும் நெடுவெண்பாட்டும் இருசீரானென்றுங் குறுவெண்பாட்டும் நெடுவெண்பாட்டும் இரண்டுகுறுவெண் பாட்டும் நெடுவெண்பாட்டுங் குறுவெண்பாட்டும் மூன்றுநெடுவெண்பாட்டுந் தனிச்சொல்லும் வஞ்சியடியிரண்டு முன்னர்விரவி யாப்பின்வேறுபட்ட

கொச்சகவெண்பாவும் பெற்ற
கொச்சகக்கலி.

(௯0)

கசஅ.

தொல்லியன் ஞாலத்துத்
தொழிலாற்றி ஞாயிறு
வல்லவன் கூறிய வினைதலை
வைத்தான்போற்
கல்லடைபு கதிருன்றிக்
கண்பயங் கெடப்பெயர
வல்லது
கெடுப்பவ னருள்கொண்ட
முகம்போல

௫. மல்லனீர்த் திரையூர்பு மாவிருண் மதிசிப்ப
வில்லவ ரொழுக்கம்போ லிருங்கழி மலர்கூம்பச்
செல்லுமென் னுயிர்ப்புறத் திறுத்தந்த மருண்மாலை;
மாலைநீ,

இன்புற்றார்க் கிறைச்சியா
யியைவதே செய்தாய்ம செய்தல் -

௬௬] நெய்தற்கலி

௫௭௩

௧0. னன்புற்று ரழநீத்த வல்லனுட் கலங்கிய
துன்புற்றார்த் துயர்செய்த றக்கதோ நினக்கு;
மாலைநீ,

கலந்தவர் காமத்தைக்
கனற்றலோ செய்தாய்ம

வலங்கொண்டு நல்காதார்
நனிநீத்த புலம்பின்க கரு.
வலந்தவர்க் கணங்காத றக்கதோ
நினக்கு;

மாலைநீ,
எங்கேள்வற் றருதலுங் தருகல்லாய் துணையல்லை
பிரிந்தவர்க்கு நோயாகிப் புணர்ந்தவர்க்குப் புணையாகித்
திருந்தாத செயினல்லா லில்லையோ நினக்கு;

உ0. எனவாங்கு,

ஆயிழை மடவர லவல மகலப்
பாயிருட் பரப்பினைப் பகல்களைந் ததுபோலப்
போயவர் மண்வெளவி
வந்தனர்

சேயுறை காதலர் செய்வினை
முடித்தே.

இது "வெளிப்படை தானே கற்பினோ டொப்பினு, ஞாங்கர்க் கிளந்த மூன்று பொருளாக, வரையாது பிரிதல் கிழவோற் கில்லை"* என்பதனான் அரசன் மண்கோடற்கு ஏவுதலின் வாளாணெதிரும் பிரிவின்கண், தலைவன் வரைவிடைவைத்த வேந்தற்குற்றுழிப் பிரிந்துழி அவள் வருத்தமிகுதி கண்டார் கூறியது.

(க—எ) தோல்லியன் . . . . மருண்மாலை :—

(இ - ள்.) ஞாயிறு தன் கதிர்களாலே ஞாலத்திடத்துப் பழைய இயல்பினையுடைத்தாய்த் தான்செய்துபோதும் பொருள்களை விளக்குந் தொழிலிலே ஊன்றி நடத்திப், பின்னர்க் காமன் தனக்கு யான் பிரிந்திருந்தாரை வருத்துதற்கு நீ போவாயாக என்று கூறியகாரியத்தினைத் தன்றலையிலே ஏறட்டுக்கொண்டுபோவான்போலே அத்தகிரியைச் சேர்ந்து, பல்லுயிருந் தங்கண்களாற் கொள்ளும் பயன்கெடும்படி போகத், தீவினையைப் போக்குகின்றவனுடைய அருளைக்கொண்ட முகம்போலத்† திங்கள் வளப்பத்தையுடைய கடலிற் றிரைமேலேதோன்றி அம்மயக்கத்தையுடைய இருளைப் போக்கப், பொருளில்லாதார் நிகழ்த்தும் இல்லறம்போலக் கரிய கழியின் மலர்கள் ஒழுகக் குவியத், தேய்கின்ற என்னுயிரின் புறத்தே வந்துவிட்ட மாலாய்! நீ அறிவு மயங்குதலையுடைய மாலையாய் இருந்தாய் ; என்றுங் கூறினள் ;

* தொல். பொருள் : கசக. † சிலப். உஅ : கஎ - ககூ.

(அ–கக) மாலைநீ . . . . நினைந்த :—

(இ - ள்.) அங்ஙனங் கூறியவள், அதற்குக் காரணமென்னெனின், கூடி இன்பமுற்றவர்களுக்கு நேயமாய் அவர்கள் தம்மிற் கூடும் நிலைமையையோ மிகவும் முன்பு செய்துபோந்தாய் ; இப்பொழுது ஆடவர் தம்மேல் அன்புற்ற மகளிர் அழும்படி தம்மைக் கைவிட்டதனால்

உண்டான அல்லவிடத்தே நின்று கலங்கிய துன்பமுற்ற மகளிரை வருத்தஞ் செய்தல் நினக் குத் தக்கதன்றே.* என்றான் ;

மேல் வருகின்றவற்றிற்கும் இங்ஙனங் கூட்டி உரைக்க.

(கஉ-கரு) மாலைநீ . . . . நினைத்து :—

(இ - ள்.) மகளிரைக் கூடிய கணவருடைய மனவேட்கையை அம் மகளிர்க்குத் துணையாய் நின்று அவர் மனத்தினின்று நீங்காது கனன்றெரி யுந் தன்மையையோ முன்பு மிகவுஞ் செய்தாய் ; இப்பொழுது அம்மகளிர் நலத்தைக் கைக்கொண்டு பின்பு

அவர்க்குக் கொடாத ஆடவராலே
தங்கலம் போன தனிமையிடத்தே
நின்று அலர்த மகளிர்க்குத்
துணையாகாதே
வருத்தமாகல் நினக்குத் தக்கதன்றே,
என்றான்;
(கக—கக) மாலைநீ . .
. . நீளக்த :—
(இ - ள்.) எம்முடைய
கேள்வரை முன்புபோல மனத்தைக்
கனலப்
பண்ணி ஈண்டுத் தருதலுஞ்
செய்திலை; ஆதலால் நீ எமக்குத்
துணையில்லை;
தான் பிரிந்திருந்த மகளிர்க்கு

அப்பிரிவாற் றோன்றிய

நோயின்வடிவு நீ

தானேயாய்க், கூடியவர்களுக்கு

அவர் பெறும் இன்பத்திற்கோர்

தெப்ப

மாய், இங்ஙனம் நன்மையாகாத காரியங்களைச் செய்தொழுகுமதல்லது நினக்கு நன்மையாகச் செய்யுங் காரியங்கள் இல்லையோ? என்றான்;

இது கலக்கம் என்னும்

மெய்ப்பாடு.

(உ0)

எனவாங்கு :—

(இ - ள்.) என்று சொல்லி;

'ஆங்கு' அசை.

(உக—உச) ஆயிழை . .

. . முடிந்தே :—

(இ - ள்.) திருந்தின இழையினையுடைய மடப்பம் வருதலையுடையவ வருந்தியவிடத்தே அரிய நிலத்தே உறைகின்ற காதலர் பகைவரிடத்து செய்யும் போர்த் தொழில்களைப் போய் முடித்து அவர்மண்ணைக் கை கொண்டு பரந்த இருட்பரப்பினை ஞாயிறு போக்கினாற்போல அவன் வரு தம் நீக்கவந்தார்; இஃது என்ன வியப்போ! எனக் கண்டார் கூறியதா உரைக்க.

---

* கலி, ககஅ: கூ-கஉ.

இது கண்டார்க்கு அவர் ஆக்கங்கண்டு மருட்கை பிறந்தது.

"தானே சேறலுந் தன்னொடு சிவணிய, ஏனோர் சேறலும் வேந் தன் மேற்றே"* என்பதனான் முடியுடைவேந்தன் தன் பகைமேற்

சென்று மண்கோடல் உரித்து என்றதனானும், வாளாணெதிரும் பிரிவு முடியுடை வேந்தர்க்குச் சிறுபான்மை யென்றும் அவர் ஏவப்பிரியும் அரசர்க்குப் பெரும் பான்மை யென்றுங் கூறலானும், " வெளிப்படை தானே கற்பினொ டொப் பினு, ஞாங்கர்க் கிளந்த மூன்று பொருளாக, வரையாது பிரிதல் கிழவோற் கில்லை "† என்றதனான் வரைவிடைவைத்து மண்கோடற்குப் பிரிதலில்லை யென்று அதனை விலக்கினமையானும், கண்டார் களவிற் கூறுதலின்மை யானும், இப்பாட்டும் அவன் மிகவும் வருத்தம்

எய்தின நிலைமையைக் கண்டு வருந்தினோர் அவன் வந்து கூட வருத்தம் நீங்கினமை கண்டு வியந்து கூறிய பெருந்திணையாம்.

இதுவும் இடையிடை சொற்சீரடி வந்து எண்ணிடையிட்டுச் சின்னங் குன்றிய கொச்சகம்.

(௯௧)

கசக.

நிரை திமில் களிறாகத்
திரையொலி பறையாகக்
கரைசேர் புள்ளினத்
தஞ்சிறை படையாக

வரைசுகால் கிளர்ந்தன்ன
வுரவுநீர்ச் சேர்ப்பகேள்;

கற்பித்தா னெஞ்சழுங்கப்[1]
பகர்ந்துண்ணான் விச்சைக்கட் டு.
டப்பித்தான் பொருளைபோற்
றமியவே தேயுமா
லொற்கத்து ளுதவியார்க்
குதவாதான் மற்றவ
னெச்சத்து ளாயினுமஃ
தெறியாது விடாதேகாண்;
கேளிர்க ணெஞ்சழுங்கக்

கெழுவுற்ற செல்வங்க
டாளிலான்[2] குடியேபோற்
றமியவே தேயுமாற் ௧௦.
சூள்வாய்த்த[3] மனத்தவன்
வினைபொய்ப்பின் மற்றவன்
வாள்வாய்நன் றாயினுமஃ
தெறியாது விடாதேகாண்;

ஆங்கு,
அனைத்தினிப் பெரும
வதனிலை நினைத்துக்காண்
சினைஇய வேந்த
னெயிற்புறத் திறுத்த

---

* தொல். பொருள்: உஎ. †தொல். பொருள்: கசக.

(பாடம்) 1. கற்பித்தார்

நெஞ்சழுங்கப். 2. ளாளிலான். 3.
சூள்பொய்த்த மனத்தவன் வினைவாய்ப்பின்,
· சஎகூ

கலித்தொகை [கலி

- கசக ௩௫. வினைவரு பருவரல்

போலத்

துணைவரு நெஞ்சமொடு

வருந்தினள் பெரிதே.

ஈது வரைவு நீட்டித்தழித் தலைவியது
கடாயது.

ஆற்றாமைகூறித் தலைவனை வரைவு

(க—கூ) நிரைதிமில் . . .

. சேர்ப்பகேள் :—

(இ - ள்.) நிரைத்த திமில்கள் களிறாகத் திரையொலிக்கின்ற ஓசை முறையாக* இனத்தினையும் அழகிய சிறகினையுமுடைய கரையைச் சேர்ந்த புட்கள்† காலாட்படையாகப் பாண்டியன் பகைவர்மேற் படையெழுச்சி யாய்ச்‡ சென்றாலொத்த செலவினையுடைத்தாகிய வலியினையுடைய கடலைச் சேர்ந்த நிலத்தையுடையவனே! யான் கூறுகின்றதனைக் கேள்;

தான் பாதுகாக்கின்ற கரையை அரசனைப்போலே சென்று அழிக்கின்ற கடற்சேர்ப்பனென்றதனால் தான் பாதுகாக்கப்படுகின்ற நம்மை வரைந்து கொண்டு பாதுகாவாமல் அழிக்கின்றானென உள்ளுறையுவமம் தந்தவா றுணர்க. இனிப் பகையின்றி இருக்கின்ற கடல் பகைபோற்றோன்றினாற் போல அயலார் பகைபோல அலர்கூறி வருத்துகின்றார் என்றலும் ஒன்று.

(சு—எ) கற்பித்தா . . . . விடாதேகாண் :—

(இ - ள்.) தனக்கோர் வருத்தமுற்றவிடத்து உதவினவர்கட்கு ஓர் வருத்தம் வந்தால் உதவாதவன், தன்னை நூன்முதலிய கற்பித்த ஆசிரியன் றன்பால் ஒன்று பெறாமல் மனம்வருந்தத், தன் கைப்பொருளை அக்கல்விப் பொருட்குக் கைம்மாறாகக் கொடுத்து உண்ணானாய்த், தான்கற்ற வித்தை யிடத்தே தப்புப் பண்ணிக்கொண்டவனுடைய கல்விப் பொருள் நாடோ றுந் தேயுமாறுபோலத், தானே தானாகத் தேயாநிற்பன்; அதுவேயன்றிப் பின்பு அச்செய்ந்நன்றிக் கேடாகியது§ அது தன்னுடம்பினை ஒழித்து உயிர் போனவிடத்தே யாயினும் நுகர்வியாமற் போகாதுகாண்;

(அ—கக) கேளிர்க . . . . விடாதேகாண் :—

(இ - ள்.) தான் சூளுறுகின்ற சூளுறவினைக் காண்கின்றவர் மனங் கொள்ளும்படி சூளுற்ற மனத்தையுடையவன் தான் சூளுற்ற காரியத்தினை முடிவு போக்காது பொய்த்துவிடுவனாயின், தன்னைச்சேர்ந்து வாழுஞ் சுற்றத் தாருடைய நெஞ்சு தான் ஒன்றை அறியாமையால் வருந்தும்படி தன்னோடே கெழுமுதலுற்ற செல்வத்திடத்தே தானின்று அச்செல்வத்தை மேலே மேலே வளர்க்கும் முயற்சிதானும் இல்லாதவனுடைய குடி நாடோறுந் தேயுமாறுபோலத்¶ தானே தானாகத் தேயாநிற்பன்; அதுவேயன்றிப்

* வேகசிர். ௨௨௨௨. † சிலப். ௬0 : ௧௧௪-௧௧௫. ‡ வேகசிர். ௨௨௨௯.

நெய்தல் - ௬௬]

நெய்தற்கலி

௪௭௭

பின்னர் அச்சூளுறவினைப் பொய்த்த தீவினை மறுமையில் விரவின் அது வாளின் வாய்கூரிதாய்ச் சுவர்க்கம் பெற்றானாயினும் நுகர்வியாமற்

போகாது காண் ;*

இது வரைந்துகொள்வல் எனச்

சூளுற்றதனைப் பொய்த்தாய் என்றான்.

(கஉ) ஆங்கு :—

அசை.

(கரு—கசு) அனைத்தினிப் . . . . பெரிதே :—

(இ - ள்.) பெருமா! செய்ந்நன்றிக்கேடு பொய்ச்சூளுறவாகிய தீவினையின் தன்மை யாம் முற்கூறிய அத்தன்மைத்து; இனி நீதான் அத்தன்மைத் தாதலை நின் மனத்தால் நினைத்துபார்; இவள் தான் தன் பகைவனோடு சினந்த அரசன் அவன் எயிற்புறத்தே சென்றுவிட்டவினையால் உழினை யானுக்கு வந்த வருத்தம்போலே வரைவு கடிதின் முடிதற்கு விரைதல் வரும் நெஞ்சத்தாலே பெரிதும் வருந்தினள்; இனி அவ்வருத்தம் நீங்கும்படி கடிதின் வரைவாயாக என வரைவுகடாயினன்.

இதனாற் றலைவற்கு அசைவு பிறந்தது.

இது சிறமைக்கு எல்லைகூறிய நான்கடியாயின்றி மூன்றடியான்வந்த தரவும் நான்கடித்தாழிசை இரண்டும் ஆசிரியச்சுரிதகமும் வந்தமையால் யாப்பின் வேறுபட்ட பாநிலைவகைக் கொச்சகம். (கஉ)

கருO.

அயந்திகழ்[1] நறுங்கொன்றை யலங்கலந் தெரியலா
னியங்கெயி[2] லெய்ப்பிறந்த வெரிபோல வெவ்வாயுங்

கனைகதிர் தெறுதலிற் கடுத்தெழுந்த காம்புத்தீ
மலைபரந்து தலைக்கொண்டு முழங்கிய முழங்கழன்

ரு. மயங்குதர் மறுகலின்
மலைதலைக் கொண்டென

விசும்புற நிவந்தழலும்
விலங்கரு வெஞ்சுரம் ;

இறந்துதா மெண்ணிய
வெய்துதல் வேட்கையா

லறந்துறந் தாயிழா யாக்கத்திற் பிரிந்தவர்
பிறங்குநீர் சடைக்கரந்தா னணியன்ன நின்னிறம்

௧௦. பசந்துநீ யினையையாய் நீத்தலு[3] நீப்பவோ ;

*குறள் : ௨௦௭.
(பா-ம்) 1. அவர்க்கெம் 2. விலக்கெயி. 3. நீக்கலு.

௪௭௮

கலித்தொகை

[கலி - ௧௫௦

கரிகாய்ந்த கவலைத்தாய்க்

கல்காய்ந்த காட்டகம்

வெருவந்த வாறென்னார் விழுப்பொருட் ககன்றவ
ருருவவேற் றார்தியா னெள்ளணிநக் கன்னநின்[1]

ஒருவிழக் கினையயா

யுள்ளது முள்ளுபவோ ; கரு.
கொதித்துராய்க் குன்றிவர்ந்து
கொடிக்கொண்ட கோடையா

லொதுக்கரிய நெறியென்று ரொண்பொருட் ககன்றவர்
புதுத்திங்கட் கண்ணியான் பொற்பூண்ஞான் றன்னநின்

கதுப்புலறுங் கவினையாய்க்
காண்டலுங் காண்பவோ ;

ஆங்கு,

உ0. அருட்பெற லாதிரையா
னணிபெற மலர்ந்த

பெருந்தண் சண்பகம் போல வொருங்கவர்
பொய்யா ராகுத றெளிந்தன

மையீ ரோதி மடமொழி
யோயே.

இது பொருள்வயிற்
ஆற்றுவித்தது.

பிரிந்த தலைவனை நினைந்து ஆற்றாத தலைவியைத் தோழி

(க—சு) அயந்திகழ் . . .

. வெஞ்சுரம் :—

(இ -ள்.) நீர்நிலைக்கருகே

விளங்குகின்ற

அலங்கலையுடைய கொன்றை*

மாலையையுடைய இறைவன் திரிபுரத்தை எய்கையினாலே தோன்றின முழங்கும் வெம்மையையுடைய நெருப்பு† விசும்புற நிவந்து அழலுமாறுபோலச் செறிந்த கிரணங்களையுடைய ஞாயிறு எவ்வாயுஞ் சுடுகையினாலே முளிந்த மூங்கில் தம்மிலே இழைதலைக்கொண்டதாக அதனிடத்தே கடுத்தெழுந்த முழங்கிய காட்டுத்தீ‡ அவ்விடத்தைக் கைக்கொண்டு விசும்பிலே உற ஓங்கி வெம்மையைச்செய்யும், விலங்குகள் பலகாலுந் திரிகையினாலே மயங்கின அதரையுடைய, மலைகள் பார்த்து குறுக்கிட்டுக் கிடக்கும் போதற்கு அரிய சுரத்தை ;

செய்யுஞ்சுரம்,

அதரையுடையசுரம், போதற்கரியசுரம்,

என்க.

விலங்கு, வருவிக்க. அலங்கலையுடைய கொன்றை என்றார், பூத்தலின். அலங்கல், அசைவுமாம்.

தாராகப்

(எ—க௦) இறந்துதா . . .

. நீப்பவோ :—

(இ - ள்.) ஆயிழாய்! தாம் எண்ணிய காரியங்களைப் பெறுதலா னுள்ள விருப்பத்தாலே அறத்தினைக் கைவிட்டு வெஞ்சுரத்தையிறந்து

* அகம் கடவுள். † பெரும். (க) சஉ : ககரு-கஉக. ‡ ஐங். கஎரு.
(பாடம்) 1. ஞெண்ணைக்க வளையகின்.

நெய்தற்கலி

சான்று

பிறங்குகின்ற நீரைச் சடையிலே
மறைத்தவனை ஒத்த
பொருளாக்கத்திலே
பிரிந்தவர் அழகினையுடைய
நின்னிறம் பசந்து நீ
இத்தன்மையையாக நின் · னைக்
கைவிடுதலுஞ் செய்வரோ ?
அங்ஙனஞ் செய்யார்காண் ;

இறைவனை ஒத்தபொருள்
என்றார், பொருள் நின்றழிநில்லாது
பல ரிடத்துஞ் சென்றதேனும்

'அணி' : அழகு.
ஒன்றானுர் தனக்குக் கேடின்றி
இருத்தலின்.

(கக—கச) கரிகாய்ந்த . . .
. . முள்ளுபவோ :—
(இ - ள்.) வெந்த
கரியினையுடைய பல
வழியினையுடைத்தாய்க் கற் கள்
காய்ந்த காட்டகத்தை வெருவுதல்
வந்த வழியென்று கருதாராய் வடி
வையுடைய வளுகிய
ஊர்தியையுடையானை ஒத்த
விழுப்பொருட்கு அகன் றவர் நக்கு
ஒள்ளிதாகிய அணியினையுடைய[1]

நின்னுருவை இழந்து நீ இத்
தன்மையையாக அப்பொருளையே நினைத்தலையுஞ் செய்வாரோ? அங்ஙனஞ் செய்யார்காண்;

'நக்கு' என்னும் எச்சம்

ஒள்ளிதாகிய என்னும்

வினைகொண்டது.

(கரு-கஅ) கோதித்துராய்க்

. . . . காண்பவோ:—

(இ - ள்.) ஞாயிறு கீழ்த்திசையிடத்து உதயகிரியிலே வந்து தோன்றிப் பின்பு கொதித்துப் பரந்து தான்கொண்ட கோடைக்காலத்தாலே போதற்கு அரிய வழியென்று கருதாராய்ப் புதிய திங்களாகிய* கண்ணியையுடையானை யொத்த ஒள்ளிய பொருட்கு அகன்றவர் பொன்னாற் செய்த தலைக்கோலங்கள் தாழ்ந்து விளங்கின நின்மயிர் அவ்வாறன்றிக் காய்கின்ற அழகை நீ யுடையையாக அப்பொருள் வேட்கையை மனத்தாற் காணுதலையுஞ் செய்வரோ? அங்ஙனஞ் செய்யார்காண்;

(கக) ஆங்க:—

(உ௦—உக) அரும்பெற

யோயே :—

(இ - ள்.) கருமையினையும் செய்ப்பினையுமுடைய ஒதியினையும் மடப்பத்தையுடைய மொழியினையுமுடையாய்! பெறுதற்கு அரிய ஆதிரைநாளை யுடைய இறைவன் திருமேனி அழகைப் பெறும்படி மலர்ந்த பெரிய குளிர்ந்த இச்சண்பகம் பருவம்பொய்யாதவாறுபோல அவர் தாம் கூறிய பருவத்தைப் பொய்யாராய் வருதலை அவர் கூறிய கூற்றால் நீயும் யானும் ஒருங்கு தெளிந்தேம்; அங்ஙனந் தெளிந்த பருவங் கழிவதற்கு முன்னே வருவர்; அவர் மொழியைத் தெளிவாயாக என ஆற்றுவித்தான்.

---

* சீவகசி. உ௦அ.

(பாடம்) 1. வளையினையுடைய.

௬௮௦

கலித்தொகை

இது
கைம்மிகலென்னும் மெய்ப்பாடு
எய்திநின்ற தலைவிக்குப் பின்னர்ச்
சூழ்ச்சி பிறந்தது.

இஃது இளவேனிற் பருவங்
குறித்து வற்புறுத்திப் பிரிய ஆற்றி
யிருந்து அப்பருவம் வந்தபின்னர்
ஆற்ருளாய் இரங்குகின்ற
தலைவியைத்

தோழி ஆற்றுவித்தலான்
இரக்கமாகிய உரிப்பொருள்
சிறத்தலின்,
அவ்வுரிப்பொருள் முதலினுங்
கருவினுஞ் சிறந்ததென்று
இரக்கத்திற்கு
உரிய நெய்தலிற் கோத்தார்;
"முதல்கரு வுரிப்பொரு ளென்ற
மூன்றி, னுவ
லுங்காலை முறை சிறந்தனவே,
பாடலுட் பயின்றவை நாடுங் காலை"*
என்று
ராகலின். இதுபாலைக்கு உரிய
முதலுங் கருவும் வந்து அதற்கு உரிய
உரிப்

பொருள் சிறவாமல் செய்தற்கு உரிய உரிப்பொருள் சிறந்ததாயிற்று.

இது தரவியல் ஒவ்வாது அதனகப்பட்டுவந்த சுரிதகத்தான் இற்ற ஒத்

தாழிசைக்கலி.

(கக)

"முல்லை குறிஞ்சி மருத நெய்த லெனக், சொல்லிய முறையாற்

சொல்லவும் படுமே"† என்புழிச் சொல்லாதமுறையாற் சொல்லவும்படு மென்றலின் இத்தொகையைப் பாலை குறிஞ்சி மருதம் முல்லை நெய்த

லேன இம்முறையே கோத்தார்
நல்லந்துவனார்.

நெய்தற்கலி

முற்றும்.

கலித்தொகை முற்றும்.

* தொல். பொருள் : ௯. தொல். பொருள் : ௫.

(பாடம்) 1. கவ்வர்துவனர்.

உரைச்சிறப்புப்பாயிரம்.

பாற்கடல் போலப் பரந்த
நன்னெறி
நூற்படு வான்பொரு
ளுண்ணிதி னுணர்ந்து
போக்கறு கேள்விப் புலவோர்
புலத்தி

னூற்பொருள் பொதிந்த
னாக்கமை யாப்பினைத் தேக்கிய
சிந்தைய னாகிப் பாற்பட
வெழுத்துஞ் சொல்லும்
பொருளுமிம் மூன்று
மிழுக்கற வாய்ந்த வழுக்கிறோல்
சீர்த்தித்
தொல்காப் பியமெனுந்
தொடுகடற் பரப்பை
மறுவுங் குறைவு மின்றி
யென்றுங்
கலையி னிறைந்த கதிர்மதி
யென்ன
நிலையுடை கலத்தி னெடுங்கரை

காணுக்

கல்லா மாந்தர் கற்பது
வேண்டியு
நல்லறி வுடையோர் நயப்பது
வேண்டியு
முறையிடை யிட்ட காண்டிகை
யுரைத்தும்
கஙு. ஆன்றோர் புகழ்ந்த வறிவினிற்
றெரிந்து
சான்றோ ருரைத்த தண்டமிழ்த் தெரிய
லொருபது பாட்டு முணர்பவர்க் கெல்லா

முறையற முழுதும் புரைபட
வுரைத்தும்,
ஒலித்திரைத் தலத்தி
னுணர்ந்தோ ருரைக்குங் உ0.

கலித்தொகைக் கருத்தினைக் காட்சியிற்
கண்டதற்

குன்றுறை யுவமமு மேனை
யுவமமுந்

தெள்ளிதிற் றெரிந்து
திணைப்பொருட் கேற்ப

வுள்ளுறை யுவமத் தொளித்த பொருளைக்
கொள்பவர் கொள்ளக் குறிப்பறிந் துணர்த்தி

உரு. யிறைச்சிப் பொருளுக்
கெய்தும் வகையைத்

திறப்படத் தெரிந்து சீர்பெறக்
கொளீஇத்

துறைப்படு பொருளொடு
சொற்பொருள் விளக்கி

முறைப்பட வினையை முடித்துக் காட்டிப்
பாட்டிடை மெய்ப்பாடு பாங்குறத் தெரித்துப்

கூO.

பாற்பட நூலின் யாப்புற வுரைத்த
நாற்பெயர் பெயரா நடப்பக் கிடத்திப்

போற்ற வின்னுரை
பொருள்பெற விளம்பியும்
வையம் புகழ்ந்து மணிமுடி
சூட்டிய
பொய்யில் வான்கதை
பொதிர்த்த செந்தமிழ்ச்
61

அஉ
உரைச்சிறப்புப்பாயிரம்

கு.   சிந்தா மணியைத் தெண்கடன் மாநிலம்
வந்தா தரிப்ப வண்பெரு வஞ்சிப்
பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்
திருத்தரு முனிவன் கருத்திது வென்னப்
பருப்பொருள் கடிந்து பொருட்டொடர்ப் படுத்து '0.
வினையொடு முடியப் புனையுரை யுரைத்தும்,
கல்லறி வுடைய தொல்பே ராசான்
கல்வியுங் காட்சியுங் காசினி

யறியப்
பொருடெரி குறுந்தொகை
யிருபது பாட்டிற்
கிதுபொரு ளென்றவ்
வெழுதா தொழிய
விதுபொரு ளென்றதற் கேற்ப
வுரைத்தும்,
தண்டமிழ் தெரித்த வண்புகழ்
மறையோன்
வண்டிமிர் சோலை மதுரா புரிதனி
லெண்டிசை விளங்க வந்த வாசான்
பயின்ற கேள்விப் பாரத் துவாச
னான்மறை துணிந்த நற்பொரு ளாகிய
தூய ஞான நிறைந்த சிவச்சுடர்
தானே யாகிய தன்மை யாள
னவின்ற வாய்மை நச்சினார்க் கினிய

னிருவினை கடியு மருவியம் பொதியின்
டு, மருவிய குறுமுனி தெரிதமிழ் விளங்க
ஆழி யூழி காலம்
வாழி வாழியிம் மண்மிசை யானே.

தொல்காப் பியத்திற் றொகுத்த
பொருளனைத்து மெல்லார்க்கு மொப்ப
வினிதுரைத்தான்—சொல்லார்
மதுரைநச்சி னார்க்கினியன்
மாமறையோன் கல்விக் கதிரின்
சுடரெறிப்பக் கண்டு.

பச்சைமா லனைய மேகம் பௌவநீர்
பருகிக் கான்ற . வெச்சிறாற்
றிசையு முண்ணு மமிழ்தென வெழூரா
வெச்சின் மெச்சிரா ளுளும் விண்ணோர்
மிசைகுவர் வேதபோத னச்சினர்க்
கினிய வெச்சி னருந்தமிழ் நுகர்வர்
நல்லோர்.

கலித்தொகை

செய்யுண் முதற்

குறிப்பகராதி

முதல்

அகலாங்க

அகவினம்

அகன்ஞாலம்

அகன்றுறை

அணிமுகமதி

அணைமருளின்

அயர்திகழ்

அரிதாயவற

அரிதினிற்

அரிதேதோழி

அரிநீரவிழ்

அரிமாணிடித்

அருமர்ந்த

அருந்தவமாற்

அரும்பொரு

அரைசுபடக்

அறனின்றி

அன்னைகழிஞ்

ஆழிழியணி

ஆறல்லமொழி

ஆறறியந்தனை

இகல்வேந்த

இடுமுணெடு

இணைபட

இணையிரண்

இமையவில்

இலங்கொளி

இவர்திமிலெறி

ஈண்டுநீர்

ஈதலிற்குறை

பக்கம்	முதல்	பக்கம்
௪௪௪	எல்லாவிஃதொ	
௧௧௪	எல்லாவிஃதொத்	
௯௭௬	எழின்மருப்	
௨௧௨	எறித்தருகதிர்	

௪௮௪ செய்யுண் முதற் குறிப்பகராதி

தொல்லூழி	௪௦௦
தொல்லெழில்	௮௦
தோடுறங்	௯௯௮
தோழிநாங்	௫௬௬
நடுவிகந்தொரீஇ	௨௫
நயந்தலைமா	௨௫௧
நயனும்வாய்	௪௦௫
நலமிகநந்திய	௫௬௦
நறவினை	௨௯௮
நன்னுதால்	௪௪௯
நிரைதிமில்	௪௭௫
நில்லாங்கு	௨௮௩
நீரார்செறுவி	௨௧௭
நெஞ்சுநடுக்	௬௬

கலித்தொகை
— உரை

கடவுள் வாழ்த்து

விளக்கம்

(க - ச) ‘ஆறு அறி......பகர்ந்து’ என்பதற்கு, ‘வீட்டு நெறியை அறிகின்ற அந்தணரென்னும் அருட்சான்றோர்க்கு அரிய நுண் கருத்துகள் பல புலப்படுத்தி’ யென்பது நேருரை. மறை - நுட்பம்; பருப்பொருளறிவினோர்க்கு எளிதின் விளங்காததென்பது பொருள். மறை பல பல நுட்பங்கள் ; அவை “செங்கண் ஆயிரந் திருக்குறிப் பருளவும்” (சிலப். உஅ : கக) என்றாற் போல்வன. ‘ஆறு’ என்பதற்கு ஆறங்கமென்று நச். உரைத்தமையால், ‘அந்தண’ ரென்பதற்கு அந் நான்மறையிலேயே வைத்து ‘வேதத்தின் அந்தத்தை அணவுவா’ ரெனச் சொற்பொருள் விரிக்குங் கட்டாயம் நேர்ந்தது. “பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்,” “அந்தணரென்போர்......செந்தண்மை பூண்டொழுகலான்,” “அந்தண்மைபூண்ட... அந்தணர்” முதலிய சான்றோர் வழக்கும், ‘அந்தண்’ “அந்தண்மை’ ‘அந்தணாளன்’ ‘அந்தணி’ முதலான சொற்பிறப்பாட்சியும் ஒழுக்கம் ஏதுவாக அவர்க்குப் பெயரமைந்த மாட்சிமை விளக்குதலின், அதற்கு மாறாகவும் சொற்சிதைவாகவும் நச். நூற்போக்கில் உரைக்கும் உரை கொள்ளற்பாலதன்று. அம் - அழகு; தண் - குளிர்ச்சி; குளிர்ச்சியில் அழகிய குளிர்ச்சி

யாவது அருள்; எனவே 'அந்தண'ரென்பதற்கு 'அருளொழுக்கமுடையா'ரென்பது இனிய செம்பொருள். 'பகர்ந்து', பாகுபடக் காட்டி யென்னும் பொருட்டு. 'தேறு நீர்': தெளிந்த நீர்; வான் நீராகலின். 'செல்லும் போர்' என்று கொள்க. வாய் பேசாமல் தான் குறித்த கருத்தின்மேற் செல்லும் போரென்பது கருத்து. இறைவன் திருநடச் சிறப்பியல்பு ஈதேயாம். நச். இவற்றிற்குக் கூறும் உரை நுட்பமாயிருப்பினும், நேருரை யாகாவென்க. "கடுங்கூளி மாறுப் போ' ரென்பதிற் கடுமை போர்க்குக் கொள்க. இதனை விளக்கும்பொருட்டுக் கூளியினின்றும் அது பிரிந் திசைக்குமாறு 'கடிதாகிய' என்று நச். திறமாக உரைவகுக்கும் முறை பெரிதும் பின்பற்றற்பாலது. இறைவனது ஆழிக்குர் திருநடம் பேய்ச் செயல்போற் காணப்படுதலின், அது 'கூளிப்போர்' என உருவகிக்கப் பட்டது. 'எண் கை' என்பதிற் கை: தோள்; "எண்டோள் வீசி நின்று டும்," என்பது காண்க. 'போரும் மிடறும் கையு' முடையாயென்று எண் ணும்மை விரித்துரைக்க. 'வீட்டுநெறி அறியவல்ல அருளொழுக்கச் சான் றோர்க்கு அதற்கான நுண்பொருள்கள் பல தெளிவித்து, அந்நெறியறியாத

உ

கலித்தொகை

[கடவுள் மருளொழுக்க மாக்கட்கு இறைவன் எண்டிசைகளிலும் எண்டோளாற் போர்தொடுக்குங்கால், தனது குளிர்ந்த அருளியல்பை

மறைத்து வெம்மைச் சின வியல்பை வெளிப்படுத்தி வாய் பேசாமல் தான் குறித்ததன்மேற் சென்று அப் போர் செய்யும் பெருமானே ' என்பது கருத்து.

(௩ - எ) ' படுபறை பல இயம்ப ' என்பதிற் ' பறை ' வாச்சியங்கள்: அவை, உலகுயிர்களை இயக்கவல்ல இசை வகைகளை யுணர்த்தும். அப் பெயர் இசைக்கருவிகளை யுணர்த்தும்போது ஆகுபெயராம்.

(அ - கச) ' அமர் பல கடந்து ', பல போர்கள் கடந்து ; இறுதியாக

முப்புர மெரித்தலின், இத் திருக்கூத்துகள் முப்புர மெரித்தபோது "ஆடியவையென உரைக்கப்படும்.

முப்புரமாவது, மும்மல காரியம். அணு, மெத்தை.

' எனவாங்கு ' என்னுங் தனிச் சொல்லில், என என்று சொல்லும்படி யாக எனவும், ஆங்கு அசையெனவுங் கொள்க.

சிவபிரான் திருநடம்புரிந்து எல்லாவற்றையும் அழிக்கும்போது அவன் கைகொட்டி ஆடுங் கூத்துக் 'கொடு கொட்டி ' யெனவும், அங்ஙனம் அழிந்தவற்றின் சாம்பலைப் பூசி ஆடுங் கூத்துப் ' பாண்டரங்க ' மெனவும்,

தலை ஓடு முதலிய எலும்புகளைத் தாங்கி நின்று ஆடுங் கூத்துக் 'காபால' மெனவுங் கூறப்படும். 'பாண்டு அரங்கம்' - வெள்ளையரங்கம்; அது சாம்பல் நிறைந்த இடுகாடு. சாம்பற் பூசி அங்கு ஆடுங் கூத்துக்கு அதுவே பெயராயிற்று. 'பாண்டு' வெண்மைப் பொருளில் வருதல் "பாண்டு கம்பளந் துலக்கிய தாகலின்" (மணிமே, கச : உக) என்பதிற் காண்க. காபாலம் = தலையோடு.

இங்ஙனமாக இறைவன் எல்லாவற்றையும் அழிக்குங்கால் அவன்றன்

அருளியல்பு மேலே விளங்கித்

தோன்றாதாகலின், அம்மை அசையாமலிருக்க ஐயன் நடம்புரிவானென்ப. அருளியல்பாகிய அம்மை இவ் அழிக்குஞ் செயலிற் கலந்துகொள்வளென்பது முறையாகாமையின், நின் ஆட்டத்துக்கு அவன் தாளந்தருவானோ? தரமாட்டானே என்னும் எதிர்மறைப் பொருளிற் 'கொண்ட சீர்த் தருவானோ' 'வளர் தூக்குத் தருவானோ' 'முற்பாணி தருவானோ' என வந்தன.

(கரு - கஎ) ஆயினும் இறைவனும் அம்மையுந் தவிர

வினையெல்லாம்
அழிந் தொழிதலால் அங்கிலையில்
வேறுயாருந் தாளந்
தருதற்கில்லாமையா
லும், அழிக்குந் தொழிலும்
அருளே துவாகவே நிகழ்தலாலும்
எப்படியும்
அம்மையே நின் ஆட்டத்துக்குத்
தாளந் தர வேண்டுவது
கட்டாயமாயிருக்
கின்றதென்பார், ' பாணியுந்
தூக்குஞ் சீருமென்றிவை
மாணிழையறிவை

பாழ்த்து] உரை

ஒக்குத் தக்கவாறு தாளம் ஒத்திட்டுத்
தர என்றவாறு. தாளத்தின் முதற்
கூறு 'பாணி'; இடைக்கூறு 'தூக்கு';
இறுதிக்கூறு 'சீர்' என்று கொள்க.
இவ்வுண்மை 'முற்பாணி' 'வளர் தூக்கு'
'கொண்ட சீர்' என்னும் அவற்றின்
அடை மொழிகளாலும் விளங்குதல்
காண்க. மதுரைக் காஞ்சி யுரையிற்
கசுய) 'சீர்' என்பதற்கு
இவ்வுரையாசிரியரே 'தாள அறுதி'
என்றுரைத் ரமையும் இங்கு நினைவு
கூறற்பாலது.

மருட்கை - வியப்பு. தேவ பாணி
- கடவுளைப் பரவும் பாட்டு.

பாலைக்கலி

க

(க - க0) தன்னாற் படைக்கப்படும் பொருளுக்குத் தான் முந்தியவனாக
யின், நான்முகனை 'முதியவன்' என்றார். ஆயினும் அவனும் இறைவனால்
ஒருகாற் படைக்கப்படுவோனே யென்றற்குத் 'தோன்றி' என்றார். மிடல்-
மிடுக்கு. அமரரென்பார் அடங்கியவர். அடக்கமுள்ளவரை அமரிக்கையுள்ள
வரென்ப. 'மடங்கல்' திரும்பாதவனென்னும் பொருளிற் கூற்றுவனுக்கு
வந்தது; "மாற்றருங் கூற்றம்" (தோல், புறத், உச) என்பது காண்க.
கடந்து அடு' என்பதற்கு, 'வஞ்சியாது எதிர் நின்று அடுகின்ற' என
நச். உரைப்பது நல்ல உரை. முன்பு: வலிமை. கணிச்சி; துண்டிக்குங்
கருவி; இங்கு மழு. கணிச்சியோன் என்பது முக்கண்ணனைச் சுட்டிவந்த
மையாற், சுட்டுப் பெயராய் நின்றதென்றார். 'ஆர் இடை' என்பதற்குத்
தொலையாத வழியிடையே என நச். உரைத்தது நுட்பமாயிருக்கின்றது.

(கக - உஉ) 'இரந்தோர்க்கு ஒன்று ஈத'லென்பது, இல்லறம்; அவ்வில்லறம் தலைவியோடன்றிக் கூடாது. பொருள் தேடச் செல்லும் நின் பிரிவாற்றாமையால் தலைவி இறந்துபட்டாளாயின் பின் நீ தேடிக் கொணர்ந்த பொருளால் இல்லறம் எங்ஙனம் நிகழும்? ஆதலின் நின் தலைவியைப் பிரியாமையே பொருளாவதல்லது பிரிந்து போய்த் தேடுவது பொருளாகாது' என்று வல்லமையாய்த் தோழி கூறுவாளாயினள். (தொல். மெய்ப். உச-ன் உரையிற் காண்க.) இளமைச் செவ்வி முதிர்வினாலும், கற்பினாலும் பிரிவு. சாரணமாக இறத்தலுங் கூடுமென்பதும், இத்தகைய உணர்வின் விழுப்பத்தினாலேயே மகளிர் வடமீன்போல் தொழுதேத்தப்படுகின்றன ரென்பதும் அறியற்பாலன. இத்தாழிசைகளில் 'இரத்தல்' மூவகையாய் நிகழுமுறைமை நன்கு காட்டப்பட்டிருக்கின்றது. 'இடன்': செல்வம்; " இடனில் பருவத்தும்" (குறள் - உஉஅ) என்பதிற் போல.

(உரு - உக) இவன் என்றது, தலைவியை. 'கூற அன்புற்றுத் தாழ்பு அஞ்சிக் கங்கின' சென்று கொள்க. கூறவென்பதனைத் தொலைதலோடுங்

கலித்தொகை

[பாலைக்

கூட்டுக வென்னும் நச். உரை

நேர்மையாகாது. ' புன்கண்

கொண்டு இனையவு' மென்பதற்குப்

பொலிவழிவினைத் தன்னிடத்தே கொண்டு வருந் தவமென்று இவரே யுரைத்தமையின், அப்பகுதியிலேயே தலைவியின் தொல் கவின் தொலைதலுந் தோழி கூறினளாக அடங்கும். மேலுங் கவின்றொலைத லஞ்சிச் செலவழுங்கினனெனின், அஃது அருளென்னு மெய்ப்பாடாகாதாம், ஆதலின், 'அன்புற்றுக் கவின்றொலைதலும் அஞ்சி' என வருமாறு எச்ச வும்மை விரித்துரைக்க. 'காழ்,' இங்குக் குத்துக்கோல்; "நெடுங்காழ்" (முல்லைப்: ௩௩) என்பது காண்க. களிற்று ஒருத்தல்: யானையின் ஆண்;

களிறு என்பதும் யானையின் ஆண் ஆயினும் இன்னோரன்ன இடங்களில் அச்சொல் யானையென்னுஞ் சாதிப் பெயராய் நிற்க, அதனை அடுத்துவந்த ஒருத்தலென்பது அதன் ஆணைக் குறிக்கும். இதனை 'விதந்து' என்றமை யாற் (தொல். மரபு, ௩௪) கொள்க.

உ

(௧ - ௫) அம்பல், அலருக்குமுன் நிகழ்வது; அது குறிப்பாகத் தோற்றுவது; 'வெளியாகக் கூறு' மென்று

நச். உரைத்ததற்கு அக்குறிப்பு வெளி
யாகக் கூறுதலென்று கொள்க.
'இதழ் சோர்பு பனி மல்க '
என்பதன்
உரை அழகானது. இத்தகைய
இடங்களில் நச். தம் ஆற்றலை நன்கு
காட்டி
யிருக்கின்றார். புன்மையாவது இங்கே
பொலிவஃறிதல். நினைப்பவும் இழப்
பவும் என்பதற்கேற்ப நாணவும் எனக்
கொள்க.
(கூ - கூ) ' இடைகொண்டு '
செவ்வி தெரிந்து; " தளர் இடை
அறியுர்

தன்மையள்கொல்லோ" (அ : கூஅ) என்பது மணிமேகலை. 'எம்': ஆறன் பன்மை. 'மலர்' தலைவியெனவும், 'அடை' சுற்றமெனவுங் கொள்வது சிறப்பு.

(கo - கரு) வகை, ஆருபெயர். 'ஒல்லாங்கு' என்பதில் ஆங்கு என்பதற்கு நச். உரைக்கும் உரைவன்மை கண்டுகொள்க. புல்லு - புல்லுதல்

இறைஞ்சிய, தாழ்ந்தாற்போல் வீழ்ந்து கிடந்தவென்க.

(கசு - கஎ) பிணிபு, தொழிற் பெயராகக் கூறலுமாம். இத்தாழிசைகளில் வந்தவை இறைச்சிப் பொருள்கள்.

இறைச்

யென்பதற்குத் தங்கியதென்பது பொருள்; கருப்பொருள்களில் தங்கி

கருத்தெனக் கொள்க; அவை, உவமைபோற் பயன்படினும் படும்.

சொல்லுவார் கருத்துக்கு ஓர

(கஅ - உஉ) 'அருள் வந்தவை

காட்டி' யென்றதனல், பாலைத்திணை காதலற்கு அருளுணர்ச்சி தருமென்பதூஉம், "மேல் நின்று மெய்கூறுங் கேளிர்", இஃதொரு பழமொழி. 'தகைப்ப'வென்பது அஃறிணை வினையாகலின், பகரவீறாகக் கூறாது அகரவீறாகக் கூறினர்

கலி] உரை விளக்கம்

௫

இத்தனை "மூன்றேபலவறிசொல்" (தொல், சொல், ௯) என்னும்

பிரி

நிலையாற் கொள்க.

ரு

(க - அ) மறவர்நிலை இதன் முதலடிகளில் ஓவியம்போற் காட்டப்பட்டிருக்கின்றது. 'சுரிவளர் பித்தையர்': நனி சுரிந்து வளர்கின்ற தலைமயிரினையுடையவர். அல்குதல் - தங்கியிருத்தல்; வழி வருவோர்க்குத் குற்றஞ் செய் தலைப் பார்த்துத் தொலைவிலே தங்கியிருத்தல். 'புலம்பு': இங்கே வருத்தம். செடி கொடிகளில்லா வெறு வெளியாதலின் 'புள்ளும் வழங்கா ஆரிடை' யென்றார்.

(கூ - கஉ) காழ், உறுதிமுத்து; 'காழ் விரி கவையாரம்' என்பது ஒரு விலையுயர்ந்த அணிகலன். அவர்,

அத்தகையவரென்று கொள்க.
நாணல் முளை, கூர்மைக்கு உவமை. "நாணற் கிழங்கு மணற்கீன்ற முளையோரன்ன முள் எயிறு" என்னும் அகநானூறு (உகஉ : ச-ரு) காண்க. அன்னவென் கிளவி எல்லா உவமங்கட்கும் வருமாகலின் (உவம, கரு) இங்கு மெய்யுவமத்துக்கும் வந்தது.

(கரு - கசு) தீ, இனிமைப் பொருட்டு. மகிழ், இங்குக் கிளர்ச்சி.

(கஎ - உo) 'நுண்ணெழி'

லென்றது, கூர்ந்து நோக்கநோக்க இன்பந்தரும் எழில்; இச்சொல் தமிழ்நாட்டவரது நுட்பவுணர்வை விளக்கும். சுணங்கு - தேமல், மகளிர்க்கு ஒளி பொருந்திய நுதல் கூறப்படுதலின், அவருடைய அறிவு அன்பு முதலான நல்லியல்புகளின் மாட்சிமை பெறுதும் ; அகத்தின் நல்லியல்புகள் புறத்தே நெற்றியில் ஒளி காட்டுமாகலின் என்க.

(உக - உரு) 'கழிபெரு நல்கல்': ஞான்றும் வழங்கலாம். 'ஒருநாள் பின்' என்றமையால், முற்காலத்தில் கேட்டல், ஆராய்தல், அரசபுரிதல்,

செயல்களிலுங் கலந்துகொண்டு இணை

ஒரு குறியீட்டுச் சொல்; இஞ்
ஒருபொழுது இடைப்பட நீப்
ஆடவர்களோடு மகளிர் அறங்
வனங்காண்டல் முதலிய எச்
பிரியாமல் உலகியல் நடத்துவ
ரென்னுந் தமிழ்நாகரிக
உண்மையும் விளக்கமாம். '
ஒழிக இனி' என்பது 'ஒழிகினி'
யென ஈறு குறைந்தது.

"செய் பொருள் அச்சமும்......"
(தொல். பொருள்: கூஅ) என்பதற்கு
இப்பாட்டு இலக்கியமாதல்
கண்டுகொள்க.

சு

(க - கூ) 'அஞ்செவி'

'பணைத்தாள்', யானைக்குச் சிறத்தலின் அத

சா

'அதர்பட்ட அருஞ்சுர' மென்க. 'சிறந்தன' மென்பதிற் சிறப்பு இன்றி யமையாமைப் பொருளது. 'கலன் வௌவலின் ஆள்வினைக்கு அழிந்தோர் போறல்' ஒரு பழமொழி. தமிழ்நூல்களில் இது மிகுதியாகப் பயின்று வருதலால், அவர்கள் அயல் நாடுகளுக்கு வாணிகங் காரணமாக அடிக்கடி கலத்திற் செல்லுவரென்பது பெறுதும். 'கேள் பெருந்தகை': காதலனை பெருந்தகை; 'கேள்' இப்பொருட்டாதல் "அவளுந் தன் கேட்குச் சொன்னள்" (குணமா, ௨௱௨) என்னுஞ் சிந்தாமணியிலுங் காண்க. 'மொழிகுவம்' எனப் பிரிக்க. 'நாளுங் கோண்மீன்' என்பதற்கு 'நாண்மீனுங் கோண்மீனு' மென்றுரைப்பது நேருரை; அவை, நாளுங் கோளுமென்க. நச். உரைப்பது இயல்பாயில்லை. யானை முதலியன குறிஞ்சிக்குரிய கருப்பொருளாதலால் நச். 'குறிஞ்சிக்குரிய இறைச்சியா' லென்றனர். இங்கே இறைச்சியென்றது வாளா கருப்பொருளை; "இறைச்சிப் பொருள்வயின்". (தோல், பெய, ௬௨) என்பதிற்போல.

(௧௦ - ௧௧) 'ஆற்றுப்படுத்த': ஒழுங்காக நடத்தியவென்னும் பொருட்டு.

(கச - கரு) நீர் நீத்த தாமரை ஓர் இராப்பொழுதேனும் வாடாமலிருக்கும்; நீ நீத்த தலைவி அதுதானும் உயிர்வாழாள் என்றபடி.

இவை அகநிலை ஒத்தாழிசைகளாதலின், சிறுபான்மை இங்ஙனம் இடப் பொருளோடும் இடத்தியல் பொருளோடும், ஒத்துப்பொருள் முடியாமையுங் கொள்க. (தொல். செய் : கசஉ. உரை - வி.) மீண்டும் பெற முடியாத இழப்பினை நச். கையாறு என்றமை கருத்திருத்துதற்குரியது. இத்தாழிசைகளிற் கூறிய உவமைகளால், காதலன் திரும்பி வருவதாகக் கூறிப் பிரியும் பிரிவிலேயே அக்காலத்துத் தமிழ்மகளிர் எத்துணை வருந்துவரென்பதும் அன்னால் அவரது அன்பின்நிலை எத்துணை யுயர்ந்ததென்பதும் இனிது விளங்கும்.

(கக - கக) 'பொய்ந் நல்கல்' ஒரு குறியீட்டுச் சொல். இனைய சொற்கள் மீண்டும் எடுத்து வழங்குதற் குரியன. 'புறந்தரல்': பாதுகாத்தலென்னும் பொருட்டு; உயிர்க்குப் புறமாயுள்ள உடம்புவசதிகள் உலகியல்வசதிகள் முதலியன உண்டுபண்ணித் தருதலைப் 'பாதுகாத்த'லென்பவாகலின், அப்பெயராயிற்று.

ரு

(க - கo) 'மரல்', அரலையென்னும் பெயருள்ளதொரு புதர்; (பிங். மரப் உஉய்). அது மரைக்குரிய உணவுச்

செடியன்று. மாரி வறத்தலால் அதனை அது கவர்கின்றதென்க.
வரையோங்கு அருஞ்சுரம்

என்றமையால், இத...

றிஞ்சி நிலத்தின்கண் வெயிலின் உறைப்பால் வெதும்பிய பாலையாம்; தனுலுந் தனியாகப் பாலைநிலமொன்றின்மை பெறப்படும். 'புரையோர் ம் சுரையம்பு' என்க; 'புரை' குற்றத்தை யுணர்த்தும்போது, 'உள் தாளை' யென்னும் பொருளடியாகப் பிறந்த சொல்லாம்; அறிவு அறை பானதென்பது கருத்து; இனி, உயர்வையுணர்த்தும்போது, தெய்வ பியல்போடு ஒத்ததென்னும் ஒப்புப் பொருளடியாகத் தோன்றிய சொல் மாம். 'உண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்கு' என்பதனல், 'உடம்பி ருக்கும் நீர் சுண்டினல் நாவுலர்ந்து நீர் வேட்கையெழும்' என்னுங் ருத்து வெளிப்படுகின்றது. பசியினும் நீர் வேட்கை கடுமையான தென்பது இதனுற் கண்டுகொள்ளப்படும். 'வழிச்செல்வோர் நீர் வேட்கையை அவர் வருத்தக்கண்ணீரே நாவில் வீழ்ந்து ஒருவாறு தணிக் கும்' என்பது நல்ல பாட்டோவியமாகும். 'துணையாக நாடின்' என்ப தற்குத் 'துணையாகும்படி நாடின்' என்றுரைத்தலேபோதும். 'அது வல்லது இன்பமும் உண்டோ எமக்கு' என்பது கற்பின் பொற்பு.

சீா

(க - ச) 'வறிது' சிறிதென்னும் பொருட்டு; நச். இதற்கு உடல் சிறி
ாக என உரைக்கும் உரை வல்லமைப்பாடானது. 'ஒய் களிறு', உள்ளக்
ளர்ச்சி சுருங்கிய களிறு எனக் கொள்க; ஒய்தலை நுணுகுதற் பொருளிற்
ருதியே சேனாவரையர் இவ்வடிகளை உரியியலில் (கூச) மேற்கோள் காட்டு
வர். 'வைப்பு', இங்குப் பாலைநிலத்தூர்கள். மறவர் மறச்செயலால்
வான் நீங்குவதாயிற்றென்க. மறச் செயல்களால் மழை வறங் கூரும்
உண்மை, "அன்று தொட்டுப் பாண்டியனாடு மழை வறங் கூர்ந்து வறுமை
யெய்தி வெப்பு நோயுங் குருவுந் தொடர", என்னுஞ் சிலப்பதிகாரத்தாற்
காண்க. 'நல்லுணர்ச்சிகளால் நாட்டில் மழை முதலாம் நலங்களுண்டாகு'
மென்று தமிழ் மேன்மக்கள் கருதிவந்தமை தெரிதலின், இதனால் அவர்
தம் மெய்யுணர்வுப்பேறும் அறச்செயல் நோக்கமும் நன்கு விளக்கமாம்.

(கு - கூ) 'அயர்ந்து' விரும்பியென்னும் பொருட்டு; "தழை அயருந் துறை
வன்" (ஐங். கழ : எ) என்பதிற்போல. 'மனத்தான் நிகழ்த்துகையினாலே'
என்று நச். அதனை விளக்கமாக உரைத்துக்கொண்டார், மேல் 'கை புனை'
யென வருதலின். 'எழுதி வழித்த' என நச். உரைப்பதற்குப் 'பண்ணி
மழமழப் பாக்கிய' என்று கொள்வது நல்லது. 'எழுதுதல்,' பண்ணுதற்
பொருளில் வருதல், "எழுதிய பாவை" என்னும் மணிமேகலை
(உக : கககூ) யிற் காண்க.

(கூ - கஉ) 'காழகம்', இங்கே போர்க்கோலத்திற் கட்டப்படும்
ஒருவகைக் கைக் கச்சு. 'புனைமாண் மரீஇய அம்பு' என்பதற்குப்

அ

கலித்தொகை

புனைதன் மாட்சிமை பொருந்திய அம்பு எனவே உரைக்கலாம். 'நீல மலர் நீர் சொரிந்து மழை வரவை எதிர்நோக்கும்' என்பதோர் இயற்கை யுண்மை, "நீலம்.........நில்லாவே" என்பதனால் வெளிப்படுகின்றது. மேல், குறிஞ்சிக் கலியிலும் (சஅ : கரு) இது வரும்.

(கஎ - உக) 'அரவம்', இங்கு ஆர்வாரம்; 'கடை', இறந்து படுங் கடைசி காலம் என்பது நச். கருத்து. தலைவன் திரும்பி வருதலை எதிர்பார்த்திராமல் தலைவி தன் உயிர்நீத்துத் துன்பம் ஆற்றிக்கொள்ளுதலின், அவள் அக்கடைசி காலத்தில் தன்னலங் கொள்வானாயினன் என்னுங் கருத்தில் நச். உரைத்தார்.

இச்செய்யுளில் வருந் தலைவியின் செய்கைகள் "உடன் சேறல் செய்கை" (தொல். கற் : கூ) என்பதன்கண் அடங்கும்.

(க - அ) 'காய்' என்பதைக் 'கடுகுபு' என்பதனேடு கூட்டினர் நச். இருந்தவாறே உரைக்கலாம். 'சின'மென்பது, கொதிப்பு; "ஞாயிறு சினவின்" (புறம், கூ௰) என்பதன் உரை காண்க. மலைக்கு வெற்றியாவது இதுகாறுமாயினும் பசுமையும் நீருநிழலுங் கெடாது தண்ணென்றிருந்தமை; கலி. உ௰ : கூ-டு அடிகள் காண்க. 'வெம்பிய' வென்றது, அத்

தகைய மலை இப்போது புறங் கரிந்தும் புகைந்தும் வெடித்துந் தன் நிலை குலைந்தவென்றற்கு. 'துணிந்தனிர்க்கு ஐய' என்பது போல்வதை நச். முன் (கலி. உ) ஒருமைப்பன்மை மயக்க மென்றனர். என்னுந் திணைமொழியைம்பதும் (டு) நினைவு கூர்க. "வாரன்மின் ஐய"

(கூ - கக) இசைக்குங் கோலி லமைந்த வழ் நரம்புகளும் என்றுரைத் தலே சிறந்தது. இடைநின்ற ஏதானும் ஒரு நரம்பு கெட்டால் ஏனையெல்லா நரம்புகளுந் தம் பயன் கெடுமென்பது கருத்து. பொருள் நிலைகளும் அங்ஙனந்தாம். ஒன்று நிலைகுலைந்தால் ஏனையெல்லாமும் அது காரணமாகப் பயன் கெடும். இசையின்பம் முறுகி நிற்கு நேரத்தில் திடுமென நரம்பறுந்து அவ்வின்பங் கெடுமாறுபோலப், பொருளும் நல்லவா றுகர்ந்து வரு நேரத்தில் திடுமெனக் கெட்டு இன்னல் தருமாகலின் இரண்டின் நிலையாமையிலும் ஒப்புமை கொள்ளப்படும். இடைநேரம் வரையிலேனும் நரம்பறுமலிருக்கும் யாழ்போலவன்றிப் பொருள் தொடக்கத்திலேயுங் கெட்டு அதனினு நிலையாமை தெளிவித்தலின், 'யாழினு நிலையில்லாப் பொருள்' என்றார்.

(கஉ - கச) 'கொண்டக்காற் போலாது' என்பதற்கு நச். உரைக்கும் விளக்கம் இப்பகுதிக்கு முதன்மையானது. 'பீடு,' இங்கு வலிமை.

கலி] உரை

விளக்கம் ௮௯

திருமகளின் தலைஞ்ம் தோன்ற நச். 'புறமாறு' மென்பதற்கு உரைக்கும் உரையைக் கூர்ந்துணர்ந்து கொள்க. 'திரு' வென்றது, பொருட்கு ஏதுவாயுள்ள நற்பேறு. இத்திருமகள் ஒருவரை அடைந்தபின்பே அவருக்குப் பொருள்தேடும் எண்ணமும் வாயிலுந் தோன்றிப் பொருளுண்டாம். உண்டான பொருள் இடையே இல்லாமற்போயினும் சிலர்க்கு அந்நற்பேறு இருக்குங்காறும் பொருளுடையார்போல நுகர்ச்சி

யிருத்தலும்
கெடுதலின்
உண்டு. இங்ஙனம் பொருள், திருவுக்குப்பின் வந்து முன்
அதனைத் 'திருவினு நிலையில்லாப் பொரு' ளென்றார்.

(கரு - கள) 'பயனேக்கார்',
எச்சம்,
கொடுங்கோன் மன்னன் உயிர்விடு

முன் அவன்பொருள் பிறராற் பற்றப்படுதலின், 'கண்ணேடாது உயிர்
வௌவும் அரைசினு நிலையில்லாப் பொரு' ளென்றார்.
திடுமெனக் கெடுதற்குரிய யாழும் திருவும் கொடுங்கோலும் எடுத்துக்
காட்டிப் பொருளது நிலையாமை அறிவுறுத்தமையின், அந்நிலையாமையின்
விரைவை உள்ளத்துணர்ச்சியாய்
ஆசிரியர் நன்கு புலப்படுத்திஞராயிற்று.
(கஅ - உரு) 'நகர்'
இல்லத்துக்காகி இல்லாட்காயிற்று;
'நகர்' இல்லம்
உணர்த்துதல் "அருங்கடி வியன்

நகர் " என்னுஞ்
சிறுபாணாற்றுப்படையிற்
(கசுஎ) காண்க.

இப்பாட்டில் நல்ல அறவுரைகள் வந்தன. இடர் வந்தபோது யானை, கலப்பைத் தோற்றம்போலத், தன் கையை மேலே தூக்கி நிலத்தில் மருப்
பூன்றிக் கிடக்குமென்பது, தமிழ்மக்களின் உற்றுநோக்கறிவை வெளிப்
படுத்தும்.

அ.

(ரு - கக) ' எறித்தரு கதிர் ', உறைத்தலைச் செய்கின்ற கதிர்.

குடை,

வெண்குடை; பகலவன் வெயிலைத் தெறிக்கச் செய்வது வெண்ணிறமே யெனத் தெரிந்து தமிழ்மேன்மக்கள் அந்நிறமுள்ள குடையைப் பண்டு பயன்படுத்தி வந்தனர். " வெயில் மறைக்கொண்ட உருகெழு சிறப்பின் மாலை வெண்குடை " என்னும் பழைய புறநானூற்றடியை (௬௰:கக-௨) நினைவு கூர்க. முக்கோல் முத்தீயை உணர்த்துவதென்பது சிறப்பு; அதுவே பழைய பெருநூல்களில் உரைசான்றது. " கொடிநிலை கந்தழி

வள்ளி"

(தொல். புறத்-௩௩) யென்னும் மூத்தீவணக்கனார்பா இங்கே கருதுதற்குரி

யது. வேறு ஓரா நெஞ்சம், தவறு நினையாத நெஞ்சமென்று கொள்க.

'குறிப்பு' என்னுஞ் சொல் இங்கே ஐம்பொறியை உணர்த்துமெனக் கொண்

டார் நச்.; ஐம்பொறியுந் தமக்கென ஒவ்வொரு குறிப்புள்ளமையின் என்க.

"குறிப்பே, குறித்தது கொள்ளுமாயின்" (தொல். ௧௭ - ௧) என்பது கரு

துக. 'கொளை', கொள்கை; 'நடை', ஒழுக்கம். சிறந்த

கொள்கைகளும்

நடைமுறைகளும் வாழ்க்கையில் உடையோரே சான்றோ ரென்றபடியாம். இத்தகைய சான்றோர் பண்டு தமிழகத்தில் எங்கும் நிலவி ருந்து அறங்காத்து வந்தனரென்க. 'வெவ்விடைச் செலன்மாலை ஒழுக் த்தீ' ரென்றமையால், இவர்கள் மலைக்கானங்களிலும் கானகங்களிலும் வெளிகளிலும் அடிக்கடி போதலை ஓர்

ஒழுக்கமாகக் கொண்டு இயற்கை
புணர்விற் சிறந்து இறையருளிற்
படிந்திருப்பரென்பது பெறுதும்.
இடை, டம்; 'தாம் அறி புணர்ச்சிய'
ரென்பதற்குத் தமக்குமட்டுந்
தெரிந்த
ட்டமுடையரென்றுரைப்பதே
இயல்பான உரை; இன்னும் அவர்
எல் ார்க்குந் தெரியு நிலையில்
இல்லாமையின் என்க. '
காணேமல்லேம் கண் _னம் '
என்பதற்கு நச். உரைக்கும் நயம்
அறிந்து இன்புறுக. ' அருஞ்சுரம்
முன்னிய ' என்றமையால், தலைவியின்

மிக்க கற்பு புலப்படுத்தினாராயிற்று. ஒதன் அடக்கியலில் ' இறந்த கற்பு ' என்றதற்கு இஃது ஏதுவாம். கலி. ௭:௧௧-௨ அடிகள் நினைவு கூர்க.

(௧௨ - ௧௪) சந்தனத்தோடு வேறு பல நறுமணப் பண்டங்களுங் கலப் பதுண்டாகலின், ' பல உறு ' என்றார்.

(௧௫ - ௧௭) சீர், தலைமை. கலிப்பாட்டுகளில் ' ஒத்தாழிசைக் கலி ' யென வகுத்து, ஒரு கருத்தை மூன்று வகையாக அதன் தாழிசைகளில் தமிழ்ச் சான்றோர் விளக் தும் அருமையால், அவர்கட்குத்

தெளிவின் மேலும் இனிமையின் மேலும் இருந்த விருப்பமும், அதற்காக அவர்கள் கையாண்ட கல்விமுறையும், நற்பாருணர்வை இன்புறுத்திச் செல்லு நோக்கமுந் திறமும் நன்கு விளங்கு கின்றன. அவ்வருமைப்பாட்டை இத்தாழிசைகள் நன்கு புலப்படுத்தும்.

(உக) எனவாங்கு, முற்றும் அசை.

(உஉ - உச) 'படர்தல்' ஒன்று செய்யப் பலவாறுங் கருதுதல். 'சிறந்தான்' என்பதற்கு ௩ச. உரை சிறந்தது. 'பிரியா ஆறு' என்றமையால், இறந்த பின்னுர்

தலைவன் தலைவியர் பிரியாமைக்கு ஏதுவுண்டென்பது பெறுதும்.

௧௦.

(௧ - ௭) 'சிறியவன்'

என்பதற்குப் பொதுவாகக் 'குணத்தாற் சிறிய வன்' என்பது சிறப்பு. 'கொடுத்தற்கு மனஞ் சிறியன்' என நச். உரைப்பர். கொடுத்தற்கு மனஞ்சிறியானிடம் முன் நல்வினையாற் செல்வம் மேன்மேல் திரண்டிருப்பினும் இருக்கும். ஆனல், இங்கே மரங்களில் நிழல் தரும்

இலேகள் தழைத்திராமல் தீய்ந்துபோய் விடுதல் கருதுக. 'இலை தீர்த உலவையால்' என்று மேல் (கக) வருதலுங் காண்க. 'குணத்தாற் சிறிய'

னெனின், பல குணக் குறைகளால் அவன் செல்வம் விரைந்து கெட்டுச் சேர்ந்தார்க்கு நிழலின்றாகுமென்பது பெறப்படும். 'இகந்து செய்து' என்பதற்குப் பொதுவாக 'மீறி யொழுகி' யென்பது எளிய இனிய உரையாம். 'இசை கெட்டா'னென்றார், முன்னிருந்த புகழுங் கெட்டானென்பது தோன்ற. 'வேர்' என்பதற்கேற்ப 'இறுதி' கூறினார். வினைவர், காரியம் பார்ப்பவர்; என்றது செயலாளரை; இங்கு அமைச்சர்.

மூன்று தாழிசைகளிலும் முறையே 'இடைகொண்டு' 'கனி கொண்ட' 'பொருள் நோக்கி' என்பவற்றிற்கு நச். உரைக்கும் உரைத் திறம் அறிந்துகொள்ளுதற்குரியது.

(கஉ - கசு) முனிவின்றி யென்பதற்குப், பொருள்மேல் முனிவின்றி யென்றுரைப்பது சேர்மையானது. "முனிவிலராகி முயல்க." (பழமொழி-ககசு) என்பதுங் காண்க.

கo.

(ந - ரு) அறம் பொரு ளின்பம் மூன்றும் இதன் முதன்மூன்றடிகளில் வந்தன. ஒவ்வோரடியிலும் ஒவ்வொரு பொருள் முடிந்தது. இங்ஙனம் பிறிதோரடியிற் றொடராதவாறு முடிவதை 'யாப்பு' என்னும் உறுப்பாகக் கூறுவர் ஆசிரியர். (தோல். செய். எஅ). சான்றோர்க்கு அளிக்கும் அறத்தால் வெற்றியும் பொருளும் வாய்த்து இன்பமுண்டா மென்னுங் கருத்துத் தமிழகத்தின் நாகரிகத்தை வெளிப்படுத்தும். "அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" என்பது புறநானூறு (ருரு). புறம் உஎ-ன்

உரையும் இதனை விளக்கும். 'புரிபு,'' பொருந்துதல்; பல பிறவிகளிற் பொருந்துதலமர்ந்த காதலினல், இப்பிறப்பில் அதன் கூட்டமுந் தரு மென்று இயல்பின் உரைக்கலாம். காதல் பிறவிதோறும் பொருந்தி வருத லாற், 'கிழவன்' 'கிழத்தி' என்னும் உரிமைப் பெயரும் இவர்க்கு அமைந் தென்பது (தோல். களவு, உ-ன் உரை)

௩௪. கருத்து. மணிமேகலை உக உக-௬உ அடிகளும் இங்கு நினைவு கூர்க. கொல், ஐயம்; அன்றேல் அது தலைவி கூற்றாகாது போம்.

(௬ - ௯) 'துடி', உடுக்கை; அதன் வாய்போன்ற அடியென்க. 'கயர் தலை', யானைக்கன்று; கன்றுகளிற் பெரிய தலையுள்ளதென்பது பொருள்.

(௧௦ - ௧௬) 'உறாஉம்': "வளி சுழற்றுறாஅ" (அகம், ௬௧ : அ) என் பதிற் போல, இங்கே பிறவினை.

முள்வேலி வளைந்துமிருக்கும், அணுகுவாரைத் தன் முட்களா ற்றைத்தும் வதைக்கும்; அதுபோல வில் வளைந்துமிருக்கும், வழிச் செல்வ நஉ

ரைத் தன் அம்புகளாற் றைத்துங் கொல்லுமென்க. இது மெய்யும் வினையும் பற்றிய உவமம். 'நிரைத்த', வரிசைப்படக் கிடந்த; 'அறுசுனை' என்பதற்கு நச். விளக்கம் அழகானது. 'கடுந்தாம் பதிப்பு ஆங்கு' என்பதிற்

கடும்' என்பதைப் பிரித்து நச். 'சுனை' என்பதனோடு கூட்டுகின்றார். இது நேர்மையாகாது. 'பதிபு' என்பதற்கு இறந்தகாலப் பொருளும் 'ஆங்கு' என்பதற்கு இடப்பொருளும் உரைக்க வேண்டுவதுமில்லை. 'கடிதாகத் தாம் பதிகின்றபொழுது' என இருந்தவாறே உரைக்கலாம். 'கடும்' என்பது இங்கு விரைவின் பொருட்டு. இச்சொல் இங்ஙனம் வினையெச்சப் பொருளில் வருதல் "கடுந் தேறு" என்னும் பதிற்றுப்பத்தடிக்கு (எக : க) அதனுரையாசிரியர் 'கடிதாகத் தெறுதலையுடைய' என உரை யெழுதி யிருத்தலாற் கண்டுகொள்க. 'நிரம்பா நீடு அத்தம்' என்பதில், 'நிரம்பா' என்பதற்கு, 'நெறி மயக்குற்றமையால் வழிக்குரிய இயல்புகள் நிரம்பாத' என்றுரைப்பது சிறப்பு. 'சிறு நனி நீ துஞ்சி எற்பினும்,' சிறிது மிகுதி

பாக நீ உறங்கி யெழுந்திருப்பினும் எனின், நல்ல உரையாம். இதிற் 'சிறு' என்பது குறிப்பு வினையெச்சம்; வேறு ஈற்றான் வந்தது. 'ஊரன்' என்றார், வன்னெஞ்சென்றற்கு; இதனால் தலைவனுக்கு இழிவு பிறந்தது. பண்ணும் கருவி யென்னுங் கருத்திற் கையை யுணர்த்தும் 'பாணி' யென்னுஞ் சொல் தமிழ்ச் சொல்லேயாயினும், இங்கே, 'நின்பாணி நில்லா' என்பதற்கு 'நின்னளவில் நில்லா' வென உரைத்தலே பொருந்துவதாம். நின் சொல்லளவில் நில்லா வென்பது பொருள். "என் பாணி நில்நில்" (அ : ௰௪) "ஆர்த்தும் பாணியில்" (உ௰ : ௰௭) என்னும் பழைய பரிபாடலடிகளுரையில் இப்பொருள் காண்க. இழிந்த காம மயக்கில் ஆழ்ந்து கூற்றமும் மூப்பும் மறந்தொழிவார்போ லன்றி, அறிவிற் சிறியார்க்கு ஒத்த முறையிற் றேன்றுமாயினும் உண்மையில் அதனினும் மாறுபாடுடையதான உயர்ந்த காதலின்பத்தில், நீ சிறந்து, கூற்றமும் மூப்பும் உண்டென்று கருதிக், காலத்தில் அதன் பயனுகர்தலை முறையாகப் போற்றுவாயாக வென்பது இறுதியடிகளின் கருத்து.

௧௨.

(௧ - ௯) 'தேர்,' பேய்த்தேர். 'அறல்,' நீர்; 'அறுதியையுடைய நீர்' என்பர் நச். (கலி. ௯௫ : ௯). இதற்கு மணலினின்றும் பிரிந்தொழுகுதலையுடைய நீரென்று கொள்க; ஊற்று நீரும் இல்லையாயிற்றென்று வெம்மையின் மிகுதி காட்டுதற்கு 'ஊறுநீ ரடங்கலின்' என்றார்.

(௧௦ - ௧௩) 'அல்லி' யென்றது, இங்குத் தாமரை மலரின் நடுவிலுள்ள கொட்டையைச் சூழ்ந்திருக்கும் பூந்தாதுகள் (சீந். ௰: ௨௧௰). அவை சேர்ந்த அகவிதழ்களாவன கடைசி உள்ளிதழ்கள். அவை மிகு மென்மையாயும் மிகச்

செந்நிறமாயும் சிறியவாயுமிருக்குமாகலின், எல்லாந் தோன்ற, ஆய் இதழ்க ளென்பதற்கு அழகிய இதழ்களென்று நச். உரைத்தார். கறுத்தல், தன் னியல்பில் முறுகிக் காட்டுதல்; ஆவது மிகச் சிவத்தலென்க.

(கசு - கஎ) ‘ துலங்கு மான்மேல் ஊர்தி ’ யென்பதனால் அக்காலத்துக் கட்டில் அமைப்பு அறிந்து இன்புறுதற்குரியது. “ துளங்குமான் ஊர்தி ” யென்பது (கஅ : சுஅ) மணிமேகலை.

(கஅ - உக) ‘ முழங்கு

அழ'லென்றார், 'தெறு தெறு' வென ஒலித்து எரிதலின்.

(௨௨ - ௨௭) 'கடுங்குரை அருமைய காடு' என்பதிற் 'குரை' இசைநிறை; "பல்குரைத் துன்பங்கள்" (குறள், ௱௫ : ௫) என்னுமிடத்தும் பரிமேலழகர் இங்ஙனமுரைத்தார்.

'நடுங்குதல் காண்மார் நகை குறித்தனரே' யென்பது, தோழி தானே படைத்துக்கொண்டு கூறியது. "அவருறும் அல்லல் நோய் காண்கஞ் சிறிது" (குறள், புலவி, ௧) என்று இங்ஙனர் தலைவிக்கும் அவள் நகையாடல் நேர்வித்தலும் நினைவுகூர்தற்குரியது.

கரு.

(க - கூ) 'நீலத்து' என்பதில் 'அத்து' உவமச் சொல். இதனை "அன்ன பிறவும்" (தொல். உவம, கக) என்பதனாற் கொள்க. 'மா', வண்டு; கருமை நிறமுள்ளதென்பது பொருள். 'வார்', நேர்மை; "மாரி வீழ்" என்பதில் வீழ் உவமவுருபு. 'மாரி' யென்றது, சடைத்த கருமுகில். இன்னாங்கு, வருத்தம்; ஒரு சொல்; ' இனிய சொல்லி இன்னாங்குப் பெயர்ப்பது,' ஒரு

வழக்குச் சொல்.

(௧0 - ௧௧) 'பொருளல்லாற் பொருளுமுண்டோ' வென்பதைச் 'செல்வத்தினும் மதிக்கத்தக்க பிறிதொரு பொருளுமுண்டோ' வெனக் கொள்ளின் இங்குப்பெரிது பொருந்தும்; எளிதாகவுமிருக்கும். மருடல் 'மருளி' யென நின்றதென்பர் பேராசிரியர் (திருச்சிற். ௧௫௧-உரை); மருடல், வெகுடல், மீடல் என்பவை மருளி வெகுளி மீளி என நிற்குமென்பது அவர் கருத்து.

(௧௨ - ௧௫) 'காதலா ரெவன் செய்ப பொருளிலாதார்க்கு' என்பதுமோர் வழக்குச் சொல்.

(௧௬ - ௧௭) 'செம்மையின் இகந்தொரீஇப்......அறியாயோ' என்பது ஓர் அறவுரை. 'செம்மை', இங்கு முறைமை.

(௧௮ - ௧௯) கவவு, முயக்கம்; கைவிடப் பெறும் என்று பிரித்துக் கொள்க. நிலா, நிலவு என வந்தது போல, அவா 'அவவு' என வந்தது. 'குறி

கலித்தொகை

[பாலைக்

யதன் இறுதிச் சினை கெட்டுநின்ற' தென்றது (தொல். உயிர்மயங், கஉ), இறுதி யெழுத்து ஆகாரம் தன் மாத்திரை குறைந்து நின்ற தென்றற்கு.

கசு.

(க - கூ) 'சிலை' என்பது ஒரு மரத்தின் பெயர். "வில், மலை, ஓர்மரம், சிராவணமும் (நல்) சிலை" (ஒரு சொற், சகூஅ) என்பது பிங்கலந்தை. வில் அம் மரத்தாற் செய்யப்படுதலின் அப்பெயர் பெற்றது. புடை, ஒலி; 'இணைப்படை' யென்பதற்கு நச். வல்லமைப்பாடாக உரைத்தார்.

(கசு - கஎ) 'படர்ந்து அற்ற படிவத்தான்' என இருந்தவாறே உரைக்க.

(உகூ-உகூ) 'வளமையோ சொல், வைகலுஞ் செயலாகும்' என்பது வழக்குச்

'பெருகிய செல்வத்தான்' 'மையற்ற படிவத்தான்' 'மன்னிய புணர்ச்சி யான்' என்பவற்றை முறையே பொருள்வயிற் பிரிவும், ஓதற் பிரிவும், பகைவயிற் பிரிவுங் கருதிக் கூறியதாக உரைப்பின், ஆசிரியர் தொல்காப் பியர் வகுத்த பொருளிலக்கண மரபோடொத்துச் சொற்பொருட் போக் குக்கும் இணக்கமாயிருக்குமென்று கொள்க. கழிந்த நலம் திரும்பத் தரக் கூடுமோ வென்பதே இத் தாழிசைகட்கு ஒத்த பொருள். வினை யொவ் வாமை இவை அகநிலை யொத்தாழிசைகளாகலிற் கொள்க. தொல். செய், கசஉ-ன் பே. உரைவிளக்கம் இங்கு நினைவுகூர்தற்குரியது. 'புணர்ச் சியான்' என்பதற்குப் பிறர்நாட்டுப் படர்ந்து நீ பொருந்திய அந்நாட்டுச் சேர்க்கையான் என்பது உரை. அந்நாட்டை வென்று நீ அதற்கு அரச கூடினமையான் என்க.

கரு.

(க - ச) 'பாடு', படுதல்; கண்படுதலென்க. நச். அதனைத் துயிலென்றார். 'வணங்கு இறை', சிறிது வளைவாயமைந்த முன் கை; இஃதோர் அமைப் பழகு. துன்பத்தை மாற்றி உள்ளக்கிளர்ச்சி தரும் வெற்றியுடையதாகலின் 'ஆடு எழில்' என்றார். காடுங்கால் அதுவுந்தான் (ச) இயைவதோ (அ) எனச் செய்யுட்டொடர் கொண்டே இயைத்துரைக்கலாம்.

(இ - அ) 'தொல் நலம்', இயற்கை யழகென்றது இனிய உரை. 'துறந் துன்னார் துன்னி நம் காதலர் துறந்தேகும்' என்பதில் நச். வல்லமையாய்ச் சென்றிருக்கின்றார். எழிலிக்கு இன்னிசை கூறினமையால் அதனை மழை மேகமென்று கொள்க. மழை மேகங்களின் குமுற லொலியிலிருந்து தமிழ் முன்னோர் ஓர் இசை நயம் உணர்தல் அறிந்துகொள்ளுதற்குரியது. 'எழிலி இங்கு, மழை வழங்கும் ...

வி] உரை

விளக்கம்

கரு

(கூ - கஉ) 'மூனை'

யென்றமையாற் பகைப்புலஞ்

சென்று பொருள்

தடுதலும் பெறப்படும்.

(கரு - கசு) 'முதல்', தூறு; அதிலிருந்து வரும் வெப்பத்தை மாற்றித்
தருமாறு ஞாயிறு காற்றுத் தரவேண்டுமென்பது கருத்து. 'தீர்ந்து உறுக'
என இரு சொற்களாகக் கொள்க.

மழையும் வெயிலும் வளியும் தரும் பொருளென்று ஞாயிற்றைக் குறித்த
லின், அம் மூன்றுக்கும் எது அதுவாதலை முன்னோர் அறிந்திருந்தமை
பெறுதும். 'இரப்பவும், காமுறல், வாழ்த்தவும்' என வருதலால், பிறர்
பால் ஒன்று இரத்தலும் விரும்புதலும் ஒன்றுக்காக வாழ்த்தலும் முறை
யல்லவென்னும் மிக உயர்ந்த உள்ளப்பான்மை வெளிப்படும். இது சிறந்த
நாகரிகமாம்.

(கஎ-உஉ) 'தெருமரல்', எதிர்மறை; 'வறன் ஓடின்' என்பதற்கு வற்கடம் பரவினல் என்பது எளிதான இனிய உரை. 'ஓடுதல்,' விரைந்து பரவுதல்; 'வான் தரும் கற்பினள்' என்றார், நினது கற்பே மழைதரு மாகலின் அதன் பொருட்டு மழைதரு ஞாயிற்றை வேண்ட வேண்டா என்றற்கு. 'நினக்கு ஒளி கெட்டுப் பசப்பூர்தல் உளதாதல் போல, நின் கற்பின் அறமே, நின் கணவன் ஆள்வினைத் திறமாகிய வழிச்செலவில், அவற்கு இன்னுங்கு செய் யும் பகலவன் வெயிலொளியை விலக்கிற்று (என்றது, அவ் வெயிலொளி யைக் கெடுத்து ஆங்குக் குளிர்ச்சியை ஊரச் செய்யுமாகலின் நீ வருந்த வேண்டுவதின்று; பிற தெய்வந் தொழ வேண்டுவது மின்று) எனத் தோழி தலைவியை ஆற்றினளாக இறுதியடிகட்கு ஓராற்றான் அமைவுதோன்ற உரைப் பினும் ஆம். இதனல் முன்னோரது உள்ளச் செம்மையும், அவரதன் ஆற் றலை உணர்ந்தொழுகியவாறும் விளங்கும். 'அறன்,' கற்பு.

இப்பாட்டுக் கற்பின் சிறப்புக்கு நல்ல இலக்கியமாய் அமைந்துள்ளது.

கசஈ.

(க - ச) புனையவும் நுடங்கவும் உயிர்ப்பவும் என்பவை தலைவன் செய லாகக் கொள்க. தனது பிரிவால் தலைவி எவ்வளவு ஊறுகொள்வளென்று தலைவன் அளந்துணர்ந்து நெட்டுயிர்ப்புக் கொண்டமையால், அவனை 'ஊறளந்தவ' ரென்றார். 'நடை செல்லாய்' என்றது, அவன் சொல் வழியே ஒழுகுதல் செய்யாமையை. அஃது இத்துணைக்காலம் இருவென்று விதித்த சொல்.

(கூ - கஉ) 'தொகு பொரு' ளென்பதற்குத் 'திரளும் பொரு' ளென்று தன் வினையிற் பொருளுரைத்தார், தலைவனது காவற்றலைமை தோன்ற. தாம ரையின் இலை நீர்மேற் படிந்திருக்க அதன் முகை அதனை விட்டு மேற்

னைம்பி முதிர்தலின், 'இலையைவிட்டு முதிர்ந்த தாமரை முகைக்கு' என

நச். உரைத்தார்.

களவொழுக்கத்தால் இதுகாறும் முதிர்ந்து வந்த காதன்முகை இப்போது திருமணமென்னும் மலர்ச்சி கொள்வதாயிற்று.

இது கற்பு; பிரிவுகள் இக் கற்பொழுக்கத்தில் நிகழும். தலைவன் பிரிவும் அப் பிரிவின் ஆற்றாமையால் தலைவிக்கு வாழ்நாட்கேடும் இத் திருமண

மலர்ச்சியின் பின் நிகழ்தலால் அம்மலர்ச்சியே அவட்குக் கூற்றும்போலு மென்பது 'முதிர் முகையிற்குக் கூற்று ஊழ்போல்'

என்னும் உவமத்தாற் கொள்ளப்படும் பொருள். ஊழ், அலர்ச்சி.

(கரு - கக) 'வகை,' 'எழில்,' 'வனப்பு' என்னுஞ் சொற்களுக்கு நச். கூறும் உரைமுறை அறிந்து இன்புறற்பாலது. தடம் தலைவியெனவும் அதன் நீர் அவள் இளமையெனவும் முகை அவள் காமமெனவுங் கொள்க. இத்தாழிசையிற் 'பகையறு பயவினை' யெனக் காவற்றொழில் விளக்கமாகக் காட்டப்படுதலால், மேல் இரண்டு தாழிசைகளிலும் வரும் 'வல்வினை வயக்குதல்' 'தோற்றஞ்சால் தொகு பொருள்' என்பனவும் அதுவாகக் கொண்டது உரை. 'வல்வினை' 'தோற்றஞ்சால்' என்னுஞ் சொல்லாற்றல்களும் அவ்வாற்றல்கள் தோன்ற நச். திறமாக விரிக்கும் உரையழகுகளுங் காண்க.

(கஎ-உக) 'திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய மருந்துபோல்' என்பது ஒரு வழக்குச் சொல். யாக்கையின் நிலைக்கு ஏற்றபடியே மருந்தும் பயன்படுமென்றும், அதுபோற் கேட்பார் உள்ள நிலைக்கு ஏற்பத் திறந் தெரிந்து அளந்து சொல்லுஞ் சொற்கள் அவருள்ளத்திற் சென்று ஆற்றலோடு பயன்பட்டு அவரைத் திருத்தி மகிழ்விக்குமென்றும், நம்

முன்னோர்

அறிந்திருந்த நாகரிக

நுண்ணுணர்வுகள் இப்பகுதியினாற்

பெறப்படும். 'மீளி'

தலைவன் என்னும் பொருட்டு;

இச்சொல்லுக்குத் தலைமைப்

பொருளுண்மை புறப்-வெ-மாலையிற்

காண்க.

கஎ.

'சூழாதி' முன்னிலைக் கினவி;

'சென்றோர் முகப்பப் பொருளுக்

கிடவாது' என்பது ஒரு வழக்குச்

சொல்; நச். நல்ல உலகியற் பழக்கற் தோடு இதற்கு உரை விரிக்கின்றார். அது பொருள்வேட்கையுடையோனை நல்ல நெறியில் உய்க்கும். ' ஓராங்கு '; சேர. ' உளநாள்...வாழ்க்கை யென்னும் அடிகளில் உயர்ந்த காதலன்பை ஆசிரியர் மிகச் சிறந்த ஓவியமாக எழுதிக் காட்டுகின்றார். " உடன் கழிக்கில் இளமை இனிது " என்னும் ஐங்குறுநாற்று (௬௨:௫) அறிவுரை இங்கு நினைவுகூரற்பாலது. உரை விறுதியில்

' நீ மறந்தாயென்பது, யாம் உணரக்

கூறுகின்றாளிவளென்பதுபட
கின்றமையின் ஒரு
பொருளுதலிற்றாயிற்று ' என நச்.
உரைப்பது செய்ய ளில் !
நினைக்கக்காண் ' என வாகலே நினைக்
கா

கலி]

உரை விளக்கம்
கள

கஅ.

(௬ - ௬) 'முதலிற் செவ்விய நீவிய சொல்லி வயமாக்கிப் பின் முயங்கும் போதும் அச்சொற்களோடு ஒப்ப முயங்கிய அஞ்ஞான்று' என இருந்த வாறே உரைக்கலாம். 'தலைதந்து' என்பதில் "தலைவந்த இளவேனில்" (சிந். ௬: ௧௫) என்புழிப்போல உருபுமட்டும் நின்றுணர்த்து. மரபு கண்டு கொள்க. பகலவன் முனிதலால் வெஞ்சுரமாதலின், 'பகல் முனி வெஞ்சுர' மென்றார். முனிதலாவது, கடியவெம்மை காட்டுதல். 'மன்ற', அறுதியாக; என்றது தீர்ந்தபடி; தெளிவாக என்னும் பொருட்டு. "வல்லை மன்ற நீ நயந்தளித்தல்" (௫௬) என்பது புறம்.

(௭ - ௧௬) 'பகலின் விளங்கும் செம்மல்' ஒரு வழக்குச்சொல், சிறந்த தலைமைக்கு இதைவிடப் பொருத்தமான உவமை கிடைப்பது அருமை. தலைவனை எதிர்நின்று உரமாக மறுத்தமையால், தோழிக்கு அச்சம் பிறந்த தென்றார்; "உரியதாகுந் தோழிகண் உரனே" (தொல். பொருளி; ௪௫) என்பதனாற் கொள்க.

(க - சு) பயனுள நிலம்

தன்னிடத்துண்டாகும் பல உணவுவளங்களும் தன் விளையுள்களால் உலகத்தார்க்கு எடுத்துக்காட்டி அவரையுண்பிக்கு மென்று கருத்துக்கொள்க. அத்தகைய நிலத்தின் கொடைச் செயலுக்குக் காரணம் அதன் ஈர நிலைமையாம். அந்த ஈரம் அற, ஞாயிறு சினஞ்சொரிதல் கொடுமையென்க. இயற்கைப் பொருள்களை இருந்தவாறேயும் உரைத்து அங்ஙனம் உரைப்பதிலேயே கேட்பார்க்கு அறிவும் இன்பமும் பெறப்படுமாறு செய்து, அம்முகத்தால் அவரது வாழ்க்கைநெறிக்கு முதன்

மையாக ஆவதோர் அறவுரையுங் கொள்ளவைத்தல் எவ்வளவு மாட்சிமை யானது! இவையெல்லாம் பண்டைக் காலத்துச் செந்நாப் புலவர்தம் செவ் வறிவுத் திறமாம். இவ்வளவும் ' பகர்ந்து ' என்பதன் ஆற்றலாற் பிறந்தது. நல்ல இலக்கிய அழகுக்கு இத்தொடர்கள் போல்வன சிறந்த எடுத்துக்காட்டு களென்க.

வெங்கோடையிலும்
பெருங்களிற்றினந் தாங்குதல்,
மலைக்கு விறல்.

(எ - கக) என் வாழுநாள் நும் ஆகத்து அளியைப் பொருத்தெனவும், எனதிளமை நும் நெஞ்சென்னுந் தேறுநீரைப்

பொருத்தமெதனவுங் கருத்துக் கொள்க. வளி இன்ன இடத்தில் இவ்வளவு காலம் இன்ன ஆற்றலில் இருக்குமென்னும் வரை நில்லாது; அதுபோல் வாழுநாளாதலின், 'வளியி னும் வரை நில்லா வாழுநா' ளென்றார். கவிர்த நிலையாமைக்கு இது நல்ல உவமம். தமிழ்சல்லோரின் ஆழ்ந்த மெய்யுணர்வினை இது காட்டும்.

கஅ

கலித்தொகை

[பாலைக்

'இல்லத்தில் மழையுண்டு நீருண்டு நிழலுண்டு; சுரத்தில் அவையில்லை' யென்ற தலைவற்குத் தலைவி, எனக்கு இல்லத்திலிருக்கும் அவையெல்லாம் உண்மையில் மழையும் நீரு நிழலுமாகா. இல்லத்தேயாகட்டும் அல்லது சுரத்தேயாகட்டும் யாண்டும் 'நும் ஆகத்து அளியே அளி, நும் நெஞ்சென்னுந் தேறு நீர்மையே நீர், நும் தாள் நிழலே நிழல்; அவையே என் நிலையா வாழ்க்கைக்கும் இளமைக்கும் அழகுக்கும் அரண்' என்று கற்பின் பொற்புத் தோன்றக் கூறும் அழகு இத்தாழிசைகளில் நன்கெடுத்துக் காட்டப்படுகின்றது.

(உ0 - உரு) 'கணைகழிகல்லாத கல் பிறங்கு' என்றமையால், தமிழகத்தின் செறிந்த மலையடுக்குகள் பெறப்படும். 'பிணையுங் காணிரோ' என்றவின், தலைவி கடைசிவரையில் ஏற்ற விடைகள் கூறிய விரகு கண்டு மகிழ்தற்குரியது.

உ௰.

'பால்', மருப்பின் நிறத்துக்கு உவமம். பகைப் புலமாதலின் யானைப்படை, வழியைக் காவல் கொண்டு நிற்பதாயிற்று. 'பொருள் வயிற் பிரிதல் வேண்டும்' என்னுந் தொடர்க்கு நச். இடத்துக்கேற்றபடி பொருளுரைக்கும் ஆற்றலை நன்கு புலப்படுத்தியிருக்கின்றார். 'யாவோ வாயின' என்பதைப் பன்மையொருமை மயங்கிற்றாகக் கொள்ளாது, 'அவற்றுள் எவ்வகைச் சொற்கள் உண்மையிடத்தன' எனவே கொள்ளலாம். 'வாய்'

உருபன்று; உண்மையென்னும் பொருளில் வருஞ் சொல். "வாயே யாகுதல்" (மணிமே. கூ : கக) என்பதிற் காண்க. 'கிழவர்,' உரியோர். அறிவுங் குணமுமுடைய நல்லோரே உலகத்திற் பொருள் பெறுவதற்குரியராயிருந்தும், அப்பொருள் அதனைக் கருதாது நல்லவரோ அல்லது பொல்லாதவரோ எவரேயாயினும் அவரவர் பழவினைப்படியே மேலு மேலுஞ் சென்று சேருமென்று ஆசிரியர் பொருளின் இயற்கையை இதன்கண் நன்றாய் விளக்கிக் காட்டுகின்றார். சிக்கலில்லாத இத்தெளிந்த கருத்தால், பொருளுக்காக நல்லொழுக்கத்தினின்று வழுவிச் செல்ல வேண்டுவதமின்று; வழுவாது ஆன நன்மைகள் செய்துகொண்டிருந்தால் மேற்பிறப்புகளிலேனும் அதன் நலன் உண்டாகுமென்பது உணர்த்தியவாறும் என்க.

உக.

(க - அ) 'முகனும் முகனும் வேறுகுதல் பண்டும் இவ்வுலகத்தியற்கை' என இருந்தவாறே உம்மைகள் அமையலாம். 'மாந்திர்' ஒருமை. 'தாய் உயிர்' என்பதில், 'தாய்' தாவியென்னும் பொருட்டு. 'விருப்பத்தோடு உயிர் பெய்த பாவைபோல' என்பது கருத்து. நச். உரைத்ததுபோற் பிரித்துக் கூட்டவேண்டுவதின்று. இவ்வுவமை, தமிழாசிரியரின் மிகக் கூர்த்த மெய்யுணர்வினை விளங்கக் காட்டும் அரிய [illegible]

லி]

உரை

வ!ளககம

நம் நலம் நாடுநேர் பறவையின் அருந்தி இறல் கொடுக்குங்கால், அதற்கு ஏதுவாயிருக்கும் நின் பொருள்வேட்கையைப்பற்றி எதிலார் கூறுவது எவனோ' என ஒரே முடிவாகவே உரைத்துக்கொள்க. தெளிவுக்காக முயன்ற நச். உரைமுயற்சி அதற்கு மாறுவதே பயவாநின்றது.

(கூ - கஎ) திருமண நோத்து இளமை இல்லறத்தைப் பாராட்டினையே யல்லது அதற்குச் சிறிதுதானும் பிந்திய, இளமை நளர் இல்லறத்தைப் பாராட்டினையோ என்பதே தாழிசைகளின் பொருள். 'நீ நின் தலைவியின் பாற், காமச் செவ்வியை விரும்பினையேயல்லாமல் அவளோடு ஒருங்கிருந்து நடாத்தும் இல்லற விருப்பத்தை விரும்பினையல்லையே' யென்பது கருத்து. மணியன்ன இவ்வழகிய கருத்தே "காமஞ் சான்ற" (தொல். கற், ுக) என்னும் நூற்பாவிற் பெறப்படுவதாம். நச். தாம் வேறு கூறி, அதற்கு இந் நூற்பாவினை எடுத்துக் காட்டப்புகுந்தது, பொருத்தமின்றாயிற்று.

(கஅ - உஉ) 'படர்கூற' 'தொடர்கூர' என்னுஞ் சொல்லழகுகளும், அவற்றை முயற்சியின்றி இயல்பாக நேருமிடங்களில் அமைக்கும் பண்டைத் தமிழ்ச் சான்றோர் நோக்கமுந் திறமுங் கண்டுமகிழ்க.

உஉ.

(௬ - ௭) 'விலங்குகின்ற', குறுக்கிட்டுக் கிடக்கின்ற; இதனால் மலைக்கும் 'விலங்கு' என்பது ஒரு பெயர். 'உண்ணேன்' 'வாழேன்' என்பவற்றிற்கு இங்கே 'செய்யேன்' என்பது கருத்து. முன்னே 'உண்ணலும்' 'வாழலும்' என்று வந்தமையாலென்க. இங்ஙனம் வாளா செய்கைப் பொருளில் வருவது ஒரோவோரிடத்து அருகியே வரும். "வினையே செய்வது" என்னு நூற்பாவில் (வேற்றுமைமயங். ௨௧) 'அன்ன மரபின் இரண்டொடும்' என்பதனால் இது கொள்ளற்பாலது.

(௮ - ௯) 'வேள் நீர்' என்பதில் 'வேள்,' வேட்கை; வேட்கையால் நீருண்ட வென்பது. 'குடை,' உள்வளைவாகச் செய்யப்படுங் கருவி; வழிச் செல்வோர், தாம் உண்பதற்குப் பனையோலையால் உள்வளைவாகச் செய்து கொள்ளும் உண்கலத்துக்கும் அது பெயராயிற்று; ஏழைமக்கள் தாம் உண்ணு முன் வெயிலுக்கு அதனைத் தம் தலைமேற் கவித்துக்கொள்ளுதலும் உண்டு. "ஆறு சென்மாக்கள் சோறுபொதி வெண்குடை" (அகம். ௧௨௧) "இருப் பனங் குடையின் மிசையும்" (புறம். ௧௭௭) என்பவை நினைவு கூர்க. 'குடையோர்' முதலியவற்றில் 'ஓர்' ஆராய்ந்து பார் என்னும் பொருட்டு.

(௧௦ - ௧௧) குடியாக ஊரிலிருப்பவ ரென்னும் பொருளில் 'அல்குநர்' என்றார். "புன் அல்குந் துறைவ" (கலி. ௧௩௩ : ௫) என்புழிப்போல, 'தங்குதல்' என்பது இதன் பொருள்.

௨௦
கல்தம்/தாகை
பாலை

(௧௨ - ௧௩) 'குணனுணப் பட்டார்' என்றமையால், மகளிர்பால் அவர்

தம் பெண்மைக் குணனே ஆடவரால் நுகரவேண்டுவதென்னும் அழகிய கருத்து வெளிப்படும். மகளிர் தம் உருநலனுங் குணநலனால் அமைவதேயாம் என்பது "குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச் செவ்வாய்" (திருச்சிற். ௬) என்பதனால் விளக்கமாம். இக்குணநலன் அறிவான் இயன்று என்றும் அழியாத்தாய்ப் புதுமை காட்டுவதாகலின், இதனாலேயே 'புணர்ந்தாற் புணருந்தொறும் பெரும் போகமா' மென்பது. தமிழ் மேன்மக்களின் நுண்ணிய தெளிந்த அழகுணர்வுகள் இவற்றால்

ஏரியிலாய நீர் ' போல் தேங்குற்றுத் தெரிதல் கண்டுகொள்க.

உள்ளம் ஊறிநுகர்தலால் தலைவியின் பயன்படு குணங்கள் தலைவனோடு பிணிப்புண்டு தொடர்தலின், பின்னர் வேறு நிலையிற் பயன்படாமை நோக்கித் தாழிசை யுவமைகள் எழுந்தன. இதனானுங் குணனுகர்வு கொள்ளப் படும். 'குடை,' தலைவனியல்பு தலைவியின் நலனோடு பிணிப்புண்டமைக் கும், 'ஊர்,' தலைவியின் குணங்கொண்டு தலைவன் பிரிந்துவிட்ட மைக்கும், 'பூ ' அவ்வாற்றால் அவள் பொலிவழிந்தமைக்கும் உவமமாம்.

(கச - கக) 'கொலைவெங் கொள்கையொடு நாய்' என்று தலைவி தன்னைக் கூறிக்கொண்டது, தலைவனிடமிருந்து தனது நெஞ்சைப் பிரித்தல் 'தீது' என்பது கருதி. 'நின்னுங்கு', நின்னிடம்.

உரு.

' என்னுஞ் சொல் ' என்றமையாற் கனவு பொய்யாகாதென்னும் வழக்குப் பெறப்படும். 'இன் றீங் கிளவியாய்' என்பதன் நச். விளக்கம் அழகிது. 'நின் கேள்' என்றது, கிழமை

கருதி; (பொருளி. உஎ). ௬௪. கையாறு என்பதற்கு உரைக்கும் விளக்கம் சிறந்தது. 'வெஞ்சுரம் போகி அதன் நடு நின்று தான் தேடும் பொருள் முடிவுபெறும் வரையில்' என இருந்தவாறே உரைத்து இதனை வாளா பொருள்வயிற் பிரிவாகக் கொள்ளுதலே சிறப்பு. 'காத்தோம்ப வல்லுவள்கொல்லோ செய்பொருள் முற்றுமளவு என்றூர்' எனக் கிடந்தவாறே இயைப்பது ஆற்றலாயிருக்கும். 'துறந்தாரவர்', ஒரு சொல்.

உ௯.

(௪ - ௧உ) 'வடமொழிப் பெய' ரென்றது 'திருதராஷ்டிரன்' என்னும் வடமொழிப் பெயரையே எனின் எளிதாயிருக்கும். 'முழங்கு அழலை உயப்போகுவான் போல எழில்வேழம், அம் மலையழுவஞ் சூழ்ந்த புகையழலாலேயே அதர்பட மிதித்துப் புணர்ந்துபோம், அழலும் வெஞ்சுரம்' என இருந்தபடியே இயைத்துரைத்தால் உரை மிகச் சிறக்கும். 'அம் மலைப்

ரப்பைச் சூழ்ந்த புகையழலால் முன் வழியில்லாத பக்கங்களில் அவை ரிந்து வழியுண்டாக அவ்வாற்றால் அதனை மிதித்துக்கொண்டு போம்' ன்பது 'அழுவஞ்சூழ் புகையழல் அதர்பட மிதித்து' என்பதன் உரையா க் கொள்க. 'எழு' வென்பது இங்கே 'கணைய மரம்' என்னும் ஒரு ருவி. தோற்றமானது, திரட்சியானது என்பவை முறையே இவற்றின் பொருள்; பிற்காலத்தார் 'தண்டாயுதம்' என்பது இதனையே போலும். றத்திர் ஆயில், இறத்திரால்.

(கசு - கக) 'புறக்கொடை', புறங்கொடுத்தல்; என்பது புறங்காட்டிப் போதல்; முதுகு பின்காட்டித் திரும்பிப் போதல் என்க; இங்கே எழுந்து போதலென்னும் பொருட்டு; சிலப் ௫ : கசுக அடியார்க். உரை இங்கு னைவுகூர்தற்குரியது.

(கஎ - உ௦) 'சோர்ந்து அவர் வளன்' என்று பிரித்துக் கொள்க. 'ஒல் டத்து', சுருங்குமிடத்து. 'உலப்பு இலா,' தம்மிடத்துள்ளதையும் அவர்க்கு தவித் தாமும் உடன் சுருங்குதலில்லாத வென்னும் பொருட்டு. 'உலப்பு,' தாமும் உடன் கெடுதல்; அங்ஙனமாயின், "உலந்துழியுலக்கும் நெஞ்சறி துணையாவர்" (புறம். கூஉ௪ : க௪).

'கண், வளை, நுதல் என்பனவே நம்மை அலர் தூற்றுவனவா யிருக் கின்றன வென்று யாரிற் கூறுவதெவனுண்டு? எம்மினு நீ நற்கறிந்தனை' யென்று கொள்க.

உரு.

(௧ - ௧௨) மிஞிறு, ஞிமிறென்பதன் நிலைமாறல். ஆனேற்றுக் கொடியோனை இறுதியாக இருத்தியதும், அவனை மட்டும் நச். 'இறைவன்' என்றதும் அவன்றன் முழுமுதற் றலைமையைக் காட்டின. ஞாயிறும் காமனும் சாமனும் சிவபிரானும் செக்கிறத்தின் பல வேறுபாடுகட்கு உவமம். 'மேதக', மேன்மைதக வென்பதன்றிரிபு. வழங்குவார்க்கு எளிமை கருதி இங்ஙனமெல்லாம் அருளோடு ஆசிரியன்மார் சொற்களை ஆக்கிக் கொண்டனரென்க. 'இளவேனில் மேன்மை பொருந்த வந்தது' என்றலே சிறப்பு; கலி. உக-ன் தரவு இறுதியிற்போல. 'கூடியிருந்தார்க்கு' என்றொன்றுரைத்து மேன்மையை அவர்க்கேற்றுவது வலித்துரைத்தலாம்.

(௧௩ - ௧௬) 'திருமருத முன்றுறை' வையை யாற்றின்கண்ணது; மருதமரங்களோங்கிய விரிமலர்ச் சோலையும் அகன்ற மணற்றிட்டும் அமைந்த இனிய துறை. நீர் விளையாட்டு, பொழில் விளையாட்டு, மணல் விளையாட்டு முதலிய இன்ப விளையாட்டுகட்குரியது. "வருபுனல் வையை வார்மணல் அகன்றுறைத் திருமருது ஓங்கிய விரிமலர்க்காவின் நறுமலர்க் கூந்தல் குறுந்தொடி மடந்தையொடு வதுவை அயர்ந்தனை என்ப" என வரும் அகநானூற்

உ

கலித்தொகை

[பாலைக்

டிகள் (௩௬ : ௩-௧௨) இதனை நன்கு

விளக்கும். 'நகை,' கச்சுதலால் வந்த

)பயர்.

(கஎ - உ0) ' பொழுதொடு '

என்பதில் மூன்றுவதனுருபு

ஏழாவத

ேனொடு மயங்கிற்று.

(உக - உச) 'வாய்மொழித் தூது' என்றது இளவேனிற் காலத்தை ; இக்காலத்தில் வருவேன் என்று தலைவன் கூறிய மெய்ம்மொழியை யுடைய ாகலின் என்க.

உக.

(௯ - அ) 'குறை' 'அறன்' 'தீது' 'தீம்' முதலிய சொற்களுக்கு இடத்துக்கேற்றபடி நச். உரைக்கும் உரைமுறை அறிந்து இன்புறுக. 'நந்த,' தழைக்க; இச்சொல் பழைய இலக்கியங்களில், விளங்குதல், தழைத்தல் அழகு பெறுதல், மிகுதல், நிறைதல் முதலான ஆக்கக் கருத்திலேயே பெரும்பான்மையும் பயின்றுவருகின்றன. இக் கலித்தோகையிலும் பல விடங்களில் இந் நற் பொருள்களில் வரும். "பெரும்புனல் பல நந்த, நலன் நந்த, நாடு அணி நந்த, புலன் நந்த, வந்தன்று வையைப் புனல்" என்னும் அழகிய பரிபாடலடிகளுக்கு (எ: அ-ώ) உரையாசிரியர் பரிமேலழகர் இச்சொல்லின் பல்வேறு பொருள் வழக்குகளும் விளங்கும்படி, "சேரும் புனல் பலவற்றோடுங் கூடிப் பெருகுதலால், வையைப் புனல், உயிர்கட்கு நன்மை மிக, மென் புலங்கள் அழகுபெற, வன்புலங்கள் விளைய வந்தது" எனத் திறந்தோன்ற உரைத்து விளக்கினமை இங்குப் பெரிதும் நினைவுகூர்தற்குரியது. 'கழல்புகு' என்னும் பாடம் சிறந்தது. 'கழல்பு உகு' எனப் பிரிந்து பொருள் தரும். நச். வேறு சொல் வருவிக்க வேண்டுவதில்லை.

(கூ - கஉ) குயிலுக்கு இளவேனில் மகிழ்ச்சியான காலமாதலின், அஃஞான்று தலைவன் பிரிவாற்றாமையாற் பொலிவு குன்றி மகிழ்ச்சியின்றியிருந்த தலைவியை அஃது எள்ளுவதுபோற் கூறினர். 'புலம் பூத்துப் புகழ்த' லென்பது உயர்ந்த கருத்துவளமுள்ளது. கூடல் - மதுரை.

(கக - கக) முன்னும் பின்னும் பரத்தையர் கூறப்படுதலால், வெல் வேலான் குன்றுக்கும் அவர், உரையில் எடுத்துக்காட்டப்பட்டனர்.

(கள - உ0) ' தைஇய ' என்பதற்குக் கோலஞ் செய்தலையுடைய என நச். உரைப்பர். ' தையல் ' எனப் பெண்களையுணர்த்திவருஞ் சொல்லுக்கு 'கோலஞ் செயதலையுடையா ' ரென்னும் அப்பொருளே பொருந்தும்.

'நம்மையோ மறக்கட்டும்; அவர் இளவேனிற் காலங்களிற் பரத்தையருடன் விளையாடும் நகர்விளையாட்டு மலைவிளையாட்டு துறைவிளையாட டேனும் விரும்பி வரலாகாதா ?' எனத் தலைவி வருந்திக் கூறியதாகத்

(உக - உசு) 'நாமில்லாப் புலம்பாயின்......கலங்குவன் பெரிது' என்பது தலைவன் நினைவு. 'கடுந் திண் தேர்' என்பதிற் 'கடுமை' விரைவுக்கு; "பாய் திண்தேர்" (கலி. ௬௧:௧எ) என்பது நினைவு கூர்க.

உஎ. (௧ - ௧௧) 'ஏனையிடங்களிலுள்ள

சினைப்பூக்களையும் சுனைப்பூக்களையும் நீங்கள் நாடிச் சென்று கொயல்வேண்டாம்; நீங்களிருக்குமிடந் தாழ்ந்து நாங்களே இங்கு நயந்து கொடுப்போம் என்பனபோல், தம்மைத் தொடுத்துப் புனையும் மாதர்கட்குக் கமழ் கண்ணிகள் திரட்சியுறத் தாழ்ந்து துறை தொறுந் துறைதொறும் அழகுபெற ' என இருந்தபடியே உரைப்பது நச். கருத்துகட்கும் மாறில்லை; மாட்சிமையாகவுமிருக்கும். ' கண்ணிகள் தாழ்ந்த துறைதுறை கவின்பெற ' எனக் கொள்க. ' கண்ணி ' கூறினமையான் ஆவையுள்ள

மரங்கள் தாமே பெறப்படும். மேலும், "பிறங்கிணர்த் துருத்தி" (கலி, ௬௰:௧௬) யென மரமின்றி இணர்மட்டுங் கூறப்படுதல் காண்க. 'கண்ணி', இங்கே பூங்கொத்துகள்; 'திரட்சியுற' வென்னுங் கருத்துட் பூங்கொத்துகட்குக் கூறுதலே சிறக்கும். 'சினையவும்' 'சுனையவும்' என்னும் அமைப்பழகை நச். எப்படியோ மனம் வந்து சிதைக்கின்றார்; அஃது அவர்க்கு நன்றாகாது. 'நயந்து தாமே தம்மைக் கொடுப்பபோல் தாழ்ந்த அழகுபெற' வென்க. தாமும் பாடல்சால் சிறப்பினவேயென்பது குறிப்பு

அறலுக்குக் கதுப்பும் துவர்மணலுக்குத் தொய்யகமும் உவமம்.

(கஉ - கரு) 'மதலை', பற்றுக்கோடு.

(கஈ- கக) 'பாயல் நோய்', துயில் தொடர்பான நோய்; என்றது துயிலாமையான் ஆகும் நோய்.

இந்நேரத்துந் தலைவர் நினையாராயின், பின் நமக்கு அவர் செய்யும் அளி என்பதுதான் என்னையோவென்பது தாழிசைகளின் கருத்து. 'அளி', அன்ட

(க - க.) 'கிடக்கை' யென்றது, நிலையை; "கேள்விக் கிடக்கையின்"
(சிலப். ரு:அக) என்பதிற்போல.
தனது குடிக்கு மகவீன்று அதனால்
தன்கண் எழில் குலைந்தவள் தனது புனிறு
தீர்ந்து மீண்டும் புதுநலம்
பெறுகின், நிலைமைபோலக், குடிகட்கு
உணவுப்பொருள்கள் விளைந்து
கொடுத்து அ, னல் தனது பசுமைச்
சாயல் நிலகுலைந்த ஞாலம் தனது
புனிறு தீர்ந்து மீன்

டும் இளவேனிற் புதுநலம் எழுச்சிபெற என்பது. உவமச் சிறப்புக்கு இ
புறக. இளவேனிற் பருவம் நிலத்தின் எழில் காட்டுதலும் பனிப்பருவ
ஈன்றவள் கிடக்கைபோல் அவ்வெழில்
குன்றிக் காட்டுதலுங் கருதுக. 'வலை
யவர்'. சில்வலையவிடும் பரதவர்:
இன்னோரை ஆடல் முதலிய துறை புற

நரியராகப் பதிற்றுப்பத்துரையுங்
(ஒஎ.கூ) கூறுதல் காண்க. மாவின்
மிக இளைய தளிர்
வெண்ணிறமாகவேயிருத்தலின்,
அதன்மே லுதிரும் வெண்ணிறத்
தாதுகள் விளங்கித்
தெரியமாட்டாவென்று கருதிச் '
சிறிது முற்றின தளிரின்மேலே'
யென்று நச். விழிப்பாய் உரைத்தது
அறிந்து

கிழற்பாலது.

முன்னமே துறந்தாரானமையின் அச்சொல்லுக்கு 'மறந்தா' ரென்றார்.

கொண்ட ', பயனிலையுவமத்துக்குச் சிறுபான்மை வருமென்பது போரா ?ரியர் கருத்து (உவம, சச-உரை).

(கஅ - உக) 'வடு நீங்கு கிளவி' யென்னும் தமிழ்வழக்கு முன்னோர் ாட்சிமை காட்டும். 'வலிப்பென்', துணிவேன்; 'நெடு நிலா வாய்விட்ட' ான்றியைக்க ; வாய் விட்ட: வாய் விடுக்க, அலர்த்த.

(உரு - உகு) 'பொருட்பிணி,' பொருட்டொடர்பு; பிணித்துக் கொண் _மையின் வந்த பெயர்.

உகூ.

(க - ச) 'தாது,' தேன்; "நுண்தாது உறைக்கும்" (பட். : கருஉ) என்பதிற் போல.

(ரு - அ) 'தொழுவை', மடு.

(க -கஉ) 'பாணன்,' இராப்பொழுதின் நடுப் பகுதி; நள்ளிரா.

(கரு - கசு) ' உயர்ந்தவன்,' காமவின்பத்துக்கென்க. ' இணர்த் துருத்தி' யென்றமையாற் பொழில் கொள்க.

கூறுவாருளராயின், நமக்காக வாராணாயினும் நம்மை மறந்து, பரத்தை யருடனேனும் புனலும் நகரும் பொழிலும் விளையாடியமைவானென வருந்தியது, தாழிசைக் கருத்தென்க. இதனைப் "பதியிகந்து நுகர்தலும்" (கற்பி, ருய) என்பதனாற் கொள்க.

தலைவன் காமக்கிழத்தியரோடு பதியிகந்து நுகர்தலே பெரும்பான்மை என்னும் உரை. அதற்கு இப் பாட்டுகள் போல்வன இலக்கியமாம்.

௯௦.

(க - அ) 'ஈங்கை,' இதனை 'இண்டைக் கொடி' யெனவுங் கூறுப. அடர்ந்து புதலாயிருக்கும்; கொடி வெண்ணிறமாயிருக்கும்; "வெண்கொடி ஈங்கைப் பைம்புதல்" என்பது (சகு : கு) ஐங்குறுநூறு. 'வாடு' ஆகுபெயர். 'புதி தீனக் கலக்குறாஉம் பொழுது புணர்ந்தவருரைத்தது' என முடிப்பின் சிறக்கும். பனியும் வாடையும் இறந்துபாடு கூட்ட, நம்மை மேலுங் கலக்கி அவ்விறந்துபாட்டை விளைவித்துவிடும் இளவேனிற்

பொழுதென்பது கருத்து. பனி பின்பனி

யெனவும், வாடை முன்பனிக்

காலத்து வாடையெனவும் நச். உரைத்தார். ஆகவே, பின்பனிப் பருவத் துக்கு மேல் நின்ற முன்பனிப் பருவத்து வாடை யென்பதே 'மேனின்ற'

வென்பதன் பொருளாகக் கொள்க.

'கூர்ந்த', வளைந்த. நிலவின் கதிர்கள் உணவுப் பொருள்களின் விளைவுக்குக் காரணமாயிருக்குமென்பது கருத் திருத்துதற்குரியது.

(௧௧ - ௧௬) 'தாள்,' முயற்சி; 'துவற்றல்', தூவல்; "துவலை துவற்ற வின்" (மலைபடு. ௩௬௩) காண்க.

. . தாழிசைகள் தலைவன் பகைவயிற் பிரிவை யுணர்த்தின. தலைவன் வரும் இளவேனிற் காலம் வரையில், இடையேயுள்ள இவ் வாடையும் சின் மழையும் கடும் பனியும் நம்மை உயிர் வாழவிடுமோ எனத் தலைவி கூறியவா றென்க. தலைவனது வெற்றியழகைத் தலைவி நுகரவிரும்பினமை தெரித லின், ஆடவரின் வெற்றி யுள்ளத்துக்கும் மகளிரின் பெண்மையுணர்வுக்கும் உள்ள அவாவிய தொடர்பு நன்கு விளங்கும். இதனானன்றே எம்மொழி யிலக்கியங்களும் போரையுங் காதலையுமே பொருளாகக் கொண்டன வென் பது. இவ்விரண்டும் முறையே மலப் போரின் சார்பாகவும் இறைவன் நேயத்தின் சார்பாகவும் உலகியலில் வெளிப்படுவன வெனவுங் கூறுப.

(உக - உடு) 'சொல்லிய பொய்யாதலன்றி முன்னமே புகுதந்தா' ரென் பதே இயல்பானது. குறித்த பருவத்துக்கு அணித்தாகச் சற்றுமுன் வந்தமையின், 'சொல்லிய பொய்யன்றி' யென்றார். 'உருவு வெளிப்படு தலின் இவனென்ரு' னென்று உரையில் வந்தது நுட்பமானது. இதனல் தலைவன் தலைவியரின் திண்மையுணர்வுகளும் நன்கு வெளிப்படும்.

நக

(க-டு) 'எஃகு இடை தொட்ட' என்றமையால், மிகப் பழைய காலத்தி லிருந்தே மகளிர் தமது கூந்தல் நேரொக்க இருக்கும்பொருட்டும், கடை குழன்று வளரும்பொருட்டும் நுனிமயிர் கத்தரிக்கும் வழக்கமுண்டென் பது பெறுதும். 'இடை' யென்றது, இடைக்காலத்தை. கூந்தலைப் பலவாறும் போற்றி மகிழு நாகரிக முறைகள் இந்நூலிற் பலபடியாக விளக்கப்பட்டிருக்கின்றன. துவர் மணலது என முடித்து மேல் 'அது' வென்பதை 'அ' என்னும் சுட்டுப் பொருட்டாகக் கொண்டு 'அவ் ஐதாக நெறித்தன்ன அறலவிர் நீளம்பால்' என இருந்தவாறே இயைத்துக்கொள்க. அலரும் பூவும் வெறிகொள.

(கூ-கரு) 'நகை,' ஒளி. 'நகை', பொன்; ஒருவர்க்கு ஒன்று கொடுத்த
லென்றூற் பொன் கொடுத்தலென்னுந் தமிழ்நாட்டுச் செழிப்பு நிலையிலிருந்த
இதற்கு இப்பெயர் வந்தது. 'வெறிகொள, அணிபெறத் தளிர் முதலியவற்

D

டன்

கலித்தொகை

[பாலைக்

ிருடு வரும் இளவேனில்! எம்போல நயந்தார்க்கோ நல்லை' என இருந்த
படியே தொடர்ந்து, 'வரும்' என இடையே ஒருசொல் கொடுத்து முடிக்க.

அணிபெறல் இளவேனிற் பருவமெனக்

கொள்க; இது சிறக்கும். நடக்கம்,

டத்தி.

(கஅ - கக)

'எயிறேய்க்கு...கமழ்குரற்கு ,

என்பது தலைவன் சொல்லி விட்ட

சொல்லாகக்கொண்டு அதனை நமக்குச்

சொல்லுந் தூது வந்தது என்

றனாகக் கொள்க. எனவே, 'காதலர் தூது என்னுந் தூது' என இயல்பாகக் கூட்டலா மென்பது. நாம் துயராறு இனவியோடு அதனை வரவேற்று

விருந்து செய்வோ மென்பது இறுதியடியின் கருத்தாகக் கொள்வது நல்லது.

௩௨

(௧ - ௪) 'வயங்கல்', பளிங்கு. 'உண்கண்' என்பதற்கு 'மையுண்கண்' என உரைகளில் உரைக்கப்படுவதினுங் 'கவருங் கண்' என உரைப்பது இன்னுஞ் சிறக்கும்; கண்டாருள்ளத்தைக் கவருங் கண்கள் என்பது கருத்து. ஏனையெல்லாவற்றினுங் கண்கட்கே அவ்வியல்பு சிறத்தலி னென்க.

(௧௦ - ௧௫) 'உறழ' 'என'

என்னும் உருபுகள் உருவுவமத்தின்கண் வருதல் சிறுவரவின. 'எள்ளி முனிய' எனவே கொள்க. அங்ஙனங் கொண்டு 'போலும்' இரண்டையுமே வினையாக வைத்துரைப்பின் இயல்பா யிருக்கும்.

(உஉ - உரு) 'நோதக' வென்பது 'நோவுதக' வென உகரம் பெறாமல் வந்தது.

(உசு - ௩௬) 'பிணி,' பின்னல். 'துனை,' துனைதலை ;

(௪ - ௭) 'ஏமுற', உயிர்வாழ; 'சின்னீர்' என்றது நீர்க்கால்களை. 'இறுதி' யென்பதற்கு நச். உரைத்த உரை மிகச் சிறந்தது. 'பெயர்த் தாற்றுதல்', திருப்பிச் செய்தல். 'பீடுடையாள' ரென்பதை ஒரு சொல்லாகவே கொள்க. நச். அதனைச் சிதைத்துரைத்தமையாற் பெரும்பய னொன்றுமில்லை.

(௮-௧௧) மரம் பாவத்திற் கஞ்சிக் கவின் வாடிற்றென்பதினும் பார்க்கக், கரி பொய்த்தானது கொடுமை அவன் நின்ற மரத்தையுஞ் சார அதனால் அது கவின் வாடிற்றென்றுரைப்பின் இயல்பாயிருக்கும். 'பொத்தி',

மூன் டெரிந்து.

(கட - கரு) 'சிதர்', வண்டு; பூந்தாதுகளைச் சிதர்த்தலால் வந்த பெயர்.

(கசு - கக) 'கொளை', கோட்பாடு; ஐ, கொலை யென்பதிற்போல ஒரு தொழிற்பெயர் விகுதி. "கொளை கடை அந்தணிர்" (க : ச) என முன் னும் வந்தது.

'கரி பொய்த்தான்,' 'முறை தவர்ந்த மன்னவன்,' 'இளையழிய வாழ்ப

வன்' என்பது பிரிந்த தலைமகனுக்கும் ஒக்கும்; களவில் தோழி சான்றாகப் பிரியே னென்றவன் அது பொய்த்தமையானும், இளமைச் செவ்வி கருதாது பிரிந்தமையானும், தலைவி வருந்தத் தலைவன் தனது செயலின் இன்புறுத லானுமென்க.

(உ0 - உச) 'பண்ணிய மா' ஆயத்தஞ் செய்யப்பட்ட குதிரை. "நுகம் பூட்டிப் புரவிபண்ணித் தேர்ப்பண் ணமைத்து" என்பது (உ : கக) சிந்தாமணி. இங்கே, தேரிற் பூட்டி முன்னமே ஆயத்தஞ் செய்யப்பட்டிருந்த எனக்கொள்க. 'கண்ணுறு பூசல் கைகளைந் தாங்கு', ஒரு வழக்குமொழி. 'பூசல்', துன்பம். "களையாப் பூசல்" (பதிற். சச : கஉ) என்பதிற்போல.

(க-அ) 'படி,' படிக்கட்டளை;
அது, மேம்பாடு கருதி மனமுவந்து எற்
பாடு செய்யும் உணவுத் திட்டம்
முதலாயின. 'தாய', பரந்த; 'மணி',
பளிங்கு.

(கூ - கஉ) 'நிலா,'
எச்சப்பொருட்டு. 'தாதுண்ணும்
பொழுதன்றோ நமக்கவர்
வருதுமென்றுரைத்தது' என்க.

(கரு - கசு) தலைவி கூற்றாதலின், '
மகிழ்துணை,' பரத்தையரை யுணர்த்
திற்று.

தலைவன் வினைமேற் செல்லுங்காற்

கிழத்தி, 'வலனுக வினை' யென்று
வாழ்த்தி வணங்கி
வழிவிடுவதென்பது, தலைவன் செயலில்
தலைவிக்கு உள்ள
கருத்தொருமையையும் அன்பையும்
நன்கு காட்டும். அன்பில் அளைந்து
வரும் அச்சொற்கள். தமது பயனை
உறுதியாய்க் கூட்டுவிக்கு மென்பதில்
அவற்கும் அவளுக்குமிருந்த
நம்பிக்கையும் இதனால் நன்கு
விளங்குமென்க.

(கஎ - உ0) 'நிலன்', ஆகுபெயர்.
. 'புலன் நாவிற் பிறந்த சொற் புதி
துண்ணும்பொழுது' என்பது,
பண்டைக் காலத்துத் தமிழ்ப்

பெருமக்கள், புலவர் பெருமக்களின் அறிவிலும் அன்பிலும் அருளிலுந் தோய்ந்தெழுந்த அழகிய பாட்டுகளின் அரும்பொருள்களும் நயங்களுங் கேட்டு நுகர்தலைக், கடமையோடு ஓர் இன்பச் செயலாக விரும்பி மேற்கொண்டிருந்தன ரென் பதும், அதற்காக இளவேனிற் காலத்தில் மதுரை முதலான திருப்பதிகளில் விழாப்பேரவைகள் கூட்டிக் கொண்டாட்டுகள் அயர்ந்து வந்தனரென்பதும் விளக்கும். ' புதிது ', பாட்டுக்களின் புதுமை; என்றது,

அச் சான்றோர் உறு
கலித்தொகை

களாற் புதிது புதிதாகக்
கண்டுணரப்பட்டு அறிவுக்கு

விருந்தாயுள்ள வியத் தற்குரிய கருத்துகளென்க.

(உ௦ - உ௫) 'உயிர்ப்பாகி', நெட்டுயிர்ப்பெறிந்து; வருந்தி யென்க. வருத்த மிகுதியாற் களைதோன்றுதலின், நச். அச்சொல்லுக்கு 'இளைப்பாறு தலாகி' யென்றுரைத்தார். இயை, இயைதலை; பொருப்பன் வாய்மை கேள்வி சான்றது. 'காதலர்' என்னும் வினைமுதல் வேறிருத்தலால், 'பொருப்பன்', பாண்டிய னெனவே உரைக்கற்பாற்று.

(க - கக) வெண்கடம்பு, நம்பி மூத்தபிரான் வெண்ணிற உடம்புக்கும், அக்கடம்பின் கிளைகளில் மாலைபோல் தங்கிநிற்கும் பசிய மயில்கள் அவன் மார்பின் பசிய துழாய்மாலைக்குங் கொள்க. 'சிரவாய்ப் பெருந்துறை கவின் பெற வேனில் எதிர்கொள்ளுஞ் செவ்வியும் வந்தன்று' என்க. சிர வாய் என்பதற்குப் பெருந்துறை, வினைமுதல். பாடுமுன் விரல்களாற்றடவிக் குரல் பொருந்த ஆராய்ந்துகொள்ளப்பட்ட கரம்பென்றற்கு 'வடிநரம்' பென்றார்.

வடித்தலாவது, ஆராய்தல். இசைச் செயல்கள் எட்டனுள் 'வடித்த' லென்பதும் ஒன்றெனவும், அது, 'சுட்டுவிரலும் பெரு விரலுங் கூட்டி நரம்பை அகமும் புறமும் ஆராய்த' லெனவும் சிலப்பதிகாரத்திலும் அதனுரையிலும் (கானல்வ. கஉ-ரு) வருதல் இங்கு நினைவுகூர்தற்குரியது வண்டொடு சுரும்பை யாழாகவும், தும்பியை விறலியாகவும், தேனினங்களை வீணை வாச்சியங்களாகவுங் கொண்டு ஆசிரியர் இங்கே ஓர் இசையரங்கு அமைத்தமை அறிந்து மகிழ்க.

அலர்தல், புன்னகை கொள்ளுதல்போல அங்ஙனங் கொள்ளுதலே விளிப்பபோன்றது. ‘குழவி’, இளமைக்கு “கொள்ளவும் அமையும்” (மரபி, உசு) என்னும் உம்மையாற் கொள்க ‘செவ்வி’, நல்ல நேரம்.

(கஉ - கங) ‘சாஅய்ச் சாஅய்’ என்பதன் உரையில் ‘ஒழுக’ வெல் றது, சிறிது சிறிதாக என்றற்கு; ‘தொடர்பாக’ என்பது பொருள்;

(கச - கரு) ‘வெய்ய’, விரைவாக.

(கசு - கஎ) ‘வரல் நசைஇ’ யெனக்கொண்டு, வருதலை விரும்புதலா என உரைப்பதே உரை. “வரனசைஇ இன்னுமுளேன்” (குறள், கஉஎ : க என்றார் பிறரும். இதன் கண்ணும் எச்சம் காரணப்பொருளில் வந்தது ‘இடை’, இடமென்னும் பொருட்டாதலின், எல்லாம் என்றார். காதலர்க் நெஞ்சு ஆகத்தின்கண் விரையுமாகலின் அங்ஙனங் கூறினரென்று கொள்க

மைகாம 2.

குறிஞ்சிக்கலி

௲

சிறந்தானென்று காட்டுதற்குத் 'தொடைமாண்ட'

என்றார். "புரவலன்போலுந் தோற்றம் உறழ்கொள" என்றார் பிறரும் (அகம். கூஉ). சேயேன் மன்' என்பது முன்பின் அறியாமை காட்டிற்று. அங்ஙனம் அறியாதேனை யானும் அவன் நோய்க்குத் துயருழப்பே னென்றான்,

முன் கூட்டமுடைய தலைவி இன்னாத் துயருழந்து காட்டுமென்றற்கு. தலைவிக்கு இதனால் அருளென்னும் மெய்ப்பாடு பிறந்தது. முதலில் இம் மெய்ப்பாடு தோன்றத் தோழி உரைத்துக்கொண்டமை, பின் தனது படைத்துமொழி கிளவியால் தலைவிக்கு நாண்மிக்கு ஊறுநேராமைப் பொருட்டென்க. தோழிக்கு இவ் வறிவுத்திறன் பெரிதுமுண்டு. 'கண் நின்று,' இது சொல்தொக உருபு நின்ற மரபு; முன்னும் வந்தது (கலி. ௧௧ : ௪). பெண், பெண்மை. கிளிகள் திரள் திரளாய் வருதலால் 'இனக்கிளி' என்றார். 'கடிந்து' என்பதற்கு நச். 'விழாமல் ஓட்டி' யென்றது, நல்ல உரை. கிளிக்கு ஊறில்லாதபடி மகளிர் ஓட்டுவரென்னும் அருட்டன்மை பெறப்பட்டது. ஊக்கி, ஊக்குவாயாக; முன்னிலைக் கிளவியில் இகரம் இங்ஙனம்

ககரம்பெற்று எவற்பொருண்மையில் வருவது சிறுபான்மையாகும்; ஆட்டு வாயாக என்பது பொருள். "ஊசல் கடுவன் ஊக்குவது" (மணிமே. ௧௧: ௭௩-௪) என்பது காண்க. பொய்யாக வீழ்க்தே னென்றமையால் அஃது அறமன்றாயினும் அமைவதாயிற்று. 'செத்து' கருதியென்னும் பொருட்டாதல், "புதுமுகை ஊன் செத்து" (மலைபடு. ௧௪௧) என்பத னுரையாலும் பெறப்படும். 'செல்கெனக் கூறிவிடும் பண்பின் அங்க ணுடையனவன்' எனத் தலைவனது நல்லியல்பையும் தோழி விழிப்பாய்க் கூறினள், தலைவி அவன்பால் ஏதம் ஐயுறவு கொண்டு வருந்தாமைப் பொருட்டு. தோழியின் இப்படைத்துமொழி கிளவிகளால், தலைவி இங்ங னமே தன் தலைவன்பால் முன் நடந்துகொண்ட மறை அவள் நாணி நிற்றலாற் புலப்படுமாகலின், அதுவே இதன் பயன் என்பது. இது போல் வன 'நாணநாட்டம்' என்க.

உ

(௧-௧) 'இமைய வில்' என்பதற்கு நச். உரைத்த உரை இயற்கைப் பொருளறிவோடு கூடியதேயாயினும், அஃது ஆசிரியர் கருத்தன்று. 'ஐயிரு தலையின் அரக்கர் கோமான்' என இயற்கை நிலைக்கு மாறான தொன்றும் அது தழுவிய கதையும் மேல்வருதலின் என்க. ஆகவே ஆசிரியர், ஓர் உரு வகக் கதையையே இங்கெடுத்துக்காட்டுங் குறிப்பினராவரெனக் கொண்டு

௫௦

கலித்தொகை

[குறிஞ்சிக்

அதற்கேற்ப உரைத்து விளக்குதலே பொருந்தும். 'தொடி', வீரவளை; தோட்பக்கம் அணியப்பெறுவது. 'உறுபுலி', உள்ளத்தின் மிகுதியை யுடைய புலி. 'விடரகம்', மலையின் பிளவிடங்கள். 'கோடு புய்க்கல்லாது உழத்தல்,' கறுவெண்ணத்தால் அவ்வேங்கையைக் கீழ்த்தள்ளி யல்லது பெயர மனமில்லாமையின் என்க.

(௧0 - ௧௧) 'இடை', இடம். 'புல்லென்றான்', புன்மை யெனப் பட்டான்; பொலி வழிந்தனன் என்பது கருத்து; இங்கு வினைப்பெயர். 'அக்கவின் தீராமற் காப்பதோர் திற'னுவது, வரைந்து கோடல். மேல், தாழிசைகளில் வருதலும் அது. எனவே, நச். 'பொருளென்றது ஆகுபெயர்' என்று மூன்றாந் தாழிசை உரை யிறுதியிற் கூறினரென்க.

(௧௪ - ௧எ) 'அவ்வணி தெருளாமற் காப்பதோர் திறன்' என்பதற்கு அவ்வழகை நின் கூட்டத்தாலானதெனப் பிறர் தெரிந்துகொள்ளாதபடி காப்பதொரு திறன் என்று உரைத்துக்கொள்க.

(௧அ - உ௧) 'மறம் திருந்தார்' என்று நச். இடத்துக்கேற்றபடி வல்லமையாய்ப் பிரித்துரைத்தார். கான்

முழுதும் செய்யவேண்டிய வேலையை அன்று காலையிலேயே இன்னின்னபடி செய்யவேண்டும் என்று வகை தொகையாக ஒழுங்குபடுத்திக்கொண்டு பின் பணிமேற் சேறல் நல்ல ஆக்கந் தருமாகலின், 'திறஞ் சேர்ந்தான் ஆக்கம்போல்' என்றார். அங்ஙனம் ஒழுங்குபடுத்தும் எண்ணத்தை என்றும் வைகறை நேரத்திற் கொள்வது நல்லதெனப் பொதுவாகவுங் கொள்க. 'திறனறிந்து தீதின்றிவந்த பொருள்' (எசு : ச) என்பது திருக்குறள்.

தாழிசைகளின் முதலுவமைகள் மூன்றும் பொலிவழிதற்கும் பயனின்மைக்கும் வந்தன. ஏதற்கும் அழகும் கிளர்ச்சியும் ஆக்கமும் உண்டாதல் பொதுவாக வைகறை நேரத்திற் சிறத்தலின், மூன்றிடங்களிலும் வைகறை கூறப்பட்டது.

(உ௨ - உசு) 'விரிவிடம்' என்பதில் இடம் காலங்குறித்தது. இடப் பொருள் காலத்தொடு மயங்கிற்று என்பர் பிறரும் (சிலப். ச : கக ; அடி யார்க்குநல். உரை) வேங்கைமரம் குறிப்பிட்ட நல்ல நாளில் மலருமாதலின், அந்நன்னாளில்

தலைவன் வரைந்து கொள்வதற்கு ஏற்பாடு நடைபெறும்.

குறித்த நன்னாளில் மலர்ந்து ஒரு கோள்நூல்வல்லான்போற் றிகழ்தலால், வேங்கையைக் 'கணி' யெனவுங் கூறுப. "பன்னாள் நின்றவிடத்துங் கணி வேங்கை நன்னாளே நாடி மலர்தலால்" (பழமொ. கஉ௰), " மன்ற வேங்கை மணநாட் பூத்த " (அகநா. உ) என்பவை இங்கு நினைவு கூரற்பாலன.

கவி]

உரை

விளக்கம்

நடு

ந

(௫ - ௬) 'கடும் புனல்' : மிக்க புனல். 'தாமரைக் கண்' என்றார், புணர்ச்சி நேருங் குறிப்புத் தோன்ற. "கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்" (சிலப். ௫: ௨௩௭) "மாமலர் நெடுங்கண் மாதவி" (சிலப். ௩:௧௭௰) என்பவற்றின் உரைகள் காண்க. கொடிப் பொழுதில் ஓடிப் பாய்தலால், மார்பில் மாலை தயங்குவதாயிற்று. காமக் குறிப்போவென ஐயுறாமைப் பொருட்டு 'அருளினை' யென்றார். இது பயன் குறித்ததன்றாகலின், உதவியாயிற்று. 'வருமுலை' யென்றது, முன்பு புணராமை தோன்றநின்றது. 'புணர்ந்து ஆரா மென்முலை" (௪௰ : ௩௩) என மேல்வருதலும் நினைவுகூர்க.

'அருமழை' யென்றவிடத்து நச். நுட்பமாய் உரைத்தார். தருகிற்கும் என்பதிற் 'கில்' ஓர் இடைநிலை; ஆற்றற் பொருளது.

(௭ - ௧௦) கால்வைத்து ஏறுதற்கு ஏற்றபடி மூங்கிலில் அதன் கணுக்களை அளவாய்த் தறித்திருப்பாராகலின் 'ஏணி இழைத்திருக்கும்' என்றார். இதற்குக் 'கண்ணேணி' என்பது பெயர். 'கண்', கணு. மேல், 'விண்தோய் கல் நாடனும்' 'மைதவழ் வெற்பன்' 'சேயுயர் வெற்பனும்' என வருதலால், 'கான் அகல் நாடன் மகன்' என்பதற்கு முல்லை நிலத்துத் தலைவனாகப் பொருளுரையாமல் 'காடு

அகன்ற மலை நாட்டையுடையவன் மகன்' என உரைத்துக்கொள்க. 'கான்', மலைக்கானம்; காடுகளும் மலைகளும் நாட் டின் செழுமைக்கு அடையாளமாகலின், அவ் அடைமொழிகள் தலைவன் செழுமையை விளக்குமெனக் கொள்க.

(கக - கஎ) மலை நிலங்களில் சிலச்சில சிறுசிறு குடியிருப்புகள் சேர்ந் தது ஓர் ஊராகக் கருதப்படுமாகலின், 'சிறு குடியீரே, சிறு குடியீரே' யெனப்பட்டது. அடுக்குப் பன்மைக்கு. 'கிழங்கு,' கீழ் வீழ்தலால் வந்த பெயர். 'தொடா',

தொடுக்கமாட்டார்.

(கஔ - கஅ) தொலைவிலிருந்து காண்பார்க்கு மலை நீல நிறமாகத் தோன்றுமாகலின், 'இருஞ் சிலம்பின்' என்பதற்கு நச். கரிய மலையிடத்து என உரைத்தார். 'அமை' உவமையாக வருதலின், அதுபோல் திண்மை யுங் கொள்ளப்படாமைக்கு 'மென்றோள்' எனப்பட்டது. திரண்டு நீண் டிருத்தலாற் 'கோல்' அம்புக்குப் பெயர்.

(உ0 - உக) 'திறப்பட' வென்பதை நற்றாய்க்கே கொள்க. நச். உரை வலிந்துரை. நற்றாய்

கூறப்பட்டமையால், இடையே, செவிலி நற் ருய்க்கு அறத்தொடு நின்றமையுந் தானே அடங்கும்.

(உஉ - உரு) 'ஒரு பகல்,' ஒரு முகூர்த்த மென்ருர் நச். ; இஞ்ஞான் ரும் இதனை வழங்கலாம். தலை சாய்த்தமை காரணத்தால்.

(உசு - உகூ) 'வரையுறை தெய்வ' மென்றது முருகனை ; இதுவே உரை சான்றது. (பரிபா.

உக.) அடிகள் இங்கு நினைவு கூறற்பாலன.

(கூ0 - கூஉ) தம்மைக்கேளாது தம்மகளொடு தலைவன் களவிலொழுகிப் பின் தம் எதிரேயும் அவளை முறையென்று வரைதலாற் சுற்றத்தார்க்கு நாண் தாங்குதல் அரிது எனவும், அங்ஙனம் அரிய தொன்றனைத் தாங்குவார் பெரிய தவமுடையவரே யாவரெனவுங் கருதித் 'தம் நாண் வார் என்னோற்றனர்கொல்' என்றான்.

தாம் தாங்கு

(கூகூ - கூசு) நனவு, இங்கே வெளியே யென்னும்பொருட்டு,

கனவு, அகத்ததாகலின்.
வரைந்துகொண்டபின் தலைவிக்கு உரிமை மிகுதலின், நச்- தமதுரையில் 'தன் வயின் உரிமையும் அவன் வயிற் பரத்தையுந் தோன் றக் கூறினுள்' என்ருர். பரத்தை, பரத்தைமை; இங்கே வரைவிலா 'அயல்மை' யென்னும்பொருட்டு. கனவிற் புணர்ச்சி கடிதல் இருவர்க்கும் உரிய நிகழ்ச்சியாயிருந்தும் 'கடிது' மென்று தலைவி தானே உரிமையுடன் கூறி னமையால் அவட்கு உரிமையும் அவற்கு அயன்மையுந் தோன்றினவென்பது.

(௬௭ - ௪0) 'பழங்கேண்மை',

குறியீட்டு மொழி; இவ்வழகிய சொல் இஞ்ஞான்றும் வழங்குதற்குரியது. ' மன் கொல் ஓ ' என ஒன்று நின்ற விடத்து மற்றும் இடைச்சொற்கள் நின்றன; " பிறிதவண் நிலையல்" (தொல். இடை, ரு) என்பது இதற்கு விதி.

. (சுக - சுச) 'நின் கண்ணாற் காண்பென்' 'நின் கண்ணாகென்கண்' என்பவை " எம்மென வரூஉங் கிழமைத் தோற்றம் " (தொல். பொருளி, உஎ.)

' புனவேங்கை ' யென்பது தொட்டு ' நின் கண்ணாகென்கண் மன '

என்பது வரையில் தோழியுந் தலைவியும்
யாட்டு மொழிகள். மன், ஈறு திரிந்தது.
உரிமையாற் கொள்ளும் விளை

(சஙு -ருக) ' புரி ',
வேறுபட்டு. ' திரிபு ' 'தப்புதல்.
அறிவன்', கணி.
சான்றோர் எதனையும் வகை
தொகையாகச் செய்வர் ;
அஃதவர்கள் வல்ல

மைக்கு அடையாளம் ; ஆதலின், அவர், 'தகைமிகு......சான்றவர்' எனப் பட்டார். 'அறிவனை முந்துறீஇச் சான்றவர் இனமாக வெற்பனும் வந்தன' னென்றலின், பின்னல் ஏதோரிடர்க்கும் இடனில்லாதபடி தக்க காலத்தில் தக்கவாறு வரைதல் நிகழுமெனத் தலைவிக்குத் துணிவு பிறப்பித்தவாறும். 'பொலிக மா' வென்றது, பெரிது பொலிகவென்றற்கு.

இச்செய்யுள் பலதிறத்த இன்னேசைமேல் வந்து நல்ல உணர்வின்பம் தருதல் உணர்ந்து மகிழற்பாலது.

(௧ - ௭) ‘அகவினம் பாடுவாம்’, அகவினமாய்ப் பாடுவாம்; முற்றெச்சம். ‘அமைத்கேமாய்’ என்பது உரை. மகளிர்க்கு வழிபாடு ...

...ாரணமாக ‘நல்லவர்’ ‘நல்லார்’ என்னும் பெயர்கள் வழங்கிவரும் உண்மை, ‘நல்லவர் நாணு நிலைபோல்’ என உயர்குண மகளிரின் நல்லொழுக்கமே இங்கு எடுத்துக்காட்டப்படுகின்றமையாலும் ‘நல்ல மகளிர்’ என நச். அதற் தச் சொற்பொருள் விரிக்கின்றமையாலுங் கண்டுகொள்க. மகளிர்க்கு உள்ள இச்சிறப்பியல்பை மாட்சிமைப்படுத்தும் வாய்ப்புகள்

உலகியலிற் குறைவு படாமலிருந்தால், அவரது நற்பண்பும் நிறைவாகத்தோன்றி நன்மை பயக்தும். சந்தனமரத்துக்கும் நன்மணங் கூறும் பொருட்டு 'மூகை வளர்' எனப்பட்டது. 'வகைசால்' என்பதற்கு 'வகைமை யமைந்த' எனவே உரைக்கலாம். மருப்பின் உலக்கை யென்க. 'வகைமை', பொருத்தமாக வகுக்கப்பட்டாற்போல் அமைந்திருக்கின்றமை. 'பகையில் நோய் செய் தான் பயமலை' யென்றது, இயற்பழித்தல்.

(அ—60) நுதலுக்கு அழகு இயற்கையாய் அமைவது ;

கூந்தலுக்கு அழகு செயற்கையாய் அமைவதாகலின், 'ஆய்' 'அணி', என்பவற்றிற்கு நச். அக் கருத்துப்பட உரைத்தது நுட்பமானது. தேன், இங்கே மணம்.

(கக—கச) வரை யென்றார், அதிலுறையுந் தெய்வத்தை நினைத்து. 'அலங்கு காந்தள்' என்பது 'அலங்காந்தள் எனத் திரிந்தது. "இது வினைத்தொகை; சாரியை யன்று" என நச். தொல்காப்பிய உரையில் (புணரி. கஎ) உரைத்தமையும் இங்கு நினைவு கூர்க. இப்பகுதிக்குக், காந்தளில் தேன் பயன்படாமற் சொரிகின்றாற்போல, நின் காதலன் கூட்டமின்றி நின் நலனும் பயன்படாமற் கழிகின்றது என உள்ளுறையுவமம்

உரைப்பின் இனிதாயிருக்கும். உள்ளுறையால் தோழி தலைவிக்காகச் சார்ந்துபேசித் 'தன் உற்றார் இடுக்கண் தவிர்ப்பான் மலை' யென்பதனால் தலைவனுக்காகவும் இயற்பட மொழிந்தாளென்று கொள்க.

(கடு—கஅ) கடுவனுக்குக் கல்லாமை, வரைதல்கல்லாமை யென்பது நச். கருத்து. 'செம்மற்று', வினைக்குறிப்புகள் பத்தனுள் பிறிதின்கிழமையில் வரும் பண்புகொள் கிளவி. பிறிதின்கிழமையில் அஃறிணை வினைக் குறிப்புகள் பயின்றுவாராவாயினும் உரையிற்கோடலால் ஒரோவோரிடத்து இங்ஙனம் அருகிவருமெனக் கொள்க. இது சேனாவரையர்க்குங் கருத்தாம். (தொல். வினையி: உரு).

(கக—உக) 'புதை'யென்பது மகரந்தப் பொடியை உணர்த்துமெனக் கொண்டு 'புரி...தளிர்' என்பதை இருந்தவாறே உரைப்பின் உரை சிறக்கும்; புதைபொருளாயிருக்கும் பொருள் 'புதை' யெனப்பட்டது; தளிரில் மகரந்தப்பொடி சிந்துதலும் பெறப்பட்டு, மேனியிற் சுணங்கும், மாமை நிறமுங் கொள்வதற்கு எளிதாகவு மிருக்கும். "சுணங்குபோல் தளிர் மிசைத் தாதுக" என முன்னும் வந்தது (கலி. நடு; எ.)

(உஉ—உரு) ‘எறிந்த’: காரணப் பொருட்டு. ‘விட’: போக.

(உசு—உக) வேழத்துக்கு எழில் ஒடுங்காமை, ‘கடுஞ்சூல்’: முதற் சூல்; ஏனையவற்றிலுங் கடுமையானதென்பது கருத்து. மேற் “கடுஞ் சூல்”

(ககம) ; கச) என்பதற்கு நச். ‘முதற் சூல்’ எனப் பொருளுரைப்பர். வயா, கருவுற்ற காலத்தில் மகளிர்க்கு உண்டாகும் வேட்கைமிகுதி.

(கூ0—கூச) ‘மெய்ம்மலி யுவகை’: ஒரு குறியீட்டுச் சொல்; உடம்பு பூரிக்கும்படியான மகிழ்ச்சி. இதனை இன்னுஞ் சிறப்பாக “மெய்ம் மலிந்தாரு வுவகை” (அகநா. உகஉ) யெனவுங் கூறுப. ‘செம்மலை’ முன்னிலைக் கிளவி. ‘ஆகிய’, செய்பியவென் கிளவி. கிழவன் என்னும் அல் ஈறு ஆன் ஈறாகி “ஆ ஒவாகும் பெயருமாருள” (தோல். பெயரி. சுக) என்

தனல், ஆ ஓ வெனத் திரிந்து 'கிழவோ' னாயிற்று.

'தோழி உறழ்ந்து கூறினு' ளென நச். உரைத்தது, தோழி மா பட்டுக் கூறினளென்றற்கு. தலைவி இயற்பழித்துக் கூறினல் தோழ அதற்கு மாருக இயற்பட மொழிதலின் என்க. இங்ஙனந் தோழி மாருக கூறுவது வழுவாயினும் அது தலைவிக்கு இன்பம் பெருகுதற்கேதுவாயிரு தலின் அமைவதாயிற்று. "உயர்மொழிக்குரிய உறழுங்கிளவி" (தொல் பொருளி. ௩௪) யென்பதன் கருத்துமிது.

௫

(௧—௪) 'பாடுகம்', இதிற் ககரம் எதிர்காலங் காட்டிற்று. 'இருவாய் நாமிருவரும். தோழியென்பதையே மீண்டும் நற்றோழியெனச் சிறப்பி தனள். 'பாடுற்று', மெய்ப்பாடுற்று என்னும் பொருட்டு; என்றது, உரி உணர்வோடு என்றற்கு; அதுவே தன்

பயன் நல்குமாகலினென்க. ' தவ இடத்த ' லென்பதும் இங்ஙனம் மெய்ப்பாடுறுதலான உணர்வு நிலை வந்து அது தன் பயன் நல்குதலென்ப. " பாசண்டச் சாத்தற்குப் பா இடந்தாளுக்கு " (சிலப். கனாத். கடு) என்பதிலும் இக் கருத்துகள் வெளி படுதல் காண்க. பாடுற்றுப் பாடுகம், என்று இயைத்துக் கொள்க.

(ரு—உச) ' இடி உமிழ்பு ', இடி நெருப்பை யுமிழ்ந்து என்றது நல் உரை. ' இரவு பெயல் நடு நாள் ' எனக் கொண்டு ' நடுநாளிரவு பெயலில் என

உரைகொள்ளின் எளிதாயிருக்கும். நடுநாளிரவு, நள்ளிரா. 'கொடி விடுபு இருளிய மின்னுச் செய் விளக்கத்து' என்பதற்கு 'இடையிடையே கொடிவிடுதல் மயங்கிய மின்னுண்டாக்கின் ஒளியிலே' என இருந்தவாறே உரைப்பின் இயல்பாயிருக்கும். 'கொடி'; மின்னற் கொடி; 'இருளிய மயங்கிய; இல் மூன் 'மூன்றில்' என்பது போலப் புன்செய் 'செய்புன்' எனப்பட்டது. 'ஆசினிப் பணவை' யென்பதில் ஆசினி, ஓர் அகக்கா உள்ள மரம். உயர்ந்து வளர்வதும்

உறுதியுடையதுமாகலின், அதன்மே

பரன் அமைப்பதுண்டு. 'கைவிடுதல்' ; எறிதல். இறுவரை, இற்ற வரை ; வெள்ளத்தால் அடிப்பக்கங் குத்துண்ட ஆற்றங்கரைபோல் வெயில் வெப்பத்தாற் பக்கம் பிளந்துவிட்ட மலைப்பாறைகள் என்க. ௩௪. 'மூறிந்தவ்வரை' யென்றது. இறமாயிருக்கின்றது. அடிப்பக்கம் இற்ற

ஆற்றங்கரைக்கு "இறுவரை புரையுமாறு இரு கரை" யெனப் பரிபாடற் கண் (எ : சம) இவ் இறுவரை உவமமாக வந்திருத்தல் இங்குப் பெரிதும்

நினைவு கூரற்பாலது. மூற்றி ஒடாகாத முன்னிலையிலுள்ள தகுதியான வடு

வைக் குறித்தற்கு, ' நறுவடி ' யெனப்பட்டது. 'துணர்', இங்கே பூவும்

பிஞ்சுமாயுள்ள கொத்து. 'மடல்' : வாழைப் பூவின் மேல் உள்ள இதழ். 'கவணையில் கல் (ய)', சிதறி உதிர்த்துப் போகி உழக்கிக் கிழித்துப் பழத்துன் தங்கும்' என்க. அகநானூறு (உகஉ, அ—மடு) அடிகள் இப் பகுதியோடு பெரிதும் ஒத்திருக்கின்றமை நன்கு நினைவிருத்துதற்குரியது.

மெய்ப்பாடுகளில் உறுபெயர் கேட்ட லென்பது, தலைவன் பெரும் புகழ் கேட்டு மகிழ்தலென்ப.

(உடு—உஎ) 'இளமழை யாடும்' என்னும் அடுக்குப் பயில்வுப் பொருட்டு.

(உஅ—௩க) 'நிழற் கயம்' என்றது, இன்னுங் குளிர்ச்சி தேற்றுதற்கு. 'வாராதமைவானோ' என்பதும், மேல் 'மணிபோலத் தோன்றும்' 'துறக்குவனல்லன்' என்பனவும், 'பொய்த்தற்குரியனோ' என்பது போலவே இருகால் வந்தது தேற்றுதற் கென்க.

(௩உ—௩௩) 'மணிநிற மால்வரை' (ஐங். உக : அ) யென்றார் பிறரும்.

(௩டு—௩அ) 'தொடர் வரை வெற்பன்' என்றமையால், டின் தொடர்ந்த மலையமைப்புகள் பெறுதும்.

(௬௧—௪௪) 'ஒன்றி'' மெய்ப்பாடு தோன்றும்படி உணர்வு ஒன்றி, 'கேட்டருளி' யென்பதை ஒருசொல்லாகவே கொள்க. உயிர்க்கே யல்லா மல் உடலுக்கும் அவ்வுடலுழைப்பாலாகும் பொருளுக்கு மெல்லாந் தலைவனே கிழமையுடையன் என்பது 'மென்றோட் கிழவன்' என்பதனாலும் பெறப் படும். 'மன்றல்.........சயந்தனன்' என்பதனால் மலைநாட்டவரிற் பெண் வீட்டார் வேங்கைமுதலான மரங்களின் கீழிருந்து பிள்ளைவீட்டாருக்குத் திருமணம் உறுதிசெய்வரென்னும் ஒரு வழக்கம் வெளிப்படுதல் காண்க.

௬௲

(௧—௧) 'தொன் முரண்': தொன்றுதொட்டு வருங் குலப்பகை. 'குளகு'; தழை யுணவு; இலக்கியங்களில் இச்சொல் பெரும்பான்மையும் யானையின் உணவுக்கே வழங்கிவருகின்றது. 'மூன் குளகு' என்றது,

'ஓல்' : ஒலி ; தாலாட்டும் ஒலிப் பொருட்டாய் வந்தது. 'பிறங்கு' என்பதற்கு ஈச். இடத்துக்கேற்ப வாறு உரைத்தார். 'எல்லா' என்பதை 'எல்லாம்' எனக்கொண்டு 'காடன் மறந்தான்; இனி முற்றும் மறக்க' எனவும், 'நமக்குச் சிறந்தன நாம் நற்கு அறிந்தனமாயின்' என்பதை இருந்தவாறே கொண்டு 'நமக்குச் சிறந்த கடமைகளை நாம் நன்கு அறிந்தனமானல், அவன் திறம் செக் குறுவாமாய், இருளை ! வள்ளை அகவுவம் வா' எனவும் உரைப்பது இயல்பா யிருக்கும். ஈச்.

மாற்றத்தால் ஏதும் பெரும்பயன் இருப்பதாகத் தோன்றவில்லை.

(௧0—௧௨) 'வான் நிறம்' என்பதை நச். வேற்றுமைப் பொருளில் உரைத்த நுணுக்கம் அறிந்து கொள்க. 'வான்' இக்குப் பளபளப்பை உணர்த்தும். தலைவற்கு இங்கே கூறிய நாண், கருமத்தால் நாணுத நாண் (குறள்: ௱௨௧).

(௧௩—௧௫) 'ஆர்வு'; நுகர்வு, 'கோல்' என்பதை உவமையாகக் கொள்ளாது, 'ஆராய்ந்து ஒரு பக்கம் சாயாத நேரான

ஆட்சியையுடைய' என இருந்தவாறே பொருளாகக் கொண்டு உரைப்பின் சிறக்கும்.

(கக—கஅ) ' பொன் அணி யானை ', இல்பொருள் ; ' கொன் ' ; பய னின்மை, (தோல். இடை: கூ); என்றது, அழியுந் தசை யின்பத்தை. எனவே, ஆடவர் மகளிரின் காதற்பயனுவது, இல்லறமாம். இப்பொரு டோன்ற நச். உரைத்தமை அவர் தம் மெய்யுணர்வை நன்குகாட்டும்.

(கக—உக) ' எய்ப்ப ' : பொருந்த, நீரினும் மென்மை ; அதனினும் ஈர முடைமை. " நீரினும்

இனிய சாயற் பாரிவேள்" (புறம். ௱௫) என்பதிற் சாயல் மிக மெல்லிய ஈரவியல்பின் பொருட்டாய் வந்தமை நினைவுகூர்க.

(௨௨—௨௪) 'நெய்'; தேன்; 'மழை' மேகம்.

(௨௮—௩௨) தகைக் கொழுமையாலும் அன்பினாலும் தலைவன் மார்பம் சாயலுள்ளதாய் இனிதாயிற்று. சாயல் என்னும் மென்மை ஐம்பொறிக்கும் பொது (தொல். உரி: ௨௭-உரை); இங்கே ஊற்றின் மென்மைக்கு வந்தது. 'சிறுபுறம்' என்றது, புறக்கழுத்தை. தனது வரவைத் தலைவிக்குக் குறிப்பிட வேண்டாமென்று தோழிக்குக் கைகவித்துக் காட்டியென்க. 'கைகவித்தல்'; விலக்கல், (கலி. ௩௩ : ௨); சிறுபுறஞ் சார்தரப் பசப்பு இருள் போல மாய்ந்தது என்பதே செய்யுட் பொருள். நச். கூறும் பிறபொருள்கள் அவரே வருவித்துக் கூறியவையாகலின், அவை முறையாகமாட்டா. ஆகவே, இப்பாட்டுக்குத் துறை, முன்பு பெற்றவழி மலிந்ததனைப் பின்பு தலைவி தன் நெஞ்சொடு கூறியது எனக் கொள்ளல் வேண்டுமென்க. பிரிந்தவழிக் கலங்கிக் கூறியதென்பது பொருந்தாது.

(க—எ) 'ஐயனை' யென்றது, முருகனை; அழகுந் தலைமையும் ஒருங்கே உணர்த்தும் இச் சொல், இங்கே முன்பின் தொடர்பின்றித் தனித்து நின்று முருகனை யுணர்த்துதலை உற்றுநோக்குங்கால், பண்டைக் காலத்திற் பேச்சு வழக்கத்திலுங் கடவுளை யுணர்த்துதற்கு இது பெருவரவினதாய் வழங்கி வந்தமை பெறுதும். 'மைபடு சென்னி' யென்பதற்கு 'மேகங்கள் உண்டாகின்ற தலைமையினையுடைய' என்று நச். உரைத்தது, 'எது சிறக்குமோ அதனையுரைத்த'லென்னும் உரைமுறையாம். மிகவும் ஆழ்ந்தமைந்து நச். உரைகூறிச் செல்லுமுறைக்கு இதுபோல்வன நல்ல எடுத்துக்காட்டுகளென்க. புகைபோல ஆவியாய் மேலேவரும் நீர் உயர்ந்த மலையுச்சியிற் சென்று அதன் குளிர்காற்றுப் பட்ட அளவிற்குவந்து கறுத்து மேகமாகின்றமையின், 'மைபடு' என்பதற்கு 'மேகம் படிகின்ற'வென உரையாமல் 'மேகம் உண்டாகின்ற'வென்றும், ஏனை மலைகளினும் இங்ஙனம் மேக முண்டாக்கும் உயர்ந்த மலைகள் தலைமையுடையவாகலின் '

சென்னி ' யென்பதற்கு வாளா ' உச்சி'யென உரையாமல் ' தலைமை ' யென்றும் இயற்கை யுண்மை தோன்றக் கூறச். ஊன்றிப் பொருளுரைத்தமை பெரிதும் வியக்கற்பாலது.

(அ-கக) ' தகையவர்', மகளிர்க்கு வந்த வழக்குக் கருத்திருத்துக. விரலில் அணிவன ' தாள் ' என்னும் பெயர்பெற்றிருத்தலான் அவை பண்டு பூட்டுடையனவாயிருந்தன வென்றும் உற்றுணரப்படும். 'கை ' காந்தள் ; விரலணி, ' தும்பி ': தும்பி கருநிறமாதலின், விரலணியை அதற்கேற்ப நீலக் கடைச்செறியென

நச். விழிப்பாய் உரைத்தார். முருகனுக்குக் கொள்ளுங் கால் தொலையாமை சூரன்மாட்டும், தோன்றல் வள்ளிமாட்டுங் கொள்க.

(௧உ—௧௫) 'ஊர்பு இழிபு! ஆடும் வருடைமான் குழவிய வளமலை' யென்பது நல்ல இயற்கைநவிற்சியாதல் கண்டு மகிழ்க.

(௧௬—௧௭) 'பொறி' யென்றது, கேட்கும் உட்கருவியை; நுண் பொறி 'யென்றமையின், மானுக்கு மிக நுண்ணிய ஒலிகளுங் கேட்கு மென்பது பெறுதும். கண், கனு; உவமைக்கு மகிழ்க. 'பானொ,' இங்குக்

கணுமுளையை மூடியுள்ள மேல்தோல். 'கழன்று உகும்' என்றமையால் மலையின் செழுமை பெறப்பட்டது.

(உ0—உக) குழந்தைப்பருவமுதல் மணப்பண்டங்கள் பயின்று வருதலாலும், நற்குண மாட்சிமையாலுங் கதுப்பு மணநாறுவதாயிற்று.

(உச—உஎ) கச்சலான ஒரு சீப்பு வாழைக்காய், கூர் நகங்கள் வெளி வந்த புலியின் அடிபோலவும் அதன் விரல் போலவும் அகன்றும் வளைந்தும் தோன்றுதலின், 'உழுவையடி போல வாழைக் கொடுங்காய்' என்றார். ந—அ

அ

(க—எ) 'சுடர்க் கவின் கொண்ட
னஞ்சாரலின் மால்வரை யடுக்கத்து '
என இருந்தவாறே உரைத்தலால்
இழுக்கேதுமில்லை; மாணிக்கப் பாறை
யென ஒன்று வருவிக்க வேண்டிய
கட்டாயமில்லை. மரத்தின் அடிக்கு
மூழவின் உவமம், "முழா அரை"
என்பதனுட் (புறம். அடு-எ) காண்க.
வரி ' புகரினையும், ' நுதல் '
மத்தகத்தினையும் உணர்த்துதல்

கருத்திருத்து நற்குரியது. 'வீறு', வேறொன்றற்கில்லா அழகு என்பர் சிந்தாமணியில், உ : அக) வெற்புக்கு விறல் முற்கூறப்பட்டது. (கலி. அ) எதிர் எதிர் ஓங் கிய அடுக்கம் இரு பக்கங்களிலும் உள்ள யானை யெனவும், அருவி அவ்யானை கன் சொரியும் பூநீரெனவும், அலர்தல் கொண்ட வேங்கை மரம் இருமக னெனவுங் கொள்க.

(அ-கக) முதற்

றாழிசையில் தோழி கூறுதலே நாணி யென்றமையின், இரண்டாந் தாழிசையிலும் நச். அதுவே

உரைத்தல் முறையாகாது. 'சேரி யும் மறைத்தாள்; அதுகேட்டு அவரும் நீ நிலையிலே யெனக் கூறல் தான் நாணி' யென உரைத்தலே உரையாம். அவருமென்பது அவாய்நிலை. சேரியோர் கூறலைத் தான் நாணி யென்பது கருத்து. மூன்றாந் தாழிசையில், ஆயத்தார் கூறுதலை நாணி' யென வேறு வருதலும் நினைவு கூர்க. அதன்கட் 'பிற'ரென்றது ஆயத்தாரை யுணர்த்தும்.

(களஉக) ' இனையன தீமை' யென்றது, பிறர்க்கு அறிவித்தலால் உண்டாம் பழி முதலானவை யெனவும், ' நின் தீமை ' யென்றது,

அருளின்மை யெனவுங் கொண்டு, தொடர் கிடந்தவாறே பொருளுரைப்பின் உரை சிறக்கும். மருந்தாவது, தலைவனது வரையுங் கருத்தென்க.

௧௩

(௧—எ) 'விடியல்' இங்கே விடிந்த காலை நேரம். வெங்கதிர் காயும்

என இதனை அடுத்து வருதல் காண்க. 'அமலல்', நெருங்கற் பொருட்டாதல் "புழகு அமல் சாரல்" (மலைபடு. உ௩௩) என்பதினுங் காண்க. 'அறை'யென்பதற்கு உயர்வாகப் பொருள்கூற விரும்பி 'மாணிக்கப்பாறை'யென்றார். 'உத்தி' : பாம்பின் படத்து நடுவில், வளைவாயமைந்துள்ள வரி. 'மிளிர்தல்': புரளுதல்; "ஓங்குவரை மிளிர" (நற். ௬௪எ) என்றார் பிறரும். காந்தட் குலையினை அரவின் தலையெனக் கருதி உருமு இடித்ததென்க.

(அ—௧௧) அருவிகள் பெரியவையாதலாற் காற்றடிக்கவும் அசையாவாயின. 'மலிசுனை' யென்பதற்கு நச். 'நீர் நிறைந்த சுனை' யென்றது காண்க. இவ்வளவுங் கூறியது மலரின் பசுமையை மிகுத்துக் காட்டுதற்கு.

இதனல், அருவிகளில் எஞ்ஞான்றும் நீர் அறாது ஒழுகுதல் தெளிவாத லின், சுனைகளிலும் நீரூற்ற மிக்கு நீர் மலிவதாயிற்று. மேன்மேல் ஆராமை தோன்றுதலின், 'புல்லாராப் புணர்ச்சி' யெனப்பட்டது. அதனாற் புணர்ச்சி மேன்மேலும் பெறும் பொருட்டுத் தலைவி வருந்துவானாயினள். ஆகவே, 'புணர்ச்சியாற் புலம்பிய' வென்பதற்கு நச். இருந்தவாறே உரைக் கும் வாயிலெண்ணாது, புணர்ச்சி பெருமையாற் புலம்பியவெனத் தமக்குத் தோன்றியவாறே கூறிச்

சென்றார். இது நேர்மை யாகாது.

(கஉ—கரு) 'புகர் முகம்' என்பதிற் 'புகர்' மத்தகத்திலுள்ள புள்ளி.

இதனாற் 'புகர் முகம்' என்பதும் யானைக்கு ஒரு பெயர்.

'உழக்கும்' திரியும்; களிறொடு புலி பொருது உழக்கும் மலை என்றமை யால், அதன்கண் மூங்கிற் காடுகளின் செறிவு பெறப்பட்டு, அம்முகத்தால் அக் காட்டிலுள்ள மூங்கிலின் வளம் விளங்காநின்றது. 'கைம்மிக': ஒரு சொல். 'தடைதல்': பெருத்தல்; "தடை இய அமை" (பதிற். கூ : ௭) என்பதனுரையிலும் இங்ஙனமே உரைக்கப்படுதல் நினைவு கூர்க.

(கசு—கக) 'உற' இரண்டனுள், முன்னது நீண்டவென்னும் பொருட்டாகவும், பின்னது மிகவுமென்னும் பொருட்டாகவும் வந்தன.

'விடர்': குகை.

தோழி தலைவனை நோக்கி, 'நீ அருளிலையாயினும்' எனச் சொல்லாமற் சொன்னமையே இத்தாழிசைகளின் கருத்து. 'என்பதோ'வென்னும் ஒகாரங்கள் எதிர்மறையொடு ஐயம். 'சிதைத்ததை' என்பதன் ஐகாரங்கள் சாரியை.

(உ0-உச) 'கழறல்': இடித்துச் சொல்லுதல். அவர்ப் பேணி யெனப் பிரித்துக் கொள்க. 'நம் உறை வரைதல்', அவர்பால் நமதுறை தலை வரைந்தனரென்க.

க0

(க-க) 'வியகம்': மலரிடம்; 'புலம்ப': தனித்து நிற்க. தன் கண் இருந்த தும்பி பிரிந்தமையாலென்க. யானைகளிற் சிறந்த யானையென்றற்கு 'யானைத்தலைவனோடே' யென்றார். "யானையுள் அரசன்" (சிந். சஉ ; கூக) என்றார் பிறரும். பொறிகளையுடைய புலி, பூக்களையுடைய வேங்கைக் கிளை போலவும், யானையின் முகத்திலுள்ள பொறி, வேங்கையின் பூவே போலவுந் தும்பிக்குத் தோன்றினவெனக் கொள்வது நல்லது. இரண்டுங் கலந்து பொருதலால் இங்ஙனந் தோன்றின. 'நயன்,' நட்பாக்கும்வாயில் என்பது நல்ல உரை. 'நயன் நாடி நட்பாக்கும் வினைவர்போல்' ஒரு வழக்குச் சொல். 'அயம்' பள்ளமென்றதும், 'அணி', திரண்ட வென்றதும் இடத் துக் கேற்ற அமைந்த உரைகள்.

(௧௦—௧௫) 'இடையிரவினில் அதன் பதம் பெறான்' எனிற் சிறக்கும். இத்தாழிசைகள் தோழிக்குத் தலைவி கூறிய கூற்றாக வருதலின், 'கூடுதல் வேட்கையாற் குறி பார்த்து' என்பதுபோல் தலைவி தன் நாணும் மடனும் நீங்கிக் குறிப்பாலல்லாமல் .வெளிப்படையாகவே கூற்று நிகழ்த்துவானா யினளென்க. 'அல்ல கூற்றுமொழி அவள் வயினான' (தொல். கள: ௧௧) என்பது இதற்கு விதி. 'பாடு" ஒலி; இர் கொச்சிப் பூ விழும் ஒலியைப் பிறரும் (குறுந். ௧௩௮) கூறுவர்.

(௧௪—௧௭) 'நிலையுயர் கடவுட்கு' என்றவிடத்து நச். வல்லமை

யாகச் சென்றார். 'நடுநாள்' என்றது, நள்ளிரவை.

(கஅ—உக) 'கண் மாற', குறியிடம் மாற; 'நகை வேட்கை' யென்னுமிடத்து நச். உரைத்த வல்லமையிற் கருத்தூன்றுக. இவ்வுவமை மிகச் சிறந்தது. "துனிநகைப் புள்ளின் நின் அளிநசைக் கிரங்கி" யெனப் பிறர் கூறுமாறும் புறத்தில் (கஅ) வந்தது. 'மிசை', இங்கு வானம்.

(உஉ—உஎ) 'குறியிடம் பிழைத்ததற்கு என்மேற் பிழையாகத் தலைவன் உளங்கொள்ளும். ஆனல் நானோ ஆர்வுற்ற அன்பினேனாக

இருக்கின்றேன்'
எனத் தலைவி வருந்திக் கூறுவதாக இத் தாழிசைகள் வந்தன. ஆதலால் அடக்கியலில் தோழி தலைவனை நோக்கி, 'நீ என்மேற் பிழை சுமத்தி என்னை வெறுத்தாய்போலச் சிறிது பொய்யாக நடிப்பையாயின் அவள் கவலை நீங்கும்' என்று சூழ்ச்சி கூறினளென்க. 'நீ என் வயிற் புலந்தாயு மாயின் அப் பொய்யான வெல்குவை' என்று உரைத்துக்கொள்க.

சிலம்புபோற் கூறுவகூறும் என்றது, தலைவன் சொல்லுவது சரியோ

பிழையோ, தலைவியும் அதனையே இசைந்து கூறுவளென்றற்கு. அத்தகைய அன்பினளாதலின், நீ பொய்யாகக் கூறினும் அவளதனை மெய்யாகக் கருதுவளெனத் தோழி தலைவர்க்குக் கூறினாளென்பது. இதனால், தலைவற்குத் தனது களவொழுக்கத்தில் அசைவு பிறந்தது. அசைவாவது, தளர்வு; இதன் பயன் தலைவற்கு வரைவிற் கருத்துண்டாதலென்று கொள்க.

கக

(க—அ) 'வழிபட்டு ஒன்று அறித'லென்பது கருத்தன்றற் குரியது. 'கல்லார்கட்டோன்றும் அடக்கம்' என்பதன் உரை நல்ல உரை. 'கல்லார் முற்றோன்றும் அடக்கம்' என்க. ஈகையிற்றணித்தல் ஆற்றுவாராற்றலினும் ஆற்றலாகலின் (குறள். ஈகை: ௫) 'வல்லான்போல்வதோர் வன்மையும்' என்றார். 'பன்மாணும்' என்பதற்குப் 'பலகாலும்' என்றுரைப்பது இனிய உரை. நச். உரைத்தது இயல்பாயில்லை. பலகாலும் என்னும் இப்

ாலி] உரை

விளக்கம் ௬௧

பொருள் வழக்குப் "பன்மாண் அடுக்க இறைஞ்சினேம் வாழ்த்தினேம்" (கூ ;௬உ) என்னும் பரிபாடலிற் காண்க. பரிபாடலுரைகாரர் இதற்கு இப் பொருளே யாண்டும் உரைத்துச் செல்லுதலும் பெரிதுங் கருத்தன்றற் பாலது. 'சுடரிழாய், பன்மாணுஞ் சொல்லுஞ் சொல் கேட்டீ' யென்று இயைத்துக்கொள்க.

(கூ—கக) ' ஆங்கு ': அசை.

(கஉ—கஅ) மகளிர் உணர்வுநிலையினர் ; ஆதலின் ஒன்று உற்றக்கால் அவரறிவு உடனே தன்முனைப் பிழந்துவிடும். விடவே, அங்ஙனம் அறிவு கலங்காத மற்றொருவரிடம் அவர்கள் ஆராய்தல் நன்றாகலின், ' தமியரே துணிகிற்றல் பெண்டிர்க்கும் அரிதாயின் ' என்றான். ஆடவர் அறிவுநிலையினராகலின் அவரியல்பு வேறென்க. ' அளியரோ ' வென்றாள், தலைவியின் அளிபெறல் கருதி.

(கடு—கஅ) நச். ' முதுக்குறைமை ' யென்றது, பேரறிவுடைமையை (கலி. கூஉ:கூ)

(கக—உச) தம்மால் தலைவன் பேணப்பட்டானெனின், அஃதவன் புகழ்க்குக் குறைவுண்டாமென்று தலைவி காதற்கருத்தால் நினைதல் இயல்பாகலின், ' நின் கருத்தாற் பெண்மையுமன்றோ யிரா நின்றது ' என நச். நுணுகியுரைத்தார்.

(௧—௭) ஒத்தனவும், அடுக்கத்தனவும், திருத்தியனவுமான பெருங்களிற் றினத்தொடு என உரைத்து, அவற்றை முறையே கான்வாழ்வன, மலை வாழ்வன, யாறுவாழ்வனவென்னும் மூத்திற யானைகளாகக் கொள்வது இன்னும் நல்லது. 'எட்டுத் திசைகளினுங் காவல்' என்னுங் குறிப்பாற் கான்வாழ்வன கொள்ளப்படும். மூவகை யானைகட்கும் மதச்சிறப்புக் கூறப் படுதலின், 'தேமூசு நனைகவுள்' 'வண்டூது புகர்முகம்' என வினை இரண்டற்கும் வந்தாற்போல மூன்றுவதற்குங் 'கமழ்கடாந் திகழ்தரு'மென வந்ததாகக் கொண்டு 'கமழ் கடாந் திகழ்தரும் மாவிசும்போங்கிய கடிமரத் திருத்திய' வென இயைத்துக்கொள்க. இரண்டாவதற்கும், 'வண்டூது, புகர்முகப் படுமழை' என இயைத்து மழையை மதமழையென் றுரைப்பது நல்லது. ஒத்த, அடுக்கத்த, திருத்திய வென்பவை வினைக்குறிப்புப் பெயர் கள். "களிறு என்றல் கேழற் கண்ணுங் கடிவரையின்றே" (தொல். மரபு: ௩௪) என்பதனாற் பன்றியையுங் களிறென்னும் வழக்குண்மை தெரித லின், அதனினும் வேறுபடுத்துதற்கு யானையைப் 'பெருங்களிறு' என்று ரெனலுமாம். 'இனத்தொடு' என்றார், முற்காட்டிய மூவகைப் பிரிவுச்

ஈ

௪௨
கலித்தொகை
[குறிஞ்சி

தோன்ற. சிறுத்தை சிறுபுலி
யெனப்படுதலின்,

பெரும்புலியென்னும் பொருளில் வேங்கை 'இரும்புலி' யெனப்பட்டது. 'இகன் மலே' யென்ட தற்கு 'இகலுன்ன மலே' யெனின் உரை சேரிதாம். அது 'களிற்றின; தொடு இரும்புலி மயக்குற்ற இகல்' என்க. 'வலி மூன்பு' 'எறும் மூன்பு என்னும் இரட்டிப்பு மிகுதி காட்டிற்று.

•

(அ-கக) மனவொடுக்கத்தால் வாழ்நாள் மிகுமென்பது உயர்; பொருள். ஒடுக்கமாவது இங்கே, ஒருமுகப்பட்டு அமைதல். 'தாய்',

செவிலி முதலியோர். 'தாய் முன்னர் உருப' என்றமையால், மறை பிறரறிகின்றமை உணர்த்தினளாயிற்று.

(கக—கக) 'செதும்பு': சின்னீர்; சின்னீரென்றமையால் அஃது ஆ வாரிக்குஞ் செவ்வி, இளவேனிற்காலமாயிற்று. 'உரு', 'மெலிவு' என்ற வற்றிற்கு இடத்துக்கேற்ப உரைக்கும் முறைகள் கருத்தொன்றற்குரிய.

'களவொழுக்கத்தால் இடையிடையே நேரும் பிரிவுகளால், தலைவி ஆற்றளாய் வருந்துதலின், வளை

நெகிழ்ந்தும் கண் கலுழ்ந்தும் மெலி.

வந்தும் மறை பிறரறிய நேர்கின்றது. அது தலைவியின் தவறாமோ?

வரைந்துகொள்ளாமையால் நேருங் குறையன்றோ? வெனத் தோழி தலைவற்கு வல்லமையாய்க் கூறுங் கருத்துகள் இத்தாழிசைகளில் வந்தன.

(உ0—உச) நட்பு பின்னுதலை ஈதல்வேண்டுமென்று சொல்க; பின்னுதல்: கூடுதல். வரைதலால் அது பின்னுமென்பது கருத்து.

(௧—௬) ‘ வென்ற வருத்தம் ’;

பொருது வெல்லும்போது நேர்ந்த மெ

வருத்தம். ‘அணி நலம்’: அழகிய தோற்றம்; ‘பேணு’: காவாத. புலியி
நினைவால் அதனையொத்த வேங்கைமரத்தை யானை சிதைக்க முயல்வ

மூன்றும் வர்தது (கலி. ௬அ).

(௧௦—௧௬) மின்னலே கண்ணாக என்றார்,
வழி தெரிதலின்.

மின்னு நேரத்தில் மட்டு

(உஉ) ‘அதனால்’ என்பதை அசையெனல் வேண்டுவதின்று. ‘ஆ
யால்’ என்னுங் காரணப்பொருளுள்ள சொல்லாகவே கொள்க.

(உ௩—உ௫) ‘புன்னை அணிமலர் துறைதொறும் வரிக்கும்’ என்புழி
போல (ஐங். ௧உ : எ) இங்கே ‘வரிக்கும்’ என்னுஞ்சொல் கோலஞ் செய்த
பொருட்டாயிற்று. ‘பகலும் பெறுவை’யெனப் பகற்குறி நேர்வான்போ
இராக் குறியையும் மாற்றினன், இவ் விடர்ப்பாடுகள் கருதித் தலைவற்
விரைவில் வரையுங் கருத்துண்டாமென்றற்கு.

கச

(க—ரு) 'வரு வைகல்', ஞாயிறு தோன்றும் விடியற்காலம் என்பது கச். உரை. மூங்கிற்கோலை முழந்தாளினாலுந் தாழ்த்து திற்றலின், 'முழந்தா ளிரும் பிடி.' யெனச் சிறப்பிக்கப்பட்டது. 'வாழை களி', வாழைச் செறிவு எனவே உரைக்கலாம். 'வாழை களி புக்கு ஞாங்கர்' என்பதற்கு, வாழைச் செறிவிற் புகுந்து அவ்விடத்தே' யென்று உரைத்துக்கொள்க. வெயிலொளி

அறியாமையால் (கலி. கூ ய்: எ) 'இருள் தூங்குசோலை' யென்றார்.

(கூ—கச) "அரவின் தோற்றமேபோலுஞ் சிலைகளும்" (ய: ௬௭) எனச் சிந்தாமணியில் வருதலால், இங்கே 'அரவின் பொறி' யென்பதற்கு அரவின் அடையாளமெனக் கொள்க. 'பொறியும் அணங்கும்' என இங்கு வந்தாற்போலவே, 'பாம்பு வடிவுக்கும் கொலைத் தொழிலுக்கும் உவமை' யெனக் குறிஞ்சிப்பாட்டுரையிலும் (கடுஅ) இவ் வுரையாசிரியரே சிலைக்கு விளக்கி யுரைத்தலும் நினைவுகூர்க. 'கையையாய் ஓராங்கு மறப்பித்தாய்' என நச். இயைக்கின்றார். 'கையையாய் ஓராங்கு நோக்கி மறப்பித்தாய்' என்றியைத்தல் நேரானது. ஓராங்கு நோக்கி, ஒருவழிப்பட நோக்கி; தன் வயப்படும்படி நோக்கியென்பது கருத்து. 'கோள்': குலை. 'பயிர்ப்பு உறு தீங்கனி', பிசினையுடைய தீங்கனி யெனவே உரைக்க. 'அல்கு': கிடக்க. நெடுநாட் பிள்ளையில்லாத வறுமையாளர்க்குச் செல்வமாய்ப் பிறந்த மகளாதலின், 'நல்கூர்ந்தார் செல்வ மகள்' எனப் பட்டாள். வறுமை, பிள்ளையில்லாத வறுமை. மக்களையுள்ளவர் பொருளுள்ளவராகக் கருதப் படுகின்றமையால் (குறள். சுகூ; புறம். கஅஅ) அவரை யில்லாதவரும் நல்கூர்ந்தாரெனப்பட்டார்.

(கடு—கஎ) 'இயல்'; செல்லும்; 'தளி': மழை; கைதுவல், கையொழிதல்; எதிர்மறைக்கண் வந்தது. இப் பொருள் "கைதுவேன்" என்பதன் (குறள். ௱கூ: க) உரையிற் காண்க. சிறந்தனையாய்க் கைதுவலை யெனவே இயைக்கலாம்.

(கஅ—உச) ' அறிந்தும் '

என்றும் உம்மை ஆக்கம்.

கரு

'சுடர்த் தொடீஇ' என்னும் அளபெடை விளிப்பொருட்டு. 'அடைச்சிய': செருகுவித்த. 'வரிப்பந்து', என்பதில் 'வரி' பந்தின்மேல் அமைக்கப்பட்ட ஓவியக் கோலம். 'பட்டி', ஒரு நெறிமுறையின்றித் தான் வேண்டியவாறே அடங்கா தொழுகுவோன். 'பொற் சிரகம்' என்றமை யாம் செம்புகள் அக்காலத்திற் பொன்னாலுஞ் செய்யப்பட்டு வந்தன வெ

ுச

கலித்தொகை

[குறிஞ்சி

ுது விளக்கும். 'வாக்கி': ஒரு பெரிய கலத்திலிருந்து மற்றொரு சிறிய லத்தில் வார்த்து. கை பற்றி நலிவான் என முன் அறியாமையால்

தன்னை யறியாது சென்றேன்' என்றான். 'கலிய', இங்கே இறுக்க என்னும் பொருட்டு (புறப். வே). முதுகுக்குப் 'புறம்' என்னும் சொல்லே பெரிதும் வழக்காருகலின், நச். புறம்பு அழித்து எனப் பிரித்தமைபொருந்தாது. 'புறம்பழித்து' என ஒரு சொல்லாகவே கொண்டு 'வைது' எனப் பொருளுரைக்க. அவை, 'மெதுவாக உண்பதற்கென்ன?' என்றாற் போல்வன. மேலும், விக்கினல், தொண்டை மார்பு முதலிய இடங்களிற் றடவுதலன்றி முதுகிற்றடவுதலும் இயற்கையன்று. ஆகவே, 'நீவி' யென்

அது, தலைவன் குனிந்து குனிந்து விக்கும்போது, தாய் வலது புறமாக நின்று தொண்டைப்பக்கம் தடவினளெனக் கொள்க.

ஆவ்வாற்றால், அவன் கடைக்கண்ணாற் கொல்வான்போல் நோக்குதற்கும் இயைபிருந்தது. நகைக் கூட்டம்': மகிழ்ச்சிக்கிடமான சந்திப்பு; இங்கே 'கோமாளிக்கூத்' தெனின், சிறக்கும். இங்ஙனமொன்று கலி.

கூடு-லும் வேறு முறையில்

வரும். 'கள்வன் மகன்', கள்வனுகிய மகன் என்றமை கருத்திருத்துக.
உண்ணுநேரத்தில் விருந்தாகச் சென்றல் தள்ளாது உண்பிப்பாரென்னுந்

துணிவுபற்றித், தலைவியைக்காணும்
அவாவினனுன தலைவன்
அஞ்ஞான்று செல்வானுயினன்.
உண்ணு நேரத்தில் எவரும்
புகாராகலின், அது 'புகாக்
காலை'யாயிற்று. 'பகாவிருந்து':
நீக்காத விருந்து (தொல். கள: கசு).
தலைவன் செய்யும் இனைய
குறும்பொன்று அகம். கூஙசு-லும்
வருதல் தினைவுகூரற்பாலது.

கசா

(க—கூ) நிறம் சாடுதலால்
யானைக்கு உண்டான அழகு மருப்பான்

தாகவின், 'நீண் மருப்பெழில்' என்றார். இங்ஙனம் உரைப்பது சிறப்பு. 'மல்லர்': மற்போர் வல்லார்; கஞ்சனால் ஏவப்பட்டு வந்த சாணூரன் முதலியோர். 'மால்போல் யானை'யென்றது, பெருமித உவமை.

(எ—க0) 'அணங்கு': முருகன். பலி: பூப்பலி முதலாயின.

(கக—கச) இருட்டிற் பிறர் கண்ணுக்குத் தெரியாதபடி கருநிற உடையை அணிந்து தலைவன் வருவனாதலின், 'எல்லி மாலையை'யென்றாள். 'இருட்டின் இயல்பினையாய்' என்பது பொருள். இக் கருநிறப் போர்வையி

ஞற்ருன் காவலர் களிறென ஆரவாரிப்பாராயினர். தலைவி போர்வை போர்த்து வருதலும் மேல் (கலி. கும: ச) வரும். 'சோர்ந்து வீழ் கதுப்பி

னள்' என்பதற்கு நச். இறுதியிற் கூறிய உரை நன்று. மிக்க அன்பின் நெகிழ்ச்சியாற் கூந்தலே குலைந்து வீழ்தலும் உண்டாதலின், அங்ஙனம்

உரைப்பது இன்னும் இயல்பாயிருக்கும். 'நெகிழி'- தீக்கோல்.

ய] உரை
வ்ளக்கம சுரு

(கரு—கஅ) 'தாமரைக் கண்ணி', 'சர்ந்தண் ஆடை', 'ஆர மார்பு' ன்னும் குறிப்புகளால் இத்தலைவன்

ஆர்தண வகுப்பினமென்னறு நச். கருது
ல் நினைவிருத்துதற்குரியது.

(௧௧-௨௫) 'புலம் புகழ் ஒருவ', இது நல்லதொடர். 'வர்து நீ குறை .றி' யென்றது, நீ வர்து நினக்கு மகள்வேண்டும் என்னும் நின்குறையைக் .றியென்க. "புது காண் ஒடுக்கமுங் காண்குவம் யாமே" (அகம். ௧௧௨) ன்றார் பிறரும்.

௧௭

(௧—௭) யானைகள் தமக்கு மாறான யானைகளோடு, தங் கொம்புகள்

றியும்படி குத்திப்போரிடும் உண்மையைப் பிறருங் கூறுவர். (சிந். ம:௧௭௫).
ருதிதோய்ர்த கோட்டுநுனி, செங்காந்தண் முகைக்கு உவமை. 'அயன்';

ள்ளம்,

(அ—கக) தாழிசைகள் ஆற்றுவித்தலருமை கூறின. 'கயல் உமிழ்நீர்', யல் வடிக்கும் நீர். இரையுண்ணுங்கால் மீன்கள் நீரை வடித்துவிடும்)யல்பொருட் கருத்துடன் இது கூறப்பட்டிருக்கின்றது. நச். காலுதல் ன்றுரைத்ததற்கும் இப்பொருள் பொருந்தும். 'கயல் உமிழ் நீர்' என் து கண் பனிகலுழற்கு முற்றும் உவமையாய் வந்த நயம் தெரிந்து மகிழ்க. ளை மட்டுங் கழலாமற் கண்ணுங் கலுழுதலால், துன்பம் ஆற்றுவித்தல்

அருமையாயிருக்கின்றதென்பது

கருத்து.

(கஉ—கடு) 'பனி': நடுக்கம். 'படர்': வருத்தம். நுதல் வனப்பிழத்தலால், அவ் ஆற்றாமையால் தெய்வம் பரவும்படி நேர்கின்றதென்பது கருத்து.

(கசு—கக) 'அழிவுற்று': அழிவுறுத்தி. கனவிலும் இவள் வருத்தம் மிக்கு ஆற்றாமையுடையளாயின், இவளுயிரைப் போகாமல் நிறுத்தவுங் கூடும்; ஆனால், இவள் கனவில் மட்டும் நின் சேர்க்கை பெற்று ஆறுத லடைகின்றமை கொண்டு கனவில் அது பெறுமையால் மேன்மேலும் வருத்த மிகுதலின், இவளுயிரைப் போகாமல் நிறுத்துதல் கூடாமையாயிருக்கின்ற தென்பது கருத்து.

(உ0—உச) 'விளியா நோய்': அழையா நோய்; தானே நேர்ந்த நோய் என்றற்கு நச். 'கெடாத நோய்' என்றுரைத்தார். 'விளியா வெவ்வம்' என்றார் (உகஉ) அகத்திலும். முளிவு: உலர்தல்.

கொடிப் பூக்கள் போலவுங் கோட்டுப் பூக்கள் போலவும் பொன்னாற் செய்யப்பட்ட மலர்களாலான மாலை யென்பது, முதலிரண்டடிகளின் பொருள். 'பூவாப்' பூவாதலாலும், தழலால் நிறம் பெறுதலாலும் 'நீரின்றி

[illegible]

நிறம்பெற' என்றார். 'பொடி அழல்': பொடி மூடு அழல்; கலி. அ௬ : உ-ந் பொடியழற் புறந்தந்த ' வென்பதற்குப் ' பொடி மூடு தழலாலே நிறம் உண்டாக்கப்பட்ட ' என நச். உரையெழுதி யிருப்பது காண்க. 'பொடி' யென்றது, இங்கே தீய்ந்து போன கரித்துண்டுகள். பொடிதல், தீய்தற் பொருட்டாதல் "தங்கண் பொடிவ தெவன்" (கலி.

ாடு : கய) என்பர் நுரையாற்
பெறப்படும். நீறுனமையின்,
திருநீறுக்கும் ‘ பொடி ’ யென்பது
ஒருபெயராயிருத்தல் காண்க ;
முதனிலைத் தொழிலாகு பெயர்.
‘புறந் தந்த’: புறத்தே ஒருவடிவத்
தந்த ; பண்ணப்பட்ட என்பது
கருத்து. இஞ்ஞான்றும் இதனை ஒரு
மெய்ப்பொருட் குறியீட்டு
மொழியாக வழங்க லாம் ;
பழமுதலிலக்கியங்களில் இங்ஙனம்
அங்கங்கே கிடப்பன பல தொடி
செறியாப்பு ’: வளைகள் செறிவாய்ப்
பொருந்தி நிற்கும் பொருட்டுக்
கட்டுகின்ற கட்டு வடம். ‘

தோளாய்' என்றது, தலைவன், தலைவியை விளித்தவாறு. நச். நரந்தம் பூ வென்றதற்கு நரந்தம்போலும் மணமுள்ள பூவெனப் பொருள் கொள்க. ' நரந்த நறுமலர் ' என்பதற்குப் (பரிபா. ௧௯-௬௫) பரிமேலழகரும் இங்ஙன முரைத்தார். 'நரந்தம்': கத்தூரி. 'குரல்': கட்டுப் பொருந்து மிடம்; நச். அதனைப் ' பற்று ' என்றார். ' மோக்கலு மோர்தான் ' என்பது, ' உண்ணலு முண்ணேன் ' என்றாற் போல்வது கலி. ௨௩-ன் விளக்கம் பார்க்க). ' செறூஅச் செங்கண் ', ' பறூஅக் குருகு ' என்பவை முறையே

பரிபாடலிலும் (கக : ருஎ), மணிமேகலையிலும் (கக : உ௪) வந்தமை நினைவு கூர்க. தொய்யலைத் தொய்யிலெனச் சொல்லையே வடிவு பிறழ நச். உரைப்பது பொருந்தாது: 'தொய்யலங் தடக்கை' யென்பதற்கு, 'நிலந் துழாவுதலையுடைய அழகிய கை' யென உரைத்து யானைக்கு ஆக்குதல் சிறப்பாம். "தொய்யாது வித்திய" (மலை படு. கஉஉ) என்னுமிடத்து இவ் வுரையாசிரியரே 'உழாமல் விதைத்த' என்னுங் கருத்தில் உரைத்தலால், 'தொய்யல்' என்னுஞ் சொல் இங்கே 'நிலந்

துழாவுதற்' பொருட்டாம்.
'இளமுலை தைவந்து மருட்டலும் மருட் டினன்' என்று கொள்க.

'கடி': மணம். ' கற்பென்னும் நன்மையை விரும்பி அவனையே மணம் புரிவது செய்தனன் இவன் என்று இம் மன்னு உலகத்து நினக்கும் எனக்கும் புகழ் மன்னுவது புரையும்' எனத் தலைவி கூறுவதாகஇருந்தவாறே வைத் துப் பொருளுரைப்பது நல்லது. நச். ' இவனெனக் கூறின்' என இயைப்பது இயல்பாயில்லை. ' மன்றவுலத்து மன்னுதல் புரைமே ' யென்

றமையால், தமிழ்நாட்டில் மகளிரும் தமக்குப் பின்னும் தம் புகழ் நிலைக்குமாறு ஒழுகும் நோக்கமும், அதன்கண் உறைப்பும் உடையாரென்பது பெறுதும். 'புரைமே', இங்கு முற்றுதலால், இது 'மெய்யொடுங் கெடுமே' யென்னும் (சொல். வினை: ௩௧) இலேசினாற் கொள்ளற்பாலது.

௧௧

(௧—௫) 'மின் அறல்': அணிகலன்கள். 'பெயல்', கூந்தல்.

'பொன் அகை 'எனப் பிரிக்க. 'அகைத்தல் ': கூறுபடுத்தல். 'வகிர்': வகிர்ந்த தலை யுணி. பிரிவுகள் தோன்றச் செய்யப்படும் தலைக்கோலம். ' போழ் ' என்பதும் அது. ௩௪. இதனைத் தாழம்பூப் போல் வகிர்ந்து செய்யப் பட்ட அணிகலன் எனக் கருதினர். 'நன்னுதா ' லென்றது, தோழியை. வகைநெறி, கூந்தல்; அன்மொழித் தொகை.

(௧௬–௨௨) ' பையென ': மெல்ல ; "பையெனக் கவிழ்ந்து" என்பதன் (சிற். ௫ :௨௰) உரையிற் காண்க. '

ஒற்றி ": ஒருங்கு பின்பற்றிப் பார்த்து; 'வேவு பார்த்த' லென்பதை நினைவு கூர்க. "இல் வழங்கு மடமயில் பிணிக்குஞ் சொல் வழங்கு வேட்டுவனுயினன்" எனப் புறத்திலும் (உஇஉ) தலைவன் வேட்டுவனெனப்பட்டமை நினைவுகூர்க. காணத்தால் தயங்குங் கால், புலையர்போலப் புன்கண் நோக்கினனென்பது. அறிந்தே அன்பினல் இங்ஙனஞ் செய்தானென்றற்கு 'ஏழைத் தன்மையோ இல்லை' என்றான்.

(க—கூ) 'பொதும்பருள் நீர்க்கால்' என்றது, நல்ல இயற்கையழகு. நச். கொத்துக்கள் என்றார், கொத்துக்களை. கண்கூடு கூழை : தலைக்கூடின மயிர். தலைக்கூடலாவது ஒன்றுதல் ; ஒரே கற்றையாய்ச் செறிந்த முடியென்க. 'நல்கூர்ந்தார் செல்வ மகன்' என்பதன் விளக்கம் மேற்கூறப்பட் டிருக்கின்றது. (கலி. ருய).

(கரு) 'இவளைச் சொல்லாடிக் காண்பேன் தகைத்து' என்பதை இளம்பூரணர், பாட்டிடைவைத்த பொருட்குறிப்பாகிய உரைவகை நடையென்றது (தொல். செய்: கசுக) நினைவுகூர்ந்துகொள்க.

(கச) 'நல்லாய் கேள்' என்பது தலைவன் நெஞ்சொடு கூறியதாகாது. வெளிப்படையாகக் கூறியதெனவே கொள்ளலாம்.

(கடு—கஅ) 'பெடை', பெண்மையென்னுங் கருத்தில் நச். உரைத்தார். 'தூது', கல். "கல்லுண்டு கடிய வெம்புங் கானுறை புறவமெல்லாம்" என்றார் பிறரும். (சீந். சு : கக)

(கக—உஉ) 'நுணங்கு': நுண்மை; நச். புகரினது நுண்மை யென்றது, அழகினது நுண்மையென்று கொள்க. எழிலில் நுண்மை முன்னும் வந்தது (கலி. ௪). 'முழங்கு நீர்ப்புணை' யென்பதில் நச். வல்லமையாய்ச் சென்றார்.

௪அ

கலித்தொகை

[குறிஞ்சிக்

உக

(க—எ) 'என்ற' என்றது பாகுபடுத்தப்பட்ட உவமச் சொல்லன்று; மரபான் வரும் உவமச் சொல் என்பர் இளம்பூரணர் (தோல். உவ: கஎ).

குறிஞ்சி நிலத்துக்கே

தலைமகனாதலின், அவன் மனை '

வியன்நகர் ' எனப்

பட்டது. 'தளர்பு ஒல்கு இளமையான்
கொள்க.

இகத்தந்தாய்' என்று இயைத்துக்

(அ—கக) 'கூடல் நீலம் '
என்றது, கூடல் நகருக்கு
மேற்புறத்திலுள்ள

திருப்பரங்குன்றத்துச் சுனை நீலம் என்று கொள்வது பொருந்தும். "கூடற் குடாஅது...குன்றத்து...சுனை நீலம்" என அகத்திலும் (கசக) வருதல் காண்க. 'ஏந்து கோடு' என்பதன் உரை அழகிது.

(கக—கக) பொதியிற் பொருப்பைக் 'கோடுயர் பொருப்பு' என்றது
நினைவிருத்துக. 'மதவலி'
யென்பதன் உரையுங்
கருத்திருத்துக. மருப்பு வமை
கூறலிற் 'காழ் கொண்ட'
வென்பதற்குத் திண்மைகொண்ட
வென்

றுரைப்பின் சிறக்கும்.
இத் தாழிசைகளில், தென்னனுக்குக், கூடலும் அசோகந் தண்காவும்
பொதியிலுஞ் சிறப்பிக்கப்படுகின்றன.

(உ0-உங) 'யான் இனையன கூற, அவள் கவிழ்ந்து நிலநோக்கி யான் கூறியவெல்லாம் நினைந்து பின் ஏதோ நெடியதொன்று நினைப்பாள்போல்
தோழியர்க்கு அமர்த்த கண்ணளாய்ப் பெயர்ந்தனள்' என இருந்தவாறே
உரைப்பின் இனிதாயிருக்கும். 'நினைப்பாள்போல்' என்பதற்கு நச்.
விருத்தியுரையிற் கூறியதே

உரையாகக்கொள்க. 'அமர்த்த' என்றதும்
அதற்கு. இவ்வளவு அழகுபெற இயல்பாயுள்ள இவ்வடக்கியற் பொருளை நச். நிலகுலைத்துச் சிதைத்தார்.

இது, காமஞ்சாலா இளமையோள்வயின் ஏமஞ்சாலா இடும்பை யெய்தித் தானே சொல்லி யின்புற்ற நிலைமையைத் (தொல். அகத்: ருய.) தலைவன் பாங்கற்கு உரைத்தது. அடக்கியற் கருத்தால் இது பெறுதும். ஏமஞ்சாலா இடும்பையில் தானே சொல்லி இன்புற்ற உவகையாதலின், நச். தலைவற்கு 'அசைவென்னும் உவகை பிறந்த' தென்றார்.

(க—க) 'மால் நோக்கு', வெருவின நோக்கு. 'சுட'ரென்பதை நச். பிறையெனக் கொண்டார். விழுந்தெழுந்ததும் விழுந்தெழாததுமான பற்களென்றது நல்ல உரை. இதனுனூர், தாழிசைகளில் 'இளமையான்' 'மடமையான்' 'சொல்லினு மறியாதாய்' என்பவற்ருலுந் தலைவி காமஞ் சாலா இளமையோள் என்பது பெறப்படும்.

(எ—கo) 'உளன்' என்பதன் அன் விகுதி "இலனென்று தீயவை செய்யற்க" (குறள், உக : ஙு) என்பதிற்போலத் தனித்தன்மையில் வந்தது. 'உயவு': வருத்தம். "உயாவே உயங்கல்" (உரி, எக) என்பது தொல்காப்பியம். பிணிக்கு மருந்து பிறவாதல்போ லன்றித் தன்னோய்க்குத் தானே மருந்தாகலின் (குறள், ககக : உ) 'களைஞரில் நோய்' என்ருர். தாழிசைகள் மூன்றிலும் 'அறிந்தும்' என ஆக்க உம்மை வருவித்துக்கொள்க. 'இல்லென்பாய்' என்பதன்கண் நச்.

உரைக்கும் விரகு அறிந்து மகிழ்ற் பாலது: உரையில் ஒப்பித்து என்றது, ஒப்பனை செய்வித்து என்னும் பொருட்டு; "பிணையோர் மடநோக்கும் நாணு முடையாட்கு அணியெவனோ" (குறள், ௱௯: ௧) என்றார் பிறரும். இதுவுஞ் சொல்லெதிர் பெறான் சொல்லி இன்புற்றமையால் அசையென்னும் உவகையாயிற்று.

௨௫

(௧—௧௫) உரையில் ௩ச். இளமை நீங்குதலா லென்றதைக் குழவிப்பருவ நீங்குதலாலென்று கொள்க.

ஒன்பதாண்டுகட்கு உட்பட்ட சிறுமியர் (பிங். ககூசக) உலகம் மழைபெய்து செழுமை பெறவேண்டுமெனவும் (பரி. கக: அய்) தமக்கு நற்கணவர் அமையவேண்டுமெனவுங் (பரி. கக: ககடு–கஉக) கருதித் தைத்திங்களில் நீராடி நோன்பு நோற்பது பண்டைக் காலத்துத் தமிழ்வழக்கம். மார்கழித் திருவாதிரைக்குமுன் பத்தா நாளிலிருந்து துவங்கும் இந் நீராடல்நோன்பு, தைத்திங்கள்வரையிலுங் கூடத் தொடர்ந்து நடைபெறுதலாலும், மார்கழி மதியத்திலிருந்துந் தைத்திங்கள் கணக்கெண்ணப்படுதலாலும், இந்நோன்பின் பயன் தைத்

திங்களிலிருந்தே வேண்டப்படுதலாலும் சிறப்பாக இதனைத் 'தைந்நீராடல்' என்று வழங்குப.

(கச—உசு) 'பிறர் மனைப் பாடி எய்திய பலர்க் கீத்த' என்றமையால், தவமுயல்வார் பண்டு பிறர்மனைகளிற் பாடி ஐயமேற் றுண்பரெனவும், நாளைக்கு வேண்டும் என விரும்பாமல், அன்று கிடைத்ததை அன்றே, எதிர்ப்படுவார்க்கும் அளித்துவிடுவ ரெனவும் தவத்தோர் வழக்கங்கள் சிலவும் பெறுதும். அன்றியும் அவர்போற் சிறுமியரும் விளையாட்டாக ஐய மேற்றும் பிறர்க்களித்துத் தவமுயல்வ ரென்பதுந் தெரிகின்றமை காண்க.

முத்துப் பதித்துச்செய்த வளையல்கொன்னும் ஒருவகை அணிகலனும், தலையிற் கிடந்து அசையுந் தலைப்பாளையென்னும் ஒருவகை அணிகலனும் இச்செய்யுளில் வந்தன.

உச

(க—டு) 'ஒண்டுத்தி' மருங்குலுக்கே கொள்ளலாம். 'முன்கை' யெனப் பின் வருதலின், 'வணங்கு இறை' என்பதற்கு 'வளைந்த விறற்சந்து'

ருo
கலித்தொகை

குறிஞ்சி

எனப் பொருள் கொள்க (மதுரைக்காஞ்சி, ௬௧௬-ன் உரை காண்க). வ. முன் கை' யென்பதில் 'வரி'; வளையல்.

(௯—௧௧) "மெய்யுருகிக் கண்ணுருகி நெஞ்சுருகி" யென்றார் பிறரும் (சீந். ௯: ௧௯ய).
'இஃதொத்தன்': இவனொருத்தன்; உயர்திணைச் சுட்டு இஃதென அஃறிணைச் சுட்டாய் வந்தது, இது "செறற் சொல்லாகலின்' (தொல். கிளவி: ௫௯); செறற்சொல், சினந்து வையுஞ் சொல்.

(கஉ—கச) 'வாரணவாசிப் பதம்' என்றதற்கு கச. கூறிய குறிப்பு

"மலையத்து நின்று" மென்றவிடத்துப் (திருச்சிற். கஙக) பேராசிரிய

"மலையத்து வாழ்வார் பிறர்க்கு வருத்தஞ் செய்யாராகலின்" என்று போலக் கொள்க.

(கரு—உஉ) 'ஒண்டொடீ', தலைவன் கூற்று; தோழியை. 'நின்முக காணு மருந்தினேன்', இது, தலைவன் கூற்றாகத் தோழி தலைவியை கருதிக் கூறியது. 'கொன்

', ' இக்காலத்தே ' யென்று காலமுணர்த்தி றென்றார் நச். (மீங். ந்ருசொற்; சாக). ' யாதும் ' : சிறிதும்.

(உக) 'பொன் செய்வாம் ': மகளிர் தமக்குள் வழங்கிக்கொள்ளும் ஒரு நகைமொழி ; பொன் : பொலிவு ; ' பொன் செய்தல் ', தோற்றப்பொலி உண்டாக்குதல். கணவனொடு கூடுங் கூட்டத்தால் மகளிர்க்குத் தோற்ற பொலிவு உண்டாதலின், ' கூடுவாம் ' என்பதற்குக் குறியீட்டுச் சொல்லாக ' பொன் செய்வாம் ' என்ப. இவளும் அங்ஙனங் கூறினாள் ; அந்நகை மொழியைப் பயன்படுத்தியது, இங்கே

தான் உடம்படாமை காட்டிற்று.

(உச-உஎ) ஒருவர் சொல்லை ஆராயாது அப்படியே நம்பிவிடுதல் எ தாகலின், தலைவி ' தேறல் எளிதென்பாம் நாம்' என்றான். அதுகேட்ட தோழி, தானென்றும் அங்ஙனம் ஆராயாமல் நம்பிவிடவில்லை என்று எதி சொல்லக் கருதி, அங்ஙனமானல், ' ஒருவன் சாதலும் எளிதென்பாம் மற்று என்று கூறிய விரகு பெரிதும் பாராட்டி மகிழற்பாலது. " சாதலின் இ ஞாதில்லை " (குறள், உரு : ம) யாகலின், இங்ஙனங் கூறினன்.

(உஅ—கூ) 'ஆங்கே':
அத்தன்மையே. 'சிறிது', மிக
இன்று எ. உரைத்தார் கச். ஆயினும்,
உரையாடற் போக்குக்கேற்பத்
தலைவி, த வனைச் சிறிது சினந்து
இகழ்வான்போலத் தோழியை
நோக்கிச், 'சிறி
சார்பு பேச்சு அங்கே; அலரின் அலர்கென நாளும் நிறையும் நயப்பில் பிற
பிலி' எனக் கூறினுளென்றுரைப்பின் இனிதாகவும் இயல்பாகவும் இரு
கும். தலைவனுக்குக் 'காமம்
வெளிப்படுந்தோறும் இனிது'
(குறு
அலர்: இ) என்றாராகலின், தலைவி இங்ஙனங் கூறத் துணிந்தாளென்,
கொள்க. தோழி 'நயவரவின்று' என்றான், அருமை கருதி.
ரவி] உரை
விளக்கம் ருக

இச்செய்யுள் முழுமையுந் தொடர்கள் கிடந்தவாறே உரையெழுதற்கு ஏதம் இழுக்கில்லையாகவும் நச். தம் முறையே சென்றிருக்கின்றார்.

தலைவி உறழ்ந்து கூறியது நாண் அடமாட்டாமையாலென்று கொள்க.

உரு

(க—கச) செல்வங் கடைகொள......உரைக்கல்லாதவர்போல என்பது சான்றோரியல்பை எண்டுத்துக் காட்டிற்று.

இவரொப்பக் காமுற்

ரூர்க்கும் இவ்வியல்புள்ளதென்றது, சிறந்ததொன்றை உவமையாகவாயினும் புகுத்தி உலகத்தை அர்செறியிற் படிவிக்கும் அருளினுலென்க. "கூறுவங் கொல்லோ கூறலங் கொல்லோ ....நன்மொழி" யென்பது (ககஅ : க-கூ) அகம்.

(கடு–கஎ) 'யாழ', அசை; அசைமொழிகளிலும் இதுபோன்ற இனனேசை மொழிகள் கண்டு அவற்றைப் பயன்படுத்துந் தமிழ்ச் சான்றோரின் இனிமையுணர்வு பெரிதும் உணர்ந்து மகிழற்பாலது.

(கஅ–கக) 'பெண்டிர்', பன்மை விகுதி ஒருமையில் மயங்கிற்று.

'எல்லா நீ' என்பது தொட்டுப் 'பெண்டிரானக் கிடந்ததெவன் கொலோ' என்பது

வரையில் தோழியுந் தலைவனும் உறழ்ந்து கூறிய உரை

யாடல் இனிக்குந் திறத்தது. தலைவன் இன்னது கருதி இது சொல்கின்றா னென்பது தோழிக்குத் தெரியுமாயினும், தலைவியின் கருத்தறிந்து தலைவன் குறைக்கு உடம்பட வேண்டுமென்றெண்ணித் தோழி வல்லமையாய் வேறு வேறு கூறினள். (தொல். பொருளி : ௪௪-உரை).

(௨௦–௨௮) 'ஒண்டொடீஇ......எந்தை தன் உள்ளங் குறைபடாவாறு என்பது தலைவியொடு தோழி கலந்து உரையாடுங் கூற்று. இப்பகுதியை எச். இருந்தவாறேயும் உரைக்கலாம். "அன்னை என்னை என்றலும் உள" (தொல். பொருளி : ௫௨) என்னும் உம்மையால் தலைவியின் தந்தையைத் தோழி 'எந்தை' யென்பதும் அடங்கும் என்ப.

௨௬

(௧–௮) சேனாவரையர் இவ் 'எஎ' என்பதை 'இசைநிறை' யென்றா ராயினும் (தொல். இடை ; ௨௪), இகழ்ச்சிப் பொருட்டென்பது சிறப்பு பின் 'இஃதொத்தன் நாணிலன்' என வருதலுங் காண்க ; நாண் இன்பப் பெருக்கும் இயல்பினதாதலால் அஃதில்லான்பால் இன்பமில்லையெனக் கருதி 'நாணிலன் றன்னொடு மேவேமென்பாரையும்' என்றாள். 'யானஃதறிகல் லேன்' என்றான், அறிவு கலங்கினமையின். ' இணர்செல்லாக் கொடி ' யென் ணர். 'இளங்கொடி' யென்றற்கு. 'தமக்கினிதென்று......என்றாமோ'

நல்ல அறிவுரை. இங்ஙனம்
உறழ்ந்துகூற நேர்ந்தது,
இருவர்க்கும் ஒத்த காமவுணர்வு
எழாமையின்.

(கூ—கக) ' முதுக்கு உறைமை '

யெனப் பிரித்து நச். சொற்பொரு:

விரித்தமை நினைவு கூர்ந்துகொள்க. அறிவின்கண் உறைதல் என்பது
பொருள். சிறு பருவத்திலும் பேரறிவுடைமை யென்பது கருத்து. நீருக்

இன்னுமை யுணரும் உணர்வில்லை
யென்பது எளிதின்
அறியவல்லனுயினும் மீறிய காமத்தால்
அறிவு கலங்கினமையின், பொருந்தா
உவமை கூறினுன்.

(கஉ—கரு) 'ஐந்து வாயினையுடைய அரவு' என்று நச். எழுதியதை, ஐம்பொறியின் உருவகமாகக் கொள்க. தன் ஐம்பொறிகளின் இடைப்பட்டு வருந்துவதைத் தலைவியின் இடைப்பட்டு வருந்துவதாகக் கருதினன் காரியத்தைக் காரணத்தின்பாற் சார்த்தி. 'கை': வருத்தம்; 'வாரா': வந்து 'அறனெனக் கண்டன்று' என்னுமிடத்து, 'அறன் என', ஒரு மணமுறை யெனவும், 'கண்டன்று', அறனூலாற் காணப்பட்டது எனவும் உரைத்துக் கொள்க.

(கக—கக) 'அறனும் அது கண்டாயின்' என்பதில் அறன், அறனாக் வலியேோர்தலின் மூன் தொடர்புண்டெனத் துணிந்தாள். இது, பிங் தலைவியுங் கூடக்கருதிய பெருந்திணை; பெருந்திணை கிளேழாரியல் பெஃபது "அடியோர் பாங்கினும்" (தொல். அகத் : உரு) என்பதனுலறியப்படும்.

உஎ

(க—ரு) 'தொழூஉம், அதனைப் பிறர் காண்பார்; தான் தூக்கிலி யென்பது; தூக்குதல், ஆராய்தல்.

'கைகவித்து': விலக்கி. 'இடம்': கால பொருளில் வந்தது.

(கூ-க) ' பூக்குழை ': பூவாலான குழை ; ' செல்லல்': வருத்தம் ' இற ': போ.

(கஉ-கரு) ' வந்தை ' யென்பதில் ஐ முன்னிலைவினை விகுதி (குறள் கரு௧ : க). ' மெய்தொடுதல் ', ' அடிதொடுதல் ' என்பதுபோல ஒரு சூளுறு கொள்ளுமுறை.

(கசு) ' அடங்கக் கேள்': அமையும்படி கேள் என்பது நல்லது நன்றாகக் கேள் என்றபடி.

(கடு-கஎ) நிலங் கீறலைப் பிறரும் 'நிலங் கிளையா' (அகம். கக
என்றனர். 'மற்றவன் றன்னொடு நின்றுவிடு' என்றதனால், தோழி, மு
கூட்டமுண்மையைத் தான் அறிந்துகொண்டமை நகையாடித் தோற்றுவி
பாளாயினளென்க. தோற்றுவித்தது, மேலுந் தன்பால் நாண்கொள்ள

கலி] உரை

விளக்கம் ருா

உஅ

(க-கக) 'மணிமுகப் பின்' எனக்கொண்டு மணியைத் தன்னிடத்தே
உடைய பின்னலின் மயிர் என்னுங் கருத்தில் உரைத்தார். 'பின்னல்
எனின் மதியை மறைக்கும்
அராவெனவுங் கொள்ளப்படுமாகலின்,
மை என்றதற்கேற்ப நச். அப் பின்னின்
மயிர் என்றார். 'நூல் சுற்றிய': நூலா
மாலையாகச் சுற்றிக் கட்டிய.
கார்த்திகைமீன் ஒளியிக்குப்

பலவாதலின் கூந்தலிற்கிடந்த ஒளியுள்ள பல மலர்க்கு உவமையாயிற்று. 'பொன்படுதல் கூட்டத்தால் தோற்றப்பொலிவு கொள்ளுதல். தலைவனொடு கூட்ட கொள்க வென்பதைப் ' பொன் செய்வாம் ' என்னும் ஒரு குறியீட்டு சொல்லாக மகளிர் வழங்கும் நகைமொழி யொன்று மூன்றும் (கலி. கூ) வந்தது.

(கஉ—கஅ) ' மற்றிஃதோ': பின்னை இக் களவொழுக்கத்திலும் என்னு பொருட்டு. இரு கண்களுமென்றற்கு, ஒப்ப மலர்ந்த என்றார். புணர்ச்சியி கண்மலர்ந்துஞ் சிவந்தும்

பொலிவுபெறுதலின் தாமரைகளாயின வென்று, குக் 'குவளையோடு இகலி' எனப்பட்டது.

(கக—உஉ) 'இரும்பு': கத்தி; கத்தியாற் கீறி நீக்கிய வடுப்போன், உண்கண் என்பது பொருள்.

(உக—உரு) 'உண்டான் தலைப்பெயின் வேந்து கொண்டன்ன' என பது ஒரு வழக்குச் சொல்.

(உக—ருO) 'உத்தி,' உதிர்ந்து எனல் பொருந்தும்.

' அல்கல்': இராக்காலம். மன்பதை யென்பதற்குப் புறநானூற்றுரை காரரும் (உரை: க) உயிர்ப்பன்மை யெனவே உரைத்தார். இதனுள் எல்லா உயிர்களும் அடங்கும். உரையில் ' வாங்கி உடுத்து ' என்றார் தலைவியாதலின் பணிப்பெண்கள் சூழவிருக்குந் தலைமை கருதி. இது போன்ற இடங்களில் நச். மிக விழிப்போடு உரை யெழுதுதல் அவரு மையை நன்கு விளக்குகின்றது. ' கார்': ஆகுபெயர் ; 'குறழா': குனிந்து முதிய எருதாகலின் வைக்கோலை மெல்லமாட்டாமை கருதி, நச். தமது

விளக்கத்தில் ' நுகர்தலாற்றமை காட்டி நின்றது ' என்றார். ' பக்கு' பை, (ஐங். உக : க) : அலமிக் குழறின இழிவு தோன்றப் 'பாடி' யெனட

பட்டது. 'கேழ்': ஒளியுள்ள வரிகள். 'எதில்': அதற்கு அயலதான வெங்க 'வாழ்க்கை,' தொழிலென்னும் பொருட்டு. 'வீழ்க்கை': விரும்புதல்

' கார்க் [illegible]

என்றமையின் (பட்டினப்பாலை யுரை. க

நிசு

கலித்தொகை

மருதக்

ங்கே கருங்கூத்தைத் ' தண்ணிய காடகம் ' என்றார் ; காண கருத கை பிளைத்தலின் எங்க. 'குறுகரி பட்டற்றாற் கூத்து விளைந்தது'

என ஓயைத்துக் கொள்வது சிறப்பு.

குறிஞ்சிக் கலி - உரை விளக்கம் முற்றும்.

௩.

மருதக்கலி

௧.

(௧—அ) 'வீங்கு நீர்': வயலிற் பெருகுகின்ற நீர்; 'அவிழ்ந்த' என்பதற்கு முற்றி விரிந்த என்னும் நச். உரை அழகிது. 'பகர்தல்' என்பது விலைபகர்தலுக்கே பெரும்பான்மையும் உரித்து; கூறு கூறாகப் பகுத்து விலை

கூறுதல் என்பது பொருள். 'வயற்கொண்ட ஞாங்கர்', வயற் கொண்டபோது என உரைப்பின் இனிதாயிருக்கும்; அப்போது அவ் வயல்களின் இடையே உள்ள பொய்கைகளின் வண்டுகள் இந் நீலமலரைச் சூழ்ந்துகொண்டு ஊர் புகுந்ததெனக் கொள்க; ஆகவே 'வீங்குநீர்' என்பது பொய்கைநீரன்று, வயல்நீரே யென்பது நன்கு துணியப்படும். 'வரி வண்டு' என்பதில் 'வரி' என்பதற்கு இடத்துக்கேற்பப் 'பாட்டு' என்றுரைத்தார். 'ஊதுதல்', நுகர்தலென்னும் பொருட்டாதல், "

குழாஞ் சிறைப் பறவை வேங்கை விரியிணர் ஊதி " (கருஉ) என்னும் அகநானூற்றி னுங் காண்க. விருந்து அஃறிணை முடியில் வருதல், "அஃறிணை மருங்கிற் கிளர்ந்தாங்கியலும்" (தொல். சொல்: ருக) என்பதனாற் கொள்ளப்படும்.

(கூ—கஉ) 'பொது' என்னுஞ்சொல், சிறப்பின்மையை உணர்த்துதல் புறம். ருஅ : உஎ-ன் உரையிலுங் காண்க. 'இல்லத்தே நான் வருந்தி உளம் மெலியப் பிறரும் என்னை அலர் தூற்ற அவற்றைப் பார்த்துக்கொண்டு நீவிர் பரத்தையர்பாற் பெற்ற மகிழ்ச்சியினும்,

பரத்தையரோடு நீவிர் நன்கு மகிழ்ந்து அந் நறுமணத்தோடு வரும் இக்கோலத்தை யான் கற்போடிருந்து இவ்வைகறையிற் காணப்பெற்றது மாட்சிமையானதன்றோ?' எனக் கூறி யூடலமைந்தாளென்பது. மேல் தாழிசைகட்கும் இஃதொக்கும்.

(கசு—கக) 'நோய்த்தலையும்': நோய்க்கு மேலேயும்.

(கஎ—உம) 'துணங்கை' யென்பது, இங்கே, மகளிர் மகிழ்ச்சியாற் கைகொட்டிக்கொண்டு நுடங்கியாடுங் கூத்து. இக்காலத்தே இதுபோல் வதைக் 'கும்மி' யென்பர். இத்துணங்கைக் கூத்தின்கண்

மகளிர்க்குப் பாட்டு உண்டு ; முழவு முதலிய வாச்சியங்களும் உண்டு ; "நின் தமர் பாடுந் துணங்கை" (கலி. எ௰: கஊ), "முழவு இமிழ் துணங்கை" (அகம்; கலி]

உரை விளக்கம்

ருரு

ஙகக : ககூ) என்பன காண்க. 'ஒளி பூத்த நுதல்' பெண்மையொளி. காமம் தீர்தலின், 'தட்ப' என்றார்.

என்பதில் ஒளி,

(உஉ—உ௫) 'கடாஅம்':

செலுத்தும். ' எம்மை அருளினை ;

இந்த இடையீட்டால் நின்

பரத்தையர்க்கு அன்பு கெடும். அது கெடாதவாறு சென்று நிறுத்து ' என்றாள் தலைவி. இவ்வகற்சியால் இன்னும் அணுக்க உணர்வு தோன்றினமையின், இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்ததென நச். உரைத்தார்.

உ.

(௪—௫) 'தோட்ட', பெயர். புலவராற் பாடப்பெறுதல் என்ஞான்றும் ஒரு பெருஞ்சிறப்பாதலின், ' புலவர்வாய்ச் சிறப்பெய்தி ' என்றார். வையை குறிப்பிட்டமையாற் பாட்டுடைத் தலைவன்

பாண்டியனென்பது பெறப்பட்டது. அவனே இங்குக் கிளவித் தலைவனாகவுங் கூறப்படுதலின், குறிப்பாற் பெயர் சுட்டியவாறாயிற்று. அகத்திணையில் தலைவன் இன்னான் என்பது தெரியக்கூறுதல் மரபல்லாமையால் (தொல். அகத்: ருச ; ருரு) நச். இதனை 'அகப்புற'மாயிற்றென்றார்.

(ம—மரு) 'பாடு அழி சாந்தினன்' என்பதற்கு, வடுப் படுதலால்

அழிந்த சாந்தினன் என்று உரைத்துக்கொள்க. மேல், "மறுப்பட்ட சாந்தம்" (கலி. எஉ : கரு) என வருவதற்கு நச். 'பாடழிந்த சந்தனம்'

என உரைப்பது காண்க.

(கச—கஎ) 'இனிப் புணர்ந்த எழில்' என்றார், 'புதிது பூப்பெய்திய நல்லார்' என்றற்கு. 'நனி' என்பதை நச். பெயராகக் கொண்டுரைத்தமை கருத்திருத்தற்பாலது. 'தனி இல் நெஞ்சே' யென்பதில் 'தனி', தன்னுரிமை யென்னும்பொருட்டு. அவ்வுரிமையிற் பண்டு கருத்திருந்தமை இதனாற் பெறுதும். நச். இதனுரையில் 'மனம்' வேறாகவும் 'நெஞ்சம்' வேறாகவும் உரைத்தமை நினைவுகூர்தற்குரியது. மறுத்துரைப்பதுபோற் கூறியது நாண் மிகுதியாலென்க.

(ககூ—உக) 'தூ' வலிமை; மேலும் வரும். 'எண்ணியவை யெல்லாம்............நெஞ்சுடையார்க்கு' என்பது யாவர்க்கும் பொதுவான உயர்ந்த அறிவுரையாம். பிற துறையில் ஒழுகுவார்க்கும் முதன்மையாய்ப் பயன்படுமாறு இங்ஙனங் கலித்தொகையில் வருவன பல. மாந்தர்க்கு இந்நூல் அரிய அறிவுரைக் களஞ்சியம்.

ந

(க—கு) அறிவுரைகளின் பெருமை கருதி, 'இடல்' என்றார். 'வல்லவர்' என்றது ஊரனைக்கு அசிரியரை. 'செவி': ஊரனது செவி; செய்யைச்

நிசா
கலித்தொகை
மருதக

செறுவென்பது அருவாநாட்டு வழக்கு என்பர் நச். (தொல். எச் : ௬). 'புது மொழி' யென்றமையாற், பொருளாலும் நடையாலும் அணியாலும்' புதியவான பாட்டுகளைப் பண்டைப் புலவர் 'தம் உரிமையாய் இயற்ற வல்லவர் என்பதும், அவையே மாந்தர்க்குக் கவர்ச்சியும் மகிழ்ச்சியுந் திருத்தமுந் தருமென்பதும் விளங்குகின்றன.

(௧-௧௧) 'ஊரன் உரனல்லன்' என்று ஒருத்தி சொல்ல அதனைக் கேட்கும் மற்றொருத்தி தானும் அங்ஙனமொன்று சொல்லுவளேயல்லாமல் ஏதுஞ் சொல்லாளாதலின், 'உடன் வாளாது' என்னும் எதிர்மறைச் சொல்லை நச். 'ஒருவர் கூறியது

ஒருவர் கூறாதே 'யென அவ் வெதிர்மறை வாய்பாட்டிலேயே உடன்பாட்டுக் கருத்து வர உரைத்துச் சென்றமை பெரிதும் அறிந்து மகிழற்பாலது. 'நினைவு வாடு நெஞ்சத்தேம்' என்பது, 'நினைவாடு நெஞ்சத்தேம்' எனத் திரிந்தது. நோதல் பரத்தையர் இயல்பாதலின், அவரோடு ஒப்பாகி யாங்களும் நோவேமோ என்றான்.

(கஉ—கரு) ஆடுகள் தழை கறிக்கும்பொருட்டு, ஆயர்கள், மரத்தின் கிளைகளை அம் மரத்திலேயே தொங்குமாறு வெட்டி முறித்துத் தாழ வைப்பர். இது பெரிய

வதையாகக் கருதப்படுதலின், 'இடையன் எறிந்த மரம்' (பழ. ௩௧௪) போல் என உரைப்பது மரபாயிற்று. 'செப்பு': மலர் வைக்குங் குடலை; இது பித்தளை செம்பு முதலியவற்றாலுஞ் செய்யப்படுமாகலின், 'செப்பு' எனப்பட்டது. "மடைமாண் செப்பின் தமிய வைகிய பெய்யாப் பூவின் மெய் சாயினளே" என்னுங் குறுந்தொகைத் (௯) தொடர்கள் இங்கு நினைவுகூரற்பாலன.

(௧௯—௩௧) 'ஒலி கொண்ட சும்மை,' ஒலியோடு கூடிய ஆரவாரம். இழிவு தோன்றப் பாணனைப் 'புலைய'னென்றான். நீவிர் பார்த்தையரை

அனுகுதற்குக் காரணமான பாணனையே நேராகக் கண்டபின், இனித் தேரோட்டும் பாகனைப் பழிப்பதனால் என்ன பயன் என்பதற்குப் 'பாகனைப் பழிப்பேமோ' என்றான்.

(உய-உச) 'வேளா'; வேட்டலின் எதிர்மறை. பழைய நிலையைப் பெறுதற்கு வக்கறுதலில் முயங்கும் எண்ணமும் உண்மையின், 'வக்கற்று முயங்குமாறுபோலே' யென்றுரைத்தார்.

ரு

(க—எ) 'ஓதுடை அந்தணன்' எனவே கொண்டு, ஓதுதலையுடைய அந்தணன் எனினும் ஆம். அன்னம் தன் பெடையொடு திரிதருஉம் என்னும் பொருளுக்கேற்ப மடந்தை தன் துணையாக அந்தணன் எரிவலஞ் செய்வான் என்பது இனிய உரை. எனவே, இஃது அந்தணனது திருமணத்தைக் குறித்தவாறும். அன்னத்துக்கேற்ப அந்தணன் கூறப்பட்டா கவி]

உரை விளக்கம்

ருள னென்க. வதுவை நாள் எவராலும் விரும்பப்படுவ தோன்றுகலின், 'காதல்கொள்

வதுவைகான்' எனப்பட்டது. நச். முன்பின் மாற்றுதலாற் சிறந்த பொருட்பேறு மில்லை; மாரணகவும் உள்ளது.

(கசு—கக) 'உருத்திவாயோ' என்றமையாற் பாழே என்பது பெறப் படுதலின் நச். அதனைக் கூட்டியுரைத்தார்.

'பரத்தை துணிவுடையன் நிறையுடையன் தன்னுடையன் என்பனவே நின் கருத்தாயிருப்பவும், என் விருப்பத்துக்காக அவளைத் துணிவிலன் நிறையிலன் தன்னிலன் என்றுரைப்பதும் முறையாமோ'வெனக் காமக் கிழத்தி

கூறினாகக் கூறுவது முறையே இத்தாழிசைகளின் கருத்து.

(உக–உச) இது மிக்க அமைதியும் அறிவும் வாய்ந்த திறமான ஊடல்; தொல். அகத் : கஞ-ன் உரையில் இவ்வுரையாசிரியரும் இப் பகுதி யையே ஊடலுக்கு எடுத்துக்காட்டாகக் காட்டியதும் நினைவுகூர்க.

ரு

(க–ஙு) 'மணிநிற மலர்' என்னுமிடத்துப் 'பல மணிகள்

போலும்' கிறங்க' என்று உரைக்கத் துவங்கியது அறிவார்ந்த உரையாம். இப் பகுதியின் ஈற்றடியிற் 'பன்மலர்' என வருதலும் இதற்கு ஆக்கமளிப்பது காண்க.

(எ—ய) 'பாயல் கொண்டு' என்பதற்குத் துயில்கொண்டு என உரைக்கலாமெனினும், 'படுக்கையையும் இடமாகக் கொள்கையினாலே' என உரைக்கும் நச். உரையே பிரமாணமென்க. ஏனென்றால், தாழிசைகள் மூன்றிலும், வருத்தத்தால் துயில் கொள்ளாத கண்கள், முறையே படுக்கையிற் பொருந்துதலாலும் அருகிருக்கும் புதல்வனை மெய்யுற்றுச் சிறிது மகிழ்ச்சி கொள்ளுதலாலும் நீர் அறாது நிரம்பிவிடுதலாலும் மிக அரிதாகவேனும் இமைகள் கூம்ப நேர்தலின், அப்படியே சிறிது கண்ணுறக்கமுங் கொள்ள இடமாகக் கூடும் என்னுங் கருத்துகள் பெறப்படுதலின் என்க. படுக்கையை

இடமாகக் கொள்ளுதலென்றார், வருத்தத்தாற் குப்புறக் கவிழ்ந்து படுத்து முகத்தைப் படுக்கையொடு சேர்த்தலால், கண்கள் அணையிற் படிந்து அதன் மெத்தென்னும் உணர்ச்சியால் துயில்கொள்ள நேர்தலைக் கருதி. 'இயைப' 'ஆல்' என்பவற்றின் உரைகள் மிக ஆற்றலானவை. நீர் அரும்பு நிறைந்து தொழுகும்போது இமைகள் திறந்திருக்கமாட்டாமற் கூம்ப நேர்தலின், மூன்றாந் தாழிசையில் 'நீர் இதழ் புலராக் கண் இமை கூம்பல்' என்றார். தங் காதலரைப் பிரிந்த மகளிரின் துன்பநிலை இத் தாழிசைகளில் நன்றாக எடுத்துக் காட்டப்படுகின்றன. 'துணைமலர்க் கோதை' என்பது, மலர்களை இரட்டையிரட்டையாக இணைத்தெடுத்துக் கட்டும் நருவகை மாலைக்கு

--

ரு அ

கலித்தொகை

[மருதக்

வந்தது. ஏற்ற அறிவுத்திற னுடையாரே பாராட்டுதற் குரியராதலின், 'கலைகளெல்லாம் முற்றக் கற்று முதிர்ந்த' என உரை விரித்தார். நுதும் புதல் ஒலித்தற்

பொருட்டாதல் " முழவின் ததும்பி " (எஅ) என்னுங் குறுந்தொகையாலும் உணரப்படும். 'முழவு வந்து' என்பது 'முழவந்து' எனத் திரிந்து நின்றது.

(கக—கச) 'ஒவா' என்பதற்கு நச். இடத்துக்கேற்ப உரைத்தார் 'நகர்': மனை.

(கரு—கசு) 'தெண்மணி' யென்பதில், தெளிவு ஓசைக்கே அல்லது மணிக்கு அன்றாதலின், 'தெளித்த மணியோசை' யென்று திறமாக உரைத்தமை அறிந்து மகிழ்க.

இருப்பதுபோற் கிழத்தி இல்லத்துள்
இருத் தலின், 'மெல்லியான்'
என்பதைப்பொதுவாக உரையாது, '
அகத்துழிஞை யான்' என உழிஞைத்
திணையொடு படுத்துரைத்தார். '
நொச்சி' யென ஒரு திணைகொள்ளுதல்
ஆசிரியர் தொல்காப்பியர்க்குக்
கருத்தன்மையின் உழிஞைப்
பெயராலேயே நச். 'அகத்துழிஞை'
யென்றாரென்க. 'கல்லா வாய்'
என்றது, கிழத்திக்குப் டாணன்மேல்
உள்ள வருத்தத்தின் அளவைக்
காட்டிற்று.

(க—அ) தேன் உண்டும்
அமையாமல் அவ்விடமே திரிதரும்
வண்டுகளின் இயற்கை தோன்ற நச்.
இப் பகுதியின் முதலில் உரைத்தார்,
'அறல் வார' என்னுமிடத்து நச்.
சொற்பொருள் தோன்ற உரைக்கும்
அழகும், அதனாற் கருத்து
முதன்மையுற்று மாட்சிமைப்படுமாறும்
அறிந்து கொள்க. இம்முறை
உரைத்திறத்தில் மிகச் சிறந்ததாகும்.
'அறல்' என் பதை அற்று வீழ்
துளியெனக்கொண்டு கண்ணின்
நீராகிய துளி துளித் தொழுக என
அப்பகுதிக்கு உரைக்கலாமேனும்,

யின் பொருட்செறிவும் இயற்கையும் எவ்வளவு கவர்ச்சியாயிருக்கின்றன வெனக் காண்க. அவ் வருத்தத்தைக் கண்டு தன் அடியைச் சேர்ந்து என்று உரைத்தொடரிற் பொருள் கொள்க. அவ் வருத்தத்தைக் கண்டு இனிதாக அமர்ந்த எனப் பொருள் கொள்ளலாகாது. அறல் வார நகுபவன் முகம் நன்கு மலராது; ஆகவே அது பனியின் மிகுதியால் நன்கு மலராத தாமரைத் தனி மலர்க்கு உவமையாயிற்று. 'தனி மலர்' என்றார், கிழத்தியின் தனிமை தோன்ற; உள்ளுறைகளை முதலிற் கருதியே அதன்பின் கருப்பொருள்களை அமைத்துச் செய்யுளியற்றும் முறை இப்பகுதியில் நன்கு விளங்குகின்றது.

(கக—கக) "ஈனுத் தாயர் மடுப்பவும் உண்ணான்" (அகம். ராு என்பதிலும், மடுத்தல் தன் முயற்சியதாதல் தெளியப்படும். 'எடுத்துக் கொள்வதுபோலுந் தொடிவடு' என்னும் பாட்டழகு பெரிதும் நினைவுகூ தற்குரியது.

(கஎ—உய) பஞ்சுத் துய் போன்ற மகளிரின் நீண்ட கூந்தல், சேர்க்கையாற் குலைந்து பரந்து அணைமேல் மெத்தென்று நீளக் கிடத்தலின், அதன் மேலேயே ஆடவர் கவிழ்ந்து துயில் கொள்ளுதல் கருதிக் 'கூந்தலணை' நாள்களுட் கூறப்படுகின்றது. 'கமழு நின் அலர் மார்பு' என்றமையால் இங்கு அவ்வியல்புகள் நன்கெடுத்துக் காட்டப்பட்டன. 'அணங்குபோற் கமழு மென்றமையின் தெய்வத்தின் இயற்கைமணச் சிறப்பு நன்கு விளக்கிற்று.

கிழத்தியினிடம் தலைவனுக்காகப் பரிந்து பேசும் பாகன் பாணன் பாங்கன் என்பவர்கள் முறையே இத்தாழிசைகள் மூன்றிலுங் கூறப்பட்டனர்.

(உஉ—உசு) 'ஓர் யாண்டுக் கொருநால் வருதலின் இவ்வரவு, வாரா நாட்களிலும் மிக்க வருத்தத்தையே தருகின்றது; அதனை இஞ்ஞான்று ஆற்றிக்கொள்ளுதல்போல அவ் வாரா நாட்களிலும் ஆற்றியிருக்கக் கூடும். ஆதலின் நீ செல்வாயாக' என்பது கருத்து. 'பீள்:' கதிரின் கருப்பம்.

(க—அ) 'தூவி'யென்பது பெரும்பான்மையும் அன்னத்தின் மயிருக்கே வருகின்றது. அன்னங்கட்குத் 'தூவிகள்' எனவே பெயர் வழங்குதலும் நினைவுகூர்க. பழைய நூலுரைகளில் இச்சொல் அதன் உச்சிக் கொண்டையின் மயிருக்கும் (நெடுநல். கஙஉ - உரை), வயிற்றின் மயிருக்கும் (சிலப். ச: கக அடியார்க்கு. உரை), சிறகின் மயிருக்கும் ("தூவியஞ்சிறை அன்னம்", சீந். கசசக) வருகின்றது. ஆயினும் அன்னையைக் குறிக்க வரும்போது அதன் அடிவயிற்றின் மயிருக்குக் கூறுவது சிறப்பு. 'உணர்ப்பவன்', உணரச் செய்பவன்; கிளிக்கு மகிழ்ச்சியை உணரச் செய்பவன் என்க; 'முகம்' என்னுங் குறிப்பால், முத்தத்தால் அங்ஙனம் உணரச் செய்பவன் என்பது பெறப்பட்டது. நீர்ப்பக்கமாய்த் தாழ்ந்திருக்கும் மாவின் வடுக்குலைகளில் அலையின் துவலை விசையாய்ப் படுதலால், அவ் வடுக்கள், அலர்ந்த ஆம்பலின் மேல் முதலிற் பட்டு, அதன்பின் அலராத தாமரை முகையைத் தீண்ட அதனால் அத்தாமரை வலிதின் அலருமென்பது பின் நான்கடிகளின் கருத்து. தாமரையில் நேராகப் படின், மலர் கெடுமாதலின் இங்ஙனங் கூறினர். அத்தகைய நயங்கள் அமைந்த வயல் அணிந்த நல்லூரனே என்று இயைத்துக் கொள்க.

(கூ—உய்) தாழிசைகள் மூன்றிலும் முறையே 'கைசேர்ந்த இதழினைப் பாணன் காட்டென்றானோ' 'ஒளிவிட்ட அரக்கினைப் புலத்தி காட்

நO

கல்த்ம்தாகை

[மருதக்)டன்றனோ ' 'கோடுனர்ந்த

துகளினை அந்தணன்

காட்டென்றானே' எனக் கிழத்தி கூறினன். அவர்கள் என் வருத்தத்தைப் பின்னும் பெருப்பதற்காக இவ்வனங் காட்டு எனவே நீ இக் கோலத்தோடு வந்தனை போலும் என்பதற்கு, 'வேண்டார் இல்' எனப் படர்க்கை வாய்பாட் டாற் கூறினமைபோலவே ' அவனை ' யெனவுந் தன்னை அவ் வாய்பாட்டின் லேயே உரைத்துக்கொண்டாள். ஒலியாமல் திரிவானையும், அறிவிலா அந்தணனையும் 'ஒலிக்கும் புலைத்தி ' ' அறிவுடை அந்தணன் ' என்றது, இகழ்ச்சி. ' வய' என்னும்

உரிச்சொல் விகார வகையால்
'வயம்' என நின்றதென்று
பேராசிரியர்
திருக்கோவையாருரையில் (௯௦ :
கொளு) உரைத்ததால், இங்கே 'கய'
என்னும் உரிச்சொல்லும் 'கயம்' என
நின்றதென்று கொள்க.

(உஉ—உ௯)

கழிர்தவையுள்ளாது, கண்டவிடத்தே
நிற்பேணிக்கொளவின், ஆர்
நற்குணமேம்பாட்டால்
இந்நோயுழத்தல் எமக்கு
இழிர்ததன்று எனப் பெருந்தன்மை
தோன்றக் கூறிஞளென்க.

அ

(க-ரு) பகன்றைப் பூ, வெள்ளி வள்ளத்துக்கு வந்தது. அப்பூவைப் பொருந்தும்படி வளர்ந்துள்ள தாமரை, அவ்வெள்ளி வள்ளத்தில் வாய் பொருத்தியுண்ணும் முகம்போல உள்ளதென்க. பகன்றைப் பூ வெண்ணிறமானதென்பது, "வெள்ளிதழ்ப் பகன்மதியுருவிற் பகன்றைமா மலர்" என வரும் ஐங்குறுநாற்றாலும் (சஙசு) விளங்கும். சிலப். கக : கருஎ-ன் அடியார்க்கு நல்லா ருரையை நோக்க

இது கொடிப்பூவைச் சேர்ந்ததெனத் தெரிகின்றது. நூல்களிற் பெரும்பாலும் இம்மலர், வள்ளத்துக்கு உவமமாக வரக்காணலாம். " பகன்றை வான்மலர் பனி நிறைந்ததுபோற் பால் பெய் வள்ளம் " என்னும் அகநானூற்றடிகள் (உகசு : ௫-ரு) போல்வன இங்கு நினைவுகூரற்பாலன.

(௰-கசு) ' அலமரல் ', எச்சப்பொருட்டு.

(கசு-கஎ) பெண் என்னும் வழக்குப்பற்றிப் பரத்தையர்க்கு ' நல்லவர் ' என்னும் பெயர் வந்தது.

மகளிர் ஆடலில் ஆடவர் தலைக்கை தரும் மரபு புறம், உச :அ-கு-ம் அடிகளாலுந் தெளியப்படும். இஃப விளையாட் டாதலின், கவர்ச்சி கருதி நச். 'நீல ஆடை' என்றார்.

இப்பாட்டின் துறைக்குறிப்பில் 'எங்கள் ஐயர்' என்பது 'எங்கையர்' என வந்தது மரூஉ; 'எங்கப்பா' என்னும் வழக்குப்போல வெஃக. தொல்காப்பியத்தில் இங்ஙனம் வந்ததென்பது (கற்பி: கூ) நினைவிருத்தற் பாலது.

வி]   உமாரு
மபமா மையை

(௪—௫) 'சேப்பு' ஒருவகைக் கிழங்கு. நச். 'தான் தோன்றுங் கிழங்கு' ன்பது காண்க. அகன்ற பசிய இலையையுடைய அக் கிழங்கின் செடிகள் ிகுதியாக வளர்ந்துள்ள வயலிடத்தை நச். 'தான் தோன்றுங் கிழங் டத்தை' யென்றார். இனி அச் செடிகளின் இடையே அருமையாகத் ாமரை மலர்ந்திருந்தமையால், 'கை செய்து பண்ணினதுபோலப் பூத்த' ன்றுரைத்தார். நச். 'மை தபு' என்பதைத் தாமரையொடு சேர்த்ததும் தற்குக் 'கரிய இதழ் பொதிந்த, நீங்குகின்ற' என வலித்துரைத்ததும் ேர்மையும் பொருத்தமு மாகா. குற்றந் தீர்ந்த கிளர் கொட்டையென ிருந்தவாறே உரைப்பது நன்று. உள்ளுறையில் இது தலைவியைக் குறித் வின் 'கைசெய் தியற்றியதுபோல' வென்னுங் கருத்தும், 'மை தபு'வென் றுங் கருத்தும் அதற்கு இசைந்து நிற்றலுங் காண்க. 'கொட்டை' யென் து, மலரினுள் நடுவிலுள்ள பகுதி; இதைப் 'பொகுட்டு' எனவுங் கூறுப.

(கூ—கக) 'அறன்' என்பது எதனையும் முறைப்படி நடத்தல்; அது மட்டுமேயிருந்தாற் குற்றமே மிகுதியாயுள்ள இவ்வுலகம் பெரிதும் இன்னலுறும்; திருந்தாதும் போம். ஆதலின் அன்புக் தழைய வாழ்க்கை செலுத்துதல் வேண்டும். இக் காரணத்தினாலேயே வெறும் அறமே கருதும் 'அறக் கடவுள்' என்னுங் கூற்றுவன், எல்லாராலுங் கடுமையாகக் கருதப்படுகின்றான் என்க. ஆகவே இரண்டுந் தோன்ற 'அன்பிலன், அறனிலன்' என்றார். முதன்மையும், அறத்துக்கு அதனால் உண்டாகும் பெருமையுங் கருதி, அன்பை முன் வைத்தார். திருவள்ளுவரும் இங்ஙனங் கூறுதல் நினைவு கூரற்பாலது. 'முன்பகல்' 'பின் பகல்' என்பன இனிமை கருதி இயல்பாகவே நின்றன. இவை ஆறன் தொகை; 'பகலினது முன்' 'பகலினது பின்' எனக் கொள்க. இங்ஙனம் வருவதை முன்பின்னாகத் தொக்க வேற்றுமைத் தொகை' யென்பர் பரிமேலழகரும், (குறள், கூஉ:கூ-உரை). "எழுற் றவரினும் எழை" (குறள், அஅ:கூ) என்பதிற்போல 'எழுறுதல்' மித்துறுதற் பொருளில் வந்தது.

(கஙு—கசு) 'கண்ணார்க்கும்' எனக் கண் குறித்தார், அவர்கட்கு அஃது ஆடவரை அகப்படுத்தும் வலையாதலின்; சிறப்பும்மையால், 'அத்தகைய வலையை யுடையாரையும் நின் தேர் ஒரு வலையாயிருந்து அகப்படுத்தி வருகின்றது' என்னும், ஊரவர் கருதற்குரிய பொருள் பெறப்பட்டது.

ம

(க—கஙு)

'உயர்ந்த போர்' என்றது, இழிவு.

'தோழி' யென்றது,

தலைவியை.

(கச—கள) ஊடியிருப்பேனாயின் என்னும் பொருள் தோன்றப் 'பின்னர் ஒருமொழியைக் கூறாதிருப்பேனாயின்' என்றுரைத்தார்; அங்ஙனங்

'௨

கலித்தொகை

[மருதக்

-றாதிருத்தல் ஊடியிருத்தலை ஒக்கும். மேல் தாழிசைகளிலும் 'ஊடியிருப்

பனாயின்' 'இகலியிருப்பேனாயின்' என வருதல் காண்க. ஊடாமலிருப்பனாயின் எனவும் பொருள் தருதற்குரிய தொடரை இடத்திற்கேற்ப ஊடி

ருப்பேனாயின் என்று பொருள்படுமாறு உரைக்கவல்லகச். உரைத்திறம் ண்டுகொள்க. ஊடலும் விருந்தெதிர் கோடலால் மறத்தற்குரியதென்ற ால், இல்லறம் நடத்தும் ஆடவரும்

மகளிரும் பண்டு, விருந்தை எவ்வளவு
றதன்மையாக
மேற்கொண்டொழுகினரென்பது
தெளியப்படும். இவ்

ியல்பு, சிலப். ரு : உஉச-கூச-ம் பகுதியால் நன்கு விளங்கும். ஆசிரியர்
தால்காப்பியர் விருந்தை இல்லறத்துக்கு ஒத்த அறம் எனக் கருதினர்.
புணர அறம் " (மெய்ப், உச) என்பது
நினைவுகூர்க.

(கஅ—உக) 'பொய்சூள் அஞ்சிப்
புலவேன்' என்பதனாற், பண்டு
களிர்க்குப் பொய்யாமைபிவிருந்த
நல்லெண்ணம் நன்கு வெளிப்படும்.

(உஉ—உரு) '
முதல்வன்.........புதல்வன்' என்பது
கொண்டு, தன் ந்தையின் பெயரை

ஒருவன் தன் மைந்தனுக்கு வைக்கும் வழக்கமும், ஒவ் ்வொரு குடும்பத்துக்கும் ஆண்டிலும்

அறிவிலும் பழக்கத்திலும் மிகுந்த பெரி ்யோரே முதல்வராவரென்னுங் கருத்தும் அறியலாம்.

பொய்த்துயில்

ஞ்சும்' என்பதனால், அங்ஙனந் தலைவன் பொய்யாகத் துஞ்சுதலையும் மக ரிர் தாங்கலாற்றாதவராயிருந்தனரென்பது பெறப்படும்.

தாழிசைகள் மூன்றிலும் தமிழர் மாட்சிமைகள் சில கதிர்விட் டொளிர்தல் கண்டுகொள்க.

கக

(இ-அ) 'சேட் சென்றாய்', 'பௌவ நீர்', 'கௌவை நோயுற்றவர்' முதலிய தொடர்கட்கு நச். தமது மதிநுட்பந் தோன்றத் திறமாக உரைத் திருக்கின்றார். கோரைகள் கழியிலன்றிக் கடலில் முளையாமையின், 'பௌவ நீர்' கழியிடத்தைக் குறிப்பதாகக் கூறி அதனை ஆகுபெயரென்றார். 'சாய்', ஒருவகைக் கோரையின் பெயர். நச். அதனைத் 'தண்டான் கோரை' என்

றது காண்க. 'கொழுதி', பறித்து; "மென்தளிர்க் கொழுங்கொம்பு கொழுதி" (மதுரைக் காஞ்சி, ௫௪௯-எ) என்னுமிடத்தும் இவர் இப் பொருளுரைத்தார். இங்கே 'பறித்துக் கிழித்து' எனப்பட்டது. 'கோது தல்' என்பதும் இச்சொல்லின் திரிபெனக்கொள்க. 'பௌவ நீர்' என

றமையால் மருத நிலத்துத் தலைவிக்கு சிகழ்ந்தமை பெறப்பட்டது.

செய்தனிலத்திற் களவொழுக்கம்

(௪௪—௪௭) 'பொய்யாக எடுத்த சொல்' என்பதன் உரை விரகு அறிந்துகொள்க. 'உலமரல்' என்னுஞ் சொல். சுமர்கிப் பொருளை க:

கவி] உரை

விளக்கம் . சாங்

சுழற்சியாவது நெஞ்சத்தின் அலைவு. "புலம்பு வழிப்பட்ட உலமரல் உள்ள மொடு" என்னும் அகநானூற்றடி

(௩௯ : ம) இங்கு வினைவுகூறற்பாலது. உரித்து, 'உரிது' என வருதலை, "உரிதினின் உறைபதி" (பரிபா. ௧அ : ௫௫) என்பதற்குப் பரிமேலழகர் உரித்தாக உறையும்பதி என உரைப்பதி னின்றுங் கண்டுகொள்க.

(௧௯—௨௨)

இதன்கண், திருமணங் கருதிய தம் கருத்தையும் முடிவாகத் தலைவி குறித்தனளென்க. அதனை அவள் கூறும் வல்லமை அறிந்து மகிழ்ந்துகொள்க. 'புரிபு ஒருங்கு' என்பதற்கு 'ஒருங்குதலை விரும்பி' யென்பது உரை. 'ஒருங்கு', ஒருங்குதல்; ஒன்றாகச் சேர்தல்.

தோழிக்கு நாட்டம் நிகழ்ந்தமையால், தலைவி தனது கூட்டத்தை அச்சத்தால் நீட்டிக் கூறினளென்பது.

௬௨

(௧—௭) 'துணையின்றி' 'தனிமலர்' 'அம்மலர்' என்னுங் குறிப்புகளால் தாமரை மலர், ஒன்றெனக் கூறுதல் சிறக்கும். மேலும், இங்குத் தாமரை மலரைத் தலைவியின் கண்களுக்குக் கூறுதலினும்பார்க்கத், தலைவியின் முகத்துக்குக் கூறுதல் நன்கு பொருந்தும். வருந்திக் கண்ணீர்

விடு சோத்திற் கண்களைத் தாமரை மலர்கட்குக் கூறுதல் பொருந்ாது. 'திரு முகம் இறைஞ்சிக் கண்ணீர் வீழ்த்ததுபோலத் தாமரை மலர் சாய்ந்து தண் பனி உறைத்த' தென்பது இயைந்திருத்தலுங் காண்க. நீர்த்துளிகள் பல வாதலால் 'கண் நீர் தெறிப்ப 'வெனப் பன்மையாற் கூறினற்போலப், பல இதழ்களால் ஆன தளைகளும் பலவாதலால் 'மலர் தளைவிட்ட' எனப் பன் மையாற் கூறினரெனக் கொள்க.,

இணையிரண் டியைந்தொத்த

முலைகள்', இளமுலைகள். 'ஒசிந்து ஒல்கி' என்பதன் உரை

வல்லமையானது.

! (அ—கக) தனக்குக் கூட்டமில்லாமை மட்டுமின்றித், தன்னைப் பிறர் பழித்தல், பரத்தையர் ஏசுதல், பாணன் தொல்லை செய்தல் என்பனவுந்

தலைவன் பரத்தைமையால்

நேர்கின்றமை கூறித் தலைவி

ஊடுதல் இத் தாழிசைகளாற்

கூறப்பட்டன.

(உக—உச) 'இடையும்' என்பதற்கு இடைந்து நிற்றலும் எனவே உரைக்கலாம். அஃதிங்கு ஊடிநிற்றலை உணர்த்தும். இடையும் நெஞ் செனக் கூட்டுதல் வலித்துரைத்தலாம். இனி, 'நிறையும்' என்பது அக் னம் ஊடி நிற்குங் காலத்துத் தலைவன் தன்னை ஊடல் தணிவிக்க நெருங் கியபோதும் தலைவி தன் உள்ளத்தை அதன்வழி விடாமல் நிறுத்துதலை உணர்த்தும். ஆகவே, 'நிற்காணின் இவ் இடையும் நிறையும் கைத்தங்கா நெஞ்சுடையார்க்கு எளிதோ' என்றுனென்க. அங்ஙனமாயின் நிறைய

கீஎ சு
கலதம/தா ளைக்
[மருதக

மென்னும் உம்மை எண்ணும். 'கைத்தக்காமை', காமத்தால் மட்டுமன்று; பெரும்பான்மையுந் தலைவன்பால் அக்கோரத்துத் தோன்றும் அன்பாலும் அரு ளாலும் அறவுணர்வாலுமாமெனக் கொள்க. இதனை "அருண் முந்துறுத்த அன்பு பொதி கிளவி பொருள்பட மொழிதல் கிழவோட்குமுரித்தே" என் னுந் தொல்காப்பியத்தானும் (கற்பி. உ௰) அறியலாம்.

(க—ய) 'இன் மலர்' என்பதன் உரை இனிது. 'தவிர்பு அசைவிடு உம்' எனப் பிரிக்க.

(கரு—கஅ) 'மலர்ந்தாங்கே': மலர்ந்ததுபோலவே; சுடர் நோக்கி மலர்ந்ததுபோலவே, அது படிற் கூம்பு மலர்போல் என்று உரைத்துக் கொள்க.

(கக—உஉ) நச். 'பெய்து விளைத்தும் பெய்யாது கெடுத்தும்' என்பது, "கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை" என்னும் திருக்குறட் (கரு)

கருத்தோடு ஒத்துநிற்றல் கண்டுகொள்க : தலைவனே சென்றபோது தலைவி மகிழ்ந்து அங்ஙனம் செல்லாதபோது அவள் வாடுதலின், பெயல் உவமை கூறினார். பரிபாடல் ௯ : ௯௯-௯௪-ம் அடிகளிலும் பரிமேலழகர் இக்கருத்துப்பட உரைத்தார்.

(௨௪-௨௭) 'அனைத்தாக': எல்லாமாக ; 'ஐ': வியப்பு ; 'வியக்கத் தக்கன எல்லாமாக அமைந்தன்று ; நம் பரத்தையர் இல்லத்துக்கே செல்லுமின் ; நம் பரத்தையர் நமக்கு வேறாகும்படி, இங்கே கையின் முகை மலர்ந்தன்ன

முயக்கினல் தகைமையின்று.

இந்நாட்கள் தண்பனி வைகல் எமக்கு' என இருந்தவாறே உரைப்பது நன்று. அத்தகைய முயக்கத்

தால் இந்நாட்கள், தண்பனி வைகல்போற் கொடுமையாகவே இருக்கின்றன வென்பது கருத்து. இங்கே இவ்வாறேனும் வலிந்து முயங்குதலால் அங்கே பரத்தையர் மனம் வேறுவராதலின், 'வேறுக' என்றூர்.

கரு

(க-க) 'தாமரையை முழுமையும் சாய்த்து அதன் வள்ளிதழ் உற நீடி விளங்கிய ஒரு கதிர்' என்று கொள்க. மலரை மட்டுமல்லாமல் தண்டிலிருந்தே முழுமையுஞ் சாய்த்து என்றற்கு 'முழுமுதல்' என்றூரென்பது. நச். வேறு கூறினர். திணைமாலை நூற்றைம்பதிலும் (கஉஅ) இவ்வுவமை வருதது.

(எ-ம) 'தோய்ந்தாரை அறிவேன் யான் எனச்,' சான்றினூற் குறி கொண்டாள்' என்பது கருத்து. நனேர்தால் அறியமுடியாமையின், 'சாய் குவன் அல்லளோ' என்றூள். மேல் தாழிசைகட்கும் இஃதொக்கும்.

நவி] உரை

விளக்கம்

கூ௫

(கரு—க அ)

'கண்டே எம் புதல்வனை' என்பதன் உரை விரகு அறிந்து மகிழ்க. 'கண்ணியார்': கண்ணினவர்; இங்கு, முயங்கினவர்.

(உய-உக) 'நீங்காய், இகவாய்' என்பதன்கண் சச். வல்லமையாய்ச் சென்றூர். 'சுங்கு', என்பால் என்னும் பொருட்டு; "ஒழிக காமம் சுங் கென" (சீந். எஉ) என்பதிற் போலவென்க. தலைவன் தன் புதல்வனை வாயிலாகக்கொண்டு தலைவியின்பாற் சென்றமையால், அவனை அவனிடத்தினின்றுந் தடுப்பாளாயினள்; இவை "வாயிலின் வரூஉம் வகை" "தன் வயிற் சிறைப்பினும்" என்பவற்றூற் (கற்பி. கூ) கொள்ளப்படும்.

க௫

(க—கூ)

வார் மாறுக;

'தலைமாறுவார்' ஒருசொல் எனினும் அமையும். 'தலைமாறு அதனால் அணிதல் என்றும் நீங்காத நின் முக்காழை யாங்

காண நல்கிக் கைபுனை வேழத்தைப்

பூங்கயிற்றினாற் பையப் பைய வாங்கிப்

புட்டில் ஒலிப்ப ஆங்கண் நின்றும் ஈர்த்து இங்கே வருக, எம் பாக மகன்!' என இருந்தவாறே இயைத்துரைப்பின் உரை மிகவும் எளிதாகவும் இனிதாகவும் இருக்கும். வளைத்து வளைத்து இழுத்தல் கருதி 'வாங்கி' எனப்பட்டதென்க. நச். இப்பகுதியில், தொடர்களை முன்னும் பின்னுமாக மிகச் சிதைத்திருக்கின்றார். 'பவளம்' பவழமென வழங்கினாற்போலக் 'கவளம்' என்பதும் 'கவழ'மென வழங்கிற்று. இவ்விருசொல் வழக்காறும் திணைமாலை நூற்றைம்பதிலும் (௬௨) வருதல் காண்க. 'புட்டிலின்' என்றமையாற் 'புட்டில் ஒலிப்ப'வென்பது தோன்றுகின்றது; 'புட்டில்', கெச்சை.

(௧௫–௧௭) 'நோக்கு', அழகு. 'அத்தத்தா': அப்பப்பா; அத்தா அத்தா' என்பதன் திரிபு. முன் தாழிசையில் 'தெவ்வம் உழப்பார்' எனவும், அடுத்த தாழிசையில் 'புறமாறப்பட்டவர்' எனவும் வருதல்போல இத்தாழிசையிலும் 'சாஅய்ச் சாஅய்மார்' எனப் பெயராகவே அருகி வந்ததெனக் கொள்வது சிறப்பு. 'சாஅய்ச் சாஅய்மாரது எவ்வநோய்' என்க. 'கலன் உண அதனால் மெலிந்து மெலிந்து நின்றவரது எவ்வநோய்'

என்பது உரை.

(கஅ–உக) 'புறமாறப்பட்டவ' ரென்பதும் ஒருசொல் தன்மைத் தெனின் ஆம்; 'புறத்தே கைவிடப்பட்டவர்' என்பது பொருள்.

(உஉ–உக) காதிற் கனக்குழை வாங்கிப் பெயர்தல், குழந்தைகளின் விளையாட்டுச் செயல்களுள் ஒன்று. தலைவன் பிரிந்தமையாற் 'போது இல் வறுங் கூந்தல்' என்றாள்; "பூ இல் வறுந்தலை" என்னுங் குறுந்தொகையும் (கக) நினைவுகூர்க. 'பாட' என்பதைப் 'பட' என்னும் பொருளில் உரைத்தார். தலைவி தன் கூந்தல்மேல், தோளில், புதல்வனை வைத்துக்

கக
கலித்தொகை
[மருதக்

கொள்வது, தன் காதிற் குழை வாங்கி விளையாடும் அப்பழக்கத்தால் அவன், தலைவனது மார்பின் கோதையையும் அறுத்து விளையாடுவனாதலின், அது கருதியென்க. ' ஏதிலார் கண் சாயுமாறு கோதை பரிபாடக்

காண்கும்' எனவே இயைப்பது நன்று.

கசா

(க-கடு) 'விருந்தொடு கைதூவா' என்னுங் குறிப்பால் ஊடுகின்ற வன் இல்லக்கிழத்தி எனக் கொள்க.

(கசு-உச) 'சேயனாய் நின்று, நாம் கொணர்ந்த பாகன் வினைவு சிதைத்து வாய் விரைந்து, ஏறிப் பாடியம் என்ற தன்மைத்தாக' என்றுரைப்பின் சிறக்கும். 'பாடியம்' என்றான் தலைவனையும் உட்கொண்டு.

தன் நினைவின்படி பாணன் 'ஏறுதிப் பாடியம்' என்றாற்போல, மகனும் தன் தந்தையின் நினைவால் 'அத்தத்தா' என்பான் எனக் கருதினன்.

(உ௫—௬௭) 'கல்வினை...... ...என்பார் போல' என்பது பழமொழி. 'சேய் நின்ற' 'சினவல்' 'கடக்கிற்பார்' என்றதனால் முறையே துனித்தலும் பிரிவு நீட்டித்தலும் அஞ்சதலுங் கொள்ளப்படும் (தொல். கற்பி: ௫ - உரை)

௬௭

(௧—௯௫) 'தொடக்கத்துத்தாய்'

'வழிமுறைத்தாய்' 'புத்தவன்' எனப் பலரைச் சேர்ந்தொழுகுதல் தெரிதலின், இளமையை இங்ஙனமெல் லாம் அடக்கமில்லாது கழித்தல் கருதி 'அடக்கமில் போழ்து' என்றார்.

'மயங்கு நோய் தாங்கி' என்றமையாற், காமநோயுண்மையும் ஆனல் அது தாங்கும் ஆற்றலுண்மையும் பெறப்படுதலின், அவள் இடைநிலைப் பருவத்தினளென்பது பெறப்படும் (தொல். கற்பி: ம-உரை). 'ஈது', இந்த என்றுரைத்தமை நினைவிருத்தற்பாலது. 'புத்தேள்': புதுமை; ஆகுபெயராற் புதியவளை உணர்த்திற்று. 'மார்பினும் சிறுகண்ணும்' என்க. 'விடு இனி அன்ன பிறவும்' என்பதற்குப் பரத்தையர்பாற் செல்லுதலும் அவர்களோடு விளையாடுதல் முதலியனவும் என உரைப்பினும் ஆம். "பதி அமை பருதி" (சிந். ச : கூஉ) என்பதிற்போல அமைதல் தவிர்தற் பொருளில் வந்தது.

(க-சு) 'பொருந்து ரோன் கதவு' என்பதனால், வலிய இரட்டைக் கதவுகள் பெறுதும். 'ஊட்டலெனுய்ப் பால் பெருகுமனவெல்லாம்' எனக.

லு] உலாரு

மெனாகுமை சாஎ

(அ-ஙக) பனங்குரும்பையிற் கொடிகளை விட்டுப், பின், கிழிருந்து றுக்கி யிழுக்கும் சிறு பிள்ளைகளின் செயல் ஒன்று இப்பகுதியின் முத ரண்டடிகளிற் கூறப்படுகின்றது. உரையிற் 'பிள்ளையார்' என்றது, ருகவேள். 'வேற்று ஆனத் தாயர்', வேற்றுமை அமையாத தாயர் ளிற் சிறக்கும். 'கள்வன்' சேறற்சொல். 'வெந்த புண்......அற்றால்': பதமொழி.

(க-கக) 'ஆர்': காம்பு. சில தாமரையிலைகள் நீர்க்குமேல்உயர்ந்திருக்
ும்; அடுத்த தாமரைகள் சில நீர்மட்டத்தில் அவ் விலைகளின் கீழ் அவற்
ின் நிழலிற் பூத்திருப்பனபோற் காணப்படும். இவ் வழகிய தோற்
த்தை, 'நீருள்......செம்மல்' என்பதனால் ஆசிரியர் அழகாக விளக்கினர்.
'போதவிழ் தாமரையன்ன நின் காதலம் புதல்வன்" என்றார் ஐங்குறு
ாற்றிலும் (சஉச). கொள்வாளும் என்பதில் 'ஆம்' செறற் குறிப்பு.
ேத்தை' என்பதும் அது.

(உ௰-சக) சுறுவேறு எழுதிய மோதிரம் நினைவுகூர்க. 'பாடுவி':
ாடுவோன்; மிகுத்துப் புகழ்கின்றவன் என்றார் இடகோக்கி. கோய்:
ினை.

20

(க-கக) வேறு வேறு காலம் உணர்த்தும் இடைநிலைகள் முதலியன
லாது, பொன்னின் இயல்பை விளக்கிக்கொண்டு எஞ்ஞான்றும் ஒரு
தன்மைத்தாய் நிற்றலால் நச். "சுடுபொன் என வினைத்தொகையாகாமை
உணர்க" என்றார்; பெயரெச்சத் தொடரின் விகாரமென்பது கருத்து.
திரை: திரைத்த துகில். வாளும் மழுவும் வருதலானும், 'ஆனேற்றவிர்பூண்'
என்பதனாலும், திருமாலின் ஐம்படைத் தாலிபோலச், சிவத்தின் படைகள்
அமைத்த பூண் ஒன்றும் குழந்தைகட்கு அணிதலுண்டென்பது பெறப்படும்.
மூதாய்: 'இந்திரகோபம்' என்னும் பூச்சி. 'சூழ்நூலாக அமைத்த மணி

மருள் மாலை' என்க.

(கஎ—௯க) 'அணிக்கு அணியாய் நிற்கக் கொடுஞ்சினைபற்றிப் பையயத் தூங்கும் நின் விரற் 'சிறடி நோதலுமுண்டு என் கைவந்தி பாலுண்ணிய' என இருந்தவாறே இயைத்துரைப்பது சிறப்பு. 'பாண்மை': இசைத்திறன். குடியுண்டத்தை, ஒருசொல்; பருகு என்பது பொருள். 'என் பாராட்டுப்பால்' என்பது 'என் பாராட்டைப்பால்' எனச் சாரியை பெற்று நின்றது, மேல் ஞாயர்மாட்டைப்பால், என வந்தாற்போல. பாராட்டு: மகிழ் மொழிகள். 'ஞாயர்', நின்தாயர்; முன்னிலையோடு அடுத்த

முறைப் பெயராதலின், " ஞாயரென்றது, தன்னைப் பிறர்போற் கூறித்து,' என்றார்.

(க—ம) 'நின் வாயைக் கண் கலந்து நோக்கு ஆ, வேழத்தோ(டு) மணலில் உழக்கி ஆர்ப்ப இயலும் என் யானை வந்திக நக்கு' என்று கொள்க. உரையில் 'வானம்' என்றது, வான். 'செம்பாகம்' 'செம்பாதி' என்பன ஒத்த பாதி. (குறள், ாய : உ. பரிமேல். உரை) சரிபாதி என்க

மிகக் குத்துதலை நச்.

'யானை' என்றான்.

இறக் குத்துத லென்றார்.

புதல்வனை அன்பினால்

(உக—அ) 'வீதலறியா

அறிந்து மகிழ்க.

விழுப்பொருள்' என்பதன் உரைத்திறப்

(உக—கச) அறனும் அன்பும் இல்லாதவன் என்னும் உயர்ந்த பொருள் தோன்றுதலின், 'அறனில்லா அன்பிலி' என்றியைப்பது இயல்பும் சிறப்பு மாகும். தொல். கற்பி: க-ன் உரையில் இவர் இவ்வாறே இயைத்துரைத்தல் நினைவுகூரற்பாலது.

உஉ

(க—அ) "வெரூஉதலென்பது, அச்சம்போல நீடு நில்லாது கத மெனத் தோன்றி மாய்வதொரு குறிப்பு; அதனைத் துணுக்கென்றலுமாம்" என்பர் இளம்பூரணர்; (தொல். மெய்ப்: கஉ-ன் உரை). 'இமைப்பின்': இமை நோக்தில்.

உங

(க—க) 'பெரியார்க்கு அடியரோ ஆற்றுதவர்' என்பதனாற் பண்டைக் காலத்து மகளிரின் தன்னுணர்ச்சியும் உரிமையுந் தெளியப்படும். 'கடியர் தமக்கு...மாற்று' என்பது பாட்டிடை வைத்த குறிப்பு (தொல். செய்: ககூ). 'மாற்று': மாற்றம், மறுமொழி.

(ம—கச) 'களவனது ஒதுக்கம்போல்' என இயைப்பது நன்று.

உச

(க—க) இந்த இருதலைப் புள்ளைச் 'சிம்புள்' என்னும் ஒருவகைப் பறவை யெனவும், எட்டுக் கால்களும், இரண்டு தலையும், வட்டக் கண்ணும், வளைந்த எயிறும் உடையதெனவுங் கூறுப.

(எ—கஙு) 'தெளிந்தேம் யாம்' எனத் தலைவி கூறும்போதே 'காயாதி' எனத் தலைவன் எதிர்மொழிந்தான் எனக் கொள்க. 'எல்லாம் வல்

உரை

வளககம

சீர்கோ

எல்லா' எனவும் இயைக்கலாம்; இம் மாயமெல்லாம் வல்லவன் என்பது கருத்து. 'மாண மறந்து' என இருந்தவாறே கூட்டி 'மிக மறந்து' என்றுரைப்பது நன்று. இளம்பூரணர் இங்ஙனங் கருதினர் (தொல். மெய்ப்: உச—உரை).

உரு

(க—கக) 'பாணன் இரவு' என்பதன் உரை அழகிது. 'ஓடிவது போலும்' என்றமையால் உரையில் 'வஞ்சிக் கொம்பு' என்றார். வஞ்சி யென்னும் பெயருள்ள கொடி இதனின் வேறு. 'போரார் கதவம்': பல

கைகள் பொருந்துதலமைந்த கதவம்; 'போர்,' பொருந்துதல்; என்றது, இரட்டைக் கதவை. "போர்க் கதவு" (பட். சாஅ) என்பதன் உரையிலும் இவர் இங்ஙனம் உரைப்பது நினைவுகூர்தற்குரியது.

(உஉ–உகு) 'காணாது': நினையாது; முன்னெல்லாம் அவன் வஞ்சம் அறியாது சூள் நம்பினாள், இப்போது அவன் வஞ்சந் தெளிந்துவிட்டமையால், 'பண்டையவல்ல நின் பொய்ச் சூள்' என்றாள்.

உ௫

(க–ரு) மாலைக்கு இனமான மலர்களல்லாமையால், அல்லி அனிச்சம் என்பவற்றிற்கு வேறு கூறினார். 'இன்று நன்'றென்றது இகழ்ச்சி. என் ஐ எனப் பிரிக்க.

(கூ–உச) புதிய பரத்தையர், குறியிடத்துவந்த பரத்தையர், சேரிப்

பரத்தையர் எனப் பலர் இப் பகுதியிற் கூறப்பட்டனர். 'தொடியுற்ற வடுவும்' என்றமையால் தழுவுதல் பெறப்பட்டமையின், 'குழைந்த தார்' என்பதும் அந் நல்லாரால் சேர்ந்ததாகக் கருதி நச். இயைத்தார். 'காணின் நெகிழுமென் நெஞ்சாயின்' என்றதனால், தலைவி தனது ஆற்றாமையுங் கூறி ஊடல் தீர்ந்தமை பெறப்பட்டது.

உஎ

(க—கூ) தன்னை மறந்த கனவென்று அக் கனவின் இயல்பை மிகுத்துக் காட்டுதற்கு 'கழியக் கனவு'

என்றுரெனிற் சிறக்கும். இன்பக்

கனவாத

லின் காரிகை நீர்த்தாயிற்று. 'மூழ்கி மயங்கிப் பின்னும் அவ்வின்பத்தின் பொருட்டு ஆங்காங்குச் செல்லுதலும்' என உரைத்து இன்பமும், 'உயர்ந்த பொருளும்' என்றதனுற் பொருளும், 'முயன்று அறஞ் செய்யாது அஃது இயல்பாய் அமைந்தோரது உலகமும்' என உரைத்து அறமும் என இம் மூன்றும் உரித்தாய் ஒருதலே அடைதலும், இவ்வாற்ருற் பிரிதலும் புணர் தலும். ... 'கனவெனப்பட்டதும

காரிகை நீர்த்து' என்றாக இருந்தவாறே உரைப்பின் உரை இனிதயிருக்கும். "இன்பமும் பொருளும் அறனுமென்றாங்கு" (தொல். களவ க) என ஆசிரியர்

விஇத்த முறைப்படியே, முறையே இம் மூன்றும் அமை தல் கூறிற்றென்க. ௧௪. உரை வல்லமையா யிருப்பினும் அது, தொட கனைப் பெரிதுஞ் சிதைத்திருத்தலின் இயல்பானதாகாது.

(௧௯—௫௪) உவமத்தில் 'இமயங்' கூறினமையால் 'மணற்குன்று என்றார். 'ஓர்த்தது இசைக்கும் பறை' ஒரு பழமொழி. 'ஓர்த்தது மனத்திற் கருதியது. 'துனை' யென்பது வண்டுக்குக் கொள்க. 'ஒராங்கு ஒன்றைப்போலவே யென்பதற்கு ௧௪. 'ஒருபடிப்பட' என்றார். 'செயலமை என்றது, ௧கைக்கும்

ஒக்குமாதலின், இருந்தவாறே உரைக்கலாம். 'செரு போலத் தட்ப' எனின் இயல்பாயிருக்கும். 'கடி கா' என்பதற்குப் பிறரை 'பாதுகாத்தலையுடைய கா' என்றுரைப்பது சிறப்பு. தொல். உரி: அ உரையிற் சேனவரையரும் இங்ஙனங் கருதி மேற்கோள் காட்டினர்.

(ருக—கஅ) 'பொழுதினாற் காமன் விழா மேவுதல் வர' என கொள்க. கனை கனவாம் நேரம் இது எனத் தலைவன் குறிப்பித்தமை இறு யடிகளாற் பெறப்பட்டது. 'கனை'

வென்பது செய்யுளிற் ‘ கனவு’ எ
உகரம் பெறுமாதலின் ஙச். “
செய்யுள்முடிவு” என்றார். இக்
கலிச்செய்யு சிறந்த நலங்கள்
அமைந்துள்ளது.

உஅ

(க—கக) வண்டு சாந்தத்தின்
மணம் நுகர்தலின் ‘வண்டூது சாந்தம்
என்றார் (சிந். எ : க௬௪—உரை).
‘ மன் ’ என்றதனால், ‘ அத்தன்மை
போயிற்று ’ எனக் கழிவுப்பொரு
ளுரைத்தார் (தொல். இடை: ௪). து

வறத்திலும் இருவரும் உடனுறைதலின்

' உடனுறை வாழ்க்கை ' எனப்ப

டது. 'உதவி உறையும்': உதவியாய் இருக்கும். 'கடவுண்மை கொ டொழுநுவார் கடவுளர் (முனிவரர்); அவர் பிணையன்னர் பலர்' என தலைவி மடனழித்து கூறினள்.

(கஎ–உஅ) "நகாரன்ன நளி நீர் முத்தம்" (சிறுபாண். ருஎ) என் திற்போல 'நகார்,' எயிறு. 'கற்றை' என்றற்று நச். 'பற்றம்' என்ற 'நாளணிக்கு ஒப்பப் பிணி கொள்ளுங் கண்ணொடு கடவுளைக் கண்டாயோ

என இருக்.நமாறே உரைக்கலாம்.

(உகூ–நகூ) 'அகலத்துக்கு ஒரு சார மேவிய கடவுளரெல்லார்க்கு முட்டுப்பாடாகலுமுண்டு' எனக் கூறின் இயல்பாகவும் சிறப்பாகவும் இரு கும். ஓர் சார, ஒரு சேர வென்க. 'செல்லா விடுவாயேல், நின் அகல துக்கு ஒரு சேர விருப்பங்கொண்ட கடவுளரென்னும் பரத்தையர்க் முட்டுப்பாடாகலுமுண்டு' என்பது கருத்து.

(க—கூக) 'நீருள் நிழல்போல்,' சிறந்த உவமை : 'கலப்பையில் ஊதைக்கும் படைவாள்' என்றது கொழு. 'நிறை ஏர்,' இகழ்ச்சி. 'வல்லுப் பலகை': சூதாடு கருவிகள் வைத்தற்குரிய அறைகள் கீறிய பலகை, உரையில் 'மடுப்பு' என்றது, பூட்டுவாய். நிரப்பம்: ஒப்பு; பாத்தை, ஆண்பாலுக்கு வந்தது. துவ்வா: துய்த்த ; 'குறுவட்டா' வென்பதில், 'வட்டு,' சூதாடு கருவி.

(கூஎ—சகூ) 'அகடாரப் புல்லி......யாத்து விட்டாங்கு' என நாணின்றிக் கூறு மொழிகளாலும் இப்

பாட்டு அடியோரைத் தலைவராகக் கொண்டதென்பது பெறப்படும்.

இப் பாடலின் உரையாடல் இயற்கையொடு மாறுகாது இனிதமைந் தின்னமை அறிந்து மகிழ்தற்குரியது.

௫௰

(க—கரு) இவர்தரல்: பரந்து பாராதே. நின்குங்கே: நின்னிடத்தே; அஃது அவன் பரத்தையரிருப்பிடத்தைக் குறித்தது. 'காலிற் பிரியா,' விரைந்து பிரியா வெனிற் சிறக்கும். பரத்தையர்பாற் செல்லுதற்காக விரைந்து பிரிக்தென்பது கருத்து. ஈகை, புதிய வென்னும் பொருட்டு; குறும்பூழை உணர்த்தும்போது அச் சொல் ஆகுபெயர்; புதிதாகக் கொடுக்கப்பட்ட குறும்பூழ் என்பது உரை.

(கஎ—கக) 'பார்வைப்போர்': பார்வையுடையாளது போர்; மேல் அடியில் 'ஒட்டிய போர்' என்பதற்கு 'ஒட்டுதலை யுடையாளது போர்' என நச். உரைத்தலை காண்க.

இச் செய்யுளிற் பரத்தையர்க்கும் குறும்பூழ்க்கும் பொருந்துமாறு தொடர்கள் அமைந்தமை கண்டு மகிழ்தற்குரியது. மேல் மூன்று செய்யுள்களிலும் இந் நலம் கண்டுகொள்க.

௯௧

(க—௩) நலங்கிய ஆடையை உரையில், 'முசிந்த புடைவை' என்றார். ஆண்பாலாருடை, வேறிடங்களிலும் 'புடைவை' எனப்படுகின்றது; (மதுரை. ௫௬௮ - உரை).

(௨௨—௩௧) உரையில் 'தரால்' என்றது, குப்பை. 'பக்கரை': குதிரைச் சேணம்; 'சேதிகை', ஒருவகையான ஓவியக் கோலம்; இங்கே அது சேணத்தின்கண் அமைந்தது.

எஉ

கலித்தொகை

[மருதக்

௯௨

(அ—உள) 'வலந்து', கட்டுண்டு என்னும் பொருட்டு. இச் செய்யுளிற் பரத்தையர்க்குரிய தொடரும் யானைக்குரிய தொடரும் இணைந்து வருகின்றன. தலைவன் மறைத்துக் கூறியும், அது தெரியாதாள் போல இருந்துவிடுந் தனது 'மடம்' என்னும் பெண்ணியல்பை அழியவிட்டுத் தலைவி அவன் குற்றத்தை இங்ஙனம் வெளிப்படையாய் எடுத்துக் கூறுவாளாயினள். இது, "தன் வயிற் கரத்தலும்" (தொல். பொருளி: ௰) என்னும் நூற்பாவாற் கொள்ளப்படும்.

(உஅ—கக) 'பெண்டிரெல்லாம்' என்பதில் 'எல்லாம்' தன்மைப் பன்மைக்கு உரியது (தொல். பெயரி: கக). இங்கே படர்க்கைக்கு வந்தது இடவழுவமைதி. 'சார்ச் சார்ச்......ஓம்பு' என்பதை இருந்தவாறே உரைத்து, அதனுட் 'சிறுபாகராக' என வந்தமையால் 'அப் புதுப்பரத்தையர் கடாம் படாதபடி அவரிடம் வல்லமையாக நடந்துகொள்' எனத் தலைவி குறித்தாளென் றுரைப்பது சிறப்பு. 'பாகர்' என்பதிற் 'பாகு' என்பது சொல்; உரையில் நச். ஒருமையாய் உரைத்தமை காண்க.

௩௩

(க—உக) மிகுதி தோன்றப் 'பாட்டாதல் சான்ற' என்றாள். 'தேறியல் வேண்டும்' என்பதில், வேண்டும், உம் ஈற்றான் வந்ததோர் வியங்கோள். 'கருமை மலர்தல் பொருந்தின' என்றுரைத்தார் வெயில் நுழையாச் சோலை என்றற்கு. தலைவன் தன்வயமின்றிப் பரத்தையர் வயமாய் ஒழுகிக் கெடுதலின், 'ஈர்த்துய்ப்ப' என்றாள்.

(கூ—கூஅ) 'வாள் தானை': வாட்படை வல்ல சேனை; இங்ஙனந் தனியாக ஒருவனைச் சேனையிருந்தமை தெளியப்படும். 'தேற்றித் தெளிவிப்பேன்' என்பதற்கு ஆற்றித் தெளிவிப்பேன் என்பது சிறப்பு. 'மெய்யது,' அது மெய்; என்று தன் ஒவ்வாமை கூறினளென்க.

௩௪

(க—எ) 'இழை ஆணி' என்பதில், இழையைப் 'பொற்படை' யென்பர் புறநானூற்றுரைகாரர் (கஉக : ௪) வேந்தன் செம்மையால் மாரி சுரக்கும் என்பது நல்ல உளநூலுணர்வோடும் மெய்யுணர்வோடுங் கூறும் உண்மை மொழி. செம்மையின் உணர்வாற்றல், இறைவன் அருள் வலியைப் பெறுமுகத்தால், எல்லா அகப்புறப் பொருள்களேயும் இயக்கவல்லதென்பது தமிழ்ச் சான்றோர் முடிபு. "கோன் நிலை திரிந்திடின் கோள் நிலை திரியும்; கோள் நிலை திரிந்திடின் மாரி வறங் கூரும்" என்று இஃதியங்கும் முறைமையையும் மணிமேகலை (எ : அ-க) சிறிது எடுத்துக்காட்டிற்று.

உரை விளக்கம்

எ

(அ—ம) பெரிய நடுக்கமுற்றவளே, 'அறநிழலுக்கு வேறான புறநிழல் இடப்பட்டாளோ' வெனக் கூறுதலாற், புறநிழல்கள் அறத்தின் நிழலை போல் அத்துணைக் குளிர்ச்சியுடையவல்ல என்பது விளக்கினாரயிற்று. 'நிழலின் புறம்' என மாற்றியுரைத்தலால் இச்சிறப்பும் இல்தாயிற்று

நரு

(க—சு) இடுக்கெனத்தக்க கொடுமையை ' வெருவந்த

கொடுமையும் என்றார். அச்சம் வேறு, இத் துணுக்கென்பது வேறு. (கலி. மருத உஉ-ன் உரைவிளக்கங் காண்க.) ஏனைய அரசர்களின் குடைகளைவிட உயர்ந் தென்றற்கு 'ஏனையவற்றின் உயர்ந்த குடை' என நச். உரைத்தா (புறம். கூக : க-௬-ன் உரை காண்க).

(எ—கஅ) 'அருந்தவ முதல்வனை', நச். 'அறம் வளர்த்த நாயக ரென்றலின், அவரைச் சிவபிராணைக் கொள்வது பொருந்தும். "வாய்மை யனுதலின்" என அப்பெருமானைப் பரிபாடல் (டு : கூ) நவலுதலு இங்கு நினைவுகூரற்பாலது. '

திறம் பெயர்ப்பான் ' என்று கொள்க. 'திறம் இடம்; 'உடம்பிடத்தே ' யென்றார் நச். ' பழிதபு முகம் ' என்க.

மருதக்கலி உரைவிளக்கம்

முற்றும்.

ச. முல்லைக் கலி

க

(௧௪) பிடவம், ஒரு முட்புதல். தடவுபு: வளைந்து (தொல். உரி: ௨௫) ஒருவிபு: கலைந்து. கோடல், ஒரு கொடி. உரையிற் ' குந்தாலிப் படை ' யென்றமையாற் 'கணிச்சி' வேறு, 'மழு' வேறு என்க. நச், சிவத்தைமட்டு பலவிடங்களில் 'இறைவன்' என்னுந் தலைமைப் பெயராற் சுட்டுதல் நினை கூர்தற்குரியது.

(௧௦—௧௪) ' நறை ': எறு விடும்போது சுற்றும் நறுமணப் புகை.

(௧௫—௨௰) 'உலண்டு', பட்டுப்பூச்சி; அதன் நிறம் புற்கென்ற புல்லிய நிறம்; என்றது, கருமை கலந்த செம்மை; புகர் நிறம் என்பதும் இது.

(௬௪—௬௫) நெஞ்சம்; இதயம். 'மணிமாலை ஊதுங் குழல்' என்பதற்கு அழகிய மாலைக் காலத்தில் ஊதுங் குழல் என்பது நல்லது.

(௬௬—௪௨) ' இடத்தல் ' அகலச்செய்தலாகலின், அலர்ந்த என்றுரை தார். ' அயலதான கொல்லேறு ' என்றியைப்பின் சிறக்கும்.

[illegible]

[illegible]

உ

(கூ-கஉ) 'புகல் நல் ஏறு' என்பதிற் 'புகல்' விருப்பம்; உரையிற் 'புகற்சி' யென்றதும் அது. "பெரும்புகல் மறவர்" (மதுரைக். ௩கக) என்பதில் நச். 'விருப்பத்தையுடைய' என உரைப்பது நினைவுகூர்க. இச்செய்யுளில், மேல் உ௯-ம் அடியிலும், 'புகலெழ' என்பதற்கு இவர் இப்பொருளுரைப்பர். மா: நிறம்.

(கக-உய) சிலை செறி : ஒலித்தல் மிக்க.

(கூய-கூஉ) உடலேறு :

சினக்கின்ற ஏறு.

(கூகூ-கூக) 'தெண் கண்ணி......பொதுவன்' என்னும் அடைமொழித் திறங்கள் கண்டு இன்புறுதற்குரியன. 'சிறுகுடி', முல்லைநிலத்தூர்கட்கும் வந்தமை கண்டுகொள்க.

(௰—௨௧) மழை, இங்கு மேகம். இறைவனே அழித்தற்குரியனாதலின், அவனைக் 'கொலைவன்' எனவுங் கூறினர்; மேல் 'கூற்றுவன்' (கலி. ௱௧:௪௫) என்பதுங் காண்க.

(௨௪—௨௭) அரி: பகையான ஏறு. எரிதிகழ் கணிச்சி யென்றமையாற் 'கணிச்சி' இங்கு மழு.

(௪௰—௪௫) உறுதலடியாக, ஊற்றுக்களம் எனப்பட்டது. எருமைமேல் ஏறிய கூற்றுவனை எருமை என்றார். வடிம்பு, இங்கே கால் விளிம்பு. 'கூற்றுவனுக்குக் கூற்றுவன்' என்னுங் கருத்தால் இறைவனைக் 'கூற்று' என்றார்.

(௫௧—௭௧) 'தழூஉ': குரவை; தழுவி யாடுதலின் என்க. 'அஞ்சாராய் ஏறுகொள்பவர் உயிர் துறந்தும் அதனால் ஆயமகள் வருந்துதல் கொள்ளாள்; அவர்கள் அஞ்சாமையையே வியப்பள்; ஆனால் ஏறுகொள்ள நெஞ்சிலாதார்க்கே பெரிதும் வருந்துவள்; அத்தகையவன் தோள் அந்நெஞ்சிலார் எய்தற்கரிய' என்னுங் கருத்தில், 'உயிர் துறந்தும் நைவாரா ஆயமகள்'. என இருந்தவாறே இயைத்துரைப்பது நல்லது.

௫

(௧—௧௭) 'மலிதிரை ....தென்னவன்' என்னும்அடிகள், பழைய கடல்கோள் நிகழ்ச்சியைக் குறிக்கின்றன; சிலப். ௧௧ : ௧௭—௨௨ அடிகளும் அவற்றின் உரையும் நினைவுகூர்க. 'தொல்லிசை ஆயர்' என்பதனால் ஆயர்குடி மிகப் பழைய குடியென்பது பெறப்படும். 'குரால்':

உரை விளக்கம்

நீல் நிறம் வாய்ந்த உமையம்மை பாகன் கூறினமையால், முக்கண்ணன் உருவம் கருமை கலந்த பொன்மையாகிய கபிலநிறத்துக்கு உவமை யென்க.

(உக - உரு) 'குருஉக் கண்' என்பதிற், 'குருஉ,' நிறமென்னும் பொருட்டு. தரவில், மூன்றுவதாகக் குரால் நிறமுன்ன ஏறு கூறினமை யால் இங்கும் அந் நிறமுன்னதாக நச். வருவித்துரைத்தார். அரி : செவ்வரி கருவரிகள்; இங்கு அவற்றையுடைய கண்ணுக்கு வந்தமையின் 'ஆகுபெய'ரென்றார்.

(சடு - ருய) நச். உரைப்படி; 'துறந்து' என்பது 'தூர்ந்து' என இருக்கவேண்டும்.

'வானகப்.....போன்ம்' என்பது நல்ல நாகரிகம்.

(கக - எஉ) 'தொழீ,' தொழிலையுடையவன் ; தோழி என்பதும் இப் பொருட்டு ; தொழு, முதனிலை ; தொழுது செய்யும் செயல்கள் என்பது பொருள் ; பின்பு, லகர மெய் அடுத்துத் தொழில் எனப்பட்டது. மதுரைக் காஞ்சியில் வரும் (கஉஉ) 'தொழுவர்' என்னுஞ் சொல்லுக்கு நச். தொழில் செய்வார்' என்று பொருளெழுதியிருத்தலுங்

காண்க.

௫

(௧ - ௨௨) முருகனுக்கு உடை செந்நிறமாதலின், இப்பகுதியின் உரையிறுதியில் நச். 'முருகன் தனக்குரித்தல்லாத வெண் துகில் உடுத்தாற் போல' என்றார். " உடையும் ஒலியலுஞ் செய்யை " என்னும் பரிபாடல் (௧௯ : ௧௭) நினைவு கூர்க.

(௯௧ - ௪௨) 'நறவின் முகை' என்றமையால், அதனைக் குருதியில் நனைந்த கொம்புக்கும், தும்பியை அக்கொம்பைச் சூழ்ந்து ஆடும் மணிக்கும் உவமையாகக் கொள்க.

(௪௯ - ௪௧) 'இகா' வென்னும் முன்னிலை யசையும் 'இக' வென்பதன் திரிபென்ப ; சிலப். ௧௮ : ௪௧ உரை காண்க.

(கக - கடு) 'கண்ணுடைக் கோலன்' என்றது, உயர்ந்த திறம்;
"நண்ணிய மென்பார் ஆலேக்கும் கோல் காணுங்கால் கண்ணல்ல ஙில்லை

பிற" என்றார் திருவள்ளுவரும் (எக :

ய).

சா

(க - ௯) 'இமிழிசை', இமிழ்த்தலை யுடையது ; இமிழ் என்னும் ஒலி
தோன்றப் பாற்பானைகளைச் சுறண்டுத லென்க ; நச். அதனைப் 'பால் பற்
றறச் சிவுதல்' என்றார். மட்கலனுதலின் 'மண்டை' யெனப்பட்டது. பிறர்
ஏவிய தொழில் செய்வாராதலின் திருத்தமாகப் பேசும் நற்பழக்கமில்லாதவ
ரென்றற்கு 'வழூஉச் சொற் கோவலர்' என்றார்.

எசன
கலதம/தாகை

(கடு - கக)
'உருகெழு......ஒத்தனர்' என்பது
சிறந்த இயற்கைக் கருத்துள்ளது.
'வியன் குறிப்பு' என்பதும்

அதனுரையும் தமிழ்முன்னோ ராது விரிந்த எண்ணத்தை விளக்கும்.

(உ௰ - உ௨) உழலுங் கட்டை, 'உழலை' எனப்பட்டது. மாடுகள் நுழையாமல் தடுப்பதற்காக வழியில் இவ் வுழலைகள் கோத்து வைப்பர். இவை கோப்பதற்காகத் துளைத்து இருபுறமும் நிறுத்தியிருக்கும் மரங்களே இங்கு உவமையாகக் கொள்ளப்பட்டன.

(௩௰ - ௩௩) மகளிர் தங் காதலரோடுங் கைபிணைந்து குரவையாடுதல் பரிபாடலுரை (௩ : அ௩)

முதலியவற்றாலும் பெறப்படும்.

எ.

(க—ச) 'குறும்பு', முல்லைநிலத்தாருக்கு வந்தது. 'இந்த ஆன் இத்தனைக் குடம் பால் தரும்' என்று தம் மரபின் பழக்கத்தால் மதிப்பிடவல்ல ஒருவகை ஆயரைக் 'குடஞ் சுட்டவர்' என்ப. இதனால் முன்னோர் மேற்கொண்டிருந்த 'ஆப் பாதுகாப்'பின் மேன்மையும் பயனும் நன்கு வெளிப் படும்.

(ங—கஉ) 'கெடுத்தது பெற்றார்போல்', பழமொழி. 'இகா':

தாழாத | இருத்தல்: தாழ்த்தல்.

அ.

(க—எ) 'பகையரசனது சேனை சில விடங்களிற் பெருகித் தங்கியும் சில விடங்களிற் சிறுகியிருந்தும் வெல்லும் முறை தெரிந்து பொருதல் போல, 'அகல்குல் தோள் கண் பெருகி நுதலடி நுசுப்புச் சிறுகிப் படை

தொட்ட இகலாட்டி ' எனின் இயல்பா யிருக்கும். 'இறுத்தவாய்': வந்தி

தங்கிய இடம் ; அஃது அகல்குல் முதலியவற்றிற்கு உருவும் வினையும்

பற்றிய உவமமென்க. 'படை விடு ' என்றதில், ' விடுதல்' கைவிடுதல்

என்று கொள்வது நல்லது ; கலி. ௭௧: ௧௧-௨௦-ம் அடிகளும் அவற்றின் உரையுங் கருதுக. ' அகலாங்கண் ' என்பதற்கு மதுரைக்காஞ்சியில் (௯௨௭

நச். 'அகன்ற வூரிடத்தே' என்றுரைப்பர். தமிழாசிரியர் இவ்வனம் பொதுச்சொற்களைக் குறிப்பிட்ட ஒரு பொருளுக்கு இடத்துக்கேற்ப வழங்கி, மொழிக்கு எளிமை கோலி வந்தமை பெரிதுங் கண்டுகொள்ளு தற்குரியது. 'நகல் வல்லேன்'; விளையாடுதலை வல்லேன். ' அலமந்து ' என்

றூர், அச் சோர்வு, விளையாட்டின் கிளர்ச்சியை அவாவுமாதலின்.

(௨௧–௨௪) 'மழகுழக்காகின்று' என்றாள், அவன் கூறுகின்ற ஏமாற் மூன்ன கொஞ்சுஞ் சொற்கள் இளங்குழந்தைகட்குரிய என்றற்கு. கடவர் கொடுக்கக் கடமைப்பட்டவர்,

உரை விளக்கம்

௭௭

(சக–ஙக) இப்பகுதியின் உரையாடல் நன்முறையில் இல்லாமையால்,)வர் வினைவல பாங்கினரென்பது பெறப்படும். 'கட்குத்திக் கள்வன்',

ழமொழி.

(கஎ—கசு) பசிய நிறமுள்ள காஞ்சித்தாது உவமை கூறினமையால், தாதெரு' என்பது இங்குச் சாணம் ஆம். இன்றேல், அது சாம்பர்க்கும் ும். 'தாதெரு மன்றம்' என்பது பழந்தமிழ் நூல்களிற் பெருவரவின ாதலின் 'முதற் பொருள்' என்னுங் கருத்தில் வரும் 'தாது' என்னுஞ் சொல், தமிழ்ச் சொல்லாதல் தெளியப்படும். 'பயிர் பயிர்' என்பதில் முன் ாது 'ஒலிக்குறி' யென்னும்பொருட்டு; பின்னது அதனை 'ஒலிப்பாய்' என் றும் பொருட்டு.

கூ.

(க—அ) 'பாண்டில்', தேரிற் பூட்டும் எருது (பதிற். சுய - ம் உரை). அவ்வெருதுபோல் தான் உழவாமைக்கு காகு செம்மாந்ததென்க.

(உக—உஎ) 'மாங்காய்......போக' என்பது ஊர்ப்பெண்டிர் மோர் விற்பாளை நோக்கிக் கூறுஞ் சொல்.

ப

(க—எ) 'இடு தேன் மருந்து', 'அளைக்கெளியாள் வெண்ணெய்க்கும் அன்னள்' என்பன பழமொழிகள்.

(கஉ—கடு) 'விடிந்த பொழுதினும் போகாது இல்வயிற் கொடுந் தொழுவின்' என்று நச். மாற்றிக்கொண்டார். 'கடுஞ்சூல்' முதற்சூல் என் னும் பொருளில் முன்னும் வந்தது; (கலி. சும் : உஎ).

(கசு—கசு) பாலைக் காய்ச்சாமலே வெண்ணெய் எடுத்துவிடும் வழக்கம் பண்டும் இருந்தமை நினைவுகூரற்பாலது. அது, 'நெய் கடைபாலின்' என ஒரு பழமொழியாய்ப் பயின்றுவரும் அளவுக்குப் பெருகியிருந்தமையும் பெறப்படும். பால் மிகுதியாகக் கிடைத்துவந்தமையால் இவ்வழக்கம் ஏற் பட்டதாகல்வேண்டும். இக்காலத்தைப்போ லல்லாமல், அக்காலத்தில் உண்பதற்கும் விற்பதற்கும் வேறு பால் பயன்படுத்தப்பட்டதெனக் கொள்

வது ஒக்கும்.

(உய-உஉ) 'அன்னையோ' வென்பது, கைையோடு கூடிய சொல். (தோல். களவியல்: உய - உரை; இளம்.) 'சான்றோர் மகளிரை' யென்றான், தன்னுயர்வுந் தன் குடியுயர்வுந் தோன்ற.

கக

(க-உச) பாடுபட்டுப் பயிரிடுதற்குரியதாகலின், தோட்டக்கால், 'பாட்டங்கால்' எனப்பட்டது. நச். முற்றூட்டாகிய என்றது வருவித்தது., ஆய

[illegible] அ

[illegible]

ரிற், கோட்டினத்தாயர், கோவினத்தாயர், புல்லினத்தாயர் என மூவகையா ருண்டு. முறையே எருமையினத்தவர், ஆனினத்தவர், ஆட்டினத்தவர் என்க. கோவினத்தாயரை நல்லினத்தாயர் என்பதும் வழக்கு. மக்கள் உயிர் வாழ்க்கைக்கு மிகவும் பயன்படவல்ல

நல்லுயிர்களாகிய இவ் ஆட்டினம் ஆனினம் எருமையினங்களைப் பாதுகாப்பது ஒரு சிறந்த தொண்டாதலின், இவ் வினத்தார் சிறந்த வகுப்பினராவர். இது சிறந்த தொண்டெனக் கருதித் தமிழ்மக்களில் ஒரு சாரார் இதனைச் செய்ய முற்பட்டமையே அவர்கள் நாகரிக மேன்மையை நன்கு விளக்கும். ஆகவே, உரையில் 'மற்றை இரு கூற்றில்' என்றது, கோட்டினத்தாயர் மகளிரையுங், கோவினத்தாயர் மகளிரையும் எனக் கொள்க.

நனிமிகக் கொள்வாய்' என்றியைத்து
மிகப்
பெரிதும் உரிமையாகக்
கொள்வாய் என்றுரைப்பின்
இயல்பாயிருக்கும்
' செய்புறம் ' என்பதிற் புறம்,
காவலென்னும் பொருட்டு. உரையில்,
' ஆய
மகளிரை வரைந்துகொள்ளும்
இலக்கணம் ' என்றது, ஏறு
தழுவிக்
கோடலை.

௯௨

(௧—௬) தார் வகைகளுள் விரவுத்

தாரும் ஒன்று. வினைவல பாங்கிற்
றலைவனுதலின் ' கல்லாப் பொதுவனை '
என்றான்.

(கசு—உடு) '

பொய்யாயின்......உடைத்து '
என்பது தனதுள்ளந் தக்கு
ஒருவகையாக அமைதி
பிறப்பித்தவாறென்க.
இச்செய்யுளின் துறைக் குறிப்பில் '
இது கைக்கிளை '
யென்றிருப்பதனினும், ' இது
பெருந்திணை யென்றிருப்பின் மிகவும்
பொருந்தும். தொல். அகத்: கந-ன்
உரையில் இவ் வுரையாசிரியரே
இங்ஙனங் கருதிக்

கிளந்துரைத்தலுங் காண்க. மே
செய்யுட்கும் இஃதொக்கும்.

௧௩

(௧௪ - ௨௧) 'மடம் பட்டு
அறியினும்' என்றியைத்துரைக்க.
'காதல்
கொள் காமம்,', அன்புள்ள காமம்; "காதல் செய் காமங் கனற்ற" (பு.வெ
கைக். பெண்பாற்: ௪) என்றார் பிறரும்.

(௨௩ - ௨௧) 'அல்கல்' என்னும் பெயரை எச்சப் பொருள்பட உரை
தார். 'நாம் உடன் செலற்கே' என்றமையாற் கூட்டத்திற்குத் தலை
இசைந்தமை பெறப்பட்டது.

௧௪

(௧ - ௭) வருந்தினன் என்பதை 'அழுதனன்' என்பது, இழிவு தோ
றக் கூறும் வழக்கு. 'அகல நக்கு' என்பதற்கு 'மிகச் சிரித்து' என
சிறக்கும்.

(அ - கக) 'நினக்கு வருவதாகக் காண்பாய்' என்றது, நல்ல உளநூல் உணர்வோடு கூறுஞ் சொல்; "எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின்" (குறள். கஎ : சு) என்பது நினைவுகூர்க. 'வியங்கொளனக் கூறு' என்றதும் அது; கேட்பவர்க்கு விளக்கந் தோன்றுமாறு தெளிவாகவும், பின்பு அதன்படியே ஒழுக விருப்பந் தோன்றுமாறு ஒருமுறைப்படுத்தி இனிமையாகவும் பேசவேண்டும். "கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்", "விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்"

(குறள், கரு :௬,அ.) என்பவையும் நினைவுகூர்க. இந் நட்பங்க ளெல்லாந் தமிழ்முன்ஞோரது நாகரிக மேன்மைக்கு நல்ல அடையாளங்களாகும்.

(கஉ - உச) முல்லை நிலத்தார்க்கு, எருமைப் பேட்டின் கோடு நட்டு அதனைத் தெய்வம் உறையுங் குறியாக நினைந்து வணங்கும் வழக்கமுண் டென்பது இப்பகுதியிற் பெறப்படுகின்றது. நெய்தல் நிலத்தவர் சுறவின் கோடு நட்டுத் தெய்வம் பராவுதலும் நினைவுகூர்க.

'உலகம் பெறினும் அருநெறி ஆயர் மகளிர்க்கு இருமனங் கூடுதல் இயல்பன்று' என்பதனால் ஆயர் மகளிரின் உயர்ந்த பழக்கமுங் கற்பின் மேம்பாடும் நன்கு தெளியப் படும்.

'நெருநல் கைவிட்டிருக்கோ, அங்ஙனங் கைவிட்டிருத்தற்கு இரு மனங் கூடுதல் இயல்பன்றே' என்று இருந்தவாறே வினைமுடிவு செய்வது நல்லது.

கரு

(க - கூ) 'மெல்லியால்', 'தோழியாய்' என இருமுறை தோழியை விளித்தாள், கலக்கத்தால்;

இதனல் மெய்ப்பாடு தோன்றச் செய்யுஞ் செய்

யும் இயற்கைத் திறம் பெறப்படும். 'கோட்பட்டாய் கண்டாய்' என முடிபு முன் வந்தது, செய்யுளாகலின்; என்றது, இயற்கை தோன்றச் செய்வது

செய்யுள்; இப்பகுதியின் உரையாட லியற்கை அங்ஙனமாகலின் என்க.

(டீ-கக) 'நெருப்புக் கைதொட்டவர்போல', பழமொழி. 'கடை', ஏழனுருபென்க. முடியா, செய்தெனெச்சம். ஆயர்மகளிர்க்கு நீல உடையே உயர்ந்த உடையாக முல்லைக்கலி முழுமையும் உரைக்கப்படுதல் நினைவுகூர் தற்குரியது.

கரு

(இ-எ) தலைவியை நாகு எனக் கூறக் கருதினானதலின், 'தொடு வாயின் நீங்கிச் சினவுவாய்' என்றான்; 'தொடு', தொழுவென்றார், ழகரம் டகரமாதலு முண்டாகலின்.

(டீ-கஉ) 'எவர் வரினும் வருக; நயந்தேன் யான்; நீ வருவி கல்கப் பெறின்' என்பதனல் இது மிக்க காமத்து மிடல்.

அப்

(கஃ-கள) 'புலத்தும் வருவையால்' என்று அவனது முன் வழக்க கூறினமையால் இப்போதும் அவ்விடமே வா எனக் குறியிடங் குறித்தமை குறிப்பாற் பெறப்படும்.

, (க—ரு) நீலமணியைச் சேர்ந்த பொன், பசலைக்கு உவமை ; 'பொன்னுரை மணியன்ன மாமைக்கண்' (கலி: ௪அ : கஎ) என மூன்றும் வந்தது

(கூ—க) 'சேரிக்கிழவன் மகள்' என்றமையால் தான் அச் சேரியின் தலைமைக்குடியைச் சேர்ந்தவளென்று தனது செல்வாக்கைப் புலப்படுத்தினாளாயிற்று.

(ம—க஖) 'இவை சிறுமுல்லை' என்று கூட்டுவது நன்று. 'எல்லிற்றுப் போழ்து' எனவே இயைக்க. 'நின்னை விடுவேன் யான்?' என இயல்பு வினாவாகக் கொள்வது சிறப்பு.

முல்லைக்கலி உரைவிளக்கம்

முற்றும்

ரு. நெய்தற் கலி

க

(கூ—அ) 'தொல்வினை' என்பதில் வினை, நல்வினை. 'அவன் எனை யோன்' எனச் சேர்த்து 'அவனுக்குப் பகைவன்' என்றுரைக்க. கதிரவன் ஆட்சியுள்ள பகற்காலமும் மதியின் ஆட்சியுள்ள இராக்காலமும் அல்லாமல் அந்திப்பொழுது, ஆட்சியேயில்லாத இடைக்காலமாதலின் 'ஆண்டார்க்கும் ஆளிய வருவார்க்கும் இடைநின்ற காலம்போல்' என்றார்.

(கூ—கஉ) 'மாலை நீ' மயக்க முடையை நீ; 'மருண்மாலையாய், ஆம், நின் பெயருக்கேற்ப மயக்கமுடையை நீ; ஏனென்றால், குவிந்த என் எழில் நலம் எள்ளுவாய்; புணர்ந்தவர் காரிகை கடிகல்லாய்' என இருந்தவாறே இயைத்துக் கூறுவது நன்று. மேல் அடிகட்கும் இங்ஙனங் கொள்க. பிரிவின்றிக் காதலர்ப் புணர்ந்தவரென்றற்குச் 'சினைப் பூப்போல்' என்றார்; 'கோட்டுப் பூப்போல் மலர்ந்து பின் கூம்பாது' என்பது நாலடியார் (உகடு).

(கரு—கரு) பைதல், இங்கே குறைதல்; 'பக்கம் பாராட்டுவாய்' என்பதன் உரைத்திறம் அறிந்து மகிழ்க. 'யாழ்', வாளா இளவிக்கு உவமை. தலைவி, இத் தாழிசைகள் மூன்றிலும் கேட்குநபோலப் பொழுதொடு கூறினன். தோல், செய், உ0க - ற், பிறவும் என்பதனுல் மாலை கொள்க.

உரை விளக்கம்

(௧-௧௧) 'நிலவுக் காண்பதுபோல' என்பது பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கிவந்த உவமம் (தொல். உவ: ௨௬, இளம். உரை). 'கால' என்னும் பன்மையால் நச். தாமரை முதலியன என்றார். 'மரந் துஞ்ச' என்றமையால், மரங்கள் உறங்குதலுண்டு என்னும் இயற்கைப்பொருளுண்மையை முன்னோர் தெரிந்திருந்தமை கண்டுகொள்க. 'தலைசாய்த்து' என்பதனால் இன்னும் அப் பொருளறிவின் நுணுக்கம் பெறப்படும். 'மன்று', இங்குத் தொழு. 'வதி': வதியும் இடம்.

ரு

(௧-௬) அருளிலிருந்து அறநெறி பிறத்தலின், 'காட்சியினால்' என எதுப்பொருளுரைத்தார். "அறனும் அருளுடையான் கண்ணதேயாகும்" என்றார் பிறரும் (சிறுபஞ். ௬). 'வெருவுற உய்த்தவன் என்பதற்கு எல்லாரும் வெருவுதலுறும்படி தன் முயற்சிகளைப் பொல்லாங்குகளிற் செலுத்தினவன் என்றே உரைக்கலாம். 'நெஞ்சம்போல் இருள் தூர்பு' என்க. மாலை இனிமைபோல் வருதலால் உரையில் 'மெத்தென மெத்தென' என்றார்.

(௰-௧௮) அயர்தல் உணர்வழிதலாதலின், 'கையறவெய்துவிக்க' என்றுரைத்தார். போர்: தொழில்; அதன் தொழில், தொலைதல்; ஆகவே போரின் தொழிலாகிய தொலைதலென்பது அப் போரை யுடையார்மேல் நின்றதென்றற்கு நச். தொழிலின் தொழில் தொழிலுடையதன்மேல் நின்றதென்றார்.

௬

(கக - கச) 'வாராயாய் நீ கைவிடுகையினாலே வருந்திய மேனியாட்குத் துணையாகி' என இருந்தவாறே இயைப்பது எளிது. 'கமழ்......குலை போல' என்பதனாற் கோடல் மலரின் இயற்கைகள் தெளிய விளக்கப்பட்டமை கண்டுகொள்க.

(உ௰ - உக) தலைவியை வருத்துவோனும் வாழ்விப்போனுந் தலைவனே யென்பது அலையுவமையின் கருத்து. விரைந்தோடுமாறு அமைக்கப்பட்டிருந்துந் தேரின் அமைப்பியல்பைக் 'கடுந் திண் தேர்' என்பதிற் 'கடுமை' உணர்த்தும்.

௫

(க - எ) ஒழுங்குபட நின்று விளையாடுதலை 'ஒழுங்குவிட்டு விளையாடும்' என்றார் நச்.; 'ஒழுங்குக்கு இடம் விட்டு' என்க. 'மாலைபோல் தொடர்ந்து கைவிடாத் தோழிமாரோடும்' (சீந். ககம) என்றார் பிறரும். 'உண்கண் நலனிழப்ப' என்க. 'துன்னு செய்து அமர்ந்தனை'

என்பதற்குப் பொருந்ாதன செய்து அவற்றிலேயே அழுந்தினை என்றுரைத்து அத்தொடரைத் தலைவியின்

செயலாகக் கொள்வது நன்று. முன்னர்ச் சிறிய துனித்தனை யென்றமையால் இப்போது பெரிதும் செய்தனை என்றற்கு 'அமர்ந்தனை' என்றார். தலைவன் குறைகளைப் பலவு நூறடுக்கினை யென்க. 'அலவல்,' அலமருதற் பொருட்டாதல் " அலவுற்று" (குறிஞ். எ என்பதன் உரையினுங் காண்க.

(உ ய - உச) யாமமாகிய நடுநாள் என்க. " நடுநாள் யாமத்தும் ' எனப் புறத்திலும் (கஅகூ) வந்தது. 'துயில்கொண் டொளித்த' என்பதை.

காமநோயின் செயலாகக் கொள்வது
நன்று. துயிலை ஒளித்து வைத்தமை
யால் 'ஒளித்த' என்றார்.
'காமநோயிற் கழீஇய நெஞ்சந்தான்,
அங்ஙனம்
ஒளித்து வைத்தற்குக் காரணமான
அவர்பாற் பட்டதாயின்' என்றியைய
துக் கொள்க; அதற்குக், 'கழீஇய':
சென்றமுழ்ந்திய என்பது உரை.
இப்பாட்டின் துறைக்
குறிப்பிற் 'காமஞ்சாலா
இளமையோள்வயின்
என்றிருப்பது வாளா தலைவிமாட்டு
எனவே இருக்கலாம்.

சா

(௧ - ௫) திருமாலுக்கு 'அரும் பொருண் மரபு' என்றது, அவன் அருள் நிலை முதலியவற்றை.

(௬ - ௧௧) சுறவினம் கடிகொண்டது என்க. மக்கள் வெயில் தாழ்ந்த மாலைக் காலத்தில் வழிச்செல்வராதலின், அக்காலத்திற் கடிகொண்டதாக

கூறினர். மக்கள் அஞ்சிப் போகாமல் நிற்றலைச் சுறவின்மேல் ஏற்றி, அத காத்தல் கொண்டதாகக் கூறப்பட்டது.

எ

(௧ - ௪) தாய: தாவியளந்த. 'முதல்வன்' என்பதற்கு நச். 'எ பொருட்கும் அடியாயிருக்கின்றவன்' என்றுரைத்தார்; எப்பொருட்கு

காரணமாயிருப்பவன் என்பது

கருத்து.

(ரு - அ) 'உள்ளாயாய் நீ துறத்தலின்' என்க. 'பிறைநுதல் வெளி படுத்தாதவிடத்து இவள் என்னையும் மறைத்தான் மன்' எனக் கொள்க

மேல் தாழிசைகட்கும் இஃதொக்கும்.

(க - கஉ) தோழியர்களிலேயே இவள் அழகு பெற்றவளென்றற்கு, 'துணையாருள் தகைபெற்ற' என்றார்.

தலைவி தன் உள்ளத்தைக் கரந்தாலும் அவள் நுதல் தோள் கண் மு வியன வெளிப்படுத்திவிடும் என்பது, "கரப்பினுங் கையிகந் தொல்ல நின் உண்கண், உரைக்க லுறுவதொன் றுண்டு" (குறள், கஉஎக) என்ப வைக் காண்க.

கலி] உரை

விளக்கம்

அக

அ

(ச - எ) செய்த பொய்மையை நெஞ்சம் எப்படியும் வெளிப்படுத்தி விடுதலாலும் தன்னையே எஞ்ஞான்றும் புண்படுத்தி விற்றலாலும், 'நெஞ்சத் தூக்

குறுகிய கரியில்லை' என்றார். பரி : விரைந்த நடை; 'வண்பரி' என்றார், அந் நடையின் வலத்துக்கு. 'நலப்பாடில்லாத ஆராய்ச்சி' யென்றதற்கு, ஆராய்ச்சியின் முடிவு நலப்பாடில்லதெனக் கொள்க.

(அ - கக) மூள்குதல். கூடுதல் (சிந், : சஉ௰); 'மூள்கிய தொடர்பினை யுடையவன் தன் உண்கண் அவிழ்பனி உறைப்பவும் அவளை நல்காது விடுவாய்' என இயைத்துரைப்பின் இயல்பாயிருக்கும். அடுத்த அடியிலும் 'எல்வளை தழை தைஇ நின்னால் நல்கப்பெற்ற தொடர்பை யுடையவள் சாஅய் அழப் புல்லாது விடுவாய்' எனக் கூறுக. 'நல்கிய' : நல்கப்பெற்ற. அதற்கடுத்த அடியிற் 'சிலம்பினையும் மொழியினையும் பின்னொடு பொருந்திய அகன்ற அரவின் படம்போன்ற அல்குலையுடையவள் நுண்வரி கெடும்படி வாராது விடுவாய்' என இருந்தவாறே உரைத்துக்கொள்க.

கஙு

(க - ௫) இடன் : இங்கு உலகம்; வருந்திய உலகம் அவ்வருத்தத்துக்கு மாறாகப் பின் மகிழ்ந்து எத்துதல் கருதித் 'தன் மலர்ந்து' என்றார்; தனக்குத் தானே மாறுபட்டு என்பது பொருள். காரையின் சிறகு சிவந்திருத்தல் "செந்துவி நாரை" என்னும் ஐந்திணை எழுபதினும் (கஅ) பெறப்படும்.

(௧ - ௫) பூவின கைதையும் என்பதற்குப் பூவினவான கைதையும் என அல்வழிப்பொருள் உரைப்பதுநன்று. சேமியான், வரிமணற்கு உவமை.

(௯ - ௧) முதலில் நீர் வார அழுது, பின் உள்ளத்தளவாய் வருந்துதல் தோன்றக் 'கடும்பனி அறல் இரு' எனவும், அதன் பின் 'பனி மல்க' எனவும் கூறினான்.

(ம - ௧௯)

௧௭. 'செறிதாலகயினுலே' என்றது, சிறிதாய்விடுகையினுலே என்னும் பொருட்டு.

(௧௪ - ௧௮) 'வேயின் கலம்போன்ற நலத்தை இழந்தோள்' என இருந்தவாறே உரைக்கலாம். 'பொறையாற்றுள்' என்றமையால், மெலிந்தமை பெறப்பட்டது.

௧௧

(௫ - ௯) காமநோயைக் குறிக்கப் 'பிணி' என்னுங் குறியீடு வருதல் கருத்திருத்தற்பாலது. ஓயாது ஒலித்தலை 'விளியாது நரலும்' என்றார்.

புசா
கலித்தொகை
புரையதற

(ம - உக) 'ஆங்கு': பிரிந்த விடத்து; 'அலர்து': வருர்தி என்பது
ரை. கொள்வானிடம் செல்லாத தனது பொருளை இரத்தற் கருத்தில்,

;ர' என்னுஞ் சொல்

வருமென்பது தொல். எச்:

ரும-ன் உரையிற் காண்க ;ட்டைதயை',

முன்னிலை.

(உரு - உக) அனே: அங்கனம்

அவன் அருளுகின்ற தன்மை.

(க - எ) 'படைத்தான்கட் பெயர்ப்பான்' என்பதனால், படைத்தலும் அழித்தலும் ஒரு முழுமுதற் கடவுளின் செயலேயென்பது, விளக்கி அதனால் ஒரு முதல்வன் உண்மையும் அவன் உலகுக்குத் தலைவனாதலும் வெளிப்படுத்தினாராயிற்று. உயிரெல்லாம் என்னும் பன்மையான் உயிர்கள் பலவாமாறும் பெறப்பட்டது. மலர்ந்திருத்தல், இங்கே மேற்கொண்டிருத்தல். எல்லைக்கு : பகலுக்கு. ஊழிகளின் இயல்பு கூறும் உ - ம் பரிபாடலடிகள் (க-கடு) இங்கு நினைவுகூர்தற்குரியன.

(அ - கக) 'அவன்திற சோய்', ஒருசொற் றன்மைப்படும் இயல்பினது. மன்று : வெளியிடம் ; குழ லினைவதுபோல் மகளிர் இனைதல் புறத்திலும் (கசரு) வந்தது.

(உக - உடு) அறைகோடல் : தெரிந்தும் வஞ்சித்தல்; உரையிறுதியில் இதுவும் காலம் மயங்கிற்று என்பது, செய்தலில், அதற்குரியவல்லா மாலையும் இருளும் பனியும் மயங்கி வந்தமையாலென்க.

கரு

(க - எ) 'பொய்' என்றது தீமையை. நல்லூழிச் செல்வம், குடிக ளுடையதுமெனக் கொள்க.

'கண்ணில்லா' என்றார், "கல்லாதான் ஒட்பங் கழிய நன்றாயினுங் கொள்ளார் அறிவுடையா" ராகலின் (குறள், ௪௧ : ௪).

(அ - கக) இப்பகுதிகளில் ஐயர் அழலெடுத்தலும், மலர் கூம்பலும், குழல் இனைதலும் மாலை நேரம் வந்தமை நினைவுகொள்ளச் செய்தலின், அதனால் தலைவி வருந்த நேர்ந்ததெனக் கொள்க. தான் இன்பம் நுகர்தற் கில்லாத நேரத்திற் குழலினை தலை அவன் விரும்பானாதலின், உரையில் நச். 'இன்பத்தை வெறுத்தல்' என்றுரைத்தார். 'அரும் படர்'

என்பதில் அருமை' இன்மைப் பொருளில் வந்தது , 'அருங்கேடன்' என்பதிற்போல.

(கஅ - உக) 'குடிபுறங் காத்தோம்பல்' என்பதற்குப் பரிமேலழகர் "குடிகளைப் பிறர் நலியாமற் காத்துத் தானும் நலியாது பேணுதல்" (குறள் ருசகூ) என்றுரைப்பர். இது நச். உரையினும்,

சொற்பொருளை முழுதுங்

கல்விச் சென்ற நலம் மிக்காய

மிகுக்கின்றமை காண்க.

கச

(க—கக) 'கடற்றெய்வமெனப்படும் நீரை நோக்கி' எனவே உரைப்பது நன்று. 'சாயலாய்' என்பதன் விளக்கம் இலக்கிய' நலமுள்ளது. இனமீன் : சுறாவுக்கு இனமான மீன். தாழையின் விழுது கயிறாகவும், நெய்தல் மாலை அக் கயிற்றிற் கட்டிய மாலையாகவும், சுறா மருப்புக்கோத்த பலகை அதற்குப் பலகையாகவும் ஊசல் அமைக்கப்பட்டது. சுறா மருப்பை நெருங்க அடுக்கிக் கயிற்றிற் கோத்தால், அது பலகைபோலாகும். அம் மருப்புகள் சிறிது வளைவாயுமிருக்குமாதலின், அவற்றாற் கோத்த பலகையும், தன் மேற் படிய அமர்தற்கேற்ற வளைவில் வசதியாயிருக்குமென்க.

(கஉ—கச) மாழை, இளமைக்கு வந்தமையின், மடம், பேதைமைக்குச் சொல்லப்படும்.

(கரு—உ௰) 'நாணின என்பது' என முடிப்பதுபோலப் பன்மையில் 'நாணின என்பவை' என முடிந்தது. மேலும் இங்ஙனக் கொள்க. நச். தொழிற்பெயர் என்றதும் இதற்கு.

(ஙக—ஙச) தானே இறந்துபோன மீன்களைப் புள்ளினம் உண்ணும் என்பதனால், இறைவன் படைப்பு, ஒருயிர் மற்றோருயிரைச் செகுத்துண்ணுமாறு அமைக்கும் நோக்கமில்லாததென்பது பெறப்படும். பெரிதுந் தெளிதற்குரிய இவ்வுயர்ந்த கருத்தை ஆசிரியர் இங்கே பெறப்படவைத்த திறம்

அறிந்து போற்றுதற்குரியது.

(௩௧-௩௪) நச். உரைப்படி 'வால் சேர்ப்பு' என்றியைக்கவேண்டும். 'வால் நீர்' எனவேகொண்டு, 'மிக்க நீர்' என்னுங் கருத்திற் 'கடல்' என்றுரைப்பது நல்லது. ஆழமான நீர் என்னுங் கருத்திற், கடல், 'தாழ் நீர்' எனப்பட்டமைபோல (இப்பாட்டு, ௨௨-ம் அடி); மேலும் (௧௯௨: ௧) வேறு காரணம்பற்றி 'உரவு நீர்' எனவரும். தலைவன் வேட்கையைத் தோழி வேட்கின்றென்னத் தலைவி மருளுதலின், 'யானென உணர்ந்து நீ எனிமருள' என்றாள்.

௧௫

(௧-௭) உண்ட இளைப்புப் புள்ளினங்கட்கும் உண்டாகலின், 'அசாவிடும்' என்றார். 'இறைகொளக் கலம் வாய் சூழும் கடல் சேர்ப்ப' என்க. இப் பகுதியின் உரையிறுதியில் நச். 'இரை கவர்ந்து துணைபுணர்ந்த பறவைகளும்' என்றது நல்ல தொடர்.

(௮-௧௧) 'பகற்கொண்ட சுடர்போல்', பழமொழி. அளவாகப் பேசுதல் பிறரைக் கவரச்செய்யும். மகளிர்க்குச் 'சின்மொழி' என்னும் பெயரிதல் ... இயல்பாகவேயிருக்கும் இவ்வரிய திறத்தையும் நாகரிகத்

அ௬௪

கலித்தொகை.

[செய்தற்

தையும் நன்கு காட்டும். மீடு இறை
: மிகத் திரண்ட, மறை என்பது
இல்குக் களவொழுக்கம்.

(உக—உச) வழிபட்ட தெய்வம்
தன்னை வழிபட்டாரையே கையவைக்
தும் என்னும் உண்மை இப்
பகுதியில் வெளிப்படுகின்றது அவர்
நலக் ருதியே என்று கொள்க.

கூள

(க—ௐ) தவ முதல்வர்களில்
முதல்வன் 'தக்கணாமூர்த்தி'
யாகலின், 'சீர்மிகு சிறப்பினோன்'

என்பது
அப்பெருமானைக் குறிப்பதாயிற்று.
முதல், ஏழன் பொருளது.

(௬-௧௪) இப் பகுதி
சிறந்த நல்லியல்புகளின்
இலக்கணங்களைத் தெளி வாக
விளக்குகின்றமை
அறிந்துகொள்ளுதற்குரியது.

௧௭

(௧-௰) 'ஒல்லாதார், யானை
உடன்று ஓடுமாறு அதனை உருத்து
உடன் எறிதலின், அகலத்தோன், அவ்

யானையின் அணிநுதலில் அழுத்திய ஆழிபோல் ' எனவும், 'இருங்கடல் ஒலித்து இரவுக் காண்பதுபோலக் கரை சேர ' எனவுங் கொள்வது இயல்பாயிருக்கும், யானை மலைக்கும், ஆழி அதில் மறையும் ஞாயிற்றுக்குங் கொள்க. இரு நிலத்தைப் பெயர்ப்பது போன்ற மருண்மாலை என்க. காண்பது என்பதற்குப் பார்ப்பது எனவே உரைக்க. நச். இப் பகுதியை வேறு வேறாய் இயைத்துரைப்பது இயல்பா யில்லை.

(கக–உஉ) முதல் தாழிசையில் 'ஆழ்ந்தாங்கே' என்பதற்கு உரைத் தாற்போலவே ஏனைத் தாழிசைகளினுந் திரிபின்றியே உரைக்கலாம்.

இரண்டாந் தாழிசையில் 'உழந்து' என்பதை இருந்தவாறே கொள்க. மூன்றாந் தாழிசையில் 'கலக்கத்துள் ஆழ்ந்தாங்கே கையறு நெஞ்சினேன்' என்க. 'வையினர்' என்பதற்கு 'வைத்து' என்றுரைக்கும் இவ்வுரையே சிறந்தது; தொல். பொருளி: ருய-ன் உரையில் இதனை இவ்வுரையாசிரியரே வஞ்சித்தற் கருத்துக்கு மேற்கோட் காட்டியிருப்பது பொருந்தாது தலைவி தன் காதலன் கருத்தில் தீது கூறுமை சிறப்பாதலின் என்க; மேல் கூள-ம் பாட்டில் தலைவி கூறுங் கூற்றின் நயம் இங்கே நினைவுகூரற்பாலது பனி என்றது இங்கே முன்பனியை. மருதத்துக்குரிய பனிக்காலமும் முல்லைக்குரிய மாலைக்காலமும் நெய்தலில் வந்தது காலமயக்கம். நச் முன்னும் (நெய்தற் கலி, கஉ) காலம் மயங்கிற்றென் றுரைத்தது.

கஅ

(க–ரு) பயில் திரை: செறிந்த அலைகள். நடு நன்னாள்: நள்ளிரா. 'பாய்ந்துறாஉம்' என்பதில் உறுதல், முழங்குதல் என்னும் பொருட்டு.

(கக—உ௰) 'தயல்வரக் கடவுமதி' எனவேயும் இயைக்கலாம். வரைவு கடாதலில், இங்ஙனந் தலைவன் பெருமைகளை நினைவுகூர்வித்து வரைவு

கடாவுவது சிறப்பு.

கஅ

(க—ச) அலவன் ஆடு அளை வரி, கவறு உற்ற வடுவை ஒக்கும் என்பது இயல்பான சொற்பொருள். அலவன் விளையாடுகின்ற, புரளுதலால் அமைந்த வரிகள் என உரை கொள்க. அளை: புரளுதல். வரி: ஈர மணலில் அமைந்த வரிகள்; புரண்டு விளையாடுதலால் 'ஆடு அளை' என்றார்; 'ஆடுகின்ற ஆட்டம்' என்பதுபோலக் கொள்க. அலவன் புரளுதல் கவறு புரளுதலை ஒக்கும் என நச். உரைத்தது, இவற்றின் கருத்து; இயல்பான சொற்பொருளன்று. இஃது எளியோர் மண் தரையில் ஆடுங் கவறுதலின், வடுவுற்றதென்க.

(டு—கக) வித்தம்: சிறுதாயம். உழப்பவோவென்பது அது தகவாகாதென்பது காட்டிற்று. 'கொடுக்கத் தக்கவன் நீயானால் இங்ஙனம் உழப்பதும் பொருந்துமோ' என்பதே நேருரை. அப்பொருள், அக் கவறு. இத்தாழிசைகளிற் கவறாடலின் விளக்கங்களுங் கூறப்பட்டிருக்கின்றன.

(கஅ—உக) 'பாண்டியஞ் செய்தல்': உழைப்பெடுத்தல்; 'பாண்டியம்' அறிவான உழைப்பு; நச். 'உழவாடி' யென்றது, உழைப்பாளியை.

(க—எ) உடம்பு மயங்கிச் சுழலுதலால் 'உலமந்து' என்றார். அவ் வதிர்ச்சியால் இழை ஒலித்தது. இப்பகுதியின் தொடர்களை இருந்தவாறே உரைப்பது நல்லது.

(அ—கஉ) வாக்கு: வார்ப்பு;

அஃதிங்கு வடிவை

உணர்த்தியதாகக்

கூறினர்.

(கஅ—உஉ) இருளை நீக்குதல்போலவே பலவகையான நோய்களும் நீங்குதற்குச் சுடர் காரணமாயிருத்தலின், 'நோய்தடி நெடுஞ்சுடர்' என்றாரெனக் கொண்டு இயைப்பது நல்லது. 'சுடரை' ஞாயிறெனக் கொள்வது சிறக்கும். 'நெடுஞ்சுடர்' 'அற நீக்கும்' என்னும் ஆற்றலும் இதற்கு வலிவு தரும். இருள் நீக்குதலும் நோய் நீக்குதலுமான நன்மைகள் ஞாயிற்றின் கண் இருந்தாலும், சுடும் இயல்பும் அதற்குண்டு. ஆனல், தலைவன்பாற்

சாயலே உளது. எனினும் அச் சாயலாற் கனலும் எரிவு, ஞாயிற்றின் தீயி னாற் கனலும் எரியினுங் கொடிதா யிராநின்ற தென்றான் என்க.

(உச—உஅ) நெஞ்சு எப்படியும் பொறுக்கத் துணிந்தது; ஆனால் அவர் உறீஇய நோய் நீங்குதலரிதா யிராநின்றது என இயல்பாகவே உரைப்பது இனிது.

உக

(க—கக) இருந்தவாறே உரைக்க.

(உ௰-உக) 'உரிது என் வரைத்தன்றி' என்பதற்கு உரிதாக என் வரைத்தன்றி என்பது கல்லது; உரித்தல்லாததுபோல் மூழ்கி என்பது தோன்ற நின்றது.

(உச-உரு) உளைய, மேன்மேலும் உளைய; காமநோயுடையாராயின் அருமையறிந்து உசாவுவர்; அதற்கயலார் அதனியல்பறியாது உசாவுதலின், மேன்மேல் உளைதற்கு இடனாயிற்று.

(உக—ருக) துன்பத்தில் துணையாயிருக்கும் மடல் இன்பத்தில் இடம் பெறுதற்கில்லை என்னுங் கருத்தால், 'இன்பத்துள் இடம்படா தொழிக'

என்றான். இப்பொருட்கு 'இவட்பெற' வென்பதை இவளைப் பெறுகை யினாலே என்றுரைத்துக்கொள்க. 'அன்புற்று இரங்கினன்' என்றியைப் பது நல்லது.

22

(க—கரு) சான்றவர் என்னும் 'அர்' ஈறு, 'ஈர்' என்று விளியேற்றது

(தோல். விளி: உக); அஃதிங்குச் 'சான்றவிர்' எனக் குறுகி நின்றதெனக் கொள்க. அதனைக் காரணமாகக் கொண்டு, என்னுங் கருத்தில்; 'அதனை

முதலாகக் கொண்டு' என்று நச். உரைத்தார். 'ஊர்ந்து' என்பதனால் இஃது ஏறிய மடற்றிறம் (தொல். அகத்: ௫௧); மேலும் இங்ஙனங் கொள்க.

(உ௰—உ௧) ஆண் எழில், ஆகுபெயர்; 'ஏர்' என்னும் பெயரால் வந்த படை என்க.

(உ௬—உ௧) 'ஆண்மை', தணியாமல் மேன்மேற் கனலுதற்கெனிற் சிறக்கும். 'நகை' என்பதற்குப் புன்னகை யென்பதினும் 'மகிழ்ச்சி' யென்றது நல்ல உரை, மகிழ்ச்சியிற் புன்னகையும் அடங்குதலின்.

(௩௬—௩௭) பொதுவாகக் கூறாமல் அரசனை என்றலால், இப் பகுதி ஒரு கதை நிகழ்ச்சியை உட்கொண்டதென்பது பொருந்தும். பாரதத்திலுள்ள (ஆதிபர்வம், அ௰ - அ௭) யயாதி மன்னன் துறக்கம் பெற்ற வரலாறு நினைவுகூர்தற்குரியது. துறக்கம் 'உயர்நிலை யுலகம்' (மது. ௧௯௭) எனப் பிறாண்டும் வந்தது. தம்மை யடைந்தாரது துன்பத்தை விரையத் தீர்த்தல் சான்றோரியல்பாதலின் (புறம். ௨௬௬ : அ-௰) இங்ஙனங் கூறினான்.

கலி] உரை விளக்கம் அச

௨௩

(௧—௧௨) பண்டறியாதீர்போல

வென்றான், மடலேறுதல் பெரும்பாலு
நிகழ்வதில்லாமையின், மடலன்று மா
என்றாற்போலப் 'பூவல்ல தார்' என்
றான் என்று கொள்வது சிறக்கும்;
பூளை, உழிஞை, முதலியன கொண்டு
தார் கட்டுதல் வழக்கமில்லாமையால்
இவற்றைத் தனிப்பூவெனக் கருதி
னார்க்கு, அன்று, மாலைதான்
என்றானென்க. பீலித்தார்,
தார்ப்பீலியெனப் பட்டது. மயில்
வந்தமையால் மலையோடு புனங்
கூறினார். பீலியோடு நூலின்

ஆவிரமலரைக் கட்டிய கண்ணி, மணியோடு அடர்பொன்னைக் கட்டியது
போன்றிருந்தமையின், மணி கட்டி அடர்பொன் அவிர் வய்க்கும் ஆவிரங்
கண்ணி என்றாரெனக் கொள்வது இயல்பாயிருக்கும். பூளை உழிஞை பீலி
ஆவிரம் என்பவை கட்டிய மாலை என்பது பொருள். இது மடன்மாவுக்குச்
சூட்டப்படுவது. 'வடிய வடித்த வனப்பு' என்பதற்கு ஒழுகும்படி வழித்த
அழகு எனின், எளிதாயிருக்கும். புற வனப்பினால் என் நெஞ்சமாகிய

அரண் இடிய, ஆக்ரோத்தே அவ்வழியிடையே மென்மை என்னும் பெண் மையியல்பினள் ஒருத்தி உட்புகுந்து என்னைக் கைக்கொள்ளும் என்றுரைப் பது இனிது. 'சாயல் ஒருத்தி' என்றமையின், இங்குப் பெண்மை என்னும் அகவியல்பு தேறப்படும்.

(கரு-கக) 'என்னுளும்,'
ஏதானும் எனினும் ஆம்.

(எ-உம்) உரையில், இவ்வூரிலுள்ளார் அதனைத் தீர்க்கமாட்டுவராயி னும், கண்ணோட்டமாயினுஞ் செய்தலிலர் என்றிருப்பின் சிறக்கும், தலைவி யின் உறவினர்பால் ஏற்பாடுசெய்யுமுகத்தால் அவரதனைத் தீர்க்கமாட்டுவ ரென்க.

(உடு-உஅ) உயிர்போதலாகிய வருத்தந் தீரும்போது உயிர்ப்புண்டாத லின், நச். அதற்கு 'வருத்தந் தீர்தலுளதாம்' என்றார்.

(கூய-கூச) அறனும்
என்னும் உம்மையாற் புகழும்
உரைக்கப்பட்டது. மார், அசைநிலை.

(க-க) புரிபு; வேறுபட்டு: வேட்டவை: - மனம் போன போக்கு. 'அறிதிற் றேன்றிய மக்கள் யாக்கையின் நோக்கத்துக்கு வேறுபட்டுத் தாம் மனம் விரும்பியவை செய்து, தாஞ் செய்தாற்போல மற்றவர்களையுஞ் செய்யுமாறு காட்டி, இங்ஙனமெல்லாம் முற்பிறப்பில், அறம் பொருள் இன்பம் என்று சொல்லப்படும் அம்மூன்றில் அறம் என்னும் ஒன்றன் பக்கம் சேராதவர்கள் இப்பிறப்பிற் செய்யுந் தொழில்களை நூல் விதித்தது, இங்ஙனம் மடலூர்ந்து பாடி வரற்கு' என்று இருந்தவாறே உரைப்பது நன்று. மடலூர்ந்து பாடிவரல், அத்தகையார் செய்யுந் தொழில்களுள் ஒன்று என்ற

௬௦
கலித்தொகை
[செய்து

படி. 'மழை விழை தட்கை' என்பதிற்போல, 'வேட்டனள்' ஒத்தவென்னும்பொருட்டு எனின், எளிதாயிருக்கும். 'அம்ம', கேட்பிக்கும் பொருட்டாதல், "அம்ம கேட்பிக்கும்" (தொல். இடை: உஅ) என்பதனுள் அறியப்படும்.

(சஎ—உ0) கல்வி வல்லமையில் தலையான திறம் 'வல்லார்முற் சொல்லுத'லாதலின், தான் கற்றான் என்பதற்கு அதனைக் கூறினான்.

(க—கஉ) கண்ணினும்

முகத்தினும் நகுபவன் ' என்பது

பெண்மை

யின் சிறந்த நாகரிகத்தைக் காட்டிற்று. நகும், நக்க அப்பொழுதே அழுப் என்பது கலக்கமென்னும் மெய்ப்பாட்டுக்கு நல்ல இலக்கியம்.

(கக—உக) ' என்னைச் சிதை செய்தான் இவனெனவும், அவனால் யான் உற்றது இதுவெனவும் எய்த உரைக்கும் உரன் அகத்துண்டாயின் ' என இருந்தவாறே உரைப்பது நன்று. இது பெயரும் பெற்றியும் கூறியவாறுமாம். (தொல். பொருளி: சஉ - உரை)

முறையே

(உச—உ.அ) பிறிதொன்று நாடுவேன் எனவே இயைத்துப் பிறிதொன்றாகிய கடற்சுழியை நாடுவேன் என உரைப்பின் இயல்பாயிருக்கும். கொன்றைமலர் அதன் தெய்வத்தன்மையால் மாண்மலர் எனச் சிறப்பிக்கப்பட்டது; ஒவ்கார வியல்பினை அது நன்கு விளக்கும்; திருமந்திரமென்னுந் திருமுறையில் அது பெருவரவினதாய் அருளிச்செய்யப்படுதலும் நினைவுகூர்க. கங்குலை நள்ளிருண் மாந்தர் கடிகொண்ட கங்குல் என்றான், அம் மாந்தரையும் அறியாமல் தலைவன் உள் நுழைந்தனன் என்பதற்கும், அம் மாந்தர் செய்தலாகிய வளைத்துப் பிடிக்குந் தொழிலைத் தலைவி தான் செய்ததாகக் கூறுதற்குமென்று ஒரு நயங்கொள்க. தொடுத்தேன் என்னுஞ் செய்யுட் சொல்லுக்கு நச். வளைத்துப் பிடித்துக்கொண்டேன் என்றுரைத்ததிலும் இந் நயங் காண்பது பொருந்தும்.

(சடு—சக) 'சிதைத்தானே' என வந்தும், மீண்டும் 'நலஞ் சிதைத்தான்' என வந்தது, தலைவி கலங்கிய நிலையினளாதலின்; இங்ஙனமெல்லாம் அவ்வவர் நிலையின் இயற்கைக்கேற்பச் செய்யுள் செய்தலே நல்லிசைப் புலவர் திறமாம். இவ்வாசிரியர் திறத்தை இப்பாட்டின் ஈற்றிலும் நச். தவிராது குறித்து வைத்தமை பெரிதுங் கருத்திருத்தற்பாலது.

(சஎ—ருய) மாந்தளிர், மாலை வெயிலுக்கு வந்தது ; ஆகுபெயர்.

(ருரு—ருஅ) 'வலிதின் தூங்கி'

என்றியைக்க.

(கய-கக) நிலவொளி கருதி 'எல்லிரா' எனப்பட்டது. மணி, தலைவன் ; அதனுட் பரந்த நீர், தலைவி. 'கலம் சிதை காழ்' என்க ;

கலி] உரை

விளக்கம் கக

கலத்தில் தேய்த்துச்

சிதைக்குங் கொட்டை என்பது

பொருள். 'இல்லம்', தேற்றுமரம். "

இல்லின், படுகாழ்ப் படுத்துத் தேய்வையுறீஇ" என்றார் பிறரும் (பெருங் ௧. ௯௫ : ௨௧௫-௯).

இதுமுதல் ஆறு பாட்டுக்கள் தேறுதலொழிந்த காமத்து மிகுதிறத்துக்கு இலக்கியங்களென்க.

௨௱

(௧-௯) பையென்ற: ஒளி மெல்லென்ற; மணியொளியினும் மிகுதியாக ஒளிவிட்டுத் திகழும் பொன் என்றற்கு, 'மணி பொரு பொன்' என்றார். தமிழ்நாட்டினளாதலாலும், பிரிவின் வருத்தத்தாலும் மேனி கருகிற்று. இவ்வாற்றால், தலைவியின் நிறம் இன்னதென்று தேற்றுதற்கு உரையில் நீல மணியென்று நீல் நிறங் கூறினார். 'வெறியா............ஆற்றா இஃதொத்தி' என்னும் தொடர், சிதைந்த நெஞ்சத்தவளியற்கையை நன்கு காட்டும்.

(உஉ—௩ம) கதழ்தல், சேறுதலெனினும் ஆம். ஆம்: ஆச்சாமரம்.

(௩௩—௪௧) 'செவ்வழியாழ் இசை': செவ்வழிப்பண் இசைக்கும் யாழ் போல, இசைக்கின்ற வண்டின் இசை. காலனை இப்பாட்டிற் கலக்கத்துக்கு மட்டும் உவமையாகக் கொள்க.

(௪௪—௪௭) கணவனையே விரும்பி உயிர் நீத்தமையின் இவ்வுலகத்தினும் நிலைத்த புகழுண்டாதலின், 'யாண்டும்' என்றார்.

(௪அ—௫௧) 'பீரலர்.........கண்' என்பதில், தலைவி, தன் தலைவன் மேற் குறை கூறாமல் வல்லமையாய்ப் பேச்சு நிகழ்த்துந் திறங் கண்டு மகிழ் தற்குரியது.

உ௭

(௧௭—உ௩)
அல்லல்' எனத்

கொளுவுதல் இங்கே ஏவிவிடுதல்; 'மதி திரிந்த என் தெளிவாய் வருதலின், தலைவியின் கலங்கிய நிலை

விளங்கிற்று.

(உஎ-௯௧) 'ஆய் பூ' என்பதற்கு 'எம்மனோராற் கொழுதி விளையாடப்படும் பூ' என்னுங் கருத்தில் இங்கு உரை கூறி மகிழ்க. "அடும்பின் தார் மணியன்ன வெண்பூக் கொழுதி ஒண்டொடி மகளிர் வண்டலயரும்" என்பது குறுந்தொகை (உசரு).

(கூஉ-கூ௩) ஓடியுழி முயங்கியுழி என்பன விகாரம்.

(கூஎ-சச) 'உயவுத் தேர்': காம வருத்தமென்னுந் தேர். 'வளியே, நின் எதிரே போம் பல கதிர்' என்றுரைப்பது சிறப்பு. 'வளியே காட்டுமோ' என்க. திங்களொளி செல்லாத இடமெல்லாம் ஞாயிற்றின் ஒளி

செல்கின்றதென்னும் கச். உரை சிறந்தது. அவரது இயற்கைப் பொருளறிவு இதனால் தெளியப்படும். 'மண்ணகமெல்லாம் நின்னை ஒருங்கு சுடுவேன்' என உரைப்பது நல்லது.

(௫க-௫ச) 'எல்லை எல்லியாக என்று' எனக் கொள்க. மீதிய காமக் கூட்டத்துக்குப் பொழுது வரையறையின்மையின் இங்ஙனங் கூறி

ஞன். 'அல்லல் களைவாரிலேன்' என்பதனோடும் மேல்வரும் 'ஓஒ கடவே' என்பதைக்கூட்டி நச். மெய்ப்பாடு தோன்ற உரைத்த திறங் கண்டு மகிழ்க.

(சஙூ—சுக) 'எற்றம்', துணிவுப் பொருட்டாதல் தொல். உரி: கக-ம் நூற்பாவால் அறியப்படும். 'ஆற்று', ரென்றார் பரிமேலழகர் (குறள், எகஅ). முதனிலைத் தொழிற்பெய

(சுஅ—எங) 'கெடலரிய காதல' ரென்றே கூட்டுக. இழத்தலில்

லாத காதல ரென்பது உரை; திரும்ப வரக்கூடியவர் என்பது கருத்து. அழகிய கண்ணுவது கண்ணோட்டமாதலின், 'அங்கண்' எனப்பட்டது.

உவமைக்கு இன்புறுக.

௨அ

(க—கஎ) வேறுகும்: உண்மையன்றுகும். மாயக் கனவினும் நிலையில்லை யென்க. 'பண்பெல்லாந் துய்த்து' என்றமையால், துய்த்தல் உடம்பொடியன்று;பெண்மையியல்புக ளென்னும் பண்புகளை. அழுஉம், நகூஉம் என்பவைபோல 'மருளும்' என்பதும் முற்றுகக் கொள்வது சிறக்கும். உயிரினுஞ் சிறந்ததாகலின் நாண் சிறந்ததெனப்பட்டது. (தோல். கள: ௨௨) பிரிந்து விரும்புவா ரென்பதற்கு 'வேறுகி வீழ்வார்' என்றார். அத்தகையாரிடத்திற் றேன்றும் இந் நிலையில்லாத் தடுமாற்றம் ஞாலத்துள் வாழும் அனைவர்க்கும் வருமென்றுரைப்பது சிறப்பு. உலக வின்பங்களுட் காமவின்பத்தின் தலைமையும் ஆனுல் அதன் நிலையாமையும் இப்பகுதியில் நன்கு விளக்கப்பட்டன.

(கஅ—௨௨) தலைவன் பிரிவாற்றுமையால் தலைவி கண்ணீர் கலங்க வருந்துகின்றுளென்பது இப்பகுதியின் கருத்து. ஆனுல் அதனை ஆசிரியர் எவ்வளவு கவர்ச்சியாகத் தலைவியின் கற்பு மாட்சிமையுந் தோன்ற அழகாய்க் கூறுகின்றுரென்பது அறிந்து மகிழ்தற்குரியது. இதுபோல்வனவற்றுல், இன்பந் தோன்றுவிடத்தும் இன்பந் தோன்றுமாறு செய்யும் இலக்கிய ஆசிரியர்களின் மாட்சிமை நன்கு தெளியப்படும்.

(௨௩—௩௰) காதலவன் செய்த பண்பு, நோய் தந்தது என்க. பண்பு அவன் காட்டிய காதல் முதலாயின. 'கடும்பகல் ஞாயிறு' வந்தமையால், செய்தற்குப் பெரும்பொழுது முதுவேனிலும், சிறுபொழுது எற்பாடுமாதல் கண்டுகொள்ளப்படும்.

(௩௧—௪௪) 'துஞ்சாது துமாவம்' என்பது நன்று

(௪௫–௫௰) அங்கு என்றது, அவனிடமென்றற்கு.

(௫௧–௫௪) ஏமராவாறு நினைப்பினும் என்றியைத்தார் நச்.; இருந்த வாறியைப்பதே சிறப்பு. 'நீக்கிய ஊரீர்,' நீக்கும்பொருட்டுப் பேசும் ஊரீர் என்பது நன்று. அங்ஙனம் பேசுவார் அவன் தலைவனை இகழ்ந்து பேசுதலின் 'நீர் எனைத்தானும் எள்ளினும்' என்றானாகக் கொள்க.

(௫௫–௫௮) 'இறை இறை' என்றது, உடம்பின்கண். "கார் தலைக் கொண்டு பொழியினும் தீர்வது போலாது என் மெய்க் கனலு நோய்" என மேல் வருவதும் (௧௪௧ : ௪௪–௫) நினைவுகூர்க.

(௫௯–௬௧) 'என்பவட்கு, நிறைந்த வருத்தத்தில் அறம் உதவுவது போல வந்து உதவினார்; கண்டு நோ மாய்ந்தது என் ஆயிழை உற்ற துயர்' என்று இருந்தவாறே எளிதாகக் கூறுக. நச். முன்பின் மாற்றியதில் உவமையுண்மையுஞ் சிதைந்தது. நிறைந்த வருத்தத்தில் உதவி செய்தலாவது நல்ல நேரத்தில் உதவுதல்.

௨௯

(௬—௬௭) அரசினும் காமங் கொடிது என்றற்கு, 'அரசினும் அன் பின்றாங் காமம்' எனப்பட்டதென்பது நல்லது. நிறை மல்க: பெருகி நிறைகையினாலே. கண்ணீர் வாய்ப்பக்கம் வடிந்து மார்பில் உதிர்ந்தமை தோன்றக் 'கூரெயிறுடிக் குவிமுலைமேல் வார்தர' என்றாரென்க. வினைய வும் இருந்தவாறே உரைக்க. எற்றி வரைந்தானை, தணிந்து நீங்கினவனை என்பது எளிது. வேட்கையின் கடுமைக்கு வறட்சியும், அதன் மிகுதிக்கு வெள்ளமும் உவமை. வானம் காய்கின்றதென்னும் வழக்கு நோக்கி மேகத்

துக்கு வறட்சி கொள்க.

(௧அ—௨௪) முன்பே நாணும் உள்ளமும் இழந்த இவன் இப்போது பிரி வாற்றாமையால் நலனும் இழந்தானென்றற்கு, 'நலனும்' என்றார். 'நக்க விர்' என்றது, இகழ்ச்சி. 'மிக்கவென் நாண்,' சிறந்தவென் நாண் என்க. ஆங்கே: அவனிடத்தே; ஆங்கு, படர்க்கையில் அடங்குதல், தொல். கிளவி: ௨அ சேனாவரையருரையான் அறியப்படும். 'உக்கண்......நினைந்து' என்பது கண்டாரை நோக்கித் தலைவி கூறுங் கூற்றாகக் கொள்க. செ கரம், அம் சாரியை; அல்லது அழகிய புள்ளி யென்றியைப்பினும் ஆம். நக் கது: மகிழ்ந்தது. 'இவ்வுடம்பில் உயிர் நிற்றற்கு ஓர் ஊற்றும்படி இவ் அலவனோடு யான் என் தலைவன் நிகழ்ச்சிகளைப் பன்மாண் நினைந்து நக்கது அவ்விடத்தே காண்' என இடங்காட்டினாளாகக் கொள்வது நல்லது. நச் உரைகள் வலிந்துரைகளாகத் தோன்றுகின்றன. 'இழந்திலேன், அவ னிடத்து உள' என்பது இப்பகுதியின் அழகு.

(௨௫—௩௧) புரை தீர்ந்தான் என்பதற்கு இங்கே குற்றந் தீர்ந்தான்

௩௯௪

கலித்தொகை

[நெய்தற்

(கூஉ—கூஎ) என் நோய் பாடுவேன் எனவும், யானுற்ற எவ்வம் வினக் குரைப்பின் எனவுமே இயைத்துரைக்க.

(சக—ருO) இதன்கண் ஹும் எல்லாம் இயல்பாகவே உரைத்துக்கொள்க.

'அருப்பம்': அருமை; ஆகுபெயராய் அரிய அரணை உணர்த்திற்று. 'வேட்டுப் புழை அருப்பம்' (முல்லைப், உக) என்பதும் இது. நூல்களில் இது பெருவரவினது.

(ருச—ருரு) பண்பென்றது அவன் அஞ்ஞான்றிருந்த நிலையை. 'ஆயிழை பண்பு அல்லல் தீர்த்தன்று' என்று அப் பண்பின்மேல் ஏற்றிக் கூறினர்; ஆயிழை அந்நிலையயமா யிருந்தமையின்.

-(க-கள) ஐந்திணையில் நடைபெறவேண்டிய நற்காமம் பெருந்திணை யானமை தோன்ற 'வேறொருபாற் றானதோ' என்றார். 'இனி மன்னும்' என்பதற்கு இவன்பால் இன்னும் இவை பொருந்திக் காணப்படுகின்றன என்றுரைத்துப் பின்வருவன கொள்க. நேர்ப்பார்வையாயில்லாமல் மயங்கிய பார்வையாயிருக்கின்றமை தோன்ற 'விலங்காக நோக்கி' என்றார்; தன்னை மறந்த நிலையில் இருத்தலின் இவன் நிலை இங்ஙனமாயிற்று. நிழலென்றும் வெயிலென்றும் பாராமலிருத்தலின் 'வெயிலுற' என்றார். நகூஉம் அழூஉம் என்பது போலவே 'உருகும்' என்பதுந் தலைவியின் செயலாகவே கொள்க. 'நகுதலும் நகூஉம்', 'அழுதலும் அழூஉம்' என்பவை. "அன்ன மரபின் இரண்டொடும்" (தொல். வேற்றுமை மயங்: உக) என்பதனாற் கொள்ளப்படும். தோழியோர், பன்மை; தோழியோரே என்பது உரை. கேளாமோ என்பது வரையிற் கண்டார் கூற்று. இனித் தலைவி கூற்று. 'இங்கே யார் பித்தற்றாரைக் கண்டீரோ' என்பதற்கு, 'இவர் யாவர் எழூஉற்றார் கண்டீர்!' என்றான். இங்கே யாரும் பித்தறவில்லை என்பது கருத்து. 'ஒஒ அமையும்; தவறிலீர்' என்பதற்கு நச். உரைத்தவாறே கொள்க. நகையில், இன்பத்தில்; காமவின்பங்களுள் என்னும் பொருட்டு, நீத்தக்கடை பூ வாடியற்று என்க. ஆதலின் என்னையே மூசிக் கதுமென நோக்கன்மின் வந்து என்பது. இங்ஙனமாக இப்பகுதிக்கு இருந்தவாறே உரைத்துக்கொள்வது தெளிவாயிருக்கும்.

(உகூ-உ௫) "கொலையொக்குங் கொண்டு கண்மாறல்" (நான்மணி. அ) என்பவாகலின், முயங்கிப் பின் நீத்த தலைவனைக் 'கொலைவன்' என்றான்.

(உகூ-உக) 'கதிர்பற்றி நோக்குவன், ஞாயிறே, கேள்வன் யாங்குள னாயினும் அவன் இருக்குமிடமேனுங் காட்டு; அதுதானுங் காட்டாயேல், நீ வானத்து என்னதான் செய்கின்றனை!' என்றுரைப்பின் இயல்பாயிருக்கும்.

(௩௩-௩௫) பல் கதிர் பகலொழியச் (சில் கதிர்) சாம்பிப் பட்டீமோ என்

உரை விளக்கம்

சுரு

(௬௬—௭௭) கலக்கத்தாற் கூற்றுவனையும் இடையே விளித்துக் கூறி
றன். காடோறுந் தவறாமல் எழுதலின் 'மறாஅ அரைச' எனப்பட்டது.
றாஅ, முற்று. ஆயினும் இந் நோய் தணிக எனக் கூறினாக உரைப்பது
ல்லது.

(௭அ—௫௨) பையென வென்னும் குறிப்பால் நச்.. கனவிற் காணின்
ான்றார். "பையெனக் காண்கு விழிப்ப" (கலி. ௧௪௨ : ௬௫) என்றது,
டுக்கு நினைவுகூர்தற்குரியது. 'ஐயங் கொண்டு', 'பூசலிடுவேன்' என்ப
வற்றின் உரைத்திறம் அறிந்துகொள்க.

(௫௬—௫௯) 'மடாஅ நறவு': தேன்; கள்போல் மாந்தராற் பருக
டண்ணப்படாமையின் என்பது. காதல் உயிரோடு தொடர்புற்ற தென்
றற்கு, உயிரோடு கூடிற்று என்றாள்.

(௬௨—௭௧) 'அன்ன வான் சேவல்' என்பதில் வான், அழகெனக்
கொள்க, பேடையின் கவர்ச்சிகள் கூறினாற்போலச் சேவலின் கவர்ச்சியுங்
கூறிற் சிறக்குமாதலின்; தலைவிக்கு நாணும் அழகும் முதலான கவர்ச்சிகள்
கூறித் தலைவற்கும் 'நல்லெழின் மார்பன்' என, மேல், அவன் எழிலுங் கூறு
தல் இக்கருத்துக்கு ஒத்திருத்தலுங் காண்க. 'காதலனவனை' என
இயைத்து ஒருசொல் தன்மையாகக் கொள்வது நன்று. 'நகை' இரண்ட
னுள் முன்னது இகழ்ச்சி; பின்னது மகிழ்ச்சி.

(௧—எ) 'ஞாலத்துத் தொழில்' எனவும், 'தொல்லியல் தொழில்' எனவுங் கொள்க. 'வல்லவன் கூறிய வினை தலைவைத்தான்போல்' என்பது பழமொழி. இங்கு இடத்துக்கேற்ப நச். காமன் இட்ட ஆணையை எனக் கூறக் கருதினர்.

(அ—௧௧) அழுதல், அல்லல், கலங்குதல், துன்பு, துயர் எனத் துன்பத்தின் பல்வேறு நிலைகளை உணர்த்தும் பல்வேறு குறியீடுகள் இங்கு வந்தன.

(௧௨—௧௫) ஆடவர், மகளிர்க்கு நல்கல் என்பது, தங் கூட்டத்தான் அம் மகளிர் நலத்தையே என்னும் நச். உரை அழகிது.

௬௨

(அ—௧௧) 'கேளிர்கள் நெஞ்சழுங்க' எனப் பிரிக்க.

(௧௬—௧௯) காமன் படையெடுத்து நெருக்கத்தே வந்து முற்றிவிட்டமையால் வருந்துந் தலைவியின் துன்பத்திற்கு இவ்வுவமந் தொன்னப்படும். உரையில் 'உழிஞையான்' என்றது, பிற்காலத்தார் நொச்சியான் என்பவனை.

இப்பாட்டில் அரிய அறவுரைகள் வந்தமையும், அறவுரைகட்கு வுரைகளே உவமையாக வந்தமையும் அறிந்துகொள்ளற்பாலன.

அ௫

௺கீ

கலித்தொகை

(க-ச) கடுத்தெழுந்த: உறத்தெழுந்த ; காம்புத்தீ: மூங்கிலிற் பற்றிய தீ ; இங்கு, இத் தீ வழியிடையிற் பற்றியதெனக் கொள்க. மேல், 'கரி காய்ந்த கவலை' என்பதும் அது. 'மலை பரந்து தலைக்கொண்டு முழங்கிய முழங்கழல்' என்பதற்கு, மலையிற் பரந்து அவ்விடத்தைக் கவ்விக் கொண்டு வாச்சியம்போல் இசைத்த, ஒலித்தலையுடைய அழல் என்பது உரை. கீழே, வழியின் காம்புத் தீயும் மேலே மலையின் முழங்கழலும் மறு குதலால், அவை, தம்முள் மலைதலைக் கொண்டன அழலுகின்ற சுரம் என இருந்தவாறே உரைப்பின் சிறக்கும். மறுகல் : குழம்புதல்; அஃ தாவது மயங்குதல். 'மலைதல்', பொருதல்.

(எ-கக) 'சடைக் கரந்தானது மிடற்றணிபோன்ற நின் நிறம்' என் பது நல்லது. அடுத்த தாழிசையிலும் 'வார்தியானது ஒளி பொருந்திய மிடற்றணியை நக்கன்ன நின் உரு' என்று கொள்க. மூன்றாந் தாழிசை யிற் 'கண்ணியானது அழகிய மிடற்றணி ஒழுகின்றுபோன்ற நின் கதப்பு என்றுரைப்பது நல்லது. தலைவியின் நிறமும் அவன் கூந்தலின் நிறமு நீல நிறமாதலின், மிடற்றணியுவமை சிறந்தது. முன்னூர் தலைவியின் நிற கருதி (கலி. கசரு : ச) நச். நீலமணியை உரைத்தமை இங்கே நினைவுகூ தற்குரியது. தலைவியைப் பிரிந்த கொடுமை தோன்ற 'அறம் துறந்து என்றார். வினை அறத்தையும் இன்பத்தையும் அளித்தலின், பொருள் 'விழுப்பொருள்' 'ஒண்பொருள்' எனப்பட்டது.

(உய்-உக) சண்பக மலரின் நிறம் செந்நிறமாதலின், ஆசிரியர் ஆணிபெற மலர்ந்த சண்பகம் என்றார்.

நெய்தலிற் பாலைக்குரிய காலமுங் கருப்பொருள்களுங் கூறினமையாற் உரையிறுதியில், நச். 'இளவேனிற் பருவத்தில் வருவதாகக் குறித்து வற்புறுத்தித் தலைவன் பிரிந்தனன்' எனக் கூறினார். முதல் கரு உரி என னும் இம் மூன்றனுள்ளும் உரிப்பொருள் சிறந்ததாதலின் ஆசிரியன்மார் அ

கருதியே பாட்டுகட்குத் திணைவகுப்பாரென்றற்கு, நச். 'இரக்கமாகி
உரிப்பொருள் சிறத்தலின்.........நெய்தற் கோத்தா' ரென்றார்.

நெய்தற்கலி-உரைவிளக்கம்

முற்றும்.

கலித்தொகை கருய - செய்யுள்கட்கும்

தமிழ்ப்புலவர் இளவழகன் எழுதிய

உரைவிளக்கம் நிறைவெய்தியது.

[illegible]

பாங்கரியரி [illegible]

[illegible] செப். 11—

[illegible] போராட்டத் [illegible] செய்த [illegible] வருகிக்கப்பட்ட [illegible]

[illegible] அனுப்பியுள்ள [illegible] ஏற்கனவே [illegible] நிதிகொடாக [illegible] கவும், தங்கள் [illegible] வியாக்கிரகத்தி [illegible] க்குஉதவுவதற் [illegible] தேச காரிட்டி [illegible] அனுப்பப் [illegible] கூறியிருக் [illegible]

[illegible] வசூலிக்கப் [illegible] சுதவிகளும், [illegible] அப்பகுதி [illegible] காரிட்டிக்கு [illegible] குறிப்பிட்டார். [illegible] போராட்டத்திற்கு [illegible] தெரிவிக்கவும், போர்த் [illegible] சர்க்காரின் காட்டு [illegible] தனமான அடக்குமுறை [illegible] கண்டிக்கவும், கோவாவின் [illegible]

15-9-55 வியாழன்

மதராஸ் 1

முதல் ஒலிபரப்பு

270.3 மீ (1,110 கி. ஸை)
41.32 மீ. (7,260 கி. ஸை)

6-50 [illegible] 6-55 [illegible] குறிப்புகள் 7-00 ஆ. இ. ரே. வாத்யவித்வான்கள் 7-15 தமிழில் செய்தி 7-30 [illegible] 8-00 ஆங்கிலத்தில் செய்தி 8-15 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

270.3 மீ. (1,110 கி. ஸை)
31.28 மீ. (9,590 கி. ஸை)

12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு 1-00 மாதர்களுக்கு (தெலுங்கு) 1-30 இசைத்தட்டுகள் 1-40 ஹிந்தியில் செய்தி 1-50 இசைத்தட்டுகள் 2-00 தமிழில் செய்தி 2-10 மதராஸ் நிலவரப்படி 2-15 உயர்தரப் பள்ளிகளுக்கு 2-45 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

270.3 மீ. (1,110 கி. ஸை)
31.28 மீ. (9,590 கி. ஸை)

4-00 ஆரம்பப் பள்ளிகளுக்கு 4-30 இசைத்தட்டுகள் 5-00 ஒலிபரப்பு முடிவு.

நான்காவது ஒலிபரப்பு

270.3 மீ. (1,110 கி. ஸை)
49.30 மீ. (6,085 கி. ஸை)

5-30 பி. [illegible] நான்காவது ஒலிபரப்பு 6-00 ஆங்கிலத்தில் செய்தி, அறிவிப்புகள், வானிலை விளக்கங்கள் (ஆங்கிலம்) 6-15

...ல் நிற் உள்ள ...ராக, பொருள் ...ர, அரசியல் ... மைகளை பொது ...களுக்கு ... எடுத்துக் கூறவும். ...க்கூட்டங்களை ஏற்பாடு ...யுமாறு சுற்றறிக்கை கடிதம் ...பிரஸ் கமிட்டிகளைக் கேட்டுக் ...ருக்கிறது. கோவா விடு...

பிராந்தியச் செய்திகள் 6-25 கல்யாணி பத்மநாபன் பாட்டு 7-00 ஒலிப்பதிவு 7-15 தமிழில் செய்தி 7-30 கிளாரினெட் ஆ.இ.ரே.வித்வான் 7-45 மதராஸ் 2ல் உள்ளபடி 9-00 ஆங்கிலத்தில் செய்தி 9-15 ஆங்கிலத்தில் பேச்சு 9-30 ஒலிப்பதிவு 10-00 ...